ஊரெல்லாம் சிவ மணம்

இரா. இராஜசேகரன்

நர்மதா வெளியீடு

உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க:

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talk)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy)விட்டுக் கொடுங்கள் (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance)
- எல்லோரிடத்லும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல்,கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.(Flexibility)
- மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய. இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்துகொள்ளாதீர்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

இந்த இனிய
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வு கொள்ளும் -
தங்கள்
அன்புள்ள....

ஊரெல்லாம் சிவமணம்

சைவம் வளர்த்த தமிழறிஞர்கள், சிவத்தொண்டர்கள், (தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், சென்னை நகரம் சார்ந்த) அமைப்புக்களின் வரலாறும், வளர்ச்சியும்

செந்தமிழ்ப் புரவலர், ஞானபாஸ்கரன்

இரா. இராஜசேகரன்

பி.எஸ்சி., பி.எல்., பூம்புகார்

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நானா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார்,
தி. நகர், சென்னை – 600 017. தொலைபேசி : 2433 6313
செல்லிடபேசி : 98402 26661, தொலைநகல் : 2433 6312

அப்பாலுக்கு அப்பாலாய் பார்த்தது திருத்தொண்டத் தொகை;
இப்பாலுக்கு இப்பாலாய்ப் பார்ப்பது இந்த உரைத்தொண்டத் தொகை

– 'ஊரெல்லாம் சிவமணம்'

Pages : 464
Price : Rs. 350.00
ISBN No. : 81-8201-067-5
Paper Used : 13.6 Kg. SPB N.S.

☐ Vooraellam Sivamanam – Saivism, the omnipresent – A compilation on Saivite organisations and activities – in Tamil by R. Rajasekaran B.Sc., B.L., ☐ First Edition : August 2008 ☐ Published by T.S. Raamalingam, Narmadha Pathipagam, Chennai – 600 017 ☐ D.T.P. Execution by : M. Xavier Raj, P.S. Muthu Graphics, Chennai – 600 015.☐ Printed at : M/s Malar Printers, Chennai - 600 034 ☐

உட்பொதிவு

முதற்பகுதி - சென்னை அமைப்புகள்

1. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் 17
2. தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் 20
3. தெய்வச் சேக்கிழார் இலக்கிய மன்றம் 23
4. திருவலம் சிவனடியார் வழிபாட்டு மன்றம் 23
5. ஸ்ரீபால சுப்பிரமணிய பக்த ஜன சபை 24
6. சைவ சமய பக்த ஜன சபை 30
7. ஸ்ரீநடராஜர் தமிழ்வேத பாராயண பக்த ஜன சபை 34
8. சைவசித்தாந்தப் பெருமன்றம் 36
9. ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத் தமிழ்வேத பாராயண சபை 131
10. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 132
11. தமிழ் இசைச் சங்கம் 136
12. புரசைத் திருநெறிக் கழகம் 150
13. சிவ அன்பன் திருக்கூடம் 152
14. ஸ்ரீசிவ சுந்தர விநாயக தேவார பக்த ஜனசபை 154
15. திருநீலகண்ட நாயனார் திருவிழா சபை 155
16. திருமயிலை இறையன்பர் திருச்சபை 157
17. இசைக்கலைவிழா 160
18. திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருள் அருட்பணி மன்றம் 168
19. சேக்கிழார் மன்றம் 174
20. திருவாசக – திருமந்திர அறக்கட்டளை 176
21. சேக்கிழார் ஆராய்ச்சி மையம் 179
22. ஆலய உழவாரத் தொண்டு சீர் திருக்கூட்டம் 193
23. தமிழ்ச் சைவப் பேரவை 196
24. அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் பிரதோஷ வழிபாட்டுக்குழு 197
25. திருக்கோயில் உழவாரப் பணி மன்றம் 200
26. பொங்கு தமிழ்ப்பண்ணிசை மணிமன்றம் 202
27. அரனருள் 211
28. பிற மன்றங்கள் 212

இரண்டாம் பகுதி - சைவ ஆன்றோர்கள்

1. ந.மு. வேங்கடசாமி நாட்டார் 218
2. வ. ஆ. தேவசேனாபதி 220
3. பா. நமசிவாயம் 221
4. எ. வேலாயுதனார் 221
5. சுகிசிவம் 222
6. அரங்க இராமலிங்கம் 222
7. ஔவை து. நடராஜன் 222
8. விசூர் மாணிக்கம் 223
9. மயிலை சின்னண்ண நித்யானந்தம் 223
10 பாபு ரெட்டியார் 223
11. சுதா சேஷையன் 223

12. சி. சிவராமமூர்த்தி 223
13. சிதம்பரம் சுவாமிநாதன் 224
14. கா.ம. வேங்கடராமையா 224
15. தெ. ஞானசுந்தரம் 224
16. அ. பாலறாவாயன் 224
17. மா.கி. இரமணன் 225
18. எம்.கே. பிரபாகரமூர்த்தி 225
19. முருகு இராமலிங்கம் 225
20. ஆர் கோபால கிருஷ்ணன் 226
21. ஆ. திருவாசகன் 226
22. டி.பி. சித்தலிங்கய்யா 227
23. சாரதா நம்பியாரூரன் 227
24. இரா. செல்வக் கணபதி 228
25. மு. குப்புசாமி 228
26. பூசை ச. அருணவசந்தன் 230
27. பனசை அருணா 231
28. க. வடிவேலாயுதம்பிள்ளை 231

மூன்றாம் பகுதி

கொங்குமண்டல, தொண்டைமண்டல அமைப்புகள்

1. கரூர் 232
2. வெள்வகோவில் 236
3. கோயம்புத்தூர் 237
4. புன்செய் புளியம்பட்டி 284
5. பெரிய குமரபாளையம் 289
6. இருகாலூர் 289
7. மாராயி பாளையம் 289
8. விசய மங்கலம் 291
9. கூனம்பட்டி ஆதீனம் 294
10. ஈரோடு 297
11. கோபி 306
12. திருச்செங்கோடு 308
13. பவானி 308
14. திருப்பூர் 313
15. மேட்டூர் 318
16. சேலம் 319
17. கிருஷ்ணகிரி 324
18. செய்யாறு 324
19. வந்தவாசி 326
20. திருவண்ணாமலை 326
21. மடவாளம் – திருப்பத்தூர் 346
22. குடியாத்தம் 353

23. இராணிப்பேட்டை 360
24. வேலூர் 360
25. ஆம்பூர் 363
26. வெட்டுவாணம் 364
27. இரத்னகிரி 367
28. காஞ்சிபுரம் 369
29. கள்ளக்குறிச்சி 378
30. திருக்கழுக்குன்றம் 378
31. திருவனந்தபுரம் 380

நான்காம் பகுதி

1. சிதம்பரம் 382
2. மேலையூர் 383
3. ஆனதாண்டவபுரம் 385
4. திருவையாறு 385
5. திருப்பூந்துருத்தி 385
6. குச்சனூர் 386
7. லால்குடி 387
8. விருத்தாசலம் 387
9. திருச்சி 389
10. மதுரை 389
11. ஆன்றோர்கள் 389

ஐந்தாம் பகுதி

1. சித்தாந்த தீபிகை மாநாடு ஆங்கில இதழ் வெளியீடு 402
2. சைவ சித்தாந்த மகாசமாஜம் 403
3. மெய்கண்டான் சித்தாந்த மாநாடு 403
4. தமிழிசைச் சங்கத் தொடக்கம் 403
5. திருமந்திர மாநாடுகள் 404
6. தமிழ்நாடு தெய்வீகப் பேரவை 404
7. திருமுறைக் கருத்தரங்குகள் 404
8. திருமுறை முற்றோதல் 405
9. நாட்டியாஞ்சலி 406
10. அனைத்துலக சைவ சித்தாந்தம் 406
11. பன்னிரு தமிழ்வேதப் பெருவிழா 406
12. சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் 406
13. உலகச் சைவ பேரவை 408
14. வசந்தகுமாரின் திருக்கோயில் திருப்பணிகள் 408
15. வாரணாசி திருமுறை மாநாடுகள் 409
வரலாற்றுச் சிறப்புமிக்க நாட்கள் 444
செயல்முறை விளக்கம் 445

இவர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்

அன்று நான் புத்தூரில் பிஷப் ஈபர் உயர் நிலைப்பள்ளியில் நான்காம் படிவத்தில் படிக்கையில் ''தமிழ்ப்பாடம் எடுத்து முதன் முதலாகத் தமிழுணர்வை ஊட்டிய என் ஆசிரியர்பிரான் **திரு. மு. கணபதி** அவர்கள்; மயிலாடுதுறை நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ஐந்தாம், ஆறாம் படிவங்களில் தமிழ் கற்பித்த **திரு. மு. சுந்தரேசம்பிள்ளை** அவர்கள்; பதினான்காவது வயதில் முதன்முதலாகத் தமிழ்நூல்கள் படிக்க ஆர்வத்தைத் தூண்டி இன்று மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிப் படிக்கத் தூண்டிய ''தமிழின்பம்'' நூலினை எழுதிய **திரு. ரா.பி. சேதுப்பிள்ளை** அவர்கள்; பெரியபுராணம் நூலை இலக்கியமாக அனுபவிக்க வேண்டும், தமிழிலக்கியங்களை அறிவுரீதியாகப் படிக்க வேண்டும் என்று தணியாத தாகத்தை நேரிடையாகவும் சொற்பொழிவு மூலமும் ஊட்டிய **திரு. அ. ச. ஞானசம்பந்தன்** அவர்கள்; தருமையாதீன சொற்பொழிவுக்கு வந்துவிட்டு என்னைப் பார்த்துவிட்டுச் செல்ல இருந்து, எங்கள் கேள்விக்கணைகளை ஏற்றுப் பயணத்தை மேற்கொள்ளாமல் என்னுடைய முப்பதாவது வயதிலேயே நூல்கூட இல்லாமல் சிவஞானபோதத்தை மூன்றே நாளில் அறிவியல் ரீதியாக விளக்கிய **திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை** அவர்கள்; பெரியபுராணம், பதினான்கு சாத்திரங்களைச் சுவையாகக் கற்றுத் தந்த **திரு. கு. சுந்தரமூர்த்தி** அவர்கள்; சிலப்பதிகாரம், சிந்தாமணி, சங்க இலக்கியம், நாலாயிர திவ்யப்பிரபந்தம், ஆசாரிய ஹிருதயம் போன்ற நூல்களைக் கற்பித்த **திரு. தி.வே. கோபாலய்யர்** அவர்கள்; கம்பராமாயணம், சிற்றிலக்கியங்கள், சங்க இலக்கியம் ஆகிய நூல்களுக்குப் பாடம் நடத்திய **திருமதி ப. நீலா** அவர்கள்; பதினான்கு சாத்திரங்கள், சிவஞான மாபாடியம், திருமுறைகள் ஆகியவற்றை உடன் சேர்ந்து படித்துப் படிக்கச் செய்த **திரு. திருநாவுக்கரசு பிள்ளை** அவர்கள்.

❑ ❑ ❑



கையில் தவழும் ஒரு சைவ கங்கை

திரு. இரா. இராஜசேகரன் அவர்களைச் சைவ உலகத்தின் தருமைக் குருமணி 'செந்தமிழ்ப் புரவலர்' என்று வாழ்த்தியருளினார்கள். வைணவ உலகின் ஜீயர் சுவாமிகள் 'ஞான பாஸ்கரன்' என்று வாழ்த்திச் சிறப்பித்தார்கள். கோவை இளங்கோ மன்றம் அவர்களைச் 'சிலம்பின் காவலர்' என்று சிறப்பித்தது. இவரால் இந்த விருதுகளுக்கே கூட ஒரு விழுப்பம் கிடைத்தது! பூக்களோடு மணம்; தமிழோடு இவர்! தாசில்பண்ணையின் இந்த 'இராஜசேகரம்' தமிழின் சேகரம்! இலக்கியச் சாகரம்!

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'; இன்ப காவியம்; சிவஞான போதம் உரை; ஆசாரிய ஹிருதயம் தமிழ்வடிவம்; விஷ்ணுபுரம் ஒரு பார்வை; இவை இவர் எழுதிய இனிய நூல்கள்.

அப்பர் அருட்செய்தி; தத்துவமும் பக்தியும்; திருமந்திர நெறி, சிந்தனைச் சிலம்பு; தமிழ் நாவல் – ஐம்பது பார்வை; அறிவின் அறிவு; சிலம்பு என்று இவை இவர் பதிப்பித்த நூல்கள்!

சிலருக்கு ஓரூர்; சிலர் கேளிர், புரவலர்க்கு, ஓரூர் இல்லை; ஒரு பிரதேசம் இல்லை; அவர் ஊர் தமிழூர். அவர் உறவு தமிழ் உறவு; சுற்றும் முற்றும் அவர்க்குத் தெய்வத் தமிழ் மன்றம்; உழவாரம்; பத்தினிக் கோட்டம்; விழித்திரு; கல்வி நிலையங்கள்... என்று இப்படிப் பல அமைப்புகளோடு பன்முகச் சிறப்புகளோடு நிரந்தினிது வாழ்பவர்! இனிய இந்த மனிதரின் உள்ளே படைப்பாளி; விமர்சகன்; சாதனையாளி... என்று பலப்பலர் உலா வருவர்!

இவரது ''சைவப் பெருவெளி''.... எனும் இந்நூல் இவரது ஒப்பற்ற படைப்பு! சைவம்... அஃது அண்ட சராசரங்களை விடப் பெரியது; ஆகாயத்தை விட உயர்ந்தது... சமுத்திரங்களைக் கூடச் சைவம் திவலைகளாய் ஆக்கி விடும்! திரு. இராஜசேகரன் சைவத்தை

– சைவ வரலாற்றை எழுத முனைந்தபோது அதற்குச் ‘சைவப் பெருவெளி’... என்று பெயர் சூட்டியது அவர் கண்ட சைவ தரிசனத்தின் சுட்டாகும்! கயிலைத் தரிசனத்தை... அடடா! இவர் கர்லத்தின் தரிசனமாகச் ‘சைவப் பெருவெளி’ ஆகக் கண்டிருப்பது... அதில் இராஜசேகரத்தையும் காண வைத்திருப்பது... அரிய முயற்சி!

‘இறப்பு... நிகழ்வு... எதிர்வு... காலத்தின் இந்த நேற்று... இன்று... நாளைகளை... ஒரே நேரத்தில் காட்டுவது... புலப்படுத்துவது ஒரு சித்து வேலை மாதிரி... செந்தமிழ்ப் புரவலர் சைவத்தின் அட்ட மூர்த்தங்களையும் இந்தச் சைவப் பெருவெளியில்.. ஒரே நூலில் காட்டியிருப்பது வியப்புக்குரியது... சிவன் ‘‘தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே’’ என்பர். இந்நூல் அதுபோலத் தோத்திர – சாத்திர நூல்களாகி அவற்றின் விழுதுகளாகி... அவை பற்றிய எத்தனையோ நூல்களாகி அவற்றின் மாட்சிகளைக்... காட்சிகளைக் காட்டுவதாகி.. விளங்குகிறது.

நம்மாழ்வாரின் நெஞ்சினை... ஆசார்ய ஹிருதயத்தை தமிழ்வடிவில்தந்தபோது வைணவ உலகுக்குச் சேவை செய்தவராய்ப் புரவலர் உயர்ந்தார்! ‘காலப் பெருவெளி’ யைச் சைவப் பெருவெளியாய்த் தருகிற போது சைவத்துக்குத் தன் கடன் பணிசெய்து கிடப்பதே’ என்று உயர்கிறார்.

‘திருத் தொண்டத் தொகையால்’ சுந்தரமூர்த்தி நாயனார் அன்று சைவப் பேரியக்கத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். இன்று ‘சைவப் பெரு வெளி’ மூலமும்... உழவாரங்களின் மூலமும்... சைவத்தின் எழுச்சிக்கும்... இயக்கத்துக்கும் செந்தமிழ்ப் புரவலர் ஒரு மறுமலர்ச்சித் தென்றலாகியுள்ளார்! புத்தக வடிவில் சைவப் பெருவெளி... ஒரு சைவத்திருப்பள்ளி எழுச்சி! புதிய நோக்கில் ‘கையில் தவழும்’ ஒரு சைவ கங்கை!

அப்பாலுக்கு அப்பாலாய் பார்த்தது திருத்தொண்டத் தொகை; இப்பாலுக்கு இப்பாலாய்ப் பார்ப்பது இந்த உரைத் தொண்டத் தொகை – ‘‘என்றுமுள சைவம்’’. ‘‘சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்’’ எனக் கனவு கண்டார் சேக்கிழார். அவர் இயற்றிய பிறகு பல தொண்டர்கள் பற்றி உதிரி, உதிரியாகப் பாடப் பெற்றுள்ளன. எச்சங்கள் நிரம்ப உள்ளன. அவற்றை நிறைவு செய்கிறது ‘‘என்றுமுள சைவம்’’ என்ற இந்த உரைத் தொண்டத் தொகை.

நிஜமான கங்கைக்குக் கூட ஒரு சங்கமத்தில் நிறைவுண்டு; ஆனால் சைவ கங்கைக்குச் சங்கமங்கள் தொடர்கின்றன.

* * *

முன்னுரை

‘‘இருபதாம் நூற்றாண்டு சைவ சமய வரலாறு’’ என்ற வரிசையில் 2003ல் வெளிவந்த ‘‘சைவப் பெருவெளியில் காலம்’’ என்ற நூலில் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாடு, ஈழம் பகுதிகளில் வாழ்ந்த சைவ அறிஞர்கள், ஆன்றோர்களின் வாழ்க்கைக் குறிப்பும், சைவப் பணிகளும் தரப்பட்டுள்ளன. 2006ல் வெளிவந்த ‘‘என்றுமுள சைவம்’’ என்ற நூலில் சைவத் திருமடங்கள் பதினெட்டின் வரலாறும், சைவப்பணிகளும், மற்றும் தமிழகத்தின் எழுபது சிற்றூர்கள், பேரூர்களில் இயங்கி வரும் சைவ மன்றங்களின் வரலாறும், சைவப் பணிகளும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.’’

‘‘ஊரெல்லாம் சிவமணம்’’ என்ற இம்மூன்றாம் தொகுதியில் இரண்டாம் தொகுதியில் சேர்க்க முடியாத தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், சென்னை நகரில் உள்ள சைவ மன்றங்களின் வரலாறும், சைவப் பணிகளும் தொகுத்து விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் தொகுதியின் – அவசியம் பற்றிச் சிலர் கேள்விகள் எழுப்பினார்கள். தமிழர்களுக்கு வரலாற்று உணர்வு என்பதே கிடையாது. அதுவும் அவர்கள் வாழும் காலத்து நிகழ்வுகளைப் பதிவு செய்வதே கிடையாது என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் உள்ளது. அப்படியிருக்கும்பொழுது நாம் வாழுகின்ற இக்காலத்தில் உள்ள சைவ சமய நிலையினை இத்தொகுதி ஓரளவு நிறைவேற்றுகிறது.

இரண்டாவதாக தமிழகத்தில் பல அமைப்புகளின் – தொண்டர்களின் – ஆன்றோர்களின் பணிகள் அவர்கள் வாழும் பகுதிகளைத் தாண்டி வெளியே தெரிவதில்லை. களிமேடு அப்பர் விழா, சின்னமனூர் மாணிக்கவாசகர் கோயில், ஒரு காலத்தில் சிவராஜ தானியாக விளங்கிய மஞ்சக் கொல்லை, ஒரு கிராமத்தில் வாழும் பள்ளிப்படிப்பே அறியாத மாபெரும் சித்தாந்த அறிஞர் சிவம் ஐயா, வெட்டுவாணம், சென்னை மன்றங்களில் காணப்படும் அற்புத ஓவியங்கள் – இவையெல்லாம் ஒரு சில எடுத்துக் காட்டுகளே. இவையெல்லாம் தமிழ்கூறு நல்லுலகிற்கு வெளிப் படுத்தப்பட்டுள்ளன. ஏன்? நூறாண்டு களுக்கு மேலாக இன்றும் செம்மாந்து பணியாற்றி வரும் சைவச்சித்தாந்தப் பெருமன்றத்தின் முழு வரலாறு முழுமையாகத் தொகுக்கப்பட்டு எழுதப்படவில்லை.

மூன்றாவதாக இவ்வாறு பணியாற்றுகிறவர்களுக்குத் தங்கள் பணிகள் அங்கீகரிக்கப்படுகின்றன என ஒரு ஊக்கம் பிறக்க வாய்ப்பு உள்ளது. இது ஒரு சிலருக்கே பொருந்தும். பல தொண்டர்கள் தாங்கள் செய்யும் தொண்டு வெளியில் தெரியக் கூடாது என்று பணிவின் நிமித்தம் கூறுகிறார்கள். இந்நூலைப் படிக்கின்ற மன்றங்களின் பொறுப்பாளர்கள். ‘‘நாமும்கூட இப்படிச் செய்யலாமே’’ என மனவெழுச்சி பெற வாய்ப்பு இருக்கிறது. நூலை எழுதி வரும் எனக்கே [மெய்கண்டார் மன்னிப்பாராக] ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு உள்ளது. இந்நூலைப் பற்றி மதிப்புரை பேசிய சாரதா நம்பியாரூரன் அவர்கள், ‘‘சைவ சமயம் தளர்ச்சியுற்றிருக்கிறதே என்று கவலையுற்றிருந்தேன். இந்நூலைப் படித்தவுடன் என் கவலை தீர்ந்து புது உற்சாகம் பிறந்துள்ளது’’ என்றார்கள்.

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்நூலில் திருப்பார்வை சார்த்தி அதன் அடிப்படையில் திருவாவடுதுறை ஆதீன விழாக்களில் பல அறிஞர்களையும், மன்றங்களையும் பாராட்டி விருது வழங்குவதாகத் திருவாய் மலர்ந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்களுக்கு எனது வணக்கம் கலந்த நன்றி உரியதாகும்.

‘‘என்றுமுள சைவம்’’ என்ற நூலுக்குக் கள ஆய்வு செய்தது போலவே இந்த நூலுக்கும் கள ஆய்வு செய்ய வேண்டி இருந்தது. 2005 எப்ரல் 2 முதல் 12 வரை கோவை, சேலம் உள்ளிட்ட கொங்கு மண்டலத்தில் கள ஆய்வு செய்தேன். பேரூர் மணிவாசகர் அருட்பணிமன்றச் செயலாளர் திரு. குமரலிங்கம் எனக்கு முன்பே அறிமுகமானவர். என் மேல் எல்லையற்ற அன்பும் ஈடுபாடும் கொண்டவர். அவருடன் தொடர்பு கொண்டு அவர் குறித்த நாட்களிலேயே கொங்கு மண்டலப் பயணம் மேற் கொண்டேன். கொங்கு மண்டலப் பயணம் முழுமையிலும் ஒரு அமைச்சருக்குக் கொடுக்கப்படும் வரவேற்பும், போற்றுதலும் இருந்தன. தங்குவதிலிருந்து உணவு உட்கொள்வது வரை ஒரு செலவும் செய்ய விடாது தடுத்துவிட்டனர். அது மட்டுமல்லாமல் எந்தெந்த மன்றப் பொறுப்பாளர்களைப் பார்க்க வேண்டும்? அவரை எப்பொழுது பார்க்கலாம்? என்று நேரம் தெரிந்து அதற்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள். அந்த பத்து நாட்களும் கூடவே இருக்க இரண்டு தொண்டர்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். இதனால் ஒவ்வோரிடமும் தேடும் நேரமும் குறைந்தது. சாதாரணமாக 40 நாட்களில் முடிக்க வேண்டிய பணியினைப் பத்தே நாட்களில் முடிக்க முடிந்தது. இல்லையென்றால் எங்கேயோ ஒரு மூலையில் இருக்கும் பிச்சாண்டிபாளையத்திற்குச் சென்று சிவம் ஐயா அவர்களை எப்படி தரிசித்திருக்க முடியும்?

தொண்டர் தம் பெருமை சொல்லவும் எளிதோ?

ஏப்ரல் 2ம் தேதி கரூரில் நேராக வழக்கறிஞர் குமரன் அவர்களின் அலுவலகம் சென்றேன். குமரன் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு நேராக சொர்ணத்தக்கா அவர்களின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் முன் கூட்டியே சொல்லியிருந்தமையால் கரூர் மன்றங்களின் நிர்வாகிகளும், தொண்டர்களும் குழுமியிருந்தனர். அவர்களிடம் குறிப்புகள் எடுத்துக் கொண்டு மன்றப் பொறுப்பாளர் ஒருவரின் தங்கும் விடுதியில் தங்கிவிட்டேன். உணவும் அவர்கள் செலவு தான். பணி எவ்வளவு எளிதாக முடிந்தது பாருங்கள்! அங்கிருந்து நேராக வெள்ளக் கோயில் சென்று பெரியவர் திரு. பி. குமாரசாமி அவர்களைச் சந்தித்து வெள்ளக் கோயில் மன்றங்கள் பற்றிக் கேட்டறிந்தேன்

வெள்ளக்கோயிலிலிருந்து நேராகப் பேரூர் சென்றேன். அங்கே குமரலிங்கம் கட்டளைப்படி திரு. சீனிவாசனும், திரு. இராமுவும் காத்துக் கொண்டிருந் தார்கள். பேரூரில் தங்கும் வசதி கிடையாது. தொண்டர் வடிவேலு வீட்டில் தங்கி தான் கோவைப்பணியை முடித்தேன். பேரூர், கோவை, புன்செய்ப்புளியம்பட்டி, விசயமங்கலம், ஈரோடு வரை சீனிவாசனும், இராமுவும் கண்ணை இமையிரண்டும் காப்பது போல வண்ணமுறக் காத்திட்டார்கள். அங்கங்கு உணவு, விருந்து; ஈரோட்டில் வெங்கடேசன், வேல்முருகன், கௌரிசங்கர் வரவேற்று ஆற்றுப்படுத்தினார்கள். சீனிவாசனும், இராமுவும் அவர்களிடம் என்னை ஒப்படைத்து விட்டு விடை பெற்றார்கள். பவானியில் திரு. தியாகராஜன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார். கரூர் முதல் பவானி வரை குமரலிங்கம் ஏற்பாடுதான். பவானியிலிருந்து மேட்டூர் சென்று வெங்கடராஜைச் சந்தித்து விட்டு நேராகச் சேலம் சென்றேன். சேலத்தில் திரு. பூதலிங்கம், திரு. அப்பாய் செட்டியார் ஆகியோரிடம் செய்திகள் பெற்று எனது கொங்கு மண்டலப்பயணத்தை முடித்துக் கொண்டேன்.

2005 செப்டம்பர் 21 முதல் 29 வரை வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் பகுதிகளில் கள ஆய்வு செய்தேன். திருச்சி தாளாளர் மேஜர் திரு. சீனிவாசன் தமிழகச் சைவ மன்றங்களின் முகவரிகளைக்

கொண்ட புத்தகம் எழுதி வெளியிட்டிருந்தார். அதனைக் கொண்டு செய்யாறு, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மன்றங்களுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பயணத்தை உறுதிப்படுத்தினேன். செப்டம்பர் 21ம் தேதி செய்யாறு நானும் என் மனைவியும் சென்றோம். வந்தவாசி அமைப்பாளர்களும் வந்திருந்தனர். அங்கிருந்து காஞ்சிபுரம் சென்றோம். செப்டம்பர் 22, 23, 24 பிற்பகல் வரை காஞ்சிபுரத்தில் கள ஆய்வு; திருவேதகிரி முதலியாரும் திருபரமேசுவரனும் மூன்று நாட்களும் உடன் வந்தனர். காஞ்சிபுரத்தில் திரு. பு.மா. ஜயசெந்தில்நாதன் சைவ சமயம் காஞ்சிபுரத்தில் இருபதாம் நூற்றாண்டில் ஒரு நூறாண்டுக்காலம் எப்படி வளர்ச்சி பெற்றது என வரலாற்று நீதியாகக் குறிப்பிட்டார். இதுபோல ஒவ்வொரு ஊருக்கும் ஒருவர் இருக்க வேண்டும். ஜயசெந்தில்நாதன் குறிப்பிட்ட திருஞானசம்பந்தம் என்ற பெரியவரின் புகைப்படம் கிடைக்க அல்லாடிப் போனேன். பரமேசுவரன் பெரியவரின் இல்லத்திற்கே சென்று, வீட்டில் மாட்டியிருந்த புகைப்படத்தை எடுத்து வந்தார். அப்புகைப்படத்தின் மேல் சட்டம், கண்ணாடி ஆகியவற்றை அகற்றிவிட்டுப் பின் அதனைப் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். மிகவும் மன நிறைவைத் தந்தது. காஞ்சிபுரத்தில் ஆரம்பகாலங்களில் சைவ விதையை ஊன்றிய பெருமகனாரின் படம் அல்லவா?

செப்டம்பர் 24ம் தேதி பிற்பகல் வேலூர் சென்றோம். முன்பே திரு. செல்வநாதனிடம் தொடர்பு கொண்டிருந்தேன். அவர் தல யாத்திரை மேற்கொண்டதால் திரு. கார்த்திகேயனிடம் ஆற்றுப்படுத்தியிருந்தார். கார்த்திகேயன் வேலூர், இரத்னகிரி மன்றங்களுடன் தொடர்பு கொண்டு அழைத்துச் சென்றார். வேலூர் பல்கலைக்கழக ஆட்சிக் குழுத் தலைவர் திரு. ஜி. விசுவநாதன் சட்டக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர். அவருடைய பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் தங்கச் சொல்லிவிட்டார். செப்டம்பர் 26ம் நாளன்று வெட்டுவாணம், குடியாத்தம், [திரு. கி.ஆ. பக்தவத்சலனார் இல்லம்], ஆம்பூர் மன்றப் பொறுப்பாளர்களைச் சந்தித்தேன். அன்று இரவு என் கல்லூரித் தோழர் வழக்கறிஞர் திரு. அ. ராஜேந்திரனுடன் ஜவ்வாது மலையில் தங்கினோம்.

செப்டம்பர் 27ம் நாள் திருவண்ணாமலை சென்று இரமணாசிரமத்தில் தங்கினோம். திருவண்ணாமலையில் திரு. அ. பாண்டுரங்கன் என்ற மூதறிஞர் சுமார் ஒன்றரை மணி நேரம் திருவண்ணாமலையில் நூறாண்டுக் காலம் வாழ்ந்த ஞானியர், அறிஞர்கள், பற்றி நெஞ்சுருகிச் சொன்னார்கள். திருவண்ணாமலையும், காஞ்சிபுரமும் முழு வரலாறு கூறும் பகுதிகளாக அமைந்து விட்டன. திருவண்ணா மலையில் குப்புசாமி அடிகளின் புகைப்படம் எடுத்து ஊருக்கு அனுப்பினார். மனநிறைவோடு 30ம் நாள் சென்னை திரும்பினோம்.

சென்னையிலேயே வசித்து வந்தமையால் வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் சென்னை மன்றங்களுக்கு சென்று குறிப்புகள் சேகரித்தேன். சைவ சித்தாந்தப் பெருமன்றம் தொடர்பாகப் பத்து ஆண்டுக் காலமாக என்னுடைய முந்தைய நூல்களுக்குச் செய்திகள் சேகரிக்க சித்தாந்தம் [பழைய இதழ்கள் – நூறாண்டில் ஒரு சில ஆண்டுகள் தவிர] இதழ்களைப் பார்வையிட்டு வந்தேன். பெருமன்றத்திலும் பொன்விழா மலர், முத்துவிழா மலர், நூற்றாண்டு விழா மலர், நூற்றாண்டு தலைமைப் பொழிவுகள் வெளியிட்டிருந்தனர். அவற்றை வைத்து முழுக்கட்டுரை உருவாக்க முடிந்தது.

சென்னை சிவனடியார் திருக்கூட்ட நூற்றாண்டு விழா மலர், ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜனசபை நூற்றாண்டு விழா மலர், திருமயிலை இறையன்பர் திருச்சபை ஆகிய அமைப்புகள் வெளியிட்ட மலர்கள் பெரிதும் உதவியாய் இருந்தன.

திரு. வி.க.வின். வாழ்க்கைக் குறிப்புகளில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடுகள், செந்தமிழ்ச்செல்வி இதழ்கள் கழகத்தின் பணிகள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. தமிழிசைச் சங்கத்தில்

செய்திகள் சேகரிக்க சற்று சிரமப் பட்டேன். செய்திகள் பெறவே ஆறு மாதங்கள் பிடித்தன. என்னுடைய சிரமத்தினைத் தாங்காத உதவிச் செயலர் திரு. இராமையா தன் கைவசம் இருந்த தமிழிசைச் சங்க மலர்களைத் தந்து உதவினார்.

தேவார இசைக்கலை விழா பற்றிய பழைய அழைப்பு எதுவுமே கிடைக்கவில்லை. என்னிடம் ஒரு மலர் இருந்தது. திரு. மா. வயித்தியலிங்கம் சில செய்திகள் சொன்னார். பொங்கு தமிழ்ப்பண்ணிசை மன்றத்தின் நிகழ்ச்சிகளுக்கு நான் தொடர்ந்து செல்வது உண்டு. அதன் தலைவர் திரு.ஜெ.வி. கண்ணன் ''தமிழ் ஓசை தலையங்கக் கட்டுரைகள்'' என்ற நூல்களை வழங்கினார். அவை உதவியாக இருந்தன. சேக்கிழார் ஆராய்ச்சி மைய அழைப்புகள் என்னிடமே பல இருந்தன. அதன் செயலர் திரு. டி.எஸ். தியாகராஜன் அத்துணை அழைப்புகளையும் அழகாகத் தன் கோப்புகளில் வைத்திருந்தார். அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் பிரதோஷ வழிபாட்டுக் குழுவிற்கு அவர்கள் நடத்தும் மூன்று கூட்டங்களில் கலந்து கொண்டேன். ஓதுவா மூர்த்திகளும் நிரம்ப செய்திகள் கூறினார்.

இன்னும் சில முக்கிய அமைப்புகள் பற்றிய செய்திகள், இருக்குமிடம் ஒன்றுமே தெரியாத நிலை. பலரிடம் கூறிப் பார்த்தேன். நடக்கவில்லை. தோன்றாத் துணை யாக புரசைத் திருநெறிக்கழகத்தின் செயலர் திரு. சரவணன் சென்னையில் உள்ள அனைத்து மன்றங்களின் முகவரிகளைத் தந்தார். அடுத்து ஒரு சில மன்றங்களுக்கு என்னை அழைத்துச் சென்றார். காமரா எடுத்துச் செல்லாமல் போய்விட்டோம். பிறகு இரண்டு முழு நாட்கள் சரவணன் தன் நண்பரை அழைத்துக் கொண்டு மேற்குறித்த மன்றங்களின் கட்டிடங்கள், உள்ளே வைக்கப் பட்டிருந்த புகைப்படங்கள், பழமை மிக்க தஞ்சாவூர் ஓவியங்களில் தீட்டப்பட்ட பரமசிவனார் – உமை, நால்வர், அறுபத்து மூவர் படங்கள் என நூறுக்கும் மேற்பட்ட படங்களைப் புகைப்படம் பிடித்துக் குவித்துத் தள்ளிவிட்டார். அத்துணையும் கலைச் செல்வம், கருவூலம்; சென்னை மன்றங்களின் பணிகள் எழிலுடன் விளக்கம் பெற்றிருக்கின்றன என்றால் அதற்கு காரணம் சரவணனே ஆவார். செலவான பணம் கூடப் பெற்றுக் கொள்ளவில்லை.

தருமையில் 1940களில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டுப் படங்களை ஈரோடு சத்தீஷ் அனுப்பி வைத்தார். திருவாவடுதுறையில் நடைபெற்ற திருமுறை மாநாடுகள், திருவாசக மாநாடு பற்றிய செய்திகள், புகைப்படங்களை திருவாவடு துறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பாலித்து அனுப்பச் செய்தார்கள்.

இந்நூல் வெளிவரச் செய்திகள் திரட்டித் தந்த மேற்கூறிய அத்துணை அன்பு நெஞ்சங்களுக்கும், அணிந்துரை நல்கிய முனைவர் திரு. இரா. செல்வக் கணபதி அவர்களுக்கும், நூலின் ப்ரூப் பார்த்துத் திருத்திய எனது சித்தாந்த ஆசிரியர் சித்தர்காடு திருநாவுக்கரசு பிள்ளை அவர்களுக்கும் நூலினை அழகுற அச்சிட்டு வெளியிட்ட நர்மதா பதிப்பகம் உரிமையாளர் திரு. இராமலிங்கம் அவர்களுக்கும் என்னுடைய நன்றி உரியதாகும்.

தாசில்பண்ணை அன்புடன்
மேலத்தெரு இரா. இராஜசேகரன்
மேலையூர், பூம்புகார் 1.6.2008
609107

❑ ❑ ❑

அணிந்துரை

திரு. இரா. செல்வக்கணபதி

இந்தியத் திருநாடு விடுதலை பெற்ற காலத்தில், தமிழ்நாட்டில் நாத்திக வாதத்திற்குள் குறைப் பட்டது. கடவுள் மறுப்புக் கொள்கையை முன் வைத்துச் சமண – பௌத்தர்கள் வைதிக மதங்களை வீழ்த்திய காலத்தில் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தீரத்துடன் போராடி கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சைவத்தை மீட்டெடுத்தனர். ஓராயிரம் ஆண்டுகள் தடையின்றி வளர்ந்த சைவத்திற்கு இசுலாமியர் படை எடுப்பாலும், ஆங்கிலேயரின் கும்பினி ஆட்சியாலும் வந்த வீழ்ச்சி முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாகச் சைவ சமய வளர்ச்சியை வெகுவாகப் பாதித்தது. தடைகள் பலவற்றையும் கடந்து சைவம் இன்று மீண்டும் புத்தெழுச்சிப் பெற்றிருக்கும் இனிய தருணம் இது. சிவனருளும், சைவ நன்மக்களின் அளப்பரிய சகிப்புத் தன்மையும், மௌனப் போராட்டங்களுமே இந்த மலர்ச்சிக்கான மூல காரணங்கள்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் தமிழகத்தில் சைவ சமயத்தை உயர்த்திப் பிடிக்கவும், உரிய இடத்தில் அமர வைக்கவும், தமிழ்ச் சைவர்கள் பல் வேறு அரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சிவாலயங்களைப் புதுப்பித்துக் குடமுழுக்குக் காணுதல்; சைவ சமய சாத்திர – தோத்திர நூல்களுக்கு எளிய உரை கண்டு வெளிப்படுத்துதல்; சைவ நூல்களை எளிய விலையில் அச்சிட்டு வழங்கு தல்; சைவ பெருமிதங்களை எல்லாரும் அறிய அரிய, பெரிய ஆய்வு நூல்களை எழுதி வெளிப்படுத்துதல். மன்றங்கள் அமைத்துச் சைவர்களை ஒருங்கிணைத்து சைவ உணர்வு பெறச் செய்தல்; சைவ நூற் கல்வியைப் பரவலாக்கிப் பலரை யும் சைவ அறிவில் தலை நிறுத்துதல்! சைவம் சார்ந்த பெருவிழாக்களைத் திட்டமிட்டு நடத்தி மக்கள் கவனத்தைச் சைவத்தின்பால் ஈர்த்தல்; திருமுறைகளை முன் வைத்து தமிழ்வழி வேள்விகளை ஒருங்கிணைத்தல்; சைவ அறிஞர் களை இனங்கண்டு போற்றுதல் போல்வன குறிக்கத்தக்க நன்முயற்சிகளாகக் கருதத்தக்கன

சைவ சமய வளர்ச்சிக் குறித்துத் தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் குறித்த செய்திகளை ஒருங்கிணைப்பதற்கு எந்த ஒரு அமைப்பும் தோன்றாதது பெருங்குறை. நம்மைச் சுற்றி, சைவ சமய வளர்ச்சிக்கு, யார் யார் என்ன என்ன செய்து வருகிறார்கள் என்பதைச்

சைவப் பெருமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டுவது இன்றியமையாதது. சைவ சமய வளர்ச்சிக் குறித்த முயற்சிகளை ஒருங்கிணைக்கவும், குறைகளைந்து புதிய தடங்களில் முயற்சி மேற்கொள்ளவும் இம்முயற்சித் துணையாகும். சைவ சமய வளர்ச்சிக் குறித்த பத்திரிகைகள் பலவும். வெறும் செய்திமடல்களாகவும், கோள்களால் வரும் இன்னல்களுக்கும் பரிகாரம் கூறுவனவாகவுமே நிற்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இந்தக் குறையைத் தளர்த்தி சைவ சமய அமைப்புகளை ஒருங்கிணைக்கும் அரிய பெரிய முயற்சியைக் கால் நூற்றாண்டுக்கும் மேலாக எடுத்து வரும் தீரர். செந்தமிழ்ப்புரவலர். திரு. இரா. இராஜசேகரன் அவர்கள்.

சைவ சமய வளர்ச்சியில் திரு. இரா. இராஜசேகரன் அவர்கள் எடுத்து வரும் முயற்சிகள் தமிழ்ச் சைவர்கள் நன்றியோடு நினைவு கூரப்பட வேண்டுவன. அவர் கண்ட தெய்வத் தமிழ் மன்றம் சோழ வளநாட்டில் மயிலாடுதுறையை மையமாகக் கொண்டு சைவ சமய வளர்ச்சியில் பெரும் பணியாற்றியது. அவர் அமைத்த ‘உழவாரம்’ இயக்கம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் தொண்டுகளை உலகறிய வைத்தது. அவர் ஆண்டு தோறும் நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான சைவ சமயப் பயிற்சி பாசறை இளைஞர்களைச் சைவத்தில் பெருமளவு ஈடுபாடு கொள்ள வைத்தது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அவர் அரிதின் முயன்று, தொகுத்து வெளியிட்டு வரும் பெருநூல்கள் சைவப் பெருமக்களின் நயப்பில் தங்கின. தன் அளப்பரிய முயற்சிகளால் திரு. இராஜசேகரன் அவர்கள் ஆற்றி வரும் சைவ சமய வளர்ச்சிப் பணிகள் ஒரு நிறுவனத்தில் அறிஞர் பலர் கூடிச் செய்ய வேண்டிய பணிகளுக்கும் மேலானவை. இது பிற்காலத்தில் பெரிதாக பேச வைக்கும்!

2002 இல் அவர் தொகுத்து வெளியிட்ட சைவப் பெருவெளியில் காலம் என்ற அரிய பெரிய நூல் சைவ சமய வளர்ச்சி வரலாற்றைத் தொன்மைக்காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை ஆராய்ந்து சுட்டி நின்றது. அதன் இரண்டாவது பகுதி சைவ சமய வளர்ச்சியில் அளப்பரிய தொண்டுகள் புரிந்த பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டின் அறிஞர்களையும், ஆன்றோர்களையும் அறிமுகம் செய்து நிறைந்தது. 2006 இல் அதன் தொடர்ச்சியாக அவர் தொகுத்து வெளியிட்ட ‘என்றுமுள சைவம்’ என்ற பெருநூல் கடந்த ஐந்நூறு ஆண்டு களுக்கும் மேலாக சைவ சமய வளர்ச்சியில் அருந்தொண்டுகள் ஆற்றிய சைவ சித்தாந்த ஆற்றல்களின் வரலாறு களை விளக்கி நின்றது. அதன் பிற்பகுதியில் சோழநாடு, நடுநாடு, பாண்டி நாடு ஆகிய பகுதிகளில் காலத்தின் தேவை உணர்ந்து சைவ சமய வளர்ச்சியில் அருந்தொண்டுகள் ஆற்றி வரும் அமைப்புகளையும், அமைப்புக்களைச் சார்ந்து நின்று சைவம் வளர்த்த அறிஞர்களையும், அடையாளப்படுத்தியது. இவ்விரு நூல் முயற்சிகளும் ‘சாகித்திய அகாதமி’ விருது பெறுவதற்குரிய தரம்மிக்கன. இம்முயற்சிக்காகத்

தமிழ்நாடு அரசு திரு.இரா. இராஜசேகரன் அவர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்.

திரு. இரா. இராஜசேகரன் அவர்களின் மூன்றாவது முயற்சி இன்று. 'ஊரெல்லாம் சிவமணம்' என்ற தலைப்பில் உங்கள் கைகளிலே தவழ்கிறது. இது இரண்டாண்டு இடைவெளியில் பிறந்த கொழு கொழு குழந்தை. என்றுமுள சைவத்தின் தொடர்ச்சியாய், தமிழகத்தில் கொங்குமண்டலம், தொண்டை மண்டலம் மற்றும் சென்னைப் பகுதிகளில் சைவ சமய வளர்ச்சிக்கு ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அரும்பணி ஆற்றி வரும் சைவ சமய அமைப்புக்களின் விரிவான வரலாற்றையும், இப்பகுதிகளில் வாழ்ந்து சைவ சமயத்திற்கு அருந்தொண்டுகள் ஆற்றிய – ஆற்றி வரும் அறிஞர்களையும் நமக்கு அறிமுகம் செய்து நிறைகிறது. இந்நூல் சைவ சமய வளர்ச்சிக்குறித்த மிக விரிவான ஒரு வரலாற்று ஆவணமாகப் போற்றப்படும் என்பது உறுதி.

'ஊரெல்லாம் சிவமணம்' நூல் முயற்சியில் அறிஞர். திரு. இரா. இராஜசேகரன் அவர்கள் எடுத்த அளப்பரிய முயற்சிகளை அருகிருந்து கணித்தறிந்தவன் நான். உண்ணும், உறங்கும் நேரமின்றி பிற நேரங்கள் எல்லாம் அவர் சிந்தனையும் சொல்லாக்கமும் இந்நூல் பற்றியதாகவே அமைந்தன. பல நூறு மைல்கள் பயணித்தும், நூற்றுக்கணக்கானவர்களோடு நேர்காணல் நிகழ்த்தியும், அரிய படங்கள் சேகரித்தும் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்னைப் பிரமிப்படையச் செய்தன. சைவ மரபில் பிறந்து வளர்ந்த ஊற்றம்! சைவப் பேரறிஞர்களோடு ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு, சைவத்திற்கு ஏதேனும் செய்தே ஆக வேண்டும் என்ற தணியாத ஆசை! எல்லாவற்றுக்கும் மேலாக இத்தடத்தில் இவரைப் பணிகொண்ட சிவபெருமானின் தண்ணருள் எல்லாம் கலந்தே இந்த நூற்கொடை தமிழ்ச் சைவர்களுக்கு வாய்த்தது. நூலாசிரியரை இத்தடத்தில் முயற்சி மேற்கொள்ள மிகப் பெரிய உந்துசக்தியாக விளங்கிய நண்பர் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி. ஜீவா ராஜசேகரன் அவர்கள் நம் பாராட்டுதல்களுக்கும், நன்றிக்கும் உரியவர்கள். இத்தகைய பெண்களைத்தான் தெய்வச் சேக்கிழார் 'மனையறத்தின் வேர்' என்றனர் போலும்.

'ஊரெல்லாம் சிவமணம்' என்ற இந்த அரிய நூலை எவர் ஒருவர் உதவியையும் பெறாது, தன் சொந்த முயற்சியில் வெளிக்கொணரும் திரு. இரா. இராஜசேகரன் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டுகின்றேன். நல்ல நூல்களை வெளியிட்டு வரும் நர்மதா பதிப்பகம் இந்நூலையும் அழகுற அச்சிட்டு வழங்கியுள்ளது. திரு. நர்மதா இராமலிங்கம் அவர்கள் நம் பாராட்டுதலுக்கு உரியவர் ஆகிறார். 'ஊரெல்லாம் சிவமணம்' சைவத் தமிழ்மக்களுக்குக் கிடைத்திருக்கும். சிவனருட் கருவூலம். சைவ சமய அமைப்புகளுக்கெல்லாம் கிடைத்திருக்கும் ஓர் அரிய அங்கீகாரம். நாளை, நாம் ஒருங்கிணைந்து சைவம்

வளர்க்க நமக்கெல்லாம் கிடைத்திருக்கும் ஒப்பற்ற வழிகாட்டிப் புதையல். சிவனருள் திரு. இராஜசேகரனைப் பணிகொண்டு சைவத் தமிழர்களுக்கு வழங்கியிருக்கும் ஒரு சிவ புண்ணியம்!

செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராஜசேகரன் அவர்கள் தம் அன்புத் துணைவியார், செல்வங்கள் பேரன் பேத்திமார்களோடு நூறாண்டுகளுக்கும் மேலாக வாழ நாம் பிரார்த்திப்போம். அவர் மேலும் மேலும் இத்தகு நூல்களைப் படைத்தளிப்பார். தமிழ்ச் சைவர்கள் இந்நூலை ஏற்றுப் போற்ற வேண்டும். ஒவ்வொரு, சைவ சமய வளர்ச்சி அமைப்புகளும் இந்நூலை வாங்கி வைத்து ஆவணமாகப் போற்றிப்பேண வேண்டும்.

- இரா. செல்வக்கணபதி
சென்னை

☐ ☐ ☐

முதற்பகுதி

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

1898





இருக்கம் ஆதிமூல முதலியார் என்ற அரும்பெரும் தொண்டரும் அவரோடு ஒத்த கருத்துடைய ஆர்வத் தொண்டர்களும் இணைந்து 25.12.1898ல் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தைத் தொடங்கினர்.

இந்த அமைப்பு மாதம் தோறும் தொண்டை நாட்டில் பாடல் பெற்ற தலங்களை வழிபட்டு வருவது, சிவாலயங்களில் பிரதோஷ வழிபாட்டினைச் செவ்வனே ஆற்றி வருவது ஆகிய சைவப்பணிகளைச் செய்து வந்தது. 3.2.1901இல் திருக்கூட்டத்தார் திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜப் பெருமானுக்குத் திருக்குடமுழுக்கு விழா நடத்தினர். இத்திருக்கூட்டத்தின் பணியினை அறிந்த வண்ணாரப் பிள்ளையார் கோயில் நிர்வாகத்தார் அத்திருக்கோயிலை இத்திருக்கூட்டத்தாரிடம் ஒப்படைத்தனர். 1908 வரை இத்திருக்கூட்டத்தார் அத்திருக்கோயிலை மிகச் சிறப்புற நிர்வாகம் செய்து வந்தனர். கோயிலுக்கென்று காலி வீட்டு நிலம் இருந்தது. அந்த இடத்தில் 2500 ரூபாய் செலவில் 1905ஆம் ஆண்டில் திருக்கூட்ட வழிபாட்டு மண்டபம் மேல் மண்டபம், கீழ்மண்டபம் என இருதள மண்டபமாகக் கட்டி முடிக்கப்பட்டது. மேல் மண்டபம் தமிழ்வேத பாராயணத்திற்கும் சாத்திர தோத்திர விரிவுரைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

இடையில் பணிமாற்றம் காரணமாக ஆதிமூல முதலியார் கல்கத்தா செல்ல நேர்ந்தது. அவர் சென்ற பின் திருக்கூட்டம் முன்பு போல் இருக்கவில்லை. எனவே ஆதிமூல முதலியார் விருப்ப ஓய்வு பெற்று அதனால் தனக்கு ஓய்வூதியத்தில் வரும் இழப்பையும்

சிவனடியார் திருக்கூட்டம்

கருதாமல் சென்னைக்குத் திரும்பி வந்து திருக்கூட்டப் பணிகளைத் தொடர்ந்தார்.

சென்னையில் சைவ சித்தாந்த மகாசமாஜம் (இன்றைய பெருமன்றம்) தோற்றுவிக்கப் பெற்றபோது அது இயங்குவதற்கு மூன்று ஆண்டுகள் இடம் கொடுத்தது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம். இதற்கு வழிவகுத்தவர். திரு ஆதிமூல முதலியார் அவர்களே.

1908ல் திருக்கூட்டம் சங்கவிதிகளின் படி பதிவு செய்யப் பெற்றது. அதைத் தொடர்ந்து திருக்கூட்டத்தின் சார்பில் சைவ பாடசாலை ஒன்று அமைக்கப் பெற்று மாணவர்கட்கு சைவ சமய சாரங்களும் சாத்திரங்களும் கற்பிக்கப்பட்டன. 1915 ஜனவரித் திங்களில் ஆதிமூலமுதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ''சைவம்'' என்ற திங்கள் இதழ் வெளிவரலாயிற்று. தலயாத்திரை செய்யுங்கால் பாராயணத்திற்குப் பயன்படுமாறு பன்னிரு திருமுறைத் திரட்டு ஒன்று இத்திருக்கூட்டத்தின் சார்பில் திரு ஆதிமூல முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றது.

ஆதிமூல முதலியார் தன் முதுமைக் காலத்தில் திருக்கூட்டப் பணிகளை திரு. மா.ரா. சம்பந்தம் அவர்களிடம் செயலாளர் என்ற பொறுப்பில் ஒப்படைத்தார். இவர் காலத்தில் நிகழ்ந்த பணிகள் 1) தவத்திரு அழகரடிகளைக் கொண்டு திருவாசகம் முதல் நான்கு அகவல்கள் விரிவுரை, சிவஞான போத விரிவுரை, திருக்கோவையார் விரிவுரை, திருக்குறள் விரிவுரை, திருமந்திர விரிவுரை ஆகியவை நடைபெற்றன. திருமந்திர விரிவுரைக்கு மக்கள் வெள்ளம் போல் வந்து கேட்டு மகிழ்ந்தனர். 2) பாடல் பெற்ற சிவத்தலப் பயணங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. 3) திருக்கழுக்குன்றத்தில் திருமுறை இன்னிசைப் பெருவிழாவும், ஆனி மகத்தில் மணிவாசகர் பெருவிழாவும் நடத்தப்பட்டன.



சிவனடியார் திருக்கூட்டம்

திருமுறைக்காவலர் திரு. சோம சுந்தரம் செட்டியார் இத்திருக் கூட்டத்தின் தலைவராகப் பொறுப்பேற்று இத்திருக்கூட்ட நற்பணிக்கென ஓர் அறக்கட்டளை நிறுவினார். இந்த அறக்கட்டளையின் மூலம் பல தேவார வகுப்புகள் நடந்தன. ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் ஏதாவது சிவன் கோயிலுக்கு ஒரு ஓதுவாருடன் சென்று பன்னிரு திருமுறைப் பாராயணம் செய்தல் இவ்வறக்கட்டளை மூலம் இன்றளவும் நடைபெற்று வருகிறது.

திரு. மா. ரா. சம்பந்தனார்க்குப் பிறகுசெயலாளராகப் பொறுப்பேற்றவர் திரு. ஐ. சுந்தரம் ஆவார். சோமவார வழிபாடு, அறுபத்து மூவர் குருபூசை, அம்பலவாணர் ஆண்டாறு திரு மஞ்சனம், திருக்கழுக்குன்ற திருமுறை விழா, மணிவாசகர் விழா, திரு தரும புரம் சாமிநாதன் அவர்களைக் கொண்டு 12 திருமுறை முற்றோதுதல், திரு தேமொழியார் சுவாமிகளைக் கொண்டு 13 ஆண்டுகளுக்கு மேல் வாரந்தோறும் திருமந்திர விளக்கவுரை - எனப் பணிகள் தொடர்ந்தன. திரு.ஐ. சுந்தரத்தின் காலத்தில் தருமபுரம் திரு.பி. சுவாமிநாதன் மற்றும் படாளம் திரு. சண்முகம் அவர்கள் திருக்கழுக்குன்ற அன்னம் பாலிப்பிற்காக 12 ஆண்டுகள் பல ஊர்களுக்குத் தொடர்ந்து சென்று வீதி பாராயணம் செய்து நிதி திரட்டினர்.

திரு. ப. சம்பந்த முதலியார் தலைவராகப் பொறுப்பேற்று 1995-ஆம்



சோமசுந்தரநாயகர்



இருக்கம் ஆதிமூலமுதலியார்



சோமசுந்தரம் செட்டியார்

ஆண்டு 50ஆம் ஆண்டு திருமுறை விழாவினைச் சிறப்பாக நடத்தினார். தற்போதைய செயலர் திரு. V.K. சத்தியநாராயணன் *26.12.1998*ல் திருக்கூட்டத்தின் நூற்றாண்டு விழா வினை நடத்தி மலரும் வெளியிட்டார்.

ஐ. சுந்தரம்

மா.ரா. சம்பந்தம்

தற்பொழுது நடராஜர் திருஉருவப் படத்திற்கு நாட்பூசை, திங்கள்தோறும் தேவாரம் ஓதுதல், அறுபத்து மூவர் குருபூசை, திருக்கழுகுன்றம் மாணிக்க வாசகர் குருபூசை நடைபெற்று வருகிறது.

(துணைநூல் : சென்னைச் சிவனடி யார் திருக்கூட்டம் 100வது ஆண்டு நிறைவு விழா மலர். *26.12.1998*)

2. தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் குன்றத்தூர் (1902)

தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் 1902-இல் தோற்றுவிக்கப் பெற்றது என இம்மன்றத்தின் தற்போதைய தலைவர் திரு. மு. கிருஷ்ணன் நூலாசிரியர்க்கு அனுப்பிய குறிப்பில் குறித்துள்ளார்.

சென்னையிலிருந்து வெளிவந்த மலர் ஒன்றில் கீழ்வரும் குறிப்புக்ள் கிடைத்தன. ''குன்றத்தூரில் 17.6.1942-இல் 'செல்வமணி குன்றத்தூர் சேக்கிழார் சங்கம்' சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர் சண்முகசுந்தர முதலி

யார் தலைமையில் அமைக்கப் பெற்றது. பின் தமிழக அரசு முன்னாள் முதல்வர் திரு. எம் பக்தவத்சலம் தலைவர் ஆனார். அவர் காலத்தில் கிராமங்கள் தோறும் சென்று சேக்கிழாரைப் பற்றியும் திருத் தொண்டர் புராணத்தின் சிறப்பைப் பற்றியும் பிரச்சாரம் செய்து வரப் பட்டது. திரு. சி. என். முத்துரங்க முதலியார், என். ஆர் சடகோப முதலியார், மயிலை சிவானந்த முதலியார், மயிலை சிவராஜ முதலியார், போரூர் வாழ்நர்கள் ஆகியோர் ஆதரவு தந்தார்கள். முக்கியமாக அயனம் பாக்கம், போரூர், புரசவாக்கம், பெரம்பூர் முதலிய இடங்கள் குறிப்பிடத்தக்க பிரசாரம் செய்த இடங்கள் ஆகும். காங்கிரஸ் ஆட்சி பதவிக்கு வந்ததும் திரு. எம். பக்தவத்சலம் அமைச்சர் பதவி ஏற்றார்கள். எனவே புலவர் சரவண ஆறுமுக முதலியார் மன்றத் தலைவர் ஆனார். 26.12,.1942-இல் சீர்காழியில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாசமாச (இன்றைய பெருமன்றம்) ஆண்டு விழாவின் போது திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் தாம்பரம் திரு. சமரபுரி முதலியார், கொத்தமங்கலம் சதாசிவம் செட்டியார், மறை திருநாவுக்கரசு, சி. பாலசுப்பிரமணிய முதலியார் (இவர் தான் இக்குறிப்புரையை அம்மலரில் எழுதியுள்ளார்) முதலியவர்களைக் கொண்டு சேக்கிழார் திருப்பணிக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. பின் திரு. வி. உலகநாத முதலியார், திரு. வி.க, திரு. சச்சிதானந்தம் பிள்ளை, ருக்மிணி குக்கர் அ. சோமசுந்தர செட்டியார் முதலியோரைக் கொண்டு 35 ஆண்டுகள் சேக்கிழார் குரு பூசை சொற்பொழிவுகள் நடத்தியும் காஞ்சி அமரர் பொன். சண்முகனார் உதவியினால் பாடவகுப்பு நடத்தியும் கழகம் செயல்பட்டு வந்தது. அது மட்டுமன்றி சேக்கிழார் மாநாடுகள் புரசை, சூளை, மயிலை, மாம்பலம், தருமபுரம் பிரசார மண்டபம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. 1977-ல் மறை திருநாவுக்கரசு பதவி விலகியபின் மகாவித்வான் பண்டித நடேசனார், அம்பை சங்கரனார் முதலியோரால் மன்றம் வளர்ந்தது. பின் எம்.என். சங்கர நாராயணன், தவத்திரு ஈசுவர அடிகள், மு.பெ. சத்தியவேல் முருகன், கோ. சண்முகம், எம்.ஆர் திருநாவுக்கரசு, எம். ஆர் சுப்பிரமணியன் முதலியோர் 4.10.1981இல் கூடி தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் அமைத்து 1982ஆம் ஆண்டு பதிவும் செய்தனர். இவர்கள் காலத்தில் காட்டூர் திருவொற்றியூர், வில்லிவாக்கம், கோவூர், திண்டுக்கல், கூவம், போரூர், அழிஞ்சிவாக்கம் முதலிய இடங்களில் சேக்கிழார் மாநாடுகள் நடைபெற்றன. 29.11. 1987-இல் முத்துலிங்க ரெட்டியார் தலைவர் ஆனார். மன்றம் விரிவடைந்தது. 1989-இல் திரு. எம்.கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) தலைவர் ஆனார். இவருக்குத் துணையாக பனப்பாக்கம் ஏ. வேலாயுதனார் துணை நின்றார்.''

இதுகாறும் கூறியவற்றால் 1982-இல் தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் என்ற பெயர் சூட்டப்பட்டது என்றும், அதற்கும் பல காலம் முன்பே குன்றத்தூரில் சேக்கிழார் அமைப்பு இருந்து குருபூசை மாநாடுகள் நடத்தியிருக்கிறது என்றும் அந்த அமைப்பே தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் என்ற பெயரினைப் பெற்றது என்றும், அதன் தலைவர் திரு. மு. கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) என்றும் அவரே இது நாள் வரை தலைவராகப் பணியாற்றி வருகிறார் என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் ஒவ்வொரு மாதமும் பூச நட்சத்திரத்தன்று குன்றத்தூர் தெய்வச்

சேக்கிழார் ஆலயத்தில் சேக்கிழார் குருபூசை நிகழ்ச்சி நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் சேக்கிழார் அவதார நட்சத்திரத்தன்று குருபூசைப் பெரு விழாவைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

தமிழ் நாடெங்கும் இதுவரை *(5.5.2007) 368* சேக்கிழார் மாநாடுகளைத் தமிழ்த் தெய்வச் சேக்கிழார் மன்றம் நடத்தியுள்ளது. இப்பணி தொடர்கிறது. காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, வேலூர் இரத்தினகிரி, இலங்கை ஆகிய இடங்களில் ஐந்து உலக மாநாடுகளை வெகு சிறப்பாக மன்றம் நடத்தியுள்ளது. காஞ்சிபுரத்தில் நடந்த பெரியபுராணக் காட்சி ஊர்வலத்தை மக்கள் இன்றும் மகிழ்ச்சியோடு போற்றிக் கூறுகின்றார்கள். பாண்டிச்சேரி மாநாட்டில் தொண்டைமண்டல ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள், மேதகு துணை நிலை ஆளுநர் டாக்டர் ராஜேந்திர குமாரி பாஜ்பாய், புதுவை முதல்வர் R.V. ஜானகிராமன் கல்வி அமைச்சர் மற்றும் பல அறிஞர்கள், கலைஞர்கள் பங்கு பெற்றனர். *(14, 15 மார்ச் 1998) 2005* செப்டம்பர் *9, 10, 11* நாட்களில் இலங்கையில் நடைபெற்ற ஐந்தாவது மாநாட்டில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், இலங்கைப் பிரதமர் மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ, தொண்டைமண்டல ஆதீனம், தவத்திரு ஊரன் அடிகள், மற்றும் அறிஞர்கள், கலைஞர்கள் பங்குபெற்றனர். சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளுமாக வெகு சிறப்புடன் மாநாடு நடைபெற்றது. மாநாட்டு மலர், இந்து சமய மறுமலர்ச்சியை நோக்கிய அமைச்சின் செயல்பாடுகள் இந்துகலைக்களஞ்சியம் (ஏழாம் தொகுதி), இந்து கலைக் களஞ்சியம் (முதலாம் தொகுதி - மறுபதிப்பு) Hinduism for Hindus and non Hindus என ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டன.

இவையல்லாமல் மன்றத்தின் சார்பில் 18 பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஒரு மாதத்தில் 2 அல்லது 3 மாநாடுகள் நடைபெற்றுள்ளன. ஆண்டுக்கு ஒரு மாநாடு நடத்துவது என்பதே கடினமான செயல். மாதம் 2, 3 மாநாடுகள் ... ... நினைக்கவே மலைப்பாக இருக்கிறது. சென்னை, வேலூர் மாவட்டம், இன்னும் சில ஊர்கள் - இப்படி தமிழகத்தின் ஒரு பகுதியை சேக்கிழார் மன்றம் பெரிய புராணச் செழும் பொருளால் வளைத்துப் போட்டிருக்கின்றது.

திரு. மு. கிருஷ்ணன்

இந்த அளவுக்குத் தமிழ்நாடு தெய்வச் சேக்கிழார் மன்றம் சீரும் சிறப்போடும் நடக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணமாய் இருப்பவர் மன்றத் தலைவர் திரு. மு. கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களேயாவார். *82* வயது நிரம்பிய நிலையிலும் இத்தனை மாநாடுகளைத் தொடர்ந்து நடத்தி வருவதும், தான் கலந்து கொள்வதுமாக மாபெரும் தொண்டாற்றி வருகிறார்கள் சென்னை வாழ் டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமியுடன் இணைந்து திருஞானசம்பந்தர் இசைவிழா அறக்கட்டளை நிறுவி சென்னையிலும் திருக்கழுக்குன்றத்திலும் ஆண்டுதோறும் திருமுறை மாநாடுகள் நடத்தி வருகிறார். சென்னை தெய்வீகப் பேரவையுடன் இணைந்து திருக்கழுகுன்றத்தில் திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் குருபூஜைத் திருநாட்களின் போது திருமுறை விழா நடத்துகின்றார்.

தன் ஒய்வுக் காலத்தைச் சைவப் பணிக்கே செலவழிக்கும் ஆன்றோரான திரு. மு. கிருஷ்ணன் *8.4.1922*இல் கட்டிடம் கட்டும் தொழிலாளியான முனிசாமி என்பவருக்குப் பிறந்தார்.

படிப்படியாய் வாழ்க்கையில் முன்னேறி மாவட்ட ஆட்சித் தலைவராய் உயர்ந்தார். தன் பணியில் கண்ணும் கருத்துமாய் இருந்த கிருஷ்ணன் அவர்கள் நேர்மையாகப் பணியாற்றியமையால் ஆட்சி செய்தவர்களைக் கூட அஞ்சாது எதிர்கொண்டார். தற்பொழுது வேலூர் சத்துவாச்சாரியில் வசித்து வருகிறார். கிருஷ்ணன் அவர்கள் வரலாறே தனி நூலாகும்.

3. தெய்வச் சேக்கிழார் இலக்கிய மன்றம்

திரு. கிருஷ்ணன் போல ஊருக்கு ஒருவர் இருந்தால் போதும் பக்திச் சங்கிலி உருவாகிவிடும். அப்படி உருவானது தான் வேலூர் சத்துவாச்சாரி தெய்வச் சேக்கிழார் இலக்கிய மன்றம். 1985-இல் தொடங்கப்பட்ட இம்மன்றம் தன் ஆண்டு விழாக்களை பெரியவர் நடத்தும் திருமுறை மாநாடுகளாகவே நடத்தி விடுகின்றது.

பேராசிரியர் திரு. சத்தியசீலன், திரு. செல்வக்கணபதி, திரு. கி. சேகர் போன்றோர் பங்கேற்கும் சிந்தனை அரங்கம், பட்டி மண்டபம், என்று வெகு சிறப்பாக இரண்டு நாட்கள் நடைபெறுகின்றன. மாதக் கூட்டங்களும் இம்மன்றத்தில் நடைபெறுகின்றன. தலைவர் - திரு. டி. சண்முகம், செயலர் திரு. ந. ஜெகதீசன்.

மு. கிருஷ்ணன்

மு. கார்த்திகேயன்

சைவத்தில் நல்ல உறைப்புள்ளவர்; திரு நெறிய தமிழில் வாழ்வியல் சடங்குகளைப் பல்வேறு அன்பர்களின் இல்லங்களில் செய்து வருகிறார். தெய்வத் தமிழ் வழிபாட்டு இரண்டாம் மாநிலமாநாட்டின் செயலராகப் பணியாற்றினார். வேலூர் சைவ சித்தாந்தப் பேரவையின் செயலர். திருமுறை மன்றம் என்ற அமைப்பின் கீழ் திருமுறைகளைத் தொகுத்துச் சிறு நூல்களாக வெளியிட்டு வருகிறார். 1.6.1959-இல் திருவண்ணாமலையில் முத்து மாணிக்கம் லட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு மகவாய்ப் பிறந்த கார்த்திகேயன் வேலூரில் பொதுத்துறை நிறுவனத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றுகிறார்.

4. திருவலம் சிவனடியார் வழிபாட்டுமன்றம்

இம்மன்றத்தின் முக்கிய பணி... ...

திருமுறைகளை ஓதுதல், பரப்புதல் ... ... ஆலய அர்த்தஜாம பூஜை...

பிரதோஷ நாள் பூஜை... திருவலம் ஏகவள்ளியம்மன் ஆலயத்தில் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமை நாள் முழுதும் ஓதுதல் ... ஒவ்வொரு சனிக்கிழமையும் வீதி உலா செய்தல்... அமாவாசை, பௌர்ணமி, மாதசிவராத்திரி... நவராத்திரி, சிவராத்திரி விழாக்கள்... சித்திரை மாத பௌர்ணமியன்று திருவிளக்கு பூஜை... பிரம்மோற்சவ விழா... திருக்கோயில்கள் தரிசனம் செய்கையில்... தலையாத்திரை... மார்கழி மாதம் விடியற் பொழுதில்... ஜாதிப்பாகுபாடு பாராது விரும்பும் அன்பர்கள் இல்லத்தில்... புதுமனை புகுவிழா... திருமணம்...

இவ்வாறு நினைக்குந்தோறும், காணுந்தோறும் எப்போதும் ஓதுகிறார்கள் தித்திக்கும் திருமுறைகளை.

இவையல்லாமல் நால்வர் குரு பூஜை, முன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒருமுறை திருவாசக முற்றோதல், ஆண்டுக்கு ஒருமுறை பன்னிரு திருமுறை மாநாடு எனத் திருவலத்தைத் திருமுறை வலமாக மாற்றியுள்ளனர். சிவனடியார் வழிபாட்டு மன்றத்தார். (தோற்றம் : 1991; தலைவர் - திரு.டி.எம். சுந்தரமூர்த்தி, திரு. ஏ.மணி; செயலாளர் - திரு.தி. வாசுதேவன்)

5. ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜன சபை

1903

இளைஞர் கழகம் : ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை திரு. வி.க.வின் வாழ்க்கையோடு பிணைந்து நிற்பது, திரு.வி.க. அ. சிவசங்கர முதலியார், ச. சச்சிதானந்தம்பிள்ளை, இரத்தின சபாபதி முதலியார் ஆகியோர் ஒரு சாலை மாணவர்கள் ஆவர். வெஸ்லி பள்ளியில் பயின்றவர்கள், பேச்சு வன்மையில் சிறக்க இவர்கள் 1901 ஆம் ஆண்டு இளைஞர் கழகம் ஒன்றை நிறுவித் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் நன்கு பேச ஆரம்பித்தார்கள். இக்கழகம் இரண்டு ஆண்டு வளர்ந்தது. இக்கழகம் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையாக மாறிய நிலையையும், அதன் வளர்ச்சியையும் திரு. வி.க. இவ்வாறு கூறுகிறார்.

சபை தோற்றம் : ''நான்காம் பாரத்தை (இப்போதைய ஒன்பதாம் வகுப்பு) அடைந்ததும், ஆங்கிலத்தில் நன்றாகப் பேசுதல் வேண்டும் என்னும் பித்து மாணாக்கரைப் பிடிப்பது வழக்கம். இராயப்பேட்டை மாணாக்கராகிய நாங்களும் அப்பித்துக்கு எளியரானோம். துரைசாமியும் பார்த்தசாரதியும், ஏகாம்பரமும், யானும் செய்த முயற்சியால் இராயப்பேட்டை 'இளைஞர் கல்விக் கழகம்' என்றொரு கழகம் அம்மன் கோயில் தெருவில் (இப்போது ஸ்ரீநிவாசப் பெருமாள் சந்நிதி தெரு) கந்தசாமி முதலியார் வீட்டில் அமைந்தது. பின்னே அது முத்துமுதலி தெருவிலுள்ள சங்கர விலாசத்தில் வளர்ந்தது. ஆங்கில நாவன்மையால் உலகையே கவரச் செய்தல் வேண்டுமென்ற பேராசைப் பேய் என்னைப் பிடித்து அலைத்தது. அப்பேய் என்னைத் தனக்கு இரையாக்கவில்லை, கதிரைவேற்பிள்ளையின் கூட்டுறவு அப்பேயை ஓட்டிற்று.''

''கதிரைவேற்பிள்ளையின் சேர்க்கையும், அக்கால இராயப்பேட்டையின் நிலைமையும் ஒரு சைவ சபை காணுமாறு என்னையும், சிவசங்கர முதலியாரையும், மற்ற நண்பரையுந் தூண்டின. அத்தூண்டுதல் 1903-ஆம் ஆண்டில் கதிரைவேற் பிள்ளையைக் கொண்டு இராயப் பேட்டை ஸ்ரீ பால சுப்பிரமணிய பக்த ஜனசபையை அமைக்கச் செய்தது. கதிரைவேற் பிள்ளை தலைவராகவும், என்

ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை

தமையனார் அமைச்சராகவுந் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இராயப் பேட்டை 'இளைஞர் கல்விக் கழகம்' ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையாக மாறியது. ஆங்கில முழக்கமெல்லாம் தமிழ் முழக்கமாயின.''

''ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை முதல் முதல் முத்து முதலி தெரு, குத்தம்பாக்கம் அப்பாசாமி முதலியார் வீட்டிலே, ஓர் அறையிலே அமைக்கப்பட்டது. அவ்வறைக்குத் தெருப்பக்கம் பலகணி இல்லாம லிருந்தது. அதை அமைக்க மாணாக்க ராகிய நாங்களே முயன்றோம். இளமைக் கொழுமை என்ன செய்யாது? சிவசங்கரமும், இரத்தின சபாபதியும் யானுங் கடப்பாரை கொண்டு சுவரை இடித்தோம்; கல் சுமந்தோம்; மண் சுமந்தோம், சுண்ணாமுஞ்சுமந்தோம். அந்த அறையில் பழைய அடுப்பொன்று இருந்தது. அதை இடித்தோம்; அடியில் புரைகண்டோம்; அதை எப்படி அடைப்பது என்று பேசிப்பேசி நாங்கள் உறங்கினோம். விடியற்காலையில் அறையிலே ஒரு சிமிட்டிக் குவியல் கண்ணிற்பட்டது. அது எப்படி வந்தது? நண்பர் ஏகாம்பரத்தின் உடலில் சிமிட்டிக் கறைகள் காணப்பட்டன. அவரை யான் எழுப்பிக் கறைகளைப் பற்றிக் கேட்டேன். சிமிட்டி வந்த வரலாற்றைக் கூறினார். 'இந்த வேலை தகாது' என்று சிறிது நேரம் சும்மா இருந்தேன், மற்றவர் எனக்கு ஆறுதல் கூறினர். அந்தச் சிமிட்டியில் மண்ணையுங்கல்லையும் சேர்த்துப் புரையைத் தூர்த்தோம், தொடக்கத்தில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை மாணாக்கரது பணி பலவற்றை ஏற்றது.''

1904-ஆம் ஆண்டு யான் மெற்றிகுலேஷன் வகுப்பு மாணக்



திரு.வி.க



கதிரைவேற்பிள்ளை

கனாயதும், யான் பரீட்சைக்குச் செல்லாதவாறு தடை நேர்ந்ததும் ... ... அவ்வாண்டின் இறுதியில் எனது பள்ளி வாழ்வு முற்றுப் பெற்றது. பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை வாழ்வே எனக்குப் பெரிதாயிற்று. சபை அத்தெருவிலேயே கந்தசாமி முதலியார் வீட்டுக்கு மாற்றப்பட்டது. காலை வழிபாடு என்னால் செய்யப்படும். மாலையில் நால்வர் நான்மணிமாலை, சோணசைலமாலை முதலிய நூல்களைப் பலர்க்குப் பாடஞ் சொல்லி வந்தேன். சிலர்க்கு ஆங்கிலமும் போதித்து வந்தேன்.''

''இராயப்பேட்டை அம்மையப்ப முதலி தெருவிலே அத்துவித வேதாந்த சபை என்றொன்று இருந்தது. அதில் வாரந்தோறும் சுப்பராய செட்டியாரால் வேதாந்த நூல்கள் பாடஞ் சொல்லப்படும். சில சமயம் நாராயண தேசிகர், வடிவேற் செட்டியார் முதலியோர் அங்கே போந்து பேசுவர். அவர் கதிரைவேற்பிள்ளையையும் சைவ சமய நூல்களையும் தாக்குவர், அவரெல்லாம் பெரும் பெரும் பீரங்கிகள். நாங்கள் அப்பெரும் பீரங்கிகளைத் தாக்கப் புறப்பட்டோம். ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை சார்பில் சுந்தரேசர் கோயிலில் கூட்டங்கூடும். அக்கூட்டத்தில் யான் பெரும் பீரங்கிகளைத் தாக்கிப் பேசுவேன். துரைசாமி, சிவசங்கரன், சச்சிதானந்தம் முதலியோரும் பேசுவர். கதிரைவேற்பிள்ளை எங்களைத் தூசிப்படை என்பர்; பெரும் பீரங்கிகளை எதிர்க்கும் ஆற்றல் பெறுதற்பொருட்டு யான் பல நூல்களை ஆய்வதில் பெரும்பொழுது போக்குவேன்; ஞாயிற்றுக்கிழமை சிலமணி நேரம் பேசுவதற்கு ஏறக்குறைய வார முழுவதும் நூல்களைப் படித்தவண்ணம் இருப்பேன். வாதம், பல திறக் கல்வி கேள்விகட்குத் துணைபுரிவதாயிற்று.

''முதல் மூன்று ஆண்டு விழாக்கள் கதிரைவேற்பிள்ளையின் தலைமையிலேயே நடைபெற்றன. மிகச் சிறப்பாக நடைபெற்றன. காரணம் ஊரவர் கூட்டுறவே. ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை உயிராயிற்று; ஊர் உடலாயிற்று. என்ன குறை? ஆண்டு விழாவுக்கு ஒரு திங்கள் முன்னரே வேலைகள் துவங்கப்படும். வேலைகளை பிரித்துப் பிரித்துக்

கொடுக்குந் தொண்டு என்னுடையதாகும். இளைஞர் ஒத்துழைப்பும் குறைவற நிகழும், மண்டி முனிசாமி முதலியார், அண்ணாசாமி முதலியார், பச்சையப்ப நாயகர், பொன்னுசாமி முதலியார், குத்தம்பாக்கம் அப்பாசாமி முதலியார், வையாபுரி முதலியார், பொன்னுசாமி நாயகர் முதலியவர் இராயப்பேட்டையில் பெரியவர் எனப் போற்றப்பட்டவர். அவர் வழியே இராயப்பேட்டை இயங்கும். அந்நாளில் சபையின் இரண்டு கண்களென்ன விளங்கியவர் நூம்பல் முனிசாமி முதலியாரும் மாங்காடு ஆரிமுத்து முதலியாருமாவர். இப்பெரியோரின் மனமார்ந்த கூட்டுறவைப் பெற்ற சபை தன் ஆண்டு விழாக்களைச் சிறப்புற நடத்திக் கொள்ளுமன்றோ? இராயப் பேட்டைப் பெரியவரும், நம் ஊர்ப்பிள்ளைகள் நல்ல காரியஞ் செய்கிறார்கள். அவர்கட்குத் துணை புரிய வேண்டுவது நம் கடமை. அவர்கட்கு ஒரு குறை நேர்ந்தால் அது நமக்கு நேர்ந்ததாகும் என்று பேசுவர். அப்பேச்சு என் காதைக் குளிரச் செய்யும்; ஊக்கத்தையும் பெருக்கும்.

ஆண்டு விழா முன்னாள் இரவெல்லாம் இராயப்பேட்டை உறங்காது. அன்றிரவு சிவராத்திரியே. பொழுது விடிவதற்குள் இராயப்பேட்டை சிவலோகமாகும். தெருவெல்லாம் தண்ணீர்; அடிக்கு அடி மகர தோரணம்; ஆங்காங்கே பூம்பந்தல்; வீடுகளில் வாழையும், கமுகும், தொங்கும்; வாயில்களில் கோலம்; நீர்மோரும் பானகமும் பழமும் கற்கண்டும் சர்க்கரையும் எங்கும் எங்கும்; காலையில் சுந்தரேசர் திருக்கோயிலினின்றும் முருகப் பெருமான் பல்லியத்துடன் திருவீதி உலா; பின்னை அணி அணியாகத் தேவாரக் கூட்டம்; உலாவினிடைக் கதிரைவேற்பிள்ளையின் சிவப்பொலிவு; நம பார்வதி பதயே - அரகர மகாதேவா' என்ற கோஷம்; இக்காட்சி சிவலோகமன்றோ?''

''திருவிழா முடிந்ததும் மாகேசுர பூசை நடைபெறும். ஓராண்டு எதிர்பார்த்ததை விடத் திருக்கூட்டம் பெருகியிருந்தமை கண்டேன்; மாகேசுர பூசை ஏற்பாட்டையும் பார்த்தேன்.எனது மனம் சோர்ந்தது. நிலைமையைத் தலைமையனாரிடம் கூறினேன். பக்கத்திலிருந்து அதைக் கேட்ட பொன்னுசாமி முதலியார் நூறு பொன்னுசாமி முதலியாரானார்; அங்கும் இங்கும் பறந்தார். அரிசியும் பருப்பும் பிறவும் வந்து விழுந்தன. பெண்மக்கள் விரைந்து விரைந்து வந்தார்கள்; அதை எடுத்தார்கள். இதை எடுத்தார்கள். எல்லாஞ் சித்தமாயின. மாகேசுவர பூசை சிறப்பாகவே நடைபெற்றது''.

''பிற்பகல் சொற்பொழிவுக் கூட்டங் கூடும், அக்கூட்டம் பாற்கடலெனத் திகழும். தலைவர் கதிரைவேற்பிள்ளை தமிழ் அமிழ்தம் பொழிவர். அன்பர் குழாம் அவ்வமிழ்தம் பருகி இன்பத்தில் திளைக்கும்''.

''கதிரைவேற்பிள்ளை கந்தனடி சேர்ந்த பின்னர் (1907) திருப்பாதிரிப் புலியூர் - வண்டிப்பாளையம் இராசப்ப முதலியார் சபையின் தலைவரானார். அவர் காலத்தில் சபை படிப்படியே பூசை மடமாயிற்று.

''எனக்குப் பத்திரிகை வேலை, அரசியற் பணி, தொழிலாளர் தொண்டு முதலியன அதிகமாயின. சபையிலும் தலைகாட்டலும் அருமையாயிற்று. பல ஆண்டு சிவசங்கர முதலியார், நடேச முதலியார், நமசிவாய முதலியார், வேதாசல செட்டியார், தியாகராய முதலியார் முதலியோர் பார்வையில் சபை நடைபெற்று வந்தது''

1934-ஆம் ஆண்டில் ஞானியார் சுவாமிகள் சென்னை நோக்கிய போது

சபையின் ஆண்டு விழா நெருங்கியது. சுவாமிகளின் வருகை சபை தோழர்கட்கு ஊக்கமூட்டிற்று. ஞானியார் தலைமையில் ஆண்டுவிழாவை நிகழ்த்தச் சபையார் விழைந்தனர். அச்சமயம் சபை நன்னிலையில் இல்லை.

சச்சிதானந்தம் பிள்ளை உள்ளிட்ட பழைய தோழர் சிலர் என்னைக் கண்டனர். சபையின் நிலைமையை விளக்கினர், ‘சபையைப் பழைய நிலைக்குக் கொண்டு வரல் வேண்டும்’ என்று கூறினர். ‘பொதுக் கூட்டம் கூட்டி நிலைமையை ஆராய்வது நல்லது’ என்று யான் சொன்னேன். தோழர்கள் பெருமுயற்சி செய்து பொதுக்கூட்டங் கூட்டினார்கள். அக்கூட்டத்தில் பற்பல பேசப்பட்டன. முடிவில் எனக்கு முழு உரிமைத் தலைமை வழங்கப்பட்டது. ‘சர்வாதிகாரம் பெறாமலே முன்னே யான் சபைக்குத் தொண்டாற்றவில்லையா? இப்பொழுது மட்டும் சுமை எற்றுக்கு?’ என்று மறுத்தேன். பின்னே வலியுறுத்தல் மிகுந்தது. பழைய நினைவுகளெல்லாம் என் மனதில் உற்றன. அவை மறுப்புரை கூறவிடவில்லை. காலவரை நாலாண்டு என்று குறிக்கச் சொன்னேன். சபையார் அதற்கு இணங்கினர். ஆண்டுவிழா ஞானியார் சுவாமிகள் தலைமையில் சிறப்புற நடந்தது. யான் சர்வாதிகாரத்தை எப்படி பயன்படுத்தினேன்? ஆண்டவன் பணியில் அதிகாரம் ஏது? சபையின் வீழ்ச்சிக்குக் காரணம் தேர்தல் முறை என்று செவ்வனே விளங்கியது. தேர்தல் முறையை ஒழித்துக் காரியக் கூட்டத்தை யானே நியமனஞ் செய்தேன். ஒருவர் தலைமையில் அக் கூட்டம் நடக்குமாறு திட்டங்கோலினேன். நான்காண்டு எல்லையில் தலைவராக வந்தவர் சச்சிதானந்தம் பிள்ளையும் மீனாட்சி சுந்தரனாரும். யான் தலையிடத்தக்க அவசியம் ஒரு போதும் உண்டாகவே இல்லை. சர்வாதிகாரம் என்ன செய்தது? என் மனத்தில் அதிகாரம் நிலவ வில்லை. ஆண்டவன் பணியே நின்றது. சபை நன்றாக நடைபெற்றது- நான்காண்டு கடந்தன. மீண்டும் யான் அப்பதவியை விரும்பினேனில்லை. இப்பொழுது அப்பதவி மீனாட்சி சுந்தரனாரால் வகிக்கப்பட்டு வருகிறது’’

திரு. தீ.செ. பாலசுந்தர முதலியார் 1¼ மனையைத் தானமாகவும் 1¾ மனையை விலைக்கும் கொடுத்தார். 24.02.1905ல் சபையின் கால்கோள் விழா தவத்திரு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. சபை கட்டடம் கட்டப்பெற்று 22.08.1915 ஞாயிற்றுக்கிழமை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. டி. சதாசிவ ஐயர் தலைமையில் சபை நிலையப் பிரவேச விழா நடைபெற்றது.

1919ல் தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் எழுந்தருளிப்பாடிய ‘‘முருகா முருகா முருகா’’ பாடல் இச்சபையின் மூர்த்தியைக் கண்டு ஆனந்தித்துப் பாடியதாகும். அந்நிகழ்ச்சியை திரு. வி.க. இவ்வாறு கூறுகிறார். ‘‘ஏப்ரல் ஆறாம் நாள் மலர்ந்தது- (6.4.1919 சத்தியாக்கிரக நோன்பு நாள்).அடிகளின் (காந்தியடிகள்) ஆத்ம சக்தி மனங்கமழ்ந்தது. முன் ஏற்பாட்டின்படி காலையில் இராயப்பேட்டையிலுள்ள பஜனை கோஷ்டிகளும், மற்றவர்களும், ‘தேச பக்தன்’ நிலையம் போந்தார்கள். அவர்களுடன் சுப்பராய காமத்தும், யானும் ஊர்வலம் வந்தோம். பிற்பகல் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் ‘குகானந்த நிலையத்தை அடைந்தோம். சுப்பிரமணிய பாரதியார் பஜனை கோஷ்டியில் எங்கேயோ எப்படியோ கலந்து வந்தார். அவரைக் கண்டதும் செவி அவரது பாட்டை விரும்பியது. பாரதியாரைப் பாடுமாறு கேட்டேன்.

தமிழ்ப்பெருமான் ''முருகா முருகா....'' என்று பாடத் தொடங்கினார்.

'முருகா – முருகா – முருகா!
வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்''

பாட்டு - தமிழ்ப்பாட்டு - தேனினும் இனிய முருகன் பாட்டு-படத்திலுள்ள ஓவிய முருகனை நகரச் செய்தது. ஓவிய உருவம் வீறுடன் வெளியே வருவது போன்ற தோற்றம் உண்டாயிற்று. அன்பர் மெய்கள் அரும்பின; விதிர்விதிர்த்தன; சிலர் மயங்கினர்; சிலர் விழுந்தனர்; சிலர் கண்ணீர் உகுத்துத் தம்மை மறந்தனர்; எல்லாரும் ஆனந்தப்பரவசமாயினர்; பாரதியார் சித்திரப்பதுமை ஆனார். பாட்டுக்கும் ஓவியத்துக்கும் உள்ள ஒருமைப்பாட்டை யான் கண்ணாரக் கருத்தாரக் கண்டேன், சிறிது நேரம் கழித்துப் பாரதியார் விடைபெற்றுச் சென்றார்.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் 1922 - 23ம் ஆண்டுகளில் தலைமை தாங்கியுள்ளார். 1928-இல் சபையின் ஆண்டு விழாவிற்கு மறைமலையடிகள் தலைமை தாங்கினார். 1934 - 1937 வரை ஆண்டு விழாக்களில் அருள்மிகு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமை வகித்தார்கள். 1938 - 39-இல் பன்மொழிப்புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை முழுப்பொறுப்பில் சபையை நடத்தி வந்தார். 1943-இல் திரு. வி.உலகநாத முதலியார் தலைமையில் சபையின் 40வது ஆண்டு விழாவும், திரு. வி.க. வின் மணி விழாவும் சிறப்புற நடந்தேறின. 1953இல் திரு. வி.க. தம் 70வது ஆண்டில் இயற்கையெய்திய பின்பு கல்கி கிருஷ்ணமூர்த்தி முயற்சியாலும் திரு.சச்சிதானந்தம் பிள்ளை பேருழைப்பாலும் சபையில் திரு. வி. க. மணிமண்டபம் நிறுவப்பெற்றது. 1958 ஆம் ஆண்டில் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் சபைக்கு எழுந்தருளி ஆசி கூறியுள்ளார்கள்.

1954-ல் தமிழ்நாட்டு முதன்மந்திரி கனம் சி. இராஜகோபாலச்சாரியார் திரு.வி.க. மணிமண்டபக் கால்கோள் விழா நடத்தி வைத்தார். 1961-ஆம் ஆண்டு கனம் பக்தவத்சலம் திரு.வி.க. மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்கள். 1963 ஆம் ஆண்டு மாண்புமிகு கு. காமராசர் சபையில் திரு. வி. க. முழு திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்கள்.

1973-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரை திரு. சி. நடராஜ முதலியார் அவர்கள் சபைத்தலைவராக இருந்து செவ்வனே நடத்தி வந்தார். அக்கால எல்லையில் 25.4.1976-இல் சபையின் 74ஆம் ஆண்டு விழாவும், திரு.வி.க. பவழ விழாவும் சிறப்புற நடந்தன. 1983-ஆம் ஆண்டு சபையின் முத்துவிழாவும், திரு. வி.க. நூற்றாண்டு விழாவும் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் ம.பொ. சிவஞானம் தலைமையில் நடை பெற்றன, இராயப்பேட்டை சாலை 'திரு. வி.க.சாலை' என்று அரசாங்க உத்திரவினால் மாற்றப்பட்டது. திரு. நே.த. கிருஷ்ணசாமி முதலியார் 1984-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை தலைவராகச் செயலாற்றினார். தற்போதைய தலைவர் திரு. சிவ. கிருஷ்ணமூர்த்தி ஆவார்.

7.10.1989-இல் டாக்டர் கு- சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டு பெரிய புராண ஆராய்ச்சிச் சொற்பொழிவு

॥சிவமயம்॥
சைவ சமய பக்த ஜன சபை
(பதிவு)
222, தங்கசாலை தெரு, பூங்கா நகர், சென்னை-600003.
tel
DPCO
சிவமயம்
சைவ சமய பக்த ஜன சபை (பதிவு)
222, தங்கசாலை தெரு, சென்னை -
ASTHAN
GAR
THIES
ஓம் சிவாய நம
சைவ சமய பக்த ஜன சபை
பதிவு 1904
(பதிவு)

சைவ சமய பக்த ஜன சபை

மாதத்திற்கு ஒருமுறை என ஆரம்பிக்கப்பட்டது. மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் சபையின் நிகழ்ச்சிகளில் பலமுறை கலந்து கொண்டுள்ளார். திரு. ச. சிவகுமார் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், கம்பஇராமாயணம் ஆகிய இலக்கிய நூல்களை விளக்கி வந்தார்கள்.

பேராசிரியர் அ.ச. ஞான சம்பந்தனார் பெரியபுராணத்தை நிறைவு செய்தும், பண்டித நடேசனார் தணிகைப் புராணத்தை விளக்கியும், டாக்டர் ப. இராமன் பாம்பன் சுவாமிகள் பாடல்கள், திருமந்திரம், தாயுமானவர் பாடல்களை அவ்வப்பொழுது விளக்கியும் வந்தார்கள். 6.10.95இல் டாக்டர் தெ.ஞானசுந்தரம் அவர்களால் பெரிய புராண விரிவுரை துவங்கப்பட்டு தொடர்ந்து நடத்தி நிறைவு செய்யப்பெற்றது. தற்பொழுது திரு. தெ. ஞானசுந்தரம் தாயுமானவர் பாடல்களை விளக்கி வருகின்றார். வெள்ளிக்கிழமையிலும் திங்கட்கிழமையிலும் அறிஞர் பெருமக்களால் சொற்பொழிவுகள் இன்றளவும் நடத்தப்பெற்று வருகின்றன.

6. சைவசமய பக்த ஜனசபை
1904

சென்னை மாநகரில் நூறாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் சைவ அமைப்புகளில் ஒன்று சைவ சமய பக்த ஜனசபை ஆகும். அதே போல தனக்கெனத் தனி கட்டிடம் உள்ள சில அமைப்புகளுள் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது. பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை எவ்வாறு திரு. வி.க. அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிறதோ அதே போல சைவ சமய பக்த ஜனசபை கயப்பாக்கம் க. சதாசிவ செட்டியார் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிறது.



கயப்பாக்கம் சதாசிவ செட்டியார்

கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் 1872-ஆம் ஆண்டில் சென்னையில் கயப்பாக்கம் இரத்தினஞ்செட்டியாருக்கு மகவாய்த் தோன்றினார். பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து 1894-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். இவர் சிறு வயதிலேயே சிவபூஜை செய்வதிலும், தேவாரம் படிப்பதிலும் மிகுந்த ஆர்வம் உடையவராக விளங்கினார். அந்நாளில் மிகப் புகழ்வாய்ந்த சிவனடியார் திருக்கூட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தேவாரப் படனம் செய்தும், செய்வித்தும் வந்தார். சமயச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினார். ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று அன்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு தக்கோலம் என வழங்கும் திரு ஊறலுக்குச் சென்று உழவாரப் பணி செய்து சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்தார்.

தமிழ், வடமொழி, ஆங்கிலம், ஆகிய மூன்று மொழிகளும் கற்றறிந்தார். பன்னிரு திருமுறைகளை நாளும் ஓதியும் சாத்திரங்களைப் பயின்றும் பிறருக்குக் கூறிவந்தார். ஆத்திகத்தில் ஆர்வம் மேலிட வேலையை விட்டு விலகினார்.

தென்னாட்டில் தலங்கள் தோறும் சுற்றுப்பயணம் செய்துவந்த கயப்பாக்கம் ஐயா அவர்கள் ஓதுவாமூர்த்திகள் பலரைச் சந்தித்தார். சிதம்பரம் ஜி.கே. பழனியப்ப முதலியார் அவர்களின் பாடசாலையில் ஆசிரியரும் தில்லைத் திருக்கோயில் ஓதுவாருமான திரு. நடராஜ ஓதுவாரையும் வேறு மூவரையும் சென்னை கந்த கோட்ட பிரம்மோற்சவத்தில் திருமுறை பாராயணம் செய்ய ஏற்பாடு செய்தார். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சென்றன. கயப்பாக்கம் ஐயா அவர்கள் சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தை விட்டு விலகி ''சைவ சமய பக்த ஜனசபை''யை 1904-இல் சென்னையில் நிறுவினார்கள். பல சிறுவர் சிறுமிகளுக்குத், தேவார படனம் செய்ய ஏற்பாடு செய்து பல மாணவர்களை நன்கு பாடச் செய்தார். இவர்களுக்குச் சைவ வினா விடையையும் சொல்லி வைத்துச் சைவத்தில் பற்று ஏற்படும்படி செய்தார். அக்காலத்தில் இவர்களுக்கு உற்ற துணையாயிருந்து சபை வளர்ச்சிக்காகப் பல ஆக்கவேலைகளைச் செய்தவர்கள். திரு. பா. செஞ்சிராகவ செட்டியாரும். திரு. பா. கந்தசாமி செட்டியாரும் ஆவார்கள்.

கந்த கோட்டத்தில் நால்வர் உற்சவ மூர்த்திகள், கலிக்கம்ப நாயனார், இயற்பகை நாயனார், மூர்த்தி நாயனார், புனிதவதியார், அமர்நீதி நாயனார், சேக்கிழார் பெருமான், குங்குலியக் கலய நாயனார், சிவநேசர், பூம்பாவையார், திருவுருவங்களைப் பிரதிட்டை செய்வித்து கும்பாபிடேகமும் நடத்தி வைத்தார்.

கயப்பாக்கம் ஐயா அவர்கள் திராவிட வேதத் திரட்டும் ஸ்தலமான்மியச் சுருக்கமும், சிவரகசிய மகேதிகாசம் (வடமொழி, தமிழ் மொழி பெயர்ப்பு), அகத்தியர் தேவாரத் திரட்டு-விரிவுரை, ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்ற நூலுக்கும், திருக்கயிலாய



குங்கிலியக்கலய நாயனார்

ஞான உலா என்ற நூலுக்கும் குறிப்புரை எழுதி வெளியிட ஏற்பாடு செய்தார். கயப்பாக்கம் ஐயா அவர்கள் கோவையில் நிகழ்த்திய பெரிய புராண விரிவுரைகளுக்குக் குறிப்பு எழுதி அவற்றின் துணை கொண்டே சிவக்கவி மணி திரு. சி.கே சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெரியபுராணப் பேருரையை எழுதி முடித்தார்கள்.

திருவூறல் எனும் தக்கோலத்தில் நடராஜப் பெருமான் திருவுருவம் ஒன்று செய்வித்துக் கும்பாபிடேகம் செய்வித்தார்கள். சிதிலம் அடைந்து கிடந்த திருச்சக்கரப்பள்ளி என்ற திருக்கோயிலை செப்பம் செய்து அன்பர்கள் உதவியுடன் கும்பாபிடேகம் செய்து முடித்தார். திருவேற்காட்டில் சித்திரா பௌர்ணமியன்று ஆற்று உற்சவம் எனப்படும் சப்தஸ்தான உற்சவத்தை ஏற்பாடு செய்து நடத்தினார்.

சபைக்கு ஒரு சொந்த கட்டிடம் கட்ட எண்ணிய கயப்பாக்கம் ஐயா அவர்கள் வைசிய குல பேரி செட்டியார்கள் வீடுகளில் நடைபெறும் திருமணம் முதலிய நன்னாட்களில் நன்கொடை வாங்குவதை ஒரு வழக்கமாகச் செய்தார். இதனால் ஏராளமாகப் பணம் வசூலாயிற்று. இவ்வாறு அரும்பணிகள் ஆற்றிய கயப்பாக்கம் ஐயா அவர்கள் 1929-ஆம் ஆண்டில் தமது 57வது வயதில் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்கள்.

இவர்களுக்குப் பின் அன்பர்கள் பலர் ஒன்று சேர்ந்து நன்கொடை பெற்று வந்தார்கள். மேற்படி நன்கொடைகளாலும் பெரியபாளையம் தங்கவேலு செட்டியார் அவர்கள் செய்த பண உதவியாலும் சபைக்கு ஒரு சொந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இது வல்லாமல் சபை செலவிற்கு வருமானம் வர உறுப்பினர்கள் ஒரு சொந்த வீட்டையும் வாங்கி வைத்தனர்.



சபையின் பணிகளும் வியக்கத் தக்கவையாக உள்ளன. ‘‘கயப்பாக்கம் ஐயா அவர்கள் தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவார்கள் இசையோடு பாடுவது மட்டும் அல்லாமல், திருப்பதிகம் முழுவதையும் ஓதச் செய்வார்கள். அப்படி ஓதத் தெரியாதவர்களை இவர்கள் சபைக்கு அழைக்க மாட்டார்கள். இது உயர்ந்த உன்னத நல்ல செயல். இசையோடு வந்தது தேவாரம். அதனை இசையோடு ஓதச் செய்வதே சாலச் சிறந்தது ஆகும். இவ்வகையில் சைவசமய பக்த ஜனசபை நூறு ஆண்டுகளாகத் தேவாரம் ஓதுவதையும் வளர்த்தார்கள். தேவாரம் 12 திருமுறை தொடர்பான சொற்பொழிவுகளையும் வளர்த்தார்கள்’’ என்கிறார் தமிழ்நாட்டின் தலைசிறந்த ஓதுவாரான தருமபுரம் சுவாமிநாதன் அவர்கள்.

தேவாரம் ஓதுவது கயப்பாக்கம் ஐயா காலத்தோடு நின்று விடவில்லை. இன்றளவும் இப்பணி தொடர்கிறது. 23.1.2007 மாலை 6.30 முதல் 8.30. திரு. சோ.முத்துக் கந்தசாமி தேசிகர் 24.1.2007 திருமதி மகாலட்சுமி கஸ்தூரி ரங்கன் கந்தசாமி தேசிகர் 24.1.2007 திருமதி மகாலட்சுமி கஸ்தூரி ரங்கன் 25.1.2007. திரு. ஜி.வெங்கடேசன், 26.1.2007 திரு.தி. பாலச்சந்திரன் ஓதுவார், 21.1.2007 - திரு. எம். சுந்தர் ஓதுவார் 28.1.2007, 5-15 - 6.30 - திரு. கே. சிவகுமார் 6.35 - 8.45 - தருமபுரம் திரு. எஸ். ஞானப்பிரகாசம் 29.1.2007 குடந்தை திரு. லட்சுமணன் 30.1.2007 திரு. ஆ. பூபாலன் ஓதுவார் 31.1.2007 திருமதி கிரிஜா ராமசாமி 1.2.2007 திருமதி வசந்தாராம் மோகன் 2.2.2007 சைதை திரு. த.நடராசன், திருமதி ரேவதி கிருஷ்ணமூர்த்தி, 3.2.2007 திருமதி ரேவதி ஸ்ரீதரன், திருமதி புவனேஸ்வரி நாராயணன் 4.02.2007; 5.30 - 7.00 கே.வி. ஸ்ரீதரன், விரிவுரை, 7.05 - 9.00 திரு. எஸ். ராஜரத்தினம் ஓதுவார். திரு. எஸ்.ஏ. வேலு ஓதுவார்.

பன்னிரு நாட்களும் திருமுறை இசை; இது காலகாலமாக நடந்து வருகிறது. கயப்பாக்கம் ஐயா அவர்களின் அயரா ஆக்கம் அல்லவா இது!

பிரமோற்சவம் திருமுறை விழா தவிர சபை மாதந்தோறும் முதலாவது, நான்காவது வியாழக்கிழமைகளில் திரு.கே. சிவகுமார் அவர்களின் திருமந்திர உரை, பிரதி மாதம் இரண்டாவது மூன்றாவது வியாழக்கிழமைகளில் திரு. ஜே. மகாதேவன் அவர்களால் மகாதேவ மாலை விரிவுரை; பிரதி மாதம் வெள்ளிக்கிழமைகளில் திரு. ஆ. ரா. மணிவாசகம் அவர்களின் பெரிய புராணம் விரிவுரை, பிரதிமாதம் சனிக்கிழகைளில் திரு. கே. பி.அறிவானந்தம் அவர்களின் அற்புதத்

திருவாசக மண்டபம்

திருவந்தாதி விரிவுரை. ‘‘சதாசிவ தேவார பாடசாலை’ ஒன்று நிறுவி அதில் சிறுவர் சிறுமியர்க்குத் தேவாரம், திருப்புகழ் சபையில் சற்றுத் தருகின்றனர்.

சபை *18.11.2004*-இல் நூற்றாண்டு விழா கொண்டாடியது. தலைவர் - திரு. வி.டி.இராமகிருஷ்ணன் செயலாளர்கள் - திரு. தி.தி. சரவணன், திரு. க. சண்முகம்.

7. ஸ்ரீ நடராஜர் தமிழ்வேத பாராயண பக்த ஜன சபை

1904

சைதாப்பேட்டை... தர்மராசா கோயில் தெரு... திருவாசக மண்டபம்.. முன்பகுதியில் சுவர்களில் சிவ புராணம் கல்வெட்டு... நடராஜப் பத்து கல்வெட்டு... திருவாசகத் தேன்துளிகள் என *88* திருவாசகப் பாடல்களுக்கான கல்வெட்டு.... அறுபத்து மூவர் பெயர், நட்சத்திரம் பொறித்த கல்வெட்டு..., நாலாபுறமும் சுற்றிப் பார்த்து வியப்பால் மலர்ச்சியுற்ற நம்கண்கள் கீழ்மூலைப்பக்கம் வந்தவுடன் அப்படியே நின்றுவிடுகின்றன. அந்த மூலையில் ஒரு அடியவர் அமர்ந்திருக்கிறார். அவர்தான் திரு. மு. சோதி இராமலிங்கம்.



அடியவர் அருகில் அமர்ந்தவுடன் திருவாசக மண்டபம், சபை பற்றிய வரலாறு சொல்லருவியாய்ப் பாய்ந்து நம் செவிகளுள் ஓட ஆரம்பிக்கிறது.

பழனியப்ப முதலியார்

1904-இல் சென்னையில் சைதையில் ஸ்ரீ நடராஜர் தமிழ்வேத பாராயண சபை, திரு. பழனியப்ப முதலியாரால் துவங்கப்பட்டது. தொடக்க காலத்தில் அழகரடிகள் (இளவழகனார்) அவர்கள் மறைநிலா, நிறைநிலா (என்ன அழகான தமிழ்ப் பெயர்கள்!) சொற்பொழிவுகளைத் திங்கள்தோறும் நிகழ்த்தி வந்தார்.

திரு. பழனியப்பா முதலியார் மறைவிற்குப் பின் திரு. ஊ. வி. வேதாந்தம் - திரு. கணேசய்யர் - திரு. சி.ஆர். சுப்ரமணியம் - திரு. பி.எஸ். பக்தவத்சலம் முதலியார் ஆகியோரின் தலைமையின் கீழ் முறையே சபை செயல்பட்டு வந்தது. பொருளாளர் திரு. ஏ. நடராஜ முதலியார் முயற்சியால் 1990ல் திருவாசக மண்டபம் அமைக்கப் பெற்று, திரு. சோதி இராமலிங்கம் அவர்கள் நன்முயற்சியால் திருவாசகத் தேன்துளிகள் என 88 பாடல்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டன.

பாம்பன் சுவாமிகள், ஞானியார் சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், திரு.வி.க., மறை மலையடிகள், இராசாராம் பிள்ளை, இரசபதி எனப்பட்ட இரத்தின சபாபதி, ந.ரா. முருகவேள், மயிலை குருஜி சுந்தர்ராம் சுவாமிகள், தேமொழியார் சுவாமிகள் வருகை தந்து, சொற்பொழிவுகள், இலக்கிய வகுப்புகள் நடத்தி சமயப்பிரசாரக் கூட்டங்கள் போன்றவற்றை முன்னின்று நடத்தி உள்ளார்கள். சுந்தரமூர்த்தி ஓதுவார் மூர்த்தி, தருமபுரம் பி. சுவாமிநாதன் உள்ளிட்ட பல ஓதுவாமூர்த்திகள் இங்கு பலமுறை திருமுறை இசை நிகழ்த்தியிருக்கிறார்கள். காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார், சைதை திரு. நடராசன் ஆகியோர் இங்கு பயிற்சி பெற்றிருக்கின்றனர். திரு. கி.சிவகுமார் அவர்கள் ஓராண்டுக் காலம் திங்கள் தோறும் திருவாசக உரை நிகழ்த்தி நிறைவில் திருவாசகம் - குறிப்புரை என்ற நூலும் வெளியிட்டுள்ளார்.

1990-இல் திருவாசக மண்டபம் அமைக்கப்பட்ட பிறகு பிரதி மாதம் மகத்தன்று காலை 7.00 முதல் 12.30 மணி வரை திருவாசகம் முற்றோதல் அன்னம் பாலிப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தற்சமயம் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் திருமுறை இசையும், திருஞான சம்பந்தர் தேவார விளக்க உரையும், வெள்ளிக்கிழமைகளில் திருமுறை இசையும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவார உரையும் நிகழ்த்தப் பெறுகின்றன. விளக்க உரை அளிப்பவர் திரு. கி. சிவகுமார். திரு. ந.ரா. ஆடலரசு பதினோராந் திருமுறை விளக்கவுரை ஆற்றி வருகின்றார். கவிஞர் முருக சரவணன் 29 ஆண்டுகளாகத் திருப்புகழ் விரிவுரை ஆற்றி வருகின்றார்.



(தலைவர் திரு. பி.எஸ். பக்தவத்சல முதலியார், பொருளர் - திரு ஏ. நடராஜ முதலியார், செயலர் - திரு. ஏ. நாகலிங்கம்)

சோதி ராமலிங்கம்

1989க்கு முன் ஒருநாள் மடிப்பாக்கம் அருகில் கீழ்க்கட்டளை



ஞானியார்

ஜே.எம். நல்லசாமி

மறைமலையடிகள்

கிராமம்... வெட்டவெளி... வேப்ப மரத்தடி... வெயிலுகந்த பிரான் வீற்றிருக்கிறார்... 400 ஆண்டுகளாக இந்த வெயில் அபிடேகம்... அடியவர் சோதி ராமலிங்கம் இக்காட்சியைக் கண்ணுற்று பதறிப் போகிறார். திரு. சைதை நடராஜ ஓதுவாரை அழைத்துக் கொண்டு வந்து வழிபாடு செய்கிறார். பின்னர் திரு. ந. ரா. ஆடலரசு அவர்களை அழைத்துக் கொண்டு வந்து வெட்ட வெளியில் அகத்தியர் தேவாரம் முற்றோதல் செய்தார். சீரடியார் திருக்கூட்டம் உருவாயிற்று; பிரதோஷ வழிபாடு நடக்கலாயிற்று.

திரு. கோ. சண்முகம் அவர்களின் துணையுடன் மயிலை சுந்தர்ராம்ஜி வழிகாட்டுதலுடன் திரு. ந. ரா.ஆடலரசு முன்னிலையில் திரு. வி.எல். எதிராஜ் முதலியாரின் பொருளுதவியுடன் கோயில் எழுப்பி, பஞ்சமூர்த்திகளை எழுந்தருளப் பண்ணி 1991-இல் குட நீராட்டும் செய்து முடித்தார். தருமபுரம்ப. சுவாமிநாதன் அவர்களின் ஆதரவுடன் பொருள்திரட்டி, திரு. கி.சிவகுமார் அவர்களைக் கொண்டு கந்தபுராண தொடர் விரிவுரை நிகழ்த்தித் திருமதிலும், விமானங்களும், நிறைவு செய்து முடித்தார். இதுவரை நான்கு முறை குடநீராட்டு நடைபெற்றுள்ளது. தற்போதைய தலைவர் திரு. ச. தில்லைவாணன். வெட்டவெளியும் சைவப் பெருவெளியில் ஒரு அங்கம் தானே! வெட்டவெளிதான் சைவப் பெருவெளியோ?

8. சைவ சித்தாந்தப் பெருமன்றம்
1905

சைவசித்தாந்தப் பெருமன்றம் என்று தற்பொழுது அழைக்கபபடும் பெருமன்றம் தொடக்கத்தில் சைவ சித்தாந்த மகாசமாஜம் என்ற பெயர் பூண்டிருந்தது.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தோற்றமும், பணிகளும் சைவ சமய வரலாற்றில் முக்கிய இடம் பெறக்கூடிய ஒன்று ஆகும். திருப்பாதிரிப்புலியூர் இடம் தமிழ் பரப்பும் திருத்தொண்டு புரிந்த இடம்; தமிழ்த்தென்றல், திரு. வி. க. ஞானியார் சுவாமிகளைத் தமிழாகவே கண்டு மகிழ்ந்த இடம்; தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை

''தமிழ்ஞானி'' என்று புகழப்பெற்ற சுவாமிகள் வசித்த இடம்.

சமாஜத் தோற்றம் : *24.4.1901*-இல் பாண்டித்துரைத் தேவரால் மதுரையில் தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்றது. இச்செய்தி ஞானியார் சுவாமிகளுக்குப் பெரும் மகிழ்ச்சி அளித்தது. பிரம சமாஜம், ஆரிய சமாஜம் போலத் தமிழகத்திலும் ஒன்று தோன்ற வேண்டும் - அதுவும் தலை நகராக விளங்கும் சென்னையில் தோற்றம் கொள்ள வேண்டும் என்ற ஓர் எண்ணம் சுவாமிகள் மனத்தகத்தே எழுந்தது. சென்னையிலே அப்போது வைசித்தாந்திகளாக இருந்தவர்களின் நினைவும் எழுந்தது. மாபெரும் சைவ மலையெனத் திகழ்ந்த மறைமலையடிகள் சென்னையில் இருந்தமை - தமிழ்த் தென்றல் திரு. வி.க. சுவாமிகளைத் தமிழாகவே கண்டு திருப்பாதிரிப் புலியூருக்குச் சென்னையிலிருந்து போந்து சுவாமிகளைத் தரிசித்துச் சென்றமை. தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை தமிழ்ஞானி என்றே சுவாமிகளைப் புகழ்பவர். ஜெ.எம். நல்லசாமிபிள்ளை - சென்னையில் வாழ்ந்தமை - இவர்கள் எல்லாம் சைவசித்தாந்தம் பரப்புநராக சுவாமிகள் கணக்கிட்டார். வெளிநாட்டவர்களும் பயன்கொள்ளும் இடமாக சென்னை நகரம் அமையும் எனக் கண்டார். மதுரையில் தமிழ்ச்சங்கம் தொடங்கிய பாண்டித்துரை தேவர் திருப்பாதிரிப்புலியூரில் ஞானியார் அடிகளைச் சந்தித்துத் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தனித்தனியாக இயங்குகின்ற சைவசமய இயக்கங்களை இணைப்பது பற்றியும், தமிழகத் தலைநகரம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் இயக்கம் அமைக்க வேண்டிய அவசியத்தையும் ஆலோசித்தார். அவர்கள் அருட்திரு மறைமலையடிகள், நல்லசாமிப்பிள்ளை போன்றபிற அறிஞர்களுடன் ஆலோசித்து 'சைவசித்தாந்த மகா சமாஜம்' என்ற பெயரில் மகாசமாஜம் தொடங்க முடிவு செய்தார்கள்.

7.7.1905 அன்று திருப்பாதிரிப் புலியூர் மடத்தில் ஞானியார் சுவாமிகள் முன்னிலையில் ''சைவ சித்தாந்த மகா சமாஜம்'' முறைப்படி தொடங்கப்பட்டது. அன்று தவத்திரு மறைமலையடிகள் சமாஜத்தின் பிரதம காரியதரிசியாகப் பொறுப்பேற்று தொடங்கிய நாள் முதல் சமாஜத்தின் எல்லாப் பணிகளையும் பேரார்வத்துடன் நடத்தி வந்தார்.

பொன்னம்பல ராமநாதன்

முதல் மாநாடு : *1906* டிசம்பர் *26, 27, 28* நாள்களில் சிதம்பரத்தில் சர் பொன்னம்பலம் இராமநாதன் செட்டியார் தலைமையில் சமாஜத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. ஆயிரம் பேர் உட்காரக் கூடிய அரங்கம் டிக்கெட் மூலம் வசூலித்திருந்தும் நிறைந்துவிட்டது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், செகந்தரபாத்திலிருந்தும் அன்பர்கள் வந்திருந்தனர். தலைவர் தழுதழுத்த குரலில் தனது சமய அனுபவத்தை எடுத்துரைத்தார். தலைவர்

அவர்களின் பேச்சு அனைவரின் பேச்சையும் விஞ்சிவிட்டது. “We had all heard that he was an able speaker in English but his in Tamil surprised us all no little. His diction was pure and simple and elegant and he showed himself a master in the handling of it” என்கிறது Siddhanta Deepika (1907 January) தலைவர் அவர்கள் சித்தாந்தத்தையும் வேதாந்தத்தையும் ஒன்றுபடுத்திப் பேசினார். தான் விளக்கும் வேதாந்தம் மாயாவாதம் அன்று எனத் தெளிவுபடுத்தினார்.

‘‘அனாதி சிவரூபமாகிய ஆன்மா
தனாதி மலத்தால் தடைப்பட்டு நின்றது
தனாதி மலமும் தடையற்றபோதே
அனாதி சிவரூபமாகியவாறே’’

என்ற திருமந்திரப்பாடலை எடுத்துரைத்து ‘‘சிவரூபமாகிய ஜீவாத்மா எப்படி தளையால் கட்டுண்ணப்பட்டது என்பது விளங்கவில்லை’’ என்றார். ‘‘சிவபெருமான் தளையால் கட்டுண்டவர் என்று சைவசித்தாந்தம் எப்பொழுதும் கூறியதில்லை. ராமநாதன் கொண்ட பொருளைக் காட்டிலும் ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை இந்தப் பாடலுக்கு வேறுவிதமாகப் பொருள் கொள்கிறார்’’ எனக் கருத்துரைக்கிறது சித்தாந்த தீபிகை.

மாநாட்டில் சிலர் ஆங்கிலத்திலும் பேசினார்கள். சொற்பொழிவுகள் வருமாறு. (i) J.M. Nallaswamy Pillai B.A.B.L. The Universality of Saiva Siddhanta (ii) Pandit Nagai Vedachalam Pillai - Pranayamam (iii) R.S. Shanmuga Mudaliar - Siddhanta and Science (iv) S. Gnanasikamani Mudaliar - The place of Saiva Siddhanta in Indian Philosophy (v) P.M. Muthia Pillai - Dasakaryam (vi) N. Thangavel Mudaliar - Jivakarunyam (vii) Thillainayaka Mudaliar - Siddhanta Kalvinalam (viii) S. Palvanna Mudaliar - Diksha (ix) Ashtavadhanam P. KalyanaSundhara Mudaliar - Saiva Siddhanta (x) S. Gnansikamani Mudaliar - Pasa Lakshana (xi) Pandit N. Vedachalam - Theistic aspect Saiva Siddhanta. மாநாட்டுச் செயலர் சி.எஸ். பொன்னுசாமி முதலியார்.

1907இல் சிதம்பரத்தில் நடைபெற்ற இரண்டாவது மாநாடு திரு பாண்டித்துரை தேவர் தலைமையிலும், 1908இல் நாகப்பட்டினத்தில் நடைபெற்ற மூன்றாவது மாநாடு ஜே.எம். நல்லசாமி பிள்ளை தலைமையிலும் நடைபெற்றன.

நான்காவது மாநாடு : 1909 டிசம்பர் 29, 30, 31 நாட்களில் திருச்சிராப்பள்ளியில் இலங்கை லெஜிஸ்லேடிவ் கவுன்சில் உறுப்பினர் சர். ஏ. கனகசபை பிள்ளை தலைமையில் நான்காவது மாநாடு நடபெற்றது. 1200 முதல் 1500 வரையிலான சைவ அன்பர்களின் வருகையால் அரங்கம் நிரம்பி வழிந்தது. சில ஐரோப்பியர்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. திரு. கனகசபை தன் தலைமை உரையில் இலங்கையிலும் இந்தியாவிலும் சைவ சமயத்தின் நிலைமையை விளக்கினார். ‘‘போர்த்துகீசிய அரசின் கொடுமையான சமய நெறிமுறைகளினால் இலங்கையில் இரண்டு சிவன் கோயில்கள் இடிக்கப்பட்டன. அடுத்து வந்த டச்சு அரசு நடுநிலைக் கொள்கை வகுக்காவிட்டாலும் முன் அரசைவிட கடுமை குறைவாகவே சமய கோட்பாட்டைப் பின்பற்றியது. ஆங்கிலேய அரசு ஆட்சிக்கு வந்தபிறகே இலங்கைச் சைவ உலகில் அமைதி நிலவியது’’ என்றார். மேலும், அவர் ‘‘சைவ சமயம் பிரபஞ்ச அன்பை அடிப்படையாகக் கொண்டது. அது அண்டை அயலாரிடம் காட்டும் அன்பு மட்டும் அன்று; ஏன் பிரபஞ்ச சகோதரத்துவம் கூட அல்ல; அந்த அன்பு மனிதனையும் உள்ளடக்கிய அனைத்துப் பிரபஞ்சத்தின்

மேலும் உள்ள அன்பு; முழுப்படைப்பின் மேலான அன்பு'' என்று கூறி கொல்லாமையை வலியுறுத்தி பௌத்த சமயத்திற்கும் முன்பேயே சைவ சமயம் கொல்லாமையை வலியுறுத்தியுள்ளது என்றார். ஜீவகாருண்யம், கர்மா, சகிப்புத்தன்மை, இறையருள் ஆகிய நான்கு தனிச்சிறப்புகளைக் கொண்டது சைவ சமயம் என்று முடித்தார்,.

தலைமையுரைக்குப்பின் திரு. V.V. இரமணன் "Psycology of Shadadhvans" என்ற தலைப்பிலும், பண்டிதர் திரு. R.S. வேதாசலம் ''சிவலிங்க உருவின் உள்ளர்த்தம்'' என்ற தலைப்பிலும், நாகை நீலலோசனி ஆசிரியர் திரு. ஜி. சதாசிவம் பிள்ளை ''குருபக்தி'' என்ற தலைப்பிலும், திரு. ஏ. ரங்கசுவாமி ஐயர், ''நால்வகை நெறி'' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்.

அடுத்து திருமதி ஆண்டாள் அம்மாள் ''திருநீற்றின் சிறப்பு'' பற்றி உரையாற்றினார். "The most noteworthy of the conference during its past session was the pillar of intellectual strength it had found in the pious young lady, Mrs. Andalammal who treated it to a most solemn and thrilling discourse on the "Significance of the sacred Ashes" on the morning of the 30th. Her delivery was impeccable, and the calm poise of her high thinking and rippling flowof her pure eloquence terminating with beautiful effect in a sonorous climax, whenever the dignity of the topics demanded it, was matter for extreme praise. As a fluent and cultured speaker of Tamil she could hold her own, by the side of the best of the sterner sex known to fame. The lecture assumed a much wide scope in her hands than the title seemed to require, and she gave an elaborate and telling resume of the subtler spiritual aspects of the Saiva Siddhanta staggering the audience by the wealth of her resources, culture and Sanskrit and Tamil authorities and quotations". அக்கால கட்டத்திய தலைசிறந்த தமிழாசிரியரான சோழவந்தான் ஏ. சண்முகம் பிள்ளை ஆண்டாளம்மாள் மேல் ஒரு கவிதையே பாடி வழங்கி விட்டார்.

''சொல்லாயும் ஔவை உருத்தோன்றாதே இந்நாளில்
செல்லாயும் கூந்தல் சிறுமருங்குல் ஆண்டாளாய்ப்
பல்லார்முன் நீற்றுப்பயன் விரிப்பக் கேட்டதன்பின்
கல்லாரும் கற்றார்போல் காட்சியினர் ஆயினரே.''

பின்னர் திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை ''கர்ம சாம்யம்'' என்ற தலைப்பிலும், திரு. கோபாலாச்சாரியார் ''பகவத் கீதையின் தத்துவம்'' என்ற தலைப்பிலும், பண்டிதர் வேதாசலம்'' சைவசித்தாந்தத்தில் சமுதாயக் கூறுகள்'' என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

டிசம்பர் 30 அன்று P. கல்யாண சுந்தர முதலியார், ''உண்மை'' என்ற தலைப்பிலும், எஸ். பால்வண்ண முதலியார் ''முத்திநிலை'' என்ற தலைப்பிலும், சுவாமி ருத்ர கோடீசுவரர் ''சைவ சித்தாந்தமும், மிருகங்களிடம் அன்பும்'' என்ற தலைப்பிலும், ஞான சித்தி ஆசிரியர் தாமோதரம் பிள்ளை ''ஆன்மாவின் இயல்பும் பண்பும்'' என்ற தலைப்பிலும், ப.எம். முத்தையா பிள்ளை ''ஆன்மா'' என்ற தலைப்பிலும், பண்டிதர் ஆர். எஸ். வேதாசலம் பிள்ளை ''இறைவனுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள அத்வைதத் தொடர்பு'' என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

இம்மாநாட்டில் மற்றுமொரு சிறப்பும் ஈரோடு லூதரன் மிஷனைச் சேர்ந்த மறைத்திரு H.W. Schomorus (பின்னால் சைவ சித்தாந்தம் பற்றி

ஜெர்மானிய மொழியில் விரிவாக எழுதி வெளியிட்டவர்) மூன்று ஐரோப்பிய பாதிரிமார்களும் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாடு பற்றி Schomerus " The Gospel Witness" என்ற இதழில் விரிவாக ஒரு ஆங்கிலக் கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையை அப்படியே எடுத்து, "Siddhanta Dipika" வில் வெளியிட்டு இருந்தனர். அக் கட்டுரையில் திரு. வேதாசலம் பிள்ளை மாநாட்டுக்கு முன் 4 ஆண்டுகள் சமாஜத்தின் சார்பில் தமிழகத்தில் பல ஊர்களுக்கு சென்று சைவ சமயம் பற்றி 75 சொற்பொழிவுகள் நிகழ்த்தியது பற்றியும், கடந்த 4 ஆண்டுகளாக சமாஜம் தமிழில் சைவசித்தாந்தத்திற்காக ஒரு இதழ் வெளியிட்டு வருவது பற்றியும், (''ஞானசாகரம்'' ஆக இருக்கலாம்.) சைவ சித்தாந்தத்திற்கு என The Oriental Mystic Myna என்ற ஆங்கில இதழும் வெளிவந்தது பற்றியும் குறிப்பிடப் பட்டிருந்தது. திரு. A.V. கோபாலாச்சாரியரின் கட்டுரை பற்றி இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தது. "He first compared Sri Ramanuja's Commentary on the Vedanta Sutra, with Srikantha's Commentary on the same Sutras which is highly esteemed by the Saiva Siddhantists, and maintained, amid the applause of the hearers, that the doctrines of both the philosophers were the same. The speaker said, the Vedanta Sutras were niether Saivite nor Vishnivite but both Saivite and Vishnivite."

Schomerus ன் கட்டுரை முடிவு அக்கால கட்டத்திய சமய நிலை பற்றி ஐரோப்பியர்களின் கருத்து என்னவென்று தெரிய வருகின்றது. "From the missionary point of view, I believe, we can only be glad of their movement of revival, although it will set many a new task before us, because this movement strives to stir up religious interest which is mosty needed in spite of the almost proverbial religiosity of the Indians; because this movement combat the ever - spreading atheism and the Vedantic monism ("Pseudo Vedantic Monism" என்று தீபிகா அடிக்குறிப்பு வேறுபடுத்திக் காட்டுகிறது) and strives to remove many an abuse; because this movement is a proof for the power of Christianity in the Tamil; Society (தீபிகா அடிக் குறிப்பு - "This is putting the cart before horse. The fact is the Hindus are better enabling the Christian missionaries to understand their own scriptures, now that the Hindus have begun to openly interpret their scriptures in the interests of exotic nations and themselves) and chiefly because it will end in showing that Hinduism, also in its best branches, is not able to satisfy the, according to the Saiva Siddhanta, eternal faculties of the soul, Jnanam, Kiriya, Ichchha (i.e.) we may say, the longing after truth, action and the supreme good, and will direct the eyes of the Indians towards the one Saviour, our Lord Jesus, who claims to staisfy the threefold longing of the soul as can be seen from his word: "I am the way, the truth and the life (John XIV, 6) and really satisfies,. "It is true, this movement sets its face against Christianity but not less against the harmful monistic (Pseudo Vedantic) Vedantism. We can therefore, look at the Saiva Siddhanata not only as an enemy, but also, in a certain sense, as an ally" (Dipika ":This Paragraph, we regret, doesnot state the truth as it persists. Every Agamantin knows that the Christ, the Messiah, the Anointed one, is the soul that is rid of corruption. The soul attains to its true status as the "Son of God" only when the corruption that blinded its vision is wiped off its eyes. The meaning of John XIV6, is that Christhood is the only real condition of the soul, and the legitimate door way to "beholding God" (Siva - darshanam) and eventually to the supreme "Fellowship of God"]

சமாஜ ஐந்தாவது மாநாடு:

சமாஜ ஐந்தாவது மாநாடு 25.12.1910 அன்று இராமநாதபுரத்தில் மைசூர் மகாராஜாவின் தலைமை ஆலோசகர் அன்று K.P. புட்டண்ண செட்டியார் தலைமையில் தொடங்கியது. செயலாளர் V.V. இரமணசாஸ்திரி ஐந்தாம் ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

The Fifth Annual Report submitted by the Standing Committee.*

The Standing Committee of the Saiva Siddhanta Conference beg to submit their report as follows:

Genesis and Short Accouunt of its History

Among the past generation of workers who brought Saiva Religion and Saiva Siddhanta to the public notice and attention in South India, may be mentioned the late Sri. Ramalinga Svamigal and Sri Arumuga Navalar. The work that these great men accomplished cannot be easily estimated in words. Arumuga Navalar was gifted with a powerful intellect and great zeal and erudition, and he worked both in Ceylon and Southern India. He was a teacher, lecturer, publisher of books and Manulas for the young and founded a Press and Schools in Chidambaram and Jaffna. In his work he was principally assisted by the grand uncle of the Present Maharaja of Ramnad and the father of the talented President of the Tamil Sangam, we mean the late P. Ponnuswami Thevar avergal, a great scholar and patron of the Pandits of his time. Assembled as we are in this Hall of the great Setupati Maharajas, we should not fail to honor this great man, and we have to congratulate ourselves that his noble example had been followed by his successors both in the first and second generations. The late Maharaja Bhaskara Setupati as all the world knows spent his lacs on the patronage of pandits and Scholars and assisted in founding the Tamil Sangam and college. Sriman Pandittturaisvami Tevar Avergal is also a profound Scholar like his noble father and by his unstinted liberality and earnessness founded the Tamil Sangam, and has assisted this Conference and other Saiva Siddhantha Sabhs by presidibng at their Anniversaries, at Chidambaram, Cuddalore, Madras, Trichinopoly, Salem and Palamcotta and other Places. When one of the members of this Committee met the Present Maharaja at Madras on the eve of the Trichinopoly Conference the spontaneity with which he desired him to invite the next Conference to Madura was something remarkable and could not but be instructive of the great liberality and piety and learning found in the race of the Setupati family.

Filled with fulness of the spirit, and a love that over flowed in deeds and words the great Ramalingasvamigal carried the religious work not only among Saivas but amopng non - Saivas also, and he brought to great prominence the two chief charateristics of Saiva Religion, its doctrine of love or Bhakti and the Ahimsa Doctrine or Jivakarunya.

We next mention two great workers who influenced the present generation to the largest extent. Matakhandana Venkatagiri Sastrigal created great enthusiasm chiefly by his lectures in Trivandrum, Malabar and in the Tamil Districts. But the person who exerted the greatest influence was the late Srila Sri Somasundara nayagar Avergal. He was militant propagandist and protected the faith from the attacks of its detractors, with unequalled force anhd reasoning. It was he who brought to prominence the superiority of the Saiva Siddhanta Philosophy and its sponsors, the Samaya Acharyas and Santana Acharyas. His life was occupied with incessant work; and he lectured everwhere, and the writings he has left behind him might well form a library by themselves. Most of the present day workers, associated with this Conference Count themselves among his pupils and followers. He came at a time when there was great Religious upheaval in Southern India, what with the work of the Free - thinkers and the Theosophical Society and Vedanta writers, both native and foreign. Amongst these varying and warring influences, the ancient National Religion had to be explained to the rising generation, steeped in the study of the western languages and religions. Under his guidance, the task of enlightening the English - educated public was commenced by Mr. J.M. Nallasvami Pillai,. as far back as 1895, when his translation into English of the Sacred Sivajnanabotham, was published. His translation of that beloved clasic, Tiruvarutpayan of St. Umapati Sivacharya, followed. And, under his inspiration and support, was commenced the English journal Siddhanta Dipika in 1897, in the month of June, in memory of the Diamond Jubilee Celebration of our late Queen - Empress, Victoria the Good. In its pages have appeared nearly all the work accomplished by Mr. J.M. Nallasvami Pillai, in the field of Tamil philosophy and literature . His translation of Sivajnanasiddhiyar, Unmai - Vilakkam, Tirumular's Tirumantiram. Saiva - Samaya - neri and leading articles on Saiva - Advaita - Siddhanta Philosophy have been published; and under his liberal support and that of Sriman Pandittturaisvami Tevar, the translation of Sri Kantha Bhashya was also published, and all these works await republication in book form. He was also the means of a large number of workers joining in the field of Saiva Philisophy and Tamil literature. Almost all the educated Indians in South India and Ceylon owe their knowledge of Siddhanta to these Publications.

These works and the works of the late Rev. G.U. Pope for the only bibliography in English on the subject and vast number of European missionaries and writers have drawn on these materials for their study and exposition of Siddhanta.

From the very first Conference Mr. J. M. Nallasvami Pillai has been associated with the work of this Conferenve and he was its president at the 3rd Session at Negapatam.

Pandit R. S. Vedachalam Pillai commenced his work under the late Srila Sri Somasundara Nayagar Avargal, and Mr. J.M. Nallasvami Pillai, and assisted in the publication of some of the Nayagar's works and the first volume of the Siddhanta Dipika in Tamil. Since then he has brought out various publications relating to Tamil lieterature and philosophy, and has been editing and publishing the Tamil monthly Jnanasagaram, and an English Magazine called the Mystic Myna. It was he, we gratefully acknowledge, who was primarily responsible for the genesis of the Saiva - Siddhanta Conference.

At a special sitting of the conference, the question of a constitution was again discussed, and the General Secretary intimated that he would sever his connection with the Conference if a committee was appointed. He was however induced to accept the General Secretaryship, and a standing committee was appointed to carry on the business, till the next Conference.

Donations were called for, and subscribed, and the General Secretary has intimated that he collected about Rs. 30, and he has, however, furnished no account, though he was called up on to do so. At the close of the conference, the conference was invited to meet at Madura, this year, by Mr. J.M. Nallasvami Pillai, on behalf of the Maharaja of Ramnad and the invitation was accepted.

The Work during this year

Nothing was done during the year by the General Secretary and it seemed that nothing would be done. Mr. P.M. Muttaiyya Pillai wrote to Mr. J.M. Nallasvami Pillai that, from what he heard from the General Secretary, the latter was not going to move in the matter of holding a conference this year. The Secretary was at once communicated with and he at first suggested difficulties about communicating with the members of the committee, and then he stated that he had severed his connection with the conference even from last year, and that he had retired into solitude not withstanding the fact that he collected the subscriptions, and spent them during this year. While feeling grateful to the pandit for all that he had done to found and develop this conference, the committee extremely regret his attitude, and his severance with this conference. Mr. J. M. Nallasvami Pillai sent a circular letter to all the members of the committee and nearly all of them replied to the communication, and it was resolved to appoint Mr. V.V. Ramana Sastrin and Mr. M.T. Subrahmanya Mudaliyar as Secretaries and the papers should be called for before a certain date, from gentlemen who wished, to lecture at the conference, and that Mr. K. P. Puttanna Chettiyar, and Hon'ble P. Arunachala Mudaliyar be invited to preside. With regard to the proposal to submit the lectures in writing, there were only one or two dissentients, but as the result has proved, the experiment has been uncommonly successful; more than thirty papers have been received and more would have been forthcoming if they were given more time, and the duration of the settings of conference could be further extended. It may not be known that, at the last convention of religions at Calcutta, eminent men belonging to all religions and creeds, cheerfully complied with a similar requistion, and what as more, the papers were subjected to a severe revision by the committee; and a similar experiment made at the last anniversay of the Palamcottah Samayabhivriddhi Sabha, was also successful. The Commitee could now congratulate itself atleast that the thought and speech of a large number of persons would not be altogether lost and, if funds permit, the committee could hope to publish them in book - form.

The committee met in Madras on the 4th December, for passing the report, and the papers received, and setting a programme, but we regret only a few members attended. A large amount of work has fallen on Mr. V.V. Ramana Sastrin, Mr. J.M. Nallasvami Pillai, and the thanks of the committee are due to them fromtheir labour of love. Correspondence was also opened with the Raja of Ramnad, and all the success of this conference is due to his great liberality, and the conference would have been a greater success if we had pleasure of the Raja's presence in our midst to-day. The committee, however, takes this opportunity to convey to the Maharaja its deep debt of gratitude to him and to those who have worked with him, to make this conference a great success. It is a happy augury that the heir of the Setupatis should commemorate the first year after his attaining majority, with a great religious assembly like the present, and we pray to our Lord Siva to grant him long life and prosperity. The Committee wishes to express its gratitude to the President, for so cheerfully and readily complying with the request of the committee, conveyed through Mr. J.M. Nallasvami Pillai.His presence, however, is of greater importance and significance, in more than one respect.

வீர சைவம்

Virasaivism forms an important Sakha of the general Saiva Religion, and follows the same Saiva Agamas as the rest of thr following. There are some Virasaiva maths in the Tamil country, and the great Sivaprakas Svamigal of Turaimangalam of the last century, the famous author of Forty Hymns in praise of our Samayacharyas, is honoured throughout the length and breadth of the Tamilakam. And, at the present day, no better honoured teacher could be found than Sri Siva Shanmukha Sivacharyasvamigal the learned head of the Virasaiva Math at Tiruppapuliyur. However, as most of the maths and their followers are found chiefly in Telugu, Canarese and Maharatta countries, any great rapprochement between the two sections, have not been possible, and the higher truths of Virasaivism and the erudite works of its professor, are lost to the Tamil Saivas. For the last two years, however, a move have been made by the leaders of th two Sakhas to come together, and to join hands, in the great work of resuscitating and strengthening our ancient and beloved Religions. and it has been made possible also to accomplish this by the assistance of the English language. We have been working each our ownway, but union is strength, and its importance cannot be overlooked in view of the great work before us. The presence, to-day, of our president, and of several delegates from the distant provinces is a sign and seal of this union, and we pray to Paramesvara that He, in His Supreme Wisdom, will guide our work to the great glory of his name; and it may be not too distant to hope that we may unite, in a common bond of union, the Ganapatyas, Saktas and Saivas, in the other presidencies also.

The object of this Conferences is, as may be readily perceived, to serve as a great demonstration, for the purpose of attracting the attention of the general public to the importance of this ancient system of thought and faith, and to rouse the enthusiasm of its own followers. There are various Sabhas in this Presidency, and in Secunderabad, Bangalore & c., where work has been carried on for a long number of years. The Conference could in no sense take their place; work has to be done from day to day, and from week to week, and this can only be carried on by the local Sabhas. The Scope of this Conference would be to create a sort of federation among the different Sabhas,. So that delegates from the different parts may meet together, take stock of the work done, and compare notes, and emulate eah other, and devise better schemes of work for the coming year. There is a great future for the Conference, if only it is properly constituted, and the different Associations would co-operate with it and lend their support. It is with this view the Committee has addressed a circular letter to all the Sabhas requesting them to send delegates to this Conference, and the committee has also arranged two morning sittings for the purpose of settling a constitution for the conference.

The Standing Committee of the Conference could very well, direct its efforts to the following poinst, if well supported by funds.

1. Publication work.

2. Arranging courses of lectures for the year in different places.

3. Elevation of the depressed classes.

4. Suggesting improvements in temple administrations.

Ours is no militant propagandism; our well known toleration, often,. degenarates into indifference. The law given to us by our Achrayas is that no religion is false and every religion is acceptable to our Lord, the God Siva, and He is the God, who has revealed himself in all ages, and to all nations, and in all the countries, and through all creeds, and He is all Love, and that Love alone can secure us peace in this world and the next. We merely desire the love and good will of other religionists, and that they should understand us properly. We believe we have certain truths which ought to and will appeal to men of every creed and every religion. And we believe we have already secured their sympathy, and our special thanks are due to the Christian missionary gentelmen who have spoken and written about the Saiva Siddhanta, in recent years, with sympathy and appreciations, and to our Vaishnava friends who have come forward to enlighten us, with their learned addressess, during this Conference.

பிற சைவ சபைகள்

We hope that in future reports of this kind, the work of the different associations carried on during the year, would also be summarised and embodied. We may however notice that, during the past year, several associations celebrated their anniversaries with great eclat. The celebration in May last by the Palamcotta Saiva Samayabhivriddhi Sabha was the greatest; it was celebrated for 3 days; In July, the Madras Vedagamokta Sabha founded by Srilasri Somasundara Nayagar, celebrated its 50th anniversary, and both were presided over by Sriman P. Panditturaisvami Tevar Avargal. In August, the Vanivilasa Sabha of Tiruppa Puliyur had a three days, celebration under the Presidency of Brahma - Sri T. Sadasiva Aiyar Avaragal, M.L., District Judge of Ganjam. The new buildings of the Saiva Prakasa Vidyasalai at Chidambaram were opened by Sriman Panditturaisvami Tevar Avl., in September, and this was also made the occassion for the delivery of a number of lectures on Saiva Religion and Philosophy. The Madras Sivandiyar Tirukkuttam celebrated its anniversary, opened a library, and what is more important, opened some primary schools under its management, for the purpose of imparting religious and moral instruction. Meykanda Santana Sabha opened a Devara Pathasala and celebrated its anniversay in November, under the Presidency of Brahamasri Maha Mahopadhyaya U.V. Svaminatha Aiyar Avargal, Professor of Tamil, Madras Presidency College. We may also mention that the Madras Sivanadiyar Tirukkottam is proposing to open sunday classes for the religious instruction of Panchama boys. We hope and pray to our Lord that such work would increase and develop in the coming years, and bring with it a richer harvest of moral and spiritual and social elevation and Peace and Love.

- The Standing Committee.

சமாஜத்தின் ஐந்தாம் ஆண்டு அறிக்கை ஒரு அரிய வரலாற்று ஆவணம் ஆகும். இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் சைவம் சமயம் வளர்த்த ஆன்றோர்கள், சமாஜம் நடத்திய மாநாடுகளின் விவரங்கள்,

பொதுச் செயலர் சமாஜம் விட்டு விலகிய சூழ்நிலை, சைவ சமயத்தின் பிற கூறுகளான வீரசைவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட வேண்டிய அவசியம், அக்காலகட்டத்தில் தமிழ் நாட்டில் இயங்கிய சில சைவ சபைகள் எனப் பல செய்திகள் காணக்கிடக்கின்றன.

தலைவர் உரைக்குப்பின் திரு. ஆச். சண்முக முதலியார், ''மூர்த்தி தியானம்'' என்ற தலைப்பிலும், டி.பி. வாசுதேவ சாஸ்திரி ''தேவியின் வடிவங்கள்'' என்ற தலைப்பிலும், பெங்களூர் வொக்காலிகா சங்கச் செயலர் H. இராமய்யா "Saints, Sages and Saviours of India" என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

அடுத்து ''வீரசைவம்'' பற்றிப் பேசிய ப. சிவலிங்கப்பாவின் உரை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. "He said Virasaivam was clearly included in the term Saiva Siddhanta and classified all the Agamas into four classes, namely, Vama, Dakshina, Misra and Siddhanta, relating respectively to the Saktas. Bhairavas, Saptamtirkas and Saivas. The last comprised all the twenty-eight Agamas from the Kamika to the Vatula. He controverted the fallacies prevailing about the genuine antiquity of Virasaivam. The Saivas were divisible into Samanya Saivas, MIsra Saivas, Suddha Saivas and Virasaivas whose codes of faith he defined. Lingadharana was clearly inculcated in the Divyagamas and as such, it was an anceint institution. The sixty three Saiva Saints called Puratanas were worshipped be Virasaivas also and he mentioned several of them such as Iyarpagai Nayanar, Siruthondar, Gananathar, Murugar, Ilyangudimara Chandreswara Nayanar and others as strict Vira Saivar and he claimed that Saint Manickavachaka was also a "Virasaiva"

27.12.1910 காலையில் ''சைவர்களின் கடமைகள்'' என்ற பொதுத் தலைப்பில் சென்னை சிவனடியார் திருக்கூட்ட சபையின் செயலர் திரு. ஐ. ஆதிமூலம் முதலியார், திருச்செங்கோடு சைவ சித்தாந்த சமாஜச் செயலர் திரு. டி. முத்துசாமிக் கோனார், பாளையங்கோட்டை சமாயபிவிருத்தி செயலர் திருவள்ளல் சிவஞான தேசிகர், திரு. டி.பி. வாசுதேவ சாஸ்திரி ஆகியோர் உரையாற்றினர். தலைப்பின் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு திரு. பாண்டித்துரை தேவர் அவர்களும் திரு. J.M. நல்லசாமிப்பிள்ளையவர்களும் முன் வந்து உரையாற்றினர்.

பிற்பகலில் திருமதி ஆண்டாளம்மாள் ''வாழ்க அந்தணர்'' என்ற பாடலை விளக்கி உரையாற்றினார். அவர் உரையைப் பற்றி சித்தாந்த தீபிகை கூறுவது வருமாறு "Her choice of words, her analysis of the subject and her delivery captivated everyone's heart and the whole exposition, which lasted more than an hour, showed her erudition and great devotion. The president paid a fitting compliment to her and said she belonged to a respectable family, the family of the late Dharmaratnakaram Arcot Narayanaswamy Mudaliyar, and she had made a heroic self - sacrific in coming before a male audience to deliver her discourse; and that she was an ornament to her community and a beacon - light to her sisters. It may be observed that both her father and father-in-law were erudite Tamil Pandits, and her husband Mr. Ekambara Mudaliyar of Secundarabad is a devoted student of the Saiva Siddhanta and her discourse was the result of their Joint Study.

வழக்கறிஞர் திரு. A.V. கோபாலச்சாரியார் ''திருவைந்தெழுத்து'' பற்றியும், திரு. ரெங்கசுவாமி நாயகர் "An Agamic and Person of other Shades of Hindu

Faith” பற்றியும், பெங்களூர் வழக்கறிஞர் ''வீரசைவம்'' பற்றியும் உரையாற்றினர். V.V. இரமண சாஸ்திரி, “Virasaivam might be used to distinguish it from the suddhasaivam but not from the Siddhanta, as the latter term included both Virasaivam and Suddhasaivam which are Jnana - Margas. Virasaivam and Suddha saivam differed only in the ceremonial portion of the charya, Kriya, and Yoga Margas and were fully at one so far as the Jnana - Marga was concerned. He quoted from Nirgunasivayogin, A virasaiva Saint to show that all Virasaivas were also ipso facto Sivadvaita - Siddhantins.”

குளித்தலை திரு. A, ரங்கசாமி ஐயர் ''சற்குரு தரிசனம்'' பற்றியும், பெங்களூர் ஏகாம்பர முதலியார் ''புருஷார்த்தம்'' பற்றியும், திரு. H. இராமய்யா ''வாழ்க்கைப் போராட்டம்'' பற்றியும் உரையாற்றினர்.

ஆறாவது மாநாடு : 1911 டிசம்பர் 27, 28, 29 நாட்களில் சமாஜத்தின் ஆறாவது மாநாடு சென்னையில் நடைபெற்றது. தலைமைப் பொறுப்பேற்றிருந்த திரு. டி.பொன்னம்பலம் பிள்ளை உடல்நலக் குறைவால் வர இயலாததால் ஜே.எம். நல்லசுவாமிப்பிள்ளை தலைமையேற்றார். இம்மாநாட்டில் நவீன உலகிற்கேற்ற முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்ட இளம் பேச்சாளர்கள் பங்குபெற்றது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாளும், மூன்றாம் நாளும் திருமதி ஆண்டாளம்மாள், அசலாம் பிகையம்மாள் ஆகியோரின் பிரமிக்க வைத்த உரைகள் அணி செய்தன. அரங்கம் நிறைந்த மூன்று நாட்களிலும் பெண்கள் நிரம்ப வந்திருந்தனர்.

மூன்று நாட்களும் 24 பேர் உரையாற்றினர். திருமதி ஆண்டாளம்மாள் ''சிவலிங்க மகத்துவம்'' பற்றியும், திருமதி அசலாம்பாள் அம்மாள் ''நாயன்மார்'' பற்றியும் உரையாற்றினர்.

பிரதம காரியதரிசி விலக நேர்ந்த காரணம்

25.12.1910-இல் இராமநாதபுரத்தில் நடைபெற்ற ஐந்தாவது மாநாட்டில் பிரதம காரியதரிசி சமாஜப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட செய்தி இடம் பெற்றிருந்தது. பிரதம காரியதரிசியாக இருந்த பண்டிட் வேதாசலம் அவர்கள் (பிற்றைநாளில் மறைமலையடிகள் என்று அழைக்கப்பட்டார்) தான் விலக நேர்ந்த சூழலை இவ்வாறு கூறுகிறார். ''இனி, யாம் பொது நிலைக்கழகம் நிலைபெறுத்துதற்கு முன்னமே ‘சைவ சித்தாந்த மகா சமாஜம் எனப் பெயரிய பெருங் கழகமொன்றனை 1905-ஆம் ஆண்டு தோற்றுவித்து, அதனை மிகவும் திறம்பட நடத்தி வந்தோம். என்றாலும், சைவ சித்தாந்தத்தின் மெய்நிலை உணராத குறுகிய நோக்கமுடைய சைவர்கள், சைவத்தின் சிறந்த உண்மைகளைப் புராணப் பொய்க்கதைகளோடு கலப்பித்துச் சாதி வேற்றுமை சமய வேற்றுமைகளை மிகுதிப்படுத்துதற்கு இடமாய் அவை தம்மைத் திரிபுபடுத்த முனைந்ததோடு எமது விரிந்த நோக்கத்துக்கு மாறாகச் சமரசத்தையும் வேறுபடுத்தப் புகுந்தமையால், யாம் அதனொடு கொண்ட எமது தொடர்பை அறுத்து, எமது விரிந்த நோக்கத்திற்கு இசையப் ‘பொதுநிலைக் கழகம்’ என்பதனை நிறுவி, ஆசிரியர் மாணாக்கர் முறையில் வைத்துச் சைவ சித்தாந்தம் பொதுநிலை (சமரச) உண்மைகளை எங்கும் பரவச் செய்தேம்'' என்கிறார். (மறைமலை யடிகள் உரை மணிக்கோவை'' பக்கம் 14)

ஆறாவது மாநாட்டினைப் பற்றி ''சித்தாந்த தீபிகை'' இவ்வாறு பதிவு செய்துள்ளது.

The Saiva Siddhanta Maha Samajam

The Sixth Conference

History of the movement

There were Saiva Sabhas and Samajas all over the country for a long time past but the idea of having a central organization first occurred to Pandit (now Svami) Vedachalam and a few friends of his, and the first session of it was held in December 1906 at Chidambaram in South India, the Dahara Pundarika Parama Vyomam and Paramalaya of the Upanishats, under the distinguished presidency of the Hon'ble Mr. P. Ramanathan K.C., C.M.G., retired Solicitor - General of Ceylon. It lasted for 3 days and a number of addressess and lectures were delivered by some of the most distinguished Savants of the South on Saiva Religion and Philosophy. The Second session was also held at the same place in Dec 1907. under the presidency of the most enlightened Zemindar of the South, the late lamented P. Pandithuraisvami Tevar of Ramnad, the President - Founder of the Madura Tamil Sangam. The Third conference was held in Dec.1908 at Nagapatnam under the presidency of Mr. J.M. Nallasvami Pillai, the greatest exponent of Saiva religion and Philosophy in English. In Dec. 1909 it was held at Trichinopoly, under the presidency of The Hon'ble Mr. Kanakasabhai B.A. of Colombo. In December 1910, it was held at Ramnad under the distinguished patronage of His Highness The Maharajah of Ramnad, and this Session had the fortune of being presided over by Dewan Bahadur, Rajah Sabha Bhushana K.P.Puttanna Chettiyar Avargal, Senior Councillor to His Highness The Maharajah of Mysore. This gentleman was a distinguished Member of the Vira Saiva community and in this Session therefore were united Saivas of all persuasions.

Owing to the unavoidable absence of Mr. T. Ponnambalam Pillai, M.R.A.S. of the Travancore Service, Mr. J.M. Nallasvami Pillai, the Vice President of th Samaja, was again called upon to preside at short notice, and this he did with pleasureand greatsuccess, inspite of the fact that the whole arrangement of the Conference devolved on his shoulders. The meeting commenced with the singing of devotional Hymns caleed Devaram of the Tamil Saints, by a choir composed of girls from Chulai Balika Patasala. Then a welcome address from Mr. S. Ratnavelu Chettiyar Avargal, President of the Reception Committee was read. An address to the President was also read by the Secretary Dr. .V. Ramanan Ph.D. Then the President rose amidst cheers and before delivering his inaugural address moved a resolution in these terms. Message to the imperial Majesties

"That this conference begs to tender to their Imperial Majesties King Emperor George and Queen Empress Mary its great devotion, heart felt loyalty and gratitdue for the royal boons conferred by His Majesty". The following telegram was received from His Majesty's Private Secretary :

"I am commanded by His Imperial Majesty to thank you for your kind message.|

The Presidential Address

In commencing his address, he said he would not encroach on the field of the venerable Svamins and learned pandits who would follow him with their learned theses on point of doctrine and practice but would confine himself to a few salient points. In the first place, he wanted to remove a misconception that the Saiva Religion was in any way sectarian.

Saivaism, Non Sectarian - Its Antiquity

It represented the old, old Religion of India which it is now the fashion to call Hinduism, from the days of the Rig Veda onwards. If, as was stated by a great Oriental Scholar, in his 'Vedic India', that Agni or Fire was the God of the Rig Veda, and if we find in the same Rig Veda the text that Agni is Rudra it stood to reason that Rudra was the God of the Rig Veda. If again, as we know that the old polity of the Vedas was sacrifice, the text of the Rig Veda that Rudra was the 'Medha-Pati'. the Lord of Sacrifices, a term by the way applied to not other God, is also intelligible. Hence He is called Pasupati in the Yajur Veda. As further proving his position he pointed out how the modern Siva-Linga -worship was connected with the self same fire worship. The pit in which the fire was raised is called in the Veadas as the Yonis, Garbha, Guha and Hridaya, (the Dahara Pundarika of the Upanishats). This is the Yoni or Peetha of the Siva Linga. The uprising flame is the Ordhava Linga; and Linga is the term meaning subtle and imperceptible as distinguished from the visible fire ot Agni applied in the Upanishats to the Supreme Brahman himself. he pointed out that the term Siva occurs several times in the Rig Veda, and though Oriental Scholars took it as an adjective and translated it as 'gracious'. Sayana himself takes it as a noun and translates it as Paramesvara. He also showed how the technical terms now employed by the Saivas, Pati (God) Pasu (Soul) and Pasa (bonds), as against the terms Jagat (bonds), Jiva (Soul) and Para (God), Chit (soul) Achit (bonds) Isvara (God) by other Schools, brought it into relation with the old polity of the Rig Veda. Pati is the Lord of the sacrifice, Pasu is the animal offered in sacrifice, and Pasa is the rope with which the animal was tied to the Sacrificial Stake or Yupa-Stambha, which is even now preserved in modern temples as the Basava (Bull) and the Balipit and Dvaja Stambha. The term Pasu is frequently used in the Upanishats, and they must expressively speak of the Pasu being sundered as a cucumber for the plant. "Pasam dahati Panditah)". If we may not agree with the orthodox view that the present religion was the same as was in vogue in the days of the Rig Veda (and the great Appaya Dikshita points to the text chara chitram as denoting the Siva Linga itself) it will stand to reason how modern Saivaism made use of the terms used in sacrificial worship and gave it a more spiritual turn. The Pasu to be sacrificed is not a mere animal but man's own animality, his jivatvam and egoism and it was to be offered at the altar of Jnanagni; and the moment this is done the soul (Pasu) emerges out as the blissful Nandi or Siva. This transition was effected by the Saiva Agamas; and it is hardly known that all the forms connected with Siva - Linga worhsip are purely Yoga practices - the very symbol of the Holy ashes (derived by the way from the old fire sacrifice) meaning 'chitta nirodaha' the very first deifintion of Yoga.

Saivaism is eclectic and universal

The Second point he touched on related to its eclectic and universal character. Every European scholar who had studied Saivaism acknowledged its eclectic character - Rev. Dr. GU. Pope. Rev. F. Goodwill, Rev. Mr. Goudie, and Professor Frazer. One of its great Acharyas has given a deifntion of what a true Religion ought to be and he challenged any other defintion in comparison with it.

"There are many religions, doctrines and books conflicting with each other. If you ask them, which is the true Religion, and doctrine and book? hear. That is the true Religion, doctrine and book which without possessing the fault of saying this is true and that is not true, comprises everything reasonably within its folds. All these are comprised in the rare Vedas and Agamas which rest under the sacred Foot of Hara."

Its principlesand practices were adapted to man in every phase of moral and spiritual development leading him on to higher and higher paths. The terms, Siddhanta, Samarasa, Sara and Sanmarga used synonymously for Saivaism sufficiently attested this truth. He offered a further proof from the writings of some oriental scholars who did not know much about Saivaism. Professor Monier Williams, Preofessor Garbe and Professor Macdonnel in referring to the Bhagavat Gita and Svetasvatara Upanishat speak of an eclectic school of Hindu Philosophy which was neither Dvaita nor Advaita nor Visihshtadaita neither Sankhya nor Yoga but was common to all these Schools. If such an eclectic school had existed once it could not have died out now. Though the Bhagavat Gita is claimed by all Schools, the Svetasvatara is usually put down as Saivite Sectarain Upanishat. But Professor Max Muller controverts this idea. Yet there can be no doubt that this Upanishat is the highest authority of this School; and the claim of Saivaism to be an eclectic Philosophy and Religion will therefore be undisputed.

Its Doctrine of Advaita

All the Text - books speak of its philosophy as advaita. This word is usually interpreted as meaning Eka, Abhetha or Ahbinna. The Saivite interpretation of it is that it means ananya or anyanastio. Manilal Dvidedi, a great follower of Sankara in his book on "Monism or advaitism" has pointed that accoring to the Sutrakara Badarayana and the Upanishats the word only means ananya and not Eka or Abhetha otr Abhinna. By a trite little simile he brought the distinction between these two views. Vowels can be sounded by themselves but consonants cannot be sounded except by the aid of the vowels. Without the vowel, no consonant sound can be brought into existence. The latter is as it were it was not. Yet the vowel is not the consonant nor is the consanant the vowel. The relation of causation cannot be postulated between the two. God is neither the Chetana Achetana Prapancha, nor the latter God. Yet without God, the latter cannot be. This is the ananya realtion. The absoulte character and transcendency of God is thereby secured withou at the same time having to deny the existence of the Prapancha as falshood and a delusion. 'Gold is Gold' is not a logical proposition because it conveys no new information, no new knowledge. 'Copper can become Gold' is our proposition. These are the two different ways the Mahavakya texts are interpreted. Our View is that soul is not God but the soul can become God like, Godly or God. And it is a universal belief that the baser metal can be transmuted into Gold.

It is a religion of love

He next dwelt on the fact that this was religion of Love and of God's abounding grace. The Highest appellation of the Supreme God was synonymous with love, according to the text.

"Love and Sivam are different, say the fools.
Noneknow that Love and Sivam are the same.
When they know that Love and Sivam is the same,
They rest in Sivam as Love.

Though there are thousands of names descriptive of God's Nature, this simple word Siva or Sivam brings home to us the inmost Nature of God, and our Highest experience of Him As Transcendent, Omnipotent, Omniscient etc., we cannot know Him, we derive no real knowledge of Him, but as Love (Ananda) alone we can know Him. Wheneverwe do good and cause pleasure, there is God there and we know God. Hence the Text, "Doing Good to all, being kind to all, giving shelter to all, that's is doing Siva puja."

Its uplifting Character

As to its ennobling the uplifting character, he created the text, "If one utters the name of Siva, though he be as Sandala, associate with him, eat with him and dwell with him. This was carried on in actual practice among Virasaiva who recognize no distinction of caste, and they freely permit even chandalas into their fold, provided they fit themselves for association. It is a common feeling with us however a man looks with holy ashes on his fore-head than one without it. And in the Tamil lands, even a Chrisitian will call himself a Saiva if he is a vegetarian.

The work before us

He related the great miracle performed by Saint Jnana Sambandha and Appar at the sacred shrine of Vedaranyam, whereby they opened the gates shut by the Veda which vowed that they shouldnot be opened till they returned. They accomplished a much greater miracle and of a far reaching importance than the incidents set forth. It simply refers to the period in which all knowledge and religion of God was inaccessible to the majority of the people, being enshrined in the Sacred Vedas, and the common people could gain some knoweldge only through intermediaries and so on. It was this state of ignorance the Buddhists and Jains had availed themselves of and they wrote and spoke in the Vernacular and thus made converts of them all. Our great Acharyas in trying to win back the people to their old fold adopted the same tactics and threw open the gates of God to all, threw open the knowledge concealed by the Vedas and in the Vedas to all in their own vernaculars and by means of their divine out pourings of love contained in their Devaram they appealed to the hearts and intellects of all. Thus was our old Sanatana Dharma saved in the South at its most critical period. But for their great services in turning back the tide of heterodacy and Atheisn we would not be where we are even to day believing in our Vedas and Agamas and our Lord Siva. Their great influence have lasted down to our own times, and it is our love to these Acharyas that keeps the flame burning a little. Such great work even now awaits us, and our difficulties are even much harder. We have now to fight against ignorance may even learning which assuming the shape of Science and Philosophy threatens to kill our belief in God and love. We have to fight against materialism and worldliness in all its forms. We have to meet the difficulties advanced not by one or two religions but by a host of religions. They had only India for their theatre; we have to face the whole world now. And the question was whether as true Sons of India we are going to realize our full responsiblities in the matter and rise up to the occasion. If every one would realize this full responsibility, and just contribute his barest mite for the sacred casue, how much could not be done! We do not want much. We want their heart and their tiny help. For, what does the Lord want himself.

"To all it is possible to offer a leaf to our Lord.

To all it is possible to offer a mouthful to a cow.

To all it is possible to offer a handful of rice.

To all it is possible to offer sweet words."

Yes, it was the handful of rice that this Samaja asks for and translated into cash, it becomes the one Rupee the minimum Subscription which the Samaja wants. There is no one so poor among us who could not afford this handful of rice. And before he concluded his stirring appeal, he drew the attention of all the able lecturers and the audience to the importance of the advice contained in the last verse of the quatrain quoted by him, "To all it is possible to offer sweet words": We want to persuade and win our hearers to our cause. We want to carry truth to others and benefit them. We want to share the eternal joy that fills our hearts with our brethren of all creeds and classes. What better means have we in accmplishing all these cherished objects of ours than sweet words? When we don't do so, it will be 'like offering sour fruit, when we have the sweet fruit in our hands as the Divine Tiruvalluvar once said.

This eloquent address which lasted more than an hour was received with ringing cheers, and then the business of the conference was proceeded with. There were twenty four addresses delivered during these 3 days and they were concerned with various subjects as disclosed on the programee herewith sent. Each one of the speakers dwelt masterly on each subject and they were istened to patiently and greeted with frequent applause. The case of our lady lecturers should be specially mentioned. The first is Mrs. Ekambaram Andalammal, a Tamil lady hailing from Secunderabad and belonging to a most respectable family of Mudaliars. There was a great crush before her address commenced and yet the utmost silence was preserved during the one hour her learned discourse lasted and the audience was spell-bound. Her subject 'Siva Linga Mahatvam' and her exposition of the subject was most learned and luminous; and she quoted texts from Rig Veda downwards. If she knew English and had appeared in the lecture-halls of Europe her name and fame would have reached the ends of the earth in no time. The other lady lecturer Srimati Achalambigai Ammal is a Brahamin poetess of no mean attainments and her exposition of one of the Lives of the Saints from the Tamil Siva Bhakta Vilasa called Peria - Purana was the most learned and illuminating of addresses which the audience has ever listened to. The President paying tribute to the unselfish and devoted work of the venerable Svamis and Pandits, commended highly the efforts of the younger ones who for the first time appeared on the conference - platform and exhorted them to continue and persevere in their labour and research and stand to win greater successess at future conferences. After a vote of thanks to the President and Chairman of the reception committee, and the reading of a number of verses composed in honour of the President, the most successful of all the conference was brought to a termination. A general meeting of the members was held on the morning of the 20th and passing the account and a number of resolutions have been adopted for the carrying at the Samaja Work.

மாநாடு தவிர 1912-இல் சவாமி வேதாசலம் அவர்கள் வடலூர், மஞ்சக்

குப்பம், மானாம்பதி ஆகிய ஊர்களிலும், சமாஜக் கௌரவப் பேச்சாளர் திரு. பி.எம். முத்தையா பிள்ளை திருத்துறைப்பூண்டி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, பூவாளூர், ஸ்ரீ ரங்கம், திருவாரூர், மேலைச்சீவப்பட்டி, (பிப் 1912 முதல் ஏப்ரல் வரை) ஆகிய ஊர்களில் உரையாற்றியுள்ளனர். பிப்ரவரி மாதத்தில் சென்னையில் சில இடங்களில் திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரும், திரு. சச்சிதானந்தம் பிள்ளையும் தெருமுனைப் பிரசாரம் செய்தனர். இதுபோன்ற சொற்பொழிவுகள் ஆண்டு முழுதும் நடைபெற்றன.

ஏழாவது மாநாடு : 1912 டிசம்பர் 26, 27, 28 நாட்களில் காஞ்சிபுரத்தில் திருவாங்கூர் திரு. T. பொன்னம்பலம் தலைமையில் ஏழாவ்து மாநாடு நடைபெற்றது. சென்னை திரு. கல்யாண சுந்தரபட்டர் ‘‘சிவஞானம்’’ பற்றியும் தூத்துக்குடி திரு. முத்தையா பிள்ளை ‘‘சிவானுபூதி’’ பற்றியும், குளித்தலை திரு. ரங்கசாமி ஐயர், ‘‘சம்சார சாகரம்’’ (ஆங்கிலம்) பற்றியும், திரு. ஆலாலசுந்தரம் பிள்ளை ‘‘சமயம்’’ பற்றியும் பேராசிரியர் திரு. வி. முத்துக்குமாரசாமி ‘‘கர்மா, மறுபிறப்பு’’ (ஆங்கிலம்) பற்றியும் உரையாற்றினர்.

28.12.1912 அன்று நாகப்பட்டினம் திரு. மெய்கண்ட பிள்ளை ‘‘முயற்சி’’ பற்றியும், திருவெங்கடராமையர் ‘‘நாயன்மார்’’ பற்றியும், திரு. பால்வண்ணமுதலியார், ‘‘மலபரி பாகம்’’ பற்றியும், திரு. தியாகராஜ ஞானியர் ‘‘சனாதன தர்மம்’’ பற்றியும், தணிகாசல முதலியார் ‘‘அப்பர் கவிதை’’ பற்றியும், குமரசாமி முதலியார், ‘‘நமது தேவைகள்’’ பற்றியும், திருமதி ஆண்டாள் அம்மாள் ‘‘அத்வைத முக்தி லட்சணம்’’ பற்றியும் திரு சண்முக முதலியார், ‘‘சைவ உணவு’’ பற்றியும் (ஆங்கிலம்) திருச்சி பெரியசாமி பிள்ளை ‘‘வேதம், ஆகமங்கள்’’ பற்றியும் சிதம்பரம் தில்லைநாயக முதலியார், ‘‘இயமம், நியமம்’’ பற்றியும், ஸ்ரீ பானுகவி சுவாமிகள் ‘‘தமிழ் வேதங்கள்’’ பற்றியும் உரையாற்றினர்.

29.12.1912 அன்று விருதுப்பட்டி சிவஞானயோகி ‘‘பஞ்சக்கிரியை’’ பற்றியும், திரு. ரங்கசாமி நாய்க்கர் ‘‘மிருகேந்திர ஆகமம்’’ பற்றியும், யோகி முத்துக்குமாரசாமி மௌனம் பற்றியும் பேசினர். ‘‘இந்திரிய மௌனம், அந்தக்கரண மௌனம், மகா மௌனம் என மௌனம் மூவகைப்படும். மூன்றனுள் மகாமௌனம் மிக உயர்ந்தது. ஆன்மீகத்தின் மணிமுடி எனத் தாயுமானவர் போன்ற அருளாளர்களால் கூறப்படுவது. மகாமௌனம் ‘‘நான் அற்றல்’’ நிலை; ‘நான்’ அழிய வேண்டும். இந்நிலையில் ஆன்மா சிவத்தில் ஒடுங்கும். இந்நிலை அடைய சரணாகதியும் அன்பும் வேண்டும்’’ என்றார்.

அம்பாசமுத்திரம் திரு. V.P. காந்திமதி நாதபிள்ளை, ‘‘தாயுமானவரின் அத்வைதக் கோட்பாடு’’ பற்றியும், திரு. வி.க. ‘‘அப்பர் வாக்கு’’ பற்றியும், வாலாஜா பேட்டை கமலநாத முதலியார் ‘‘ஞானம்’’ பற்றியும், காஞ்சி நாகலிங்க முதலியார் ‘‘மெய்கண்ட சாத்திரம்’’ பற்றியும், ஆதிமூல முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் ‘‘சமயபோதனை’’ பற்றியும் உரையாற்றினர். திரு. வி.க. தன் உரையில் ஒரு கிறித்தவப் பாதிரியாரும், ஒரு சைவரும் சொல்லாடும் முறையில் அமைத்து ஆற்றினார்.

ஜே.எம். நல்லசுவாமிப்பிள்ளை உரையாற்றத்தொடங்குமுன் தலைவர் அவரை அறிமுகம் செய்த விதம் மிகச் சிறப்பான ஒன்றாகும். தீபிகாவிலிருந்து ஒரு பகுதி; “Though he was much senior in age he was proud to acknoweldge Mr. Pillai as his guru. He repeated here what he had stated in a large public assembly before and when Mr. Pillai was not present, that if the people really understood his work, temples would be erected in every place in his hounour." அதன்பிறகு நல்லசாமிப் பிள்ளை உரையாற்றுகையில், ''திருவாசகப் பாடல்களில் இருதய சுலோகம் எனப்படும். ''இன்றெனக்கருளி'' என்ற பாடலை விளக்கி இவ்வாறு கூறினார். "As this was considered the Veda itself, how each statement made in it was based on a corresponding Vedic text, and he analysed the whole into its various component parts, and showed that they contained the Kernel of Siddhanta. They explained the nature of the Supreme one and that of the soul, and the nature of th union, the means or Sadana for attaining the union and the whole was illuminated by a simile.

திரு.வி.க. அவர்களின் கருத்துக்கள் புதியனவாகவும், சீர்திருத்தக் கருத்துக்களை உடையனவாகவும் இருக்கும். அவரது கருத்துக்களைச் சமாஜம் எவ்வாறு எதிர்கொண்டது என்பதனைத் திரு.வி.க.வின் சொற்களில் காண்போம்.

''*1911*-ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஜெ.எம். நல்லசாமிபிள்ளை தலைமையில் சைவசித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாக் கூட்டத்தில் முதன் முதல் பேச இடம் பெற்றேன். அக்கூட்டத்தில் யான் பேசிய பொருள் 'சைவன் எவன்' என்பது சைவம் ஒரு குறிப்பிட்ட ஒரு சமயம் அன்று என்றும், அது பொதுமையது என்றும் முனைப்பற்ற தொண்டிலே விளங்கும் அன்பு நிலையில் சைவம் என்றும், அந்நிலை சாதிமதங்கடந்தது என்றும், இன்னோரன்ன இயல்புகளையுடைய ஒருவனே சைவன் ஆவன் என்றும் என்னால் விளக்கப்பட்டன. என் பேச்சு சாதிச்சைவர் முகத்தைக் கறுகச் செய்தது.''

''*1912*-ஆம் ஆண்டுக்கு அமைச்சராகச் சச்சிதானந்தம் பிள்ளை தெரிந்தெடுக்கப்பட்டார். அத்தெரிவு ஜெ.என். இராமநாதனுக்கும் எனக்கும் ஊக்கமூட்டிற்று. நாங்கள் மூவரும் பாதிரியாரைப் போல் வேலை செய்யத் தொடங்கினோம். ஆதித் திராவிடச் சகோதரர்கள் உறையும் இடங்கட்குச் செல்ல உறுதி கொண்டோம். முதல் முதல் நுங்கம்பாக்கம் எங்கள் கருத்தில் படிந்தது. சிவநேயர் பழநிசாமி பிள்ளையின் நட்பு எனக்கு அப்பொழுதே கிடைத்து, பலப்பல இடங்கட்கு வலிந்து வலிந்து சென்று சைவப் பிரசாரம் செய்வோம்; சென்னையின் நானா பக்கங்களிலும் உழல்வோம். பிள்ளையார் கோயில் மண்டபங்கள் எல்லாம் எங்கள் பிரசார மேடைகளாயின. திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், திருமுல்லை வாயில் முதலிய திருப்பதி களின் திருவிழாக்களிலே எங்களைக் காணலாம். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆக்கத்துக்குப் பாடு பட்டோம்; பட்டோம்; பெரும்பாடு பட்டோம்.''

''ஆண்டுக் கூட்டம் காஞ்சியில் பொன்னம்பலம் பிள்ளை தலைமையில் கூடிற்று. யான் 'அப்பர் கொள்கை' என்ற பொருள்பற்றிப் பேசினேன். அப்பேச்சைச் சென்னையினின்றும் திருத்தணிகைக்குப் புறப்பட்ட ஒரு சாதி சைவப் புலவரும், ஒரு கிறிஸ்துவப் பாதிரியாரும் உரையாடிய முறையில் நிகழ்த்திக் காட்டினேன். கடவுளைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும், சீர்திருத்தத்தைப் பற்றியும், பிறவற்றைப் பற்றியும் அப்பர் அருளியவற்றைச் சுருங்கிய முறையில் சைவப் புலவர்

பாதிரியார்க்கு விளக்கினார். அவ் விளக்கம் பாதிரியார் நெஞ்சை அப்பர் கொள்கையில் படிவித்தது. இருவரும் திருத்தணிகை அடைந்தனர். பாதிரியார் சைவப்புலவரைப் பார்த்து, ''யானும் உம்முடன் கோயிலுக்கு வருகிறேன்'' என்றார். சைவப்பழம் விழித்தது. ஏற இறங்கப் பார்த்தது. ''இவ்வளவு தானா உமது ஏட்டுச் சைவம்! அப்பர் கொள்கைப்படி நடக்க உமது சமூகம் இடங்க கொடுக்கவில்லையே! சமூச் சீர்திருத்தஞ் செய்ய முற்படுங்கள். சைவ சித்தாந்த சமாஜம் சீர்திருத்தத்தில் ஏன் தலையிடலாகாது? ஏட்டுச் சைவத்தால் என்ன பயன் விளையும்?'' என்று கேட்டார் பாதிரியார். இவ்வாறு முழங்கிப் பேச்சை முடித்தேன். தலைவர் என் கருத்தை முற்றுந் தழுவியே பேசினார். சாதிச் சைவர் உள்ளம் கொதித்தது. அவர் என் செய்தல் கூடும்! காலக்கடவுள் என் பக்கம்!''

1912, 1913ல் சமாஜ உறுப்பினர்கள் பிரசாரம்

தூத்துக்குடி திரு. முத்தையா பிள்ளை ஆக, 23, 27, செப் 22- மதுரை அக் 31, நவ 1, நவ 4 - திருநெல்வேலி நவ 2, அம்பாசமுத்திரம், நவ 3 வீரவநல்லூர், நவ 8, 9 - துத்துக்குடி; பேராசிரியர் திரு. வி. முத்துகுமாரசாமி முதலியார்; சேலம் - ஆறுசொற் பொழிவுகள்; ஈரோடு - 2 சொற்பொழிவுகள்; திருச்சி - 1, தேவகோட்டை - 16.6.1913 சமாஜச் செயலர் திரு. கே. குப்புசாமி முதலியார் - திருச்சி; 23.5.1913 மணி திருநாவுக்கரசு முதலியார், திரு. கே. குப்புசாமி முதலியார் மைலாப்பூர்; 24.5.1913; சிந்தாதிரிப்பேட்டை, 31.5.1913 அருணாசலேசுவரர் வசந்த மண்டபம், பேட்டை சிவன் கோயில் - மூன்று இடங்களிலும் 7.6.1913 - திருவேட்டீசுவரன், திரு. வி.க. சச்சிதானந்தம் பிள்ளை, ஜெ.என். இராமநாதன் மூவரும் 1913-இல் சமயப்பிரச்சாரம், சேரித் தொண்டு ஆகியவற்றில் முழுமூச்சாக ஈடுபட்டார்கள்.

ஒன்பதாவது மாநாடு : 1914-இல் ஒன்பதாவது ஆண்டு விழா கூடலூரில், ஞானியார் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. திரு.வி.க. ''முப்பொருளுண்மை'' என உரையாற்றினார்.

இந்த மாநாட்டிற்குப் பிறகு பத்தாண்டுகள் சமாஜம் தளர்ச்சி அடைந்தது. ''சித்தாந்தம் பத்திரிகையும் 1920 - 21 களில் நின்று விட்டது. சமாஜ வரலாற்றில் தளர்ச்சியான நேரம். அச்சமயம், தலைவர் - நல்ல சிவன் பிள்ளை; செயலர் - குப்புசாமி முதலியார். சமாஜம் சரிவர நடக்கவில்லையே என்று வருந்திய ஞானியார் சுவாமிகளின் சீடர்கள் சிலர் திருவெண்ணெய் நல்லூரில்'' அகில இந்திய சைவ சித்தாந்த மகாசமாஜம்'' தொடங்கினார்கள். ஞானியார் சுவாமிகள் இதனை ரசிக்கவில்லை. ''தாமே துவங்கிய சமாஜம் இருக்க இதுவேறா! உள்ள சமாஜத்தை ஆக்கம் தாருங்கள்'' என்றார்.அதன் பயனாக 1924-இல் 19வது கூட்டம் திருப்பாதிரிப் புலியூரில் நடைபெற்றது. இந்த இடைப் பட்டகாலத்தில் நடந்த நிகழ்வுகளைக் காண்போம்.

(''ஞானியார் அடிகள் வரலாறு'' சு.பா. வேல்முருகன்)

1913-இல் நடைபெற்ற 8வது நாட்டைப் பற்றி ''சித்தாந்த தீபிகை'' இவ்வாறு கூறுகிறது. இக்கட்டுரையில் சமாஜத்தின் வளர்ச்சி பற்றியும் தீபிகை கூறுகிறது. ''சென்ற ஆண்டில் மட்டும் (1912) சமாஜ உறுப்பினர்களின் தொகை 556 லிருந்து 1148 வரை இருமடங்காக கூடியிருக்கிறது. திரு. வி.டி.

மாசிலாமணி முதலியாரும் திரு. மா.ரா. குமாரசாமி பிள்ளையும் மட்டுமே தலா 73, 41, உறுப்பினர்களைச் சேர்த்துள்ளனர். தமிழகம் முழுமையும் சைவ சமயப்பிரச்சாரம் செய்ய, 10க்கும் மேற்பட்ட அறிஞர்கள் கௌரவப் பேச்சாளர்களாக முன் வந்தனர். அதன்படி தமிழகம் எங்கும் நடந்த 85 சொற்பொழிவுகளில் 53 சொற்பொழிவுகளை திரு. பொ. முத்தையா பிள்ளை அவர்களே நிகழ்த்தியுள்ளார். திரு. முத்தையாபிள்ளை சைவ ஆகமங் களை analytical methodல் ஒவ்வொரு சொற்பொழிவிலும் மிகச் சிறப்பாக விளக்கி வந்தார்கள். சென்ற ஆண்டு சமாஜத்தின் இருப்பு 80 ரூபாய் 2 அணா 2 பைசா. செலவுத் தொகை 1051 ரூபாய் 7அணா 5 பைசா. தமிழகத்தில் உள்ள 9 சபைகள் சமாஜத்துடன் இணைந்து ள்ளன. நூலகம் அமைக்க இடம் இல்லாமையால் சென்னை சிவனடியார் திருக்கூட்டக் கட்டிடத்தில் சமாஜ நூலகம் வைக்கப்பட்டுள்ளது.''

பத்தாவது மாநாடு : *1915*இல் பத்தாவது ஆண்டு விழா தஞ்சாவூரில் நடைபெற்றது.

பதினோராவது மாநாடு : *1916*-இல் பதினோராவது ஆண்டுவிழா சென்னையில் சபாரத்தின முதலியார் தலைமையில் நடைபெற்றது.

பன்னிரண்டாவது மாநாடு : ஆண்டு - *1917*; இடம் - சென்னை; தலைமை - கல்யாண சுந்தர யதீந்திரர்.

பதின்மூன்றாவது மாநாடு : ஆண்டு - *1918*; இடம் - கும்பகோணம் தலைமை - சுவாமிநாத பண்டிதர்.

பதினான்காவது மாநாடு : ஆண்டு - *1919*; இடம் - திருப்பனந்தாள்; தலைமை - சொக்கலிங்கம் தம்பிரான் சுவாமிகள்.

பதினைந்தாவது மாநாடு : ஆண்டு - *1920*; இடம் - மயிலாடுதுறை. தலைவர் - சுவாமிநாத பண்டிதர்.

இந்த மாநாட்டைப் பற்றி சமாஜம் வளர்த்த பெரியவர்களில் ஒருவரான திரு. க. கலியாணம் பிள்ளை அவர்கள் ''சமாஜ நினைவுகள்'' என சித்தாந்தம் இதழில் எழுதியுள்ளார். ''1920ல் நான் மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் தலைமையாசிரியர் என்னைப் பார்த்து, 'இங்கு சைவசித்தாந்த மகாசமாசத்தார் மூன்று நாள் கூட்டம் போடுகிறார்கள். நீங்கள் சாரணர்கள் இருபதுபேர்கள் சென்று வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள். நீ தொண்டர் படைக்குத் தலைவனாக இரு என்று சொன்னார். சமாச விழா மாயூரத்தில் தருமபுரம் ஆதினம் அப்போதிருந்த குருமகா சந்நிதானம் அவர்களின் அருட்கொடையாலும் ஆதரவாலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழா மாயூரம் ஆனந்த தாண்டவ நாடகக் கொட்டகையில் (இப்போது சுந்தரம் பேசும் படக்காட்சி சாலை) நடைபெற்றது. ஆண்டு விழாத் தலைவர் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்கள். மூன்று நாட்களிலும் காலைமாலைச் சொற்பொழிவுகள் நடந்தன. என்ன நடந்தது என்று நினைவுக்கு வரவில்லை. ஒருநாள் ஆண்டாள் அம்மாள் என்பவர் ''தேவாரம் வேதசாரம்'' என்ற பொருள் பற்றிப் பேசினார்கள் இது ஒன்றுதான் என் நினைவில் நின்றது. மூன்று நாட்களிலும் கொட்டகை நிரம்பியிருந்தது. பின்னால் பல சமாச ஆண்டு விழாக்களில் அவ்வளவு கூட்டம் நான் பார்க்கவில்லை. தலைமை வகித்த பண்டிதர் அவர்கள் தூய வெள்ளாடை அணிந்திருந் தார்கள். கழுத்திலும் தலையிலும் உருத்திராட்ச மாலைகள். திருநீற்றுப் பொலிவு சொல்ல

வேண்டியதில்லை. அழுத்தம் திருத்தமாகக் கணீரென்று பேசினார்கள். மூன்று நாட்களிலும் கொட்டகையில் இருந்த அனைவருக்கும் மாலை சிற்றுண்டி வழங்கப் பெற்றது. வெளியூர் அன்பர்களுக்கு மூன்று வேளையும் உணவு அளிக்கப் பெற்றது. மூன்று நாட்களும் சமாசத்தார் பணித்தபடி உறுப்பினர் சேர்க்கும் தொண்டைச் செய்தேன்.''

பதினோறாவது மாநாடு : ஆண்டு - 1921; இடம் - சென்னை தலைவர் - பி. எம். சிவஞான முதலியார்.

பதினேழாவது மாநாடு : ஆண்டு - 1922; இடம் - சென்னை தலைவர் சர். பொன்னம்பலம் ராமநாதன்.

பதினெட்டாவது மாநாடு : ஆண்டு - 1923; இடம் - சென்னை தலைவர் திரு.பி. சுப்பையா முதலியார்.

பத்தொன்பதாவது மாநாடு : ஆண்டு. 1924; இடம் - திருப்பாதிரிப்புலியூர்; தலைவர் - ஞானியார் சுவாமிகள் இக்கால கட்டத்தில்தான் முன்பு குறிப்பிட்டது போல ஞானியார் சுவாமிகள் தலையிட்டு பிளவினைத் தவிர்த்து சமரசத்தினை நன்கு நடத்த அறிவுரை கூறி திருப்பாதிரிப்புலியூரிலேயே மாநாட்டினை நடத்தச் செய்து தானும் தலைமை தாங்கினார்கள்.

இருபதாவது மாநாடு : ஆண்டு - 1925; இடம் - சென்னை; தலைவர் - மறைமலை அடிகள்.

இருபத்தோராவது மாநாடு : ஆண்டு - 1926; இடம் - சென்னை தலைவர் - திரு. பி. சுப்பையா முதலியார்.

இருபத்திரண்டாவது மாநாடு : ஆண்டு - 1927; இடம் - புதுச்சேரி தலைவர் - ஞானியார் சுவாமிகள்.

1927-இல் முதன் முதலாக ஞானியார் சுவாமிகள் சென்னை வந்தார். அப்பொழுது சமாசச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. மாநாடு போல நடைபெற்றது. ''சித்தாந்தம்'' மீண்டும் தொடங்க முடிவாயிற்று. அடிகளாரின் அருளாசியும் பொருளாசியும் அடிப்படை. 1927 டிசம்பரில் அடிகளாரின் முயற்சியால் சமாஜ ஆண்டு விழா நடைபெற்றது.

இருபத்து மூன்றாம் ஆண்டுவிழா : ஆண்டு-1929; இடம் - திருவெண்ணெய் நல்லூர்; தலைவர் - ஞானியார் சுவாமிகள்.

1929 சமாஜத்திற்குப் புத்துயிர் அளித்த ஆண்டு. திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் ''சைவப் பெரியார் மாநாடு'' கூட்டப்பெற்றது. மறைமலை அடிகள். தலைமை தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சைவ சபைகளும் பிரதிநிதிகளை அனுப்பின. சைவ சமயத்தில் அடிப்படையான கொள்கைகள், செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் அதன் வளர்ச்சிக்கேற்ற வழிவகைகள் பற்றி முடிவு செய்யப்பட்டன. இன்று சைவம் வீறு கொண்டு இருப்பதற்கு இம் மாநாடே காரணம்.

அருட்திரு மறைமலையடிகள் தன் தலைமை உரையில் தொன்மை, பிரிந்து பட்ட தன்மை என்று தொடங்கி தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் காட்டும் அறம், பொருள், இன்பம் பற்றி விரிவாகப் பேசி, தவம் என நிறைவுப் பகுதியில் சைவ சமயக் கருத்துக்களைக் கூறி அவற்றிற்கு ஒப்புமையாகத் தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றினை எடுத்தாண்டு உரையாற்றினார்.

மறைமலைச் சாரல்

1. எகுபதியர் (எகிப்தியர்) பாண்டி நாட்டிலிருந்து சென்றனர்.

2. சாலடியரும் எகுபதியரும் தமிழ்வழி மக்களே.

3. ஐம்புல இன்பங்களை இறைவன் வைத்ததினால் தான் உயிர் வாழ இயலுகிறது.

4. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் இன்பத்தை நுதலியன்றி அறஞ்செய்வாரையும் பொருள் செய்வாரையும் யாண்டும் கண்டில மாகலின், தொல்காப்பியனார் இன்பத்தை முதல் வைத்த முறையே மக்களியற்கையோடு பொருந்துவதாதல் நன்கு துணியப்படும்.

5. உலகியல் ஒழுக்கத்திற்கும் இறைவன் திருவடிப் பேற்றிற்கும் ஆணிவேர் போல் இருப்பதாகிய இவ் இன்பவொழுக்கமானது மெய்யன்பின் வழி நடக்குமாயின் அப்போது தான் அது 'காதலின்பம்' என உயர்த்துப் பேசப்படும்.

4. நம் அருமைச் சைவ சமயமானது காதலன் பின் வழி நடக்கும் தூய வாழ்க்கையினையேவேண்டுவதன்றி, அதனைக் கொலை செய்யும் சாதி வேற்றுமை வாழ்க்கையினைச் சிறிதும் வேண்டுவதன்று என்பதற்கு நம் சைவ நாயன்மார் வரலாறுகளே சான்றாகும்.

சிறந்த தெய்வமங்கையான காரைக்கால் அம்மையாருக்கு ஏற்ற கணவனை அவர் தாமே காதலித்தல் வேண்டுமன்றிப் பிறர் அவர்க்கேற்ற ஒருவனை அவர்தம் வணிக மரபினரான ஒருவரைக் கொணர்ந்து மணம் பொருத்திவிட்டனர். அவன் அம்மையார் அருமைகள் அறிந்து அவற்றிற்கு ஏற்ப காதலன்பு பூண்டு நடக்கத்தக்க மாட்சியல்லன்.

காதலன்பிற் சிறந்த இன்ப வாழ்க்கை இடைநின்ற சுற்றத்தாரின் முயற்சியால் சிதைவுபட்டுக் காரைக்கால் அம்மையார்க்கு இனிது வாயாது போனமை போலவே சுந்தர மூர்த்தி நாயனார்க்கும் காதல் மனை வாழ்க்கை நன்கு வாயாது போயிருக்கும். ஆனால் எல்லாம் வல்ல அவர்பால் இரக்கம் பூண்டு அவர்க்கு அங்ஙனம் நேராமல் தடை செய்தருளினான்.

தம்முள் ஒத்த இயல்பினரான தெய்வக் காதலர் மணவாழ்க்கைக்கு சுந்தரமூர்த்திகளின் மணவாழ்க்கையினுள் சிறந்த தொன்றினை இவ்வுலகில் வேறெங்கணும் காண்டலரிது.

நிலமும் நீரும் தீயும் காற்றும் வானும் என்னும் ஐம்பெரும் பொருள்களின் கலவையே உலகம்.

> ''நீலந்தீநீர் வளிவிசும்போடு ஐந்துங்
> கலந்த மயக்கம் உலகமாதலின்''
> [தொல் – மரபியல்]

''ஐம்பெரு மெய்ப்பொருள்களின் கலவையே உலகம் எனக் கூறும் தொல்காப்பியனாரது கோட்பாடு உலகியல் அறிவுக்கு எத்துணைப் பொருத்தம். உலகத்துப் பொருள்கள் எல்லாம் அடுத்தடுத்து உருமாறி வருவனவே அல்லாமல் அவை இல்லாத வெறும் பாழாதல் எஞ்ஞான்றும் இல்லை என்ற இற்றைக்கால இயற்கைப் பொருணூலார் மெய்யுரையும் தொல்காப்பியனார் உரையோடு பொருந்துகின்றதன்றோ? மெய்க்கண்ட தேவரும் 'உள்ளதே தோற்ற உயிர் அணையும்' என்று இதனையே கூறுகின்றாரன்றோ!

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனையும் உணர்த்துதல் பற்றி இறைவன் அருளிச் செய்த தமிழ்நூல் நான்மறை எனவும் வழங்கப் படலாயிற்று.

மறைமலையடிகள் ஆற்றிய ''தலைமைப் பேருரை சித்தாந்தம்'' இதழில் வெளியானது. இதனைத் தொடர்ந்து பல இதழ்களில் இத் தலைமையுரையில் கூறப்பட்ட கருத்துக்களுக்குத் தடைகளும் இத்தடைகளுக்கு மறைமலையடிகளின் விடைகளும் வெளியாயின.

'சித்தாந்தம்' புத்துயிர் பெற்று வெளிவரத் தொடங்கிய காலகட்டத்தில் சுயமரியாதை இயக்கம் தீவிரமாக நடந்து வந்தது. எனவே, பத்திராசிரியர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், எழுதிய தலையங்கங்களும், வேறு பலர் எழுதிய கட்டுரைகளும் அக்கூட்டத்தினர் கூறிய அவச் சொற்களுக்குப் பதில் இறுக்கும் முறையிலும். தீர்மானங்களுக்கு மறுப்பும் எழுதும் வகையிலுமே அமைந்துள்ளன. திரு. வி.க. இம் மாநாட்டில் பேசுகையில் ''இதோ தெரிகின்றான்! பாருங்கள் அப்பரமனை என்ன அழகு! தோடு உடைய செவி! விடையின் மேல் தான் ஏறி வருகின்றான் வெண்மதி. எவ்வளவு தூயதாக விளங்குகிறது. பொடி பூசியமேனி அல்லவா.

உண்மையில் இக்காட்சி என்னைக் கவர்ந்து விட்டது. உங்களுக்குப் புலப்படவில்லையா? நன்கு கவனித்துப் பாருங்கள்'' என்று அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்து அடுக்கி அடுக்கிச் சொல்லிக் கொண்டே போனார்கள். தலைமை தாங்கியிருந்த பெரியார் (மறைமலை) முதல் அங்குக் குழுமியிருந்த அனைவரும் அவர் எத்திக்கை நோக்கிப் பேசினார்களோ அப்பக்கமே பார்க்கலாயினர். ''தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'' என்ற கோலத்தில் திரு.வி.க.வின் உள்ளத்தில் எல்லோரும் கலந்தோம்.''

1929-ஆம் ஆண்டு மார்ச் மாதம் *29, 30, 31* தேதிகளில் திருநெல்வேலியில் சமாஜத்தின் சார்பில் சைவப் பெரியார் தனிக் கூட்டம் நடைபெற்றது. அது பற்றிய விவரம் வருமாறு.

சைவப் பெரியார் தனிக் கூட்டத்தின் அவசியமும் வேலையும்

உலகத்திற் பல நாடுகளில் நிகழ்வது போலவே நமது நாட்டிலும் சில்லாண்டுகளாய்ச் செல்வ நிலை, அரசியல், சமூக அமைப்பு, சமய வாழ்வு முதலிய பல துறைகளிலும் விரைவான மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. இவற்றுள், 'சமூக அமைப்பிலும் சமய வாழ்விலும் தமிழ்நாட்டில் ஏற்பட்டு வரும் குழப்பம் பெரிது. சமயமும் சமூக அமைப்பும் பிரிக்க முடியாதபடி பின்னிக்கொண்டிருந்தது போல் காண்டலால், சமூகத் திருத்தக்காரர்களில், சமூக குறைகட்குச் சமயமே காரணமென்று கொள்ளுவோர் அதைக் கண்டிப்பதைத் தம் கடமையாகக் கொண்டு அவ்வேலையைத் தீவிரமாய்ச் செய்து வருகின்றனர். சமய நூல்கள், சமயக் கோட்பாடுகள், சமய அநுட்டானங்கள், சமய அமைப்புகள் ஆகிய யாவும் இந்நாளில் மேதை மரியாதை சிறிதும் காட்டப்பெறாது வெகு கடுமையாய்ச் சோதிக்கப்படுகின்றன். அவற்றுள் ஏதாவது பொய்ம்மை கலந்திருக்குமாயின், அதை உதறி விட்டு அடிப்படையான மெய்ம்மையைப்பலருமறிய நாட்டினாலன்றி, அவை விரைவில் மக்கள் நன்மதிப்பை இழந்து இழிவுபட்டொழிதல் ஒருதலை.

ஆனால் சமயநூல், கோட்பாடு, ஒழுகலாறு, அமைப்பு ஆகிய ஒவ்வொன்றிலும் கொள்ளத்தக்க பகுதி இது, கைவிடத்தக்க பகுதி இது என்று கணித்தற்குரியார் யாவர்? இந்நாளில் எழும் பேச்சையும் எழுத்தையும் பார்க்கையில், கருத்து வேற்றுமை பல

திறத்ததாய்க் காண்கிறது. 'தலபுராணம் உள்ளிட்ட சமய நூல் ஒவ்வொன்றும், பிள்ளையார் சுழி முதல் முற்றிற்று வரையில் முழு உண்மையே' என்று சத்தியஞ் செய்வோர் ஒரு கோடியில் உள்ளார்கள். 'இவை யாவும், வயிற்றுப் பிழைப்புக்காகவோ, மூளை கலக்கத்தாலோ எழுதப்பட்ட முழுப் புளுகுகள், புரட்டுகள் அல்லது பிதற்றல்கள்' என்போர் எதிர்கோடியிலுள்ளார்கள. இவர்கட்கிடையே பல வேறு கொள்கை யுடையாருமுளர். எல்லோருக்கும் பத்திரிகைகளும் பிரசங்க மேடைகளும் உண்டு. பேச்செழுத்துரிமை மிக்க இக்காலத்தில் ஜனத் தலைவர்களும் வழிகாட்டிகளும் பலப்பலர். இவர்கட்குள் நிகழும் பூசல்களும் மிகப்பல. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு வழியில் ஜனங்களை இழுக்க முயலும் போது, தாமே உண்மை காண முடியாத பொது ஜனங்கள் திகைத்து விழிக்கின்றார்கள். பழையன கழிகின்றன; புதியன புகுகின்றன. மாறுதல்கள் எல்லாம் நன்மை என்றாவது தீமை என்றாவது சொல்ல முடியவில்லை. பண்டைச் சமய அமைப்புகளும் அநுட்டானங்களும் நன்மை செய்ய மாற்றல் சுருங்கிப் புறக்கணிக்கப்படுகின்றன. நாள் முழுதும் தமக்குள் சண்டை சச்சரவு செய்து கொண்டு இருக்கும் இடையர்கள் கைப்பட்ட ஆடுகள்போல் சமயச் சார்புள்ள மக்கள் நன்மை பெறாதொழிகின்றனர். இடையர் முகமே காணாத ஆடுகளும் பலவுள.

இப்படிப்பட்ட நிலைமையில் சைவ மென்னும் பண்டைப் பெருஞ்சமயத்திற் பிறந்த அறிஞர்கள் செய்ய வேண்டிய கடமை யாது? மக்கட்குற்றுள்ள இடர்ப்பாட்டை உளங்கொள்ளாது வாளாகிடப்பதன்று; அது அருளொழுக்கத்திற்கு அடாது ஆதலின், சீர்திருத்தக்காரர் மேற் சீறி வீழ்வது மன்று; பொது நலங்கருதி யுழைக்கும் அவருட் சிறந்தாரும் இச்சீற்றத்திற் கஞ்சாது மீக்கொளச் சீறுதல் கூடுமாதலின், திருவருள் வலம் பெற்ற பெரியோன் அவதரித்தாற்றான் இச்சிக்கல் தீருமென்று வறிதே வருந்திக் கொண்டிருப்பது மன்று; அத்தகைய பெரியோன் வரவிற்கும் ஏனையோர் தவமுயற்சி வேண்டியிருத்தலின். மற்றென்னதான் செய்ய வேண்டும். அவரவர்க்குத் தோன்றியபடி பேசிக் கொண்டிருப்பதைவிட இப்போதுள்ள சைவர்களில், சமய நூல் வல்லோரும், சமய அநுட்டான உண்மை யுணர்ந்து கைக்கொள்வோரும், சைவ அமைப்புகளாகிய கோயில், மடம், சபை, அடியார் கூட்டம் ஆகிய இவற்றின் குணங்குறைகளை அனுபவத்தில் நன்குணர்ந்தோரும், சைவ போதகர்களும், பிற நாட்டுச் சமூக சமய அமைப்பு வரலாறுகளை யறிந்த சைவ சமயிகளும், ஒன்று கூடி, தற்சமய நிலைமையை நன்காராய்தற்கு வழி தேட வேண்டுவதே முதலிற் செய்யற்பாலது.

இவ்வவசியத்தை உணர்ந்த சைவ சித்தாந்த மகாசமாஜம் சென்ற டிசம்பர் திருவாளர் திவான் பஹதுர் ஸர். டி.என். சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் நடந்த தனது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது-

''தமிழ்நாட்டின் சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் தற்காலம் காணும் குழப்பங்கட்கும், சைவ மக்களின் ஆற்றற் குறைவிற்கும் காரணங்களைச் செவ்வையாய் ஆராய்ந்து, இக்காலத்தின் தேவைகட்கும் சைவ சமயம் எப்படி ஏற்றதாயிருக்கிற தென்பதை யுக்தி அனுபவங்கட்கொப்பப் புலப்படுத்தி, சைவ உலகிற்கு இந்நாளில் நல்வழி காட்டி யுதவும் பொருட்டுச் சைவ அறிஞர்களின்

தனிக்கூட்டமொன்று கூடிய விரைவில் கூட்டப்படுதல் அவசியம் என்று இம் மகா சமாஜம் கருதுகின்றது.''

இத்தீர்மானம் விரும்பும் தனிக் கூட்டத்தை, வரும் ஈஸ்டர் விடுமுறையில் கூட்ட மகாசமாஜக் காரியதரிசியார் முயற்சி தொடங்கி யுள்ளார். தீர்மானத்தில் நான்கு விஷயங்கள் குறிப்பிட்டு உள்ளன.

1. தமிழ் நாட்டின் சமய சமூக வாழ்வில் குழப்ப மேற்பட்டிருப்பது,

2. இவ்வாழ்வில் சைவ மக்களுக்குள்ள ஆற்றல் குன்றிக் காண்பது.

3. சைவம் இந்நூற்றாண்டிற்கும் ஏற்ற சமயமாயிருக்கு முண்மை.

4. 1, 2-ன் காரணங்களை ஆராயவும், 3-ஐ யுத்தி அனுபவ வாயிலாய்ப் புலப்படுத்தவும் சைவ அறிஞர்களின் தனிக்கூட்டம் வேண்டிய அவசியம். இவற்றில், க, ச பகுதிகளைப் பற்றி மேலே கூறியிருப்பது சாலும். தற்கால சைவ மக்களின் ஆற்றற் குறைவைப் பற்றியும் விரித்துரைக்க வேண்டியதில்லை. அவரிற் பெரும்பாலோர் சமய ஞானமின்றிக்கெடுவதும், சமய அமைப்புகளின் நிலை திரிந்து நலிவதும் இக்கேடுகளைக் கண்கூடாகக் கண்டும் சமயப் பாதுகாப்புக்கான பெருமுயற்சிகளைச் சைவர்கள் ஒன்று சேர்ந்து பயன்படச்செய்யாது சுயநலச் சிறு வாழ்வு வாழ்வதும் அவர்தம் ஆற்றற் குறைவைப் புலப்படுத்து மென்க. 3-ம் பகுதியானது, தற்கால வாழ்க்கையின் இயல்பை உலக சரித்திர ஞானங் கொண்டு உணர்ந்து, அதன் நன்மை தீமைக் கூறுகளை யாராய்ந்து, சைவ சமயத்தின் உயிர் நாடியான பெருங் கொள்கைகள் உலக மேதாவிகளின் உயரிய நோக்கங்கட்கு எவ்வாறு அரண் செய்கின்றன என்பதை விளக்குமாறு கேட்கின்றது, மக்கள் அன்றாட வாழ்வைப் புனிதப்படுத்தி அவர்களைப் பெருநெறி பிடித்தொழுகச் செய்யாத சமயம் வீழ்ந்துபடுதல் திண்ணம். அவ்வாறுதவும் ஆற்றல் சைவத்திற் குளதென்பதைப் பிறநாட்டு நல்லறிஞரும் அவர் மொழி பயின்ற இந்தியரும் பேணி ஏற்கும் வகையில் ஆங்கிலப் பயிற்சியுள்ள தமிழ்ச் சைவமக்கள் புலப்படுத்துதல் அவசியம்.

இப்பெருங்காரியங்களைச் செய்து முடித்தல் எளிதன்று என்பது மெய்யே. ஆனால் உழைப்பின் வாரா உறுதிகளில்லை; முயன்றால் விழுப்பயன் விளையும். மேற்சொன்ன சைவ அறிஞர் கழகம் செவ்வனே நடைபெற்று நாட்டிற்கு நன்னெறி புலப்படுத்த வேண்டுமாயின் பல வசதிகள் தேவையாம், அவற்றுட் சில பின்வருமாறு:-

1. சைவ சமய வளர்ச்சி விரும்பும் யாவரும் இக்கழகம் நன்முறையில் நடை பெற வேண்டுமென்ற வாழ்த்தித் திருவருட்டுணை கோரிவழுத்த வேண்டும்.

2. கழகத்தில் சேர்ந்து தம்மறி வனுபவங்களால் கூட்ட நடவடிக்கைகளை வளம்படுத்தக்கூடிய அனைவரும் எப்பாடு பட்டேனும், போதிய ஆயத்தத்தோடு ஷெ கூட்டத்திற்குப் போந்து துணை செய்ய வேண்டும்.

3. வருவோர்; இதுவரை தாம் தாம் கொண்டதே சரியென்றும், அதை நிலைநாட்டுதலே கடனென்றும் முடிவு கட்டிக் கொண்டு வாத தர்க்க மிடுதலிற் பயனில்லை. தாழ்வெனுந் தன்மையோடு போந்து, இத்தனிக் கழகத்தின் வாயிலாகத் திருவருள் நமக்கோர் பெருங்குறிப்பை யுணர்த்துதல் கூடுமென்று மதித்து, தம் கருத்துக்களில் அவசியமான மாறுதல்களை மனச்சான்று காட்டும் வழி செய்துகொள்ளச்

சித்தமாயிருக்கவேண்டும். எக்காரணத்தாலும் கூட்டத்தின் ஒற்றுமையைக் காத்து, பொது ஜனங்கட்கு இக்கழகம் தெளிவாக நல்வழி புலப்படுத்தும்படி அதன் வேலைகளை ஒழுங்குற நடத்த வேண்டும்.

4. சில நாள் எல்லையில் இக்கூட்டம் தனது பெரிய வேலைகளைச் செய்து முடிக்க வேண்டியிருத்தலால், பொழுதை வெகு செட்டாகப் பயன்படுத்த வேண்டும். ஆராய வேண்டிய பொருள்களைப் பற்றிக் கூட்டத்திற்கு வருவோரனைவரும் முன்னமே தெரிவித்தல் நலம்.

5. இப்பொருள்களைக் கேள்விகள் வாயிலாகச் சுட்டுவதோடு, அறிஞர்கள் அவற்றைப் பற்றி இப்போது கொண்டுள்ள கருத்துக்களைப் பதில் எழுதும் வாயிலாகப் பெற்றுக்கொண்டு, அவற்றை ஒல்லும் வகையில் தொகுத்து ஷெ கூட்டத்தில் ஆயத்தப்படுத்துதல் நலம்.

6. காய்தலுவத்தலகற்றி உண்மை காணும் ஒரே நோக்கத்தோடு அவசியமான ஆராய்ச்சிகள் செய்த பின்னர், பெரும்பாலோர் தீர்மானத்தைக் கழகத்தின் முடிபுகளாகக் கொள்ள வேண்டும். சிறுபான்மையோர் முக்கியமான விஷயங்களில் கருத்து வேற்றுமை கொண்டு அதை வெளியிட வேண்டுமென்று விரும்பினால் அவ்வாறும் செய்ய வேண்டும்.

7. இக்கழகத்தார் செய்யும் முடிவுகளையும், ஆலோசனைகளையும் புத்தகம், பத்திரிகை, பிரசுரம் எனுமிவற்றின் வாயிலாகத் தமிழ் நாடெங்கும் பரப்ப வேண்டும்.

8. இயன்றமட்டில் சைவ மகாஜனங்களும் தனி மனிதர் கருத்தைவிட அறிஞர் பேரவையின் கருத்தே உயர்ந்ததென்றுணர்ந்து, இம்முடிவுகளை நன்கு மதித்துப் பின்பற்ற முயலவேண்டும்.

ஆராயப்படவேண்டிய பொருள்களைக் கேள்வி வடிவில் எழுதியனுப்புதல் ஓரளவு சாதகமாயிருக்குமென்று மேலே குறிக்கப்பட்டது. அவைகட்கு எடுத்துக் காட்டுக்களாய்த் தமியேனுக்குத் தோன்றுமவைகளில் சில குறிக்கத் துணிகின்றேன்.

1. நல்லொழுக்கம் வளர்க்கும் நாகரிகத்திற்குச் சமயம் அவசியமா?

2. அவசியமாயின் சமய வாழ்வின் இயல்பு என்னை?

3. இந்நூற்றாண்டில் எத்தகைய சமயம் தேவை?

4. சைவ சமயம் அச்சமயமாயிருக்க முடியுமா?

5. சைவ சமயத்தின் இன்றியமையாக் கோட்பாடுகளும் அநுட்டானங்களும் எவை?

6. சமயத்துக்குப் பிரமாண நூல் அவசியந்தானா?

7. அவசியமென்னில், சைவத்திற்குப் பிரமாண நூல் யாது?

8. தற்கால சரித சமய இலக்கிய ஆராய்ச்சி வல்லார் கூறுவதையும் உளங்கொண்டு பார்க்கின், சைவ சமயப் பிரமாண நூல்களை எவ்வகையில் எம்மட்டில் கொள்ளுவது?

9. உயிரோடுள்ள பிற சமயங்களோடு சைவம் ஒத்துழைக்க வேண்டிய அளவும் முறையும் என்ன?

10. சைவர்கள் தமது சமயத்தைப் போதியளவு பாதுகாவாது, தம் சமய சகோதரர்களைப் பிற சமயம் தழுவவோ, நாத்திகராய் நழுவவோ வீட்டுக்கொண்டிருப்பதெதனால்?

11. சைவர் தொகை சுருங்குவதைத் தடுக்க வேண்டியது அவசியந்தானா?

12. அவசியமாயின் வழிவகை என்ன?

13. கோயில்கள், மடங்கள், சைவத் திருக் கூட்டங்கள் ஆகிய இவற்றைச் சைவ சமய வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளுவ தெப்படி?

14. சைவ மக்களுக்குள் சமய ஒற்றுமையும் பற்றும் உண்டாக்க வழியென்ன?

15. ஜாதிக்கும் சைவத்திற்கும் உள்ள சம்பந்தமென்ன?

16. தற்கால ஆசார சீர்திருத்தத்துக்குச் சைவம் எம்மட்டில் துணை செய்யவல்லது?

17. தீண்டா வகுப்பினர்க்குச் சமய உரிமை எவ்வளவில் தரப்பட வேண்டும்?

18. ஆலய மட பரிபாலனத்திலும், உற்சவ முறைகளிலும், சைவ மகா ஜனங்கள் அங்கு வழிபடும் பழக்க வழக்கங்களிலும் ஏதேனும் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா?

19. அத்திருத்தங்க ளெவை?

20. அவற்றை எப்படிச் செய்வது?

21. புறமதம் புக்கோரை மீண்டும் சைவத்தில் சேர்க்கலாமா?

22. ஆமெனின் எம்முறையில்?

23. இவ்விஷயங்களில் சைவ சித்தாந்த மகாசமாஜம் என்ன செய்ய வேண்டும்?

சைவப்பெரியார் தனிக்கூட்டம்

இக்கூட்டம் திருநெல்வேலியில் 1929-வது வருடம் மார்ச்சுமீ 29, 30, 31-ந் தேதிகளில் மிகச் சிறப்பாகச் சைவத் திருவாளர் ச.சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T. (Dy. Inspector of Schools) தலைமையில் செவ்வனே நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல பகுதிகளாகிய தொண்டை நாடு, சோழநாடு, சேரநாடு, பாண்டிநாடு, நடுநாடு, கொங்குநாடு, ஈழநாடுகளிலிருந்தும் போந்த பல பேரறிஞர்களும், சைவசபைப் பிரதிநிதிகளும் குழுமியிருந்தனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நிலையத்தில் விஷயாலோசனைக் கூட்டமும் கணபதிவிலாச நாடக சாலையின் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. வந்திருந்த பேரறிஞர்கட்கும் பிரதிநிதிகட்கும் தங்குவதற்கான வசதிகளெல்லாம் சிறப்பாக அமைக்கப் பெற்றிருந்தன!

தீர்மானங்கள்

1. ''நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும கொள்கை இன்றியமையாதது''

2. ''சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ளதாயும் அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின் அஃது எக்காலத்துக்கும் எச்சமுக நிலைக்கும் இசைந்ததாயிருக்கிறது.''

3. ''பதி, பசு, பாசம், (இறை, உயிர, தளை) என்னும் முப்பொருள் உண்மையையும், அப் பதி சிவமேயென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் கோட்பாடாகும்; சைவ உணவு கொள்ளுதல், சிவ சின்னங்கள் அணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக் கோட்பாடுகட்கிசையப் பயிலுதல், சைவ சமயத்தின் அநுட்டானமாகும்.''

4. 'சைவ சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன : பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும், அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும்.''

5. சைவ சமயிகள் : சைவசமயக் கோட்பாடுகளையும் அநுட்டானங் களையும் மறுக்காத எவ்வித ஆராய்ச்சி யுஞ் செய்தல் சைவ சமய விரோத மாகாது.

6. சைவ சமயிகளும் பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிபுகள் ஒப்புக் கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற் பொருட்டுத்தனிக் கழகம் ஒன்று நிறுவி அதற்குரிய சைவ அறிஞர்களைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தார் ஆண்டு தோறும் தெரிந்தெடுக்க வேண்டும்.

7. சைவ சமயிகள் கடவுள் உண்டென்னும் கொள்கையைப் பாதுகாப்பதிலும், பொதுநலங் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கிவரும் ஏனைச் சமயிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

8. சைவ சமயமானது பிற சமயங்களைச் சோபான முறையில் தழுவுவதில், சைவ சமயிகள் பிற சமயிகளோடு சகோதரத்துவம் பாராட்ட வேண்டும்.

9. சைவ சமயிகளுள் சைவ ஆசார முடைய எம்மரபினர்க்கும் ஆலய வழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல் வேண்டும்.

10. ஆலயத்தில் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதியில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப் படுதல் கூடாது.

11. பிற சமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும், அநுட்டானங் களையும் ஒப்புக் கொண்டு சைவ சமயம் புகும் தமது விருப்பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்தால் அச்சைவ சபையார் அவ்வறிவிப்பைப் பதிவு செய்து கொண்டு திருநீற்றுப் பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு அணிவித்து அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சமய உரிமைகள் அனைத்துக்கும் உரியராவார்கள்.

12. சைவசமய வளர்ச்சிக்கு வழிகளாவன்

1. சைவ கலாசாலை ஏற்படுத்திச் சைவ சமய போதனை செய்வதற்குரிய பிரசாரகர்களைத் தயார் செய்தல்.

2. அப்பிரசாரகர்களுக்குக் கோயில், மடங்கள், பெருஞ் சைவ சபைகள், செல்வர்கள் முதலியோர்களால் சம்பளம் அல்லது ஊதியங் கிடைக்கும் படி செய்தல்.

3. ஆங்கிலத் தமிழ்க் கல்லூரிகளில் சைவ சமய மாணவர்க்கு அதிகாரி களிடம் அனுமதிபெற்றுச் சைவசமய போதனை செய்வித்தல்.

4. சமய நூல் பரிசோதனைகள் நடத்துதலும் தேறியவர்களுக்குப் பரிசளித்தலும்.

5. சைவசமய உண்மைகளை விளக்கும் துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதல்.

6. தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கூடிய கழக வாயிலாகச் சைவ சமயக் கோட்பாடு களையும் அநுட்டானங்களையும் யாவர்க்கும் எளிதாய் நன்கு விளங்கும் உரைநடை நூல்களை வெளியிடுதல்.

7. சைவசமய உண்மைகளை அறிவியல் நூல் கருத்துக்களோடும் பிறசமயக் கருத்துக்களோடும் ஒத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்யும் சைவப் புலவர்களை ஆதரித்தல்.

8. ஆங்கிலத்தில் ஒரு மாதாந்தரப் பத்திரிகை நடத்துதல்.

9. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சைவ சமயிகளுள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சைவ சபையின் உறுப்பினராயிருக்கும்படி வேண்டிக் கொள்ளல். என்பனவும் இனைய பிறவுமாமம்.

திருக்கோயிலில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களாவன

1. பூசனை புரிவோர்களுக்குச் சைவ சமய உணர்த்தி உண்டாதற்குரிய கல்வி பயிற்றுதல்.

2. அவர்கட்குத் தக்க சம்பளம் அல்லது ஊதியம் கிடைக்கும்படி செய்தல்.

3. சைவ சமயிகளைக் கொண்டே சிவாலயங்களில் வேதபாராயணம் முதலிய கைங்கரியங்கள் அனைத்தையும் செய்வித்தல்.

4. தக்க ஆதி சைவர்கள் கிடையாத விடத்துத் தகுதியுடைய ஏனைச் சைவ சமயிகள் வாயிலாகப் பூசனைகளை நடத்துதல்.

5. ஒவ்வொரு சிவாலயத்திலும் பன்னிரு திருமுறைகளைப் பூசைக் காலங்களிலே முறையாக ஓதுவித்தல்.

6. ஆலயங்களில் நுழைந்துள்ள பிரவேசக் கட்டணம் முதலிய வழி பாட்டுத் தடைகளை நீக்குதல்.

7. சைவ சமயக் கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணாகாத முறையில் நித்திய நைவேத்திய பூசைகளை நடத்துவித்தல்

8. திருவிழாக்களிலே பக்தி ஞானங்களைக் குன்றச் செய்யும் வீணாடம்பரச் செலவுகளை நீக்கிச் சிவத்துவம் விளங்குவதற்குரிய திரு முறைப் பாராயணம், சமயப் பிரசங்கம், சைவ அறிஞர் கூட்டம் முதலியவை களையே நிகழ்த்துவித்தல்.

9. சிவாலயங்களிலே தேவதாசிகட்குப் பொட்டுக் கட்டுதலையும் அவர்கள் ஊழியத்தையும் ஒழித்தல்.

10. திருக்கோயில்களிலும் தேர்களிலும் இப்பொழுது உள்ள இழிவான சிற்பங்களை ஒழித்தல்.

11. சைவ சமய அறிவும் பற்றும் உடையவர்களையே கோயில் அதிகாரிகளாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தல்.

12. திருக்கோயில்களிலே திருக்குளம் முதலிய எவ்விடத்தையும் சுத்தமாக வைத்தல். புனிதத்திற்கும் பக்திக்கும் இடையூறாகிய கடை வைத்தல் முதலிய வழக்கங்களை ஒழித்தல்.

13. நித்திய நைவேத்திய பூசனை முதலியனவற்றிற்குரிய செலவுகள் நிகழ்ந்தபின் எஞ்சிய நிதியினைக் கொண்டு சமயப் பிரசாரகர் நியமனம், சைவநூல் புத்தகசாலை, தேவார பாடசாலை, ஆகமபாடசாலை முதலிய வற்றை ஏற்படுத்துதல். சிவாலய நிதியினைக் கொண்டு பிற சமயக் கல்விக்குப் பயன்படுத்தாதிருத்தல்.

14. சிவாலயங்களிலே செய்யப் படும் வடமொழித் தென்மொழித் தோத்திரங்கள் அனைத்தும் சிவத்தைக் குறித்தனவாகவே இருக்கும்படி ஏற்பாடு செய்தல் என்பனவும் பிறவுமாம்.

14. சைவர்கட்குரிய சோடசகர்மம், தீக்ஷை வகைகள் முதலிய சடங்குகளும் சிவாலயத்தில் செய்யப்படும் கிரியைகளனைத்தும் சைவ சமயிகள் யாவர்க்கும் தெளிவாக எளிதில் விளங்கு தற்குரிய முறைகளை ஆய்ந்து கூறுதற்கும், சடங்குகள் செய்விக்கத் தகுதி

யுடையார் யாவர் என்று துணிதற்கும், அத்தகைய பிறவற்றைத் தீர்மானித்தற்கும், சிவானந்த சுவாமிகள், விருதை - சிவஞானயோகிகள், குளித்தலை - அரங்கசாமி ஐயர், கா. சுப்பிரமணிய பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய இவர்களை உறுப்பினராகக் கொண்ட அறிஞர் கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

15. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சமய விஷயங்களிலே சம உரிமைதயும் கடமையும் உள்ளன.

16. உயிர்ப்பலி நிறுத்துதல், கொலை மறுத்தல் முதலிய அருளொழுக்கக் கொள்கைகளை (Vegetarianism) யாண்டும் பரவச் செய்தல் சைவசபைகளின் கடமையாகும்.

17. சைவத் துறவிகட்கு சமயக் கல்வி பயிற்றுவித்து அவர்களை ஆதரிப்பதுடன், அவர்கள் வாயிலாக, சமய போதனை செய்விக்கும் பொருட்டும், சைவ சமய வளர்ச்சிக்குரிய எல்லா முயற்சிகட்கும் பொருளுதவி ஆதரித்தற் பொருட்டும் செல்வமிக்க சைவ மடங்களின் தலைவர்களை வேண்டிக் கொள்வதற்குத் தக்க அறிஞர்கள் சிலரைத் தெரிந்தெடுத்து அம்மடாதிபதிகளிடம் அனுப்ப வேண்டும்.

18. சைவசித்தாந்த மகாசமாஜத்தை இந்நாட்டிலுள்ள சைவமக்கட்கெல்லாம் பொதுவாகிய சைவப் பெருங் சபையாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு தாலுகாவிற்கும் தனித்தனி சைவ சபைகள் சமைக்கப் பெறுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு தாலுகாவிலுமுள்ள பிற சைவ சபைகள் தாலுகாச் சைவ சபையின் கிளைச்சபைகளாகவும் ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள தாலுகாச் சைவசபைகள் ஜில்லா சைவ சபைகளின் கிளைகளாகவும் ஜில்லா சைவ சபைகள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கிளைகளாகவும் இருக்க வேண்டும்.

20. சைவ சமய வளர்ச்சிக்குரிய நன்னோக்கங்களும், நன்முயற்சிகளும் நிறைவேறுதற் பொருட்டும், உலகம் நலமடைதற் பொருட்டும்; சைவருள் ஒவ்வொருவரும் நாடோறும் இறைவனைப் பிரார்த்தனை புரிதலுடன் சைவ சபைகளிலும், கோயில்களிலும் வாரந் தோறும் சைவர் பலரும் ஒருங்குகூடி இறைவனை அன்புமிக்க மொழிகளால் வேண்டிக் கொள்ளுதல் கடமையாகும். நல்லயாக்கை உள்ளபோதே தோற்றக் கேடில்லாத ஆண்டவன் நினைவில் உறைந்து நிற்கபயிலல் வேண்டும்.

25வது மாநாடு : ஆண்டு - 1930; இடம் - சென்னை, தலைவர் - பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார்.

வெள்ளிவிழா மாநாட்டில் ''நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'' என்ற தலைப்பில் திரு. வி.க. உரையாற்றினார். ''நினையாதவர் மனம் கோயிலாக் கொள்ளாதவன் என்று பொருள் இல்லை. அவன் ஓரிடத்தை விரும்பிக் கொள்வோனும் அல்லன்; மற்றோரிடத்தை வெறுத்துத் தள்வோனும் அல்லன். அவன் கோயில் கொள்ளல் கொள்ளாமை அவனைப் பொறுத்தனவல்ல. அக்கொள்ளல் கொள்ளாமை உயிர்களின் நிலையைப் பொறுத்து நிற்பன என்க.

கதிரொளியைப் போலவும், மின்சாரத்தைப் புரையவும் ஆண்டவன் திருவருள் விளங்குகிறது. ஆண்டவன் தன்னருளை எல்லா இடங்களிலும் விருப்பு வெறுப்பின்றிப் பொழிந்து கொண்டிருக்கிறான். மெய்யறிவு விளங்கப் பெற்றோர்க்கு அது புலனாகும. ஏனையோர்க்கு அது

புலனாகாது. உயிர்கட்குப் புலனாதல் புலனாகாமை முறையே ஆண்டவன் கோயில் கொள்ளல் கொள்ளாமை என்று வழங்குதல் மரபு.

கொண்டவன் என்பது புதிதாக ஓரிடத்தைக் கொள்வதைக் குறிப்ப தன்று. அது மன்னரே கோயில் கொண்டமையைக் குறிப்பதென்க. ஆண்டவன் பண்டே நெஞ்சங்கோயில் கொண்டுள்ளான். அவன் நினைவு அதனை உணர்த்துவதாகிறது. உண்மை யில் ஆண்டவன் புதிதாக யாண்டும் புகுவதில்லையென்க.

உயிர்கள் அறியாமையினின்று விடுதலை அடைவதே வீடுபேறு என்பது. ஆண்டவன் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவனாய், முற்றறிவுடையனாயிருப்பவன். அவனைப் பற்றினால் உயிர்கள் கட்டினின்று விடுதலை அடைந்து இன்பந்துய்த்தல் உறுதி.

ஆண்டவனை பற்றுவது எப்படி?

எளியதும் விரைவில் பேற்றை அளிக்கவல்லதுமாயிருப்பது ஆண்ட வனை நினைத்தல் என்பது. இதனைத் தியான யோகம் என்பர்.

நல்லயாக்கை உள்ளபோதே தோற்றக் கேடில்லாத ஆண்டவன் நினைவில் உறைந்து நிற்கப் பயிலல் வேண்டும். ஆண்டவனை நினைக்க உயிர்ச் சார்பும் பொருட்சார்பும் இடையூறு அல்ல. அவ்விரண்டையும் ஆண்டவன் நினைவிற்கு அரணாகப் பயன்படுத்தி வாழ்வதே சிறந்த இன்ப அன்பு வாழ் வாகும். அவைகள் யாவும் வாழ்விற் கென்று ஆண்டவனால் அளிக்கப் பட்டன. அவைகளை வெறுப்பது ஆண்டவனை வெறுப்பதாக முடியும்.

ஆண்டவன் நினைவிற்கென்று வீட்டைவிட்டு ஓடவேண்டியதில்லை. வீட்டிலிருந்தே மனைவி மக்களுடன் வாழ்ந்தே நினைக்கலாம். கரவில்லா அன்புளங்கொண்டு எந்நிலையில் நின்றும் எக்கோலம் பூண்டும் ஆண்டவனை நினைக்கலாம்.

ஆண்டவன் அருள் எப்படி வரும்?

பாவத்துக்கஞ்சிச் செய்த பாவங் களை முறையிட்டு, அழுக்காறு முதலிய குற்றங்களைக் களைந்து, ஆண்டவன் திருவடிப் பற்றையே பற்றாக்கொண்டு அத்திருவடியை நினைந்து உருகி உருகிக் கண்ணீர் சொரிந்து அழ அழ, ஆண்டவன் அருட்டுணை தானே வரும்.

ஆண்டவன் நினைவை இடையறா ஒன்றாக்க வேண்டும். தொடக்கத்தில் ஆண்டவனை நினைவூட்டக்கூடிய ஒரு குறியில் நெஞ்சை நிலைபெறுத்தப் பயிற்சி செய்தல் வண்டும். அக்குறி கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய ஓவியமாய் இருத்தல் சிறப்பு. அக்குறியின் கண் நெஞ்சம் படியபடிய அலைதல் ஒழிந்து நிலைதல் பெறும். இதற்கென்றே திருக்கோயில் வழிபாடு ஏற்படுத்தப்பட்டது.

நமது குறிக்கோள் நெஞ்சைக் கோயிலாக்க வேண்டும் என்பதே யாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள யாண்டாதல் உருவ வழிபாடு செய்யலாம்.

வழிபாட்டுக்கு எவ்வுருவைக் கொள்வது?

அழகிய ஓர் உருவில் மனம் ஒன்றிப் படியப்படிய மனத்தில் ஒருவித ஆற்றல் பிறக்கும். அவ்வாற்றல், ஆண்டவன் வேட்கை பெருகவும், மற்ற வேட்கை கள் சுருங்கவும், துணை செய்வதாகும்.

நெஞ்சில் அமைதியும் ஒருமைப்பாடும் உறும். நிலைத்த நெஞ்சம் உண்டாகும். இந்நிலையில் ஆண்டவன் திருவருளால் குருநாதன் தோன்றி மெய்ப்பொருளை அறிவுறுத் துவன்.

மெய்க்குரவன் காட்சிக்குப் பின்னை மனத்தில் உறும் மாறுதல் பலப்பல. அவற்றுள் ஒன்று ஒருவித ஒளியெழுச்சி. அவ்வொளி தானே வலிந்து உயிரை இயற்கை வழிபாட்டில் உந்தும்.

இயற்கை வழிபாடுகளுள் சிறந்தது ஞாயிறு வழிபாடு. ஞாயிறு வழிபாடு பழைய பழைய மாசுகளைக் கடிந்து உயிரை ஒளிமயமாக்கும். அவ்வுள்ளொளி, இயற்கை உடலாகவும், இறை அதன் உயிராகவும் உள்ள நிலையைப் புலப்படுத்தும். இது தான் வழிபாடென்னும் உயிர் வழிபாட்டைக் கூட்டும்.

தன்னில் ஆண்டவனை நினைந்து நிகழ்த்தும் வழிபாடு தன்னிலும் தன்னனைய உயிர்களிலும் ஆண்டவன் கோயில் கொண்டிருத்தலை உணர்த்தும். இவ்வுணர்வு உயிர்கட்கு விடுதலை நல்கும். எல்லா உயிரையும் தன்னைப் போல் பார்க்கும் ஒருநிலை ஆண்டவனைப் படிப்படியாக நினைப்பதால் கூடுவதாகும்.

எவ்வுயிரிலும் ஆண்டவன் உண்மையை உணர்த்துங் கல்வி, அரசு, வாழ்வு முதலியன உலகிடைப் பரவுதல் வேண்டும். இதற்குச் சமய ஞானம் வேண்டற்பாலது. சமயஞானமென்று சமயவாதத்தை வளர்த்தலா காது. சமயவாதங்களே சகோதர நேயத்தைக் கெடுத்து வந்தன; வருகின்றன.

சைவத்தின் உயிர் அன்பு. அன்புக்குச் சாதி முதலிய வேற்றுமைகளுண்டோ?

ஆண்டவனை ஓர் உருவின் வாயிலாக நினைந்து பின்னை இயற்கையின் வாயிலாக நினைந்து, அவ்வாண்டவன் உள்ளங் கோயில் கொண்டதை உணர்தல் வேண்டும்.

ஆண்டவன் கோயிலுக்குரிய இடம் நெஞ்சமாகும். இதனைத் தமிழ்நாட்டில் தோன்றி அன்பு நெறி வளர்த்த நால்வரும் ஒருமுகமாகத் தொடக்கத்திலேயே உலகிற்கு நினைவூட்டியுள்ளனர்’’ என்று முடிக்கிறார் திரு. வி.க.

முதல் சைவ இளைஞர் மாநாடு

1930-இல் திருவிடைமருதூரில் சமாஜத்தின் சார்பில் முதல் சைவ இளைஞர் மாநாடு நடைபெற்றது. ‘‘இதுகாறும் இளைஞர்கள் சமயத்துறையிலே ஒரு மகாநாடு நடத்தியதை நாம் கண்டதில்லை. தாங்கள் முன்னின்று செய்யக்கூடியவை இன்னின்னவென்றும் தங்கள் கூட்டுறவும் இருந்தால் நமது சமாஜம் இன்னின்ன பணிகளைச் செம்மையாகச் செய்தல் கூடும் என்றும் தங்கள் தீர்மானங்கள் வாயிலாக நமக்கு விளக்கியுள்ளார்கள்’’ என்று ‘சித்தாந்தம்’ இதழ் கூறுகிறது.

இளைஞர் மாநாட்டில் தலைமையேற்று உரையாற்றிய திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை முப்பொருள் உண்மையைத் தொல்காப்பியம் மூலம் விளக்கினார். கடவுள் உயிர் உலகம் என்ற முப்பொருள் உண்மை தமிழ்நாட்டிலே எங்கும் வழங்கி வந்தது என்பது அவற்றின் சார்பாகிய சொற்களை எழுத்துக்களுக்கு உருவகப் பெயர்களாக ஆசிரியர் தொல்காப்பியனார் கொண்டமையால் இனிது விளங்கும். ஆய்தம், உயிர், மெய் என்ற மூன்று சொற்களையும் உற்று நோக்குக.

ஆய்தம் என்பது நுண்ணினது என்று பொருள்படும். எல்லா எழுத்தொலிகளும் தோன்றுதற்கு அடிப்படையாய் உள்ள மூச்சானது நுண்ணியாய் எழுத்தொலி புலனாதற்கு ஏதுவாகிய காற்றுத் தொகுதியோடு கலந்திருத்தலின் அதனையே ஆய்தம் என்றார். அது மூலமாகிய எழுத்தொலியினோடு கலந்தே ஒலித்தலின் அதனை சார்பெழுத்து என்றார். எல்லாப் பொருளுக்கும் ஆதாரமாய்த் தோன்றாத அடிப்படையாய் அவற்றோடு சார்ந்து நிற்கும் மெய்ப்பொருளையுணர்தலே சார்புணர்தல் என ஆசிரியர் திருவள்ளுவனார் மெய்யுணர்தல் அதிகாரத்தில் குறித்தமை காண்க. எல்லாப் பொருட்கும் சார்பாகிய முதல்வன் அப்பொருள்களின் இயல்பிலனாய் அவற்றின் வேறான தன்மையுடையனாய் இருத்தலின் தனி முதலெனப் படுவன். அவ்வாறு உயிரொடும் மெய்யொடும் சாராது வேற்றியல்புடைய ஆய்தமானது தனி நிலை எனப்படுதல் காண்க.

''இனி எப்பொருட்கும் இன்பம் ஈயும் இறைவன் வேறாக அவ்வின்பத்தைப் பெறும் உயிர்கள் பல என்பதும் தொல்காப்பியத்துட் போந்த கருத்தேயாகும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்' என்ற விடத்து உயிர்கள் வினை வசப்பட்டு அறிவு மயங்கப் பெறுவன என்பது குறிப்பினறியக் கிடக்கின்றது. வினைக்கு ஏதுவாக எடுக்கும் உடம்பே மெய்யெனப்படுதலின் உயிர் ஊர்ந்து வரும் எழுத்துக்களை மெய்யெழுத்தெனவும் ஊரும் எழுத்துக்களை உயிரெனவும் குறியீடு செய்து கொண்டமை வியக்கத்தக்கது. மெய்யென்பதே தத்துவம் என்னும் வடசொல்லின் பொருளாகும். தத்துவக் கூட்டமே உலக மாதலின் மெய்யென்றவிடத்து உலகம் சுட்டப்பட்டதென அறிக. இதுவரை கூறியவற்றால் சைவசித்தாந்தத்துட் போந்த முப்பொருளுண்மை தொல்காப்பிய எழுத்ததிகாரத்துள் அமைந்து கிடக்கின்றது.

1930-இல் சமாச விழா முடிந்த மறுநாள் பண்டித மணியுடன் சில அன்பர்கள் திருத்தணிகைக்கு வழிபாட்டுக்குச் சென்றார்கள். சரவணப் பொய்கையில் அனைவரும் நீராடினர். பண்டிதமணி அவர்கள் படித்துறையின் மேற்படியில் அமர்ந்திருந்தார்கள்.; திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் முகந்து கொண்டு போய் அவர்களை நீராட்டினார்கள். குழந்தைக்குத் தாய்நீராட்டுவது போலிருந்ததாக திரு. க. கலியாணம் (சமாஜ நினைவுகள்) கூறுகிறார்கள். உடன் வந்த அன்பர் சந்நிதிக்குள் போனார். திரும்ப வந்தார். எதையோ விட்டு வந்தவர் போல மீண்டும் போனார். வந்தார். மற்ற ஒரு அன்பர், ''எதையாவது விட்டு வந்தீர்களா?'' என்று கேட்டார். ''முருகன் திருவோலக்கம் என்னைக் கவர்ந்தது. மும்முறை கண்டும் ஆசை தீரவில்லை'' என்றார் - உடனே பண்டிதமணி, ''அவர் மனத்தை, அங்கு வைத்துவிட்டு வந்துவிட்டார். அதை எடுத்து வரமுடியவில்லை'' என்றார்.

26வது மாநாடு : ஆண்டு - *1931*; இடம் - தூத்துக்குடி; தலைவர் - திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை.

இம்மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களைப் போல் இதற்கு முன்னும் நிறைவேற்றப்பட்டதில்லை; பின்னும் நிறைவேற்றப்படவில்லை.

''சமாஜ வளர்ச்சி, சமய வளர்ச்சி முதலியவற்றைக் கருதி கீழே குறிக்கப் பட்டுள்ள சமாஜப் பேரறிஞர்கள் கிழ்வரும் அரும்பணிகளை மூன்று மாத கால அளவைக்குள் முடித்துத் தரவேண்டுமென்றும், அவர்களால்

தரப்படும் குறிப்புகள் சமாஜத்தினரால் வெளியிடப்படல் வேண்டுமென்றும் பேரறிஞர்கள் பால் சமாஜம் வைத்துள்ள அன்புரிமையின் துணை கொண்டு இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

1. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பண் - சொற்பொழிவுகட்குரிய குறிப்புகளைச் செப்பம் செய்து தருதல் 2) திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளை - தமிழ் மறையில் உயர்ந்த கருத்துடைய நூறு பாட்டுகளுக்குப் பதவுரை விசேட உரை எழுதித் தருதல் 3) பண்டிதமணி திரு. மு. கதிரேசன் செட்டியார் - திருவாசகத்தில் ஆயிரம் மணிவாசகங்களைப் பொறுக்கித் தருதல் 4) திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார் - தமிழர்கள் சமயம், பழக்கம், ஒழுக்கம் முதலியவற்றைக் கூறும் சங்கநூற் சொற்றொடர்கள், ஐநூற்றை விளக்கக் குறிப்புகளுடன் தொகுத்துத் தருதல் 5) திரு. அ.மு. சரவண முதலியார் - பெரிய புராணத்தில் ஆழ்ந்த கருத்துகளுடைய முந்நூறு பகுதிகளைக் குறிப்புரையுடன் திரட்டித் தருதல் 6) திரு. சிவகுருநாதன்பிள்ளை - சைவ சமய நுட்பங்களை இக்காலத்தவரும் - பல இயக்கத்தவரும் உணரும் வகையில் முந்நூறு வினா விடைகள் மூலமாக விளக்குதல் 7) திரு. சாமி. வேலாயுதம்பிள்ளையும் ஆங்கிலம் கற்றுள்ள சைவர்களும் செய்யவேண்டிய பணி - சமய நூல்களையும், அறிவியல் நூல்களையும் ஒன்றுபடுத்தி ஒப்பிட்டு விளக்கும் ஆங்கில நூல்களைப் படித்து அவற்றின் முக்கியமான பகுதிகளை அவ்வப்போது மொழிபெயர்த்து 'சித்தாந்தம்' வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும் வெளியிடுதல்.

27வது மாநாடு : 1932-இல் சமாஜத்தின் 27வது ஆண்டு விழா திருவிற்கோலத்தில் (கூவம்) திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை தன் தலைமையுரையில் சைவ சமயத்தினது இயற்கைத் தன்மையை விளக்கிப் பேசுகையில் ''சைவ சமயம் இயற்கைத் தன்மை உடையது ஆதலின் மேற்கு நாட்டு இயற்கை ஆராய்ச்சியாளர் சென்ற முன்னூறு, நானூறு ஆண்டுகளில் இயற்கை ஆராய்ச்சியால் அறிந்த உண்மைகள் சைவ சமய நூல்களில் நீண்ட காலத்துக்கு முன் கூறப்பட்ட உண்மைகளுடன் ஒத்திருக்கின்றன. எடுத்துக்காட்டுகளாகச் சில இங்கே நான் கூறுகின்றேன். உலகப் பொருள்கள் ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு மாறுமேயன்றி ஒருகாலும் அழியா என்ற உண்மையும் சத்தியும் அவ்வாறே அழியாது என்ற உண்மையும் சைவ சமய நூலிற் கூறப்பட்ட சற்காரிய வாதத்துக்கு ஒத்துள்ளன. உலகில் விளங்கும் ஒரே சத்தி அது தோன்றும் இடவகையால் வெப்பம், ஒளி, ஒலி, மின்சாரம், முதலிய பல சத்தித் தோற்றங்களாய் விளங்கின்றது என்று 50 ஆண்டுகளுக்கு முன்னால் கூறப்பட்ட உண்மை நீண்ட காலத்துக்கு முன்னே சிவஞான சித்தியார் முதலிய நூல்களிற் கூறப் பட்டிருக்கின்றது. தூல அணு பிரிக்கப்படும் தன்மையுடையது என்று 40 ஆண்டுகளாக அவர்கள் கண்டு பிடித்துக் கூறும் உண்மையான நீண்ட காலத்துக்கு முன்னே சைவ சமய நூல்களிற் கூறப் பட்டுள்ளது. அவ்வாறே சூக்குமத்தில் ஒளியாய் விளங்கும் சத்தி தூலத்தில் ஒளியாய் விளங்குகின்றது என்ற உண்மையும் முன்னமே சைவ சமய நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது''

அடுத்துத் தலைவரவர்கள் சைவ சமயத்தின் செயல்முறைத் தன்மையை விளக்குங்கால் சமுதாயத்தில் நிலவி வரும் தீண்டாமை பற்றி விரிவாக விளக்கியுள்ளார். ''கோயிற் சீர்திருத்தங்களில் தூய்மையாய் வைக்கப்பட வேண்டும் என்பது ஒன்று. அகந்தூய்மை

புறந்தூய்மை உள்ள கோயில்கள் இறைவனது அருள் நன்று விளங்கி அன்பாக வழிபாடு செய்கிறவர்கள். அவ்வருளினைப் பெறுவர். கோயில்களில் தூய்மை எவ்வளவு குறையுமோ அவ்வளவு அருள்விளக்கமும் குறையும். ஆதலின் கோயிலுக்குள் புகும் தகுதியுடைமைக்கு அங்கே போகிறவர்களுடைய அகந்தூய்மையும் புறந்தூய்மையும் காரணமின்றி இப்போது நிலவுகிற உள்ளீடில்லாத சாதியும் குலமும் இனிமேல் காரணமாயிருத்தல் கூடாது. சாதியையும் குலத்தையும் காரணமாகக் கொள்ளுதலினாலே சில பகுதி மக்கள் கோயிலுக்குப் போகும் உரிமையைத் தடுத்து அவர்களை மேல்நிலைக்கு வரவொட்டாமல் செய்கிறார்களே தவிர அதனால் நற்பயன் ஒன்றும் உண்டாதல் இல்லை. அநுட்டானத்தில் கோயிலுக்குப் போகிறவர்களுடைய அகந்தூய்மையை நாம் நிதானிக்க முடியாது. கூடியவரை புறந்தூய்மையையே கவனித்தல் முடியும்.''

மங்கையர் மாநாட்டிற்குப் பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையாரும் இளைஞர் மாநாட்டிற்கு திரு. தி.கி. நாராயணசாமி நாயுடுவும் தலைமையேற்றார்கள்.

28வது மாநாடு : ஆண்டு - *1933;* இடம் - கரந்தை. தலைவர் திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார்.

29வது மாநாடு : ஆண்டு - *1934;* இடம் - திரு அதிகை. தலைவர் - திரு. வி.க.

''சென்ற ஆண்டு விழாக்களில் இதுமிகச் சிறந்ததொன்று; நாங்கள் கெடில நதியில் நீராடச் சென்றோம். பல பெரியோர்கள் குளித்துக் கொண்டிருந்தனர். திரு.வி.க. அவர்களுக்கு திரு. தெ.பொ.மீ. அவர்கள் முதுகு தேய்த்துக் கொண்டிருந்தார்கள். திரு. வி.க. அவர்கள் பக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை (எம்.எல்) அவர்களைப் பார்த்து, ''என்னாங்க சுப்பிரமணியம், கெடிலம் என்றால் ஏதாவது பொருளுண்டா' என்று கேட்டார்கள். திரு.கா.சு. பிள்ளையவர்கள் உடனே 'கெடிலம் என்பதை கேடு + இலம்' என்று பிரித்துக் கொண்டால் இந்த ஆற்றில் குளிக்கும் நமக்குக் கேடு இல்லை என்று பொருள் கொள்ளலாம் என்றார்கள்.

''இம்மாநாட்டில் பதினான்கு சாத்திர உரைநூல் வெளியிடப்பெற்றது. ஞானியார் சுவாமிகள் பேசத் தொடங்கியதும் கூட்டம் கட்டுக்கு அடங்கவில்லை. திருவதிகை சிறு ஊராயினும் திரளான மக்கள் மூன்று நாட்களும் வந்து கலந்து கொண்டனர்.

(திரு. க. கலியாணம் ''சமாஜ நினைவுகள்)

30ம் ஆண்டுவிழா : ஆண்டு - *1935;* இடம் - திருவண்ணாமலை; தலைவர் - சுவாமி விபுலானந்தர்.

இம்மாநாட்டினைப் பற்றி திரு.க. கலியாணம் *(சமாஜ நினைவுகள்)* இவ்வாறு எழுதுகிறார்.

''சமாசத்தின் முப்பதாவது ஆண்டு விழா 1935 டிசம்பர் கடைசியில் திருவண்ணாமலையில் நடந்தது. புராணிகர் திரு. புரிசை முருகேச முதலியார் அவர்கள் தம் சொந்த செலவிலேயே நடத்தினார்கள். சைவர் மாநாட்டிற்கு சுவாமி விபுலானந்தரும், சைவ இளைஞர் மாநாட்டிற்கு திரு. க. கலியாணமும் (அடியேன்) சைவ மங்கையர் மாநாட்டிற்கு பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் தலைமை வகித்தார்கள், மாநாடு தொடங்குவதற்கு முதல் நாள் மாலை

யிலேயே தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர். காங்கிரசு மகா சபையின் பொன் விழாவையும் சேர்த்துச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தவர் காங்கிரசு தலைவர் திரு அண்ணாமலைப் பிள்ளையவர்கள். நகர் முழுவதும் கார்த்திகை போல விளக்குகள் ஒளிவிட்டுத் திகழ்ந்தன. ஊர்வலம், குடை கொடி, யானை முதலியவற்றுடன் ஈசானிய மடத்தினின்றும் புறப்பட்டது. குதிரைகள் பூட்டிய முதல் கோச்சு வண்டியில் சுவாமி விபுலானந்தர், ஈசானிய மடத்துத் தலைவர் சுவாமிகள், திருவையாறு சிதம்பரசுவாமிகள், காவித் தண்டலம் வேதாசல முதலியார் (துவராடை யுடுத்த துறவியார்) ஆகியோர் வீற்றிருந்தனர். அடுத்த கோச்சு வண்டியில் திரு. வி. கலியாண சுந்தரனாரும் அடியேனும் அமர்ந்து சென்றோம். மூன்றாவது வண்டியில் பண்டிதை அசலாம்பிகை அம்மையாரும் பேராசிரியை ஈ.த.இரா சேசுவரி அம்மையாரும் வந்தனர். ஊர்வலம் கோயிலுக்கு முன் வந்து சேர்ந்தது. காங்கிரசு பொன் விழாக் கூட்டத்தில் திரு. வி.க. அவர்கள் பேசினார்கள். அத்துடன் கூட்டம் முடிந்தது.

29.12.1935 அன்று சமாச மாநாடு தொடங்கியது. காலையில் திருக்கோயில் வழிபாடு நிகழ்ந்தது. கோபுரத்திளையனார் திருமுன் அருணகிரியார் அருளிய திருப்புகழ் நூலை (அடக்க விலைச் சுத்திப்பதிப்பு) வெளியீட்டு தமிழ் வேள் திரு. த.வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் விரிவுரையாற்றினார்கள். மாலையில் சமாச மாநாடு கோயிலிலுள்ள சக்தி விலாச சபை மண்டபத்தில் தொடங்கியது. மண்டபம் முழுவதையும் அலங்கரித்த பெருமை திரு. முனிசாமி முதலியார் என்ற அன்பரைச் சார்ந்தது. மேடைக்குப் பக்கத்தில் பேச்சாளருக்கென்று ஒரு தனி வளைவு மேடை அமைக்கப் பெற்றிருந்தது. மேடை மீது ஒருபுறம், சுவாமி விபுலானந்தர் ஈசானிய மடத்துத் தலைவர் சுவாமிகள், திருவையாறு சிதம்பர சுவாமிகள், காவியுடை பூண்ட காவித்தண்டலம் வேதாசல முதலியார் ஆகிய துறவியர் அமர்ந்திருந்தனர். மறுபுறத்தில் திருவாளர்கள் திரு.வி.க., சச்சிதானந்தம் பிள்ளை, பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், சோமசுந்தர பாரதியார், வேங்கடசாமி நாட்டார், த.வே. உமாமகேசுவரம் பிள்ளை, அ. சோமசுந்தரம் செட்டியார், சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் முதலியோர் அமர்ந்திருந்தனர். தமிழ்நாட்டின் தவப் புதல்வர்கள் அனைவரும் ஒருங்கே அமைந்திருந்த இக்காட்சியை இனியொரு பிறவியிலும் அடியேன் காண்பேனோ என்ற எண்ணம் என்னை விட்டகல வில்லை.

இரண்டாம் நாள் காலையில் அடியேனுடைய தலைமையில் சைவ இளைஞர் மாநாடு நடந்தது. எங்களுக்காக ஒதுக்கப்பெற்றிருந்த நேரம் கடந்து விட்டது. சைவ மங்கையர் மாநாட்டுத் தலைவியரை மேள தாளத்துடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டனர். எனவே இளைஞர் மாநாட்டை ஆயிரங்கால் மண்டபத்துக்குச் சென்று நடத்தி முடித்தோம். அன்று பிற்பகல் மாநாட்டு நிகழ்ச்சியில் ஒரு முக்கியமான செய்தியைக் கூறாமல் இருக்கமுடியவில்லை. மாநாட்டில் ஒரு சொற்பொழிவு முடிந்து தலைவர் அடுத்த சொற்பொழிவாளரைப் பேச அழைக்க வேண்டிய நிலை தலைவர் விபுலானந்த அடிகளார் அவர்கள். 'சிவநேசச் செல்வர்களே! அடுத்துப் பேச வேண்டியவர்கள் வேலூர் திரு. கோபால் செட்டியார் அவர்கள் தொண்டையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிற படியால் அவர்

பேச்சை அச்சிட்டுக் கொண்டு வந்திருப்பதை நம் செல்வச் சிரஞ்சீவி கலியாணம் பிள்ளை வாசிப்பார்' என்று அறிவித்தார்கள். முன்னால் அமர்ந்திருந்த நான் அச்சத்துடன் எழுந்து மேடைக்குச் சென்றேன். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் அச்சிட்டிருந்த பேச்சை மிக்க நன்றாகப் படித்தேன். மேடையில் அமர்ந்திருந்த அப் பேச்சாளர் என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு கூட்டத்தினரைப் பார்த்து 'அடியேன் தொண்டை நானாக இருந்தாலும் இப்படிப் பேசியிருக்க மாட்டேன். இந்த இளைஞர் என தொண்டை நல்ல முறையில் செய்தார்' என்று கூறிப் பாராட்டினார்கள். அன்றிரவு நாங்கள் அனைவரும் தங்கி யிருந்த ஓயாமடத்தில் அவரும் அவர் மகளாரும் வந்து என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அம்மட்டோடு நிற்கவில்லை. அவர் ஊராகிய மேலூருக்குச் சென்ற பின் அவர் இயற்றிய Swedenberg and Saiva Siddhanta, Chidambara Rahasym unveiled என்ற ஆங்கில நூல்களும் வேறு சில பிரசுரங்களும் அனுப்பி வைத்தார். அவற்றைப் படித்துப் பயன்படுத்தி, பயபக்தியுடன் பாதுகாத்து வைத்திருக்கிறேன். திரு.து. கோபால் செட்டியாரவர்கள் அந்தக் காலத்திலேயே New Reformer என்ற திங்கள் வெளியீட்டின் ஆசிரியராக இருந்தார். அன்னாரின் நூற்றாண்டு விழா நடந்தது சமாச அன்பர்களுக்கு நினைவிருக்கும்.

மூன்றாம் நாள் மாநாட்டில் ஒரு சுவையான நிகழ்ச்சி. காவித்தண்டலம் திரு. வேதாசல முதலியார் அவர்கள் மனத்தின் மாண்பு' என்ற பொருள்பற்றி விரிவுரை தொடங்கினார்கள். பேசும் போது தத்தக்கா பித்தக்கா நாலுகால், தாண்டிக் குதித்தால் இரண்டுகால், முட்டி முறிந்தால் மூன்றுகால், முழுவதும் முடிந்தால் பத்தேகால்' என்று சொன்னதும் கூட்டத்தினர் சிரித்துக் கை கொட்டி மகிழ்ந்தனர். பேச்சாளர் கூட்டத்தினரைப் பார்த்து நான் பேசியதில் சிரித்துக் களிப்பதற்கு என்ன இருக்கிறது. அதன் பொருளைச் சொன்னால் நீங்கள் இப்படிச் சிரிக்க மாட்டீர்கள்' என்று சொன்னதும் அமைதி ஏற்பட்டது. அவர் விளக்கம் கொடுத்ததாவது : - தத்தக்கா பித்தக்கா நாலுகால் என்றால் குழந்தை இருகால்களை மண்டியிட்டு இரு கைகளையும் ஊன்றித் தவழ்ந்து வருவது நான்கு கால்களாகும். தாண்டிக்குதித்தால் இரண்டு கால் என்பது குழந்தை வளர்ந்து இளைஞனாக மிடுக்குடன் நடப்பது இரண்டு கால்களால், முட்டி முறிந்தால் மூன்றே கால் என்பது முற்ற முதிர்ந்தால் ஊன்று கோலுடன் சேர்த்து நடப்பது, முடிந்து போனால் பத்தேகால் என்பது ஒருவன் இறந்துவிட்டால் அவன் பிணத்தைத் தூக்கி கொண்டு போகிறவர்கள் நாலுபேருக்கு எட்டு கால்கள், பிணத்திற்கு இரண்டு கால்கள் ஆக பத்தே கால்கள்.' இவ்வாறு பேசி மனிதப் பிறவியின் அருமையையும் அதன் அநித்தியத்தையுமறிந்து நாம் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்றும் பேசி முடித்தார்கள்.

சுவாமி விபுலானந்தர் சொற்பொழிவாளர் நகைச்சுவை ததும்பப் பேசியதில் பல தத்துவங்கள் உள்ளன என்றும் பட்டினத்தாரின் உடற் கூற்று வண்ணத்தையும், ஆங்கில மகாகவி செகப்பிரியர் எழுதிய 'நாடகமே உலகம்' என்ற பகுதியையும் எடுத்துக் காட்டி பேச்சாளரைப் பாராட்டிப் பேசினார்கள். காவித கண்டலம் வேதாசல முதலியாரவர்கள் நைட்டிகப் பிரமசாரி; காவியுடை தரித்தவர்; சைவ புராணிகர்; பல ஆண்டுகள் சமாச ஆண்டு விழாக்களுக்கு வந்து கொண்டு இருந்தவர்; கொல்லாமை புலாலுண்ணாமை முதலியவை பற்றி தமிழ் நூல்கள் அனைத்திலுமுள்ள செய்யுட்களைத்

திரட்டி சிவகாருணியம் என்ற ஒரு நூலை வெளியிட்டிருந்தார்.

சமாச மாநாடு நடந்த மூன்று நாட்களிலும் அனைவரும் ஒயாமடம் என்ற பெரிய சத்திரத்தில் தங்கியிருந்தோம். உணவும் அங்கேதான். மூன்று நாட்களிலும் தலைசிறந்த பேச்சாளர்கள் உயர்ந்த பொருள்கள் பற்றிய விரிவுரைகளை நிகழ்த்தினார்கள். அவற்றின் விவரங்களையெல்லாம் எழுதினால் கட்டுரை விரியும். தம் சொந்த செலவில் சமாச மாநாட்டை நடத்திய புரிசை முதலியாரவர்கள் அனைவரையும் நான்காம் நாளும் இருக்கச் செய்து ஒரு சிறந்த விருந்து நடத்தினார்கள். அன்று மாலை எல்லோருமாக தவத்திரு இரமண அடிகளாரைச் சென்று வணங்கி விட்டு அப்படியே திருவண்ணாமலையை வலம் வந்து அன்று இரவு அவர்கள் அவர்கள் ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றோம். என்னை மதுராந்தகத் திலிருந்து சென்னைக்கு மாற்றிவிட்ட படியால் சென்னைக்குச் சென்று வருவாய்த்துறைத் தலைமையலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். மறுபடியும் வேதாளம் முருங்க மரமேறிய கதைதான். நான் வீடுபார்த்து, குடும்பத்தைச் சென்னைக்கு அழைத்து வரும் வரையில் கந்தசாமி கோயிலுக்கு அருகிலுள்ள என் நண்பர் ஒருவரின் இல்லத்தில் மாடியில் தங்கியிருந்தேன். பத்து நாட்கள் பின் ஒருநாள் ஒரு பையன் ஓடிவந்து என்னை ஒரு பெரியவர் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னான். யான் கீழே இறங்கிப் பேசுவதற்குள் கூனிக் குறுகியுள்ள அந்த முதியோரை ஒரு பெண்ணும் ஆணுமாகக் கைப்பற்றாக் மேலே என் அறைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அப்பெருமகனார் இருக்கம் திரு. ஆதிமுல முதலியார் அவர்கள். அவரை நான் வணங்கி வரவேற்றேன்.

31-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1936*; இடம் - காஞ்சிபுரம். தலைவர் - திரு. ந. சிவகுருநாதம்பிள்ளை.

32-ஆம் ஆண்டு விழா : ஆண்டு- *1937*; இடம் - வேலூர். தலைவர் - ஞானியார் சுவாமிகள். ஞானியார் சுவாமிகள் தலைமை உரையில் ஒரு பகுதி வருமாறு:

‘‘நாம் இங்கே சைவசித்தாந்தம் பேசுகிறோம்; கேட்கிறோம். நாம் என்றால் உடலா? கேட்கும் சக்தி அறிவிற்கிருந்தாலும் அது ஒரு கருவி கொண்டே கேட்க வேண்டும். சரீரமில்லையானால் நாம் கேட்கத் தகுந்தவர்கள் அல்ல. அறிவற்ற உடல் ஒன்றும் செய்யாது. அல்லது சரீரமில்லாத காலத்தில் உயிர் ஒன்றும் செய்ய இயலாது. அரசன் மந்திரியுடையவனானால், குடிகளுக்கு நன்மை செய்ய முடியும். மந்திரி முதலியோர் இல்லையேல் அரசன் என்செய வல்லான்! ‘‘அமைச்சர சேய்ப்பன்றஞ் சவத்தைத்தே’’ என்று கூறும் சிவஞான போதம். ஆராய்ச்சியினால் நன்று என்று புலப்படும் விஷயங்களைப் பற்றிப் பேசவும், கேட்கவும் ஆவல் கொள்ள வேண்டும். கண்ணினால் பார்ப்பதை விடக் கேட்பது மேலானது. கேட்டதை ஆராய்ந்தறிவது அதனினும் உயர்ந்தது. நமக்குள் இருக்கும் மனம் புத்தி இவைகள் சடவஸ்துக்கள். புத்தி கண்ணாடி போன்றது. அதற்குச் சுயமான செய்கை கிடையாது. புத்தி அறிவுடன் சேர்ந்த பொழுதே அறிவின் செயல் பிரதிபிம்பிக்கிறது. அறிவு சேர்ந்தால்தான் புத்தி தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது. அறிவில்லாமல் உறுப்புகள் தங்கள் வேலையைச் செய்து பார்த்தால் ஒன்றுமே குணப்படாது.

அன்பர்களே! பொருள்கள் மூன்று வகையன. அவை மானிடர்களாகிய

யாம், நாம் பார்க்கக்கூடிய பொருள்கள், ஆராய்ச்சியால் அடையக்கூடிய பொருள்கள் என்பன. கண்ணால் பார்க்கக்கூடிய பொருள்கள் அறியுந் தன்மையுடையன. உயிரிடத்திலிருக்கும் உயர்ந்த பொருளை ஆராய்வதே அருமையாகும். உலகத்தில் காணப்படுபவைகளை ஐம்புலன்களால் இழுத்து அறிவு முதலியவைகளைக் கொண்டு ஆராய வேண்டும். ''மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன்'' என்ற திருவாசக அடியைக் கவனிக்க வேண்டும். அடியேன் உங்களைப் பார்க்கவில்லை. உங்கள் உடலைப் பார்க்கிறேன். அழிவதையே அடியேன் நோக்குகின்றேன். உயிரையே பார்க்க முடியாதென்றால், உயிர்க்குயிரான கடவுளைக் காணுதல எளிதோ! எக்காலத்தும் யாரும் பார்க்க முடியாதென்றால் அது சூனியமாகும்.

எக்காலத்தும் யாவரும் பார்க்கக் கூடிய நிலையான பொருள் கடவுள் என்பதை ஞானசம்பந்தர் காட்டினார் அவர் பார்ப்பார்; மற்றவர்க்கும் காட்டுவார். தன்னையறிந்தால் அல்லது உலகத்தையறிந்தால் மாத்திரம் ஞானமாகாது. மறைந்து கிடக்கும் பரவஸ்துவைக் காணுவதே ஞானம். கடவுளை நாம் காணலாம்; தொடலாம்; ஆராயலாம். ஆராய்வதற்குச் சாதனங்கள் என்ன? ஒருவன் தலையில் நெருப்புப் பிடித்துக் கொண்டால், எந்தத் தண்ணீர் என்றும் பாராமல் உடனே ஊற்றிக் கொள்வது போல், ஆராய்ச்சி செய்யுங் கால், தான் கொண்ட எண்ணம் ஈடேறும் வர அதைத் தேடியடைய வேண்டும். ஆண்டவனை அலைந்து திரிந்து, தேடித்தேடி, ஏங்கி ஏங்கி அழுதாற் பெறலாம். திருவுந்தியாரில்,

> ''உள்ள முருகி னுடனாவ ரல்லது
> தெள்ள வரியரென் றுந்தீபற
> சிற்பரச் செல்வரென் றுந்தீபற''

என்று கூறியிருப்பது காண்க. ஆனந்த வெள்ளம் உள்ளேயிருக்கிறது. 'வெள்ளத்தின்; நடுவேயிருந்தும் நீர் பருகாது தாகத்தால் நாவானது உலர்ந்து போனாற்போல உன் அருட் பெருக்கைப் பெற்றும் துயரத்தினின்றும் நீங்குதற்கு ஆற்றலில்லாத என்னைக் கைவிட்டிடாதே' என்ற பொருள்பட மணிவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் ஒரு செய்யுளை அருளியிருக்கிறார். ஆதலின் அன்பர்களே! அறிவுமயமான ஆனந்த வடிவமான ஒன்றை அறிய வேண்டும். அதுவே சிவம். அன்பு ததும்பியிருப்பதற்கு இரங்குவன் அன்பு வடிவான ஆண்டவன். ''சிவனென யானுந் தேறினன் காண்க'' என்பர் மணிவாசனார். ''சிவனென்று நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்'' என்பர் அப்பரடிகளும். உயிர்க்கு எல்லாம் அறியுந்தன்மை வரும். ஆனால் எல்லாம் செய்யும் வல்லமை வரவே வராது. சிவத்தின் சம்பந்தமே சைவம். அனாதியாக எல்லாம் அறிந்த, எல்லாம் செயவல்ல, என்றும் உள்ள வஸ்து சிவபெருமான். என்றைக்கும் சைவ சித்தாந்தம் உண்டு.

சிலரால் வெளிப்படுத்திய பொழுது தான் ஆரம்பித்தது என்று கொள்ள வேண்டாம். சிவஞான போதத்தில் 'சிவமென்னும் அந்ததர' என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தம் என்பது பேதாந்தம். அதாவது அறிவு நூல் முடிபு என்பது பொருள். தரம் என்றால் மேலானது; அதாவது அதைவிட மேலில்லை. 'அந்ததர' என்றால் வேதாந்தத்தின் முடிவாக உள்ள சித்தாந்தியே. உபநிஷத் என்றால் பரம்பொருளின் சமீபத்தில் கொண்டு போய் வைப்பது என்பது பொருள். அறிவு நூல் முடிவாக உள்ளதுவே சித்தாந்தம். சித்தியாரில் ''சிவாகமங்கள் சித்தாந்தமாகும்''. ஆகமம் என்றால் ஆப்தர்களிடமிருந்து வரும் நல்ல

மொழி. ஆகமம் என்று மாத்திரம் சொல்லாமல் சிவ ஆகமம் என்று கூறியது அனாதியான ஒருவனுடைய வாயிலிருந்து வருவது என்பதைக் குறிக்கவே, வேதாந்தத் தெளிவே சித்தாந்தம் என்பது. வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் ஒன்றுதான் வேறல்ல. சிவப்பிரகாசத்தில் ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

சிவநேசச் செல்வர்களே! சிவம் என்பதைப் பற்றி முதல் வழி, சார்பு நூல்களான சிவஞான போதம், சித்தியார், சிவப்பிரகாசம் என்ற நூல்களைக் கொண்டு சொன்னேன்.

திரு.வி.க. 'சந்தேகம்' என்ற தலைப்பில் இரண்டுமணி நேரம் நம் சமயத்தில் உள்ள சந்தேகங்களையெல்லாம் விளக்கி உரையாற்றினார்கள்.

33-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1938;* இடம் -கோயமுத்தூர். தலைவர் - திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை.

34-ஆம் ஆண்டு விழா : ஆண்டு *1939;* இடம் - குன்றக்குடி. தலைவர் திரு. சி.கே.சுப்பிரமணிய முதலியார். தலைவர் தம் உரையில் சமய நிலை, சமய விசாரணையின் அவசியம், கன்மப்பயன் பற்றிய சில உதாரணங்கள், இன்பமும் துன்பமும், சமயப் பாதுகாப்பு, நமது கடமைகளுட் சில, சமய வாழ்க்கை, என்ன செய்ய வேண்டும்? என மிக விரிவாக சைவத்திற்கு அரண் செய்யவேண்டிய பயனுள்ள செய்திகளைப் பற்றி உரையாற்றினார்.

35-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1940;* இடம் - மயிலம். தலைவர் - திரு. சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார்.

36-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1941;* இடம் - திருச்சிராப்பள்ளி. தலைவர் - ஞானியார் சுவாமிகள்.

ஞானியார் சுவாமிகள் தமது தலைமையுரையில் பல உபநிடதங்களிலிருந்து திரட்டப்பட்டு பல மேற்கோள்களோடு பல நுட்பமான கருத்துக்களடங்கிய செய்திகளை விவரித்தார்கள். இதுவே அவரது கடைசி சமாஜத் தலைமையுரையாக அமைந்தது. 1905-இல் சமாஜத்தை திருப்பாதிரிப்புலியூரில் தன் மடாலயத்தில் தோற்றுவித்தார். *1924*-இல் சமாஜம் நலிந்த நிலையில் மீண்டும் உயிரூட்டல்; *1928*-இல் நின்று போயிருந்த சித்தாந்தம் மீண்டும் உயிர்த்தெழத் துணை புரிந்து பொருள் உதவியும் கொடுத்தல்; 1929-இல் திருப்பாதிரிப்புலியூரில் ஆறுநாட்கள் மிகச் சிறப்பாகச் சைவர் மாநாடு நடத்துதல்; சமாஜத்தின் ஆண்டு விழாக்களில் ஏழுமுறை தலைமை தாங்கி (இதுபோல யாரும் இதற்கு முன்னும் இருந்ததில்லை; பின்னும் இருந்ததில்லை. தலைமையேற்று நடத்துதல் சமாஜத்தோடு இத்துணை தொடர்புடைய அருளாளரின் நிறைவுரையும் சமாஜத் தலைமையுரையாக அமைந்தது. 1.2.1942 அன்று சுவாமிகள் பரிபூரணம் அடைந்தார்கள்.

37-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1942;* இடம் - சீர்காழி. தலைவர் - பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார்.

38-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1943;* இடம் - மதுரை. தலைவர் - திரு. வி.க.

திரு. வி.க. அவர்களின் மதுரை மாநாட்டுத் தலைமையுரை ''ஆலமும் அமுதமும்'' ஆகும். இவ்வுரையும், வெள்ளிவிழாவின் பொழுது உரையாற்றிய ''நினைப்பவர் மனம்'' என்ற தலைமையுரையும் நூல்வடிவம் பெற்றன. இரண்டு தலைமையுரைகளும் கருத்துக் கருவூலங்கள் ஆகும்.

39-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1944;* இடம் - பள்ளத்தூர். தலைவர் - திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்.

40-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - 1945; இடம் - சிவகாசி. தலைவர் - திரு. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார்.

41-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - 1946; இடம் - திருசெங்கோடு. தலைவர் ராவ்சாகிப் திரு. எஸ். வையாபுரி பிள்ளை.

தலைவர் திரு. வையாபுரித பிள்ளை சமாஜத்தோடு தொடர்புடைய ஆன்றோர்களை முதலில் நினைவு கூர்ந்து, பின் சைவ சமயம் பல பல நூற்றாண்டுகளாகக் காலநெறியோடு ஒத்தியங்கிச் சென்றதனை விளக்கினார்.

அடுத்து இப்போது இருக்கும் சமயநிலையை விரிவாக விளக்கினார்.

''முதலாவதாக நமது இளைஞர்களுடைய மனப்போக்கு முற்றும் மாறி விட்டது. சமயம் என்ற சொல் கூட அவர்களுக்கு அருவருப்பைத் தருவதாக உள்ளது. தெய்வபக்தியும் விசுவாசமும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது.''

''இரண்டாவதாக, தற்காலத்தில் நாம் பயின்று வரும் கல்வியும் அதன் நோக்கமும் சமய உணர்ச்சிக்கு அநுகூலமாக அமையவில்லை. கல்வி முறையிலே சமயத்திற்குரிய கல்வி விஷயங்கள் இருத்தற்கிடமில்லை.''

''மூன்றாவது, இப்பொதுக் கல்வியின் பயனாகவும், தற்காலத்தில் மேல் நாட்டில் உள்ள கல்வியறிவின் பயனாகவும் ஏற்பட்டுள்ள விஞ்ஞான உணர்ச்சி சமயத்திற்குப் பிரதிகூலமாயுள்ளது. எதனையும் ஆராய்ந்து துணிய வேண்டும் என்ற மனப்பான்மை விஞ்ஞான உணர்ச்சியினால் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. சமய விஷயத்தைக் கூட இம்மனப்பான்மை பாதிக்கிறது. முன்னோர் கருத்துக்களையும் நமது பூர்வீக சாஸ்திரங்களையும் கருத்துக்களையும் ஆராய்ச்சி முறையிவ் பார்த்து அவற்றின் வன்மை மென்மைகளைச் சீர் தூக்குதல் வேண்டும் என்று ஒருவன் கருதினால், அவனுக்குச் சமயப்பற்று உண்டாவதற்கு இடம் இராதல்லவா?''

''நான்காவதாக, தற்காலத்து வாழ்க்கைப் போராட்டத்தைக் கூறுதல் வேண்டும். முற்காலங்களில் இருந்தது போல, எளிய திருப்திகரமான வாழ்க்கை இல்லாமற் போய் விட்டது. எவ்வகையான முயற்சியிலும் போட்டி ஏற்பட்டு விட்டது. அந்தப் போட்டிகளில் சமயத்தைப் பற்றிய நினைவே உண்டாகாமல் போய் விடுகிறது.''

''ஐந்தாவதாகக் கூறவேண்டுவது சமுதாய நோக்கமாம். அரசியல் நோக்கமும் இதில் அடங்கும். சமயம், ஜாதி முதலியவற்றால் பிரிவுபட்டுக் கிடக்கின்ற நமது தேசத்து மக்களை ஒன்று படுத்துவதே அரசியலார் நோக்கமும், சமுதாய நோக்கமுமாக இருந்து வருகிறது. கலப்பு மணவினைகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. இவ்வகையான மணவினைகள் கால அளவில் மிகுதியாகுமே தவிர, சிறிதும் குறைவுபடமாட்டா. இதனாலும் நமது சைவசமய உணர்ச்சியும் பற்றும் ஒருவாறு குறைந்து கொண்டு வருகின்றன. முற்கால அரசர்கள் சமயத்திற்கு ஆதரவு தந்தது போல தற்காலத்தில் அவ்வகையான அரசாங்க ஆதரவு சமயங்களுக்கு ஏற்பட வழி யில்லை. அரசியலார் சமயங்களோடு தங்களைச் சார்புபடுத்திக் கொள்வது தற்கால நிலைக்கும் பொருந்துவதன்று. ஆகவே, அரசியலார் நோக்கமும் சமய உணர்ச்சிக்குப் பயன்படுவதாக இல்லை.''

''ஆறாவதாக, மற்றைச் சமயங்களின் செல்வாக்கும் நமது சமய உணர்ச்சிக்கு இடையூறு உள்ளது.

உதாரணமாக, கிறிஸ்தவ சமயம், மகமதிய சமயம் பிற சமயங்களில் உள்ளவர்களைத் தம்து மதங்களைத் தழுவுமாறு துண்டுகின்றன. இதனால் சமயவுணர்ச்சி குன்றுவதோடு சமுதாயக் கட்டுப்பாடும் அழிந்து விடுகிறது. அன்றியும் இவை போன்ற சமயங்களின் கொள்கைகளை நம் சமயத்தவர்கள் அடிக்கடி கேட்டு வருவதனால், சமயத்தின் மீது ஓர் உதாசீன புத்தி ஏற்பட்டு விடுகிறது. இது காரணமாக நமது சமயத்தைப் பற்றிய உணர்ச்சி குறைந்து வருகிறதென்பதும் உண்மையே.''

''ஏழாவதாக, நமது சமுதாயத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு என்று ஏற்பட்ட மடங்கள் வேண்டும் என்ற அளவு அதனைக் கண்காணியாது இருப்பதும் சமயப் பற்றுக் குறைவதற்கு ஒரு காரணமாகும்.''

முடிவில், நமது சமயக் கொள்கைகள் தினந்தோறும் வளர்ந்து வருகிற அறிவு வளர்ச்சிக்கு ஒத்திணங்கிச் செல்லவில்லை.

''மேற்குறித்த இடையூறுகளோடு நமது சமயப் பற்று போராட வேண்டுவதாக உள்ளது. பலவகையிலும் நாம் முயன்று முன்னேறினாலன்றி நமது சமயம் வெற்றியுறுவதற்கு வழியில்லை.''

''இனிச் செய்யவேண்டிய பணிகளை இரண்டு கூறாக வகுக்கலாம். இப்பொழுதுள்ள நமது சித்தாந்த சாஸ்திரங்களை நன்கு உணர்ந்து கொள்ளுவதற்கு வேண்டும் பணிகள் ஒரு வகை. நமது முடிவான கொள்கைகள் மேலைநாட்டுத் தத்துவ விசாரணைகளோடு ஒத்து நிற்கக் கூடிய அளவில் விஞ்ஞான சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கும் பணி மற்றொரு வகை.''

முதல் வகை : நமது சமய சாஸ்திர நூல்கள் இன்னும் வரையறுத்த பாடங்களுடனும் துணைக் கருவிகளுடனும் வெளிவரவில்லை. அவையின்ன என்பது கூட இன்னும் உறுதிப்படவில்லை. பதினான்கு சாஸ்திரங்கள் சைவ சித்தாந்தத்துக்கு உரியன. ''உந்தி களிறு'' வெண்பாவில் பதினான்கு சாத்திரங்களுள் ஒன்றாக உண்மைநெறி விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. உண்மை நெறிவிளக்கம் உமாபதி சிவம் இயற்றியதன்று என்பதும், பதினான்கு சாஸ்திரங்களுள் அது அடங்கியதன்று என்பதும் தென்னாட்டில் உள்ள சாத்திரச் சுவடிகளில் விளங்கும். இங்குள்ள சுவடிகளில் இந்நூலுக்குப் பதிலாக, துகளறு போதம் காணப்படுகின்றது. துகளறு போதமே பதினான்கு சாஸ்திரங்களுள் ஒன்றாகும்.

''இவ்வாறே திருந்திய பாடங்களை அமைத்துச் சாஸ்திர நூல்களைப் பதிப்பிடுதலும் அவசியமான ஒரு பணியாகும். ஏட்டுப் பிரதிகளின் உதவி கொண்டும், உரைகளின் உதவி கொண்டும் பிற நூல்களின் உதவி கொண்டும், பாடங்கள் திருந்த அமைதல் வேண்டும்.''

''இனி, அடுத்து நாம் செய்ய வேண்டிய பணி, நமது சமய நூல்கள் முதலியவற்றிற்குத் திருந்திய ஆராய்ச்சியுரைகள் எழுதலாம். எளிய நடையில் இயன்ற உரையென்றால், நம்மவர்களுக்கு ஒத்துக் கொள்வதில்லை. சித்தாந்த சாஸ்திரங்களில் மிகச் சிறந்தன சிவஞான போதம், சித்தியார் (சுபக்கம்), சிவப்பிரகாசம் என்பனவாம். இவை முறையே முதல் நூல், வழி நூல், சார்பு நூல் எனப்படுபவை. சாஸ்திரக் கருத்துக்களை நாம் உணர்ந்து கொள்வதில் இம்மூன்றும் ஒருங்கொத்துப் பயன்படுவன. ஒன்றன் கருத்துத் தெளிவாக இல்லாதவிடத்து

பிறிதொன்றன் உதவியால் நாம் தெளிந்து கொள்ளலாம். இந்த முறையில் நாம் கற்பதுவே சரியெனத் தோன்றுகிறது. ஒப்புநோக்குப் பகுதிகளை மேற்கோள் காட்டிக் கருத்துக்களை விளக்கியெழுதிய உரைகள் நமது சமய சாஸ்திரங்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும்.

‘‘சிவஞானபோதத்திற்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றிய திராவிட மாபாடியம் பெரும்புகழ் பெற்று விளங்குகிறது. சிவஞான சுவாமிகள் தாமே எழுதிய உரைப்பிரதி திருவாவடுதுறையாதீனத்தில் உள்ளது. இதனை நோக்கிச் செப்பஞ்செய்த ஒரு பதிப்பு வெளிவருதல் இன்றியமையததாம்’’.

‘‘இங்ஙனமே சித்தியாருக்குத் தருமையாதீனத்து வெள்ளியம்பலத் தம்பிரான் இயற்றிய ஞானாபரண விளக்கம் என்னும் பேருரையும் பெருந்தகுதி வாய்ந்தது. இன்றுகாறும் இவ்வுரை அச்சில் வெளிவராதது சைவவுலகிற்கு ஒரு பெருங் குறையாகும். இக்குறை விரைவில் நீங்கும்படி இறைவன் அருள்புரிக.’’

‘‘இங்ஙனமே உரையில்லாத தேவாரம் திருவாசகம் முதலிய அருள் நூல்களுக்கும் உரை வகுப்பது அவசியமாகும். இவ்வுரைகள், நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திற்குப் பெரிய வாச்சான்பிள்ளை முதலியோர் இயற்றியன போன்று, அவ்வந்நூற் காலத்துத் தமிழ் மரபை விளக்கிக் கருத்தின் அழகைப் புலப்படுத்தி, பக்தியூட்ட வல்லனவாய் அமைதல் வேண்டும்.’’

‘‘சைவ நூல்களுக்கு உரையிடுவதேயன்றி சைவம் பற்றிய வரலாற்று நூல்கள் எழுதுவதும் ஓர் அரிய பணியாகும். சைவ சமய வரலாறு பற்றித் தமிழில் இதுவரை யாதொரு நூலும் தோன்றியதில்லை. ‘‘திரு. எஸ். அநவரத விநாயகம் பிள்ளை எழுதிய ‘சைவசித்தாந்த வரலாறு’, திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எழுதிய சைவித்தாந்த உண்மை வரலாறு’ ஆகிய இருநூல்களையும் சைவ சித்தாந்த நூல் வரலாறு எனக் குறிக்கலாம். சைவ சித்தாந்தக் கருத்து வரலாறு (History of Siddhantic Thought) என்று இதனைக் குறிப்பிடுதல் தகும். ஆனால் நான் கருதும் வரலாறு வேறொரு வகையைச் சார்ந்தது. சித்தாந்த சமயம் தோன்றிய சூழ்நிலை யாது? எவ்வெம் மதக் கத்துக்கள் இதில் ஒப்புக் கொள்ளப் பட்டன? எந்த எந்த நூல்கள் ஆதாரமாகக் கொள்ளப்பட்டன? முந்து நூல்களில் காணும் சித்தாந்தக் கருத்துக்கள் யாவை? புதுக் கருத்துக்கள் எப்போது தோன்றின? இக்கருத்துகளனைத்தும் ஒரு சமயத்திற்குரிய தொகுப்பான (System) எதன்பொருட்டு, எப்பொழுது தோன்றின? இக்கருத்துக்கள் நாளடைவில் எவ்வகை மாறுபாடுகளை அடைந்தன? சித்தாந்தத்திற்கும் விசிஷ்டாத்வைத சைவ சமயத்திற்கும் உரிய சம்பந்தம் யாது? ஸ்ரீ சங்கரரது அத்வைதத்திற்கும் இதற்கும் தொடர்பு யாதேனும் உண்டா? வைதீக சித்தாந்தங்களுள் இதன் பதவி யாது? என்பன போன்ற விஷயங்களை முழுவதும் ஆராய்ந்து எழுதப்படும் வரலாற்று நூல்தான் நான் மனத்துட் கொண்டது. இவ்வரலாற்று நூல் இந்திய சமய சாஸ்திரங்கள் அனைத்திலும் தக்க பயிற்சி பெற்று, மேனாட்டுத் தத்துவ சாஸ்திரங்களிலும் நல்ல அறிவுடையவர்களால் எழுதப் படுதல் வேண்டும். இத்தகைய நூல்களுக்குச் சைவ சமய ஆராய்ச்சியும் சைவசித்தாந்த ஆராய்ச்சியும் அவசியமாம். அது ஒரு தனித்துறையாகும்.’’

‘‘இனி நமது சித்தாந்தக் கொள்கைகள் மேன்மேலுஞ் சிறந்த

மேம்படுதற்குரிய முறைகளைத் தெரிந்து நாம் முயலவேண்டுவது தான் இரண்டாவது வகைப்பணியாக நான் முன்பு குறிப்பிட்டது. தத்துவ விசாரணையில் மேலை நாட்டு முறைகளுக்கும் நமது நாட்டு முறைகளுக்குமுள்ள சில வேறுபாடுகள் இங்கே கவனித்தற்குரியன. முதலாவது மேலைநாடுகளில் தத்துவ விசாரணையும் சமயமும் வேறு வேறானவை; இரண்டிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. ஆகவே, சமயம் பற்றிய கதைகள், தெய்வம் பற்றிய கதைகள், அடியார்கள் சரித்திரங்கள் முதலியன மேனாட்டுத் தத்துவ விசாரணையைப் பாதிக்கமாட்டா. நமது நாட்டில் தத்துவ விசாரணையும் சமயமும் நெருங்கிய தொடர்பு உடையன. ஒன்றன்மீது ஒன்று கட்டப் பெற்றுள்ளதென்று கூறலாம்.

தத்துவம் பற்றிய வாத பேதங்களுக்கும் தெய்வம் பற்றிய கொள்கைகளுக்கும் மதம் சமயம் என்ற சொற்கள் தாமே வழங்குவது இதனைப் புலப்படுத்தும். ஆகவே முற்கூறிய கதைகள் சரித்திரங்கள் முதலியன நம் நாட்டுத் தத்துவ விசாரணையைப் பாதிக்கின்றன. தத்துவ விசாரணையின் முடிவு சமயவுணர்ச்சி மிக்கு முத்திக்குரிய நெறிகளை அடைதல் என்பதுதான் நம் நாட்டினர் கொள்கை.''

''இரண்டாவது வேறுபாடு தத்துவக் கொள்கைகளைப் பற்றியது. மேலை நாடுகளில் முற்பட விசாரணை செய்த தத்துவ ஞானிகளின் கொள்கைகளைப் பின் வந்த தத்துவ ஞானிகள் ஒப்புக் கொள்வதில்லை. உதாரணமாக ப்ளேட்டோ கூறியதை அரிஸ்டாட்டில் ஒப்புக் கொண்டதில்லை. ஸ்பிநோஜாவின் கொள்கைகளைக் கான்ட் ஒப்புக் கொண்டதில்லை. நமது நாட்டில் அங்ஙனமன்று. சமயத்திற்கு முரண்பாடில்லையேல், பூர்வீகர்களுடைய தத்துவக் கொள்கைகளைப் பின்வந்தோர் தழுவிக் கொண்டனர், உதாரணமாக, சாங்கிய முடிவுகளை நமது சித்தாந்தமும் ஒப்புக் கொண்டு, அவற்றின் மீது தம் முடிபுகளை ஏற்றிவிட்டதைக் கூறலாம். இதனால் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் புதிதாக விசாரணை செய்யும் வழக்கமேயில்லாமல் போய்விட்டது. எத்தனையோ அடிப்படைக் கொள்கைகள் தீர்க்க விசாரணை இன்றியே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.''

''மூன்றாவது வேறுபாடு தத்துவ விசாரணையின் ஆதாரம் பற்றியது. மேலைநாடுகளில் விஞ்ஞானத் துறைகள் பலவற்றிலுமுள்ள முடிவுகளை மேற்கொண்டு அவற்றின் மீது இவ்விசாரணையை நிகழ்த்தி வருகின்றனர். இதனால் தத்துவ சாஸ்திரத்தை (The queen of Sciences) விஞ்ஞான அரசி என்று கூறுவர். நமது நாட்டில் விஞ்ஞான முடிபுகளுக்கும், தத்துவ முடிபுகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இதனால் விளைந்த விளைவு யாதெனின், நம் நாட்டுத் தத்துவ விசாரணைக்கு முன்னேற்றம் இல்லை. வெகு காலத்திற்கு முன்னரே அது முற்றுப் புள்ளி பெற்று விட்டது. சித்தாந்தம் அதாவது முடிந்த முடிபு என நமது சமயம் கொள்ளப்படலாயிற்று. மேலை நாடுகளில் தத்துவ விசாரணை இன்றும் வளர்ந்து கொண்டே வரும் அறிவுத் துறைகளுள் ஒன்றாக உள்ளது.

''நமது சித்தாந்தக் கொள்கைகள் மேம்பட வேண்டுமாயின் மேலை நாட்டுத் தத்துவ விசாரணை நெறியை ஓரளவு பின்பற்ற வேண்டுவது அவசியமென்றே தோன்றுகிறது. நம் கொள்கைகளுள் அடிப்படையானதாய் பெருஞ்சிறப்புடைய வாயுள்ளனவற்றை நாம் கைவிடுதல் கூடாது. உதாரணமாக,

பதி பசுபாசம் என்ற முப்பொருண்மையை நாம் கைக்கொண்டே தீர வேண்டும். ஆனால் இவற்றின் உண்மையையும், இயல்பையும், ஞானத்தை உணரும் முறையையும் பற்றி மேனாட்டார் கையாண்டு வரும் விசாரணை நெறியை மேற்கொள்ளுதல் பயன்படுவதாகும். சிவஞான போத நூலைப் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன்இயல் என நான்கு இயல்களாகப் பகுப்பர். இவற்றுள் முதல் மூன்று இயல்களில் கூறுவன மேலை நாட்டு நெறிகளினால் ஆராயத் தக்கனவே. அவ்வாறு ஆராயும் போது அந்நாட்டினர் பெரிதும் பின்பற்றிவரும் உளநூற் கருத்துக்களையும் தருக்க நூற் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்தல் வேண்டும்.''

''நாம் உளக் கூறுபாடுகளைச் சுரக்கமாக அமைத்து விட்டோம். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற நான்கு பிரிவுகளை மாத்திரம் கொண்டிருக்கிறோம். மேல் நாட்டினர் இவற்றை விரிவாக ஆராய்ந்திருக்கிறார்கள். குழந்தைகளின் மனஇயல்பு, நேர்மையில் (abnormal) மன இயல்பு, சமூக மன இயல்பு (Social) முதலியவற்றைத் தனித்தனியாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். மனிதனது மன இயல்பை உணருதற்கு இம்முறையைக் காட்டிலும் சிறந்த முறை இல்லை. இங்ஙனமே தருக்க நெறியிலும் மேல்நாட்டினரைப் பின்பற்றுதல் அவசியமாகும்.''

''காட்சிப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், உரைப்பிரமாணம் என்ற மூன்றனுள், மூன்றாவதனை நீக்கி, முதலிரண்டு பிரமாணங்களின் மூலமாகவே பொருள் நிச்சயம் செய்தல் வேண்டும்.''

''மேல்நாட்டுத் தத்துவ சாஸ்திரங்களுக்குரியவாய்க் கூறப்படும் துறைகள் ஐந்து. அவை தருக்கம், சௌந்தர்ய நூல், ஒழுக்க நூல், சமுதாய நூல் அல்லது அரசியல் நூல், அபௌதிக நூல் என்பன. அவை நான்கும் உத்தம இலட்சியங்களை உலகத்தில் அமைந்திருக்கும் நிலைகளோடு பொருத்தியுணர முயல்வனவாம். அபௌதிக நூல் (Metaphysics) இங்ஙனமன்று. இந்நூல் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட முடிவான பொருள்களை அறிய முயல்வது.

அசித்து, சித்து, இவற்றின் இயல்பு முதலியனவும், இவை யிரண்டிற்குமுரிய தொடர்பும், பிறவும் இவ்வகை நூலுக்குரிய விஷயங்கள். ஆங்கிலத்தில் உள்ள அசித்துண்மை நூல் (Ontology), உளநூல் (Psychology), காட்சியறிவு நூல் (Epistemology), முதலியன இதனுள் அடங்கும். நமது சித்தாந்தக் கருத்துக்களையும் இயன்ற வரை இங்ஙனப் பகுத்து, மேனாட்டுத் தத்துவ விசாரணை நெறியைப் பின்பற்றி விளக்குதல் வேண்டும்.''

42-ஆம் ஆண்டு ஆண்டு விழா : ஆண்டு - *1947*; இடம் - கோயமுத்தூர்; தலைவர் - சாத்தூர். திரு. கந்தசாமி முதலியார்.

43-ஆம் ஆண்டு ஆண்டு விழா : ஆண்டு *1948*; இடம் - யாழ்ப்பாணம்; தலைவர் - திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்.

44-ஆம் ஆண்டு ஆண்டு விழா : ஆண்டு *1950*; இடம் - கொழும்பு; தலைவர் - திரு. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

திரு. தெ.பொ.மீ.யின் தலைமையுரை; ''சித்தர் நெறி, சித்தர் வைத்தியம் முதலிய போலச் சித்தாந்தமும் தமிழ் மரபேயாம். வடமொழி நெறியும் தமிழ்மொழி நெறியும் ஒன்றுபடும் சமரசக் காட்சியே சித்தர் காட்சியாம்.

முடிந்த முடிபு என்ற பொருளில் அன்றிச் சித்தர்கள் கண்ட முடிபு என்ற பொருளில் தமிழில் சித்தாந்தம் என்ற சொல் வழங்குவது கண்கூடு. ஆதலின் சித்தாந்த நெறியைப் பொது நெறி எனக் கொள்ளாது பல்வேறு சமயங்களோடு ஒருங்கு வைத்து எண்ணுவது தவறாம்.''

''அறநெறியைப் பொதுமை வழியே விளக்கிய பெருமை தமிழ்த் திருவள்ளுவருக்கு உண்டு. அவ்வாறே மெய்கண்டார் கண்ட சிவஞானபோதமும் பொதுமை நெறியைக் கடைப்பிடித்து உண்மையை உரைத்துப் போகின்றது. சாதி மத விகற்பப் பேச்சில் மெய்கண்டார் ஈடுபடவில்லை. தீக்ஷை முதலிய சடங்குகளைப் பற்றியும் வெளிப்படையாகப் பேசவில்லை. அதற்கு உரையாக எழுந்த நூல்களே இவற்றினை எல்லாம் விரித்துரைக்கின்றன. இவற்றைப் பற்றிப் பேசாது திருவள்ளுவர் போல அடிப்படையான உண்மையைப் பேசியது மெய்கண்டார் பெருமையன்றோ? இந்த மரபினைச் சிறிது உற்று நோக்கல் வேண்டும்.''

''ஐந்திணை ஒழுக்கத்தின் அன்பினை இறையனார் அகப்பொருட்கு உரைகண்ட நக்கீரனார் நன்கு விளக்கியுள்ளார். ''அதுவே, தானே, அவளே, தமியர் காணக் - காமப் புணர்ச்சி இருவயினொத்தல்'' என்ற சூத்திர உரையில் அன்பு நெறியின் பெருமை எல்லாம் காணலாம். 'அவனே தானே ஆகிய அந்நெறி' என்று சிவஞானபோதம் கூறுவதனோடு அந்தச் சூத்திரத்தினை ஒத்திட்டுப் பார்த்தல் வேண்டும். அங்கும் அத்துவித நெறியே வற்புறுத்தப் பெற்றுள்ளது. 'நான்' என்ற முனைப்பற்று, புனல் வழியோடும் மிதவை போல பால்வழி என்னும் இறைவன் வழியோடுவதே அன்பு என்பர் நக்கீரர். எல்லாவற்றையும் இயக்கும் ஆற்றலை எதிர்த்து நிற்காமல் முனைப்பற்றுத் திருவருள் வழி நிற்றலையே மெய்கண்டார் இறைபணி நிற்றல் என்பர். "This Kingdom come" என்ற வேண்டுகோளும் இதுவே ஆம்.''

''இந்த அன்பினையே காதலன் காதலி வரலாறுகளாகப் புனைந்துரைத்துச் சங்க நூல்கள் பரக்கப் பேசின. இந்த அன்பு நெறியின் வளர்ச்சி 'தான்', 'பிறர்', 'தன் குடும்பம்', 'தன் நாடு பிறர் நாடு' எனப் பேசும் இல்லற வளர்ச்சியாகவும், இந்த வேற்றுமைக்கு இடம் இன்றி 'யான் எனது' என்ற செருக்கறுத்த துறவற வளர்ச்சியுமாகத் திருவள்ளுவர் பேசிப் போயினார்.

இந்த அன்பின் தூயநிலையைத் திருமூலர் சிவம் என்றே வற்புறுத்தினார். காரைக் காலம்மையார் இந்த அன்பிற்கடிமையாகி எங்குமாம் ஆண்டவன் திருவிளையாட்டினைக் கண்டு பாடி அறிவுலக உண்மைகளைத் தத்துவ சாத்திரிகள் இன்றும் வியக்கின்ற வகையில் வெளியிட்டருளினார். சமணப் பெரியோர் அருளறத்தினையே பேரறமாகப் போற்றினர். அவர்கள் கொள்கையிற் பழகிய திருநாவுக்கரையர் சிவநெறி நுழைந்ததன் பயனாக அருள்நெறிக்கே சிவநெறி என்ற பெயர் வரலாயிற்று. இன்று தமிழ்நாட்டில் 'சைவம்' என்றால் அருள்நெறியாம் புலால் உண்ணாமையே நினைவுக்கு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவர்களிலும், மகமதியர்களிலும் வைணவர்களிலும் பலர் இவ்வாறு சைவர் எனப் புகழப்படுவது வியப்பன்றோ? தயாமூலத் தத்துவன் என அப்பர் தம் கடவுளைப் புகழ்வது பின் வந்தோருக்குப் பெருந்துணையாயிற்று.

பௌத்தர்கள் அறவாழி அந்தணனைப் போற்றி அறநிலை பிறழ்ந்தோர்க்கும் மனம் பரிந்துருகிச் சமுதாயத்

தொண்டில் ஈடுபட்டு வந்ததனை 'இன்பச் செவ்வி மன்பதை எய்த அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கை' என மணிமேகலை போற்றுவது அறிவோம். தனி நோன்பும் கூடி வழிபடும் கோயில் நோன்பும் இவர்கள் வழியே தமிழ்நாட்டில் வளர்ந்தன. கூட்டுறவு வழிபாடு கோயிலாக ஓங்கியது. கலை வாழ்வில் ஈடுபட்ட தமிழர்கள் கோயில்களை அழகு நிலையங்கள் ஆக்கினர். சொக்கன், அழகன், முருகன், அழகிய மணவாளன், திரைலோக்கிய சுந்தரம் முதலான பெயர்கள் தமிழர்களது அழகு வழிபாட்டை உள்ளங்கை நெல்லிக்கனி என விளக்கி வைக்கின்றன. அறமும் அன்பும், அருளும் மன்னிக்கும் பொறுமையும், இரக்கமும், அழகும், அறிவும் இவ்வாறு சைவப் பேராறாக பாய்ந்தோடின.''

''இந்தப் பேராற்றில் கலந்தோடும் ஓடைகளை எல்லாம் காண்பது நல்லது. சித்தாந்தம் பொது நெறியாதலின் பொது நூலாம் திருக்குறளைப் பின்பற்றுவது; எனவே அறத்தினையே அடிப்படையாகக் கொள்வது. மெய்யுணர்தலும் அறமாக அன்றோ திருவள்ளுவர் பொது நெறி வகுத்தார். சமயக் கொள்கை அறத்திற்கு அப்பாற்பட்டது என்ற கருத்திற்கே இடம் இல்லாதபடி சமய நிலையையே பேரறமாகப் பேசிய வள்ளுவர் மாண்பினை என் என்பது! சுந்தரர் திருவள்ளுவர் சொற்றொடர்களைப் பொன்னே போலப் போற்றி ஆண்டு சைவத்தினை வளர்க்கிறார்.

திருக்களிற்றுப்படியாரும் திருக்குறள் வழியே சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகலையும், பற்றற்றான் பற்றினைப் பற்றிப் பற்றறுப்பதனையும் சித்தாந்தக் கருத்துக்களாகப் பாடிச் செல்கின்றன. அருகரும் பௌத்தரும் வளர்த்த தமிழில் வளர்ந்த சைவம் அறநிலை யாகவே ஓங்கி வளர்வது வியப்பன்று.''

''சித்தாந்தம் மூடநம்பிக்கையும் அன்று; பழமைக்கு அடிமையன்று. அறிவாராய்ச்சியின் சிறந்த நிலையே சித்தாந்தமாம்.

தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா, இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீ தாகா''

என சிவப்பிரகாசப் பாடல் இன்று அறிவாராய்ச்சியில் முன்னணியில் நிற்போர் கூறுவது அன்றோ!

''இந்த அறிவாராய்ச்சி ஏட்டுச் சுரைக்காய் ஆராய்ச்சி அன்று 'சித்தாந்தம்' பன்னிரு திருமுறைகளை அடிப்படையாகக் கொண்டது. அனுபூதிப் பெருமக்களின் அநுபவத்தினை அடிப்படையாகக் கொண்டது. வெற்றறிவின் ஆரவாரமன்று.''

''சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியாக வளர்ந்தது, சேக்கிழாரது திருத்தொண்டர் புராணமாக மலர்ந்துள்ளதனை நாம் மறக்க முடியாது. இந்த அறுபான் மும்மை நாயன்மார்களிடையே ஏற்றத் தாழ்வு கற்பிப்பார் சித்தாந்த நுட்பத்தினை அறியாதாரேயாம். இவர்களை எல்லாம் மெய்ஞ்ஞானிகள் எனத் திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் எடுத்துக்காட்டுவதனை நாம் மறக்கலாகாது. திருக்கூட்டச் சிறப்பில் எந்த நிலையில் நின்றாலும் எந்தச் சாதியிற் பிறந்தாலும் சிவனைமறவா வாழ்வு வாழ்வார் எத்தகைய வாழ்வு வாழ்ந்தாலும் சீவன் முத்தரே என்பது சுந்தரரது உறுதிப்பாடு; சேக்கிழாரது முடிந்த முடிவு. பெரிய புராணம் பாடும் அடியார்கள் அனைவரும் தமிழ் நாட்டினரேயாம்.

ஆதலின், தமிழ் நாட்டுக் கடவுள் மரபினைச் சேக்கிழார் புராணம்

விளக்குகின்றதெனல் வேண்டும். புறக் கோலத்தினையும் சாதி மத வேறுபாடுகளினையும் பொருளற்றன என ஒழித்து அகநிலை வாழ் வினையே சைவத்தின் உயிர்நிலை எனக் காட்டுவதே பெரியபுராண உண்மையாம்.''

''ஆனால், இந்த அகநிலைக் கடவுள் வாழ்வு கசிந்த தொண்டாக வெளிவருவதனை அந்த அடியார்கள் வரலாறெல்லாம் விளக்குவது காண்க. உழவாரப் படைகொண்டு தமிழ்நாடு முழுவதும் தொண்டர்கள் போய் வரும் தெருக்களைப் படைத்துத் தந்த திருநாவுக்கரையரை இன்றும் உழவாரப் படையோடன்றோ வழிபட்டு வருகின்றோம்.

அவருடைய அடியாரான அப்பூதி அடிகள் அவரிடம் பெற்ற பேருண்மை என்ன? தண்ணீர்ப் பந்தல் குளமும் காவும் உணவிடலும் அன்றோ? இதுவே சிவஞானபோதம் கூறும் இறைபணி நிற்றலாம் சித்தியார் கூறும் முனைப்பற்ற கசிந்த தொண்டாம்.''

''அப்பர் கைலை காணச் சென்றார். ஆனால் இறைவன் உண்மைக் கைலைக் காட்சியைத் திருவையாற்றில் காட்டுவதாகக் கூறினார். அப்பர் கண்ட காட்சி என்ன? உலகப்பொருள்களிடையே எல்லாம் அம்மையப்பனைக் காணலே கைலைக் காட்சி யாம். பஞ்ச பூதங்கள் சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டிடத்தும் சிவபெருமானது விளக்கத்தினைக் காண்பதே சைவம் என மணிமேலை கூறுகின்றது. இயற்கை அழகில் ஈடுபடுவதற்கும் புறவுலகைச் சுகாதாரமுறைப்படி தூய்மையாக வைத்து வாழ்வதற்கும் காந்தியார் காட்டிய தரித்திர நாராயண வழிபாட்டிற்கும் இதனினும் சிறந்த நெறி எது? இந்த உண்மையே அப்பர் கண்ட சிறந்த உண்மை எனப் பாராட்டும் தாயுமானவர் எடுத்துக் காட்டும் தேவாரம் தான் யாது?

''இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி''
என்பதன்றோ!

''எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டார்.
விட்டாருலகம் என்றுந் தீபற
வீடே வீடாகும் என்றுந் தீபற.''

என்பது திருவுந்தியார். ஆதலின் இது சைவசித்தாந்தக் கருத்துமாம். இந்த ஒற்றுமைக் காட்சியைக் கீதை சமதர்சனம் என்று புகழும். சாதி பற்றி இழிவு கூறச் சைவத்தில் இடமில்லை. நந்தனும், பெற்றான் சாம்பானும் வீடுபெற்ற பெருமையைப் பேசுவதன்றோ சைவம்? காந்தியார் தீண்டாமை ஒழியப் பாடுபட்டதெல்லாம் உண்மைச் சைவத்தினை வற்புறுத்தியதே ஆம்.

''பெண்ணுக்கு இழிவுபேசும் புன்கண்மையும் இங்கு இல்லை

''கோயிலை மறந்து சித்தாந்தம் வாழ முடியாது. ஒரு வகையால் அஷ்ட மூர்த்தி வழிபாட்டின் முதிர்ச்சியன்றோ கோயில் வழிபாடும், அடியார் வழிபாடும்? ஆனால் கலைப்பொருளே கடவுள் என்ற கண்மூடிநிலை இங்கு இல்லை. கலைப் பொருள்கள் அடையாளங்கள். கலை விளக்கும் பொருள் கலைக்கும் அப்பாற்பட்டது. மாற்ற மனங் கடந்த மறைப் பொருள். லிங்கம் என்பதற்குப் பொருள் அடையாளம் என்பதே அன்றோ?''

''நால்வர் பெருமக்கள் தங்கள் அனுபூதியை, உலகம் உய்யக் கோயில்களில் பாட்டாகப் பாடினர். கலைவாழ்வின் நுட்பம் மண்ணைப் பொன்னாக்கும் சித்தே ஆம்; சீவனைச் சிவனாக்கும் சித்தேயாம்; நல்லக் கடவுளர்க்கும் சித்தேயாம்.''

''சித்தர்கள் சமரசத்தை வற்புறுத்துவோர் எனத் தாயுமானவர் கூறியதனை முன்னரே கண்டோம். அந்தச் சமசரத்தினைச் சன்மார்க்கம் எனப் பண்டையோர் வழங்கி வந்தனர். பழங்காலத்தில் தமிழில் வழங்கிய தத்துவ சாத்திரங்களிலிருந்து செய்யுட்களைத் திரட்டிச் சிவப்பிரகாசர் பெருந்திரட்டு என்ற சிறந்த தொகை நூலைத் திரட்டி வைத்துள்ளார். அங்கு இவ்வாறு பல கொள்கையினிடத்தும் ஒற்றுமை காண்டலையே சன்மார்க்கம் எனக் கூறுதல் காண்க.

இந்தச் சன்மார்க்கத்திற்குச் சிவ ஞானம் என்றும் பெயருண்டு என அந்நூல் விளக்குகிறது. ஆதலின், சிவஞானபோதம் என்பது இந்தச் சமரச சன்மார்க்கத்தினை வெளியிடுவது எனலாம் அன்றோ?'' நூல் என்றால் அனைத்தையும் சமரசப்படுத்துவதே என்கிறது சித்தியார். பலவகைக் கொள்கையிடையேயும் ஒற்றுமை காண்பதே சமரசம் என்பார் உமாபதி சிவம்''.

''உலகில் காணப்படும் கேடெல்லாம் தீர வேண்டுமானால் சமரச மனப்பான்மை வளர வேண்டும். கொள்கையும் எதிர்க்கொள்கையும் முடிவில் சமரசக் கொள்கையாய் முற்றி இவ்வாறே கொள்கைகள் வளர்ந்து வருவதனைச் சென்ற நூற்றாண்டில் மேனாட்டு ஞானியாரான ஹெகல் விளக்கிக் கூறி சமரசத் தருக்க முறையை (Dialectics) இன்றைய பொதுஉடைமைக் கொள்கையினர் வற்புறுத்துகின்றனர்.''

''முதலில் சிறுவனுக்குப் பொய் சொல்லவே வராது. பின்னர்ப் பொய் கூறும் திறமை வளர்கிறது. பொய்யா நிலை என்ற ஒன்றிலிருந்து அதன் எதிர்த்தட்டாகிய பொய்க்கும் நிலைக்கு வருகிறான். இங்குப் பொய் சொல்லுந்தோறும் தன்னெஞ்சே தன்னைச் சுடுதலால் பொய் சொல்லும் ஆற்றலிருந்தும் அதனை விடடொழித்துப் 'பொய்யாமை பொய்' என்ற இரண்டினையும் கடந்து மெய்ம்மை நிலையே அடைகிறான். பொய் சொல்லும் ஆற்றல் எழுந்தால் அன்றி அதனை விட்டொழிக்கும் நிலை எழுவதற்கு இடம் இல்லை.

பொய்ம்மையின் வழியேதான் மெய்ம்மையை எட்ட வேண்டியிருக்கின்றது. பொய் சொல்லாத முன்னைய நிலையும் பொய் சொல்லும் திறமை விளங்கும் பின்னை நிலையும் ஒன்றாய் இயைய, மெய்ம்மை நிலை அவற்றின் சமரசமாக எழுகிறது. இவ்வாறு எதிர்த்தட்டான இரண்டும் வளர்ந்து, மேலானதொரு சமரச நிலையாய் உயர்வது காண்கிறோம். இதுவே அவர் கூறும் சமரசத் தருக்கம்.''

''தமிழறிவுப் பேராறு தங்கு தடையின்றி ஓடிக் கொண்டே இரக்கிறது. சிவஞானபோதத்தோடு சித்தாந்தம் முடிந்து விடவில்லை. தாயுமானவர் இந்தச் சமரச சித்தாந்தத்தினை தமிழர் உலகம் உள்ள அளவும் மறவாதபடி நம் இரத்தத்தில் எல்லாம் ஓடவிட்டவர் போகர், நந்தி, வாமதேவர், வள்ளுவர் என்பவர்கள் பெயரால் எழுந்த பல சித்தர் நூல்கள். அரேபிய நாட்டுக் கொள்கைகளையும், விஞ்ஞானத்தையும் இந்த நாட்டுக் கொள்கைகளையும் சமரசப் படுத்தியவை. சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோர் கன்னட நாட்டு வீரசைவக் கொள்கையினையும், தமிழ்நாட்டுக் கொள்கைகளையும் ஒற்றுமைக் கண் கொண்டு விரித்தவர்கள். கண்ணுடைய வள்ளலார், சாந்தலிங்கர், இவர்கள் நூல்களுக்கு உரைகண்ட சிதம்பர சுவாமிகள் முதலானோர் எல்லாக் கொள்கைகளுக்கும் இடையே தோன்றும் அவிரோத அழகினைப் பாட்டிலும்

உரையிலும் கூட்டி வளர்த் தவர்கள். தத்துவராயரும் இத்தகைய ஒற்றுமையை வளர்த்தவரே.

கிறிஸ்தவத் தோடு நம் நாட்டுக் கொள்கைகளை ஒற்றுமைப்படுத்திப் பாடும் சர்வ சமய கீர்த்தனைகளும் இந்த வழியே செல்வனவாம். முடிவாகச் சமரச சன்மார்க்கம் என்றே பொதுமை நெறியைப் பரப்பிய இராமலிங்கர் உலகிற்கே ஒரு வழிகாட்டி எனலாம். இவற்றினை எல்லாம் சித்தாந்தம் அல்ல என ஒழித்துவிடுவது அழகாகும்?''

''உள்ளத்துறுதி, அறிவின் தெளிவு; நெஞ்சின் ஈரம் இவற்றோடு எழும் சமரச மனப்பான்மையே உண்மையைக் காண உதவுவதாம்.''

''எதற்கும் அஞ்சாமல் எந்தப் பேற்றினையும் பொருட்படுத்தாமல், உண்மையை எந்த நிலையிலும் அறிந்துணர முன் வரும் வீரம் வேண்டும்; அறியாமல் அல்லல்படும் உலகினைக் கண்டு அந்த அறியாமை இருளில் இருந்து விடுதலை பெறத் துடிதுடிக்க வேண்டும். அதற்கேற்றபடி மனம் பண்பட்டிருத்தல் வேண்டும். சாதன சதுட்டயம் என முன்னோர் கூறியது.

இத்தகைய அறிவு வீரமே ஆம். அத்தகைய அறிவு வீரம் ஒன்றே இன்று உலகிடையே சமரச அமைதியைப் பரப்பி ஒற்றுமையை நிலை நாட்டக் கூடும். அத்தகைய பொதுமை நிலை தமிழன் இரத்தத்தில் ஊறியுள்ளது. ஆகையால் சித்தாந்த நெறியைப் பரப்பும் வகையால் நாமும் உய்ந்து உலகிற்கு வழிகாட்டுதல் நம் இரத்தத்தோடு பிறந்த கடமையாகும்.

45-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1950*; இடம் - இராமநாதபுரம். தலைவர் - திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை.

46-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1951*; இடம் - குன்றக்குடி. தலைவர் - திரு.ஒ.பி. இராமசாமி ரெட்டியார்.

47-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - *1953*; இடம் - ஈரோடு. தலைவர் - தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தலைவர் உரை : ''ஒரு சில ஆண்டுகளாகத் தமிழினத்தின் வாழ்வை இருட் சூழல் கவ்வியுள்ளது. கிப்ஸன் சொன்னபடி இவ்வுலகு பற்றிய அறிவு மிக மேம்பட்டுள்ளது. மற்றொரு மீளா உலகைப் பற்றிய அறிவு குறைந்து வருகிறது. சிறப்பாக வாழ்க்கையோடியைந்த சமயப்பண்பு அருகி வந்து விட்டது. வாழ்க்கை வேறு; சமயம் வேறு; சடங்கு வேறு என்ற புல்லிய உணர்ச்சிக்கு ஆட்பட்டு விட்டனர். இதனால் இதயம் மடிந்தது. எலும்புடம்பு இருக்கிறது. நெஞ்சம் தோய்ந்த சமய வாழ்வு குறைந்து வரலாயிற்று.

தமிழினத்தின் தனிமைப்பண்பு சமரச நோக்கு. இடையில் இந்த நிலை மாறியது. சமய வாழ்வில் சாதி முதலிய புல்லிய உணர்ச்சிகள் தோன்றி வளர்ந்தன. அகவுணர்வைப் போற்றிக் காத்துக் கொள்வதற்காகக் கையாளப் பெற்ற சமயக் சடங்குகள் சடங்குகளாகவே காட்சியளித்தன. நெஞ்சந் தோய்ந்த சமய வாழ்வு இல்லாமற் போய்விட்டது. புறம் வளர்ந்தது; அகம் தேய்ந்தது. அதனால் தமிழகம் மிகத் தாழ்ந்துவிட்டது. தாழ்ந்தமைக்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள். தமிழ்நாட்டில் பிறந்தார் அனைவரும் தமிழர்கள். பாதிக்கு மேற்பட்ட மக்கள் சைவத் திருநெறி நின்று ஒழுகுகின்ற பேறு பெற்றவர்கள். ஏனைய மக்களில் பெரும் பகுதியினர் வைணவக் கொள்கையினர். ஒரு சிலர் பிற சமய மக்களும் உண்டு.

இங்ஙனம் வாழ்ந்த நூற்றுக் கணக்கான சைவக்கொள்கையினர் பிற மதம் புகுந்து கொண்டேயிருந்தனர். ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இருந்தும் நூற்றுக்கணக்கான மடாலயங்களிருந்தும் இவை நமக்கு மூன்றரை கோடி ரூபாய் வருமானம் இரந்தும் பிறமதம் புகுகின்ற சகோதரர்களைத் தடுக்கவில்லை. தடுக்க நினைக்கவும் இல்லை. இதனால் இவற்றிற்கு விளைந்த கேடு எண்ணும் தரத்ததா? பிறமதத்தினர் தம் மதப் பிரசாரத்திற்காக சைவத்திருநெறியின் கொள்கைகளைச் சிறப்பாக, உருவ வழிபாட்டுக் கொள்கையினை எள்ளி நகைத்துப் பேசி வந்தனர். ஏனென்று கேட்பார் இல்லை.

இதனையொட்டி நம்மவரினும் பலர் சமய வாழ்வினையும், வழிபாட்டினையும் இழித்து எள்ளிப் பேசத் தலைப்பட்டனர். இவ்வியக்கம் சாதி ஒழிப்பியக்கமாகத் தோன்றிச் சமய ஒழிப்பியக்கமாக மாறிவிட்டது. மூலை முடுக்குகளில் எல்லாம் நாத்திகம் பரப்பப் பெற்றது. பெரிய புராணமும், திருவாசகமும் எரிக்கு இரையாக்கப் படவேண்டும் என்று பேசப்பெற்றது.

தமிழ்நாட்டின் ஒரு சில ஆலயங்களில் சில ஆண்டுகளுக்கு முன்பு கருத்து வேற்றுமையின காரணமாகத் தகாத செயல்களையும் செய்யத் தலைப்பட்டனர்; செய்தும் விட்டனர். எனினும் கவலைப்படுவோர் யாருமில்லாத கதியற்ற நிலை சைவத்துக்கு இருந்து கொண்டிருந்தது. இந்த நிலை இன்னும் மாறவில்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றும் பிற சமயத்தினரின் சமயப் பரப்பு வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. நாத்திகர்களும் பெருகி உருவங்களை உடைப்பதும் திருமுறைகளைத் தீயில் இடுவதும் எங்கள் இலட்சியம் என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றனர். நாடாளும் அரசோ மதச் சார்பற்ற அரசு என்ற பேரில் இருக்கிறது. ஆதலால் இவை தம்மை எதிர்த்து நிற்பதில் அது நேரடியாகத் தலையிட முடியாது.

இந்த நிலை சமயப் பற்றுள்ள ஒவ்வொருவருக்கும் சமயச் சான்றோர்களுக்கும், சமயத் தலைவர்களுக்கும் ஒரு சோதனை. இது கடைசி நேரம். இனியும் உறங்கினால் கடமையினின்றும் தவறியவர்கள் ஆகி விடுவோம். இடம் பொருள் ஏவல் இருந்தும் இழக்க முடியாத கொள்கையினை இழந்து விட்டோம் என்ற பழிச்சொல்லுக்கு உரியவர்கள் ஆகி விடுவோம். அன்புடைய பெருமக்களே! இதனைச் சிந்தனையில் பதித்துக் கொண்டு செயலில் இறங்குவோமாக' நமக்குத் தெரிந்த ஒரு சில ஆக்க வேலை முறைகளையும் குறிப்பிட ஆசைப்படுகின்றோம்.

1. ஒவ்வொருவர் வாழ்விலும் பூரண பக்தி உணர்ச்சியை வளர்க்க வேண்டும். வீடுகளில், வீதிகளில், மன்றங்களில், ஆலயங்களில் எங்கும் தெய்வத் திருமுறைத்தமிழ் முழக்கத்தை எழுப்ப வேண்டும். நாள் தவறினும் நாழிகை தவறினும் தான் தவறாத முறையில் திருமுறைகளை ஓதுகின்ற பழக்கத்தினை மேற்கொள்ள வேண்டும். ஊர் தோறும் கூட்டு வழிபாட்டு இயக்கங்கள், பொதுப்பிரார்த்தனைகள் முதலியவற்றைத் தோற்றி வளர்க்க வேண்டும்.

2. சமய வாழ்வு வாழ்கின்ற பெருமக்களிடத்தும், சமய நிலையங்களிடத்தும் சாதி மனப்பான்மையை வளர விடக் கூடாது. உண்மைச் சமயத்திற்குச் சாதி உடன்பட்டதல்ல. புறம்பானது என்று தெளிவாக அறிவிக்க வேண்டும்.

3. தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழில் அர்ச்சனை

செய்கின்ற பழக்கத்தைக் கையாள முன் வரவேண்டும்.

4. சமயச் சான்றோர்களும், சமயத் தொண்டர்களும் வீடுகள் தோறும் நுழைந்து பரிவாகப் பேசி, வீட்டில் நாள் தவறாது வழிபாடு அல்லது பிரார்த்தனையைக் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து செய்யும்படித் தூண்ட வேண்டும்.

5. சேரிகள் தோறும் நுழைந்து பரிவோடு அவர்களை அணுகி அவர்களது துன்பம் துடைத்து அவர்களது உணர்ச்சியிலும் வாழ்விலும் சமயத்தைக் கலக்க வேண்டும்.

6. சிறந்த சமயச் சொற்பொழிவாளர்களைத் தயாராக்க வேண்டும். அவர்களின் சொல்லாற்றலைப் பெருக்க வேண்டும். மூலைமுடுக்குகளில் எல்லாம் நின்று சமய வாழ்வின் நல்லியல்புகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மாறுபட்டவர்களின் மாறான பேச்சுக்களையும் உண்மையை எடுத்துக்காட்டுவதின் மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

7. சமயத் தலைவர்கள் அனைவரும் இந்த இறுதியான கட்டத்தில் ஒன்றுபட வேண்டும். ஒவ்வொருவர் தனிவாழ்விலும் சமயத் தொண்டு நல்ல இடம் பெற வேண்டும்.

48-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - 1953; இடம் - சென்னை. தலைவர் - வட்டுக்கோட்டை நாகலிங்கம்பிள்ளை.

49-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - 1954; இடம் - விருது நகர். தலைவர் சர். கந்தையா வைத்தியநாதன்.

50-ஆம் ஆண்டு விழா : ஆண்டு - 1955; இடம் - சிதம்பரம். தலைவர் - திரு. சு. நடேசப்பிள்ளை.

51-ஆம் ஆண்டு விழா : ஆண்டுவிழா திருப்பெண்ணாகடத்தில் 1956-இல் நடைபெற்றது. சைவர் இளைஞர் மாநாட்டிற்கு திரு. ந. ரா. முருகவேள் தலைமையேற்றார். திரு. ந. ரா முருகவேளின் உரை காலத்துக்கேற்றவாறு இளைஞர்களுக்கு என்னென்ன சிக்கல்கள், குழப்பங்கள் வருமோ அதற்கு ஏற்றவாறு முழுமையாகப் பதில் அளிப்பதாக அமைந்துள்ளது.

சீர்திருத்தக்காரர்களும் சைவத்தை ஏற்கலாம். ''தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா! இன்று தோன்றியன எனும் எவையும் தீமையாகா'' என்ற சைவச் சான்றோர் ஒரு சீர்திருத்தக்காரரே அல்லரோ? சமயாசாரியர்கள் தம்மீது பல குற்றங்களை ஏற்றுக்கொண்டு பாடியிருத்தல், அவ்வாற்றால் உலக மக்களைச் சீர்திருத்துதற்கேயாம். உலகில் அவ்வப்போது தோன்றிய சமயத்தலைவர் ஒவ்வொருவரும் ஒரு சீர்திருத்தக்காரரேயாவர். 1929-இல் திருப்பாதிரிப்புலியூரில் நிகழ்ந்த மாபெருஞ் சைவர் 'மாநாட்டுத் தீர்மானங்களைக் கண்டால் சீர்திருத்த நோக்கம் எவருக்கும் தனியுடைமையன்று என்பது புரியவரும்.''

''அரசியல் துறையில் ஈடுபடும் நண்பர்களில் அரசியல் முன்னேற்றம் தடைப்படாது. இராசராசசன், இராசேந்திரன் போன்ற தலைசிறந்த அரசர்கள் சமய உணர்வு மிக்கிருந்தனர் அல்லவா? நம் கண்முன்னரே காந்தியடிகளும், திரு.வி.க. அவர்களும் சமய உணர்வுடையவர்களாக இருந்து அரசியலில் அருஞ்செயல்கள் நிகழ்த்தவில்லையா?''

''சைவம் உலகியலுக்கும் முரண்பட்டதில்லை. 'அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ' என்பபோதரும் திருவிசைப்பா. இம்மையின்ப நுகர்ச்சிக்குச் சமயங்கள் தடையல்ல என்று உணர்த்துவதாகும். உலக நிலையாமை

யினை உணர்ந்த ஒருவனே, உலகியல் இன்பங்களை நெறியறிந்து நுகரவல்லனாவான்.''

''மக்களிடையே வேற்றுமைகட்கும் பூசல்கட்கும் காரணம் மதங்கள் அல்ல. அவற்றை நன்குணர்ந்து கொண்டு கடைப்பிடியாத மக்களேயாவர். சமய உண்மைகளை நன்கு உணர்ந்து தெளிந்த சான்றோர்களும், அவைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத எளிய நல்ல பொதுமக்களும் ஒரு பொழுதும் மதப்பூசல்களை விளைப்பதில்லை. இடைநிலை மக்களே அரசியல், பொருளியல், இனவியல், காரணங்களை ஒட்டி மதத்தின் பேரால் பூசல்களை விளைவித்து வந்துள்ளனர்.

ஒரு சிலர் 'எம்மதமும் சம்மதம்' எனக் கூறிக் கொண்டு ஒன்றன்பாலும் ஈடுபாடின்றிக் காலம் கழிக்கின்றனர். வேறு சிலர் சமரசம் என்னும் பெயரால் எல்லாவற்றையும் கூட்டிக் கலந்து குழப்பிப் பெரியதோர் ஏதம் விளைக்கின்றனர். எல்லாச் சமயங்களையும் விருப்பு வெறுப்பின்றி அதனதன் நோக்க நிலையினின்று பொதுவாக ஆராய்ந்து அறிந்து தேர்ந்து உண்மை கண்டு வப்பதும், அவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தமக்கெனச் சிறப்பு முறையிற் கொண்டு மனமார ஈடு பட்டுப் பின்பற்றி ஒழுகி வருவதுமே உண்மைச் சமரச நெறியாகும். இப்பொதுமை நெறிச் சமய நல்லுணர்விற்கு இணையற்ற எடுத்துக் காட்டாக இளங் கோவடிகளை நாம் பின்பற்றி ஒழுகி மதப்பூசல்களைப் போக்கி உலகநலன் குறித்து உழைத்தல் வேண்டும்.

52-ஆம் ஆண்டு விழா : மயிலாப்பூரில் 1957-ல் திரு. ம. பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. திருமுறைகளில் மயிலாப்பூர், மயிலாப்பூரில் சைவம், சைவ சித்தாந்தத்தின் அடிப்படை, சித்தாந்த சாத்திரங்களின் நுட்பம் தெரியாமல் உரையாற்றுவதால் நிகழும் தீமை, திருக்கோயில் வழிபாட்டில் நிகழும் தவறுகள், கோயில் வழிபாட்டில் ஜாதி, குலம் வேறுபாடு இன்மை, நால்வர் பெருமக்கள் நிகழ்த்திய அற்புதங்களின் உண்மை என மிக விரிவாக திரு. ம.பா. உரை யாற்றினார்.

53-ஆம் மாநாடு : ஆண்டு - *1958;* இடம் - மயிலம். தலைவர் : திரு. க. வச்சிரவேலுமுதலியார்.

54-ஆம் மாநாடு : ஆண்டு - *1959;* இடம் - வாலாஜாபாத், வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. சைவ சித்தாந்தம், வேதத்தில் சைவம், புதைபொருளில் சைவம், சங்க இலக்கியங்களில் சைவம், இயற்கை அமைப்பில் சைவம், வழக்காற்றில் சைவம், சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை, சமயத்தால் வரும் நன்மைகள், சைவ சமய வளர்ச்சி, சமய ஆசிரியர்கள் காட்டிய வழி ஆகியன பற்றி உரையாற்றினார்கள். இயற்கை அமைப்பில் சைவம், வழக்காற்றில் சைவம் ஆகிய பகுதிகள் புதுவனவாகவும், செறிவுடனும் அமைந்துள்ளன. ''இயற்கை அமைப்பில் சைவம்'' இறைவனால் படைக்கப் பெற்ற இயற்கை அமைப்பும் சிவ வழிபாட்டினையே வற்புறுத்துகின்றது. வான மண்டலம் சிவ சொரூப மாகக் கவிந்திருக்கின்றது. இலிங்கத்தின் மீது நாகாபரணம் சாத்தியுள்ளது போல் நாகலிங்கப்பூ அமைந்துள்ளது. அமரநாத்தில் பனிக்கட்டி இயற்கையாகவே சிவலிங்கமாகத் தோன்றுகிறது. சிவத்தலங்களுக்குள் முதன்மை பெற்றிலங்கும் திருக்கயிலை மலை இலிங்க சொரூபமாக விளங்குவதோடு தென்னாட்டுக் கோயில் அமைப்பு முறை முதலியனவும் அம்மலையில் காணப்படுகின்றன.

சிவபெருமானுக்கு உகந்ததும், அடையாள மலராக உள்ளதுமான கொன்றை மலர் பிரணவ சொரூபத்துடனும், ஐந்து இதழ்களுடனும் விளங்குகிறது. இது பிரணவத்தோடு உச்சரிக்கின்ற ஐந்தெழுத்தை நினைவூட்டுகிறது. இறைவனுக்குச் சூட்டப்படும் பெரும்பான்மையான மலர்கள் ஐந்து இதழ்கள் உடையனவாகவே விளங்குகின்றன. நமது கையிலும் பெரும்பகுதி ஐந்து விரல்களே உள்ளன என்பதையும் நோக்குக. இதனைத் திருஞான சம்பந்தர் ''அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே'' என்று அருளியுள்ளார். ஐந்து விரல்களுள் கட்டைவிரல் கடவுளைக் குறிப்பது. தனித்திருப்பதனாலும், இதன் துணை இன்றி ஏனைய விரல்களால் சிறந்த செயல் செய்ய இயலாமையாலும்; இது கடவுளின் அடையாளம் என்பதை உணரலாம். சுட்டுவிரல் உயிரைக் குறிப்பது.

இஃது ஆளைக்காட்டுவதற்கும் பிற பொருளைக் காட்டுவதற்கும் பயன்படுத்தப்படுவதனால் உயிரின் பிரதிநிதியாக உள்ளது என்பதை உணரலாம். நடுவிரல் ஆணவத்தின் அடையாளமாக இலங்குவது. இயல்பாகவே உயிரைக் கடவுளுடன் சேர வொட்டாமல் தன் வயப்படுத்தி இருக்கும் நிலையைக் கையின் அமைப்பிலேயே காணலாம். மோதிர விரல் என்று குறிக்கப்படும் விரல் கர்மமலத்தின் பிரதிநிதியாக உள்ளது. சடங்குகளைச் செய்யும் பொழுது இவ்விரலில் பவித்திரம் அணிந்து செய்வதே இதனை அறிவிக்கும். சுண்டு விரல் மாயையின் அடையாளமாக விளங்குவது. திருமணம் ஆகும் காலத்தில் மணப்பெண் சுண்டு விரலைப் பற்றுவதால் இதனை உணரலாம். இதுபோன்ற இன்னும் பல இயற்கை அமைப்பினாலும் சிவநெறி வழிபாட்டின் உண்மை துலங்குவது காண்க.

வழக்காற்றில் சைவம் : வேலை செய்யாமல், செய்வோரையும் குறுக்கே நின்று தடை செய்வோரைச் 'சக்தி இருந்தால் செய். இல்லையானால் சிவனே என்றிரு'' என்று கூறும் வழக்கம் இன்றும் இருக்கிறது.

பணிவும் பண்பும் இன்றித் திரிபவனை ஆணவம் பிடித்துத் திரிகிறான் என்றும், பிணி முதலியவற்றால் துன்புறும் ஒருவனைப் பற்றிப் பேசும்பொழுது அவன் கர்மத்தை அவன் அநுபவிக்கிறான் என்றும், ஒரு பொருளில் ஈடுபட்டு மயங்குபவனைக் குறிப்பிடும் பொழுது அவன் அம்மாயையில் மூழ்கிவிட்டான் என்றும் கூறுவதை இன்றும் செவிகைப்பக் கேட்கலாம்.

பிற உயிர்களிடத்து இரக்கமும் அன்பு கொண்டவனே சைவன் ஆவான். புலால் உணவு மேற்கொள்ளாது மரக்கறியுணவு மேற்கொள்பவனைச் சைவன் என்றும், அவ்வுணவைச் சைவ உணவு என்றும் வழங்கி வருதல் இங்கு நினைவு கூரத்தக்கது. இவற்றால் கடவுள் - உயிர் - தளை என்ற முப்பொருள்களின் தன்மை வழக்காற்றில் பேசப் பெறுவதை உணரலாம்.

தலைவர் அவர்கள் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை, சைவ சமய வளர்ச்சி குறித்துப் பேசினார்கள்.

55-ஆம் ஆண்டு விழா : சமாஜ 55ஆம் ஆண்டு விழா 1960இல் இலங்கை திருக்கேதீச்சரத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. சச்சிதானந்தம் பிள்ளை சைவம் பரப்புவதே தம் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டவர் என்பது அவர் தலைமையுரையில் காணப்படுகிறது. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தம் தலைமையுரையில் இலங்கையின்

பழமையும்பெருமையும், சமாஜத்திற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு, சைவம் வளர்த்த இலங்கைப் பெரியவர்கள், திருக்கேதீச்சுரத்தின் பெருமை, சைவத்தின் தொன்மையும் மாட்சியும், சைவத் தத்துவங்களின் சிறப்பு, சமய ஒழுக்கம், பிற சமயங்களோடு ஒத்துழைத்தல் குறித்து உரையாற்றி சைவ சமயத்தில் செய்ய வேண்டுவன குறித்தும் நிறைவாக உரையாற்றினார். ‘‘சைவத்தில் பணியாற்ற பல தொண்டர்கள் தேவை. தம்மை ஆன்மீகத்தில் சிறப்புள்ளவர்களாக ஆக்கிக் கொள்வதோடு, தம் குடும்பத்தாரையும் உறவினரையும் ஊராரையும் அந்நெறியில் விருப்பங் கொள்பவராகவும் விரும்பி இயன்ற அளவு தியாகத் தொண்டாற்ற வேண்டும்.

சிவதீக்ஷை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். வார வழிபாட்டுச் சங்கங்கள் எல்லா ஊர்களிலும் தொடங்க வேண்டும் தமது வருவாயுள் ஒரு சிறு பகுதியைச் சமயத்திற்கு ஒதுக்க வேண்டும். சைவ நூல்களைப் பாரத நாட்டுப் பிறமொழிகளிலும், அயல் மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும். தமிழ்நாட்டில் சைவ சமய சங்கங்கள் தலைமைச் சபை ஒன்றோடு இணைந்து நின்று செயல்பட வேண்டும். சைவ சமயப் பிரசாரத்தைப் பல அடுக்குகளில் செய்தல் வேண்டும். இசைத்தட்டு, துண்டுப்பிரசாரம், அடக்கவிலைச் சிறுநூல்கள் என வெளியிடுதல் வேண்டும்.

55-ஆம் ஆண்டு விழாவில் இளைஞர் மாநாட்டில் அம்பை சங்கரனார் உரையாற்றிய பொழுது, ‘‘சமாஜத்திற்கெனத் தனியான ஒரு நூல் நிலையம் சிறந்தமுறையில் இருத்தல் வேண்டும். உலகச் சமய இலக்கியங்கள் யாவும் அங்கு இடம் பெறல் வேண்டும். ஒரு சிறந்த சமயக் கல்லூரியே நடைபெறல் வேண்டும். அரசியலார் சமயச்சார்பற்ற அரசியல் என்று கூறி வாளாவிருந்து விடும்போது நம் சமய ஆதிக்கத்தைக் காக்கும் கடமை நமக்கே உரியதன்றோ’’ என்றார்.

56-ஆம் ஆண்டு விழா : சமாஜ 56ஆம் ஆண்டு விழா பழனியில் ஔவை - சு. துரைசாமி பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்கள் தலைமையுரை சைவசித்தாந்த சாரம் எனில் மிகையன்று. முழுமையாகப் பலமுறை படித்துப் பயன்பெற வேண்டும்.

57-ஆம் ஆண்டு விழா : சென்னை - தலைவர் - இராவ்சாகிப் நல் முருகேச முதலியார்

தலைவர் அவர்கள் தம் தலைமையுரையில் இந்திய மேனாட்டுத் தத்துவங்களில் சித்தாந்தம் எந்த நிலையில் இடம் பெறுகிறது; என்பதனை விரிவாக உரையாற்றியுள்ளார்.

வேதாந்த பாஷ்யகாரர்கள் எல்லாம் கடவுளுக்கும் சிருஷ்டிக்கும் சம்பந்தம் - அபேதம், பேதாபேதம், பேதம் என்று மூன்று விதங்களாகப் பேசியுள்ளார்கள். சித்தாந்தம், ஒன்றாதல், வேறாதல், உடனாதல் மூன்றினையும் திருஷ்டிக்கிறது. மற்ற தத்துவங்கள் மேற்கூறிய அபேதம், பேதாபேதம், பேதம் என்ற மூன்றில் ஒரு சம்பந்தத்தை ஆதாரமாக ஒப்புக் கொண்டு மேற்கட்டிடம் கட்டியுள்ளன. சித்தாந்தம் இம்மூவகை திருஷ்டியையும் முரணபடுத்துவதில்லை.

‘‘புறச்சமயத்தவர்க்கு இருளாய்’’ என்பது சிவப்பிரகாசத்தில் கூறிய பெருமிதமாகும். உண்மையிலேயே சித்தாந்திகள் ஏகான்மவாதிகளை விட

ஒரு மடங்கு இறைவனன்றி வேறு பொருளில்லை என்ற கொள்கையில் கடைபோயினவர்களே. ஆனால் பிரமப் பொருள் உயிரோடு சிவமாக ஒன்றாகிறது என்ற உண்மை சித்தாந்தத்தில் தான் காணலாம். நமது பிரமம் சூன்யப் பொருள் இல்லை.

பேதம் பேதாபேதம் அபேதம் என்ற முன்றையும் மெய்யுணர்ந்து கண்ட சித்தாந்த திருஷ்டியை ''இன்றெனக்கருளி'' என்ற திருவாசகத்தில் காண்கிறோம். மகத்தான திருவாசகம்; இதுவே நமக்குப் பிரமாணம்.

பவுத்தம் கடவுள் உண்டென்பதைப் பற்றியோ, மரணத்துக்குப்பின் உயிரின் நிலை என்ன என்பதைப் பற்றியோ ஆராயவில்லை. விருப்பு வெறுப்பு அற்ற நிலையையே சமுசாரக் கடலினின்று விடுதலையென்று பவுத்தம் கருதுகிறது. இருவினை ஒப்பு சைவத்திலும் உண்டு. இக்கொள்கை உலகம் மாயை என்ற அடிப்படையில் எழுந்ததன்று. இந்திரியங்களால் வரப்பெற்ற சுகதுக்கங்கள் நிலை பெற்றவையல்ல என்பதை உணர்ந்ததின் அடைவே இது. துறவினால் மட்டும் சமுசாரக் கடலைத் தாண்ட முடியாது. ஆணவத்தால் வரும் கரும பலன்கள் முடிவாக இறைவன் அருளால்தான் அற்றுப்போம் எனச் சித்தாந்தம் கூறுகிறது.

கிறித்துவ மதம் கடவுளை இரக்கமுள்ள பிதாவாகக் கருதுகிறது. சித்தாந்தம் கடவுளைச் சகுணமாகவும் நிர்க்குணமாகவும் காண்கிறது. கிறித்துவ மதம் ஆண்டவன், மகன், துய ஆவி என்பவை சித்தாந்தத்தில் காணப்படும் இறைவனின் இலக்கணங்களுக்கு ஒப்பாக இருக்கிறது. கிறித்துவ மக்களை உய்விக்க ஒருமுறைதான் இறைவன் வெளிப்பட்டுள்ளான் என்கிறது.

சித்தாந்தத்தில் இறைவன் ஒவ்வொரு உயிர்க்கும் பக்குவநிலையில் உருவாக வெளிப்பட்டு அருளுகிறான். கிறித்துவத்தில் இறைவனின் அருள் பாலிப்பு பாவமன்னிப்பாகும். சித்தாந்தத்தில் இருவினை ஒப்பு மலபரிபாகம் எய்தியே உயிரானது ஏகனாகி இறைவன் நிற்பதற்குப் பக்குவமடையும் காலத்தில் இறைவன் அருள் பாலிக்கிறான். சித்தாந்தத்தில் எல்லா உயிர்களுக்கும் இன்றில்லாவிட்டால் ஒரு காலத்தில் நிச்சயம் உய்வுண்டு. கிறித்துவ இறைவனின் அருள்கொள்கை சித்தாந்தக் கொள்கையுடன் ஒப்பாகவே இருக்கிறது.

இஸ்லாமியர் கொள்கை போலவே சித்தாந்தமும் இறைவன் மானுடமாக அவதாரம் எடுப்பதில்லையென நம்புகிறது. சூபி கொள்கைகளும் சித்தாந்தக் கொள்கைகளும் நெருங்கிய உறவு கொண்டவை போலக் காணப்படுகின்றன. கிறித்துவம் கடவுளைப் பிதாவாகக் கருதுகிறது. இஸ்லாம் யஜமானனாகக் கருதும். சித்தாந்தத்தில் புத்ரமார்க்கம், தாச மார்க்கம் என இரண்டுக்கும் இடம் உண்டு. சூபி கொள்கை கடவுளைச் சித்தாந்தம் போல் அன்னியமாகவே பாராட்டுகிறது.

சமணத்தின் தூய கொள்கையாகிய அகிம்சையைச் சித்தாந்தம் ஏற்கிறது. தயையே மூலதன்மம் என்கிறார் அப்பர். இது அகிம்சை பரமோ தர்மம் என்பதை விட ஒரு படி மேல் அகிம்சையை விட தயைபயன் தரவல்லது.

பின்னர் தலைவர் சித்தாந்தத்துக்கும் சமுதாயத் தத்துவத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கினார். ''சித்தாந்த தத்துவம் மனிதனுக்கும் மனிதனுக்கும் பேதம் காண்பதில்லை. சித்தாந்தம் கடவுள் அன்பின் வடிவம் என்றே கூறுகிறது. மற்ற உயிர்களுக்கு இதம்

செய்தால்தான் இறைவனிடம் அன்பு உடையவனாயிருக்க முடியும் என்கிறது. சித்தாந்தம் தம் தம் சொந்த முத்தி நலன்களைக் கருதுவதே உயிர்களின் கடமை என்று போதிக்கவில்லை. சர்வ முத்தியையே சித்தாந்தம் நாடுகிறது.

இதத்தையே செய்தால் நீங்கள் இச்சிக்கும் தெய்வம் ஏதுவாகிலும் சரி, நீங்கள் அருளை நாடுவீர்கள் என்று பேசுகிறது. இதைவிட உயர்ந்த பரந்த அன்பு தத்துவம் வேறு எங்குக் காண முடியும்? (சித்தாந்தம்) விஞ்ஞானத்தில் சித்தாந்தத்தின் இடம் என்னவென்று பார்ப்போம். சித்தாந்தத்தின் முக்கிய உண்மைகள் பதியைப் போல உலகு அனாதி, பிரகிருதி மாயை இறைவனின் பரிக்கிரக சக்தியின் வழி உண்டான தொன்றே. காலமானது அசுத்த தத்துவமே.

இறைவனின் தாண்டவமே மற்ற சராசரங்களை இயக்குவிக்கின்றது. சடப்பொருள்களின் சக்தியெல்லாம் இறைவனின் சக்தியால் உண்டானதே. (அறிவியல்) ஒளி இவைகளின் வேகம் தனித்தத்துவமல்ல. சம்பந்த விதியால் (Theory of relativity) தான் நிர்ணயிக்கலாம். அணுவை பிளந்த பின்னும் கடைசியாக உள்ள சக்தி யாதென்றும், எப்படி நிலைபெற்ற தென்றும் அறியொணாதது.

சடமானது என்று எண்ணப்படும் ஒன்றே தன்னிடத்தில் நிலைத்துள்ள ஒரு தன்மையால் சக்தியாக மாறும். சக்தியும் சடப் பொருளாக மாறலாம். சக்திக்கும் எடை, பருமன் உண்டு. உள்ளது. போகாது இல்லதுவாராது என்ற காப்பு விதியே (Law of Conservation) எங்கும் காண்கிறோம். எல்லாம் ஒன்றுக்குள் ஒன்றாய்த் தொக்கி நிற்கிறது. கூர்தலும் அடங்குதலும் உலகத்தில் காணும் நியதி. இது அறிவியல்.

இந்த உண்மைகள் எல்லாம் சித்தாந்தத்தில் கூறப்படும். முப்பத்தாறு தத்துவ சம்பந்தங்களுக்கு உடன்பாடு உடையதாக இருக்கின்றன.

இன்னும் தற்கால மனோதத்துவ சாத்திர உண்மைகளும் சித்தாந்தத் தத்துவக் கட்டளைக்கு விளக்கம் தருவதாகவே இருக்கின்றன.

''பிரபஞ்சம் ஒரு மூலப் பொருளினின்று வெளிப்பட்டிருக்க வேண்டும். உஷ்ண சக்தி குன்றியதால் இயக்கம் ஓய்ந்தபின் எதனிடத்திலேயோ மறைந்து விடும்'' என்கிறார் பேராசிரியர் மார்டின் ரைலி. சாங்கியம், பாஞ்சராத்திரம் முதலானவைகளில் கூறப்படாத நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுவரம், சுத்த வித்தை என்று சித்தாந்தத்தில் பேசப்படும் தத்துவங்கள் ரைலி கூறும் உண்மைகளை விளக்க மாக விரித்துக் கூறுகின்றன.

காலம் ஆதி அந்தமில்லாத எப்போதுமுள்ள ஒன்று. அது மற்றப் பொருள்களால் அளவு படுகிறதே ஒழிய அது அளவுக்கு அடங்காது என்பர். இந்தக் கொள்கை காலத்தை அனவஸ்தைக்கு (Infinite regress) உள்ளாக்கி விடும். காலம், பொருள் நிகழ்ச்சியில் உணரப்படும் ஒன்றே. அது ஒரு தனித்த பொருள் அன்று. எனவே காலத்தை சித்தாந்தம் அசுத்த மாயையின் சங்கையில் தான் சேர்க்கிறது. சமீபத்தில் சில ருஷ்ய விஞ்ஞானிகள் காலம் ஒரு பிரகிருதி சம்பந்தமான தத்துவம் (Material factor) என்றே கூறியுள்ளார்கள்.

கூர்த்த அறிவுடையவர்கள் விஞ்ஞானம் அபரஞான எல்லைக்கு அழைத்துச் செல்வதாய்க் காண்கின்றனர்.

சுத்ததத்துவத்துக்கும் பிரகிருதி தத்துவத்துக்கும் இப்போதுதான் சம்பந்தத்தை மேனாட்டார் காண்

கிறார்கள். இதைச் சித்தாந்தம் முன்னமேயே உணர்த்தியுள்ளது. அப்பர்,

''இருநிலனாய்த் தீயாகி''

என்ற பாடலில் கூறியுள்ளார். எனவே அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒப்பவுளது என்றும் நிலவக் கூடியது. Living Philosophy சித்தாந்தம் என்பது நனி விளங்கும்.

இக்காலத் தத்துவப் பேராசிரியர்கள்

இக்காலத்துத் தத்துவ ஆசிரியர்கள் சித்தாந்தத்தைப் புகழ்ந்தே பேசியுள்ளார்கள். பேராசிரியர்கள் ஜீவாகிம்வாக், நினோ குவினோ முதலியவர்கள் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள். பூர்வ ஆசிரியர்களான மூன்று பாஷ்யக்காரர்களும் சித்தாந்தத்தைப் பற்றிப் பூர்வ பக்ஷம் செய்ததாகத் தெரியவில்லை. சித்தாந்தத்தைப் பெரும் பகுதியில் ஒப்பிடத்தக்க ஸ்ரீ கண்ட பாஷ்யத்தை ஸ்ரீ ராமானுஜர் முதலியோர் கையாண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. பிரம சூத்திர பாஷ்யத்தில் (11.2.27) சித்தாந்த சாத்திரத்தைப் பற்றி ஸ்ரீ சங்கரர் குறிப்பிட்டுள்ளதாகப் பேராசிரியர் தாஸ் குப்தா 1955-இல் வெளிவந்த தமது பெருநூலின் 5 தொகுதியில் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட சித்தாந்தம் எது என்பது விளங்கவில்லை. ஆனால் அது திரிபொருள் நிச்சயத்தையும் கடவுள் நிமித்த காரணத்தையும் ஒப்புக்கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். மற்றும் சிலர் சித்தாந்தம் காஷ்மீர் பிரதி அபிஞ்ஞசைவத்துக்ருதி தொடர்புள்ளது என்றும் கூறுவர். சாதாரணமாகக் காஷ்மீர சைவம் ஒரு பொருள் உண்மையைத் தழுவுகிறது என்று எண்ணப்படும். ஆனால் சில சூத்திரங்களுக்கு ராமகாந்தர் முதலானவர்களால் பின்னால் எழுதப்பட்ட பாஷ்யங்கள் சித்தாந்தத்திற்கு ஒப்பாகவே உள்ளன என்று பேராசிரியர் சூரிய நாராயண சாஸ்திரியார் கூறியுள்ளார். ஒரு சமயம் திருமூலர் வடநாடு சென்று பிரதி அபிஞ்ஞ சைவத்தைத் திருத்தி அமைத்து மீண்டும் தென்னாடு திரும்பினாரோ அறிகிலோம். வடநாட்டு சித்தாந்தம் என்ற கொள்கை கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது என்று சாகர் பல்கலைக்கழகப் பேராசிரியர் பல்லா என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்

18-ஆம் நூற்றாண்டில் இருந்த ஸ்வீடன் பர்க்கின் தத்துவம் சித்தாந்தத்தை ஒத்ததாகப் பல அம்சங்களில் காணப்படுகிறது. இதைக் காலஞ்சென்ற திருகோபால செட்டியார் தமது நூலில் விளக்கியுள்ளார். ஹோசிங்குடன் முதலிய மேனாட்டவர்கள் அல்லாது, நமது ஜெ.எம். நல்லசாமி பிள்ளை அவர்கள் சித்தாந்தத்தைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதியிராவிட்டால் சித்தாந்தத்தைத் தமிழ்நாட்டிலன்றி மற்றவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அவர் நூல்களை மீண்டும் அச்சேற்றுவதற்குத் தூண்டுதலாக இருக்க வேண்டும். ஷோமிரசின் ஜர்மானிய மொழியில் எழுதியுள்ள நூலைத் தமிழாக்கம் செய்யவேண்டும். நம் சித்தாந்தங்கள் தவிர, ரெவரண்ட் பீட், வயாலட் பரஞ்சோதி முதலியவர்கள் சித்தாந்தத்தை விமர்சனம் செய்துள்ளார்கள். சமீபத்தில் வெளிவந்த டாக்டர் தேவசேனதிபதியின் நூலும், பேராசிரியர் சூரிய நாராயண சாஸ்திரியார் நூலும் குறிப்பிடத்தக்கவை. இவைகளையெல்லாம் சேர்த்து ஒரு நூல் நிலையத்தில் வைக்க வேண்டும். திரு. சாஸ்திரியார் சில சித்தாந்தமும் அத்வைதத்தை விட சில அரிய முறைகளில் கருத்துவாதத்தைத் தழுவியதே (idealism) என்று சில சிந்திக்கத்தக்க கருத்துக்களை எழுதியுள்ளார்.

58ஆம் ஆண்டு விழா : சமாஜத்தின் 58 ஆம் ஆண்டு விழா 1963இல் புதுச்சேரியில் திரு. கா. இராமநாதன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

59-ஆம் ஆண்டு விழா : சமாஜத்தின் 59ஆம் ஆண்டு விழா 1964இல் பேரூரில் திரு. க. அரங்கசாமி முதலியார் தலைமையில் நடைபெற்றது.

60-ஆம் ஆண்டு விழா : சமாஜ 60ஆம் ஆண்டு விழா 1965-இல் சிதம்பரத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையில் ஒரு பகுதி. ''உலகம் பலவிதம் என்பது பழமொழி. உலகு அம்பலவிதம் என்று பதஞ்சேதஞ் செய்தல் வேண்டும். அம்பலத்திலே இறைவன் ஆடுகின்றான். உலகம் இனிது நடைபெறுகின்றது. ''கருப்பு என்றால் யாருக்கும் வெறுப்பாக இருக்கும். வெண்மையான ஒரு பொருளை நெருப்பில் இட்டால் கரியாகி விடும். கரிய சாணத்தை நெருப்பில் இட்டால் வெண்மையாகின்றது. எனவே, 'திருநீறு அணிந்தால் உள்ளம் மென்மையாகப் பால் போல் மாசற்றுத் திகழும்.''

''சிவா சிவா என்பார் காலன் வயப்படார். பிராணவாயு வாசி எனப்படும். அது பன்னிரு அங்குலம் வெளிப்படுகின்றது. எட்டு அங்குலந்தான் உள்ளே புகுகின்றது. ஆதாயம் எட்டு, விரயம் பன்னிரண்டு.

வா.சி. வா - எட்டு அங்குலம். சி. நான்கு அங்குலம் வாசி வந்து நான்கு அங்குலம் விரயமாகின்றது. பன்னிரு அங்குலமும் உள்ளே செல்ல வேண்டுமாயின் சிவா என்று சொல்ல வேண்டும்.

'விட்ட எழுத்தை விடாத எழுத்தால்
கட்டவல்லார் காலனைக் கட்டவல்லாரே!

என்கின்றார் திருமூலர்.

விட்ட எழுத்து சிகரம். விடாத எழுத்து வகர ஆகாரம். வாசி என்ற வந்து, சிவா என்று திரும்புதல் வேண்டும்.''

61-ஆம் ஆண்டு விழா : 1966; திருச்சி : தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

62-ஆம் ஆண்டு விழா : 1967; திருவெண்காடு; தவத்திரு மேலையூர் மாணிக்க வாசகஞான தேசிக சுவாமிகள்.

63-ஆம் ஆண்டு விழா : 1968; சென்னை : திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம்.

64-ஆம் ஆண்டு விழா : 1969; காஞ்சிபுரம் : நல் முருகேச முதலியார்.

65-ஆம் ஆண்டு விழா : 1970: வேலூர் : கி இராமலிங்கனார்.

தலைமையுரையில் ஒருமை நோக்கைத் தலைவர் பெரிதும் வலியுறுத்தியுள்ளார். ''பிறப்பினால் வேறுபாடு பாராட்டலாகாது, மொழியினாலும் உயர்வு தாழ்வு கருதாத கொள்கை சிவநெறிக்கு உரியது'' என்று கூறி திருமுறைச் சான்றுகளையும் தலைவர் முன் வைத்துள்ளார்.

66-ஆம் ஆண்டு விழா : 1971; சேலம் ; திரு. கா. பொ. இரத்தினம்.

67-ஆம் ஆண்டு விழா : 1972; திருநெல்வேலி : திரு. அ.ச. ஞான சம்பந்தம்.

68-ஆம் ஆண்டு விழா : 1973; சீகாழி : திரு. க.வெள்ளைவாரணனார்.

தலைவர் அவர்கள் தம் தலைமை உரையில் திருமுறைகளின் சாரத்தைப் பிழிந்து தந்துள்ளார். மேலும், அவர் ''பிற சமய அன்பர்கள் தம் சமய உண்மைகளைத் தாம் பேணிப் போற்றுவதுடன் சமயம் பரப்பும் பணியில் ஊக்கம் உடையவராய்த் தம் சமயத்தினரல்லாத பிறரையும் தம் சமயத்தினை மேற்கொள்ளச் செய்து பொருள் வளத்தாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் தம் சமயத்தை வளர்த்து வருதலைக் கண்ணாரக் கண்டு வருகின்றோம். சைவர்களாகிய நாம் சிவனை வழிபடுவோர் அனைவரும் ஓரினத்தவரே என்னும் சமுதாயக் கட்டுக்கோப்பினை இழந்தமையால் நம் சமயத்திருக்கோயில்களைச் சிதைவு நீக்கிப் பேணிப் போற்றுதற்கும் சமய உடைமைகளைப் பாதுகாத்து அவற்றை நமது சமய வளர்ச்சிக்குப் பயன்படுத்துதற்கும் இயலாத நிலையில் அரசியல் வாழ்க்கையில் வலியிழந்துள்ளோம். பிற சமயத்தினரை நமது சமயத்தில் சேர்க்கும் அளவுக்கு இல்லாவிட்டாலும் நம் சமயத்தினரை மற்றவர் தம் சமயத்தில் ஈர்த்து நமது சமய நெறி முறைகளையும் நம் நாட்டின் அரசியல் சமுதாயக் கட்டுக் கோப்பினையும் குலைக்காத அளவுக்கேனும் நம் சமய மக்களிடைய சைவ சமய உண்மைகளை எடுத்துரைத்து அவர் தம் உள்ளத்தில் தெய்வக் கொள்கையை நிலைபெறச் செய்து எக்காலத்தும் எந்நிலையிலும் மனம் கலங்காத் திண்மை நிலையினராகச் சிவநெறியை வளர்த்தல் வேண்டும்.''

''கடைச்சங்க காலத்தில் தமிழ் மக்கள் ஆதரவுடன் தமிழகத்தில் வாழ்ந்த பௌத்த சமணர்கள் இங்குள்ள பல சமயத்தினரோடும் அன்பினாற் கலந்து பழகினார்கள் என்பது சங்கத் தொகை நூல்களாலும் சிலப்பதிகாரத்தாலும் இனிது புலனாகும். களப்பிரர் என்னும் அயலார் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் பாண்டி நாட்டைக் கைப்பற்றி ஆண்ட நிலையில் அவ்வயலவர் ஆதரவால் சமணர் பலர் பாண்டி நாட்டிற் குடிபுகுந்தனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மகேந்திர பல்லவனது சார்பினால் தொண்டை நாட்டிலும், சோழ நாட்டிலும் சமண சமயம் மேலோங்கியது. கடைச்சங்ககாலம் வரை பல்வேறு சமயங்களிடையே பொது நோக்கமே நிலை பெற்று விளங்கிய தமிழ்நாட்டில் தமிழ் மக்களோடு தொடர்பில்லாத அயலவர் ஆட்சியால் சமணரும் பௌத்தரும் தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்புமளவில் நில்லாது இந்நாட்டின், தொல் பெருஞ்சமயமாகிய சிவநெறியையும், மக்களால் மதிக்கப் பெறும் நிலையில் இந்நாட்டில் முன்னமே வேரூன்றியிருந்த வேத நெறியையும் இகழ்ந்துரைத்தலையே தமது தொழிலாகக் கொண்டு திரிந்தமையால், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என நெடுங்காலமாகத் தமிழ்மக்கள் சிந்தையிற் குடிகொண்டிருந்த கடவுட் கொள்கை சிதைவுறும் நிலையேற்பட்டது. தமிழ்மொழியும் தனது உயர் நிலையை இகழ்ந்தது. புறச் சமயத்தார் பயன்படுத்திய ஆரிய மொழியும் அதன் திரிபாகிய பிராகிருத மொழியும் தமிழ்நாட்டில் அரசியலிலும் சமயத்துறைகளிலும் சிறப்பிடம் பெறும் நிலை ஏற்பட்டது. தமிழ் மக்களின் சமுதாய வாழ்வும் சிதைவுறுவதாயிற்று.

''ஆளுடைய பிள்ளையார் மதுரையில் சமணர்களுடன் நிகழ்த்திய வாது, சமய வாதமாக மட்டும் அமையாமல் தமிழுக்கும் அயல்மொழிக்கும் உள்ள ஆற்றலை விளக்கும் மொழிவாதமாகவும் அமைந்து தமிழுக்கு வெற்றிவும் நல்கியது.''

69-ஆம் ஆண்டு விழா : *1975;* மாம்பாக்கம் குருகுலம்; வ.ஆ.தேவ சேனாபதி.

தலைவர் உரை சைவசித்தாந்த சாரமாக அமைந்துள்ளது. அவர் கூறுவதாவது. ''சைவத்தைப் பற்றி வடமொழியில் உள்ள நூல்கள் - ஆகமங்கள்; சைவ பாஷை, சைவ பரிபாஷை போன்றவற்றையும் மொழி பெயர்ப்புகளுடன் வெளியிட்டால் மேலை நாட்டவரேயன்றி நம் நாட்டு வடமொழிப் புலவர்களும் சைவ சித்தாந்தத்தைத் திறனாய்வார்கள்.

எடுத்துக்காட்டாக, வடமொழியில் உள்ள சத்யோஜோதி சிவாசாரியாரால் இயற்றப்பட்ட மோக்ஷ காரிகை என்னும் நூலிலிருந்து பேரா சிரியர் எஸ்.எஸ். சூரிய நாராயண சாஸ்திரியார் எடுத்துத் தந்துள்ள ஒரு குறிப்பை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் குலாலன் குடம் முதலியவற்றைச் செய்வது போல இறைவன் உலகைப் படைக்கிறான். (''ஆரியன் குலாலனாய் நின்று ஆக்குவன் உலகமெல்லாம்'' - சித்தியார்) என்பது சித்தாந்தம். இதற்குக் கூறப்பெறும் தடை எடுத்துக்காட்டு பொருந்தாது என்பதாம்.

குலாலன் இருவினைக்கும் அறியாமைக்கும் உட்பட்டவன் ஆதலால் பொருந்தாமை பெறப்படும் என்பதாம். இனி இதற்குப் பின் வருமாறு விடை தரகிறார். சத்யோஜோதி சிவாசாரியார் : (உவமை பெரும்பாலும் முற்றுவமையாய் இருப்பதில்லை என்பது ஒரு புறமிருக்க) குயவன் ஏனையவற்றைப் பற்றி அறியாதவனாக இருக்கலாம். ஆனால் மண்ணினால் பானை, சட்டி போன்றவற்றைச் செய்யத் தெரியாதவனாக இருக்க முடியாது. இவ்வாறே பிரபஞ்சமே முழுக்காரியம்.

அதாவது பிரபஞ்சத்தைத் தவிர படைக்கப்பட்டது ஒன்றுமில்லை. எனவே அதனைப் படைப்பவனுக்குத் தெரியாததாக வேறொரு காரியமும் இல்லை. எவ்வாறு மண்ணினால் செய்யக் கூடியவை அனைத்தையும் அறிந்தவனே குயவனோ அவ்வாறே பிரபஞ்ச காரியம் அவ்வாறே பிரபஞ்ச காரியம் அனைத்தையும் அறிந்தவன் இறைவன். எனவே குலாலனை எடுத்துக்காட்டாகச் சொல்வது பொருத்தம் உடையதே என்கிறார் சத்யோஜோதி சிவாசாரியார். இவ்வாறெல்லாம் நம் சைவ சித்தாந்தக் கருத்துக்களை உடன்படுவோர் கூறும் அரிய விளக்கங்களைக் கொண்டும் எதிர்ப்போர் கூறும் தடைகளுக்கு விடை காணும் போது தோன்றும் புதிய கருத்துகளைக் கொண்டும் சைவத்தின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியலாம்.

70-ஆம் ஆண்டு விழா : *1976;* சிவகங்கை; திரு. க. வச்சிரவேல் முதலியார். தலைவர் தம் தலைமையுரையில் ''சிவனடியே சிந்திக்கும்'' என்ற பெரியபுராணப் பாடலை விரிவாக விளக்குகிறார்.

71-ஆம் ஆண்டு விழா : *1977;* இரத்தினகிரி; திரு. க. கல்யாணம் பிள்ளை.

72-ஆம் ஆண்டு விழா : *1978;* சின்னமனூர்; மறை திருநாவுக்கரசு.

73-ஆம் ஆண்டு விழா : *1979;* பழனி; புரிசை சு. நடேச முதலியார்.

74-ஆம் ஆண்டு விழா : *1980;* ஆரணி; தங்கம்மா அப்பாக்குட்டி.

75-ஆம் ஆண்டு விழா : சமாஜத்தின் 75-ஆம் ஆண்டு விழா 1981-இல் தெல்லிப்பழையில் திரு. முரு. பழ. இரத்தினஞ்செட்டியார் தலைமையில் நடைபெற்றது.

1982 : 1.5.1982 அன்று சைவ சித்தாந்த மகாசமாஜம் சைவ சித்தாந்தப் பெருமன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. 13.2.1982 அன்று எண். 4, வெங்கடேச அக்கிரகாரம், மயிலாப்பூர் என்னும் இடத்திற்குப் பெருமன்றம் இடம் பெயர்ந்து வந்தது.

76-ஆம் ஆண்டு விழா : பெருமன்றத்தின் 76-ஆம் ஆண்டு விழா 1982-இல் காசியில் திருப்பனந்தாள் காசிமடம் காசிவாசி ஸ்ரீ முத்துக்குமார சாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

77-ஆம் ஆண்டு விழா : 1983-இல் இராமேஸ்வரத்தில் திரு காசிநாத துரை தலைமையில் நடைபெற்றது.

78-ஆம் ஆண்டு விழா : 1984: நாகர்கோயில் : முரு. பழ. இரத்தினம் செட்டியார். இவர்தம் தலைமையுரை சைவசித்தாந்த சாரம்; எளிமை, சுருக்கம். சைவசித்தாந்தம் தெரியாதவர் கூட எளிதில் முழுமையாக அதிகநேரம் செலவுசெய்யாமல் புரிந்து கொள்ளலாம். ''உலகத்துப் பொருட்கள் அனைத்தும் அழிவதால் அவற்றுக்குத் தோற்றம் இருந்தே ஆகவேண்டும். தோற்றம், அழிவு ஆகிய இரண்டையும் செயல் படுத்தத் தோற்றமும் அழிவும் இல்லாத ஒரு பொருள் வேண்டும். அப்பொருளையே ''கடவுள்'' எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. தோற்றம், அழிவு இரண்டையும் செயல்படுத்தும் பொருளுக்குப் பேரறிவும் பேராற்றலும் இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட தன்மைகள் இருந்தால் அதனைப் பொருள் என்று சைவ சித்தாந்தம் கொள்கிறது. இதனாலேயே ''கடவுள்'' ஒரு பொருள் எனச் சைவசித்தாந்தம் தெளிவு செய்திருக்கிறது.

கடவுளுக்கு எந்தத் தேவையும் இருக்கமுடியாது. உயிர்களைக் கடவுள் படைத்தார் என்றால் ஏன் படைத்தார் என்னும் வினா எழும். அவர்க்கு ஒரு தேவையும் இல்லாததால் உயிர்களைக் கடவுள் படைக்கவில்லை என்றும் அவையும் கடவுளைப் போல அநாதி என்றும் சைவசித்தாந்தம் சொல்கிறது.

நம் உள்ளம் தீமையின்பால் இயல்பாகவே செல்கிறது. நன்றின்பால் செல்வதற்கு அறிவுரையும் பயிற்சியும் அனுபவமும் வேண்டப் படுவதால், நம் அறிவை ''ஆணவ மலம்'' என்னும் ஒரு இருட்பொருள் மறைத்திருக்கிறதெனச் சைவசித்தாந்தம் கண்டுபிடித்திருக்கிறது. இப்பொருள் இறைவன் உண்டாக்கியிருக்க மாட்டான். ஆதலால், இஃதும் கடவுளைப் போல - உயிர்களைப் போல - அநாதியாக உள்ள பொருள் என்பது தெரிகிறது. அஃது அநாதிப் பொருள் ஆதலால் உயிர்களின் அறிவை அநாதியாகவே மறைத்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

அநாதியே மறைத்திருக்கும் ஆணவ மலத்தை உயிர் பற்றி அழுந்தியிருப்பதால், தான் உடனே விடுதலை பெறாமல் தடுமாறுகிறது. உயிரின் வலிமைக் குறைவால் இஃது நிகழ்கிறது. படிப்படியே பயிற்சி பெற்றால் தான், உயிர் அறிவு வலிமை பெறும். உயிரை இறைவன் படைக்கவில்லை ஆதலில், அதன் வலிமைக் குறைவுக்கு அவன் பொறுப்பாளியாக மாட்டான். பயிற்சி வழி வலிமை பெறும் தன்மை உயிர்க்கு இருப்பதுஅதற்கு அநாதியே அமைந்த இயல்பாகும்.அநாதியே உயிரின் மலத்தைப் பற்றுவது வினையாய் 'மூல கன்மம்' என்று கூறப்படும். வேறு, வேறு கூறுவது சிவஞான சுவாமிகள் வாக்கிற்கு முரணாகும்.

உலகத்துச் சடப்பொருள்கள் அனைத்தும் காலம், இடம், இரண்டிற்கு உட்பட்டு அழிவதால் இவற்றிற்கு

மூலமாய்க் காலம் இடத்திற்கு உட்படாத ஒரு பொருள் இருக்க வேண்டும். சடப்பொருட்கு மூலமாய் உள்ள பொருள் சடமாகவே இருத்தல் வேண்டும். இப்பொருளுக்கு ‘மாயை’ எனச் சைவசித்தாந்தம் பெயரிட்டுள்ளது. கடவுள் மாயையைப் படைத்தார் என்றால் எதிலிருந்து அதனைப் படைத்தார்? என்னும் வினா எழும். இறைவன் ‘உண்டாகுக’ என்றதும் அஃது உண்டாயிற்று என்றால், அஃது அவரிடமிருந்து தோன்றியது என்பது தான் பொருள். அவர் அறிவுடைப் பொருள் ஆதலால், அவரிடமிருந்து தோன்றியது ஒன்று அறிவுடையதாக இருக்க வேண்டும். அறிவற்ற சடப் பொருட்கு மூலமாய் உள்ள மாயை அறிவற்றதாகவே இருக்கும். ஆதலால், அஃது அவரிட மிருந்து தோன்றியிருக்க முடியாது. ஆகவே மாயையும் கடவுளைப் போல - உயிரைப் போல - ஆணவம் போல யாராலும் படைக்கப்படா அநாதி நித்தியப் பொருள் எனச் சைவ சித்தாந்தம் முடிவு கண்டிருக்கிறது.

உயிர்களை ஆணவமல பந்தத்தினின்றும் விடுவிக்க இறைவன் திருவுள்ளம் கொள்கிறான். அவனுக்குக் கருணை காரணமாக இந்தச் சங்கற்பம் உண்டாகிறது. அவனுக்கு எந்தத் தேவையும், இல்லாததால் உயிரை அவன் படைக்கவில்லை என்று கொண்டோம். ஆனால் உயிர்களின் பொருட்டு உலகையும், உயிர்களுக்குள்ள உடம்பையும் மாயையிலிருந்து இறைவன் படைத்தளிக்கிறான். உடல் பெற்ற உயிர்கள், உலகிடை வாழ்ந்து நல்வினை தீவினைகளைப் புரிகின்றன. வினைகளுக்கு ஏற்ப அவைகளுக்கு இன்பதுன்ப அனுபவங்களை இறைவன் உண்டாக்குகிறார். அனுபவம் ஏறஏறப் பயிற்சி வழி அனுபவம் பெறும் தன்மையுடைய உயிர்கள், வலிமை பெற்று இறைவனே உண்மை இன்பத்தைத் தரவல்லவன் என உணர்ந்து அவனை இறுகப் பற்றுகின்றன. பற்றியதும் மாறாத பேரின்ப அனுபவத்தை அவற்றிற்கு இறைவன் வழங்குகிறான். இந்த முத்தி இன்பத்தில் அவை என்றும் திளைத்துக் கிடப்பதே அவை இறுதியில் பெறும் பெறற்கரிய பேறாகும். பயிற்சி வழி அனுபவம் பெறும் தன்மையுடைய உயிர்களைத் துவக்கத்திலேயே ஆணவ மலத்தைப் பற்றாதவாறோ, உடனே ஆணவமல பந்தத்தினின்றும் நீங்குமாறோ செய்தால் அவை பயன்பெற இயலாது. இதனாலேயே அவற்றைப் பிறப்பு, இறப்புக்குட்படுத்தி மெல்ல மெல்ல அனுபவம் பெறச் செய்கிறான்.

உயிர்கள் எண்ணில என்பது சைவ சித்தாந்தம். பிரபஞ்ச வெளி எல்லையற்றது. இவ்வெளியின் எல்லையைக் காண ஒருவன் பறந்து சென்றால், அவன் எவ்வளவு தூரம் சென்றாலும், இருந்து கொண்டே இருக்கும். உயிர்கள், பிரபஞ்சம் எங்கும் நுண்ணுடல் அல்லது தூய உடல் பெற்று நிறைந்து இருப்பதால், எல்லை இல்லாத பிரபஞ்சத்துள் இருக்கும் உயிர்களும் எண்ணிலியாகந் தானே இருக்க வேண்டும். இதனாலேயே கணித சாத்திரமும் எண்ணுக்கு முடிவில்லை என்று கூறுகிறது. எவ்வளவு தூரம் சென்றாலும், பிரபஞ்ச வெளி எல்லையற்று இருப்பதுபோல, எத்தனை உயிர்கள் முத்தி பெற்றாலும், முத்தி பெற வேண்டிய உயிர்கள் எண்ணிலியாகவே இருக்கும். ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்கள் என்றும் உண்டு என்பது பெறப்படும். புறச்சமயங்களில் சில, ஒரு காலத்தில் உலகம் முடிவுக்கு வரும் என்றும், அப்புறம் படைத்தல், காத்தல் முதலிய தொழில்கள் இல்லை என்றும் கூறுகின்றன. அப்படியானால் படைத்

தலுக்குத் துவக்கம் இருக்க வேண்டும். இங்கர்சால், 'படைத்தலுக்கு முன் இறைவன் தூங்கினானா? என்ன செய்து கொண்டிருந்தான்?'' என வினா எழுப்பினார்.

இதற்குப் புறச் சமயத்தினரால் விடை கூற இயலவில்லை. சைவம், பஞ்சகிருத்தியம் அனாதி எனக் கூறுகிறது. ஒவ்வொரு உற்பவத்திற்கும் மகா சங்காரம் உண்டு. ஆனால் மறுபடி புனர் உற்பவமும், சங்காரமும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். படைத்தல் அநாதி என்பதால், அதற்குமுன் இறைவன் என்ன செய்து கொண்டிருந்தான் என்னும் வினா எழ இடமில்லை. நமக்கு விளங்கிக் கொள்வதற்காக, ஒரு குறிப்பிட்ட உற்பவம் அல்லது சங்காரத்தைச் சொல்கிறோமே அன்றிப் பொதுவாக உள்ள உற்பவம். சங்காரம் இரண்டிற்கும் தொடக்கமோ முடிவோ இல்லை.

'முத்தியில் உயிர் தன்னை மறந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து கிடக்கிறது என்றால், ஆண்டு உயிர் இருந்தும் இல்லைதானே? பிரமப் பொருள் ஒன்றுதான் உண்டு எனக் கூறினால் என்ன?' எனச் சங்கர வேதாந்திகள் வினாவுவதுண்டு. முத்தியில் பேரின்ப அனுபவம் உண்டு எனச் சைவ சித்தாந்தம் சொல்லுவதால் அந்நுகர்ச்சி யாருக்கு என வினா எழும். பிரமமம் என்றும் இன்ப மயமானதால் அதற்கு முத்தியில் இன்ப நுகர்ச்சி உண்டெனச் சொல்வது பொருந்தாது. நுகரும் பொருள், இன்பம் தரும் பொருளுக்கு வேறாகவே இருக்க வேண்டும். இரண்டும் ஒன்று என்றால், ஆண்டு நுகர்ச்சி இல்லை. எனவே முத்தியில் உயிர் உண்டு எனச் சொல்ல வேண்டுவது அவசியமாகிறது. பிரமம் ஒன்று தான் உண்டு என்றால், உலகும் உயிரும் கானல்நீர் போலப் பிரமத்திற்குத் தானே தோன்ற வேண்டும். அப்படியானால் பிரமம் அஞ்ஞான வயப்பட்டதாகிறதே?- என்னும் வினாவிற்குச் சங்கரர் வேதாந்தம் ஒருபோதும் சரியான விடை தந்ததில்லை. பொருத்தமற்ற உவமைகளைச் சொல்லிச் சொற்சாலம் செய்வதில் பயனில்லை. நமக்கு மேற்பட்ட ஒரு பொருள் உண்டென்று மனப்பூர்வமான நம்பினால்தான், உண்மையான பக்தி தோன்றும். பக்தியை உடன்படுவது போலச் சங்கரரர் வேதாந்தம் பேசினாலும், 'நானே பிரமம்' என்னும் கொள்கையால் உண்மைப்பத்தி தோன்ற இடமில்லாமற் போகிறது. பத்திக்கு இடையூறாகச் சங்கரர் வேதாந்தக் கொள்கை அமைந்திருப்பதாலேயே, சைவம் அதனைக் கண்டிக்க வேண்டுவதாகிறது?

80-ஆம் ஆண்டு விழா : *1986* : சிதம்பரம் : திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

தலைமையுரை ''ஆகமங்கள்'' பற்றிய சிறப்பு ஆய்வாக அமைந்துள்ளது. ''சந்தானாசாரியார்; தமிழகத்தில் தமிழ்மொழியில் விளக்கிய சைவம் தத்துவச் சைவம் ஆகும். அவர்கட்கு முன்னர் சைவத்தை விளக்கியவர்கள் சமயாசாரியாரை உள்ளிட்ட திருமுறை ஆசிரியர்கள் ஆவர். அவர்கள் விளக்கிய சைவம் பத்தி நெறிச் சைவமாகவே விளங்கியது.இதற்கு விளக்காய் உள்ளது. பத்தாந்திருமுறையாகிய திருமந்திரம்.

''சந்தானாசாரியார் தங்கள் தத்துவச் சைவத்திற்கு மூலமாக எந்த நூல்களைக் கொண்டன? சைவாகமங்களே சந்தானாசாரியர் விளக்கிய சைவத்திற்கு மூலம். சைவாகமங்கள் திருமுறைகட்கு மாறானவை அல்ல என்பது இங்கு நினைக்கத்தக்கது.''

தலைவரவர்கள் தொடர்ந்து தேவாரத்தில் ஆகமம், பெரிய புராண

வரலாற்றில் ஆகமம், திருவாசகத்தில் ஆகமம், மணிமேகலைக் குறிப்பு பற்றி உரையாற்றினார்.

‘‘தமிழ் மக்களில் அறிஞர் உலகத்திற்கு ஒருவாறு தெரிந்திருந்த ஆகமங்களை அவர்கள் அனைவரும் முழுதுமாக எளிதில் தெரிந்து கொள்ளுதற்கு அவற்றைத் தமிழில் செய்தருளினார் திருமூலர்.’’

‘‘தேவார காலத்தில் சைவம் மட்டுமன்று. வைதிக சமயங்கள் எனப்படுவன எல்லாமே சமணசமயத்தின் ஆதிக்கத்தால் அடங்கி ஒடுங்கும் நிலை ஏற்பட்டது. அதனால் வேதநெறியை வலியுறுத்தி, வைதிகத்தை வாழ வைக்க வேண்டிய நிலை அக்காலத்தில் முதலாவதாக ஆயிற்று. அதற்குப் பத்தி நெறியே சிறப்பாக வேண்டப்பட்டது,. அதனால் தத்துவ வகையில் சிறப்புற்றிருந்த சைவாகமங்களைப் பற்றிய குறிப்புத் தேவாரத் திருமுறைகளில் மிகுதியாக இடம் பெறவில்லை.’’

‘‘சைவ நூல்களாகிய சிவாகமங்கள் காசுமீர நாட்டில் வடமொழியில் தோன்றின என்றாலும் அவற்றைப் போற்றியவை பழந்தமிழ்க்குடியினரே யாவர். சிவாகமங்களும் சொல்லால் வடமொழியாயினும், பொருளால் தமிழ்மொழியேயாம்.’’

‘‘ஆகவே தொடக்கத்தில் ‘மரபு சைவம்’ என்றும் பின்பு ‘ஆகம சைவம்’ என்றும் அதன்பின்பு ‘திருமுறைச் சைவம்’ என்றும் இருந்து வந்த சைவங்களையெல்லாம் ஒருங்கிணைத்து ‘சித்தாந்த சைவமாக’ வடிவமைத்துத் தமிழகத்தில் வளரச் செய்தவர்கள் சந்தானாசாரியர்கள்.’’

81-ஆம் ஆண்டு விழா : *1987;* இரத்தினகிரி; திரு.பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை. தலைவரவர்கள் தமது உரையில் ‘‘வெளிநாடுகளில் சைவம்’’ பற்றி எடுத்துக் கூறினர். ‘‘இந்தோசீன நாட்டில் சிவலிங்க வழிபாடு இருந்ததாக வரலாற்றாசிரியர் நீலகண்ட சாஸ்திரி “South India and South east Asia” என்ற தமது நூலில் குறிப்பிடுகிறார். ஏழாம் நூற்றாண்டு கம்போடியா கல்வெட்டு ஒன்று மாந்தரின் மனமொழி மெய்களுக்கு எட்டாது யோகியரால் உணரப்படும் சிவபதத்தைக் குறிப்பிடுகிறது. மூவருக்கும் முதல்வனான சிவபெருமான் திருவடி ஒளிக்கதிரினின்றும் ‘சம்பா’ நகரம் தோன்றியதாக மற்றொரு கல்வெட்டு கூறுகிறது. ஜாவாவில் சைவசித்தாந்தம், பாசுபதம், பைரவம் முதலான சைவநெறிகள் பின்பற்றப்பட்டு வந்தன. தாய்லாந்தில் திருவெம்பாவை திருப்பாவை விழா அரசு நிகழ்ச்சிகளில் இன்றும் அனுட்டிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஞானசம்பந்தர் தேவாரமும் மன்னன் முடிசூட்டுவிழாவில் பாடப் படுகிறது.’’

தலைவரவர்கள் தொடர்ந்து ‘காசுமீர சைவம்’ பற்றிய தம் கருத்துகளை முன் வைத்து சைவ சித்தாந்தத்துடன் உண்டான தொடர்பு பற்றி விளக்கினார்.

‘‘தென்னாட்டுச் சைவத்தைப் போலவே காச்மீரத்திலும் எட்டாம் நூற்றாண்டு வரை முப்பொருள் உண்மை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தமிழகத்தில் 7ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தம் பெருமான் பெருமுயற்சியால் பௌத்தம் நலிவுற்றது. சைவம் புத்தொளி பெற்றது. 9ஆம் நூற்றாண்டில் ஆதிசங்கரரின் பிரசாரத்தால் இந்திய நாட்டில் பௌத்தம் மேலும் நலிவுற்றது. அதுவரை தென்னாட்டுச் சைவம்போன்றே இருந்த காச்மீர சைவம் சங்கரரின் அத்வைத பிரசாரத்தால் அத்வைத சைவமாக

மாற்றம் பெற்றது. ஸ்வச்சந்தம், மதங்கம் முதலான ஆகமங்களுக்கு அத்வைத நெறியில் உரைகள் எழுந்தன என்பதைப் பின்னர் வந்த க்ஷேமராஜரே தெளிவாகச் சொல்கிறார்.''

''சைவ சித்தாந்தத்திற்குப் பிரமாண மாகக் கொள்ளத் தக்க நூல்கள் நால் வேதங்களும், இருபத்தெட்டு சிவாகமங்களும், பன்னிரு திருமுறைகளும் பதினான்கு தமிழ்ச்சித்தாந்த சாத்திரங்களுமாம். பிரம்ம சூத்திரத்திற்கு உரை வகுத்த ஸ்ரீகண்டர் வேதம் ஆகமம் இரண்டையும் அருளியவன் சிவபெருமான் ஆதலால் இரண்டிற்குமிடையே யாம் வேறுபாட்டைக் காணவில்லை என்கிறார்.''

''இவைஇரண்டுமே பிரமாண நூல்கள் எனினும் வீரசைவர்களும் காச்மீரத்து அத்வைத சைவர்களும் வேதாகமங்களைப் பிரமாணமாகக் கொண்டிருப்பதால் சைவ சித்தாந்திகளைப் பொருத்த வரையில் வேதாகமப் பகுதிகள் எந்த அளவிற்கு மெய்கண்ட சாத்திரங்களுக்கு அரண் செய்கின்றனவோ அந்த அளவிற்கே அவை கொள்ளத் தக்கன. ஆதலால்தான் அருள்நந்திசிவம் பொதுநூலாகிற வேதம் உலகத்தவர்க்கும் சிறப்பு நூலாகிற சிவாகமம் சத்திநிபாதர்க்கும் எனப் பிரித்துக் காட்டி, சிவாகமம் வேத முடிபாகிய உபநிடதத்தின் சாரமான குற்றமற்ற பொருள்களைக் கொண்டது என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். இதையே 'சித்தாந்திற்கு விரோதமில்லாத வேதப் பொருள்' என்பார் ஞானப்பிரகாசர். காமிகாகமும் 'வைதிகம் சர்வ. சங்கிராஹ்யம் சைவ வாக்யா விரோதியத்' என்று இதே கருத்தை வலியுறுத்துகிறது. வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன்' என்ற உமாபதி சிவத்தின் வாக்கும் நினைவில் கொள்ளத்தக்கது.''

''வேதங்களை அருளியவன் சிவபெருமான் என்றால் அத்வைதிகள், விசிஷ்டாத்வைதிகன் போன்றோர் போற்றும் பகுதிகள் வேதங்களில் எங்ஙனம் இடம் பெற்றுள்ளன என்ற வினா எழுவது இயல்பு. இதற்கு சைவ சித்தாந்த பரிபாஷை என்ற நூலின் ஆசிரியர் சூரிய சிவாசாரியார் விடை காண முற்படுகிறார். 'வேதத்தில் கூறப்படும் காமிய கர்மாக்களையும், பஞ்சாக்னி மந்திரத்திற்கு மாறுபட்ட முறையில் வேதத்தில் விதிக்கப்பட்ட உபாசனா முறைகளும் சித்தாந்தத்திற்கு ஒவ்வாத சீவாத்மா பரமாத்மா ஐக்யத்தைக் கூறும் பகுதிகளும், பிரமாணம் ஆகமாட்டா.

அவையெல்லாம் பக்குவம் அடையாத ஆன்மாக்கள் பொருட்டு அவர்கள் அடைந்துள்ளபடி நிலைகளுக்கேற்பச் சிவபெருமானால் அருள் கூர்ந்து அருளப் பெற்றவை. அவர்கள் சோபான முறையில் இப்படி நிலைகளைக் கடந்து இறுதியில் வேதாந்தம் என்னும் கிளையின் உச்சியிற் பழுத்த சைவசித்தாந்தம் என்னும் கனியைச் சுவைக்கும் பேற்றினைப் பெற இருப்பவர்கள். அவர்கள் பொருட்டு அருளப்பட்டவையே மேலே கூறப்பட்ட சித்தாந்தத்திற்கு ஒவ்வாத வேதப் பகுதிகள் என்று அமைதி காண்கிறார்.'

82 ஆம் ஆண்டு விழா

1988 மே, 21, 22ல் சமாஜத்தின் 82ஆம் ஆண்டு விழா புதுச்சேரியில் திரு.கோ. மு. முத்துசாமிப்பிள்ளை ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

83ஆம் ஆண்டு விழா

8,9.4.1989; இடம் - வெள்ளக் கோவில்; தலைமை - தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்.

84ஆம் ஆண்டு விழா

1990 மே 12, 13 நாட்களில் 84ம் ஆண்டுவிழா தஞ்சாவூரில் திரு. மு. அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் மங்கையர்க்கரசியாரின் தியாகவாழ்வு பற்றியும், அவருடைய சைவப் பணிகள் பற்றியும் மிக விரிவாகக் கூறினார். தஞ்சைப் பெரியகோயிலில் கருவறையின் மீது பெரிய விமானத்தை எழுப்பு கின்ற புதிய கட்டிடப் பாணியைப் பேரரசராகிய இராசராசர் தோற்று வித்தார். இச்சக்கரவர்த்தி தன்னிடமுள்ள செல்வத்தை மக்களுக்கே பகிர்ந்து கொடுத்துக் காவிரியின் இருமருங்கும் மலைபோன்ற பெருங்கோயில்கள் கட்டுவதில் செலவிட்டார்.

இம்மன்னர் ஏன் இவ்வாறு செய்தார் என்பது கேள்வி. செம்பியன் மாதேவியார் என்ற ஒரே சொல் இதற்கு விடையாகும். இதை விளக்கப் புகுங்கால், செம்பியன் மாதேவியார் அரசியல் துறையிலும், சமயத்துறை யிலும் செய்த இருபெரும் சாதனை களைக் குறிப்பிட வேண்டும். முதலாவது அரசியல் துறையைக் குறிப்பிடுவோம்.

சோழ நாட்டில் முதல் பராந்தக சோழன் கி.பி; 907இல் பட்டமெய்தி, 953 வரையில் அரசாட்சி செய்து வந்தான். அவருடைய பிள்ளைகளில் இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என்ற மூவர் குறிப்பிடத் தக்கவர். பராந்தகன் தனது இரண்டாம் புதல்வன் கண்டராதித்தருக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். இவர் சில ஆண்டே அரசு புரிந்து 957ல் இறந்தார்.

கண்டராதித்தருக்கு இரு மனைவியர். வீரநாராயணி, செம்பியன் மாதேவி என்பார். செம்பியன் மாதேவியே அரசியாக இருந்தார். கண்டராதித்த சோழர் திருமுறை ஆசிரியராகவும், மிகச் சிறந்த பக்திமானாகவும் இருந்த சிவபக்தி எவ்வளவு தூரம் இவரை ஆட்கொண்டிருந்தது என்பதை இத்தேவியாருடைய பிற்கால வாழ்க்கையிலிருந்து அறியலாம்.

கண்டராதித்தருக்கு மதுராந்தகன் என்ற ஒரு புதல்வன் பிறந்தான். 953இல் கண்டராதித்தர் முடிசூட்டிக் கொண்ட பொழுது, தம் புதல்வன் சுமார் பத்து வயதே இருந்தமையால் தமது தம்பியான அரிஞ்சயனை இளவரசராக்கினார். அவர் இறந்த போது மதுராந்தகனுக்கு வயது 14 இருக்கலாம்.

செம்பியன் மாதேவி தம் மகனுக்கு முடி சூட்ட வேண்டும் என்று விரும்பியிருந்தால் போதும். உடனே ஒரு படை திரண்டிருக்கும். செம்பியன் மாதேவியின் ஆதரவாளர், அரிஞ்சயன், ஆதரவாளர் என்று இரு பிரிவுகள் எழுந்திருக்கும். நாடு அழிந்திருக்கும். இவ்வாறு அழியாது காத்த பெருமை இத்தேவியாருக்கு உரியது. 'எமது புதல்வன் மதுராந்தகன் இப்போது முடிசூடி ஆள வேண்டியதில்லை; எமது மைத்துனர் (கொழுந்தர்) ஆன அரிஞ்சயரே முடிசூடி ஆளட்டும் என்று இவர் அறிவித்து விட்டார் போலும். சோழர் ஆட்சி. அமைதி குலையாமல் தொடர்ந்தது.

இவ்வளவு விரிவான மனப்பான்மையாருக்கு வரும்? என் மகனுக்கு அரசு வேண்டுவதில்லை! நாடு நன்கு வாழட்டும்'' என்று எண்ணிய உள்ளப் பாங்கு தமிழ்நாட்டுக்குப் பெரு நன்மையைத் தந்தது.

அரிஞ்சயன் முடிசூடிக் கொண்டான். ஆனால் இன்றுள்ளோர் போல அவன் நன்றி மறந்தவன் அல்லன். தனது தமையனுடைய சிவபக்தியையும் செம்பியன் மாதேவியின் பெருந்தன்மையையும் நன்குணர்ந்து போற்றினான்.

நாட்டினுடைய அரசியல் ஆட்சியைத் தன்னிடம் வைத்துக் கொண்டு, தெய்வீக ஆட்சியை, அதாவது சிவாலயத்தையும், சிவாலய பரிபாலனத்தையும், அண்ணன் மனைவியிடமே விட்டு விட்டான். இவனும் சில ஆண்டுகளே அரசு புரிந்து இறந்து போனான். ஆயினும், இவன் காலத்தில் செம்பியன் மாதேவியாருக்கு ஏராளமான நிதி - வசதியை அளித்திருந்தான். அதனால் இவர் சிவ வழிபாடும், சிவாலயத் திருப்பணியும் விரிவாகச் செய்து கொண்டு, தமது புதல்வனாகிய மதுராந்தகனை வளர்ப்பதிலும், பயிற்றுவதிலும், ஆள்பவருக்கு அறிவுரை கூறித் தரும நெறியில் செலுத்துவதிலும் தம் நேரத்தைச் செலவிட்டார்.

இதற்கிடையில் அரிஞ்சயன் இறந்தமையால் அடுத்த மன்னன் முடிசூட வேண்டிய நிலை. அப்போதும் இத்தேவியார் தம் புதல்வனுக்குப் பட்டம் வேண்டும் என்று சொல்லவில்லை. அரிஞ்சயனுடைய புதல்வனாகிய இரண்டாம் பராந்தகனுக்குத் தாமேயிருந்து முடிசூட்டி வைத்தார்.

சுந்தரசோழன் காலமானவுடனே (970) மக்களிடையே ஒரு கிளர்ச்சி எழுந்தது. சுந்தர சோழனுடைய மகனாகிய அருண் மொழித் தேவன் அப்போது புய பல பராக்கிரமம் மிகுந்திருந்தான். படை வீரர்கள் பலரையும் நடத்திச் சென்று, தனது போர்த் திறத்தைக் காட்டியிருந்தான். ஆதலால் மக்களுக்கு இவனிடத்தில் ஈடுபாடு மிகுதி. ஆகவே ஒரு விதத்தில் பொது மக்களின் கிளர்ச்சி பொருத்தமாகவே இருந்தது. எனினும் அரிஞ்சயன், சுந்தர சோழன் ஆகிய இருவரும் ஆட்சி செய்து மடிந்த பின்னும், செம்பியன் மாதேவியார் தம் மகனை முடி சூட வேண்டும் என்று சொல்லவில்லை.

உரிமையிருந்தும் கூட அவ்வாறு சொல்லாதது, சரித்திரம் காணாத புதுமை. இதனினும் புதுமை மற்றொன்று. தன்னை அரசனாக்க வேண்டுமென்று மக்களே விரும்பியும் கூட அருண் மொழித்தேவன் அச்சமயம் தனக்கு அரசு வேண்டாம் என்றும், ''நமது குல மாணிக்கமாகிய நம்பிராட்டியார் செம்பயின் மாதேவியார், தமது திருவயிறு வாய்த்தஉத்தம சோழர் முடிசூட எண்ணுதல் கூடும். எனவே அவருக்கே முடிசூட்டுக'' என்று கூறிவிட்டான். மக்கள் அவன் கருத்துக்கு மாறு சொல்லவில்லை. அங்ஙனமே உத்தமசோழன் (மதுராந்தகன்)970 இல் முடி சூடி 985 வரையில் அரசாண்டான். அவன் இறந்த பின்பு, அருண்மொழி வர்மர் இராசராசன் என்ற பட்டம் புனைந்து 985இல் சோழ மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இவரே இப்போது நாடெல்லாம் போற்றுகின்ற இராசராச மன்னர்.

செம்பியன் மாதேவியார் இராசராச மன்னருடைய 16ஆம் ஆட்சி ஆண்டில் (1001) காலமானார். இவர் கண்ட முடி மன்னர்கள், அரிஞ்சயன், சுந்தர சோழன், தனது புதல்வனாகிய உத்தம சோழன், இராசராசர், இனி பட்டத்திற்கு வரப் போகிற இளைஞனாகிய இராசேந்திரன் ஆகிய எழுவர். இதுவரையில் சொல்லியது, எவ்வாறு செம்பியன் மாதேவியார் சோழ அரண்மனையில் இருந்த அரசுரிமையில் எந்தக் கோளாறும் நிகழாதபடி இத்தனை தலைமுறைகளில் ஆட்சி செம்மை பெறத் தொடர்வதற்கு உதவி செய்தார் என்பதாகும்.

இனி சமயத்துறையில் இவர் செய்த தொண்டினையும் இங்கு கூறலாம். இவர் தமது கணவர் இளவரசராக இருந்த காலத்தில் தமது திருமணம் நிகழ்ந்த புதிதில் கி.பி. 941 ஆம்

ஆண்டில் திருக்கற்குடி மாதேவருக்கு நந்தா விளக்கு அளித்தார். இது முதற்கொண்டுஇவரது சிவாலயத் தொண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன. தமது கணவர் இறந்தபின் திருநல்லம் (கோனேரிராச புரம்) என்ற பாடல் பெற்ற தலத்தில் உள்ள செங்கற் கோயிலைக் கருங்கற் கோயிலாகக் கட்டி நிலம் அளித்தது பெரும் பணியாகும். அக்கோயிலுக்குக் கண்டராதித்தம் என்று தம் கணவர் பெயரைச் சூட்டினார்.

இதே முறையில் இவர் தென்குரங்காடுதுறை, திருகோடிகா, குத்தாலம், திருத்துருத்தி, திருமணஞ்சேரி ஆநாங்கூர், அகத்தீச்சுரம், திருநறை யூர்த்திச்தீச்சுரம், திருவாரூர் அரநெறி, திருமுதுகுன்றம், திருவக்கரை ஆகிய கோயில்களைப் புதிய கற்கோயில்களாகக் கட்டினார். மேலும் இவர் பல கோயில்களில் தினசரி வழிபாட்டுக் காகவும், விழாக்களுக்காகவும் திருப் பதிகம் பாடுவோருக்காகவும், நந்தவனங்களுக்காகவும் எண்ணற்ற நிபந்தங்கள் அளித்துள்ளார். திருவிளக்குகள், அணிகலன்க்ள் பாத்திரங்கள் முதலிய வற்றிற்காக இவ்வாறு நிபந்தம் அளிக்கப்பட்டது.

திருப்பணி செய்யப்பட்ட கோயில்கள் நீங்க, இவ்வாறு இவரால் பொருளும் நிபந்தமும் அளிக்கப்பட்ட கோயில்கள் திருவெண்காடு, தலைச்சங்காடு, திருவிசலூர், காட்டு மன்னார் கோயில், அகத்தீச்சுரம், திருவையாறு, பந்தணை நல்லூர், கீழைத் திருக்காட்டுப்பள்ளி, திருவேள்விக்குடி, பண்டார வாடை, திருவோத்தூர், திருவல்லம், வட திருமுல்லை வாயில், திருப்புறம்பயம் முதலாகப் பல. செம்பியன் மாதேவியார் தம் வேலைக்காரி ஒருத்தியின் நன்மைக்காகத் திருவெண்காட்டு கோயிலில் பிராமண போஜனம் செய்விக்கும் பொருட்டு நிலதானம் செய்தார் என்று கல்வெட்டு கூறுகிறது. இது இவ்வம்மையாருடைய மனிதப் பண்பை மிக உயர்த்திக் காட்டுகிறது.

அருண்மெழி வர்மன் எல்லோரிலும் இளையவன். குழந்தைப் பருவம் முதலே இவனைத் தூக்கி எடுத்தும் தாமே உணவூட்டியும் உடை உடுத்திச் சீராட்டி வளர்த்தும் வந்தார். செம்பியன் மாதேவியார் பெரிய பாட்டியாராக அரண்மனையில் இருப்பவர்களுக்கு உரிமை அதிகம் உண்டல்லவா? அம்மையார் எந்த நேரமும் தல யாத்திரை செய்து கொண்டே இருந்தார். வடக்கே இப்போது உள்ள சென்னைக்கு அப்பால் இருக்கும் வட திருமுல்லை வாயில் வரைக்கும் இவர் போய் வந்த போதெல்லாம், அருண்மொழித் தேவனும் உடன் சென்று வந்தான். இவர் செய்த ஒவ்வொரு கோயில் நிர்மாணத்தையும் திருப்பணியையும், மானியத்தையும் நேரடி இவன் உடன் இருந்து பார்த்தான். பார்த்தபோது குழந்தை உள்ளத்தில் முடிந்தபோது தானும் அவ்வாறு செய்யவேண்டும் என்ற எண்ணமும் இவன் மனத்தில் உண்டாயிற்று.

அதனோடு, சிவாலய நிர்வாகத் துறையில் பெரிதும் வல்லவனும் ஆனான். இங்ஙனமாக செம்பியன் மாதேவியாருடைய தொடர்பினால் முழுப்பயன் இவனே பெற்றான். இவனுக்குத்தான் அம்மையாரோடு மிக நீண்டகாலத் தொடர்பு இருந்தது என்பதும் நோக்கத்தக்கது. இவன் பட்டமேற்று (985) 16 ஆண்டுக் காலம் (1001) அம்மையார் உயிரோடு இருந்தது தமிழ்நாடும் சைவமும் செய்த பெரும் புண்ணியம். இக்காலம் முழுமையும் இவர் இராசராச மன்னருக்கு உறுதுணையாகவும், தெய்வப் பணியின்

வழிகாட்டியாகவும் தூண்டுகோலாகவும் விளங்கினார். இவ்வரசர் தமிழ்நாட்டை சிவலோகம் ஆக்கும் நெறியில் செலுத்தியதைக் கண்ணாரக் கண்டு களித்தார்.

சிறப்பான ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிடுவோம். சைவத் திருப்பாசுரங்களைப் பற்றிக் கேள்வியுற்ற இராசராச மன்னர், மறைந்து போயிருந்த தேவாரங்களை நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு வெளிப்படுத்தி, பண் வகுத்து ஆட்சிக்குக் கொண்டு வரச் செய்தார். திருப்பதிகம் ஓதுவதற்கு அம்மையார் நிபந்தம் அளித்தார் என்று கல்வெட்டு கூறுகிறது. இதை உடன் கண்டிருந்ததனாலேதான் இராசராசர் எல்லாவற்றையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற ஆசை கொண்டார். தேவாரங்களைச் செப்பேட்டில் எழுதி வைத்தார். தேவாரம் பாடுவதற்குக் கணக்கில் அடங்காத மானியங்களை அளித்தார். தஞ்சை பெரிய கோயிலைக் கட்டினார்.

செம்பியன் மாதேவியார் இறந்து 11 ஆண்டுகள் ஆனபின் இராசராச மன்னரின் புதல்வரான இராசேந்திரன் பட்டத்திற்கு வந்தான். அவனை தூண்டுவதற்கு அப்போது அம்மையார் இல்லை. ஆயினும் பால் மணம் மாறாப் பருவத்தில் ஏற்பட்ட உணர்வு என்றும் மாறாதல்லவா? அதனால் இவன் தந்தையைப் போலவே தானும் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற பெருங்கோயில் கட்டினான். கருவூர்த் தேவரைக் கொண்டு திருவிசைப்பா பாடுவித்தான். பின்னால் இந்த மரபில் இரண்டாம் குலோத்துங்கனால் வேண்டப் பெற்று சேக்கிழார் திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் பாடினார். அவனுடைய மகனாகிய இரண்டாம் இராசராசன் மிகப் பெரிய திட்டம் வகுத்துத் தாராசுரம் கோயிலை கட்டினான். அடுத்து இரண்டாம் பட்டத்தில் வந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் திரிபுவனத்தில் சிறப்பு அமைந்த சரபமூர்த்தி கோயிலை கட்டினான். பிற கோயில்கள் எண்ணிலாதன. இவற்றிற்கெல்லாம் மூலம் செம்பியன் மாதேவியார் இராசராசனை ஆற்றுப்படுத்திய சைவ நெறியாகும்.

செம்பியன் மாதேவியார் தம் பெயராலேயே ஓர் ஊரை உண்டாக்கினார். இது தஞ்சை மாவட்டத்தில் சிக்கல், தேவூர் ஆகிய சிவத்தலங்களிலிந்து நான்கு மைல் தொலைவில் செம்பியக்குடி என்ற பெயரால் இப்போது வழங்குகிறது.

இங்கு முன்னமே திருக்கயிலாயமுடையார் கோவில் ஒன்று இருந்தது. இது செங்கற் கோயில். இதை இவர் கற்கோயிலாகக் கட்டி வழக்கம் போல் இதில் தம் கணவர் பூசை செய்யும் வடிவம் அமைத்திருந்தார் (981). இதுவே இவர் கட்டிய கடைசிக் கோயில். இதற்குப் பல வகையான நிபந்தங்கள் அமைத்திருந்தார். இவருடைய மகன் உத்தமசோழனுக்கு மனைவிமார் ஐவர். இவ்வைவரும் தங்கள் மாமியாரின் பிறந்த நாளாகிய சித்திரைக் கேட்டையில் இங்கு விழா நடத்துவதற்காக மானியங்களும் அளித்திருக்கிறார்கள். இப்படி அம்மையார், மருமகள் அதிலும் ஐவர் மருமகள்மார் மெச்சிய மாமியாராக வாழ்ந்திருந்தார்.

இராசேந்திரனைப் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். கங்கை கொண்ட சோழன் என்று சிறப்புப் பெற்ற பேரரசன். இவன் 1012-இல் முடிசூடி 1044 வரையில் பெருமன்னனாக அரசு புரிந்தான். குழந்தைப் பருவத்தில் செம்பியன் மாதேவியார் இவனையும் தூக்கி வளர்த்திருக்கிறார். இவன்

தந்தையை வளர்த்த பாட்டி, கொள்ளுப் பாட்டியாகி இவனையும் கொஞ்சியிருக்கிறார். அந்த நன்றி மறவாமல் இவன் முடி சூடிய ஏழாம் ஆண்டில் அம்மாதேவியார் செம்பியன் மாதேவிக் கைலாயமுடையார் கோயிலில் அவருடைய திருவுருவத்தை எழுந்தருளிவித்தார்.

இக்கோயிலில் அமைக்கப்பட்ட ஒரு மண்டபம் செம்பியன் மாதேவி பெருமண்டபம் என்ற பெயருடையது. இது போலவே செங்கற்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடல் வெங்கடேசப் பெருமாள் கோவில் செம்பியன் மாதேவி பெருமண்டபம் என்ற மண்டபத்தை ஊர்ச் சபையார் கூடுவதற்காக இராசராச மன்னர் கட்டி வைத்தார். திருச்சி மாவட்டம் திருமழபாடிக்கு அருகில் குலமாணிக்கம் செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற ஓர் ஊர் அமைக்கப் பெற்றது. அது இப்போது குல மாணிக்கம். செம்பியக் குடி என இரு ஊராக உள்ளது என்பர். குலமாணிக்கம் என்பது இவ்வம்மையாரைக் குறிக்க இராச ராச மன்னர் கல்வெட்டில் உபயோகித்த தொடர். இதே ஊருக்கு அருகில் அவர் பெயரால் செம்பியன் மாதேவிப் பேரேரி என ஓர் ஏரியும் அக்காலத்தில் அமைக்கப் பெற்றிருந்தது. அப்பகுதியில் வழங்கிய ஓர் அளத்தற்கருவிக்கும், செம்பியன் மாதேவி எனப் பெயரிடப்பட்டிருந்தது. இவையெல்லாம் பின் வந்த சோழ மன்னர் இவ்வம்மையாரைப் போற்றிய முறை என்று கல்வெட்டினால் அறிகிறோம்.

ஒரு பெரும் அரச பரம்பரைக்கே நெறி வகுத்துக் கொடுத்து அதை தாமே நேரில் சுமார் அறுபது ஆண்டுக் காலம் நடத்திச் சென்ற பேராற்றல் இவருடையது.

மங்கையர்க்கரசியார் பரசமயம் புகுந்திருந்த தம் கணவனை விட்டுப் பிரியாது சைவத்தில் முழுகி திருஞான சம்பந்தரை வரவழைத்து அவருடைய அருள் நோக்கால் தம் கணவரையும் நாட்டு மக்களையும் சைவத்திற்குத் திருப்பினார். சோழ அரசியாக இருந்த நம் செம்பியன் மாதேவியாரோ, இளமையில் கணவன் இறந்த பின் தாம் விதவையாகவே, நாட்டின் அரசியலில் குழப்பம் இல்லாது ஒழுங்குபடுத்தி, சில தலைமுறை அரசகுமாரர்களைச் சைவப்பற்று உடையவர்களாக வளர்த்து, அதன்வழியே உலகம் எங்கும் கண்டிராதவாறு நெடுங்காலம் சைவப் பயிர் தழையும்படி செய்தார்.

இன்று தமிழ்நாட்டின் பல பாகங்களில் சென்னைக்கு வடக்கிலும் கூட கணக்கில்லாத பெருங்கோயில்கள் தோன்றி வளர்ந்து நிலைபெற்று, சுற்றிலும் உள்ள மக்களுடைய வாழ்க்கையை நன்னெறிக் கண் நிறுத்தும் நிலையங்களாக அமைந்திருப்பது செம்பியன் மாதேவியாரின் சிவபக்தியாலும் சோழ மன்னர்களைப் பக்தி துறையில் செலுத்திய பயிற்சியினாலுமாகும். இன்றைய சைவம் செம்பியன் மாதேவியார் இட்ட பிச்சை என்பது மிகையாகாது.

85ஆம் ஆண்டு விழா

6, 7, ஜூலை *1991* திருவொற்றியூர்; தொண்டைமண்டல ஆதீனம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

86ஆம் ஆண்டு விழா

30, 31, மே *1992* காஞ்சிபுரம் - தலைவர் - திரு. கொ. நீ. சிங்காரவேலு.

87ஆம் ஆண்டு விழா

1, 2, மே 1993 - திருப்பனந்தாள் - தலைவர் - ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்.

88ஆம் ஆண்டு விழா

26, 27 பிப்ரவரி 1994 - பொள்ளாச்சி ஆனைமலை தலைவர் - தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்.

89ஆம் ஆண்டு விழா

6, 7 மே 1995 - ஸ்ரீ வில்லிப்புத்தூர் தலைவர் - திரு. வை இரத்தினசபாபதி.

தலைவர் உரை

''சைவம் பல்வேறு பிரிவுகளில் பேசப் பெறுகின்றது. இந்தியத் தத்துவ ஞானத்தில் சைவம் என்ற பிரிவில் காஷ்மீர் சைவம், சிவாத்வைத சைவம், வீர சைவம், சித்தாந்த சைவம் என்பவை பேசப் பெறுகின்றன.''

''இந்திய நாட்டில் அருளாளர்களால் உண்டாக்கப் பெற்ற மெய்ப்பொருளியற் கொள்கைகள் எல்லாம் நான்கு கூறுகளைக் கொண்டதாக விளங்கும். அறிவாராய்ச்சியியற் கொள்கை, மெய்ப்பொருட் கொள்கை, சாதனக் கொள்கை, சாதனத்தால் எய்தும் பயன் பற்றிய கொள்கை என்ற இந்நான்கு கொள்கைகளையும் குறைவறச் சொல்லுகின்ற எந்த ஒரு தரிசனமும் முழுமை பெற்ற மெய்ப் பொருட் கொள்கையாகவே தத்துவ ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப் பெறும். அவ்வகையில் காஷ்மீர சைவம், சிவாத்வைத சைவம், வீர சைவம், சித்தாந்த சைவம் என்னும் நான்கும் முற்ற முடிந்த மெய்ப்பொருள் கொள்கைகளாக அமையும் பெருமையுடையனவே யாயினும், அருளாளர்களாலும் தத்துவ ஞானிகளாலும் செப்பனிடப் பெற்று மக்கள் இயக்கமாக மலர்ந்து வாழ்வியற் கொள்கையாகத் தமிழகத்தில் இன்றும் நின்று நிலவி வரும் பெருமையுடையது சைவ சித்தாந்தக் கொள்கையே''

''வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம் என்ற நான்கு அடிப்படைகளில் சமய, தத்துவக் கொள்கைகள் விளக்கப் பெற்றன. அதே சமயத்தில், வேதத்துக்கு முரணான கொள்கைகளும் எழுந்தன. பௌத்த, ஆருகத, உலகாயதக் கொள்கைகள் தமிழகத்தில் தம் செல்வாக்கைப் பயன்படுத்தி வளர முற்பட்ட போதெல்லாம் வேதக் கொள்கைகளும் ஆகமக் கொள்கைகளும் இடையிடையே வந்து மக்கள் மன்றத்தில் விளக்கம் கூறித் தம்மை நிலை நாட்ட முற்பட்டன என்பதையும் காண முடிகிறது.''

''அவ்வகையில் வைதிக நெறி சைவ நெறி என இருவகை நெறிகள் பெருகியோங்கி நிற்க, இவற்றினுள்ளம் உயர்வு தாழ்வு நிலைகள் பேசப் பெற்றன என்பதையும் நாம் காணமுடிகிறது.''

''அருளாளர்களின் வாழ்வையும் வாக்கையும் மூலமாகக் கொண்டு சாத்திர நூல்கள் தோன்ற முற்பட்டன. பன்னிரு திருமுறைகளில் ஒன்றாகிய திருமந்திரம் சாத்திர நூலாகத் திகழ்ந்த போதிலும் - ஞானாமிர்தமே முதல் சாத்திர நூலாகத் தோற்றம் பெற்றது என அறிஞர் கூறுவர்.ஆயினும் மெய்கண்டாரை முன்னிட்டுக் கொண்டு தான் சாத்திர நூல்கள் தமிழகத்தில் வளம் பெறலாயின.

''வேதத்தின் இறுதி நின்ற வேதாந்தம் எனப்பெறும் உபநிடதங்களின் அடிப்படையில் தத்துவக் கொள்கைகள் நிறுவப் பெற்றன. பிரமசூத்திரம்

என்பது மூலமாக அமைய, அதற்கு உரை எழுதுவதன் மூலம் தத்துவக் கொள்கைகள் நிறுவப்பெற்றன. அவ்வகையில், சங்கரர் இராமாநுசர், மத்வர் போன்றவர்களின் தத்துவக் கொள்கைகளின் தாக்கம் தமிழகத்தில் அமைந்தன. நீலகண்ட சிவாசாரியார் பிரமசூத்திரத்துக்குச் சைவ பாடியம் ஒன்றை அமைத்து, அதன் மூலம் சைவக் கொள்கையை நிலை நாட்ட முற்பட்டார்.''

''வரையறை செய்யப் பெற்ற எந்த ஒரு தத்துவக் கொள்கையும் சித்தாந்தமே. பிற கொள்கைகளை ஏற்று, விளக்கி, மறுத்துத் தன்னுடைய முடிந்த முடிவை இது என உறுதிப்படுத்தி நிறுவுவதே சித்தாந்தம். பூர்வபட்சம் செய்து சித்தாந்தம் செய்தல் என்பது எல்லாத் தத்துவக் கொள்கைக்கும் பொது.ஆனால் சைவ சித்தாந்தம் என்ற சொல் முடிந்த முடிபாகிய சைவக் கொள்கை என்ற விளக்கத்துடன் இக்கொள்கைக்குரிய இயற் பெயராகவே அமைந்து விடுகிறது. சித்தாந்தம் என்பதை இயற்பெயராகக் கொண்டதே இத்தத்துவத்தின் தனித்தன்மை.

''இந்தியத் தத்துவ ஞானத்தில் சர்வ சுருதி சமன் வயம் என்ற கொள்கை மரபு வழியில் பணியாற்றப்பட்டு வருகிறது. எந்த ஒரு கொள்கையைப் பற்றியும் பல நூல்கள் தோன்றியிருக்குமேயானால் அனைத்து நூல்களையும் ஒன்றுவிடாமல் தழுவிய நிலையில் அக்கொள்கை விளக்கப் பெறல் வேண்டும் என்பதே சர்வ சுருதி சமன் வயம் என்பதன் பொருள். சர்வ சுருதி சமன் வயம் என்ற கொள்கையை விளக்கிய பெருமை சிவஞான முனிவருக்கு உண்டு''

''மக்கள் நடைமுறை வாழ்வுக்கு அப்பாற்பட்ட எந்த ஒன்றும் 'கொள்கை' என நிற்கும் வலிமை பெறாது. தத்துவம் என்றாலும் அது வாழ்வியல் நெறியே. அவ்வகையில் வாழ்வியல் நெறிகளின் தொகுப்பே சைவ சித்தாந்தம் என்ற பெயரைப் பெற்றது.''

''சங்க இலக்கியங்கள் மேல் கணக்கு, கீழ்க்கணக்கு எனப் பிரிக்கப் பெற்றன. மேல் கணக்கும் பதினெட்டு, கீழ்க்கணக்கும் பதினெட்டே. மேல் கணக்கு என்பன வாழ்வியல் நிகழ்வுகள்; கீழ்க்கணக்கு என்பன வாழ்வியல் கோட்பாடுகள். சிவஞான போதம் என்பது வாழ்வியல் நெறியை வளமாக்கித் தெரிவிக்கும் கொள்கை நூல், அல்லது வாழ்வியல் கோட்பாட்டு நூல் என்று கொள்ளலாம்.

''பெருமன்றம் நடத்த இருக்கும் நூற்றாண்டு விழாவைத் தன் சொந்தக் கட்டிடத்தில் தான் நடத்துவது என வரையறை செய்து கொண்டு உழைத்தல் வேண்டும். பெருமன்றம் வெளியிடும் சித்தாந்த (தமிழ், ஆங்கிலம்) இதழ்களில் காணப்பெறும் கொள்கை விளக்கக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட வேண்டும். சித்தாந்தம் இதழில் 50 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப் பெற்ற அரிய கட்டுரையொன்றன் சுருக்கத்தைத் தொடர்ந்து வெளியிடுதல் வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகத்துச் சைவ சித்தாந்தத் துறையோடு இணைந்து கோடைக்கால சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்பைக் கல்லூரி ஆசிரியர்களுக்காக ஒரு திங்கள் அளவில் நடத்தலாம். சென்னை அல்லாத சுற்றுப்புற ஊர்களை அல்லது பேரூர்களைத் தேர்ந்தெடுத்து சைவ சித்தாந்தக் கொள்கையை வாழ்வியற் பயிற்சிக் களங்களாக அமைத்து ஒரு திங்கள் பயிற்சி நடத்தலாம்.

90ஆம் ஆண்டு விழா

16, 17 மார்ச் 1996 : திருவாரூர் தலைவர் - திரு. கு. சுந்தரமூர்த்தி. தலைவர் தன் உரையில் சைவத்தின தொன்மை, முதன்மை, சிவபெருமானின் அருஞ்செயல்கள், தத்துவ நோக்கு, இறை, உயிர், தளை பற்றி எடுத்துரைத்தார்கள்.

91ஆம் ஆண்டு விழா

24, 25 மே 1997 : திருப்பாதிரிப்புலியூர் தலைவர் - சிவஞான பாலய சுவாமிகள்.

மங்கையர் மாநாட்டுத் தலைவராகப் பொறுப்பேற்ற டாக்டர் திருமதி வெ. கனகசுந்தரம் அவர்களின் உரை.

''அருளாளர்கள் பாடிய பாடல்களை உணர்ந்து அன்பை வளர்த்து வழிபட வேண்டும். தொண்டுச் செல்வத்தைப் பெற நம் நாட்டு மகளிர் நடைமுறைப் படுத்தல் வேண்டும். சமயத்துறையில் மகளிர் அருட்பணியாளராக வளருவதற்கு உறுதுணையாவது அனைவரது கடமையாகும். மகளிர்க்கு மனவலிமை வேண்டும். மனத்தைச் செம்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். தியாகம் நிறைந்த மனமாக மாற வேண்டும். சமயச் சொற்பெருக்காற்றும் வல்லுநர் மகளிர் தொகை பெருகுதல் வேண்டும். பெண்களுக்குரிய பாட்டு வகைகளான எம் பாவை, அம்மானைப்பாட்டு, தும்பி, குயில், கிளி முதலிய தூதுப்பாட்டுக்கள், தோணோக்கம், ஊசல், திருப்பள்ளியெழுச்சி போன்ற பாடல்களைப் பெண்கள் பயிலச் செய்தல்வேண்டும்.

92ஆம் ஆண்டு விழா

29, 30 மார்ச் 1998 : அவிநாசி. தலைவர் - கூனம்பட்டி ஆதீனகர்த்தர்.

93ஆம் ஆண்டு விழா

20, 21 மார்ச் 1999 : திருவானைக்கா தலைவர் திரு. கு. வைத்யநாதன்.

தலைவர் உரை

''வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத்திறன் இங்குத் தெரிக்கல் உற்றாம்''

[சிவப்பிரகாசம் - 7]

''வேதாந்தம் என்றது, வேதத்தின் முடிபுகள் ஆகிய உபநிடதங்களை, வேதாந்தம் எனப்பெயர் பெற்ற ஏகான்ம வாத நூலை அன்று என உணர்த்துதற்கு, 'வேதத்தலைதரு பொருளாய்' என இறுதியிலும் (சிவப்பிரகாசம் - 99) கூறினார்'' என்று சிவஞான முனிவர் விளக்கியிருக்கிறார். இவ்விளக்கத்திலிருந்து தெளிவு பெற வேண்டிய செய்திகள் வருமாறு:

1) வேதாந்தம் ஏகான்மவாத நூல் என்பது நடைமுறை உண்மை; அப்படியிருக்கும் பொழுது, சிவப்பிரகாசம் குறிப்பிடும் வேதாந்தம், உபநிடதங்கள் எனக் கூறுவது பொருந்துமா?

ரிக் முதலிய நால் வேதங்களுக்கு அனுசரணையாக இருக்கும் ஆறு தர்சனங்களில் ஒன்றாக உள்ளது வேதாந்தம். இந்த நான்கு வேதங்களில் ஞான காண்டமாகத் திகழ்பவை உபநிடதங்கள் - துவைதம், விசிஷ்டாத்துவைதம், அத்துவைதம் ஆகிய இந்த மூன்று நிலைகளை உபநிடதமானது, 'அவஸ்தாத்ரயம்' என்னும் கோட்பாட்டின் - வாயிலாக விளக்குகிறது. அஃதாவது, துவைத நிலை (மாத்துவம்) - ஜாக்கிராவஸ்தை; பேதாபேத நிலை (விசிஷ்டாத்வைதம்) சொப்ன நிலை; - அத்துவைதநிலை (சங்கரர் மதம்) - சுஷூப்தி (உறக்க நிலை என்று சித்பவானந்தர் கூறியுள்ளார்.

ஆக சிவப்பிரகாசம் கூறும் வேதாந்தம், வடமொழி வேதங்களின் முடிவு ஆகிய உபநிடதங்களாக இருக்க முடியாது என்பது இப்பொழுது இனிதே பெறப்படும்.

2. சித்தாந்த சைவர்களுக்கு உரிய வேதம் ரிக், யசுர் முதலிய வடமொழி வேதங்கள் எனக் கூறுவது பொருந்துமா?

ரிக் முதலிய வடமொழி வேதங்கள் அநாதியே உள்ளவை என்கிறார்கள்; இறைவனால் அவை செய்யப்பட்டதாக வேதாந்திகள் ஒப்புக் கொள்வதில்லை. கல்லாலின் கீழ் அமர்ந்து இறைவன் வேதம் சொன்னதாகத் திருமுறைகள் கூறுகின்றன. எனவே மேற்படி வடமொழி வேதங்கள் சித்தாந்த சைவத்திற்கு உரியன எனக் கூறு முடியாது.

3. வடமொழி வேதங்களில் சைவ சித்தாந்தம் கொள்ளும் அத்துவிதக் கொள்கை பேசப்படுகின்றனவா?

அபேதம், பேதம், பேதா பேதம் என்னும் மதங்களின் அத்துவைதக் கொள்கைகள், சிவாகமம் கொள்ளும் அத்துவைதக் கொள்கைகளுக்குப் பொருந்தமாட்டா என்று சிவப்பிரகாசம் 7ம் பாடல் தெளிவாகக் கூறுகின்றது.

சுவாமி சித்பவானந்தா அவர்கள் கூற்றுப்படி உபநிடதங்கள் ஆகிய வடமொழி வேதமுடிவுகள், மேற்கண்ட மூன்று மதங்களையும் நனவு கனவு உறக்கம் என்னும் மூன்று நிலைகள் என்கின்றன. எனவே வடமொழி வேதங்களில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் இடம் பெறவில்லை என்பது தெளிவாகிறது.

4. வடமொழி வேதங்களில் பல கடவுட்கொள்கை உள்ளதே? அது சைவ சித்தாந்தத்திற்கு எப்படி உடன் பாடாகும்?

சித்தாந்த சைவர்களுக்குப் பரமபிரமாணமாக உள்ளவை, பன்னிரு திருமுறைகள் ஆகும். இவையனைத்தும், சிவபெருமான் ஒருவனே கடவுள், ஏனையோர் உயிர்களே என்று முழக்குகின்றன. வடமொழி வேதங்களில் இந்திரன், வருணன், அக்னி முதலிய உயிர்த் தெய்வங்கள் கடவுள் எனப் பேசப்படுகின்றன. ஆகவே வடமொழி வேதங்கள், சித்தாந்த சைவத்திற்கு உடன்பாடாகா என்பது பெறப்படும்.

5. சிவப்பிரகாசம் கூறும் வேதாந்தம் யாது? சிவபெருமான் கல்லாலின் கீழ் அமர்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்மறைகளை அருளிச் செய்தான் என்று சமயக்குரவர்கள் நால்வர் வாக்குகளிலும் காணப் படுகிறது.

வடமொழி வேதங்களை பிராமணர் அல்லாதார் ஓதக்கூடாது என்றும் கூறுகிறார்கள். அவ்வாறாயின் மனித குலம் முழுவதற்குமான வேதமான வடமொழி வேதங்கள் அமையவில்லை என்பதும் பெறப்படுகிறது.

வடமொழி வேதங்களில் ''சிவன்'' என்னும் பெயர் இடம் பெறவில்லை என்று ஜி.யூ.போப் கூறுகின்றார்.

''அறம் பொருள் இன்பம் வீடு'' என்னும் நான்மறைகளே சைவர்க்குரிய வேதம். சைவர்களின் வேதம் திருக்குறளே. சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் வேதாந்தம் எனப்படும்.

94ஆம் ஆண்டு விழா

15, 16 ஏப்ரல் 2000; சிதம்பரம் தலைவர் திரு. ச. மெய்யப்பன்.

95ஆம் ஆண்டு விழா

19, 20, மே *2001;* இரத்தினகிரி. தலைவர் தொண்டை மண்டல ஆதீனம்

சீர்வளர்சீர் திரு. அம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்.

96ஆம் ஆண்டு விழா

11, 12 மே 2002; திருப் பெண்ணாகடம். தலைவர் திரு.இ.சுந்தரமூர்த்தி.

97ஆம் ஆண்டு விழா

14, 15 ஜூன் 2003; புதுச்சேரி, தலைவர் திரு. கு. வைத்திநாத ஈசான தேசிகர்.

98ஆம் ஆண்டு விழா

2004 : திருக்கோவலூர் - தலைவர் திரு. ஆ. ஆனந்தராசன்.

தலைவர் உரை

''சைவ சித்தாந்தத்தின் சிறப்புக்களுள் ஒன்று, அது தனது கொள்கைகளைப் படி வழிமுறையில் அமைத்துச் சொல்வதாகும். ஆன்மாவின் அறியுந் தன்மை பற்றியும் அதற்கேற்ப அது மேற்கொள்ளுதற்குரிய சாதனம் பற்றியும் கூறுமிடத்து இப்படி முறை அமைந்து விளங்குதலைக் காணலாம்''

''ஆன்மாக்கள் எண்ணில்வாய் உள்ளன என்று சைவ சித்தாந்தம் கொள்ளும். ஆன்மாக்களது பக்குவ வேறுபாடுகளுக்கு ஏற்பப் பலவகைச் சமயங்களும் சமய நூல்களும் அமைந்துள்ளன. அச்சமயநெறிகள் அனைத்தும் இறைவன் அருளால் தோன்றியவையாகும். ஆகையால் அவரவரும் தம்தம் அறிவு நிலைக்கு ஏற்பக் கைக்கொள்ளும் வண்ணம் சமயத்தை ஒன்றாகச் செய்யாது பலவாகச் செய்வித்துள்ளான்.''

''அறிவு நிலையில் மிக மந்தமாய் நிற்போர் முதலில் உலகாயத நெறியைக் கைக்கொள்வர். அடுத்த பிறப்புகளில் உலகாயத நெறிக்கு மேம்பட்ட பௌத்த சமண சமயங்களை அடைவர். இச் சமயங்கள் கடவுள் கொள்கை இல்லாதவை. பின்னர் புறச்சமயம், அகச்சமயம் என உணர்ந்தும் ஒழுகியும் வந்ததன் பயனாக முடிவில் சித்தாந்த நெறியைத் தலைப்பட்டு சரியை கிரியை யோகம் என்னும் தவத்தினை மேற்கொண்டு, அத்தவமுதிர்ச்சியில் ஞானத்தைப் பெற்றுச் சிவபெருமானது திருவடியின்பத்தை எய்துவர்.''

''இனி சித்தாந்தச் சைவ நெறியில் வேதம், சிவாகமம் என்னும் இரண்டும் முதல் நூல்கள் எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன. முதல் நூலாகக் கொடுக்கப்பட்டது ஒன்றாக இராமல் இரண்டாக நிகழ்வதற்குக் காரணம் யாது, எனில் உண்மையை முதலிலேயே முழுமையாகவும் நுட்பமாகவும் உணர்த்தினால் கேட்போர் அதனை அப்படியே விளங்கிக் கொள்ளுதல் இயலாது. கேட்போரது பக்குவத்திற்கு ஏற்ப முன்னர்ப் பொதுவாகவும் பின்னர் சிறப்பாகவும் படிப்படியாகவே உணர்த்துதல் வேண்டும். அம்முறைமைக்கு ஏற்பவே பொருள்களைப் பொதுவாக உணர்த்தும் வகையில் வேதம் என்னும் பொதுநூலும், உண்மையாக உணர்த்தும் வகையில் சிவாகமம் என்னும் சிறப்பு நூலும் செய்தளிக்கப் பெற்றன. இவ்வாறு ஆன்மாக்களது பக்குவ வேறுபாடு கருதிப்படி முறையில் உணர்த்த வேண்டும் என்னும் கருத்துப் பற்றியே இறைவன் தனது நூலைப் பொதுவும் சிறப்பும் என்று இரண்டாகச் செய்தான்.

99ஆம் ஆண்டு விழா

25.9.2004; சென்னை. தலைவர் திரு.கு. வைத்தியநாத ஈசான தேசிகர்.

100ஆம் ஆண்டு விழா
நூற்றாண்டு விழா

ஏ.எம். சுவாமிநாதன்

சதானந்தன்

22, 23, 24 ஜூலை 2005. சிதம்பரம்.

22.7.2005 : காலை 9.00 : தலைமையுரை : டாக்டர் திரு. ஏ.எம்.சுவாமிநாதன். தொடக்கவுரை : மாண்புமிகு டி.ராஜு. வாழ்த்துரை : முனைவர் திரு.எம். இரத்தினசபாபதி.

நூல்கள் வெளியீடு : வெளியிடுபவர்கள் டாக்டர் திரு. பு.ரா.சுந்தரவடிவேலு.திரு.ந.ஒளியரசு, முனைவர் அ.நாகலிங்கம், முனைவர் திரு.ப. இராமன், திரு.சு. திருநாவுக்கரசு பிள்ளை.

நூற்றாண்டு விழா மலர் வெளியீடு : பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

நூற்றாண்டு விழாப் பேருரை : முனைவர் திரு.டி.சித்தலிங்கையா.

சித்தாந்த சரபம் விருதளிப்பு

பெறுபவர் : மலேசியா டான்) மு.சோமசுந்தரம் செட்டியார்.

பாராட்டுரை : திருக்கோவலூர் ஆதீனம் தவத்திரு சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

அருளாசி : தருமையாதீனம் சீர்வளர்சீர் சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

பிற்பகல் 3.00 மணி : தலைமை உரை: முனைவர் திரு. க. பாஸ்கரன்.

பொருள் : ''அருளாளர் பார்வையில் சைவ சித்தாந்தம்''

1) முனைவர் திரு வேல் கார்த்திகேயன் (பட்டினத்தடிகள்);

2) முனைவர் திரு. பா. சுந்தர் (அருணகிரி நாதர்);

3) முனைவர் திருமதி ஞானப்பூங்கோதை (சிவப்பிரகாசர்);

4) முனைவர் திரு.சிவ. மாதவன் (தாயுமானவர்);

5) திரு. முருக இராமலிங்கம் (குமரகுருபரர்);

6) திரு. மீ. சிவ சண்முகம் (பாம்பன் சுவாமிகள்)

7) திரு. தே.ரா. ஜெயராமன் (ஞானியார் சுவாமிகள்);

8) திரு. செ. வைத்தியலிங்கம். (மறைமலையடிகள்)

ஆய்வரங்கம் 3.00 : தலைமையுரை - முனைவர் திரு. டி.பி.சித்தலிங்கையா.

பொருள் : ''சைவ சித்தாந்தமும் பிற தத்துவங்களும்''

1) திரு. கு.வைத்தியநாத ஈசான தேசிகர் (அத்துவைதம்);

2) திரு. மு. வைத்திய நாதன் (வைணவம்);

3) திரு. முனைவர் திரு. கே. கணேசலிங்கம் (பௌத்தம், சமணம்,)

இரவு 7.00 : திரு. கே.பி. அறிவானந்தம் குழுவினரின் ''திருஞான சம்பந்தர்'' நாடகம்.

23.7.2005 சனிக்கிழமை

காலை 8.30 : தலைமையுரை : திரு.கு.ஆளுடைய பிள்ளை

ஆசியுரை : திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

நூற்றாண்டுவிழாப் பேருரை : திரு.கே. கணேசலிங்கம்''தமிழர் தத்துவம்'' சிறப்புரை : திரு. யு.ஆர்.உமாநாத் தீட்சிதர்.

காலை 1.00 : தலைமையுரை : திரு.தா.ம. வெள்ளைவாரணம்.

பொருள் : ''பன்னிரு திருமுறைகளில் சைவசித்தாந்தம்'' 1) திரு. எ. வேலாயுதனார் (1, 2, 3 திருமுறைகள்)

2) முனைவர் திரு. த. அகர முதல்வன் (4, 5, 6 திருமுறைகள்)

3) திரு. இரா. இராசசேகரன் (ஏழாம் திருமுறை)

4)திரு. ஆ. திருவாசகன் (எட்டாம் திருமுறை)

5) முனைவர் திரு. மு. சிவச்சந்திரன் (ஒன்பதாம் திருமுறை)

6) முனைவர் திரு. சு. திருநாவுக்கரசு (பத்தாம் திருமுறை)

7) முனைவர் திரு. த. அமிர்தலிங்கம் (பதினோராம் திருமுறை)

8) முனைவர் திரு. இரா. செல்வக் கணபதி (பன்னிரண்டாம் திருமுறை)

காலை 10.00 : சைவ தத்துவங்கள் ஆய்வரங்கம்

தலைமையுரை : திரு. வே.சிவ சுப்ரமணியன்

1) திரு. மீ- முருகலிங்கம் (ஆன்ம தத்துவம்)

2) தரு.மீ. சிவசண்முகம் (வித்தியா தத்துவம்)

3) முனைவர் திரு.அருணை. பாலறாவாயன் (சிவதத்துவம்)

பிற்பகல் 3.00 மணி : தலைமையுரை - மலேசியா டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார்.

பொருள் : 'மெய்கண்ட சாத்திரங்கள்''

1) முனைவர் திரு.மு. அருணகிரி (திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும்)

2) முனைவர் திரு. ச. கங்காதரன் (சிவஞான போதமும் சிவஞான சித்தியாரும்)

3) திரு. ஆதி. முருகவேள் (சிவப்பிரகாசமும் வினாவெண்பாவும்.

4) முனைவர். திரு. பழ. முத்தப்பன்.

5) திரு. சு. சண்முகவேல் (போற்றிப் மஃறொடையும், கொடிக்கவியும்)

6) முனைவர் திரு.ஆர்.கோபால கிருஷ்ணன் (நெஞ்சு விடு தூது)

7) முனைவர் திரு. அரங்க. இராமலிங்கம் (உண்மை விளக்கமும், உண்மை நெறி விளக்கமும்)

8) முனைவர் திரு. அருணை பாலறாவாயன் (சங்கற்பநிராகரணம்)

பிற்பகல் 3.00 : ஆய்வரங்கம்

தலைமையுரை : முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி.

பொருள் : ''முப்பொருள்''

1) முனைவர் திரு.மு. செல்வநாதன் (பதி இலக்கணம்)

2) முனைவர் திரு. இர. சுந்தரமூர்த்தி (பசு இலக்கணம்)

3) திரு.அ. குஞ்சிதபாதம் (பாச இலக்கணம்)

இரவு 7.00 : திருமுறை இசை - திருமதி ஜானகி சுவாமிநாதன் குழுவினர்.

24.07.2005

காலை 8.30 : ஆதீனம் தவத்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்.

சிறப்புரை : திரு. த. பிச்சாண்டி, திருமதி சொர்ணா சோமசுந்தரம்,

காலை 10.00 : தலைமையுரை - முனைவர் திருமதி ப. நீலா.

பொருள் : இலக்கியங்களில சைவசித்தாந்தம்''

1) முனைவர் திருமதி சாரதா நம்பியாரூரன் (பத்துப்பாட்டு)

2) திருமதி முனைவர் சரளா ராஜகோபாலன் (எட்டுத்தொகை)

3) திருமதி முனைவர் கஸ்தூரி ராஜா (திருக்குறள்)

4) முனைவர் வள்ளியம்மை பழநியப்பன் (கந்தபுராணம்)

5) திருமதி மு.இரகுபாய் (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்)

6) திருமதி மதிவேலாயுதம் (திருப்போரூர் சந்நிதிமுறை)

7) முனைவர் திருமதி வெ. கனகசுந்தரம் (அபிராமி அந்தாதி)

8) திருமதி வாசுகி கண்ணப்பன் (நாட்டுப் புற இலக்கியம்)

காலை 10.00 : ஆய்வரங்கம்.

தலைமையுரை : திரு. எஸ். தியாகராஜன்.

பொருள் : ''இன்றைய நடை முறையில் சைவ சித்தாந்தம்''

1) டாக்டர் மு.குப்புசாமி (அறிவியல்)

2) திரு. ஜெ. மகாதேவன் (வாழ்வியல்)

3) முனைவர் தவத்திரு மௌன குமாரசுவாமித் தம்பிரான் (அருளியல்)

பிற்பகல் 2.30 : சைவசித்தாந்தம் வினா விடை

விடையளிப்பவர்கள் : முனைவர் திரு. கு.சுந்தரமூர்த்தி; பேராசிரியர் திரு. தா.ம. வெள்ளைவாரணம்; பேராசிரியர் திரு. வே. சிவசுப்பிரமணியன், திரு. மு. சோமசுந்தரம் செட்டியார், திரு. எம். கந்தசாமி.

பிற்பகல் 4.00 : தலைமையுரை : தொண்டைமண்டல ஆதீனம் சீர்வளர்சீர் திருவம்பல தேசிக ஞானப்பிர்காச பரமாச்சாரியார் சுவாமிகள்

சிறப்புரை : திரு. டி.வி. வெங்கடராமன்

தொகுப்புரை : திரு. ச. மெய்கண்டதேவன்.

நிறைவுரை : ஆசியுரை : தவத்திரு திரு. பொன்னம்பல அடிகளார், குன்றக்குடி.

இரவு 7.00 : திருமதி பத்மினி கபாலிமூர்த்தி ''நாயன்மார் - ஒலிஒளிக்காட்சி''

மாநாட்டுத் தலைமையுரைகள் - ஒரு பார்வை

சைவசித்தாந்தப் பெருமன்றம் (சமாஜம்) ஆண்டு தோறும் நடத்தும் ஆண்டு விழாக்களும் அங்கு நிகழ்த்தப் பெறும் சொற்பொழிவுகளும் சிறப்பு வாய்ந்தவை ஆகும். குறிப்பாக மாநாட்டுத் தலைமைச் சொற்பொழிவுகள் ஒவ்வொன்றும் தங்கக் கருவூலம்; பன்முக ஒளி வீசுபவை; நூறு சொற்பொழிவுகளையும் (ஒரு சில இடம் பெறவில்லை) தொகுத்து ''மாநாட்டுத் தலைமைப் பேருரைகள்'' என நூலாக வெளியிட்டுள்ளனர். அந்த நூலைப் படித்தால் சைவ சமயம் பற்றியும், சைவ நூல்கள் பற்றியும், சைவ சித்தாந்தம் பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம். சைவ சமயத்தின் இன்றயை நிலை பற்றியும், சைவசமய வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டுவன பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

ஆங்கிலத்தில் சிறப்பாக உரையாற்றக் கூடிய திரு. பொன்னம்பலம் ராமநாதன் தமிழிலும் மிகச் சிறப்பாகப் பேசியிருக்கிறார் (1906). அதுவும் சித்தாந்தத்தையும் வேதாந்தத்தையும் ஒன்றுபடுத்திப் பேசியிருக்கிறார். ஐந்தாவது மாநாட்டில் திரு. ப. சிவலிங்கப்பா ''வீர சைவம்'' பற்றி உரையாற்றினார். அக்கால கட்டத்தில் திருமதி ஆண்டாள் அம்மாள் பேச்சு நட்சத்திரப் பேச்சாக அமைந்திருந்தது. 1929 (24ஆம்ஆண்டு விழா தலைமையுரையில் மறைமலை அடிகள் சங்ககாலத் காதல் வாழ்க்கையைச் சைவத்தில் பிரதிபலித்துக் காட்டினார். 25 வது மாநாட்டில் திரு. வி.க. ''நினைப்பவர்மனம் கோயிலாகக் கொண்டவன்'' என்ற தேவார வரியை எடுத்துக் கொண்டு இறைவனை வழிபடுமாற்றை மிக அற்புதமாக எடுத்துரைத்தார். திரு.கா. சுப்பிரமணிய பிள்ளை ஆய்த எழுத்தினை எடுத்துக் கொண்டு மெய்யுணர்தல் பற்றி விளக்கினார். இப்படி ஒரு விளக்கமா? 27வது மாநாட்டில் (1932) திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளை சைவ சித்தாந்தத்தை அறிவியலோடு தொடர்பு படுத்திப் பேசினார். 41 ம் ஆண்டு விழாவில் (1946) உரையாற்றிய திரு. வையாபுரி பிள்ளையவர்கள் அக்கால கட்டத்திய இக்கட்டான சைவர் நிலையை அழகுறப்படம் பிடித்துக் காட்டினார்.

அந்த இக்கட்டான நிலையில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதனை அவருக்கே உரிய முறையில் நூலாராய்ச்சி, பதிப்பு என அமைத்துப் பேசியுள்ளார். அப்படி ஒரு ஆய்வுரையை எந்தச் சைவ மேடையும் இதுவரை கண்டதில்லை. தத்துவ விசாரணையில் நம் நாட்டு முறைகளுக்கும் மேலைநாட்டு முறைகளுக்கும் உள்ள வேறுபாட்டை மிக அழகாக எடுத்துரைத்து நம்முடைய தத்துவ விசாரணை எப்படி அமைய வேண்டும் என்று எடுத்துரைத்தார் இன்றுவரை அவர் கருத்து செயல் வடிவம் பெறவில்லை. 44ம் ஆண்டு விழாவில் திரு. தெ.பொமீ. தமிழ்நெறி - சங்க இலக்கிய நெறி - சித்த நெறி - சித்தாந்த நெறி என அனைத்தையும் ஒன்றுபடுத்தி கிறித்துவ நெறி, அராபி நெறி, வேத நெறி, ஆகியவற்றையும் இணைத்து சங்கப்புலவர்கள், நால்வர் பெருமக்கள், தாயுமானவர், வள்ளலார் கண்டகாட்சி என உலகக் காட்சியாய்க் கண்ட அழகே அழகு! தமிழறிவுப் பேராறு உலகெங்கும் பாயும் ஆனந்தக் காட்சி! 44வது மாநாட்டில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அக்கால கட்டத்திய - மதமாற்றம், அரசின் மத சார்பற்ற தன்மை, சைவம் தாழ்ந்துள்ள நிலை - என சைவ நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அந்நிலை

இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது. 51வது மாநாட்டில் திரு.ந. ரா.முருகவேள், இளைஞர்களுக்கு என்னென்ன சிக்கல்கள், குழப்பங்கள் வருமோ அவற்றிற்கெல்லாம் பதிலளிக்கும் விதமாக எடுத்துரைத்தார். 57 ஆம் ஆண்டு விழாவில் திரு. நல். முருகேச முதலியார் சைவ சமயத்தை உலகச் சமயங்களோடு ஒப்பிட்டுப் பேசினார். மேலும் சைவ சித்தாந்தக் கருத்துகளை அறிவியலோடுஇணைத்துக் கூறினார். வெள்ளை வாரணனார் தலைமையுரை *1973)* திருமுறைகளின சாரம் ஆகும். திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் *(1984)* தலைமையுரை சைவ சித்தாந்தப் பிழிவு ஆகும். திரு. அருணை வடிவேல் முதலியாரின் தலைமை உரை ஆகமங்களைப் பற்றிய ஆய்வு ஆகும். திரு. பெ. திருஞான சம்பந்தம் அவர்கள் தம் தலைமையுரையில் *(1987)* காஷ்மீர சைவத்துடன் சைவ சித்தாந்தத்தை இணைத்துக் கூறினார். திரு. மு. அருணாசலம் *(1990)* செம்பியன் மாதேவியின் தியாக வாழ்வு பற்றியும், சைவப்பணிகள் பற்றியும் வரலாற்றுப் பார்வையில் எடுத்துரைத்தார். திரு. வை. இரத்தினசபாபதி உரை வீரசைவ உரை *(1995)*, திரு. கு. வைத்தியநாதன் தன் தலைமையுரையில் *(1999)* ‘‘அறம் பொருள், இன்பம், வீடு என்னும் நான்மறைகளே சைவர்க்குரிய வேதம்; சைவர்களின் வேதம் திருக்குறள்; சைவத் திருமுறைகளே வேதாந்தம்’’ என முடிவு கட்டினார். திரு. ஆனந்தராசனின் தலைமையுரை ‘‘வேதாந்த தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்’’ பற்றியது ஆகும்.

ஒவ்வொரு தலைமையுரையுமே தனியாக முனைவர் பட்ட ஆய்வுக்கு உரியது. இப்படி ஒரு பரந்து பட்ட பேரறிவை நமக்குத் தருவன சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைமையுரைகள்.

பெருமன்றத்தின் பிற பணிகள்

பெருமன்ற மாநாடுகள் தமிழகத்தின் பலபகுதிகளிலும் நடைபெற்றமையால் தமிழகமெங்கும் பெருமன்றத்திற்குச் செல்வாக்கு இருந்தது. ஆரம்ப காலங்களில் தமிழக மன்றங்கள் இணைந்து செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெருமன்ற வரலாறு இருபதாம் நூற்றாண்டு சைவ வரலாறு எனலாம். சைவ சமய வளர்ச்சியில் பெருமன்றம் காட்டிய அக்கறை தலைமையேற்றவர் களின் உரையில் காணலாம். 1929இல் திருப்பாதிரிப் புலியூரிலும், திருநெல்வேலியிலும் பெருமன்றம் கூட்டிய சைவப் பெரியார் மாநாடும், தனிக் கூட்டமும் சைவ சமய வளர்ச்சிக் காகவே முழுக்க முழுக்கக் கூட்டப் பட்டவை ஆகும். அவற்றைத் தொடர்ந்து வரும் கூட்டங்களில் (1931ல்) சைவ சமயத்தின் ஆகப்பெரிய அறிஞர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு பொறுப்பை ஒப்படைத்து மூன்று திங்களுக்குள் முடித்துத் தர வேண்டும் எனக் கேட்கக்கூடிய அன்புரிமை பெருமன்றத்திற்கு இருந்திருக்கிறது. பெருமன்றம் இளைஞர்களையும் விட்டு வைக்க வில்லை. 1930ல் சைவ இளைஞர் களைக் கொண்டே சைவ இளைஞர் மாநாட்டினை நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றிச் செயல் படவும் வைத்தது. இந்த முயற்சிகள் அனைத்தும் முழுமை அடைந்திருந்தால் சைவ மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

தொடக்க காலங்களில் ஆண்டு விழாத் தலைவரே சமாஜத் தலைவராகவும் இருந்திருக்கிறர். 1959க்குப் பிறகு ஆண்டு விழாவில் சமாஜத் தலைவர், செயலர் போன்ற பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொடக்க காலங்களில் பெருமன்றம் சைவ சித்தாந்தக் கோடை வகுப்புள்,

மாணவர்களுக்குச் சைவ சமயத் தேர்வுகள் நடத்தியது.

இதழ் வெளியீடு

பெருமன்றத்தின் மிகப் பெரிய தொண்டு சித்தாந்தம் என்ற தமிழ் மாத இதழும் ஆங்கில முத்திங்கள் இதழும் வெளியிடுவதே ஆம். சித்தாந்தம் 1912லிருந்து வெளிவருகின்றது. நடுவில் சில ஆண்டுகள் நடக்கவில்லை. இதுபற்றிய முழுவிவரங்கள் - 20ம் நூற்றாண்டு சைவ வரலாறு நான்காம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. ஆங்கில இதழ் 1965லிருந்து வெளிவருகின்றது.

நூல் வெளியீடு

நூல் வெளியீட்டிலும் பெருமன்றம் பெருந்தொண்டு ஆற்றியுள்ளது. சமாஜப் பதிப்பு - ம. பா. பதிப்பு என்றே தனி முத்திரை பெற்றிருந்தது. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் செயலாளராக இருந்த சமயம் (22 ஆண்டுகள் - 1944 வரை). திருமுறைகள், காப்பியங்கள், சங்க நூல்கள், திருப்புகழ், ஆகிய நூல்களைச் சமாஜம் அடக்க விலைக்கு வெளியிட்டது. சமாஜப் பொன்விழா மலர், வைர விழா மலர், பவழ விழா மலர், முத்து விழா மலர் நூற்றாண்டு விழா மலர் ஆகியன கருத்துக் கருவூலங்கள் ஆகும்.

அறக்கட்டளைகள்

பெருமன்றத்தில் நிறுவப் பெற்று உள்ள அறக்கட்டளைகள் சிறப்பு வாய்ந்தவை ஆகும். பெருமன்றத்தில் நாளும் ஒரு சொற்பொழிவு நிகழ்ந்து வரும் அளவிற்கு அறக்கட்டளைகள் உள்ளன. (சூலை 2005 வரை)

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

1. *நாயன்மார் வழிபாட்டு விழா ... 18(எண்ணிக்கை) ரூ. 23508/- (தொகை)*
2. திருஞானசம்பந்தர் குரு பூசை விழா... *8 ரூ. 13500/-*
3. திருநாவுக்கரசு குருபூசை விழா... *10... ரூ. 28500/-*
4. சுந்தரர் குருபூசை விழா... *9 ரூ. 10002/-*
5. மாணிக்கவாசகர் குருபூசை விழா... *14 ரூ. 27805/-*
6. தெய்வச் சேக்கிழார் குருபூசை விழா... *8 ரூ. 30905/-*
7. மெய் கண்டார் விழா... *6 ரூ.9000/-*
8. அருள்நந்திசிவம் விழா... *1*
9. உமாபதி சிவம் விழா...*1 ரூ. 1000/-*
10. சந்தான குரவர் விழா... *1 ரூ. 2000/-*
11. ஆண்டுவிழா அறக்கட்டளைகள் *34 ரூ. 46230/-*
12. பெருமங்கலப் பெருவிழா - *6 - ரூ 2500/-*

13. சிவராத்திரிப் பெருவிழா 5 ரூ. ரூ. 24500/-
14. திருமயிலை அறுபத்து முவர் விழா 5 ரூ. 22500/-
15. திருவிளையாடற்புராணம், திருக்குள் முற்றோதல் மற்றும் திருக்குறள் கருத்தரங்கு 3 ரூ. 8401/-
16. சச்சிதானந்தம் பிள்ளை அறக்கட்டளை 2 ரூ. 2000/-
17. வள்ளலார் விழா 7 ரூ. 20500/-
18. அருண்கிரி நாதர் விழா 3 ரூ. 7001/-
19. கந்தர் சஷ்டி விழா 3 ரூ. 3000/-
20. முருகன் வழிபாட்டு விழா 2 ரூ. 8001/-
21. பாம்பன் சுவாமிகள் விழா 7 ரூ. 28,250/-
22. மாணவர் நன்னெறி போட்டிப் பரிசு 4 ரூ.21,000/-
23. திருமூலர் விழா5 ரூ. 16001/-
24. திருவெம்பாவை விழா 2 ரூ. 3000/-
25. 9ம் 11ம் திருமுறை விழா 2 ரூ. 3000/-
26. ஔவையார் விழா 1 ரூ. 2500/-
27. குமரகுருபரர் விழா 5 ரூ. 9500/-
28. சோமசுந்தர நாயகர் விழா 5 ரூ. 11000/-
29. அபிராமி அந்தாதி விழா 3 ரூ. 11000/-
30. பட்டினத்தார் விழா 4 ரூ. 7000/-
31. தாயுமானவர் விழா 3 ரூ. 2500/-
32. சங்க இலக்கிய விழா 2 ரூ. 4000/-
33. தில்லைச்சிற்றம்பலம் பதிகங்கள் 2 ரூ. 4000/-
34. தவத்திரு ஞானியார் அடிகள் விழா 3. ரூ. 4000/-
35. திருக்குறள் முற்றோதல் 1. ரூ.2500/-
36. சிவஞானசுவாமிகள் விழா 3 ரூ. 5000/-
37. ஆறுமுக நாவலர்விழா 2 ரூ.2000/-
38. மங்கையர்க்கரசியார் விழா 1 ரூ. 4000/-
39. காரைக்கால் அம்மையார் விழா 5 ரூ. 7003/-
40. குமரேச வெண்பா சொற் பொழிவு 1 ரூ. 3000/-
41. துகளறு போதம் சொற்பொழிவு 1 ரூ. 3000/-
42. சண்டேசுவரர் நாயனார் விழா 1 ரூ.3000/-
43. பார்வையற்றோர்க்கு பரிசு 4 ரூ. 4000/-
44. தனிமனித ஒழுக்கம் 2 ரூ. 5005/-
45. திருமுருக கிருபானந்த வாரியார் விழா 3 ரூ. 20000/-
46. ஒட்டக்கூத்தர் விழா 2 ரூ. 5000/-
47. உண்மை நெறி விளக்கம் 1 ரூ. 5000/-
48. மெய்ப்பொருள் நாயனார் விழா 1 ரூ. 5000/-

49. பெரியபுராணப் பெண்டிர் 1 ரூ. 5000/-

50. வள்ளிமலை சுவாமிகள் 1 ரூ. 10,000/-

51. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 2 ரூ. 6500/-

52. திரு. வி.க. 1 ரூ. 5001/-

53. மார்கழி சிந்தனை 17... ரூ. 64007

54. டான்ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் அறக்கட்டளை 1 ரூ. 26400/-

55. சித்தாந்த வளர்ச்சி 4 ரூ. 9400/-

56. ஆங்கில சித்தாந்தம் 1 ரூ.15,784/-

57. அரகர்த்தர் சிவாச்சாரியார் 1 ரூ. 5000/-

58. சந்தானாசாரியார் சிலை 1 ரூ. 10000/-

59. சுனாமி நிதி 1 ரூ. 10005/-

60. மறைமலையடிகள் 1 ரூ. 5000/-

61. கட்டடநிதி 4 ரூ. 80000/-

பெருமன்றத்திற்குத் தொடக்க காலத்திலிருந்து பல திருமடத்துத் தலைவர்களும், ஆன்றோர்களும், அறிஞர்களும் பணிகள் பல ஆற்றியிருக்கின்றனர். ஒரு சிலரைப் பற்றி ''சைவப் பெருவெளியில் காலம்'' என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது.

அங்ஙனம் எழுதப்பட்டவர்களின் பெருமன்றத் தொடர்பு மட்டும் இங்கு கூறப்படு கிறது. அங்ஙனம் இடம் பெறாத பெரு மக்களின் பிற சைவப் பணிகள், வரலாற்றுக் குறிப்புகள் இங்கு இடம் பெறுகின்றன.

ஞானியார் சுவாமிகள்

ஞானியார் சுவாமிகள் 1905இல் தமது மடாலயத்தில் சைவசித்தாந்த மகாசமாஜத்தைத் தொடங்கினார். சைவ சித்தாந்த மகாசமாஜத்திற்குஆக்கம் தேடும்பொருட்டு 1927ல் சுவாமிகள் சென்னைக்கு எழுந்தருளினார்கள். அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் நின்று போயிருந்த சித்தாந்தம் இதழை மீண்டும் நடத்துவதென முடிவு செய்யப் பட்டது. சுவாமிகள் பொருளுதவியால் தான் 1928இல் சித்தாந்தம் உயிர்த்தெழுந்தது. ஆரம்பகால மாநாடுகளிலும் சுமார் ஏழு ஆண்டுகள் கலந்து கொண்டு தலைமை தாங்கினார்கள்.

ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை

அறிஞர் ஜே.எம். நல்லசாமிப் பிள்ளை தாம் நடத்திய ''சித்தாந்த தீபிகை'' இதழில் 1905இல் தோற்றுவிக்கப்பட்ட சைவ சித்தாந்த மகா சாஜ நோக்கங்களையும் பணிகளையும் வெளியிட்டமை சமாஜ வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது. 1906இல் சமாஜத்தின் முதலாண்டு விழாவை சிதம்பரத்தில் நடத்தினார்.

1908இல் நாகப்பட்டினத் திலும் 1911இல் சென்னையிலும் நடை பெற்ற சமாஜ ஆண்டுவிழா மாநாடு களில் தலைமை தாங்கினார். ''சித்தாந்தம்'' என்னும் தமிழ்த்திங்கள் இதழ் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தார்.

மறைமலையடிகள்

மறைமலையடிகள் 7.7.1905இல் சமாஜம் தோன்றிய நாள் முதல் ஆறு



சைவ சித்தாந்தப் பெருமன்றம் செயற்குழு உறுப்பினர்கள் 1985 - 86

ஆண்டுகள் (1905 - 1910) சமாஜத்தின் பிரதம காரியதரிசியாகப் பணியாற்றி சமாஜத்தின் எல்லாப் பணிகளையும் பேரார்வத்துடன் நடத்தி வந்தார். எனினும் நான்கு ஆண்டுகள் கழித்து மற்ற உறுப்பினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் காரணமாக மறைமலை அடிகள் தம்மை எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விடுவித்துக் கொண்டார். இருப்பினும் தம் இறுதி நாள் வரை சமாஜத்தின் சேவைகளில் ஈடுபாடு காட்டி வந்ததுடன் 1925ம் ஆண்டு அதன் தலைவராகவும் செயல்புரிந்தார்.

மறைமலையடிகள் 1905 முதல் 1910 வரை தான் வெளியிட்டு வந்த ''ஞான சாகரம்'' இதழை சமாஜ வெளியீடாகவே நடத்தி வந்தார்.

திரு. வி. கலியாண சுந்தரனார்

சமாஜத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இதன் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர். 1911இல் சமாஜ ஆண்டு விழாவில் ''சைவன் எவன்'' என்று உரையாற்றினார். 1912 இல் திரு. வி.க.வும், திரு. சச்சிதானந்தம் பிள்ளையும் சேர்ந்து பலப்பல இடங்கட்குச் சென்று பிரசாரம் செய்தார்கள். சென்னையின் நாலா பக்கங்களிலும் உழன்றார்கள். பிள்ளையார் கோயில் மண்டபங்கள் எல்லாம் பிரச்சார மேடைகளாயின. ''திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், திருமுல்லைவாயில் முதலிய திருப்பதிகளின் திருவிழாக்களிலே எங்களைக் காணலாம். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆக்கத்துக்குப் பாடு பட்டோம். பட்டோம்; பெரும் பாடு

பட்டோம்'' என்கிறார் திரு.வி.க. 1930இல் கிழக்கு மருதூரில் நடைபெற்ற வெள்ளிவிழாவிலும், 1934இல் திருஅதிகையில் நடைபெற்ற ஆண்டு விழாவிலும், 1943இல் மதுரையில் நடைபெற்ற ஆண்டு விழாவிலும் திரு. வி.க. தலைமை வகித்தார்.

ச. சச்சிதானந்தம் பிள்ளை

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை சில ஆண்டுகள் மன்றச் செயலாளராகவும், பல ஆண்டுகள் தலைவராகவும் சிறப்பாகச் செயல்பட்டார். பெருமன்ற நிர்வாகத்தில் சிக்கல்கள் நேரும் போதெல்லாம் பெருமன்ற நண்பர்கள் இவரை நாடித் தலைமைக் பதவியை ஏற்கச் சொல்வார்கள். இவர் தான் முதன் முதலில் அறக்கட்டளை நிறுவினார். பல அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார். ''சித்தாந்தம்'' இதழின் ஆசிரியராக இருந்திருக்கிறார்.

''உயரமான உருவம்; காதில் கடுக்கன்கள்; வெள்ளை வேட்டிப் பஞ்சகச்சம்; கறுப்பு மேற்சட்டை''; வெள்ளைத் தலைப்பாகை நெற்றியில் திருநீறு; சந்தனப் பொட்டு; இளமைக் கோலம்'' என திரு. ஜி. கல்யாணம் பிள்ளை விவரிக்கிறார்.

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் 22 ஆண்டுகள் சமாஜச் செயலராகப் பணியாற்றினார். மூன்றுமுறை சித்தாந்த இதழ் ஆசிரியராக இருந்தார். இருமுறை மாநாட்டு விழாத் தலைவராக இருந்தார். ''1912இல் என்னைச் சமாஜக் காரியதரிசியாக ஒப்புக் கொள்ளும்படி எனது தந்தையார் கட்டளையிட்ட படியால் நானும் ஒப்புக் கொண்டேன். அப்போது 'சித்தாந்தம்' பத்திரிகை நின்று ஓராண்டாயிற்று. சமாஜக் கணக்கில் பொருள் வலிவு ரூபா அணா பை எல்லாம் பூஜ்யம். அது முதலாகப் பல வகை முயற்சிகள் செய்து பெயரளவில் ஆண்டுவிழாவை மட்டும் நடத்தி உயிர் போகும் நிலையில் இருந்த சமாஜத்திற்குப் புத்துயிரளித்து, அதை வீறு பெற்றெழச் செய்து அடக்கவிலைப் பதிப்புகளாகத் தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரம், திருப்புகழ் சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி முதலிய நூல்களையும் பல்லாயிரக்கணக்கில் வெளியிடுவதற்கு அல்லும் பகலும் உழைத்தேன். வெளிவந்த நூற் பிரதிகள் ஒரு நூறாயிரத்திற்கு மேலாகவே இருக்கும். இறந்து போன சித்தாந்தம் பத்திரிகை மீண்டும் 1928ம் வருடம் ஜனவரியில் உயிர்பெற்றெழுந்து இதுகாறும் நடந்து வருகிறது. குப்புசாமி முதலியார் போக்கு பிடிக்காமல் விலகியிருந்த திரு. வி.க. சகோதரர்கள், சச்சிதானந்தம் பிள்ளை முதலிய பலரையும் மீண்டும் சமாஜத் தொடர்பு கொள்ளச் செய்தவன் நானே. ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமி களைப் பலமுறை சென்னை வரவழைத்து, சமாஜத்திற்கும் பத்திரிகைக்கும் ஆக்கம் தேடி, நெல்லை முதலிய பல இடங்கட்குச் சென்று பத்த்திரிகை வளர்ச்சிக்கும் நூல் வெளியீடுகட்கும் பொருள் சேர்க்கும் தொண்டிலும் ஈடுபட்டேன். சமாஜத்தோடு இவ்வளவு நெருங்கிய தொடர்பு எவர்க்கும் இல்லயென்பதை எவரும் மறுக்க இயலாது'' என ம.பா. தன் சுயசரிதை நூலில் கூறுகிறார்.

ம. பா.வின் பதிப்புப்பணி பற்றி இலங்கை முன்னாள் அமைச்சர் சர் கந்தையா வைத்தியநாதன் இவ்வாறு கூறுகிறார். ''இந்தியாவிலோ இலங்கையிலே 25 ஆண்டுகளுக்கு முன் பன்னிரு திருமுறைகளையோ பதினான்கு சாத்திரங்களையோ சைவ இல்லங்களின் காண்பது முயற்கொம்பாய் இருந்தது: அந்நாட்களில் திருமுறைகளைப்

பதிப்பித்த ஒரு சிலர் அவை பொது மக்களுக்குக் கிடைக்கத் தக்கதாகக் குறைந்த செலவில் விற்கவுமில்லை. அந்நாளில் ஒரு சில கழகங்கள் ஆதாயத்தையே குறிக்கோளாகக் கொண்டு சைவ நூல்களைப் பிரசுரித்து விற்பனை செய்தன. இந்நிலைமை உணர்ந்த சமாஜத்தினர் திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் அடக்கவிலைப் பதிப்பாக அச்சிட்டு உதவினர். அதனால் கடந்த 25 ஆண்டுகளில் மேற்கூறிய சைவ நூல்களை அச்சிட்டு மிக எளிய விலையில் பல்லாயிரணக்கணக்கான மக்களுக்கு வழங்கிய பெரியோர் மா.பா. 13.4.1953இல் சிவனடி சேர்ந்தார்''

''கடந்த அறுபத்தொன்பது ஆண்டு கால வரலாற்றினை ஆராயும்போது, 'சித்தாந்தம்' இதழுக்கும், சமாஜம் - பெருமன்றத்திற்கும் தொண்டு செய்தவர்கள் பலர் இருப்பினும் அவர்களுக்குள் எல்லாம் ஈடு இணையற்றவராக மிக உயர்ந்து விளங்குபவர் திரு. ம. பாலசுப்பரமணிய முதலியார் பி.ஏ.பி.எல்., அவர்களாவார். அவர் இவ்வுலகில் வாழ்ந்தது 62 ஆண்டுகளே. அதில் 36 ஆண்டுகளை - ஆயுளில் பெரும்பகுதி - இந் நிறுவனத்திற்கு உழைக்கப் பயன்படுத்தியவர். கடைசி மூச்சுள்ளவரை உழைத்தார் என்பது இவரது வாழ்வில் உண்மையாகவே நிகழ்ந்தது'' என்கிறார் பெருமன்றத்தின் முன்னாள் துணைத்தலைவர் திரு. சி.எஸ். குப்புராஜ்.

கொ. நீ. சிங்காரவேலு

(பிறப்பு 2.3.1909; மறைவு - 19.1.1998. ஊர் - சிக்கல், நாகை மாவட்டம்; பெற்றோர் - நீலகண்ட முதலியார் சுந்தரம்மாள்)

திரு.கொ.நீ. சிங்காரவேலு முதலியாரைப் பெருமன்றத்தில் கொ.நீ.சி. அல்லது சி.என்.எஸ். என்றே சொல்வார்கள். இவர் தலைமைச் செயலகத்தில் மேனிலை எழுத்தராகப் பணிபுரியத் தொடங்கி இறுதியில் உதவிச் செயலாளராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். தமிழ்ப் பற்று காரணமாக தெ.பொ.மீயிடம் தமிழ்கற்று எம்.ஏ. பட்டம் தேறினார். திரு.ம.பா. அவர்களால் சைவ சித்தாந்தப் பெருமன்றத்துடன் நீண்டகாலமாக (45 ஆண்டுகள்) நெருங்கிய தொடர்பு கொண்டவர். பெருமன்றத்தின் செயலர், துணைத்தலைவர், தலைவர் எனப்பல நிலைகளில் பணியாற்றியவர். மலேசிய செட்டிநாட்டுப் பெருமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இத் தொடர்பினால் மலேசியா வாழ் சைவ பூஷணம் திரு. ஆர்.வி. கந்தையா அவர்கள் நூல்கள் வெளியிட பெருமன்றத்திற்கு ஒரு இலட்ச ரூபாய் நன்கொடையாக வழங்கியிருக்கிறார். ''சைவசித்தாந்தா'' ஆங்கில இதழின் ஆசிரியராக இருந்திருக்கிறார். ''உண்மை விளக்கம்' நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

திரு.வி. கலியாணசுந்தரனார்

சமாஜத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்; இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்; திருவதிகை, மதுரை மாநாடுகளில் தலைமை வகித்தவர்; பெருமன்றம் வளரப் பெருந்துணை புரிந்தவர்.

தி.கி. நாராயணசாமி நாயுடு

பிறப்பு - 22.9.1906; பிறந்த ஊர் : கிழக்கு மருதூர். இவர் பண்டிதரிலும் அதிகம் படித்தவர்; பதிப்பு வரலாறு அறிந்தவர்; தலயாத்திரையில் மிகுந்த ஆர்வம் உடையவர்; இக்கால இளைஞர்

பின்பற்றத்தக்க அறிஞர். 1928இல் தம் திருமணத்தின் போது திரு. வி.க. தலைமையில் சமாஜச் சிறப்பு மாநாடு நடத்தியவர். சமாஜம் வெளியிட்ட சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி போன்ற பல நூல்கள் இவருடைய பொருள் உதவியால் வெளிவந்தன. திருமுறைக் கையேடு, சமாஜப் பவள விழா மலர் போன்ற நூல்கள் இவர் கைவண்ணம் காட்டுவன. சில ஆண்டுகள் சமாஜச் செயலாளராகவும், செயற்குழு உறுப்பினராகவும் ஓராண்டு தலைவராகவும் இருந்திருக்கிறார்.

கோ.மு. முத்துசாமிப்பிள்ளை

பிறப்பு - *1904*; மறைவு - *4.1.1995*; பிறந்த ஊர் - கோபி செட்டிப் பாளையம்; பெற்றோர் - முத்துக்குமார பிள்ளை, பழனியம்மை.

திரு.கோ. மு. முத்துசாமி பிள்ளை துணைவட்டாட்சியர், வட்டாட்சியர் பதவிகளில் பணியாற்றிப்பின் தம் திறமையும் நேர்மையும் கொண்ட மனம் நிறை உழைப்பால் இந்திய ஆட்சிப் பணியில் (இ.ஆ.ப) - ஐ.ஏ.எஸ்) தகுதி எய்தி மாவட்ட ஆட்சியர் பதவிக்கு உயர்ந்தார். ஓய்வு பெற்றபின் இந்து சமய அறநிலையத் துறை வழங்கிய சைவ சித்தாந்த வல்லுநர் குழு உறுப்பினர் மற்றும் தலைவர் பதவிகளில் சில ஆண்டுகள் அணி செய்தார். திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமனம் முதலியவை குறித்து ஆய்வறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட நீதியரசர் மகராஜன் குழு உறுப்பினராகப் பணியாற்றினார். 1957இல் பெருமன்றச் செயலாளராகவும், 1962 முதல் 1969 வரை ஏழாண்டுகள் இப்பேரமைப்பின் தலைவராகவும் அருந்தொண்டு ஆற்றினார். 1964இல் ''சைவ சித்தாந்தா'' என்ற பெயரில் ஆங்கில முத்திங்கள் இதழ் கொண்டு வர நூறு உறுப்பினரையும் நிதியையும திரட்டினார். 1965இல் ஆங்கில இதழை வெளிக் கொணர்ந்தார்.1968இல் திரு மயிலையிலும், 1969இல் காஞ்சி புரத்திலும் 1991இல் திருவொற்றியூரிலும் சமாஜ மாநாடுகள் நடத்தக் காரணமாக இருந்தார்.

1971இல் மதுரைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த இருக்கை நிறுவ அமைக்கப்பட்ட நிதிக்குழு உறுப்பினராகத் திகழ்ந்தார். 1988இல் புதுவையில் நடந்த பெருமன்றத்தில் 82ஆம் ஆண்டுவிழா மாநாட்டில் தலைமை வகித்தார். 1991இல் ஜூலையில் திருவொற்றியூரில் நிகழ்ந்த பெருமன்றத்தின் 85ஆம் ஆண்டு விழா மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் பொறுப்பேற்றுக் காதொலி மருத்துவ இலவச முகாமும் குழந்தைகளுக்குச் சிவபூஜைப் பயிற்சியும் நடத்தினார். தம் முதுமையையும் பொருட்படுத்தாது, 1993இல் பெருமன்ற ஆங்கில வெளியீடாகிய ''சைவ சித்தாந்தா'' முத்திங்கள் இதழின் ஆசிரியர் பொறுப்பேற்றுத் தலையங்கக் கட்டுரைகள் தீட்டித் தம் இறுதி மூச்சு வரை சீரிய சிவப்பணியில் ஒளிர்ந்தார்.

திரு. முத்துசாமிப்பிள்ளை தமிழில் பல சமய நூல்களும், ஆங்கிலத்தில் சில நூல்களும் எழுதியுள்ளார். இவரது நூல்களில் சில சைவசித்தாந்தத் தேனமுது, திருப்புகழில் சைவ சித்தாந்தம், திருஞான சம்பந்தரும் சமய மறுமலர்ச்சியும், சிவராத்திரி பிரதோஷ நாடகங்கள், திருவான்மியூர் மருந்தீசர் நாடகம் விசுவநாதர் கோயில், தமிழ் உரைநடை வரலாறும் நெறிமுறைகளும், Arut prakasa Vallalar Ramalinga Swamigal. சிறப்பாசிரியராகப் பணியேற்ற ''கோயிற் களஞ்சியம் நூலின் ஒரு பகுதியாக ஆற்காடு கோயில்கள் (இரு தொகுதிகள்), காஞ்சிபுரம் என மூன்று நூல்

களைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் வெளியிட்டது. மற்றும் மகாமகமும் கும்பகோணமும், சிதம்பரம், திரு வரங்கம், திருவானைக்கா, தக்கோலம் கோயில்கள் எனச் சிறு நூல்களாக வெளியிட்டார்.

அ. சோமசுந்தரஞ் செட்டியார்

(தோற்றம் - 11.1.1885; மறைவு - 26.5.1974; பிறந்த ஊர் - விழுப்புரம், பெற்றோர் - அண்ணாமலைச் செட்டியார் உருக்குமணி அம்மையார்)

எம்.ஏ. பட்டம் பெற்ற இவர் காக்கிநாடாவில் உள்ள பித்தாபுரம் அரசர் கல்லூரியில் விரிவுரையாளராக வேலையில் சேர்ந்தார். பணியில் இருக்கும் பொழுது ஏதாவது ஒன்று கண்டுபிடித்து மக்கள் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். இது அவரை ஒரே காலத்தில் ஆவியால் சமைக்கக் கூடியதும் சிற்றுண்டிப் பாத்திரம் போல் சிறிய அளவில் அடுக்கி விடக் கூடியதுமான சமையலடுக்கு (குக்கர்) ஒன்றை 1919இல் கண்டு பிடித்தார். இக்குக்கருக்கு ''ருக்குமணி குக்கர்'' எனப் பெயரிட்டு வியாபாரத்தைப் பெருக்கினார். வியாபாரத்தில் முழுக் கவனம் செலுத்த விரிவுரையாளர் பதவியை விட்டு விலகினார்.

செட்டியார் அவர்கள் தாம் ஈட்டிய செல்வத்தை அறவழிகளில் பயன்படுத்த - குறிப்பாக சைவ சமயத்திற்கு உதவ வேண்டுமென்று விரும்பினார். 1927இல் திருப்பாதிரிப்புலியூரில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜக் கூட்டத்தில் ''சித்தாந்தம்'' இதழ் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு, அதை அச்சிடச் செலவாகும் ஒரு மாதச் செலவைத் தாம் ஏற்பதாக ஒப்புக் கொண்டு சமாஜத்தின் ஆயுள் உறுப்பினர் ஆனார்.

சைவத் திருமுறைகளை அச்சிட்டு அடக்கவிலைக்குக் கொடுக்க வேண்டும் என்று எண்ணி திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரும் தாமும் சேர்ந்து 1929ஆம் ஆண்டில் சுந்தரர் தேவாரம் 10,000 பிரதிகள் அச்சிட்டு ஒன்று 4 அரை வீதமும் ஒரு ரூபாய்க்கு ஐந்து புத்தங்களுமாக மிகக் குறைந்த விலைக்கு மக்களிடையே பரவவேண்டுமென்று வெளியிட்டார். பின்னர் அப்பர் தேவாரம் 6000 பிரதிகள் அச்சிட்டு ஒன்று பத்தணாவுக்கும் 1932 இல் 8, 9ஆம் திருமுறைகளை ஒரே புத்தகமாக ஒன்று பத்தணா வீதமும், 1934இல் பெரிய புராணத்தை மிக அழகாக அச்சிட்டு ஒன்று ஒரு ரூபாய் ஆறு அணாவீதமும், அடக்கவிலைக்குக் கொடுத்தார். பின் 1935 இல் சுந்தரர் தேவாரத்தைச் சரித்திர முறையில் விளக்கத்துடன் வெளியிட்டார்.

திருவாசகத்தையும், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலியவற்றை 1938-39இல் வெளியிட்டார். இவையெல்லாம் நன்கு அவ்வப்போது வெளிவரப் பெரிதும் உதவி புரிந்தவர். திரு உலகநாத முதலியார் ஆவார். பின் ''சைவ சமய

விளக்கம்'' எனும் நுலில் பன்னிரு திருமுறைகளிலிருந்து பதிகங்கள் திரட்டி வெளியிட்டார்.

1957இல் ''தேவாரத் திரட்டு'' என்னும் சிறு நூலை சிறுவர் சிறுமிகள் நன்கு பொருளையுணர்ந்து இசையுடன் பாடுதல் இன்றியமையாதது என்று கருதி ஒவ்வொருபதிகத்திற்கும் பொழிப்புரையுடனும், தாளம், ராகம் குறிப்பிட்டு பல்லாயிரக்கணக்கான படிகள் வெளியிட்டார்.குன்றத்தூரில் தேவார ஆசிரியரைக் கொண்டு தேவார வகுப்பு ஆரம்பித்துப் பின் தொடர்ந்து சென்னை நகரில் பல இடங்களிலும் இவ்வகுப்பு தொடர்ந்து நடக்க ஏற்பாடு செய்தார்.

1936ஆம் ஆண்டுமுதல் செட்டியாரவர்கள் சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் தலைவராக இருந்து பணியாற்றியுள்ளார்கள். இக்கூட்டத்தினரால் திருக்கழுகுன்றத்தில் ஆன்மிக விழா தவத்திரு அழகரடிகளால் 1946இல் துவக்கப்பட்டது. அது தொடர்ந்து நடந்து வர செட்டியாரவர்கள் தான் உயிர் துறக்கும்வரை ஊக்கமும் உறுதுணையும் கொடுத்து வந்தார்கள். அவர் திருக்கழுகுன்றம் மலையடிவாரத்தில் யாத்ரிகர்கள் தங்கவும், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றவும் ஏற்றபடி 27,000 ருபாய் செலவில் தகட்டுக் கொட்டகையை நிறுவ உதவினார். 1960இல் சைவ சமய வளர்ச்சிக்கென்று சென்னை ஈவினிங் பசார் வீதியில் ரூ.20000/- கொடுத்து மூன்று கடைகள் வாங்கி சைவசித்தாந்த மகா சமாஜத்திற்கு ஒரு மூலதனமாக வைத்தார். இதுவன்றிப் பல ஊர்களில் உள்ள பல்வேறு அமைப்புகளுக்கும் பல்லாற்றானும் உதவியுள்ளார். பற்பல ஆலயங்கட்குப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் பல நற்பணிகள் பெரும் செலவில் செய்துள்ளார். அநாதை இல்லங்கட்கும், தேவார உரைகட்கும், திருமணக் கூடத்திற்கும், நந்தவனத்திற்குமாகப் பலவிதமாகப் பொருளுதவி செய்துள்ளார். கௌரிவாக்கம் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியும் கோவூரில் இவர் பெயரால் உள்ள உயர்நிலைப்பள்ளியும் இவரது வள்ளன்மைக்கு எடுத்துக் காட்டுகளாகும். இவரது சைவப் பணியைப் பாராட்டி தணிகை மணி திரு. வ.சு. செங்கல்வாய பிள்ளை இயற்றிய கவிதை வருமாறு:

''எவன் தனது நுண்ணறிவைக்
கொண்டு மடைத் தொகுதிற்குரிய ஏனம்
செய்தான்

எவன் சைவநெறி தழைக்க ஆரூரர்
தேவாரம் இங்கே தந்தான்

எவன் இசைப்பா பல்லாண்டு
தக்கநல குறிப்புரையோடு எழுதி
ஈந்தான்

அவன் சோமசுந்தரப் பேர் வள்ளல்
அவன் பல்லாண்டு இங்கு அமர்ந்து
வாழ்க''

26.5.1974 அன்று ''சம்போ மாதேவா'' என்று மூன்று தரம் கூறி இவர் உயிர் பிரிந்தது.

பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

26.6.1891 - 20.12.1955; பாரிப்பாக்கம் பூந்தமல்லி அருகாமை; முனிசாமி முதலியார், அலர் மேல் அம்மையார்.

பெருமன்ற செயற்குழு உறுப்பினர் சித்தாந்தம் துணையாசிரியர் ஆகிய பொறுப்புகளை ஏற்றிருந்தார். சமய சொற்பொழிவாளர்; சித்தாந்த வகுப்பு எடுத்தார்.

வ. ஆ. தேவ சேனாதிபதி

பெருமன்றம் நடத்தும் "Saiva Siddhanta" என்ற ஆங்கில முத்திங்கள்

இதழுக்குப் பல ஆண்டுகள் ஆசிரியராக விளங்கி உலக அளவில் சிறந்த இதழாக விளங்கச் செய்தவர்.

திரு. மு. அருணாசலம்

பத்தொன்பது ஆண்டுகள் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் 'சித்தாந்தம்' இதழ் ஆசிரியராக அயராது தொண்டாற்றியவர்.

திரு. ந.ரா. முருகவேள்

''சித்தாந்தம்'' இதழின் ஆசிரியராக 12 ஆண்டுகள் பணியாற்றினார்.

அம்பை. இரா. சங்கரனார்

(தோற்றம் - 17.1.1920; பிறந்த ஊர் - அம்பாசமுத்திரம்; பெற்றோர் - இராமலிங்கர், முத்தம்மை ஆச்சி)

சென்னை பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளித் தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். வடமொழி, தமிழ், ஆங்கிலம் மொழிகளை அறிந்தவர். உரை நடை, செய்யுள், பதிப்பு எனப் பல துறைகளில் இவர் இலக்கியப் பணி பரந்து பட்டிருந்தது. அரிய கருத்துக்களை எளிய முறையில் எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர். மரபு வழியாப்பிலக்கணப்படி செய்யுள் இயற்றியவர். உரை நூல் பல எழுதி, சில பழைய நூல்களைப் பதிப்பித்துத் தொண்டாற்றியவர். 1940 முதல் தம்மறைவு வரை 55 ஆண்டுகள் பெருமன்றத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். 1960இல் இலங்கை திருக்கேதீச்சுரத்தில் இளைஞர் மாநாட்டுத் தலைவராகப் பணியாற்றினார். பெருமன்றச் செயலாளராகவும், சித்தாந்தம் இதழ் ஆசிரியராகவும் பல்லாண்டுகள் பணியாற்றினார். தஞ்சை, வெள்ளகோயில், மயிலாடுதுறை, பாண்டிச்சேரி ஆகிய ஊர்களில் பெருமன்றத்தின் கிளைகளை உருவாக்கினார்.

திரு.நல். முருகேச முதலியார்

(தோற்றம் - 1905; மறைவு - 27.1.1991)

சைவ சமயக் கருத்துகளை ஆங்கிலத்தில் எழுதியவர்.

திரு. கி. இல. பழனிசுவாமி

(தோற்றம் - 1.12.1909; பிறந்த ஊர் - வார்கால்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டம்; பெற்றோர் - இலக்குமண பிள்ளை, உருக்குமணி அம்மாள்)

பெருமன்றத்தில் பல அறக்கட்டளைகள் நிறுவியவர்.

தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்

1975 அக்டோபரில் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் திருமுறைகளை மீண்டும் பதிப்பிக்கக் காகிதம் பெறவும், அச்சிடவும் ஏற்பாடு செய்தார்கள். 1976 இல் சமாஜ ஆண்டு விழாவினை இரத்தினகிரியில் நடத்தினார்கள்.

திரு. யு. சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ் (ஓய்வு)

(11.7.1922 - 27.10.1991; பிறந்த ஊர் -மிலட்டூர்; தஞ்சை; பெற்றோர் உலகநாதத் தஞ்சைராயர், கனகத்தம்மாள்)

தஞ்சை சைவசித்தாந்தப் பெருமன்றத்திற்கு 10,000 ரூபாய் அளித்து புத்துணர்வு அளித்தார் 1986 முதல் 1991 வரை தலைவராக இருந்து மாதந்தோறும் கூட்டங்கள் நடத்தினார். 1990

பெருமன்றம் (சென்னை) தஞ்சையில் மாநாடு நடத்தப் பெரும் பொறுப்பு ஏற்றார். திரு.யு. சுப்பிரமணியனார் அறநிலையத்துறை ஆணையராக இருந்த போது பெருமன்றத்தின் தற்போதைய இடத்தைக் குறைந்த வாடகைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்.

சைவசித்தாந்த மகாசமாஜம் சைவ சித்தாந்தப் பெருமன்றம் எனப் பெயர் மாற்றக் காரணமாக இருந்தார்.

திரு. எஸ். தியாகராஜன்

(தோற்றம் - 1931; பிறந்த ஊர் - குடவாசல்)

தொழிலதிபர்; சைவ சித்தாந்த அறிஞர்; பெருமன்றத்தில் *8* ஆண்டுகள் தலைவராகப் பணியாற்றினார். சென்னை திருவாசக மாநாடு, திருமந்திர மாநாடுகள் நடத்தப் பொருள் உதவி செய்து வருகிறார்.

பெருமன்றத் தலைவர்கள்

1)	1959	நல். முருகேச முதலியார்
2)	1960	சோமசுந்தரம் செட்டியார்
3)	1961	சோமசுந்தரம் செட்டியார்
4)	1962-69	ஜி.எம். முத்துசாமிப்பிள்ளை
5)	1970-73	ஜி.இராமலிங்க முதலியார்
6)	1974	சு. சோமசுந்தரம் செட்டியார்
7)	1975-78	கொ.நீ. சிங்கார வேலு
8)	1978-79	கி.இல.பழநிசாமி பிள்ளை
9)	1980-81	தி.கி. நாராயணசாமி நாயுடு
10)	1981-86	பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை
11)	1986-87	மு. கிருஷ்ணன்
12)	1987-93	கி.இல. பழநிசாமி பிள்ளை
13)	1993-2000	எஸ். தியாகராஜன்
14)	2000	செ.வே. சதானந்தன்

பெருமன்றச் செயலாளர்கள்

1.	1905-10	சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்)
2.	1910-11	இருக்கம் ஆதிமூல முதலியார்
3.	1911-12	ச. சச்சிதானந்தம் பிள்ளை
4.	1912-17	சி. குப்புசாமி முதலியார்
5.	1917-20	கா. சுப்பிரமணியம் பிள்ளை
6.	1920-21	வா.தி.கோவிந்தராச முதலியார்
7.	1921-43	ம. பாலசுப்பிரமணிய முதலியார்
8.	1944-46	கா.இராமநாதன் செட்டியார்
9.	1946-53	க.அரங்கசாமி முதலியார்
10.	1953-55	ச. சிவகுமாரன்
11.	1955-57	தி.கி. நாராயணசாமி நாயுடு
12.	1957	கோ. முத்துசாமி பிள்ளை
13.	1958	மா.சி. நித்தியானந்த முதலியார்
14.	1958-59	மா.ப. தியாகராச முதலியார்
15.	1959-61	கீ.இராமலிங்கனார்
16.	1961-63	ஜி. கல்யாணம் பிள்ளை
17.	1963	ச.சிவகுமார்
18.	1963-65	கொ.நீ.சிங்காரவேலு முதலியார்
19.	1965-67	தி.கி. நாராயணசாமி நாயுடு
20.	1967-68	சி.வடிவேல் பிள்ளை
21.	1968-73	மு. நாராயணசாமி நாயுடு
23.	1975-77	ந.ரா.முருகவேள்
24.	1977-82	அம்பை சங்கரன்
25.	1982-83	ஜெ.அண்ணாமலை
26.	1983-86	ம. அண்ணாமலை
27.	1986-87	கே.என் பலராமன்
28.	1987-92	ந. ஒளியரசு
29.	1992-96	க. பாலசுந்தரம்
30.	1996-99	நா. அரசு

31. 1997-2000 இரா.கோவிந்தன்
32. 2000-2002 சா. சரவணன்
33. 2002 முதல் சி. கிருஷ்ணமூர்த்தி

சித்தாந்தம் - தமிழ்த் திங்கள் - இதழ் ஆசிரியர்கள்

1. 1912 பூ. கலியாணசுந்தர யதீந்திரர்
2. 1918-21 கி.குப்புசாமி முதலியார்
3. 1928 ம. பாலசுப்பிரமணிய முதலியார்
4. 1937 அ.சோமசுந்தரம் செட்டியார்
5. 1938 திரு.வி. உலகநாத முதலியார்
6. 1943 பு.ர. சாமிநாதன்
7. 1944 ம.பாலசுப்பிரமணிய முதலியார்
8. 1945 ச. சச்சிதானந்தம் பிள்ளை
9. 1947 சி.எம். இராமச்சந்திரன் செட்டியார்
10. 1954 ம.பாலசுப்பிரமணிய முதலியார்
11. 1956 சி.எம். இராமச்சந்திரன் செட்டியார்
12. 1958 ந.ரா. முருகவேள்
13. 1962 அ. சோமசுந்தரம் செட்டியார்
14. 1963 மு.அருணாசலம்
15. 1972 ஜி. கலியாணம்
16. 1978 ந.ரா. முருகவேள்
17. 1980 மு.அருணாசலம்
18. 1990 அம்பை இரா. சங்கரனார்
19. 1995 வை. இரத்தின சபாபதி
20. 2004 ஏ. வேலாயுதன்.

ஆங்கில சைவ சித்தாந்த இதழ் ஆசிரியர்கள்

1. நல். முருகேச முதலியார்
2. வ.ஆ. தேவசேனாபதி
3. கொ.நீ. சிங்காரவேலு
4. கோ.மு.முத்துசாமி பிள்ளை
5. தி.ந. இராமச்சந்திரன்
6. பாஸ்கர்
7. பி.டி. பாலாஜி.

சித்தாந்த சரபம் விருது பெற்றோர்

1. 1997 வை. இரத்திநனசபாபதி
2. 1998 சி.சு.மணி
3. 1999 அருணை வடிவேல் முதலியார்
4. 2000 ஒத்தூர் வையாபுரி முருகேசன்
5. 2001 கு. சுந்தரமூர்த்தி
6. 2002 இ.சுந்தரமூர்த்தி
7. 2003 கு. வைத்தியநாத ஈசான தேசிகர்
8. 2004 ஆ. ஆனந்தராசன்

சைவ சித்தாந்த பெருமன்ற வெளியீடுகள் - 2005

1.	மெய்கண்ட சாத்திரங்கள் (14) மூலமும் உரையும்	80.00
2.	சிவஞான பாடியம்	60.00
3.	சருவஞானோத்திர ஆகமம் (மூலமும் உரையும்) 2002 ஆண்டு	25.00
4.	தேவிகாலோத்தர ஆகமம் (மூலமும் உரையும் 2004 ஆண்டு	25.00
5.	தத்துவப் பிரகாசம் 2003 ஆண்டு	65.00
6.	துகளறு போதம்	20.00
7.	சிவஞான போதச்சிற்றுரை விளக்கம், தூத்துக்குடி முத்தையா பிள்ளை	120.00
8.	சைவ சமய கையேடு	35.00
9.	முப்பொருள் இயல்பு	15.00
10.	திருமுறைத் திருமணம் செய்முறை விளக்கத்துடன்	10.00
11.	மழை வேட்டல் பதிகம்	5.00
12.	திருமுருகாற்றுப்படை சைவசித்தாந்த விளக்கமே	15.00
13.	திருவாசகம்	25.00
14.	ஞானியார் அடிகள் நினைவு மலர்	16.00

15. முருகன் முந்நூல் 2003 ஆண்டு	10.00
16. காயசித்தி	15.00
17. மகா மகப் பெருவிழா	7.00
18. சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே	7.00
19. சிவாலய வழிப்பாட்டுப் பாடல் திரட்டு 2004 ஆண்டு	4.00
20. கூட்டு வழிபாட்டுப் பாமாலை	3.00
21. சந்தானாச்சாரியர்கள் வரலாறு	3.00
22. சிவலிங்க பூசை	2.00
23. பஞ்ச புராணத் திரட்டு 2004 ஆண்டு	2.50
24. சிவபெருமான் திருமும்மணிக் கோவை	5.00
25. திருவொற்றியூர்த் தியாகராசர் திருக்கோயில்	3.00
26. சைவ நலம்	75.00
27. முப்பொருள் விளக்கம்	25.00
28. மூவர் தேவாரத்தில் கோயில் திருப்பதிகங்கள் உரை விளக்கம்	40.00
29. சைவ சித்தாந்தப் பெருமன்ற வரலாறு	40.00
30. பாம்பன் சுவாமிகள் உணர்த்தும் சைவ சித்தாந்தம்	25.00
31. சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாட்டு தலைமை பேருரைகள்	180.00
32. நூற்றாண்டு விழா மலர்	120.00
33. Essays On Saiva Siddantha	55.00

பிற வெளியீடுகள்

34. சிவஞானபோதம் - தெளிபொருள் சுருக்கம்	25.00
35. பெருங் கருணையம்மை பிள்ளைத் தமிழ்	10.00

சைவ சித்தாந்த பெருமன்றத்தின் சில முக்கிய வெளியீடுகள்

1. சுந்தரர் தேவாரம் (சமாஜப் பொன்விழா வெளியீடு)
2. திருநாவுக்கரசர் தேவாரம்
3. திருஞானசம்பந்தர் தேவாரம்
4. திருவாசகம், திருக்கோவையார்
5. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
6. திருமந்திரம்
7. பதினோராம் திருமறை
8. திருத்தொண்டர் புராணம்
9. சிவஞானபோதச் சிற்றுரை
10. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு உரையுடன்
11. சங்க இலக்கிய மூலம்
12. சீவக சிந்தாமணி மூலம்
13. நாலாயிர திவ்விய பிரபந்தம் 2
14. முருகன் முந்நூல் - உரையுடன்
15. ஞானியார் அடிகள் நினைவு மலர்
16. சைவ சமயச் சொற்பொழிவுகள்
17. திருப்போரூர்ச் சந்நிதி முறை
18. கந்தரனுபூதி - யந்திரங்களுடன் கூடிய உரை
19. சமாஜப் பொன்விழா மலர்
20. சிவஞானபோதம் (எளிய உரை)
21. குகார்ச்சனைத் திருமந்திரம்
22. சமாஜ வைரவிழா மலர்
23. சமாஜப் பவளவிழா மலர்
24. அம்மை தோத்திரத் திரட்டு
25. பஞ்ச புராணம்
26. முப்பொருள் இயல்பு
27. சைவப் புண்ணியக் கண்கள்
28. திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை
29. அம்மை தோத்திரத் தரட்டு
30. சைவ சமயக் கையேடு

பெருமன்றத்தின் தற்போதைய தலைவர்- திரு. சை. வே. சதாநந்தன். பொதுச் செயலர் - திரு.சி.கிருஷ்ணமூர்த்தி; சித்தாந்தம் ஆசிரியர் - புலவர் திரு. எ. வேலாயுதம்; ஆங்கில இதழ் ''சைவ சித்தாந்தா'' ஆசிரியர் முனைவர் திரு.பி.டி. பாலாஜி.

9. ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத் தமிழ்வேத பாராயண தேவார சபை

1910

ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத் தமிழ்வேத பாராயண தேவார சபையின் 97ம் ஆண்டு விழாவின் திருமுறை மகோற்சவைப் பத்திரிகையைப் பார்த்ததும் மனம் துள்ளி மகிழ்ந்தது. எத்தனை பழமையான அமைப்பு அதனைத் தோற்றுவித்தவர் யாரோ? எப்படியெல்லாம் நடத்தினரோ? அதைப் பார்த்தவுடன் மாடிக்கு ஓடி பழைய fileஐ எடுத்துப் புரட்டினேன். 1912 ஜூலை, ஆகஸ்டு ''சித்தாந்தம்'' இதழில் ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டம் நிகழ்ச்சி என்றும், 1918 நாளிட்ட இதழில் பரங்கிமலை ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத் தமிழ்வேதபாராயண சபை எனத் தலைப்பிட்டு மே 5ஆம் தேதி முதல் 20ம் தேதி வரை 8வது வருடத்திய மகோற்சவம், உபந்நியாசம் என்றும், ஜூன் 1931 இதழிலும் இச்சபைக் கூட்டம் என்றும் குறிப்புகள் எனது fileல் இருந்தன. எனவே இச்சபை தொடங்கிய நாள் முதல் இன்றளவும் தொடர்ந்து இயங்கி வருகின்றது என்பதும், சைவ சித்தாந்தப் பெருமன்றத்துடன் தொடர்பும் கொண்டிருந்தது என்பதும் புலனாகின்றது.

29.6.2007 முதல் 9.7.2007 வரை இரவு 7.00 மணிக்கு ஏழு பெருமக்கள் நால்வர் பெருமக்கள் வரலாற்றையும் சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளனர். 8.7.2007 திருமுறை ஊர்வலமும், தமிழ்வேத பாராயணமும் நடைபெற்றன. வாரந்தோறும் வழிபாடு நடப்பதாகவும், அங்குள்ள

ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத் தமிழ்வேத பாராயண தேவார சபை

ஆலந்தூர் சிவனடியார் திருக்கூட்டத்தமிழ் வேதபாராயண தேவாரசபை
அன்பே சிவம்

ஆலந்தூர் சபை கட்டிடம்

திருமுறைக்கோயிலில் உள்ள திருமுறை புத்தகங்கள் பட்டுத் துணியால் பைண்டு செய்யப்பட்டு இருப்பதாகவும் அவை தற்போது கிடைக்காத அரிய பதிப்புகள் எனவும் இந்த நூலுக்காக நேரில் சென்று வந்த புரவைச திருநெறிக்கழக மதிப்புறு செயலர் திரு. சரவணன் எழுதியுள்ளார். தற்போதை தலைவர் திரு. V. சிவபாதம் செட்டியார் செயலாளர் திரு. P. தக்கப்ப முதலியார்.

10. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1920

இன்றைய வரலாற்றில் எத்தனையோ பதிப்பகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் தொழிலையும், தொண்டையும் ஒன்றாகவே - தன்னுடைய வளத்தையும், நாட்டினுடைய வளத்தையும் அல்லது மொழியினுடைய வளத்தையும் ஒன்றாக இணைத்து, இரண்டிற்கும் ஊறில்லாமல் வெற்றிகரமாகச் செய்திருக்கிற பதிப்பகம் உண்டு என்றால் அது சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்தான். தொழிலுக்குத் தொழில், தொண்டுக்குத் தொண்டு என்று கழக நிறுவனர் திரு. வ. சுப்பையாபிள்ளை செயல்பட்டிருக்கிறார்கள்.

கதைகளை வெளியிடுவதும் நாடகங்களை வெளியிடுவதும் தான் பதிப்பாளர்களுக்குப் பலன் தருமே தவிரச் செந்தமிழ் நூல்களை வெளியிடுவதால் பலன் இராது. ஆனால் செந்தமிழ் நூல்களையே வெளியிட வேண்டும் என்று கருதிய கருத்து இருக்கிறதே அதற்காகவே கழகத்தைப் பாராட்ட வேண்டும். புலவர்களுக்குத் தலைமை நிலையமாக விளங்குவது கழகம் ஆகும். சங்க இலக்கியங்கள் சமய இலக்கியங்களுக்கு

மாநாடுகள் நடத்தி அவற்றை நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள். மலர்களை வெளியிடும் போது அவற்றில் ஆய்வுக் கட்டுரைகளையும் சமயக் கட்டுரைகளையும், தத்துவக் கட்டுரைகளையும், அறிவியல் கட்டுரைகளையும் இடம் பெறச் செய்திருக்கிறார்கள். இலக்கணம், இலக்கியம், வரலாறு, சமயம் இன்னபிற துறைகளில் அரிய நூல்களை வெளியிட்டிருக்கும் இக்கழகம் அறிஞர் பெருமக்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்கட்கும் பெரும்பயன் அளித்து வருகிறது. பொதுவாக மக்கள் விரும்புவதை வெளியிடுவதைத்தான் பல்வேறு பதிப்பகங்கள் தங்களுடைய குறிக்கோள்களாகக் கொண்டிருக்கின்றன. அதுதான் வருவாய்க்கு வழி என்று அவை கருதிக் கொண்டிருக்கின்றன. மக்கள் எதை விரும்ப வேண்டுமோ அதை வெளியிடுவது கழகம் ஆகும். தமிழ் புறக்கணிக்கப்பட்ட காலத்தில் - தமிழறிஞர்கள் மதிக்கப்படாதிருந்த காலத்தில் - தமிழ் வளர்ச்சிக்குக் கழகம் பாடுபட்டது.

நம் நாட்டிலே உள்ள எந்த வீடாக இருந்தாலும் சிவகாசியிலே செய்யப்பட்ட தீப்பெட்டி ஒன்று இருக்கும் என்று சொல்வதுண்டு. அதைப் போல உலகத்திலே தமிழர்கள் இல்லங்கள் அனைத்திலும் கழக நூல் ஒன்று இருக்கும். (ப்பிரவரி 1982).

'தமிழில் என்ன இருக்கிறது?' என்று கேட்பவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு ஒருமறை சென்றுவந்தால் இப்படிக் கேட்பது தவறு என்பதை உணர்வார்கள். ஒரு பத்தாயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு கழகத்துள் சென்றால், அவ்வளவு ரூபாய்க்கும் அருமையான நூல்களை வாங்கிக் கொண்டு வரலாம்.

கழகம் வெளியிட்டிருக்கும் நூல்களின் எண்ணிக்கையைவிட அவற்றின் தரம்தான் முதன்மையானது. கழகம் தோற்றுவிக்கப்பெற்றது வணிக நோக்கத்துடன் அன்று. ஒரு நல்ல குறிக்கோளுக்காக - ஓர் இயக்கமாகத் - தமிழுக்குத் தொண்டு செய்வதற்கென்றே தோற்றுவிக்கப் பெற்றதாகும்.

கழகம் இதுவரை (2007) 2140 தமிழ் நூல்கள் வெளியிட்டுள்ளது. அவற்றில் 300 தலைப்புகள் சைவ சமய இலக்கியங்கள் என்கிறார் திரு. முத்துக்குமாரசாமி. கழகம் வெளியிட்டுள்ள நூல்களில் சரிபாதி சமய நூல்கள் என்பார் சமய அறிஞர் திரு. ச. சிவகுமார். இற்றைய நாளில் திருமுறைகளை அனைத்துப் பதிப்பகத்தாரும் வெளியிடுகின்றனர். பெரும் லாபமும் பெறுகின்றனர். அந்த கால கட்டத்தில் திருமுறைகளை யாருமே வெளியிடாத நாளில் திருமுறைகளைக் குறிப்புரையோடு கழகம் வெளியிட்டது. ஒரு முப்பதாண்டுக் காலம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடமும், கழகமும் தொடர்ந்து திருமுறைகளை வெளியிட்டு வந்தன. இவ்விரண்டு நிறுவனங்களும் இல்லாது இருந்தால் அக்காலகட்டத்தில் (1950 - 1980) திருமுறைகள் நம் கண்ணில் பட்டிருக்கா. திரு. இராமநாதம் பிள்ளையைக் கொண்டு சாத்திர உரைகளைக் கழகம் வெளியிட்டது. பெரிய புராணத்தைச் சுத்தானந்தபாரதி மூலம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டது. இவையெல்லாம் கழகத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள் என்பார் திரு. முத்துக்குமாரசாமி. சைவ சித்தாந்த நூல்களில் வரும் வட சொற்களை நல்ல தமிழில் மாற்றிக் கழகம் வெளியிட்டுள்ளது. திரு. ப. இராமநாதபிள்ளை எழுதி அஞ்சல் வழி சைவ சித்தாந்த பாடத்தைக் கழகம் வெளியிட்டது. இக்கழகத்திற்குச் 'சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' என்று பெயர் அமைந்திருக்கிறார்களே அதுவே பாராட்டற்குரியது.

21.9.1920-இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பதிவு செய்யப் பெற்றது.

கழகத்தின் மற்றொரு பணி ''செந்தமிழ்ச் செல்வி'' என்ற திங்கள் இதழை 1923-இல் தொடங்கி தொடர்ந்து வெளியிட்டு வருவது ஆகும். அதிலே இலக்கிய - இலக்கண - தத்துவ - அறிவியல் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இவ்விதழ் பற்றி நூலாசிரியன் எழுதி வெளிவர உள்ள சைவ சமய இதழ்கள் பற்றிய நூலில் காணலாம்.

கழக நிறுவனர் திரு. சுப்பையா பிள்ளையின் மூன்றாவது அரும்பணி மறைமலையடிகள் நூலகம் ஆகும். தொடக்கத்தில் மறைமலையடிகள் பயன்படுத்திய 4000 நூல்கள் கழகம் சேகரித்து வைத்திருந்த 5000 நூல்கள், பேராசிரியர் ரங்காச்சாரியின் 500 புத்தகங்களுடன் 24.6.1959-இல் மறைமலையடிகள் நூலகம் துவங்கப்பட்டது. இன்றைய நாளில் (2007) 70000 புத்தங்கள் நூலகத்தில் உள்ளன. சைவ நூல்கள் வரிசையில் பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரங்கள், புராணங்கள், சைவ இதழ்கள் என பகுக்கப்பட்டுள்ளன. சிவபெருமான், விஷ்ணு, கணேசர், முருகன் பற்றிய புத்தங்களும் தனியே உள்ளன. பல அரிய நூல்களும், முதல் பதிப்புகளும் இடம் பெற்றுள்ளன. ஜி.யூ. போப்பின் திருவாசக மொழிபெயர்ப்பு - முதல் பதிப்பு (ஜி.யூ. போப் கைப்பட எழுதிய குறிப்புகளுடன், சிவஞான போதம் - ஜி.யூ- போப்பின் குறிப்புகளுடன்) ஆகிய அரிய நூல்களும் இடம் பெற்றுள்ளன. சித்தாந்தம், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் ஆகியவற்றின் பழைய இதழ்கள் ஆண்டு வாரியாக வைக்கப்பட்டுள்ளன.

மறைமலையடிகள் நூலகம் அருட்பிரகாச வள்ளலார் 1832-இல் முதன் முதல் உரையாற்றிய இடத்தில் அமைந்துள்ளது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், செந்தமிழ்ச் செல்வி, மறைமலையடிகள் நூலகம் மூன்றையும் தோற்றுவித்தவர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் ஆவார். திரு. சுப்பையாபிள்ளை தம் தமையனார் திருவரங்கனாருடன் இணைந்து 1920-இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினை நிறுவினார். மறைமலையடிகள் நூல்களைப் பரப்ப வேண்டுமென்று அவற்றை வாங்கிவிற்று வந்த அவரது மருகர் திருவரங்கனார் எல்லா நூல்களையும் வாங்கி விற்பதற்காகவே 'திருசங்கர்' நிறுவனத்தைத் தொடங்கினார். அதுவே பின்னர்க் கூட்டுப் பங்கு நிறுவனமாக சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகமாக உருவாகியது. 1920-இல் கழகம் தொடங்கப்பெற்ற பொழுது, திருவரங்கனார் நெல்லையில் தலைமை நிலையத்தையும் வ.சு.பிள்ளை 1921 முதல் சென்னையில் கிளை நிலையத்தையும் பொறுப்புடன் நடத்தத் தொடங்கினார். கழகத்திலிருந்து கிடைக்கப்பெறும் ஊதியத்தில் சரிபாதி அறத்திற்கென ஒதுக்கி வைப்பதென முடிவாயிற்று. அதிலிருந்து தமிழுக்குப் பாடுபட தென்னிந்தி தமிழ்ச் சங்கத்தையும், சைவத்திற்குத் தொண்டாற்றச் சைவ சித்தாந்த சங்கத்தையும் கழகம் தொடக்கத்திலிருந்து நடத்தி வருகிறது. தமிழ்ச்சங்கத்தின் சார்பில் தான் இலக்கிய மாநாடுகள் கூட்டப் பெற்றன. பல்லாவரத்தில் மறைமலையடிகள் கலைமன்றமும் பிற அறநிலையங்களும் இதன் வழி இயங்குகின்றன. சைவ சித்தாந்த சங்கத்தின் சார்பில்தான் மறைமலையடிகள் நூல் நிலையமும் பிற அறநிலையங்களும் செயல்படுகின்றன.

திருவரங்கனார் நெல்லையிலும் வ.சு.பிள்ளை சென்னையிலும் இருந்து

கொண்டு 1920 முதல் 1944 வரை கால் நூற்றாண்டுக்காலம் மிக அரிய பதிப்புப் பணியைச் செய்தனர். எழுத்தாற்றலும் பதிப்பாற்றலும் பெற்றிருந்த அறிஞர்களையெல்லாம் துண்டுதல் செய்து ஊக்கப்படுத்திப் பழந்தமிழ் இலக்கண, இலக்கிய, சமய நூல்களுக்கு உரை கண்டு அவற்றைச் செம்மையாகப் பதிப்பித்தனர். கழகப் பதிப்பு என்றாலே தரமான பதிப்பு, தனிச் சிறப்புடைய பதிப்பு என்ற பெயர் பெற்று நிலைக்கலாயிற்று. தனியார் வெளியிட்டு, விற்பனையாகாது முடங்கிக் கிடந்த அரிய தமிழ் நூல்கள் பலவற்றை, இவ்விருவரும் அவ்வவர் தம் வீடுகளை நாடிச்சென்று, பெற்று வந்து, அவற்றை விற்றுக் கொடுத்தது பெருஞ்செயலாகும். இவ்வகையில் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் நூல்களை நிரம்ப விற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். வண்டி வசதிகள் இல்லாத அக்காலச் சென்னையில் ஏறத்தாழ, கால் நூற்றாண்டுக்காலம் வ.சு. பிள்ளை, ஈருருளை வண்டியில் தாமே நேரில் சென்று புத்தகங்களை வாங்கி விற்று வந்தார்.

தமிழ்மக்களிடையே இலக்கிய, சமய உணர்வு பரவ வேண்டுமென்பதற்காகப் பேரறிஞர்களைக் கொண்டு இலக்கிய, சமய மாநாடுகள் நடத்தினார். அவர் மாநாடு நடத்தியதற்கும் பிறர் நடத்தியதற்கும் பெரும் வேறுபாடு என்னவெனில் மாநாடு தொடங்கும் போதே மாநாட்டுச் சொற்பொழிவுகள் அனைத்தும் நூல்வடிவில் வெளியிடப் பெற்றுவரும்.

கழக அறநிலையமான இருசங்கங்களின் வழி நல்ல பயனுடைய நிலையங்களை அவர் தோற்றுவித்தார். நெல்லையில் தமிழறிஞர்கட்கு உதவுவதற்கு 1950-இல் சிவஞான முனிவர் நூல்நிலையத்தைத் தோற்றுவித்தார் மறைமலையடிகளார் கழகத்திற்குக் கொடுத்த 4000 நூல்களோடு வேறு பல நூல்களையும் சேர்த்து அவர் தம் பெயரிலேயே 'மறைமலையடிகள் நூல் நிலையத்தை 1958-இல் வ.சு. நிறுவினார். மறைமலையடிகள் நூல்நிலையம் உலகெங்கும் உள்ள தமிழாய்வுப் பறவைகள் நாடிவரும் பழமரமாகத் திகழ்கிறது. எம்.ஃபில். பி.எச்.டி.டி.லிட் போன்ற பட்டங்களுக்கு ஆய்வு செய்வோர் இந்தியப் பல்கலைக் கழகங்களிலிருந்து மட்டுமல்லாது அமெரிக்கா, ருசியா, செர்மனி, இங்கிலாந்து, மலேசியா, இலங்கை போன்ற வெளிநாடுகளிலிருந்தும் வருகின்றனர்.

கழகம் பெரியதா, குடும்ப உறவு பெரியதா என்ற கேள்வி எழுந்த போதெல்லாம் திரு.வ.சு. அவர்கள் கழகமே பெரியது - அதுவே உயிர் எனக் கொண்டார். அதற்கு எந்தவித இன்னல் வந்தாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார். தம் குடும்பத்தைக் கவனிப்பதையே இரண்டாம் நிலையில்தான் எப்போதும் வைத்திருந்தார்.

1969-இல் இந்திய அரசு திரு. வ. சுப்பையா பிள்ளைக்குத் ''தாமரைத் திரு'' (பத்மஸ்ரீ) என்ற விருதை வழங்கியது. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் 1982-இல் ''தமிழ்ப் பேரவைச் செம்மல் என்ற விருதினை வழங்கியது.

24.1.1983 அன்று வ. சுப்பையா பிள்ளை இறைவனடி சேர்ந்தார். (தோற்றம் - 22.9.1897 ஊர் - பாளையங்கோட்டை, நெல்லை. பெற்றோர் - வயிரமுத்துப்பிள்ளை, சுந்தரத்தம்மை)

தற்பொழுது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினை வ. சுப்பையா பிள்ளையின் மருகரும், மாப்பிள்ளை

யுமான திரு. இரா. முத்துக்குமாரசாமி திறமையுடன் நிர்வகித்து வருகிறார். (பிறப்பு - 2.12.1936; பெற்றோர் - இராஜகோபால், வள்ளியம்மை; பிறந்த ஊர் - சென்னை)

11. தமிழ் இசைச் சங்கம்

1943

தமிழ் இசைச் சங்க வரலாறு தமிழிசையின் வரலாறு ஆகும். திருமுறை இசையின் வரலாறு ஆகும். சைவ சமய, வளர்ச்சியில் ஒரு மைல் கல் ஆகும்.

தமிழிசைச் சங்கம் தோன்றுவதற்கு முன் தமிழ் நாட்டில் தமிழிசை எவ்வாறு இருந்தது? ''காரிருள் மூட்டம்'' என்கிறார். இரா.இளங்குமரன், ஆம்! மேடை தோறும் கர்நாடக இசை என்ற பெயரில் தெலுங்கு கீர்த்தனைகள் தான் பாடப்பட்டன. பட்டுக் கோட்டையிலே மகாராசபுரம் தெலுங்கிசை பாட ஆரம்பிக்கிறார். சபையிலிருந்து ''தமிழ்ப் பாடல்! தமிழ்ப்பாடல்''! என்ற குரல் வருகிறது ''பாடமுடியாது'' என சபையை விட்டு வெளியேறுகிறார். திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் எம்.எம். தண்டபாணி தேசிகர் தமிழ்பாட்டு ஒன்று பாடிவிட்டார். ''தியாகராசர் வளாகமே தீட்டுப் பட்டுவிட்டது. இனித் தீட்டுக் கழிந்தால் அன்றிப் பாட மாட்டோம்'' என்று தெலுங்கிசை பாட வந்த பாடகர்கள் எழுந்து போய்விட்டார்கள்.

இன்று... ...! தமிழ் இசை கேட்க ஆரம்பித்தாகிவிட்டது! எங்கும் திருமுறை இதை ஓதலாயிற்று. இந்த வளர்ச்சிக்கு யார் காரணம்? எவ்வாறு இந்த தமிழிசை இயக்கம் வளர்ந்தது? செட்டி நாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைச் சங்கம் தொடங்கினார். அருட்செல்வர் நா. மகாலிங்கம் தேவார இசைக்கலைவிழா என்று சென்னையிலும் கோவையிலும் நடத்துகிறார். குடியேற்றம் பக்தவத்சலனார் ஆண்டுதோறும் தமிழகப் பெருநகரங்களில் நான்கு நாள் திருமுறை மாநாடுகள் நடத்துகின்றார். ஓதுவாமூர்த்திகளுக்கு வாரி வழங்குகிறார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. எஸ். இராமதாஸ் அவர்கள் பொங்குதமிழ்ப் பண்ணிசை மாநாடு என்று மக்கள் நிரம்பிய அவைக்குக் கொண்டு செல்கிறார். சிதம்பரத்தில் 63 ஓதுவார்களுக்குப் பட்டாலும் பணத்தாலும் உளம் நிறைய வாரிக் கொடுத்தார். அலகு மலையில் ஓதுவாமூர்த்திக்கு ஓராண்டிற்கான ஆடைகள், பாத்திரங்கள், பள்ளி நோட்டு புத்தகங்கள் இவையல்லாமல் ரொக்கம் என சங்ககாலப்பாணர்கள் பெற்றதுபோல வண்டி வண்டியாகப் பரிசளிக்கப்படுகிறார்கள். திருமுறை இசைக்காகவே மூன்று நாள் விழா எடுக்கின்றார் திருச்சி மூக்கப்பிள்ளை. இதே தமிழிசைச் சங்கத்தில் ஒரு ஓதுவா மூர்த்தி பன்னிரண்டு நாட்களுக்குத் திருமுறை இசைவிழா எடுக்கின்றார்.

தருமபுரம் சுவாமிநாதன் அவர்க்ள பனிரெண்டு திருமுறைகளையும் பாடி ஒலிநாடா மூலம் மக்களிடையே பரவச் செய்கிறார். ஸ்ரீ தருமையாதீனம், ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், அருட்செல்வர் நா. மகாலிங்கம் ஆகியோர் ஓதுவாமூர்த்திகளைத் தனித்துப் பாராட்டிப் பொற்கிழி வழங்கிய வண்ணம் இருக்கின்றனர். இவையல்லாமல் தனித்தனியே தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் சைவ அமைப்புகள் ஓதுவாமூர்த்திகளுக்குச் சிறப்பு செய்கின்றனர். இது ஒரு பொற்காலம் அல்லவா?

அண்ணாமலையரசர் 1920-இல் மீனாட்சி கல்லூரியைத் தோற்றுவித்தார்.



தமிழிசைச் சங்கக் கட்டிடம்

அதன் பகுதியாக 1927-இல் தமிழ்க் கல்லூரி ஒன்றும் வடமொழிக் கல்லூரி ஒன்றும் தோற்றுவித்தார். பின்னே 1929-இல் இசைக் கல்லூரி ஒன்றனையும் நிறுவினார். இதற்கு இடையே 1928இல் மீனாட்சி கல்லூரி அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக உருக்கொண்டது. ஆதலால், எல்லாப்பகுதிகளும்; அப் பல்கலைக்கழகத்திற்குள் அமைந்தன.

1936-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசை மாநாடு நடைபெற்றது. 6.9.1941 இல் தமிழிசை இயக்கத்தை வலியுறுத்த சென்னையில் ஒரு பெருங்கூட்டம் கூட்டப்பட்டது. 25, 26.10.1941-இல் தேவகோட்டையில் தமிழிசை மாநாடு நடைபெற்றது. அதன் தலைவர் டி.கே. சிதம்பரநசாத முதலியார்; திறப்புரையாளர் அண்ணாமலையரசர். ஐயாயிரம் பேர்களுக்கு மேல் கூடிய மாநாடு அது. தமிழ் இசைச்சங்கம் ஒன்றையும் நிறுவினார் திரும்தி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் தமிழிசைச் சங்கத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 20.12.41-இல் திருச்சிராப்பள்ளியில் இசை மாநாடு ஒன்று நிகழ்ந்தது. இம்மாநாடுகளுக்குப் பின்னர் புதுக்கோட்டை, ஆத்தங்குடி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலிய இடங்களிலும் இசைமாநாடுகள் நடைபெற்றன. தமிழிசை இயக்கம் நன்கு கால் கொள்ளலாயிற்று. தேவகோட்டையிலும் ஆத்தங்குடியிலும் தமிழிசைக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.24.1.1943இல் கோகலே மண்டபத்தில் தண்டபாணிதேசிகர் இசை அரங்கேற்றினார். அலை மோதிய மக்கள் கூட்டத்திடையே தமிழிசை பொழிந்தார்.

தமிழிசை இயக்கம் கண்ட அண்ணாமலையரசர் உள்ளத்தில் 'தமிழிசைச் சங்கம்' என்றோர் அமைப்பு இன்றியமையாதது எனத் தோற்றமுற்றது. அதனால் தம் அடையாற்று மாளிகையில் 19.4.1943-இல் தமிழிசைச் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்



தமிழ் இசை இரண்டாவது மாநாட்டில் இசையரங்கு : எம்.கே. தியாகராஜ பாகவதர் 25.12.1944

கினார். அப்பொழுதே நான்கு இலட்சம் ரூபாய்க்கு மேல் நன்கொடை சேர்க்கப் பட்டிருந்தது. அமைப்பின் தலைவர் அண்ணாமலை அரசர்; துணைத் தலைவர் - ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

தமிழிசைச் சங்கத்தின் முதல் மாநாடு செயின்ட் மேரீஸ் ஹாலில் 23.12.1943ல் நிகழ்ந்தது. 24.12.43 முதல் 4.1.44 முடியத் தமிழிவை மழை பொழிந்தது. எம்.எம். தண்டபாணி தேசிகர், எம்.கே. தியாகராஜபாகவதர், டி.கே. பட்டம்மாள், டி.என். இராஜரத்தினம் பிள்ளை, பி.எஸ். வீருசாமிப் பிள்ளை, என்.டி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மதுரை மணி ஐயர், எம்.எஸ். சுப்புலக்ஷ்மி, என்.சி. வசந்தகோகிலம், கிவளூர், எஸ்.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, என். பாலசுப்பிரமணியன் ஆகியோர் இசைமழை பொழிந்தனர்.

இம்மாநாடு நிகழ்ந்த மூன்று மாதத்தில் (25.3.1944) தம் வாழ்க்கைக் குறிக்கோள் இன்னவை என அண்ணாமலையரசர் தம் முகவரிக் கடிதத்தாளில் (Letter Pad) எழுதி வைத்துள்ளார்.

ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந் தோறும் வணங்குவேன், அண்ணாமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல், ஈட்டலும் காத்தலும், வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை.

(ஒப்பம்) மு. அ. அண்ணாமலைச் செட்டியார்.

சென்னை தமிழிசைச் சங்கம் 23.1.1944 முதல் இசைக்கல்லூரி ஒன்றையும் நடத்தி வருகின்றது.

15.6.1948-இல் அண்ணாமலையரசர் இறைவனடி சேர்ந்தார். அண்ணாமலையார் மறைவால் தமிழிசை இயக்கம் தொய்வோ சோர்வோ படாமல் படர்ந்து



பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டம் 24 - 27 டிசம்பர் 1949

செழித்துக்கிளைக்கும் வகையில் இரு பேர் ஊன்றுகோல்கள் வாய்த்தன.

தமிழிசை இயக்கம் தோன்றிய நாள் தொட்டே உடனாகி ஒன்றாகி உணர்வாகி நின்ற பெருமக்களுள் ஒருவர் திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆவார். அண்ணாமலையார்க்குத் தோளோடு தோளாகித் துணை நின்று இயக்கத்தை அவர் இயக்கினார். அவர் தமிழிசை இயக்கத்தைத் தாங்குதற்குத் தம் வலிய தோள்களை முழுமையாகத் தந்தார். மற்றொருவர் அண்ணாமலை அரசரின் அருமை மைந்தரும் இளவரசரும் ஆகிய முத்தையவேள் ஆவார். மரபுரிமைப் பொறுப்புடன் தமிழுரிமைப் பொறுப்பும் செயல் திறச்சீர்மையும் பண்பாட்டு மேம்பாடும் ஒருங்கே கொண்டவர் ஆவார். இவ்விருவரும் அரசர் அண்ணாமலையார் எண்ணி எண்ணி வளர்த்த எழுச்சி இயக்கத்தை நிலை நிறுத்தி வளர்த்தலைத் தம் பொறுப்பாகக் கொண்டு கிளர்ந்தனர். அவ்வகையால் முப்பெரும் நலங்கள் தமிழிசை உலகுக்கு வாய்த்தன. அவை 1. பண்ணாய்வுத் தொடக்கம் *(24.12.49)* 2) சென்னை அண்ணாமலைமன்றத் தோற்றம் *(31.10.52)* 3) மதுரைத் தமிழிசைச் சங்கத் தோற்றம் *(21.1.74)*

அண்ணாமலையரசர் மறைவுக்குப் பின் 10.10.1948-இல் தமிழிசைச் சங்கச் செயற்குழுக்கூட்டம் நிகழ்ந்தது. அதில் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முத்தையவேள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆர்.கே. சண்முகம் செட்டியார் தமிழ் இசை ஆராய்ச்சிக்குழு ஒன்றினை 1949-இல் அமைத்தார். அதன் தலைவர் அவரே. தமிழ் இசை ஆராய்ச்சிக்குழு 25.11.49-இல் கூடிற்று. அதில் ‘‘இசைத்தமிழ்ப் பழஞ் செல்வங்களாகிய தேவாரப் பண்கள் தொடக்கத்தில் ஒரே முறையில்தான் பாடப்பெற்றிருக்கும்; பின்பு காலம் செல்லச் செல்ல மக்கள் பல வகைகளில் பாடத்தொடங்கி விட்டனர். அவ்வாறு பலவகையாகப்



பண் ஆராய்ச்சி முதல் கூட்டத்தில், ஓதுவார்கள் ஆராய்ச்சி நிகழ்த்தும் தோற்றம் 24.12.1949

பாடும் ஓதுவார்களைக் கூட்டிப் பாடச் செய்து ஆராய்ந்து பழைய முறையைக் கண்டு அம்முறையை எங்கும் பரப்ப எல்லா முயற்சியும் செய்தல் வேண்டும்'' என முடிவு செய்யப் பட்டது. இப்பணியை நடத்த ‘உட்குழு’ ஒன்றும் அமைக்கப்பட்டது. அதன் செயராக லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார் இருந்தார். அக்குழு கூடி ஏழாவது தமிழிசை விழாவில் 24.12.49 முதல் 27.12.49 முடிய நான்கு நாள்களில் முற்பகல் நேரங்களில் முதல் பண்ணாராய்ச்சிக் கூட்டம் நடத்துவதென தீர்மானித்தனர். தீர்மானப்படி சென்னை மெமோரியல் மண்டபத்தில் பண்ணாராய்ச்சிக் கூட்டம் தொடங்கியது. அதன் வரவேற்புக் கழகத் தலைவராக இருந்த இராமசாமி நாயுடு வரவேற்புரைத்தார். ஆர்.கே.சண்முகம் செட்டியார் தொடங்கி வைத்தார். 2.ஆம், 3-ஆம், 4-ஆம் நாள் கூட்டங்கள் எம்.எம்.தண்டபாணி தேசிகர் தலைமையில் நிகழ்ந்தன. இவ்வாய்வுக் கூட்டத்தில் ஒன்பது பண்கள் இன்னராகம் எனத் தீர்மானிக்கப்பட்டன. தீர்மானிக்கப் பட்ட பண்களும், இராகங்களும்; கொல்லி - நவரோசு; சீகாமரம் - நாத நாமக்கிரியை; செவ்வழி - யதுகுல காம்போதி; கௌசிகம் - பைரவி; பஞ்சமம் - ஆகிரி; செந்துருத்தி - மத்யமாவதி; வியாழக்குறிஞ்சி - சௌராஷ்டிரம்; தக்கேசி - காம்போதி; காந்தார பஞ்சமம் - கேதார கௌளம்.

இரண்டாம் பண்ணாராய்ச்சிக் கூட்டம்

ஆய்வுமுடிவுகள்

பழம்பஞ்சுரம் - சங்கராபரணம்; சாதாரி - பந்துவராளி; புறநீர்மை - பௌளிராகத்தின் சாயல் உடைய அந்தரகாந்தாரத்துடன்; கூடிய பூபாளம்;



தேவாரப் பண் ஆராய்ச்சியின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

மேகராகக்குறிஞ்சி - நீலாம்பரி; அந்தாளிக்குறிஞ்சி சாமா; திருத்தாண்டகம் - அரிகாம்போதி.

மூன்றாம் கூட்டம் :

26.12.51 - 29.12.51

ஆய்வுமுடிவுகள்

குறிஞ்சி - அரிகாம்போதி போல் தோன்றுகிறது. குறிஞ்சி இராகத்திலேயே இருக்கலாம் என்பது பெரும்பான்மையோர் கருத்து; பழந்தக்கராகம் - ஆரபி; கொல்லி, கொல்லிக் கௌவானம் - நவரோசு.

நான்காம் கூட்டம்

26.12.53 - 29.12.53

ஆய்வுமுடிவுகள்

காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் - இவை நான்கும் ஒரே இராகமாகத்தான் பாடப்பட்டு வருகின்றன. ஆய்வுக்குரியது ; தக்கராகம் - காம்போதியில் உபாங்கமாகவும், பாஷாங்கமாகவும் பாடப்படுகின்றது; நட்டராகம் - பந்துவராளி; திருத்தாண்டகம் - சுத்தாங்கமாக அரிகாம்போதியிலும், பியாகடையில் பண்ணாங்கமாக, லயாங்கமாகப் பாடப்பட்டு வருகின்றது; திருநேரிசை - கொல்லிப்பண், நவரோசு இராகம்; திருவிருத்தம் - கருத்து வேறுபாடு; திருவிசைப்பாப்பண்கள் - ஆனந்தபைரவி, ஆய்வுக்குரியது.

ஐந்தாம் கூட்டம்

26.12.54 - 29.12.54

ஆய்வுமுடிவுகள்

காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் - சங்கராபரணத்தின் ஜன்னியராகமான நவ்ரோக என்ற அம்சம் ஆய்வுக்குரியது.

ஆறாம் கூட்டம்

29, 30, 31.12.1955, 1.1.1956

ஆய்வுமுடிவுகள்

தக்கராகம் - காம்போதி; நட்டராகம் - சாதாரி; திருவிருத்தம் - கௌசிகப் பண்ணிலும் பழம்பஞ்சுரப்பண்ணிலும் பாடப்படுகிறது;

தொடர்ந்து திருமுறை இசை பற்றியும், தமிழிசை பற்றியும் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு திருமுறைப் பண்களின் ஆய்வுகள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஐம்பத்து நான்காம் கூட்டம்

22.12.2003 - 25.12.2003

ஆய்வுமுடிவுகள்

பாலையாழ், நாராயணி, வேளாவளி, மலகரி, சீராகம், பைரவம்.

ஐம்பத்து ஐந்தாம் கூட்டம்

22.12.2004 - 25.12.2004

ஆய்வுமுடிவுகள்

படுமலை, தனாசி, இராமக்கிரி, முல்லை, வராளி, சாரைபணி.

ஐம்பத்து ஆறாம் கூட்டம்

எடுத்துக்காட்டாக ஐம்பத்து ஆறாம் ஆண்டு பண்ணாராய்ச்சிக் கூட்ட நிகழ்முறையைப் பார்ப்போம்.

திருப்பாம்புரம் சோ. சண்முக சுந்தரம்தன் வரவேற்புரையில் ''இந்தப் பண் ஆராய்ச்சிக்கு வித்திட்ட ஆன்றோர்கள் நமக்கு வழிகாட்டியாக இருந்து இதே அரங்கத்தில் ஐம்பத்து ஐந்து ஆண்டுகளாக நமக்கெல்லாம் இந்தப் பண்ணை எப்படி கண்டுபிடிக்க வேண்டுமென்று வழிகாட்டியதோடு ஏராளமான இயல் ஆசிரியர்களும், இசைக்கலைஞர்களும் ஒன்று சேர்ந்து அவரவருடைய கருத்தை நிலை நாட்டி இருபத்து மூன்று பண்களை முடிவு செய்திருக்கிறார்கள் அதற்கு எடுத்துக் கொண்ட அந்தச் செயலைப் பார்க்க வேண்டும். அதைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்ற நம்முடைய பண்ணிசைக் காவலர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்களை என்றும் மறக்க முடியாது, டாக்டர் பெரியசாமி தூரன் அவர்களையும், பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களையும், டாக்டர் எஸ். ராமநாதன் அவர்களையும் கோமதி சங்கர ஐயா அவர்களையும், டாக்டர் மு.வ. அவர்களையும் பாலூர் கண்ணப்ப் முதலியார் அவர்களையும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களையும் திருவிடைமருதூர் வீருசாமிப்பிள்ளை, போன்ற இசைக் கலைஞர்களையும் சுப்பிரமணிய பிள்ளையையும் நினைக்க வேண்டும். தேவாரம் தான் தமிழிசை மூலம் என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நம்முடைய நூற்றுமூன்று பண்களிலிருந்து இருபத்து மூன்று பண்களைக் கண்டு பிடித்துள்ளோம். எஞ்சியுள்ள எண்பது பண்களில் ஒவ்வொரு ஆண்டிலும் ஆறுபண்களை நிலை நிறுத்தி வருகிறோம். இந்த ஆண்டு முதல் பண்ணாக அமையும் மருதயாழ் என்னும் பண்ணின் வரலாறு குறித்தும் பொருள் குறித்தும் டாக்டர். மு. தங்கராசு அவர்கள் முன்னுரை வழங்குவார்கள்'' என்றார்.

மு. தங்கராசு அவர்கள் ''மருதப் பண் மிகப்பழங்காலத்தில் வழங்கப் பெற்ற பண். காலையில் பாடப் பெறும் பண், ஊடல் தீர்க்கப் பயன் பெற்றது. உழவர்கள் களைப்பு நீங்கப் பாடினார். மருதப்பண் இன்ப உணர்வை மிகுவிப்பது. இக்காலத்தில் கரகப்பிரியா, பூபாளம் என வழங்கப் பெறுகிறது'' என்று கூறிய பழந்தமிழ் இலக்கியங்களி

விருந்து மேற்கோள்களும் எடுத்துக் காட்டினார்கள்.

தருமபுரம் ப. சாமிநாதன்

தேவாரத்தின் 23 பண்கள் முடிஞ்சி பிறகு இனிமேல் என்ன பண்ணப் போறாங்க. கதை முடிஞ்சு போச்சு என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். 103 பண்ணிற்குப் பாடல் இருக்கிறதா என்று பார்க்கலாமே என்று என் ஆசான் லெ.ப.கரு. சொன்னார்கள்.

103 பண்ணிற்குப் பாடல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த வருடம் மருதயாழுக்கு நீங்க சொல்லுங்க என்றார். நாமே ஒரு பாட்டை எழுதிவிட்டால் என்ன, என்று நான் நினைத்தேன். மருதயாழிற்குக் கரகரப்பிரியா என்று சொல்லுகிறார்கள். அதற்கு உரிய இலட்சணம் வேணும்னா எனக்கு ஓரளவிற்குச் சொல்ல முடியும். கரகரப்பிரியான்னு சொன்னா சரிகமபதநீ நிதபமகரிச இதுதான் ஆரோகணம் அவரோகணம். மருதயாழ் இராகம் கரகரப்பிரியா, தாளம் மூன்றட்சரம் அதாவது ரூபகம், இனிப்பாடல்.

‘‘தமிழிசை வாழ்க, தமிழிசை வாழ்கவே
தமிழிசை கருணை சிவனார் வாழ்க
தமிழிசை வெறுத்த தமிழர்கள் வீழ்க
தமிழிசை வெறுத்த தலைவர்கள் வீழ்க
தமிழிசை வெறுத்த இசையார் வீழ்க’’

தெ. ஞானசுந்தரம் (நாகதொனி)

மருதப்பண்ணின் திறம் நான்கு அவை நவிர் வடுகு, வஞ்சி, செய்திறம் என்பன. இவை ஒரு பொருள் குறித்த பன்மொழி ஆகும். மருதப்பண்ணின் திறவகைகள் பதினாறு. அவை தக்கேசி, கொல்லி, காந்தாரம், கூர்ந்த பஞ்சமம், பாக்கழி, தத்தன பஞ்சமம், மாதங்க ராகம், கௌசிகம், சீகாமரம், சாரல், சாங்கிமம் என்பன என்று பிங்கலந்தை நிகண்டு கூறும். நாகத்தொனி என்பது நிறை நரமபுகளைக் கொண்ட மருதப்பண்ணின் நான்கு திறத்தில் நவிர் என்பதன் பெருகியலாக வரும் குறை நரம்புகளைக் கொண்ட திறவகை என்பது தெளிவு; நாகத்வனி என்பதன் தமிழாக்கமே நாகதொனி, நாகத்வனி, நாக சப்தி என இரு இராகங்களின் பெயர் வடமொழி அகராதியில் காணப்படுகிறது. பாம்பின் ஓசை என்று பொருள், ராக ஸூதாராகம் என்னும் நூலில் கருடத்வனா கோகிலத்வனி, ப்ரமரத்வனி, ஹம்சத்வனி ஐங்காரத்வனி என்று சில இராகங்கள் இடம் பெற்றுள்ளன. பெயரைக் கொண்டு நோக்கும் போது கருட த்வனிக்கு (29ஆவது தீர சங்கராபரணஜந்யம்) எதிரான இராகமாக நாக தொனி அமைந்துள்ளது.

டாக்டர் எஸ்.ஏ.கே. துர்கா

நாகத்தொனி என்பதற்குத் தீர சங்கராபரணம் 29வது மேளம், அதாவது பண் நாகத்தொனி 29வது மேளம் தீர சங்கராபரணம். இராகம் நாகத்தொனி; அதாவது பண் நாகத்தொனி இராகம் நாகத்தொனி. இராகம் நாகத்தொணியாக மாறும் போது அது தீர சங்கராபரணத்தின் ஜன்யம் பண் நாகத்தொனியாக மாறும் போது படுமலைப் பண். பண் என்று வந்திருக்கின்ற போது நட பைரவியினுடைய ஜன்யமாக ஆறு சுரத்தைக் கொண்டு சரிகமகப நிசதபமரிச சதகமபநிச. கரகரப்பிரியா ஜன்யத்தில் திறம் என்று சொன்னார், திறம் என்றால் ஐந்திசைகளைக் கொண்டது. அது 5 இசையைக் கொண்டது என்றால் கரகரப்பிரியாவிலிருந்து ஐந்திசையைக் கொண்ட ஒரு ஜன்ய இராகமாக இருந்திருக்க வேண்டும், இன்றைக்கு இருக்கின்ற நாகத்தொனி இராகம் என்று தமிழிசைச் சங்கத்தில் கொடுத்திருக் கின்றார்கள்.

அதாவது அந்தப்பண் வந்து மாறி நாகத்தொனி இராகமாக மாறும் போது அது தீரசங்கராபரணம் மேளத்தில் இதைப்பற்றி நாகத்தொனி இராகத்தில் பார்த்தோம் என்றால் இந்த இராகம் தியாகராஜர் அவர்கள் எல்லாம் கையாளவில்லை. முத்துசாமி தீட்சதரும் இராகமாலிகை என்று சொல்லிவிட்டு ஆறு ருதுக்களுக்கு ஆறு இராகமாலிகையில் பணிணியிருக்கின்ற இடத்தில் கடைசி இராகமாக தீரா சங்கராபாரணம் ஜன்யத்தில் நாகத்தொனி சகிதை, தொனி சகிதை, சகிதை அப்படி என்று வருகின்ற மாதிரி அதை அமைத்து நாகத்தொனி சகிதை தொனி சகிதை சகிதை சகிதை அப்படியென்று முடித்திருக்கிறார்.

தேவேந்திரக் குறவஞ்சி என்ற மராட்டியக் குறவஞ்சி என்று ஒரு நூல் இருக்கின்றது. அந்தக் குறவஞ்சி இந்த இராகத்தை (நாகத்தொனி) உபயோகப் படுத்தியதற்கு அதை எந்த மாதிரி ஒரு ஜதை ஜன்னிய சங்கராபரண ஜன்யமா தான் அந்த மராட்டியக் குறவஞ்சியிலேயும் இராகம் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதில் ஆரோகணத்தைச் சரிகசா என்று சொல்லவில்லை. சரிசமநிபநிச சநிகநிபமகசா என்று சொல்லியிருக்கிறார். சரிச நிச சரிகச என்று சொல்லாமல் மகமபதிநிசா என்று சுப்பராம தீட்சிதரும் மகமபநித நிசா அப்படி வக்ராமாவும் சநிதநிபம கசா என இரண்டு பேரும் அந்த ரிஷப வருஷமா அவரோகணத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

நாகம் நெளிந்து நெளிந்து தான் போகும். இது ஒரு வக்ரம், சரிஸமகமப நிதபமக நிதநிஸா அப்படிங்கிறது ஆரோகணம் நான்கு வக்ரம் வருகிறது. சாதாரண வக்ரம் ஒரு வக்ரமாகத்தான் வரும். இரண்டு வக்ரமும் வரும். அப்புறம் திரும்பி வருகின்ற இடத்தில் சநிதனி பமகஸா என்று ஒரு வக்ரமாக இருக்கிறது அந்த மாதிரி வக்ரத்தினால் நாகத்தொனியாக இருக்குமோ?

இது வக்ர பூர்வ ஜன்யராகம். இது ஒரு இராகமாக மாறியதற்கு அப்புறம் தான் ஒரு வக்ர சம்பூர்ணமாக மாறியிருக்க வேண்டும். படுமலைப் பாலையில் இருக்கின்ற பண் இருக்கும் போது வக்ரமாக இருக்க முடியாது. மருதப்பண்ணில் இருக்கும் போதும் வக்ரமாக இருக்க முடியாது. ஏனென்றால் தமிழிசையில் வக்ர இராகம் கிடையாது. தமிழிசையில் பண்ணியல் திறத்திறம் இருந்ததே தவிர வக்ரம் என்கிறது தமிழிசையில் இல்லை.

நாகத்தொனிக்கு அதனுடைய ஆரோகண அவரோகணம் இந்த ஐந்து வக்ர ஸ்வரங்கள் எல்லாம் வைத்துக் கொண்டு பார்த்தால் சமகமபதிநிஸா என்பதை ஆரோகணமாகவும், சனிப மகச சரிபமகஸா என்பதை அவரோகணமாகவும், வைத்துக் கொள்ளலாம்.

திருப்பனந்தாள் முத்துகந்தசாமி தேசிகர்

அம்மையார் அவர்கள் இரண்டு கருத்தைத் தெளிவாகக் கூறினார்கள். பழமையான பண்முறையிலே பார்த்தால் இந்த நாகத்தொனி படுமலையில் பிறந்தது என்று கூறுகிறார்கள். தற்கால இராக முறையில் பார்த்தால் தீரசங்கராபரணத்தில் ஜன்யம் என்று இரண்டு வகையில் சொல்லியிருக்கிறார்கள். ஆக இந்தப் பண்ணாராய்ச்சி முறையில் பார்க்கும் பொழுது நடனபரவியல் பிறந்ததாகக் கொண்டால் பண்முறை அமைப்பில் பார்க்கும் போது பழமையான பண் நாகத்தொனி அப்படியென்று வருவதற்குள் அந்தப்படுமலையில் பிறந்தது என்று இந்த மாமன்றம் முடிவு செய்தால் சிறப்பாக இருக்கும்.

திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம்

வருங்கால மக்களுக்கு நாங்கள் படுமலையில் வைத்துக் கொண்டு பண்ணினாலும் சரி நீங்கள் அரும் பாலையில் வைத்துக் கொண்டாலும் சரி. நாகத்தொனி 103 பண்களில் வந்து விட வேண்டும். படுமலையில் அடுத்த ஆண்டு நீங்களும் செய்து கொண்டு வாருங்கள் இந்த ஆரோகணத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதனால் நாகத் தொனி ஆரோகணம், அவரோகணம் இருந்தால் கூடபடுமலையிலேயும் சரி, அரும்பாலையிலும் சரி, இரண்டையும் குறித்துக் கொண்டு நாகத்தொனியை நாம் இந்த ஆண்டு பண்ணாராய்ச்சியில் ஏற்றுக் கொண்டோம். அரும்பாலையில் நாம் வைத்திருக்கின்றோம். ஏனென்றால் அவர்கள் சொல்லுகின்ற சான்றுகளை வைத்துக் கொண்டு பார்க்கிறபொழுது இதுதான் அதிகமாக இருக்கின்றது. படுமலையில் நாம் குறிக்கவில்லை. அரும்பாலை இன்று முடிவு செய்து கொள்ள வேண்டும். ஆகையினால் அரும்பாலைப்பண் அதாவது தீரசங்கராபரணம்.

டாக்டர் பி.டி. செல்லத்துரை

1949-இல் முதல் கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பிறகு 18 ஆண்டுகள் முடிந்து இந்த 23 பண்களுக்கும் ஈடாக இராகங்கள் முடிவு செய்யப்பட்டன. 67-ஆம் ஆண்டில் 103 பண்களில் தேவாரத்தில் காணப்படாத பண்களைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். நடுவிலே அது திசை மாறி இலக்கியங் களில் அதிகமாக ஈடுபாடு கொண்ட கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. திருப்புகழ், திருவருட்பா, காவடிச்சிந்து இப்படியாகக் கட்டுரை நிறைய வாசிக்கப்பட்டனவே தவிர பண்ணைப் பற்றி அதிகமாக ஆராய்ச்சிகள் நடந்ததாகத் தெரியவில்லை.

1949லிருந்து 67 வரை பங்கு கொண்ட பெரியோர்கள் திரு. வி. சுப்பையா தேசிகர், குடந்தை ப. சுந்தரேசனார், பேராசிரியர் சாம்பமூர்த்தி அன்று முதல் தனது மூச்சு முடியும் வரை பங்கு கொண்ட பேராசிரியர். அவர்தான் எல்லா ராகங்களுக்கும் ஆதியாகவும் அடிப்படையாகவும் இருப்பது தேவாரத்தில் உள்ள பண்கள் என்று நூலிலே எழுதிவிட்டார். அதற்குப் பிறகு கோ. சாரங்கபாணி செட்டியார், வேலாயுத முதலியார், திருவாதவூர் எம். சுப்பிரமணிய முதலியார், இலக்குமண அய்யர், எம்.எம். தண்டபாணி தேசிகர், சாமி ஐயா தேசிகர், அப்பாசாமி ஓதுவார், பாலுசாமிபிள்ளை, துடிசை கிழார் சிதம்பரனார், டி.சுந்தரேச தேசிகர், திரும்பாம்புரம் சாமிநாதபிள்ளை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1950ஆம் ஆண்டிலிருந்து திரும்பாம்பரம் சாமிநாதபிள்ளையும் கலந்து கொண்டிருக்கிறார் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, அண்ணாமலை நகர், சுப்பிரமணிய முதலியார், குளிக்கரை பிச்சையப்பா, திருவாட்டி எம்.ஏ. சாரதாம்பாள், சபாரத்தினதேசிகர், வினாயக முதலியார், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை. மு. நடராச தேசிகர் போன்றோர். 1950 விருந்து பெரியசாமி தூரன் அவர்கள் கலந்திருக்கிறார்கள். மற்றும் டாக்டர் வரதராசனார், கல்கி கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைவாரணனார், சாமிநாத சிவாசாரியன் நடேசதேசிகர், ஆவுடையப்ப தேசிகர், ராவ்சாகிப் கே. கோதண்ட பாணிபிள்ளை, டாக்டர் துரை அரங்கனார், வி.எஸ். கோமதி சங்கர ஐயர், திருவிடைமருதூர், வீருசாமி பிள்ளை, டாக்டர் எஸ்.இராமநாதன், கனகசபைபிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார், அருணாசல தேசிகர், இளையவள்ளி சீனிவாசச்

சாரியார், க.கோ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, தி.மு. நாராயணசாமிபிள்ளை, திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை, திரு.கே. திருஞானசம்பந்த ஓதுவார், டி.கே. ஆவுடைநாயகம்பிள்ளை, மீ.ப. சோமு, வீ.ப.கா.சுந்தரம், திரு. சொர்ண வெங்கட தேசிகர், சி.எஸ். பார்த்தசாரதி என ஐம்பதுக்கும் மேற்பட்ட பெரிய அறிஞர்கள் - ஜாம்பவான்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் சேர்ந்து 23 பண்களை முடிவு பண்ணிவிட்டார்கள். இப்பொழுது மீண்டும் ஒரு 13 பண்கள் சேர்க்கப்பட்டு இணையதளத்திலே பண்களுக்கு நிவாரணம் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.

அடுத்து கௌடி, குச்சரி பாடை, செவ்வழியாழ் ஆகிய பண்களைப் பற்றி இதேபோல விரிவாக ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த ஆய்வுகள் அனைத்தும் ஒலிப் பதிவு செய்யப்பட்டு அப்படியே ஒரு வார்த்தைவிடாமல் அவர்கள் பேசிய மொழியிலேயே அச்சுவடிவமாக்கி 175 பக்கங்களில் தமிழ் இசைச்சங்கம் மூலம் வெளியிட்டுள்ளார்கள். ஆண்டுதோறும் இதுபோல வெளியிட்டு வருகிறார்கள். 1974 வரை வெளியான பண்ணாராய்ச்சி அறிக்கைகளின் பக்கங்கள் 1300 என்கிறார் பெ.தூரன். அப்படியானால் 1993 வரை 6000 பக்கங்கள் தேறும் என்கிறார் ''தமிழிசை இயக்கம்'' நூலாசிரியர் இரா. இளங்குமரன்.

தமிழ் இசைச்சங்க இசைவிழாவில் காலையில் நடைபெறும் பண்ணாராய்ச்சிக் கூட்டங்களில் விழாவிற்கெனத் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட நாட்டிய நாடகங்களும் திருமுறைத் தொடர்புடையவை ஆகும்.

26.12.1954 (ஐந்தாவது ஆண்டு) - *29.12.1955* (ஆறாவது ஆண்டு) பந்தணை நல்லூர் எம். முத்தையாபிள்ளை, தஞ்சை க.பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை மாணவியர் - தேவாரப் பாடல்கள் - நாட்டியம்.

25.12.1957 (எட்டாவது ஆண்டு) : தென்காசி டி.என். ஆறுமுக ஓதுவார் சாரங்கி என்னும் வாத்தியத்தில் தேவாரப் பண்களை வாசித்துக் காட்டினார்.

28.12.1959 (பத்தாவது ஆண்டு) : திருவான்மியூர் மருந்தீசர் திருக்கோயில் நிகழ்ச்சி முறைப்படி தியாகராசர் தலங்களில் நடைபெறும் பல்லக்கு நடனம்.

28.12.1960 (பதினோராவது ஆண்டு) : சூலமங்கலம் இராதாகிருட்டிணன் ''தேவாரப்பாடல்களுக்கு அபிநயம்''.

22.12.1963 (பதினான்காவது ஆண்டு) : எஸ். பத்மா (நிருத்யோதயா) ''மீனாட்சி கல்யாணம்)

23.12.1966 (பதினேழாவது ஆண்டு) : சென்னை சரசுவதி கான நிலையக் குழுவினரின் ''தியாகேசர் குறவஞ்சி''

23.12.1967 (பதினெட்டாவது ஆண்டு) : வித்யா மூர்த்தி குழுவினரின் ''கும்பேசர் குறவஞ்சி''; பதம் - எம்.எல் வசந்தகுமாரி.

23.12.1972 (இருபத்து மூன்றாவது ஆண்டு) : பத்மா சுப்பிரமணியம் ''அர்த்தநாரீசுவரர் குறவஞ்சி''

23.12.1976 (இருபத்தேழாம் ஆண்டு) : ஸ்ரீ சண்முகாநந்தா பரதநாட்டியப் பள்ளி மாணவியரின் ''கண்ணப்ப நாயனார்''

22.12.1983 (முப்பத்து நான்காம் ஆண்டு) : திருமதி சித்திரா விசுவேசுவரனின் ''திருநீலகண்டர்''

22.12.1984 (முப்பத்தைந்தாம் ஆண்டு) : பத்மா சுப்பிரமணியம் ''பண்ணும் பரதமும்''

22.12.1985 (முப்பத்தாறாம் ஆண்டு) : ஸ்ரீ சண்முகானந்த பரத நாட்டியர் பள்ளி மாணவியரின் ''காரைக்காலம்மையார்''

29.12.1990 (நாற்பத்தொன்றாம் ஆண்டு) : இரா. நாகசாமி இயக்கிய ''ஞானக்குழந்தை.''

22.12.1992 (நாற்பது மூன்றாம் ஆண்டு) : திருமதி கிருஷ்ணகுமார் நரேந்திரன் இயக்கி பார்வதி ரவி கண்டசாலா பங்கேற்ற ''திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்.

22.12.1995 (நாற்பத்து ஏழாம் ஆண்டு) : இந்திராராசன் குழுவினர் நிகழ்த்திய ''தேவார திருவாசக நாட்டிய நிகழ்ச்சி.

22.12.1997 (நாற்பத்து எட்டாம் ஆண்டு) : வித்யாபவானி சுரேஷ் குழுவினரின் ''மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்''

1999 : பத்மா சுப்பிரமணியம் ''தேவார திருவாசகம்''.

மாலையில் நடைபெறும்இசை விழாவின் பொழுது பாடப்படும் திருமுறைப்பாடல்கள், திருமுறை நடனங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

இராஜா மு. அண்ணாமலை செட்டியார்

(30.9.1881 - 15.6.1948)

பிறந்த ஊர் - இளையாத்தங்குடி, பட்டினசாமி; கானாடு காத்தான்; பெற்றோர் - வெ.சா. ராம. முத்தையா செட்டியார், மீனாட்சி ஆச்சி.தமிழிசை இயக்கத்திற்கும், தமிழ் இசைச் சங்கத்திற்கும் தாயும் தந்தையுமாய் இருந்தவர் அண்ணாமலை அரசர். அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தை நிறுவியவரும் இவரே. திருவேட்களம் திருக்கோவிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு நிகழ்த்தினார். சிதம்பரம் கரூர், இளையாத்தங்குடிக் கோவில்களிலும் திருப்பணி செய்துள்ளார். கானாடு காத்தானில் மகளிருக்காக மருத்துவமனை கட்டினார். பல்வேறு அறங்களுக்காக ஒன்றரைக் கோடி ரூபாய் செலவிட்டுள்ளார்.

ஆர்.கே. சண்முகம் செட்டியார்



அண்ணாமலையரசர் மறைவிற்குப் பின் 1948-இல் தமிழிசைச்சங்கத்தின் தலைவர் ஆனார். ஆர்.கே.எஸ். அவர்கள் தமிழிசை இயக்கத்தில் அண்ணாமலை அரசரோடு தோளோடு தோள் நின்று தொண்டாற்றியவர். பொருளாதாரத் துறை அறிவில் பெரும் புகழ் பெற்றவர். இந்திய நாட்டின் நிதியமையச்சராகப் பணியாற்றியவர். அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்தவர். இவர் தம் பெருமுயற்சியால் தமிழிசைச் சங்கத்தில் பண்ணாராய்ச்சி தொடங்கப் பெற்றது. 5.5.1953இல் மறைந்தார்.

தி.மு. நாராயணசாமிப்பிள்ளை

முதலியாருக்குப் பின் இவர் தலைமைப் பொறுப்பேற்றார். சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைத் தலைவராகவும், அண்ணா மலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் பணியாற்றியவர். பெரும் பொருள் திரட்டி திருவானைக்காத் திருக்கோயிலைப் புதுப்பித்தார். தமிழிசைச் சங்கத் தலைவராக 1956 முதல் 1978 வரை பணியாற்றினார்.

எஸ். மகராஜன்

(1913 - 9.9.1982)

பிறந்த ஊர் பாளையங்கோட்டை; பெற்றோர் - ப.என். சுப்பிரமணிய பிள்ளை, கண்ணம்மா. சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றியவர். திருமந்திரத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். ஆடத் தெரியாத கடவுள். சொல்லின்பம், தெய்வமாக்கவி ஆகிய நூல்களை எழுதியவர். ரசிகமணி டி.கே.சி.யின் சீடர். 1978 முதல் 1982 வரை தமிழிசைச்சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

பு. ரா.கோகுலகிருஷ்ணன்



சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், குஜராத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பணியாற்றியவர். 1983க்குப் பிறகு இன்றளவும் தமிழிசைச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

ராஜா சர். முத்தையா செட்டியார்

(5.8.1905. - 12.5.1984)

பிறந்த ஊர் - இளையாத்தங்குடி, கானாடுகாத்தான்; பட்டினசாமி,

பெற்றோர் - ராஜா சர் அண்ணாமலை செட்டியார் - சீதை ஆச்சி), சென்னை மாநகராட்சியின் முதல் மேயர். 1936 - 37ல் சென்னை மாநில அரசின் கல்வியமைச்சராகவும், 1937இல் அறநிலையத்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர். சென்னையில் ராஜா அண்ணாமலை மன்றம், ராணி சீதை மன்றம், மதுரையில் ராஜா முத்தையா மன்றம் ஆகிய அரங்குகளை உருவாக்கித் தமிழிசை வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தமிழிசைச் சங்கத்தின் துணைத் தலைவராகத் (1948 - 1984) தாம் மறையும் வரை பணியாற்றியவர்.

ஏ.சி. முத்தையா (15.12.1941)



இளையாத்தங்குடி, பட்டினசாமி, கானாடுகாத்தான்; பெற்றோர் - எம்.ஏ.சிதம்பரம் செட்டியார், ஒப்பிலாள் ஆச்சி.)

இந்திய முன்னணித் தொழிலதிபர்களில் ஒருவர் திருக்கடவூர் அபிராமி அம்மன் ஆலயத்தில் மாபெரும் முன் மண்டபத்து திருப்பணி செய்துள்ளமை காலத்தால் அழியா புகழை இவருக்கு நல்கும். வைத்தீஸ்வரன் கோயில் திருப்பணிக்குழுத்தலைவராக இருந்து குடமுழுக்கும் செய்து வைத்த பெருமை இவருக்குண்டு.

1993லிருந்து தமிழிசைச் சங்கத்தின் மதிப்பியல் செயலாராகப் பணியாற்றி வருகிறார். இவர் செயலராகப் பணியாற்றி வரும் காலத்தில் தமிழிசைச் சங்கத்தில் நால்வர் விழா நடத்த ஏற்பாடு செய்துள்ளார். 4.8.1995-இல் இப்பணி தொடங்கப்பட்டது. நால்வர் பெருமக்களைப் பற்றி நான்கு அறிஞர்கள் உரையாற்ற, நால்வர் திருமுறைப்பாடல்களை நான்கு ஓதுவா மூர்த்திகள் அல்லது இரண்டு ஓதுவா மூர்த்திகள் பண்ணிசைக்கவும் ஒரு நாள் விழாவாக (மாலைப்பொழுதில்) 4.8.1995 முதல் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றது. 4.8.1995-இல் டாக்டர் திரு. மு.அ. சிதம்பரம், 4..1996-இல் மூதறிஞர் திரு. அ.ச.ஞா. 17.8.1997 தவத்திரு குன்றக்குடி அடிகளார், 9.8.1998ல் பேரூர் ஆதீனம் தவத்திரு இராமசாமி அடிகளார், 22.8.1999ல் திருப்பனந்தாள் காறுபாறு ஸ்ரீலஸ்ரீ குமாரசுவாமித் தம்பிரான், 6.8.2000ல் மாண்பமை பு.ரா.கோகுலகிருஷ்ணன், 4.8.2001ல் மூதறிஞர் திரு.அ.ச.ஞா. 18.8.2002.இல் தவத்திரு ஊரன்அடிகளார், 16.7.2005லும், 17.7.2006லும், 4.8.2007லும் மாண்பமை பு.ரா. கோகுலகிருஷ்ணன் ஆகியோர் தலைமை ஏற்றார்கள்.

இதுகாறும் தமிழிசை இயக்கத்தின் வரலாறு, தமிழிசைச் சங்கத்தின் வரலாறு, பண்ணாராய்ச்சிக் கூட்டத்தின் நிகழ்முறை, ஆய்வு முடிவுகள், சங்கத்தைத் தோற்றுவித்துக் கட்டிக் காத்து வரும் பெருமக்களின் பணிகள் எடுத்துரைக்கப்பட்டன. பண்ணாராய்ச்சிக் கூட்டங்களில் இசைக் கலைஞர்கள், ஓதுவாமூர்த்திகள், தமிழ் அறிஞர்கள் முழுமனதோடு ஈடுபட்டு வாதப்பிரதி வாதங்களை முன் வைத்து



நால்வர் விழா

முடிவுகண்டு வரும் விதம் போற்றுதற்குரியது. (துணை நூல்கள் : பண் ஆராய்ச்சி வெள்ளிவிழா மலர், 1974; தமிழ் இசைப்பொன்விழா மலர் 1992 - 93; பண்ணாராய்ச்சிப் பொன்விழா மலர் 1999, பண்ணாராய்ச்சிக் கூட்டஅறிக்கை 2005; நகரத்தார் கலைக்களஞ்சியம்; இர.இளங்குமரனின் ''தமிழிசை இயக்கம்).

12. புரசைத் திருநெறிக் கழகம் 1947

1947-ஆம் ஆண்டில் சென்னையில் புரசையில் வேம்படி விநாயகர் கோயிலில் திரு. கே. சோமசுந்தரம் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு புரசைத் திருநெறிக் கழகம் தொடங்கப்பட்டது.

** 1956 முதல் 1971 வரை திருமுறை விழா நடத்துதல்

1988இல் பொன்விழா

2007இல் மணிவிழா

** தொடர் விரிவுரை நிகழ்த்துதல்

1947... குலசை இராமநாத பிள்ளை... திருவெம்பாவை (30 நாள்)

1948... திருமதி காஞ்சனமாலை... திருவெம்பாவை

1955... திருவலம் சண்முகம் செட்டியார் .... பெரியபுராணம் (42 நாள்)

1971க்குப் பின் தொடர் விரிவுரை நடத்தியவர்கள்

நால்வர் விழா தமிழிசைச் சங்கம்

.... திரு. மு.பெ. சத்தியவேல் முருகன், திரு. மு. சிவச்சந்திரன், திரு. ஔவைது, நடராஜன், திரு. கு. சுந்தரமூர்த்தி; திரு. கே. சிவகுமார், திரு. இரா. செல்வக்கணபதி, திரு. பனசை அருணா.

21.3.1961 முதல் 30.11.200 வரை...

1248 ஆலயங்களில் மாதாந்திர கூட்டு வழிபாடு 2004-இல் 1201 வது திருக்கோயில் வழிபாட்டைச் சிறப்புடன் நடத்தியது.

1990 முதல் திருவாசக முற்றோதல்...

1964-இல் வேம்படி விநாயகர் ஆலயத்தில் சமயாசாரியார்கள் மூலவர்/ உற்சவர் திருவுருவங்கள் அமைத்துக் குடமுழுக்கு நிகழ்த்தியது. சென்னை குயப்பேட்டை கந்தசாமி கோயிலில் சேக்கிழார் பெருமான் தனிச்சன்னதி அமைத்தது. திருப்பணிகள் நடக்கும். ஆலயத்திற்குக் கழக அன்பர்கள் மூலம் சமயாசாரியார்கள் மற்றும் பல மூர்த்திகள் அமைக்க உதவுதல்.

100க்கும் மேற்பட்ட நூல்கள் அச்சிட்டு இலவசமாக வழங்குதல்: வெள்ளிவிழா மலர், பொன்விழா மலர், வாழ்க்கையில் திருமுறைகள் திருமந்திரம் - சிலவிளக்கங்கள், திருவாசகம் இனிய இல்லறம், ஆலய வழிபாட்டின் விளக்கம்.

V.S. எத்திராஜ முதலியார் : கழகத்தின் ஆயுள் உறுப்பினராகிய திரு. V.S. எத்திராஜ முதலியாரின் பணிகள்: 1) பல ஆலயங்களுக்கு நால்வர், சேக்கிழார் திருஉருவங்கள் அமைத்துக் குடமுழுக்கும் செய்ய உதவுதல் 2) பல

ஆலயங்களுக்குப் பிரதோஷ நாயகர் அளித்தல், 3) பல ஆலயங்களில் அறக் கட்டளைகள் அமைத்தல் 4) பல ஆலயங்களில் திருமுறைப்பதிகங்கள் கல்வெட்டுகள் பதித்தல்.

க.சொ. பசுபதி : நாளும் திருமுறை ஓதுபவர்; மாதந்தோறும் மக நட்த்திரத் தன்று திருவாசகம் முற்றோதல் செய்பவர்; 272 பாடல் பெற்ற தலங்களும் (15 தலங்கள் நீங்கலாக) சைகிளிலேயே சென்று வழிபாடு இயற்றியவர்; திருவண்ணாமலை, சிதம்பரம் தலங்களில் 48 நாட்கள் தங்கியிருந்து அனைத்துப் பூசை நிகழ்வுகளிலும் கலந்து கொண்டவர்; வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் அருகில் உள்ள தியாமுகச்சேரி சிவாலயத் திருப்பணி மேற்கொண்டிருக்கிறார்.

R. காளிதாஸ் : ஆன்மீக சொற்பொழிவாளர்; சென்னை அன்பர்களை அழைத்துக் கொண்டு 270 தலங்கள் வழிபாடு இயற்ற உறுதுணையாக இருந்தவர். பாடல் பெற்ற தலங்கள் (சில தலங்கள் நீங்கலாக) 272ம் சைகிளிலேயே சென்று வழிபட்டவர்.

தலைவர் - ம.கோ. சீனிவாசன்; செயலர் - சரவணன்

13. சிவ அன்பன் திருக்கூடம்

1958

திருக்கூடம் - நுழைவாயில்

சென்னை ஜார்ஜ் டவுன், 44, அம்மன் கோயில் வீதி... சரவணனும், நடுவில் சேர்ந்து கொண்ட இராமச்சந்திர மூர்த்தியும் இந்த வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்கள். “இதுதான் எங்கள் வீடு” என்றார் இராமச்சந்திரமூர்த்தி, “என்னடா இது! அமைப்புகளுக்குச் செல்லவே நேரம் இல்லையே. நண்பர்

சிவ அன்பன் திருக்கூடம்
அன்பேசிவம்
சிவ ௐ சிவ
சிவாயநம:
தியானம் செய்யுங்கள்

திருக்கூடம் நுழைவாயில்



திருக்கூடம்

அன்பாக அழைக்கிறாரே'' என மனம் இரண்டாட்டம் ஆட உள்ளே நுழைந்தேன். உள்ள ஒரு அருமையான காட்சி! உள்ளே ஒரு சிறு கோயில்... ...

திருக்கூடம்

பர்மா தேக்கு மரங்களால் ஆன வாயில்...

கயிலாய மலைக்காட்சி முகப்பில்... ...

நால்வர், சப்தரிஷிகள் துண்களில் செதுக்கப்பட்டிருத்தல்..

கொடி மரம், பலிபீடம், நந்தி... ...

உள்ளே சந்தான விநாயகர், காசி விசுவநாதர், விசாலாட்சி, திருமேனிகள்... ...

நான் பதறிப்போனேன். கால்களைக் கழுவுவதா? கைகளைக் கழுவுவதா? என்ற பதற்றம். கால்கள், கைகளைக் கழுவிவிடலாம். மனதை... ...? மூன்று கால பூஜை, நைவேத்யம் என முறையான வழிபாடு.

இதனை நிறுவியவர் திரு. குப்புசாமி என்ற பெரியவர்... நிறுவிய ஆண்டு 1958...! இடத்தின் பெயர் சில அன்பன் திருக்கூடம்... தன் பெயரையே ''சிவ அன்பன்'' என்று கெசட்டில்

குப்புசாமி

மாற்றிக் கொண்டார். ‘மாணவர்களுக்கு சீருடை, புத்தகம், திருமுறைகள் வழங்குதல், அன்னதானம் செய்தல்; சிவ அன்பர் கூடத்தில் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்தல்; தானே உரையாற்றுதல் எனப் பணியாற்றினார். தனது வணிகச் சின்னமாக (Trade Mark) ‘‘சிவாய நம’’ என அமைத்தனர். 1991-இல் இறைவனடி சேர்ந்தார். இவரது மகனார் திரு. சிவ. இராமச்சந்திர மூர்த்தியும் தந்தை எவ்வழி மகன் அவ்வழி எனப் பணியினைத் தொடர்கின்றார். சைவ சித்தாந்தம், திருமுறை இசையுடன் கற்றிருக்கிறார். கயிலை உட்பட திருத்தலப் பயணங்கள் மேற்கொண்டு இருக்கிறார்.

14. ஸ்ரீ சிவசுந்தர விநாயக தேவார பாராயண பக்த ஜனசபை

2007 மே 6 காலை 8.00மணி... நேராக I.C.F. பெரம்பூர் காலனியில் இருக்கும் புரசைத் திருநெறிக் கழக மதிப்புறு செயலர் திரு. சரவணன் இல்லத்தை அடைந்தேன். அவரை அழைத்துக் கொண்டு... ... அல்ல... அல்ல.. அவர் என்னை அழைத்துக் கொண்டு பழைய வண்ணாரப் பேட்டைக்குச் சென்றார். வழியும் புரியவில்லை; ஒன்றும் புரியவில்லை. நெல்லையில் காட்டுவார் இன்மையால் வழி கேட்டுச் சென்றது நினைவுக்கு





வந்தது- சரவணன் அழைத்துச் சென்றமையால் வழி தேடும் பிரச்னையே இல்லை.

சிவசுந்தர விநாயக தேவார பாராயண சபை என்ற பலகை மாட்டப்பட்டிருந்தது. கொஞ்சம் வியப்பு. சென்னை சபைகள் எல்லாம் கட்டிடம் பெற்ற சபைகளாயிருக்கின்றன. சரி என்று நினைந்து உள்ளே நுழைந்தேன். நம்ப மாட்டீர்கள். கலைக்கருவூலம்... ... ஆம். அறுபத்து மூவர் நாயன்மாரின் திருவுருப் படங்கள்... தஞ்சாவூர் பெயிண்டிங்கில்... ... அடடா! கேமரா எடுத்து வராமல் போய்விட்டோமே என்ற தாபம்... மதிப்புறு செயலர் கதுமென உதவிக்கு வந்தார். அடுத்த மாதமே ஒரு நண்பரை அழைத்துக் கொண்டு சென்று அத்தனை படங்களையும் புகைப்படமா எடுத்து C.D.ல் போட்டு அனுப்பிவிட்டார்.

அந்தப் படங்களை அச்சிடவே தனியாக ஒரு புத்தகம் போடவேண்டும். செயல்பாடு என்றால் சரவணன்... 1934-இல் ஒரு படத்திற்கு ஐந்து ரூபாய் கொடுத்து சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் தயாரித்தவையாகும்.

சபை தோன்றிய ஆண்டு 1921 தேற்றுவித்தவர்கள் திரு. தி.ரா. வேலாயுத நாடார். திரு. ஆ.ச. சந்தன குமார பாண்டியர்; திரு. சி.ந. கதிர்வேல் நாடார் ஆகியோர். தொடக்கத்தில் நடராஜர் திருவுருவப்படம் வைக்கப் பட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்தது. 18.1.1935-இல் ஐம்பொன்னால் செய்யப் பட்ட நடராஜர், சிவகாமி அம்மை, மாணிக்க வாசகர் சிலைகள் நிறுவப் பட்டுப் புனித நன்னீராட்டு விழா நடைபெற்றது. கட்டிடம் பழமையாய் விரிசல் கண்டமையால் புதிய கான்கிரீட் கட்டிடம் கட்டப்பட்டு 24.4.1995-இல் புனித நீராட்டு விழா நடைபெற்றது. 7.1.2004-இல் நால்வர் உலோகச் சிலைகள் நிறுவப்பட்டன.

நாள்தோறும் திருமுறைகள் ஓதுதல்; வாரந்தோறும் சைவசமயச் சொற்பொழிவுகள்; அறுபத்து மூவர் குரு பூஜை விழாக்கள்; ஆண்டிற்கு ஒருமுறை திருவாசகம் முற்றோதல்; ஆண்டுக்கு ஆறுமுறை நடராஜ அபிடேகம்; பங்குனி மாத இறுதியில் திருமுறை விழா; பன்னிரு திருமுறை பாடல் திரட்டு - 11 பதிப்புகள் வெளியாகியுள்ளது; இவை சபையின் பணிகள் ஆகும். தலைவர் - திரு. அ. திருஞான சம்பந்தம்; செயலர் - திரு. V.J. சந்திரசேகர்; புரவலர் - திரு. T.K. விஸ்வநாதன் (பிறந்த ஆண்டு 24.9.1929, வண்ணாரப் பேட்டை) அவர்களின் இல்லம் அந்தத் தெருவிலேயே உள்ளது. அவர்தான் சபை வெளியீடுகளைக் கொடுத்துச் சபையின் வரலாற்றையும் கூறினார். விஸ்வநாதன் அவர்கள் இரண்டு இலட்ச ரூபாய் வசூல் செய்து 1994-இல் கட்டிடத்தைப் புதுப்பித்தார் விநாயகர் ஆலயத்தை நிறுவியவர் விஸ்வநாதன் அவர்களின் தந்தையார் ஆவார். எந்த அமைப்பு வண்ணாரப் பேட்டை வந்தாலும் விருந்து படைப்பவர் விஸ்வநாதன் என்று சொல்லவும் வேண்டுமோ!

15. திருநீலகண்ட நாயனார் திருவிழா சபை

1964

திருநீலகண்ட நாயனார் தர்மபரிபாலன சங்கம், திருத்தணி : நானூறு ஆண்டுகளுக்கு முன் ... ... கார்வேட் பேரரசர் குலால மக்களுக்கு இரண்டு சத்திரங்களும், விநாயகர் கோயிலும் வழங்கினார். ஆண்டுதோறும் டிசம்பர் 31-இல் திருத்தணி திருப்படி திருவிழாவின் போது காலை 9.00 முதல் அன்ன

தானமும், பிற்பகல் 3.00 மணி முதல் இரவு 2.00 மணி வர ஆன்மீக சொற்பொழிவு, இன்னிசை ஆகியனவும் நடைபெற்று வருகின்றன. அதே போல ஆடிகிருத்திகையிலும் அன்னதானம் நடைபெறுகின்றது. தலைவர் - திரு. M. ஆறுமுக உடையார்; செயலர் - திரு சண்முக தயானந்தம்.

திருநீலகண்ட நாயனார் திருவிழா சபை : மேலே கூறப்பட்ட திருநீலகண்ட நாயனார் தர்ம பரிபாலன சங்கச் செயலர் திரு. சண்முக தயானந்தத்துடன் தொடர்புடைய மற்றொரு அமைப்பு திரு நீலகண்ட நாயனார் திருவிழா சபை ஆகும். இந்த சபை பற்றிச் சிறிய வரலாறு. இச்சபை 1964-இல் ஒருவர் ரூ 5 வீதம் மூலதனத்துடன் 11 பேரால் துவக்கப்பட்டு இன்று 40 உறுப்பினர்களுடன் திருநீலகண்ட திருவிழா நிதி என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. துவக்கிய பொழுது டைலர் திரு. A. சண்முகம், திரு. P, ஆறுமுகம், திரு. சண்முக தயானந்தம் ஆகிய மூவரும் ஆயுட்கால இயக்குனர்களாக இருந்தனர். முன் இருவரும் மறைந்து விட்டபடியால் திரு. சண்முக தயானந்தம் அவர்களே இப்பொழுது செயல்பட்டு வருகிறார்.

இச்சபையினர் சென்னை குயப்பேட்டை திருக்கந்தப்பெருமானார் ஆலயத்தில் 1964 முதல் திருநீலகண்டர் திருநட்சத்திரத்தன்று காலை அபிடேகம், இரவு ஓதுவாமூர்த்திகள் தேவார இன்னிசையுடன் திருவீதி உலாவும் நிகழ்த்தி வருகின்றனர். தலைவர் - திரு. அரங்கநாதன்; செயலர் - திரு. சண்முக தயானந்தம்.

செயலர் திரு. சண்முக தயானந்தம் திருப்புகழ்மாமணி திரு. மு. அருணகிரி அவர்களைக் கொண்டு ''திருநீலகண்ட நாயனார் வரலாறு'' என்ற நூலினை வெளியிட்டுள்ளார். இந்நூல் சில அரிய செய்திகளைத் தாங்கியுள்ளது.

நூலில் உள்ள அரிய செய்திகள் : திரு. மு. அருணகிரி அந்தமான் தீவுக்குச் சென்ற சமயம் அங்குள்ள குலாலர் (வேளாளர்) வம்சத்தைச் சேர்ந்தவர்கள் இவரைச் சந்தித்து, அங்கு நிகழ்த்தி வரும் திருநீலகண்டர் விழா பற்றி இவருடன் கலந்து உரையாடியிருக்கின்றனர். அந்தமானில் உள்ள இளமையாக்கினார் கோவிலில் திருநீலகண்டர், அவர் மனைவியார் குளத்தில் மூழ்கி எழும் காட்சியைக் கண்டிருக்கிறார். அத்துடன் சிலை வடிவில் உள்ள திருநீலகண்டர், அவரது மனைவி இருவரது உருவங்களையும் புகைப் படம் பிடித்துக் கொண்டு வந்துள்ளார்.

இந்நூலில் திருநீலகண்ட நாயனார் வரலாறு - உரைநடை, பெரிய புராணப் பாடல்கள் அவற்றின் விளக்கம், திருநீலகண்ட நாயனார் போற்றித் திருவகவல் 108, இராகம், தாளத்துடன் இளமையாக்கினார், இளமை நாயகி, திருநீலகண்டர், இரத்தினாசெலை என்ற நான்கு கீர்த்தனைகளும் இணைக்கப் பட்டுள்ளன.

போற்றித் திருவகவலில் ஒரு பகுதி :

''தண்டிணைப் பற்றிய தகைமையோய் போற்றி
பண்டு தம் செய்கை பகர்ந்தோய் போற்றி
வாவியின் மூழ்குமா மணியே போற்றி
மேவிய இளமையின் மெய்யரே போற்றி.

கீர்த்தனையில் ஒரு பகுதி

இராகம் : பைரவி தாளம் : ஆதி

''மன்றிலென்றும் மகிழ்ந்து மாநடம்செய் ஈசனால்
தென்றிசை போற்றநின்ற தில்லைத்தல வாசனால்

வென்றஐம் புலனான்மிக்கீர் என்றே
அழைக்கப்பெற்றார்
என்றும் இளமையோடே இருக்கப்பே
ரனுற்றார்.
[திருநீல]

16. திருமயிலை இறையன்பர் திருச்சபை
மயிலை பக்த ஜனசபை
1972

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் இரவுப் பொழுது... ...

மின்னலும் மழையும் பின்னி எடுத்தன; கொட்டியது மழை... ...

மயிலை கபாலி கோயிலுக்கு அருகாமையில் ஓர் சிறிய தெரு... ...

அக்ரகாரத்துப் பாணியில் அமையப் பெற்ற அழகிய பழைய வீடுகள்... ...

எங்கும் விளக்கொளி இல்லை... எங்கும் நிசப்தம்... ...

ஆனால் தெருவின் மத்தியில் ஒரு பழைய வீடு... ...

அந்த வீட்டின் மூலையில் ஒரு சிறிய அறை... ...

அங்கு மட்டும் மெலிதாக வெளிச்சம் வந்து கொண்டிருந்தது.

அது மெழுகுவர்த்தியின் வெளிச்சமாக இருக்கலாம். அறையின் மத்தியில் நான்கு இளைஞர்கள் அமர்ந்து கொண்டு இருந்தனர். துடிப்பும் வேகம் கொண்ட ஓர் இளைஞர் மட்டும் கைகளைப் பின்பு கட்டிக்கொண்டு, அங்குமிங்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தார். இவர்கள் அனைவருக்கும் சுமார் 20 முதல் 25 வயதிற்குள் இருக்கும். எதையோ தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி என்றால்



மயிலை பக்த ஜனசபை உறுப்பினர்கள்

இவர்கள் யார்? தீவிரவாதிகளா? ஆம் தீவிரவாதிகளே தான். பயந்து விடாதீர்கள். பகவானின் பக்தியைப் பாரெங்கிலும் பரப்புவதில் தீவிரவாதிகள்.

சிவந்த நிறமும் நடுத்தரமான உயரமும் கொண்டு ஒருவர் அமர்ந்து உள்ளாரே அவர்தான் கிருஷ்ணமூர்த்தி என்பவர். இனிமையாகப் பாடி எல்லோரையும் அசத்திவிடுவார். அவர் பக்கத்தில் சற்றுக்குறைவான உயரத்தில் அமைதியாக அமர்ந்து உள்ளாரே. அவர்தான் திருவான்மியூர் நடராஜன். நாடகக் கலையில் வல்லவர். ஆடல் அரசு என்று பெயர் பெற்றவர். நல்ல பாடகரும் கூட. முகம் நிறையக் கருகருவென்ற மீசையும் கம்பீரமுமான தோற்றம் கொண்டு காட்சி அளிக்கிறாரே. அவர்தான் சுரேஷ் என்பவர். வெண்கலக் குரலுக்குச் சொந்தமானவர் நல்ல பாடகர். அவர் பக்கத்தில் காலை இளஞ்சூரியன் போன்ற முகத்தைக் கொண்டு காந்தம் போல் கவரும் படியான பார்வையுடன் இருப்பவர்தான் மோகனசுந்தர். பார்த்த மாத்திரத்தில் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்து விடுவார். சற்று ஒல்லியான உடலமைப்பும் நடுத்தரமான உயரமும் கொண்டு இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருப்பவர் தான் செயல்வீரர் நாகராஜன். அனைவரையும் ஈர்க்கும் வண்ணம் அற்புதமாக மிருதங்கம் வாசிப்பவர். அவருடைய வீடுதான் அது. அங்குதான் எல்லோரும் கூடி ஆலோசிக்கிறார்கள். அப்படி என்ன ஆலோசனை? அதுவும் இந்த இருள் வேளையில்.

இவர்கள் ஐவரும் ஓர் இசைக்குழுவாகச் செயல்பட்டு பக்தியைப் பரப்பி வந்தார்கள். தற்போது கபாலீஸ்வரர் கோவிலில் செயல்பட்டு வரும் நாகராஜன் வீட்டில் ஒவ்வொரு பௌர்ணமி தோறும்; நாமசங்கீர்த்தனம் செய்வார்கள். இது சற்று விரிவடைந்து

ராமசங்கீர்த்தனம்

வேறு சில இடங்களிலும் நடைபெறலாயிற்று. இதனையே ஒரு சபை ஒன்று ஆரம்பித்து அதன் மூலம் செய்யலாமே என்று திட்டமிட்டனர். அப்படி உருவானது தான் ''மயிலை பக்த ஜனசபை''.

22.4.1972-இல் நடைபெற்ற தொடக்க விழாவில் திருக்களர் திரு. சுந்தரேச தேசிகரும், லால்குடி திரு. மு. சுவாமிநாதனும் தொடங்கி வைத்தார்கள். முதலாம் ஆண்டுவிழாவில் பாபநாசம் சிவன், கொத்தமங்கலம் சுப்பு கலந்து கொண்டனர். இரண்டாம் ஆண்டு துவக்கத்தில் இருந்து மார்கழி மாதத்தில் 30 நாட்களும் மயிலையில் உள்ள நான்கு மாடவீதிகளைச் சுற்றிலும் நாமசங்கீர்த்தனம் ஒலிக்கத் துவங்கியது.

குருஜி சுந்தரராம சுவாமிகள்

சுந்தரராமன்... ...

சிறுவயதிலேயே திருப்பதி திருவேங்கடமுடையான் சன்னதிக்குச் சென்று தரிசனம் செய்து வருவது வழக்கம்.

ஆண்டவனைத் தியானித்துத் தரிசித்த சமயம் அவருடைய முதுகின் பின்புறத்தில் ஒரு பெரியவர் சைகை மூலமாகவும், எழுதிக் காட்டியும் அவரைத் தியானிக்க விடாமல் தொல்லை செய்தார்கள்.

அவர் தான் வள்ளிமலை மௌனகுரு சுவாமிகள்.

சுந்தரராமன் இருக்கும் இடங்களுக்கு எல்லாம் சென்று உடன் இருந்து பற்பல அற்புத விஷயங்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.

சுந்தரராமன் அவர்கள் அரசுத் துறையில் உணவுப் பொருள் வழங்கும் துறையில் செயலாற்றியும், அதன்பின் கார் சம்பந்தமான ஒர்க்ஷாப்பிலும், விண்ணில் பறக்கும் விமானம் பழுது பார்க்கும் பராமரிப்பிலும் செயலாற்றி வந்தார்கள்.

1943-ஆம் ஆண்டு முதல் மௌன குரு சுவாமிகளின் உதவியுடன் 15 நாட்களுக்கு ஒருமுறை திரு வேங்கடமுடையான் சந்நதிக்குச் சென்று வரலாயினார். இதனால் சுவாமிகளுடன் சுந்தரராமன் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

திருப்பதி மலையில் இருந்த 90 வயதிற்கு மேற்பட்ட சித்தரஞ்சன் சாட்டர்ஜி என்ற தன் குருநாதரிடம் சுவாமிகள் சுந்தரராமனை அழைத்து தரிசிக்கச் செய்தார்கள்.

மௌனகுரு சுவாமிகளுக்கு அம்மை நோய் கண்டு கண்பார்வை போய் விட்டது. சுவாமிகளுக்கு எந்த நோய் வந்தாலும் தீர்க்கும் சக்தி இருந்தாலும் தன் வினையைத் தானே அனுபவிக்கலாம் என்று இருந்தார். இதனைப் பொறாத சுந்தரராமன் ''உங்கள் கண் பார்வை மீண்டு வராமல் செய்யும் பத்திதான் தேவையா?'' என வருந்தினார். அவரைப் பார்த்து சுவாமிகள் ''எனக்குக் கண்பார்வை வரவேண்டும் என்ற ஆசை கிடையாது. உன் ஆசைக்கு வேண்டுமானால்

குமாரதாராவில் இருக்கும் பரம குருவைப் பார்த்து வா'' என்றார். சுந்தரராமன் அவர்கள் குமாரதாரா சென்று பரமகுருவிடம் முறையிட அவரும், ''ஒரு யாகம் கற்றுத் தருகிறேன். அதனைக் குருநாதர் முன்பு செய்தால் சர்ப்பங்கள் அவர் முகத்தில் அடிக்கும். கண் பார்வை வரும்'' என்றார். அவ்வாறே சுந்தரராமன் யாகம், செய்ய குருநாதர் கண் பார்வை மீண்டது.

சுந்தரராமனும் அவருடைய குருநாதரும் வள்ளிமலை அருகில் உள்ள தங்கால் என்ற இடத்தில் தவமிருந்தும், ஆசிரமத்திற்கு வரும் பக்தர்களுக்குப் பரிகாரம் செய்து கொண்டும், வந்த சமயத்தில் 1917-இல் சித்திரை மாதம் மக நட்சத்திரத்தன்று மௌனகுரு சுவாமிகள் சமாதி நிலை அடைந்தார்கள்.

1970களில் ஒவ்வொரு அமாவாசையன்றும் அதிகாலை 5.00மணி முதல் மயிலாப்பூர் மேற்கு மாடவீதியில் ஜெயராம் விலாசில் நூற்றுக்கணக்கான மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து தரிசனம் செய்து தங்கள் குறைகளைச் சொல்லிப் பரிகாரம் பெற்றுப் போவார்கள். தீரா நோய்; திருமணத் தடைகள், வேலை கிடைத்தல், நொடித்துப் போன கம்பெனிகளைச் செயல்பட வைத்தல் - இப்படி எந்தவிதமான குறைகளையும் கேட்டு வந்தவர்களுக்கு குரு சுந்தரராம்ஜி அவர்கள் பரிகாரம் தந்து ஆசி வழங்கி வந்தார்கள். அல்சர் நோயாளியைக் குணப்படுத்தல், மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்துதல் - போன்ற அற்புதங்களை குருஜி நிகழ்த்தினார்.

வேலூர் கோட்டையாக இருந்த ஆலய இடத்தைப் பழைய ஆலயமாகவும், சத்துவாச்சேரியில் இருந்த பழைய சிவலிங்கத்தைப் பெயர்த்து எடுத்து கோட்டையின் உள்ளே நிறுவி இன்று அனைவரும் போற்றும் வண்ணம் ஜலகண்டேசுவரர் ஆலயமாகக் குருஜி மாற்றினார்கள். மயிலை முதல் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் முக்கியமான வேலூர் பகுதி, நெய்வேலி, சித்தூர் பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்களின் குடமுழுக்கு நடத்தி ''குடமுழுக்கு சக்கரவர்த்தி'' மயிலை மாமுனிவர் குருஜி, சுந்தரராம சுவாமிகள் என்றே அழைக்கப்பட்டார்.

1974 முதல் மயிலை பக்த ஜனசபை ஆண்டுதோறும் நடைபெறும் மார்கழி மாத பஜனையில் குருஜி கலந்து கொள்ள ஆரம்பித்தார். குருஜி அவர்கள் சபையின் காப்பாளராக ஆனார்கள். பக்த ஜனசபை அன்பர்களை அன்ன தானம் செய்ய வைத்து, உஞ்சிவிருத்தி மூலம் அரிசி முதலான பொருள்களைப் பெற்று மயிலாப்பூரே வியக்கும் வண்ணம் அனைத்துப் பெரு மக்களுக்கும் அன்னதானம் செய்யும் முறையைக் குருஜி ஏற்படுத்தினார். இந்த மாகேஸ்வர பூஜையினால் மயிலை பக்த ஜனசபையை மலையளவுக்கு உயர்த்திவிட்டார்கள் குருஜி சுந்தரராம் சுவாமிகள்.

குருஜி திருப்பதி வேங்கடத்தானைத் தரிசனம் செய்யத் திருமலை சென்றபோது 10.5.1999 அன்று தீட்சை கிடைத்த இடத்திலேயே முக்தியும் கிடைத்தது.

17. இசைக்கலைவிழா

அருட்செல்வர் திரு. நா.மகாலிங்கம் அவர்கள்... ...

சென்னை ... ...

இராணி சீதை மன்றம்;

மியூசிக் அகாடமி

கோவை சன்மார்க்க சங்கமும் அவிநாசிலிங்கம் பல்கலைக் கழகமும்
இணைந்து வழங்கும் ஏழாம் ஆண்டு தேவார திவ்யப்பிரபந்த
தமிழ் இசைக்கலைவிழா
21·7·98முதல் 26·7·98 வரை
கோவை.

நாரதகான சபா

திருச்சி ... ...

கோவை ... ...

'' ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் நடத்தும் இசைக்கலை விழாக்கள் தமிழிசை வரலாற்றில் இரண்டாம் பாகம் ஆகும். முதல் பாகம் எழுதியவர்கள் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள். சென்னையில் மட்டும் அருட்செல்வர் ஏன் மூன்று இடங்களில் நடத்துகின்றார்? இராணி சீதை மன்றத்தில் நடத்துவதோடு நிறுத்திக் கொள்ளலாமே! அருட்செல்வர் ''பேராசை வாரிதியன்'' ஆவார். இராணி சீதை மன்றத்தில் நடத்துவது ஆண்டின் மையப் பகுதியிலாம். (பிப்ரவரி, டிசம்பரில் இசை விழாக்காலங்களில் சென்னை களை கட்டியிருக்கும் பொழுது, சென்னையின் முக்கிய சங்கீத சபைகளில் (மியூசிக் அகாடமி, நாரதகான சபா) இசைவிழா தொடங்கும் முன்னும் (டிசம்பர் 1 முதல் 4 வரை) முடிந்தபின்னும் (ஜனவரி 1 முதல் 5) தமிழிசைக் கொடி கட்டிப் பறக்க வேண்டும் என்பது அவர் அவா.

அருட்செல்வர் தேவார இசைக் கலைவிழா தொடங்கும் முன் தமிழ் நாட்டில் திருமுறை இசை எந்த அளவில் இருந்தது என்பதனைப் பார்க்க வேண்டும். ஒருசில தேவாரப் பாட சாலைகளைத் தவிர ஏனைய பாட சாலைகள் செயல்படாமல் நின்று விட்டன. முறையான பாடத்திட்டம் இல்லை. கோஷ்டி என்பதே மறைந்து விட்டது. திருக்கோயில்களிலும் ஓதுவார்கள் நியமிப்பது இல்லை. ஒரு சில திருக்கோயில்களில் ஓதுவா மூர்த்திகள் இருந்தாலும் அவர்கள் பிறபணிக்கு ஆட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தச் சூழலில் - 1979க்கு முன்னர் - சென்னை சேத்துப்பட்டு குசலாம்பாள் திருமண மண்டபத்தில் அருட்செல்வர் கோடியருச்சனை விழா நடத்தினார். நாள்தோறும் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவ்விழாவில் உரையாற்றவந்த பண்ணாராய்ச்சி வித்தகர் திரு. ப. சுந்தரேசனார் அவர்கள் தம் உரையில், ''ஆண்டு தோறும் சென்னையில் இசைக் கலை விழா நடத்தலாமே!'' என்று அருட்செல்வரை நோக்கிக் கேட்டார். அருட்செல்வரும் அதற்கு இசைந்தார்.

1979-இல் சென்னையில் இசைக் கலை விழாவிற்கு அடித்தளம் இடப்பட்டது. தொடக்கநாள் விழா (மாலை) + ஏழு நாள் விழா. திருப்புகழ் திவ்யப்பிரபந்தத் திருநாள், சீர்காழி மூவர், திருநாள், திருவாரூர் மூவர் திருநாள், மாயூரமூவர் திருநாள், குமரகுருபரர் தாயுமானவர் - வள்ளலார் திருநாள், பாபநாசம் சிவன் - தண்டபாணி தேசிகர் - தூரன் திருநாள், பரதர் திருநாள் என ஏழு நாட்களும்

காலை 7.30 பகவத்கீதை (ஆரம்ப காலங்களில்) அல்லது திருவாசக விரிவுரை; காலை 10.00 - கருத்தரங்கம் - இயல் இசை அறிஞர்களின் கருத்துரை; மாலை 6.00 - பொதுக் கருத்தரங்கம் தொடர்ந்து முன்னணி இசை, நாட்டியக் கலைஞர்களின் நிகழ்ச்சி என விழா அமைப்பு நெறிப்பட்டிருந்தது. தொடக்க நாள் விழாவில் தமிழிசைவாணர்களில் ஒருவருக்கு ''இசைக்கலைச் செல்வர்'' விருது வழங்கும் விழா. இந்நிகழ்முறை பின்னர் சீர்காழி மூவர், மாயூர மூவர், திருவாரூர் மூவர், வண்ணமுவர், தமிழிசை மூவர், பதமூவர், தேசிய மூவர் என்று புதுப்புதுக் கோலங்களைப் பூண்டது. நெய்வேலி சந்தான கோபாலன், சௌம்யா, சஞ்சய் சுப்பிரமணியன் அசோக்ரமணி, விஜயசிவா போன்ற உச்ச நிலைப் பாடகர்கள் அரங்கேறினர். பத்மா சுப்பிரமணியன், ரேவதி ராமச்சந்திரன் போன்றோரின் திருமுறை நாட்டியங்கள் இடம் பெற்றன. இசை வல்லுனர்களால் தமிழிசை நுணுக்கங்கள் காலை நிகழ்ச்சியில் ஆராயப் பெற்றன. அதிகம் பாடப்பெறாத நீலகண்டசிவன், தண்டபாணி சுவாமிகள், கந்தசுவாமி சுவாமிகள், வேதநாயகம்பிள்ளை, மாரிமுத்தாப்பிள்ளை போன்றோரின் பாடல்கள் அரங்கேறின. பிற்றைநாளில் தேவார மூவர் விழா என்றே தனியாக இசைக்கலைவிழா நடக்கலாயிற்று. இம்முறையைப் பின்பற்றித் தமிழக அரசு சீர்காழியில் சீர்காழி முவர் விழா ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது. சென்னைப் பல்கலைக்கழக மாணவியரும், இராணி மேரி கல்லூரி மாணவியரும் ஆண்டுதோறும் பங்கு பெறலாயினர். நிகழ்ச்சிகளில் இசைக் கலைஞர்கள் அல்லாது தமிழறிஞர்கள், அமைச்சர்கள்; துணைவேந்தர்கள், நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் தொழில்; அதிபர்கள், இதழாசிரியர்கள் எனப் பல்துறைப்பட்ட ஆன்றோர்களும் கலந்து கொண்டமையால் தமிழிசை விரிவான ஒரு தளத்தை எட்டியது.

1985 முதல் தேர்ந்த இசைக் கலைஞர் ஒருவருக்கு ''இசைக் கலைச் செல்வர்'' விருதும் பத்தாயிரம் ரூபாய் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. விருது பெற்றவர்கள் வருமாறு: டாக்டர் எஸ். இராமநாதன் (1985), டாக்டர் சீதா (1986), திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் (1987), டாக்டர் வீ.ப.கா.சுந்தரம் (1988), தா. சோமசுந்தர தேசிகர் (1990), மா. வயித்தியலிங்கம், (1989), எம்.என், வேங்கடவரதன் (1991), டாக்டர் எஸ்.ஏ.கே. துர்கா (1992), ரேவதி ராமச்சந்திரன் (1993), எஸ். ராஜம் (1994), தாம்பரம் ஏகாம்பரம் (1995), தருமபுரம் சாமிநாதன் (1996), டாக்டர் ரத்தின சபாபதி, பிரமிளா குருமூர்த்தி (1997), எஸ்.ஆர். ஜானகிராமன் (1998), பி.டி.ஆர். கமலத்தியாகராஜன் (1999), டி.எம். சபாபதி தேசிகர் (2600), காஞ்சிபுரம் ஆ. விநாயக முதலியார் (2002), குடந்தை வெ. லட்சுமணன் (2006)

இராமலிங்கர் பணிமன்றமும் இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளையும் இணைந்து 1979 முதல் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதங்களில் இராணி சீதை மன்றத்தில் இசைக்கலை விழா தொடர்ந்து நடத்துகின்றன.

20.2.1992 அன்று டாக்டர் எஸ். ஏ.கே. துர்கா அவர்களுக்கு ''இசைக் கலைச் செல்வர்'' விருது வழங்கப்பெற்றது. எஸ்.ஏ.கே. துர்கா உலக இசைக்குத் தமிழ் இசையே ஆதாரம் என்பதை ஆராய்ச்சி வழியில் நிரூபித்து வருபவர். கிறித்துவ ஆதி இசைக்கு வேதமும் தேவாரமும் எப்படி அடிப்படையாக விளங்கின என்பதை ஆராய்ச்சி செய்து அது பற்றிய நூலை

யேல் பல்கலைக் கழகம் (Yale University) வெளியிட்டது என்றால் அதற்குக் காரணம் டாக்டர் எஸ்.ஏ.கே. துர்கா அவர்களே காரணம்.

23.2.92 நான்காவது நாள் தேவார விழாவாக மலர்ந்தது.

2001 பிப்ரவரி - மார்ச்சில் எட்டு நாட்கள் இருபத்து இரண்டாம் ஆண்டு இசை விழா மிகவிரிவாக நடைபெற்றது. நிகழ்முறையை மிக அழகாகத் தொகுத்து அரிய நூலாக வெளியிட்டுள்ளார்கள். இந்த ஆய்வுரைத் தொகுப்பு மலர் தமிழிசைக் கருவூலம் ஆகும்.

22.2.2001 மாலை சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பொன். கோதண்டராமன் தலைமை வகித்தார். அருட்செல்வர் டாக்டர் திரு. நா. மகாலிங்கம், தம் வரவேற்புரையில் ''வெள்ளி விழாவை இன்னும் மூன்றாண்டுகளில் எதிர்கொள்ள இருக்கிறோம். இதுவரை 18 இசைக்கலைச் செல்வர்களை விருதளித்துக் கௌரவித்திருக்கிறோம். கோவை, திருச்சிராப்பள்ளி உட்பட 500க்கும் மேற்பட்ட ஆய்வுகள் நிகழ்த்தியிருக்கிறோம்.

செட்டி நாட்டரசர் நிறைய தமிழ் பாடுங்கள், பிறகு மற்றவற்றையும் பாடுங்கள் என்றுதான் கேட்டார். அதற்கே கட்சி கட்டிக் கொண்டு எதிர்ப்பு தெரிவித்தார்கள். இப்போது குறிப்பிட்ட சில மேடைகள் தவிர, தமிழ் கேட்பது அரிதாகத்தான் இருக்கிறது. பாடகர்கள் பாடமாட்டேன் என்கிறார்களா? இல்லை. முன் வருகிறார்கள். ஆனால் போதுமான ஊக்கம் கொடுப்பதில்லை.

கோபாலகிருஷ்ண பாரதியார், பாபநாசம் சிவன் ஆகியோர் நாட்களை ஆன தாண்டவபுரத்திலும், சிவன் அறக்கட்டளை சார்பிலும் கொண்டாடுகிறார்கள். அப்போது முழுமையாகப் பாடுகிற கலைஞர்கள் மற்ற கச்சேரிகளில் பாடுவதில்லை.

கனம் கிருஷ்ணையர், ராமசாமி சிவன், கவிகுஞ்சர பாரதி, கோடீஸ்வர ஐயர், வேதநாயகம்பிள்ளை, பாபவினாச முதலியார், முத்துத்தாண்டவர் பாடல்களைப் பாடுகிறவர்களைக் காணோம். இவர்களைப் பற்றிப் பெரிதாகச் சிந்திக்கிறவர்கள் இல்லை. இசைக் கல்லூரிப் பாடத் திட்டங்களில் இவை இல்லை. தனிப்பட்ட கலைஞர்கள் அதிகமாகச் சிரத்தையெடுத்துக் கொண்டு கற்பிப்பது இல்லை. அவர்கள் நினைவு நாட்களைக் கொண்டாடுவது இல்லை. இதற்காகவே இராமலிங்கர் பணிமன்றம், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தும் இந்த விழாவில் இந்தப் பெரியவர்களை நினைவு கொள்ளும் முகமாக அவர்கள் பாடல்களையெல்லாம் தக்கவர்களைக் கொண்டு பாடச் செய்கிறோம்.

தமிழ்பாடத் தயாராக இருக்கிறார்கள். இராமசாமி சிவனுடைய பெரியபுராணக்கீர்த்தனை பாடுவீர்களா என்றால் அது எனக்குத் தெரியாது, சொல்லிக் கொடுங்கள் பாடுகிறோம் என்கிறார்கள். வேத நாயகர் பாடுவீர்களா! சொல்லிக் கொடுங்கள் பாடுகிறோம் என்கிறார்கள். எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு இந்தப் பெரியோர்கள் பாடி வைத்து விட்டுப் போனார்கள் என்பது கேள்வி! தமிழிலே பாட ஒன்றுமேயில்லை என்று சிலர் சொல்வதற்காகவா?

அறிஞர்களை மதிக்காத தேசத்தில் அறிஞர்கள் எப்படித் தோன்றுவார்கள்? அதற்காகவே இசைப்பாடல்கள்

அருளியவர்களை மூவர் மூவராக வரையறைசெய்து கொண்டு, எட்டு நாட்கள் விழாக் கொண்டாடுகிறோம். இன்னும் எத்தனையோ மூவர்களை நினைவு கொள்ள வேண்டியிருக்கிறது. கிறித்தவம், இஸ்லாம் சமயங்களிலே பாடல்கள் தந்த பெரியவர்கள் இருக்கிறார்கள். சமண, பௌத்த காப்பியங்களிலே பாடல்கள் ஆயிரம் ஆயிரமாக இருக்கின்றன. மதங்களை ஒரு பக்கம் நிறுத்திச் சமுதாய நோக்கில் பார்த்தாலும் பாரதியார், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார் என்று பட்டியல் நீளுகிறது.

எட்டு நாட்களில் அனைவரைப் பற்றியும் சிந்திப்பது கடினம். மற்றைய இசையமைப்புகள் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இரண்டு ஆய்வு அரங்குகள் காலை நேரத்தில் அமைகின்றன. மிகப்பழைய தமிழகத்தில் பண்கள், சங்கீதம் எப்படி இருந்தது என்பதைப் பற்றி விரிவாக ஆராய்கிற வகையில் டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி அவர்கள் முன்னின்று ஆய்வரங்கத்தை நடத்தித் தர இருக்கிறார்.

அதே போல் தேவார காலத்துப் பண்கள் இரண்டை எடுத்துக் கொண்டு முழுமையான பார்வையொன்றை நாம் பெறுவதற்கு வாய்ப்பாக ஒரு ஆய்வரங்கம் கடைசி நாளில் நடக்க இருக்கிறது. 51 ஆண்டுகள் பண்ணாராய்ச்சி நடந்து வந்தாலும் முழுமையாக ஒரு பயனும் கிடைக்கவில்லை. தமிழிசைச் சங்கம் ஒரு முடிவு கிடைக்க அரும்பாடு பட்டு வருகிறது. பங்கு கொள்கிற கலைஞர்கள் இடுகிற முட்டுக்கட்டைத்தான் இந்தத் தேக்க நிலைக்கு முக்கிய காரணம்''

இந்த விழாவின் இறுதி நாளில் இரண்டு பண்கள் பற்றி மட்டும் எடுத்துக் கொண்டு ஒரு முடிவு பெற முயல்கிறார்கள் நமது ஆராய்ச்சியாளர்கள். வெற்றி கிடைக்க வேண்டும் என்பது நமது விருப்பம். அருட்செல்வரின் வரவேற்புரையில் இசைக் கலை விழாவின் நோக்கம், பணி பற்றியும், தமிழிசையின் பரப்பு பற்றியும் தமிழிசை வளராமல் இருக்கும் சூழல் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பேராசிரியர் மா. வயித்தியலிங்கன் அவர்கள் நிகழ்ச்சியை அறிமுகம் செய்யும் முகத்தான் தமிழிசை தொன்மை, இசைநுணுக்கங்கள் என அரியதோர் உரை நிகழ்த்தினார்.

''பத்தாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியர் இசை பற்றிய குறிப்புகளைத் தருகின்றார். பாடலானது இயல்பாக, நான்கு வகையான ஓசைகளால் ஒலிக்கும் என்கிறார் தொல்காப்பியர். பாடல் என்றோ பாட்டு என்றோ சொல்வதை விடப் 'பா' என்று அதைக் குறிப்பது தான் பொருத்தமாகும். 'வெண்பா' என்றால் வெண்மையான ஓசை ஒலிப்பது என்பது பொருள். பா என்றால் ஓசை என்று சொல்ல வேண்டும். பாவிச் செல்வது ஓசை. அதாவது நாதம். அந்த நாதம் வெண்மை, கலி, வஞ்சி, அகவல் என்று நான்கு வகைப்பட்டதாகும். அந்த நான்கு வகைப்பாக்கள் ஒவ்வொன்றும் துறை, தாழிசை, விருத்தம் என்று மூன்று வகைப்படும். வெளி விருத்தம், வெண்டுறை, வெண்தாழிசை எனலாம்; அதே போன்று அகவல் எனும் ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் என்பர். அதே போன்று கலித் துறை, கலித்தாழிசை, கலிவிருத்தம்; வஞ்சித் அதுபோன்றே வஞ்சித் துறை,

தாழிசை, வஞ்சி விருத்தம் என்கிறோம். விருத்தத்தை லயத்தில் உட்படுத்தாமல் விரிவாகப் பாடுவதுண்டல்லவ?

இவ்வாறு மூன்று பாவினங்கள் முந்நான்கு பன்னிரண்டு வகையாகி, அவையும் சிறிது சிறிதாக விரிந்து வளர, பரந்த பாடல்களுக்கு ஒரு வகையாக இலக்கணம் சொல்கிறார் தொல்காப்பியர்.

கலிப்பாவைப் பற்றிச் சொல்லுகிற போது இன்றைய கீர்த்தனைகளுக்கு ஓர் அடிப்படையான அமைப்பை அதில் அவர் தந்திருக்கிறார் என்பதைக் காண்கிறோம். எனவே கீர்த்தனை இப்போது தோன்றிற்று என்று நாம் சொல்ல வேண்டியதே இல்லை. இன்றைக்கு யார் கீர்த்தனையை உண்டாக்கியது என்று நாம் பார்க்கும்போது, தமிழ் நாட்டில் முத்துத் தாண்டவர் தான் உறுதியாகக் கீர்த்தனையை உண்டாக்கியவர் என்று அறிகிறோம். அதற்கு முன்னால் வழக்கில் இருந்த கீர்த்தனைகள் அவர் அமைத்த வடிவில் அமைந்திருக்கவில்லை.

நாம் என்ன செய்திருக்கின்றோம் என்றால், அழகாக முதலில் ஒரு பல்லவியை அமைத்தோம். அடுத்து, அது போதாது என்று நினைத்தோம். ஆகவே, அப்பல்லவியை ஒட்டி அநுபல்லவி என்ற ஒன்றை நாமாகச் சேர்த்துக் கொண்டோம். இந்த அநுபல்லவி இல்லாமலேயே நம்மிடம் ஏராளமான கீர்த்தனைகள் உள்ளன.

முத்துத் தாண்டவர்தான் அநுபல்லவியை இணைத்துக் கீர்த்தனை செய்தார். ஆத முத்துத்தாண்டவரே முதன்முதலில் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற கூறுகளில் தமிழில் கீர்த்தனைப் பாடல்களை இசைத்தார். இப்பல்லவியைத் 'தரவு' என்று முந்தையத் தமிழர் கூறி வந்தனர். தரவு என்பது, தந்து முன் நிற்றல்; என்றாலும் பழந்தமிழரான தொல்காப்பியர் குறிப்பிட்ட தரவுக்கும் இந்தக் காலத்துத் தரவுக்கும் அதிக வேறுபாடு உள்ளது. அது காலப்போக்கில் ஏற்பட்ட மாறுதல் ஆகும்.

ஆக, தரவு என்பது கீர்த்தனையின் முதல் அங்கம்; அடுத்த அங்கம் துணைத் தரவு அல்லது இணைத்தரவு எனப் பட்டது. நான்கு சீர்களால் ஆன நான்கு அடி அமைப்பைச் சரணம் என்ற அங்கமாக ஆக்கினார். தாழிசையைத் தான் அவர்கள் சரணம் என்று சொல்லி விட்டனர். தாழிசையைத் தான் இசை என்று வழங்கி, அதைத் தாள சரணம் என்று மாற்றிவிட்டதுதான் இசை வரலாற்றில் ஏமாற்றம் தருவதாகும். ஆனால் தொல்காப்பியர் தம் குறிப்பில் தரவு, இணைத்தரவு, தாழிசை என்றே தெரிவித்துள்ளார். தொல்காப்பியர் சொன்ன தரவு, இணைத்தரவு, தாழிசை என்ற அமைப்புப் பாடல்கள் நாளா வட்டத்தில் மாறுதல்களுக்கு உட்பட்டு, இன்று கீர்த்தனை என்ற வடிவில் உலவி வருகின்றன. இந்த மாற்றங்கள் பத்தாயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட இசை மாறுதல்கள் என்று கொள்ள வேண்டும்.

தாளத்தில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு என்று சொல்கிறோம். ஒன்பது என்று சொல்வது கிடையாது. அது பின்னால் ஏழாம் நூற்றாண்டில் புகுந்து அமைந்துவிட்டது. இவற்றில் ஒன்று, இரண்டு, மூன்று என்பன முதல் எண் அமைப்புக்கான கால அளவைகளாகும். இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நான்கு - இதை அளவு என்று சொல்லி வந்தோம். இரண்டும் மூன்றும் சேர்ந்தால் ஐந்து என்பதைக் கொண்டு வந்தோம். இந்த ஐந்துக்குத்தான் 'கண்டம்' என்று பெயர் கொடுத்தோம். அதன் பின்னர் மூன்றும்

நான்கும் சேர்ந்த 'ஏழு' என்தைக் 'கலவை' என்ற பொருளில் 'மிஸ்ரம்' என்று அழைத்தோம்.

ஏழாம் நூற்றாண்டில் அரசாண்ட மகேந்திர பல்லவர் இசை வல்லவர். அவர் அது என்ன 'ஏழு'டன் தாள அமைப்பு நின்றுவிடுவது? என்று கேட்டுவிட்டு ஆராய்ந்தார். 'இரண்டு, மூன்று, நான்கு என்ற அமைப்பில் மொத்தம் என்பதைக் கொண்டு தாளநடை இருக்கட்டும் என்று கூறி அந்தப் புதிய நடையைக் கொண்டு வந்தார். இந்த நடை ஏற்கனவே இருந்தது; அதை வெளியில் கொண்டு வந்தார்; அவ்வளவுதான். இந்த 'ஒன்பது' நடைக்கு ஒரு பெயர் கொடுத்தார்கள். அது 'சங்கீரணம்' என்பது 'மிஸ்ரம்' என்றாலே கலவை என்றுதான் பொருள். 'சங்கீரணம்' என்றாலும் கலவை என்றுதான் பொருள்படும்.

இதுவரையில் நான் குறிப்பிட்ட இசை பற்றிய அவ்வளவு தகவல்களும் தொல்காப்பியர் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னவை'' என்று வைத்தியலிங்கம் முடித்தார். 10,000 ஆண்டுக் காலத் தமிழிசை வரலாற்றை வயித்தியலிங்கம் இங்கே முன் வைத்துள்ளார்.

சேலம் டாக்டர் திருமதி எஸ். ஜெயலட்சுமி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். டக்டர் பிரமிளா குருமூர்த்தி, திருமதி ஆர்.எஸ். ஜயலட்சுமி, சகோதரி முனைவர் மார்கரெட் பாஸ்டின், ஆகியோர் உரை யாற்றினார். அதற்குப்பிறகு உரையாற்றிய செய்திகளின் மேல் கலந்துரையாடல் நிகழ்த்தினர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி - திருவாரூர் மூவர் திருாள், நான்காம் நாள் நிகழ்ச்சி - மாயூர முவர் திருநாள்; ஐந்தாம் நாள் - தூரன்; பாபநாசம், தேசிகர் திருநாள்; ஆறாம் திருநாள் - சிவன் மூவர் திருநாள்; ஏழாம் நாள் - பதமூவர் திருநாள்.

1.3.2001 அன்று எட்டாம் நாள் நிகழ்ச்சி ''தேவாரப் பண்கள் ஆய்வுகள்'' என்ற முறையில் அமைந்தது. பங்காளர்கள்; பேரா. மா. வயித்தியலிங்கன், டாக்டர் எஸ்.ஏ.கே.ஆர். துர்கா, டாக்டர் பிரமிளா குருமூர்த்தி, டாக்டர் கே.ஆர். சீதாலட்சுமி; பொருள் - குறிஞ்சி, கொல்லிக் கௌவாணம்.

பேராசிரியர் வயித்தியலிங்கம் தேவாரம் பெயர் ஆராய்ச்சி, தோன்றி மறைந்த மீட்டெடுக்கப்பட்ட வரலாறு என விரிவாக முன்னுரை வழங்கினார். பின்னர் பங்காளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை முன் வைத்தார்கள். முதலில் எஸ்.ஏ.கே. துர்கா அவர்கள், ''இலக்கியங்களின் சான்றுகளை வைத்து, Performing Tradition போடும் போது சில பண்களுக்கு வேறு மாதிரியான ஒரு கருத்து வருகிறது. இப்போது பாடிக் கொண்டிருக்கும் ஓதுவார்களின் ராகத்தை விட வேறு பட்டதாக இருக்கிறது. ஆகையினால் அந்த மாதிரி சொல்லியிருக்கிற பண்கள் எப்படி மாறின? ஓதுவார்களும் இலக்கியம் படித்துவிட்டுச் சொல்வது சரியில்லை; நாம் இப்படித்தான் பாடணும் என்று சொல்கிற ஒரு மாதிரி ஆகிவிடக் கூடாது. நாமும் அவர்கள் பாடுவது தப்பு என்று சொன்னால் நாகரிகமாக இருக்காது. இரண்டையும் கலந்த ஓர் ஆராய்ச்சி நூல் என்று தேவாரப் பண்களைப் பற்றி வெளியிடும் போது அந்த நூலிலே ஒரு சரியான செய்திதான் வரவேண்டும்.''

''குறிஞ்சிப்பண் என்பது மிகவும் பழங்காலத்துப் பண். குறிஞ்சிப்பண் சங்க காலத்திலேயே வழக்கத்தில் இருந்தது. அது தேவார காலம் வரை புழக்கத்தில் இருந்திருக்கிறது.

இலக்கியத்திலிருந்து கிடைக்கிற சில செய்திகளைக் கொண்டு பார்த்தால் மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்துக்கு உரிய பண் குறிஞ்சிப்பண் என்று தெரிகிறது.''

''தமிழிசைக்குரிய 108 பண்களில் குறிஞ்சிப் பண் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிஞ்சிப்பண் ஓதுவார்கள் பாடும் முறையிலே வந்து ஹரிகாம்போதி என்று நாம் சொல்கிறோம். அதாவது செம்பாலை அந்தப் பண்ணிலே பாடிக் கொண்டு வந்தது ஒரு மரபாக இருக்கிறது.''

''இசை இலக்கியம், பஞ்ச மரபு போன்ற நூல்களில் பார்க்கிறபொழுது ஹரிகாம்போதியில் பாடுவது சரியா என்று ஒரு கேள்விக்குறி எழுகிறது. அடுத்து விபுலானந்த அடிகள் இதைக் குறிஞ்சியாகவே சொல்கிறார்.

டாக்டர் பிரமீளா ''மூன்று கருத்துகள் குறிஞ்சிக்கு வருகின்றன. ஒன்று குறிஞ்சிராகத்திலே குறிஞ்சியாழ் இருந்ததே அது என்ன - செம்பாலை. அடுத்தது குறிஞ்சி ராகம். அப்புறம் ஹரிகாம்போதி, இதிலே ஏதாவது ஒன்றை நாம் முடிவு செய்து விட்டால் அடுத்தது பார்க்கலாம்''

மிக நீண்ட விவாதம்நடக்கிறது. மலரில் இந்த விவாதம் 22 பக்கங்களில் வருகின்றது.

டாக்டர் பிரமீளா, ''வாசி தீரவே காசு நல்குவீர்'' தேவாரம்இருக்கிறதே! அது இராப்பண். அதனாலே குறிஞ்சியிலே பாடணும்.''

பேரா. வயித்தியலிங்கன் ''எது எது குறிஞ்சி?எது எது ஹரிகாம்போதி?''

டாக்டர் பிரமீளா ''Time theoryஐக் கொண்டு வந்தால், இரவில் பாடினால் குறிஞ்சியில் பாடவேண்டும். காலையில் பாடினால் ஹரிகாம்போதியில் பாடவேண்டும்.''

இக்கருத்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. அடுத்து ஆய்வுப்பொருள் கொல்லிக் கௌவாணம்.

டாக்டர் துர்கா : கொல்லிக் கௌவாணம் என்பது 103 பண்கள் சொல்லப் படும் வரிசையில் சொல்லப்படவில்லை.

பேரா. வயித்தி : கௌவாணம் என்பதை நடபைரவி என்று முடிவு செய்ய வேண்டும். பஞ்சமரபு பதிப்புக்குப் பிறகு நமக்கு 103 பண்கள் பெயர்கள் கிடைக்கின்றன. இந்த 103ல் தேடித் தேடிப் பார்த்தாலும் எங்கும் கொல்லிக் கௌவாணம்கிடையாது. தேவாரத்தில் ஏன் கொல்லிக் கௌவாணம் என்று போட்டார்கள்? கௌவாணம் என்பது சுந்தரர் தேவாரங்களில் மட்டும் கொல்லிக் கௌவாணம் என்று வருவானேன்! அதை நடபைரவியில் பாடுகிறார்கள். 'தம்மையே புகழ்ந்து' தெருவில் போகும்போது பாடுவார்கள். அப்படிப் பாடிவிட்டுப் போய் விட்டார்கள்.தெருவில் பண்டாரங்கள் ஒரு டியூன் போட்டுப் பாடறமாதிரி. அதனாலே கொல்லிக் கௌவாணம் என்பதை உருப்படியாக யாரும் பாடவில்லை.''

டாக்டர் துர்கா : இப்போது கொல்லிப்பண் வேறே, கௌவாணப் பண் வேறே. கொல்லிக் கௌவாணம் என்று ஒரு பண் சொல்ல முடியாது. பேராசிரியர் சொல்வது போல் அச்சுப்பிழையாகவும் இருக்கலாம். கொல்லி என்று பெயரிட்டிருக்கிற எல்லாவற்றையும் 'நவரோஸ்' என்று எடுத்துக் கொள்வோம். அதனாலே நம்முடைய ஆராய்ச்சியின் முடிவு வந்து கௌவாணம் என்பது நடபைரவி

ராகத்துக்கு ஒப்பான பண்; கொல்லிக் கௌவாணம் என்ற பெயர் அதற்குக் கிடையாது. கொல்லிப் பண் வேறு.

அருட்செல்வர் இதோடு நிறுத்தவில்லை. டிசம்பர் மாதம் சென்னையில் உள்ள சபாக்களில் கர்நாடக சங்கீதம் முழங்கும். அந்தக் கோட்டையையும் பிடிக்க நினைக்கிறார். சென்னை மியூசிக் அகாடமி கடும் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் கொண்டது, மதுரை சோமு, கே.பி. சுந்தராம்பாள் ஆகியோரை நெருங்கவே விட்டதில்லை. மருந்துக்கு கூடத் தமிழப் பாடல் ஒலிக்காது. அந்த மியூசிக் அகாடமியில் ஜனவரி 1 முதல் ஜனவரி 5 வரை தமிழிசைக்காக இசைக்கலை விழா நடத்த எண்ணுகிறார். 1992-இல் இவ்விழா தொடங்கியது.

காலை 7.30 முதல் 8.30 வரை திருவாசகப் பேருரை 10.00 முதல் 1.00 வரை - இயல் இசைக்கலைஞர்களின் கருத்தரங்கம்; மாலை 6.00 முதல் 9.00 வரை - தலைமையுரை; மற்றும் இசையரங்கம். முதல் நாள் - வள்ளலார் திருநாள்; இரண்டாம் நாள் - திருஞான சம்பந்தர் திருநாள்; மூன்றாம் நாள் - திருநாவுக்கரசர் திருநாள்; நான்காம் நாள் - சுந்தரர் திருநாள். ஐந்தாம் நாள் - திவ்யப்பிரபந்தம், திருப்புகழ் திருநாள். ஆறாம் நாள் - பாம்பனார், பட்டினத்தார் திருநாள்.

சென்னையில் மூன்றாவது இடமாக 1992முதல் டிசம்பர் 1 முதல் டிசம்பர் 4 வரை நாரதகான சபாவில் அருட்செல்வர் இசைக்கலைவிழா நடத்தி வருகிறார். மியூசிக் அகாடமியில் நடபெறும் நிகழ்முறை போலவே ஐந்து நாட்களும் காலை 7.30 முதல் இரவு 9.00 மணிவரை நால்வர் பெருமக்கள் பேரில் நடத்துகின்றார்.

அருட்செல்வரின் தாகம் தீரவில்லை. 1988-இல் திருச்சியில் இசைக் கலை விழாவைத் தொடங்கினார். சென்னை மியூசிக் அகாடமி நிகழ்ச்சி அமைப்பே. காலை 7.30 முதல்இரவு 9.00 மணி வரை தேவார மூவர் பேரிலும் தாயுமானவர் பேரிலும், ஸ்ரீ ராமானுஜர் பேரிலும், சீர்காழி மும்மூர்த்திகள் பேரிலும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

அருட்செல்வரின் எண்ணம் முழுமையாக ஈடேறுகிறது என்று சொன்னால் அது கோவை மாநகரில் நடக்கும் விழாக்களினால்தான் என்றால் மிகையன்று. விழா நிகழ் முறையில் பெரிதும் மாற்றம் இல்லை. அப்படியே மியூசிக் அகாடமி நிகழ்முறைதான். ஆறுநாட்கள் காலை 7.30 முதல் இரவு 9.00 மணி வரை.

கோவை இசைக்கலை விழாக்கள் இளைஞர்களை நோக்கிய இனிய இசைப்பயணங்கள் ... ... அவினாசி லிங்கம் பல்கலைக் கழகமும் கோவை சன்மார்க்க சங்கமும் இணைந்து நடத்துவது முதல் செய்தி ... ... நடக்கும் இடம் அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம் - இரண்டாம் செய்தி ... ... பி.எஸ். ஜி.கலைக்கல்லூரி, பேரூர் தமிழ்க் கல்லூரி, கோவை அரசு இசைக் கல்லூரி மற்றும் அவினாசி லிங்கம் பல்கலைக்கழக மாணவ மாணவியர் பங்கு பெற்ற இசை நிகழ்ச்சிகள்- மூன்றாம் செய்தி ... ... மாணவ மாணவியர் நிகழ்ச்சிகளுக்குப் பெருமளவு வந்து செவிமடுக்கும் காட்சி ... - நான்காம் செய்தி ... ஆயிரக்கணக்கில் தமிழ் அன்பர்கள் கூடும் அற்புதக் காட்சி - சென்னையிலே நிகழாத அதிசயக் காட்சி - ஐந்தாம் செய்தி ... ...

அருட்செல்வரின் கனவு கோவையில் நிறைவேறுவது போலத் தமிழகம் எங்கணும் நிறைவு பெற வேண்டும். அதுவே தமிழர்கள் அவருக்குச் செலுத்தும் நன்றிக்கடன் ஆகும்.

நா. மகாலிங்கம்



சைவப் பணிகள் பல ஆற்றிய அருட்செல்வரின் வாழ்வே ஒரு ஞான வாழ்வு. அருட் செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் 21.3.1923-இல் பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள சோமாந்துறை சித்தூர் கிராமத்தில் நாச்சிமுத்து கவுண்டர் - ருக்குமணி தம்பதியினர்க்கு மகவாய்ப் பிறந்தார். பள்ளிமாணவப் பருவத்தில் 4 ஆண்டுகள் வடமொழி பயின்றார். சென்னை இலயோலா கல்லூரியில் இயற்பியல் பட்டப்படிப்பு படித்தார். அதன் பின்னர் பி.ஈ. பட்டம் பெற்றார்.

1937-இல் நேருவையும், 1946-இல் காந்தியையும் சந்தித்தார். 1945-இல் தனது மாமா புதல்வியான மாரியம்மாளை மணம் புரிந்தார். காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்து சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். தந்தையார் விட்டுச் சென்ற தொழில்களை பன்மடங்கு வளர்த்து இந்தியாவின் தலைசிறந்த தொழில் அதிபராக உயர்ந்தார்.

ஞானிகள், அருளாளர்கள், துறவிகள் பலர் அருட்செல்வரை உருவாக்கியுள்ளனர். 1959 முதல் சுவாமி அபேதானந்தாவுடன் அருட்செல்வர் நெருங்கிப் பழகிவந்தார். 1975இல் பொள்ளாச்சி அருட்செல்வர் இல்லத்தில் நடைபெற்ற கோடி அர்ச்சனைப் பெருவிழாவில் கலந்து கொள்ள சுவாமி அபேதானந்தர் திருவனந்தபுரத்திலிருந்து பொள்ளாச்சி வரை சுமார் 340 மைல்கள் பாத யாத்திரையாக நடந்து வந்தார். கோடி அர்ச்சனை பக்தி இயக்கத்தின் ஓர் அங்கம் ஆகும். பொள்ளாச்சி, கோவை, பவானி ஆகிய ஊர்களில் அவர் நடத்திய கோடி அர்ச்சனை ஆயிரக்கணக்கான மக்களைப் பக்தி பரவசத்தில் ஆழ்த்தியது.

அருட்செல்வர் வாழ்வை திருவலம் மௌன சுவாமிகளும், சுவாமி சித்பவானந்தரும் பெரிதும் பாதித்தனர். அருட்செல்வர் புரவிபாளையம் கோடி சுவாமிகளைப் பலமுறை சென்று தரிசித்தார். அருட்செல்வர் எந்தவொரு புதுத்தொழிலும் தொடங்குமுன் காஞ்சி சங்கரமடம் 28வது பீடாதிபதி சுவாமி சந்திர சேகர சுவாமிகளைத் தரிசிக்காமல் துவங்கியதில்லை. சச்சிதானந்த சுவாமிகள் 1986-இல் அமெரிக்காவில் அனைத்து சமய ஆலயம் (LOTUS) கட்ட அருட்செல்வர் பெரும் பொருள் கொடுத்து உதவினார். கௌமார மடம் சுந்தர சுவாமிகள் மேற்கொண்ட திருப்பணிகள் அனைத்திற்கும் உதவி வந்தார்.

அருட்செல்வர் பற்றி சச்சிதானந்த சாமிகள் இவ்வாறு கூறுகிறார். “I came in contact with NM in 1968, when I visited India. He is a real Maha Lingam (Big

Lingam). He is a practical minded religious person who always sees far ahead. He is a worshipper of humanity and that is why I admire him. I consider NM as a true Karmayogin, who renders service to mankind without expecting any return. I have no hesitation in saying that I see in him an equal to Rajarishi Janaka. He is a follower of Ramalinga Swamigal of Vadalur. I admire everything in him. Suffice to say that he is the greatest among the great."

அருட்செல்வர் பெரிய மேதை; பேரறிஞர்; நிரம்ப படிப்பவர்; சிறந்த எழுத்தாளர். பொள்ளாச்சி, கோவை, சென்னை, பெங்களூர் ஆகிய நான்கு ஊர்ளிலும் தன் சொந்தப் பயன்பாட்டுக்காகப் பெரும் நூலகம் வைத்திருக்கிறார். ஒரு புத்தகக்கடைக்குள் நுழைந்தார் என்றால் 3000 ரூபாய் மதிப்புக்குக் குறையாத அளவு புத்தகங்கள் வாங்கிவிட்டுத்தான் வெளியேறுவார். அவருக்கு ஒரு புத்தகம் பிடித்துவிட்டால் அதில் நிறைய பிரதிகள் வாங்கி நண்பர்களுக்கு வழங்குவார்.

எழுத்துத்துறையில் அவர் பணியினை மூன்று வகையாகப் பிரிக்கலாம் 1) அவரே எழுதியது 2) அவர் பதிப்பித்தது 3) பிறரை எழுத ஊக்குவித்தது. அருட்செல்வர் எழுதிய ஆங்கில நூல்கள் 21; தமிழ்நூல்கள் 17. அருட்செல்வர் பதிப்பித்த அல்லது ஆதரவு அளித்த ஆங்கிலநூல்கள் 41; இந்தி நூல்கள் 7; தமிழ்நூல்கள் 25; ஒரியா நூல் 1. இவற்றுள் சைவ நூல்கள் வருமாறு: ஆங்கிலம் - Sivan Arul Thirattu by N.C. Naidoo, Periapuranam by G. Vanmikanatham, Thirumanthiram by B. Natarajan, Pathway to God through Manickavasagar by G. Vanmikananthan; பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய இருநூல்களையும் கோட்டோவியங்களுடன் தமிழ், ஆங்கிலம், இந்தி, ஒரிய மொழிகளில் வெளியிட்டார். இதுபோல தற்பொழுது கந்தபுராணம் வெளிவர உள்ளது. பன்னிரு திருமுறைகளையும் உரையுடன் வர்த்தமானன் பதிப்பகம் இரண்டாம் பதிப்பு வெளியிட்டபோது முழுச்செலவினையும் ஏற்றார். சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் ''சேக்கிழார் அடிச்சுவட்டில்'' நூலும் ''கொங்கு நாட்டுத் தலங்கள்'' நூலும் வெளிவர முழுமையாக உதவினார். சைவ நூல்கள் மட்டும் இங்கு கூறப்பட்டுள்ளது.

அருட்செல்வரின் திருக்கோயில் திருப்பணிகள் அளப்பரிய. திருப்பணி என்று யார் வந்து கேட்டாலும் இல்லையென்னாது வழங்கும் கொடைமடம் கொண்டவர் அருட்செல்வர். அருட்செல்வர் கருத்துரைக்கு மாறாக ஒரு அன்பர் ஆறுகால பூஜைக்கு ஏற்பாடு செய்துவிட்டார். அருட்செல்வர் அவரது செயலை ஏற்கவேயில்லை. வெறுங்கையோடு தான் போகப் போகிறார் என்று அருகிருந்தவர்கள் நினைத்துக் கொண்டு இருக்க ஐயாயிரம் ரூபாய்க்குக் காசோலை வந்தது. ''என்னய்யா! உங்கள் கருத்துக்கு மாறாக செய்கிறார். அவருக்கும் தருகின்றீர்களே! என்று கேட்க, ''திருப்பணி என்று கேட்கிறார். வேறென்ன செய்வது'' என்றார் அப்படி ஒரு கொடை மடம்!

திருநணா என்று அழைக்கப்படும் பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் திருப்பணிக்கு அருட்செல்வரின் பங்களிப்பு மட்டும் எண்பது இலட்சம் ரூபாய் ஆகும். நவக்கிரகங்களை வெளிப் பிரகாரத்துக்குக் கொண்டு வந்து வைக்க ஏற்பாடு செய்தார். அம்மன் சன்னிதி மிகவும் நெருக்கடியாக இருந்தது. மிக அருமையாகச் செப்பனிட்டு விசாலமாக அனைவரும் பார்த்துத் தரிசிக்கும் அளவுக்கு மாற்றி அமைத்தார். மண்டலாபிடேகம் முடியும்

நாற்பது நாட்களும் நிகழ்ச்சிகள் நடக்க ஏற்பாடு செய்தார். பொள்ளாச்சி ஜோதி நகரில் புதிய சிவாலயம் எழுப்பினார். கௌமாரமடம் சுந்தர சுவாமிகள் எந்தத் திருப்பணி செய்தாலும் அருட்செல்வரின் பங்களிப்பு கணிசமாக இருக்கும். இந்த வகையில் திருப்பெருந்துறைக்கோயில், வெஞ்சமாக்கூடல் திருக்கோயில் என்று அடுக்கிக் கொண்டேபோகலாம். பல திருக்கோயில்களின் கோபுரங்கள் அருட்செல்வர் கொடையால் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. அருட்செல்வரின் பிற கொடைகள் காங்கேயம் அகத்தீசுவரர் சன்னிதி; மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில், திருவிடைமருதூர் கோயில், அவிநாசி கோயில், பேரூர் கோயில். பழனி மலை இழுவை இரயில் இவரது கொடையால் ஏற்பட்ட ஒன்று. பழனியாண்டவர் திருக்கோயிலில் அருட்செல்வரின் குடும்பத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்டளைகள் எண்ணிறந்தன. பேரூர் ஆதீனம், கௌமார மடம், சூரியனார் கோயில் ஆதீனம், தொண்டை மண்டல ஆதீனம், ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் ஆகிய சமய நிறுவனங்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு அருட்செல்வர் உற்ற துணையாக இருந்து வருகிறார்.

சைவத்திருப்பணிகள், சன்மார்க்க சங்கப் பணிகள், கல்விப் பணிகள் என அறச்செயல்கள் அத்துணைக்கும் அடையா நெடுங்கதவு அருட்செல்வரின் இல்லக்கதவு!

மா. வயித்தியலிங்கன்

அருட்செல்வர் சென்னை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் நடத்தி வரும் இசைக்கலை விழாக்கள் சீரோடும் சிறப்போடும் நடக்கக் காரணமாயிருப்பவர் பெரும் பாண நம்பி திரு. மா. வயித்தியலிங்கனாரே.



நிகழ்ச்சிகளை முன் கூட்டியே ஏற்பாடு செய்தும், தக்க தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து தக்கவரிடம் ஒப்படைத்தும், கருத்தரங்குகள் நடக்கும் பொழுது தன் இசைப் புலமையால் கருத்துக்களை முன் வைத்தும் இசைக்கலை விழாக்களுக்குப் பொலிவூட்டி வருகிறார். பண்ணாராய்ச்சி வித்தகர் திரு. ப. சுந்தரேசனார் என்பதினால் அவரை அடியொற்றி இசை நுணுக்கங்களைத் தெளிவுபடுத்துகிறார். திண்டுக்கல் கல்லூரியில் ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர் என்பதினால் இயற்றமிழிலும் வல்லவராய் இருக்கிறார். தெலுங்கு, இந்தி, வடமொழி ஆகிய மொழிகளில் நல்ல பரிச்சயம் பெற்று உள்ளார். திண்டுக்கல்லில் பணியாற்றிய பொழுது ''தெய்வநெறிச் சங்கம்'' தொடங்கி அதன் நெறியாளராக இருந்து மாணவர்களை ஒருங்கிணைத்துத் திருமுறைகளைச் சுருதி சுத்தத்தோடு பாடச்செய்து, வார வழிபாடு நடத்தி, சேரிகளில் வகுப்பு நடத்தி, சுற்றுப்புறக் கோயில்களில் உழவாரப் பணி செய்து பனிரண்டு ஆண்டுக்காலம் பெரும்புரட்சியே செய்திருக்கிறார்.

(பிறந்த நாள் - 13.11.1935; பெற்றோர் - மாசிலாமணி செட்டியார், ருக்குமணி அம்மாள்; பிறந்த ஊர் - குடந்தை)

மா. கோடிலிங்கம்



மா. கோடிலிங்கம் : வயித்திய லிங்கம் - கோடிலிங்கம் தமிழிசைச் சகோதரர்கள்; பண்ணாராய்ச்சி வித்தகரின் தலை மாணாக்கர்கள். தேவார இசைக்கலை விழாக்கள் திரு. ராமதாஸ் அவர்கள் நடத்தும் பொங்குதமிழ்ப்பண்ணிசை மக்கள் விழாக்கள், மக்கள் தொலைக் காட்சி, தமிழகமெங்கும் பல அரங்குகளில் இந்தச் சகோதரர்கள் - தமிழிசை - பரிபாடல், சிலப்பதிகாரம், திருமுறைகள், சித்தர் பாடல்கள் - எனத் தமிழ்க்கொடி கட்டிப் பறக்கின்றனர்.

கோடிலிங்கம் அவர்களின் குரல் கணீரென்று இருக்கும். வானொலி, தொலைக்காட்சிக்கு ஏற்ற குரல். பணி ஓய்வுக்குப் பின்னர் பல சீடர்களை உருவாக்கி வருகிறார். அருட்செல்வர் நடத்தி வரும்இசைக்கலை விாக்கள் சிறப்புடன் நடக்க தமையனாருடன் இணைந்து பணியாற்றுகிறார்.

(பிறந்த நாள் - 31.1.1938; பிறந்த ஊர் - கும்பகோணம்; பெற்றோர் - வை. மாசிலாமணி செட்டியார், ருக்குமணி அம்மாள்)

18. திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருள் அருட்பணி மன்றம்

1979

''வானின்று வண்ணப் பணித்து எங்களை வழி நடத்தி வரும் எங்கள் அருட்குரவர் மதுரை ஞானசம்பந்த மடம் திருப்பெருந்திரு சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருள் ஆணை'' என்று அழைப்பிதழ் சுட்டுகிறது. ஆம். அப்படித்தான் நேரிலும் சொல்கிறார்கள். மதுரை ஆதீனம் திருப்பெருந்திரு சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆவி முலம் மன்றத் தலைவர் அவர்கட்கு ஆண்டு தோறும் திருமந்திர மாநாடு நடத்த வேண்டும் என்று அருளாணை பிறப்பித்தார்கள். அன்று தொடங்கி இதுநாள் வரை இம்மன்றம் ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் திருமந்திர மாநாடு நடத்தி வருகிறது.

13ஆம் ஆண்டு திருமந்திர முற்றோதல் விழா சுற்று 3 தந்திரம் 1 என அழைப்பிதழின் முகப்பே நம்மை விழா அரங்கிற்கு அழைத்துச் செல்கிறது. ''திருமந்திரத்தின் பிரிவுகள் மொத்தம் 89 தந்திரங்கள். ஆண்டு தோறும் 3 தந்திரங்கள் என்றவாறு முதல் சுற்று, முதல் மூன்று ஆண்டுகளில் நிறைவுற்றது. அடுத்து, ஆண்டுதோறும் ஒரு தந்திரம் என்றவாறு சென்ற ஆண்டில் இரண்டாம் சுற்று முடிவடைந்தது. இந்த ஆண்டு திருமந்திர முற்றோதல் முன்றாம் சுற்றாகத் தொடங்குகிறது. அதன்வழி இவ்வாண்டு பாயிரமும், முதல் தந்திரமும் என 336 பாடல்கள் முற்றோதல் செய்யப்பட இருக்கிறது. வழக்கம் போல இவ்வாண்டும் மன்றத் தின் நெறியுரையாளரான திருமந்திரத் தமிழ்மாமணி திரு. மு.பெ. சத்தியவேல் முருகனார் முற்றோதலில் அரிய குறிப்புரைகளை வழங்குவார்.

ஆண்டுதோறும் நல்லறிஞர் பெருமக்கள் மற்றும் நடமாடும் திருக்கோயில்களான ஓதுவார்கள் ஆகியோர்க்கு விருதும், பொற்கிழியும் வழங்குவதைப் போலவே இவ்வாண்டும் 13 பேருக்கு விருது வழங்கப்படுகிறது''. அழைப்பு எத்தனை செறிவாக இருக்கிறது! நடப்பு ஆண்டின் நடைமுறை, இதுவரை நடந்து வந்த பாதை - என மன்றம் பற்றிய வரலாற்று ஆவணம் அல்லவா? ஒரு வரலாற்றாசிரியன் ''மன்றம் எப்பொழுது தொடங்கியது? என்ன பணி? ஏதேனும் மலர் வெளியிட்டுள்ளர்களா?'' என்று நேரிலும், கடிதம் மூலமாகவும், தொலைபேசி முலமாகவும் கேட்டுப் பயனில்லாமல் - ஒரு சில இடங்களில் கிடைத்தாலும் தேடிப்பிடித்து மருந்துக்கு ஒரு அழைப்பு தரும் நிலையில் - உள்ள நிலையில் இவ்வளவு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றனர். அதற்கே நாம் நன்றி சொல்ல வேண்டும்.

9.1.2004 : 4.40 முதல் 6.30 வரை - திருமுறைப் பண்ணிசை. 6.30 - விருது, பொற்கிழி வழங்குதல் - விருது பெறுவோர் - 13 பேர்.

10.1.2004 : 8.45 - 9.30 - திருமுறைப் பண்ணிசை.

முதல் தந்திர முற்றோதல் முதல் அமர்வு

காலை 9.30 முதல் 1.00 மணிவரை - குறிப்புரை - திரு. மு.பெ. சத்தியவேல் முருகனார்.

முற்றோதல் இரண்டாம் அமர்வு

பிற்பகல் 2.00 முதல் 5.00 வரை : நிறைவுரை - திரு.மு. பெ. சத்தியவேல் முருகனார்.

எண்மர் ஆய்வரங்கம் - பாயிரம்

மாலை 6.00 : ஆய்வுப் பொருள் : 1. திருமந்திரத்தில் கடவுள் வாழ்த்தில் கூறிய கடவுள் சமயத்திற்கு அப்பாற்பட்டவரா? 2) திருமந்திரத்தில் கூறிய வேதமும் ஆகமமும் எது, 3) திருமந்திரம் முதனூலா? வழிநூலா? 4. மும்மூர்த்திகள் வணக்கம் திருமந்திரத்திற்கு உடன்பாடா?

ஆய்வறிஞர்கள் - எண்மர்; தொகுப்புரை - திரு.மு. பெ. சத்தியவேல் முருகனார்.

தீர்ப்பு - மக்கள் (வாக்கெடுப்பு மூலம்)

11.1.2004 : காலை 8.30 முதல் 9.30 மணி - திருமுறை இசை.

காலை 9.30 - 1.00 மணி வரை : எண்மர் ஆய்வரங்கம்

ஆய்வுரைப் பொருள்

1. திருமந்திரத்தின் 30 உபதேசம் நிறைவானதா? 2. திருமந்திரம் திருக்குறளுக்கு மூலநூலா, 3. திருமந்திரத்தில் கூறப்படும் அந்தணர் யார்? அக்கினி காரியம் எது? 4. திருமந்திரம் கூறும் கல்வி எது,

ஆய்வறிஞர்கள் - எண்மர்; தொகுப்புரை - திரு.மு.பெ. சத்தியவேல் முருகனார். பிற்பகல் 2.00 மணி - திருமுறை இசை.

பேட்டிமன்றம்

தலைப்பு இன்றைய சமுதாயம் சைவ சமயத்திடம் எதிர்பார்ப்பது என்ன? முதியவர் சார்பில் - மூவர்; இளைஞர் சார்பில் - மூவர்.

திருமந்திரத்தை முறையாகக் கற்றும் கேட்டும் ஆய்ந்தும் உணரக் கூடிய அரிய வாய்ப்பல்லவா இது!

''திருமூல தேவனையே சிந்தை செய்வார்க்கு

கருமூலம்இல்லையே காண்''

என்பது மன்றத்தின் இதய வாசகம் ... ...

நாமும் சிந்தை செய்வோம் ... ..

கருமூலத்தை அழிப்போம் ... ...

மன்றத் தொடக்கம் - 1979; திருமந்திர முற்றோதல் விழா தொடக்கம். தலைவர் - சண்முக சுந்தரம்; செயலர் - ந. இராசு; பொருளர் - மு.பெ. சத்தியானந்தம்; நெறியாளர் - மு.பெ. சத்தியவேல் முருகனார்.

மு.பெ. சத்தியவேல் முருகனார்

இப்பணிமன்றத்தின் நெறியாளர் திரு.மு. பெ. சத்தியவேல் முருகனார் தமிழ்நாடு மின்வாரியம் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவியிலிருந்து விடுப்ப ஓய்வு பெற்று தன் வாழ்வைச் சைவப்பணிக்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். தமிழ் வழிபாட்டைப் பரப்பி வரும் சைவ சித்தாந்த அறிஞர். தமிழ்மறை குடமுழுக்குகள் 1400க்கு மேலும், தமிழாகமத் திருமணங்கள் 2200க்கு மேலும் நிகழ்த்தியுள்ளார். ''தெய்வ முரசு'' என்ற திங்கள் இதழ் நடத்தி வருகிறார். திருமந்திரத்திற்குத் தனி இணைய தளம் நடத்தி வருகிறார். 27க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்க நூல்கள் : செந்தமிழாகம குடநீராட்டு நன்னூல், தமிழ் வேள்வி, சைவ சித்தாந்த பரிணாம வளர்ச்சி, திருமந்திரச் சிந்தனை, வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள், திருமந்திரம் - ஓர் அறிமுகம் (பாயிரம்), இவரே சைவர் இனிதே காண்க. திருமுருகாற்றுப்படை.

(பிறந்த நாள் - 21.9.1948; பிறந்த ஊர் - வேலூர்; பெற்றோர் - மு. பெருமாள், காமாட்சி.)

19. சேக்கிழார் மன்றம் இராயபுரம் 1986

2007... பிப் 11... 21-ஆம் ஆண்டு திருமுறை விழா; பிப் 12 - தாயுமானவர் விழா; ஏப் 14 - இசைவிழா; ஏப் 15 - மே 1 - 13ஆம் ஆண்டு திருமுறை மாநாடு; மே 14; அப்பர் விழா; மே 21 நம்பியாண்டார் நம்பிகள் விழா; மே. 29 - சேக்கிழார் விழா; ஜூன் 4 - திருஞானசம்பந்தர் விழா, திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் விழா; ஜூன் 25 மாணிக்கவாசகர் விழா; ஜூலை 2 - அருணகிரிநாதர் விழா; ஜூலை 22 - அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்; ஜூலை 23 - சுந்தரர் விழா; ஆகஸ்டு 15 குன்றத்தூரில் சேக்கிழார் வழிபாடு; செப் 10 - சுவாமி சிவானந்தர் ஜெயந்தி விழா; செப் 24 திரு. வி.க. நினைவு நாள் வழிபாடு; அக் 2 - திருவாசக முற்றோதல் வழிபாடு; அக் 8 - வள்ளலார் விழா; அக் 22 - இராஜராஜன் விழா; நவ 12 - சந்தான குரவர்கள் விழா; நவ 18 - பொதுக்குழு கூட்டு வழிபாடு; நவ 19 - வாரியார் சுவாமிகள் விழா; டிச 23 - 9ம் திருமுறை முற்றோதல்.

சேக்கிழார் மன்றம்
திருத்தலப்

அடியார்கள் ஊர்வலம்

இவையல்லாமல் தொடர் நிகழ்ச்சிகள் (சிறப்பு நிகழ்ச்சிகள் தவிர்த்த நாட்களில்); முதல் திங்கட்கிழமை முற்றோதல்''; இரண்டாம் திங்கட்கிழமை - திரு பூவை. கு. அரிகரின் ''திருக்குறள் விளக்கம்''; மூன்றாம் திங்கட்கிழமை - திரு. ஆர் தனபால் ''கந்தர் அனுபூதி''; நான்காம் திங்கட்கிழமை - திரு இறை முதல்வன் ''பெரியபுராணம்'', ஐந்தாம் திங்கட்கிழமை - திரு. ஐ. அரிகர கிருஷ்ணன் ''தாயுமானவர் பாடல்''; பிரதிமாதம் கடைசி ஞாயிறு காலை 10.00 - 11.30 வரை திரு. ஜெ. மகாதேவன் ''ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடல்'' (சைவ சமய பக்த ஜனசபை, கந்தகோட்டம்) பிரதிமாதம் முதல் சனிக்கிழமை தோறும் அறிஞர் பெருமக்களின் சிறப்புரை நிகழும்.

என்ன ஒரு திட்டமிட்ட நிகழ்முறை! ஓராண்டிற்கான நிகழ்ச்சி வரிசை! 1986-இல் தொடங்கப்பட்ட அமைப்பு! 1995 மே 1ம் நாள் முதலாம் ஆண்டு திருமுறை மாநாடு நடைபெற்றது. தருமபுரம் திரு. ப. சுவாமிநாதன், திரு. வை. இரத்தினசபாபதி, பண்டித திரு. வி. நடேசனார், பேராசிரியர் திரு. ஜி.வடிவேலாயுதனார் கலந்து கொண்டனர். விழாமலராக சிறு சிறு நூல்கள் வெளியிட்டு வருகின்றனர். (தலைவர் - திரு. ஜெ. மகாதேவன், செயலர் திரு. கே.என் இலட்சுமணன்.

இவ்வாறு முறையாகத் திட்டமிட்டு செயல்பட ஒரு மாபெரும் உந்து சக்தி இருக்க வேண்டும் அல்லவா? அந்த உந்து சக்தி வேறு யாருமல்ல. சேக்கிழார் மன்றத்தின் தலைவர் திரு.

ஜெ.மகாதேவன் அவர்களேயாவார். சென்னையில் நான்கு திசைகளிலும் இவர்கள் பொழிவு நடந்து கொண்டேயிருக்கும். அதற்கும் ஒரு பட்டியல் உள்ளது. திரு. ஜெ. மகாதேவன் அவர்கள் பட்டியல் அழகர்... ... சாதாரண பட்டியல் அழகர் அன்று. திட்டமிட்ட திருமுறைப் பட்டியல் அழகர்.

திருவடிப்புகழ்ச்சி - திருவருட்பா சிந்தனை - திருவொற்றியூர்; பிரதிமாதம் முதல் ஞாயிறு காலை 2. திருவாசகத்தேன் - திருவொற்றியூர் - பிரதிமாதம் முதல் ஞாயிறு மாலை 3. திருவிளையாடற் புராணம் - பாலவாக்கம் - பிரதிமாதம் முதல் திங்கட்கிழமை. 4. திருமுறைகள் விளக்கம் - திருவான்மியூர் - 4வது ஞாயிறு முதல் வியாழன் வரை, 5. பெரியபுராணம் - பாலவாக்கம் - பிரதிமாதம் 4 வது சனிக்கிழமை 6. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருட்பாடல் கந்தகோட்டம் - பிரதி மாதம் கடைசி ஞாயிறு.



ஜெ. மகாதேவன்

மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற திருமகாதேவன் அவர்கள் சைவ நூல்களைக் கல்லூரி பாடத்திட்டத்திலும் கற்றாரில்லை. தனிப்பட்ட ஆசிரியர் மூலமும் கற்றாரில்லை. சுயம்பு...! (பிறந்த நாள் - 20.7.1945; பிறந்த ஊர் சென்னை, பெற்றோர் - சூ. ஜெகநாத முதலியார், மகாலட்சுமி அம்மாள்)

20. திருவாசக - திருமந்திர அறக்கட்டளை

(1989)

இவ்வமைப்பு தொடக்கத்தில் என்ன பெயரில் இருந்ததோ ஆனால் 1997, 1998-இல் திருமூலர் திருமந்திரத் திருமன்றம் என்றும், 2003, 2004 களில் திருவாசக - திருமந்திர அறக்கட்டளை என்றும் பெயர் பூண்டுள்ளது. 1997, 1998 களில் திரு. எம்.ஏ.எம். இராமசாமி, மாண்பமை திரு.பி. பாஸ்கரன், திரு. டி.வி. வெங்கடராமன் ஐ.ஏ.எஸ் (ஓய்வு), டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி, திரு. மு. கிருஷ்ணனன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), கே. என். பலராமன், பி.வி. சம்பந்தன், விஜயலட்சுமி மதியழகன், கே.எஸ். ஹேமந்தகுமார், ஜி. சுப்பிர மணியன் ஆகியோர் விழாக்குழுவில் இருந்திருக்கின்றனர். 2003, 2004, 2005, 2006, 2007 அழைப்பிதழ்களில் திருவாசக திருமந்திர அறக்கட்டளை நடத்தும் திருமூலர் திருமந்திர மாநாடு எனக் காணப்படுகின்றது. 1989 முதல் ஆண்டுதோறும் திருமந்திர மாநாடு நடத்தி வருகின்றது.

இதே போல திருவாசக மாநாடும் இவ்வமைப்பு 1990 முதல் நடத்தி வருகின்றது. 1998 அழைப்பிதழில் சண்முசுந்தரம் கல்வி அறக்கட்டளையும் திருஞானசம்பந்தர் இசைவிழா அறக்கட்டளையும் நடத்தியதாகக் காணப்படுகின்றது. 2004, 2007 அழைப்பிதழ்களில் சண்முகசுந்தரம் கல்வி அறக்கட்டளை, திருமந்திர - திருவாசக அறக்கட்டளையினர் என்றும் காணப்படுகின்றது. 2003க்குப் பிறகு (அதற்கு முன்பே கூட இருந்திருக் கலாம்)

திருமந்திர மாநாட்டுக் குழுவும், திருவாசக மாநாட்டுக் குழுவும் இணைந்திருக்க வேண்டும்.

தொடர்பு முகவரி என பொ.வே. சம்பந்தன் என அனைத்து அழைப்பிதழ்களிலும் காணப்படுவதால் (1997 முதலான அழைப்பிதழ்களே கிடைத்துள்ளன) இரண்டு மாநாடுகளையும் பின் நின்று இயக்குபவர் பொ.வே. சம்பந்தன் என்று தெரிகின்றது.

2007க்கான அழைப்பிதழை மட்டும் பார்ப்போம்.

திருமந்திர மாநாடு

3.11.2007 காலை 9.00 முதல் 1.00 மணிவரை

குரு பழநி அடிகளார் (ஆசியுரை) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (தலைமையுரை), முனைவர் இ.சா. பர்வீன் சுல்தானா (வாழ்வியல் சிந்தனைகள்), முனைவர் எஸ்.சுடலி தியாகராசன் (சூனிய சம்பாஷணை) முனைவர் சி.வெ. சுந்தரம் (சைவ சித்தாந்தம்)

மதியம் 2.30 முதல் 6.30 வரை

முனைவர் திருமதி வெ. கனகசுந்தரம் (தலைமையுரை); திரு. டி. தினகரன் (ஒளி) முனைவர் திருமதி கு.மங்கையர்க்கரசி (ஊழ்), முனைவர் திரு. பெ. இலக்குமி நாராயணன் (இலிங்கம்) முனைவர் திரு. பாரதி கணேசன் (உபதேசம்)

4.11.2007 ஞாயிறு காலை 9.00 முதல் 1.00 மணி வரை

முனைவர் திருமதி சாரதா நம்பியாரூரன் (தலைமை), முனைவர் திருமதி அ. மாலதி (சைவம்), முனைவர் திருமதி உலகநாயகி பழனி (நிலையாமை, முனைவர் திருமதி விஜய லட்சுமி ராமசாமி (ஒழுக்கம்) திருமதி சு. இராதா (அன்புடைமை), திருமதி ந. ஆனந்தி முத்துராஜ் (அருளுடைமை), திருமதி ம. லோகநாயகி (தவம்)

மதியம் 2.20 முதல் 5.30 வரை

முனைவர் திருமதி சரளா இராசகோபாலன் (தலைமையுரை), முனைவர் திரு டி.என். கணபதி (திருமூலரும் போகரும்) முனைவர் திரு. கி. சிவகுமார் (அசபை), திரு. இராம. புகழேந்தி (எண் வகை யோகங்கள்) திரு. டி.வி. வெங்கட்ராமன் (நிறைவுப் பேருரை)

திருவாசக ஆய்வுக் கருத்தரங்கைப் பொருத்தவரையில் 2004ம் ஆண்டு அழைப்பிதழ் முழுமையானதாகக் காணப்படுகிறது.

திருவாசக ஆய்வுக் கருத்தரங்கு

31.7.2004 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை

முனைவர் திரு. அரங்க இராமலிங்கம் (தலைமையுரை), திரு குரு பழனி அடிகளார் (ஆசியுரை) முனைவர் திரு. ப. இராமன் ''திருவாசக ஆய்வு மாலை'' நூல் வெளியீடு, முனைவர் திரு. வை. இரத்தின சபாபதி (வாழ்த்துரை)

காலை 11.00 முதல் 1.00 மணிவரை

திரு. க. இராசசேகரன் (தலைமை), முனைவர் திரு அரங்க இராமலிங்கம் (சிவபுராணம்), முனைவர் திரு. பெ. அர்த்தநாரீஸ்வரன் (கீர்த்தித் திருவகவல்) முனைவர் திரு. வேல் - கார்த்திகேயன் திருவண்டப் பகுதி), முனைவர் திரு. சா. வளவன் (போற்றித் திருவகவல்), திரு. சி.வெ. சுந்தரம் (திருச்சதகம்) முனைவர்

திரு.சு.. வஜ்ஜிரவேலு (நீத்தல் விண்ணப்பம்) முனைவர் திருமதி மு. சற்குணவதி (திருவெம்பாவை) திருமதி . விஜயகாந்தி (திருவம்மானை), திருமதி டி. மேரி ஆரோக்கியா கிளீட்டஸ் கலா (திருப்பொற் சுண்ணம்), முனைவர் திரு. கோவிந்தராஜன் (திருக்கோத்தும்பி)

இரண்டாம் அமர்வு :
மாலை 2.00 - 4.00 மணி

திரு. சா. வளவன் (தலைமை)., செல்வி வே. மகஸேஸ்வரி (திருதெள்ளேணம்) திரு. கி. சிவகுமார் (திருச்சாழல்) திரு. மு. அ. மாணிக்க வேலு (திருப்பூவல்லி), திரு. இ. கிருட்டிண குமார் (திருஉந்தியார்), திரு. கோ. கன்னியப்பன் (திருத்தோணோக்கம்), திருமதி கமலா முருகன் (திருப்பொன்னூசல்), முனைவர் திரு. மு. முத்துவேலு (அன்னைப் பத்து) திருமதி மு. இந்திராகாந்தி (குயில் பத்து), திரு. வே. சண்முகம் (திருத்தசாங்கம்), முனைவர் திரு. சி. இலட்சுமணன் (திருப்பள்ளியெழுச்சி)

மூன்றாம் அமர்வு
மாலை 4.30. - 8.00 மணி

திரு. எஸ். தியாகராசன், (தலைமை), முனைவர் திரு. கி. ஆதி நாராயணன் (கோயில் முத்த திருப்பதிகம்), குமரிச் செழியன் (கோயில் திருப்பதிகம்), முனைவர் இரா. கண்ணன் (செத்திலாப்பத்து), அருண சபேசன் (அடைக்கலப்பத்து) திருமதி நீலா செல்வராஜ் (ஆசைப் பத்து), முனைவர் திரு. ப. தாமரைக்கண்ணன் (அதிசயப்பத்து), முனைவர் திரு. அரு. ஜெயச்சந்திரன் (புணர்ச்சிப் பத்து) திரு. கெ. பக்தவத்சலம் (வாழாப்பத்து), முனைவர் திரு. எஸ். சிவசுப்பிரமணியன் (அருட்பத்து), முனைவர் திரு. கோ. வேலு (திருக்கழுக்குன்றப் பதிகம்)

1.8.2004 ஞாயிறு
காலை 9.00 - 11.00 மணி
நான்காம் அமர்வு

முனைவர் திரு. அருணை பாலறாவாயன் (தலைமை), திருமதி மல்லிகாபாபு (கண்டபத்து), திருமதி பொன் ஞானாம்பிகை (பிரார்த்தனைப் பத்து), பனசை மூர்த்தி (குழைத்த பத்து), தே.அமுல் மணி (உயிருண்ணிப் பத்து), க. இராதா (அச்சப்பத்து), இர. இராசபாண்டியன் (திருப்பாண்டிப் பதிகம்), திருமதி ஈ. அன்னக்கிளி (பிடித்த பத்து) திருமதி அமுதா ராமலிங்கம் (திரு ஏசறவு), முனைவர் சு. கலைச்செல்வி (திருப்புலம்பல்), முனைவர் ஆர். தமிழ்ச்செல்வி (குலாப்பத்து).

ஐந்தாம் அமர்வு
காலை 11.00 - 1.00 மணி

திருமதி சாரதா நம்பியாரூரன் (தலைமை), முனைவர் கா. மு. பாபுஜி (அற்புதப்பத்து), முனைவர் ம. கலாமணி (சென்னிப்பத்து) திரு. இராஜகாந்தீபன் (திருவார்த்தை), பா. நடராசன் (எண்ணப் பதிகம்) முனைவர் கி. திருமலையா (யாத்திரைப்பத்து), புலவர் சீதா இராமதாசன் (திருப்படையெழுச்சி), முனைவர் பா. இராமச்சந்திரன் (திருவெண்பா)

சி.என். அன்பழகன் (பண்டாய நான்மறை) உ. நிர்மலா (திருப்படையாச்சி) கோ. தாமோதரன் (ஆனந்தமாலை), ந. கலைவாணி (அச்சோப்பதிகம்).

மாலை 4.00 மணி

மாண்பமை பி. பாஸ்கரன் (தலைமை) திரு. டி.வி. வெங்கட்ராமன் (நிறைவுப் பேருரை)

சென்னையில் 1989 முதல் திருமந்திர மாநாட்டையும், 1990 முதல் திருவாசக மாநாட்டையும் நடத்தி வரும் திரு.பொ.வே. சம்பந்தன் அவர்கள் 1989 முதல் சேலம் ஜெயலட்சுமியுடன் இணைந்து திருக்கழுக்குன்றத்தில் திருஞானசம்பந்தர் இசைவிழாவும் நடத்தி வருகிறார். 1994-இல் காஞ்சிபுரத்தில் நடந்த முதல் உலகச் சேக்கிழார் மாநாட்டின் பொதுச் செயலராக இருந்து மூன்று நாட்கள் நடத்தினார். பொ.வே. சம்பந்தனார் 14.12.1930இல் செங்கல்பட்டு தாலுகா பொன்மலரில் வேதகிரி. திருபுரசுந்தரி தம்பதியினருக்கு மகவாய்ப் பிறந்தார்.

21. சேக்கிழார் ஆராய்ச்சி மையம்

ஸ்ரீ பாலசுப்பிரமணியபக்த ஜன சபை எவ்வாறு திரு. வி.க.வின். வாழ்வில் பின்னிப்பிணைந்து இருந்ததோ அதே போல அவரது அன்புச் சீடர் மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனாரின் வாழ்வில் சேக்கிழார் ஆராய்ச்சி மையம் பின்னிப் பிணைந்து இருந்தது, என்ன? ஒரு வேறுபாடு, திரு.வி.க. தனது இள வயதிலேயே (20 வயது) சபையைத் தொடங்கிவிட்டார். அ.ச.ஞா. அவர்களோ தமது 77 வது வயதில் - பார்வை இழந்த நிலையில் சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கினார்கள்.

இதே சமயத்தில் பெரிய புராணத்திற்கு நல்ல பதிப்பு கொண்டுவர வேண்டும் என்ற எண்ணமும் மூதறிஞர் அ.ச.ஞாவிற்கு இருந்திருக்கிறது. இதனையறிந்த பெங்களூர் கல்விக் காவலர் ம. வ. ஜெயராமன் தாமே முழுச்செலவையும் செய்வதாக ஏற்றுக் கொண்டு அடக்க விலையில் புத்தகம் வெளிவர வேண்டும் என்று கூறினார். அம்மட்டோடு நில்லாமல் சேக்கிழார் ஆராய்ச்சி மையம் என்ற அறநிலையை நிறுவி மற்றும் ஐவரைச் சேர்த்துக் கொண்டு அதைப்பதிவும் செய்தார். உடனடியாக ஒரு இலட்சம் ருபாய் நன்கொடையையும் தந்தார். இப்பேருதவியைச் செய்த இரண்டு

சேக்கிழார் ஆராய்ச்சி மையம்

நாள்களில் எதிர்பாராவிதமாக அவ் வள்ளல் இறையடி சேர்ந்துவிட்டார்.

சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தின் முக்கிய பணி ஆண்டு தோறும் சேக்கிழார் விழா நடத்துவதே. பெரிய புராணம் பக்தி நூல் என்ற பூசையறையில் மட்டும் வழிபடுவதை மூதறிஞர் அ.ச.ஞா. ஏற்றுக் கொள்ளவில்லை. பெரிய புராணம் தமிழர் தம் தேசிய இலக்கியமாக - அனைத்து இனத்தவரையும் இணைக்கும் ஒருமைப்பாட்டு இலக்கியமாக - மக்களிடையே பரவவேண்டும் என்பது அ.ச.ஞா. அவர்களின் வேணவா ஆகும். ஆராய்ச்சி மையம் நடத்தும் சேக்கிழார் விழாவும் அப்படியே அமைய வேண்டும் எனத் திட்டம் வகுத்தார். கருத்தரங்கம், பட்டிமண்டபம், வழக் காடு மன்றம், சுழலும் சொற்போர், செந்தமிழ் நாடாளுமன்றம், வினா விடை அரங்கம் என்று பல்வித சுவைகளுடன் நிகழ்ச்சியை அமைத்தார்கள். தமிழ் நாட்டு அறிஞர்கள், இலங்கை பேச்சாளர்கள், கிறித்துவர்கள், இஸ்லாமியர்கள், அரசியல் வாதிகள், நீதிபதிகள், அரசு அதிகாரிகள், என்று பல துறையினரையும் பேச வைத்தார்கள். சேக்கிழார் ஆராய்ச்சி மையம் தமிழ்ச் சமுதாய சங்கமமாகவே திகழ்ந்து வருகிறது. திருமுறை தொடர் பான நூல்கள் வெளியிடப் பட்டு வருகின்றன. திருமுறை தொடர்பான நூல்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சைவப்பணி செய்வோருக்கு ''சேக்கிழார் விருதும்'' ரொக்கமும் வழங்கப்பட்டு வருகின்றன. ஓதுவா மூர்த்திகள் போற்றப்படுகின்றனர். இராணி சீதை ஹால் நிரம்பி வழியலாயிற்று.

1993 ஜூலை 31ல் சேக்கிழார் விழா சென்னையில் தொடங்கப்பெற்றது. அ.ச.ஞா.வின் இலட்சியமான ''பெரிய புராணமும்'' அன்று வெளியிடப்பட்டது- 1100 பிரதிகள் முன்பதிவு செய்யப்பட்டு வாங்கப்பட்டன. சத்தியசீலன் அரிய உரை நிகழ்த்தினார். 1.8.1993 காலை வழக்காடுமன்றத்தில் அ. அறிவொளி, கி.சேகர் பங்கு பெற்றனர். மாலை கவியரங்கத்தில், அப்துல் இரகுமானும், மரியதாசும் பட்டி மண்டபத்தில் அ.ச.ஞா. சத்தியசீலன், அறிவொளி, தெ. ஞானசுந்தரமும் பங்கு பெற்றனர்.

6.8.94.... நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமை : திருமதி தேவகி முத்தையா, திரு. இரவி ஆறுமுகம் ஐ.பி.எஸ் நூல் வெளியிடுதல்: அ.ச.ஞா.வின் ''பெரிய புராணம் ஓர் ஆய்வு'' நூல் வெளியிடப் பெற்றது. சுழலும் சொற்போர் - சோ. சத்திய சீலன், அ. அறிவொளி, ஆ. ஜெகனாதன், 7.8.94... காலை மு. கணபதி - பெருவாழ்வு. தெ.ஞானசுந்தரம் - தொண்டு நெறி; சாரதா நம்பியாரூரன் - இந்தளம்; மாலை வினா விடை அரங்கம் - திரு. எஸ்.தியாகராஜன், சோ. சத்தியசீலன், அ. அறிவொளி, வே. சிவசுப்பிரமணியம், தெ. ஞானசுந்தரம் வினாவிடை அரங்கில் வினாக்கள் கணைகளாகப் பாய்ந்தன. மரபோடு நடக்கும் விழாக்களில் இக்கேள்விகளைத் தொடுக்கவே அஞ்சுவார்கள். அ.ச.ஞா. சந்நிதி ஆயிற்றே! கல்லும் இங்கு மலர்க்கணைதான்! திருநாளைப் போவார் தீக்குளிப்பானேன்? கேள்வி, தன் பிறவி இழி பிறவி என நினைத்தார். அடியார் மனக்குறைவோடு இருந்தால் அந்த மனக்குறைவிற்காக மீண்டும் பிறவி எடுத்தல் வேண்டும். அவ் அடியாரின் மனக்குறையை நீக்குவது இறைவனின் கடமையாகும். இழிபிறவி என நினைந்த திருநாளைப்போவாரின் தாழ்வு மனப்பான்மை நீங்க வேண்டும். எனவே தீக்குளித்தார்.

எஸ். நடராஜன்

‘‘சமணர்களைக் கழுவேற்றலாமா?’’ அடுத்த கணை. அவர்களைக் கழுவேற்றவில்லை, அவர்கள் தாமாகக் கழுவேறினார்கள் இது பதில்.

‘‘புல்லாகிப் பூடாகி’’ என்ற திருவாசகப்பாடலில் ‘‘கல்லாகி’’ என்று வரலாமா? இது கணை, கல்லுக்கும் உயிர் உண்டு. மலைவளர்கின்றதே. கல்லிற்கு வினையும் உண்டு. சும்மா இருந்தே வினைக்கழிவு நடக்கிறது. இது பதில்.

அடுத்து அ.ச.ஞா. நடுவராகவும் சோ.சத்திய சீலன், அ.அறிவொளி, தெ. ஞானசுந்தரம் அணித்தலைவர்களாகவும் இருந்து ‘‘பெரிய புராணம் பெரிதும் வற்புறுத்துவது அரசியல் மாட்சியே ஆன்மீக வளர்ச்சியே! சமுதாய வளர்ச்சியே என வாதிட்டனர்.

ஆராய்ச்சி மையத்தின் தலைவராக நீதியரசர் மாண்பமை எஸ்.நடராஜன் அவர்கள் பொறுப்பேற்றார்.

28, 29, 30, ஜூலை 1995... கல்லூரி மாணவர்க்குப் பரிசு. சிறந்த நூலுக்கான பரிசு, சைவ அறிஞர்க்குப் பரிசு என்று மையத்தின் பணி விரிவடையலாயிற்று. 28.7.95; தொடக்கவுரை - நீதிபதி திரு. டி.என். சிங்காரவேலு; தலைமையுரை நீதிபதி திரு. எஸ். மோகன்; சிறந்த நூல் (ரூ. 2500), டாக்டர் பி. காமாட்சி எழுதிய ‘‘பெரிய புராணம் காட்டும் சமுதாய நிலை’’; சேக்கிழார் விருது (ரூ. 10000/-) திரு. சி. அருணை வடிவேல் முதலியார். சிறப்புரை - திரு. பா. நமசிவாயம், நாட்டிய நாடகம் - இரா. நாகசாமி குழுவினரின் ‘‘அப்பர்’’ 29.7.95; காலை இளைஞர் அரங்கம்; தலைவர் - லெ. பழனியப்பன் மற்றும் கல்லூரி மாணவ மாணவியர். மகளிர் அரங்கம்; திருமதி எஸ். ஜெயலட்சுமி (தலைமை); சுதாசேஷையன் (நம்மைப் பேணும் அம்மை); பத்மா முத்துக்கிருஷ்ணன் (மனையறத்தின் வேர்); ஹேமா சந்தானராமன் (வளவர் கோன்பாவை); பாரதி பாஸ்கர் (புண்ணியத்தின் புண்ணியம்).

மாலை : ‘எங்கள் பார்வையில் சேக்கிழார்’’. பங்கேற்றோர் : திரு. ஏ.எம். சுவாமிநாதன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு),

எஸ் தியாகராஜன், பி.ஈ. திரு. இறையன்பு ஐ.ஏ.எஸ்., த.இராமலிங்கம், பி.எஸ்.சி. பி.எல்., சிவக்குமார், எம்.ஈ. சுழலும் சொற்போர்; சோ. சத்தியசீலன்; ''சேக்கிழார் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்தது; இறைவனின் எளி வந்த தன்மையே (அ. அறிவொளி); அடியவர்களின் பக்திச் சிறப்பே (சொ. சொ. மீ. சுந்தரம்); அடியவர்களின் தொண்டு மனப் பான்மையே (தெ. ஞானசுந்தரம்)

30.7.95 காலை : கருத்தரங்கம் - சேக்கிழார் கண்ட நாடுகள்; வே. சிவசுப்பிரமணியன் (தலைமை); அரங்க இராமலிங்கம் (பாண்டிய நாடு); பு.மா. ஜெயசெந்தில் நாதன் (சோழ நாடு); அ. பாலறாவாயன் (சேரநாடு); வி. அசோக்குமார் (தொண்டை நாடு)

மாலை : வினாவிடை அரங்கம்; பங்கேற்றோர் - சோ. சத்தியசீலன் எஸ். தியாகராஜன், வே. சிவசுப்பிரமணியன், அ. அறிவொளி, சொ.சொ.மீ. சுந்தரம், தெ. ஞானசுந்தரம்.

பட்டிமன்றம் : ''பெரியபுராணத்தில் பெரிதும் விஞ்சி நிற்பது கற்பனை வளமே! கருத்துச் செறிவே! உணர்ச்சிப் பெருக்கே?'' நடுவர் - அ.ச.ஞா; அணித்தலைவர்கள். சோ. சத்தியசீலன், அ. அறிவொளி, தெ.ஞானசுந்தரம்.

26, 27, 28,30 ஜூலை 1996

26.7.96 தொடக்க உரை - நீதியரசர் திரு. எம். எம். இஸ்மாயில். கட்டுரைப் போட்டி - கல்லூரி மாணவர்களுக்குப் பரிசு; சிறந்த நூலுக்கான பரிசு (ரூ. 2500) - திருமதி கோமதி சூரிய மூர்த்தியின் ''திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்தக் கருத்துகளும்'', சிறந்த தமிழ்ப்பேராசிரியர் (ரூ. 5000) - ஆ. இரா - இந்திரா. சிறந்த ஓதுவார் (ரூ. 5000)- தருமபுரம் ப. சுவாமிநாதன், திருமுறைத் தொண்டு (ரூ. 10,000)- டி.என்.இராமச்சந்திரன், சிறப்புரை - திரு. பா. நமசிவாயம்.

27.7.96 : கருத்தரங்கம் ''எங்கள் நோக்கில் சேக்கிழார்'', பங்கேற்றோர் - எஸ். ஸ்ரீபால் ஐ.ஜி. (ஓய்வு), அப்துல் ரகுமான், மோசஸ் மைக்கேல் ஃபாரடே, ஸ்ரீசந்திரன் ஜெகத்ரட்சகன், இரா. நாகசாமி. மாலை தேவார இன்னிசை - தருமபுரம் ப. சுவாமிநாதன் - சுழலும் சொற்போர்; தலைவர் வே. சிவசுப்பிரமணியன். பெரியபுராணத்தில் விஞ்சி நிற்பது கருத்து அழகே (சொ. சொ. மீ. சுந்தரம்) கற்பனை அழகே (அ. அறிவொளி, சொல் அழகே (தெ. ஞானசுந்தரம்).

28.7.96 : சொல் அரங்கம் : தலைவர் - எஸ். தியாகராஜன், பெரிய புராணத்தில் சிறந்த ... ... ஒரு சொல் (வி.இறையன்பு இ.ஆ.ப.) ஒரு சொற்றொடர் (பாலறாவாயன்), ஒரு பாடல் (சேகர்), ஒரு புராணம் (சுதாசேஷையன்) ஒரு சருக்கம் (புரிசை நடராஜன்).

வினா விடை அரங்கம் : சோ. சத்தியசீலன், எஸ்.தியாகராஜன், வே. சிவசுப்பிரமணியம், அ.அறிவொளி, சொ.சொ.மீ.சுந்தரம், தெ.ஞானசுந்தரம், நிறைவு உரை - இரா. வீரப்பன்.

மாலை பட்டிமண்டபம் : நடுவர் - அ.ச. ஞானசம்பந்தன், பெரிய புராணத்தில் பெரிதும் விளக்கம் பெறுவது தொண்டின் சிறப்பே! பக்தியின் உயர்வே! மொழியின் வளமே! சோ. சத்திய சீலன். அ. அறிவொளி. தெ.ஞானசுந்தரம் ஆகியோர் அணித்தலைமை ஏற்றார்கள்.

25, 26, 27 ஜூலை 1997 : 25.7.97 : தொடக்க உரை - மாண்புமிகு க. அன்பழகன், தலைமையுரை நீதிபதி கல்லூரி ஏ.ஆர். இலட்சுமணன்.

மாணவர்களுக்குப் பரிசு வழங்கல். கட்டுரைப்போட்டி.

அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் ''சேக்கிழார் தந்த செல்வம்''. தெ.பொ. மீனட்சி சுந்தரனாரின் ''சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்'', டாக்டர் என். சிவராஜனின் ''கேட்பிப்பார் கேட்பித்தால் கேளாதார் யாரோ?'', தெ. ஞான சந்திரத்தின் ''திருவாசகம் - திருப்பள்ளியெழுச்சி விரிவுரை'' ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. திருமுறைத் தொண்டிற்கு விருதும் பரிசும் (ரூ. 10,000/-) திரு. ப. சு.மணியம், சிறந்த ஓதுவாருக்கான விருதும் பரிசும் (ரூ.5000/-) சைதை நடராச ஓதுவார்.

சிறந்த தமிழாசிரியர் (ரூ. 5000/-) ம.ரா.போ. குருசாமி. சிறப்புரை : சுகி சிவம்.

26.7.97 : கருத்தரங்கம் : தலைவர் - வே. சிவசுப்பிரமணியன், ''அரிந்து ஊட்டினார்'' (பாரதிநேசன்), ''ஆணையை மறுத்தவர்'' (பு.மா. ஜெயசெந்தில் நாதன்), ''இளமை துறந்தார்'' (அசோக்குமார்) ''இடந்து அப்பினார்'' (பாரதி பாஸ்கர்), ''மனுநீதி கண்டஅறம்'' (த. இராமலிங்கம்)

மாலை ஆய்வரங்கம் : தலைவர் - அப்துல் ரகுமான். பெரிய புராணம் காட்டும் தத்துவம் (ஐ.ரவி. ஆறுமுகம்), வரலாறு (இரா. செல்வக்கணபதி)

வழக்காடு மன்றம் : ''அடியார்கள் இறைவனிடம் அளவு மீறிய உரிமை எடுத்துக் கொண்டது நியாயம்அன்று''

வழக்கு தொடுப்பவர் : சோ. சத்தியசீலன்; மறுப்பார் - சொ.சொ.மீ.சுந்தரம்; நடுவர் - அ.ச.ஞானசம்பந்தன்.

27.7.97 காலை : காப்பிய அரங்கம் : தலைவர் - ஆ. ரா.இந்திரா. பெரிய புராணத்தில் ... ... ''காப்பியக் கட்டுக் கோப்பு'' (அரங்க. இராமலிங்கம்), ''காப்பிய நோக்கம்'' (இறையன்பு), ''காப்பியக் கலையழகு'' (சுந்தர ஆவுடையப்பன்), ''காப்பியவாழ்வியல்'' (ஜோதி ராமகிருஷ்ணா) ''காப்பியச் சுவை'' (சிவகுமார்) மாலை - வினா விடை அரங்கம்.

இரவுபட்டிமன்றம் : நடுவர் - சோ. சத்தியசீலன். ''தம் தொண்டின் திறத்தால் நம் நெஞ்சை நெகிழ்விப்பவர் திலகவதியாரே! காரைக்கால் அம்மையாரே! மங்கையர்க்கரசியாரே!'' அணித் தலைவர்கள் - சொ.சொ.மீ. சுந்தரம், ஜோதிராமகிருஷ்ணா, இரா. செல்வக் கணபதி.

24, 25, 26 ஜூலை 1998

24.7.98 : தொடக்கவுரை - நீதியரசர் எஸ்.எம். அப்துல்வகாப்; திருமுறைத் தொண்டர்க்கு விருது : திரு- அ. ஆறுமுகம், மலேசியா.

சிறந்த தமிழறிஞர் (ரூ. 10,000)... முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) ... சீர்காழி திருஞானசம்பந்த ஓதுவார்.

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) முனைவர் சுப. அண்ணாமலை

சிறந்த நூலுக்கான பரிசு (ரூ. 5000/-) ஜி. கௌசல்யா விஜயனின் ''திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்''

கட்டுரைப் போட்டி ... கல்லூரி மாணவர்கள்.

தேவாரம், திருவாசகம் வெளியீடு : மாண்பமை பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்.

25.7.97 கருத்தரங்கம் : தலைவர் - திரு. டி.பி. சித்தலிங்கையா, சேக்கிழார் பார்வையில் பெண்மையும ஆண்மையும் - பி. முருகேசன், அரசியலும் அறமும் - த.இராமலிங்கம்; பழமையும் புதுமையும் - அ. பாலறாவாயன் - வீரமும் ஈரமும் - த. விஸ்வநாதன்; தத்துவமும் உலகியலும் - தே.ஞான சுந்தரம், மாலை - கருத்தரங்கம் - தலைவர் - இலங்கை தெ. ஈஸ்வரன். பங்கேற்போர் : மலேசியா ஐ. குலவீர சிங்கம், இலங்கை ஸ்ரீ பிரசாந்தன் இலங்கை இ. ஜெயராஜ்.

சுழலும் சொற்போர் : தலைவர். சோ. சத்தியசீலன், வள்ளுவரின் உள்ளம் மிகுதியும் வெளிப்படுவது இளங்கோவி லேயே (இரா. செல்வக்கணபதி), கம்பனிலேயே (சொ.சொ. மீ. சுந்தரம்), திருத்தக்க தேவரிலேயே (வி.அசோக் குமார்), சேக்கிழாரிலேயே (அ.அறி வொளி).

26.7.98 காலை : சொல் அரங்கம் : தலைவர் - திரு. எஸ். தியாகராஜன், ''திருத்தொண்டர் புராணத்தில் ... ... ''ஒரு சருக்கம் (சுப. அண்ணாமலை), ஒரு புராணம் (இரா. செல்வக்கணபதி) ஒரு பாடல் (இரா. சௌந்தரவல்லி), ஒரு தொடர் (இ.ஜெயராஜ்) ஒரு சொல் (கு. சுந்தரமூர்த்தி) மாலை வினா விடை அரங்கம்.

பட்டிமண்டபம் : நடுவர் - சோ. சத்தியசீலன். இன்றைய சூழ்நிலையில் பெரியபுராணம் பெரிதும் வழி காட்டு வது இல்லத்திற்கே! சமுதாயத்திற்கே! ஆன்மீகத்திற்கே! அணித்தலைவர்; தெ.ஞானசுந்தரம், இ. ஜெயராஜ், அ. அறிவொளி, . அச.ஞா அவர்கள் இந்த ஆண்டிலிருந்து பேசுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

23, 24, 25 ஜூலை 1999

23.7.99 : தொடக்க உரை : முனைவர் கதிர் மகாதேவன், துணை வேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தலைமையுரை நீதியரசர் திரு. டி.என் வள்ளி நாயகம்.

சிறந்த தமிழறிஞர் (ரூ. 10,000)... திரு.அ.வெ. சுப்பிரமணியம்

சிறந்த தொண்டு திரு. எம்.எஸ். உதயமூர்த்தி

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) ... திரு. திருத்தணி எஸ். சுவாமிநாதன்.

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) திரு. அ. அறிவொளி.

சிறந்த நூல் முனைவர் திரு கா.பெ. சந்திரசேகரனின் (ரூ. 2500). ''திருத் தொண்டருள் ஒரு சிறுத்தொண்டர்''

தனிப்பரிசு : கோக்கலை திரு. கே. ராஜனின் ''சுந்தரமூர்த்திநாயனார் புராணம்'' (மூலமும் உரையும்)

கல்லூரி மாணவர்க்கான கட்டுரைப் போட்டி (ரூ. 3250) மூவர்.

வழக்காடு மன்றம்

''பெரியபுராணச் செய்திகள் எக்காலத்துக்கும் பொருந்தி வரும் என்பது தவறு'' நடுவர் திரு. அ. அறிவொளி, வழக்கு தொடுப்போர் - திரு. ஜோதி கிருஷ்ணா, மறுப்போர் - திரு. பழ. முத்தப்பன்.

24.7.99. கருத்தரங்கம் : தலைமை - அப்துல் ரகுமான்; ''பெரிய புராணத்தில் எனக்குப் பிடித்த உரையாடல்''; திருநீலகண்டர் - சிவயோகி (சிவகுமார்), அப்பர் - அப்பூதியடிகள். (திரு. சித்தலிங்கையா), சிறுத்தொண்டர் - பயிரவர் (திரு. சொ. சொ.மீ. சுந்தரம்),

சுந்தரர் - வேதியர் (திரு. பி. மணிகண்டன்), இயற்பகையார் - மனைவியார் (திரு. ஸ்ரீ பிரசாந்தன்) சிறப்புரை - இலங்கை இ. ஜெயராஜ்.

செந்தமிழ் நாடாளுமன்றம் : தாக்கல் செய்யப்படும் தீர்மானம்; ''தமிழில் தலைமைப்புலவர் எனும் பதவியைப் பொருத்தமானவருக்கு வழங்குதல்''; ஆளுங்கட்சி (வள்ளுவர்), எதிர்க்கட்சி (சேக்கிழார்), சுயேச்சைக்குழு - 1 (கம்பன்), சுயேச்சைக்குழு - 2 (பாரதி).

பங்கேற்றோர் : இரா. காந்திமதி. அ. அறிவொளி, சொ.சொ.மீ.சுந்தரம். தெ.ஞானசுந்தரம், பாரதி பாஸ்கர், அரங்க இராமலிங்கம், பொறியாளர். கே. சிவகுமார். இ. ஜெயராஜ், ஸ்ரீ பிரசாந்தன், த. இராமலிங்கம், கே. சிவகுமார், சபாநாயகர் ஏ.எம். சுவாமிநாதன்.

25.7.99 : சுழலும் சொற்போர்; தலைவர் - தெ. ஞானசுந்தரம், ''சேக்கிழார் திருத்தொண்டர் புராணம்'' ... ... படித்துச் சுவைப்பதற்கே! (அரங்க இராமலிங்கம்), பக்தியுடன் வழிபடுவதற்கே! (சொ.சொ.மீ. சுந்தரம்), சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்கே! (ச. மார்க்கண்டு), பின்பற்றி நடப்பதற்கே! (இரா. காந்திமதி)

மாலை : வினாவிடை அரங்கம்.

பட்டி மண்டபம் : நடுவர். அ. அறிவொளி. ''பயில்வோர் உணர்வைக் கவர்வதில் முன் நிற்பது இளையான்குடி மாறனார் போன்றவர்களின் மென் தொண்டே! சிறுத்தொண்டர் போன்றவர்களின் வன்தொண்டே! திலகவதியார் போன்றவர்களின் தோன்றாத் தொண்டே!'' அணித்தலைவர்கள் : இரா. காந்திமதி, பழ. முத்தப்பன், இ. ஜெயராஜ்.

28, 29, 30 ஜூலை 2000

28.7.2000 : தலைமையுரை : தவத்திரு பொன்னம்பல அடிக்ளார், குன்றக்குடி, அ.ச. ஞாவின் ''திருவாசகம் - சில சிந்தனைகள் - பகுதி 2, 3, 4,'' வெளியீடு.

சிறந்த தமிழறிஞர் விருது (ரூ. 10,000) திரு. அ. அ. மணவாளன்

சிறந்த நடனப் பேரரசி பத்மா சுப்பிரமணியம்.

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) சோமசுந்தர ஓதுவார்.

சிறந்த தொண்டர் பொற்றாளம் திரு. துரை ஆறுமுகம்.

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) முனைவர். திரு. ப. இராமன்

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) திரு. சிவ. ஆ. பக்தவத்சலம்.

சிறந்த நூல் (ரூ. 2,500) அ. அறிவொளியின் ''சிவபுராணம்''.

கட்டுரைப் போட்டி (ரூ.3250) : மூன்று கல்லூரி மாணவர்கள்.

சிறப்புரை : இளம்பிறை மணிமாறன்.

29.7.2000 காலை : சிறப்புரை : இரா. செல்வக்கணபதி கருத்தரங்கம் - தலைவர் . அ. அறிவொளி.

''சேக்கிழார் காப்பியத்திற்கு அழகு அதனுடைய ...... சைவ சித்தாந்த விளக்கம் (கே. சிவகுமார்), சட்ட நுணுக்கம் (த.இராமலிங்கம்), கற்பனை நயம் (வி.அசோக் குமார்), உரையாடல் உத்தி (திருப்பூர் கிருஷ்ணன்), பக்திப் பெருக்கு (கி.ஆ. பக்தவத்சலம்)

மாலை : சுழலும் சொற்போர் : தலைவர் : தெ. ஞானசுந்தரம். ''இறைவனிடம் ஏற்பட்ட உறவில் இன்று நம்மை அதிகம் ஈர்ப்பது... ...'' அடிமை உறவே! (இரா. காந்திமதி), மகன் உறவே! (சொ. சொ..மீ.சுந்தரம்) தோழன் உறவே! (இளம்பிறை மணிமாறன்) திருமுறை நிருத்தம் : பத்மா சுப்பிரமணியம்.

30.7.2000 : ஆய்வரங்கம் : தலைவர் இறையன்பு. ''சேக்கிழார் புராணத்தில் என்னைப் பெரிதும் கவர்ந்த.... ... ஒருசருக்கம் - அரங்க இராமலிங்கம், ஒரு புராணம் - தமிழருவி மணியன், ஒரு பாடல் - த. விஸ்வநாதன், ஒரு தொடர் - இரா. காந்திமதி ஒரு சொல் - சோ. சத்திய சீலன்.

மாலை : வினாவிடை அரங்கம்.

பட்டிமண்டபம் : நடுவர். சோ. சத்தியசீலன்.

''பெரியபுராண அடியார்களுள் சைவம் தழைக்க அருந்தொண்டு ஆற்றியவர்கள்'' பாண்டி நாட்டினரே! நடுநாட்டினரே! தொண்டை நாட்டினரே'' அணித்தலைவர்கள் : அ. அறிவொளி, இரா. செல்வக்கணபதி, தெ. ஞானசுந்தரம்.

27, 28, 29, ஜூலை 2001

27.7.2001 : தலைமையுரை : நீதியரசர் கே. ஞானப்பிரகாசம்.

சிறந்த தமிழறிஞர் விருது (ரூ. 10,000) பேராசிரியர் அடிகளாசிரியர்.

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) திரு. விநாயக முதலியார்.

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) திரு. எஸ். வையாபுரி.

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) திரு. சத்தியவேல் முருகன்

சிறந்த நூல் (ரூ. 2,500) மா. சிவகுரு நாதபிள்ளை எழுதிய ''நாயன்மார் வரலாற்றில் பல்வகைச் செய்திகள்''

சேக்கிழார் ஆராய்ச்சி மைய விழா

கல்லூரி மாணவர்க்குக் கட்டுரைப் போட்டி (ரூ.3250) : மூவர்.

சிறப்புரை இலங்கை ஜெயராஜ்.

26.7.2001 : கருத்தரங்கம் : தலைவர் - வெ. இறையன்பு, ''பெரிய புராணத்தில் இவ்வடியார்களைச் சேர்த்தது சரியே'' ''விறன் மிண்ட நாயனார் (திரு மரபின் மைந்தன் முத்தையா) பூசலார் நாயனார் (திருப்பூர் கிருஷ்ணன்) சாக்கிய நாயனார் (திரு ஸ்ரீ பிரசாந்தன்), குங்கிலியக் கலய நாயனார் (அரங்க இராமலிங்கம்)

வழக்காடு மன்றம் : நடுவர் - சோ. சத்தியசீலன். ''மக்கள் மனத்தைக் கவர்கின்ற முறையில் அல்லாமல் சேக்கிழார் காப்பியம் அமைத்த முறை சரியன்று'' தொடுப்பவர் - இலங்கை ஜெயராஜ் மறுப்பவர் - அறிவொளி.

மாலை : ''எங்கள் பார்வையில் சேக்கிழார்'' தலைவர் : தெ. ஞான சுந்தரம்; பங்கேற்றோர் - இராம சௌந்தர வல்லி, டி.இராமலிங்கம், வி. அசோக்குமார்.

மணிவாசகர் அரங்கம் : தலைவர் அ.ச. ஞானசம்பந்தன்; ''திருக்கோவையாரில் பக்தி நெறிப் பாடல்கள்'' (தெ. ஞான சுந்தரம்) ''ஐயம்புகுந்தவர் போதலும் என் உள்ளம் நையும் இது என்னே'' (சொ.சொ.மீ. சுந்தரம்), ''எனை நான் என்பது அறியேன்'' (ப. இலட்சுமணன்), ''சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்'' (கே. சிவகுமார் ''நன்றே செய்வாய்'' (இலங்கை ஜெயராஜ்)

29.7.2001 : ''ஆய்வரங்கம் : தலைவர் - ஏ. எம். சுவாமிநாதன். ''பெரியபுராணப் பாடல்களில் ... ...'' சொல்லாட்சி நயம் (தமிழருவி மணியன்), கற்பனை நயம் (வி. அசோக்குமார்), பொருட் செறிவு (அரங்க இராமலிங்கம்), உவமை நயம் (அ.பாலறாவாயன்), நாடகப் பாங்கு (இலங்கை ஜெயராஜ்)

மாலை வினா விடை அரங்கம்:

பட்டிமண்டபம் : தலைவர் - சோ. சத்தியசீலன்.

''பெரிய புராணத்தில் நமது மனத்தைப் பெரிதும் ஈர்ப்பவர் ஆண் அடியார்களே! பெண் அடியார்களே! ஆண்டவனே! அணித் தலைவர்கள் : இராம சௌந்தரவல்லி, இலங்கை ஜெயராஜ், அ. அறிவொளி.

25, 26, 27, ஜூலை 2003

25.07.2003 : தலைமையுரை : நீதியரசர் கே. ஞானப்பிரகாசம்.

சிறந்த தமிழறிஞர் விருது (ரூ. 10,000) திரு. சிவக்கொழுந்து தேசிகர்.

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) திரு. சிவக்கொழுந்து தேசிகர்

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) தெ. ஞானசுந்தரம்

சிறந்த பல்துறைப் பேராசிரியை (ரூ. 5000/-) பிரேமா நந்தகுமார்

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) திரு. துரை. இராமமூர்த்தி

சிறந்த நூல் (ரூ. 2,500) நா. சுப்பிரமணியனின் ''கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம்''

கட்டுரைப் போட்டி கல்லூரி மாணவர் மூவர்.

பேச்சுப் போட்டி : கல்லூரி மாணவர் மூவர்.

திருமுறை ஒப்புவித்தல் போட்டி ... பள்ளி மாணவர்கள் மூவர்.

சிறப்புரை : இலங்கை ஜெராஜ்

26.7.2003 கருத்தரங்கம் : தலைவர் - திரு. ரவி. ஆறுமுகம். ''சேக்கிழாரின் புலமைத்திறம்'', கருத்துவளம் (மரபின் மைந்தன் முத்தையா), கற்பனை வளம் (மா.வே. பசுபதி), பண்டை நூற் புலமை (இரா. பிரேமா), இயற்கைப்புனைவு (அமுத இளவழகன்)

மாலை : வழக்காடு மன்றம் : நடுவர் - தமிழருவி மணியன். ''பெண் அடியார்களைக் காட்டிலும் ஆண் அடியார்களைப் பெருமைப் படுத்தியுள்ள சேக்கிழாரின் செயல் மிகையானது''. வழக்கு தொடுப்பவர் -மரபின் மைந்தன் முத்தையா; வழக்கை மறுப்போர் பர்வீன் சுல்தானா.

மணிவாசக அரங்கம் : தலைவர் - தெ. ஞானசுந்தரம். ''எனக்குப் பிடித்த சொற்றொடர்''; ''எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' (சொ.சொ.மீ. சுந்தரம்), ''ஒலி தரு கயிலை உயர்கிழவோன்'' (கி.சிவகுமார்) ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' (ப.லட்சுமணன்), ''தென்னாடுடைய சிவனே போற்றி'' (இரத்தின ஜனார்த்தனன்.

27.7.2003 : காலை ஆய்வரங்கம் : தலைவர் - ஔவை நடராசன், ''இவர்கள் செய்த தொண்டு ஏற்புடையதா?'' ''கோட்புலியார்'' (திலகவதி சண்முக சுந்தரம்) ''மானக்கஞ்சாறர்'' (இலங்கை பிரசாந்தன்) ''கலிக்கம்ப நாயனார்'' (அ. அறிவொளி, எறிபத்தர் (இலங்கை ஜெயராஜ்), ''மூர்க்க நர்யனார்'' (சோ. சத்தியசீலன்)

மாலை : இளைஞர் அரங்கம் : தலைவர் - த. இராமலிங்கம். ''நான் விரும்பும் நாயனார்'', ''ஏனாதிநாத நாயனார்'' (ம. ஜெகதீஸ்வரி) ''பூசலார் (சு. சங்கீதா), குங்கிலிய நாயனார் (ரா. கோகுலவாச நவநீதன்), ''திருநாளைப் போவார்'' (கோ. பழனி).

பட்டிமண்டபம் : நடுவர். சோ. சத்திய சீலன். ''சிவநெறி பரப்புவதில் தலை சிறந்து நின்றவர்கள் முடிமன்னர்களே! ஆண் அடியார்களே! பெண் அடியார்களே!

அணித் தலைவர்கள் : தெ. ஞானசுந்தரம், அ. அறிவொளி, இலங்கை ஜெயராஜ்.

23, 24, 25, ஜூலை 2004

23.07.2004 : தலைமையுரை : நீதியரசர் எஸ். இரத்தினவேல் பாண்டியன்

சிறந்த தமிழறிஞர் விருது (ரூ. 10,000) திரு. சாந்தலிங்க அடிகளார்.

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) திரு. ஜி. இரத்தின சபாபதி

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) தரணி பாஸ்கர்

சிறந்த பல்துறைப் பேராசிரியை (ரூ. 5000/-) இளம்பிறை மணிமாறன்

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) திரு. தி.து. பாலசுப்பிரமணியன்

சிறந்த நூல் (ரூ. 2,500) ரவி ஆறுமுகம் எழுதிய ''சாவித்திரி''

கட்டுரைப் போட்டி : மூன்று கல்லூரி மாணவர்கள்.

பேச்சுப் போட்டி : மூன்று கல்லூரி மாணவர்கள்.

திருமுறை மனைப் போட்டி ··· மூன்று கல்லூரி மாணவர்கள்.

பெரியபுராண சி.டி. வெளியீடு··· தயாரிப்பு இரா. நாகசாமி.

சிறப்புரை : இளம்பிறை மணிமாறன் ''சேக்கிழார் காட்டும் வாழ்வியல் நெறிகள்'' திருமுறை நாட்டிய நாடகம்.

கருத்தரங்கம் 24.07.2004

தலைவர் - இளம்பிறைமணி மாறன் பெரியபுராணத்தில் மென் தொண்டர்கள்'', அமர்நீதிநாயனார் ''பெருந்துலை நேர் நிற்க'' (அரங்க இராமலிங்கம்; ஆனாய நாயனார்'' என்பூடு கரைந்துருக்கும் இன்னிசை'' (புரிசை நடராசன்); கோச்செங்கட்சோழ நாயனார்'' ''என் கோச் செங் கண்ணனே'' (இலங்கை ஜெயராஜ்); திருக்குறிப்புத் தொண்டர் ''ஆஆ என் குற்றேவல் அழிந்தவா'' (மு. கணபதி)

மாலை : சொல்லரங்கம் : தலைவர் - ஐ. ரவி ஆறுமுகம். ''மணிவாசகரின் பணிவுரைகள்''

''இரண்டு மிலித் தனியனேன்'' (சு.திருநாவுக்கரசு); ''எட்டினோடு இரண்டும் அறியேன்'' (பிரசாந்தன்); ''எண் நாண் இல்லா நாயினேன்'' (ப.இலட்சுமணன்); ''உனைக் காண் பான் அலவா நிற்கும் அன்பிலேன்'' (சொ.சொ.மீ.சுந்தரம்)

நூல் வெளியீடு : ''பேராசிரியர் அ.ச. ஞா.வின் பதில்கள்''

வழக்கரங்கம் : நடுவர் இரா. செல்வக் கணபதி.

வழக்கு : ''அடியார் பலர் வரலாறு களைப் பாடும்சேக்கிழார் பிள்ளை பாதி புராணம் பாதி என்னுமாறு ஆளுடைய பிள்ளையின் வரலாற்றை விரித்தது மிகை'' வழக்குத் தொடுப்பவர் - மு. கணபதி. வழக்கை மறுப்பவர் - இலங்கை ஜெயராஜ்.

25.7.2004 ஆய்வரங்கம் : நடுவர் - சோ. சத்தியசீலன். ''அருளாளர்கள் நிகழ்த்திய அற்புதச் செயல்களுள் மிக அற்புதம்'', கண்ணுதல் கருணை வெள்ளம், ஆயிரம் முகத்தால் கண்டார்,

ஆய்வரங்கம்

''திருஞான சம்பந்தர் (சு. திருநாவுக்கரசு); ''விடம் போய் நீங்கிப் பிள்ளை உணர்த்து எழுந்திருந்தான்'' திருநாவுக்கரசர் (கி.சிவகுமார்); ''அருமறையோன் கண்ணின் மணியாம் புதல்வனையும் கொண்டு பணிந்தார்'' சுந்தரர் (அ. அறிவொளி); ''முந்நீர் உலகம் அதிசயிப்ப முறுக்கும் திரிமேல் நீர்வார்த்தார் (இரா.செல்வக் கணபதி)

மாலை இளைஞர் அரங்கம் : தலைமை பாரதி பாஸ்கர்.

''தெய்வச் சேக்கிழாரின் புனைவுத் திறம் ஒளிர்வது... ... ''நாட்டு வளத்தில்; ஊர்ச்சிறப்பில்; இறைவன் பெருமையில்; அடியார் தியாகத்தில் (கல்லூரி மாணவர்கள்)

பட்டி மன்றம் : நடுவர் - சோ. சத்திய சீலன். ''பெரியபுராணம் இன்றைய மக்களுக்குப் பெரிதும் வழிகாட்டுவது'' குடும்ப வாழ்வுக்கே! சமுதாய மேன்மைக்கே! சமய வளர்ச்சிக்கே!

அணித் தலைவர்கள் : சொ. சொ. மீ.சுந்தரம், இலங்கை ஜெயராஜ். அ. அறிவொளி.

29, 30, 31, ஜூலை 2005

29.7.2005 : தலையுரை - நீதியரசர் கே.எஸ். பக்தவத்சலம்.

சிறந்த தமிழறிஞர் (ரூ. 10,000)... மு.கணபதி

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) ... சோமசுந்தர தேசிகர்

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) ...இரா. செல்வக்கணபதி.

சிறந்த பல்துறைப் பேராசிரியை (ரூ. 5000/-) ... ப. நீலா

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) ... சு. சண்முகம்

சிறந்த நூல் (ரூ. 2500/-) ... இரா. அறவேந்தனின் ''தமிழ் அணி இலக்கண மரபும் இலக்கண மறுவாசிப்பும்''

கட்டுரைப் போட்டி ... கல்லூரி மாணவர் மூவர்.

பேச்சுப் போட்டி ... கல்லூரி மாணவர் மூவர்.

மனனப் போட்டி ... பள்ளி மாணவர்கள்.

சிறப்புரை : இலங்கை ஜெயராஜ் ''சேக்கிழார் வலியுறுத்தும் அறம்''

30.7.2005 கருத்தரங்கம் : தலைவர் - வ.வே. சுப்பிரமணியன். ''புறத் தொண்டால் புகழ் பெற்ற புண்ணியர்''; கணம் புல்லர் ''ஓவாத ஒளி விளக்கு எரித்து உய்ந்தவர் (அரங்க. இராமலிங்கம்; குங்குலியக் கலயர் ''நாயகர்க்குச் செய்பணி தாவாமை உய்த்த நாயனார்'' (பிரசாந்தன்) அதிபத்தர் ''தகும் பெருந்தொண்டு புரி தலைவர்'' (புரிசை நடராசன்); நமிநந்தி அடிகள் ''அரிய விளக்கு ஏற்றி அடி பணிந்தவர்'' (மு. சிவச்சந்திரன்)

மாலை : நால்வர் அரங்கம் : ''அணி தில்லை அம்பலத்து அனுபவம்'' தலைவர் - ஐ. ரவி. ஆறுமுகம்; திருஞான சம்பந்தர் ''செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே'' (ப. இலட்சுமணன்); திருநாவுக்கரசர் ''அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே'' (தெ. ஞானசுந்தரம்); சுந்தரர் ''புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாம் அன்றே'' (டாக்டர் தி.அருணாசலனார்); மாணிக்க வாசகர் ''அணிகொள் தில்லை கண்டேனே'' (ம. ஜெகத் கஸ்பார்)

வழக்கரங்கம் : நடுவர் - இரா. செல்வக்கணபதி

வழக்கு : ‘சேக்கிழார் செந்தமிழில் பத்திச்சுவை மட்டுமே சிறந்து நிற்கிறது என்பது மிகை’’

வழக்குத் தொடுப்பவர் : இலங்கை ஜெயராஜ் மறுப்பவர் - மு. சிவ்ச்சந்திரன்.

31.7.2005: ஆய்வரங்கம் : தலைமை - ஔவை நடராசன்.

‘‘இந்நாளைக்குப் பெரிய புராணம் இயம்பும் நெறி’’ புலனடக்கம் (சோ. சத்தியசீலன்), தொண்டு, (அ. அறிவொளி), நடுவுநிலைமை (சொ. சொ. மீ.சுந்தரம்),இறையுணர்வு (இரா. செல்வக்கணபதி)

மாலை 4:00 : கருத்தரங்கம் : தலைவர் - தெ. ஞானசுந்தரம்.

‘‘முதலமைச்சர் காட்டும் நல்லரசர்கள்’’; கழறிற்றறிவார், ஐயடிகள் காடவர் கோன். நரசிங்க முனையர், நின்றசீர் நெடுமாறர் (கல்லூரி மாண மாணவியர்)

சொல்லரங்கம் : நடுவர் - சோ. சத்தியசீலன். பெரியபுராணம் ஆன்மீகச் செல்வர்கட்கு வழங்குவது தொண்டுணர்வே! இறையுணர்வே! கொள்கையுணர்வே’’; அணித்தலைவர்கள் - அ. அறிவொளி, இலங்கை ஜெயராஜ், த.இராமலிங்கம்.

பதினான்காம் ஆண்டு

28.07.2006 : **தலைமையுரை** : நீதியரசர் எஸ்.ஜெகதீசன்.

சிறந்த தமிழறிஞர் (ரூ. 10,000)... திரு. பு.மா. ஜெயசெந்தில்நாதன்

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) ... திரு. ஆ. சங்கரன் ஓதுவார்

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) ... திரு. அருணை. பாலறாவாயன்

சிறந்த பேராசிரியை (ரூ. 5000/-) ... திருமதி. பு.பா. இராஜராஜேஸ்வரி

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) ... திரு. மா. கோடிலிங்கம்

சிறந்த பத்திரிகையாளர் (ரூ. 5000) : திரு. சீ. நி.சம்பந்தன்.

சிறந்த நூல் (ரூ. 2500/-) ... திரு. கே.சி. லட்சுமிநாராயணனின் ‘‘வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்’’

கட்டுரைப் போட்டி : கல்லூரி மாணவர்கள் மூவர்.

பேச்சுப் போட்டி (ரூ. 2250) : கல்லூரி மாணவர்கள் மூவர்.

திருமுறை மனனப் போட்டி : பள்ளி மாணவர்கள்,.

நூல் வெளியீடு : இரா. செல்வக் கணபதியின் ‘‘சைவமும் தமிழும்’’

சிறப்புரை : இலங்கை ஜெயராஜ் மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்’’

29.7.2006 கருத்தரங்கம் : தலைவர் - திரு. இ. சுந்தரமூர்த்தி, ‘‘கொள்கையின் உறைப்பில் தலை நின்றோர்’’, ‘‘பொன்னி நதிப் புரவலனார்’’ - திரு பனசை மூர்த்தி; ‘‘மயிலைப் பெருந்தகையார்’’ - இலங்கை திரு பிரசாந்தன்’’, சாத்த மங்கை மறையவர்’’ - திரு அரங்க இராமலிங்கம்; ‘‘ஆதனூர் மறைமுனிவர்’’ - திரு. சொ.சொ.மீ. சுந்தரம்.

மாலை சொல்லரங்கம் : தலைவர் - தெ. ஞானசுந்தரம்; ‘‘வாழ்வும் வாக்கும்’’, ‘‘திருமாளிகைத் தேவர் - திரு. கே. சிவகுமார்; ‘‘பட்டினத்தடிகள்’’ - திருபனசை அருணா; ‘‘மணிவசாகர்’’ - திரு. அ. பாலறாவாயன்; ‘‘திருமூலர்’’ - டாக்டர் தி. அருணாசலனார்.

மாலை வழக்கரங்கம் : நடுவர் - திரு. இரா. செல்வக்கணபதி. ''சுந்தரர் காலத்துக்குப் பின் வந்த அருளாளர்களைப் பெரியபுராணம் பதிவு செய்யாமை ஏற்புடையது அன்று''; வழக்குத் தொடுப்பவர் இலங்கை திரு. ஜெயராஜ்; வழக்கை மறுப்பவர் - திரு. தா. கு-சுப்பிரமணியன்.

30.7.2006 ஆய்வரங்கம் : தலைவர். திரு. ஔவை நடராஜன் ''சேக்கிழார் காட்டும் இயற்கை வளங்கள்'' ''ஆறுகளும் நாடுகளும்'' (திரு. பு.மா. ஜெய செந்தில் நாதன்); ''உணவும் தொழிலும்'' (திரு. சொ.சொ.மீ. சுந்தரம்); ''விலங்குகளும் பறவைகளும்'' (திருபுரிசை நடராஜன்); ''மரங்களும் மலர்களும்'' - திரு. சோ. சத்தியசீலன்.

மாலை இளைஞர் அரங்கம் : தலைவர் - திரு. த. இராமலிங்கம்.

சொல்லாடரங்கம் : நடுவர் - திரு. சோ. சத்தியசீலன் ''சேக்கிழார் சித்தரிக்கும் மூவர் வரலாறுகளில் கற்போர் நெஞ்சைப் பெரிதும் கவர்வது'' ''ஆரூரர் வரலாறே! ஆமூரர் வரலாறே'' புகலியர் வரலாறே'', ''அணித்தலைவர் : திரு. இரா. செல்வக் கணபதி, திரு. தா. ரு. சுப்பிரமணியன், திரு.இலங்கை ஜெயராஜ்.

பதினைந்தாம் ஆண்டு

28.07.2007 : தலைமை : நீதியரசர் வி.இராமசுப்பிரமணியன்

சிறந்த தமிழறிஞர் (ரூ. 10,000)... திரு.சோ. ந. கந்தசாமி

சிறந்த ஓதுவார் (ரூ. 5000/-) ... திரு. திரு. தி.இரகுநாத தேசிகர்

சிறந்த தமிழ்ப் பேராசிரியர் (ரூ. 5000/-) ... திரு. ந. இரா. சென்னியப்பன்

சிறந்த பேராசிரியை (ரூ. 5000/-) ... திருமதி. வெ. கனகசுந்தரம்

சிறந்த சமய சமூகத் தொண்டர் (ரூ. 5000/-) ... திரு. பி.டி. சிவலிங்கம்

சிறந்த பத்திரிகையாளர் (ரூ. 5000) : திரு. என். ரவிகுமார்

சிறந்த நூல் (ரூ. 2500/-) ... திரு. சே. இரகுராமன் எழுதிய ''தமிழர் நடன வரலாறு''

கட்டுரைப் போட்டி : கல்லூரி மாணவர்கள் மூவர்.

பேச்சுப் போட்டி (ரூ. 2250) : கல்லூரி மாணவர்கள் எழுவர்

திருமுறை மனனப் போட்டி : பள்ளி மாணவர்கள்,.

சிறப்புரை : இலங்கை திரு. ஜெயராஜ் ''அப்பாலும் அடிச்சார்ந்தார்'' திரு. இரா.செல்வக்கணபதி ''தெய்வ மாக் கவி''

28.07.2007 : கருத்தரங்கம் : தலைவர் - திரு. தெ. ஞானசுந்தரம்; ''சுந்தரர் ஏயர்கோன்'' - திரு. மு. சிவச்சந்திரன்; ''மெய்ப்பொருள் - முத்தநாதன்'' திருபுரிசை நடராசன்; ''எறிபத்தர் - புகழ்ச்சோழர்'' - இலங்கை திரு. ஜெயராஜ்; ''ஏனாதி நாதர் - அதிசூரர்'' - திரு. சொ.சொ.மீ. சுந்தரம்.

மாலை : சொல்லரங்கம் : தலைவர் - திரு. இரா. செல்வக்கணபதி. ''எப்படிப் பாடினரோ?''; ''காரைக்காலம்மை'' ''திருமதி மகேஸ்வரி சத்குரு); ''சேரமான் பெருமாள்'' (திரு. கி. சிவகுமார்); ''காடவர் கோன் கழற் சிங்கன்'' (மரபின் மைந்தன் முத்தையா); சிவன் கொடுத்த சீட்டுகள் (திரு. தி. அருணாசலனார்.)

காலை ஆய்வரங்கம் : நடுவர் - திரு ஔவை நடராஜன்; ''யாரோ? இவர் யாரோ?'' ''தில்லை வாழந்தணர்'' (திரு. த.இராமலிங்கம்) ''சித்தத்தை சிவன் பால் வைத்தார்'' (திரு. திருப்பூர் கிருஷ்ணன்); ''வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' (திரு. அ. அறிவொளி)

29.7.2007 : வழக்கரங்கம் : நடுவர் - வே. சிவசுப்பிரமணியன். ''சமுகப் பிரச்சனைகட்கு உரிய தீர்வுகள் பெரியபுராணத்தில் பதிவாகவில்லை'' தொடுப்பவர் - இலங்கை திரு. ஜெயராஜ்; மறுப்பவர் - திருபுரிசை நடராஜன்.

மாலை இளைஞர் கழகம் : தலைமை பாரதி பாஸ்கர்.

சொல்லாடரங்கம் : நடுவர் திரு. சோ. சத்தியசீலன். ''மனித நேயம் மற்றும் மனிதாபிமானப் பதிவுகட்குச் சேக்கிழார் பெரிதும் தேர்ந்து கொண்ட வரலாறு'', ''காழிப்பிள்ளையார் வரலாறே! தாண்டக வேந்தர் வரலாறே! வல்வழக்கிட்டார் வரலாறே!'' அணித்தலைவர்கள் - திரு. மு. சிவச்சந்திரன்; இலங்கை திரு. ஜெயராஜ் திரு. சொ.சொ.மீ. சுந்தரம்.

தனியொரு பக்தி இலக்கியத்தை எடுத்துக் கொண்டு அதனைச் சுவைபட பல்வேறு கோணங்களில், பல்வேறு தலைப்புகளில் ஒவ்வோராண்டும் புதுமை பூத்துக் குலுங்க தொழில் சமய வேறுபாடுகளைத் தாண்டிய நிலையில் பதினைந்து ஆண்டுகளாகப் பல்லாயிரக் கணக்கான மக்களிடம் கொண்டு சென்றது; எந்த மேடையிலும் அங்கீகாரம் பெறாத தேர்ந்த அறிஞர்கள், ஓதுவா மூர்த்திகள், தொண்டர்களை மனமார வாழ்த்திப் பரிசு வழங்கி வருதல்; இவையே சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தின் சாதனைகளாம்.

தலைவர் - நீதியரசர் மாண்பமை திரு. எஸ். நடராஜன் செயலர் - திரு. டி.எஸ். தியாகராஜன்.

22. ஆலய உழவாரத் தொண்டு சீர் திருக்கூட்டம்
சைதாப்பேட்டை
1993

1993-இல் ஒரு மாலைப் பொழுது... ... சைதாப்பேட்டை சௌந்தரேசுவரர் திருக்கோயில் ... ...

நாகராஜன் உடன் வந்தோர் இறைவனை வழிபட்டு வெளியில் வந்து கொண்டிருந்தார்கள். ''பெரியபுராணம் என்பதெல்லாம் இப்பொழுது எங்கும் கேட்க முடியவில்லையே! இக்காலத்தில் யார் சொல்கிறார்கள்'' என்று ஒரு அந்தணப் பெரியவர் கூறிக் கொண்டிருந்தார். ''என்ன? ஏது'' என்று நிதானித்துப் பார்க்கும் முன்னர் அவர் கூட்டத்தில் கலந்து விட்டார். நாகராஜனும் உடன் வந்தவர்களும் நான்கு பிரகாரமும் சுற்றிப் பார்த்தார்கள். கண்களில் படவேயில்லை. இதுநாள் வரை நாகராஜனுக்குக் கோயில், வழிபாடு, அலங்காரம், அபிடேகம், தரிசனம் - என்று தான் வாழ்வு அமைந்திருந்தது. பெரியபுராணம் பற்றியெல்லாம் படித்ததேயில்லை. ஏதோ அருளுரை போல அமைந்துவிட்டது. உடனே பெரியபுராணம் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டார். அங்கிருந்தோர் அறிவுரைப்படி நேராக திரு. கி. சிவகுமார் அவர்களைப் பார்க்கக் கிளம்பி விட்டார். சிவகுமார் அவர்களிடம் ''மார்கழி மாதம் முப்பது நாட்களும் பெரியபுராணம் மற்றும் சைவ இலக்கியங்கள் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கவேண்டுமே'' என்று கேட்டுக் கொண்டார். ''தொடர்ந்து உங்களால் ஆண்டுதோறும் முப்பது

நாட்களும் நடத்த முடியுமா?'' என்று திரு. சிவகுமார் அவர்கள் கேட்டார்கள், ''முடியும்'' என்றார் நாகராஜன்.

இப்படி மலர்ந்ததுதான் ஆலய உழவார தொண்டு சீர் திருக்கூட்டம். மலர்ந்த நாள் *16.12.1993*. முப்பது நாட்களும் சொற்பொழிவு... நிகழ்த்துபவர்கள் திரு.கி. சிவகுமார், திரு. எம். கே. பிரபாகரமூர்த்தி, திரு. மா.கி. இரமணன், திரு. கண்ணதாசன் தொடக்க காலங்களில் பெரியபுராணமே சொல்லப் பட்டு வந்தது. இப்பொழுது பன்னிரு திருமுறைகள், சைவ சித்தாந்தம் எனப் பல தலைப்புகளிலும் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

வாரம் நான்கு நாட்கள் சொற்பொழிவுகள், மாதம் இருமுறை சென்னை பகுதி கோயில்களில் உழவாரப் பணி, (இதுவரை 200 கோயில்கள்), நால்வர் குருபூஜை, மார்கழி மாதம் முதல் நாளன்று விருது வழங்கும் விழா, கந்த சஷ்டியின் போது 30000 பேருக்கு அன்னதானம், திருப்போரூர் பாதயாத்திரை - என அமர்க்களப்படுகின்றது.

2001 மே, 12, 13, நாட்களில் நாகராஜன் சென்னையிலே பன்னிரு திருமுறைப் பெருவிழா எடுத்தாரே பாருங்கள்! அப்பா! என்ன ஒரு எழுச்சி!

12.5.2001 : காலை 7.00... திருமுறை வீதி உலா தொடங்கி வைப்பவர் - சைதை திரு. கா. கிட்டு; அரங்கைத் திறந்து வைப்பவர் - மாண்பமை நீதியரசர் திரு. P.R. கோகுலகிருஷ்ணன், குத்து விளக்கு ஏற்றுவோர் - மாண்பமை நீதியரசர் திரு. எஸ். நடராஜன், திரு. A.R. இராமசாமி, திரு. V.G. சந்தோஷம், திரு. சைதை துரைசாமி, டாக்டர் T.R. சுரேஷ், திரு. K.A. சுந்தரம், ஐ.ஏ.எஸ்., திரு. R. சண்முகம், வழக்கறிஞர் திரு. S. தியாகராஜன் B.E., திரு. C.S. குப்புராஜ் டாக்டர் திரு. K. பிரேம்ராஜ்

திரு. ந.ரா ஆடலரசு, திரு. வை. இரத்தினசபாபதி, திரு. விசுவநாத சிவாச்சாரியார், திரு. மு. பெ. சத்தியவேல் முருகனார், திரு. எம்.கே. பிரபாகரமுர்த்தி, திரு. கோமுகம், திரு. கே. சிவகுமார், திரு. இராமநாத சிவாச்சாரியார், திரு. ஏகாம்பர குருக்கள், திரு. ஈஸ்வர குருக்கள், திரு.கந்தசாமி சிவாசாரியார், திரு. வ. நாகராசன்.

பன்னிரு திருமுறைக்குப் பெரும் பேரொளி வழிபாடு : தவத்திரு ஐயப்ப சுவாமிகள்.

ஞானியர் படத்திறப்பு : திரு. எஸ்.வி. சிட்டிபாபு - வாரியார் சுவாமிகள்; அவ்வை திரு. து. நடராசன் - ஞானியார் சுவாமிகள்; திரு. ச. முத்துக்குமரன் - மறைமலையடிகள்; டாக்டர் ஜோதி இராமலிங்கம் - பாக்கியலிங்க தம்பிரான்.

10.00 மணி : திருமுறை இசை - சைதை த. நடராசன், திருமதி சரோஜா சுந்தரம்.

ஆசியுரை வழங்குவோர் : தொண்டை மண்டல ஆதீனம், பேரூர் ஆதீனம், கூனம்பட்டி ஆதீனம், தவத்திரு ஊரன் அடிகள், தவத்திரு ஐயப்ப சுவாமிகள்.

காலை 11.30 : கருத்தரங்கம் முதல் அமர்வு. தொடக்கவுரை - பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம்; முனைவர் திரு. வை.இரத்தின சபாபதி - ஞானசம்பந்தர்; முனைவர் திரு. அரங்க இராமலிங்கம் - அப்பர்; முனைவர் திரு. கு - சுந்தரமூர்த்தி - சுந்தரர்.

2.30 மணி : திருமுறை இசை - களக்காடு 5 சீதாலட்சுமி.

3.00 மணி : கருத்தரங்கம் இரண்டாம் அமர்வு.

தலைமை : தவத்திரு ஊரன் அடிகள்; திரு. கே. சிவகுமார் - மாணிக்க வாசகர்; திரு. எம்.கே. பிரபாகரமூர்த்தி - ஒன்பதின்மர் ஒண்டமிழ்.

4.30 மணி : திருமுறை இசை - திருத்தணி திரு. என். சாமிநாதன், மயிலை திரு. பா. சற்குருநாதன், காஞ்சி திரு- ஆ. பூபாலன்.

6.30 மணி : தலைமை நீதியரசர் திரு. எஸ். நடராசன், நூல் வெளியீடு - திரு. எஸ் மெய்கண்ட தேவன் ஐ.ஏ.எஸ்.

இரவு 7.30 மணி : கருத்தரங்கம் மூன்றாம் அமர்வு.

தலைமை : தான் திரு. சோமசுந்தரம், மலேசியா

திரு. மு. பெ. சத்தியவேல் முருகனார் - முத்தமிழ் மூவாயிரம் திரு. கோமுகம்; - காரைக்காலம்மையார்.

13.5.2001 ஞாயிறு

காலை 7.00 : திருமுறை இசை - குடந்தை திரு. இலட்சுமணன், வயலூர். திரு. தி. பாலச்சந்திரன், திருமாகறல் திரு.தி. ஆடலரசு.

8.30 மணி : திரு.மா. வைத்தியலிங்கம், திரு. மா. கோடிலிங்கம் - பண்ணிசை.

9.30 மணி : திரு. V.G. சந்தோஷம் - இன்னிசை

10.00 மணி : கருத்தரங்கம் - நான்காம் அமர்வு

முனைவர் அவ்வை - து. நடராஜன் - தலைமையுரை திரு. த. விசுவநாதன் - பட்டினத்தார்; திரு. பழ. முத்தப்பன் - சிறுத்தொண்டர். திரு.ம.இராமலிங்கம் - திருநீலகண்டர்; முனைவர் திரு.ம. அமிர்தலிங்கம் - கண்ணப்பர்.

2.30 மணி : அமைப்புப்பணி ஆய்வரங்கம் - அனைத்து மன்றங்கள்

மாலை 4.00 : தருமபுரம் ப. சுவாமிநாதன் - திருமுறை இசை.

மாலை 4.30 : 27 ஓதுவா மூர்த்திகட்கு தாளம், குடை, உடை, பொற்கிழி வழங்கல்.

தலைமை : திரு.I.R.பெருமாள் ஐ.ஏ.எஸ்.

பொற்கிழி வழங்கல் : அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் சார்பாக திருமா. வைத்தியலிங்கம்.

மாலை 5.30 : 27 ஓதுவாமூர்த்திகள் சேர்ந்திசை.

மாலை 6.30 : நல்லறிஞர் ஐவருக்கு விருது வழங்கல்.

ஐந்து பேரறிஞர்கள் : மூதறிஞர் திரு. அ.ச. ஞானசம்பந்தம், திரு. பாண்டுரங்கம், அருணை; திரு. ப. மூக்கப்பிள்ளை, திருச்சி; திரு. ந. ரா. ஆடலரசு; திருமதி பரமேஸ்வரி ரத்தினவேலு.

விருது வழங்குபவர் : அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்களின் சார்பில் திரு. மா. வைத்தியலிங்கம்.

இரவு 7.30 : பட்டிமன்றம் : நடுவர் - முனைவர் திரு. தி. இராஜகோபாலன்.

பொருள் : ''பன்னிரு திருமுறையால் அதிக விளக்கம் பெற்றது பண்ணா? பத்தியா? பைந்தமிழா?''

23. தமிழ்ச்சைவப் பேரவை

1997



ஆறுமுக அடிகள்

''உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள் உத்தமனே'' என்ற மணிவார்த்தையை மந்திர வார்த்தையாகக் கொண்டிருப்பவர் பெரியவர் ஆறுமுக அடிகள். இக்கொள்கையை உறுதியாகப் பற்றிக் கொண்டு அவர் ஒரு இயக்கமே நடத்தி வருகிறார்.

சிவபெருமானை மட்டுமே கடவுளாக வழிபட வேண்டும் என்ற கொள்கை உடையவர். அம்பிகை, முருகன், கணபதி முதலியோரை தேவர், குருமார், அடியாராக வணங்க வேண்டும் என்பார். ஆறுமுக அடிகளாருக்குக் கொள்கை உறுதிப்பாடு மட்டும் அல்ல; சிந்தனையிலும் தெளிவு இருக்கின்றது. அந்தச் சிந்தனைத் தெளிவு இருப்பதனால் நால்வர் நெறி வேறு பன்னரு திருமுறை நெறி வேறு என்று வேறுபடுத்திக் காட்டுகிறார். ''வாசி தீரவே'' என்ற பாடலுக்கு யாருமே கூறாத அரிய பொருளைக் கூறி ஞானசம்பந்தப் பெருந்தகையை உச்சிமேல் வைத்துப் போற்றுகிறார். கொள்கைப்பிடிப்பு மட்டும் இருந்தால் போதாது. அதனை எடுத்துச் சொல்லத் துணிவு வேண்டும். சொற்பொழிவாளர்கள், சமயத்தலைவர்கள், சமய நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் என்று அடிகளார் பார்ப்பதில்லை. அவர்கள் கூறும் கருத்திலே முரண்பாடு இருந்தால் நேர்மையாகவே வாதிடுவார்.

தம் கருத்துகளை வெளிப்படுத்த அடிகளார் எடுத்துக் கொண்டுள்ள ஆயுதம் துண்டுப் பிரசுர வெளியீடுகள் ஆகும். 1974-இல் முதல் வெளியீடு வந்தது. 2007 ஆகஸ்டு வரை 91 வெளியீடுகள் வந்துள்ளன. அடிகளார் சொற்பொழிவுகள் மூலமும் தம் கருத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

1997-இல் தமிழ்ச் சைவப் பேரவையை அடிகளார் தொடங்கினார். மாதந்தோறும் முதல் ஞாயிறன்றும் திருவாதிரையன்றும் மற்றும் நால்வர் குருபூஜை, ஆண்டு விழாக்காலங்களில் பேரவை சார்பில் அடிகளார் கூட்டம் நடத்துகின்றார். ஜூன் 2007 முதல் ''நால்வர் நெறி'' என்ற திங்கள் இதழும் அடிகளார் வெளியிட்டு வருகின்றார்.

அழகரடிகளின் அணுக்கத் தொண்டரான ஆறுமுக அடிகள் அழகரடிகளின் 3000 சொற்பொழிவுகளின் குறிப்புகளைக் குறித்து வைத்திருக்கிறார். அவை அனைத்தையும் அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பது ஆறுமுக அடிகளின் வாழ்நாள் குறிக்கோள் ஆகும்.

(பிறப்பு - 25.1.1925; பெற்றோர் - தங்கவேலு, தங்கம்மாள் பிறந்த ஊர் - திருபெரும்பூதுரை அடுத்த ஆயிகுளத்தூர் தொடுகாடு கிராமம்)

துணைநூல் : ஆறுமுக அடிகள் முத்துவிழா மலர், அடிகளின் துண்டுப் பிரசுரங்கள், ''நால்வர் நெறி'' இதழ்.

24. அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் பிரதோஷ வழிபாட்டுக்குழு

(1998)

நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு அவன் பெருமைகளைப் போற்றிப் பரவுவதே இவ்வழிபாட்டுக் குழுவின் தலையாய பணியாகும். நித்தலும் என்றால் நித்தலும் தான். தினமும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவது மட்டுமல்ல. தினமும் மாலை 6.00 மணி ஆனதும் திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் தெற்குப் பகுதியில் உள்ள தேவாசிரியன் திருமண்டபத்தில் விளக்குகள் ஏற்றி, மேடை அமைத்து, மைக் செட்டைச் சரிசெய்து, அடியார்கள் வந்து அமர பாய்கள் விரித்து, சரியாக 6.30 மணிக்குத் திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடி, 7.00 மணிக்குச் சைவ சமய விரிவுரையும் நிகழ்த்தி வருகிறார்கள். ஆண்டின் 365 நாட்களும் ஒரு நாள் விடாமல் இவ்வாறு நடத்துகின்றார்கள். ''365 நாட்களும் சைவ சமய சொற்பொழிவுகள் நடைபெறும் ஒரே இடம் இதுவேயாகும்'' என்று பெருமையோடு அழைப்பிதழில் போட்டுக் கொள்கிறார்கள். உண்மையும் அதுதானே! கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டிய சாதனை.இவ்வாறு 15.9.2001.இல் தொடங்கி ஆறு ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. திரு. கே. சிவக்குமார் அவர்களின் பெரிய புராணச் சொற்பொழிவு முதற்சொற் பொழிவு ஆகும்.

தேவாரம், திருவாசகம், சிவஞான சித்தியார், பெரியபுராணம் என்று நாளும் தலைப்புகள் மாறுகின்றன. திரு. வே. சிவசுப்பிரமணியன், திரு. கே. சிவகுமார், திரு. ஜெ. மகாதேவன், திரு. எம்.கே. பிரபாகரமுர்த்தி, திரு. அரங்க ராமலிங்கம், என்று பேச்சாளர்

தேவாசிரியன் திருமண்டபம் - ராஜரத்தின ஓதுவார்

நிர்வாக அதிகாரி

களும் மாறுகின்ற னர். 2 மாதங்கள் முன்னதாக இன்ன இன்ன பேச்சாளர் இன்ன இன்ன தலைப்பு இன்னின்னார் நன்கொடையாளர் என்று தீர்மானித்து விடுகிறார்கள். ஒரு கூட்டத்திற்கு ரூ. 300 முதல் ரூ. 500 வரை செல வாகிறது. ஒரு மாதத்திற்கான அட்டவணையை அச்சிட்டு முன்ன தாகக் கொடுத்து விடுகிறார்கள். தேவா சிரியன் மண்டபத்தின் முன்னால் ஒளியூட்டப் பட்ட மஞ்சள் பலகையில் ஒவ்வொரு மாதமும் இன்ன இன்ன தேதிகளில் இன்னின்னார் இன்ன தலைப்புகளில் பேசுகின்றனர். என்று செவ்வண்ணத்தில் பொறித்து விடுகிறார்கள். இதனால் 100 பேருக்கு மேல் பயன் அடைந்துள்ளதாக திரு. ராஜ ரத்தின ஓதுவார் கூறினார். 100 பேரிடமும் பன்னிரு திருமுறை நூல்கள் உள்ளன என்றும் திருமுறை பாராயணமும் செய்கின்றனர் என்றும் பெருமை பொங்கக் கூறினார். இத்துணை பணிகளையும் முன்னின்று நடத்துபவர் அவர்தானே! கோயில் நிர்வாக அதிகாரி திரு. வி. ஏகாம்பரம் அவர்களும் கோயில் நிர்வாகத்தினரும் இத்திருப்பணிக்குப் பெரிதும் உதவி செய்கின்றனர்.

திரு. வே. சிவசுப்பிரமணியன், திரு. கே. சிவகுமார், திரு. ஜெ.மகாதேவன் ஆகியோர் உரைகள் நடைபெற்ற மூன்று வெவ்வேறு நாட்களில் தேவாசிரியன் திருமண்டபம் சென்றேன். எந்த ஆரவாரமும் இல்லை. நின்று நிதானமாக நடத்துகிறார்கள். சில சமயங்களில் ஒரு பாடலுடன் முடிந்து விடுகின்றது. பெரியவர் சிவசுப்பிரமணியம் சிவப்பிரகாசத்தில் ''அருத்திமிகும்'' என்று தொடங்கும் 26வது பாடலில் புத்தி தத்துவம் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். ''புத்தியின் தொடர்பு விஷயத்தைச் சார்ந்தது. ஆங்காரத்தின் தொடர்பு உயிரைச் சார்ந்தது. மனம் பற்றுகிறது

கி. சிவகுமார் உரை

(நினைக்கிறது) புத்தி இன்னது என்று தீர்மானிக்கிறது. சித்தம் சிந்திக்கிறது. அகங்காரம் நான் என்ன பொருள் என்று கண்டுபிடிக்கிறேன் என்று முன்னே நிற்கிறது'' எவ்வளவு கடினமான சிந்தனை! பலர் உட்கார்ந்து குறிப்புகள் எடுத்துக் கொள்கின்றனர். ஆழமான படிப்பு!

இந்தச் சொற்பொழிவுகளின் அருமை அறிந்த சிவகுமார் என்ற ஒரு அன்பர் (பேச்சாளர் அன்று) தற்சமயம், நடைபெற்று வரும் அனைத்து பொழிவுகளையும் பதிவுசெய்து ஒலிநாடாமூலம் மக்களுக்கு விலைக்கு வழங்குகிறார்.

இவையல்லாமல் நால்வர் பெருமக்களின் குருபூசையும் திருநாள்களையும் ஆண்டு விழாவையும், முழுநாள் நிகழ்ச்சிகளாக ஓதுவாமூர்த்திகளுக்குப் பொற்கிழி வழங்கல், இரு சொற்பொழிவுகள், திருமுறை இன்னிசை என்று நடத்துகின்றனர். ஆங்கில மாதத்தில் முதல் ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதலும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை சுந்தரர் தேவாரம் முற்றோதலும் நடத்துகின்றனர்.

இந்த வழிபாட்டுக் குழுவின் தோற்றமே சுவையான வரலாறு ஆகும். அருள்மிகு மருந்தீசுவரர் ஆலயத்தில் ஏனைய திருக்கோயில்களில் நடப்பது போலவே பிரதோஷ வழிபாடு நிகழ்ந்து வந்தது. 1998ல் திரு.மா. வைத்தியலிங்கன் அவர்களின் அறிவுரைப்படி திரு. க. சுந்தரம் முன்னின்று ஓதுவார் இராசரத்தினம், திரு.மா. கோடிலிங்கம் மற்றும் சில அடியார்களையும் ஒருங்கிணைத்து இந்த வழிபாடு நெறிப்படுத்தப்பட்டது. திருமுறை வழிபாட்டுக்கு அதிகாரியும் இன்றியமையாதவருமான ரிஷப தண்டம் நிர்மாணிக்கப் பெற்று 9.12.2000 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. அன்று

பிரதோஷ வழிபாட்டின் போது ரிஷப தண்டம் எழுந்தருளப் பண்ணுதல்

முதல் பிரதோஷங்களில் சுவாமி புறப்பாட்டின்போது இவர் முன் செல்ல அடியார்கள் திருக்கூட்டம் பின்னே திருமுறை ஓதிக்கொண்டு செல்லுதல் மரபாக அமைந்தது. 20.2.2001-இல் 'கட்டமும் பிணியும்' என்ற சுந்தரர் தேவாரம் இசைக்கும்போது இந்த ரிஷப தண்டம் சுமார் 20 மணித்துளிகளுக்கு அடியார் கையிலிருந்து விலகித் தனியாக நின்ற அற்புதம் நிகழ்ந்தது. நூற்றுக்கணக்கான அடியார்கள் இந்த அற்புதத்தைக் கண்டு வியந்து இன்புற்றனர். 4.9.2002-இல் மீண்டும் இந்த அதிசயம் நிகழ்ந்தது.

தேவாசிரியன் திருமண மண்டபம் எவ்வாறு உருவானது? திருக்கோயிலின் தென்பாகத்தில் தட்டுமுட்டு சாமான்கள் போடப்பட்டிருந்த பழைய மண்டபம் ஒன்று இருந்தது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அனுமதியுடனும், அப்பொழுது இருந்த கோயில் நிர்வாக அதிகாரி திரு. சா. பாரதி அவர்களின் ஒத்துழைப்புடனும் செந்திலடிமை திரு சுந்தரம் அவர்கள் திட்டமிட, அம்மண்டபத்தைப் புதிய மண்டபமாக அடியார்கள் உதவியுடன் மிகப்பெரிய செலவில் நிர்மாணம் செய்து, திருமுறைக் கோயில் அமைத்து 15.9.2001 அன்று அருள்மிகு பால் வண்ணநாதருக்கு அடியார்களால் அர்ப்பணிக்கப் பெற்றது.

இந்த மண்டபத்தை வழிபாட்டுக்கேற்ப நால்வர் படம், ஒலிப்பெட்டி, குழல் விளக்குகள், மின் விசிறிகள் மற்றும் எல்லா உபகரணங் களையும் பலப்பல அடியார்கள் உதவியுடன் பெற்று ஒரு மிகச் சிறந்த மண்டபமாக திரு. இராஜரத்தின ஓதுவார் அவர்கள் வளர்த்துள்ளார்கள். ஓதுவாரின் அயராத உழைப்பினால் தினமும் சொற்பொழிவுகள் நடைபெறு கின்றன.

இராஜரத்தின ஓதுவார் : பிறந்த ஆண்டு. *1956*; பிறந்த ஊர் -அதிராம்பட்டினம் (பட்டுக்கோட்டை அருகில்) பெற்றோர் - ஆர். சாமிநாதச் செட்டியார், இராஜலட்சுமி அம்மாள்; 15 ஆண்டுகளகத் திருவான்மியூர் திருக்கோயிலில் திருமுறைப்பணி ஆற்றி வருகின்றார்.

25. திருக்கோயில் உழவாரப் பணி மன்றம், வேளச்சேரி (1999)

சென்னை அரண்மனைக்காரத் தெரு அருள்மிகு கச்சாலீசுவரர் திருக்கோயில் திருக்குளம்... ... *80* அடி நீளம் *15* அடி உயரம் உள்ள மதில் சுவர் இடிந்து விழுந்து விட்டது. *300*க்கு மேற்பட்டவர்கள்... ஆண்களும் பெண்களுமாய்... இளைஞர்களும் முதியவர்களுமாய்... ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், கொத்தனார்கள், ஆசாரிகள்..: இவ்வாறு வயது, தொழில் வேறுபாடின்றி சுறுசுறுப்பாக சுவர் எழுப்பிக் கொண்டிருந்தனர். பரபரப்பான சென்னைச் சூழ்நிலையில் இப்படி ஒரு காட்சியா? உழவாரப் பணியோ, திருக்குளத் திருப்பணியோ பகல் நேரத்தில் முடிக்கின்றார்கள். நண்பகல் உணவு, ஒரு மணி நேர அளவில் தேவார இசை, சைவ சமய சொற்பொழிவு என்று அமைத்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்கு *500* பேர்கள் முதல் *600* பேர்கள் வரை கலந்து கொள்கிறார்கள். நண்பகல் மகேசுவர பூஜைக்கு சிலர் அரிசி கொண்டு வருவர்; சிலர் வெல்லம்; சிலர் பானகம், நீர் மோர் எனக் கொண்டு வருவர். ஒருவர் வேன் கொடுத்து உதவுகிறார். அவரவர் செலவில் வந்து விடுகின்றனர். செலவு செய்ய

முடியாதவர்களுக்குச் சிலர் பேருந்து கட்டணம் கொடுத்து அழைத்து வந்து விடுவர். அனைத்து அன்பர்களும் இத்திருப்பணியைத் தொண்டாகச் செய்கின்றனர். சந்தாமூலமாகவோ, நன்கொடையாகவோ மன்றம் பணம் வசூல் செய்வதில்லை. பெண்களும், இளைஞர்களும் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர். திருவான்மியூர் கண்ணாடி, ப்ளைவுட் விற்பனையாளர் மாதம் தோறும் லாரி ஏற்பாடு செய்கின்றார். 2007 ஆகஸ்டு வரை 100 திருக்கோயில்களுக்கு உழவாரப் பணி செய்துள்ளனர்.

வேளச்சேரி உழவாரப் பணி மன்றத்தாரின் பணி உழவாரப் பணியோடு நிற்கவில்லை. கோயில் திருப்பணிகளுக்கும் உதவுகின்றார்கள். 2007 ஆகஸ்டு வரை ஐந்து திருக்கோயில்களுக்குக் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், விமானம் கட்டித் தந்திருக்கின்றனர். மேடவாக்கம் அருகில் உள்ள 1000 ஆண்டுக் கால பழமையான சிவன் கோயிலுக்கு இரண்டரை இலட்சம் ரூபாய்; செங்கல் பட்டு அருகில் உள்ள புலிப்பாக்கம் கோயிலுக்கு 4 இலட்சம் ரூபாய்; வந்தவாசிக்கு அருகில் உள்ள ஆலந்தூர் திருக்கோயிலுக்கு 1 இலட்ச ரூபாய்; தாம்பரம் அருகில் உள்ள நடுவீரப்பட்டு கோயிலுக்கு 1 இலட்ச ரூபாய் என செலவு செய்துள்ளனர்.

தினப்படி பூஜை செய்யக் கூடத் தடுமாறும் 40 கோயில்களுக்கு நித்ய நைவேத்யத்திற்கு அரிசி, எண்ணெய், பூஜை சாமான்கள், வஸ்திரம் வழங்கி வருகின்றனர். ''இதுபோல நித்ய பூஜை கூட இல்லாமல் சிரமப்படும் கோயில்கள் இருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் (தொலைபேசி : 23810517) ஏற்பாடு செய்கிறோம்'' என்கின்றனர்.

திரு. ஆடலரசன் : இத்துணை அடியவர்களையும் இயக்கி இத்தனை அரும்பெரும் செயல்களைச் செய்து வருபவர் ஆடலரசன் ஆவார். ஆடலரசனின் மகள் பரணி ஆனந்த குமார் திருமண அழைப்பிதழில் மொய் எழுதும் பணம் கோயில் திருப்பணிக்குச் செலவிடப்படும் என அச்சிட்டு கொடுத்துவிட்டார். 81,000 ரூபாய் மொய்ப்பணம் சேர்ந்தது. மேலே 19,000 ரூபாய் போட்டு லட்ச ரூபாய் ஆக்கி திருப்பணிகளுக்குக் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். மேற்கொண்டு மற்ற அன்பர்கள் தரலாயினர், தொங்கல் விழும்போதும் திரு. D. அருணாசலம் போட்டு கொடுத்து விடுவார்.

இம்மன்றம் 1999 ஆகஸ்டில் தொடங்கப் பெற்றது. ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறன்று ஒவ்வொரு கோயிலாகச் சென்று உழவாரப் பணி செய்கிறது.

செயலாளர் ஆடலரசன் 24.10.1956ல் காஞ்சிபுரம் அருகில் உள்ள மானாம் பதியில் கு. நாகலிங்க முதலியார், கன்னியம்மாள் மகனாகப் பிறந்தார்.

26. பொங்கு தமிழ்ப்பண்ணிசை மணிமன்றம்

2003

''பொங்கு தமிழ்ப்பண்ணிசை மணிமன்றம் தோன்றக் காரணம் என்ன? இம்மன்றம் தோன்றிய சூழல் என்ன?'' இவ்விரண்டு கேள்விகளுக்கான பதில்கள் தமிழிசை வரலாற்றைப் பதிவு செய்யப் பெரிதும் பயன்படும்.

15.1.2007 நாளிட்ட ''தமிழ் ஓசை'' செய்தித்தாளின் தலையங்கம் இச்சூழலை அழகாக எடுத்துரைக்கிறது . ''முத்தமிழின் நடுநாயகமானஇசைத் தமிழின் நிலை பரிதாபகரமானது. அருள் இலக்கியங்களான தேவார திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், சீர்காழி மூவர் கீர்த்தனைகள், திருப்புகழ், திருவருட்பா, சித்தர் பாடல்கள் போன்றவற்றில் இருபதாயிரம் பாடல்களுக்கு மேல் இடம் பெற்றிருந்த போதிலும், தமிழகத்து இசை அரங்குகளில் வேற்று மொழிப் பாடல்களே - சாஸ்திரீய சங்கீதம் என்ற பகட்டான மகுடத்துடன் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றன. சாஸ்திரீய சங்கீதம் என்ற வடசொல்லுக்கு நேரான பொருள் செவ்விசை என்பதே. செம்மொழியாகிய தமிழில் செவ்விசையே மேற்குறிப்பிட்ட இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட அருள்பாடல்கள். இவை தோன்றியது 1300 ஆண்டுகளுக்கு முன்னராகும். ஆனால் 250 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கர்நாடக சங்கீத கீர்த்தனைகளுக்குச் சாஸ்திரீய சங்கீதம் என்ற பெயரைச் சூட்டியிருப்பதே வேடிக்கை தான்.

ஆனால் விளம்பர பலம் மிகுந்த வட்டாரங்கள் இதை முன்னின்று செய்யும்போது வேடிக்கை உண்மை போன்ற வடிவத்தை எடுத்துக் கொள்கிறது.''

அதிலும் மார்கழி மாதம் சென்னை மாநகரமெங்கும் இசைக்கச்சேரிகள் நடைபெறும் பருவம். இவற்றில் கலந்து கொள்வதற்காக வெளி மாநிலங்களிலிருந்தும் - ஏன் வெளிநாடுகளிலிருந்தும் கூட ஏராளமானோர் வருகிறார்கள். 120க்கும் மேற்பட்ட சங்கீத சபாக்களில் நாள்தோறும் கச்சேரிகள் நடைபெறுகின்றன. நகர் முழுவதிலும் ஆர்ப்பாட்டத்துடன் நடைபெறுகிற இந்த வேற்றுமொழி - வடமொழி, தெலுங்கு மொழி கீர்த்தனைகளின் ஆர்ப்பாட்டத்தையே தமிழகத்தின் பாரம்பரிய இசையாக எண்ணிக் கொண்டு திரும்பிச் செல்கிறார்கள். மூவாயிரம் ஆண்டு வரலாறு கொண்ட பண்ணிசையை நேற்று முளைத்த கர்நாடக சங்கீதம் மறைத்து விடுகிறது. அதோடு தமிழ் மண்ணுக்கே உரிய இசையைப் போலவும், மாயத் தோற்றத்தை விளம்பர பலத்தின் மூலம் ஏற்படுத்திக் காட்ட முடிகிறது.

''இத்தகைய சூழ்நிலையில் மெல்லிசை என்னும் பெயரால் இளவட்டங்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடக் கூடிய பல்வேறு வாத்தியங்களின் ஆர்ப்பாட்ட சங்கீதத்துடன் பச்சையான - கொச்சையான தமிழும் சேர்ந்து கொண்டு இளவட்டங்களின் மனங்களையே வசீகரிக்கச் செய்து வருகின்றன. இந்த வக்கரிப்பு சில சந்தர்ப்பங்களில் விபரீத விளைவுகளையும் ஏற்படுத்துவதுண்டு. அது மட்டுமல்ல. இளவட்டங்கள் சினிமாப் பாடல்களை முணுமுணுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் தமிழிசை மரபே அற்றுவிடக் கூடிய ஆபத்து தலை தூக்கி நிற்கிறது.''

ஆம். தமிழிசை மரபே அற்றுவிடக் கூடிய ஆபத்து தலைதூக்கி நிற்கும் சூழலில்தான் பொங்கு தமிழ்ப் பண்ணிசை மன்றம் 2003-இல்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் திரு.எஸ். இராமதாஸ் அவர்களால் தொடங்கப்பெற்றது. சரி. பொங்கு தமிழ்ப்பண்ணிசை மன்றம் இந்தச் சூழலை எவ்வாறு எதிர்கொள்ள இருக்கிறது?

17.12.2005-இல் சென்னையில் நடைபெற்ற மூன்றாம் ஆண்டு பண்ணிசைப் பெருவிழாவில் நிறுவனர் மருத்துவர் ச. இராமதாசு இவ்வாறு சூளுரைக்கிறார். ''தமிழிசைச் சங்கத்தை மையமாகக் கொண்ட தமிழிசை இயக்கம் தமிழினத்தின் மேலடுக்குகளில் படித்த மக்களிடையே வேகமாகப் பரவி மரியாதைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது என்பது உண்மையே.

தமிழிசை இயக்கம் நிகழ்த்திய இச் சாதனை கலாச்சார வாழ்வின் ஒரு பெரிய திருப்புமுனையாகும். இதற்காகத் தமிழிசை இயக்க முன்னோடிகளுக்கு தமிழ்ச் சமுதர்யம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.''

''ஆயினும், தமிழிசை இயக்கம், மக்கள் இயக்கமாக புதிய வேகத்தைப் பெற்று, சமுதாயத்தின் அடித்தளத்தைத் தொட்டிருப்பதாகக் கூறுவதற்கில்லை. கடந்த நாற்பதாண்டுக் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் அடித்தட்டுக்கள் புரட்சிகரமாக மாறிவந்திருக்கின்றன. சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் கலாச்சார அடிப்படையிலும் கால காலமாகப் பிற்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டுக் கிடந்த சமூகங்களுக்குக் கல்வி வாய்ப்பும் கிடைத்ததால், ஒரு புதிய மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. அதன் விளைவாக விழிப்புணர்வோடு சுய மரியாதை உணர்வும் பெற்றுள்ள அடித்தளத்து மக்களிடையே, அவர்களுடைய பண்பாட்டுச் செல்வமான தமிழிசை வெள்ளம் பாய்வதற்கான நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.''

''இந்த மக்களின் பாங்கிற்கும், சூழ்நிலைக்கும், சுவைக்கும், சிந்தனைக்கும் ஏற்ற வகையில் கிராமப்புற பாட்டாளி மக்களின் நெஞ்சங்களுக்கு இனிக்கக் கூடிய எளிய தமிழிசை வடிவங்களை அறிமுகப்படுத்தி, அவை செல்வாக்குப் பெறு மாறு செய்வதெனப் பண்ணிசை மணி மன்றம் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக சாமான்ய மக்களின் மானுட உணர்வுகளுக்கு ருசிக்கக் கூடிய - புரியக்கூடிய - இசை வடிவங்கள் பழகு தமிழில், எளிய நடையில் ஏராளமாக இருக்கின்றன. வயலிலும், காட்டிலும், மேட்டிலும், பண்ணையிலும், திண்ணையிலும், விளைந்த அனுபவ முத்திரை பதிந்த நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து, குறவஞ்சி, கும்மி, பிள்ளைத் தமிழ் போன்ற இசை வடிவங்களைக் கிராமப்புற மக்களிடையே பரப்புவதன் மூலம் கலாச்சார உலகில் புதிய மறுமலர்ச்சியைக் கொண்டு வர முடியுமென மணிமன்றம் திடமாகக் கருதுகிறது. இக்கலாச்சாரப் பணியின் மூலம், இரு முனைகளில் பெரிய பலனை எய்த முடியும். முதலில் கொச்சைத் தமிழிலும், பச்சைத் தமிழிலும் இரட்டை அர்த்தம் தொனிக்கும் விரசமான சினிமாப்பாடல்களினால் வக்கரிப்புக்கு உள்ளாகியிருக்கும் கிராமப்புற இளைஞர்களின் மனங்களை நேர்ப்படுத்த முடியும். அதோடு தமிழிசை மூலம் இளைய உலகில் புதிய மன ஆரோக்கியத்தையும் பாய்ச்ச முடியும் என்று மணிமன்றம் நம்புகிறது. இவை அனைத்தையும் விட இன்னொரு பெரிய விளைவு என்னவெனில், இந்த உத்திமூலம் தமிழிசை மக்கள் இசையாக மாறுவதால், பிறக்கக் கூடிய புதிய சக்தியும் வீரியமுமாகும். அதே சமயத்தில் தமிழ்நாட்டு இசையரங்குகளில் தமிழ்ப்பண்ணிசைக்கு

முழுமையான இடத்தை உறுதி செய்வதன் மூலம், கலாச்சார உலகில் செவ்விசையான பண்ணிசை அபூர்வ மரியாதை பெறுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. ஆக மொத்தத்தில், ஒரு புறத்தில் சினிமா பாடல்களின் பகட்டான ஆர்ப்பாட்டம், இன்னொரு புறத்தில் மேட்டுக்குடிகளின் அரவணைப்புடனும், அபார வெளிச்சத்துடனும், சாஸ்திரீய சங்கீதம் என்னும் பந்தாக்களுடன் இசை உலகில் கொட்டமடித்து வரும் வேற்றுமொழிப் பாடல்களின் போலித்தனமான ஆரவாரம். இவ்விரண்டிலிருமிருந்து தமிழினத்தை மீட்பதற்குத் தமிழிசையைச் சரியான சாதனமாக மணிமன்றம் கருதுகிறது. இம்மன்றத்தின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களிடையே தோன்றக்கூடிய எழுச்சியும், விழிப்புணர்வும் ஒரு காலகட்டத்தில் தமிழர் வாழ்வில் பல்வேறு முனைகளிலும் முழுமையான இடத்தைப் பெறுமாறு செய்யும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.''

தமிழிசை இயக்கம் மக்கள் இயக்கமாக புதிய வேகத்தைப் பெற்று சமுதாயத்தின் அடித்தளத்தைத் தொடுதல்... ... ... கிராமப்புற பாட்டாளி மக்களின் நெஞ்சங்களுக்கு இனிக்கக் கூடிய எளிய தமிழிசை வடிவங்களை அறிமுகப்படுத்தல்... ... ... சினிமாப் பாடல்களினால் வக்கரிப்புக்கு உள்ளாகியிருக்கும் கிராமப்புற இளைஞர்களின் மனங்களை நேர்ப்படுத்தல்... ... ... சினிமாப் பாடல்களின் பகட்டான ஆர்ப்பாட்டம்; சாஸ்திரீய சங்கீதம் என்னும் பந்தாக்களுடன் கொட்டமடிக்கும் வேற்று மொழிப் பாடல்களின் போலித்தனமான ஆரவாரம். இவ்விரண்டிலுமிருந்து தமிழினத்தை மீட்டல்... ... .. பண்ணிசை மணிமன்றம் தோன்றிய சூழலைத் தெரிந்து கொண்டோம். நோக்கத்தைப் புரிந்து கொண்டோம். சரி, எந்த அளவுக்கு நடைமுறையில் செயல்படுத்தப் படுகிறது என்பது அடுத்த கேள்வி. நேராகவே சென்று பார்ப்போம்.

2004 டிசம்பர் 8, 9, 10... ...

சேர்மன் அரங்கம் பிரகாசம் தெரு, தி. நகர், சென்னை. பிரகாசம் தெருவிலே பொங்குதமிழ்ப் பண்ணிசை மணிமன்றக் கொடிகளாலும் தோரணங்களாலும் பொலிவுடன் காணப்படுகிறது. பெரிய தட்டிகளில் பண்ணிசை விழா நிகழ்ச்சிகள் எழுதப்பட்டு வரையப்பட்டிருந்தன. அரங்கினுள் நுழையும் போது தமிழிசை முதல் மூவர்கள் பற்றியும், தமிழிசை வளர்த்த பெருமக்கள் பற்றியும் ஆங்காங்கு பொறிக்கப்பட்டுள்ளன. உள்ளே மேடையில் நால்வர் பெருமக்கள், ஆழ்வாராதிகள் திரு உருவப் படங்கள் அணி செய்து கொண்டிருந்தன. மக்கள் சாரி சாரியாக வந்து கொண்டிருந்தனர். நமக்கு ஒரே வியப்பு! தமிழிசை நிகழ்ச்சிக்கு இப்படி ஒரு கூட்டமா? ஒரு அரசியல் கட்சித் தலைவர் எடுக்கும் விழா! மருந்துக்குக் கூட அவருடைய படமோ, அவரை வரவேற்கும் வளைவுகளோ இல்லை. ஏன், கட்சிக் கொடி கூட எங்கும் காணப்பட வில்லை. ஒரு வார்டு உறுப்பினர் அடுத்த வார்டுக்குச் சென்றால் கூட கொடிகளும், வரவேற்பு வளைவுகளும், ஆள் உயர கட்அவுட்டுகளுமாக அமளி துமளிப்படும் இருபத்தோராம் நூற்றாண்டில் இப்படி ஒரு அதிசயமா?

இதோ நிகழ்ச்சி துவங்குகிறது.

காலை 9.00 - 10.00 - மங்கல இசை.

8.12.2004 : காலை 10.00 - 11.00 : துவக்க விழா - மாண்புமிகு நீதியரசர்

டாக்டர் பு.ரா. கோகுலகிருஷ்ணன்; 11.00 - 12.00 திரு. மா. வைத்தியலிங்கம். ''சங்கத்தமிழ் மற்றும் சிலப்பதிகாரப் பாடல்கள்''; 12.00 - 1.00 திரு. ஜி. தாமோதரன், ''திவ்வியப் பிரபந்தம்'', 3.00 - 4.00 அருட்சகோதரி மார்கரெட் பாஸ்டின், ''கோபால கிருஷ்ண பாரதியார் மற்றும் வேதநாயகம் பிள்ளை பாடல்கள் 4.00 - 5.00 திரு பாலசுந்தரபாபு ''திருவருட்பா'' 5.00 - 7.00 திருத்தணி திரு. என். சுவாமிநாதன், ''தேவாரம் மற்றும் திருவாசகம்'' 7.00 - 9.00 திருப்பாம்புரம் சோ. சண்முக சுந்தரம் ''சீர்காழி தமிழிசை மூவர் பாடல்கள்''.

9.12.2004 : காலை 9.00 - 10.00 - மங்கல இசை - 10.00 - 11.00 திரு. என். வி. எம். நவரெத்தினம், ''திருவாய்மொழி மற்றும் ஆண்டாள் பாடல்கள்'' 11.00 - 12.00 திரு. ஜி.எம்.ஏ. ஆரிப் ''இஸ்லாமிய இசைப் பாடல்கள்'' 12.00 - 1.00 திரு. மா. கோடிலிங்கம் ''சித்தர் பாடல்கள்'' 3.00 - 4.00 சோமு பவிதா ''19ஆம் நூற்றாண்டு தமிழிசைப் பாடல்கள்''; 4.00 - 5.00 திருமதிவசுமதி செயசீலன் ''தாயுமானவர் மற்றும் பட்டினத்தார் பாடல்கள்'' 5.00 - 6.00 திருமதி குன்னக்குடிமாலா 'காவடிச் சிந்து' 6.00 - 7.00 திரு. பி.டி. செல்லதுரை ''பாரதியார் மற்றும் பாரதிதாசன் பாடல்கள். 10.12.2004 காலை 9.00 - 10.00 மங்கல இசை; 10.00 - 11.00 டி.கே.எஸ். கலைவாணன் ''தண்டபாணி தேசிகர் பாடல்கள் 11.00 - 12.00 திரு. முத்துக்கிருஷ்ணன் ''காரைக்கால் அம்மையார் மற்றும் சேக்கிழார் பாடல்கள்'' 12.00 - 1.00 ஈ. அங்கயற்கண்ணி ''திருப்புகழ் 3.00 - 4.00 எஸ்.ஏ.கே. துர்கா ''குறவஞ்சி மற்றும் பிள்ளைத் தமிழ்''4.00 - 5.00 திரு. டி.ஏ.எஸ். தக்கேசி ''திருக்குறள்'' 5.00 - 6.00 திரு. ஞானப்பிரகாசம் ''திருவிசைப்பா மற்றும் திருப்பல்லாண்டு'' 6.00 - 7.00 திருமதி டி.வி.சுந்தரவல்லி ''பெரியசாமித் தூரன் பாடல்கள்'' 7.00 - 9.00 புஷ்பவனம் குப்புசாமி ''நாட்டுப்புறப் பாடல்கள்''

நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழக் கட்டணம் ஏதும் இல்லை. நண்பகலில் அனைவர்க்கும் உணவு. இடைவேளையில் தேநீர், பங்குபெறும் கலைஞர்கள், ஓதுவாமூர்த்திகளுக்குப் பட்டாடை, கேடயம், கணிசமான தொகை, நிறுவனர் இராமதாஸ் அவர்கள் மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் முழுமையாக இருந்து கேட்டு அனுபவிக்கிறார்.

கலைஞர்களை வாயாராப் பாராட்டுகிறார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ஜி.கேமணி அவர்களோ நின்று வேலை வாங்கு கிறார். நிகழ்ச்சிகளை வடிவமைத்துக் கொடுப்பவரோ மூத்த இதழாசிரியர் திரு. ஜெ.வி. கண்ணன் அவர்கள்.

பண்ணிசைப் பெருவிழா சென்னை மட்டுமல்ல; தமிழ்நாடு எங்கணும்; இந்தியத் திருநாட்டிலும், ஏன் வெளிநாடுகளிலும் கூட நடத்தப்பட்டு வருகின்றது.

2003 - சென்னை, மதுரை, நெல்லை, சேலம், கோவை, வேலூர், 2004 - சீர்காழி, சிதம்பரம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை,. 2005 - சென்னை, 2006 - சென்னை, பம்பாய், சிங்கப்பூர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அப்பர் பெருமான், சுந்தரமூர்த்தி நாயனார், மணிவாசகப் பெருந்தகை ஆகிய நால்வருக்கும் சைவ உலகின் இதயமாகிய சிதம்பரத்தில் அறுபத்து நான்கு ஓதுவாமூர்த்திகளைக்கொண்டு எடுத்த பண்ணிசை ஆராதனை விழா - கலாச்சார உலகில் கோபுரம் போலப் பொலிந்து நின்றது. தில்லைச் சபாபதி கோயிலைச் சேர்ந்த தீட்சிதர்களின்

தூதுக்குழு திருக்கோயில் சார்பில் விழாவை வாழ்த்திய நிகழ்ச்சி மறக்கக் கூடியதல்ல.அன்றைய நிகழ்ச்சிக்கு மட்டும் பத்தாயிரம் பேருக்கு மேல் திரண்டிருந்தனர். அத்துணை பேருக்கும் அறுசுவை விருந்து. அதே போல இராமானுஜ முனிவருக்கு அவர் அவதரித்த திருப்பெரும்புதூரில் எடுத்த ஆராதனை விழா பசுமைக் கோலத்தைக் கொண்டு இலங்கியது. இந்த இரண்டு விழாக்களும் மணிமன்றத்தின் முடியில் பதித்த வைரங்களாகத் துலங்குகின்றன. பம்பாயிலும், சிங்கப்பூரிலும் எடுக்கப் பட்ட பண்ணிசை விழா அங்குள்ள தமிழர்களின் வரவேற்பைப் பெற்றது. இம்மன்றத்தின் பணிகளை மேலும் சர்வதேச அளவிலும், உலகெங்கும் விரிவு படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

தேமதுரத் தமிழ் இசை உலகெங்கும் பரவ வகை செய்யப்பட்டுள்ளது.

''தமிழ் ஓசை'' : உலகெங்கும் தமிழிசை பரவவகை செய்துள்ளர்.திரு. எஸ்.இராமதாஸ் அவர்கள் பண்ணிசை பரவவும், பண்ணிசைக் கலைஞர்கள் - ஓதுவாமூர்த்திகளுக்கு உரிய மரியாதை கிடைக்கவும் அன்றாடச் செய்திகளினூடே கலந்து மக்களிடையே கொண்டு செல்ல 16.3.2006 அன்று ''தமிழ் ஓசை'' என்ற நாளிதழினைக் கொண்டு வந்துள்ளார். ''தமிழ் ஓசை'' தன் முதல் இதழின் தலையங்கமாக வரைந்துள்ள ''கொள்கைப் பட்டயத்தில்'', ''அடுத்து, தமிழின் பலமுனை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவும் அதற்கான திட்டங்களை முன்னின்று செயல்படுத்துவதற்குமாக நிறுவப்பட்டுள்ள பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனம் - தமிழ்க் கலாச்சார மேம்பாட்டுக்குரிய கருவியாக 'தமிழோசை'யைத் தொடங்கியுள்ளது. தமிழரியக்கம், தமிழியக்கம், தமிழிசையியக்கம் ஆகிய மும்முனைகளில் ஆக்கப்பணிகளை ஆற்றுவதற்குத் தமிழோசை தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்கிறது.

''தமிழ் ஓசை'' தமிழிசை இயக்கத்திற்காக அவ்வப்பொழுது குரல் கொடுத்து வருகிறது. 31.3.2006-இல் 'துக்கடாக்களின் கொட்டம்' என்ற கட்டுரையில், ''தற்பொழுது தமிழிசை மீது இளம் தமிழர்களுக்கு உணர்வு ரீதியான காதல் பிறந்திருப்பதால், அவர்களை மனத்தில் கொண்டு, எம்.எஸ்.ஸின் தமிழ்ப்பாடல்களை 29.3.2006 - புதனன்று காலை 'பொதிகை'யில் சென்னைத் தொலைக் காட்சி ஒளிபரப்பியது. முதலில் சுந்தரர் தேவாரமாகிய 'பித்தா - பிறைசூடி. பெருமானே' பாடலை எம். எஸ். பாடினார்.அடுத்து அவர் பாடியது வடலூர் வள்ளல் பிரான் அருளிய திருவருட்பாவில் இடம் பெற்றுள்ள 'பெற்ற தாய் தனை மக மறந்தாலும்' என்ற உருக்கமான தேன் கவிதையைப் பாடினார். இப்பாடலை அறிமுகப் படுத்திய அறிவிப்பாளரோ, ''சிவ பஞ்சாட்சர ஸ்தோத்திரம் - மாணிக்க வாசகரின் திருவாசகப் பாடல்'' என்று கூசாமல் கூறி அறிமுகப் படுத்தினார்.

இந்த அக்கிரமத்தை அறியாமை என்பதை விட, தமிழிசை மீதான அலட்சிய மனோபாவம் என்பதே பொருந்தும். சிவ பஞ்சாட்சர ஸ்தோத்திரமாம்! இது ஆடவனான முருகேசன் என்பதைப் போலலல்லவா இருக்கிறது! அப்படியென்றால் விஷ்ணு பஞ்சாட்சரம் என்று இருக்கிறதா? நேற்றுப் பிறந்த தெலுங்கு - சமஸ்கிருத கிருதிகளையும் சங்கதிகளையும் தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிற பித்தர்களுக்கு ஈராயிரம் ஆண்டு மரபுடைய தமிழிசை மீது எப்படி மரியாதை இருக்க முடியும்? இதை விட இன்னொரு அவல உண்மை

என்ன தெரியுமா? சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலும், தமிழகத்து வானொலி நிலையங்களிலும் இசைப் பிரிவுகளில் பணியாற்றும் பலரும் பெரும்பாலும் தமிழர் அல்லாதாரே. இந்த 'எந்தரோ மகானுபாவர்களிடம்' தமிழ்ப்பாடல்கள் இந்தப் பாடுபடுவதில் ஆச்சர்யமேது? இவர்களுக்குச் சங்கீதம் என்றால் திருவாரூர் மூவரின் இயந்திர கதியிலான கிருதிகள் தான்! தமிழ்ப் பாடல்கள் எல்லாம் மனத்தகத்தே அவர்களுக்குத் துக்கடாக்கள் தான்! இத்தகைய 'துக்கடா மனங்களிடம்' தேவாரத்துக்கோ அல்லது பாசுரங்களுக்கோ என்ன மரியாதையை எதிர்பார்க்க முடியும்? இதைவிட அவலம் என்னவெனில் படித்த தமிழர்கள் எவருமே இத்தகைய அக்கிரமங்களைப் பற்றி - கலாசார அவமானங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை - என்பதுதான்!''

தொலைக்காட்சியில் அறிவிப்பாளர் சிவபஞ்சாட்சரம் என்று கூறியதை வைத்துக் கொண்டு, 'தமிழ் ஓசை' என்ன பாய்ச்சல் பாய்ந்திருக்கிறது? சொற்கணைகளால் தாக்கியுள்ளது. இதுதானே இயக்கம்!

14.4.2006 இதழில் ''தமிழிசைச் சங்கத்தின் ஆக்கப் பணி'' என்ற கட்டுரையில் தமிழிசை இயக்க முன்னோடிக்கு ஒரு பாராட்டு! 26.9.2006 இதழில் ''பண்பாட்டு முத்திரை பதிந்த பழந்தமிழ்ப் பெயர்கள்'' என்ற கட்டுரை. திருமறைக்காடு, புள்ளிருக்கு வேளூர், அண்ணாமலையான் திருக்கோயில் போன்ற பழந்தமிழ்ப் பெயர்கள் வடமொழிப் பெயர்களாக மாறி வழங்குவதைச் சுட்டி மீண்டும் பழந்தமிழ்ப் பெயர்களைச் சூட்டத் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

10.10.2006ல் வெளியான 'தமிழ்: ஓசை' இதழில் இடம் பெற்ற ''இருட்டடிப்பு மட்டுமல்ல - கலாசார திரிபுக்குறும்பும் கூட'' கட்டுரையில் காணப்படும் விவரங்கள் வருமாறு: ''பொதிகை - தமிழ்ப் பண்பாட்டுச் சின்னமாகும். ஆனால் 'பொதிகை' என்ற மகுடத்தைச் சூட்டிக் கொண்டுள்ள - சென்னை தூர்தர்ஷன் கேந்திரத்தின் தமிழ்ப்பிரிவோ, வரலாற்றுக்கு முரண்பட்ட தகவலை ஒளிபரப்பித் தமிழ்ப்பண்பாட்டு உண்மையையே இருட்டடிப்புச் செய்யும் அளவுக்குச் சென்றிருக்கிறது. அண்மையில் 'சர்வதே இசைநாள் விழா' கொண்டாடப்பட்டதையொட்டி, சென்னை தூர்தர்ஷன் ஒளிபரப்பிய சிறப்பு நிகழ்ச்சி - ஐரோப்பிய நாடுகளின் இசை வரலாறுகளையெல்லாம் சித்திரம் தீட்டிக் காட்டிப் பெருமைப்படுத்தியது. அடுத்து, தமிழகத்து இசையைப் பற்றிக் குறிப்பிட்ட போது, சாஸ்திரீய இசை என்ற அடிப்படையில் 'திருவாரூர் மூவராகிய தியாகராசர், முத்துசாமி தீட்சதர், சியாமா சாஸ்திரி ஆகிய மூவர் இயற்றிய கர்நாடக சங்கீத கீர்த்தனைகளே இந்தியாவின் பாரம்பரிய இசைக்கலை' என்று தொனிக்கும் தோரணையில் ஒளிபரப்பு செய்தது. தமிழ் மண்ணில், 'பொதிகை' என்ற பட்டத்தைக் கட்டிக் கொண்டு, கலாசாரத் திரிபு வேலையை இவ்வளவு துணிச்சலுடன் செய்திருப்பதற்கு, குயுக்தி - வன்ம மூளையே காரணமாக இருக்கமுடியும்.

''பண்ணிசைக்கான குறிப்புகள் தொல்காப்பியத்திலும், சிலப்பதிகாரத்திலும் பரவலாகக் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, தேவார மூவர் காலத்தில் இப்பண்ணிசை இயக்கம் வெள்ளமாகப் பாய்ந்தோடியது. இதே தமிழிசை, சீர்காழி மூவர் காலத்தில்

கீர்த்தனை என்ற புதிய வடிவத்துடன் பரிணாமம் எய்தியது. ஆக, தமிழிசையே மூல ஊற்று. பேராசிரியர் சாம்பமூர்த்தி அய்யரின் ஆராய்ச்சி முடிவின் படி, 'உலக மொழிகளுக் கிடையே இசை வடிவங்களுடனேயே முதன் முதலாகத் தோன்றியவை - தேவாரப் பாடல்களே! வடித்த தமிழில், வைரக் கட்டுமானத்தை ஒத்த யாப்புடன், பாடலுக்கு இயைந்த பண்ணிசையுடன் ரீங்கரிக்கும் இத்தேவாரப் பாடல்கள் - தமிழ்க் கலாசாரத்தின் ஜீவ இரத்தினங்களாகும். உண்மை இப்படியிருக்க, 'உலக இசை தினத்தின்' கொண்டாட்டத்தின்போது பொதிகைத் தொலைக்காட்சி நேற்று பிறந்து கர்நாடக சங்கீதத்தை, இந்தியாவின் சாஸ்திரீய சங்கீதம் போன்ற மாய்மாலத் தோற்றத்தை ஏற்படுத்தியிருப்பது வேண்டுமென்றே செய்துள்ள விஷமத் தனம் மட்டுமல்ல. தமிழ் உலகின் - குறிப்பாகத் தமிழ் இசை மேதைகளின் வன்மையான கண்டனத்துக்கு உரியதும் கூட.''

15.1.2007 ஏட்டில் ''பண்ணிசைப் பொங்கல்'' என்ற தலையங்கக்கட்டுரை வெளிவந்தள்ளது. அதில் ஒரு பகுதி இக்கட்டுரையின் தொடக்கத்தில் உள்ளது (பண்ணிசை மன்றம் தோன்றிய சூழல்). சென்னையைப் பொருத்த அளவில் வேற்றுமொழி சங்கீதத்திற்காக 120 சபாக்கள் இருந்து வந்த போதிலும் தமிழிசைக்கென இருந்துவரும் இசை அமைப்புகள் இரண்டே. ஒன்று தமிழிசைச் சங்கம்; மற்றொன்று பொங்கு தமிழ்ப் பண்ணிசை மணி மன்றம். இம்மன்றத்தின் ஆண்டுவிழா இசைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அரங்கங்களை வாடகைக்குத் தேட வேண்டியிருக்கிறது. இந்நிலையில் சென்னையில் பண்ணிசைக்கு ஊக்கமளிக்க இரண்டாயிரம் பேர் அமரக் கூடிய மிகப்பெரிய இசை வளாகத்தை அமைக்கத் தமிழக அரசு முன்வரவேண்டுமென அண்மையில் பண்ணிசை விழாவில் நிறைவுரை ஆற்றிய இராமதாசு விடுத்த வேண்டுகோளுக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சென்னையில் மட்டுமின்றி மாவட்டத் தலைநகரங்களிலும், சொந்தக் கட்டடத்தில் இசைப்பள்ளிகள் தொடங்க வேண்டும் என்றும் இராமதாசு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

முதற்படியாக வேலூரில் ஆறுகோடி ரூபாய் முதலீட்டில் கலையரங்கம் அமைக்கப்படும் என்றும், அதில் ஆண்டுதோறும் இசை விழாக்கள் நடத்தப்படும் என்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் வேலூர் நிகழ்ச்சி ஒன்றில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

''இது ஒருபுறம் இருக்க, தமிழிசை சம்பந்தமாக இன்னொரு முக்கியமான யோசனையை இராமதாசு ஓயாமல் கூறி வருகிறார். பள்ளிகளில் 4 வயது முதலே தமிழிசையை குழந்தைகளுக்கு தாய் பாலூட்டுவது போல கற்றுத்தர ஏற்பாடு செய்வதுஅவசியம். மாவட்டம் தோறும் இசைப்பள்ளிகளை ஆரம்பித்து நடத்தினால், தமிழிசையைப் பருகக் கூடிய இளம் நெஞ்சங்களை இலட்சக் கணக்கில் உருவாக்க முடியும். அதே சமயத்தில் மாவட்டங்கள் தோறும் சொந்தக் கட்டடங்களில் பள்ளிகள் இயங்குமானால் தமிழிசைப்பட்டி தொட்டிகளிலெல்லாம் வெகு வேகத்தில் பரவ ஏதுவாகும்.

பள்ளிப்பருவத்திலிருந்தே தமிழிசை - தேவார இசை பயிலப்பட வேண்டும் என்ற இராமதாஸ் அவர்களின் ஆவல் புலப்படுகிறது.

30.1.2007 நாளிட்ட ஏட்டில் ''பண்ணிசை வாணர்களுக்கு விருதுகள் ஏன் இல்லை'' என்ற கட்டுரையில்

‘‘இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையில் பத்ம விருதுகளை வழங்குவதில் சிறந்த நடைமுறை பின்பற்றப் பட்டதாகக் கூறுவதற்கில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தைப் பொருத்த அளவில் பத்மவிருது கருநாடக இசைக் கலைஞர்கள் மூவருக்கு ஒரே சமயத்தில் வழங்கப் பட்டது. ஆனால் இந்த ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த 11 பேர்களுக்குப் பத்ம விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் தொன்மை இசையாகிய நாதசுரக் கலைக்குப் பக்க வாத்தியமான தவில் வாசிப்பதில் புகழ்பெற்றுள்ள வலையப்பட்டி சுப்பிரமணியனுக்கு பத்மஸ்ரீ வழங்கப்பட்டதன் மூலம் முதன்முதலாக இந்த இசைக்கலையை மத்திய அரசு அங்கீகரித்திருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் தமிழுக்கே உரியது பண்ணிசைக்கலை. தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், போன்றவற்றை மரபு கெடாமல் ஓதுவதன் மூலம் அக்கலையின் புனிதத்தை இதுநாள் வரை பாதுகாத்து வரும் ஓதுவாமூர்த்தி அல்லது பண்ணிசைவாணர் ஒருவருக்கும் இந்த விருது வழங்கப்படவில்லை என்பது வேதனைக்குரியதாகும்’’ என்று சாடப்படுகிறது.

17.02.2007 ஏட்டில் ‘‘தமிழ்ப் பணிக்குச் சிறப்பு’’ என்ற தலையங்கத்தில், ‘‘தமிழ்ச் சான்றோர்கள் 14 பேர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி, அவர்களுடைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ.6. இலட்சம் பரிசுத் தொகையாக அளிப்பதெனத் தமிழக அரசு செய்துள்ள அறிவிப்பு விழிப்புள்ள தமிழர்களால் பெரிதும் வரவேற்கப்படும். ஆயினும் தமிழ் இலக்கியத்துக்கும், தமிழிசைக்கும், சைவ நெறிக்கும் அற்புதத் தொண்டாற்றிய தமிழ்பேரறிஞர் மு. அருணாசலம் பிள்ளையின் பெயர் இப்பட்டியலில் இடம் பெறாதது - வியப்புக்குரியதே! அவருடைய தமிழ்த் தொண்டு நிகரற்றது. மற்றவர்களால் ஆற்ற முடியாததுங் கூட.இந்தக் குறை பாட்டை அரசு நிவர்த்திக்க வேண்டும். இதைப் போலவே இப்பட்டியலில் சேர்ப்பதற்கான எல்லாத் தகுதிகளையும் பெற்ற அறிஞர் அ.ச. ஞானசம்பந்தம் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை’’ என்று கூறப்பட்டு உள்ளது.

23.02.2007 ஏட்டின் தலையங்கத்திலிருந்து (‘‘தமிழினம் ஏற்க வேண்டிய சூளுரை’’) ஒரு பகுதி வருமாறு: ‘‘தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், அருட்பா முதலிய அருட் பாடல்கள் இருபதாயிரத்திற்கும் மேல் இருந்த போதிலும் தமிழ்நாட்டு இசையரங்குகளில் இன்னும் - சாஸ்திரீய சங்கீதம் என்று பகட்டான பட்டத்துடன் தெலுங்குக் கீர்த்தனைகளும், வடமொழிப்பாடல்களும், ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றன. தமிழகத்து இதழ்களிலும், திரையரங்குகளிலும் ஆங்கிலத் தமிழே அட்டகாசம் செய்து வருகிறது. இந்நிலையில் உலகத் தாய்மொழி நாளையொட்டித் தமிழ் மக்கள் அனைவரும் தத்தம் மனத்தளவில் ஏற்கவேண்டிய சூளுரை ஒன்றுண்டு; ‘தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும், குறிப்பாகப் பண்பாட்டுத் துறைகளில் தமிழுக்கு உரிமையான இடத்தை அளிக்கத் தவற மாட்டோம். எந்த மொழியும் - அது ஆங்கிலமாக இருப்பினும் சரி, அல்லது வடமொழியாக இருப்பினும் சரி, தமிழுக்கு இணையாக வந்து அமர்வதை எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க மாட்டோம்’ - என்பதே அந்தச் சூளுரை!’’

இதுதான் தமிழகத்தை ஆட்டிப் படைக்கும் அடிப்படைச் சிக்கல்!

அந்தச் சிக்கலின் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டார். ''தமிழ் ஓசை'' தலையங்கக் கட்டுரையாளர் முதுபெரும் எழுத்தாளர் திரு. ஜெ.வி. கண்ணன். தமிழர்கள் சரியாக இருந்தால் யாரும்தமிழ்நாட்டில் - தெலுங்கோ, வடமொழியோ, ஆங்கிலமோ, இந்தியோ வந்து உட்கார்ந்து விட முடியாது. அது எப்படி இசை விழாக்களில் 120 இடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகளில் பாடியவர்களே பாடிய கீர்த்தனைகளைப் பாடும் பொழுது - அதற்கு ரூ. 100, ரூ. 200, ரூ. 500 என்று கட்டணம் வைத்தும் - கூட்டம் அலைமோதுகிறது. தமிழ் இசைச்சங்கம் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தலைசிறந்த பாடகர்களைக் கொண்டு நல்ல தமிழிசைப்பாடல்களை அரங்கேற்றி வருகிறது. ஒரு சில பாடகர்களைத் தவிர பிற பாடகர்களின் கச்சேரிக்கு நடத்த ஏன் கூட்டம்அலை மோதவில்லை.

குறிப்பாக திரு. டி.என். சேஷகோபாலன் அவர்கள் ஜனவரி 1ம் தேதியன்று திருவாசகம், அருட்பா, கம்பராமாயணம் எனத் தனி இலக்கியத்தை கொண்டு முழு நேரக் கச்சேரியாக நடத்த - இதற்குக் கட்டணம் கூட இல்லை - ஏன் அரங்கம் நிரம்ப வில்லை? அருட்செல்வர் அவர்கள் ராணி சீதை ஹாலில் தேவார இசைக்கலைவிழா ஆண்டுதோறும் நடத்தினாலும் ஏன் டிசம்பர் மாதத்தை ஒட்டி முன்னும், பின்னும் மியூசிக் அகாடமியிலும், நாரதகான சபாவிலும் நடத்துகிறார்? Defying the Lion in its own den! அந்த விழைவு, அந்த வேகம் அவருக்கு இருக்கும் பொழுது ஏன் மினி அரங்கத்தில் நடத்த வேண்டிய சூழ்நிலை வருகிறது. ''சாஸ்திரீய சங்கீதம்'' (!) பாடுபவர்களையும் தான் மேடை ஏற்றுகிறார். கட்டணம் கூட இல்லை. மினி அரங்கம் நிரம்புவது கூட சிலசமயம் திணறுகிறதே! சரி. அடித்தட்டு மக்களிடமும் தமிழிசை பரவவேண்டும் என்று தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சித் தலைவரே முன்னின்று நடத்துகின்றார். உலகெங்கும் நடத்துகின்றார். ஊர் முழுக்க பெரிய அளவில் சுவரொட்டிகள், கட்டணம் ஏதுமில்லை; நண்பகல் உணவு, தேனீர் வேறு. அரங்கம் நிறைகிறது. அதில் ஏதும் குறையில்லை. ஆனால் எத்தனை தமிழர்கள் இசையுணர்வோடு கலந்து கொள்கிறார்கள்?இந்தச் சூழ்நிலையில் ஜெ.வி. கண்ணன் முன் வைக்கும் சூளுரை அனைத்துத் தரப்பினராலும் முழு முச்சுடன் செயல்படுத்தப்பட வேண்டும். தமிழ், தமிழ் என்று வாய் வார்த்தையோடு இருப்பதில் பயனில்லை.

வித்தகம் பேச வேண்டா!
விரைந்து செயல்பட வேண்டும்.
பொதிகைத் தொலைக்காட்சிக்கு ஒரு குட்டு!
தமிழிசைச் சங்கத்துக்கு ஒரு பாராட்டு!
பொதிகைக்கு மீண்டும் ஒரு குட்டு!
தமிழக அரசுக்குப் பாராட்டு கலந்த
அறிவுறுத்தல்!

மைய அரசு... பாராட்டு... அறிவுறுத்தல்!
மீண்டும் தமிழக அரசு... பாராட்டு...
அறிவுறுத்தல்!

நிறைவாகத் தமிழ் இனத்தையே தட்டி
எழுப்பல்!

அரவணைத்தாகிலும், அங்கலாய்த்தாகிலும்,
அதட்டியாகியாலும், அறிவுறுத்தியாகிலும்
அறைகூவியாகிலும்

தமிழிசைப்பணி [தேவார இசைப்பணி]
செய்து வரும் தமிழ் ஓசை வாழியவே!

பண்ணிசைப் பெருவிழாக்கள் மூலம் உலகத்தமிழ் மக்களுக்கு நேரிடையாகக் கொண்டு செல்லுதல் ... ... செய்தித்தாள் (ஊடகம்) மூலமாகப் பரப்புதல்... ... மூன்றாவது வெகுஜன ஊடகமாகிய தொலைக்காட்சி...

திரு.ராமதாஸ் அவர்கள் அதையும் விட்டு வைக்கவில்லை. 6.9.2006ல் திரு. ராமதாஸ் அவர்கள் ''மக்கள் தொலைக் காட்சி''யைத் தொடங்கி வைத்தார். திரைப்படக் கலப்பு சிறிதளவு கூட இல்லாமல் நல்ல தமிழையே வளர்க்கும் இலட்சியத்துடன் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. காலையும், மாலையும் அரைமணி நேரத்துக்குத் ''தமிழ்த் தேனருவி'' எனும் தலைப்பில் தேவாரம் உள்ளிட்ட தமிழ் இசைப் பாடல்களை இசைக்கலைஞர் களும், ஓதுவா மூர்த்திகளும் பாடுகிறார்கள்.

உலகெங்கும் பண்ணிசைப் பெருவிழாக்கள், தமிழ் ஓசை நாளேடு, மக்கள் தொலைக்காட்சி என முத்துறை களிலும் தமிழிசையை - தேவாரப் பண்ணிசையை - திரு. இராமதாஸ் அவர்கள் நாளும் வளர்க்கிறார்கள். இந்த மூன்று நிலைகளிலும் தமிழிசைமணம் கமழ வடிவம் கொடுப்பவர் பெரியவர் திரு. ஜெ.வி. கண்ணன் அவர்கள் ஆவார்.

செட்டி நாட்டரசர் திரு அண்ணாமலை செட்டியார் அவர்கள்... ...

அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள்... ...

பொங்கு தமிழ்ப்பண்ணிசை மன்ற நிறுவனர் திரு. எஸ்.இராமதாஸ் அவர்கள்... ...

வாழையடி வாழையெனத் தமிழிசை இயக்கம் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

27. அரனருள்
(2003)

2007 மார்ச் 5 முதல் மார்ச் 16 வரை... ...

பனிரண்டு நாட்கள் காலை 8.30 முதல் இரவு 8.00 வரை.. ...

காலை 9.00 மணி... திருத்தல விளக்கம் : திருமுறை இசை. திருசாமி. தண்டபாணி

10.00 - 1.00 மணி... திருமுறை சொற்பொழிவுகள்... தினமும் மூன்று அறிஞர்கள்.

2.30 மணி.. தோத்திர சாத்திர வகுப்பு ... 12 நாளும் திரு. மு. சிவச்சந்திரன்

3.00 - 4.30 மணி... பண்ணிசை வகுப்பு 12 நாளும் திரு சாமி தண்டபாணி

4.30 மணி... திருமுறை இசையரங்கம்

5.00 மணி... பெரியபுராணத் தொடர் ... 12 நாளும் திரு இரா. செல்வக் கணபதி.

6.30 மணி... திருமுறை இசையரங்கம்... தினமும் ஒரு ஓதுவார்.

பனிரண்டு நாட்களும் கூட்டம் அலைமோதியது. பிற்பகலில் நடைபெற்ற சாத்திர வகுப்பிற்குக் கூட 300 பேருக்கு மேல் வந்திருந்தனர்.இது ஒரு பெரும் புரட்சியாகும். 2003 முதல் ''அரனருள்'' அமைப்பினர் இவ்வாறு 12 நாள் திருமுறை விழா நடத்துகின்றனர். இதற்கு முக்கிய காரணமாக இருப்பவர் இலண்டனில் இருக்கும் ஓதுவாமூர்த்தி திரு சாமி. தண்டபாணியே ஆவா ர். அமைப்பின் தலைவர் திரு. எஸ். சண்முகசுந்தரம்.

இது தவிர ஞாயிறுதோறும் மாணவ மாணவியர்க்குத் தேவாரப் பண்ணிசை வகுப்பு, முதல் ஞாயிறு தோறும் திருமுறை இசை, திருமுறை விளக்கவுரை என பன்னிரு திருமுறை முற்றோதல் விழா நடத்துகின்றனர்.

28. பிற மன்றங்கள் :

சண்முக ஞானபுரம் தமிழ்வேத பாராயண சபை

(1910)

வாரந்தோறும் தொடர்ந்து விரிவுரை, மாதந்தோறும் முதல் ஞாயிறன்றுகூட்டு வழிபாடு, திருமுறை இசை வகுப்பு, திருத்தலப்பயணம், ஆண்டுதோறும் 7நாட்கள் திருமுறை விழா என பணியாற்றுகிறது.

செயலர் திரு. கே. விநாயகம்.

திருநாகேச்சரம் சிவனடியார் திருக்கூட்டசபை, குன்றத்தூர் (1904)


செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் அடி போற்

திருக்கூட்ட கட்டிடம்

கட்டிடத்தில் அன்பர்கள்






திருச்சிற்றம்பலம்-1909 ஆம் வருடம் மார்ச் மாதம்





திருக்கூட்ட அன்பர்கள்

வைகாசி பூசத்தன்று சேக்கிழார் பெருமானுக்கு திருமுழுக்கு, திருவீதிப் பெருவிழா, பத்து நாட்கள் சொற்பொழிவுகள் என நடத்தப்படுகின்றது. மண்டபத்தில் அறுபத்து மூவர் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.



தலைவர் திரு. ப.கு. திருநாவுக்கரசு, செயலர் - தி.ச. கனகசபை.

தமிழ்வேத பாராயண சபை அனகாபுத்தூர் (1917)

பழமையான அமைப்பு. முருகன் திருக்கோயில் திருப்பணி மேற்கொண்டு உள்ளார்கள்.

தொண்டமான் சக்கரவர்த்தி சோமவார வழிபாட்டுக்குழு (1968) வடதிருமுல்லை வாயில்

இந்த அமைப்பில் 1968 முதல் திங்கட்கிழமை தோறும் அன்பர்கள் திருமுறைகள் ஓதி கூட்டு வழிபாடு செய்து வருகின்றனர். ஆண்டு விழாவின்போது அருள்மிகு மாசிலாமணிப் பெருமானுக்கு 108 சங்காபிடேகம் செய்கின்றனர். அமைப்பாளர் திரு. நு. மகாலிங்கம்.

ஆனித்திருமஞ்சன ஆருத்ரா உற்சவ சபை, குயப்பேட்டை, (1972) : 1972 முதல் ஆண்டு தோறும் இச்சபை ஆனித் திருமஞ்சனத்தின் போது நடராஜப் பெருமானுக்கு அபிடேகமும், வீதி உலாவும், மார்கழி திருவாதிரை நட்சத்திரத்தில் மகா அபிடேகமும் நடத்தி வருகிறது.

திருக்காரணீசுவரர் திருக்கோயில் தேவார சபை, சைதை (1973)

13.4.1973ல் தொடங்கப்பட்ட இச்சபை சைதாப்பேட்டை, பல்லாவரம், பழைய மாம்பலம், கோடம்பாக்கம், அனகாப் புத்தூர்என ஆறு இடங்களில் இலவச தேவார இசைப் பள்ளி நடத்தியது. பிரதி மாதம் 4வது ஞாயிறு தோறும் திருமுறை விளக்கம் கூறிவருகின்றனர். தலைவர் - பி.ஏ. சண்முகஞ்செட்டியார்.

ஸ்ரீ கமலவிநாயகர் சத் சங்கம், ஐ.சி.எப் காலனி (1960)

இச்சங்கம் 1960இல் தொடங்கப்பட்டது. 1.4.1974 அன்று சங்கத்திற்கென தனி மண்டபம் கட்டப்பட்டது. வாரியார் சுவாமிகள், புலவர் கீரன், இரா. செல்வக்கணபதி, ஔவை து. நடராஜன்,

ஓம்நமசிவாய
சிவாயநம
அருள்மிகு கமல விநாயகர் சத் சங்கம்
சிவ சிவ அருள்மிகு வேங்கடேஸ்வரர் மகா மண்டபம் சிவ சிவ
SRI KAMALA VINAYAGAR SATH SANGAM
SRI VENKATESWARAR MAHA MANDAPAM
ஓம் நமோ நாராயணாய நம

கட்டிடத்தில் அன்பர்கள்

மு. சிவச்சந்திரன் போன்றோர் உரையாற்றி வருகின்றனர். நான்கு ஆண்டுகள் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் அருண ஜடேசன் பெரிய புராணச் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார்.

தற்பொழுது திருவிளையாடற் புராண விரிவுரை நிகழ்த்தி வருகின்றார், 1972லும், 1992லும் இச்சங்கம் கமல விநாயகர் திருக்கோயில் கும்பாபிடேகம் நிகழ்த்தியிருக்கின்றது.

தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றம்

(1984)

ஆடலரசு



ஒளியரசு

ஏற்கனவே இருந்த மன்றம். தவத்திரு அழகரடிகளின் தூண்தலினால் 12.8.1984 அன்று முறைப்படுத்தப்பட்டது. தலைவராக திரு. ந. ரா. ஆடலரசு செயலராக திரு.வ.ஏ.சண்முகம் பொறுப்பேற்றனர். அன்று முதல் சுந்தரர் விழா, சந்தான குரவர் விழா நடத்தி வருகின்றனர். பனிரண்டு ஆண்டுகள் மன்ற உறுப்பினர்களை திரு. ந.ரா. ஆடலரசு பாடல்பெற்ற தலங்களுக்கு அழைத்துச் சென்றார். தற்போதைய செயலர் திரு. ஒளியரசு.

28.11.1920 ல் பிறந்த திரு.ஆடலரசு அஞ்சல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அறுபத்தைந்து ஆண்டுகளாக தமிழ்முறைப்படி திருமணம், மணி விழா, முத்துவிழா நடத்தி வைக்கின்றார்கள். மறைமலையடிகளாரின் முதல் மனைவி திருவடிப் பேறு நடத்தி வைத்தவரே ஆடலரசு அவர்கள்தான். பல அன்பர்களுக்கு தீக்கை வழங்கியுள்ளார்.1938-இல் மறைமலையடிகளைக் கொண்டு சைதை, திருவள்ளுவர் செந்தமிழ்க் கழகம் தொடங்கி 12 ஆண்டுகள் நடத்தினார்கள்.

மாதந்தோறும் சொற்பொழிவு, வார வழிபாடு என்று அழகரடிகளைக் கொண்டு நடத்தினார். 1977 முதல் திருக்கழு குன்றத்தில் இன்று வரை திருநாவுக்கரசர் விழா நடத்தி வருகிறார். இவரது பணிகளைத் தற்பொழுது இவரது மகனார் திரு. ஒளியரசு செய்து வருகின்றார்.

(28.11.1920; மறைவு - 2008. நந்திவரம், கூடுவாஞ்சேரி அருகே மணியம் இராமசாமி முதலியார், சிவகாமி)

தனிமன்றம்

ஆன்மீக இறைபணி குழு

(1988)

இக்குழு 1988 முதல் இன்று வரை மாதாந்திர வழிபாடுகள், அன்னதான வழிபாடு, 2003 முதல் திருவண்ணாமலையில் அன்னதான வழிபாடு வியாசர் பாடியில் 1989 முதல் அன்னதான வழிபாடு, வியாசர்பாடி, ஈக்காடு, செம்புலிவரம், மேலக்கொண்டையூர், சின்ன காவனம், அயனாவரம், சூளை முருகன் கோயில் பாலவாயில் சிவன் கோயில்களுக்குப் பிரதோஷ நாயகர் சிலை வழங்குதல், 1995ல் மாம்பாக்கம் சிவன்கோயில் கும்பாபிடேகம், தலயாத்திரை.



நிறுவுனர்

பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம் அம்பத்தூர், (1997)

மன்றப் பணிகள், சொற்பொழிவுகள், மாணவர்களுக்குப் போட்டிகள் பரிசளிப்பு, நூல்கள் வெளியிடுதல் அமைப்பாளர் - திரு. பூ.கு. சங்கரன்.

இறைபணிமன்றம், அண்ணாநகர் (1997)

இம்மன்றத்தில் வியாழன் தோறும் சமய சொற்பொழிவுகள் (திருமந்திரம், அபிராமி அந்தாதி, சித்தர் பாடல்) நடைபெறுகின்றன.

அமைப்பாளர் - பேராசிரியர் திரு. சி. அகோரம்.

பன்னிரு திருமுறை மன்றம் குளத்தூர் (2006)

மன்றத்தின் பணிகள் : ஒவ்வொரு சிவராத்திரியின் போதும் நிகழும் ஆறுகாலப் பூசைகளில் ஐந்து காலப் பூசைகள் செய்து வருதல்; பிரதோஷ வழிபாட்டிற்காக இடபவாகனம் வழங்குதல்; திருக்கோயில் வரலாறு, மாதவச்சிவஞான முனிவர் அருளிய குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி, அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், குளத்தூர் சோமேசர் முதுமொழி வெண்பா கொண்ட தொகுப்பு நூல் வெளியிடுதல்; சொற்பொழிவுகள் பெரியபுராணத் தொடர் உரை நடத்துதல்

தலைவர் - திரு. இராம சஞ்சீவி; செயலாளர் - ந. ருத்திர கோட்டி.

குருவருள் மையம், பெரம்பூர் (1992)

இம்மன்றம் மாத வழிபாடு, இரு திருமுறை மாநாடுகள், இரண்டு ஆண்டுகள் மாதம் ஒருநாள் சைவ சித்தாந்த வகுப்புகள் எனப் பணியாற்றித் தன் பணியைத் தொடர்கிறது. இம்மன்ற அமைப்பாளர் திருப்பனந்தாளில் பிறந்த திருபனசை மூர்த்தி ஆவார். உழவாரம் அமைப்பின் சார்பில் திருநின்றவூரில் பூசலார் நாயனாருக்கு ஆண்டுதோறும் குருபூசைப் பெருவிழா நடத்தி வருகிறார். நல்ல பேச்சாளர் நல்ல தொண்டர்.

இந்து ஆலயங்கள் சுத்தம் செய்யும் இறைபணி மன்றம் (2000)

மாதம் ஒரு கோயில் எனத் திட்டமிட்டு இதுவரை (2007) சென்னை சுற்றுப்புறக்கோயில்கள் எழுபதில் உழவாரப்பணி செய்திருக்கின்றனர். தலைவர் - சீனிவாசன்; செயலர் - சரவணன்.

உழவாரம், சமயச் சொற்பொழிவு எனப்பணியாற்றுகிறது. புரவலர் என். சுந்தர மூர்த்தி. இதன் உறுப்பினரான கா. கபீர்தாசன் என்கிற காவிரி நாடன் நல்ல சொற்பொழிவாளர். ''சைவ இலக்கிய வளர்ச்சியில் சுந்தரர் செந்தமிழ்'' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

திருநாவுக்கரசர் உழவாரப் பணிமன்றம் (1987)

இருபது ஆண்டுகளுக்கு முன்பு (2007) திருவலிதாயம் திருத்தலம் (பாடி) மிகவும் தாழ்ந்த நிலையில் கல்லும் முள்ளும் புதருமாக மண்டிக் கிடந்தது. இதனைக் கண்ணுற்ற எண்பது வயது தாண்டிய திரு. கி. சீனிவாச நாயக்கர் ஏழெட்டு பேரைக் கொண்டு கோயிலைத் தூய்மை செய்தார். இதுவே பின்னாளில் திருநாவுக்கரசர் உழவாரப் பணிமன்றமாக உருப்பெற்றது. இப்பகுதியில் வாழும் 12 வயதிற்குட்பட்ட இருபால் குழந்தைகளுக்கும் வாரம் மூன்று நாட்கள் திரு. சுப்ரமணிய ஐயர் அவர்களால் திருமுறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்குழந்தைகளுக்கு அவர்கள் பொருளாதார நிலையை அறிந்து தேவைப்பட்டவர்களுக்குக் கல்வி கட்டணம் செலுத்துதல், பாட நூல் வாங்குதல் ஆகியவற்றிற்கு மன்றம் நிதி உதவி அளிக்கிறது. 15 ஆண்டுகளாக ஆண்டுதோறும் தமிழ் ஆண்டுப்பிறப்பன்று ஐந்து நாள் திருமுறை விழா மன்றத்தின் சார்பில் நடத்தப்படுகிறது. சைவ உலகில் பேச்சாளர்களின் புகைப்படங்களோடு அழைப்பிதழ் அனுப்புவது இம்மன்றத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. தலைவர் - திரு. சீனி. சத்தியநாதன்; செயலர். திரு. ம. சுப்பிரமணியன், கௌரவத் தலைவர். முனைவர் திரு- தெ. ஞானசுந்தரம்.

* * *

இரண்டாம் பகுதி

சைவ ஆன்றோர்கள்

ந.மு. வேங்கடசாமி நாட்டார் (1884)

1912... ... ந.மு. வேங்கடசாமி நாட்டார் தம் வீட்டில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். காலை பத்து மணிக்கு ஒருவர் வந்து அவரை வணங்கினார். நாவலரும் அவரை வணங்கி வரவேற்று ஒரு நாற்காலியில் அமரச் செய்தார். வந்தவர் சட்டை அணியாமல் ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்தார். சிலப்பதிகாரத்தில் சில இடங்களில் பொருள் விளங்க வில்லை என்றும், அவற்றை விளக்கவேண்டும் என்றும் நாவலரிடம் அவர் கேட்டுக் கொண்டார். அவரும் அவற்றை விளக்கினார். இதே போல் அவர் தொல்காப்பியத்திலும் சில ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொண்டார். அவர் வணங்கிச் சென்றபின் நாவலர் தம் தம்பியை நோக்கி, ''இப்போது வந்து சென்றவர் யார் தெரியுமா? என்று கேட்டார். நாவலரின் தம்பி,

''சுப்பிரமணிய பாரதியார்'' என்று விடையிறுத்தார்

ந.மு.வே. அவர்களின் தந்தையார் வேதாந்த நூல்களை ஆழ்ந்து கற்றவர். ந.மு. வே. திருச்சியிலிருந்து கோடை விடுமுறையில் நடுக்காவேரிக்கு வரும்பொழுது தம் தந்தையாருடன் வேதாந்த சித்தாந்த வாக்குவாதங்கள் நடத்துவார். தந்தையார் என்ற முறையில் நாவலரின் தந்தையார் அதட்டிப் பேசுவார். மகன் என்ற முறையில் ந.மு.வே. அடக்கத்தோடும் பணிவோடும் பேசுவார். ஆனால் தம் கருத்துக்களை ந.மு.வே. அழுத்தம் திருத்தமாய் நிலைநாட்டி விடுவார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா... ...

இராமநாதபுரம் மன்னர் பர. இராமராசேசுவர சேதுபதி தலைமை... ...

அவர்களுடன் வந்திருந்த அவைப்புலவராகிய திரு. இரா.இராகவையங்கார் அவர்கள் விழா நடைமுறை விதிகளை மீறி மற்றொருவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது அவருக்கு ஒரு மறுப்புக் கூறினார். உடனே நாவலர் எழுந்து, ''தாங்கள் சமத்தானப் புலவராய் இருக்கலாம். ஆயினும் ஒருவர் பேசும்பொழுது இவ்வாறு குறுக்கே எழுந்து பேசுவது சால்பாகாது'' என்று கூறினார். அவையில் பரபரப்பு ஏற்பட்டது. இராகவையங்கார் மன்னிப்பு கேட்டுக் கொண்டு அமர்ந்தார்.

சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தமிழ்ச் சங்கத்தின் ஓர் ஆண்டுவிழா தமிழறிஞர் திருவாளர். மு. இராகவையங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நாவலர் ந.மு.வே. சொற்பொழிவாளராகச் சென்றிருந்தார். திரு.

இராகவனார் தம் முகவுரையில் திருமங்கையாழ்வாரின் பெருமைகளைப் பற்றிக் கூறத் தொடங்கியவர் சில தவறான சொற்களைக் கூறி விட்டார். உடனே நாவலர் எழுந்து திருமங்கையாழ்வாரைத் திருமங்கை மன்னன் என்பர். மன்னன் என்று கூறிய வாயால் இவ்வாறு பேசுவது சான்றாண்மையாகுமோ? என்று கேட்டார். தலைவர் திடுக்குற்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பூவாளூர்ச் சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழாவில் தலைமை ஏற்ற திரு.வி.க. பேசத் தொடங்கியதும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த சுய மரியாதைக் காரர்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்விகள் கேட்கலானார்கள் குழப்பம் ஏற்பட்டது. தலைவர் அமைதியை நிலைநாட்ட முயன்றும் ஏதும் பயனில்லை. உடனே நாவலர் எழுந்து, ''உங்களுக்கு உண்மையான ஐயங்கள் இருந்தால் அவற்றைத் தாளில் எழுதிக் கொடுங்கள். முடிவில் அவைகளுக்கு எல்லாம் யானே விடையளிக்கிறேன். இவ்வாறு செய்யாமல் அவையின் நடைமுறை வீதிகளை மீறிக் கேள்விகள் கேட்டு விழா நடைபெறாமல் தடுப்பது உங்கள் நோக்கமானால் அதற்கு யான் இடம் தரேன்'' என்று கூறி அமைதி ஏற்பட வழிவகுத்தார். எந்த நேரத்திலும் எந்த ஐயப்பாட்டிற்கும் விடையளிக்கும் அளவுக்கு நாவலரின் தமிழ்ப்புலமை மேலோங்கி இருந்தது.

1941இல் திருச்சியில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜ ஆண்டு விழாவில் ந.மு.வே.அவர்கள் ''திருவாசகம்'' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்ற இருந்தார். ஆனால் நாவலர் அவர்கள் சொற்பொழிவாற்ற எழுந்தபோது தலைவர் ஞானியாரடிகள் நாவலரை திருக்குறளைப் பற்றிப் பேசுமாறு ஆணையிட்டார். அவ்வாறே நாவலர் 'திருக்குறளும் விரிநூற் கேள்வி பரிமேலழகர் உரையும்' என்னும் பொருள்பற்றி மிகச்சிறப்பாகச் சொற்பொழிவாற்றி முடித்தார்.

1940இல் திருப்பதியில் அனைத்து இந்திய பத்தாவது கீழ்த்திசைக் கலை மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் நடக்க இருந்த சொற்போரில் திருவஞ்சைக்களம் தான் சேரர் தலைநகர் என நிலைநாட்ட ந.மு.வே. சென்றிருந்தார். திரு. இரா.இராகவையங்கார் கருவூர் தான் சேரர் தலைநகர் என நிலைநாட்டச் சென்றிருந்தார். சொற்போர் தொடங்கு முன் இராகவையங்கார் நாவலரை அணுகித் தம் சார்பாகப் பேசும்படியும் இல்லையெனின் ணையமாக விட்டு விடும்படியும் கேட்டுக் கொண்டார். நாவலரோ அவ்வேண்டுகோளை ஏற்க மறுத்துத் தம் வாதத் திறமையால் திருவஞ்சைக்களம் தான் சேரர் தலைநகரம் என்பதை நிலைநாட்டினார்.

ந.மு. வே. தமிழாசிரியராகவும் சொற்பொழிவாளராகவும், கட்டுரையாளராகவும், உரையாசிரியராகவுமிருந்து தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் மிகப்பலவாகும். இவர் எழுதிய நூல்கள்; திருவிளையாடற் புராணம் - உரை, சிலப்பதிகாரம் - உரை, மணிமேகலை உரை, அகநானூறு உரை, நீதிநூல்கள், கல்வெட்டுகளின் குறிப்புகள் சாசனங்கள்.

தஞ்சைக்கு 12 கி.மீ. தொலைவில் உள்ள நடுக்காவேரி என்னும் ஊரில் திரு. வி.முத்துச்சாமி தைலம்மையாருக்கு 12.4.1884 அன்று நாட்டார் பிறந்தார். திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கரந்தைத் தமிழ்க்கல்லூரி ஆகிய நிறுவனங்களில் பணியாற்றினார்.

நாவலர் ந.மு.வே. சொற்பொழிவாற்றும் திறன் மிக்கவர். ந.மு.வே. அவர்களின் சொற்பொழிவு என்றால் தமிழன்பர்கள் மிக்க மகிழ்ச்சியோடு கூடி விடுவர். தமிழ் இலக்கியங்களுக்கு அவர் பொருள் விரித்துக் கூறும் அழகை அனைவரும் மெய்ம்மறந்து சுவைப்பர். தான் படித்துச் சுவைத்தவற்றைப் பயனுள்ள முறையில் பிறருக்கும் தெளிவாக எடுத்துச் சொல்வதில் நாவலருக்கு இணை நாவலர் அவர்களே எனில் அது மிகையாகாது. தமிழுக்காகவே வாழ்ந்து வந்த நாவலர் அவர்கள் 28.3.1944 இல் உயிர் நீத்தார்.

2. வ.ஆ. தேவசேனாபதி (25.7.1914)

பெற்றோர் - வ.சு.ஆறுமுகம், ஆ.கிருபாம்பாள்.

இவர்தம் தந்தை வழிபாட்டனாரான பெருந்தகையாளர் வ.த. சுப்பிரமணியன் என்பவர் தான் முதன் முதலாக ஓலைச்சுவடியிலிருந்த அருணகிரி நாதரின் திருப்புகழைப் புத்தக வடிவத்தில் கொண்டு வந்தார். மேலும் அவர் தேவாரம் பாடிய மூவர் சென்று வழிபட்ட எல்லா சிவத்தலங்களையும் சென்று பார்த்து அவ்விவரங்களைப் புத்தகமாக ''சிவத்தல மஞ்சரி'' என்ற தலைப்பில் வெளியிட்டார்.

இத்தகைய குடும்பத்தில் பிறந்த வ.ஆ. தேவசேனாபதி அவர்கள் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தத்துவத் துறையில் முதுகலைப்பட்டம் பெற்றார். 1949இல் சைவசித்தாந்தத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இந்த ஆய்வேடு சென்னைப் பல்கலைக் கழகம் மூலம் நூலாக வெளி வந்தது.

1955வரை சென்னை பச்சையப்பன் கல்லூரி தத்துவப் பேராசிரியர்

அதன்பின்னர் சென்னை பல்கலைக் கழகத் தத்துவத்துறை இணைப் பேராசிரியர்... ...

1974... ... தத்துவத்துறையின் இயக்குனர்... ஓய்வுக்குப்பின் தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் காஞ்சிபுரம் கிளையில் தத்துவத் துறையின் இயக்குனர் 1978இல் அமெரிக்கா சென்று ஹார்வர்டு, கேஸ் கேட், ஃபிலடெல்ஃபியா, பாஸ்டன் போன்ற பல்கலைக்கழகங்களில் சிறப்புரைகள் பல ஆற்றினார்.

1983-இல் ஆஸ்திரியா (வியன்னா) போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று சிறப்புரை ஆற்றினார்.

1984-இல் ''சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகள்'' என்ற நூல் எழுதி தமிழக அரசின் விருது பெற்றார். ''கந்தர் அலங்காரம்'' என்ற நூலுக்கு ஆங்கில உரை எழுதி வெளியிட்டார். சென்னை பல்கலைக்கழக ஆய்விதழ், Saiva Siddhhanta ஆங்கில இதழ் ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

3. பா. நமசிவாயம் (1.8.1932)

(ஊர் - புளியறை, நெல்லை மாவட்டம்)



சிறந்த சொற்பொழிவாளர்; ஆழமாகவும், சுவையாகவும் பேசக்கூடியவர்; பலமுறை அயல்நாடுகள் சென்று தமிழ்முழக்கம் செய்து வருபவர். திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி, சேக்கிழார், அப்பர், சம்பந்தர், சுந்தரர் எனப் புலவர் அடியார் வேடம் புனைந்து மேடையில் நடத்தும் நாடகப் பாங்கான நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்து 650 முறை மேடைகளில் நடத்தியவர். 'கோல உரையாடல்' என இந்நிகழ்ச்சிக்குப் பெயர் சூட்டினார். பிரபல வாரப் பத்திரிகையான சாவி இதழ் இவர் நடுவராகப் பணியாற்றிய இரண்டு வழக்காடு மன்றங்களை நான்கு நான்கு வாரங்கள் தொடர்ந்து வெளியிட்டது. அண்மைக்காலத்தில் இவரைப் பேச அழைத்தால் இவராக விரும்பிப் பேசும் இலக்கியம் பெரிய புராணம் ஆகும். ''மல்லிகை மலர்'' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். 27.3.2007இல் மதுரையில் இசைஞானி இளையராஜா இலக்கியப் பெருமன்றச் சார்பாகப் பேராசிரியருக்கு ''தமிழறிஞர்'' விருதும், இரண்டு இலட்சரூபாய் பொற்கிழியும் வழங்கப்பட்டது. 28.7.2007 இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ச்செம்மல்' விருது வழங்கியது.

4. எ. வேலாயுதனார் (1939)

(ஊர் - காஞ்சியை அடுத்த பனப்பாக்கம் புதுப்பேட்டை; பெற்றோர் - கு.கி. எல்லப்ப முதலியார், முருகாத்தம்மாள்). *1966 - வித்துவான் பட்டயம்; 1995 - எம்.ஏ.(சைவசித்தாந்தம்) 1966 - 1997 - தமிழாசிரியர் பணி.*

1965 முதல் பனப்பாக்கம் புதுப்பேட்டையில் சேக்கிழார் மன்றம் அமைத்து பெரியபுராணப் பெருவிழாக்களை ஆண்டுதோறும் பத்துநாட்கள் நடத்தி குன்றக்குடி அடிகளார், தொண்டைமண்டல ஆதீனம், அழகரடிகள், திருமுருக கிருபானந்த வாரியார், ஆகியோரின் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்தார். விழக்களின் நிறைவில் திருத்தலப் பிரயாணங்களை ஏற்படுத்தித் தாமே விளக்கவுரைகளையும், ஓதுவா மூர்த்திகளின் திருமுறை இன்னிசையையும் அடியார்களுக்கு வழங்கினார். 1992ல் திருமாற்பேறு திருக்கோயிலில் அத்தலத்தின் திருப்பதிகங்கள் அனைத்தையும் கல்வெட்டில் பதிப்பித்தார். 1990 - 95 இல் ஆற்காடு வரசித்தி விநாயகர் சபையில் ஞாயிறுதோறும் திருத்தொண்டர் புராணம் விரிவுரைகளையும் தேவார முற்றோதல்களையும் நடத்தினார். மேலும் பனப்பாக்கம், விளாப்பாக்கம், காஞ்சிபுரம் திருக்கோயில்களில் பல்லாண்டுகளாகத் திருமுறை அருட்பெருமை விரிவுரைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

அரக்கோணம் வட்டம் அகவலம் மனத்துணை நாதர் திருக்கோயிலில் 1999 ஆம் ஆண்டு முதல் அடியார்களே பூசனை புரியும் திருப்பணியைத் தொடங்கி தொடர்ந்து நடைபெறச் செய்துள்ளார். 1991.இல் பனப்பாக்கத்தில் முதல் சேக்கிழார் மாநாட்டைச் சிறப்பாக நடத்தி, அதன்

தொடர்பாக ஆர்க்காடு, ஆரணி, விளாப்பாக்கம், அம்மையார் குப்பம், பழநி, ஆனைமலை முதலிய ஊர்களில் ஆண்டுதோறும் அம்மாநாடுகள் நடைபெற முக்கிய பங்கு வகித்தார். 1990 இல் குவைத் நாட்டில் 'திருமுறை மன்றம்' அமைத்து ஒரு மாதம் நாயன்மார் நால்வர் தமிழ்பற்றி உரையாற்றினார். 2004 முதல் ''சித்தாந்தம்'' இதழ் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இயற்றிய நூல்கள் சேக்கிழார் திருவெண்பாமாலை, திருவேகம்பர் திருவெண்பாமாலை, தென்கயிலாய சதகம் - ஆய்வுரை- சேக்கிழார் உணர்த்தும் சிந்தனைத்தேன், திருத்தல வழிபாடு, பதிப்பு - திருவாசகம்.

இவரது பணியைப் பாராட்டி 2007 இல் சைவ சித்தாந்தப் பெருமன்றம் இவருக்கு 'சித்தாந்த சரபம்' விருது வழங்கியது.

5. சுகி சிவம்



பெற்றோர் - டி.என். சுகி. சுப்பிரமணியன், கோமதி சுப்பிரமணியன்) பொருளாதாரப்பட்டம், சட்டக்கல்வி படித்தவர். சமயச் சொற்பொழிவு உலகில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் வாரிசாகப் போற்றப்படுபவர். அரபுநாடுகள், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா போன்ற வெளிநாடுகளுக்கும் கடல் கடந்து சென்று கன்னித்தமிழ்ப் பரப்புபவர். சன் தொலைக்காட்சியில் இவர் நிகழ்த்தும் இந்த நாள் இனிய நாள் நிகழ்ச்சியைக் கேட்டால் எந்த நாளும் நமக்கு இனிய நாளே. இவர் எழுதிய நூல்கள் : கும்பாபிஷேகம், கந்தர் அனுபூதி, அபிராமி அந்தாதி, ஞானமலர்கள், நல்ல வண்ணம் வழலாம். இவர் எழுதிய 'மனசே நீ ஒரு மந்திரச் சாவி', 'நல்ல குடும்பம் நமது இலட்சியம்', 'வெற்றி நிச்சயம்' ஆகிய நூல்கள் இலட்சக் கணக்கில் விற்பனை யாகி வருகின்றன. சென்னைச் சுழற்சங்கம் இவருக்கு "For the Sake of Honour" விருது வழங்கிச் சிறப்பித்தது.

6. அரங்க. இராமலிங்கம்

தமிழ்ப்பேராசிரியர்; சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். சிறந்த பேச்சாளர்; இவர் எழுதிய நூல்கள் ''சித்தர் நோக்கில் சைவநெறி''; "Leadership Qualities of Thiru. Gnanasambandhar - Editor"; "The ways of Siddhars - Editor" திருவாசக ஆய்வுமாலை - பதிப்பாசிரியர்''.

7.ஒளவை து.நடராஜன்

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; நல்ல சிந்தனையாளர்; புதுப்புதுக் கருத்துக்கள் இவர் பால் புனல் போல் ஊற்றெடுக்கும். தலை சிறந்த பேச்சாளர்; சென்னையில் எந்தக் கூட்டமாயினும் - இலக்கியம், சமயம், நூல் வெளியீடு தலைமை வகிக்க சிந்தனைக்கு வரும் முதல் பெயர் இவருடையது. உரைவேந்தர் ஒளவை. சு. துரைசாமி பிள்ளையின் திருமகனார்.

தந்தையறிவு மகனறிவு என்பது இவர் கண் புலப்படும்.

8. விசூர் மாணிக்கம்

சொற்பொழிவாளர்; விசூர் தமிழ் வேத பாராயண சபையின் செயலர்; ''அருளமுதம்'' மாத இதழின் சிறப்பாசிரியர்; இவர் எழுதிய நூல்கள்; 33 பதிகங்கள், 33 கவசங்கள் மற்றும் சிந்தனைமலர்கள், தானமும் தவமும்.

9. மயிலை சின்னண்ண நித்யானந்தம்

சென்னை மயிலாப்பூர் சின்னண்ண நித்யானந்தம் என்பார், தேர்ந்த சமய அறிவும், நல்லொழுக்கமும் பழுத்த பணிவும் உடைய பெருந்தகையாளர். இவர் 3.1.2007 அன்று காஞ்சிபுரத்தில், ஸ்ரீலஸ்ரீ தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதனாம் அவர்களின் பொற்கரத்தால், திரு தருமபுரம் சுவாமிநாதன் அவர்களுக்கும் மற்றும் 35 சித்தாந்த அறிஞர்களுக்கும் விருதுகள் வழங்கி மகிழ்ந்தவர். விருதுகள் பெற்றோருக்குத் தம் கைகளாலேயே மலர்கள் தூவி, அவர்களின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மகிழ்ந்தவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பொற் பதக்கம், திருநீற்றுப் பொக்கணம் உருத்திராக்கம், பேனா, கடிகாரம், நூல்கள், பை, பொன்முடிப்பு, சால்வை என வாரி வழங்கி மகிழ்ந்தவர். ''சித்தாந்த அமுதம்'' எனும் அரிய நூலை வெளியிட்டுள்ளார். சமயக் கருத்தரங்குகள், சாத்திரக் கருத்தரங்குகள் பல நடத்தி வருகிறார்.

10. பாபு ரெட்டியார்

(பிறந்த ஆண்டு - 2.5.1925; பிறந்த ஊர் - மண்ணூர், ஸ்ரீ பெரும்புதூர் அருகாமை; பெற்றோர் - நரசிம்ம ரெட்டியார், துளசி அம்மாள்)

சிறந்த தொண்டர்; நுங்கம்பாக்கம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்; 19.4.1946ல் ஓர் இரவுப் பள்ளியை ஆரம்பித்துப் பலரும் கல்வி பெற உதவி செய்தார். இரவு பாடசாலையில் பிள்ளைகளுக்குச் சமய பக்தி வளர திருமுறைக் காவலர் அ. சோமசுந்தரம் செட்டியார் ஆதரவில் ஓதுவார் சைதை நடராசன் அவர்களைக் கொண்டு தேவார வகுப்புகள் நடத்தினார். 1959-இல் இறைபணிக் கழகம் தொடங்கி வாரந்தோறும் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்து வருகிறார்.

11. சுதாசேஷையன்

(பிறந்த ஆண்டு - 25.8.1961; பிறந்த ஊர் - உடுமலைப்பேட்டை பெற்றோர் - டாக்டர் சேஷையன், டாக்டர் சாரதா)

மருத்துவர்; சிறந்த சொற்பொழிவாளர்; தமிழகத்தின் நட்சத்திரப் பேச்சாளர்; தனிக் கூட்டங்களிலும், தொலைக் காட்சியிலும் பெரிய புராணத் தொடருரை. திருவெம்பாவை தொடருரை நிகழ்த்துகிறார். ''தேவாரத் திருவுலா'' என்ற இவரது நூல் ஆயிரக்கணக்கில் விற்பனையாகி வருகிறது.

12. சிவராமமூர்த்தி. சி

(பிறப்பு - 1909; மறைவு - 6.2.1983; பிறந்த ஊர் - களம்பூர். பெற்றோர் - சுந்தரசாஸ்திரி, மரகதவல்லி)

சம்ஸ்கிருதத்தில் கரை காணாக் கல்வியறிவு கொண்டு பாரதக் கலை ஞானி எனவும், சிற்பம் ஓவியம் கல்வெட்டுக்கள் - இவற்றின் கலைக் களஞ்சியம் எனவும், அருங்காட்சியகத் துறையில் தன்னிகரற்ற நிபுணர் எனவும் சர்வதேசப் புகழ் பெற்றவர். வேதோபநிஷதங்கள் முதல் காளிதாசன், பவபூதி,

நீலகண்ட தீட்சதர் வரை நீண்ட சம்ஸ்கிருத இலக்கியத்தில் கரைகண்டவர். பாரதத்தின் பல கோயில்களிலும், நினைவுச் சின்னங்களிலும், அகழ்வாராய்ச்சிகளிலும் காணப்படும் சிற்ப வடிவங்களை எந்தக் கவி பாடியிருக்கிறார் என்று சொல்லக் கூடியவர். கழுகுமலையிலிருந்து காஷ்மீரம் வரை காணப்படும் பலவிதமான சிவ வடிவங்கள் அமைவதற்கு ஆதாரமான வருணனைகள் சதருத்ரீயத்தில் இருப்பதைப் புகைப்படங்களோடு காட்டியுள்ளார். பத்மஸ்ரீ, பத்மபூஷணம் விருதுகள் வாங்கியவர். ''இந்தியக்கலை : 5000 ஆண்டுகள்'', ''கலை, கருத்து, இலக்கியத்தில் நடராஜர்'' ஆகிய ஆங்கில நூல்களை எழுதியவர்.

13. சிதம்பரம் சுவாமிநாதன்

(பிறப்பு - 7.10.1936; பெற்றோர் - கே. இராஜபாலசுப்பிரமணிய ஜடாவல்லபன், வேங்கடலட்சுமி)

சிறந்த சொற்பொழிவாளர்; பெரிய புராணம், கந்த புராணம், சிவ புராணம், தொடர் விரிவுரை நிகழ்த்தி வந்தார். பட்டிமண்டபம், கவியரங்குகளில் பங்கு பெற்றவர். இளவயதில் மறைந்தார்.

14. வேங்கடராமையா. கா.ம

(பிறப்பு - 4.4.1911; மறைவு - 1995; பிறந்த ஊர் - காரம்பாக்கம், பூவிருந்தவல்லி அருகாமை, சென்னை; பெற்றோர் - கிருஷ்ணையர், வேங்கட சுப்பம்மா)

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். திருமுறை நூலாசிரியர்; எழுதிய நூல்கள் - ''கல்வெட்டில் தேவார மூவர்'', "Saiva Saints".

15. ஞானசுந்தரம். தெ



(பிறந்த ஆண்டு - 1941; பிறந்த ஊர் - குழையூர், மயிலாடுதுறை அருகாமை பெற்றோர் - மு. தெண்டபாணிப் பிள்ளை, தையல் நாயகி)

சிறந்த சொற்பொழிவாளர். பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இலங்கை. சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உரையாற்றியுள்ளார். சென்னையில் பல இடங்களில் பெரிய புராணத் தொடர் சொற்பொழிவுகள் நடத்தி வருகிறார்.

16. பாலறாவாயன். அ



(பெற்றோர் - சி. அருணை வடிவேல் முதலியார், வச்சிராம்பாள்)

முனைவர் பட்டம் பெற்றவர்; ஆய்வுத் தலைப்பு - ''சேக்கிழார் ஒரு தமிழ் உணர்வாளர்''; சைவ சமய சொற்பொழிவாளர்; இலண்டன், அமெரிக்கா, துபாய், ஹாலந்து முதலிய நாடுகளில் உரையாற்றியுள்ளார். சென்னை இலயோலா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சைவ சாரம், மந்திர நூல், பெரும் பெயர் முருகன் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

17. இரமணன் மா.கி.



பிறந்த ஊர் - மயிலாடுதுறை; தந்தை - கிருஷ்ணமூர்த்தி)

பேச்சு, எழுத்து, சேவை என்ற மூன்று துறைகளிலும் முப்பது ஆண்டுகளாக உழைப்பவர் மா.கி. இரமணன். முதுகலைத் தமிழாசிரியர்; பத்திரிகாசிரியர்; சிறந்த ஆன்மீகப் பேச்சாளர். திருவொற்றியூரில் 5.2.2004 முதல் இரண்டு ஆண்டுகள் சொற்பொழிவு செய்து ''வாழ்வை வளமாக்கும் திருமந்திரம்'' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூலின் 56வது தலைப்பு ''திருமந்திரத்தில் அறிவியல்'' ஆகும். அதில் கால மேலாண்மைக்கு ''போது சடக்கெனப் போகிறது'' என்ற பாடலையும், வெற்றி மனப்பான்மைக்கு ''வென்றிடலாகும் விதிவழி தன்னையும்'' என்ற பாடலையும், தன்னை உயர்த்தலும் தியானமும் என்ற கருத்துக்கு ''தன்னை அறியத் தனக்கு ஒரு கேடில்லை'' என்ற பாடலையும், Cosmo Biologyக்கு ''அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை'', கரு உற்பத்திக்கு (Genetic Sciences) ''கோல்வளை உந்தியில் கொண்ட குழவியும்'' என்ற பாடலையும் முன் வைக்கிறார்.

18. பிரபாகரமூர்த்தி. எம்.கே.

(பிறந்த ஆண்டு - *16.2.1955*; பிறந்த ஊர் - வடவள்ளி, பேரூர் அருகாமை; பெற்றோர் - மு.கிருஷ்ணசாமி, வெங்குலட்சுமி)

சமய சொற்பொழிவாளர்; திருமுறைத் தமிழ் வேதாகமச் செந்நெறி வழியில் திருமணங்கள், மணிவிழா முதலான வாழ்வியல் சடங்குகள், திருக்குடமுழுக்கு நன்னீராட்டு செய்விப்பவர்; குன்றத்தூரில் திரு முறைக் கோயில் அமைத்து வழிபாடு இயற்றி வருபவர்; குன்றத்தூரில் திருமுறை வளர்ச்சிக் கழகம் நிறுவிப் பணியாற்றி வருகிறார். திருமுறைப் பாடல்களுக்கு இணைப்புரை வழங்கிப் பல ஒலிப்பதிவுப் பேழைகள், குறுந்தகடுகள் வெளிவரத் துணை நின்றவர்; காஞ்சியில் நடந்த உலகச் சேக்கிழார் விழாவில் பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்; சிவத்தலங்கள் பலவற்றிற்குப் பாடல்கள் இயற்றியவர்; பல குடநீராட்டு விழா மலர்களின் பதிப்பாசிரியர்.

19. இராமலிங்கம். முருகு

(பிறந்த ஆண்டு - *31.12.1935*; பிறந்த ஊர் - விளாகம், சிதம்பரம் அருகாமை; பெற்றோர் - முருகேசம் பிள்ளை, சீதாலக்குமி)

சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் 25 ஆண்டுகளுக்கு முன் தன்னை இணைத்துக் கொண்ட இவர், இப்பெருமன்றத்தின் கட்டட வாரியச் செயலாளராக 15 ஆண்டுகள் பணியாற்றியபொழுது தேவார வகுப்புகளைப் பல பள்ளிகளில் தொடங்கி வைத்தவர்; குறிப்பாகப் பார்வையற்ற மகளிர்க்குத் தேவார வகுப்புத் தொடங்கி வைத்தவர்; துணைத் தலைவராகத் தற்போது உள்ள இவர் பெருமன்ற மாநாடுகள் பல ஊர்களில் சிறப்பாக நடக்கத் துணை புரிபவர்.

இலண்டன், தவப்பெருந்திரு சிவநந்தியடிகளுடன் 1979ல் இலண்டன் சைவ சித்தாந்த மையம் தொடங்கியதிலிருந்து தொடர்பு கொண்டவர்; 1992-இல் ''உலக சைவப் பேரவை'' தொடங்கத் துணைநின்றவர்; தென் ஆப்பிரிக்கா, மொரீசியசு, மலேசியா முதலிய நாடுகளில் உலக சைவப் பேரவையின் மாநாடுகளில் பங்கு கொண்டு பணியாற்றியவர்; பேரவையின் முத்திங்கள் இதழான ''சைவ உலகம்'' வெளிவருவதற்குப் பல வழிகளில் துணைநிற்பவர்; பேரவையின் துணைத்தலைவர்.

20. கோபாலகிருஷ்ணன். ஆர்

(பிறந்த ஆண்டு - 15.6.1950; பிறந்த ஊர் - சோழகம்பட்டி கிராமம், தஞ்சை மாவட்டம், பெற்றோர் - இராமலிங்க சோழகர், ரோஜாமிர்தம்)

சென்னைப் பல்கலைக் கழகம் தத்துவத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்; முனைவர் பட்ட ஆய்வு ''பெரியபுராணத்தில் சமயமும் அனுபூதி நிலையும்'', சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறைத் தலைவர்; தென்னாப்பிரிக்கா (3 முறை)

மொரீசியசு (2 முறை), இலண்டன் (2), சிங்கப்பூர் (4), மலேசியா (5), இத்தாலி (1), இலங்கை (1), தாய்லாந்து (1), ஆஸ்திரேலியா (1) ஆகிய நாடுகளில் நடந்த மாநாடுகளில் கலந்து கொண்டவர்; சிவஞான சித்தியார் பரபக்கம் - ஓர் ஆய்வு (ஆங்கிலம்), பெரியபுராணத்தில் சமயமும் அனுபூதி நிலைகளும் (ஆங்கிலம்) சைவ சித்தாந்தம், Essentils of Saiva Siddhanta சிவன் திருவருள் திரட்டு; "Saiva Ulagam" கௌரவ ஆசிரியர்.

21. திருவாசகன். ஆ



(பிறந்த ஆண்டு - 4.4.1943; பிறந்த ஊர் - இராங்கியம், ராஜசிங்க மங்கலம்,

புதுக்கோட்டை மாவட்டம்) பெற்றோர் - ஆறுமுகம், ஞனாம்பாள்)

காகித வாணிகம் செய்து ஓய்வு பெற்றவர்; அருள் சுடர் பதிப்பகம் நிறுவி ஆ. சிவலிங்கனாரின் மாணிக்க வாசகர் சமயமும் காலமும், மூலன் தமிழ், வை. இரத்தினசபாபதியின் பாவையும்பள்ளி எழுச்சியும், வை. இரத்தினசபாபதி ஆ. சிவலிங்கனார் இணைந்து திருஞானசம்பந்தர் எழு கூற்றிருக்கை, பழனி இளங்கம்பனின் திருமந்திரத் தேன் வெள்ளம் ஆகிய நூல்கள் வெளியிட்டுள்ளார். திருவாசக உரை, பெரியபுராணத்தில் அரிய சிந்தனைகள், ராங்கியம் கடுப்பர் வரலாறு ஆகிய நூல்கள் எழுதியுள்ளார். ''வீர சைவ முரசு'' இதழை 22 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

22. சித்தலிங்கய்யா .டி.பி.

(பிறந்த ஆண்டு - *18.12.1932;* பிறந்த ஊர் - காஞ்சிபுரம்; பெற்றோர் - பசுவலிங்கய்யா, சரசுவதி)

சைவ சித்தாந்தத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். முனைவர் பட்ட ஆய்வேடு ''உமாபதியின் அட்டகம் காட்டும் சைவ சித்தாந்தம்'' மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இந்தியாவில் பல்வேறு இடங்களிலும், கோலாலம்பூர், சிட்னி, மொரீஷியசு போன்ற வெளிநாடுகளிலும் நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்கு பெற்றவர்; தமிழ், ஆங்கிலம் தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆகிய மொழிகளில் எழுதப், பேசப் படிக்கத் தெரிந்தவர்; பெங்காலி, மலையாளத்தில் படிக்கத் தெரிந்தவர்;

இவர் எழுதிய நூல்கள் Hymms and Proverbs (English rendenring of Tamil Saivite Hymms) - பசவனார் வாக்கமுது, சூனிய சம்பாஷணை சைவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்; Origin and Development of Saiva Siddhanta uoto 14th Century மெய்யுணர்வு நூல்கள்.

23. சாரதா நம்பி ஆரூரன்

(பிறந்த ஆண்டு - *24.7.1946;* பிறந்த ஊர் - சங்கர நயினார் கோயில், நெல்லை மாவட்டம்; பெற்றோர் - ஐயம் பெருமாள் பிள்ளை, ஜானகி அம்மாள்)

முனைவர் பட்டம் பெற்றவர்; இசையில் Higher Grade தேறியவர்; சென்னை இராணிமேரி கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர்; சேலம் அரசு மகளிர் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்; சிறந்த சொற்பொழிவாளர்; இசையோடு பாடுவதில் வல்லவர்; தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், இலண்டன், அமெரிக்கா எனப் பல்வேறு நாடுகளில் சைவ சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருபவர்; பாவைத் தமிழ், ஆரூரன் செந்தமிழ் முதலான நூல்கள் எழுதியவர்.

24. செல்வக்கணபதி. இரா

(பிறந்த ஆண்டு - 10.1.1939; பிறந்த ஊர் - காட்டூர், திருவாரூர் மாவட்டம்; பெற்றோர். தி. ராஜகோபால் பிள்ளை, பார்வதி)

முனைவர் பட்டம் பெற்றவர்; தருமையாதீனக் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்; சிறந்த சொற்பொழிவாளர்; இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன், தமிழ்நாடு என உலகின் பல்வேறு நாடுகளில் சைவ சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருபவர். தமிழ் வளர்க்கும் தருமபுரம், கோரக்க சித்தர், கொளஞ்சியப்பர் அருள் வரலாறு, கருணைக்கடல் காகபுஜண்டர், சைவமும் தமிழும் போன்ற நூல்களை எழுதியவர்.

பேராசிரியர் செல்வக்கணபதி தெய்வச் சேக்கிழார் மனித வள மேம்பாட்டு அறக்கட்டளை நிறுவி 63 நாயன்மார் வரலாறுகளை 40 ஒலிப் பேழைகளிலும் (Audio Cassette) தலா 65 நிமிடம்), 40 ஒலிக் குறுந்தகடு களிலும் (Compact Disc) தலா 80 நிமிடம் MP3 CDக்களிலும் (நான்கு பாகங்கள் - தலா 13 மணி வீதம் 52 மணி நேரம், ஆங்கிலத்தில் வரலாற்றுச் சுருக்கம் MP3 CD லும் (15 மணி நேரம்) வெளியிட்டு உள்ளார். தற்பொழுது பேராசிரியர் ஒன்பது தொகுதிகளைக் கொண்ட சைவ சமயக் கலைக்களஞ்சியம் ஒன்று உருவாக்கி வருகிறார். தொகுதி ஒன்று 500 முதல் 700 பக்கங்கள் கொண்டதாகவும், இரட்டை டெம்மி அளவில், பலவண்ண அச்சில், உயரிய ஆர்ட் காகிதத்தில் கலைக்களஞ்சியம் உருவாக உள்ளது. ஒன்பது தொகுதிகளும் 10008 பதிவுகளையும் 2000க்கும் மேலான படங்களையும் கொண்டவையாக அமையும். முதலில் தமிழிலும், தொடர்ந்து ஆங்கிலத்திலும், அடுத்து வடிவிலும் கொண்டு வரத் திட்டம். ஒன்பது தொகுதிகளிலும் இடம் பெறும் செய்திகள் 1) 'சைவ சமயம் - தமிழகம் 2. சைவ சமயம் - தமிழகத்துக்கு அப்பால் (உலகம்) 3) சைவத் திருமுறைகள் 4) திருமுறைத் தலங்கள் 5) பிற தலங்கள் 6) சைவ சமய அருளாளர்கள் 7) அருள் நூல்கள் 8) சைவ சித்தாந்தம் 9) சைவ சமய அமைப்புகள்.

அருட்செல்வர் திரு.நா. மகாலிங்கம் அவர்கள் உள்ளிட்ட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட, சைவ சமயப் பேரறிஞர்களைக் கொண்ட நெறியாளர் (ஆலோசனை) குழுவும், தமிழகத்திலும், உலகெங்கும் வாழும் சைவத்தமிழ் அறிஞர்கள் 150 பேர் கொண்ட ஆசிரியர் குழுவும் அமைக்கப் பெற்றுப்பணிகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

25. குப்புசாமி. மு

(பிறந்த ஆண்டு. 11.8.1929; பிறந்த ஊர் - களக்காடு, நாங்குனேரி; பெற்றோர் முத்துகுமாரசாமிபிள்ளை, காந்திமதி அம்மாள்)

''வேண்டுவார்க் கீயும் விரிசடைக் கோமான்
வேண்டாச் சிறாஅர்க்கும் வழங்கிய நீர்மை

காண்டிகு மல்லமோ யாமே ஈண்டிய
தொல்வினை தொலைத்தற லொல்லா
தார்க்கும்

அருளே உருவாம் அம்பலக் கூத்தன்
தெருளியல் பிறங்கக் கூட்டி மருளற
நினையாப் பல்சீர் அனைத்தும் தரூஉம்
ஆண்டாண்டுயர்நிலை யதற்கே ஈர்க்குமென
வரையாப் புகழ்ப்பா விரைந்து நாம் வரைகம்
நல்லன சேர்ப்ப தல்லால்.
பொல்லாதொன் றில்லாப் புரிசடை
யோற்கே’’

எல்லாரையும் ஈர்ப்போன் - இப்பாடலை இயற்றியவர் பாலைக் கௌதமனாரா? முடிநாக ராயரா? இப்பாடல் இடம்பெற்ற நூல் புறநானூறா? கலித்தொகையா? என்று வியக்க வேண்டாம். இப்பாடலை எழுதியவர் திரு. மு. குப்புசாமி, நூல் அறம் நானூறு.

ஹைகூ பாடல் பரவிவரும் இந்நாளில் இதென்ன பழங்கவிப் பாணி? தஞ்சையில் ஆறாம் உலகத் தமிழ்நாடு நடைபெற்ற பொழுது ஜப்பானிய அறிஞர் ஒருவர் திரு.குப்பு சாமியைக் கேட்டாராம். ‘‘பழந்தமிழ்ப் பாடலாகிய சங்கப் பாடல் மரபில் இப்பொழுது கவிதை பாடுவதே இல்லையா? ஏன் கடினமா?’’ என்று கேட்டாராம். இதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு சங்கப்பாடல் பாணியில் சிவபெருமானைப் போற்றி 400 பாடல்களை திரு. குப்புசாமி பாடியுள்ளார்.

இத்தகைய சங்க கால அகவற் பாக்களைத் தான் ஏன் தேர்ந்தெடுத்தேன் என்று குப்புசாமி கூறுகிறார். ‘‘அகவற் பாக்கள் சங்ககாலத்தில் பெரிதும் வழங்கி வந்தமை யாதினாலோ வெனின் இவ்வகை யாப்பில் கருத்துத் தடை சிறிதும் இல்லாது எளிதாக ஆற்றொழுக்குப் போல் (கடுமையான இலக்கண வரையீடின்றி) செய்யுள் இயற்றல் கூடும் என்பது நுதலியே எனக் கோடலாகும். சுருங்கிய சொற்களால் பெருவிளக்கங்கள் அமையப் பெற்ற இவ்வாசிரியப் பாக்கள். அடிவரையின்றி மிகநீண்டு விளங்கி வருதலும் காண்கின்றோம். பழங்கால இலக்கிய வழக்காகிய போர்க்கள வென்றிச் சிறப்புரை இற்றைநாட் சிறப்பு வாழ்க்கைக்கு உதவாதெனும் உணர்வு மேலிட்டு அருள்நெறியும் அமைதியுமே நல்வாழ்க்கைக்கு அடிப்படை என நாமனைவரும் தெரிந்து தெளிந்தோமாகலின் சங்கப்பாக்கள் போன்ற அகவல் இலக்கியம் உருவாக்கி அவற்றுள் இறையருளால் இதுவரை நமக்குப் பல சான்றோர் வாயிலாகத் தெரிவிக்கப்பெற்றுள்ள சிவநெறிச் செய்திகளையெல்லாம் அமைந்துப் பாடுதல் நன்றாகுமெனத் தோன்றியது’’ என திரு. குப்புசாமி தான் ‘‘அறம் நானூறு’’ பாடியதன் காரணத்தை விளக்குகிறார்.

பல பாடல்கள் எளிமையாகவும் உள்ளன.

‘‘தென்னர் நாயகன் தீந்தமிழ் மேயவன்
நல்லோர் தலைவன் நோயுளார் வாயவன்
தூயோற் கீயும் தொழிற்றுறை போயவன்
உள்வக நைவார்க் குறுதுணை ஆயவன்
முன்னோ னெவர்க்கும் உலகெலாம் தாயவன்
மாயவன் மலரோன் ஓராப் பேரெரி
ஏயநின் றெல்லா வுயிர்க்கும்
தாயவன் தந்தை தானவன் றானே’’

ஒவ்வொரு பாட்டுக்கும் தரப்பட்டிருக்கும் தலைப்புகளும் அழகானவை; ஆழமானவை அருள்வழி உய்தி, தில்லியூராற்றுப்படை, கழலா உடலம், சுட்டாப் பெருமையர், நாட்படினும் மறவான், நூலால் நுவலொணான், ஆணவஞ்சாய ஏத்தார் அலமரல், மேனிலை கூடல் என்று தலைப்புகள் அமைந்துள்ளன.

டெல்லி நடுவண் அரசில் தலைமைப் பொறியாளாகப் பணியாற்றிய திரு. குப்புசாமி எழுதியுள்ள நூல்கள். நாரையூர் நான்மணி மாலை, திருவேட்கள மும்மணிக் கோவை, சிவப்பாடல், சைவமணி மாலை, கந்தர் அணியலங்கல், திரு. அருள்மாலை, திரு. அருட் கோவை, சிவப்புகழ்ச் சொல்லணி, களந்தைப் பதிகம், கள்ளில் பதிகம் (Translation) Philosophical Works of St. Vallalar, Paripooranandabotham of Srimath Pamban Swamigal.

26. அருணவசந்தன். பூசை. ச

பூசை ச. அருணவசந்தன் என்கிற பூசை. ச. ஆட்சிலிங்கம் ஓதுவார் மரபில் வந்த சைவ நெறியாளர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண் புராணங்கள், தெய்வத்திருமுறைகள், கல்வெட்டுகள், செவிவழிச்செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்புநோக்கித் தொகுத்து குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி ''சிவமஞ்சரி'' என்ற நூலாகத் தொகுதி தொகுதியாகக் கொண்டு வருகிறார்.

32 பக்கங்கள் அளவில் சிறு சிறு பிரசுரங்களாக் கொண்டு வருகிறார். அவற்றை இலவசமாகக் கொடுக்கிறார். பின்னர் அவற்றையே தொகுத்து 160 பக்கங்களில் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார். இதுவரை 1568 பக்கங்கள் கொண்ட அளவில் 49வது மஞ்சரியாக 15.9.2007 அன்று 32 பக்கப் பிரசுரம் வெளிவந்துள்ளது. சிவமஞ்சரியின் இரண்டாம் தொகுதி (160 பக்கம் பிரசுரம்) 2.2.1998ல் வெளிவந்தது. இது போல 12 தொகுதிகள் வெளிவர உள்ளன.

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில் என்ற அறிவிப்புடன் வெளிவரும் ''சிவமஞ்சரி''யைச் சிறந்த புகைப்படங்கள் வரை படங்களுடன் 60 தலைப்புகளில் வெளிக் கொணர ''சிவசுந்தரி கலைக் கூட்டத்தார்'' திட்டமிட்டுள்ளனர்.

1) சிவமே செம்பொருள் 2) மச்சேந்திரர் 3) திருவாவடுதுறை ஆதீனம் 4) முகலிங்கம் 5. பிரதோஷம் 6) பசுபதி 7) உமாமகேஸ்வரர் 8) ஐந்தும் சிவபெருமானும் 9) திருக்கயிலாயம் 10) மகாசிவராத்திரி 11) ஸ்ரீ ருத்திரர் 12) ஆதித்யேசுவரர் 13) சோமாஸ் கந்தர் 14) சைவ சமய சாத்திரங்கள் 15) ஸ்ரீ தியாகராஜர் 16. சந்திரசேகர் 17) அக்னீஸ்வரர் 18) சித்தீசுவரர் 19) அகத்தீசுவரர் 20) அதி (க) தியாகராஜர் 21) கேதார கௌரீ சுவரர் 22) அம்பிகாதீஸ்வரர் 23) அரம்பேசுவரர் 24) ஸ்ரீ காளீச்சுவரர் 25) திருமணக் கோலநாதர் 26) பிரம்மபுரீசுவரர் 27) தமிழ்மறை (அறிமுகம்) 28) வேத ஆகம புராணீசுவரர் 29) திருமாலீசுவரர் 30) மூவரான முதல்வன் 31) வீரட்டகாசர் 32) காலசம்ஹாரர் 33) மன்மதேசுவரர் 34) திரிபுராந்தகர் 35) வீரபத்திரர் 36) தீபமங்களேசுவரர் 37) தல விருட்சங்கள் 38) ராஜகோபுரங்கள் 39) விமானேசுவரர் 40) தீர்த்தீசுவரர் 41) பூதலிங்கேசுவரர் 42) இராட்சத லிங்கம் 43) சப்தரிஷீசுவரர் 44) தட்சிணாமூர்த்தி 45) சிவாசாரியர்கள் 46) புஷ்பரதீஸ்வரர் 47) கங்காதீசுவரர் 48) எட்டும் சிவபெருமானும் 49) விருந்திட்டீசுவரர் 50) சிவாலய திருவிழாக்கள் 51) சபாநாயகர் 52) ஆனந்த தாண்டவம் 53) ஊர்த்துவ தாண்டவம் 54) நாகநாதர் 55) இராஜலிங்கேசுவரர் 56) பறவைகளும் பரமனும் 57) ஐராவதீசுவரர் 58) சிவாலய சிவாயுதங்கள் 59) பரிவாரங்கள் 60) பைரவர்.

இத்தொகுதியில் சைவ சமயத்தின் பெருமைகள், கல்வெட்டுச் செய்திகள், கோயில்களின் நடைமுறைப் பழக்க

வழக்கங்கள், வழிபாடுகள், சிற்ப ஓவியங்களின் நுண்மை, பெருமை தத்துவ கோட்பாடுகள், மன்னர்கள் வரலாறு, சிவத்தலங்கள் பற்றிய குறிப்புகள், சிவபெருமானின் 64 திருவிளையாடல்கள், 64 முர்த்தங்கள், அறுபத்து முன்று நாயன்மாரின் வரலாற்றுச் செய்திகள், வட்டாரச் செய்திகள் முதலியன இடம் பெற்றுள்ளன.

''உமா மகேசுவரர் கோட்டோவியம், உமா எனும் சக்தி பிரணவம், உம்மாச்சி (குழந்தைகளின் பாஷையில் உமாமகேசுவரர்) உமா மகேஸ்வராஸ்திரம், உமா மகேஸ்வரர் திருக்கல்யாணம், ஐந்து படங்கள் (3 சிற்பங்கள் 2 கோட்டோவியங்கள்), தேவாரத்தில் உமையவள் திருமணம், பார்வதி பரிணயம் அல்லது உமா பரிணயம், உமாமகேசுவரர் திருக்கோலம் உமாமகேசுவர வடிவங்கள், மூன்று படங்கள் (சிற்பம்) உமாமகேசுவரத்தலங்கள் (5 தலங்களைப் பற்றிய செய்திகள்; இரண்டு படங்கள்) உமைக்கு அருள் செய்யும் யோக நாயகர் (7 தலங்களைப் பற்றிய செய்திகள்; இரண்டு படங்கள்), சிவ பராக்கிரமத்துள் உமாமகேசுவரர்; ஊழிக்காலத்து உமாமகேசுவரன் (இரண்டு தலங்கள் - ஒரு படம்); தேவாரத்தில் உமாபதி; சுவர்ண மூர்த்தியாக விளங்கும் உமா மகேசுவரர்; ஹைதர் அலி வெளியிட்ட உமாமகேசுவரர் தங்க நாணயம்; வேதவழி நூல்களில் உமாபதி, கோகர்ணத்து உமாமகேசுவரர், ஸ்ரீ விமானத்து உமாமகேசுவரர்; குடந்தை செல்வப்பிரான், வீழி விமானத்து உமா மகேசுவரர், திருவையாற்றுச் செஞ்சடை உமாமகேசுவரர், சிற்ப நூல்களில் உமாமகேசுவரர், நாரதர் அமைத்த உமாமகேசுவரர், உமா மகேசுவர விரதங்கள் (ஏழு விரதங்கள்), கொல்லம் உமாமகேஸ்வரர்.

27. பனசை அருணா

(பிறந்த ஆண்டு - 6.1.1949; பிறந்த ஊர் - திருப்பனந்தாள்; பெற்றோர் - சண்முக சுந்தரம், ஜெயம்)

சென்னை கன்னட சங்க மேல் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் ஆகிய நூல்கள் பற்றி சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். ''உழவாரம்'' அமைப்பில் ஆயுள் தொண்டராகப் பொறுப்பேற்று கலிய நாயனார் குருபூஜையை நாயனார் அவதாரத் தலத்தில், ஆண்டு தோறும் நடத்தி வருகிறார்.

28. வடிவேலாயுதம் பிள்ளை. க

(பிறந்த நாள் - 25.9.1923; பிறந்த ஊர் தூத்துக்குடி; பெற்றோர் - முத்துக்குமாரசாமி பிள்ளை, சண்முத்தம்மாள்)

சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழ்த்துறை தலைவராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். சைவப் பேரவையை ஆரம்பித்து அதன் தலைவராகத் திகழ்ந்தவர்; பல்வேறு சைவ அமைப்புகளில் சொற்பொழிவுகள் ஆற்றியவர்.

* * *

மூன்றாம் பகுதி

கரூர்

2002 செப்டம்பர் 9...

கரூர் திருமுக்கூடலூர் அகத்தீசுவரர் திருக்கோயில் மணிமுத்தீசுவரர் சன்னதி குடமுழுக்கு விழா; தமிழ்த்திருமுறைப் படி நடந்த நாள்..

தமிழகமெங்கும் பரபரப்பு... எங்கு பார்த்தாலும் விவாதம்.. தமிழில் நடத்தலாமா? கூடாதா?... செய்தித்தாள்களில் எல்லாம் தலைப்புச் செய்திகள்.

கரூர் ஒரே நாளில் தேசியகவனம் பெற்றுவிட்டது.

கரூரில் நடந்தது என்ன?

கரூரில் அர்ச்சகர் சங்கத் தலைவர் கணேசசிவாச்சாரியார் அர்ச்சகர் சங்கக் கூட்டத்தில் தமிழ் அர்ச்சனை, குடநீராட்டு செய்தால் நாட்டுக்குக் கேடு என்று பேசுகிறார். ''தமிழ்த்திருமுறை குட நீராட்டு நடத்த ஆகமவிதி இடம் தரவில்லை, முறையாக அனுமதி பெறவில்லை. எனவே அனுமதிக்க முடியாது'' என அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தமிழ் அமைப்புகள், தமிழ்ச் சிவனடியார்கள் தமிழ்த் திருமுறை வழிபாட்டுரிமை பாதுகாப்பு மாநாடு நடத்துகின்றனர்.

2002 செப், 8 மாலை 4.00.... தமிழ்ச் சிவனடியார்கள், தமிழ் அமைப்பினர் - கோயில் ஆய்வாளருடன் பேச்சு வார்த்தை நடக்கிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என ஆய்வாளர் தடுக்கிறார்.

5.00 நிலைமை முற்றிப் போவதை அறிந்த ஆய்வாளர் மேலிடத்தைக் கேட்டுக் சொல்வதாகக் கூறிச் செல்கிறார்.

6.00... தமிழ்க்குடமுழுக்கை நடத்த அனுமதி கோரி, உயிரையும் பொருட் படுத்தாது முத்து, ராஜேஷ் என்ற இரு இளைஞர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

இரவு 7.30.... கோவை குமரலிங்கம் அவர்கள் குடநீராட்டுப் பணியைத் தொடங்கல்.

இரவு 8.30... வழக்கறிஞர் குமரன் உள்ளிட்ட தமிழறிஞர்கள் தமிழ்க்குட நீராட்டை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர், காவல்துறை அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தல்.

இரவு 9.00... தமிழ்க்குடநீராட்டுப் பணி நடைபெறுவதாகத் தமிழ் அறிஞர்கள் அறிவிப்பு கொடுக்க சிவனடியார்கள் கீழே இறங்கி வருதல்.

செப்டம்பர் 9. காலை 6.30 கோவை குமரலிங்கம் தமிழ்த்திருமுறைகள் ஓதி தமிழ்க் குடநீராட்டு விழா நடத்துகிறார்.

கரூர்... கொங்கு நாட்டு வாயிலாக - தமிழ் முறைப்படி குடநீராட்டு விழா முறைக்கு வாயிலாக - விளங்குகிறது. கொங்கு மண்டலம் முழுமையும் தமிழ் முறை குடநீராட்டு என முன்னறிவிப்பு செய்கிறது.

கரூர் சைவப் பெருமக்கள் தமிழ்க் குடநீராட்டு விழாவோடு நிறுத்தவில்லை. 2002 டிசம்பர் 28, 29 ஆகிய நாட்கள் தெய்வத் தமிழ் மாநாடு நடத்தித் தமிழ்முறை வழிபாட்டில் நிலையான ஒரு இடத்தைக் பெற்றுவிட்டனர். மாநாட்டுக்குழுவின் தலைவர் பேரூராதீனம் திருப்பெருந்திரு சார்ந்த லிங்க அடிகளார் அவர்கள். செயலாளர்கள் ப. குமரலிங்கம், க.குமரன், ப.இரா. ஆறுமுகம், தமிழ்த் திருமுறை வழிபாட்டில் அக்கறை உள்ள சமயத் தலைவர்கள், ஆன்றோர்கள், அமைப்புகள் இருநாட்களும் கலந்து கொண்டனர். கனமான மலரும் வெளியிட்டனர்.

இத்துணை பணிகளுக்கும் முன் நின்று உதவியிருக்கிறார் கரூர் வழக்கறிஞர் குமரன் அவர்கள். இந்த எழுச்சி மிகு வரலாற்றை உணர்ச்சி பூர்வமாக குமரன் அவர்கள் கூறினார்கள். இதற்கு நேர்மாறாக பக்தி சிரத்தையோடு திருவருள் தரிசனம் பெற்ற அவரது குருநாதரைப் பற்றியும் விரிவாகக் கூறினார்.

அவரது குருதேவர் டேவிட்ராஜ், 3.1..1934ல் கரூர் பசுபதி பாளையத்தில் அவதரித்தார். மாணவப் பருவத்திலேயே பல ஆன்மீகக் காட்சிகளைக் கண்டார். சாதி, மதத்தின் பெயரால் நடந்த இழிவுகளைக் கண்டு வாலிப வயதில் மனம் வெறுத்து நாத்திகரானார். தந்தை பெரியாரிடம் சென்று ''கடவுள் இல்லை என்பது பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெறப் போகிறேன். வாழ்த்துங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். ஆய்வு செய்து கொண்டிருந்த சமயத்தில் தன் நண்பரோடு கரூர் ஆனிலையப்பர் திருக்கோயிலுக்குச் சென்றார்.

கோயிலில் நடராசப் பெருமானின் திருமேனியைச் சுற்றிலும் சூக்கும பஞ்சாட்சரமான ''சிவாய நம'' என்ற எழுத்துக்கள் பிரகாசிப்பதைக் கண்டார். நண்பருக்கு ஏதும் தெரியவில்லை. அன்று முதல் ''சிவாய நம'' என தியானிக்க ஆரம்பித்தார்.

பம்பாய் அருகில் உள்ள கணேஷ் புரியில் அருளாட்சி புரிந்து கொண்டு இருக்கும் மகான் அமல நித்யானந்தர் குருதேவர்க்குக் காட்சி தந்து உபதேசித்து அருளினார்.

போகரின் ஜண்டரச பஸ்பம் என்னும் காயகல்ப மருந்தைத் தயாரித்து சித்தராக முயற்சி செய்தார். அம் மருந்தைத் தயாரித்து உண்ண ஆரம்பித்தார்.

ஒரு நாள் வள்ளல் பெருமான் காட்சி தந்து, ''புலால் உண்ணாதே. எவரையும் உற்று நோக்காதே, நீ யாரென்று காட்டிக் கொள்ளாதே'' என்று மூன்று கட்டளைகளை இட்டு ஆசீர்வதித்தார். பின் குருதேவர் தியானத்தில் இருந்த பொழுது ஓர் பேரொளி அவருள் புகுந்து ஆட் கொண்டது. அதன்பின்பு குருதேவர் பெற்ற ஆன்மீக அனுபவங்கள் அநேகம்.

இதன்பின் நிழற் படத்தில் குருதேவர் விழவில்லை. பின்னொரு சமயம் காய்ச்சல் வந்த போது எந்த மருந்துக்கும் குணம் தெரியாத கட்டத்தில் வள்ளல் பெருமான் காட்சி தந்து திருநீறு வழங்க அதனைப் பூசி குணம் அடைந்தார்.

யார் பணம் கொடுத்தாலும் வாங்க மாட்டார். தனது இருப்பிடத்தை விட்டு வெளியே வராமல் விவசாயிகளின் நிலத்தடி நீர் பற்றிய விவரத்தை விளக்கப்படத்துடன் வரைந்து கொடுப்பார். நோயாளியைக் கண்டதுமே நோய் நாடி மருந்து கொடுப்பார்.

குருதேவரின் ஆற்றலைப் பரிசோதிக்க வந்த நபர் மின் அதிர்விற்கு உட்பட்டு மயங்கி விழுந்தார். திருநீறு அணிந்து பலரின் நோய்களைக் குணப்படுத்தினார். தான் கண்ட காணுதற்கரிய அற்புதக் காட்சிகளையும் பெறுதற்கரிய அற்புத அநுபவங்களையும் மறைப்பின்றி தனது சீடர்களுடன் பகிர்ந்து கொண்டவர். சிலருக்கு உபதேசம் அளித்து நெற்றிக் கண்ணைத் திறந்தவர். தனது சொத்து முதலான அனைத்தையும் குடும்பத்தினர்க்கே விட்டு விட்டு வெளியேறியவர்.

1982ல் கரூரில் வள்ளலார் கோட்டத்தை நிறுவினார். துறவறம் பூண்ட பின்னும் டேவிட்ராஜ் என்கின்ற தனது பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. 9.2.1991 அன்று குருதேவர் சித்தி பெற்றபின் சீடர்கள் அவரை ''பெரும்கருணைப்பிரகாசர்'' என வழிபட்டு வரலாயினர்.

குமரன் உள்ளிட்ட அவரது சீடர்கள் வள்ளலார் கோட்டத்தில் குருதேவர் மெட்ரிகுலேசன் பள்ளி நடத்தி வருகின்றனர்.

குருதேவர் வரலாற்றை குமரன் அவர்கள் சொல்லி முடிக்க நெடுநேரம் ஆகிவிட்டது. அவர் பழனி செல்ல வேண்டிய சூழ்நிலை. வழிபாட்டு மன்றங்கள், தொண்டர்களுக்கு எல்லாம் தொலைபேசி மூலம் பேசி சொர்ணத்தக்கா வீட்டுக்கு வரச் சொல்லி என்னைகயும் சொர்ணத்தக்கா வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கு பல்வேறு மன்றங்களின் பொறுப்பாளர்கள் வீற்றிருந்தார்கள்.

அதோ! கரூர் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் பெரியவர் பாலசுப்பிரமணியனார், ''கூட்டு வழிபாடு, நடராசப் பெருமான் சிவகாமி - ஆண்டுக்கு ஆறுமுறை அபிடேக வழிபாடு, மாதந்தோறும் கடைசி ஞாயிறு அம்மையப்பர் அபிடேக வழிபாடு, 1994இல் அறுபத்து மூவர் உற்சவர் திருமேனி அமைத்து, அதனையொட்டி ஒவ்வோராண்டும் ஆடி மாதம் அறுபத்து மூவர் ஊர்வலம், 1995ல் காசி விசாலாட்சி விசுவநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா, நந்திகேசுவரப் பெருமான் கோயில் அனைத்து விழாக்களும் நடத்துதல், 50வது திருவாசக முற்றோதல் (ஏப்ரல், 2005) ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் சொற்பொழிவு, மார்கழி மாதம் 30 நாட்களும் சிறார்களுக்கு திருவெம்பாவை பயிற்சி வகுப்பு, வழிபாடு, ஆண்டுக்கு 2 முறை தலயாத்திரை என்று அடுக்கினார்.

''அது சரிங்க ஒரு கோயிலுக்கு மாதம் ஒரு முறைகூடப் போக முடியவில்லை, நீங்க கோயிலுக்கு வாரந்தோறும் சென்று வழிபட்டு, அபிடேகம், ஆராதனை என்று அடேயப்பா! இதில் மூன்றுகோயில்கள் வழிபாடு; குடநீராட்டு; அதென்னங்க! அறுபத்துமூவர் ஐம்பொன் திருமேனி அமைத்தது ஆகப் பெரிய செயலுங்க. அப்புறம் சொற்பொழிவு. முற்றோதல், தலயாத்திரை... மயக்கமே வந்து விடும் போல உள்ளதுங்க. எப்ப தொடங்கினது உங்க மன்றம்'' என்றேன்.

''1993ம் ஆண்டு'' என்றார் செயலர் சின்னப்பன், அட! அப்பர் உழவாரப் பணிக்குழுவினர் கூட வந்து இருக்கின்றனரே, அதன் தலைவர் அர்ச்சுனன், செயலர் என். கனகராஜ், ''ஐயா! வணக்கம் உங்கள் பணிகளைச் சொல்லுங்கள்'' என்றேன். ''உழவாரப் பணி, தலயாத்திரை, தினமும் அறுபத்து மூவர் விளக்கு ஏற்றுதல், மாதந்தோறும் திருவாசக வகுப்பு, 1995-இல் தொடக்கம்'' எனப் பதிலளித்தார்.

24.5.1997-இல் தொடங்கப்பெற்ற தெய்வீக திருப்பணிக்குழு உழவாரப் பணி கூட்டு வழிபாடு செய்து வருகின்றது. (தலைவர் - இரா. கணேசன் செயலர் - பி.ஆர். ஆறுமுகம்) தலைவர் கணேசன் அவர்கள் பன்னிரு திருமுறை முற்றோதுதல் செய்திருக்கிறார். ஒவ்வொரு மாதமும் ஆறு ஓதுவா மூர்த்திகள் பங்கு பெற்றனர். இது 18 மாதம் வந்தது. ஏழு ஆண்டுகள் சித்தாந்த வகுப்பு, நான்கு ஆண்டுகள் பெரிய புராண வகுப்பு, ஒரு ஆண்டு திருமுறை வகுப்பு நடத்தியுள்ளார். (பிறந்த ஆண்டு - 1.12.1947; தாடிக்கொம்பு, திண்டுக்கல்; பெற்றோர் - ராமசாமி, காளியம்மாள்).

பாலு, கிருஷ்ணன், சடையப்பன் அர்த்தஜாம வழிபாட்டினை விரிவாகச் செய்கின்றனர். கரூர் அர்த்த ஜாம வழிபாட்டினை விரிவாகச் செய்கின்றனர். கரூர் அர்த்த ஜாம வழிபாட்டினைக் கட்டாயம் பார்க்க வேண்டும், பாலு குங்குலியம் போடும் கைங்கர்யம் செய்பவர். இவர்களையெல்லாம் ஈர்த்து ஒருங்கு சேர்த்தது பள்ளியறை வைபவமே. குங்குலியம் போடுவது என சிறுக ஆரம்பித்தார்கள், நடைத்துணி, கொம்பு, தாளம், முரசு என்று ஒவ்வொன்றாகச் சேர்ந்தது. இன்று கரூர் அர்த்த ஜாம வழிபாடு சிறந்து விளங்குகிறது.

திருமுக்கூடல் கோயில் க்ஷீணமாக இருந்தது. ராஜேஷ் அதனைத் தூய்மை செய்து சீர் செய்தார். சாமி விழும் நிலையில் ராஜேஷ் அதனைக் கட்டிப்பிடித்துக் காத்தார்.

1993-இல் நடந்த கும்பாபிடேகத்துக்குப் பிறகு பிரதோஷ அடியார் திருக்கூட்டம் உருவாகியது.

சொர்ணத்தக்கா 1980லிருந்து இறைவனுக்குப் பூக்கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று ஆவல் மீதூரப் பெற்றார். வீடு இல்லாமல் இருந்தார். 1985ல் வீடு வாங்கி முதல் வேலையாக நந்தியாவட்டை, செம்பருத்தி நட்டு வைத்தார். வீடு புண்யாக வசனம் செய்ய முதல் பூ வந்தது. ''நாளைக்கும் மாலை போட வரம் தா'' என்று வேண்டுவார்.

மூன்று பட்டைகள் மாலை தொடுத்துத் தருவார். இறைவனுக்கு மாலை போட்டவுடன் சொர்க்கமே கிடைத்தது போலாகி விட்டது. செடியிடம் போய், ''நீங்கள்தான் இறைவனைத் தீண்டமுடியும். இன்னும் பூ வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்பார். வெளியூர் போய் வந்தவுடன் நேராக ஓடிப் போய்ச் செடிகளைக் கட்டித் தழுவுவார்.

திருமுறை, சித்தாந்தம் என்று பெரிய பயிற்சி எல்லாம் கிடையாது. பூக்கள் தான் திருமுறை; தொடுத்தல் தான் ஓதுதல். (பிறந்த ஆண்டு - 1947; ஊர் - காங்கயம்)

பி. கருணாநிதி (1974) மலராகவே ஆகிவிட்டார். ஒவ்வொரு பூவையும் எடுத்துத் தொடுக்கும் பொழுது, ''அடடா! அம்பாளுக்கு இப்படியிருந்தால் அழகாக இருக்குமே'' என்று பார்த்துப் பார்த்துத் தொடுப்பார். யாராவது குறை சொல்லிவிட்டால் அம்பாளிடம் உருகி வேண்டுவார்.

பாப்பாயி (1950) - (20 ஆண்டு பூ கைங்கர்யம்) தம்பதியினரும்இந்த இன்ப அனுபவத்தில் திளைப்பவர்களே!

சொர்ணத்தக்கா வீடு தேவாசிரிய மண்டபமாகவே திகழ்ந்தது, நல்ல வேளை! நான் தாண்டிப் போக வில்லை. அங்கேயே தங்கிவிட்டேன், கோயிலுக்குத் தான் போக நேரம் இல்லை. இறைவன் புறகு என்று ஒதுக்கமாட்டார்தானே!

அடியவர்க்கு எளியார் அறக்கட்டளை

கரூரில் திருமுறை வழி குடநீராட்டு என்பது எந்த அளவுக்கு உச்சத்தில் இருக்கிறது என்றால் ஒருவர் தன் வீட்டிலேயே பாதி பகுதியைக் கோயிலுக்கு என்று கொடுத்துவிட்டார். கருவறை உட்பட அனைத்தும் அடியார்களே கட்டி முடித்துள்ளனர். காசி போல யார் வேண்டுமானாலும் வழிபாடு செய்யலாம். வீட்டு உரிமையாளரும் அவரது மனைவியாரும் தினமும் அபிடேகமும், வழிபாடும் செய்கின்றனர். அத்தம்பதியர் செந்தில் குமார் (1968) சிவராணி (24.5.1974) ஊர் கரூர்க்கு 5கி.மீ. தொலைவில் உள்ள உப்பிடமங்கலம். அடியார்க்கு எளியார் அறக்கட்டளை என்று நிறுவி வாரம்தோறும் திருமுறைப் பயிற்சி, ஆண்டுவிழா என்று சிறப்பாகச் செய்கிறார்கள். திருமணம் புதுமனை புகுவிழா, மணிவிழா என்று திருமுறை அடிப்படையில் செந்தில் குமார் செய்கிறார்.

இறைவிக்குத் தன் உடலில் பாதி கொடுத்தான் இறைவன்; இறைவனுக்கே தன் இடத்தில் பாதி கொடுத்தார் செந்தில் குமார்.

2. வெள்ளகோயில்

பீ.கே. குமாரசாமி

உப்பிட மங்கலம் செந்தில் குமார் வீட்டில் ஒரு பாதி கொடுத்தார். வெள்ள கோயில் பெரியவர் பீ.கே. ஐயா என்று அன்போடு அழைக்கப்படும் பி-கே. குமாரசாமி அவர்கள் தனது நூற்பு ஆலையில் ஒரு பகுதியில் திருக்கோயில் கட்டியிருக்கிறார். தீந்தமிழில் திருக்குடமுழுக்கு. 23.1.2005ல் தான் குடநீராட்டு நடைபெற்றது. ஆலைத் தொழிலாளர்களே திருப்பணி வழிபாட்டில் பெரும்பங்கு பெற்றனர். அந்த இடமே ஆனந்தமாக இருந்தது. நல்ல காற்று வீசியது. பீ.கே. ஐயா ஆலைத் தொழிலாளர்களின் பிள்ளைகளை நலம் உசாவுகிறார் ''தேவாரம் சொல்லுடா'' என்கிறார், சொல்லுகின்றனர். ஒரே உற்சாக வெள்ளம்!

வீட்டிலே பாதி; நூற்பாலையில் ஒரு பகுதி; மக்களே பெருமானைத் தொட்டு வழிபடுதல்; ஆலைத்தொழிலாளர்கள் எல்லாம் வழிபாட்டில் பங்கு பெறுதல்; என கொங்குச் சைவம் மக்கள் சைவமாக மலர்ந்திருக்கிறது.

வெள்ள கோவில் சைவத்திலும் ஒரு குட்டி வரலாறு இருக்கிறது. 1940ல் அவரைப்பந்தல் சதாசிவ அடிகளாரால் சிவநேசர் சங்கம் தொடங்கப்பட்டது. வேடசந்தூர் பழனிசாமிக் கவுண்டர் வாரந்தோறும் பெரியபுராணம் நடத்தினார்கள். பழனிசாமிக் கவுண்டர் ''தூய வெண்ணீறு'' பாடலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். உரையாசிரியர் சி.கே.எஸ்ஸுக்கு இணையாகப் பேசுவார். 1965ல் மறைந்தார்கள். அப்போது அவர்கள் வயது 60. பீ. கே. குமாரசாமி அவர்கள் இவர்களிடம் தான் சைவ நூல்களைக் கற்றார்கள்.

பீ. கே. ஐயாவின் தாத்தா சிவன் மலைக்கவுண்டர் அவர்களும் திருமுறைகள், சாத்திரங்கள் தெளிவாகச் சொல்வார்கள், பழைய ஏடுகள் வைத்திருந்தார்கள். (மறைவு 1960; வயது 90)

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்த பீ. கே. அவர்கள் மட்டும் எப்படி இருப்பார்கள்? பெரியபுராணம் இவர்களுக்கு கரதலப்பாடம், சாத்திரம், தோத்திரத்திலும் நல்ல பயிற்சி உண்டு, பெரியபுராணம் அச்சில் இல்லாத ஏட்டில் உள்ள இரண்டு பாடல்களைப் (விறன்மிண்டர் வரலாறு) பற்றிக் கூறினார்கள்.

சிவநேசர் சங்கம் 1981-இல் சைவ சித்தாந்தப் பேரவையாக மாறியது. இப்பேரவை மூலம் அறுபத்து மூவர் மண்டபத்தைப் புதுப்பித்து, அறுபத்து மூவர், சேக்கிழார் திருமேனிகளை எழுந்தருளப்பண்ணி வாரந்தோறும் பெரிய புராணச் சொற்பொழிவு நடத்தி வருகின்றார். இல்லங்கள் தோறும் திருமுறை, திருமுறைத் திருமணம் பொருள் ஏதும் பெறாமல் பெரிய புராணச் சொற்பொழிவு செய்து வருகிறார். இவரது மகனாரும் சைவத்தில் ஊக்கம் உள்ளவர். சொற்பொழிவுகளும் ஆற்றுகிறார்.

(பிறந்த ஆண்டு - 1926; தந்தை - கந்தசாமி கவுண்டர், ஊர் - பெரிய அத்திப்பாளையம்)

குருவார இறைவழிபாட்டுக்குழுவினர் : தோற்றம் - 1851 தலைவர் இராமசாமிக் கவுண்டர்; பணிகள் - பிரதோஷ வழிபாடு, மார்கழி மாத வழிபாடு, ஆருத்ரா தரிசனம்.

சிவகுரு சைவசித்தாந்த சபை : தோற்றம் - 1940; பணிகள் - வழிபாடு, சொற்பொழிவு, திருமுறை இசை, சிவராத்திரி விழா.

சித்திவிநாயகர் திருச்சபை : தோற்றம் - 1945; ஆண்டுக்கு ஒரு முறை ஆயிரக்கணக்கான சிவடியார்களை வரவழைத்து, மகேசுவர பூசையளித்தல்.

சிவனடியார் திருக்கூட்டம் : தோற்றம் - 1995; தலைவர் - கயிலைமணி புலவர் பெரியசாமி; வழிபாடு.

நிறைநிலா வழிபாட்டு மன்றம் : தோற்றம் - 2000; தலைவர் உ. சேகர்; பெரியபுராணச் சொற்பொழிவு.

3. கோயம்புத்தூர்

1905-இல் கோவையில் திருச்சிற்றம்பலம் பிள்ளை என்பவர் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கினார். மாணவர்கள் சொற்பொழிவுக்காக இச் சங்கம் தொடங்கப்பட்டது.இங்கே சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தலைவர் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். செயலர் திரு. சி.எம். இராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள், இரு பெரு மக்களின் நூல்களையும் இச்சங்கம் வெளியிட்டது. சி.கே.எஸ். அவர்களின் பெரிய புராண உரையும் இச்சங்கம் மூலம் வெளியானது. தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர், ராமநாதபுரம் ராஜா முதலியோர் இச்சங்கத்தில் உரையாற்றியிருக்கின்றனர். அதில் சைவப்பிரசங்கசாலை என்று ஆரம்பித்தார்கள். இந்த சபை நால்வர் குருபூஜை, சேக்கிழார் குருபூஜை ஆகியன நடத்துகின்றது. மாதந்தோறும் சாத்திர வகுப்பு நடக்கிறது. சி. கே. எஸ் அவர்கள் சேக்கிழார் திருக்கூட்டம் தொடங்கினார். அது இன்றளவும் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநட்சத்திரத்தன்று இத்திருக்கூட்டத்தார் திரு வஞ்சைக்களம் சென்று சுந்தரர் குருபூஜை, மகேசுவர பூஜை நடத்து கின்றனர்.

பெரியபுராணச் சொற்பொழிவு

1918களில் கயப்பாக்கம் சதாசிவஞ் செட்டியார் அவர்கள் கோவை வைசியர் வீதியில் இருந்த சி.எஸ். இரத்தின

சபாபதி முதலியார் அவர்கள் வீட்டில் நாள் தோறும் பெரிய புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பெரியபுராண நிறைவு நாளன்று பெரியபுராணத்தை யானை மேலேற்றி முழவொலியோடு நகர் வலம் செய்து ஆயிரம் ருபாய் வெள்ளி நாணயமாகவே அவருக்குப் பரிசளித்தனர். கயப்பாக்கம் ஐயா அவர்கள் சொற்பொழிவின் போது சி.கே.எஸ் அவர்கள் கையேடு படிப்பார்கள். அத்துடன் செட்டியாரவர்கள் சொல்லும் கவிநயம், தேவார ஒப்புமைப்பகுதி முதலியவற்றை எழுதி வைத்துக் கொள்வார். இவற்றையே சி.கே.எஸ் அவர்களின் விரிவாக்கி ''பெரிய புராணம் பேருரை'' எனப்பல பகுதிகளாக வெளியிட்டார்.

(i) சி.சு. கண்ணாயிரம்

சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் ''பெரிய புராணம் பேருரை'' நான்காம் பதிப்பாக இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அவர்களது வாரிசு முறையில் உள்ள திரு. சி.சு. கண்ணாயிரம் அவர்களே ஆவார். வீடு முழுமையும் பெரிய புராணம் கட்டு? கட்டாக வைக்கப் பட்டிருந்தது. கண்ணாயிரம் அவர்களுக்கு என் தந்தையார் பற்றிய பழைய நினைவுகள் வந்துவிட்டன. ''எனக்கு முதலில் வேலை வாங்கித் தந்தவர்கள் உங்கள் தந்தையார்'' என்றார் கண்ணாயிரம் அவர்கள். பெரியபுராணம் பதிப்போடு தன்னுடைய பணியை நிறுத்திக் கொள்ளவில்லை. பச்சை நாயகியம்மன் சோடசோபசாரமாலை, வடகயிலைபாதி தென்கயிலை பாதி வெண்பா அந்தாதி, நடன அஞ்சலி, கோளறு பதிகம் உரை, திருச்சி பதிகம் உரை, ஞானமூர்த்தி சன்னிதிமுறை, அருவச்சித்தர் பிள்ளைத்தமிழ், சிவ பரத்துவ விளக்கம், பிரதோஷ விளக்கம் ஆகிய நூல்களை வெளியிட்டார். இவர்கள் வாழ்நாள் சாதனையாக திருவாசக உரை எழுதி வருகிறார்கள். முதற்பகுதி சிவ புராணம் முதல் போற்றித் திரு அகவல் வரை உள்ளது. பக்கங்கள் 410 விலை - ரூ.80.00 இரண்டாம் பகுதி திருச்சதகம் 496 பக்கங்கள் : விலை ரூ. 100.00 எனக்கு ஒரே மகிழ்ச்சியும், வியப்புமாய் இருந்தது. இந்த இரண்டாண்டு கால ''தொண்டர் தரிசன''யாத்திரையில் எத்தனை அரிய செய்திகள் - கருவூலம் எனக்கு கிட்டியது என்று நினைக்கும் பொழுது இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். தமிழ்நாடே தேவாசிரிய மண்டபமாயிற்று.

இதிலும் ஒரு ஒற்றுமை, கயப்பாக்கம் ஐயா அவர்கள் பெரிய புராணம் நடத்த சி.கே.எஸ். அவர்கள் பெரியபுராணப் பேருரை வழங்கினார்கள். இங்கே கு.நடேசக் கவுண்டர் திருவாசகம் நடத்த கண்ணாயிரம் அவர்கள் திருவாசகப் பேருரை வழங்கியுள்ளார்கள்.

''திருவாசகத்தை நான் பலகாலம் படித்த பொழுது ஆங்காங்குக் குறிப்புகள் எழுதியுள்ளேன். அவற்றை யாரிடமேனும் ஒப்படைத்துவிட நீண்ட காலமாக எண்ணி வந்தேன். அதற்கு உங்களைத் தேர்ந்தெடுத்து விட்டேன்.

அடுத்த வகுப்பிலிருந்து திருவாசகம் பாடம் தொடங்கும்'' என்று கு. நடேசக்கவுண்டர் அவர்கள் கண்ணாயிரம் அவர்களிடம் கூறினார்கள்.

இவ்வாறு 4.10.1964 திருவாசக வகுப்பு தொடங்கிற்று. கண்ணாயிரம் அவர்கள் குறிப்புகள் எடுத்துக் கொண்டு ஓய்வு நேரத்தில் அவற்றை விரிவாக்கி எழுதத் தொடங்கினார். எழுதியவற்றைப் பகுதி பகுதியாகக் கவியரசு அவர்களிடம் கண்ணாயிரம் அவர்கள் கொடுத்து வந்தார்கள். திருவெம்பாவை ஏற்கனவே கவியரசு அவர்கள் விளக்க உரையுடன் அச்சாகியிருந்தது. திருவம்மானைக்கும் ஓர் விளக்க உரை எழுதி வைத்திருந்தார்கள். வகுப்புகள் 25.10.1970ல் நிறைவுற்றன. 31.12.1970ல் கண்ணாயிரம் அவர்கள் உரை எழுதும் பணி முற்றுப் பெற்றது. கவியரசு அவர்கள் பார்வையிட்டபின் மகிழ்ச்சியுடன் திருப்பித் தந்தார்கள்.

பின்னர் கண்ணாயிரம் அவர்கள் திருவாசகத்துக்கு ஏனைய பெருமக்களின் உரைகளையும் ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் பெற்றுப் படித்து வந்தார்கள். பிற நூல்களைப் பயிலும் போது திருவாசகம் பற்றிய குறிப்புகள் வந்தால் அவற்றையும் திரட்டலானார். கவியரசு அவர்கள் குறிப்புரையில் உரிய இடங்களில் அவற்றைப் பதித்து வைத்தார். சிவக்குடில் குருதேவர் சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுவர சுவாமிகள் சிவக்குடிலின் சார்பில் வெளியிடப் பணித்தார்கள். நமக்கு ஒரு பேருரை கிடைத்தது.

கண்ணாயிரம் அவர்கள் வாராவாரம் திருமுறை சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார்கள். பெரியபுராணம், மெய்கண்ட சாத்திரம், பேரூர்ப்புராணம் பாம்பன் சுவாமிகளின் நூல்கள் - வகுப்புகளும் எடுத்துள்ளார்.

(பிறந்து ஆண்டு 29.11.1920 பிறந்த ஊர் சின்னதாராபுரம் பழைய திருச்சி மாவட்டம்.)

(ii) சிவக்குடில்

இத்தனை அருமைப்பாடு உடைய திருவாசக விளக்கவுரை வெளியிட்டு வரும் சிவக்குடிலுக்கு நாம் செல்கிறோம். ஸ்ரீ சித்தர் ஞானபாடசாலை என்ற சிவக்குடிலில் குருதேவர் சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுர சுவாமிகள் அருளாட்சி செய்கின்றார்கள்

சுவாமிகளின் பூர்வாசிரமப் பெயர் இரத்தின குமார். கோவை மாவட்டம் பவானி சாகரில் 30.4.1953ல் சுந்தரம் - சரஸ்வதி தம்பதியார்க்கு இரத்தினகுமார் பிறந்தார். 1982களில் அவர் பால் சிவ சித்தர் இறங்கி அவரோடு ஒன்றி இருக்கலானார். பல நேரங்களில் இரத்தினகுமார் அருவ நிலையில் உள்ள சிவ சித்தருடன் பேசியும் சிரித்தும் உரையாடி வந்தார். பார்ப்பவர்கள் பைத்தியம் எனக் கருதலானார்கள். பலமுறை சிவசித்தர் இரத்தின குமாரைக் காப்பாற்றியுள்ளார். சிவ சித்தர் இவரைத் துறவுக் கோலத்தில் செலுத்தினார். ''சித்தாந்த சைவமே மிக உயர்ந்த நிலையில் மகாமரபு என்ற பெயரில் முன்னர் இந்நாட்டில்

விளக்கம் பெற்றிருந்தது. இம்மகாமரபு மீண்டும் மறுமலர்ச்சி எய்த நாம் இப்பொழுது முயன்று வருகிறோம்'' என்று சிவசித்தர் அருள்வாக்கு மூலம் தெரிவித்தார். இரத்தினகுமாருக்கும் சர்வோத்தம சச்சிதானந்த நாதேஸ்வரன் என்னும் தீட்சா நாமமும் சூட்டினார்.

தொடக்கத்தில் ஓலைக்குடிசையில் பணிகள் தொடங்கி. படிப்படியாகச் சித்தர் ஞான பாடசாலை, கருவறை, ஞானக் கூடம், சரக்கறை, ஒடுக்கம் போன்றவை நிலையான கட்டிடங்ளில் தோன்றின.

ஞாயிறு, புதன், சனிக்கிழமைகளில் மட்டும் பொதுமக்களுக்காக உலகியல் அருள்வாக்கு கூறப்படுகின்றது. செவ்வாய்க்கிழமைகளில் யோக நெறி பற்றியும், வியாழக்கிழமை ஞான நூல்கள் பற்றியும், சிவக்குடில் அன்பர்கள் தங்கள் ஐயங்களைத் தெரிவித்துத் தெளிவு பெறுகின்றனர். மகளிரும் அன்பர்களும் இசைவளம் பெற்றுத் திருமுறைவாணர்களாக உயர்ந்து வருகின்றனர். எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும் மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரையும் மெய்கண்ட சாத்திர நூல்கள், திருமுறைகள் பற்றிய வகுப்புகள் நிகழ்ந்து வருகின்றன.

மே மாதத்தில் 10 நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை சென்னியப்பனார், சிவம் ஐயா மற்றும் சைவ அறிஞர்களின் சைவ சித்தாந்த, திருமுறை சொற்பொழிவுகள், ''சிவஞான வேள்வி'' என்ற பெயரில் நடைபெறுகிறது. 2005ல் பதினாறாவது சிவஞான வேள்வி நடைபெற்றது. நூல்கள் பல வெளியிடப்படுகின்றன. சி.சு. கண்ணாயிரம் அவர்களின் திருவாசக விளக்க உரை தொகுதி தொகுதியாக வெளிவருகின்றது.

(iii). ஸ்வர்ணா சோமசுந்தரம்

கோவைச் சைவத்தின் பண்பு சைவ போதனை எனலாம். கயப்பாக்கம் ஐயா பெரியபுராண்ணம் சொல்ல சி.கே.எஸ். உரை எழுதினார்கள். நடேசக் கவுண்டர் திருவாசகம் சொல்ல கண்ணாயிரம் உரை எழுதினார்கள். 1967 முதல் 1977 வரை முத்து. சு.என்று பல்லோராலும் அழைக்கப்பட்ட தொண்டை மண்டல ஆதீனம் 229 ஆம் பட்டம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் ஸ்வர்ணா சோமசுந்தரம் சாத்திரப் பயிற்சி பெற்றார். சுவாமிகள் நடத்திய ''திருவருட்பயன்'' விளக்கத்தை ஒலிநாடாவில் பதிவு செய்து அம்மையார் அவர்கள் நூலாகவும் வெளியிட்டுள்ளார்கள். சுவாமிகள் அம்மையார்க்கு சமய தீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை முதலிய வற்றினை முறையாகக் கொடுக்க அம்மையார் நாளும் சிவ பூசை செய்து வருகின்றார்கள். சுவாமிகளின் ஆணைப் படி அம்மையார் விரும்புவோருக்குத் தீட்சை கொடுத்து வருகிறார்கள். சுவாமிகளிடம் பெற்ற ஞானத்தைக் கொண்டு தமிழ்நாடு, இலங்கையில் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவற்றையெல்லாம் தொகுத்து ''குருவருட் பயன்'' என்ற நூலாக வெளியிட்டுள்ளார். பாரதீய வித்யா பவனில் சைவ சித்தாந்த வகுப்பு நடத்தினார்.

இவரது தமக்கையார்இசையரசி சேலம் ஜெயலட்சுமி அவர்களே இவருக்கு இசை ஞானம் ஊட்டியது இவர் அடைந்த நற்பேறாகும். திருமுறை நுணுக்கங்களைத் தருமபுரம் சுவாமிநாதன், திருவாவடுதுறை சோமசுந்தர தேசிகர், திருக்களர் சுந்தரேச தேசிகர் ஆகிய ஓதுவா மூர்த்திகளிடம் கற்றுக் கொண்டார். தமிழ்நாட்டு இலக்கிய, சமய மேடைகளில் அம்மையார் திருமுறை இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்கள். அற்புதத் தேவாரங்கள், இடர்களையும் பதிகங்கள், திருமுறை ஊர்வலப்பாடல்கள், சம்பந்தர் தேவாரம், திருவாசகத் தேனிசை, சிவன் (முழுமையும் 13 தேசம்) நாமாவளி என ஒலிநாடாக்கள் மூலம் திருமுறை இசை பாடிப் பரவியுள்ளார்கள். தன்னுடைய இசையறிவினைக் கொண்டு தேவார திருவாசகங்களை இசையோடு பாட கற்றுத் தருகிறார்கள்.

ஸ்வர்ணா சோம சுந்தரம் அம்மையாரின் மாமனார் - மாமியார் 45 முறை பன்னிரு திருமுறைகளை ஓதியுள்ளனர். இவர்களது இல்லமே 70 ஆண்டுகளுக்கு முன் சி.கே.எஸ் அவர்களால் சிவபூசை நிகழ்த்தப் பெற்று இல்புகுவிழா நடந்த இடமாகும். கணவர்சோமசுந்தரம் இவர்களுக்கு நல்லாதரவு கொடுத்து வந்துள்ளார். இவரது மருமகள் டாக்டர் நீலா வெங்கடாசலமும் சைவ சித்தாந்தம், திருமுறைகள் கற்றவர். திருமுறைப் பாடல்களுக்கேற்ப நடனம் ஆடுவார். இவரது மகன் வயிற்றுப் பேத்தி கருணாசாகரி தேவாரம் அழகாகப் பாடுகிறார். பேரன், பேத்தி உட்பட அனைவரும் தீக்கை எடுத்து உள்ளனர். தமிழ்நாட்டில் சைவக் குடும்பம் என்றால் நூற்றுக்கு நூறு ஸ்வர்ணா அம்மையாரின் குடும்பத்தைத் தான் சொல்லலாம்.

அம்மையார் இல்லமே கோயிலாகத் திகழ்கிறது. உள்ளே நுழைந்தவுடன் வரவேற்பு அறையில் ஆறடி உயரத்திற்கு ஆடல்வல்லான் சிலை அமைத்திருக்கிறார். ஆடல்வல்லானுக்கு எதிரே நால்வர் பெருமக்களின் படிமங்கள், அழகாகக் கொன்றை மலர்களைத் தொடுத்து மாலையாக அணிவித்துள்ளார்கள். இதுதான் 'ஸ்வர்ண சபை', இங்கே வழிபாடு, சாத்திர, தோத்திர வகுப்புகள் நடக்கின்றன. 1961லிருந்து பன்னிரு திருமுறைப் பாடல்களைப் பயிற்றுவிக்க வாரம் இருமுறை இலவசப் பயிற்சி வகுப்புகள் இங்கு நடைபெறுகின்றன.

ஸ்வர்ணா அம்மையார் திருநெறிய தமிழ் மன்றம் என்று துவங்கி திங்கள் மாலை 6.00 - 7.30 திருமுறை வகுப்பு, புதன் மாலை 6.00 - 7.30 சைவ சித்தாந்த வகுப்பு, வெள்ளி மாலை 6.00 - 7.30 திருப்புகழ் இசை வகுப்பு, சனி மாலை 5.30 - 6.30 சிறுவர் சிறுமிகளுக்கான திருமுறை இசை வகுப்பு என அம்மையாரே நடத்துகின்றார். அனைத்து வகுப்புகளும் இலவசம். இம்மன்றம் திருவாசகத்தை மாதந் தோறும் மூன்றாம் சனிக்கிழமைகளில் ஆர்.எஸ்.புரம் இரத்தின விநாயகர் கோயிலில் இசையோடு முற்றோதல் வழிபாடு செய்து வருகிறது. அதே திருக்கோயிலில் அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் திருமுறை பாராயண கூட்டு வழிபாடு செய்து வருகின்றது. நான்கு ஆண்டுகள் திருமுறை ஊர்வலம் நடந்தது.

பேசாமல் கோவையிலேயே போய் தங்கிவிடலாமா?

(பிறந்த ஆண்டு - 14.2.1942; பிறந்த ஊர் -சேலம்; பெற்றோர் - சுப்பிரமணிய முதலியார். நீலாம்பாள்; கணவர் - ஆர். சோமசுந்தரம்)

(iv). சிவனடியார் திருக்கூட்டம்

ஆகஸ்டு 21, 2005. மயிலாடுதுறையில் சைவ சமயத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மயிலாடுதுறையில் பரிசளிப்பு விழா.

மாணவர்களுக்குப் பரிசுத் தொகை தவிர பலவகையான பரிசுகள், நூல்கள், தந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தேன். 21ம் தேதி நிகழ்ச்சி, 20-ஆம் தேதி இந்தச் சிந்தனை; ஒரு நாளில் எவ்வளவு சேகரிக்க முடியும்?

அஞ்சல் அலுவலர் ஒரு பெரிய பார்சலைக் கொண்டு வந்து கொடுத்தார். கோவை சிவனடியார் திருக்கூட்டம் ''சிவகவசம்'' என்ற நூலின் பிரதிகளில் நாற்பது அனுப்பியிருந்தனர். நான் அவர்களை ஏதும்கேட்கவில்லை. காலத்தால் செய்த உதவி. மாணவர்களுக்கு வழங்கி விட்டோம்.

ஏதேனும் சிறு நூல்கள் அச்சிட்டு இலவசமாகக் கொடுப்பதே இவர்கள் பணி. ஆண்டுக்கு ஒரு முறை கோபுர தரிசனம் கோடி புண்ணியம், அண்ணாமலையாரின் ஐஸ்வர்யேஸ்வரர், கண்தானம் செய்வோம் (கண்ணப்பர்). நால்வர் நிகழ்த்திய அற்புதங்கள் என்று வண்ணப்படங்களாக அச்சிட்டு இலவசமாக வழங்குகிறார்கள். கோவையில் இவர்கள் படங்கள் இல்லாத கடைகள் கிடையாது 80,000 படங்கள் அச்சிட்டுத் தந்துள்ளனர். பத்து ஆண்டுகளாக இப்பணி நடைபெறுகின்றது. பொறுப்பு - வடிவேல் கண்ணன்.

(v) திருப்பணி திருமுறைப்பணிகளால் தமிழகத்தில் அருட்பணி செய்துவரும் அரும் தொண்டர்

இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதி... ...

இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்க காலம்... ...

தமிழகம் செய்த தவப்பயனால் கொங்கு நாட்டில் ஒரு பேரியக்கம் தோன்றியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 274 பாடல்பெற்ற தலங்களில் உள்ள திருக்கோயில்களையும் திருப்பணி செய்து குடநீராட்டு நடத்த வேண்டும் என்ற இலட்சிய வேட்கையோடு அவ்வியக்கம் இயங்கி வருகிறது.

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில் மாடம் எழுபது செய்து லகமாண்ட
திருக்குலத்து வளச் சோழன்''

[பெரிய திருமொழி - திருமங்கையாழ்வார்]

என்று பாடப்பெற்ற சோழப் பேரரசன் கோச்செங்கணானே எழுபது சிவாலயங்களே எழுப்பினான். ஆனால் இந்தப் பேரியக்கமோ இதுவரை 186 ஆலயங்களுக்கு மேல் திருப்பணி செய்து குடநீராட்டு விழாவும் முடித்துள்ளது. இன்னும் 20 ஆலயங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. (21 பிப்ரவரி 2005) இது ஒரு பெரும் சாதனை! இதுபோல இதற்கு முன்னும் நிகழ்ந்ததில்லை; இதற்குப் பின்னும் நிகழப்போவது மில்லை. இச்செயற்கரிய செயலை முன்னின்று நடத்திக் கொண்டிருப்பவர் கோவை திரு வசந்தகுமார் அவர்கள் ஆவார்.

இவருக்கு எப்படி இந்த எண்ணம் தோன்றியது? 1980களின் பிற்பகுதியில் ஆவுடையார் கோயில் எனப்படும் திருப்பெருந்துறை திருக்கோயில் குடநீராட்டு விழாவை வசந்தகுமார் முழுமையாகக் கண்டு களித்தார். அப்பொழுதே அவருக்குச் சைவச் சிந்தனை தோன்றலாயிற்று.

சிந்தனை செயல்வடிவம் பெற்றது எவ்வாறு? கோவை - பொள்ளாச்சி சாலையில் ஒற்றைக் கால் மண்டபம் என்ற ஊரில் சாலையை ஒட்டி முன்னதாக உள்ள சிவாலயம் மிகவும் சிதிலம் அடைந்து இருந்தது. கிராமப் பெருமக்கள் இவரை அணுகி அச்சிவாலயத் திருப்பணி மேற்கொள்வது பற்றிக் கலந்து பேசினார்கள். ஒற்றைக் கால் மண்டபம் சிவாலயம் 27 ஆண்டுகள் பன்றிகளின் புகலிடமாயிருந்தது. உள்ளே நுழையவே முடியவில்லை.வசந்த குமார் அவர்களும், கிராம மக்களும் சேர்ந்து தாங்களே மண்வெட்டி, கடப்பாரை, கொண்டு கழிவுகளை அகற்றித் துய்மை செய்யலானார்கள். காலையில் பணி தொடங்கினால் இரவு 8.30 வரை தொடர்ந்து பணிபுரிந்தார்கள். 8.30 மணி முதல் 9.30 வரை வழிபாடு செய்தார்கள். அதுதான் தங்களுக்கு உறுதி கொடுத்தது என்றார் வசந்தகுமார்.

ஒற்றைக்கால் மண்டபத் திருப்பணி சைவ வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்து விட்டது.

ஒற்றைக்கால் மண்டபம் சிவாலயத்தினைக் கற்றளியாக எடுப்பித்து வந்த பொழுது வசந்தகுமார் குழுவினருக்குப் பல ஐயங்கள் எழுந்தன. சோழ நாட்டில் உள்ள எண்ணற்ற ஆலயங்களை வழிபட்டு அவற்றின் கட்டிட அமைப்புகளைக் கூர்ந்து கவனித்தால் தங்கள் ஐயங்கள் தீரும் என்று சோழ நாட்டுத் தலயாத்திரை மேற்கொண்டார். அத்தலயாத்திரையின் போது நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு ஆலயங்கள் முழுதும் இடிந்தும் - பகுதி இடிந்தும் - செடிகள் மரங்கள் முளைத்தும், பராமரிப்பின்றி இருந்தன. சில கோயில்களில் பூசனை இல்லாமல் இருந்தன. வசந்தகுமார் மனம் நெகிழ்ந்து போனார்.

ஐயம் தீர்க்க வந்தவர்!

வையம் காக்கப் புறப்பட்டு விட்டார்.

சிறிய அளவில் தொடங்கிய பணி இன்றைய நாளில் 86 சிவாலயத் திருப்பணிகளின் நிறைவில் வந்து மேலும் தொடர்கின்றது. இந்தத் திருப்பணிகளை மேற்கொள்ளும் பொழுது அவர்கள் பட்ட இன்னல்கள் அளப்பரிய. நிர்வாகச் சிக்கல், ஊராரை இணைத்தல், அறநிலையத்துறை அமைதி பெறல் எனப் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்தன. திருவாதவூர்த் திருப்பணி மிகவும் கடினமான திருப்பணி ஆகும். சுற்றுச் சுவர் முழுமையும் சிலந்திக் காடுகள் மண்டிக் கிடந்தன. அகற்றவே முடியவில்லை. டிராக்டர்கள் கட்டி இழுக்க வேண்டிய நிலை. மூன்று முறை முயன்று சிரமப்பட்டுப் பணிமுடித்தார்கள். அரிவாள்களின் முனை பலமுறை மழுங்கிப் போய்விட்டது. திருந்துதேவன் குடி கர்க்கடேசுவரர் ஆலயத்தில் கால் வைக்கும் இடமெல்லாம் பாம்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. காலில் மிதியடிகள் அணிந்து கொண்டு ஆலயத்திற்குள் செல்ல வேண்டிய நிலை.

திருவிளையாட்டம் திருக்கோயில் கருவறையில் வெளவால் புழுக்கைகள் குவிந்து கிடந்தன. மண்வெட்டி கொண்டு அகற்றினார்கள். பன்றிக் கழிவுகள், வெளவால் புழுக்கைகள், சிலந்திக் காடுகள், மரங்கள், செடிகள், இடிபாடுகள், பாம்பு, தேள்கள் நடமாட்டம் என்ற நிலை மாறி சிவாலயங்கள் துய்மையாக்கப்பட்டுச் செப்பம் செய்யப்பட்டு வண்ணப்பூச்சு அடிக்கப்பட்டு அருள் பொழியும் திருக்கோயில்களாக மாறியுள்ளன. இது ஒரு அற்புதம் அல்லவா?

வசந்தகுமார்

கோவையில் இருக்கும் வசந்தகுமாரால் இதனை எப்படி செய்ய முடிந்தது?

வசந்தகுமார் திங்கள் முதல் வெள்ளி வரை கோவையில் இருந்து தன் தொழிற்சாலைப் பணிகள, கல்லூரிப் பணிகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார். வெள்ளிக்கிழமை மாலை காரில் கிளம்பி இரவோடிரவாக திருவையாறு சுற்றுலா மாளிகை வந்து விடுகிறார். சனிக்கிழமை காலை மூவலூர் வந்து விடுகிறார். திருப்பணிக்குழுவினர், கிராமப் பெரியவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். வசந்தகுமார் வந்தவுடன் அனைவரையும் கூட்டி திருப்பணி வேலைகள் பற்றி வினாவுகிறார். வளர்ச்சி குறித்தும், நிதி நிலை குறித்தும் அனைவரையும் கலந்து கொண்டு முடிவெடுக்கிறார். அம்மன் சன்னிதி, திருப்பணி, முருகன் சன்னிதி திருப்பணி, என்றெல்லாம் பிரித்துக் கொடுக்கிறார். யாரும் ஏற்றுக் கொள்ளாத திருப்பணியைத் தான் ஏற்றுக் கொள்கிறார். மன நிறைவோடு வழுவூரை நோக்கி விரைகிறார். அங்கு திருப்பணி வேலையே துவங்கவில்லை. நிர்வாக அதிகாரியுடன் கோயிலை முழுமையாக வலம் வந்து எங்கெங்கு பழுதாகியுள்ளது? என்னென்ன திருப்பணி உள்ளன? என்று ஆராய்கிறார். அதன்பின் திருவாளப்புத்தூர் செல்கிறார். இதே போல ஞாயிற்றுக்கிழமை மூன்று அல்லது நான்கு கோயில்களைப் பார்வையிடுகின்றார். சிலவற்றிற்குத் துவக்கநிலை; சில கோயில்கள் திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கும் நிலை; சிலவற்றிற்குக் குடநீராட்டு விழாவிற்கு நாள் குறித்தல் எனப் பல நிலைகளில் இருக்கும். அந்தந்த கோயில்களுக்கு ஏற்ற வகையில் - பணிகளை மேற்கொள்கிறார். ஞாயிறு இரவு விடிய விடிய கோவை சென்று விடுகிறார். வார இறுதியில் ஒவ்வொரு தொழிலதிபரும் மனமகிழ்ச்சிக்காக எங்கேனும் ஓய்வெடுக்கச் செல்வர். ஆனால் வசந்தகுமாருக்கோ திருக்கோயில் திருப்பணி தான் மனமகிழ்வுதரும் செயல்.

இது வசந்தகுமார் ஒரு நாளில் மேற்கொள்ளும் பயணத்திட்டம் ஆகும். திருப்பணி வேலைகைள எப்படி பார்க்கிறார்?

தம் ஊர் ஆலயம் திருப்பணி செய்ய வேண்டும் என அணுகும் அடியவர்க்ளிடம் ஆலய நிலை, பூஜை நடைமுறை இதர தொடர்புடைய விவரங்களைக் கேட்டறிந்து பின் குறிப்பிட்ட · ஒரு நாளில் முன் அறிவிப்புடன் அவ்வூருக்குச் சென்று இறைவனை வழிபட்டு ஆலய அமைப்பு முறை, கட்டிட நிலை இதர விவரங்களை ஆய்வு செய்து திருப்பணி, ஆலய வழிபாடு விவரங்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அரசு அனுமதி பெற வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் கூறி பாலாலயத்திற்கு நாள் குறித்துக் கொடுத்தல்; பணிகளில் பங்கேற்க முன் வரும் நன்கொடையாளர்கள், கட்டுமானப் பொருட்கள் வாங்கிக் கொடுக்கும் நன்கொடை

யாளர்கள் பட்டியல் தயார் செய்தல், பிறகு பாலாலயம் செய்யும் நாளிலோ வேறு ஒரு குறித்த நாளிலோ ஊர் மக்களைக் கூட்டி நன்கொடையாளர்கள் முன்னிலையில் ஒவ்வொரு பணிக்கும் மதிப்பு கணக்கிட்டுக் கொடுத்துத் திறமை மிக்க ஸ்தபதியிடம் பணியை ஒப்படைத்தல்; தாம் செய்யும் பணிக்கு மதிப்புக் கணக்கிட்டு அன்றே ஸ்தபதியிடம் முன் பணம் கொடுத்துத் துவக்குதல்; மாதம் ஒரு முறை பணி முன்னேற்றம் ஆய்வு செய்தல்; பணிகளில் தொய்வு ஏற்படும் நிலைகளில் மக்களைக் கூட்டி ஊக்கப்படுத்தி விரைவு படுத்துதல், இவைதான் வசந்தகுமார் மேற்கொள்ளும் பணிகள்.

வசந்தகுமாரின் பணி சோழ நாட்டுடன் நின்றுவிடவில்லை. கொங்கு நாடு, தொண்டை நாடு, நடு நாடு, பாண்டி நாடு எனத் தமிழ்நாடு முழுமையும் விரிவடைந்துள்ளது.

வசந்தகுமார் ஒவ்வொரு ஊருக்கும் செல்லும் பொழுது திருப்பணி மேற்பார்வையோடு முடித்துக் கொள்வதில்லை. திருமுறைப்பாக்களடங்கிய சிறுநூல்களை அச்சிட்டு ஒவ்வொரு ஊருக்கும் செல்லும் போது அங்குள்ள சிறுவர்கள், பெண்கள் பெரியோர்களிடம் வழங்கித் தான் படிக்க அவர்களைச் சொல்லச் சொல்லி, அவற்றை நாளும் படிக்க வேண்டிய அவசியத்தையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கி மக்களிடம் இறைவனார் மீதும், திருமுறைகள் மீதும் ஈர்ப்பு ஏற்படுத்தி வருகிறார்.

அனைத்துச் சிவாலயங்களிலும் பூஜைகள் திட்டமிட்டவாறு வரையறை செய்தும் ஏறுபடிகள் விழாக்கள் நடத்தியும் வேத வேள்விகளைப் பெருமளவில் இயற்றியும் சிறுதெய்வ வழிபாடுகள் செய்தல், புற நெறிகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றைத் தவிர்த்தும் எல்லாம் வல்ல சிவபெருமானை முன்னிலைப்படுத்தி ஆற்றினால் இறைவன் எல்லா நலன்களும் தருவார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு துவக்கமாக இவரது பணிகள் உள்ளன.

திரு. வசந்தகுமாரின் சிவாலயத் திருப்பணிகளே இருபது - இருபத்தோராம் நூற்றாண்டுகளில் நிகழும் சைவ மறுமலர்ச்சியின் உச்சம் எனலாம். வசந்தகுமாரின் பணிகள் இவற்றுடன் நிற்கவில்லை. கோவையில் இவர் நடத்தி வரும் சைவ சமயக் கருத்தரங்குகள் சைவ மறுமலர்ச்சியின் இரண்டாம் பாகம் ஆகும்.

2000 விருந்து 2005 வரை வசந்தகுமார் தன்னுடைய கற்பகம் கலை அறிவியல் கல்லூரியில் பன்னிரு திருமுறை ஆய்வு மையத்தின் சார்பில் 35 கருத்தரங்குகள் நடத்தியுள்ளார்.

2000 : பிப் 18, 19 - பன்னிரு திருமுறைகள் தொடக்க விழா; ஜூன் 23 . பன்னிரு திருமுறைகள் இசைப் போட்டி; ஆகஸ்டு 12, 13 - நால்வர் ஆராதனை விழா.

2001 : மே 14, 15, 16 - பெரியபுராணப் பயிலரங்கம், ஜூன் 16, 17 - திருமந்திர மாநாடு, ஜூலை 22 - பன்னிரு திருமுறை இசைப்போட்டி, செப் 29 நால்வர் ஆராதனை விழா; டிச 26 - திருக்கூத்து தரிசனம்.

2002 : மார்ச் 10 - சிவஞானபோதக் கருத்தரங்கம்; மார்ச் 24 - மாணிக்க வாசகர் கருத்தரங்கம்; மே 26 - திருவாசகம் முற்றோதல்; ஜூன் 8 - சித்தர்கள் தத்துவக் கருத்தரங்கம்; மே 26 - திருவாசகம் முற்றோதல்; ஜூன் 8 சித்தர்கள் தத்துவக் கருத்தரங்கம்; ஜூன் 30 அகத்தியர் தேவாரத்திரட்டு; ஜூலை

28 - கழுமல முதுபதிக்கவுணியன் கட்டுரை செப் 22 - திருப்புகழ் இசை வழிபாடு; அக் 18 தெய்வத்தமிழும் திருஞானசம்பந்தரும், டிச 15 - சீர்காழிச் செல்வரின் சிவஞானம்.

2003 : ஜன 4, 5, திருஞான சம்பந்தர் தமிழிசை பண் விளக்கமும் பாடும் முறையும்; பிப் 16 - சம்பந்தர் இசை வழிபாடு, மே 17, 18 - திருமந்திர மாநாடு; ஜூலை 19, 20 - பெரியபுராணக் கருத்தரங்கம்; டிச 27, 28 - திருவாசக மாநாடு.

2004 : பிப் 22, 23 - பாடல் பெற்ற கொங்கு நாட்டுத் திருக்கோயில்கள்; மார்ச் 21 - மகிமை தரும் மகேசுவர மூர்த்தங்கள்; மே 15 - சந்தத் தமிழில் கந்தக் கடவுள்; மே 16 - எண் குணத்தீசன் - எங்கள் பெருமான்; ஆக 7, 8 - சிவக்கோலங்கள், அக் 2, 3 நால்வர் ஈசன்பால் அன்பே டிச 12 - சிவஞான சித்தியார் சிந்தனைகள்.

2005 : பிப் 26, 27 முருகன் அருட்சிலை காணும் வழிபாடு; ஜூலை 30, 31 ஈசன் தாம் விரும்பும் உண்மை யாவது பூசனை அக் 22, 23 - திருஞானசம்பந்தரும் திருத்தல வழிபாடுகளும்.

மாதத்திற்கு ஆறு கருதத்தரங்கக் கூட்டங்கள். அந்தக் கருத்தரங்க அழைப்பினைப் பார்த்தாலே மலைத்துப் போவீர்கள். தனி நூல் போல அமைந்திருக்கும். இந்த அழைப்பிதழ்களை வைத்தே ஒரு முனைவர் பட்டம் வாங்கலாம். அப்படி ஒரு கருத்துச் செறிவு. பெரிய புராணக் கருத்தரங்கம் - இரண்டு நாட்கள் எட்டு அறிஞர்கள் உரை. இக்கருத்தரங்க நிகழ்ச்சியை அச்சடிக்க இரண்டு பக்கம் போதும். ஆனால் வசந்தகுமார் 20 பக்கங்களில் அச்சடித்துள்ளார். எட்டு தலைப்புகளும் எட்டு அறிஞர்களும் வருமாறு!

1. மதிசூடும் அண்ணலார் தம் திருத்தொண்டர் புராணம் ஒரு வாழ்வியல் நூல் - வாழ்வியலை விளங்க வைப்போர் புலவர் வி. இராமமூர்த்தி.

2. ஆலின்கீழ் நால்வர்க்கு அன்று அறமுரைத்த அங்கணர்தம் திருத்தொண்டர் புராணம் ஓர் அறநூல் - அறவழிப்படுத்துவோர் முனைவர் ம. இராமகிருஷ்ணன்.

3. தழுவக்குழைந்த மணிமேனியர் தம் திருத்தொண்டர் புராணம் ஒரு வழிபாட்டுநூல். வழிபடச் செய்வோர் புலவர் எ. வேலாயுதம்.

4. பவ பாசம் அறுத்தவர் தம் திருத்தொண்டர் புராணம் ஒரு மெய்கண்டநூல் - மெய்ம்மை நிறுத்துவோர் சிவத்திரு அ. தியாகராசன்.

5. நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றார் தம் திருத்தொண்டர் புராணம் ஒரு ஞான நூல் - ஞானம் தெரிப்போர் முதுபெரும் புலவர் மு. கணபதி.

6. சென்னிமதி அணிந்தார் தம் திருத்தொண்டர் புராணம் ஓர் அருள்நூல் - அருள்வழி காட்டுவோர் முனைவர் மு.சிவச்சந்திரன்.

7. நூலின் கட் பொருள்பாடி நூலறிவார்க்கீந்தார் தம் திருத்தொண்டர் புராணம் ஓர் இலக்கிய நூல் - இலக்கிய விருந்து படைப்போர் முனைவர் மு. பழனியப்பன்.

8. விழியேந்திய நெற்றியினார் தம் திருத்தொண்டர் புராணம் ஒரு வரலாற்று நூல் - வரலாறு காட்டுவோர் முனைவர் புரிசை நடராசன்.

முதல் தலைப்பில் 26 உள் தலைப்புகள்; இரண்டாம் தலைப்பில் 28 உள் தலைப்புகள் மூன்றாம் தலைப்பில் 12 உள் தலைப்புகள்; நான்காம் தலைப்பில் 24 உள் தலைப்புகள்; ஐந்தாம் தலைப்பில் 25 உள் தலைப்புகள்; ஆறாம் தலைப்பில் 24 உள் தலைப்புகள்; ஏழாம் தலைப்பி; 42 உள் தலைப்புகள், எட்டாம் தலைப்பில் 24 உள் தலைப்புகள்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடத்தவும், அழைப்பு தயார் செய்யவும் இரண்டு மாதங்களுக்கு முன்பே திட்டமிடுகின்றார்கள். தலைப்புகளைத் தேர்ந்தெடுப்பது பல வகைகளில் சிந்தித்துச் செயல்படுகிறார்கள். நிகழ்ச்சிக்கு வரமுடியாமல் இருக்கும் அடியார் கூட பயன்பெற வேண்டும் என்பதற்காகக் கருத்தரங்கை ஒட்டிய செய்திகள் முழுவதையும் அழைப்பிதழிலேயே தந்துவிடுகிறார்கள். பன்னிரு திருமுறை ஆய்வு மையம் என்ற பெயரில் வசந்தகுமார் தாளாளராக இருக்கும் கற்பகம் கலை அறிவியல் கல்லூரியிலேயே கருத்தரங்குகளை நடத்துகிறார்கள். பெங்களூர் திருவனந்தபுரம், ஆந்திரா, சித்தூர் முதலிய தொலைவிடங்களிலிருந்து அடியார்கள் வந்து கலந்து கொள்கிறார்கள். 600க்கும் மேற்பட்ட பெருமக்கள் இருநாட்களும் வந்து தங்கியிருந்து செவிமடுக்கிறார்கள். வருபவர்களுக்குத் தங்கும் வசதி, உணவு, சமயநூல்கள் தருதல் என அனைத்து வசதிகளையும் செய்து தருகிறார்கள்.

கருத்தரங்கக் கூட்டங்களுக்குப் பொறுப்பாளராக முனைவர் கி. சுப்பிரமணியன் அண்மைக்காலம் வரை சிறப்பாகப் பணியாற்றியவர். கருத்தரங்க மையப்பொருளைத் தேர்ந்தெடுத்துக் கட்டுரையாளர்களுடன் தொடர்பு கொண்டு கட்டுரைகளையும் பெற்றுத் தருவார். அக்கட்டுரைகள் சில சமயம் நூல்வடிவம் பெறும். அதற்காகப் பணம் வந்து கொண்டேயிருக்கும் என்ற எண்ணம் கொண்டவரல்ல வசந்தகுமார் ''ஒருவேளை பொருள் வரத்து குறைந்து ஏழையாகப் போனால் அப்படியே பூசனை செய்து கொண்டு உட்கார்ந்து விடுவேன்'' என்கிறார்.

என்ன ஒரு தெளிவு!

அவரது முகச்செவ்வி அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது.

''நின் பூசனை என்றும் முடிவதில்லை எம்பால்''

இதுதான் வசந்தகுமார்!

(பிறந்த நாள் - 18.02.1957; பிறந்த ஊர் - அம்மாபட்டி, உடுமலைப் பேட்டை வட்டம்; பெற்றோர் - ராஜகோபால் நாயுடு; விஜய் அம்மாள், மின்னியல், மின்னணுவியல் சிறப்புநிலைப் பொறியியல் பட்டதாரி;

கற்பகம் அறக்கட்டளை, மற்றும் கற்பகம் கல்வி நிறுவனங்களின் தாளாளர்)

(vi) குருவுக்கேற்ற சீடர்

இராமகிருஷ்ண பரமஹம்சர் - சுவாமி விவேகானந்தர்

குரு - சீட உறவு நிலை...

அருளார்களோடு ஒப்பிடக்கூடாது தான். அதே சமயம் அவர்கள் உறவு நிலையில் குரு சீட உறவு... அவர்களை அடியொற்றி... ஒரு புடை உவமையாக... இன்றைய மக்களுக்குக் கண்ணெதிரில் எடுத்துக் காட்டுத் தர விரும்பினால்...

வசந்த குமார் - கோமல் கா. சேகர் உறவினைச் சொல்லலாம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்
கற்பகம் கலை அறிவியல் கல்லூரி
ஈச்சநாரி அஞ்சல், கோவை – 641 021.
தொலைபேசி : 0422–2611146, 2611082, நகலி : 0422 2611043



உய்வகை மண்ணுளோருக்கு உதவிய திருத்தொண்டர் புராணம்
சிறப்புக் கருத்தரங்கம்
19.08.2006, 20.08.2006 சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

தொண்டர் தொண்டுசெய் புராண காதை மதிசூடு நாதர் திருவருளினால்
விண்ட நீதிபுனை சேக்கிழார்முனி விரிந்துரைத்த கதை கேட்பதற்கு
அண்டவாணர் அடியார் எலாம் கடுக வருக என்று திசை திசை தொறும்
எண்தயங்கு அரசன் ஏடெடுத்து எழுதி ஆளும் ஓலைகளும் ஏவினான்
– உமாபதி சிவாசாரியார்



சேக்கிழார் பெருமான்

தில்லை வாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடி போற்றி
– உமாபதி சிவாசாரியார்

கோமல்சேகர்

வசந்தகுமார் என்ன செய்கிறாரோ.. என்ன நினைக்கிறாரோ... அப்படியே பின்பற்றுகிறார் அப்படியே அவருக்கு உதவிபுரிகின்றார்.

1999... ... இந்த உறவு முகிழ்த்த ஆண்டு... வசந்த குமார் திருவீழி மிழலை ஆலயத்திருப்பணியை மேற்பார்வையிட திருவீழிமிழலை வருகிறார். அங்கு கோமல் சேகரும் வருகை தருகிறார். திருவீழிமிழலைத் திருப்பணிக்கு வசந்தகுமாருக்குப் பேருதவியாக இருக்கிறார். திருவீழி மிழலை திருப்பணி முடிந்தவுடன் திருக்கோழம்பம் திருப்பணி... ... அதன்பிறகு சங்கிலித் தொடரோட்டம்தான்.. வசந்தகுமார் திருப்பணிகளுக்குத் தஞ்சை மாவட்டம் வரும்பொழு தெல்லாம் அவருடன் செல்வதும், அவர் செல்லவிருக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் திட்ட வரையறை செய்து அழைத்துச் செல்வதும் திருப்பணி குடமுழுக்கு முடியும் வரையில் அவருடன் இணைந்து பணியாற்றுவதுமாக இவர் வாழ்க்கை நெறிமுறை அமைந்துவிட்டது. இதுபோல நூற்றுக்கும் மேலான சிவாலயங்களின் திருப்பணிகளில் வசந்தகுமாருடன் இணைந்து செயல்பட்டு வருகிறார்.

நல்லாருடன் சேர்ந்து இருந்தால் நல்லதுதான் செய்யவரும். வசந்தகுமார் ஆலயத்திருப்பணி மட்டுமா செய்கிறார்? சொற்கோயிலும் கட்டுகிறாரே அதில் பத்தில் ஒன்றாவது செய்ய வேண்டாமா? இதிலும் கோமல் சேகர் பின்தங்கவில்லை. மயிலாடு துறையில் *3.9.2004* முதல் *9.9.2004* முடிய ஏழு நாள் கருத்தரங்கம் நடத்தினார். அழைப்பு அச்சிடுவதிலும் தனது குருநாதர் பாணிதான். கனமான அழைப்பிதழ்... நூல் வடிவில்... ஒரே ஒரு வேறுபாடு. தனது மகள் ஹேமமாலினியின் திருமணத்தையே திருமுறை மாநாடாக நடத்தி விட்டார். திருமணத்திற்க ஏழு நாட்கள் முன்பிருந்தே திருமுறைகள்

ஓதியும், பேசியும் சிவமணம் கமழச் செய்ய வேண்டும் எனத் திட்டமிட்டு கயிலாயத்தையே மயிலாடுதுறைக்குக் கொண்டு வந்து விட்டார்.

ஹேமமாலினியின் திருமணம் திருமுறை மணம் கமழ்ந்த திருமணம்! சீர் வளர் சீர் குரு மகா சந்நிதானங்கள், சைவ ஆன்றோர்கள், அறிஞர்கள், ஓதுவா மூர்த்திகளால் அருளாளர்களின் வாக் காலும், பண்ணிசையாலும் வாழ்த்தப் பெற்ற திருமணம்!

யார் பெறுவார் இப்பெரும் பேறு!

3.9.2004 : சிறு காலை 4.30 - 6.00 ... கணபதி வேள்வி; 4.30 - 6... 108 சிவனடியார்கள் கூட்டு வழிபாடு; 7.00 ... திருமுறை ஊர்வலம்; 8.45... இடபக்கொடி ஏற்றிவைத்தல்; 9.15. - 9.45... திருமுறை இன்னிசை; 10.45... தருமபுர ஆதினம் 26வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசியுரை.

மாநாடு/கருத்தரங்கம்/திருமுறை இசை, நடனம் முத்தமிழ் விழா

2.00 : முதலாம் அமர்வு.

அமர்வுப்பொருள் : ''திருஞான சம்பந்த சுவாமிகள்'' 2.20 துவக்க உரை - திரு. இராஜநாயகம்; 2.20 - 3.20 இணைப்பாளர் உரை - திரு.வி.சா. குருசாமி தேசிகர்; 3.20 - 4.20: திரு. கு. வைத்யநாத ஈசான தேசிகர் - ''வினைக் கொள்கை'' 4.20 - 5.20 திரு. மு. கார்த்திகேயன் - ''உயிர் இயல்பு'' 5.20 - 6.20 வீ. செந்தில் நாயகம் ''இறையருள்'' 6.20... திருப்புகழ் - திருவாசகம் இன்னிசை நிகழ்ச்சி - திருமதி விசாலாட்சி நித்யானந்தி.

4.9.2004 காலை 9.15 கூட்டு வழிபாடு ''வடிவேலும் திரிசூலம் தோன்றும் தோன்றும்''

இரண்டாம் அமர்வுப் பொருள் : ''திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்'' : 9.30 - 10.00 - 11.00 இணைப்பாளர் உரை - முனைவர் திரு. இரா. செல்வக்கணபதி 11.00 - 11.45. திரு.வீ. சொக்கலிங்கம் ''உழவாரப் படையாளி'', திரு. வி.கணேசன். - ''தேடிக் கண்டு கொண்டேன்'' முனைவர் திரு. மு. சிவச்சந்திரன் ''ஒன்றுகொலாம் அவர் சிந்தை''

மூன்றாம் அமர்வுப் பொருள் : ''சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்'' : 2.30 - 3.30 : இணைப்பாளர் உரை - முனைவர் திரு. அ. பாலறாவாயன்; 3.30 - 4.30 : திரு. சா.முத்துக்கிருஷ்ணன் ''திருத்தொண்டத் தொகை அடை மொழிச் சிறப்பு : முனைவர் திரு சண்முக செல்வக்கணபதி - யோக நிலை : முனைவர் சு. கற்பகம் ''தேவாரத்தில் ஆடல் அமைதி''

5.9.2004 : நான்காம் அமர்வுப் பொருள் ''திருவாசகம்''

8.50 - 9.20 : அருளாசியுரை - சீர்வளர் சீர் சங்கரலிங்க தேசிக பரமாசாரியார் சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம்.

9.20- 10.20 : இணைப்பாளர் உரை - முனைவர் திரு. கி. சுப்பிரமணியன்.

10.20 - 11.20 : முனைவர் திரு புரிசை நடராசன் ''சிவானந்தம்'' (9 பதிகங்கள்)

11.20 - 12.20 : திரு. மு. செல்வ நாதன் ''சிவாநுபவம்+'' (8 பதிகங்கள்)

12.20 - 1.20 : முனைவர் திரு. பழ. முத்தப்பன் ''சிவவேடம்'' (5 பதிகங்கள்)

2.20 - 3.00 : அருளாசியுரை திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் காசி வாசி எஜமான் சுவாமிகள்.

3.00 - 6.00 : டாக்டர் மே. செ. இராசமாணிக்கம் ''சந்தத் தமிழில் கந்தக் கடவுள்''

6.10 - 9.00 : ''யார் கொலோ சதுரர்'' ஊடகவழி ஒலி, ஒளி இசை நிகழ்ச்சி டாக்டர் திருமதி பத்மினி கபாலிமூர்த்தி.

6.9.2004 : ஐந்தாம் அமர்வுப் பொருள் : ''திருவாசகம்''

9.30 - 10.30 : முனைவர் திரு.மு. சிவசந்திரன் ''ஆத்தும பூரணம்'' : *10.30 - 11.30 (5 பதிகங்கள்)* முனைவர் திரு- எல். முத்துக்குமாரசாமி ''திருவாசகத்தில் பக்தி'' *(8 பதிகங்கள்)*

11.30 - 12.30 : திரு.மு. கணபதி ''திருவாசகத்தில் முக்தி'' *(6 பதிகங்கள்)*

12.30 - 1.30 : முனைவர் திரு. த. தியாகராஜன் ''ஞான வெற்றி'' (6 பதிகங்கள்)

ஆறாம் அமர்வு : 2.30 - 3.30 : திரு.மு.வைத்தியநாதன் ''பிரபஞ்சம்''

3.30 - 4.45 : முனைவர் திரு. ந.இரா. சென்னியப்பனார் ''வள்ளல் பெருமான், ஞானிகள், அறிஞர்கள் பார்வையில் மணிவாசகரும், திருவாசகமும், கோவையும்.

4.45 - 6.00 : பேராசிரியர் திரு.கி. ஆ. பக்தவத்சலம் ''வள்ளலார் காட்டும் உயிர் இரக்கம்''.

6.10 - 6.30 : திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாசியுரை : *6.20 - 9.00* திருவிடை மருதூர் திரு.சு.சம்பந்த தேசிகர் ''திருஞானசம்பந்தர் தேவார இன்னிசை''

7.9.2004 ஏழாம் அமர்வுப் பொருள் "திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம்"

9.15 - 9.30 : அருளாசியுரை - வேளாக்குறிச்சி ஆதீனம் இளைய சந்நிதானம்.

9.30 - 10.45 : முனைவர் திரு. சுந்தரமூர்த்தி -இணைப்பாளர் உரை.

10.45 - 12.15 : பேராசிரியர் திரு.; சொ. சொ.மீ. சுந்தரம் ''திருமந்திரம்''.

12.15 - 1.15 : முனைவர் திரு.க.; சேகர் ''திருவிசைப்பா திருப்பல்லாண்டு''

எட்டாம் அமர்வுப் பொருள் "பதினோராம் திருமுறை"

2.10 - 3.10 : முனைவர் திரு. அ. கலியபெருமாள் ''ஐந்தும் ஆறுமாய் அருள்நூல்''

3.10 - 4.10 : புலவர் திரு. சபா. பரமசிவம் ''இறவாத இன்ப அன்பு''

4.10 - 5.10 : பேராசிரியர் சீ.மீராபாய் ''குறிஞ்சிக்கிழவன்''

5.10 - 6.30 : திரு சிவ. ஆ. பக்தவத்சலம் ''திருமுறைகள் - ஒரு நெறிய மனம் வைத்துணர்''

6.40 - 9.30 : திருத்தணி என். சுவாமிநாதன் ''திருநாவுக்கரசர் தேவாரம்'' திருமுறை இன்னிசை.

8.9.2004 பெரியபுராணம் கருத்தரங்கம்

ஒன்பதாம் அமர்வு : *9.15 - 10.30 :* பேராசிரியர் திரு. தா. ம. வெள்ளைவாரணனார் *10.30 - 11.30* புலவர் திரு.

வி.இராமமூர்த்தி ''தில்லை வாழந்தணர் சருக்கம்'' (190 பாடல்கள்) : 11.30 - 12. 30 பேராசிரியர் திரு. ஏ. திருநாவுக்கரசு ''இலைமலிந்த சருக்கம்'' (421 பாடல்கள்) 12:30 - 1.30 புலவர் திரு.சா.முத்துக் கிருஷ்ணன் ''மும்மையால் உலகாண்ட சருக்கம்'' (297); 2.30 - 3.30 திரு. த. அகரமுதல்வன் திருநின்ற சருக்கம்'' (632); 3.30 - 4.30 திரு. பாண்டியன் ''வம்பறா வரி வண்டுச் சருக்கம்'' (17.36); 4.30 - 5.30 முனைவர் திரு.பா. சிவனேசன் ''வார் கொண்ட வனமுலையாள் சருக்கம்'' (302); 5.30 - 6.30 திரு. ம. இராம கிருஷ்ணன் ''பொய்ம்மையில்லாத புலவர் சருக்கம்'' (112) 6.40 - 9.00 திருமுறை. இன்னிசை : திரு.குமார. சுவாமிநாதன் ஓதுவார், திருஞான. பாலச்சந்திரன் ஓதுவார் : ''சுந்தரர் தேவாரம்.

9.9.2004 பத்தாம் அமர்வு

9.25 -10.25 : திரு.ஆர். சம்பந்தமூர்த்தி ''கறைக்கண்டன் சருக்கம் (40)

10.25 - 11. 25 : பேராசிரியர் திரு. சாமி.கிருஷ்ணமூர்த்தி ''கடல் சூழ்ந்த சருக்கம்'' (50); 11.25 - 12.25 திருமதி ப. நீலா ''பத்தராய்பணிவார் சருக்கம்'' (37); 12.25 - 1.25 திரு. வி.இராமமூர்த்தி ''மன்னியசீர்ச்சருக்கம்'' (58) ; 2.30 - 3.30 முனைவர் திரு. இரா. செல்வக்கணபதி ''வெள்ளானைச் சருக்கம்; 3.30 - 4.30 - திரு.ம.இராமகிருஷ்ணன் ''நால்வர் தமிழில் திருவைந்தெழுத்து''; 4.30 - 5.30 - திரு.ந. இராம கிருட்டிணன் ''சிவக்கோலங்கள்''; 5.30 - 6.00 நிறைவுரை திரு.இராச. வசந்தகுமார்.

17.02. 2006

திருமண அழைப்பிதழ் ஒன்று... ... எட்டு பக்கங்களும் வண்ணத்தில் ... முதல் பக்கம் வண்ணக் கோலத்துடன் உமாமகேசுவவரர்... இரண்டாம் பக்கம்... திருமணத்துடன் இணைந்த விழா விபரங்கள் ... பன்னிரு திருமுறை முத்தமிழ் விழா 14.02.2006, 15.02.2006... .. இருநாட்களும் காலை முதல் இரவு திருமுறை சொற்பொழிவுகள் ... ... திருமுறை இசை ... ... நாட்டிய நிகழ்ச்சி ... மூன்றாம் பக்கம்... திருமண முகூர்த்தப் பத்திரிகை ... ... நான்கு ஐந்தாம் பக்கங்கள் ... ... திருமண முகூர்த்தப் பத்திரிகை ... ... ஆறாம் பக்கம் ... ... தங்கள் நல்வரவை நாடும் ... ... ஏழாம் பக்கம் ... ... பிப் 16, 17 திருமுறை நிகழ்ச்சிகள்.

17.02.2006 காலை 6.00 முதல் 7.30 வரை விஜய சரவணன் - சாவித்திரி திருமணம்.

திருமண அழைப்பு மாதிரி பின்னால் சேர்க்கப்பட்டு உள்ளது.

தொடர்ந்து 18, 19, 20 தேதிகளில் குடியேற்றம் பெரியவர் திரு. சிவ. ஆ. பக்தவத்சலம் தலைமையேற்று நிகழ்த்தும் 17 வது உலகத் திருமுறை மாநாடு நிகழ்ச்சிகள்.

பக்தவத்சலனார் நடத்தும் திருமுறை மாநாடு எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டுவதில்லை. உலகறியும். எட்டாம்பக்கம் வண்ணக் கோலத்துடன் ஆடல்வல்லார்; அழகுருவம்.

25.06.2007

மூன்றாவது திருமண அழைப்பு... ...

மூன்றாவது திருமுறை மாநாடு...

Hat trick Performance

''ஒரு தெய்வ வழிபாடு'' கருத்தரங்க மையப் பொருள். நான்கு நாட்களோ, ஏழு நாட்களோ கருத்தரங்குகள் நடந்த அத்துணை



திருமணத்துடன் இணைந்த விழா விபரங்கள்

பன்னிரு திருமுறை முத்தமிழ் விழா

14-02-06 செவ்வாய்க் கிழமை

15-02-06 புதன் கிழமை

7.30 - 9.15 மணி திருமுறை இன்னிசை

9.15 மணி திருமுறை மாநாடு துவக்க உரை

16.02.06 வியாழக் கிழமை

9.00 மணி: திருமுறை மாநாடு துவக்க உரை

9.15 மணி: ஆசியுரை

1.00 -2.00 உணவு இடைவேளை

2.00 மணி துவக்க உரை :

4.30 மணி : நான்மறைகளும் நால்வர் திருமுறைகளும் ஒப்பீட்டுச் சிந்தனை

புலவர் திரு. ம. இராமகிருஷ்ணன், சென்னை

7.00 மணி - திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள்

விழா நிகழ்ச்சிகள் முழுவதும்
வானவில்
தொலைக்காட்சியில்
நேரடி ஒளிபரப்பு
செய்யப்படுகிறது.

17.02.06 வெள்ளிக்கிழமை

திருமண நிகழ்ச்சிகள்

திருமண அழைப்பிதழ் (மாதிரி)



தேவர்கள் தேவன் வந்தான் செங்கண் மால் விடையான் வந்தான்
மூவர்கள் முதல்வன் வந்தான் முதல்வன எம்பெருமான் வந்தான்
பூவின் அயன்மால் காணாப் பூரண புராணன் வந்தான்
யாவையும் படைப்பான் வந்தான் என்று பொற்சின்னம் ஆர்ப்ப.

சுற்று நான் மறைகள் ஆர்ப்பத் தூரியம் சங்கம் ஓங்கச்
சுற்ற நான் முகத்தோன் வேள்விச் சடங்குறூஉம் கலந்த வாற்றால்
முற்ற மங்கல நாண் சாதி முழுது உலகு ஈன்றாள் செங்கை
பற்றினான் பற்றிலார்க்கே வீடருள் பரம யோகி

- [illegible]



[illegible]



சிவமயம்

திருமணத்துடன் இணைந்த விழா விபரங்கள்

வேத, ஆகம மற்றும் பன்னிருதிருமுறை
இயல் இசை நாட்டிய முத்தமிழ் விழா

22-06-2007 வெள்ளிக் கிழமை

மாலை 4.30 : சிவபக்கொடி ஏற்றி வைத்தல்
இடம் : [illegible] ஆலயம், மயிலாடுதுறை
5.00 - 6.00 மணி : 108 சிவபூஜைச் செல்வர்கள் செய்யும் சிவபூஜை
6.00 - 10.00 : ஆனித் திருமஞ்சன விழா [illegible]
10.00 மணி : ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவீதியுலா எழுந்தருளல்.
10.15 மணி : ஸ்ரீ ருத்ர வேத [illegible]
12.45 மணி : நாச்சியார் மற்றும் திருவைந்தெழுத்து பதிகங்கள் [illegible] வழிபாடு
1.15 - 2.30 : மகேசுவர பூஜை
3.00 மணி : திருமுறை இன்னிசை [illegible]
4.30 மணி : வேத, ஆகம, திருமுறை [illegible]
6.00 மணி : விழா அரங்கம் அடைதல் [illegible]
6.15 மணி : [illegible]
7.00 மணி : ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் [illegible]

23-06-2007 சனிக் கிழமை

அரங்கம் : வி.ஆர். எஸ். திருமண மண்டபம் [illegible], மயிலாடுதுறை.
காலை 7.30 மணி : திருமுறை இன்னிசை [illegible]
9.15 மணி : துவக்கி ஆசியுரை [illegible]
9.45 மணி : வேத, உபநிடதங்களில் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் [illegible]
11.00 மணி : ஆகமங்கள் நெறிப்படுத்தும் ஒரு தெய்வக் கோட்பாடும், சைவ மறுமலர்ச்சியில் சிவாச்சாரியார்கள் ஆற்ற வேண்டிய பணிகளும். [illegible]
12.00 மணி : ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள், நெறிப்படுத்தும் ஒருதெய்வ வழிபாடு [illegible]
மதியம் 1-30 - 2.30 : உணவு இடைவேளை
2.30 மணி : ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள், நெறிப்படுத்தும் ஒருதெய்வ வழிபாடு [illegible]
3.30 மணி : ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் நெறிப்படுத்தும் ஒருதெய்வ வழிபாடு [illegible]
4.30 மணி : ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நெறிப்படுத்தும் ஒருதெய்வ வழிபாடு [illegible]
5.30 மணி : ஸ்ரீ திருமூலர் சுவாமிகள் நெறிப்படுத்தும் ஒருதெய்வ வழிபாடு [illegible]
7.00 மணி : [illegible]



24-06-2007 ஞாயிறு

7.30 மணி : திருமுறை இன்னிசை
9.30 மணி : [illegible]
10.30 மணி : ஒன்பதாம் திருமுறை நெறிப்படுத்தும் ஒரு தெய்வ வழிபாடு [illegible]
11.30 மணி : [illegible]
12.30 மணி : [illegible] ஒரு தெய்வ வழிபாடு [illegible]

1.30 - 2.30 : உணவு இடைவேளை

2.30 மணி : [illegible]
5.00 மணி : [illegible]
6.00 மணி : [illegible] திருமண நிகழ்ச்சிகள் துவக்கம்

25-06-2007 திங்கட்கிழமை

காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரை திருமண நிகழ்ச்சிகள்
12.45 மணி : பெரிய புராணம் நெறிப்படுத்தும் ஒரு தெய்வ வழிபாடு [illegible]
2.00 மணி : [illegible]
3.15 மணி : [illegible] நெறிப்படுத்தும் ஒரு தெய்வ வழிபாடு [illegible]
4.30 மணி : சித்தர்கள் நெறிப்படுத்தும் ஒரு தெய்வ வழிபாடு [illegible]
5.45 மணி : [illegible]
6.45 மணி : [illegible]

விழா நிகழ்ச்சிகள் முழுவதும் T.C.U. தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

திருமண அழைப்பிதழ் (மாதிரி)

திரு திருமுறை ஆய்வு மையம் & கோமல் ஓம் நமச்சிவாய டிரஸ்ட்
த. ஆகம & பன்னிரு திருமுறை இயல், இசை, நாட்டிய, முத்தமிழ் விழா
"முத்தமிழ் விழா"

திருமுறை விழா

நாட்களிலும் மயிலாடுதுறையில் உள்ள திருமண மண்டபங்களில் அடியார்கள் தங்கவசதி; உணவு என ராஜோபசாரம் தான். கோமல் சேகர் அவர்கள் சம்பந்தி களைக் கவனித்தாரோ என்னவோ? அடியார்களை நன்கு கவனித்துக் கொண்டார். சேகர் பதினாறும் பெற்றிருந்தால் நமக்குப் பெருவாழ்வு கிடைத்திருக்கும்!

வாழ்க கோமல் சேகர்!!

வளர்க கோமல் ஓம் நமச்சிவாய டிரஸ்ட்!! திருமுறை மாநாடுகளை மயிலாடுதுறை சுற்றுப்புற மன்றங்களின் உறுப்பினர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து இரவுபகல் பாராது உழைத்து நடத்தினர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியார் பெருமக்கள் நாளும் பெருகி வந்து கேட்டனர்.

கோயில் திருப்பணியைப் பொருத்த வரை கோமல் சேகர் திருவீழி மிழலை திரு. கார்த்திகேயன், திருத்துறைப்பூண்டி பூம்புகார் சில்க்ஸ் திரு. சந்திர பிரகாஷ், திரு. இந்தளூர் ஜோதி பிரகாஷ், திருவாரூர் காவாலக்குடி பண்ணை திரு. கண்ணன் ஆகியோருடன் இணைந்தும் கஞ்சனூர் திரு. ஆர். கலியபெருமான் பத்தரி, திருவாரூர் RMPR சிங்கார வேலு முதலியார், அவரது மகனார் சுந்தர மூர்த்தி ஆகியோரின் பங்களிப்புடன் திருவசந்தகுமார் தலைமையில் திருப்பணிகள் ஆற்றி வருகிறார்.



திருமுறை விழா

15.7.1951ல் மயிலாடுதுறை தாலுகா கோமல் கிராமத்தில் காசி படையாட்சி என்பவருக்கு மகனாகப் பிறந்த சேகர் மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கி. சுப்பிரமணியம்



சிறந்த தமிழறிஞர், கோவை அரசுகலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். முனைவர் பட்டம் பெற்றவர். முனைவர் பட்ட ஆய்வேடு ''வள்ளலார் ஒரு மறுமலர்சசியாளர்''. சிவநெறியே சன்மார்க்கம், உள்ளம் பெருங்கோயில், நீர்மேல் மலர்ந்த நெருப்பு, திருத் துழாய்மாலை, சேரமான் பெருமாள், திருவாசகம் - ஓர் அறிமுகம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார் பின்னிரண்டு நுல்களையும் தேவைப்படுவோர்க்கு அன்பளிப்பாக வழங்கிவருகிறார்.

(பிறப்பு - 10.6.1940; பிறந்த ஊர் - இருகூர், கோவை அருகாமை)

வசந்தகுமார் நடத்தும் பன்னிரு திருமுறை ஆய்வுமையம், ''ஈசன் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை, மயிலேறி விளையாடி வா, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம, என்னை நன்றாக இறைவன் படைத்தனன் முதலிய ஏழுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்ற நூல்

பன்னிரு திருமுறைக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட 476 பக்கங்களைக் கொண்ட 65 கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்'' என்ற நூல் திருமந்திரக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட 788 பக்கங்களைக் கொண்ட 23 கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஆகும்.

கோயில் திருப்பணி, கருத்தரங்கம் தவிர புஷ்பகட்டளையின் மூலம், பூ சாத்துவதற்கு ரூ. 300/- எனவும், ஏழ்மையான குருக்களுக்கு மாதம் தோறும் ரூ. 500/- எனவும் வசந்த குமார் பல ஆலயங்களுக்கு உதவி வருகிறார் 45 கோயில்களுக்கு ஒரு கால பூசை ஏற்பாடு செய்துள்ளார்.

இத்துணை பணிகளை ஆற்றும் வசந்தகுமார் தற்புகழ்ச்சியோ, தன்னை விளம்பரப் படுத்திக் கொள்ளும் முனைப்போ இல்லாதவர்.

''இன்னும் பொருள் கொடுத்தால் இன்னும் பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வேன்'' என்றார். ''என்ன இராஜசேகரன்! 274 பாடல் பெற்ற திருக்கோயில்கள் திருப்பணி நிறைவேற்றி சுற்றுவந்து விட்டால்... ... ...'' என்று நிறுத்தினார். ''அதுவே பெரியமுயற்சி. 12 ஆண்டுக்காலம் வந்து விடும். மீண்டும் அடுத்த சுற்று கிளம்ப வேண்டியதுதான்'' என்றார்.

(vii) அண்டவாணர் அருட்துறை

''ஆரம் என்பு புனைந்த ஐயர்தம்
அன்பர் என்பது ஓர்தன்மையால்
நேரவந்தவர் யாவர் ஆயினும்
நித்தம் ஆகியபத்தி முன்
கூர வந்து எதிர்கொண்டு கைகள்
குவித்து நின்று செவிப்புலத்து
ஈர மென்மது ரப்ப தம்பரிவு
எய்த முன் உரை செய்த பின்''

இதோ! திரு. ஒளியரசு அவர்கள் அந்தத் தவக்குடிலுக்கு வந்து கொண்டிருக்கிறார். திரு. செந்தில் குமார் பிள்ளை பத்தி முன் கூர எதிர்கொண்டு மலர் தூவி வரவேற்கிறார். அன்பர்கள் திருவாசகம் ஓதி நடனமாடி வரவேற்கிறார்கள்.

''கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்துஇடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்புஇலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுதுசெய்ய அளித்து உளார்.''

இதோ! தவத்திரு சிவக்குடில் சித்தர் அவர்களை திரு. செந்தில் குமார் ''கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கி மண்டு காதலின் ஆதனத்து இடை வைத்து அருச்சனை'' செய்கிறார்.

அடியார்கள் யாவராயினும் அவர்களுக்கு இதே விதமான வரவேற்பு; பணிவிடை. திரு. செந்தில் குமார் உண்டியும் நாலு விதத்தில் ஆறு சுவைத்திறத்தினில் அமுது செய்ய அளிக்கிறார். அடியார்கள் அமுதுண்ணும் வரை மகேசுவர பூஜைக்குரிய பெரிய புராணப் பாடல்களை (இளையான் குடி மாறநாயனார் புராணம், மண்ணினில் பிறந்தார் பெறும் பயன், அன்னம் பாலிக்கும் போன்ற பாடல்கள்) உஷா

தவத்திரு ஒளியரசு ஐயா அண்டவாணர் அருள்துறைக்கு எழுந்தருளல்
அன்பர்கள் திருவாசகம் ஓதி நடனமாடி வரவேற்று வழிபாடு செய்தல்

அவர்களும், செந்தில்குமாரும் பாடியவாறு. இருக்கிறார்கள். என்ன ஒருஅரிய காட்சி!

> “இவையெல்லாம் நடைபெறுமிடம் –
> கோவை அண்டவாணர் அருட்துறை”

அது என்ன! அண்டவாணர் அருட்துறை!

செந்தில்குமார் பிள்ளையின் இல்லத்தில் சிவலிங்கத்திருமேனி பிரதிஷ்டை செய்து அடியார்களே திருமேனி தொட்டு நாளும் பூஜை செய்கிறார்கள். இறைவனுக்கு அண்டவாணன் என்றும் இறைவிக்கு அன்பில் பிரியார் என்றும் திருநாமம் சூட்டியுள்ளார். இவரைப்பின்பற்றி கோவைப் பகுதியில் மூன்று அடியார்கள் தங்கள் இல்லங்களில் சிவலிங்கத் திருமேனி பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

> “எங்கள் இல்லங்கள் தோறும்
> எம்பிரான் எழுந்தருளும் அற்புத நிலை.”

வழிபாடு மட்டுமல்லாது பன்னிரு திருமுறை முற்றோதல், சைவ சமய விளக்கங்கள் அண்டவாணர் அருட்துறையில் நிகழ்கின்றன.

கோவையில் வசிக்கும் செந்தில்குமார் பிள்ளை 1975-இல் திரு. ந. இராஜரத்தினம்பிள்ளை, திருமதி நவநீதம் அம்மையார் தம்பதியினருக்கு மூத்தமகனாகப் பிறந்தார். செந்தில்குமார் பிள்ளையின் சிவத் தொண்டிற்கு இவரது மனைவியார் திருமதி உஷா அவர்களும், மகள் ஆர்த்தியும் பெரிதும் துணைபுரிகின்றனர்.

(viii) பேரூராதீனம்

திருவாவடுதுறை ஆதீனத்தின் இரண்டாம் பட்டமாக விளங்கியவர் ஆதி சிவப்பிரகாசர். தில்லையில் ஆடல் வல்லானுக்கு வைணவ நெறியாளர்களால் ஏற்பட்ட வழிபாட்டுச் சிக்கல்களை நீக்கும் பொருட்டுத் தில்லை


நமச்சிவாய மூர்த்திகள்
(திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர்)
பட்டீசுவரம் சிவப்பிரகாசர் [திருவண்ணாமலை துறையூர் ஆதீன நிறுவுனர்]
மறைஞான தேசிகர்
அம்பலவாண தேசிகர் [திருவாவடுதுறை ஆதீன மரபு]
ஞானக்கூத்தர் [துறையூர் திருவண்ணாமலை ஆதீன பெரியமடம்]
சாந்தலிங்க அடிகளார்
திருவண்ணாமலை துறையூர் ஆதீன குருமுதல்வர் குமாரதேவர் [திருமுதுகுன்ற திருமடநிறுவுனர்]
சிதம்பர சுவாமிகள் [திருப்போரூர் ஆதீன நிறுவுனர்]
நாச்சிமுத்து சுவாமிகள்
இராமலிங்க சுவாமிகள்
சச்சிதானந்த சுவாமிகள்
மௌன சுவாமிகள்
மாணிக்க சுவாமிகள்
ஆறுமுக சுவாமிகள்
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
மௌன சுவாமிகள் [சிதம்பரம் திருமட நிறுவனம்]

வாழ் அந்தணர் திருவாவடுதுறை ஆதீனக் குரு முதல்வர் நமசிவாய மூர்த்திகளிடம் முறையிட்டனர். நமசிவாய மூர்த்திகளின் ஆணைப்படி ஆதிசிவப்பிரகாசர் சிதம்பரம் சென்றார். வேலூரில் இருந்த நாயக்க மன்னனது அமைச்சராகிய இலிங்கணன் இவரது தவப்பொலிவைக் கண்டு வணங்கி அமைச்சர் ஒருவரை சிதம்பரத்திற்கு அனுப்பினான். வழிபாடுகள் முறையாக நடக்க ஏற்பாடுகள் செய்தான். அது முதல் ஆதி சிவப்பிரகாசர் வீரசைவ நெறியில் நின்றார். இவரே தமிழகத்தில் வீரசைவ ஆதீனத்தைச் சைவசித்தாந்த மரபில் தோற்றுவித்த பெருமைக் குரியவராவர்.

இலிங்கண்ணனின் பணியாள் திருவண்ணாமலையிலும், இலிங்கதுரை என்னும் குறுநில மன்னரால் துறையூரிலும் வீரசைவ ஆதீனத்தை நிறுவினார்.

தொண்டை நாட்டைச் சேர்ந்த சாந்தலிங்கர் ஆதிசிவப்பிரகாசரின் சீடரானார். கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரின் (ஆதிசிவப் பிரகாசரின் வேறுபட்டவர்) குடும்பம் திருவண்ணாமலைக்கு வர, சாந்தலிங்கரும் சிவப்பிரகாசரும் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். ஆதிசிவப்பிரகாசர் சாந்தலிங்கரிடம் ''நீர் முதிர்ந்த தவநிலை பெற்றுள்ளீர். நீவிர் விரும்பும் தலத்திற்குச் செல்'' என்று ஆணையிட்டார். சாந்தலிங்கர் பேரூர் வந்து திருமடம் நிறுவினார்.

பொம்மையபாளையம் திருமடம் சிவஞான பாலைய சுவாமிகள் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரின் தங்கையை மணம்புரிய சாந்தலிங்கரைப் பணித்தார். சாந்தலிங்கரும் ஞானாம்பிகையாரும் கயிலைநாதரும் உமையம்மையுமாக மாணாக்கருக்குக் காட்சியளித்தனர்.

சாந்தலிங்கர் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என நான்கு நூல்கள் எழுதியுள்ளார்.

சாந்தலிங்க அடிகள் ஒரு மாசி மகத்தில் ஞானசமாதி அடைந்து கூத்தப்பெருமான் திருவடி நிழலை அடைந்தார்கள்.

சாந்தலிங்க அடிகளாரின் திருமடம், சமாதி இடம் இருந்த இடங்கள் தெரியாமல் போய்விட்டன. சென்ற நூற்றாண்டில் தவநெறிமிக்க அருளாளர்களும் சமயத் தொண்டர்களும் தமது பணிகளால் திருமடத்தை மீட்டுருவாக்கம் செய்துள்ளனர்.

தற்போது கிடைத்துள்ள சான்றுகளின்படி தவத்திரு நாச்சிமுத்து சுவாமிகள் தவச்சாலையைப் பேணி வந்துள்ளார் எனத் தெரிகிறது. பின்னர் கோயம்புத்தூர் காவல் ஆய்வாளர் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) பொன்னுரங்க முதலியார் அவர்கள் கனவில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தெரிவித்தபடி பேரூர் வந்து கள்ளிக் காடாகக் கிடந்த பகுதியில் சமாதி கோயிலையும் தவச் சாலையையும் கண்டு விரிவுபடுத்தியுள்ளார். சமாதிக் கோயில் கருவறை மட்டும் இருந்தது

இவர்களுக்குப் பிறகு இராமலிங்க சுவாமிகள் திருமடத்தையும், சமாதிக் கோயிலின் முன் மண்டபத்தையும் அமைத்தார்கள். திருமடத்துக்குரிய இடங்களையும்விரிவாக்கினார்கள் 1892இல் திருவடிப் பேறு. அதன் பின் சச்சிதானந்த சுவாமிகள் காலத்தில் சமாதிக் கோவிலின் மூன்றாவது மண்டபமும், இராமலிங்க சுவாமிகளது சமாதி கோயிலும் கட்டப்பட்டன. இவருக்குப்பின் தவத்திரு மௌன சுவாமிகள் பேரூர்ப்பட்டி பெருமான் திருக்கோயில் குடமுழுக்கை செய்து

முடித்தார். கௌமார மடத்து அடியவரான மாணிக்க சுவாமிகள் பேரூர் வந்து பொறுப்பேற்றார்கள்.

திருமடத்தின் தலைவர் 1916-ஆம் ஆண்டு தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் மடம் சத்வித்யா சன்மார்க்க சங்கம் என்னும் பெயரால் ஒரு சங்கத்தைத் தொடங்கினார். வாரம் ஒருமுறை சங்கம் கூடியது. சாந்தலிங்க சுவாமிகளின் நூல்கள் முறையாகப் பாடம் சொல்லப்பட்டன. சி.கே.எஸ்., சி.எம்.இராமச்சந்திரச் செட்டியார் உள்ளிட்ட பெரியார்கள் கலந்து கொண்டனர். சமயத் துறையில் தலைசிறந்து விளங்கிய அறிஞர்களும், துறவிகளும் ஆண்டு விழாக்களில் கலந்து கொண்டனர். கோவை நகரில் சமய உணர்வு அரும்பியது.

தவத்திரு மாணிக்க சுவாமிகள் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் திருமடத்தையும் புதியதாகக் கட்டி முடித்தார்கள். நிலையான வருவாய்க்காக, நஞ்சை நிலங்கள் வாங்கப் பெற்றன. நிலையான ஓர் ஒட்டுக் கொட்டகை அமைத்தார். 1938இல் ஆறுமுக சுவாமிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு இறைவனுடன் கலந்தார். இராமசாமி அடிகள் இளவரசுப் பட்டம் பெற்றார்கள்.

1951-இல் உயர்நிலைத் தொடக்கப் பள்ளி தொடங்கப் பெற்றது. 24.6.1953ல் கல்லூரி தொடங்கப்பெற்றது. 1956ல் கல்லூரிக்கு நல்ல கட்டிடம் அமைக்கப்பட்டது. 1958இல் நூலாகக் கட்டிடமும் 1961இல் மாடியும் கட்டப்பட்டன. 1960இல் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டது. 1960ல் கோயிலின் முன் மண்டபம் பெரிதாக அமைக்கப் பெற்றது. 1990ல் மேல்நிலை வகுப்புகள் தொடங்கப் பெற்றன. 1977ல் ஞானாம்பிகை நுழைவுரிமைப் (மெட்ரிக்) பள்ளி தொடங்கப்பட்டது. 1999ல் தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ்ப் பள்ளி தொடங்கப்பட்டது. தமிழ்க் கல்லூரி கலையறிவியல் தமிழ்க் கல்லூரியாக மாறியது. 1975-இல் இளம் இலக்கியவியல், 1983-இல் தமிழ் முதுகலை, ஆய்வியல் முனைவர் படிப்புகள் தொடங்கப்பட்டன. 1989ஆம் ஆண்டு கலைக் கல்லூரியாக விரிவுபடுத்தப்பட்டது.

கள்ளிக்காட்டில் தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு சைவ மடம் மக்களின் ஆதரவால், படிப்படியாக வளர்ந்த நிலை உன்னுந்தோறும் பெருமை தருவதாகும்.

1916ல் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் வளர்ச்சி பற்றி கோவை கிழார் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், அ. கந்தசாமிப் பிள்ளை, கு. நடேசக் கவுண்டர் மறை திருநாவுக்கரசு ஆகியோர் சங்கப் பொன் விழா மலரில் எழுதியுள்ள கட்டுரைகள் சுவை மிக்கவை. அக்காலச் சைவ ஆன்றோர்களைப் பற்றியும், அவர்களது சொல்லாற்றலைப் பற்றியும் எடுத்துக் கூறுவன. அவற்றைச் சிறிது பார்ப்போம்.

கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார்

சென்னையில் வாழ்ந்த கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் அவர்கள் ஆங்கிலம், வடமொழி, தென் மொழி மூன்றிலும் பாண்டித்தியம் பெற்றவர். அரசு அலுவலராக இருந்து, ஓய்வு பெற்று, சிவரகசியம் என்னும் பேரிதிகாசத்தைப் பதிப்பிக்கத் தொடங்கினார். வெகு உருக்கமாகப் பேசக் கூடியவர். செய்யுள்களுக்குச் சிறந்த உரை நிகழ்த்தக் கூடியவர். அவர் கோவையில் பெரிய புராணத்தைப் பற்றி முறையாகப் பேருரை நிகழ்த்தினார். திருமுறைகளைத் தவிர வேறு எந்த

நூலையும் மேற்கோளாகக் கொள்ளார். இவர்களுடைய சொற்பொழிவிலிருந்து தான் திருமுறைகளின் பெருமையையும், பெரிய புராணத்தின் அருமையையும் கோவையில் பல மக்கள் அறிந்து கொண்டனர். ''அவர்களுடைய பேச்சினைப் பல தடவை கேட்டதனால் என் உள்ளத்தே சைவத் திருமுறைகளின்பாலும் சித்தாந்த சாத்திரங்களின் பாலும் பத்திமுளைத்து வளரத் தொடங்கிற்று. என்னிற் பெரியரும் சிறியரும் ஆகிய வேறு பலரும் அப்படியே நலன் எய்தினர் .எனவும் துணிகிறேன். கொங்கு நாட்டில் சைவ விதை தூவியவர் அவர்தான் என்று என் நெஞ்சு நினைக்கிறது. அவரது பேச்சில் திருமுறைகளின் அருமை பெருமைகளும் சிவபரத்துவமும் தென் மொழி வடமொழியாகிய இருமொழி களிலும் உள்ள அருள் உணர்வு கருத்துக்களும் செறிந்திருக்கும். பதார்த்த நிச்சயம், ஆலய வழிபாடு, சாந்தம், லிங்கம், சாமி என்ற அமைப்புகளில் அவர்கள் பேசிய அந்நாளைப் பேச்சுக்களைப் போல மீண்டும் கேட்கும் பேற்றினை என் செவிகள் என்று பெறுமோ'' என்று ஏங்குகிறார் கு. நடேசக் கவுண்டர்

செட்டியார்அவர்களைக் கோவை நகருக்கு அறிமுகப்படுத்தியது இச் சங்கமே. அவரது புலமை இச்சங்கத்தால் புலப்படவே கோவை நகரார் அவரை அழைத்துச் சென்று 1919 முதல் நாடோறும் இரவில் பெரிய புராணச் சொற்பொழிவாற்றுவித்து 11.10.1922இல் நிறைவேற்று விழாவில் பெரிய புராணத்தை யானை மேலேற்றி முழவொலியோடு நகர் வலம் செய்து ஆயிரம் ரூபாய் வெள்ளி நாணயமாகவே அவருக்குப் பரிசளித்தமைக்கு இச் சங்கம் காரணம்.

பெரிய புராணப் பொழிவு கோவை வைசியர் வீதியில். இருந்த சி.எஸ். ரத்தின சபாபதி முதலியார் அவர்கள் வீட்டில் நிகழ்ந்தது. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் கையேடு படிப்பார். அத்துடன் செட்டியாரவர்கள் சொல்லும் கவிநயம், தேவாரம் ஒப்புமைப் பகுதி முதலியவற்றை எழுதி வைத்துக் கொள்வார். இவற்றையே விரித்துப் பின்னர் சி.கே.எஸ் அவர்கள் பெரிய புராணப் பேருரை வழங்கியதாக அவர்களே தம் நூலில் கூறுகிறார்கள்.

வீர சுப்பைய்ய சுவாமிகள்



இவர்கள் கோவை மாவட்டத்து வேட்டைக்காரன் புதூரைச் சேர்ந்தவர்கள். இளமையில் வீட்டைத் துறந்து சென்று ஞான சாத்திரங்கள் பயின்று சென்னை ஆனந்தாசிரமத்தில் இருந்தனர். திருவாரூர் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடத்திலும் இருந்தனர். தஞ்சை வாட்டம் திருக்களர் மடத்துத் தலைவர் வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவர். தருக்கம் முதலிய சாஸ்திரங்களில் வல்லவர். பேசினால் இரண்டு, மூன்று மணிநேரம் விடாமல் பேசக் கூடியவர். சைவ சமயத்தில்உட்பொருளை நன்கு ஆராய்ந்தவர்.

''ஆனந்தாச்சிரமம் சுப்பைய சுவாமிகளின் திருவுருவம் இப்போதும்

என்மனக் கண்ணில்நிற்கிறது. முழுநீறு பூசிய திருமேனி. கீளும் கோவண முமே உடை. தாமரையின் அகவிதழ் போலச் சற்றே சிவந்த கண்கள். முண்டிதமான தலை. இனிய குரல், மேசையின் மேல் பதுமாசனம் இட்டு இருந்துதான் பேசுவார். வேதாந்த நூற்கருத்துக் களையும் சாந்தலிங்கர் நூற்கருத்துக் களையும் பண்டிதரும் பாமரரும் உணருமாறு எளிய நடையில் எடுத்துக் கூறுவார். சுவையான கதைகள் பல இடையிடை விரவிவரும். இந்தச் சுவாமிகளின் கல்விப் பெருமை புலப்பட நியாயச் சந்திர வேதாந்த பாஸ்கர மகாமண்டலேச்சுவர வீர சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமிகள் என்பர். இச்சுவாமிகளோ எனில் தம்மை ஒரு சில்லறைக்கடை என்னும் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளை ஸ்பென்ஸர் அண் கோ என்றும் சொல்லிச் கொள்வர். இந்தப் பெரியாரின் பேச்சுகளைக் கேட்டதன் பயனாக, கூட்டத்தில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ளும்படி நல்ல நகைச்சுவை அளவாகக் கலந்து எளிய நடையில் உயர்ந்த கருத்துக்களைச் சொல்லுவதே சிறந்த பேச்சு என அறிந்து கொண்டேன்'' என்கிறார் நடேசக் கவுண்டர்.

வீரசுப்பைய சுவாமிகள் ஐந்தாம் ஆண்டு விழா முதல் எட்டாம் ஆண்டு விழாவரை நான்கு ஆண்டுகள் தொடர்ந்து தலைமை தாங்கியிருக்கின்றார்கள்.

ஞானியார் சுவாமிகள்

பேச்சு மிகவும் உருக்கமாகவும், தெளிவாகவும் இருக்கும். உரை மூன்று அல்லது நான்கு மணி நேரம் நீடித்தாலும் களைப்பென்பதே நேரிடாது. பொது மக்கள் விலக மாட்டார்கள். அவர்களை அழைத்து வருவது மிகக் கடினம். பிற இடங்களுக்கு வருவதென்றால் பல்லக்கில் தான் வர வேண்டும். கோவை வருவதற்கு நிரம்ப நாட்கள் பிடிக்கும். செலவும் அதிகமாகும். பேரூர் வந்துபோக மூன்று மாதங்கள் பிடித்தன. மாணிக்க சுவாமிகளே செலவுக்கெல்லாம் பொதுமக்களிடம் உதவி பெற்றார். இங்கே வரும்போது குருபூசையில், சங்கத்தில் மட்டும் அன்றிப் போகும் வழி, வரும் வழி, இருக்கும் இடங்களில் எல்லாம் பேச்சுக்கள் நிகழ்த்திக் கொண்டே வந்தார். எந்த நேரமானாலும் மக்கள் பிடித்திழுத்து சமயப் பணி வாங்குவார்கள். அப்போது சத்வித்யா சன்மார்க்கச் சங்கம் செய்த திருப்பணி அபரிமிதம். கோவையில் ஒரு திங்கள் தங்கிப் பன்னிரண்டு பேச்சுக்கள் நிகழ்த்தினார்கள். திருப்பேரூர் அந்த மூன்று நாட்களிலும் மகோற்சவ நகரமாகி இருந்தது. நாட்டின் பல பக்கங்களிலிருந்தும் பெருவாரியான மக்கள் வந்து பேரூரில் தங்கிச் சமயப் பேச்சுகளைக் கேட்டுத் திருவருள் கடாட்சம் பெற்றார்கள். அந்தச் சமயவிழாப் போல முன்னும் பின்னும் பார்த்ததே இல்லை.

''1925 ஒன்பதாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்க ஞானியார் சுவாமிகள் பேரூர் வந்தார்கள். அப்பொழுது கேட்க வந்தவர் தொகை ஏனைய ஆண்டு விழாக்களின் மிக்கிருந்தது. இருபத்திரண்டு கார்களுக்கு அதிகமாகவே வந்திருந்தன. காரில் வருவோர் ஏழைகளாகவா இருப்பர். ஒரு தமிழின் பேச்சுக்கு அதிலும் சமயச் சொற்பொழிவுக்கு இவ்வளவு கார்கள் வந்திருந்தன என்றால் அடிகளாரின் பேச்சுத் திறனைப் பற்றி வேறென் கூறுவது'' என்கிறார் கந்தசாமிப்பிள்ளை.

''சன்மார்க்க சங்க மேடைப் பேச்சில் இவர்க்கு இணை இல்லை

என்று அறிஞர் கூறுவர். கல்வியாகிய அமுதக் கடல். ஞானச் சொல்மாரி என இவரைக் கூறலாம். பல அரிய நூல்களின் நுணுக்கமான கருத்துக்கள் சுவாமிகளின் பேச்சில் வரும். கந்தபுராணம், தணிகை புராணம், சிவப்பிரகாசர், பிரபந்தங்கள், இராமாயணம் முதலிய பல நூல்களில் பல அரிய செய்யுட் பொருள்களை இவர் பேச்சால் அறிந்து மகிழ்ந்தேன். திருப்போரூர் சந்நிதி முறையில் உள்ள ''இல்லறத் தேன் அல்லேன்''. ''சோமகிரணம் பெருங் கருணை'' எனத் தொடங்கும் செய்யுட்களும் ''புன்னெறியதனில்'' என்னும் பாடலும் சுவாமிகளின் திருவாயினின்று வந்தால் கேட்பார் உள்ளம் உருகும். செய்யுட்களை இனிமையாகப் பாடும் ஆசை உண்டாகும்'' என்கிறார் நடேசக் கவுண்டர்.

ம.ரா. குமாரசாமிப் பிள்ளை

ஞானியார் அடிகளாரின் முதல் மாணாக்கரான இவர்கள் பேச்சு அடுக்குச் சொற்களால் அமைந்தது. பெரு மழை பெய்தாற் போல் இருக்கும். உதாரணம் ''காட்டுப் பாடியை விட்டுப் பாட்டுப் பாடிக் கொண்டு பேரூர் வரும் போது நித்திரை தேவியின் அருள் எவ்வண்ணம் வாய்க்கும்'' என்பார். ஒருமுறை டி.ஏ-இராமலிங்கம் செட்டியார் இவருடைய பேச்சைக் கேட்டு விட்டு எழுதி உருபோட்டு ஒப்புவிக்கிறாரா? என்று கேட்டார். நாயன்மாருடைய வரலாறுகளைக் கூறும்போது அவர்களுடைய தியாகங்களை வரிசைப்படுத்திக் கூறும் போது இவருடைய ஆராய்ச்சி எத்தன்மையானது என்று வியக்க வேண்டும். ஞானியார் அடிகளுடைய சமய போதனை பெற்றால் எது தான் சாத்தியம் இல்லை?

''இவரது பேச்சு கூட்டத்தின் இறுதிப் பகுதியிலே தான் நடைபெறும். காரணம் என்னவெனில் இவர் பேச்சைக் கேட்பதற்காகவே மக்கள் கூட்டம் காத்திருக்கும். பேச்சின் பொருள் விளங்கினாலும், விளங்கா விட்டாலும், பாமர மக்களும் விருப்பத்தோடு கேட்பர். பேச்சின் வேகமும் குரலின் எடுப்பும் அத்தகையது. சண்டமாருதமோ! கடல் மடையோ! பெருமழையோ! என வியக்கத் தக்கதாகும். அத்தனை வேகமான பேச்சாளர் வேறொரு வரையும் நான் கண்டதே இல்லை. அ.மு. சரவண முதலியார் அவர்களின் பேச்சு வேகத்தை இப்பிள்ளை யவர்களின் பேச்சு வேகத்தோடு இரண்டாவதாகக் கூறலாம்'' கு. நடேசக் கவுண்டர்.

கந்தசாமி சுவாமிகள்

சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் பெரும் புலமை வாய்ந்தவர். பல பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இவர் பன்முறை இச்சங்கத்தில் தலைமையேற்று இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். சாந்தலிங்க சுவாமிகளின் மேல் பிள்ளைத் தமிழ்பாடி இச்சங்கத்தின் ஆண்டுவிழாவில் அரங்கேற்றம் செய்தார்.

சத் வித்யா சன்மார்க்க சங்கம் 1927 பிப்ரவரி 17, 18, 19 களில் நடத்திய விழாக்களில் தலைமையேற்க மறைமலையடிகள் வந்திருந்தார்கள். அவ்விழாக்கள் பற்றியே ஒரு அருமையான கட்டுரை அவரது திருமகனார் மறை திருநாவுக்கரசு எழுதியுள்ளார்கள். கோவை புகைவண்டி நிலையத்தில் பெருங்கூட்டம் எதிர்கொண்டு அடிகளை வரவேற்றதும், அவர்களுக்குத் தனியிடம் கொடுத்து உரிய பணிவிடைகளைச் செய்ய ஏற்பாடு செய்திருந்ததும் பற்றி அழகுற மறை. திருநாவுக்கரசு கூறியுள்ளார்.

முதல் நாள் கூட்டத்தில் இரண்டாயிரம் பேர். அடிகள் மிக அழகாக இரண்டரைமணி நேரம் பேசினார். அன்பர்கள் உள்ளம் குளிரக் கேட்டு உவகை கொண்டனர். முதல் நாள் விழா அளவில்லா இன்ப உணர்வுடன் முடிந்தது. அன்பர் கூட்டம் பேச்சினைச் சுவைத்து இன்பம் கண்டது. அறிஞர் கூட்டம் அடிகளைச் சூழ்ந்து கொண்டது. எங்கும் அடிகளின் புகழ்! நிறைவான பேச்சுக்களே யாவர் வாயினும் முழங்கின. அடிகளின் தோற்றப் பொலிவைப் பேசுவோரும் விரிவுரையின் சிறப்புக்களை விளம்புவாரும், நூல்களின் அருமைகளை எடுத்து உரைப்பாரும், அறிவின் நுட்பத்தை ஆராய்ச்சியின் வன்மையை எடுத்துரைப்பாரும் எங்கும் நிறைந்தனர். ஒப்புரவு கள் அளவிலமையாது வளர்ந்தன. அடிகளின் தங்குமிடத்தில் பலர் கையுறைப் பொருள்களோடு வந்து காத்திருந்தனர்.

இரண்டாம் நாள் விழா

பிற்பகல் இரண்டு மணிக்கு அடிகள் தலைமையில் விழாத் தொடங்கியது. இரண்டாயிரம் பேர் திரண்டிருந்தனர். சச்சிதானந்தம் பிள்ளை, அ.மு. சரவண முதலியார் ஆகியோர் உரையாற்றினர். பிறகு அடிகள் எழுந்து இரண்டு மணி அளவு பேச்சாளர்கள் பேசியவற்றிலுள்ள அருங்கருத்துகளை எல்லாம் நுட்பமாகவும், திறமாகவும் விளக்கி உரைத்தார்கள். அடிகளின் இவ்வறிவு செறிந்த ஆய்வுரைகள் அவையோரை எல்லையில்லா இன்ப வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டது. அடிகளின் பேசும் ஆற்றல் தன் முழுத் தன்மையுடன் வீறு பெற விளங்கிற்று. அடிகளின் இனிமையுடன் ஆர்ந்த இன்ப உரைகளே எல்லார் உள்ளங்களிலும் ஆரா இன்பத்தை விளைவித்தன. இடையிடையே சொற்பொழிவாளர்களின் பெயர்களைக் கூறிக்கூறி அவர்களின் அறிவாற்றல்களைப் பாராட்டுமாறு செய்திராவிட்டால் பேச்சாளர்களின் நினைவு அவையோர் நினைவிலிருந்து நீங்கியிருக்கும். அடிகளின் பேச்சில் அவையினர் அப்படி உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டனர். கூட்டம் இரவு 10 மணிக்கு முடிவற்ற பிறகுதான் கேட்டவர்களுக்கு ஓ! இவ்வளவு நேராமாகி விட்டதா? நேரம் போனதே தெரியவில்லையே! என்ற நினைவுகள் ஏற்பட்டன. பிற்பகல் இரண்டு முதல் இரவு 10 வரையில் 8 மணி நேரமா அவை நடப்பது? யார் குற்றம்? கேட்டவர்கள் குற்றம் தான் அது.

பேரூர் என்ற இச்சிற்றூரில் அறிவின்பத்தை நுகர அன்று கூடிய கூட்டத்தை என்னென்று வியப்பது? வெளியூர் மூவாயிரம் பேருக்கு மேற்பட்ட அன்பர்களும், அறிஞர்களும், புலவர்களும், பெருமக்களும் திரண்டு நிறைந்தனர். ஒப்பரிய காட்சி! அடக்கமும், இன்பமும், தமிழார்வமும், தெய்வபக்தியும், புலமையும் நிறைந்த அன்பர்களின் திரட்சி. கோவை நகரிலுள்ள ஆசிரியர்கள், ஆலை முதல்வர்கள், வணிகர்கள், அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒழுங்கு

திரண்டு நின்ற இதுபோன்ற கூட்டம் நிகழ்ந்திராது என்று அன்பர்கள் ஆர்வமுடன் கூறினர். எல்லார் உள்ளத்தும், வெளியேயும் அழகான அடிகளே வீற்றிருந்தார். செவிகளில் இன்பத் தேன் மழையைப் பெய்து கொண்டிருந்தார். அறிவிலே ஒளி வீசிக் கொண்டிருந்தார்.

இவ்வினிய சூழ்நிலையில் அடிகள் சிறிது நேரம் முன்னுரை ஆற்றி அவை நடைபெற வேண்டும் முறையையும் கூறிக் கோயம்புத்தூர் வழக்கறிஞர் சிவக் கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களைப் பேசப் பணித்தார். அவர் மதத்தின் இன்றைய நிலை என்பத பற்றிப் பேசினார். பின்பு ஞானியார் சுவாமிகள் மாணவர் திருக்கோவிலூர் மணம் பூண்டி ம. ரா. குமாரசாமி பிள்ளை என்னும் மாபெரும் பேச்சாளர் சேந்தனார் வாழ்க்கை என்பது பற்றி மக்கள் எல்லாரும் இன்ப ஆரவாரம் கொண்டு கேட்கத் தேன் மழை பொழிவதென பேராறு பெருவெள்ளம் கொண்டு திரண்டுருண்டு இன்னொலியுடன் ஓடுவதென - பனிவரை அருவியென - இரண்டு மணி அளவு பேசினார். அவையோர் அடிகளை மறந்தே விட்டனர்.

அடிகள் முடிவுரையை அவையோர் நன்கு சுவைத்து இன்புறுதற்காக மாலையில் அரைமணி நேரம் ஓய்வு தந்தனர். பந்தலில் இடமில்லாமையால் நாற்புறத்தும் இருந்த அடைப்புகள் அகற்றப்பட்டன. கூட்டம் மிகுந்துவிட்டது. நான்காயிரம்பேர் கூடி அமர்ந்திருந்தனர். அரிய அதிசயத்தைக் காணத் திரண்டிருப்பது போல அமைதி அங்கு குடி கொண்டது. ஆவி விளக்குகள் எரியும் ஓசை, மட்டும் ஒத்தூதிக் கொண்டிருந்தது. சிவ சமயத்தின் சிறப்பே உருக் கொண்டதே போல் அழகில் திகழும் அடிகளார் எழுந்தார். உணர்ச்சி மிகக் கண்ணீர் சொரிய வணக்கப் பாடல்களைப் பாடி அவையினரை இரண்டொரு கணம் கூர்ந்து பார்த்து விட்டுப் பேசத் தொடங்கினர்.

முற்பகலிலும் பிற்பகலிலும் நிகழ்ந்த சொற்பொழிவுகளில் கண்ட அரிய பொருள்களைப் பற்றுக் கோடாக் கொண்டார். சீரிய ஆராய்ச்சிகள் நிறைந்து விம்மின. அன்று அடிகள், தாம் இத்துணை யாண்டுகளாகக் கற்றுச் சேர்த்த பேரறிவும் கருவூலங்களை எல்லாம் எவ்வகையான தங்கு தடையின்றி எளிதாக எடுத்தெடுத்து வழங்கினார். அறிவும், பேச்சும் நினைக்கு முன் அவர்க்கு அடிமைகள் போலப் பணியாற்றின. அவையோர், ''இப்பிறப்பில் இணையிலா இன்பம் பெற்றோம்; மறுமை இன்பமும் இதற்கு ஈடாகுமோ? பேரின்பம் ஒன்றுண்டானால் அது இதுவேயாகும். இப்பேரின்பம் தந்த இவரே சிவம்'' என உருகினர். இன்பத்தால் அழுதனர் பலர். தந்திறமும், அவையோர் அடைந்த இன்பமும் கண்டார் அடிகள். இரவு 10.30 மணிக்குத் தம் பேச்சினை முடித்தனர்.

சத்வித்யா சன்மார்க்க சங்கம் பற்றிய கட்டுரை சற்று நீண்டதாக இருந்தாலும் அக்காலச் சைவ நிலையைத் தெள்ளிதின் படம் பிடித்துக் காட்டியுள்ளது. மேலும் இதில் சங்கத்தின் வளர்ச்சியும் பேரூர் ஆதீன வளர்ச்சியும் பிணைந்துள்ளன.

கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் ஒரு சமயம் ''சீவகாருண்யம்'' பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஒருவர் குறுக்கிட்டு, ''தேள், பாம்பு முதலிய விஷப் பிராணிகளிடம் கூடவா கருணை காட்டுவது?'' என்று கேட்டார். அச்சமயம் கூரையிலிருந்து ஒரு தேள்

இவர் தோளில் மீது விழுந்தது. அனைவரும் பதறினர். இவர் அசையாமல் உட்கார்ந்திருந்தார். தேள் அப்படியே கீழே இறங்கிப் போய் விட்டது.

ஒரு சமயம் தஞ்சை மாவட்டம் பசுபதிகோயிலில் இவர் தங்கியிருந்த போது கிணற்றில் ஒரு பாம்பு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. இவர் ஒரு கூடையைத் தாம்புக் கயிற்றில் கட்டிக் கிணற்றில் விட்டார். அருகில் இருந்தவர். ''இது ஆபத்து'' என்றனர். கூடையில் பாம்பு ஏறிக் கொண்டது. மெதுவாக வெளியே தூக்கினபோது அதுகுதித்து ஓடிவிட்டது. இவரை ஒன்றும் செய்யவில்லை.

சாந்தலிங்க ராமசாமி அடிகள்



1967-இல் பேரூர் ஆதீனத்தின் ஏழாவது குருமகாசந்நிதானமாக தவத் திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் அருளாட்சி ஏற்றார்கள்.

1976 ஆம் ஆண்டு வரை கல்லூரி, நூலகம், மாணாக்கர் விடுதி என புரவலர்களின் உதவியுடன் எழுப் பினார்கள். 1977-இல் மழலையர் பள்ளி, 1981இல் முதுகலை வகுப்பு, 1983-இல் முதுகலை ஆராய்ச்சி (எம. பில்) வகுப்பையும், 1986-இல் மெய்ப் பொருள் ஆய்வியலையும் (முனைவர்) தொடங்கினார். 1984 முதல் 1989 வரை 27 எம்ஃபில் ஆய்வேடுகள், 1984 - 1998இல் 52 எம்.ஏ. ஆய்வேடுகள், 1985 - 1998ல் 48 பி.லிட். ஆய்வேடுகள் அனைத்தும் சைவச் சமயச் சார்புடையன.

சமயப்பணியில் குறிப்பிடத்தக்கன. திருக்கயிலைக் காட்சியினைக் கண்டு வந்ததும், தமிழில் திருக்குட நீராட்டைத் தொடங்கியதும் ஆகும். திருக்குட நீராட்டு, வாழ்வியல் சடங்குகளான புதுமனை புகுவிழா, திருமணம், மணிவிழா, நீத்தார் கடன் ஆகிய அனைத்திற்கும் தமிழில் சடங்கு முறைகளை ஆக்கிக் கொடுத்துள்ளார். திருநெறிய தமிழ் முறைப்படி மூவா யிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோயில் களுக்குத் திருக்குட நீராட்டுப் பெரு விழாவைத் தலைமை தாங்கி நடத்தி அமெரிக்கா முதலிய அயல்நாடுகளிலும் திருக்குடநீராட்டு நடத்தியுள்ளார்கள். இளையோர்களும் மாணவர்களும் சமய நிலையில் ஒன்றிணைந்து செயல்பட சமயப் பண்பாட்டுப் பயிற்சியினை ஏற்படுத்தி உள்ளார். மேலும் கிராமப் பூசாரிகள் பக்குவம் பெற்று வழிபாடாற்ற தமிழ் முறைப்படியான புத்தகம் ஒன்றினை அடிகளார் உருவாக்கி உள்ளார். 1988ல் கனடாவில் நடைபெற்ற உலக சைவ மாநாட்டிலும் இரண்டாவது உலக சைவ மாநாட்டிலும் தலைமையேற்றார். சிறு கோயில்களில் தெய்வங்களுக்குப் பலியிடுதலை விலக்கியிருக்கிறார்.

இவ்வாறு தமிழைத் துறக்காத தனிப் பெருந்துறவியாக பேரூரடிகளார் விளங்குகிறார்.

(ix) மணிவாசகர் அருட்பணி மன்றம்

பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்றம் தோன்றிச் சில ஆண்டுகளே ஆனாலும் தமிழகச் சைவ வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டது. தமிழத்தின் ஒரு பெரும்பகுதியில் உள்ள திருக்கோயில்களில் தமிழ்த் திருமுறைப் படி திருக்குட நன்னீராட்டு விழாக்கள் நடைபெற்று வருகின்றன என்றால் மணிவாசகர் அருட்பணி மன்றமே காரணம். இது ஒரு பெரும் எழுச்சி! இதனை வார்த்தைகளால் எழுதுவது என்பது சூரியனைச் சொம்புக்குள் அடக்கும் குழந்தையின் செயலே!

கொங்கு மண்டலத்தின் நுழை வாயிலாகக் கரூர்க்குள் நுழைந்த வுடனேயே மணிவாசகர் மன்றத்தின் தாக்கம் புரிந்து விடுகிறது. கரூர் - வெள்ளைக் கோவில் - கோவை - பேரூர் - புன்செய் புளியம்பட்டி - ஈரோடு - பவானி என்று ஒரு தொண்டுச் சங்கிலி யால் மணிவாசகர் மன்றம் இணைந்து உள்ளது. இந்த மூன்று மாவட்டங் களையும் தாண்டி திருப்பத்தூரில் ஒரு பெரும் சைவ அணி, வேலூர், கள்ளக் குறிச்சி, குறிஞ்சிப்பாடி (காற்று புக முடியாத இடத்திலும் புகுந்து நிற்கும் அற்புதக் கதைகள் படித்திருக்கிறோம்) எனப் பரவியுள்ள அற்புதத்தை இம்மன்றத்தார் செய்திருக்கின்றனர். நான் சென்ற இடமெல்லாம் இவர்கள் முத்திரையைக் கண்டு வியந்து போனேன். சிறு சிறு கிராமங்களுக்குக் கூட சென்று திருமுறை குடநீராட்டு செய்து இருக்கின்றனர். 11.3.2004 ஆர்க்காடு மாநாட்டு மலரில் கண்டபடி இதுவரை மன்றத்தின் மூலம் 150 திருக்கோயில்கள் திருநெறிய தமிழ் முறைப்படி திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றுள்ளன. இவற்றுள் 25 திருக்கோயில்கள் சிவன் திருக் கோயில்கள் ஆகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருமணங்கள், புதுமனை புகுவிழாக்கள், எண்பது அறுபது அகவை விழாக்கள், நீத்தார் கடன் முதலிய வாழ்வியல் சடங்குகள், ஈராயிரத்திற்கும் மேற்பட்ட ஐங்கரப் பெருமான் வேள்வி (கணபதி ஓமம்) முதலியன திருநெறிய தமிழ்முறைப்படி நடத்தியிருக்கின்றனர்.

இவையெல்லாம் நடக்கக் கூடிய செயல்களா? ஒரு கோயிலுக்குச் செய்யலாம். தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கான கோயில்கள் உள்ளன. அவற்றிற்கெல்லாம் குடநீராட்டு செய்ய நூற்றுக் கணக்கான நடத்துனர்கள் வேண்டாமா? இவைகளையெல்லாம் முறைப்படுத்த நூல்கள் வேண்டாமா? என்று நாம் கோபுரத்தின் உச்சியில் இருந்து கூச்சலிட்டுப் பயனில்லை. அனைத்துக் கேள்விகளுக்கும் அவர்களிடம் பதில்கள் இருக்கின்றன. நம்முடைய கேள்விகளுக்கான பதில்கள் அல்ல. அவர்கள் செயல்களே பதில்கள்!

முதிர்ந்த தமிழறிஞர் திரு. மா. பட்டியப்பனார் அவர்கள் வாழ்வியல் சடங்குகள் அனைத்தையும், குடநீராட்டு விழாவையும் நெறிப்படுத்தி, திருமுறை வழி பாடல்களையும் தொகுத்து ஒவ்வொரு சடங்கிற்கும் ஒரு நூலாக எழுதிக் கொடுத்து விடுகிறார். உடனடி யாக அனைத்து நூல்களையும் மன்றம் அச்சடித்துக் கொடுத்து விடுகிறது. குடநீராட்டு அல்லது வாழ்வியல் நிகழ்ச்சிகளை செய்ய விரும்புவோர்க் கெல்லாம் நூல்கள் சென்று விடுகின்றன.

குடநீராட்டு விழா செய்ய மன்றத்தினை அணுகினால் மன்றத் தலைவர் பெரும் பேராசிரியர் திரு. ந. இரா. சென்னியப்பனார் தம் குழுவிற்குச் செய்தி தெரிவித்து ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்வார்கள். உடனே மன்றச் செயலர் குமரலிங்கம் தன் குழுவினை

அழைத்துக்கொண்டு திருக்குட நன்னீராட்டுச் செய்ய வேண்டிய திருக்கோயிலுக்குச் சென்று பணியை முடித்து மீள்வார். இதற்காக இவர் தனியாகப் பயிற்சி பெற்றுள்ளார். குடநீராட்டு விழா அன்று தலைவர் உள்ளிட்ட மன்றத்தார், பேரூர் சுவாமிகள் கௌமார மடம் சுவாமிகள் எழுந்தருளி நெறிப்படுத்தி அருளாசி வழங்கிப் புனிதப்படுத்துவார்கள்.

சரி. ஒரு குமரலிங்கம் போதுமா? இங்கு ஆயிரம் குமரலிங்கங்கள் உருவெடுக்கின்றார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இதுவரை (11.3.2204) பேரூர், பவானி, ஈரோடு, கரூர், பொள்ளாச்சி, சின்னக்காம்பட்டி, கள்ளக்குறிச்சி, குன்றக்குடி, திருவெறும்பூர், காட்பாடி ஆகிய ஊர்களில் - தக்க அறிஞர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தியுள்ளனர். எதிர்வரும் காலங்களில் ஆண்டொன்றுக்கு 1000 பேர் என்ற விகிதத்தில் தமிழ்நெறி வழிபாடு செய்பவர்களை (தமிழ் சிவாசாரியார்கள்) உருவாக்க முயற்சிகள் செய்து வருகின்றனர். சரி.இச்செய்தி மக்களிடம் வரவேற்பு பெற வேண்டாமா? மாவட்டம் தோறும் தெய்வத் தமிழ் மாநாடு நடத்தி மக்களிடம் இச்செய்தியைக் கொண்டு சென்றிருக்கின்றனர். 11.3.2004 வரை ஆம்பூர், தஞ்சாவூர், உதகமண்டலம், பாண்டிச்சேரி, விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பூர் ஆகிய ஊர்களில் மாவட்ட மாநாடுகள் நடத்தியுள்ளனர். 28, 29 டிசம்பர் 2002ல் கருவூரிலும் 13, 14 மார்ச் 2004ல் வேலூர் மாவட்டம் ஆற்காடு நகரிலும் மாநில அளவில் தெய்வத் தமிழ் வழிபாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. கரூர் மாநாட்டில் பேரூர் ஆதீனம், மதுரை ஆதீனம், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கௌமார மடம் அடிகளார், இலண்டன் சிவநந்தியடிகள், ஊரன் அடிகள், டி.என். சிங்காரவேலு, ச. முத்துக்குமரன், பழ கருப்பையா, சொர்ணா சோமசுந்தரம், சென்னியப்பனார், பி.கே. குமாரசாமி, மு. கிருட்டிணன், கு.சுந்தரமூர்த்தி, தமிழண்ணல், மு.பெ. சத்தியவேல் முருகனார், குமரி அனந்தன், கி. ஆ. பக்தவத்சலனார், த. விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதே பெருமக்களும் இரத்தினகிரி பால முருகனடிமை சுவாமிகளும் 2வது மாநாட்டிலும் கலந்து கொண்டனர். கனமான மலர்கள் வெளியிட்டுள்ளனர். அகலமாகவும், ஆழமாகவும் உழுதிருக்கிறார்கள். நீர் பாய்ச்சி எருவிட்டுக் களையும் எடுத்திருக்கிறார்கள். திருமுறை விளைச்சலுக்குக் கேட்பானேன்!

தங்கள் பணிகளுக்குத் துணையாக 34 நூல்கள் ளியிட்டுள்ளனர். 22.12.1993 முனைவர் திரு. ந. இரா. சென்னியப்பனார் அவர்களைத் தலைவராகவும், பெரும் பேராசான் திரு.மா. பட்டியப்பனார் அவர்களைத் துணைத் தலைவராகவும், திரு. ப. குமரலிங்கம் அவர்களைச் செயலராகவும், திரு. அ.மா. இலட்சுமிபதிராஜ் அவர்களைப் பொருளராகவும் கொண்டு துவங்கப்பட்ட இம்மன்றம் ஆரம்ப காலத்தில் சிவன் கோயில்களில் உழவாரப் பணி, பேரூர் பட்டிப் பெருமான் திருக்கோயிலில் வார வழிபாடு, புராண வகுப்புகள் நடத்தி வந்தது.

உழவாரப் பணி மேற்கொண்ட போது தென்கயிலாயச் சிவன் கோயில் திருப்பணி செய்யப்பெற்று 8.6.1995 அன்று குடநீராட்டு செய்யப்பட்டது. பாழ்பட்டு விளையாட்டு இடமாகவும், ஊர்மக்கள் குப்பை கொட்டும் இடமாகவும் இருந்ததை மன்றத்தார் மாற்றி வழிபாட்டு இடமாக அமைத்துக் கொடுத்தனர்.

வடகயிலாயக் கோயில் மாடு கட்டும் தொழுவமாக இருந்தது. திருமுறைச் செல்வி திருமதி சொர்ணா சோமசுந்தரம் அவர்களின் பொருட் செலவிலே மன்றத்தாரால் திருப்பணி செய்யப்பட்டது. இக்கோயிலுக்கு மின்சார இணைப்பு, தண்ணீர் இணைப்பு ஆகியவை வாங்கித் தரப்பட்டன.

அழகிய சிற்றம்பலம் ஆடுகள் அடைக்கப்பட்டும், வைக்கோல் போடப்பட்டும் இருந்தது. மன்றத்தின் சார்பில் திருப்பணி செய்யப்பட்டு மின்சாரத் தண்ணீர் குழாய் இணைப்புகள் மன்றத்தின் செலவில் வாங்கித் தரப்பட்டது.

மாதேசுவரர் கோயில் பாழடைந்து இருந்தது. ஊர் குப்பைகளெல்லாம் பல்லாண்டு காலமாக இங்கு குவிக்கப் பட்டிருந்தது. மன்றத்தார் பெரும் முயற்சிசெய்து பல நாள் குப்பைகளை அகற்றிக் கோயில் திருப்பணி செய்தனர். மன்றத்தின் செலவில் குடமுழுக்கு செய்யப் பெற்றது.

தினமும் மாலையில் குழந்தைகள் கோயில் வளாகத்தைக் கூட்டி எடுத்தல், மாலை தொடுத்தல், திருமுறைப் பாராயணம் செய்தல், விளக்கு வைத்தல் முதலிய பணிகளைச் செய்து வந்தனர். வாரந்தோறும் வியாழக்கிழமை மாலையில் திருமுறை இலவசவகுப்பு திருமதி. சொர்ணா சோமசுந்தரம் அவர்கள் நடத்தி வந்தார்கள். தென் கயிலாயத்தில் பேரூர்ப்புராண வகுப்பு மன்றத்தின் சார்பில் வாரந்தோறும் திங்கட்கிழமை மாலையில் நடத்தப் பெற்றது.

இவற்றைத் தொடர்ந்து மொக்கணீச்சரம் முழுத்திருப்பணி; திண்டிவனம் பகுதியைச் சேர்ந்த வயிரபுரம் சோமசுந்தரர் திருக்கோயில் திருப்பணி (நடனசபாபதி மற்றும் ஊர்ப் பெருமக்கள் ஆதரவுடன்) வந்தவாசி வட்டம் மாவல்வாடி அருள்மிகு பிச்சேசுவரர் திருக்குட நன்னீராட்டு திருநெறிய தமிழ் முறைப்படி செய்யப்பெற்றது.

இதனையடுத்துச் சிறிதும் பெரிதுமாய்ப் பல கோவில்கள் திருப்பணி செய்யப்பெற்றன. தற்பொழுது மிகப் பெரிய திருப்பணியாக மேட்டுப் பாளையம் வட்டம் - முடுதுறை கிராமம் - பெரிய குமார பாளையம் அருள்மிகு நாகநாதர் திருக்கோயில் ஏறத்தாழ 70 இலட்ச ரூபாய் செலவில் செய்யப்பெற்று வருகிறது. முற்றிலும் சிதைந்திருந்த கோயில். மிக நல்ல முறையில் திருப்பணி செய்யப்பெற்று வருகிறது. அதுபோன்றே இடுகாலூர் தேனீசுவரர் திருக்கோயிலும் பெரும் பொருட் செலவில் செய்யப்பெற்று வருகிறது. இம்மன்றத்தார் முன்னின்று நடத்திய கரூர் பணிமுத்திசுவரர் திருக்கோயில் குடநீராட்டு விழா நிகழ்ச்சி நாடு தழுவிய கவனம் பெற்றது. மணிவாசகர் அருட்பணி மன்றத்தின் மாண்புகளை எடுத்துரைக்க ஆயிரம் நாவு படைத்த ஆதிசேடனாலும் முடியாது.

19ஆம் 20ஆம் நூற்றாண்டு ஆன்றோர்கள்

பேரூரில் தொண்டுச் செல்வத்தோடு அறிவுச் செல்வமும் மண்டிக் கிடக்கிறது. தமிழ்க்கல்லூரி உள்ள ஊரலல்வா? அறிவுச் செல்வத்திற்குக் கேட்பானேன்? பத்தொன்பதாம் நூற்றாண்டில் முத்து நைனாத்தை முதலியார் அவர்கள் பேரூர்க்கோவை, பச்சை நாயகி பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களையும் வாசுதேவ முதலியார் திருமுருகன் பூண்டித் தல புராணம், பவானி தலபுராணம், பவானி அம்மன் பேரில் பிள்ளைத் தமிழ் ஆகிய

நூல்களையும் கந்தசாமி முதலியார் பேரூர்ப் பிரபந்தங்களையும் இயற்றி யிருக்கின்றனர். திருச்சிற்றம்பலம் பிள்ளை என்ற கவிஞரும் வாழ்ந்திருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கந்தசாமிபிள்ளை பெரும் புலவர் ஆவார். ஆர் எஸ். கல்யாணசுந்தரக் கவுண்டர் சித்திர கவி பாடுவார்.

(xi) கு. நடேசக்கவுண்டர்

1901-இல் கோவையில் பிறந்த கு. நடேசக் கவுண்டர் அவர்கள் தொடக்கத்தில் வழக்கறிஞர் எழுத்தராகத்தான் இருந்தார். பிறகு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர், பேரூர் கல்லூரி முதல்வர் என்று படிப்படியாக வளர்ச்சி அடைந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். மங்கையர்க்கரசி பிள்ளைத் தமிழ், எட்டுகுடி முருகன் பிள்ளைத் தமிழ், திருநிலைநாயகி பிள்ளைத் தமிழ் என பிள்ளைத் தமிழ் நூல்கள் பல பாடியுள்ளார். தேவாரத்தில் பெரிதும் ஈடுபாடு உள்ளவர். இவர் எழுதிய ''அப்பர் வரலாறும் தேவாரத் திறனாய்வும்'' என்ற நூலைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. சங்கரரின் நூல்களை மொழி பெயர்த்திருக்கிறார். ஸ்ரீ நீலகண்ட தீட்சதர் அருளிச் செய்த ''ஆனந்த சாகரஸ்தவம்'' என்ற 108 பாடல்கள் கொண்ட நூலை ''இன்பமா கடல்'' என்று அழகுறத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஒவ்வொரு பாடலும் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைந்துள்ளது. ''அம்மா நின் திருக் கோயிலில்லாத நாட்டினில் யான் அமர வேண்டா எம்மோய் நின் மெய்ம்மையினை உணர்த்தாத கலையெதுவும் எனக்கு வேண்டா விம்மார்வத்தால் உனது தாள் பரவாக்கிளை எனக்கு மேவவேண்டா இம்மாய உலகில் உனை நினையாத நாளொன்றும் ஈயவேண்டா.''

ஒவ்வொரு பாடலும் தேன்சிந்தும் பாடல். நடேசக் கவுண்டர் 1972-இல் இறையடி சேர்ந்தார்.

(xii). பட்டியப்பனார்



அடுத்து இற்றை நாளில் வாழ்ந்து வளப்படுத்திக் கொண்டிருக்கும் ஆன்றோர்களைப் பார்ப்போம். கால முறைப்படி முதலில் வருபவர் மூதறிஞர் பட்டியப்பனார் அவர்கள். அவர்கள் கோவையில் வசித்தாலும் பணிக்காலத்திலும், ஓய்வுக்காலத்திலும்

இவர்கள் பணி மிளிர்வது பேரூரில்தான், பேரூர் தமிழ்க் கல்லூரியில் பணியாற்றினார்கள். ஓய்வு பெற்றபின் மணிவாசகர் அருட்பணி மன்றத்திற்காக வாழ்வியல் சடங்கு களையும், திருக்குட நன்னீராட்டு விழாக்களையும் திருமுறைவழி நெறிப் படுத்தி, பத்துக்கு மேற்பட்ட நூல்களாக வழங்கியுள்ளார். எண்பத்து நான்கு வயதாகியிருந்தாலும் சைவ வரலாற்றை - தமிழ் வரலாற்றை நேர்காணல் செய்த பொழுது அழகுற விளக்கினார்.

‘‘மொழி சார்ந்த வாழ்வியல்; வாழ்வியல் சார்ந்த சமயம்’’ என்று தொடங்கினார். ‘‘கோயில் தழுவிய குடிகள்; குடிகள் சார்ந்த கோயில்’’ என்று குன்றக்குடி அடிகளார் கூறுவது போல இருந்தது. மேலும் மணிவாசகர் அருட்பணி மன்றத்தின் திருமுறை தாகம், தமிழ் வேகம் இவற்றின் உயிர் நாடி எங்கு என்பதையும் தெரிந்து கொள்கிறோம். ‘‘தொல்காப்பியர் இருந்ததை இருந்தபடி சொன்னார். வள்ளுவர் மானிடத்திடம் எதிர்பார்க்கிறார். அப்பர், சம்பந்தர் காலம் வரை சமுதாயப் (சமயப்) பார்வை விரிந்திருந்தது. விரிவிலா அறிவினார் வேறொரு சமயம் செய்வாரேனும், எம்பெருமானுக்குஏற்றது என்றார். புலால் உண்ணாமை, கொல்லாமை சமுதாயத்தில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அந்த எதிர்பார்ப்பே ஆன்ம வளர்ச்சிக்குத் தடையாகி விடக்கூடாது என்றும் கருதினார்கள். அப்பர் பெருமான் அந்தத் தடையை உடைத்தார். ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே என்றார். இந்த விரிந்த பார்வையில் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பனிரண்டாம் நூற்றாண்டு வரை ஒரு தேக்கம் ஏற்பட்டது. மக்களை அழைத்த காலம் போய் நடைபாதையை நெருக்குகிற நிலைமைக்கு வந்து விட்டது. சிவஞான சுவாமிகள் காலம் வரை சமயக் கருத்துகள் அறிஞர்களிடம் மட்டுமே இருந்தன. பின்னர் திருமடங் களிடம் சென்று சேர்ந்தன. இன்னும் வலுவாக வேலி போடப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் விரிய ஆரம்பித்துள்ளது’’ என்று ஆயிரம் ஆண்டு வரலாற்றினை சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.

‘‘இன்றைய மக்களுக்கு என்ன சொல்கிறீர்கள்?’’ என்று கேட்டேன். உடனே அவர்கள், ‘‘முதலில் சமயத்தில் தோய்வு இருக்க வேண்டும், உயிர்கள் இன்ப நுகர்ச்சி பெற இருக்க வேண்டும், உயிர்கள் இன்ப நுகர்ச்சி பெற இருக்கும் தடைகள் நீங்க வேண்டும், அடுத்து இன்ப நுகர்ச்சியின் இருப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்த மாத்திரத்திலே நுகரத் தெரியவேண்டும். மாணிக்க வாசகர் இரண்டே வார்த்தைகளில் கூறிவிட்டாரே. ‘அழுதால் பெறலாமே’ பட்டியப்பனாரிடம் பேசப்பேச வியந்து போனேன் முன்னைப் பழமைக்கும் பழமையான வரலாற்றையும் சொல்வார். பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நாம் செய்ய வேண்டுவன வற்றையும் சொல்வார்.

அவர் சொன்ன வண்ணம் யான் அறிந்தேன்.

அவற்றை செயல்படுத்தும் வண்ணம் யார் அறிவார்?

(பிறப்பு - 1921; ஊர் - பேரூர்; பெற்றோர் - மாரிமுத்து, மருதாணி)

(xiii) வையாபுரியார்

பட்டியப்பனார், சென்னியப்பனார் ஆகியோரை எல்லாம் பார்க்கலானது முடிந்தது. ஆனால் பார்க்கவும் முடியாமல் ஆனால் அனைவரின்

உள்ளத்தில் குடியிருக்கும் மாபெரும் அறிஞர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் கொங்கு மண்டலத்துத் தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் ''ஆசிரியர் ஐயா'' என்று அன்போடு மதித்துப் போற்றும் பேராசிரியர் ர. வையாபுரியார் அவர்கள்.

ஆம். ஒழுக்கத்திலும் சரி; தான் ஏற்றுக் கொண்டிருக்கும் பணியிலும் சரி; நெருப்பு அவர்கள். பேரூர்த் தமிழ்க் கல்லூரியில் ஆசிரியர். முதல்வராக இருந்து பல தமிழாசிரியர்களை உருவாக்கியவர். ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம் அவர்கள் நடத்திவரும் சைவ சித்தாந்த பயிற்சி வகுப்பு பேரூர், ஈரோடு, திருச்செங்கோடு ஆகிய இடங்களில் 12 ஆண்டுகள் நடத்தியவர்கள். அவ்வாறு நடத்தி வந்த காலத்தே பேரூர் சீலத்திரு வேலப்ப தேசிகர் வழிபாட்டு மன்றம் நிறுவி பல்லாற்றானும் சைவ சித்தாந்தத்தைப் பரப்பி வருகிறார்.

வையாபுரியார் பேச்சு கவலைத் தண்ணீர் மாதிரி. கவலையிலிருந்து பாய்ச்சப்பட்ட நீர் நேராக குறிப்பிட்ட இடத்தில் பாயும், அதுபோல ஐயா அவர்கள் பேச்சு யாருக்குச் சொல்லப் படுகிறதோ அவர்கள் மனதில் ஜெராக்ஸ் போலச் சென்று பதிந்து விடும்.

மூன்று மணி நேரம் அசையாமல் பாடம் நடத்துவார்கள். அன்பர்கள் ஐயாவிற்காக உணவு எடுத்து வருவார்கள். அவற்றை எல்லாம் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். கிடுகிடென்று வீடு சென்று உணவினை முடித்து விட்டு அதே வேகத்தில் வருவார். நெருப்பு என்றால் அப்படி ஒரு நெருப்பு.

இந்த மன்றமும், சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு நடந்த இடமும் பேரூர் திருவாவடுதுறை ஆதீனக் கட்டிடம் ஆகும். அதனை வந்து பார்க்க வேண்டும். சொற்பொழிவாளர்களோ, ஒரு அமைப்பினை எடுத்து நிர்வாகம் செய்பவர்களோ என்ன செய்வார்கள்? கூட்டத்தில் வந்து பேசுவார்கள். கூட்டம் நடத்துவார்கள். கலைந்து போவார்கள். இங்குதான் வையாபுரி ஐயா அவர்களின் மேன்மை தெரிகிறது. வையாபுரியார் வகுப்பு நடத்தும் திரு மடத்துக் கட்டிடம் துல்லியமாகத் தூய்மையாக இருந்தது. சுவரெல்லாம் மஞ்சள் வண்ணம் பூசப்பட்டு திருமுறைகள், பண்டார சாத்திரம், சைவ சித்தாந்தக் கருத்துகள் எழுதப்பட்டுக் காண்பார் தம் சிந்தைக்கு விருந்து அளிக்கிறது.

திரு மடத்தின் பின்புறம் வேலப்ப தேசிகர் சமாதி கோயில் உள்ளது. ஒரே காடாக மண்டிக் கிடந்தது. ஆசிரியர் ஐயா கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது சீடர்கள் அவற்றையெல்லாம் அகற்றி நந்தவனம் அமைத்து, நடை பாதை அமைத்து, சிவஞான முனிவர்க்கும் கச்சியப்ப முனிவர்க்கும் ஆலயங்கள் எழுப்பி விட்டனர். இதில் பெரும் பங்கு வகித்தவர் ஆசிரியரின் சீடர் சவுண்ட் ராமலிங்கம் ஆவார். திருமடத்துக்குள் நுழைந்தால் சிவமணம் வீசும்.

வையாபுரியாரின் சொல் வண்ணமும், கைவண்ணமும் அங்குக் காணலாம். தற்பொழுது கோவை, கரூர், ஈரோடு, ஆகிய ஊர்களில் திருமுறை சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தி வருகிறார்.

இவர்களது எழுத்து வண்ணமே உயிர் சில சிந்தனைகள், ஞானமா செல்வமா, எந்நாட்கண்ணி - உரை, அருள்மிகு விநாயகர் தோத்திர அட்டகம், ஞான உபதேசப்படலம் - உரை, சிவஞான முனிவர் வரலாறு, சிவஞான போதம் - சித்தி

ஆகியவற்றின் காணலாம். அனைத்தும் சிறுசிறு நுல்கள், அழகான அட்டை; அழகான அச்சு.

“உயிர்... சில சிந்தனைகள்”

பசு, பதி, பாசம் என்றெல்லாம் நம்மை மிரட்டவில்லை. உயிர் என்பது பொருள்? குணமா? உயிர் உடம்பில் இருப்பதாகச் சொல்கிறோம். உடம்பு முழுவதிலும் இருக்கிறதா? உடம்பினுள் ஏதாவது ஒரு பகுதியில் இருக்கிறதா? உடம்பினுள் எப்படி வந்தது? ஏன் வந்தது? எங்கிருந்து வந்தது? வந்தது வந்தபடியே இருக்க வேண்டியது தானே! உடம்பை விட்டு ஏன் நீங்குகிறது? நீங்கினபின் எங்கே போகும்?

உடம்பினுள் வருவதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தது? உடம்பினுள் வந்து என்ன செய்து கொண்டிருக்கிறது? உடம்பை விட்டு நீங்கினால் எங்குச் சென்று என்ன செய்து கொண்டிருக்கும்? என்று யாவரும் இயல்பாக எழுப்பக்கூடிய ஆர்வத்தைத் தூண்டுகிற கேள்விகளாக எழுப்பி, அவற்றிற்கு ஒவ்வொன்றாக விடையளிக்கிறார். இருபத்திரண்டே பக்கங்களில் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையில் ஒரு பொருள் உண்மை எளிதாகக் கிடைத்து விடுகிறது.

அதுதான் வையாபுரி ஐயா அவர்களின் தனித்திறமை! (வயது 78 இருக்கலாம், பிறந்த ஊர் - நல்லாற்றூர், டலூர் வட்டம்: வயதும் கிடைக்காது; புகைப்படமும் கிடைக்காது. அப்படி ஒரு பற்றற்ற வாழ்வு!

(xiv) ந. இரா. சென்னியப்பனார்



ந.இரா. சென்னியப்பனார் திருத்தொண்டின் உறைப்புடையவர் உழைப்பால் உயர்ந்த ஒண்தமிழ் அறிஞர், சாந்தலிங்கப் பெருமானிடம் ஈடுபாடு உடையவர்; இலக்கண, இலக்கிய வளம் பெற்ற பெரும் புலவர்; பேராசிரியராய் மாணவர் மனம் கொள்ள எடுத்துரைக்கும் செந்தமிழ்ப்புலவர்; தாம் மேற்கொண்ட கொள்கையில் என்றும் தளராதவர்.

பேரூர் செந்தமிழ் கல்லூரியில் மாணவராய், பேராசிரியராய், முதல்வராய் சிவநெறிச் சிந்தனையுடன் வாழ்ந்து ஓய்வு பெற்றபின் மணிவாசகம் மன்றத்தை உருவாக்கினார். திருநெறிய தமிழ் வாழ்வியல் நெறியிலும் அருளியல் நெறியிலும் இடம் பெறும் பல நூல்களைத் தொகுத்துள்ளார். அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லிப் பச்சை நாயகியாருடன் பட்டிப்பெருமானைப் போற்றும் உழுவல் அன்பினர். தன் இடையறா முயற்சியால் திருநெறி தெய்வத்தமிழ் மாநாடுகளைச் சிறப்பாக நடத்தும் செயல்வீரர். சைவ சித்தாந்த நுண்பொருளை அன்பர் மனம் கொள்ள எடுத்துரைக்கும் ஆற்றலுடையவர். இவருடைய பேச்சு மடைதிறந்தாற் போல இருக்கும்.

இது பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் வழங்கிய பட்டயம். பட்டயத்தின் ஒவ்வொரு வரிக்கும் பத்து பக்கங்கள் விளக்கம் தரலாம். சென்னியப்பனாரின் செயல் வண்ணத்தை மணிவாசகர் அருட்பணிமன்றச் செயல்பாட்டில் காணலாம். இங்கு எழுத்து வண்ணத்தைக் காண்போம்.

'பாடினால் பச்சைத்தாய் பட்டீசர்ப் பாடவேண்டும் கூடினால் நீறணியும் அன்பரோடு கூடியே சித்தாந்த உண்மையைச் சிந்தித்து பேசவேண்டும்.

இப்பாடல் சென்னியப்பனார் இயற்றிய தில்லைநாயகி அம்மன் இரட்டை மணிமாலை அருள்முறைத் திரட்டில் உள்ளது. என்ன எளிமை! என்ன அழகு! ''பட்டீசரையே பாடுதல்; அன்பரோடு கூடி சித்தாந்தமே பேசுதல்'' என்ன அற்புதமான கருத்து!

இதற்கு நேர்மாறானது அருள் தரு முயங்குபூண்முலை வல்லியம்மை பிள்ளைத் தமிழ் ஆகும். கருத்து நடை மிக உயர்ந்தவையே. ஆனால் மொழி சற்று கடினமானது. பிள்ளைத்தமிழைப் போன்ற சிற்றிலக்கியங்களைப் படைப்பதற்கும், ஏன், சுவைப்பதற்கும் மொழிப்புலமையும் விரிந்த இலக்கியப் பயிற்சியும் இன்றியமையாது வேண்டப்படும். ஒரு காலத்தில் புலமைக்கு எடுத்துக் காட்டாகச் சிற்றிலக்கியப் பயிற்சியே இருந்தது அல்லவா?

காப்பியக் கவிக்கு உள்ள சுதந்திரம் பிரபந்தக் கவிக்கு இல்லை. காப்பியக் கவி தன் விருப்பத்திற்கேற்ப காப்பிய மாந்தர்களையும் காப்பிய நிகழ்ச்சிகளையும் வருணனைகளையும் படைத்துக் கொள்ளலாம். தன் தேவைக்கு ஏற்ப நிகழ்ச்சிகளை விரிக்கலாம் அல்லது சுருக்கிக் கொள்ளலாம். சிற்றிலக்கியத்தில் அவ்வாறு செய்ய முடியாது. அரங்கமைத்து வட்டாடுவது போன்றது. சிற்றிலக்கியம் படைத்தல், தான் சொல்ல வந்த செய்தி எத்துணை விரிந்ததாயினும் எடுத்துக்கொண்ட யாப்புக்குள் அடக்கிச் சுவையாகவும் பிறழ்ச்சியின்றியும் சொல்லுதல் வேண்டும்.

எனவே வித்தாரக் கவியாக இருப்பவன் மொழித்திறமும், செய்யுள் யாக்கும் வல்லமையும் சொல்லைப் பணிகொள்ளும் வல்லபமும் பன்னூற் பயிற்சியும் பல்துறையறிவும் உடையோனே வித்தாரகவி ஆதல் இயலும், வித்தாரக் கவிகளில் முதலில் வைத்து எண்ணப் படுவது பிள்ளைத்தமிழ், வித்தாரக்கவிக்குச் சொல்லப்பட்ட இலக்கணங்கள் அனைத்தும் நன்கு வாய்க்கப்பெற்றவர் முனைவர் ந. இரா. சென்னியப்பனார்.

இவ்வாறு ஒரு விரிவான ஆய்வுப் பாராட்டு வழங்குகிறார் முனைவர் கோ.ந. முத்துக்குமாரசுவாமி அவர்கள்.

''தண்டமிழ்ப் புலவர்பலர் நாவளப்பா
வலங்கொட்ட

தண்மேகம் மழை கொட்டவே
தண்கதிர் தரணிதனில் தண்ணிலவு
தடங்கொட்ட

சங்கத்தில் தமிழ் கொட்டவே.

தொண்டரி மைகொட்டற்றுத் தொழுது நீர்
மிகக்கொட்ட

தொல்கோயில் தமிழ் கொட்டவே
தோகையர் உனகையால் தொந்தொம்மென
நடங்கொட்ட

தோகைமயில் துணைகொட்டவே.

அண்டரிமையாக்கண்ணர் அங்கிருந்து
பூச்சொரிந்து கொட்ட
ஆர்வலத்தார் வளங்கொட்டவே
ஆத்திமலர் தும்பைமலர் அண்டர்நாயகன்
மேல்கொட்ட
அறுகுவில்வம் அர்ச்சனை கொட்ட

சண்டனிங் குவராவண்ணம் சற்குரவர் தான்
கொட்டவே
சப்பாணி கொட்டியருளே!
தண்டலை நன்றுயர் தண்பூண்டித்
தமிழணங்கே!
சப்பாணி கொட்டியருளே!

மழை கொட்டுகிறது; மலர் கொட்டுகிறது; தமிழ் கொட்டுகிறது. நம் மேலும் தான்.

உமையம்மையைச் சென்னியப்பனார் 'தமிழணங்கே' என்கிறார். என்னே ஒரு தமிழ் நெஞ்சம்!

சென்னியப்பனார் கவிதை வடிவத்தில் மட்டுமல்ல; தேவாரப் பாடல்களுக்கு உரை விளக்கம் எழுதும் போது கூட ஞானசம்பந்தப் பெருமானின் ஏகபாதம், திருவெழு கூற்றிருக்கை என எடுத்துக் கொண்டு உரை எழுதுகிறார். இரும்புக்கடலை எல்லாம் இவருக்கு வாழையிலையில் வழுக்கிக் கொண்டு ஓடும் திருநெல்வேலி அல்வா போல இருக்கிறது. ஏகபாதம் என்றால் ஒரே அடி நான்கு அடிகளிலும் ஒரே முறையில் வருவது.

''பிரமபுரத்துப் பெம்மான் எம்மான்''

இதே வரி நான்கு அடிகளிலும் வரும். ஆனால் ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு பொருளைத் தரும். இது போல பனிரண்டு பாடல்கள் இந்தப் பன்னிரண்டு பாடல்களுக்கும் விளக்கம் தருகிறார் சென்னியப்பனார்.

இவையெல்லாமே கடினமான பணிகளே. ஆனால் இவற்றில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் ஒவ்வொரு காலத்தில் செய்திருக்கின்றனர். ஆனால் சைவவுலகில் இதுவரை செய்ய முயலாத - ஒரு அரும்பணியைச் சென்னியப்பனார் செய்திருக்கிறார்.

வைணவ உலகிலே பெரிய வாச்சான்பிள்ளையின் உரை தமிழுக்குக் கிடைத்த பெருங்கொடையாகும்: திருவாய்மொழிக்கு உரை எழுதிய பெரியவாச்சான் பிள்ளை நேரடி பொருளோடு நிறுத்திவிட மாட்டார். பல உள்ளர்த்தங்கள், இலக்கிய நயங்கள் புராணச் செய்திகள் - இப்படி பலவும் கலந்து மாபெரும் படைப்பாகத் திகழ்கிறது அவரது உரை. அவரது உரையே பேரிலக்கியம் ஆகும். அதில் ஒரு சிரமம், நடை வட மொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடை.

இதிலே ஒரு கதை சொல்வார்கள். இரண்டு நண்பர்கள்; ஒருவர் வைணவர்; மற்றவர் சைவர். வைணவர் தன் சைவ நண்பரைப் பார்த்து, ''அடியார் பெருமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லும் ஒரு பெரியபுராணம் எங்கள் வைணவத்திலே இல்லை'' என்று வருந்தினாராம். உடனே சைவ நண்பர், ''அதற்கென்ன! திருவாய்மொழிக்குப் பெரியவாச்சான் பிள்ளை உரைபோல எங்கள் திருமுறைகளுக்கு உரை இல்லையே'' என்று வருத்தப் பட்டாராம்.

அந்தக்குறையைச் சென்னியப்பனார் சிறிதளவு தீர்த்து வைத்திருக்கிறார். ஆரூரரின் திருமுருகன் பூண்டி தேவாரப் பாடல்கள் பத்துக்கு இவர் கண்டிருக்கும் உரை வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு சமய நுட்பம், தொல்காப்பியர் கூறும் நோக்கு, வட்டார வழக்கு, இலக்கணக் குறிப்பு, சங்க இலக்கிய மேற்கோள், நயங்கள் என பல சிறப்புகளைக் கொண்டிருக்கிறது.

பெரிய வாச்சான் பிள்ளை உரை அனைவரும் புரிந்து கொள்ள முடியா மணிப்பிரவாள நடை, இவரது உரையோ அழகு தமிழில் மிளிர்கிறது.

திருமுருகன் பூண்டி தேவாரத்தில் இரண்டாவது பாடலில் ''முல்லைத் தாது மணம் கமழும் முருகன் பூண்டி'' என்ற வரிக்கு இவர் தந்திருக்கும் உரை விளக்கம் படிக்குந்தோறும் சுவை பயப்பதாகும்.

சேரமான் பெருமானிடம் பெற்று வந்த பொருள்களை வேட்டுவ வடிவில் வந்த சிவகணங்கள் அபகரித்துச் சென்ற போது தோழமையின் உரிமை தோன்றப் பாடிய பதிகம் திருமுருகன் பூண்டிப்பதிகமாகும்.

''முல்லைத் தாது மணங்கமழ்
முருகன் பூண்டி''

சென்னியப்பனார் உரை விளக்கம்

நாயனாரின் பரிசனங்களிடையே பொருள்களை வேடுவர் கவர்ந்து சென்றமை அறிந்து கோபத்துடன் சென்று கோவிலை வழிபட்டுப் பாடினாலும் அப்பகுதியில் முல்லைப்பூக்கள் மணம் வீசியதை நாயனார் நன்கு உணர்ந்துள்ளார். அதனையும் சேர்த்தே பாடியுள்ளார். நாயனார் காலத்தில் திருமுருகன் பூண்டியில் கோவிலுக்குப் பக்கத்தில் முல்லைச் செடிகள் மிக்கிருந்தன. அவை நன்கு மணம் வீசின.

''தெற்றுகொடி முல்லையொடு மல்லிகை செண்பகமும்'' [161

என்றும் ''மகிழும் மல்லிகை செண்பகம் புதிய பூமலர்ந்து எல்லி நாறும் புறம்பயம்'' [352] என்றும்

''செண்பகச் சோலை சூழ் திருமுல்லை வாய்'' [700] என்றும் பாடியவர் நாயனார்.

வேறு எங்கும் முல்லைத்தாது மணங்கமழும் என்று பாடவில்லை. கொடிய மக்கள் வாழ்கின்ற பகுதியில் உள்ள முல்லைச் செடிகள் நறுமணம் பரப்புகின்றன. இயற்கை நன்றாக உள்ளது. மக்கள் வாழ்க்கை மாறாக உள்ளது. முல்லைக்கொடி நல்லதையே செய்யும் என்பதனை நாயனார் நன்கு அறிந்து அனுபவித்தார்.

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற தலங்களுள் வடதிருமுல்லை வாயிலும் ஒன்று. இங்கு முல்லைக்கொடி தல மரமாக இன்றும் உள்ளது. தொண்டை மான் என்னும் மன்னன் வேட்டைக்காக இப்பகுதிக்குச் சென்றான். மன்னனின் வரவினால் முல்லைக் கொடியை வெட்டினான். இறைவன் வெளிப்பட்டு அருள் செய்தான்.

''சொல்லரும் புகழான்
தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையால் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன்பெற
வெளிப்பட்டருளிய

இறைவனே என்றும்
நல்லவர் பரவும் திருமுல்லைவாயில்''

என்று நாயனார் அச்செய்தியைப் பாடியுள்ளார். நாயனார் சங்க இலக்கியச் செய்திகளை நன்கு அறிந்தவர். பாரி வள்ளல் பற்றிச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

''கொடுக்கிலாதானைப் பாரியே என்று
கூறினும் கொடுப்பாரிலை [341]

என்று பாரியைப் பாடியவர். முல்லைக்குப் பாரிவள்ளல் தேர் கொடுத்ததை அறிவார். சங்ககால ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தன் சிறந்த வள்ளல் ஆவான். அவர் வள்ளல் தன்மையைப் பாணர் பாடி மகிழ்ந்தனர். பெருஞ்சாத்தன் வாழ்ந்தபோது அவன் நாட்டில் பூத்த முல்லைப்பூக்களை இளையோர் சூடி மகிழ்ந்தனர். வளையலணிந்த இளைய மகளிர் பறித்து மகிழ்ந்தனர். பாணர் பறித்துச் சூடிக் கொண்டனர். பாணர்மனைவி

அணிந்து மகிழ்ந்தனர். பெருஞ்சாத்தன் இறந்த பின் வருந்தி புலவர் குடவாயில் கீரத்தனார் ''அவன் நாட்டில் முல்லைப் பூவே நீயும் பூக்கலாமா?'' என்று பாடினார்.

''இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
... ... சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ? ஒல்லையூர்
நாட்டே'' [புறம் 242]

என்று பாடியுள்ளார்.

1. வட திருமுல்லைவாயில் என்ற தலத்து முல்லைக்கொடி அரசன் யானையைக் கட்டித் தடைசெய்தது. பின் தடை நீங்கியதும் இறைவன் அருள் செய்தான், அவ்வூர் முருகன் வழிபட்ட தலம், திருமுருகன் பூண்டியும் முருகன் வழிபட்டருள் பெற்றதால் முருகன் பெயராலேயே திருமுருகன் பூண்டி என்று வழங்கி வருகின்றது. அங்கு முல்லைக் கொடி திருவருள் கிடைத்தற்குக் காரணமாக அமைந்தது. இந்த அருளின்றிக் கொடியவர் வழிப்பறி செய்யும் இடத்தில் முல்லை வீணாக மணம் வீசுகின்றது.

2. பாரிபறம்பில் கொழுகொம்பில்லாத முல்லைக் கொடிக்கு மன்னன் தேர் கொடுத்தான், தேர் முல்லைக் கொடி படர்வதற்கு ஆதாரமாயிற்று. இங்கு முல்லைக்கொடி கொழுகொம்புடன் நன்றாக இருப்பதால்தான் மணம் வீசுகின்றது. பாரிபறம்பில் முல்லைக்கொடி கொழுகொம்பு இல்லாமல் வாடிற்று. திருமுருகன் பூண்டியில் முல்லைக்கொடி வாடவில்லை. அதனால் மணம் கமழ்கின்றது. பாரிபறம்பு நல்லவர் வாழ்ந்த பகுதி. திருமுருகன் பூண்டி வழிப்பறி செய்தவர் வாழ்ந்த பகுதி. நல்லவர் வாழ்ந்த பகுதியில் இருந்த கொடி வாடிற்று. கொடியவர் வாழ்ந்த பகுதியில் இருந்த கொடி நன்றாக மணம் வீசிற்று.

3. பெருஞ்சாத்தன் இறந்தபின் பூத்த முல்லையைப்பார்த்த புலவர் ''வள்ளல் இறந்தபின் யாரும் மகிழ்ச்சியாக இருக்க மாட்டார். எனவே இளையவர் சூடார். வளையல் அணிந்த மகளிர் அணிவதற்காகக் கொய்ய மாட்டார். பாணர் சூட மாட்டார். பாடினி அணியமாட்டார். ''முல்லைப்பூவே! நீ ஏன் வீணாகப் பூத்துள்ளாய்!'' என்று பாடினார். திருமுருகன் பூண்டித் தலைவன் பிறவாயாக்கைப் பெரியோன். அவன் ஊரில் முல்லை மணம் கமழப் பூத்து உள்ளது. ஆனால் சூடுவாரில்லை. இங்குள்ள மக்களுக்கு முல்லைப் பூவைச் சூடுவாரில்லை. இங்குள்ள மக்களுக்கு முல்லைப் பூவைச் சூடலாம் என்ற எண்ணமோ? அல்லது இறைவனுக்குச் சூடலாம் என்ற எண்ணமோ? சிறிது கூட இல்லை. ஏன் எனில் அவர்கள் தொழில் வழிப்பறி செய்தல் மட்டுமே.

முதல்பாட்டில் நாயனார் வழிப்பறி செய்வோர் முடை நாற்றம் உடையவர் ஆகி இருந்தனர் என்பதை முடுகு நாறிய வடுகர் என்று பாடினார். இப்பாடலில் வழிப்பறி செய்வோரிடம் முடை நற்றம் இல்லை. மாறாகப் பக்கத்தில் பூத்திருந்த முல்லைப்பூ மணம் வீசிற்று. இருவிதமான வாசனை ஓரிடத்தில் உண்டாகும் போது ஒன்று குறைந்து ஒன்று மிகுமாயின் மிகுந்த வாசனையே அதிகமாகப் பரவும். குறைவாக உள்ள வாசனை வெளிப்படாது.

நெய்தல் நிலத்தில் பேய் போன்ற விரிந்த தலையை உடையதும் சுரசுரப்புடைய அடிப்பகுதியை உடையதும் ஆன தாழை உள்ளது. அத்தாழையின் பற்கள் போன்ற கூர்மையான மேல் இதழ் பாதுகாப்புப் - பருத்த பூ நன்றாக விரிந்தது. நன்றாக கடற்கரையில் மணம்

வீசிற்று. முன்இயற்கையாக நெய்தல் நிலக்கடற்கரை புலால் நாற்றம் வீசிற்று. தாழம்பூவின் மணம் இயற்கையான புலால் நாற்றத்தை அழித்து விட்டது.

''பேய்த்தலைய பிணர் அரைத் தாழை
எயிறுஉடை நெடுந்தோடு காப்ப, பலவுடன்
வயிறுஉடைப்போது வாலிதின் விரீஇ
புலவுப் பொழுது அழித்த பூ நாறு பரப்பின்''
[அகம் – 130]

என்று அகநானூற்றில் தாழம்பூவின் சிறந்த மணம் கடற்கரையின் புலால் நாற்றத்தைப் போக்கிற்று எனக் குறிப்பிடப்படுகின்றது. அதுபோல முதல் பாட்டில் முடுகு நாறிய வேடுவரின் முடைநாற்றம் இரண்டாம் பாட்டில் முல்லைத்தாது மணம் கமழ்ந்ததால் போயிற்று. முன்வேடுவரின் முடைநாற்றத்தை உணர்ந்த நாயனார் முடுகு நாறிய வேடுவர் என்று பாடினார். கோவில் பக்கத்திலிருந்த முல்லைச் செடிப்பூவின் நறுமணம் முடைநாற்றத்தை அடக்கிச் சிறப்புற்றதால் முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டி என்று பாடினார். முடைநாற்றம் - தீமை; முல்லை மணம் - நன்மை, தீமையை நன்மை வெல்லும் என்பது குறிப்புப்பொருள். ''முருகமர் சோலை சூழ்திருமுல்லைவாயில் வாயினால் உன்னைப்பரவிடும் அடியேன் படுதுயர்களையாய்! பாசுபதா! பரஞ்சுடரே! (698) என்று நாயனாரும் பாடிப்பரவியுள்ளார்.

இத்தனைச் செய்திகளும் ஓரடிக்கான விளக்கங்கள் முழுப்பாடலுக்கும் அல்ல. அது இன்னும் நீளும். எத்தனை வரலாற்று, புராணச் செய்திகள்! சங்க இலக்கிய, திருமுறை மேற்கோள்கள். குறிப்புப் பொருள் என முழுமையான விளக்கம் தருகிறார்.

சைவத்திற்கோர் பெரியவாச்சான் பிள்ளை! என்ன! 10 பாடல்களுக்கு மட்டும் விளக்கம் தந்துள்ளார். சுந்தரர் தேவாரம் முழுமைக்கும் பேராசிரியர் இதே போல விளக்கம் கொடுத்தால் தமிழுக்கு அவர் தந்த கொடையாக இருக்கும்.

(பிறந்த ஆண்டு - *15.7.1934*; பிறந்த ஊர் - எளச்சிபாளையம்; கருவலூர், அவிநாசி வட்டம்; பெற்றோர் - சி. இராயப்ப கவுண்டர், பெரிய நாயகி; எழுதியுள்ள நூல்கள் - அவிநாசி, திருமுருகன் பூண்டி சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரப் பாடல்கள் உரை, திருஞானசம்பந்தர் ஏகபாதப்பாடல் உரை, கோயில் பாளயைம் தில்லை நாயகி இரட்டை மணிமாலை, திருமுருகன் பூண்டி அருள்தரு முயங்கு பூண்முலைவல்லி பிள்ளைத் தமிழ், எங்கெங்கு காணினும் சிவலிங்கம், வழிபாடு, மந்திரம் -வேள்வி; சமயப்பணி - மன்றத்தின் சார்பில் 140 திருக்கோயில்கள் திருநெறிய தமிழ் முறையில் திருக்குட நன்நீராட்டு; வாழ்வியல் சடங்குகளைத் தமிழில் நடத்த இதுவரை 36 வெளியீடுகள், 12 பயிற்சி வகுப்புகள்).

இலட்சுமிபதிராஜ்

மணிவாசகர் அருட்பணி மன்றத்திற்கு திறமையான பொருளாளரும் அமைந்திருக்கிறார். அவர்தான் தண்டமிழாசான் இலட்சுமிபதிராஜ், மன்றத்தின் முதன்மைக்கொள்கையான தனித் தமிழ் வழிபாட்டைப் பரப்புவதில் முன்னிற்கிறார். மன்றம் நடத்திய நூற்றுக்கணக்கான வாழ்வியல் சடங்குகள், திருக்குடநன்நீராட்டு விழாக்களில் இவரது பங்கு கணிசமானது. இவரே பல நிகழ்வுகள் நடத்தியுள்ளார். தமிழகம் முழுவதும் மன்றம் நடத்தி வரும் தமிழ்வழிபாட்டுப் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றுள்ளார். மன்றம் வெளியிட்டு வரும் அனைத்து நூல்கள் - குறிப்பாக

தமிழ் வழிபாட்டுச் செயல்முறை விளக்கங்கள் - அனைத்திலும் எழுத்துப் பணி இவருடையது ஆகும். இவருடைய உணர்ச்சிமிகு பேச்சு வன்மையால் எழுச்சிமிகு தொண்டர்களை உருவாக்கியவர். என்ன ஒரு ஒற்றுமையான குழுச் செயல்பாடு! பட்டியப்பனார் வழிபாட்டு முறைகளை நெறிப்படுத்தி எழுத்து வடிவம் தருகிறார். சென்னியப்பனார் தலைமையேற்று அனைத்துப் பொறுப்புகளையும் உரியவர்களிடம் கொடுத்து தானும் பொறுப்பேற்கிறார். செயலர் குமரலிங்கம் செயல்முறை முதன்மையாளர். இலட்சுமிபதிராஜ் நிதி திரட்டவும், எழுத்துப்பணி நிறைவு செய்யவும், பயிற்சி வகுப்பு எடுக்கவும், குடநீராட்டு விழாவில் பங்கேற்கவும் செய்கிறார்.

இலட்சுபதிராஜ் வேலப்பதேசிகர் வழிபாட்டு மன்றத்தின் இணைச் செயலராக இருந்து சைவ சித்தாந்தம் பரப்பத் துணை நிற்கிறார்.

பேரூர் பள்ளியின் தமிழாசிரியர். மிகுந்த கண்டிப்பு உடையவர். இவரது மாணாக்கர் இவரிடம் கல்வியோடு சமய ஒழுக்கங்களும் கற்கின்றனர்.

தமிழ் வழிபாட்டு முறையைப் பட்டியப்பனாரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்கள், சைவ நூல்களைச் சென்னியப்பனாரிடமும், வையாபுரியாரிடமும் கற்றிருக்கிறார். ந. ரா. ஆடலரசு அவர்களிடம் சமய தீக்கையும் விசேட தீக்கையும் எடுத்திருக்கிறார். சைவ சித்தாந்தக் கொள்கை வளர்ச்சியில் உமாபதி சிவத்தின் பங்கு என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.

(வயது 40 இருக்கலாம்; பிறந்த ஊர் - அங்கலக்குறிச்சி, பொள்ளாச்சி; பெற்றோர் - சி. மாணிக்கம், கி.இந்திராணி)

ப. குமரலிங்கம்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் தருமையாதீன நூலகத்தில் நூல்கள் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது சில இளைஞர்கள்



குமரலிங்கம்

என்னிடம் வந்து ''சைவ சித்தாந்த நூல்கள், திருமுறைகள் எங்கு கிடைக்கும்? என்றார்கள். அவர்களை நூலகரிடம் அழைத்துச் சென்றேன். தேவையான புத்தகங்களைப் பெற்றுக் கொண்டனர். சிறு உதவிதான். ஆனால் அந்த இளைஞர்கள் இன்னும் சொல்லி வருகிறார்கள். ''நீங்கள் தான் எங்களுக்குச் சைவ நூல்கள் முதன் முதலாகப் பெற்று தந்தீர்கள்''.

''உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து''

அந்தச் சால்பாளர் தான் ப. குமரலிங்கம். நமது இந்தியக் குடியரசுத் தலைவரைக் கூடத் தொலைபேசியில் பிடித்து விடலாம்;. இவரைப்பிடிக்க முடியாது. ஆம்! நான் கொங்குமண்டலப் பயணம் மேற்கொண்டபொழுது கரூர் முதல் பவானி வரை அனைத்து ஏற்பாடுகளும் செய்தவர் அவரே. சும்மா சொல்லக் கூடாது. ஒரு அரசியல் தலைவர்க்கு அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு ஏற்பாடு செய்ய முடியுமோ அந்த அளவு செய்து இருந்தார். பிற இடங்களில் பலமுறை சிரமப்பட்டேன். தங்க இடம் கிடைக்காமல் நல்ல உணவு கிடைக்காமல் ஏன் வழிகூடச் சரியாகத் தெரிவிக்கப்படாமல் - நொந்து போயிருந்தேன். கரூர், வெள்ள கோயிலில் முன்பே சொல்லி வைத்து விட்டார். அதனால் நான் சென்றதும் எந்த சிரமும் இல்லாது இருந்ததும் கரூரில் குமரன் அவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் வரவழைத்ததும், வெள்ளகோயிலில் பீ. கே. ஐயா விருந்துடன் காத்திருந்ததும் என் பயணத்தை எளிதாக்கின.

கோவைக்குள் நுழைந்தவுடன் குமரலிங்கம் சொல்படி சீனிவாசனும் இராமுவும் பேரூர்க்கு வரச் சொல்லிக் காத்திருந்தார்கள். நான் பேரூர் கோயில் வாயிலில் இறங்கியவுடன் ''போற்றி ஓம் நமசிவாய'' என்று காலைத் தொட்டு வணங்கினார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இந்தக் குழுவினர் தொலைபேசியை எடுத்தாலே ''போற்றி ஓம் நமசிவாய'' என்றுதான் தொடங்குகிறார்கள். ''ஹலோ'' அல்ல. பேரூரில் என்னைத் தொட்டவர்கள் தான். என்னை ஈரோட்டு அன்பர்களிடம் அன்புடன் ஒப்படைத்த பிறகு தான் நீங்கினார்கள். அதுவரை என்னை விட்டு நீங்கவில்லை.

காலையில் எழுந்ததிலிருந்து இரவு உறங்கும் வரை எனக்குத் தேவையானவற்றைச் செய்தார்கள். தங்க ஒரு இடத்தில் சொல்லி இருந்தேன். தகவல் இடைவெளி தங்க இடம் கிடைக்கவில்லை. வடிவேலு என்ற தொண்டர் வீட்டிலேயே தங்க ஏற்பாடு செய்து விட்டனர். அதுவும் திருவருள்! தொண்டர்களைப் பற்றி எழுதும் பொழுது விருந்தினர் மாளிகையில் தங்கினால் எப்படி? தொண்டர்களோடு தொண்டனாகத் தங்கினால்தான் தொண்டன் வியர்வை மணம் கிடைக்கும். தொண்டர் தம் கால் தூசி திருநீறாகும்.

உணவு விடுதியில் சாப்பிட்டால் கூட செலவு பண்ண விடவில்லை. அப்படி ஒரு ஆணை மணிவாசகர் அருட்பணி மன்றத்தில்! வழிதேட வேண்டிய சிரமம் இல்லை; அதனால் கூடுதல் நேரமும் ஆகவில்லை. யாரைப் பார்க்கவேண்டுமோ அவர்களிடம் முன்கூட்டியே தொலைபேசியிலோ நேரிலோ சொல்லி வைத்து விடுவார்கள். எனவே சென்று இல்லையே என்று ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதில்லை. இருந்தாலும் காக்க வேண்டியதில்லை. இருபது நாட்களில் முடிக்க வேண்டிய பணிகளை ஐந்தே நாட்களில் முடித்தேன்.

இந்த அணுகுமுறை தமிழ் நாட்டில் மற்ற பகுதிகளுக்கும் வரவேண்டும்.

இவ்வளவும் நடந்ததே! இவ்வளவும் ஏற்பாடு செய்த குமரலிங்கத்தை நான் பேரூரில் இருந்த வரை பார்க்கவேயில்லை. அவருடைய மனைவிக்குப் பேறுகாலம், எல்லாவற்றிலும் அவர் கைவண்ணம் இருந்தது. ஆனால் அவர் முழுவண்ணமும் கண்ணுக்குப் புலப்படவில்லை. எங்கும் வியாபித்துக் கண்ணுக்குப் புலப் படாது இருக்கும் சிவபெருமானின் சீடரல்லவா!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நான் பார்த்த அன்பு மகன் (என் மகன் வயது இருக்கும்) இன்று திருமுறைப் பற்றாளர்களின் செல்ல மகனாகத் திகழ்கிறார். இந்த இளவயதில் என்ன அப்படி ஓர் உறைப்பு! தமிழகமெங்கும் தெய்வத் தமிழ்க்குடநீராட்டுவிழாவை முதன்மை நடத்துனராக நடத்தி வருகிறார். 150 திருக்கோயில்களில் (11.3.2004) இதுவரை மன்றத்தின் மூலம் செய்திருக்கிறார். பல்வேறு வகையான எதிர்ப்புகளையும் மீறி கரூரில் இவர் நிகழ்த்திய குட நீராட்டு விழா வரலாற்றில் இடம் பெற்று விட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் உட்பட அனைவரும் குழுமி விட்டனர். தெய்வத் தமிழ்க் குடநீராட்டை எதிர்க்கும் வலுவான ஆதிக்க சக்தி ஒரு புறம். இத்தனைக்கும் நடுவே நெஞ்சில் உரத்துடனும் நேர்மைத்திறத்துடனும் இப்பணியைச் செய்து முடித்த வரலாற்று நாயகன் அல்லவா?

"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலது ஒன்று இலார்
ஈரஅன்பினர் யாதும் குறைவுஇலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?"

சேரிப்பகுதிகளில் உள்ள திருக் கோயில்களுக்கு இலவசமாகத் திருக்குட நன்நீராட்டுச் செய்கிறார். வாழ்வியல் சடங்குகளைப் பற்றிக் கேட்க வேண்டாம். அதுவும் நூற்றுக்கணக்கில் இருக்கும். மணிவாசக மன்றத்தின் செயலர்; மன்றம் நடத்திய, நடத்தி வரும் மாநில மாநாடுகள், பயிற்சி வகுப்புகள், நூல் வெளியீடுகள், கோயில் திருப்பணிகள் அனைத்திலும் இவரது முழு ஈடுபாடு இல்லாமல் இருக்குமா?

தென்சேரிமலை, திருமுருகன் பூண்டி, மீனாட்சி புரம், கள்ளக் குறிச்சி ஆகிய ஊர்களில் பல்லாண்டுகளாகப் பெரியபுராண வகுப்பு நடத்திவருகிறார்.

பத்து வயதிலேயே பெரும் பேராசான் ப. சு. மணியம் ஐயா அவர்களிடம் திருக்குறள், திருக்கோவையார் வையாபுரியாரிடம் சித்தாந்த சாத்திரங்கள், சென்னியப்பனாரிடம் திருமுறைகள் புராணங்கள், பட்டியப்பனார், அப்பர் சாமிகளிடம் திருநெறிய தமிழ் வழிச்சடங்கு முறைகள் கற்றிருக்கிறார்.

தனியார் துறையில் வேலை பார்த்த இவர் விருப்ப ஓய்வு பெற்று சமயப்பணி செய்து வருகிறார்.

பேரூர் ஆதீனம்...

வையாபுரியாரிடம் சைவ சித்தாந்தம்...

சென்னியப்பனாரிடம் திருமுறைகள், புராணங்கள்..

பட்டியப்பனாரிடம் திருநெறிய தமிழ் வழிச்சடங்கு முறைகள்...

மணிவாசகர் அருட்பணித் தொண்டு...

குமரலிங்கம், லட்சுமி பதிராஜ் போன்ற தொண்டர்கள் பேரூர் - தமிழகத்தில் ஓர் கைலாயம்!

4. புன்செய்புளியம்பட்டி

சென்னியப்பனாருடன் உறவாடி, உரையாடி அவரது நூல்களை அறிந்து படித்து அவரது தமிழ் நெஞ்சத்தை அறிய முடிந்தது. ஆனைக்கா இராகவன் அவர்கள் பெரிய புராண உரையைக் கேட்டு - அவர் நடத்திய வார வழிபாட்டினைக் கண்டு - மெய்சிலிர்த்து அவர் இல்லம் சென்று வார்த்தையாடி - அவர் தம் சமய உறைப்பை உணர முடிந்தது.

ஆனால் பார்க்கவில்லை; பழகவில்லை; கேட்கவில்லை; கெழுதகை அன்பினை உணர முடியவில்லை. ஏனென்றால் நான் புன்செய் புளியம்பட்டி சென்ற சமயம் அவர் இந்நிலவுலகில் இல்லை. பார்க்காமலும், பழகாமலும், கேட்காமலும் கணேசனாரின் தமிழ் நெஞ்சத்தை - சமயப் பற்றை - உணர முடிந்தது என்றால் அது ஒரு வியப்பே! பொன். கணேசனாரின் நினைவேந்தல் மலரில் உள்ள சில கட்டுரைகள் அவரோடு பன்னாள் பழகியது போல - அவர் வாழ்வின் அர்த்தம் புரிந்தாற் போல இருந்தது. நினைவு மலர்கள் என்றால் அப்படி இருக்கவேண்டும். ''அடடா! இந்த மாமனிதர் இன்னும் சிலகாலம் வாழ்ந்திருக்கலாமே'' என்று கலங்கிப் போனேன். வியாழனன்று கூடும் மிகப் பெரிய சந்தை கரணியமாகச் சந்தைப்புளியம்பட்டி:

தமிழகம் தழுவிய சிறந்த கைப்பந்தாட்டக் குழுவினர் அமைந்தமையால் கைப்பந்துபுளியம்பட்டி;

தமிழ்க்கடல் மறைமலையடிகளார் பெயரில், மன்றம் அமைந்தமையால் மன்றம் புளியம்பட்டி;



உட்கார்ந்திருப்போர் : (இடமிருந்து) 4. சிவத்திரு ப.சு. மணியம், 5. தேவநேயப் பாவாணர், 6. பொன். கணேசன்

கணேசனார் தன்அறிவுப் பலத்தால் நூற்றுக்கணக்கில் தண்டமிழ்ப் புலவர்களை உருவாக்கியதால் தண்டமிழ்ப் புளியம்பட்டி;

ஆம் புன்செய் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளத்தான் புன்செய் புளியம்பட்டி சென்றேன்.

கணேசன்

இம்மன்றத்தின் உறுப்பினராக இருந்து கணேசனார்மன்றத்தின் வழி நூற்றுக்கணக்கான தமிழ்ப்புலவர்களை உருவாக்கினார். மன்றத்தின் மூலம் ப.சு.மணியம் அவர்கள், ப. சுந்தரேசனார், மு. பழ. இரத்தினம் செட்டியார், மறை திருநாவுக்கரசு மற்றும் தமிழகத்து அறிஞர்களை யெல்லாம் அழைத்து இருக்கின்றார்கள். ப.சு.மணியம் அவர்கள் திருக்குறள் வகுப்புகள்; சுந்தரேசனார் - பெரிய புராண வகுப்புகள் நடத்தி வந்தார்கள். 1958ல் தொடங்கப்பட்ட இம்மன்றத்தின் முதல் தலைவர் ஆறுமுகம் ஆவார்கள். செயலர் இளமுருகன், முதலில் மறைமலையடிகள் மன்றத்தில் தமிழ்க் கூட்டங்களும், அருள் நெறி மன்றத்தில் சமயக் கூட்டங்களும் நடத்தப் பெற்றன. பிறகு இரண்டையும் இணைத்து மறைமலையடிகள் மன்றம் மட்டும் இயங்கி வந்தது. இப்பொழுது மறைமலையடிகள் மன்றம் பெயரளவில் உள்ளது.

இந்த மன்றத்தை வைத்துத்தான் கணேசனார் அவர்கள் தனி ஒருவராக 1500 பேருக்கு மேல் தமிழ்க் கற்றுக் கொடுத்துப் பட்டம் பெற வைத்தார். ஒரே ஒரு மாணவனாக இருந்தாலும் மிகவும் அக்கறையோடு காத்திருந்து சொல்லிக் கொடுப்பார்.

கற்றல், கற்பித்தல், கடவுளை வழிபடுதல் என்ற மூன்றையும் தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

சுற்று முறையில் சங்க இலக்கியம், இலக்கணம், திருமுறைகள், காப்பியங்கள், திருவருட்பா ஆகிய இவற்றுள் ஒன்றினை 4 அல்லது 5 ஆம் முறையாக மீள்பார்வையாக நுணுகிப் படித்துக் கொண்டிருப்பார். பாடலாக இருப்பின் வாய்விட்டும், உரைநடை யெனின் அடிக்கோடிட்டும் படித்துக் கொண்டிருப்பார். அப்பொழுது அந்த நூல்களில் அண்மையில் கண்ட நுட்பங்களைப் பன்முறை உடன் இருப்பவருக்குப் படித்துக் காட்டுவார். அதற்கு இணையாக கருத்துக்களை யார் யார் எந்தெந்த நூல்களில் சுட்டியுள்ளார்கள் என்பதனையும் இணைத்துக் காட்டி மகிழ்வார்.

தாம் தேடிய பொருளில் அரிய நூல்களை வாங்கிச் சேர்ப்பதில் கருத்தாக இருந்தார். அரிய நூல்களைச் சொந்தமாக வாங்கத் தொடக்கக் காலத்தில் பொருளாதாரம் துணை நில்லாத பொழுதும், கடன் பட்டேனும் நூல்களைச் சேர்த்தார்.

கணேசனார் சித்தாந்த சைவ நூல்கள் பலவற்றையும் தேடித் தொகுத்து வைத்திருப்பார். ஏதேனும் ஒரு நூல் - பார்த்தல் வேண்டும் - கிடைக்க

வில்லையே எனக் கூறினால் என்னிடம் இருக்கிறது என எடுத்துக் கொடுத்து உதவுவார். ''இவ்வகையில நான் இவரிடம் பெற்ற உதவிகள் பல'' என்கிறார் பேராசிரியர் வையாபுரியார்.

''ஒரு முறை முத்தியில் ஆணவத்தின் நிலை யாது? என்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது இவர் தாம் தொகுத்து வைத்துள்ள ''சித்தாந்தம்'' என்னும் இதழில் வெளிவந்த கட்டுரைகள் அடங்கிய தொகுதிகளைப் படித்துப் பார்க்கக் கொடுத்து உதவினார்.

''பிறிதொருமுறை நான் திருவருட் பயன் பாடம் நடத்திக் கொண்டிருந்த பொழுது பல குறட்பாக்களின் சொல் நிலை - சொல் முடிவு - அறியாமல் மயங்கினேன். தொண்டை மண்டல ஆதீனம் 229 ஆவது குருமகாசந்நிதானம் திருவருட் பயன் மூலபாடத்தில் பல திருத்தங்கள் செய்து கட்டுரைகளாக வெளியிட்டிருந்தார். கணேசனாரிடம் ஏதாவது பழைய பதிப்பு இருந்தால் கொடுங்கள் என்று கேட்டேன். சித்தாந்த சாத்திரம் பதினான்கும் அடங்கிய - கி.பி. 1899ல் வெளிவந்த - பழைய நூல் ஒன்றைக் கொடுத்து இது தங்களிடமே இருக்கட்டும் எனக் கூறினார்.

கற்றல் என்பது நூல்களை படிப்பது மட்டும் அன்று. நல்ல அறிஞர்களின் உரைகளைக் கேட்பதும் கூட. கணேசனார் செவிச் செல்வத்தையும் சேர்த்து வைத்திருந்தார்.

கணேசனார் தமிழ்க் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது தவத்திரு இராமசாமி அடிகளாரின் மேசை மேல் கிடந்த ''சித்தாந்தம்'' இதழைப் புரட்டிப் பார்த்தார். பாண்டிச்சேரியில் சைவ சித்தாந்த சமாஜ ஆண்டுவிழா என்று பார்த்தவுடன் உடனே பாண்டிச்சேரி சென்று விட்டார். அன்று முதல் ஆண்டுதோறும் சமாஜ ஆண்டு விழாவிற்கு நண்பர்களையும் அழைத்துச் சென்றார்.

மஞ்சக் கொல்லையில் க. வச்சிரவேல் முதலியார் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்துவது அறிந்து அங்கு சென்று கலந்து கொண்டார்.

காஞ்சியில் தொண்டை மண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் சித்தாந்த பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அதில் கலந்து கொள்ளாமல் கணேசனாரின் நண்பர்கள் பழனி பாத யாத்திரை சென்று வந்தனர். சித்தாந்த வகுப்புகளுக்கு வராமல் பாத யாத்திரைக்குப் போய்விட்டார்களே என்று வருந்துவார்.

அடுத்து கற்பித்தல். 150 புலவர்களைக் கணேசனார் உருவாக்கியதை முன்னர் கண்டோம். கற்றல் - கற்பித்தல் என்றால் கணேசனாருக்குச் சைவ சித்தாந்தம் கற்றல் - கற்பித்தலே. வீட்டுக்கு வருகிற நண்பர்களுக்குச் சைவ சித்தாந்தம் கற்பித்து வந்தார். கடைசி மூச்சு வரை சித்தாந்தம் கற்பித்தலையே நினைத்து வந்தார். கோவை ஒத்தக்கால் மண்டபத்தில் சித்தாந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். ஈச்சனாரி ''பன்னிரு திருமுறை ஆய்வு மையத்திற்காக''த் திருமந்திரக் கட்டுரைகளைத் தொகுத்து ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்'' என்ற நூலை வழங்கினார்.

கடவுளை வழிபடல் பற்றிக் கூற வேண்டாம். பாடல் பெற்ற தலங்கள் அனைத்தும் பார்க்கத் திட்டம் தீட்டிப் பார்த்தும் வந்தார். ''அனைத்துத் தலங்களையும் வழிபடவும், சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் கற்பிக்கவும் இன்னும் பத்து ஆண்டுகளாவது வாழ வேண்டுமே'' என்று ஏங்கினார். ஜோதிர்லிங்கத் தலங்கள், கயிலைக்

காட்சி அனைத்து அனுபவங்களையும் பெற்றார்.

கற்றல் - கற்பித்தல் - கடவுளை வழிபடல்.

இவற்றின் மொத்தம் வடிவம்

கணேசனார்

(தோற்றம் - 27.6.1937; மறைவு - 15.10.2002; ஊர் - புன்செய்புளியம்பட்டி.

பெற்றோர் - பொன்னுசாமி முதலியார், கருணையம்மாள்)

மறைமலையடிகள் மன்றம் இயங்காத நிலையில் இப்பொழுது அண்ணாமலையார் வழிபாட்டு மன்றம் என்ற பெயரில் இயங்கி வருகிது. இவ்வழிபாட்டு மன்றத்தார் அண்ணாமலையார் திருக்கோயிலைப் புதிதாக எடுப்பித்தார்கள். 30.11.1977, 3.12.1989, 20.1.1997 நாட்களில் மூன்று முறை குடநீராட்டு விழாக்களைச் செய்துள்ளனர். 15.8.1989 முதல் இன்று வரை (2005) மூன்றாவது புதன்கிழமை தோறும் ந.இரா. சென்னியப்பனார் அவர்கள் சிவஞான போதம், ஞானாமிர்தம், இருபா இருபது நடத்தியுள்ளார்கள். இது தவிர பெரிய புராணம், திருக்குறள், திருவாசகம் அறிஞர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் வழிபாட்டுக் குழு தலைவர் - இள முருகு; செயலர் - இரா.சுப்பிரமணியன்.

மறைமலையடிகள் மன்றத்தின் முதல் தலைவர் ஆறுமுகனார் அவர்களுக்கு இருபத்து நான்குமணி நேரமும் அண்ணாமலையார் சிந்தனையே. அச்சிந்தனையின் வெளிப்பாடே திருக்கோயில்.



மகளிர் குழு

(பிறப்பு - 1938; மறைவு - 28.11.1979; ஊர் - புன்செய் புளியம்பட்டி; பெற்றோர் - க. ராயப்ப முதலியார், மங்காத்தாள்)

இவரது சகோதரர் ஆர்.ராமசாமி (28.2.1942) தமையனாரைப் போலவே சிவபூசை, நாகநாதர் திருப்பணியில் பெரிதும் ஈடுபட்டுள்ளவர். மணிவாசகன், சசிகுமார் ஆகியோரின் முயற்சியால் 1997-இல் அறுபத்து மூவர் அருட்பணி மன்றம் தோற்றுவிக்கப் பெற்றது. ஆலைகளில் பணிபுரிபவர்களும் இதில் பங்கு பெற்றுள்ளனர். மகளிர் காட்டும் உற்சாகம் அபரிமிதம்; அற்புதம். இவர்களது, ஊர்வலத்தைப் பார்க்க வேண்டும், கும்மியும், கோலாட்டமுமாகப் படு அமர்க்களம். ஈரோடு திருமுறை மாநாட்டில் அனைவரையும் கவர்ந்தது இவர்களது பங்களிப்பு தான். தேவார, திருவாசகப் பாடல்களைக் கொண்டே கும்மியடித்து வந்தனர். வயதான மாதரசியரும் நான் முந்தி, நீ முந்தி என்று போட்டிக் கொண்டு வருவார்களாம். பெரிய புராணக் காட்சிகளை நாடகமாக நடிக்கிறார்கள். திரைப் பாடல்களைக் கொண்டு பாட்டுக்குப் பாட்டு கேள்விப் பட்டிருக்கிறோம். திருமுறைப் பாடல்களைக் கொண்டு இவர்கள் பாட்டுக்குப் பாட்டு நடத்துகிறார்கள். என்ன ஒரு இன்னோவேட்டிவ் ஐடியா. அப்படியே அந்தப் புகைப்படங்களை அள்ளிக் கொண்டு வந்தேன்.

பிரதோஷ வழிபாடு கேட்டிருக்கிறோம். நஞ்சுண்ட கால வழிபாடு நடப்பது புன்செய் புளியம் பட்டியில் தான். மேடைத் தமிழ் அல்ல; வாழ்வுத் தமிழ்! வார வழிபாடு, திருவாசக

மகளிர் குழு

முற்றோதல் இல்லாமலா? யாருக்காவது உடல்நிலை சரியில்லையென்றால் திருக் கோயிலுக்கு வந்து கூட்டு வழிபாடு செய்கிறார்கள். குணமும் ஆகிவிடுகிறது. வேண்டுதல் பெட்டி தயாரித்துள்ளார்கள்; அம்மைக்கு வெள்ளிக்காப்பு போட்டிருக்கிறார்கள். திருமந்திரப் பாடல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். புன்செய் புளியம் பட்டி மாதர் குல மாணிக்கங்களே! உங்கள் வண்ணச் சீறடிகள் பட்டாலே புன்செய் நன்செய் ஆகும்.

5. பெரிய குமரபாளையம்

மேட்டுப்பாளையம் வட்டம் பெரிய குமரபாளையம் நாகநதர் திருக்கோயில்...

புதையல் கிடைக்கும் என்ற பேராவலில் கோயில் தளவரிசையைக் கூட விடாது மக்கள் தோண்டி எடுத்து விட்டனர். ஒய்வுபெற்ற ஆசிரியர் பழநிசாமிக்கு (26.8.1945) என்ன செய்வதென்றே தெரியவில்லை. இறைவன் மேல் பாரத்தைப் போட்டுத் திருவாசக முற்றோதல் ஏற்பாடு செய்தார். அதனை ஒட்டி நாகநாதர் நற்பணி மன்றம் தொடங்கினார். ஊர் மக்களை நெறிப்படுத்திக் கரசேவை மூலம் உழவாரப்பணி செய்தார். அடித்தளத்திலிருந்து தரைமட்டம் வரை உயரலாயிற்று. திருப்பூர் அன்பர் 35,000 ரூபாய் கொடுத்தார் சர்மி மட்டம் உயர்ந்தது. சோதிடர் சொன்னதின் பேரில் பிரகதி எக்ஸ்போர்ட் உரிமையாளர் நவகிரகக் கோயில் கட்ட ஒன்றரை இலட்ச ரூபாய் தர முன் வந்தார். ''சிவன்கோயில் கட்டுதலே சாலச்சிறந்தது'' என்று நாங்கள் எடுத்துக் கூறியவுடன் ஒத்துக் கொண்டார். விமானம் வரைக்கும் உயர்ந்தது. பெருவணிகர் ஆர்.ஆர். மூலம் இரண்டு லட்ச ரூபாயும், புன் செய்புளியம்பட்டி சக்தி நகை மாளிகை அதிபர் அம்மன் கோயில் கட்ட ஒன்றரை இலட்ச ரூபாயும் ஊர்மக்கள் மூலம் திரட்டிய நிதியாக ஒன்றே கால் இலட்ச ரூபாயும் திரட்டி திருப்பணியை முடித்தோம்.'' என்றார் பழநிசாமி.

தரைமட்டத்தில் இருந்து ஒரு முழுக்கோயிலைப் பெரிய குமரபாளையத்துப் பெருமக்கள் கட்டி முடித்தனர்.

6. இருகாலூர்

பெரியகுமரபளையம் நாகநாதர் தரை மட்டத்தில் இருந்தார். இருகாலூர் தேனீசுவரர் குப்பையில் வீற்றிருந்தார். அங்கு ஒரு பழனிச்சாமி; இங்கு ஒரு மயில்சாமி (வயது 30) நொந்து போனார். தனது 60 சென்ட் நிலத்தை இலவசமாகத் தந்தார். மெள்ள மெள்ளக் கோயில் எழும்பி வருகிறது. குமரலிங்கம் தான் ஒருங்கிணைப்பாளர்.

7. மாராயிபாளையம்

மாராயிபாளையம் (புன்செய் புளியம்பட்டி அருகில்) இராசன் என்பவர் (வயது 50) மாராயிபாளையம் மலையையே சீர்பண்ணி பாதை போட்டு முருகன் - ஈசுவரன் - சரசுவதி கோயில் கட்டி 19.9.2002இல் குடநீராட்டும் செய்து விட்டார். அந்தக் கோயிலுக்கு மு.ஈ.ச. மலைக்கோயில் என்றே பெயரிட்டு வழங்குகின்றனர்.

தரைமட்டம்; குப்பை மலை பெருமானுக்கு எல்லாம் ஒன்றுதான்.

சிவம் ஐயா

படிக்கவும் தெரியாது; எழுதவும் தெரியாது. இன்று அவர்தான் கொங்குமண்டலத்தில் சைவசித்தாந்த மூதறிஞர். பதினான்கு சாத்திரங்களும் சிவஞான மாபாடியமும் தெளிவாக



விளக்குகிறார். அவர் தான் 93 வயது நிரம்பிய சிவம் ஐயா அவர்கள். இந்த 93 வயதிலும் கோவையில் வகுப்பு நடத்தக் கிளம்பிவிடுகிறார்கள்.

அவிநாசி வட்டத்தில் பிச்சாண்டி பாளையத்தில் அவரது இல்லம் இருக்கிறது. செல்வதற்குச் சற்றுச் சிரமம். சீனிவாசனும், ராமுவும் உடன் வந்ததால் வழி தேடவேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. இல்லையென்றால் அதற்கும் சிரமப்பட்டிருப்பேன். பெரும் புதையலே அங்கு இருக்கும்பொழுது சிரமத்தைப் பார்க்கலாமா?

பழனிச்சாமி (சிவம் ஐயாவிற்குப் பெற்றோர் வைத்த பெயர்) பள்ளிக்கே போகாதவர். 18 வயதில் ஊரை விட்டே போய்விட்டார். ஆறு ஆண்டுகள் வெளியூர்களில் சுற்றிய பொழுது அடியார்கள் தொடர்பு கிடைத்திருக்கிறது. பிறகு ஊருக்கு வந்தார். எழுத்தறிவே இல்லாத நிலை. பிச்சாண்டி பாளையத்தில் உள்ள ஆசிரியரிடம் எழுதக் கற்றுக் கொண்டார்.

தொடக்கத்தில் கைவல்ய நவநீதம் போன்ற வேதாந்த நூல்களைக் கற்று வந்தார். பின்னர் அவிநாசி அருட்பிரகாச சுவாமிகளைச் சந்தித்தார். சுவாமிகள் ''என்ன நூல் படிக்கிறாய்?'' என்று கேட்டார்கள். சிவம் ஐயா ''கீதாசாரத் தாலாட்டு'' என்றார்.

சுவாமிகள் - என்ன சொல்கிறது?

சிவம் ஐயா - தன்னை அறிவது தான் மோட்சம்.

சுவாமிகள் - நீ ஏன் அறியாமல் இருந்தாய்?

சிவம் ஐயா - மாயை மூடிக் கிடந்தது.

சுவாமிகள் - இன்னும் அந்த மாயை மூடி இருந்தால் என்ன பண்ணுவாய்?

தருமைக் குருமணி முன்னே குமரகுருபரர் பேச்சிழந்தது போல சிவம் ஐயா பேச்சிழந்து நின்றார். அப்பொழுதுதான் சுவாமிகள் உபதேசம் செய்தார்கள் ''இது ஏகான்ம வாதம், நம்முடையது சைவசித்தாந்தம், நமக்குரிய கடவுள் சிவபெருமான்'' என்றார்.

சிவம் ஐயா சுவாமிகளுடன் இருந்து பணிவிடை செய்து வந்தார். அவர்களுடன் இருந்தபோது சில நூல்கள் படித்தார். பதினான்கு சாத்திரங்களும் படித்தார். சுவாமிகள் சமய தீக்கை செய்து வைத்தார்கள். சைவ சித்தாந்தத்தில் ஓரளவு பயிற்சி வந்தது. அன்பர்கள் அவ்வப்பொழுது சிவம் ஐயா அவர்களிடம் ஐயங்கள் கேட்க ஆரம்பித்தனர்.

அவர்களுக்குச் சொல்லித் தர தீவிரமாகப் படிக்க ஆரம்பித்தார்கள். அவிநாசியில் ஐந்து ஆண்டுகள் சைவ சித்தாந்த பாடம் எடுத்தார்கள். கோவை திருமுருகன் பூண்டியில் அன்பர் ஒருவர் சிவஞான மாபாடியம் படிக்கப்படிக்க சிவம் ஐயா அவர்கள் விளக்கம் சொல்லி வந்தார்கள்.

சிவம் ஐயா அவர்களின் தலை மாணாக்கர் வேலம்பாளையம் மாணிக்க

வாசகர் (வயது 57) ஆவார். இவரது இல்லத்தில் சிவம் ஐயா அவர்கள் 12 ஆண்டுகள் தொடர்ந்து வகுப்புகள் நடத்தி வந்தார். திருமுருகன் பூண்டி அருகே பெரியாயி பாளையத்தில் 6, 7 ஆண்டுகள் தொடர்ந்து வாரந்தோறும் சென்று சைவசித்தாந்தம், பெரிய புராணம் சொல்லிக் கொடுத்தார்கள். தற்சமயம் புன்செய் புளியம்பட்டியில் மாதந் தோறும் சென்று பாடம் நடத்தி வருகிறார். இன்று கொங்கு மண்டலத்தில் எந்த சைவசித்தாந்த மாநாடு என்றாலும் சிவம் ஐயா அவர்களின் முதன்மையுரை இடம் பெற்றிருக்கும்.

சமயக்கல்விக்குப் பள்ளிப் படிப்போ, கல்லூரிப் படிப்போ தேவையில்லை என்பதற்கு சிவம் ஐயா அவர்கள் நல்லதோர் எடுத்துக்காட்டு! (பிறந்த ஆண்டு 1912; பிறந்த ஊர்... பிச்சாண்டி பாளையம், அவிநாசி; பெற்றோர் - அங்கப்பகவுண்டர், பொங்கியம்மாள்)

சிவம் ஐயா அவர்களின் குருநாதர் அருட்பிரகாச சுவாமிகள் 1903-இல் (உத்தேசமான ஆண்டு) அவிநாசி வட்டம் பொங்கலாடியில் தோன்றினார்கள். சைவசித்தந்தம் நன்கு கற்பிப்பார்கள். சொற்பொழிவுகளுக்குப் போவதில்லை. வருகிறவர்களுக்குச் சொல்லித் தருவார்கள். சிவபூஜை செய்வார்கள். 1970-இல் (உத்தேசமான ஆண்டு) இறைவனடி சேர்ந்தார்கள்.

அவினாசிலிங்கம் பாளையம் மணியகாரர் ஒருவர் இருந்தார். சைவ சித்தாந்தம் நன்கு கற்றவர். சொற்பொழிவுக்குப் போகமாட்டார். சுவாமிகளுக்கு முன்பே இறையடி சேர்ந்து விட்டார்.

8. விசய மங்கலம்

1998 மே மாதம் 30ம் நாள்... திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலின் புறமதிலை அடுத்து

விசயமங்கலம் தொண்டர்கள் காடு சீர்திருத்தம்

உள்புறமாக இருக்கும் திருச்சுற்றுப் பாதை...தேவையில்லாத மரக்கன்றுகள், செடி கொடிகள் புதராய் மண்டிக் கிடந்தன. கால் வைக்க முடியாத அளவுக்கு மனித மற்றும் மிருகங்களின் கழிவுகள்... கோயிலுக்கு வரும் பக்தர்கள் மூக்கைப்பிடித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும். அப்படி ஒரு நாற்றம்!

இப்படி ஒரு அருவருக்கத்தக்க சூழ்நிலையில் 750 பேர்கள் ஆண்களும், பெண்களுமாக நின்று கொண்டு கழிவுகளை அகற்றவும், செடி கொடிகளை வெட்டி எறிவதுமாகச் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். ஒரு நிமிடம் கூட நிற்க முடியாத அளவு நாற்றம் மிகுந்த இடத்தில் ஒரு நாள் முழுவதும் இருந்து அத்தொண்டர்கள் செயல்பட்டனர். அதற்கு அடுத்த பிரகாரத்தில் நாற்றம் மிக்கிருந்த சாக்கடை நீர். அதனை மொண்டு மொண்டு வாளியில் எடுத்து வெளியில் கொண்டு ஊற்றிவந்தனர்.

ஒரே நாளில் கோயில் பளிச்சென்று தூய்மையாக விளங்கியது. நகரத்து மக்களே வியந்து போயினர். ''தினமலர்'' இதழ் ஒரு பக்கச் செய்தியாக படங்களுடன் வெளியிட்டது.

இச்செயற்கரிய செயலைச் செய்தவர்கள் விசய மங்கலம் கொங்கு மண்டல அப்பரடிகள் சிவநெறி வழிபாட்டுத்திருக் கூட்டத்தார்.

இதன் அமைப்பாளர் புலவர் திரு. வீ. சொக்கலிங்கனார் அவர்கள்.

இதே போல ஈரோடு கொக்கு நாயக்கன் பாளையத்தில் உழவாரப் பணி செய்த பொழுது இதே திருக்கூட்டத்தார் மனிதக் கழிவுகளை அகற்றித்தூய்மை செய்தனர்.

காந்தியடிகள் கனவை அப்பரடிகள் திருக்கூட்டத்தார் நனவாக்குகின்றனர். கோவையை அடுத்துள்ள ஒத்தக்கல் மண்டபத்தில் உள்ள அருள்மிகு புற்றிடம் கொண்ட பெருமாள் அருள் பாலிக்கும் சிவாலயத் திருப்பணி நடந்து கொண்டிருந்த சமயம். 1 கி.மீ. தூரத்தில் திருப்பணிக்கான கற்களைப் போட்டுவிட்டுப் போய்விட்டனர். கடும் வெயில், என்ன செய்வதென்றே தெரியவில்லை. உழவாரப் பணி செய்து கொண்டிருந்த அறுநூறுக்கும் மேற்பட்ட அப்பரடிகள் திருக்கூட்டத்தார் கொஞ்சமும் தயங்காமல் பணியில் இறங்கிவிட்டனர். அத்தனை கற்களையும் புரட்டித் தூக்கிக் கோயிலருகே கொண்டு வந்து சேர்த்துவிட்டனர். வருண பகவானும் கருணை கூர்ந்து கருமேகங்களைக் கொண்டு சேர்த்து நிழல் தந்தார். பணி முடிந்தவுடன் மாலையில் மழை கொட்டு கொட்டென்று கொட்டித் தீர்த்தது. புற்றிடங்கொண்ட பெருமான் ஆலயத்தில் உள்ள ஒவ்வொரு கல்லும் விசய மங்கலம் அப்பரடிகள் திருக் கூட்டத்தினரின் திருத்தொண்டினைப் பறைசாற்றும்; பண்பாடும்.

வெஞ்சமாக்கூடல் அருள்மிகு விகிர்தீஸ்வரர் ஆலயத்திருப்பணி...

சுட்டெரிக்கும் வெயில்...

ஆற்றிலிருந்து ஆலயத்திற்கு மண் சுமந்து கொண்டு வந்தனர்.

பௌர்ணமி இரவு; கொட்டும் மழை...

பன்னூறு செங்கற்களை உடைத்து மலையாகக் குவித்தனர்.

பல ஆலயங்களில் சர்ப்பங்களைத் தரிசிக்க வேண்டிய சூழ்நிலை. தம்பிக்கலை அய்யன் ஆலயத்தில் உழவாரப் பணி செய்த போது உழவாரப்

பணி புரிந்த இடத்திலே அய்யன் சர்ப்பமாகக் காட்சியளித்தார். இத்திருக்கூட்டம் 31.5.1981இல் துவங்கப்பட்டு இதுவரை 288 மாதங்களில் 288 உழவாரப்பணி செய்திருக்கின்றனர்.

ஒவ்வொரு மாதமும் கொங்கு மண்டலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 300க்கும் மேற்பட்ட அன்பர்கள் முன்னரே குறிப்பிட்ட ஆலயத்திற்கு வந்து விடுவார்கள்.

முதலில் நகர்வலம் வருவர். பின்னர் உழவாரப் பணி. பெருமானுக்குத் திருமுழுக்கு செய்து திருநெறிய தமிழ்ப்பாசுரங்களின் துணை கொண்டு வழிபாடு - கூட்டுத் தியானம் - மகேசுவர பூசை - சமயச் சிந்தனை.

முட்புதர்களை நீக்கியும், மேடு பள்ளங்களைச் சமன் செய்தும், ஒட்டடைகளை நீக்கியும், வெள்ளையடித்தும், ஆலயப் பாத்திரங்களை விளக்கியும், வழிபாட்டிற்குத் தேவையான திரவியங்களைக் கொடுத்தும், பாராயணத்திற்குத் தேவையான வழிபாட்டு நுல்களை அன்பர்களுக்கு இலவசமாக வழங்கியும் இத் திருக்கூட்டம் சிவப்பணி செய்து வருகின்றது.

அவரவர் சொந்த செலவிலேயே வந்து விட வேண்டும். அவரவர் கொண்டு வரும் உணவை வகைப்படுத்தி ஒரு குவியலாகக் குவித்து எல்லோரும் பகிர்ந்து உண்கின்றனர். இதனால் அவர்களுக்குள் இனம் கடந்த ஒற்றுமையைக் காண முடிகிறது. இப்பெரும்பணியில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வங்கி ஊழியர்கள், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள், மாணவ மாணவியர் என பலதரப்பிலும் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பணியினைச் செய்தல் வேண்டும்.

விசயமங்கலம் அப்பரடிகள் சிவநெறி வழிபாட்டுத்திருக்கூட்டம் தமிழகக் கோயில்களில் குழுவாகச் செய்யும் உழவாரப் பணிக்கு முன்னோடி! அதன் அமைப்பாளர் திரு.வீ.சொக்கலிங்கனார் உழவாரப் பணியின் தந்தை எனலாம்.

இல்லங்கள் தோறும் திருமுறைகள் அடிப்படையில் வாழ்வியல் சடங்குகள், ஆலய வழிபாட்டுச் சடங்குகளை இத்திருக்கூட்டத்தார் பின்பற்றுகின்றனர்.

''எந்த ஒன்றினை உயர்வானது என்று கருதுகிறோமோ அது மக்கள் பயன்பாட்டுக்கு இருக்கவேண்டும். அப்படியானால் அது பரவலாக்கப்பட வேண்டும். அப்படியானால் எளிமையாக்கப்படவேண்டும'' என்பது வீ. சொக்கலிங்கனாரின் தாரகமந்திரம். அந்த அடிப்படையில் அவர் சிவ பூஜையை எளிமையாக்கிச் சிவராத்திரியன்று சமயமற்றும் விசேட தீக்கை வழங்கிவருகிறார்.

இத்துணை அரும்பணிகள ஆற்றும் அமைப்பில் தலயாத்திரைஇல்லாமல் இருக்குமா? 25ஆவது தலயாத்திரையும், 175 ஆவது தலயாத்திரையும் பழனியம்பதிக்கும் 50 ஆவது தலயாத்திரையும் 150ஆவது தல யாத்திரையும் தில்லையம்பதிக்கும் திருநடைப்பயணங்களாக அமைத்துக் கொண்டனர்.

அருள்மிகு நாகேஸ்வரர் ஆலயத்தில் முருகப்பெருமான், ஆடல்வல்லான் உற்சவ மூர்த்திகளையும் அறுபத்துமூன்று நாயன்மாரையும் எழுந்தருளுவித்து ஆலயத் திருப்பணிக்கு உதவியிருக்கின்றனர்.

இப்பேரமைப்பை கட்டுப்பாட்டுடனும் கண்டிப்புடனும் நடத்திச் செல்பவர் நல்லாசிரியர் புலவர் வீ. சொக்கலிங்கனார் அவர்கள். ஆசிரியப்

பணியைத் தொழிலாகக் கருதாமல் தொண்டாகச் செய்தவர். அப்படிப் பட்டவர் தொண்டு செய்கின்றபோது எப்படி இருப்பார்? தொண்டின் திருவுருவமாகவே ஆகிவிட்டார். திருக்கூட்டத்தின் முழுப்பணிகளையும் இயக்குபவர் இவரே. ''தொண்டு வெளிப்பட வேண்டும். தொண்டன் தெரியக்கூடாது'' எனக் கருதுபவர், தனது புகைப்படம் கூடத் தரவில்லை. எங்கே ஓரிடத்தில் தேடிப்பிடித்துப் போட்டுள்ளேன்.

''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்று சமுதாயப் பணிகளும் செய்து வருகிறார். கீரனூர் சன்மார்க்க குருகுலம் அனாதைப் பெண்கள் 150 பேருக்கு வைப்பு நிதியாக ரூ. 20,000 மும், ஒரு இலட்ச ரூபாய்க்கு மேலாக் இலவச சீருடைகள், சமையல் பாத்திரங்கள் அரிசி முதலான உணவுப் பொருள்கள் வழங்கியும், இலவச மருத்துவ முகாம்கள் நடத்தியும் பணியாற்றியுள்ளார். பின்னம்பள்ளியில் இருக்கும் 150 தொழு நோயாளிகளுக்கு ஜேசீஸ் மூலம் தேவையான பாத்திரங்கள் வழங்கியுள்ளார்.

பெரியபுராணத்திற்கும் புதிய விளக்கங்கள் கொடுக்கிறார். வறுமை வந்துற்ற வேளையிலும் இளையான்குடி மாறநாயனார் சிவனடியார்க்கு விருந்து படைத்து வந்தார். அந்தப் பண்பினைப் போற்றும் வண்ணம் சேக்கிழார் பெருமான் ''வேரித்தாரன்'' என்று யாருக்கும் கொடுக்காத அடை மொழியை அவர்க்குத் தருகிறார். ''வேரித்தாரான் என்றால் குவளை மலர்களால் ஆன மாலையை அணிந்தவன்'' என்று பொருள். குவளை வண்டுகளுக்குத் தேன் விருந்து தருவது, குளத்தில் நீர் வற்றினாலும் சேற்றில் உள்ள ஈரத்தை வாங்கி தேன் விருந்து படைக்கும், சேற்று ஈரமும் போனாலும் தண்டில் உள்ள ஈரத்தைக் கொண்டு தேன் தரும். அது போல இளையான் குடி மாறநாயனார் வறுமை வந்த காலத்திலும், தங்களுக்கே உணவு இல்லா நேரத்தில் வயலில் விதைதது இருந்த விதை நெல்லை எடுத்து வந்து சிவனடியார்க்கு உணவு படைத்தார். எனவே ''வேரித்தாரான்'' என்றார். அது போல காரைக்காலம்மையாரை ''மயில் அனையார்'' என்றார். ''மயில் வருடத் திற்கு ஒருமுறை தன் தோகையை உதிர்க்கும் அந்தத் தோகையைச் சமணர்கள் பயன் படுத்துவார்கள்'' என்று நீலகேசியில் ஒரு குறிப்பு வருகின்றது. அதே போல தன் சதையை உதறிவிட்டுப் பேய் வடிவம் எடுக்க இருக்கின்ற காரைக்கால் அம்மையாரை ''மயில் அனையார்'' என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டார் என்கிறார்.

நூல்கள் பல எழுதி வருகிறார். திருக்கோயில் தமிழ்வழிபாட்டு திருமுறைத்திரட்டு மட்டும் 36,000 பிரதிகள் விற்பனை ஆகியுள்ளது. பெரிய புராணம் பற்றியெல்லாம் எழுதிய நுல்கள் வெளிவர உள்ளன.

வீ.சொக்கலிங்கனார்; பிறப்பு - 27.5.1940 பிறந்த ஊர் - செங்கோட்டை, நெல்லை மாவட்டம் பெற்றோர் - வீரபத்ர முதலியார், ஆச்சியம்மாள்)

9. கூனம்பட்டி ஆதீனம்

சோழநாட்டிலே வாட்போக்கி என்ற இரத்னகிரியிலே ஆதிசைவ குலத்திலே மாணிக்க பண்டிதர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் தல யாத்திரை மேற் கொண்ட பொழுது மதுரையில் மாணிக்கவாசகப் பெருமானைத் திருவருள் கூட்டக் கண்டு கண்ணிர் ததும்ப பரவிநின்றார். மாணிக்க பண்டிதர் என்றென்றும் வாதவூரடி களைப் பிரிய மனமின்றி குருநாதரின் சிவபூசைக்குரிய பணிகளைச் செய்து

வரவேண்டுமென்று அவர் வேண்டி நின்றார். வாதவூரரும் ''அங்ஙனமே ஆகுக'' எனப் பணித்தார். அவர் வாதவூரரின் ஆன்மார்த்த பூசைக்குரிய எல்லா ஏற்பாடுகளையும் அருகிருந்து கவனித்து வந்தார். இப்பேற்றினைப் பெற்ற மாணிக்க பண்டிதரே கூனம் பட்டி ஸ்ரீ மாணிக்க வாசக மாடலயத்தின் நிறுவனரும் குருமுதல்வரும் ஆவார். இவருடைய சந்தான பரம்பரையில் வந்து கொண்டிருப்பது தான் கூனம்பட்டிக் குருபரம்பரை.

தில்லையிலே மணிவாசகப் பெருந்தகை உலக நாட்டம் முற்றும் நீங்கிய சிவயோக நிஷ்டையில் உறைப்புற்று நிற்கும் தறுவாயில் தம்மைவிட்டுப் பிரியாது அணுக்கத் தொண்டராக உள்ள சீடர் மாணிக்கப் பண்டிதருக்கு ஞான தீக்கையும், ஞானாபிடேகமும் செய்தருளி அவருக்கு ''மாணிக்க வாசகர்'' என்ற திருநாமமும் சூட்டினார். பின்னர் மாணிக்க பண்டிதர் பூசித்துவரும் ராஜலிங்க மூர்த்தியோடு தம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய மீனாட்சி சுந்தரேசரையும் பூசித்து வருமாறு பணித்து அம்மூர்த்திகளை அவர் பால் தந்தார். மேலும், ''அன்பனே! நீ கொங்கு நாடு சென்று நமது பெயரால் ஒரு திருமடம் அமைத்து சைவ பரிபாலனம் செய்து வருவாயாக!'' என அருள் புரிந்தார்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் கொங்கு நாட்டில் அவிநாசிக்குவந்து அங்கு திருமடம் அமைத்து ஞான உபதேசம் செய்து வரலானார். பின்னர் விசயமங்கலத்தில் மடம் அமைத்து பரிபாலித்து வந்தார். நிட்டைக்கும் சிவப்பணிகளுக்கும் சுவாமிகளுக்கு ஏகாந்தம் தேவைப்பட்டதால் நான்கு கல் தொலைவில் காட்டிலே பர்ண சாலை அமைத்து தமது பூசைக் கிரமங்களை மேற்கொண்டு வந்தார். சுவாமிகளிடம் வந்த ஒரு குறுநில மன்னன் கூன் நிமிர்ந்து நிமிர்ந்து சுவாமிகள் அவனுக்குத் திருமணமும் செய்து வைத்தார். எனவே அவ்வூருக்கு கல்யாணபுரி என்றும், கூனம்பட்டி என்றும் பெயர் ஏற்பட்டது.

ஐம்பத்திரண்டாம் பட்டத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ ராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகளின் காலம் பொற்காலம் ஆகும். இவர் தமிழ் மொழியும், வடமொழியும், பிறமொழிகளும் கற்றுத் தேர்ந்த பேரறிஞர் ஆவார். இவர்களின் தேனினும் இனிய திருமொழியும், சொன்னபடி நடக்கும் வாக்குப் பலிதமும், மந்திர சித்தியும், சாத்திர போதனையும் கற்றோரையும் மற்றோரையும் ஈர்த்தன. பேரறிஞர்கள் பலரும் வந்து சேவிப்பக் குருபீடாதிபதிகளாக எண்ணிறந்த சீடர்கள் சூழ வீற்றிருந்து அருளாட்சி செய்த குருமணி இவரே ஆவார்.

இவர்கள் காலத்தில் கோபி செட்டி பாளையத்தில் ஸ்ரீ சுந்தர சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுவாமி பிரதிட்டை செய்யவும் சர்வசாதகம் முதலிய எல்லா ஆகம கைங்கர்யங்களுக்கும் ஸ்ரீ சுவாமிகளின் பரிவாரங்கள் அனுப்பப் பட்டனர். சுவாமிகளின் பரிவாரங்கள் சைவாகமப் பிரதிட்டை செய்வதை அவ்வூர் வைதீகப் பிராமண ருட்சிலர் தடுக்கலானார்கள். அப்போது பச்சாம் பேட்டை ஸ்ரீ சத்யோசாத சிவாச்சாரியார், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர், நா. கதிரை வேற்பிள்ளை போன்ற மகான்களைச் சுவாமிகள் அழைத்து பெரிய சைவசித்தாந்த சதஸ்கூட்டி ''விஜயசூசிகை'' என்ற நூல் ஒன்று எழுதுவித்துக் கற்றோரும் மற்றோரும் உண்மை இன்னது என்று அறிந்து கொள்ளச் செய்தனர். அது என்னவென்றால் ''ஆதிசைவத் துவிஜரே சிவனை முப்போதும் தீண்டும்

உரிமையுடையவர்கள். அவர்களே சைவாகம விதிப்படி தீட்சையாதிகள் பக்குவிகளுக்குச் செய்யும் ஆசார்யத்துவம் உடையவர்கள்; மற்ற வைதீகப் பிரமாணருள் எந்தப் பிரிவினருக்கும் சிவாலய சுப்ரமணிய உமாதேவி ஆலயங்களில் பிரதிட்டை, கும்பாபிடேகம் முதலியன செய்ய உரிமையில்லை'' என்ற வாதப் பிரதிவாதங்கட்குப் பிறகு சைவாகம நீலாங்க நெறியே கைக்கொள்ளக் கடவது என்பது இருகட்சிப் பெரியோர் முன்னிலையிலும் முடிவு செய்யப் பட்டது. அதன் முடிவை வைதீகர்கள் ஒப்புக் கொண்டு அமைந்துவிட்டனர்.

சைவாகம விற்பன்னர்கள் முன்னிலையில் ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக் கோவில் பிரதிட்டையும் குட நீராட்டு விழாவும் மண்டலாபிடேகமும் மிகச் சிறப்பாக நடந்தேறின.

இந்தச் சைவாகம வெற்றிப்புகழ் இவர் தம் காலத்திலே தான் நிகழ்ந்தது. ஐம்பததி ஐந்தாவது பட்டமாகிய ஸ்ரீலஸ்ரீ சரவண மாணிக்க வாசக சுவாமிகள் பெரிய புராணக் காப்பியத்தை இன்னிசையோடு, திருமுறைப் பாசுரங்களைக் குழைத்து தமிழகம் முழுவதும் பாராட்டும் வண்ணம் சொற்பெருக்காற்றும் திறமை படைத்தவர்கள். இவர்கள் செந்தமிழும் வடமொழியும் ஆகிய இரு மொழிகளிலும் உள்ள வேதம், சைவாகமம், சைவ சித்தாந்த சாத்திரங்கள், சைவத் திருமுறைகள், இலக்கண இலக்கியங்கள் ஆகியவற்றுள் வல்லுநராய் விளங்கியவர்கள். இவர்களின் நாவன்மை அறிஞர், பொது மக்கள் ஆகிய இருவகை உலகினர் உள்ளங்களையும் ஈர்த்து நற்பயன் விளைத்தது. இடையிடையே நகைச்சுவை முதலிய நவசுவைகளையும் இடம் நோக்கிக் கூறி மகிழ்விப்பார்கள்.

ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்க வாசக சுவாமிகள் 9.9.1994இல் 55ஆவது குருமகா சந்நிதானமாகப் பட்டம் சூட்டப் பெற்றார்கள். தருமை ஆதீனத்தில் வேத சிவாகமம் கற்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவராகத் தேர்ந்து, மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரிடம் சைவ சித்தாந்தம் கற்றவர்கள். சிற்ப சாத்திரங்களை நன்கு உணர்ந்தவர்கள். பல திருக்கோயில்களுக்கு சிற்ப சாத்திர விதிப்படி திருத்தலங்கள் ,செய்து அமைப்பதும் புதிய திருக்கோயில்கள் அமைக்க அறிவுரைகள் பகர்வதிலும் இவர்கள் தேர்ந்தவர்கள். பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் பேசுபவர்கள். திருமடத்திற்கு வருகின்ற மக்களின் குறைகளைக் கேட்டு அருட்பிரசாதம் வழங்கி தீர்த்து வைக்கிறார்கள். ஆண்டுக்கு இருநூறுக்கும் மேற்பட்டவர்களுக்குத் தீக்கை வழங்கி வருகிறார்கள். அனைவரையும் சைவ நெறியில் கொண்டு வரவேண்டும் என்பதே இவர்களின் தலையாய கொள்கை.

சைவப்பணி, உழவாரப் பணிக்காக ஆங்காங்கே மன்றங்களை நிறுவச் செய்து அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அமைக்கப் பட்ட, திருவான்மியூரில் தாண்டக வேந்தர் உழவாரப் பணி மன்றம், மடிப்பாக்கத்தில் அப்பரடிகள் உழவாரப் பணிமன்றம், கரிவலம் வந்த நல்லூரில் திருவாதவூர் சைவசபை, கோவில் பட்டியில் மாணிக்க வாசகர் சைவ சபை, மற்ற இடங்களில் சைவ சித்தாந்த சபை, கோவில் பட்டியில் திருச் சிற்றம்பலம் அறக்கட்டளை ஆகியவற்றின் மூலமாகத் தமிழகத்தில் உழவாரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருமடத்தில் வேத சிவாகம திருமுறை பாடசாலையும், ''மாணிக்கவாசகர்'' எனும் ஆன்மீக

இதழும் 10 ஆண்டுகளாகத் தொடங்கி நடத்தி வருகிறார்கள். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று சைவச் சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார்கள்.

10. ஈரோடு

(i) கயிலைக் காட்சியே இவர் வாழ்க்கைக் குறிப்பு

கயிலாயம் தான் என் வாழ்க்கைக் குறிப்பு. ஈரோடு என்றாலே கயிலாயக் காட்சிதான்! இன்றைக்குப் பலர் பல பகுதிகளிலிருந்து கயிலாயம் சென்று வருகிறார்கள். நடந்தும் போகிறார்கள். ஜீப்பில் போகிறார்கள். ஹெலிகாப்டரிலும் பறந்து போய் தரிசிக்கிறார்கள். ஆனால் வாய்ப்பு வசதிகள் இல்லாத முப்பது ஆண்டுகளுக்கு முன்பேயே ஈரோட்டில் கயிலை யாத்திரை தொடங்கி விட்டது. ஈரோட்டில் தடுக்கி விழுந்தாலும் ஒரு கயிலைப் புனிதரின் காலில் விழ நேரும். அப்படி ஒரு ஈடுபாடு! பக்தி!

ஏழைப்பிராமணர் ஒருவர் ''நான் எப்படிங்க போகமுடியும்?'' என்று புலம்பிக் கொண்டிருந்தார். இது திருப்புலம்பல், ''பிரார்த்தனை செய்தாலே கயிலாயம் செல்லலாம் என்றேன், பிரார்த்தனை பலித்து விட்டது- காட்சி கிடைத்துவிட்டது'' என்றார் திரு செங்கோட்டையன் அவர்கள். ''கால் ஊனமுற்ற ஒருவர்; மரக்காலை வைத்து தான் நடக்க முடியும். மனதில் உறுதியோடு இருந்தார், கயிலை போய் விட்டார். இந்தி வாத்யார் ஒருவர், வெறும் 500 ருபாயைக் கையில் வைத்துக் கொண்டு கயிலை போய் வந்து விட்டார். எண்பது வயது பெரியவர் நடந்தே போய் வந்தார். சோமாசிக் கவுண்டர் என்று ஒரு கிராமத்து அடியார்; தமிழ் தவிர வேறு மொழி தெரியாது. பாஸ்போர்ட் கூட இல்லை.நடந்தே போய் வந்து விட்டார்'' என்று செங்கோட்டையன் அவர்கள் அடுக்கிக் கொண்டே போனார்.

''எப்படிங்க போறதுன்னு அம்மா அவர்கள் (செங்கோட்டையன் அவர்களின் துணைவியார்) முத்தானந்த சாமிகளிடம் கேட்டார். இந்தச் சாமிகள் 25 ஆண்டுகள் கயிலையில் இருந்தவர்கள். இந்தச் சுவாமிகள் ஒருநாள் கயிலையை வலம் வரும்பொழுது அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. புத்தபிக்கு ஒருவர் பச்சிலை கொடுத்தார். மயக்கம் போய் விட்டது. ஒரு பெரிய உருவம் போய்க்கொண்டிருந்தது. பத்து அடி உயரத்திற்கு முடிமுடியாகத்தொங்கிக் கொண்டிருந்தது. அருகில் காலடிச் சுவடு இருந்தது. பெரிய மகான்கள் வாழும் பிரதேசம். அந்த முத்தானந்த சாமிகள் சொன்னார்கள். அடித்துக்கேள் தருவான் என்றார்கள். கயிலாயபதி பேசுவார். அப்படித்தான் அழகப்பன் மாமா (திருப்பெருந்துறைக் கோயில் திருப்பணி செய்தவர்) கேட்டார்கள். உடல்நிலை அடிப்படையில் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கயிலாயம் போக அனுமதி கிடைக்க வில்லையானால் நான் மேலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்வேன் என்றார் அனுமதி தந்து விட்டார்கள். அந்த அளவு கொள்கைப் பிடிப்பு இருக்கவேண்டும்'' என்றார்.

கயிலாயக் காட்சிக்குப் பல சிறப்புகள் உள்ளன. அவற்றைப் பற்றி எல்லாம் நம்முடைய திருமுறை ஆசிரியர்கள் பல படப் போற்றிப் பாடியுள்ளனர். செங்கோட்டையன் எடுத்துரைக்கும் சிறப்பு வருமாறு'', ஒருவரைப் பார்ப்பது என்றால் அவரது வீட்டில் பார்ப்பதுதான் சிறப்பு. சிவத்தைக் கயிலாயத்தில் தரிசிப்பது தான் உத்தமம்'' என்கிறார்.

கயிலாயக் காட்சி பலருக்குப் பலவிதமாக அமைகிறது. செங்கோட்டையன் துணைவியார்க்கு இரண்டு பிறை நிலாக்கள் காட்சி அளித்தது. அம்மையாருக்குப் புரியவில்லை. ''இதுபோல இருக்க முடியாதே'' என்று சிந்தித்துக் கொண்டு இருந்தார்கள். சில காலம் கழித்து அம்மையார் திருவாரூர் சென்றிருக்கிறார்கள், அங்குத் தியாகேசப் பெருமான் திருமுடியில் இரண்டு பிறை! அம்மையார்க்கு ஆனந்தக் கண்ணீர் நிற்கவேயில்லை. செங்கோட்டையனின் தமக்கையார் நிலை ஒருமுறை படுகேடாகப் போய்விட்டது. அவர்கள் கண்ணீர் விட்ட நிலையில் நடராஜப் பெருமானது காட்சி கிடைத்தது. எங்களுக்கும் சிவக்காட்சிதானா?'' கோயமுத்தூரிலிருந்து லதா என்ற வைணவ அம்மையார் வந்திருந்தார்கள், ''நான் வைணவம் ஆயிற்றே'' என்றார்களாம். அவர்களுக்குத் திருப்பதி வெங்கடாசலபதியாகக் காட்சி கிடைத்ததாம்.

இவ்வாறு ஒரு மணி நேரம் செங்கோட்டையன் அவர்கள் நெஞ்சுருகிச் சொன்னார்கள். ''உங்கள் வாழ்க்கைக்குறிப்பைத் தாருங்கள்'' என்று கேட்டோம். ''கயிலாயம்தான் என் வாழ்க்கைக் குறிப்பு'' என்று கூறி விட்டார்கள். ஆம்! வேறென்ன சொல்வார்! அவரும் அவரது மனைவியாரும், புதல்வர்களும் 6, 7 முறை கயிலாயம் சென்று வந்து விட்டார்கள். அந்தக் குடும்பமே கயிலாயக் குடும்பம், அவர்களைத் தரிசிப்பதே கயிலாய தரிசனம்!

இதுவல்லாமல் ஈரோட்டில் நடைபெறும் திருப்பணிகளுக்கு உதவுதல், திருச்செந்தூர் கந்தர் சஷ்டி விழாவிற்குத் தினமும் 200 லிட்டர் பால் கொடுத்தல்; ஈரோடு திருக்கூட்டம் மூலம் 127வது வகுப்பாகப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டு சாத்திர தோத்திர வகுப்புகள் நடத்துதல் என இவர்களின் பணி விரிகிறது. இவர்களது துணைவியார் பன்னிரு திருமுறைகளையும் முழுமையாக ஒரு முறை எழுதிவிட்டார். இப்படி எழுதிக் கொண்டே போகலாம்.

(ii) திருப்பெருந்துறை திருப்பணிச் செல்வர்



அழகப்பன் ஐயாவுடன் பேசினாலே ஒரே அழுவாச்சிதான். தமிழ் நாட்டில் அழுது அடி நினைந்து உருகும் பெரியவர்கள் இருவர் இருக்கின்றனர். ஒருவர் எனது ஆசிரியர் பிரான் திருமுறைச் செல்வர் திரு.மு. கணபதி அவர்கள், தனது பேச்சில் திருமுறைப் பாடல்களை ஓத ஆரம்பித்து விட்டாலே ஆசிரியருக்குக் கண்ணில் நீர் மலகும், நாக்கும் குளறும். இதனாலேயே அவர்கள் திருவாசகம் பேச அழைத்தால் மறுத்துவிடுவார்கள். பேச ஆரம்பித்தவுடனே உணர்த்தி மேலீட்டால் பேச்சு தடைப்பட்டு விடுமே!

மற்றொருவர் ஈரோட்டுப் பெரியவர் திருமிகு அழகப்பனார் அவர்கள் ஆவார். திருப்பெருந்துறை, மணிவாசகர் என்றாலே போதும். கண்ணிலிருந்து நீர் பொல பொலவென்று வழியும். செங்கோட்டையனார் கயி

லாயக் காட்சி என்றால் அழகப்பனார் திருப்பெருந்துறைக் காட்சியே! திருப்பெருந்துறைத் திருப்பணிதான் ஐயா அவர்களின் உயிர் மூச்சு! ஒரு முறையல்ல; இரண்டு முறை திருப்பணிக்குழுத் தலைவராக இருந்து தற்பொழுது குடமுழுக்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள். 1990 இல் இருபத்தைந்து இலட்சரூபாய் செலவில் நடைபெற்றது. தற்பொழுது இரண்டாவது கும்பா பிடேகத்திற்கான பணி நடைபெற்று வருகின்றது. எண்பது வயதான நிலையிலும் திருப்பணி நன்கொடை வசூலிக்க ஊர் ஊராகச் செல்வதும், பத்து நாளுக்கொருமுறையாவது ஈரோட்டுக்கும், திருப்பெருந்துறைக்குமாக அலைந்து திருப்பணி வேலை செய்வதுமாகத் தன்னையே அர்ப்பணிந்துள்ளார்கள். தனது 82வது வயது நிறைவின் பொழுது திருப்பணிக்கென ரூபாய் 82,000/- வழங்கியுள்ளார்கள். இளைஞனின் துடிப்போடு பணியாற்றுவது கல்வெட்டில் பொறிக்க வேண்டிய செய்தி.



‘‘தேரார்ந்த வீதி’’ என்று மணிவாசகர் பாடிவிட்டாரே. அங்கு திருத்தேர் உலா வர வேண்டாமா? எனத் தவிக்கின்றார். ஆனித்திரு மஞ்சனத்திற்குப் பெரிய தேர் திருப்பணி செய்யப்பட்டு ஓட ஆரம்பித்து விட்டது. பெரிய தேர் திருப்பணி ஆனால் போதுமா? அது வீதியில் செல்ல அகலமான வழி வேண்டாமா? தேரார்ந்த வீதியாக அல்லவா இருக்க வேண்டும். கடைகளும் நெருக்கடியுமாக உள்ள வீதி. ஒருவர் கடையை எடுக்க முடியாது என்று கூறிவிட்டார் பெரியவர் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலாராணி சுங்கத்திடம் விண்ணப்பித்தார். ஆட்சித்தலைவர் கடையைக் காலி செய்ய உத்திரவிட்டதோடு 24 மணி நேரத்தில் எடுத்தும் விட்டார். அது மட்டுமல்ல 12 இலட்ச ரூபாய் செலவில் சாலையும் போட்டு விட்டார்.

‘‘சீரார் திருவடித் திண் சிலம்பு
சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான்
திருநடம்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ’’

என்று அழகப்பனார் நெஞ்சுருகப் பாடினார். ஆம்! ‘‘அடியேன் அகமகிழ’’ என்பது ‘‘அழகப்பன் அகமகிழ’’ என்று கூட இருக்கலாம்.

ஒரு தேரோடு அழகப்பனார் மன நிறைவு அடையவில்லை, மார்க்ழி திருவாதிரைக்குச் சிறியதேர் வேண்டுமே! அதற்கானத் திருப்பணி தற்பொழுது நடக்கிறது. சிறிய தேர் செய்யவேண்டுமே என்று ஒரே கவலை,

மதுரை திருக்கோயில் வழிபாடு செய்யச் சென்றபொழுது, ''சுப்பிரமணியன் - தேர் செய்து கொடுப்பவர்'' என்ற பலகையைப் பார்த்து உள்ளே நுழைந்து விட்டார்கள்.

''தேர்ச்சீலை செய்ய வேண்டும்'' என்று கேட்டார்கள். சுப்பிரமணியம் அவர்கள், ''என்ன வேண்டுமானாலும் கொடுங்கள்'' என்றார். பெரியவர் ரூபாய் 51,000/- கொடுத்தார்கள். சுப்பிரமணியத்துக்கு ஒரே மகிழ்ச்சி! தேர்ச்சீலை இன்றும் புதுத்துணி போல இருக்கிறது. அப்படி ஒரு நேர்த்தி! தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடத்தை திருப்பெருந்துறையில் இனி ஆண்டுக்கு இருமுறை கண்டு களிக்கலாம்.

அழகப்பனார் அவர்கள் திருப்பெருந்துறைத் திருப்பணியோடு நிறுத்திவிடவில்லை. வெஞ்சமாக்கூடல் திருப்பணியையும் இருமுறை நிறைவேற்றியிருக்கிறார்கள். முதல் குடநீராட்டு விழா 1986லும் இரண்டாம் குடநீராட்டு விழா 2003லும் நடத்தியிருக்கிறார்கள்.

முதல் திருப்பணியில் பெரியவர்கள் நிரம்ப சிரமப்பட்டிருக்கின்றார்கள். திருப்பணி பார்வையிட கௌமாரமடம் சுவாமிகள் பவானி வர இருந்தார்கள். எதிராஜ ரெட்டியார் வீட்டில் சாப்பாடு ஏற்பாடு ஆகியுள்ளது. என்னவோ சூழ்நிலை! நடக்கவில்லை. சுவாமிகள் வந்து விட்டார்கள். மாற்று ஏற்பாடு பண்ண முடியவில்லை. யாரோ வந்தார்கள்; சோறு போட்டார்கள் இல்லை, சாமி போட்டார்.

கான்கிரீட் போட நாள் குறித்திருந்தார்கள். அன்று மேகம் இருண்டு வானமே கருத்து இருந்தது. தொழிலாளிகள் எல்லாம் வந்து விட்டார்கள். இறைவனைத் தான் வேண்டினோம். சுற்றுப்புற ஊர்கள் எல்லாம் மழை கொட்டித் தீர்த்துவிட்டது, வெஞ்சமாக்கூடலில் மட்டும் மழை பெய்யவில்லை. சாமி காத்தார்.

இவையெல்லாம் அழகப்பனாரின் அநுபவங்கள். ஏன் நடக்காது? செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்கிறார். இம்மை தரும் பயன் அத்தனையும் கொழிக்காதா என்ன? இம்மை மட்டுமா? மறுமை தரும் பயன் அத்தனையும் கொழிக்குமே!

அழகப்பனாரைத் தரிசித்தாலே புண்ணியம். பரமபக்தரான அழகப்பனார் கயிலாயம்போகாமலா இருப்பார்? ஈரோட்டின் பண்பே கயிலாயக் காட்சி தானே! உடல் நிலையைக் காரணம் காட்டிக் கயிலாயம் செல்ல அதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்டனர். அழகப்பனார் அங்கேயே உட்கார்ந்து விட்டார். அம்மா சொல்லிவிட்டார்கள். ''ஐயா அவர்களுக்கு அனுமதி தரவில்லை என்றால் ஐயா மேலிருந்து கீழே விழுந்து உயிர்த்தியாகம் செய்து விடுவார்கள். அப்புறம் உங்கள் விருப்பம்'' என்றார்கள். ''ஆளும் நாயகன் .கயிலை இருக்கை கண்டல்லால் மாளும் இவ் உடல் கொண்டு மீளேன் என மறுத்தார்.''

அனுமதி கிடைத்துவிட்டது, அவர்தான் அழகப்பனார்! அதுதான் பக்தி வைராக்கியம்!

ஐயா மட்டுமல்ல, ஐயா அவர்களின் துணைவியார் வள்ளியம்மாள் அவர்களும் பழுத்த சிவனடியார் ஆவார். கால்கள் நடக்க முடியாத நிலையிலும் ஈரோடு ஈசுவரன் கோயில் பள்ளியறை நிகழ்ச்சி காண வந்து விடுவார்கள். திலகவதியார் மகளிர் நற்பணி மன்றம் தொடங்கிப் பல பணிகள் செய்து உள்ளார்கள். இம்மன்றத்தின் செயலர் அன்னபூரணி அவர்கள், ஈரோடு சிவன் கோயிலில் எந்த வசதியும் இல்லாத

நிலை. 1ருபாய், 2 ரூப்பாய் என்று வசூலித்து பிட்டுத் திருவிழா நடத்தத் தொடங்கினார்கள். அறுபது ஆண்டுகளாக நடந்து வருகிறது. திருவெஞ்சமாக்கூடல் திருப்பணிக்குப் பிட்டுத் திருவிழா வசூலிலிருந்து ஏழரை லட்ச ரூபாய் வழங்கியுள்ளார்கள். அதே மன்றம் மூலமாகத் திருப்பெருந்துறை திருப் பணிக்கு 1,25,00 ரூபாய் வழங்கியுள்ளார்கள். அழகப்பன் - வள்ளியம்மாள் தம்பதியர் திருப்பணித் தம்பதியர் எனல் மிகையாகாது. அழகப்பனாரின் தம்பி மகன்களும் அறுபத்து மூவர் மண்டபத்தில் சலவைக்கல் போட இரண்டு லட்ச ரூபாய் வழங்கியுள்ளனர். ஒருவர் நற்பணி செய்தால் குடும்பமே நற்பணி செய்யும். ஊரே திருப்பணி செய்யும், ''வரப்புயர நீர் உயரும்'' கதைதான்! 2008 மே மாதம் திருப்பணிச் செல்வர் திருப்பெருந்துரையர் திருவடி சேர்ந்தார்.

ஈரோட்டில் இந்த இரண்டு புண்ணியக் கண்கள் மட்டும்தான் என்று எண்ண வேண்டா. 1995 திருத்தொண்டீசுவரர் திருக்கோயில் புள்ளி விவரக் கணக்குபடி கயிலை சென்று வந்தவர்களே 30 பேர் ஆவர். திருக்கோயில் அடியார்கள் 100 பேர் ஆவர்.

(iii) அருள்நெறித் திருக்கூட்டம்

இத்தனை அடியார்கள் உள்ள ஊரில் அமைப்புகள் இல்லாமல் இருக்குமா? அருள்நெறித்திருக்கூட்டம் அறுபது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. ஆரம்பத்தில் திருக்குறள் திருமுறை ஆராய்ச்சிக்கழகம் என்ற பெயரில்தான் தொடங்கப்பட்டது. இதனைத் தோற்றுவித்தவர் தொண்டர் சீர் பரவுவார் அமரர் திரு. ரா.ப. தங்கவேலனார் ஆவார். வழிபாடு,



அறுபத்து மூவர்

வாரம் ஒருமுறை திருமுறை வகுப்பு, ஆண்டுக்கு ஒரு முறை மாநாடு என்ற முறையில் பணிகள் அமைந்திருந்தன. 35 ஆண்டுகளுக்கு முன் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அருள்நெறித் திருக்கூட்டம் என்று பெயரினை மாற்றினார். அறுபத்து முவர் குருபூஜை, வாரவழிபாடு கிருத்திகை வழிபாடு, சித்திரை முதல் நாள் சிறப்பு அபிடேகம், ஆறு நடராஜர் அபிடேகம், ஆவணி முலத் திருநாள் எனப் பணி விரிந்தது. ஆடி சுவாதி சுந்தரர் குருபூஜையை ஒட்டி ஆறு நாட்கள் நடைபெறும். அறுபத்து மூவர் விழா காணக் கண் கோடி வேண்டும். முற்றோதல், சொற்பொழிவு, தேவார இன்னிசை என நாளும் திருமுறை முழக்கம்தான். நிறைவு நாளன்று ஒரே சப்பரத்தில் அறுபத்து மூவர் திருமேனிகளையும் எழுந்தருளச் செய்வது காண்கொள்ளாக் காட்சி ஆகும். ஓதுவாமூர்த்திகள் வீதி தோறும் தேவார இசை முழக்கம் செய்து வலம் வருவர்.

பொதுமக்கள் உதவியுடன் கொண்டீசுவரர் கோயில் (4 முறை) திருவெஞ்சமாக்கூடல் (2 முறை), திருப்பெருந்துறை (2 முறை) குட நீராட்டு விழா செய்தள்ளனர். ஒரு மேல்நிலைப்பள்ளி நடத்தி வருகின்றனர். திருத்தொண்டீசுவரர் திருக்கோயில் திருப்பணியே (1995) தனி வரலாறு ஆகும். திருக்கோயிலுக்கு எதிரே 24 அடி உயரத்திற்கு ஒரு மண்டபம் எழுப்பியுள்ளார்கள். அம்மன் ஆலயம், ராஜகோபுரம் புதிதாக எடுப்பித்தார்கள்.இதற்கெல்லாம் 18 இலட்ச ரூபாய் செலவாயிற்று. பெங்களூர் பழனிச்சாமி அவர்கள் 550 சதுர அடி பளிங்குக் கற்கள் தந்து உதவியிருக்கிறார். அம்மன் கோயில்கருவறைக்கு ஈரோடு வி.பி. சேதுபதி கவுண்டர் குடும்பத்தினர் கிரானைட் கற்கள் வழங்கியிருக்கின்றனர். கும்பாபிடேகச் செலவு மட்டும் சுமார் ஏழு லட்ச ரூபாய் ஆகியுள்ளது. தலைவர் கயிலை மணி, திரு. ஏ. முனுசாமி முதலியார், செயலர் : திரு. கே.எம். சென்னியப்பன்.

(iv) திருமுறைக்கழகம்

மற்றுமொரு தொன்மையான சைவ அமைப்பு திருமுறைக் கழகம் ஆகும். 1938இல் தொண்டர் சீர்பரவுவார் திருமுறைக்கழகத்தைத் தொடங்கி வாரந்தோறும் பெரிய புராண வகுப்பு நடத்தி வந்தார்கள். தற்பொழுது அறுபத்து மூவர் குருபூஜை, அப்பரடிகள் ஆராதனை விழா, மூவர் தமிழிசை விழா நடத்துகின்றனர்.

தலைவர் - சிவ. சுப்பிரமணியம்; செயலர் - ஏ.எஸ். சுப்பிரமணிய முதலியார்.

(v) சித்தம் அழகியார் வழிபாட்டுக் குழுவினர்

மீனாட்சி அம்மாள்

சைவ மங்கையர் இணைந்து ''சித்தம் அழகியார் வழிபாட்டுக் குழுவினர்'' என்ற பெயரிட்டு நாளும் சைவப் பணி செய்து வருகின்றனர். சிவன் பணி புரியாத நாளெல்லாம் பிறவா நாளே! முதல் ஞாயிறு திருவாசகம் முற்றோதல்; திருவாசகம் மனப்பாடம் செய்பவருக்கு விருது

வழங்கல்; வெள்ளிக்கிழமை - திருவிளக்கு வழிபாடு; செவ்வாய், சனி - பெரியபுராண வகுப்பு நடத்துதல் - வியாழன் - திருவாசகம் விளக்கவுரை படித்தல்; புதன் - திருமுறை வழிபாடு; திருத்தலப்பயணம் - இருதிங்களுக்கு ஒருமுறை சித்தாந்த வகுப்பு நடத்துதல், சந்தானக்குரவர் குருபூசை நடத்துதல் இல்லங்கள் தோறும் திருமுறை முற்றோதல்; திருவாசகம், சைவ சித்தாந்தம் நூல்கள் வெளியிடுதல், இவ்வமைப்புக்குப் பொறுப்பாளர்கள் யார் தெரியுமா? சிவ பெருமான் - தலைவர்; உமையம்மை - செயலர்; மாணிக்கவாசகர் பொருளாளர். அமைப்பு தோன்றி பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. சைவப்பணிகள் அனைத்தையும் பின்னிருந்து இயக்குபவர் மீனாட்சி என்ற மாதரசியார். அண்மையில் உள்ள கல்வி நிலையம் சென்று சைவம் பற்றி போதித்து வருகிறார்கள். (பிறப்பு - *17.6.1942*; சென்னிமலை; பெற்றோர் - எம்.சி. இராமசாமி முதலியார், கருணையம்மாள்)

(vi) மங்கையர்க்கரசியார் மாதர் கழகம்

மற்றுமொரு மங்கையர் அமைப்பு மங்கையர்க்கரசியார் மாதர் கழகம் ஆகும். பெயரிடப்படாமல் அறுபது ஆண்டுகள் இவ்வமைப்பு பணியாற்றியது. 25 ஆண்டுகளுக்கு முன்பு பெயர் சூட்டப்பட்டது. பிட்டுத் திருவிழா இக்கழகத்தின் முக்கிய பணியாகும்.

(vii) முனுசாமி முதலியார்

திருத் தொண்டீசுவரர் திருக்கோயில் திருப்பணிக் குழுத் தலைவர் கயிலை மணி ஏ. முனுசாமி முதலியார் ஆவார். அருள் நெறித்திருக்கூட்டத்தின் தலைவரும் ஆவார். கோயிலில் மண்டபம் எழுப்புதல், செப்புத் திருமேனி எழுப்புதல், வாரணாம்பிகை வெள்ளிக் கவசம், மயில் வாகனம் ஆகிய பணிகளைச் செய்தார். சோளீசுவரர் கோயில் இவர்களது குடும்பக் கோயில் ஆகும். இவரது தந்தையார் இரு கும்பாபிடேகங்களும், இவர் ஒரு கும்பாபிடேகமும் நடத்தியுள்ளார். வையாபுரி முதலியார் - அர்த்தநாரி முதலியார் - முனுசாமி முதலியார் என மூன்று தலைமுறைகளாகத் திருப்பணிகள் செய்து வருகின்றனர்.



(பிறப்பு - *23.5.1923*; ஈரோடு; பெற்றோர் - அர்த்தநாரி முதலியார், காவேரியம்மை)

ஈரோட்டின் மற்றுமொரு கயிலை மணி திரு த. விசுவநாதன் ஆவார்.

(viii) த. விசுவநாதன்

தூய வெள்ளைகதர் ஜிப்பா; கதர் வேட்டி; ஒடிசலான தேகம்; ஒளி மிகுந்த கண்கள்; ம.பொ.சி. மீசை; கடவுளே வந்து கலக்கினும் கலங்காத தமிழ் நெஞ்சம்; தண்டமிழ்த் தரங்கமாய்ப் புரளும் செந்நா; திருமுறைத் தமிழ் இணைந்த அருஞ்சொற்கள்; தெய்வத் தமிழுக்குத் தீங்கு நினைவோர்க்கு எதிராகத் தீக்கங்குகளைக் கக்கும் தீரப்

பேச்சு; இவற்றைக் கலக்கி, உருட்டி வடித்தால் அதுதான் விரிவுரை வித்தகர் ஈரோடு த. விசுவநாதன் அவர்கள்.

''சிவனடியார்கள் வழி வழி அடிமை என்பர். மரபு வழி வருகின்ற ஜீன்ஸ் என்ற உயிர் அணுக்கள். சில இயல்புகள் பரம்பரையாக வருவதற்குத் துணை புரிகின்றன என்பது அறிவியல். இது இன்றும் உண்மை'' என்கிறார் மூதறிஞர் அ.ச.ஞா. ''சைவ சமயத்தின் உயிர் நாடி தொண்டு என்பதனை அன்றே அறிந்திருந்த தங்கவேலனார் சமுதாயத் தொண்டு முதல் திருக் கோயில் தொண்டு வரை பலவற்றைச் செய்தார். கடைசிக் காலத்தில் திருக்கோயிலிலேயே தங்கிவிட்டார். அவருடையமகனார் இளமையில் அரசியல் குளத்தில் குதித்து நீந்தி விளையாடினார். ஆனால் தங்க வேலனாரின் மரபு அணுக்கள் விரைவில் வேலை செய்யத் தொடங்கி விட்டன. அதன் பயனாக உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலைப் பாக்கும் எல்லாம் சேக்கிழாராக - பெரிய புராணமாக - வாழ்ந்து வருகின்றார் விசுவநாதன். சைவமும் பொய்க்க வில்லை; விஞ்ஞானமும் பொய்க்க வில்லை''

ஆம். 520 பக்கங்களில் மாபெரும் படைப்பாக ''அடியவர் அறுபத்து மூவர் வரலாறு'' என்ற அரிய நூலினை விசுவநாதன் படைத்துள்ளார். இவர் எழுதிய பிற நூல்களில் திருமுறைத் தேன் துளிகள், தமிழ் ஞான சம்பந்தர், அப்பரடிகள், வெள்ளானை வேந்தர், மணிவாசகரும் திருவாசகமும், தெய்வச்சேக்கிழார், திருவெம்பாவை உரை, திருமுறைச் சிந்தனைகள், பனிரண்டு ஜோதிலிங்க வரலாறு.

எழுத்துப் பணியோடு நிற்காமல் பெரியபுரணம், கந்தபுராணம் சொற்பொழிவுகள், வகுப்புகள் நடத்தி வருகின்றார். மலேசியா, இலங்கை போன்ற வெளிநாடுகளிலும் சென்று உரையாற்றியுள்ளார். திருமுறைக் கழகத்தின் உந்து சக்தியாக இருந்து தேவார மூவர் விழா, சதயத்திருத் தேர்விழா, தலப்பயணம் ஏற்பாடு செய்கின்றார். தமிழ் மறைப்படி குடநீராட்டு விழா நடத்துகின்றார். சிவ தீக்கை வழங்குகிறார். இவர் செய்யாத சைவப் பணி இல்லை எனலாம்.

சொல்லின் செல்வரா? எழுத்து வித்தகரா? செயல் வீரரா? தீக்கை வழங்கும் குருநாதரா? குடநீராட்டு விழா நடத்தும் திருப்பணிச் செல்வரா? யார் இவர்?- இவர்தான் த. விசுவநாதன். பிறப்பு - 15.1.1940; ஈரோடு பெற்றோர் - தொண்டர் சீர்பரவுவார் ரா.ப. தங்கவேலனார் - பார்வதியம்மாள்.)

திரு.வி.எம். பாலுசாமி அவர்கள் (1927) மற்றுமொரு கயிலை மணி ஆவார். தொண்டீசுவரர் கோயில் பஞ்சலிங்கங்கள் பாழடைந்த நிலையில் இருந்தன. அதனைச் செப்பனிட முன் நின்ற பெரியார். அதுபோல இருட்டிலிருந்த நடராஜரை வெளிச்சத்துக்குக் கொண்டுவர சுற்றுப்பாதையினை இவரது குழுவினர் அமைத்தனர். மாதம் தோறும் உழவாரப் பணி, பாதயாத்திரை மூலம் பிரச்சாரம் செய்து வருகின்றனர். 50 ஆண்டுகளாக முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டும் 13 ஆண்டுகளாகத் திரு. வையாபுரி அவர்களைக் கொண்டும், 2, 3, 4 வது ஞாயிறுகளில் சைவ சித்தந்த வகுப்பு அன்பர்களுடன் இணைந்து நடத்துகிறார். சீன எல்லையில் இருக்கும் கயிலாய வழி அடைபட்ட நிலையில் முன்னாள் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் சீனப்பயணம் மேற்கொண்ட போது அவர்களுக்குத் தந்தியடித்துக் கயிலாய வழி திறக்கக் கேட்டுக் கொண்டவர்களுள் இவரும் ஒருவர்.

உடனே அனுமதி கிடைத்தது. கயிலைச் செல்வர் மட்டுமல்ல; சிவனடியார்கள் கயிலை செல்வதற்கு வழி திறக்க வழி வகை கண்ட செல்வர். (12.5.1927; வள்ளிபுரம், ஈரோடு அருகில்; முருகேச முதலியார் குழந்தை அம்மாள்)

சியாமளா

ஈரோட்டில் பெண்களும் ஆண்களுக்கு நிகராகச் சமயப்பணி செய்து வருகின்றார்கள். அப்படி செய்பவர்களில் முக்கியமானவர் சியாமளா என்ற மருத்துவர். ஏழு ஆண்டுகளாக மாதந்தோறும் ர.வையாபுரி அவர்களைக் கொண்டு திருமுறை வகுப்பு நடத்தி வருகின்றார். ஆண்டு தோறும் திருமுறை விழா, காலைச் சொற்பொழிவு, நண்பகல் மாகேசுவர பூசை, பிற்பகல் திருமுறை இசை என்று அமைத்து நடத்துகிறார்கள். ''உயிர் சில சிந்தனைகள்'', ''ஞானமா செல்வமா?'' என்று அவ்வப்பொழுது நூல்களும் வெளியிடுகின்றார்கள்.

திருவிழாவின் பொழுது ஓட்டும் வகையில் வாசகங்கள், படங்கள் சாவி வளையங்கள், திருநீற்றுப்பை, புத்தகக் குறி, பரிவட்டம் என்று வழங்குகிறார்கள். முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமை; பின்னைப் புதுமைக்கும் புதுமை. ஈரோட்டார்; கயிலை செல்லாமலா?

(14.1.1948; எழுமாத்தூர், ஈரோடு அருகில்)

காமதேனு பழனியப்ப செட்டியார்

திருக்குறள் - திருமுறைக் கழகத்தின் பெயரைக் குன்றக்குடி அடிகளார் அருள்நெறித் திருக்கூட்டம் என்று மாற்றியபொழுது அமரர் காமதேனு பழனியப்ப செட்டியார் தலைவராகப் பணியாற்றினார். ''நாத்திகம் பரவ ஆசிரியர்கள்தான் காரணம். அவர்களை மாற்ற வேண்டும்'' என்று சைவ அடிப்படையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கி நடத்தி வந்தார். நோய் நாடினால் மட்டும் போதாது. நோய் முதல் நாடி அதன் வாய் நாடி வாய்ப்பச் செய்தார். அதுதான் ஈரோட்டுப்பாதை! திருக்கோயிலுக்கு வெள்ளிரதம் பண்ண உதவினார். அறுபத்து மூவரும் ஒரே சப்பரத்தில் வர வழி செய்தார்.

எஸ். மீனாட்சி சுந்தர முதலியார்

ஈரோட்டில் நாத்திகத்தைத் தடுத்து நிறுத்திய மற்றுமொரு பெரியவர் அமரர் திரு. எஸ். மீனாட்சி சுந்தரமுதலியார் ஆவார். இவர் ஈ.வே.ரா. பெரியாரை எதிர்த்து நின்றார். அருள்நெறித் திருக்கூட்டத்தின் மாநிலச் செயலர்; இருமொழிச் சொற்கொண்டல்.

நாத்திகம் விளைந்த ஈரோட்டில் எப்படி இந்த அளவு சைவ வளர்ச்சி என் வியக்கலாம்.

''நாத்திகத்திற்கே ஈரோடு சார்பு என்பர்
அறியாதார்
ஆத்திகத்திற்கும் அஃதே துணை.''

என்பார் எங்கள் ஆசிரியர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள், ஈரோட்டுச் செல்வத்துக்கு மூல பண்டாரமாய் (மறைந்தாலும்) இன்றளவும் ஞானம் வழங்குபவர் தொண்டர் சீர்பரவுவார் அமரர் ரா.ப. தங்கவேலனார் அவர்கள் ஆவார். அறுபது ஆண்டுகளுக்கு முன் அவர்கள் போட்ட வித்து (திருக்குறள் - திருமுறைக் கழகம், அதுவே பின்னர் அருள்நெறித் திருக்கூட்டமாக மாறியது, இன்று ஆல் போல் பரந்து ஈரோட்டில் சிவ நிழல் தந்து வருகின்றது. (இவரது பணி முதல் தொகுதியில் இடம் பெற்றுள்ளது)

பொன்னுசாமி முதலியார்

ஈரோட்டில் ஒரு அடியார் வரிசையே அமைந்து உள்ளது. 1915இல் தோன்றிய பொன்னுசாமி முதலியார் அவர்கள் சித்தாந்தம், திருமுறைகள், கந்தபுராணம் நடத்துவார்கள். மீனாட்சியம்மாள் போன்ற சிறந்த தொண்டர்களை உருவாக்கினார். ஈரநெஞ்சினர். வீட்டில் தேள் இருந்ததைக் கண்ட இவரது மகனார் அதனை அடித்துவிட்டார். ஐயா அவர்கள் மனம் வருந்தி மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

ஐயா அவர்கள் ஒரு சமயம் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்த பொழுது, வீக்கமுற்ற அவரது கால்களைக் கொசுக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. காலடியில் உட்கார்ந்திருந்த மீனாட்சியம்மாள் விசிறியால் அவற்றை விரட்டிக் கொண்டிருந்தார்கள். உடனே ஐயா ''ஏம்மா! அவற்றை விரட்டுகின்றாய்? நம்முடைய இரத்தம் விட்டால் வேறு எங்கே போய் குடிக்கும்?'' என்று தடுத்துவிட்டார். இவரது மனைவியார் நினைவிழந்த நிலையில் இருந்தார் பேச்சு வார்த்தையே இல்லை. மீனாட்சி அம்மாள் அவர்கள் காணச் சென்ற பொழுது அவர்களைத் தொட்டு ''மீனாட்சி வந்திருக்கிறேன்'' என்றார்கள். நினைவிழந்த நிலையிலும் கையெடுத்துக் கும்பிட்டார் ''அடியாரைத் தவிர எங்களுக்கு வேறு யார் நினைவு?'' என்றார் ஐயா! தொண்டர்தம் பெருமை சொல்லவும் கூடுமோ?

சண்முகம்

சண்முகம் (1919 - 1994) என்ற பெரியவர் உடல்நிலை சரியில்லாது இருந்தார். சில காலம் யாரும் சென்று பார்க்கவில்லை. அடியார்களைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கத்திலேயே உயிர் துறந்தார். நன்கு சித்தாந்தம் நடத்துவார்கள். குங்குலியக் கலய நாயனாரிடம் பெருத்த ஈடுபாடு கொண்டவர்.

மருத்துவமனை நடத்திய அமரர் டி.வி. மாணிக்கம் அவர்கள் (1925 - 1995) சித்தாந்தம் கற்றவர்கள்; திருமந்திரம் விளக்குவார்கள்; சித்தர் கோட்டம் அமைத்தவர்கள்.

வாழையடி வாழையாக இன்றளவும் இடையறவு படாது அடியவர் கூட்டம் மல்கி வரும் ஈரோடு சைவ உலகிற்கோர் கலங்கரை விளக்கம் ஆகும்.

11. கோபி



முப்பது ஆண்டுகளாகக் கோபியில் முனைவர் திரு. கா. அரங்கசாமி மெய்ம்மையாம் உழவைச் செய்து, விருப்பெனும் வித்தை வித்தி சைவப் பயிர் வளர்த்து வருகிறார். அந்தியூர் செல்லீசுவரர் திருக்கோயில் வார வழிபாட்டுக் குழுவின் சார்பில் மாதம் இரு சனிக்கிழமைகளில் சைவ சமய நூல்கள் பற்றி கா. அரங்கசாமி உரையாற்றி வருகிறார்.

வார வழிபாட்டுக்குழு வாரந்தோறும் வெள்ளியன்று திருமுறை

ஒதுதலை உறுப்பினர்கள் மேற்கொண்டு உள்ளனர். தலைவர் - டாக்டர் சங்கர்; செயலர் - எஸ். சபாஷ்.) பாலிக்காட்டில் (கோபி) சூரியனார் கோயில் ஆதீன சைவத்தமிழ்ப்புலவர் வகுப்பு மற்றும் சித்தாந்த வகுப்பு நடத்தி வருகிறார்.

திரு அரங்கசாமி திங்கள் தோறும் இரண்டாம் ஞாயிறன்று கோபி திருமுறை மன்றத்தில் சிவஞான போத வகுப்பு நடத்தி வருகிறார். கோபி முருகன் முத்தமிழ் மன்றத்தில் ஞாயிறு தோறும் சைவத் திருமுறைகளும் திங்கள்தோறும் இரண்டாம் ஞாயிறன்று கோபி திருமுறை மன்றத்தில் சிவஞான போத வகுப்பும் நடத்தி வருகிறார். கோபி முருகன் முத்தமிழ் மன்றத்தில் ஞாயிறு தோறும் சைவத் திருமுறைகளுக்கு விளக்கம் தருகிறார் (செயலர் - கா. அரங்கசாமி; பொருளர் - அ. சுப்பிரமணியம்) 2005ம் ஆண்டில் 4½ மாதம் ஐரோப்பா சுற்றுப்பயணம் செய்து சமய, இலக்கிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார். 16 நூல்கள் எழுதியுள்ளார். சைவ இதழ்களிலும் எழுதி வருகிறார். கல்வெட்டியலில் முனைவர் பட்டம் பெற்ற கா. அரங்கசாமி கோபி கலை, அறிவியல் கல்லூரியின் பொறுப்பு முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

(பிறந்த நாள் - 22.101937; பிறந்த ஊர் - வெள்ளியம் பாளையம், ஈரோடு அருகாமை, பெற்றோர் - காசிலிங்கம், பழனி அம்மாள்)

ஈரோடு மாவட்ட பிற சைவ அமைப்புகள்

1. சேக்கிழார் திருக்கூட்டம் - ஒவ்வொரு இரண்டாம் ஞாயிறு தோறும் சிவன் கோயிலில் (ஊர் ஊராக) உழவாரப் பணி செய்தல். திருமுறை விளக்கம் செய்தல்; அமைப்பாளர் திரு. அ. சுப்பிரமணியன்.

2. கலாஞான சங்கம், சென்னிமலை - 1918 முதல் சிவப்பணி செய்து வருகிறது. திருப்பணி செய்தல், தேவார பாடசாலை நடத்துதல் திருமுறை சித்தாந்த வகுப்பு நடத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. தலைவர் - புலவர் இராமசாமி; செயலர் - ந. நமசிவாயம்.

3. வாகீச சைவ சித்தாந்த சன்மார்க்க சபை, கணபதிபாளையம் - 83 ஆண்டுளாகத் திருமுறைப்பணி, சித்தாந்த விளக்கம் எனப் பணியாற்றி வருகிறது.

4. சேக்கிழார் திருப்பணி மன்றம், சிவகிரி - திருமுறைத் தொடர் சொற்பொழிவு, உழவாரப் பணி; நிறுவனர் - புலவர் ஆ. வேலுமணி.

5. சிவகுரு சித்தாந்த சபை, வாழைத் தோட்டம், சிவகிரி 64 ஆண்டுகளாக சிவப்பணி, புலவர் நடராசனின் சித்தாந்த வகுப்பு, மா.ரா. வேலுச்சாமியின் திருமுறை வகுப்புகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

6. மணிவாசக மன்றம், சென்னி மலை - திருமுறைப்பணி; பொறுப்பாளர் - நஞ்சப்ப முதலியார்.

7. சேக்கிழார் சிவநெறி வழிபாட்டுத் திருக்கூட்டம், பெருந்துறை - திருமுறை, உழவாரப் பணி; பொறுப்பாளர்கள் - புலவர் கு. வேலன் ஆ. சுப்பரமணியன்.

8. திருமுருக பக்த பேரவை, வெள்ளி திருப்பூர், பவானி வட்டம் - திருமுறை வழிபாடு; தலைவர் - பால சுப்பிரமணியன்.

9. பிரதோஷ வழிபாட்டுக்குழு, காங்கேயம் - திருமதி முத்துலட்சுமி அம்மாள்.

10. வேதநாயகி அம்மன் நற்பணி மன்றம், பெருந்துறை - சிவப்பணி.

11. பொம்மன்பட்டி திருவிளக்கு வழிபாட்டுக் குழு, பொம்மன்பட்டி, வெள்ளி திருப்பூர், பவானி வட்டம், - திருமுறை விளக்கம் : அமைப்பாளர் - எஸ். சுபாஸ்.

12. திருச்செங்கோடு

மாதத்திற்கு இரண்டு கூட்டங்களாக திருச்செங்கோட்டில் அருள் நெறி வார வழிபாட்டுத் திருக்கூட்டத்தின் சார்பில் இதுவரை 700 கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் மட்டுமே 300 சொற்பொழிவுகள் செய்திருக்கின்றார்கள். அப்பா! நினைக்கவே நெஞ்சு விம்முகிறது. குறைந்த பட்சம் 57 ஆண்டுகால நெடிய வரலாற்றில் 300 பேராவது சைவ சிந்தனையில் திளைத்திருக்க வேண்டும். மாதத்தில் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை ''திருவாசகம்'' நான்காவது ஞாயிற்றுக்கிழமை ''பெரிய புராணம்'' சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. மற்றபடி இவ்வார வழிபாட்டுக் கூட்டம் நடராஜர் அபிஷேகம் (5), நால்வர் குருபூஜை, ஐப்பசி அன்னாபிஷேகம், மார்கழி, திருவாதிரை (பத்து நாள் உற்சவம்), சிவராத்திரி, அறுபத்து மூவர் குருபூஜை, தலயாத்திரை முறையாகச் செய்கின்றனர். (தொடக்கம் : *1948*; தலைவர் டி.வி.ஏ. நடேசஞ் செட்டியார். செயலர் - என். ராஜேஸ்வரன், டி.எஸ் பரமசிவம்)

13. பவானி

1926 அல்லது *1927* இருக்கலாம் சென்னிமலையில் ஈசான சிவாசாரியார் அவர்களும் சித்தாந்தச் செம்மல் அ. ஞானசம்பந்தம் அவர்களும் ''கலா

திருமுறைக்கழக உறுப்பினர்கள்


திருமுறைக்கழகம்
தேவாரப்பாடசாலை

5 ஆம் ஆண்டு விழா. தேவாரப் பாடசாலை ஆசிரியர், மாணவ, மாணவியர்.
திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடும் குழுவினர்.

திருமுறைக்கழகத் தேவாரப் பாடசாலை ஆசிரியரும், மாணவ, மாணவிகளும்
ஆசிரியர் : மு. கண்ணப்பர்.

ஞான சங்கத்தைத் தொடங்கினார்கள். அரிய மெய்ஞ்ஞானக் கருத்துக்களை இச்சங்கம் வாரி வழங்கியது. தைப்பூச நாட்களில் இச்சங்க விழா வெகு சிப்பாக நடைபெறும். பவானி மு. கண்ணப்பரும் பிற அன்பர்களும் பேருந்திலாவது, நடந்தாவது சென்னிமலை சென்று அறிஞர்கள் சொற்பொழிவுகளைக் கேட்டுத் திரும்புவர்.

(i) திருமுறைக் கழகம்

பவானியிலும் இதுபோல சங்கம் ஒன்று தொடங்க வேண்டும் என்ற எண்ணம் கண்ணப்பர் அவர்களுக்கும் மற்றும் உள்ள சைவ அன்பர்களுக்கும் முகிழ்த்தது. பவானி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் சிவநெறிச் செல்வர் பெரும்புலவர் கு. குமாரசாமிப் பிள்ளையவர்களுடன் கண்ணப்பருக்குத் தொடர்பு ஏற்பட்டது. சிவநெறிச் செல்வர் அவர்கள் ''திருமுறைக் கழகம்'' என்று பெயர் சூட்டி 1941இல் திருமுறைக் கழகம் தொடங்கியது. முதல் இரண்டு ஆண்டுகளும் குமாரசாமிப் பிள்ளையவர்களே தலைமை தாங்கி நடத்தினார்கள்.

1955இல் கன்னிப்பட்டி சி.கே. குமாரசாமிக்கவுண்டர் தலைவரான பின் திருமுறைக் கழகத் தேவாரப்பாடசாலைக்காகத் திருக்கோயில் வளாகத்துள் ஒரு கட்டிடம் கட்டித் தந்து பேருதவி புரிந்துள்ளார். பவானியில் வாழ்ந்து வந்த குருசாமி ஓதுவார் என்பவரிடம் கண்ணப்பர் தேவாரப் பண்ணிசை பயின்றார். கண்ணப்பரே தேவாரப் பாடசாலையின் ஆசிரியராய்ப் பற்பல மாணவ மாணவியர்க்குத் தேவாரம் கற்பித்தார். ஒவ்வோர் ஆண்டும் மார்ச்சுத்திங்களில் பாடசாலையில் பயிலும் மாணாக்கர் ஊர்வலமாகக் கூட்டு வழிபாடு செய்து பஜனை பாடி வருவார்கள். இவ்வழிபாட்டில் கண்ணப்பரும் இணைந்து தேவாரப் பாடல்களைப் பாடி வருவார். அப்பாடல்கள் கேட்போரின் செவிகளில் தேனாய் இனித்தன. கூட்டு வழிபாட்டில் ஏனையோரும் சேரத் தொடங்கினர்.



தமிழ்ப் பேரறிஞர் பலரையும் கண்ணப்பர் திருமுறைக் கழகத்திற்கு அழைத்து வந்து சைவச் சொற்பெருக்காற்றச் செய்தார். ஒவ்வோராண்டும் தம் குருவான வாரியார் சுவாமிகளைப் பூரண கும்ப மரியாதை செய்து அழகிய தேரில் ஊர்வலமாக அழைத்து வருவார். திருமுறைக் கழக விழா மேடையில் தம் குருநாதர் அமர்ந்து சொற்பெருக்காற்றுவதற்காகவே ஒரு பட்டு மெத்தை தைத்து வைத்திருந்தார். அந்த மெத்தையை அவரே மேடைக்கு எடுத்து வந்து விரிப்பார். நிகழ்ச்சி முடிவுற்றதும் அவரே அதனைச் சுருட்டி வைப்பார். விழா முடிந்ததும் குருநாதர் அவர்களை அன்புக் கண்ணீர் ததும்ப வழியனுப்பி வைப்பார்.

இசை மேதைகளை அழைத்து வந்து இசை மழை பொழியச் செய்தார். 1966இல் நடைபெற்ற வெள்ளிவிழா பெருந்திருவிழாவாக 25 நாட்கள் நடைபெற்றது.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் தொடர் சொற்பொழிவும், பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் திருமதி எம்.எஸ் சுப்புலட்சுமியின் இசையரங்கும் நடை பெற்றன. சைவ சித்தாந்த சரபங்கள், சித்தாந்தச் சிம்மங்கள் அருள் மொழி அரசுகள், செஞ்சொல் வேந்தர்கள், இன்னிசைக் குயில்கள், பண்ணிசை மணிகள், செந்தமிழ்க் கடல்கள், முத்தமிழ் வித்தகர்கள் இருமொழி மும்மொழிச் சொற்கொண்டல்கள் அலங்கரித்த மேடையே திருமுறைக் கழக மேடை.

1972க்குப்பின் சிறு தொய்வு ஏற்பட்டது. அங்கமுத்துப்பிள்ளை செயலாளராகப் பொறுப்பேற்று மதுரை சோமு அவர்களின் இசை நிகழ்ச்சி மற்றும் பல சிறப்பு சொற்பொழிவுகள் நடத்தினார்.

1978-இல் திரு. பி.ஏ. ஆறுமுகம் அவர்கள் துணைச்செயலராகப் பொறுப்பேற்று வார வழிபாட்டுக் கூட்டங்களை நடத்தவும், பெரியபுராணச் சொற்பொழிவு நிக்ழ்த்தவும், தேவாரப் பாடசாலையில் தேவாரம் பயிற்றுவிக்கவும் செய்தார்.

ஆண்டுதோறும் பத்து நாட்கள் மிகச் சிறப்பாக ஆண்டு விழா நடைபெறுகின்றது. 10.1.2005 முதல் 19.1.2005 வரை நடந்த 64ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கூனம்பட்டி ஆதீனம், அ. அறிவொளி, சரசுவதி ராமநாதன், சோ. சத்தியசீலன் ஆகியோர் பங்கு பெற்ற கருத்தரங்கு, வழக்காடு மன்றம், இசையரங்கம், திருமுறை இசை யரங்கம், நாட்டிய அரங்கம், நாதசுர அரங்கம் என விரிவாக நடைபெற்றன.

அறுபத்து நான்கு ஆண்டுகளாக அந்தப் பழைய வேகம் குறையாமல் இன்றளவும் திருமுறைக்கழகம் செம்மாந்து நடைபோட்டு வருகிறது.

(தோற்றம் - 1941; இன்றைய தலைவர் - வி.என்.சி. குமார்; செயலர் - சு. சேனாபதி)

(ii) மு. கண்ணப்பர்

திரு. கண்ணப்பர் அவர்கள் விசாகக் குழு என ஏற்படுத்தி ஒவ்வொரு விசாகத்தன்றும் பழனி சென்று வழிபட்டு வர ஏற்பாடு செய்தார். இந்தியாவில் பல புண்ணிய தலங்களுக்கும் பக்தர்களை அழைத்துச் சென்று வந்துள்ளார். எத்தலத்திற்குச் சென்றாலும் அத் தலத்தின் வரலாறு, பெருமை, வழிபடும் முறை ஆகியவற்றை அவர் தம் குழுவினருக்கு விளக்கிக் கூறத் தவறியதில்லை. அரிய செய்திகளை நேரில் சென்று அறிவதற்காக கண்ணப்பருடன் பலரும் தலப்பயணம் செல்வார்கள்.

கண்ணப்பர் இனிய குரல்வலம் படைத்தவர். தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களுக்கும் சென்று இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தி வருவார். திருமுறைக் கழகத்தில் கண்ணப்பர் நன்றி கூறும்பொழுது நகைச்சுவை மிகுந்திருக்கும். இன்னும் சிறிது நேரம் பேச மாட்டாரா என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருப்பர்.

பணிவுடைமை, இன்சொல் இரண்டினையும் அணியாகப்பூண்டு முகமலர்ச்சியும் அகநெகிழ்வும் கொண்டு அனைவரிடமும் அன்பு செலுத்திப் பழகி உபசரிக்கும் பாங்கு அவருக்கே உரியது. சமய வரம்பு உயர்ந்து தன்னலம் கருதாத சேவை, பிறர் சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறம் காக்கும் பண்பு, நாவார நம்பனையே பாடும் மனம், சைவம் தழைக்கப் பாடுபடும் உள்ளம் ஆகியவற்றின் இருப்பிடமாக இருந்தவர் கண்ணப்பர். நெஞ்சம் நெக்குருகத் திருமுறைகளைப் பண்ணிசையுடன் பாடுவார். பாடும்

பணியே பணியாம் அருள்வாய் என்று வேண்டுவார். அவர் ஒரு நற்பண்புக் குன்றம். கணீரென்ற குரல்; கரிய நிறமேனி; தூய வெண்மையான கதராடை.

கழக ஆண்டு விழாக்களை ஒழுங்கும் அழகும் உடைய பெரு விழாக்களாகத் திறம்பட நடத்துவதில் கண்ணப்பர் மிக வல்லவர். விருந்தோம்பலும், கலந்து கொள்ளும் பேரன்பர்களிடத்துக் காட்டும் பேரன்பும் என்றும் நினைவில் நிற்கும்.

ஈசான சிவாசாரியாரிடம் தீட்சை பெற்றவர். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளைத் தம் ஞான குருவாகவும், வாழ்வின் வழிகாட்டியாகவும் கொண்டு வாழ்ந்து வந்தார்.

பவானி கூடுதுறையில் கண்ணப்பர் நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. பவானி கூடுதுறையில் மட்டுமா? அன்பர்கள் நெஞ்சம் கூடும் துறையிலும் தான்!

(பிறந்த ஆண்டு - 11.3.1921; மறைவு 11.1.1989; பிறந்த ஊர் - பவானி; பெற்றோர் - முத்துசாமி, தனம்மாள்.)

(iii) சிவனடியார் திருக்கூட்டம்

எண்பதுகளில் ஒரு நாள்...

பவானி சங்கமேசுவரர் திருக்கோயிலில் பள்ளி செல்லும் பிள்ளைகள் பாடம் படித்துக் கொண்டிருந்தார்கள் வழிபாட்டுக்கு வந்த மேட்டூர் சித்தேஸ்வரன், ''இங்கே உட்கார்ந்து பாடம் படிக்கிறீர்களே? சுவாமி தரிசனம் செய்யக்கூடாதா?'' என்று கேட்டார். பிள்ளைகள் எழுந்து உடன் வந்து வழிபாடு செய்தனர். அதன் பிறகு தொடர்ந்து செய்து வரலாயினர். முதலில் அர்த்தசாம வழிபாட்டுக்கு வர ஆரம்பித்தனர். அடுத்து சிவபுராணம் பாடத் தொடங்கினர், கல்லூரி மாணவர்களும் சேர்ந்தனர். வழிபாடு, அபிடேகம், நாமாவளி என விரிந்தது. சுமார் முப்பது மாணவர்கள் மாதந்தோறும் ஒவ்வொரு வரும் பத்து ரூபாய் தந்தனர். அபிடேகத்திற்கு ஏற்பாடு ஆயிற்று. அப்பொழுது பெயர் ஏதும் சூட்டவில்லை.

கோயில் நிர்வாக அதிகாரி இதனை ஒரு அமைப்பாகச் செய்யலாம் என்று நெறிப்படுத்தி 1989-இல் ''சிவனடியார் திருக்கூட்டம்'' என்று பெயரும் சூட்டினார். ஓதுவாமூர்த்திகள் பெரிய புராணம், தேவாரம் சொல்லித் தருவது என 1996 வரை வகுப்பு போல நடந்து வந்தது. கட்டணம் ஏதும் இல்லை. முதலில் இளையவர்கள் தான் இருந்தனர், பிறகு பெரியவர்களும் வர ஆரம்பித்தனர்.

1995-இல் கோவை குமரலிங்கம் வந்தார். தீக்கையின் பெருமையைப் பற்றிச் சொன்னார். 10.12.1995இல் ந.ரா.ஆடலரசு 50 பேருக்குத் தீக்கை கொடுத்தார். முதல் ஞாயிறுகளில் திருவாசகம் முற்றோதல், இரண்டாவது ஞாயிறுகளில் சைவ சித்தாந்த வகுப்பு (வையாபுரியார்) மூன்றாவது ஞாயிறுகளில் உழவாரப்பணி, நாளும் அர்த்தசாம வழிபாடு என முறைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

மூன்று ஆண்டுகளாக வைகாசி மூலத்தன்று வழிபாடு, வீதியுலா, சொற்பொழிவு, திருமுறை இன்னிசை என்று சிறப்பாக அறுபத்து மூன்று நாயன்மார்கள் விழா நடத்தி வருகின்றனர்.

சிறுசிறு வெளியீடுகளும் வெளியிடுகின்றனர். பன்னிரு திருமுறைகளின் தொகுப்பாக ''கரு முதல் திரு வரை'' என வெளியிட்டுள்ளனர். இரண்டே ஆண்டுகளில் 4000 படிகள் வீற்றிருக்

கின்றன. அட்டையில் திருக்கயிலாயம் முன் ரிஷபாரூடராக உமையம்மையுடன் பெருமான் பிரதோஷக்காட்சி அளிக்கிறார். மணியம் செல்வனின் அழகோவியம். ''நான் வரைந்த ஓவியங்களில் எனக்குப் பிடித்தது இந்த ஓவியம்'' என்கிறார் மணியம் செல்வன். அந்த அட்டையையே பார்த்துக் கொண்டிருக்கலாம். அப்படி ஒரு அழகு!

(iv) அ. தியாகராஜன்

இத்திருக்கூட்டத்தின் தலைவர் திரு. அ. தியாகராஜன் அவர்கள் ஆவார். கோவை, பாப்பம்பட்டி, ஈரோடு ஆகிய ஊர்களில் பெரியபுராணம் நடத்துகிறார். சைவசித்தாந்த வகுப்பும் நடத்துகிறார். கோயில் பக்கத்திலேயே வீடும் இருக்கிறது. பெரிய கூடாரம் போல உள்ளது. தனி அறைகள் ஏதும் இல்லை. மணியம் செல்வனின் பிரதோஷ நாயகர் ஓவியம் பெரிதாக நம்மை வரவேற்கிறது. அங்கே அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். புத்தகங்கள் ஒரு புறம், கூடாரத்தின் தெற்குப் புறத்தில் மனைவியார் சமைத்தலும், பிறபணிகள் செய்தலுமாக இருக்கிறார்.

சமயச்சிந்தனை தான் நோக்கமே ஒழிய சமையல் சிந்தனையல்ல.

சைவனுக்குச் சால் நோக்கமே ஒழிய சமையல் சிந்தனையல்ல. சைவனுக்குச் சாண் இலை என்பார்கள். சைவத்துக்கும் அஃதே! இடம் சிறதாயின் என்? பெரிதாயின என்? பொருள் இருந்தால் என்? இல்லையென்றால் என்? திருமுறைகளைப் பரப்ப மனம் பெரிதாக இருந்தால் போதும். இதுவே கொங்குமண்டலம் நமக்குக் கற்றுத்தரும் பாடம்!

(பிறந்த ஆண்டு - 25.7.1970; பிறந்த ஊர் - திருநணா (பவானி). பெற்றோர் - கே. அப்பாவு, கண்ணம்மாள்)

தவத்திரு சிவக்கவிமணி தவத்திருமடம்...!

இந்தப் பலகையை பார்த்தவுடனே நமக்கு மெய்யெல்லாம் சிலிர்க்கிறது. சிவகவிமணி பெயரில் ஒரு திருமடமா? இதுபோல அந்தந்த பகுதியில் உள்ளவர்கள் தங்கள் பகுதியில் வாழ்ந்த சைவப் பெரியார்களை நினைவு கூர்ந்தால் எவ்வாறு இருக்கும்? சிவக்கவிமணியவர்களைத் தனது ஞான குருவாகக் கொண்டு சுரேஷ் என்பவர் தம் இல்லத்தையே திருமடமாக்கி பெரியபுராணம் வகுப்பு நடத்தி உணவும் படைக்கிறார்.

உழவாரத் தொண்டுஇல்லாத திருக்கோயிலா? சி. அர்ஜுன் பொறுப்பேற்று 70 உறுப்பினர்கள் துணையுடன் உழவாரப்பணி செய்கிறார்.

நாளும் மலர் பறித்து மாலையாகத் தொடுத்துக் கொண்டு வருகிறார். மூர்த்தி தூபம் போடுகிறார். சேகர் 18.6.1971இல் தொடங்கப்பட்ட சங்கமேஸ்வரர் அருட்பணிமன்றம் உழவாரப் பணி, மார்கழி மாத பஜனைகள் திருக்கோயில் திருப்பணிகள், சைவத்தல பாதயாத்திரை, வாழ்வியல் சடங்குகள் திருக்குட நன் நீராட்டு விழாக்களை தெய்வத் தமிழ் திருமுறை நெறிப்படி செய்தல் எனப்பணி ஆற்றுகிறது. செயல் - டாக்டர் ஏ.பி. இளங்கோவன்.

14. திருப்பூர்

அமர பாய், வீட்டுக்குழந்தைகள், பெரியோர்களுக்கு இனிப்பு பொட்டலங்கள் ... ...

படி நிறைய புத்தம் புது காசுகள் ... ... (திருவீழிமிழலையில் அப்பரும், சம்பந்தரும் படிக்காசு பெற்றதை நினைவூட்ட) புத்தம்புது வேட்டி,



சிவன்மலை ஓதுவார் சந்திரசேகரனுக்கு
சொக்கலிங்கம் ஐயா படிக்காசுகள் வழங்கல்

துண்டு, வீட்டுப்பெண்களுக்குப் புடவைகள்.

ரவிக்கை துணி ... ... (அலகு மலைகுறவஞ்சி அரங்கேற்றிய மன்னன் புலவர்க்கு பொருளும் ஆடையும் வழங்கியதை நினைவூட்ட)

உணவுத் தட்டுகள் ... ...

(அப்பருக்குப் பொதி சோறு வழங்கியதை நினைவூட்ட)

புதிய விளக்குகள் ... ...

(நமிநந்தியடிகள், கணம்புல்லர், கலியநாயனார் ஆகியோரின் விளக்கு ஏற்றும் தொண்டினை நினைவூட்ட)

டிபன்பாக்ஸ், அடுக்கு ... ...

(திருக்கருகாவூரில் சுந்தரருக்குப் பொதி சோறு அளித்தல்)

தூக்கு, பாத்திரங்கள் ... ...

(திருக்கச்சூரில் இறைவன் ஊரெல்லாம் இரந்து சுந்தரருக்கு உணவு அளித்தல்)

சுவர்க்கடிகாரம் ... ...

குடை ... ...

(சம்பந்தருக்கு முத்துப்பந்தல் அளித்தல்)

படுக்கை விரிப்பு, போர்வை ... ...

(பேகன் மயிலுக்குப் போர்வை அளித்தல்)

பாராட்டுப்பத்திரம் அளித்தல் ... ...

புத்தகங்கள், உருத்திராக்கம், திருநீற்றுப் பிரசாதம் ... ... எவர்சில்வர் குடம் ... ...

(அப்பூதி அடிகளார் திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்)



ஓதுவார்கள் பரிசுப்பொருட்களுடன்

பூசைத் தட்டு ... ...

(திருமால் இறைவனைப் பூசித்துக் கண் பெற்றல்)

பனியன் உள்ளாடைகள் கொண்ட கட்டு

(சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரருக்கு ஆடை அணிகலன்கள் வழங்கல்) ... ...

குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் ... ...

பயணச் செலவுக்குக் காசு ... ...

இவற்றை எடுத்துச் செல்ல பெரிய பை ... ...

(குண்டையூர் கிழார் மூலம் பெற்ற நெல்லினை திருவாரூருக்குப் பூதங்கள் மூலம் சுந்தரர் எடுத்துச் செல்லல்)

காலை எழுந்ததும் விழிக்கக் கயிலைநாதன் முருகன், படம், காலை காப்பி வைக்க அடுக்கு; குளித்து உடை மாற்றுகையில் துணிமணிகள்; குழந்தைகள், வீட்டுப் பெண்டிர், பெரியவர்களுக்கு ஆடைகள்; பூஜையில் உட்கார பாய், விளக்கு ஏற்ற விளக்கு, பூஜை செய்ய தட்டு, படிக்க பூஜை முறை புத்தகங்கள்; போர்த்திக் கொள்ளத் துண்டு; கடைக்குச் செல்லப் பைகள்; வெயிலுக்குக் குடைகள்; சமையல் செய்ய பொங்கல் பானை; தூக்கு; நேரமே பணிக்குச் செல்ல கடிகாரம்; செலவு செய்ய புதுக்காசுகள், பணம்; மாலை அமர்ந்து படிக்க புத்தங்கள், இரவு உறங்க படுக்கை விரிப்புகள் பார்த்து நினைத்து மகிழ வாழ்த்து மடல்.

என ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு செய்கையிலும் தங்கள் அமைப்பினையும் தொண்டரகளையும் ஊரையும் நினைவூட்டும் வண்ணம் வாரி வழங்குகின்றனர் ஒரு திருக் கூட்டத்தார் ... ...

திருமுறை வாணர்களான ஓதுவார்களுக்கு 'வேற்றாகி விண்ணாகி நின்று' என்று கூட்டத்தார் அனைவரும் பூக்களால் அர்ச்சனை செய்யும் காட்சி.

அப்படி வாரி வழங்குபவர்கள் யார்? எவர்? எந்த ஊர்? யாருக்கு?

அமைப்பு : ''கிருத்திகை வழி பாட்டுக்குழு''

ஊர் : அலகுமலை, திருப்பூர்

பெறுவோர் : ஓதுவா முர்த்திகள்

இத்திருப்பணி 1997இல் தொடங்கி இதுவரை எட்டு ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்கின்றன. இதுவரை 170 ஓதுவார்கள் கலந்து கொண்டு பயன் பெற்றிருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டு. 26 ஓதுவாமூர்த்திகள்; மூன்றாம் ஆண்டு 30 பேர்; 4ம் ஆண்டு - 30; 5ம் ஆண்டு - 32; 7ம் ஆண்டு 15; 8வது ஆண்டு ஒரு மாற்றாக 4 பெண் ஓதுவா மூர்த்திகளுக்கு இச்சிறப்பு செய்திருக் கின்றனர்.

இப்பணியினைச் செய்ய அவர்களால் எப்படி முடிகிறது, இவ்வழி பாட்டுக்குழு உறுப்பினர்களில் பலர் உள்ளாடை தயாரிப்பவர்கள் ஆவர். விழா ஏற்பாடு செய்ய இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே சொல்லி வருவார்கள். ஒவ்வொருவரும் ஒரு டஜன் அல்லது அதற்கும் கூடுதலாக எடுத்து வைத்துக் கொள்வார்கள். விழா தொடங்க 4, 5 நாட்கள் இருக்கும் பொழுது அவற்றையெல்லாம் ஓதுவார்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டுக்கட்டாகக் கட்டி வைத்துவிடுவார்கள்.

இவற்றில் டி-ஷர்ட்டுகள், ஆண் பெண் உள்ளாடைகள், பனியன்கள், வெளி நாடுகளுக்கு அனுப்பியதில் மீதமுள்ள உடைகள், போன்றவை அடங்கும் விலை உயர்ந்த ஆடைகளும் கிடைக்கும். பின்பு பிற வியாபார நிறுவனங்கள், துணிக்கடை, பாத்திரக் கடை ஆகிய நிறுவனங்களின் அதிபர்களிடம் எடுத்துரைத்து அவர்கள் தரும்

பொருட்களைச் சேகரிப்பார்கள். அனைத்துப் பொருட்களையும் கட்டு கட்டாகக் கட்டி ஓதுவார்களின் பெயர்களைப் பொறித்து முதல் நாளே அலகுமலைக்குக் கொண்டு சேர்த்து விடுவார்கள்.

பிற ஊர்களில் ஓதுவார்களுக்கு வேட்டி துண்டும், ஒரு தொகையும் தான் தருவார்கள். பணம் போக வர பஸ்செலவுக்கே சரியாகிவிடும். அவர்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு எதுவும் போய்ச் சேராது. ஓதுவார்களின் வீட்டில் இருப்பவர்களும் பயன் அடைய வேண்டும் என்று குழுவின் செயலர் குமார் அவர்களின் துணைவியார் விரும்பினார். என்ன ஓர் உயரிய சிந்தனை! விழா முடிந்ததும் ஒவ்வொருவர்க்கும் பரிசுப் பொருட்களே மூன்று மூட்டைகளுக்கு வந்துவிடும். இவற்றை எடுத்துச் செல்லவே தனி செலவு செய்ய வேண்டி வரும். ஓதுவாமூர்த்திகளை அவர்களுடைய மூட்டைகளுடன் சேர்த்து அவரவர்க்குரிய பேருந்துகளில் ஏற்றி விடுகிறார்கள். அளப்பரிய பணி அல்லவா இது!

சங்ககால வள்ளல் தன்னை நாடி வந்தவர்களின் வேர்வையுற்ற ஆடைகளை நீக்கி, நுண்மையான, பூத்தொழில் முற்றுப்பெற்ற பாம்பினது தோலை ஒத்த ஆடையை வழங்குவாராம். ''வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த துன்னல் சிதார் துவர நீக்கி நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து அரவு உரியன்ன அறுவை நல்கி'' (துன்னல் - தையல்; சிதாஅர் - பீறற்றுணி; துவர - முற்றாக. நுண்மையான, பூத்தொழில் முற்றுப் பெற்ற பாம்பினது தோலை அரவுரி - பாம்புரித்த தோல்; அறுவை - ஆடை)

பொருநராற்றுப்படை

குழுச் செயலர் திரு. குமார் ஓதுவாமூர்த்திகளுக்கு எழுதும் கடிதங்களையே தனி நூலாகப் போடலாம். ஒரு செய்தி கூட விடாமல் கடிதங்களில் எழுதி அவர்கள் ஒப்புதலிலிருந்து, அவர்கள் வருவதுவரை ஒவ்வொரு செயலையும் கவனத்துடன் செய்கிறார். ஓதுவாமூர்த்திகளும் அவர்கள் குடும்பத்தினரும் உள்ளும் புறமும் நிறைந்து வாழ்த்துகின்றனர்.

''எனது குடும்பம் வறுமையில் செம்மையான குடும்பம். தங்களால் அன்பர்கள் அன்று பரிசு, பாத்திரங்கள், ஆடைகள், இனிப்பும் கிடைத்து எங்கள் இல்லத்தில் மகிழ்ச்சி அடைந்தோம். திருமுறைவாணர்களுக்குப் பணமும் போக்குவரத்துச் செலவும் கொடுத்தமைக்கு நன்றி'' என்கிறார் குன்றக்குடி சம்பந்த மூர்த்தி ஓதுவார். ''அடியேன் 35 ஆண்டுகள் திருமுறைப்பணியில் இம்மாதிரியான அழைப்பு, உபசரிப்பு, வெகுமதிகள். பெற்றதும் இல்லை; கண்டதும் இல்லை; என்கிறார் வைத்தீஸ்வரன் கோயில் ஓதுவார் டி.என். கணேச தேசிகர் ''எவ்வளவோ இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். இதுபோல கண்டதில்லை'' என்கிறார். உறையூர் சுந்தரவடிவேல் ஓதுவார். ''வண்டி வைத்து அழைத்துச் சென்றதும் வண்டி வைத்து அனுப்பியதும் பெருமையாக இருந்தது'' என்கிறார். தேவூர் சந்திரகாச தேசிகர் ''எங்களுக்கு ஒவ்வொரு அன்பர்களிடமும் பரிசுப் பொருட்களை வாங்கித் தந்த விவரங்களைக் கேட்கும் பொழுது கண்ணீர் வந்தது'' என்கிறார். நெல்லை ஓதுவார். ''இவ்விழாவில் ஒரு சிறப்பு தங்கள் வாழ்க்கைத் துணைவியார் மலர்ந்த முகத்துடன் தங்களுடன் ஒத்துழைத்தது'' என்கிறார் நேமம் ரத்தின சபாபதி தேசிகர்.

இத்துணை பெருமக்களையும் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துபவர் கிருத்திகை வழி



குமார் - பானுமதி

வெங்கட்டராஜூ - துணைவியார்

பாட்டுக்குழு செயலர் திரு. எஸ். குமார். 25.8.1945ல் பிறந்த இவர் பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். திருப்பூரில் வாழும் இவருடைய துணைவியார் பானுமதி ஆவார். 1968இல் அலகு மலையில் கிருத்திகை வழிபாட்டுக் குழு அமைத்து உழவாரப் பணி, இறைபணி செய்து வருகிறார். அலகுமலை சிவாலயத் திருப்பணி, கனககிரி குன்றில் உள்ள திருக்கோயில் திருப்பணிகள் நடக்க உதவியுள்ளார். எட்டு ஆண்டுகளாக அலகுமலையில் திருமுறை விழா எடுத்து ஓதுவார்களுக்கு அருந்தொண்டு ஆற்றி வருகிறார். கிருத்திகை வழிபாட்டுக்குழு செயலர் ஆவார்.

15. மேட்டூர்

1967... மேட்டூர் அணைக்கட்டு. காவிரியின் கிழக்குதரையில் இருந்த மீனாட்சியம்மன் கோயிலில் இருந்த திருமூர்த்தங்கள்... மேட்டூர் முருகன் கோயிலில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. அர. பாக்யநாதன் அர. சந்திரன், உ. இரத்தினம், கி.இராமசுந்தரம், வெ. வெங்கட்டராஜூ, க. சந்தானம், வெ. விஜயமணி ஆகிய இளைஞர்கள் (விஜயமணி நீங்கலாக) சுமார் இருபத்து மூன்று ஆண்டுக்காலம் திருமூர்த்தங்களின் திருமேனி தீண்டி வழி பட்டு வந்தனர். இவர்களே மேட்டூரில் சிவனடியார்கள் என்று முதன் முதலில் அழைக்கப்பட்ட ஆதி அடியார்கள். அதன் பின்னர் சந்நிதி கட்டப்பட்டு 1990 இல் குடமுழுக்கு செய்யப்பெற்றது.

அவர்களில் ஒருவரே மேட்டூர் சிவனடியார் திருக்கூட்டத்தின் இன்றைய தலைவர் கயிலைமணி வெ. வெங்கட்ராஜு அவர்கள் (வயது 59). அவரது துணைவியார் கயிலைமணி வெ. விஜயமணி (வயது 58) செயலாளர், தினந்தோறும் ஆலயத்தில் கூட்டு வழிபாடு, சமயச்சொற்பொழிவு, உழவாரப்பணி, திருவாசக முற்றோதுதல், நாயன்மார் குருபூஜை, பெரியபுராணம் ஓதுதல், சிவத்தல யாத்திரை, ஆலயத்தில் இறைவனின் திரு ஆடைகள் துவைத்தல், சித்ரா பௌர்ணமியில் மீனாட்சி அம்மனுக்குப் புஷ்பாஞ்சலி, கார்த்திகை தீபத்திற்கு திருவண்ணா மலைக்கு குறைந்த செலவில் ஏழைகள், வயதானவர்கள் உட்பட பக்தர்களை 4 பேருந்துகளில் அழைத்துச் செல்லுதல், சிவராத்திரியன்று சிறப்பு வழிபாடு, ஆகிய பணிகளைத் திருக் கூட்டம் செய்கிறது.

16. சேலம்

(i) சேலம் சேக்கிழார்

பள்ளியிலோ, கல்லூரியிலோ முறையாகப் பயிலாதவர். மறைமலையடிகளோடு நெருக்கமான தொடர்பு ஏற்பட்ட காரணத்தால் சைவ சித்தாந்தத்தை நன்கு கற்றுத் தெளிந்தார். இளைஞராக இருந்த காலம் முதற்கொண்டு பெரியவர்கள் கொடுக்கும் சிறு தொகைகளை காபி குடிப்பதோ, ஓட்டல்களுக்குச் சென்று சிற்றுண்டி சாப்பிடுவதோ அல்லாமல் தவிர்த்து அவற்றைக் கொண்டு நிறைய புத்தகங்கள் வாங்கிப் படித்தார். அவர் இல்லத்தில் 2000க்கு மேற்பட்ட புத்தகங்கள் கொண்ட ஒரு சிறு நூலகமே இருக்கிறது. சிறந்த சொற்பொழிவாளராக மாறினார். சேலத்தில் மூன்று முறை பெரியபுராண தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

இவர்களுக்குப் பெரியபுராணத்தில் இருந்த ஆர்வம் கண்டு திருமுருக கிருபானந்தவாரியார் 1974ல் ‘‘சேலம் சேக்கிழார்’’ என்ற பட்டம் வழங்கியுள்ளார். பதினோரு நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இன்னும் ஐந்து நூல்கள் வெளிவரவேண்டும். திருமந்திரம் பாயிரத்திற்கு உரை எழுதியுள்ளார். தொடர்ந்து முதல் தந்திரம், இரண்டாம் தந்திரம் என்று வெளியிட இருந்தார்.

சேலம் சேக்கிழார், தான் தமிழ் இலக்கிய சைவ நூல்களைக் கற்று உணர்ந்தது மட்டுமல்லாமல் மற்றவர்களும் கற்றுணர பல அமைப்புகளில் உறுப்பினராக இருந்து செயல்பட்டிருக்கிறார். 1929-இல் துவங்கப்பட்ட பைந்தமிழ்க் கழகத்தில் உறுப்பினராகி தானும் திருக்குறள் கற்று, மற்றவர்களும் கற்கச் செய்து திருக்குறள் நெறி பரப்பினார். 1930ல் மூன்று நாள் திருக்குறள் மாநாடு நடத்தினார். 1911ல் துவங்கப்பட்டுச் செயல்பாடற்று நின்று போயிருந்த செந்தமிழ்ச் சங்கத்தை 1943ல் தன் பொறுப்பில் மேற்கொண்டு சிறப்பாக நடத்தினார்.1944ல் தவத்திரு மறைமலை அடிகளின் தலைமையில் சேலத்தில் மாநாடு ஒன்றை நடத்தினார். சேலம் செவ்வாய்பேட்டை தேவாங்கபுரத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த திருஞானசம்பந்தர் திருச்சபையில் 28 ஆண்டுகள் செயலராக இருந்து சிறந்த தமிழறிஞர்களையும் திருமடத்துத் தலைவர்களையும் அழைத்துப் பேசச் செய்து விழாக்கள் நடத்தினார்.

ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் தாய்மார்கள் ஒன்று கூடி வாரவழிபாடு செய்யவும் சொற்பொழிவுகள் நடத்தவும் ஏற்பாடு செய்தார். பெரியபுராணச் சொற்பொழிவு இருமுறை நடத்தியிருக்கிறார். இதற்காக ஸ்ரீ சௌடேஸ்வரி அம்மன் மாதர் சங்கம் என்ற அமைப்பையே உருவாக்கினார். ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை தானே முன்னின்று திருத்தல பயணங்களை மேற்கொண்டு மாதர் சங்க உறுப்பினர்களையும் அழைத்துச் சென்று அதன் மூலம் பெருநிதியும் நிரந்தரமாக உருவாக்கித் திருக்கோயில் பணிகளுக்கும் சமுகக் கல்விப் பணிகளுக்கும் பயன்படுமாறு செய்தார் செவ்வாய்ப் பேட்டையில் அமைந்திருக்கும் ஸ்ரீ காரைக்கால் அம்மையார் மாதர் சங்கத்தில் ஐந்து ஆண்டுகள் பெரிய புராண உரை நிகழ்த்தி அவர்களை பெரிய புராணத்தில் ஈடுபாடுகொள்ள வைத்தார்.

இருபதாம் நூற்றாண்டு சேலம் சைவ வரலாறு சேலம் சேக்கிழார் அப்பாய் செட்டியார் அவர்களின் வரலாறே என்பது நூற்றுக்கு நூறு விழுக்காடு பொருந்தும். ஏன் தெரியுமா? 1903-இல் 1903ல் பிறந்த அவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். அனைத்து

அமைப்புகளின் வளர்ச்சியிலும் முன் நின்றிருக்கிறார். 2004ல் அவர்களைச் சந்தித்தேன். 2005ல் அவர்கள் இல்லை.

(பிறந்த ஆண்டு *15.11.1903*, பெற்றோர் - அப்பாசாமி செட்டியார் கௌரியம்மாள்)

2. தே.ம. பூதலிங்கம்



அட்டையிலே திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதான மவர்களின் அழகிய வண்ணப்படம்.

❖ இந்நூல் திருமடத்து வரலாறோ?

உள்ளே திருநந்திதேவர், வாரியார் சுவாமிகளின் சிந்தனைகள், சிவலிங்கச் சிறப்பு, சிவஞான சித்தியார், தமிழ் ஞானசம்பந்தர், மாமரம் பற்றிய மகத்தான செய்திகள், கந்த சஷ்டி விரதம், விதிவிலக்கு என 55வகை செய்திகள்.

❖ இது ஒரு சைவ விளக்க நூலோ?

ஐம்பது பக்கங்களில் விளக்கம் நின்று போகிறதே! ஒவ்வொரு பக்கத்தின் உச்சியிலும் தேவாரம், திருவருட் பயன் என திருமுறைகள் சாத்திரங்கள் என மேற்கோள்கள் உள்ளன.

❖ இது ஒரு தோத்திர சாத்திரத் திரட்டோ?

ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் நல்ல கருத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றனவே?

❖ சிந்தனைத் துளியோ?

நடுவிலே எழுதுவதற்கு நிரம்ப இடம் இருக்கின்றதே.

❖ சைவ சமயக் கருத்தரங்க ஆய்வாளர்களுக்கு வழங்கப்படும் குறிப்பேடோ?

அட்டையிலே 2005 என்று போட்டுள்ளதே!

❖ ஆண்டுதோறும் வரும் சிறப்பு மலரோ?

அத்தனையும் இல்லை.

அத்தனையும் ஆம்.

ஏதோ பரம்பொருள் விளக்கம் போல் உள்ளதா? ''இலது எனில் உளது'' என்ற சிவஞானபோத சூத்திரம் பால இருக்கிறதா?

ஆம். இது சேலம் பன்னிரு திருமுறை மன்றம் வெளியிட்ட நாட்குறிப்பாகும். வியப்பாக இருக்கிறதா? ஆண்டுதோறும் வாங்கிவிட வேண்டியது தானே? இந்நாட்குறிப்பை உருவாக்கியவர் தே.ம. பூதலிங்கம் அவர்கள். இதோ ஊரன் அடிகள் எழுதுகிறார்கள். ''நாட்குறிப்பில் ஒவ்வொரு பக்கத்திலும் அடிக்குறிப்பாக இருக்கும் செய்திகள்

மிகவும் அரிய செய்திகளாகும். நாட்குறிப்பின் முற்சேர்க்கையாக உள்ள பொதுவான செய்திகளும் மிகவும் பயனுள்ளவை. பக்கந்தோறும் அடிக்குறிப்புகள் அபாரம். மலேசியாவில் "HIndu Diary" நாட்குறிப்பு என்று இங்கிலீஷ், தமிழ் இரண்டும் கொண்டதாய் வெளியிடுகிறார்கள். தங்களுடையதைப் போன்றே அற்புதமாக அபாரமாக இருக்கிறது''

திரு. பூதலிங்கம் அவர்கள் தான் கற்ற வேத, ஆகம புராண இதிகாசங்களிலிருந்தும், தன் அனுபவ வாயிலாகவும் ஏராளமான ஆன்மீகக் குறிப்புகளைத் தொகுத்து வைத்திருந்தார். அவைகளெல்லாம் மக்களுக்குப் பயன்படவேண்டும் என்று சைவப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டு ஆங்காங்கு அந்தக் குறிப்புகளை அச்சிட்டு வழங்கினார்.

சேலத்தில் யார் வீட்டிலாவது திருமணமோ, மணிவிழாவோ ஏன் காதணி விழாவோ எந்த மங்கள நிகழ்ச்சியாயினும் அச்சமயங்களில் ஆன்மீக நூல்களை வழங்குகின்ற பழக்கத்தை வலியுறுத்தி 100,1000 என்று வெளியிடச் செய்தார். வாரியார் சுவாமிகள் இலண்டன் செல்லும் பொழுது பல வெளியீடுகளை அச்சிட்டு அவர்களிடம் கொடுத்தார். ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் 60வது ஜெயந்தி விழாவிற்கு 60 நூல்களைத் தயாரித்து வெளியிட்டார். பஞ்சாட்சரம், திருமுறைச் சிந்தனை, பிரதோஷ வழிபாடு, திருத்தொண்டர்மாலை, ஆலய விளக்கம், கோயில் களஞ்சியம், வில்வம், உருத்திராக்கம், சைவ சமய விளக்கம், சைவ ஒழுக்கம், சேலம் பதிகங்கள், திருமுறை அமுதம் இவற்றுள் அடங்கும். ஆயிரக்கணகக்ான நூல்களை வெளிக்கொணர்ந்து தமிழ்த் தாய்க்கு அணி செய்திருக்கிறார். தமிழில் இதுவரை வெளிவராத - எப்போதோ வெளிவந்து இன்றைய தமிழ் உலகம் காணாத - பல நூல்களை வெளிக் கொணர்ந்துள்ளார். பல பழமையான நூல்கள் இவரது தனி முயற்சியாலே மீண்டும் மறுபிறவி பெற்றது. சான்றாக திருவண்ணாமலை சிந்து, திருத்தொண்டர்மாலை, திருச்செந்தில் மாலை போன்றவைகள். இப்பணி முழுமையடைய பலரையும் எழுதத் துண்டினார். இவரது தூண்டுதலால் 12 பேர் நூல்கள் எழுதியுள்ளார்கள். சமயப் பிரச்சார வெளியீடு இல்லாத திருமணங்களே இல்லை என்கிற அளவிற்குப் பிரபலப் படுத்தியவர் இவர் தான்.

கோயில் களஞ்சியம் என்ற நூலில் 32 தலைப்புகள் உள்ளன. சிவபெருமான் பற்றி பதின்மூன்று பக்கங்களில் சிறு சிறு துணுக்குகளான நூற்றுக்கணக்கான தகவல்கள் உள்ளன.

''திருப்புனவாயில் சுவாமிக்கு மூன்று முழ உடை வேண்டும். ஆவுடையாருக்கு முப்பது முழ உடைவேண்டும்'' தீ நடுவில் லிங்கம், செந்திலில் சிவலிங்கம், பெருமாள் கோயிலில் லிங்கம், திருப்புடைமருதூரில் சாய்ந்த திருமேனி, வராகம் அடக்கியவர், ஐயனார் லிங்கம், சக்திலிங்கம், இரண்டு கருவறை, உறுப்பு வடிவம், மூன்று சந்நிதிகள் சடையார், பிரம்மா, விஷ்ணு தம்பதிகள், சிவன் கோவிலிலே சடாரி,இயற்கை தாராபிஷேகம், நிறங்கள் ஐந்துடையான் (நல்லூர்) கருவறையில் நான்கு தூண்கள், மூலஸ்தானத்தில் அம்மையப்பர், மூன்று அமைப்புடன் மூவர், லிங்கத்தில் திருமால், வெண்ணிறமேனி (நீடூர்), செம்மேனி (காஞ்சி) நீலமேனி (திருவாடானை) பச்சைமேனி (திரு இடைச்சுரம்) இப்படி பல தகவல்கள். தமிழ்நாடு முழுமையும் சுற்றுப்பயணம் செய்தால் தான் இத்துணை தகவல்கள்

தர முடியும். என்ன ஒரு உழைப்பு! ஒரு நூலில் ஒரு பகுதியிலேயே இத்தனை தகவல்கள், இதுபோல நூறுக்கும் மேலான நூல்களில் எத்தனை தகவல்கள் இருக்கும்?

இது நூல் வெளியீட்டுப் பணி! அடுத்து திருக்கோயில் திருப்பணி. திருக்கோயில் திருப்பணியே தமது ஒரே திருப்பணி எனக்கொண்டு ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் கும்பாபிஷேகங்கள், யாகங்கள், திருவிளக்கு வழிபாடு முதலியன தாமே முன்னின்று நடத்தி வருகிறார்கள். சேலம் பகுதி மற்றும் கோவை, ராமநாதபுரம் என 23 ஊர்களில், ஏழு ஊர்களில் கன்னிகா பரமேஸ்வரி கோயில் குடமுழுக்குக்கு அனைத்து ஏற்பாடுகளும் பிற ஊர்களில் சொற்பொழிவும் செய்து நடத்தியிருக்கிறார். வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயத்தில் வழிபாடின்றி இருந்தது. அதில் சிவலிங்க முர்த்தியை ஸ்தாபித்து முறையான வழிபாட்டுத்தலமாக அத்திருக்கோயிலை மாற்றுவதற்கு பெரும் பங்கேற்று அரும்பாடு பட்டார். அக்கோவிலையே தத்து எடுத்தது போன்று அக்கோவிலின் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டார். காலபூஜைக்கு ஏற்பாடு செய்தார். பல்வேறு விழாக்கள் நடைபெற அறக்கட்டளைகளை உருவாக்கினார். மே திங்கள் முதல் நாள் தெய்வச் சேக்கிழார் விழா நடைபெற ஆண்டு தோறும் சிறப்பாகச் செய்து வருகிறார். ரிஷிகேஷில் ஸ்ரீ கார்த்திகேய ஆசிரமத் திருப்பணிகளை திட்டங்கள் தீட்டி குடநீராட்டு செய்து முடித்து விட்டார்.

பூதலிங்கம் அவர்களின் முக்கிய பணி சமயப்பிரச்சாரமேயாகும். இள வயதிலேயே அம்பாசமுத்திரத்தில் சிறுவர் சிறுமியர்க்கு வாரவழிபாட்டின் பெருமையை உணர்த்தலானார். 3000க்கும் மேற்பட்ட சமயப் பிரச்சார நூல்கள் வெளியிட்டு ஞானப்புரட்சியே செய்தார். தெய்வீகப் பேரவையின் முதன்மைப் பிரசாரகராக இருந்து நாகர் கோயிலையே தன் வசப்படுத்தினார். வீடுகளில் சென்று சைவத் திருமுறைகளைப் போதித்தார்.

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியின் சிவராத்திரி தோறும் மூவர் தேவாரம் முற்றோதல் தொடங்கி வைத்தார். வேலூர் ஜலகண்டேசுவரர் திருக்கோயிலில் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் ஜோதி வடிவில் நாயன்மாரை எழுந்தருள்வித்து குருபூஜை விழா நடத்தி வருகிறார்.

பல நூறு ஆரிய வைசிய பெருமக்கள் இல்லங்கள் தெலுங்கு சம்பிரதாயத்தில் ஊறி இருந்தன. பத்து தினங்கள் எட்டு தினங்கள் என குடும்பத்தார் அனைவரயும் கூட்டி வைத்து திருமுறை முற்றோதல், திருத்தலப்பெருமை எனப்பேசி தமிழ் மரபிற்கு மாற்றிய பெருமை இவருக்கே உண்டு. இந்த அமைதிப்புரட்சியினால் அவர்கள் திருமண விழாக்களில் சிறுசிறு வெளியீடுகள் வெளியிடச் செய்தார்.

சேலம் ஸ்ரீ சௌடேஸ்ரி மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் வெறும் ராம நாமாவளி மட்டும் இசைத்துக் கொண்டிருந்தனர். பூதலிங்கம் வந்த பிறகு திருவாசகம் முற்றோதல் செய்ய ஆரம்பித்துள்ளார்கள். சேலத்தில் இயல், இசை, கூத்து என்ற அமைப்பில் இரண்டு நாட்கள் சேக்கிழார் மாநாடு நடத்தினார்.

பூதலிங்கம் சிறந்த சொற்பொழிவாளர். சேலம் சௌடேஸ்வரி திருக்கோயிலில் பல ஆண்டுகள் மார்கழி முப்பது நாட்களும் சொற்பொழிவு நடத்துகிறார்.

குமரி மாவட்டம் தேரூரில் 1942-இல் பிறந்த பூதலிங்கம் சேலத்தில் சைவம் பரப்புகிறார்.

சைவ மன்றங்கள்

சேலத்தில் சைவ வளர்ச்சியில் மன்றங்களின் பங்கும் கணிசமானது. 1919ல் விசுவநாத குருக்கள் ஞானசம்பந்தர் மன்றம் ஆரம்பித்து சுமார் 20 ஆண்டுகள் நடத்தினார். மாதந்தோறும் திருமுறைகள், சைவ சித்தாந்தம் என்று சொற்பொழிவுகள் நடத்தினார் அப்பாய் செட்டியார் அவர்கள் செயலாளராக இருந்திருக்கிறார்கள்.

(iii) திருவெம்பாவை பெருவிழாக்கழகம்

1959-இல் மார்கழிப் பெருவிழாக் கழகம் துவங்கப்பட்டது. 1986 முதல் திருவெம்பாவைப் பெருவிழாக் கழகம் என்ற பெயரில் இன்றளவும் சேலம் அருள்மிகு சுகவனேசுவரசுவாமி திருக்கோயிலில் மார்கழி மாதம் முப்பது நாளும் சிறப்பு வழிபாடு திருவெம்பாவை பாராயணம் நடைபெற்று வருகிறது. இக்கழகத்தை நிறுவியவர் திரு. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள். இக்கழகம் நாயன்மார் குருபூஜை நடத்துதல், அறுபத்துமூவர் உலா நடத்துதல், திருவெம்பாவை போட்டிகள், நூல்கள் வெளியிடுதல் எனப் பணியாற்று கின்றது. அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில் திருமதிலில் திருமுறைப் பதிகங்களைப பொறித்துள்ளது.

சுகவனேஸ்வரர் ஆலயத்தில் இல்லாத 32 நாயன்மார், சேக்கிழார் ஆகியோரின் பஞ்சலோகத் திருமேனிகளைச் செய்யச் செய்து வழங்கியிருக்கிறது. அறுபத்துமூவர் உலாவிற்கு பதினெட்டு பல்லக்குகள் செய்து நடத்திய காட்சி சேலத்தையே வியக்க வைத்தது. இல்லந்தோறும் திருமுறை, திருமுறை வகுப்பும் நடத்தப்படுகின்றன.

(தலைவர் - எஸ்.டி. அண்ணாமலை, செயலர் - என். சந்திரசேகர்)

(iv) காரைக்கால் அம்மையார் வாரவழிபாட்டுக் கழகம்

1964ல் தொடங்கப்பட்ட காரைக்கால் அம்மையார் வாரவழிபாட்டுச் சங்கம் திங்கள் கிழமைதோறும் திருமுறைகளால் வழிபாடு, கார்த்திகை சோமவாரத்தன்று 108சங்காபிடேகம், சமய சொற்பொழிவு, காரைக்கால் அம்மையார் குருபூஜை, அன்னதானம், மாணிக்கவாசகர் குருபூஜையன்று திருவாசக முற்றோதல், திருமுறைகள் கற்றுத்தருதல், விழாக்காலங்கள் அனைத்திலும் திருமுறை ஓதுதல், தல யாத்திரை எனப் பணியாற்றுகிறது.

(v) சௌடேஸ்வரி மாதர் சங்கம்

12.5.1974ல் தொடங்கப்பட்ட அருள்மிகு சௌடேஸ்வரியம்மன் மாதர் சங்கம் பதினாறு உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் பணிகள் நிரம்பச் செய்கிறது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையவில்லை. பிரதி திங்கள் வெள்ளிகளில் வாரவழிபாடு, தினமும் சொற்பொழிவு, வசதி குறைந்தவர்க்கு அன்னதானம், மாணவர்களுக்குச் சீருடை, புத்தகம் வழங்கல், தல யாத்திரை, கோபுரத் திருப்பணி, பள்ளிக் கட்டிட நிதி வழங்கல், அறுபத்துமூவர் திருவுருவங்கள் அமைத்து அதற்கு தனி மண்டபம் கட்டி குருபூஜை செய்தல், திருவாசகம் முற்றோதல், சிவராத்திரியன்று தேவார இன்னிசையுடன் வழிபாடு, ஆண்டுக்கு ஆறுமுறை நடராஜர் அபிடேகம் என எழுத்தில் அடங்காத அளவு பணி செய்கின்றது.

(தலைவர் ந.ப. சரோஜினி வேலாசாமி செட்டியார். செயலர் - ந. கமலா ஈஸ்வரன்)

(vi) மார்கழி பெருவிழாக் கமிட்டி

1983ல் தொடங்கப்பட்ட மார்கழிப் பெருவிழாக் கமிட்டி மார்கழி மாதம் முப்பது நாளும் தலைசிறந்த சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளை நடத்துகிறது. (தலைவர் - ஏ.கே. பழனியப்பன்)

முத்துசாமி (வயது 75) தனக்கோடி (வயது 71) தம்பதியினர் தலயாத்திரை, சைவ நுல்களைக் கற்றல், சைவ சித்தாந்த வகுப்புகளில் தேர்ச்சி, சொற்பொழிவு ஆற்றுதல் என சிவசிந்தனையாகவே வாழ்ந்து வருகின்றனர்.

துணை நூல்கள் : பூதலிங்கம் மணிவிழா மலர், அவர் எழுதிய நூல்களும் குறிப்புகளும்)

17. கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரியில் உள்ள மன்றங்கள் வருமாறு:

1) தெய்வீக வளர்ச்சி சபை, பெரியமுத்தூர் (நாயன்மார் குருபூஜை செய்தல் தலைவர் த. தீர்த்தகிரி; செயலர் - புலவர் ப. மாணிக்கம்)

2) மாவட்ட தெய்வீக நெறிக்கழகம், கிருஷ்ணகிரி (இலவச நூல்கள் வெளியிடுதல்; தலைவர் தா. இராஜன், யெல் ப. மாணிக்கம்.

3. நற்பணிமன்றம், சென்றாயம் பட்டி (திருநீலகண்டர் குருபூஜை; தலைவர். இராமரத்னம்)

4. பன்னிரு திருமுறை மன்றம் (திருமுறைகள் தினமும் ஓதுதல், சிவாலயம் புதிதாக கட்டியது, பிரதோச வழிபாடு, சிவராத்திரி வழிபாடு; தோற்றம் : 10.09.2004.

தொண்டர் அறிஞர்கள் : 1. புலவர் ப. மாணிக்கம் (10ம் திருமுறை நடத்துதல், திருமுறை வழி திருமணம் நடத்துதல்)

18. செய்யாறு - திருவோத்தூர்

(i) சிவஞான முனிவரிடம் பிழை காணும் சித்தாந்த நக்கீரர்

வை. முருகேசனார்

''சிவஞான முனிவர் தன் மாபாடியத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிழைகள் செய்துள்ளார். அவருக்கு வழிகாட்டி அருணந்தி சிவம்'' என்ற கருத்துகளை வெளியிட எத்துணை நெஞ்சுரம் வேண்டியிருக்கும்? அப்படி ஒரு கருத்து வெளிவர எத்துணை ஆழமாக ஒருவர் படித்திருக்க வேண்டும்? அந்தக் கருத்தினை வெளியிட்டவர் தான் செய்யாறு எனப்படும் திருவோத்தூரில் வாழும் பேராசிரியர் வை. முருகேசனார்.

எடுத்த எடுப்பிலேயே சிவஞான போதம் நூல் பொதுவதிகாரம் சிறப்பதிகாரம் எனவும், பிரமாண இயல், இலக்கணஇயல், சாதன இயல், பயனியல் எனவும் பிரிக்கப்பட்டதே தவறு என்கிறார் முருகேசனார். மேலும் முருகேசனார் சிவஞானபோதத்தைப் பிறப்பியல், பொதுவியல், முத்தியல் எனப்படும் வீட்டியல் என மூன்றாகப் பிரிக்கின்றார். ''முதல் ஐந்து சூத்திரங்கள் பிறப்பியல் பற்றி வருவன.

இறுதி ஐந்து சூத்திரங்கள் வீட்டியல் பற்றி வருவன. இடை நின்ற இரண்டு சூத்திரங்கள் - 6ம், 7ம் பதி பசுபாசம் எனப்படும் முப்பொருள் இயல்புகளைச் சத்து, அசத்து என்னும் இரண்டு அளவைகளைக் கொண்டு வரையறுத்து உணர்த்து கின்றன. ஆகையால் இவையிரண்டும் பொதுவியல் பற்றி வருவன. இப் பொருளியல் ஞானம் பிறப்பியலுக்கும் வீட்டியலுக்கும் பொதுவாய் அமைதலின் அது பொதுவியலாயிற்று'' என்கிறார்.

''உலகும் இறையும் உயிர்களுக்குப் போகப் பொருள்களாம்.உயிர் ஒன்றே அவையிரண்டையும் அனுபவிக்கும் போகிப் பொருளாம். உயிர் உலகைச் சார்ந்து வாழும் போது அதற்கு உலக வாழ்வு கிடைக்கிறது. அதுவே இறையைச் சார்ந்து வாழும் போது இறைவாழ்வும் கிடைக்கிறது.

''அதனால் உலக வாழ்வு அல்லது உலகாயதம் ஒரு பாவமான செயல் என்று கருதவே கூடாது. சாத்திர நூல் படைக்க வந்த சிலர் உலகாயதத்தை மறுத்தனர். அது தவறு. 'இருதிறன் அறிவுளவு இரண்டலா ஆன்மா' என்பது சித்தாந்த நெறிச்சட்டம் ஆகும். அதனால் உலகாயதத்தைச் சித்தாந்தத்தின் ஒரு கூறு என்றே மதிக்க வேண்டும்.

''மெய்கண்டார் தனது நூலில் அவையடக்கத்திலும் பிறவிடங்களிலும் ஒரு பொருட்கொள்கையுடைய ஏகான்ம வாதம் ஒன்றை மட்டுமே மறுத்தார். மற்ற மதத்தார் யாரையும் மறுக்க வில்லை. அவ்வாறிருக்க மெய் கண்டாரை ஒரு மத வாதி என்பது போலச் சித்தரித்துக் காட்டிவிட்டார் சிவஞானமுனிவர்''

''சிவஞான போதப்பேருரை'' என்ற 574 பக்கங்களுடைய பெருநூலில் முருகேசனார் பக்கத்திற்குப் பக்கம் சிவஞான முனிவரை மறுத்து எழுதி யுள்ளார். இந்நூல் தவிர முருகேசனார் எழுதியுள்ள நூல்கள் வருமாறு, சிவஞான போதமும் விளக்கவுரையும் சைவ சித்தாந்தம் ஒரு புதிய அணுகு முறை, திருவருட்பயன் - உரை, மாயை விளையாட்டு, சிவநெறி.

இத்துணை நூல்களை எழுதியுள்ள இந்த இளைஞர்க்கு வயது 92 ஆகும். நாங்கள் சென்ற சமயம் ஒரு கட்டு சாக்கினை ஏற்றிக் கொண்டு ஆட்டோவில் வந்து இறங்கினார். அவர் இருப்பது ஒரு சிறிய அறையே. கதவைத் திறந்தால் ஒரு புறம் சமையல் பாத்திரங்கள்; இன்னொருபுறம் புத்தகங்கள்; கட்டில் மறுபுறம்; நாற்காலி போடவே இடம் இல்லை. எனவே என் மனைவி வெளியிலேயே நின்று விட்டாள். இந்த முதிய வயதிலும் தன்னுடைய அன்றாடக் கடமைகளை முடித்துக் கொண்டு நூல்களையும் எழுதிக் குவிக்கிறார்.

முருகேசனார் இதோடு நிறுத்திவிட வில்லை செய்யாற்றில் 3 லட்ச ரூபாயில் 1 ஏக்கர் 38 செண்ட் நிலம் நிலம் வாங்கி மெய்கண்டாருக்கு ஆலயம் எழுப்ப உள்ளார். தொண்டிற்கு வயதில்லை!

(பிறப்பு : 20.10.1913; பிறப்பிடம் - திருவோத்தூர்; பெற்றோர் : வையாபுரி, மீனாட்சி அம்மாள்)

(ii) திருமுறை வளர்ச்சிப் பணி மன்றம்

செய்யாறில் திருமுறை மன்றமே இல்லையா என்று எண்ண வேண்டாம். அருள்மிகு வேதாநாதர் திருக்கோயிலோடு திருமுறை வளர்ச்சிப் பணி மன்றத்தார் தங்களை இணைத்துக் கொண்டு செயல்படுகின்றார்கள். முப்பது இலட்ச ரூபாய் திருப்பணிக்கு

நிதி திரட்டுவதும், திருமுறை மாநாடு நடத்துவதுமாக 13.7.2005இல் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

இவர்கள் பணியும் நீண்ட பட்டியலே! மாதம் தோறும் திருமுறை இசை (55வது நிகழ்ச்சி), விரிவுரை, தேவார வகுப்பு, நூல் வெளியீடு (15 நூல்கள்) திருமுறை முற்றோதல், திருமுறை அடிப்படையில் நன்னீராட்டு விழா (8 கோயில்கள்), தலயாத்திரை, உழவாரப்பணி.

(தோற்றம் - 14.4.1999; தலைவர் வ. கண்ணப்பன் செயலர் கு. இராமலிங்கம்)

வழிபாடு சைவ சொற்பொழிவு, 274 தலயாத்திரை (இருமுறை)

உழவாரப்பணி, நால்வர் குருபூசை செய்கின்றனர்.

(தோற்றம் - 1986; தலைவர் திரு. பச்சையப்பன்)

நல்லறிஞர்கள் : அருள்ஞானப் பெருவெளியின் ஆரம்ப காலத் தலைவர் திரு முத்துகிருஷ்ணனன் அவர்கள் (1935 - 2005) சாத்திர, தோத்திர சொற்பொழிவுகள் நடத்தி வந்தார். தற்பொழுது பேராசிரியர். தா.கு.சம்பந்தம் (வயது 65) பெரிய புராணம் நடத்துகின்றார். புலவர் ஞான ஏகாம்பரம் (வயது 61) பனிரண்டு சாத்திரம் நிறைவு செய்துள்ளார். திருமுறைப் பணிமன்றத்தின் தற்போதைய தலைவர் (19.10.1941; பிறப்பிடம் கலவை) சாத்திரம் படித்தவர்; இசையில் வல்லுனர்.

நன்தொண்டர் : அருள்ஞானப் பெருவெளியின் செயலர் மன்றப்பணிகள், திருக்கோயில் பணிகள் (அலகிடுதல், மெழுகிடுதல்) அனைத்தும் செய்கின்றார்.

19. வந்தவாசி

வந்தவாசி சைவ அன்பர்களும் நான் செய்யாறு சென்றபொழுது வந்து விட்டனர். சைவப் பெருமன்றம் நாள் வழிபாடு, சோமவார வழிபாடு, பிரதோஷ வழிபாடு, தல யாத்திரை, குருபூஜை, சமயச் சொற்பொழிவுகள், திருமுறை இசை ஏற்பாடு செய்தல், மாதம் ஒருமுறை இல்லங்கள் தோறும் திருவாசக முற்றோதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது (தொடக்கம் - 2.9.2002; தலைவர் - கோ. தெய்வசிகாமணி.) இதுவல்லாமல் மங்கையர்க்கரசியைத் தலைவராகக் கொண்ட தினசரி சைவப் பெருமன்றம் நாள் வழிபாடு முறையாகச் செய்து வருகின்றது. தமிழ்ப்புலவர் திரு. ஏ.வி. முனிசாமி ஸ்ரீ சூரியனார் கோயில் ஆதீன சைவ சித்தாந்தப் பயிற்சி அமைப்பாளராக இருந்து அஞ்சல் வழி சைவ சித்தாந்தம் கற்க ஏற்பாடு செய்கிறார்.

20. திருவண்ணாமலை

ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் அருள்மிகு அண்ணாமலையல்லவா!

ஆம்.

எத்தனை அருளாளர்கள்! தபோதனர்கள்! ஞானிகள்! அத்தனை பேரும் நாடிப்புகலிடம் கொள்வது அண்ணாமலையல்லா!

இரமண மாமுனிவர்...

சேஷாத்திரி சுவாமிகள்...

... ...

... ...

யோகி இராம்சுரத்குமார்...

என்று நூறு ஆண்களாக நூற்றுக்கு மேற்பட்ட ஞானிகள் திருவண்ணா மலைக்கு வந்து தங்கி அருள் ஒளி பரப்பியுள்ளார்கள்.

அந்த ஞானியரின் அருள் வரலாறு களைத் தொகுத்து மிக அழகாக பெரியவர் அ. பாண்டுரங்கனார் அவர்கள் ''அருள்நிறை அண்ணாமலை'' என்ற நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

திருவண்ணாமலை கோயில் சன்னிதியை ஒட்டி அழகானந்த அடிகளார் மடலாயம்...

தொண்ணுறு வயது நிரம்பிய இளைஞர் அ. பாண்டுரங்கனார் என்ற முதுபெரும் புலவர் 11.00 மணியளவில் நுழைகிறார்கள். மாலை வழி பாட்டுக்குச் செல்வதற்காக 6.00மணிக்கு அவ்விடம் நீங்குகிறார்கள். அதுவரை அங்கேயே இருந்து எழுவதும், படிப்பதும் அன்பர்களுடன் கலந்துரை யாடுவதுமாக இருக்கிறார்கள்.

அவர்களுடன் உரையாடிய ஒன்றரை மணி நேரமும் வரலாற்றுச் செய்திகளும் சமயக் கருத்துகளுமாக உணர்ச்சி பொங்க இருந்தது.

திருவண்ணாமலை நூற்றாண்டு காலச் சைவவரலாற்றினை ஆற்றொழுக் காகக் கூறியதோடு அதற்குரிய நூல் களையும் வழங்கினார்கள். குப்புசாமி சுவாமிகளின் தியாக வரலாற்றைச் சொல்லும் பொழுது கண்களில் நீர் பெருகி வரலாயிற்று. என்னாலும் அடக்கமுடியவில்லை.

என்னுடைய நீண்ட நெடிய கள ஆய்வுப்பயணத்திலே இரண்டே இரண்டு பேர்கள் மட்டும் அவர்கள் வாழும் ஊரின் சைவ வரலாற்றை அழகுறப்படம் பிடித்துக் காட்டினார்கள். ஒருவர் அ. பாண்டுரங்கனார் அவர்கள்.

(i) குப்புசாமி அடிகள்

திருமுறைகளைத் தலையில் சுமந்தவர் தபோதனரானார்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே அருணை மாநகரில் திருமுறைத் திருக்கூட்டத்தார் என்று ஒரு குழுவினர் திருமுறைப்பணி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு சிறந்த தேவார ஓதுவாரை அமர்த்திக் கொண்டு திருமுறையை முறையாகப் பாடுதற்குரிய பயிற்சியைப் பெற் றார்கள். தமக்குள்ளேயே ஒருவர்க்குக் குடமுழா வாசிக்கும் பயிற்சியைக் கொடுத்தனர். அவர்களுள் பெரும் பாலோர் துணிவாணிபமும் சிலர் உழவுத் தொழிலும் செய்து வந்தனர். சிறப்பு நாட்களில் திருமுறைப்

பாராயணத்துடன் திருவீதிவலமும், திருமலை வலமும் செய்வாராயினர்.

இவர்களுள் ஒருவர் படிப்பு இல்லாதவராக இருந்தார். அவர்க்குப் பாடும் ஆற்றலும் இல்லை; படிக்கும் ஆற்றலும் இல்லை. ஆனால் நாயன்மார்களிடத்தும், திருமுறையிடத்தும் குன்றாத ஆர்வம் உடையவராக இருந்தார்; பிறர் திருமுறைகளைப் பாடும் போது சுவைத்துக் கேட்பார்; கண்ணீர் மல்கக் கேட்டு மகிழ்வார். அவருடைய உள்ளத்திலே இறைவன் திருவருளால் ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதன்படி, மற்ற அன்பர்கள், வீதிவலம், மலைவலம் செய்யப்புறப்படுமுன், நடராஜப் பெருமானுக்குத் தீபாராதனை செய்வர். அப்போது இவர் திருமுறைகளை நடராசர் திருமுன் வைத்து வணங்கி அந்நூல்களை ஒரு பட்டாடையில் வைத்துக் கட்டாகச் செய்து தலையில் வைத்துக் கொள்வார். இவர் பெயர் குப்புசாமி முதலியார் என்பதாகும், எல்லா அன்பர்களும் இவரிடத்தில் அன்பும், பெருமதிப்பும் உடையவராக இருந்தனர்.

திருக்கூட்டத்தார் மலைவலம் வரும்போது இவர் திருமுறைகளைத் தலையில் வைத்துக் கொண்டு அவர்களுடன் தொடர்ந்து வலம் செய்வார். இவ்வாறு பல ஆண்டுகள் வரை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒரு நாள் இவர் உள்ளத்தில் குடும்பத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. முழுநேரமும் சிவப்பணியில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்தது. ஆகவே தல யாத்திரை செய்யப்புறப்பட்டார். தகுதியான அன்பர்களோடு புனிதத் திருத்தலமாகிய காசி மாநகரை நோக்கிப் பயணம் செய்தார். காசிப் பயணத்தை நிறைவு செய்து கொண்டு திருவண்ணாமலைக்குத் திரும்பினார். சில நாள்கள் சென்றபின் இராமேஸ்வர யாத்திரை செய்யப் புறப்பட்டு விட்டார். தென்னாட்டுத் திருத்தலங்களை எல்லாம் வணங்கிக் கொண்டு இராமேஸ்வரம் சென்று சேர்ந்தார். அங்குச் சிலநாள் தங்கியபின் திரும்பவும் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். அப்போது இவர் உள்ளம் மிகவும் பக்குவப்பட்ட நிலையில் இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் ஒரு நாள் திருக்கூட்டத்தைச் சார்ந்து திருவாளர் சண்முக முதலியார் என்பவருடைய துணிக்கடையில் போய் அமர்ந்தார். அப்போது தென்னாட்டிலிருந்து வந்த சிவனடியார் ஒருவர் அந்தக் கடைக்கு வந்து சேர்ந்தார். அவர் அந்தக் கடைக்காரருக்கு அறிமுகமானவர். அப்போது சண்முக முதலியார் அவர்கள், ஆக்கப்பூர்வமான ஒரு பேச்சினைத் தொடங்கினார். அஃதாவது திருவண்ணாமலையில் பெரிய மடம் என்னும் அப்பர் சுவாமிகள் மடம் சோழ மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டதாகும்.

பிறகு மாமன்னர் கிருஷ்ண தேவராயரால் புதுமையாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது. இன்று அம்மடம் சிதைந்து தரை மட்டமாக இருக்கிறது. இதைப்புதுமையாக உருவாக்க எப்போது? எந்தப் பிள்ளை வருமோ? என்று சொல்லிக் கவலைப் பட்டார். அப்போது யாத்திரையை முடித்துக் கொண்டு அங்கு வந்திருந்த உயர்திரு. குப்புசாமி முதலியார் அவர்கள், அப்பணியை நிறைவு செய்ய அண்ணாமலையார் துணையைக் கொண்டு யான் முன் நிற்கிறேன், திரளான அன்பர்கள் இப்பணியை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன் என்றார். அப்போது சண்முக முதலியார் அவர்கள் குப்புசாமி முதலியாரைப் பார்த்து, உம்மைப் போன்றவர்கள் இப்பணிக்குத் தகுதி உடையவராக மாட்டார்.

குடும்பத்தில் இருந்து கொண்டு பாச பந்தங்களில் தோய்ந் திருப்பவர் முழுச்சிந்தனை யையும் இப்பணியில் செலுத்த இயலாது; ஒரு பணியை அரசனால் செய்யமுடியும். அல்லது ஆண்டியால் செய்யமுடியும், குடும்பப் பற்றிருந்தால் செய்ய இயலா என்றார். அப்போது குப்புசாமி முதலியார் யான் குடும்பத்தை அறவே விட்டு வெளியேற இருக்கிறேன், நீங்கள் சொல்வது போன்றே நடந்து கொள்வேன் என்றார்.

அப்போது திருவாளர் சண்முக முதலியார் பின்வருமாறு கூறினார்; ஐயா இப்படிச் சொன்னால் ஏற்றுக் கொள்ள இயலாது; மடாலயத்தில் உள்ள தெய்வத் திருவுருவங்களில் முன்னே நின்று இந்தத் துறவியார் முன்னிலையில் சத்தியம் செய்து தரவேண்டும் என்றார். அதற்கும் அவர் இசைந்தார். பிறகு அம்மூவரும் மடாலயத்திற்குச் சென்று தெய்வத்தின் முன்னின்று, திருவிளக்கு ஏற்றித் தூப தீபம் காட்டி வணங்கினர். குப்புசாமி முதலியார் தாம் தெய்வமாகக் கருதி வழிபட்டு வரும் திருமுறைத் தொகுப்பினையும் திருநீற்றுப்பையையும் தலையில் வைத்துக் கொண்டு அவர்களை நோக்கி, நான் இந்தக் கணத்திலிருந்து சத்தியமாக வீட்டிற்குள் நுழைய மாட்டேன், அந்தத் தெருவிற்குள்ளும் புகமாட்டேன், இது சத்தியம்! சத்தியம் என்றார். மேலும் மடாலயத் திருப்பணிக்கு வசூலாகும் தொகையில் ஒரு பைசாவையும் குடும்பத்திற்குத் தரமாட்டேன் என்றார்.

அதன் பிறகு மடாலயத் தொடர்புடையவர் அனைவரும் ஒன்று கூடிப் பேசி மடாலயத்திருப்பணிக்கு நன்கொடை வசூல் செய்யுமாறு மடத்தைச் சேர்ந்தவர்கள் வாழும் சிற்றூர்களுக்கெல்லாம் அவரையே அனுப்பி வைத்தனர். அங்கு வாழும் மக்கள் இவர் தோற்றத்தைக் கண்டு நம்பிக்கை கொள்ளவில்லை, என்றாலும் அவர்கள் மேல் வெறுப்படையாமல் அப்பர் சுவாமிகளுடைய வரலாற்றைக் கண்ணீர் பெருக்கிக் கொண்டே உருக்கமாகச் சொல்லத் தொடங்கினார். இவர் கையில் வைத்துள்ள பையில் திருமுறைகள் இருப்பதனையும் நோக்கினர். இவருடைய நடைமுறை அவர்கள் மனத்தை மாற்றிவிட்டது. பிறகு அவர் யாரென்பதையும் விசாரித்து அறிந்து கொண்டனர்; அவர் பால் அளவிலா நம்பிக்கையும் கொண்டனர். வசூல் தொகை பெருகிற்று. இவர் கூறும் தெய்வீக வரலாறுகளைத் தாய்மார்கள் விரும்பிக் கேட்டனர். ஆகவே தாய்மார்களுடைய ஆதரவும் பெருகிற்று. சில வாரங்களுக்குப் பிறகு திருவண்ணாமலைக்குத் திரும்பினார். அண்ணாமலையில் உள்ள அன்பர்களிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினார். அவர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பிறகு நல்லதோர் நாளில் திருப்பணி தொடக்கமாயிற்று. நாளுக்கு நாள் சிற்றூர்களிலுள்ள மக்களுக்கு இவர் மேல் நம்பிக்கையும், நல் லெண்ணமும் உண்டாயிற்று. வெளியூர் மக்கள் கார்த்திகைத் திருவிழாவிற்கு வரும் போது திருப்பணிகள் நடை பெறுவதை நேரில் கண்டு நம்பிக்கை உறுதிப் படுத்திக் கொண்டனர். இவ்வாறாகப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், ஒருமுறை வடநாங்கூர் அருணாசல முதலியார் எனப்பெறும் பெருநிலக் கிழார் வீட்டிற்குச் சென்றார். திருநீறணிந்த தோற்றத்துடன் உருத் தராக்க மாலையும் அணிந்து திருமுறைச் சுவடிகளைக் கையில் ஏந்திய வண்ணம், முதலியார் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். நமச்சிவாய, நமச்சிவாய என்று இவர் ஒலிக்கும் பஞ்சாட்சர ஒலியானது முதலியார் வீட்டிற்குள் புகுந்தது. அவ் ஓசையைக் கேட்ட

அருணாசல முதலியார் இயல்பாகவே சைவ ஒழுக்கமுடைய பெரியார் ஆதலின் கைகூப்பிய வண்ண மாகவே வெளியே வந்து வரவேற்று வணக்கம் செலுத்தினார். பிறகு அனைத்து வரலாற்றையும் கேட்டு அறிந்து கொண்டு, உள்ளே அழைத்துச் சென்று உணவருந்துமாறு உருக்கத்துடன் கேட்டுக் கொண்டார். நன்கொடை வசூலுக்காகச் சென்றிருக்கும் குப்புசாமி முதலியார் அவர்களும் உணவருந்தி ஓய்வு எடுத்துக் கொண்டார் ஓய்விற்குப் பிறகு கலந்து உரையாடத் தொடங் கினார்.

உயர்திரு அருணாசல முதலியார் அவர்கள் தம் உள்ளத்தில் தீராத் துயரத்தைத் தந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சியைக் குப்புசாமி முதலியாரிடம் கூறுவாராயினார். ‘‘ஐயா, எனக்கு அண்ணாமலைப் பெருமான் எல்லாச் செல்வங்களையும் அருள்பாலித்திருக்கின்றார்; எனக்கு வாரிசாக ஒரு மகனே இருக்கின்றான்; அவன் பெயர் திருநாவுக்கரசு என்பதாகும். அவன் தீராத வயிற்றுவலியால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறான். எந்த மருத்துவத்தாலும் அதனைப் போக்க முடியவில்லை. அவனைத் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்போது நன்கொடைக்காகச் சென்று இருக்கும் குப்புசாமி முதலியார் அவர்கள் கையிலுள்ள திருமுறைக்கட்டினை அவர் வீட்டில் பூசை அறையில் வைத்துத் திருநீற்றுப் பையையும் அதன்மேல் வைத்து தூப தீபம் காட்டினார். பிறகு அனைவர்க்கும் திருநீறு வழங்கினார். பின்னர் அருணாசல முதலியாரை நோக்கி, ஐயா, வரப்போகின்ற சித்திரை மாதம் சதயத் திருநட்சத்திரத்தன்று திருநாவுக்கரசு சுவாமிகளுடைய குருபூஜையைச் சிறப்பாக நிகழ்த்த வேண்டும். அன்று யானும் வருகிறேன் அந்த நாள் உங்கள் தீராத துயரத்தை இறைவன் தீர்த்து வைக்கும் திருநாளாக இருக்கும் என்று சொல்லி அனைவர்க்கும் திருநீறு அளித்தார்.

சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தன்று முன்னே சொல்லியபடியே திருநாவுக்கரசருடைய குருபூசைத் திருநாளன்று அருணாசல முதலியார் மகேஸ்வர பூசை நடத்த ஏற்பாடுகள் செய்தார். குறிப்பிட்ட நாளில் குப்புசாமி முதலியாரும், பூசையில் கலந்து கொள்ள அருணாசலமுதலியார் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். நண்பகலில் மகேஸ்வர பூசையை முறையாக நடத்தத் தொடங்கினார். தீபாராதனை நேரத்தில் திருமுறைத் தொகுப்பை வைத்து ஆராதனை நிகழ்த்தி, அடியார்களை முறையாக வழிபட்டனர். பிறகு திருநீற்றுப்பையை எடுத்துத் திருநாவுக்கரசருடைய திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே வயிற்று வலியால் தீராத் துன்பமுற்றுள்ள அருணாசல முதலியார் மகன் திருநாவுக்கரசுக்குத் தம் கையினாலேயே திருநீறு அணிவித்தார். பிறகு குடும்பத்தினரை நோக்கி, இன்று முதல் உம் குடும்பப்பிள்ளையாகிய திருநாவுக்கரசுக்கு வயிற்றுவலி இராது. திருநாவுக்கரசு சுவாமிகளுடைய திருவருளால் நலத்தோடு வாழ்வான் என்று வாழ்த்தினார். பின்னர் மகேஸ்வர பூசை இனிதே நிறைவு பெற்றது. அருணாசல முதலியார் பெருமகிழ்ச்சியடைந்தார். அன்றுமுதல் அருணாசல முதலியார் மகனுக்குக் குடல் நோய் அறவே நீங்கிவிட்டது. இச்செய்தி எல்லாச் சிற்றூர்களிலும் பரவிற்று. பல்லாண்டுகளாகப் பலவாறு முயன்றும் தீராதிருந்த குடல்நோய் எவ்வாறு நீங்கிற்று? குப்புசாமி முதலியார் அருளாளர் அல்லர்; மருத்துவரும் அல்லர். இந்தக்குடல் நோயை ஒரு சொல்லளவில் நீக்கி விட்டாரே அவக்கு இத்தகைய ஆற்றல் எவ்வாறு வந்தது? என்று ஆராயத்

தொடங்கினர். அவர்களுக்கு உண்மை புரிந்தது. பல்வேறு அற்புதங்களையெல்லாம் நிகழ்த்திய, பன்னிரு திருமுறைகளையும் தலையில் சுமந்துகொண்டும் திருக்கூட்டத்தார் பாடும் தேவாரப் பாடல்களைக் கேட்டுக்கொண்டும் பல்லாண்டுகள் மலைவலம் செய்ததன் பயனாகத்தான் இந்த ஆற்றல் இவருக்கு வந்திருக்கிறது. படிக்கத் தெரியாது; பாடவும் தெரியாது; ஆனால் திருமுறைப்பாக்களைச் செவியால் கேட்டும் சுவடிகளைத் தலையில் சுமந்தும் இத்தகைய ஆற்றலைப் பெற்றார் என்ற உண்மை எங்கும் பரவிற்று.

இவர் முயற்சியால் புத்துருவம் பெற்ற அப்பர் மடாலயம் அநேகருக்கு அடைக்கலம் தந்தது. பயணிகள் தங்கும் விடுதியே இல்லாத காலத்தில் புலவர்கள், ஓதுவார்கள், பாடகர்கள், சிறந்த நடிகர்கள், மதிக்கத்தக்க அடியார்கள், ஆகியோர் அண்ணாமலைக்குப் பயணம் செய்து வரும்போது இம் மடாலயத்தில்தான் மூன்று நாட்கள் வரை வாடகையின்றித் தங்குவர். சாதி சமய வேறுபாடின்றி இம்மடாலயம் அனைவரையும் வர வேற்றது. பெரும் புலவர்களெல்லாம் வந்து தங்கியிருந்த சிறப்புடையது இந்தத் திருமடம். இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் எழுதப் படிக்கத் தெரியாத ஒரு திருத்தொண்டராவார். திருமுறைகளைத் தலையில் சுமந்ததன் பயனாகவும், திருமுறைப் பாடல்களை மனமுருகிக் கேட்டதன் பயனாகவும் இம்மாபெரும் பணியை நிறைவு செய்யும் ஆற்றலைப் பெற்றார்.

தொடக்க நிலையில் இவர் செய்து கொடுத்த சத்தியத்திலிருந்து ஒரு சிறிதும் மாற்றம் அடைந்திலர். அண்ணாமலையில் தங்கியிருக்கும் நட்களில் இவருக்கு நண்பகல் உணவு தம்பி மகனார் வீட்டிலிருந்தே வந்துகொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு எவ்வகையாலும் உதவி செய்யவில்லை. மடாலயத்தில் காய்த்த முருங்கைக் காயையும் விலைக்குத்தான் அவர்களுக்கு விற்றார். சிவசொத்துக் குடும்பத்திற்குப் போய்ச் சேர வேண்டாம் என்பார். அவர் சொன்னவற்றைக் கேட்ட தம்பி மகனாரும், குடும்பத்தாரும் மகிழ்ச்சியுற்றனரே அன்றி வெறுப்பு அடைந்திலர். அவரது உறுதிப் பாட்டைப் பாராட்டிப் புகழ்ந்தனர். குப்புசாமி அடிகளார் தம் மகன் மறைந்தபோதும் அவ்வீட்டை நாடிச் செல்லவில்லை. முழுமையான துறவுநிலையை அடைந்தார்.

இத்தகைய ஆற்றலை இவருக்கு அளித்தது திருமுறைகளே என்பதை உலகத்தார் ஒப்புக்கொண்டனர் திருமுறைகளைத் தலையில் வைத்துக் கொண்டு அண்ணாமலையை வலம் செய்ததின் விளைவே இவரை இந்நிலைக்கு உயர்த்திற்று. இக்காரணம் பற்றியே வடலூர் வள்ளற் பெருமான் ''வில்வக் குடலை சுமக்காமல், வீணுக் குடலை சுமந்தேனே'' என்ற அருள் வாக்கை உலகிற்கு வழங்கி இருக்கிறார். குப்புசாமி அடிகளார் எழுதி வைத்த உயில் வருமாறு:

1930 வருஷம் அக்டோபர் மாதம் 27 தேதிக்குச் சரியான பிரமோதூத வரு. ஐப்பசி மாதம் 11 ஆம் தேதி வேலூர் ஜில்லா திருவண்ணாமலை தாலுக்கா கஸ்பா திருவண்ணாமலையில் சன்னிதி வீதியில் பெரிய மடம் என்கிற அப்பர் சுவாமிகள் மடம் என்று வழங்கும் தொண்ட மண்டல சைவ வேளாளர் மடத்திற்கு சுமார் 30 வருஷ காலமாய் அதிபதியாகயிருந்து புதிதாக கட்டிடம் கட்டியும் கைங்கரியங்களையும் நடத்தி வருகின்ற அதே ஊர் சன்னதி வெள்ளாழ வீதி வெள்ளாழ ஜாதி பயிர் ஜீவனம் உள்ள சுப்பு முதலியார் குமாரர்

குப்புசாமி முதலியாராகிய நான் எழுதி வைக்கும், உயில் பத்திரமாவது.

அப்பர் சுவாமிகள் பெரியமடம் அதிக கிலமாயிருந்ததை என்னால் சீர்த்திருத்தம் செய்யும் போது அப்பர் சுவாமிகள் விக்ரகமும் செப்பு பட்டயமும் கிடைத்ததைக் கொண்டு தொண்டை மண்டல பரம்பரை வேளாளர் களிடத்தில் பணம் வசூல் செய்தும் மேலாப்பாலூர் கிராமத்தில் ராஜாக் களால் விடப்பட்டிருக்கும் மான்ய நிலத்தின் வரும்படியைக் கொண்டும் திரு மடத்தைக் கட்டி முடித்தேன்.

எனக்கு வயது 76 ஆகிவிட்டதாலும் நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருவதாலும் இனிமேல் நீடித்தநாள் பிழைத்திருப்பேன் என்ற நம்பிக்கையில்லாததினாலும் என் ஆயுசுக்கு பிறகு இந்த மடத்தின் நடவடிக்கைகள் சரிவர திறமையாகப் பரிபாலிக்கப்பட்டு வர வேண்டும் என்ற நல்ல எண்ணத்தினால் இதில் கண்ட கண்டிஷன்களுக்கு உட்பட்டு இந்த மடாலயத்தின் நடவடிக்கைகள் பரிபாலிக்கப்பட்டு வரவேண்டுமென்றும் மேற்படி மடாலயத்தில் மடாதிபதியாகிய நான் உயில் எழுதி வைக்கலானேன். மேற்படி மடத்தை தினகாலமும் சுத்தம் செய்து வரவும் திருவிளக்கு வைத்து வரவும் ஒரு ஆளை வைத்து நடத்தி வருவதும் தவிர நால்வர்களுக்கு நித்தியபடி பூஜையும் நைவேத்திய முதலியதுகளையும் நடத்தி வைக்க உள்ளூர் மெம்பர்கள் கவனித்துவர வேண்டியது.

(ii) தம்மணாம்பட்டி அழகானந்த அடிகளார்

தவப்பெருஞ்சீலராம் அழகானந்த அடிகளார் சேரநாட்டைச் சேர்ந்த சேலமா நகரினையடுத்து விளங்கும் கரையாவூரிலே 1882 ஆம் ஆண்டில் சித்திரபானு ஆனித்திங்கள் 24ஆம் நாள் குருவாரம் உத்திரட்டாதி மீன் கூடிய நன்னாளில் நல்லன், மாராயம்மாள் என்பவர்க்குத் தெய்வத்திரு மகவாய்ப் பிறந்தருளினார்.

பிறைமதி போல வளர்ந்து முன்னை நல்வினையின் பயன் தூண்டிய காரணத்தினால் 36ஆம் வயதில் துறுவுபூண்டார். இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகள் பரம்பரையைச் சேர்ந்த குருவானந்தரின் மாணாக்கரானார். பிறகு, பல்வேறிடங்களில் சமயத் தொண்டுகள் புரிந்து வரலானார். இளமையில் ஏற்பட்ட தெய்வ சிந்தனையும்; சிவனடியார் நேயமும், வளர்ந்து துறவறத்தில் ஊன்றி நின்றார்.

அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி
அதிகம் இல்லம்
துறந்தான் அவனிற் சககோடி உள்ளத்
துறவுடையோன்

என்ற திருவெண்காடர் வாக்கின்படி உள்ளத் துறவும் உடையவராக விளங்கினார். அடிகளார், துறவறத்தை மேற்கொண்ட பின் தலப்பயணத்தை மிகுதியாக மேற்கொண்டார்.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும்
பராபரமே

என்ற தாயுமானார் வாக்கிற்கிணங்கத் தலப்பயணம் செய்தபோது பல அரிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஓரிடத்தில் ஒருவர் கனவில் தோன்றிச் சுவாமிகளுக்குத் திருவமுதளித்தார். விழித்துப் பார்த்தபோது திருவமுது காணப்பட்டது. மற்றோரிடத்தில் கனவில் ஓரன்பர் ஒரு பாட்டெழுதிய ஏட்டினையும், பணத்தையும் கொடுத்தார். விழித்தெழுந்தபோதும் பாட்டும்,

பணமும் கரத்திலிருக்கக் கண்டார். இவையெல்லாம் உண்மையடியாரிடம் இறைவன் புரியும் இனிய நாடகமாகும்.

அடிகளார் பயணம் செய்து கொண்டிருந்தபோது, கனியேனும்வறிய செங்காயேனும் முதிர் சருகுகந்த மூலங்களேனும் உட்கொண்டு பயணத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

சுவாமிகளுக்கு இளமைப்பருவம் முதல் கொண்டே கனவின் கண் கணபதிக் கடவுளின் காட்சி கிடைத்து வந்தது. ஐங்கரப் பெருமான் அருகில் வந்து, துதிக்கையால் அவர்தம் உடலைச் சுற்றி ஒளிவடிவங்காட்டிய ஒப்பற்ற கனவும், அண்டை வீடு தீப்பற்றிக் கொண்டது விரைந்து செல்க! என ஆனைமுரகக் கடவுள் ஆணையிட்ட கனவும் வியக்கத் தக்கனவாகும். சுவாமிகள் தில்லையில் நடைபெறும் எல்லையில் ஆனந்தக் கூத்தன் ஆருத்திரா விழாவிற்குப் பத்து ஆண்டுகள் தொடர்ந்து கால்நடைப் பயணமாகவே சென்று வந்தார்கள். அந்நாள் தொட்டு இறுதிநாள் வரையில் அண்ணாமலையில் நடைபெறும் தீப விழாவிற்கு ஆர்வம் குன்றாமல் சென்று தரிசித்துப் பேரின்பம் அடைந்தார்கள்.

ஒருமுறை சுவாமிகள் நெருஞ்சிப் பேட்டைப் பூலாம்பட்டியருகில் காவிரியாறு பிரிந்து செல்லும் நடுத்திட்டிலுள்ள ஒரு மரத்தினடியில், பதினைந்து நாட்கள் தங்கி, ஆற்று மணலால் சிவலிங்கம் தாபித்து அணையாக் காதலுடன் அரும்பூசை செய்து வந்தார். உண்டியும், உறக்கமும் இன்றி ஒப்பற்ற தவத்தினை மேற்கொண்டார். இடுப்பளவு நீரில் கரைக்குச் சென்றுதான் காலைக்கடன் கழிப்பார்.

உறவு கோல்நட்டு உணர்வு
கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே

என்ற அப்பர் பெருமான் வாக்கின் படிச் சுவாமிகள் மேற்காண்ட தவத்தின் பயனாகத் தெய்வக் காட்சியும் கிடைக்கப் பெற்றார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அடியார்கள் தொடர்பும், ஆன்மிக வாழ்வும், சீடர்கள் சேர்க்கையும் மடாலயங்கள் அமைப்பும் மிகுதியாயின. நினைத்தவை அனைத்தும் நிறைவேறின. துறவு மேற்கொண்ட தொடக்க நிலையில் முயற்சியின்றியே கேளாமலே சுவாமிகள் முகவாக்குக்காகக் காசியிலிருந்து உருத்திராக்க மூட்டையொன்று அஞ்சல் வழியாக வந்தது. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் வருங்காலத்தை அறிவிக்கக்கூடிய நன்னிமித்தங்களாக அமைந்தன.

சுவாமிகள் தம்மிடம் வரும் அன்பர்களை அமைதியாய் அமரச்செய்து திருமுறைப்பாடல்களை ஓதத் தொடங்குவார். அனைவரும் அவரைப் பின் பற்றிச் சொல்லுதல் வேண்டும். அவ்வாறு ஓதுங்கால் கண்ணீர் பெருகத் தழுதழுத்த குரலில் ஓதுவது இவரது இயல்பாகும். சுவாமிகளுக்கு எல்லா வசதிகளும், வாய்ப்புகளும், இருப்பினும் மிகவும் எளிய முறையிலேயே வாழ்ந்து வந்தார். சுவாமிகள் சேலம், தருமபுரி மாவட்டங்களில் பல சிற்றூர்களுக்குச் சென்று சைவக் கோட்பாடுகளைப் பரப்பியுள்ளார். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அசைவ உணவை விட்டுச் சைவ உணவினை உட்கொள்ளுமாறு மாற்றியிருக்கின்றார். அப்பகுதிகளில் வாழும் பெரியோர்கள் இவரைக் காட்டு விவேகானந்தர் என்று அழைக்கிறார்கள். பல பெரும் புலவர்கள் இவர்தம் இறையன்பினைப் பாராட்டிப் பாடியுள்ளனர். இவர் ஆங்காங்கு அமைத்த மடாலயங்கள் பெரியன. தம்மணம்பட்டி மாணிக்க வாசகர் மடாலயத்தில் ஆண்டுதோறும் ஆனி மக நட்சத்திரத்தில் சிறப்பாகப் பெருவிழா நடைபெறுகிறது. சுற்றுப்

புறச் சிற்றூர்களிலுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் அவ்விழாவில் கலந்து கொள்ளுகின்றனர். விழாவிற்கு வரும் அயலூர் மக்கள் அனைவருக்கும் உணவளிக்கப்படுகிறது.

சுவாமிகள் பாலமலை உச்சியிலுள்ள சித்தேச்சுரர் ஆலயத்திலும், கஞ்சமலை ஆலயத்திலும், திருச்செங்கோட்டு மலைச்சிகரத்திலும், சங்ககிரியின் உச்சியிலும், சில காலம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். சுவாமிகள் அண்ணாமலைப் பெருமானிடம் அளவிலாக் காதலுடையவர். மிகவும் தளர்ச்சியுற்ற 103 ஆம் வயதின் கண்ணும் அண்ணாமலையில் நடைபெறும் தீபத்திருவிழா, பொங்கற் பெருவிழா, அருளாளர் அருணகிரிநாத சுவாமிகளுடைய நினைவு விழா ஆகியவற்றில் கலந்து கொண்டார். முதுமை காரணமாகச் சில அன்பர்களைத் துணையாகக் கொண்டு திருவண்ணாமலை மடாலயத்திற்கு வந்து அன்பர் பலர்க்கு அன்னம் பாலித்தார். இவர் மடாலயத்தில் தங்கியிருக்கும் அத்தனை நாட்களிலும் திருமுறை பாராயணம், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவண்ணாமலையில் தவத்திரு. அழகானந்த சுவாமிகளால் மேற்கு மாடவீதியில் நிறுவப்பெற்றுள்ள மடாலயம். பல நல்ல அன்பர்கள் கூடி உறவாடுவதற்கு ஏற்ற இடமாக அமைந்துள்ளது இந்த மடாலயத்தில் இருந்துதான் ''அருள் நிலை அண்ணாமலை'' என்ற நூல் எழுதப்பெற்றது.

சுருங்கக்கூறின் இவருடைய நீண்ட ஆயுட்காலம் சைவத்தையும், சைவத் திருமுறைகளையும், பரப்புதற்கே பயன்பட்டிருக்கின்றது. அழுதடி அடைந்த அன்பராகிய மணிவாசகப் பெருமானே இவர்தம் வழிபடு தெய்வம். சுவாமிகள் ஏற்படுத்திய எல்லா மடங்களிலும் நால்வர்களுடைய திருநட்சத்திரங்களில் சிறப்பு ஆராதனையும் அன்னம் பாலிப்பும் நடைபெறுகின்றன. சுற்றுப்புறங்களில் உள்ள சிற்றூர் வாழ் மக்கள் ஆனிமக நட்சத்திரத்தன்று நீராடித் திருநீறணிந்து தம்மணம்பட்டி மடாலயத்தில் கூடுகின்றனர். அங்கு வந்து கூடுகின்ற நூற்றுக்கணக்கான மக்களுடைய சிவக் கோலத்தைக் காணும்போதுதான் தவத்திரு - அழகானந்த சுவாமிகள் சிற்றூர்களிலும், சுற்றுப்புறங்களிலும் செய்திருக்கும் பணியின் சிறப்பு வெளிப்படுகிறது.

அழகானந்த சுவாமிகள் தாம் நிறுவிய சில சிறு மடாலயங்கள் அந்தந்த ஊரினர் பொறுப்பிலேயே விட்டுச் சமாயச்சாரியாருடைய திருநட்சத்திர விழாக்களை நிகழ்த்தி வருமாறு வழி செய்திருக்கின்றார். அவர்களும் அவ்வாறே நிகழ்த்தி வருகின்றார்.

சித்தம் தெளிந்து சிவமானோர் எல்லார்க்கும்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே.

என்ற தாயுமானார் பாடலைச் சுவாமிகள் பலமுறை சொல்வார் அதற்கேற்ப அடியார்களைக் கண்டால் அகங் குழைந்து அளவளாவுவார். சமயப் பணி புரிபவர்களைக் கண்டால் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருப்பது இவர் இயல்பாகும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த நல்லடியாராகிய அழகானந்த சுவாமிகள் நிறுவியுள்ள் மடாலயங்கள் பலவும் அவர்தம் குறிக்கோளின்படிப் பயன்பட்டு, மேலும் வளர்ந்து சமயப் பணியாற்றி வர எல்லாம் வல்ல அண்ணாமலைப் பெருமானும் உண்ணாமுலைப் பிராட்டியும் அருள் பாலிக்கும் வண்ணம் அனைவரும் வேண்டிக் கொள்வோமாக.

அருள் திரு. அழகானந்த அடிகளார் 28.8.1984 -இல் அஃதாவது இரக்தாட்சி

ஆண்டு ஆவணி மாதம் 12ஆம் நாள் செவ்வாய்க்கிழமை இறைவனடி அடைந்தருளினார். தருமபுரி மாவட்டம், தருமபுரியை அடுத்த 8 கி.மீ.தூரத்தில் உள்ள தம்மணம்பட்டி என்ற சிற்றூரில் அவரால் கட்டப்பெற்ற மாணிக்கவாசகர் மடாலயத்தில் அவருடைய சமாதிக் கோயில் இருக்கிறது.

ஞானியார் அடிகள்

திருப்பாதிரிப் புலியூர் அருள்மிகு - பாடலேச்சுரர் பாடசாலையில் படிக்கும் மாணவர்களிடையே வார வழிபாட்டு முறையை தவத்திரு ஞானியாரடிகள் கற்பித்திருந்தார். அந்த முறைப்படியே மாணவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் பாடலேச்சுரர் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து வந்தனர். ஒருநாள் அரசுக் கல்வித் துறைத் தலைமை அலுவலரும் சைவப் பாதிரியார் என்று அன்பாக அழைக்கப் பெற்றவரும், அடிகளாரிடம் மிக்க ஈடுபாடு கொண்டவரும், சைவ சித்தாந்த சமாஜத்தின் வளர்ச்சிக்குரிய தொண்டுகளில் பங்கு கொண்டவருமாகிய ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் மாணவர் செய்யும் வார வழிபாட்டினைக் கண்ணுற்றார்கள், அவ்வழிபாடு சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

ஆகவே அவர் ஓய்வு பெற்ற பின் வாழ்நாள் முழுமையும் தமிழகம் எங்கும் சென்று சைவ நெறியையும் தமிழ்த் திருமுறைகளையும் பரப்பிட முயன்றார். சென்ற இடங்களிலெல்லாம் வார வழிபாட்டு மன்றங்களைத் தோற்றுவித்தார் அவர் முயற்சியால் தமிழகத்தில் நூற்றுக்கணக்கான வார வழிபாட்டு மன்றங்கள் தோன்றின. இவற்றிற்கும் மூல காரணாய் இருந்தவர் தவத்திரு ஞானியார் அடிகளே ஆவார்.

1916 திருவண்ணாமலை சத்தி விலாச சபையானது ஞானியார் அடிகளுடைய அறவுரைப்படித் துணி வாணிபம் ந.சி. முனுசாமிமுதலியார் அவர்களால் க்ட்டப்பட்டது. பிறகு அங்கு நடைபெற்ற ஓர் அன்னதான விழாவிற்கு வந்திருந்த திரு. ம. ரா. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் மாபெருங் கூட்டத்தைப் பார்த்து இவ்விடத்தில் சத்தி விலாச சபையும், தன் அங்கமாக ஒரு நூல்நிலையமும் தொடங்கினால் சிறப்பாக இருக்குமே என்றார். அவ்வாறே ஞானியாரடிகளுடைய ஆசியுடன் அப்பணிகள் தொடங்கப்பெற்றன. அந்நூல் நிலையத்தில் சாத்திரம், தோத்திரம், இலக்கணம், இலக்கியம், ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த நூற்றுக்கணக்கான நூல்கள் அங்கே நிரல்பட வைக்கப் பெற்றன. 19.5.1916ல் சத்திவிலாச சபையின் முதல் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. பத்தொன்ப தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே திருவண்ணாமலையில் சமயச் சொற்பொழிவு நடைபெற வித்திட்ட வித்தகர் ஞானியாரடிகளே ஆவர். அடிகளார் அன்று ஏற்றி வைத்த விளக்கு இன்று வரை நத்தாவிளக்காக தமிழகத் திற்கே வழிகாட்டியாக விளங்கிக் கொண்டு இருக்கிறது.

ஆண்டுதோறும் ஞானியாரடிகள் தீபத்திருவிழாவை முன்னிட்டு முன் கூட்டியே திருவண்ணாமலைக்கு வந்து சேருவர். இச்செய்தி நாடெங்கும் பரவியிருந்தது. ஆகவே தீபத் திருவிழாவைக் கண்டு வழிபடவும் ஞானியாரடிகளைக் கண்டு மகிழவும், வாய்ப்பிருந்தால் உரையாற்றவும் வேண்டி, யாழ்ப்பாணம் முதலான ஊர்களிலிருந்து அறிஞர் பெருமக்கள் அண்ணாமலையை நாடி வருவர். அவர்களைக் கொண்டே செலவில்லாமல் முதல் ஒன்பது நாட்களிலும்; சொற்

பொழிவுகள் நடைபெற வழிவகுப்பார். அவர் தலைமையில் திரளான மக்களும், அறிஞர்களும் வணிகர்களும் கூடும் அந்த அவையின் காட்சி, அன்று அநபாய சோழன் காலத்திலே தில்லை மாநகரிலே ஆயிரக்கால் மண்டபத்திலே அம்பல வாணர் திருவாக்கிலிருந்து வந்த உலகெலாம் என்ற சொல்லை முதலாகக் கொண்டு அருளிச் செய்யப் பெற்ற திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பெருமான் அரங்கேற்றம் செய்தக் காட்சி கண்முன்னே தோன்றும். வேறு வகையால் அடிகளார் அமர்ந்திருக்கும் அவையின் சிறப்பை அடியேனால் விளக்க இயலவில்லை.

இரவில் அண்ணாமலைப் பெருமான் அனைத்து அங்கங்களேடும் அன்பர்களுக்கு அருள் பாலிக்க வேண்டி வானளாவிய வாகனத்தில் திருவீதியில் எழுந்தருளி வருவார்.

அடிகளார் ஊன்றிய தண்டுடனும், ஒன்றிய உள்ளத்துடனும் இல்லத்தில் முன்றிலில் நின்ற மாணிக்கத்தின் மலை போல வெள்ளேற்றின் மேல் எழுந்தருளி வரும் அண்ணா மலையாரையும் உண்ணாமுலைத் தாயாரையும் உள்ளம் உருகி வழிபாடு செய்வார்.

பெருமானைத் தொடர்ந்து பின்னே வரும் தேவார ஓதுவார்கள், திருப்புகழ்க் குழுவினர் பாடும் இன்னிசைப் பாடல்களையும், ஆழ்ந்து கேட்டு சுவைப்பார்.

தேவார ஓதுவார்களும், நாதசுர வித்துவான்களும் அடிகளார் முன்னிலையில் வரும்போது நீண்ட நேரம் எடுத்துக் கொண்டு பாடுவார்கள். வாசிப்பார்கள் சுவாமிகள் படுக்கைக்குச் செல்ல இரவு இரண்டு மணி ஆகிவிடும். பிறகு விடியற்காலம் நான்கு மணிக்கு எழுந்து பூசை செய்ய ஆயத்தமாவார்.

(iii) பால் சாமியார்

வேப்பிலை சாமியார் என வழங்கும் தவயோகி பொன்னுசாமி அடிகளார்

வாலாஜா நகருக்கும் ஆற்காடு நகருக்கும் இடையில் பாலாற்றின் தென்கரையில் உள்ள குடிமல்லூர் எனும் கிராமத்தில் யாதவர் குடியில் சின்னையா பிள்ளைக்கும் சின்ன தாயம்மாளுக்கும் 1905ஆம் ஆண்டில் பொன்னுசாமி பிறந்தார்.

இளவயதிலே இவரும்இவரது நண்பர் கிருஷ்ணசாமி நாயகர் என்பாரும் மாலை நேரங்களில் பாலாற்றில் மணல் பரப்பில் அமர்ந்து தாயுமானவர் பாடல் பாடி தாங்களே அதற்கு உரை விளக்கம் கூறிக் கொண்டு பல பாடங்கள் மனனமும் செய்தார்கள். பொன்னுசாமி ஆசிரியப் பயிற்சியில் தேறி ஆரம்பப்பாட சாலை ஆசிரியப் பணி ஏற்று நல்லாசிரியர் எனப் பெயர் பெற்றார். அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு குறிப்பெடுத்து நீண்ட ஓய்வு நாட்களில் கிராமங்களுக்குச் சென்று சொற்பொழிவு நடத்தி பயிற்சி பெற்றார். புராணச் சொற்பொழிவுகள் செய்யவும் தொடங்கினார்.

அடிகளார் கைக்குத்தல் அரிசி சமைத்து கஞ்சிவடிக்காமல் கீரை உணவையும் சேர்த்து உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டார். 50 வயதிற்கு மேல் ஒரு வேளை உணவு உண்ணத் தொடங்கினார். அரைலிட்டர் பால், 5 வாழைப்பழம், தேங்காய், கத்திரிக்காய், தக்காளி, ஆரஞ்சு, சாத்துக்குடி, கீரைகள் ,சாப்பிடுவார், கடலை, பேரீச்சம்பழம், வாதாம்பருப்பு சில நாட்களில் வாங்கி உண்பார். பப்பாளி, அன்னாசி, மாம்பழம், திராட்சை, முந்திரி அந்தந்த காலங்களில் கிடைப்பதை வாங்கி உண்பார்.

காலை 5 மணிக்கு எழுந்து யோகாசனம், பிராணாயாமம் செய்வார். காலைக்கடன்கள் குளியல் முடித்து விட்டு சிவபூசை செய்வார். ஆரம்பத்தில் பிள்ளையார், முருகன், சிவலிங்கம் மூர்த்தங்களுக்குப் பாலபிடேகம் செய்து பன்னிரு திருமுறை ஓதுவார். பின்னர் உருத்திராக்க மணியில் 108 முறை திருவைந்தெழுத்து ஜபிப்பார். தியானம் முடிந்து நிவேதனம் செய்து உணவு ஏற்பார். பல ஆண்டுகளுக்குப் பிறகு சிவலிங்கபூசை மாத்திரம் செய்யத் துவங்கினார்

நாள்தோறும் ஆவின்பால், வாழைப் பழங்கள், தேங்காய் தவறாமல் உண்பார். மற்றைய பழங்கள், காய்கள் கீரைகள் மாறி மாறி உண்பார். கடலை உரித்து உண்பார். பிறகு வேப்பிலை, வில்வம், துளசி, கீழாநெல்லி, நெல்லிக்காய், அருகம்புல் ஒவ்வொரு நாளும் மாறி மாறி உண்பார். நன்கு மென்று உண்டு கடைசியாக பால் அல்லது இளநீர் பருகுவார்.

பிறகு சாய்வு நாற்காலியில் அமர்ந்து பன்னிரு திருமுறைகளை முன் தினம் விட்ட இடத்திலிருந்து பாக்களைப் படிக்கத் தொடங்குவார். சித்திரை மாதம் தொடங்கி பங்குனி மாதம் முடிய 12 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் ஒரு திருமுறையாக 12 திருமுறைகளையும் பாராயணம் செய்து முடிப்பார். இப்படி பல ஆண்டுகள் தொடர்ந்து வைராக்கியத்தோடு பாயணம் செய்து வந்தார். நைட்டிக பிரமசாரியாக வாழ்ந்து வந்தார்.

பள்ளியின் விடுமுறை நாட்களில் பல கிராமங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றத் தொடங்கினார். ஆரணி - முருகன் கோயில் - கந்தபுராணம் - 10 நாள் ஆரணி சத்திய விசயநகரம் - ராமபஜனை மடம் - கந்தபுராணம்.

சத்திய விசய நகரத்தில் மக்கள் கூட்டம் அடிகளை அணுகி வணங்கி ஆசி பெற்ற விபூதி வாங்கி பூசிச் செல்வார்கள். நோயுற்றவர்களும் வருவர். அவர்களுக்கு விபூதியும் வேப்பிலையும் கொடுத்து அனுப்புவார். மகப்பேறில்லாதோர் வணங்கி வேண்டுவர். கம்பு, கேழ்வரகு முளைகட்டி உண்டு பால் அருந்தச் சொல்வார்.

ஆரணி பாளையம் பக்கத்து விநாயகர் கோவில் வீதி - கந்தபுராணம் புரட்டாசி நவராத்திரி முதல் நாள் தொடக்கம்.

100 பேருக்கு மேல் அமர்ந்து கேட்கின்ற வகையில் கொட்டகை அமைத்தனர். நாள் ஆக ஆக கேட்கின்ற மக்கள் கூட்டம் ஆயிரக்கணக்கில் நிரம்பி வழிந்தது. சுற்றுப்புறத்தில், வீட்டின் வெளியில் அமர்ந்து திரளாக மக்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். 8 மணிக்கு அடிகளார் சொற்பொழிவு தொடங்குமுன் கொட்டகையில் கூட்டம் நிரம்பி வழியும், சொற்பொழிவு முடிந்ததும் அவரது காலில் விழுந்து வணங்கி விபூதி பெற்றுச் செல்வர். நாள்தோறும் ஒரு படி விபூதிக்கு மேல் செலவாகும்.

நகருக்கு அருகில் உள்ள பையூர், சைதாப்பேட்டை, இரும்பேடு, வெள்ளேரி, சேவூர், வடுகச்சாத்து, வேலப்பாடி, புலைப்பாடி, பெலாந்தாங்கல், வளைச்சித்தேரி, கவிநகரம், முள்ளிப்பட்டு, மெய்யூர், அடையபலம் முதலான சிற்றூர்களிலிருந்து நடந்தும் வண்டியிலும் ஆண்களும் பெண்களுமாக வந்து சொற்பொழிவினைக் கேட்டு மகிழ்ந்து அப்போதே ஊர் திரும்பி வீடடைவர். முடிந்து மக்கள் கூட்டமாக வீதியில் செல்லும் போது, சினிமா காட்சி முடிந்து மக்கள் வீடு திரும்புகின்றனரோ என பார்ப்பவர்கள் ஐயுற்று, அடிகளார் கந்தபுராணச்

சொற்பொழிவினைக் கேட்டு மக்கள் கூட்டமாகப் போகின்றனர் எனத் தெளிந்து மகிழ்வர்.

இன்னும் சற்று தூரத்தில் உள்ள பெரிய கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் இவரது கந்தபுராண சொற்பொழிவின் புகழ் பரவியது. பலரும் வந்து பலநாள் அவர்களது உறவினர் வீட்டில் தங்கி கேட்டு மகிழ்ந்து, தாமும் அடிகளாரை நம்மூரில் வைத்துச் சொற்பொழிவாற்றச் செய்ய வேண்டும் என்று எண்ணி மீள்வர்.

நான்கு பிள்ளைகள் உண்டி எடுத்து மக்களிடையிலே செல்வார்கள். உண்டி அளவுக்கு மீறி நிரம்பி வழியும். இதுவும் தவிர வேறு வசூல் இல்லை. பஜாரில் கடை வைத்திருப்பவர்கள் 8 மணிக்குள் கடையை மூடிவிட்டு சொற்பொழிவிற்கு வந்து விடுவர். அன்பர்கள் பால், பழம் கொண்டு வந்து கொடுப்பர். பொருளாகவும் கொடுத்து வணங்கி மீள்வர். இடையில் பார்வதி கல்யாணம், முருகன் பிறப்பு, தெய்வானை கல்யாணம் முதலான சொற்பொழிவு நாட்களில் விழா நடக்கும், வேட்டி முதலான சன்மானங்கள் செய்வர். கேட்கும் அன்பர் கூட்டத்தினர்க்குப் பிரசாதம் செய்து வழங்குவர்.

நான்கு மாதங்கள் தொடர்ந்து நடந்து தைப்பூச நாள் அன்று சீரும் சிறப்புமாக முடிந்தது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு சாப்பாடு, இனி இப்படிப்பட்ட சொற்பொழிவினை எப்பொழுது கேட்போம் என மக்கள் ஏங்கினர். முடிந்த மறுநாள் பல்லக்கு அமைத்து அதில் அடிகளாரை எழுந்தருளச் செய்து மேளதாளத்துடன் வீதிவலம் வந்தனர். அங்கங்கே நின்று அன்பர்களுக்கு ஆசி கூறி திருநீறு கொடுத்து அணியச் செய்தார். கடைசியாக நான்கு மாத சொற்பொழிவிற்கு அடிகளாருக்கு 400 ரூபாயும் கையேடு படித்தவர்க்கு (வரலாறு எழுதியவர்) 200 ரூபாயும் வழங்கினர்.

காஞ்சி கச்சாலீஸ்வரர் ஆலயம் - பெரியபுராணம்

இரண்டுமாதங்களுக்கு மேல் நடந்தது. பின்னர் வினாயக புராணம் ஒரு மாதம் நடைபெற்றது. அடுத்து காமாட்சியம்மன் குளத்துக்கு எதிரில் உள்ள மண்டபத்துக்கு எதிரில் திருவிளையாடற் புராணச் சொற்பொழிவு மாலை 2.00 மணிக்குத் தொடங்கி 5 மணி வரை நடந்தது. 64 நாட்கள் குறித்த நேரத்தில் ஆரம்பித்து குறித்த நேரத்தில் முடிப்பார்.

ஆரணி சுப்பிரமணிய சுவாமி கோவில் - கந்தபுராணம் 10 நாட்கள்

4.00 மணிக்கு 10 பேர்தான் இருந்தனர் ஒரு மணி நேரம் தள்ளி நடத்தலாம் என்றார்கள். ‘‘அது நல்லதல்ல’’ என்று கூட்டம் ஆரம்பத்தில் குறைவாக இருந்தாலும் குறித்த நேரத்தில் தொடங்கினார்கள்.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவில் வீதி - பெரியபுராணம். 2 மாதங்கள்.

சென்னை தம்புசெட்டித் தெரு காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலயம். 1940இல் 4 மாதங்கள்.

பெரிய புராணத் தொடர் நிறைவில் வெள்ளானை சருக்கம் முடித்து திருமுறை விழா நடைபெற்றது. விமானத்தில் திருமுறைகளைப் பட்டாடை விரித்து பீடத்தின் மேல் வைத்துத் திருவீதிஉலா நடந்தது. திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை குழுவினர் மேளவாத்தியம் முழங்கப் பொழுது விடிய விடிய

நடந்தது. மிகச் சிறப்பான விழா; மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

கந்தசுவாமி கோவிலுக்கு எதிரில் - காஞ்சிப்புராணம்.

மீண்டும் காளிகாம்பாள் கோயில் - திருவிளையாடற் புராணம் 30 நாட்கள்.

வந்தவாசி சலகண்டேசர் ஆலயம் - ஞானாமிர்தம் பாடல்.

இவை போல நாள்தோறும் கூட்டங்கள் மாதக்கணக்கில் நடந்தன. பாரதம், இராமாயணத் தொடர் இங்கு சேர்க்கவில்லை. பெங்களூர் சென்று பெரியபுராணச் சொற்பொழிவு 63 நாட்கள் நடந்தது. முடிவில் திருமுறை ஊர்வலம், திருமுறை மாநாடு. வட ஆற்காடு மாவட்டம் பகுதியில் கிராமம், கிராமமாகச் சென்று அடிகளார் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

அடிகள் புராணங்கள் நடத்துவதோடு இருந்து விடவில்லை. சாத்திர வகுப்புகளும் நடத்தியுள்ளார். திருவண்ணாமலையில் சிவஞான சித்தியாரும், பாண்டிச்சேரி, வந்தவாசியில் ஞானாமிர்தம், சிவஞானபோதமும் பாடம் சொன்னார்கள். குடியாத்தத்தில் இருமுறையும் மயிலாடுதுறையில் பாலகிருஷ்ண உடையார் முன்னிலையில் பலருக்கும் சாத்திர வகுப்புகள் நடத்தினார்.

திருவண்ணாமலையில் அண்ணாமலையார் ஆலயத்தில் முன் பிரகாரம் மாதப்பிறப்பு மண்டபத்தில் அடிகளார் தங்கியிருந்தார். அங்கு அன்பர்கள் எங்கும் விளம்பரம் செய்து அடிகளாரைக் கொண்டு பெரியபுராணம் நடத்த விரும்பினர். கோபுரத்திளையனார் சந்நிதி முன் பெரிய பந்தல் போட்டனர். திரளான மக்கள் கூட்டம். பெரிய கோபுரத்தில் ஒலிபெருக்கி கட்டினார்கள். புராணச் சொற்பொழிவு ஊர் முழுவதும் ஒலித்தது. 63 நாட்கள் விழாக்கோலமாக இருந்தது. புராண முடிவில் திருமுறை ஊர்வலம். யானையின் மீது திருமுறைகளை வைத்து 63 நாயன்மாரை விமானங்களில் எழுந்தருளச் செய்து நாதசுரம் வாத்தியம் முழங்க, ஓதுவார்கள் தேவார பாராயணத்துடன் மாடவீதிகளில் வலம் வரச் செய்தனர். ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு உணவளித்தனர். திருமுறை மாநாடு பல புலவர் பெருமக்களால் நடைபெற்றது. அதன் பிறகு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அதே இடத்தில் அடிகளாரைக் கொண்டு 5, 6 முறை பெரியபுராணம் நடத்தினர். திருமுறை விழாவும், திருமுறை மாநாடும் சிறப்பாக நடந்தேறி வந்தன.

அடிகளார் தமது இறுதிக்காலத்தில் மயிலாடுதுறை கு. பாலகிருஷ்ண உடையார் அவர்கள் இல்லத்தில் பல மாதங்கள் தங்கி புராணங்கள், சாத்திரங்கள் சொற்பொழிவுகள், நடத்தினார்கள். பிறகு அங்கிருந்து காசி யாத்திரை முடிந்து 27.1.1991இல் திருவண்ணாமலையில் அடிகளார் அண்ணாமலையார் அடிக்கமலம் சேர்ந்தார்.

இப்படி பல வரலாறுகளை பெரியவர் பாண்டுரங்கனார் அடுக்கிக் கொண்டே போனார்கள். அவர்கள் கூறியவற்றைப் பின் தொடர்ந்து அவர்கள் தந்த நூல்களையும் படித்து இப்பகுதியை எழுதலானேன். பாண்டுரங்கனார் குட்டி குட்டிச் செய்திகளாக மேலும் பல செய்திகள் கூறினார்கள்.

15 ஆண்டுகளுக்கு முன் மறைந்த முத்துசாமி நாயனார் (வயது 80) ஞாயிறுதோறும் சமயச் சொற்பொழிவுகள் செய்து வந்தார். ஈசான மடம் நடேச சுவாமிகள் சமய வகுப்புகள் நடத்தினார். 1931ல் தொடங்கப்பட்ட தேவார பாட

சாலையில் வைத்தீஸ்வரன் கோயில் பிடில் ராமலிங்கம் அவர்கள் 10 ஆண்டுகள் சிறப்பாக பாடம் நடத்தினார்.

(iv) பாண்டுரங்கனார்

5.6.1916இல் திருவண்ணாமலையில் திருவாளர் அருணாத்திரிப்பிள்ளைக்கும் திருமதி தாயார் அம்மையாருக்கும் இரண்டாவது பிள்ளையாக பாண்டுரங்கனார் பிறந்தார். இளவயதிலேயே உயர்திரு சூரியநாராயண செட்டியார் அவர்கள் நிறுவிய தேவாரப் பாடசாலை சேர்ந்து தேவாரம், திருவாசகம் ஆகியவற்றைப் பண்களோடு கற்றார். இங்கு ஒன்றரை ஆண்டுகள் திருமுறை பயின்றார். அன்று தேவார பாடசாலை ஆசிரியராக இருந்த பிடில் வித்வான் திரு. இராமலிங்கம்பிள்ளை என்பவர் சைவசித்தாந்தக கருத்துக்களைத் தெளிவாகக் கற்பித்தார். இன்றும் திருமஞ்சன கோபுரத்தின் முன்புறமும் பின்புறமும் தேவாரப்பாடல்கள் பாடிக் கொண்டிருந்த கலைஞர்களைச் சுதை வடிவிலே அமைத்துள்ளார்கள். இதில் முன்புறம் பாண்டுரங்கனார் அவர்கள் கீழ்த்திசையில் மூன்றாவது நபராக நின்று கொண்டிருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வித்வான் பட்டம் பெற்றார். திருவண்ணாமலை டேனிஷ்மிஷன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். 1974இல் பணி ஓய்வு பெற்றார்.

பணிநிறைவு பெற்ற நிலையில் பால்சாமியார் என்ற பொன்னுசாமி அடிகள் பாண்டுரங்கனார் அவர்கள் வீட்டிற்குச் சென்று, ''யான் மூன்றுமாத காலம் பெரிய புராணத்தொடர் சொற்பொழிவு நிகழ்த்த விரும்புகிறேன். நீங்கள் செயலராக இருக்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். பாண்டுரங்கனார் இசைவு தர சிறப்பாகத் தொடர் சொற்பொழிவு நடைபெற்றது. இக்குழுவிற்கு முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்றார்கள்.

பெரியபுராணத் தொடரோடு நின்றுவிடாமல் இப்பணி தொடர ''திருமுறைக்கழகம்'' என்ற அமைப்பினை குழுவினர் உருவாக்கி ஒவ்வொரு பௌர்ணமியிலும் சொற்பொழிவு, ஞாயிறுதோறும் உழவாரப் பணி, வார வழிபாடு, நூல் வெளியீடு எனப் பணியாற்றினார்.

திருமுறைக் கழகத்தினர் மிகச் சிறப்பான பணி ஒன்றினைச் செய்கின்றனர். கார்த்திகை தீபப் பெருவிழாவின்போது எட்டாம் திருவிழா அன்று எட்டு சிவலிங்க மூர்த்திகட்கும் எட்டு நந்தி தேவர்க்கும் அபிடேக ஆராதனை நடத்துகின்றனர். அன்றைய பகற் பொழுது முழுமையும் உடன் வரும் திரளான மக்கள் திருவைந்தெழுத்து மந்திரத்தையும், திருமுறைப் பாக்களையும் ஓதிக்கொண்டே செல்வார்கள். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் அன்பர்கள் வருவார்கள்.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தொடர் சொற்பொழிவுகள் நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக நூல்கள் வெளியிட முடிவு செய்தனர். புலவர் இராமலிங்கனாரும் புலவர் சம்பந்தனாரும் கழகத்தில் சேர்ந்து பேரார்வம் காட்டி வருகின்றனர். இவர்களின் முயற்சியால் 2005ஆம் ஆண்டுடன் 51 இலவச நூல்கள் வெளிவந்துள்ளன.

திருவண்ணாமலை மேற்கு வீதியில் உள்ள அழகானந்த சுவாமிகள் மடாலயத்தில் பாண்டுரங்கனார் ஏறக்குறைய 30 ஆண்டுகளாகத் தங்கியிருந்து தொண்டாற்றி வருகிறார்கள். பாண்டுரங்கனார் இலக்கிய இலக்கணம் கற்க

வேண்டித் தன்னை நாடி வந்தவர்க்கு அன்புடன் அவற்றைக் கற்பித்து வருகிறார். அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் தினமும் மாலை 6.00 மணி முதல் 7.30 வரை கூட்டு வழிபாடு நடத்தி வருகிறார்கள். வெள்ளிக்கிழமை தோறும் சான்றோர்களை அழைத்துச் சொற்பொழிவு நிகழ்த்த ஏற்பாடு செய்கிறார்கள். கடைஞாயிறன்று குகை நமச்சிவாயர் குகைக்கோயிலுக்குச் சென்று கூட்டு வழிபாடு செய்து சொற்பொழிவும் நிகழ்த்துகிறார். பத்தொன்பது ஆண்டுகளாக திருவண்ணாமலையில் ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் திருக்குறள் பேரவையிலும் தவறாமல் பங்கு கொள்கிறார்.

இந்நாள் வரை அவர் வெளியிட்ட நூல்கள் ஐம்பத்தொன்பது ஆகும். இவற்றுள் சில அவர் சுயமாகச் சிந்தித்து வெளியிட்டவை. சில தொகுப்பு நூல்கள் ஆகும். ''அருள்நிறை அண்ணாமலை'' என்ற நூல் சுயமாகச் சிந்தித்துப் பல இடங்கட்குச் சென்று செய்திகளைச் சேர்த்து முறைப்படுத்தி எழுதிய நூலாகும். இந்நூலில் பல்வேறு செய்திகள் அடங்கியுள்ளன. திருவண்ணாமலை பற்றிய, முழு வரலாறும் (புராணச் செய்திகள் உட்பட) இங்கு வந்து தங்கிய பல அருளாளர்களின் அருள் வரலாறுகளும் இதில் அடங்கியுள்ளன. இந்நூற் பொருளைச் சேர்த்து எழுதி முடிப்பதற்கு ஐந்தாண்டு தேவைப்பட்டன. 5 நூல்களும் திருமுறைக்கழகத்தின் சார்பாக வெளியிடப்பெற்றவை ஆகும்.

(v) நாராயணசாமி

பாண்டுரங்கனாரை ஸ்பரிசித்த அனுபவமே அசை போட பல நாட்கள் பிடிக்கும். நாராயண சாமி என்ற அறிஞரைப் பார்க்கப் பாண்டுரங்கனார் ஆற்றுப்படுத்தினார். பெரியவர் நாராயண சாமி அவர்கள் பரவச நிலையில் இருந்தார்கள். திருவாசகானந் தத்தில் திளைத்துக் கொண்டிருந்தார்கள். நானும் எனது துணைவியும் திக்குமுக்காடிப் போனோம். ''பருகியும் ஆரேன்; விழுங்கியும் ஓல்லகில்லேன்'' நிலைதான்.

திருவாசகப் பாடல்கள் சாத்திரமும் தோத்திரமும் கலந்தவை. ''அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத்திடை அழுந்திக் கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப் பழமலம் பற்றறுத்து ஆண்டவன் பாண்டிப் பெரும்பதமே முழுதுலகும் தருவான் கொடையே சென்று முந்துமினே''

இது தோத்திரப்பாடல் ஆகும். ''அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத்திடை அழுத்திக் கழிவில் கருணையைக் காட்டி'', ''கடிய வினை அகற்றி'', ''பழமலம் பற்றறுத்து'', - அனைத்தும் சாத்திரக் கருத்துக்களே. மனந்தூய்மை, இனந்தூய்மை இரண்டும் தேவை என்பார் திருவள்ளுவர். அவையிரண்டும் ''உடையாள் உன்றன் நடுவிருக்கும்'' என்ற பாடலில் அடியார் நடுவுள் இருக்கும் இனந்தூய்மையைச் சுட்டுகிறார். ''உற்றாரை யான் வேண்டேன், இனியமையும்'' - இவையெல்லாம் இல்லாமையே இனந்தூய்மை, இது எதிர்மறையால் இனந்தூய்மை சொல்லப்பட்டது. இனந்தூய்மை, வந்து விட்டால் மனந்தூய்மை தானாக வந்து விடும், '''கற்றாவின் மனம் போலக் கசிந்துருகல்'' மனந்தூய்மை தானே!

சிவபுராணத்தின் விரிவுதான் திருவாசகம், சிவுபராணத்திலேயே சத் சித் ஆனந்தம் வந்து விடுகிறதே!

''மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று
வீடுற்றேன்

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா'
[வரி 32 – 34]

இது சத்

''மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற
மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்
பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும்
நல்லறிவே''
[வரி 38 – 40]

இது ''சித்''.

''ஆற்றின்ப வெள்ளமே! அத்தா மிக்காய்
நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத
நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே
வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என்
சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே!''

இது ''ஆனந்தம்''

திருவம்மானை, திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம் ஆகியன அதிகக் கருத்துக்கள் நிரம்பியுள்ளன. அவற்றிற்குப் பின்வரும் பாடல்கள் கூறியன கூறலே. இக்கருத்து மேலும் ஆய்வு செய்யப்படவேண்டும்.

பெரியவர் நாராயணசாமி அவர்கள் அப்படியே கொட்டித் தீர்த்து விட்டார்கள். இவற்றைக் கூறும் பொழுது பெரியவர் முகத்தில் ஆனந்த பாஷ்பம் பொங்கி இருந்தது. மேலும் மேலும் பேசிக் கொண்டிருந்தார். எங்களுக்குதான் நேரமில்லை. இவையெல்லாம் புத்தகவடிவம் பெறவேண்டும். 22.3.1922ல் பிறந்த நாராயணசாமி அவர்கள் 12 ஆண்டுகள் நால்வர் விழா நடத்தினார். திருமுறை முற்றோதல், திருமுறைப்பாராயணம் என திருமுறைப்பணி செய்து வந்தார்.

பாண்டுரங்கனார் அறிவுப்பிழம்பு; பெரியவர் நாராயண சாமி உணர்வுப் பெருக்கு; இறைபணி சித்தர் க. சண்முகனார் செயல் வடிவம்.

(vi) க. கண்முகனார்

சண்முகனார் தனது அரசாங்க வேலையைக் கூட ராஜினாமா செய்துவிட்டு ஆன்மீகப்பணியில் இறங்கிவிட்டார். 1966இல் இறைபணி மன்றத்தைத் தொடங்கிய சண்முகனார் 38 ஆண்டுகளில் 455 கிருத்திகை விழாக்கள், 763 நிகழ்ச்சிகள் (தனிச்சொற்பொழிவுகள், வழக்காடு மன்றங்கள், பட்டிமன்றங்கள்) நடத்தியுள்ளார்.

வாரியார் சுவாமிகள், கிரன் ஜெயகுமாரி பாஸ்கரன், சரசுவதி இராமநாதன், இரா. செல்வக்கணபதி, இரா.ருக்மணி, வெ. கிருஷ்ணமூர்த்தி, சீனி. சம்பத்து ஆகியோரைக் கொண்டு 31 தொடர் சொற்பொழிவுகள் நடத்தியுள்ளார். கி.வா.ஜ., ம.பொ.சி, கிரிதாரி பிரசாத், மதுரை ஆதீனம், ஊரன் அடிகள் சுகிசிவம், சத்தியசீலன் அ. அறிவொளி ஆகியோர் சொற்பொழிவாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

38 ஆண்டுகளில், 763 நிகழ்ச்சிகளும் தடைப்படாமல் நடந்தன. தனது தந்தையார் இறந்த நாள் அன்றும், தனது மாமியார் இறந்த அன்றும் கிருத்திகை விழாவை நடத்தினார்.

(பிறப்பு - 28.1.1924; பெற்றோர் - கே. சுப்பிரமணிய நயினார்; சுந்தரம் அம்மாள்)

அடுத்து ஆலால சுந்தரம் அவர்களைப் பார்த்தேன். தேவிகாபுரம் சென்று விட்டார்கள். மீண்டும் அடுத்த

நாள் சென்றேன். அவர்களே எண்பது வயது நிறைந்தவர். அவர்கள் இரண்டு தலைமுறை வரலாற்றினைச் சொன்னார்கள். நியாயமாக இப்பகுதி தேவிகாபுரத்தில் இடம் பெற வேண்டிய ஒன்று. ஆலாலா சுந்தரனார் திருவண்ணாமலையில் இருப்பதால் இங்கு இடம் பெறுகின்றது.

திருஞானம்

திருஞானம் (பிறப்பு - 1931; பிறந்த ஊர் சாணிப்பூண்டி) திருவண்ணாமலையில் இருக்கிறார். அவரது வீட்டு மதில் சுவர்களில் எல்லாம் குறட்பாக்கள் எழுதப்பட்டுள்ளன. திருக்குறள் நெறியகம் நிறுவி குறள் நெறி பரப்பி வருகின்றார். சைவ சமய சொற்பொழிவாளர்.

சுப்பிரமணிய சுவாமிகள்

திருஞானம் அவர்களின் தந்தை வழிப் பாட்டனார் சுப்பிரமணிய சுவாமிகள் ஆவார். சாணிப்பூண்டியில் பிறந்தவர். தேவிகாபுரத்தில் வசித்து வந்தார். 1862இல் பிறந்தார். 1948ல் மறைந்தார் தேவிகாபுரத்தில் சுந்தரர் மடம் கட்டி ஆசிரியர் ஒருவரை வைத்துத் திருமுறைகளைப் பண்ணுடன் பாடக் கற்றுக் கொடுத்தார். பத்து, பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து செய்து வந்தார். புலால் உண்ணாமையைக் கடுமையாகக் கடைப்பிடித்துத் தான் பின்பற்றியதோடு மற்றவர்களையும் பின்பற்றச் செய்தார். அவர் சமயச் சொற்பொழிவுகள் செய்து வந்தார்.

நாராயணசாமி பிள்ளை

சுப்பிரமணிய பிள்ளை ஒருமுறை ''கொல்லான் புலால் உண்ணாமை'' என்ற திருக்குறள் பாடலை விளக்கிப் புலால் உண்ணாமையைப் பற்றி விரிவாக விளக்கினார். அந்தச் சொற்பொழிவைச் செவிமடுத்த தேவிகாபுரம் நாராயணசாமிப்பிள்ளை புலால் உண்ணுதலை நிறுத்தினார். சிவபூசை செய்வதில் தவறக்கூடாது என்று உறுதிபூண்டார், சிவ பூசை செய்யாத பிள்ளைகளுக்கு வீட்டில் உணவு தரமாட்டார். ஆசிரியராக இருந்த சுப்பிரமணியபிள்ளை மடாதிபதியானார், ''தேவார திருவாசகம் கற்றுத் தாருங்கள்'' என நாராயணசாமி பிள்ளை அவர்கள் சுப்பிரமணிய பிள்ளை அவர்களைக் கேட்க திருவண்ணாமலையிலிருந்து தேவார ஆசிரியர்களை வரவழைத்து தேவாரம் நடத்தலானார். நாராயணசாமி பிள்ளையவர்களுக்குச் சுந்தரர் பேரில் ஈடுபாடு அதிகம். சுந்தரர் குருபூசையை வெகு சிறப்பாகச் செய்வார். திருக்கூட்டம் எனில் 50 பேர் இருப்பார்கள். 1937இல் தனது 54 வயதில் நாராயணசாமி பிள்ளை இறைவனடி சேர்ந்தார்.

ஆலாலசுந்தரனார்

நாராயணசாமி பிள்ளையின் திருமகனார் தான் முன்னர் கூறப்பட்ட ஆலாலசுந்தரனார் அவர்கள். *15.11.1925* இல் தேவிகாபுரத்தில் ஆலால சுந்தரனார் பிறந்தார். இவரது 12ஆவது வயதிலேயே இவரது தந்தையார் இவரைச் 'சுந்தரர்' பற்றிப் பேச வைத்தார். இவருக்கு 25 வயதிலேயே நால்வர் பற்றிய சிந்தனை வந்துவிட்டது. 22வது வயதில் ஆர்வம் மேலிட்டு இவரும் இவரது நண்பரும் சேர்ந்து நோட்டீசு அச்சடித்து அனைவரையும் அழைத்து; பேச ஆரம்பித்தார். 72 வாரம் திங்கட்கிழமை தோறும் 72 அடியவர்கள்பற்றி உரையாற்றினார். 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். 1954இல் இன்றைய நாளில் தருமையில் அருளாட்சி செய்து வரும் ஸ்ரீலஸ்ரீ

26ஆவது குருமகாசந்நிதானமவர்கள் அப்பொழுது தம்பிரான் சுவாமிகள், முத்து சு. மாணிக்கவாசக முதலியார் ஆகியோரை அழைத்து யானை மேல் ஊர்வலம் நடத்தி விழா கொண்டாடினார். ஊர் மக்களுக்கு எல்லாம் ஒரே வியப்பு! இதுபோல 2,3, முறை நடத்தியுள்ளார். வெளியுலகில் பெயர் பரவ ஆரம்பித்தது. பல இடங்களில் சென்று சொற்பொழிவு ஆற்றினார். பாரதம், இராமாயணம் சொல்வதேயில்லை. திருவாவடுதுறையாதீனம் நடத்தும் சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியராகப் பாடம் நடத்துகிறார். இதுவரை 4 தொகுப்புகள் நிறைவேறியிருக்கின்றன. சாத்திரம், தோத்திரம் கூறுவதில் வல்லவர். பெரியபுராணம் தேவிகாபுரம், சேத்துபட் ஆகிய ஊர்களில் 5 முறை நடத்தியிருக்கிறார். இன்று வரை நால்வர் குருபூசை விடாமல் நடத்தி வருகிறார்.

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்களின் சொற்பொழிவுகள் எல்லாம் காற்றோடு காற்றாய் கலந்து விட்டன என யாரும் கவலைப்படவேண்டாம். திருவாசகம் - 120 மணி, திருக்கோவையார் 19 மணி, திருவிசைப்பா - 9 மணி, பதினோராந்திருமுறை 45 மணி, திருமந்திரம் - 40 மணி, பெரியபுராணம் - 150 மணி கந்தபுராணம் - 15 மணி, திருவிளையாடற்புராணம் 75 மணி உண்மை விளக்கம் - 7 மணி, திருவருட்பயன் - 4 மணி மற்றும் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் என்று அத்தனையும் ஒருவர் ஒலிநாடாவில் பதிவு செய்து கேட்பவர்க்கு விலைக்குக் கொடுக்கிறார். இதுபோல தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரின் பேச்சுகளைப் பதிவு செய்து கேட்பவர்களுக்கு விலைக்குக் கொடுக்கிறார். இவையெல்லாம் 1 மணி, 2 மணி அளவிலே உள்ளன. கு. சுந்தரமூர்த்தியவர்கள் உரை மட்டும் 400 மணி நேரத்துக்கு மேல் பதிவு செய்துள்ளார். அவர்தான் சி.மனோகரன் அவர்கள். ''சுந்தரமூர்த்தியவர்களின் பேச்சு அமைந்த ஒலி நாடாக்களைப் பாதுகாக்கக் காரணம் என்ன?'' என்று தினமணி நிருபர் கேட்ட பொழுது ''எனக்குச் சைவ சமய ஈடுபாடு அதிகம். கு.சுந்தரமூர்த்தி அவர்கள் எதனைப் பேசினாலும் சங்க இலக்கிய மேற்கோள்களாகக் காட்டுவார். சமய நூல்கள், புராண நூல்கள் பற்றியெல்லாம் கூறுவார். எனவே தொடர்ந்து அவர் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பதிவு செய்தேன்'' என்றார். ''பேச்சுப் பதிவில் பல நெருக்கடிகளைச் சந்தித்திருப்பீர்களே?'' என்று கேட்டதற்கு ''பொருளாதார நெருக்கடியால் பல முறை துவண்டுள்ளேன். 30 ரூபாய் பேருந்துக்கு இல்லாமல் பலமுறை திண்டாடியுள்ளேன்.'' என்கிறார்.

பொருளாதாரச் சிக்கல்களையும் தாண்டி ஒரு அரும்பெரும் தமிழ்ப்பணி சைவப்பணி ஆற்றியிருக்கிறார் மனோகர் அவர்கள். (பிறந்த ஆண்டு - 1948; பிறந்த ஊர் - திருவண்ணாமலையை அடுத்த சோழவரம்).

(vii) திருமுறைக்கழகம்

சைவ அமைப்புகள் என்ற வகையில் பெரியவர் பாண்டுரங்கனார் ஆற்றிவருகின்ற பணிகள் எல்லாம் அவர் செயலராக இருக்கின்ற திருமுறைக் கழகத்தின் பணிகளாக அமைந்துள்ளன. திருமுறைக்கழகத்தின் பணிகளாக அமைந்துள்ளன. திருமுறைக்கழகம் தொடங்கி 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. சேஷாத்திரி சுவாமிகள் அற்நிலையத் தலைவர் வழக்கறிஞர் ஆர். முத்துக்குமாரசாமி அவர்களே திருமுறைக்கழகத்தின் நிறுவனர் தலைவர் அவர்கள் இன்று

வரை தலைவராகப் பணியாற்றி வருகிறார்கள்.

(viii) காந்திமதி அம்மாள்

தமிழகத்து சிவனடியார்களுக்குக் குறிப்பாக திருவண்ணாமலை செல்கின்றவர்களுக்கு காந்திமதி என்ற பெயர் தெரியாமல் இருக்க முடியாது. தலயாத்திரையாக வரும் அடியவர்களுக்காகவே ஒரு இல்லம் கட்டியுள்ளார். அடியவர்களுக்கு உணவு படைக்கும் அன்னபூரணி. மாத சிவராத்திரியன்று அன்னதானம் செய்கிறார். (பிறந்த ஆண்டு - 1947). 12 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட அப்பர் உழவாரப்பணி மன்றத்தின் (1993) செயலராகப் பணியாற்றுகிறார். தலைவர் - தனசேகர் ஆரம்பத்தில் திருவண்ணாமலையில் உழவாரப்பணி செய்து வந்தார்கள். பின்னர் சுற்றுப்புறத்தில் உள்ள பாடல்பெற்ற தலங்களில் உழவாரப் பணி செய்ய ஆரம்பித்தார்கள். தேவைப்படும் கோயில்களில் நந்தவனத்தைக் காக்க மோட்டார் வாங்கிக் கொடுக்கிறார்கள். அண்மையில் இறையடி அடைந்து விட்டார்கள்.

(ix) சோமவார வழிபாட்டுச் சங்கம்

14.7.1976 இல் சுந்தரம்பிள்ளை அவர்களால் தொடங்கப்பட்டது சோமவார வழிபாட்டுச் சங்கம். இன்றைய தலைவர் அரங்கநாத செட்டியார் ஆவார்.சோமவார வழிபாடு, விசாக நட்சத்திரத்தில் கம்பத்திளையனார்க்கு அபிடேக ஆராதனை, மகாசிவராத்திரி மூன்றாங்கால அபிடேகம், 29 ஆண்டுகளாக சித்திரை மாதத்தில் அன்னம் பாலிப்பு, சிறு நூல்கள் வெளியீடு, ஏகாம்பரேசுவரர் ஐம்புகேசுவரர், சிதம்பரேசுவரர் திருக்கோயில் திருப்பணி, அமாவாசை மண்டபத் திருப்பணிக்கு உதவி எனப் பணியாற்றுகின்றனர்.

சில வரலாற்றுத் தகவல்கள்

மீண்டும் பாண்டுரங்கனார் அவர்களின் வரலாற்று நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். துணி வாணிபம் செய்து வந்த நாராயணசாமி முதலியார் 50 ஆண்டுகளுக்கு முன் ஞாயிறுதோறும் சமய வகுப்புகளை முன் நின்று நடத்தினார். அவருக்குப்பின் சாமிநாத முதலியார் நடத்தி வந்தார். இவருக்கும் ஜவுளி வியாபாரம். இவர் முத்துசாமி நயினாரிடம் பாடம் கேட்டவர்.

பூத்தொடுத்தல்

1896 - 1977 களில் வாழ்ந்த ஆர்.துக்கா செட்டியார் என்பவர் திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு மலர் கொடுக்க நந்தவனம் உருவாக்கினார். அதற்கான நிலமும் தந்து நந்தவனமும் அமைத்து பூத்தொடுத்து கொடுத்து வந்தார். அவரது இருமகள்களான ராஜேஸ்வரி (2005ல் வயது 70), கல்யாணி (65) இருவரும் திருமணம் செய்து கொள்ளாமல் இன்னும் பூக்கைங்கர்யமாக 50 ஆண்டுகளாக மாலை தொடுத்து இறைவனுக்குத் தந்து வருகின்றார்கள். நடராஜர் பாத மலர்களில் பூச்சலங்கை போல அழகுற இருக்கும்.

பிற தொண்டுகள்

ஜெயா அம்மாள் (வயது 50) பூத்தொடுத்தல், திருக்கோயிலில் கோலம் போடுதல் 20 ஆண்டுகளாகச் செய்து வருகிறார். 80 வயதுடைய பாகீரதி அம்மாள் 50 ஆண்டுகளாகக் கோலம் போடுகிறார்கள். எந்த விழாவானாலும் மாக்கோலம் போடுதல் இவர்கள் பணி. மு.கண்ணப்ப முதலியார் (வயது 80) 50 ஆண்டுகளாகத் தூபம் போடுதல், அஷ்ட லிங்கத்திற்கும்

வார வழிபாடு, ஞாயிறு தோறும் கோபுரத்து இளையனார் சந்நிதியில் சைவ சித்தாந்த கருத்துகளை விளக்குதல் எனத் தொண்டு புரிகிறார். அருணாசல ஆச்சாரி (60) 4,5, ஆண்டுகளாகப் பூத்தொடுத்தல் கைங்கரியம் செய்து வருகிறார். 15 ஆண்டுகளுக்கு முன் ஆசிரியர் குமாரர் (40) அர்த்தசாம பூசைக்கு பூக்கட்டித்தருதல், கோலம் போடுதல் ஆகிய பணிகளைச் செய்து வந்தார்.

அண்ணாமலையில் ஞானமும் தொண்டும் கலந்து மணக்கின்றன.

21. மடவாளம்- திருப்பத்தூர்

மடவாளம் பன்னிரு திருமுறை மன்றம்...

முனைவர் புரிசை ச. நடராசன்

ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த சைவப்பேரியாறு. பன்னிரு திருமுறை மன்றத்தைப் பற்றிச் சொன்னால் நடராசனாரைச் சொன்னது போலாம். மன்றத்தின் செயல்பாடு எல்லாம் நடராசனாரின் செயல்பாடே ஆகும்.

நடராசன் செயல்பாடெல்லாம் மன்றத்தின் செயல்பாடே!

நடராசன் அன்பெல்லாம் மன்றுளான் பக்கலே!

எனவே தனியாகப் பிரித்துக் காணவேண்டியதில்லை. 4.3.1996ல் மடவாளம் பன்னிரு திருமுறை மன்றத்தின் தொடக்கம்! 1996... முதல் ஆண்டு 12 மாதங்களும் - பன்னிரு திருமுறைகள்

1997... 2ம் ஆண்டு - 12 மாதங்களும் - திருவாசகம்.

1998... 12 மாதங்களும் - பஞ்ச பூதத்தலங்கள், அட்டவீரட்டத்தலங்கள்.

1999... மூன்று ஆண்டுகள் - திருவிளையாடற்புராணம்



இடமிருந்து வலம் : பெ. செல்வம், புரிசை நடராசன், மன்றத் தலைவர் வீ. மகாலிங்கம்

2003... 12 மாதங்கள் - அருளாளர்கள்.

2004... பெரிய புராணம் தொடர்ந்து நடைபெறுகிறது. இத்துணை சொற்பொழிவுகளும் ஆற்றுபவர் நடராசனாரே!

எந்தவிதப் பொருளும் பெறாமல் பணியாற்றுகின்றார்.

தொழிலுக்கேற்ற தொண்டு!

இது சொல் தொண்டு!



புரிசை நடராசன்

மடவாளம் கோயில் திருப்பணியை திருப்பணிக்குழுத்தலைவர் அருணா அண்ணாதுரை என்பவர் பெரும் நிதிதிரட்டி நிறைவு செய்து குட நீராட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்து வந்தார். பன்னிரு திருமுறை மன்றத்தார் முன் வந்து பேரூர் சாந்த லிங்க இராமசாமி அடிகளாரை அழைத்து அவர்கள் தலைமையில் தமிழ் வழி நன்னீராட்டு விழா நடத்தினர். அம்பிகையின் திருப்பெயர் சுபத்திர ஜனனி, இவ்வட மொழிப்பெயரை ''நலம் வளர் நாயகி'' என்று தூய தமிழ்ப் பெயராக வழங்கப் பெரூராதீனம் அவர்களின் அருந்துணையை நடராசனார் வேண்டிப் பெற்றார். அக்கோயிலில் பழுதடைந்த நிலையில் இருந்த திருத்தேரினை நடராசனார் அன்பர்களின் ஒத்துழைப்போடு நான்கு இலட்ச ருபாய் செலவில் புதுப்பித்து தேர்த்திருவிழாவும் நடத்திச் சாதனை புரிந்துள்ளார்.

திருக்குட நன்னீராட்டிற்குப் பிறகு கோயிலில் வியாழன் தோறும் ஆலமர் செல்வன் வழிபாடு தொடங்கிய நடராசனாரின் முயற்சியால் மன்றப் பொறுப்பாளர்கள் பல அன்பர்களை அணுகி ஆண்டுக்கு ஆறு நடராசர் அபிடேகம், கிருத்திகை வழிபாடு சங்கடகரசதுர்த்தி வழிபாடு, நால்வர் குருபூசைகள், கார்த்திகை மாத சோம வார வழிபாடு என ஏற்பாடு செய்தனர்.

1.10.2000இல் தொடங்கி இதுவரை 80க்கும் மேற்பட்ட திருவாசக முற்றோதலை இல்லங்கள் தோறும் மன்றத்தார் செய்து வருகின்றனர். 2002ல் 5 மாதங்கள் தொடர்ந்து திருவாசகப் பயிற்சி வகுப்புகள் நடத்தினர்.

ஆண்டுதோறும் மகாசிவராத்திரியன்று தலயாத்திரை, காசியில் நடக்கும் திருமுறைக் கருத்தரங்கம் இவற்றில் மன்றத்தார் பங்கு கொள்கின்றனர்.

திருப்பத்தூரையடுத்துள்ள கதிரம்பட்டியில் வாழும் சைவப் பெண்கள் மகாசிவராத்திரியன்று பிருதிவிலிங்கம் செய்து இரவெல்லாம் கண்விழித்து வழிபாடு செய்வார்கள். ஆண்டுதோறும் புரிசையார் சென்று சிவபரம் பொருளைப் பற்றி விரிவுரையாற்றுவார், கதிரம்பட்டியில் நிரந்தரமாக ஒரு சிவன் கோயில் உருவாக வேண்டுமென்று புரிசையார் விரும்பினார். மாதந்தோறும் பெரியபுராணச் சொற்பொழிவுகள் செய்யத் தொடங்கி 18 மாதங்களில் நிறைவு செய்தார். கதிரம்பட்டி மிகச்சிறிய ஊர். மொத்தமே 50 வீடுகள் தாம் ஊரில் உண்டு. அங்கு 18 மாதங்கள் பெரிய புராணத் தொடர் சொற்பொழிவு நிகழ்ந்தது. நிறைவு நாளன்று சிவபெருமானுக்குத் திருக்கோவில்

அமைக்கும் திட்டம் பற்றிப் புரிசையார் எடுத்துரைத்தார். ''சிவலிங்கம் மட்டுமே வைக்கப் பெறல் வேண்டும்; பரிவார தேவதைகள் கூட வேண்டாம். ஒரு தெய்வ வழிபாடே உயர்ந்தது'' என்றார் புரிசையார். ஐந்து மாதங்களில் அழகிய ஆலயம் உருவாயிற்று. 23.6.2002 அன்று திருநெறிய தமிழ்த் திருக்குட நன்னீராட்டு மிகச்சிறப்பாக நடை பெற்றது. வழிபாடும் முறையாக நடைபெற்று வருகின்றது.

மடவாளத்தில் நடந்த தமிழ்முறை நன்னீராட்டு விழா அப்பகுதி மக்களைப் பெரிதும் கவர்ந்தது. பல ஊர் அன்பர்கள் தங்கள் ஊர்களிலும் தமிழ் முறை நன்னீராட்டு விழா செய்ய விருப்பம் கொண்டனர். புரிசையார் வழிகாட்டுதலின் பேரில் பன்னிரு திருமுறை மன்றத்தார் முனைந்து நின்று தென்சேரிமலை திருநாவுக்கரசுவாமிகள் திருமடத்தின் அதிபர் முத்து சிவராம சாமி அடிகள் வேள்வி ஆசிரியராக விளங்கவும், பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்றச் செயலாளர் திரு. ப. குமாரலிங்கம் தம் அடியார் குழாத்தோடு இதுவரை 40க்கும் மேற்பட்ட திருக் கோயில்களில் தமிழ்முறை குடநீராட்டு விழாக்கள் நடத்தியிருக்கின்றார். இப்பெரும் பணியில் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள பெரிய கரம் கோவிலில் முதன் முதலாக 1.7.1998 அன்று தமிழ்முறை நன்னீராட்டு விழா நடைபெற்றது. பேரூர் திருமுறைச் சைவ அலை தமிழ் நாடெங்கும் வேகமாகப் பரவி வருவதற்குத் திருப்பத்தூர் பகுதி எழுச்சி நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

சமுதாய ஒருங்கிணைப்பு பணியிலும் இம்மன்றம் முன் நிற்கிறது. ஆதி திராவிட அன்பர்கள் பலர் மன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். மடவாளம் கோயில் உபயதாரர்களில் பலர் ஆதிதிராவிட பெருமக்கள் ஆவர். பிரதோஷ காலத்தில் திருமுறை பாராயணம் செய்பவர்களில் ஒருவர் ஆதிதிராவிடர். இல்லந்தோறும் திருமுறை நிகழ்வுகள், திருவாசக முற்றோதல்கள், திருவிளக்கேற்றுதல்கள் ஆகியன அதிக அளவில் ஆதிதிராவிட அன்பர்களின் இல்லங்களில் நடைபெற புரிசையார் முயற்சியில் மன்றத்தார் நடத்தி வருகின்றனர். திருப்பத்தூரை யடுத்த அன்னாண்டபட்டி ஆதிதிராவிடர் காலனியில் மன்றத்தின் துணையோடு இரண்டரை லட்ச ருபாய் செலவில் ஸ்ரீ மாரியம்மனுக்குத் திருக்கோயில் கட்டப் பெறுகின்றது.

நாளும் சிவ சிந்தனை - திருமுறை நன்னீராட்டு விழா - சமுதாய ஒருங்கிணைப்பு.

திருப்பத்தூர் ... ...

பெரியபுராண காலத்திற்கே சென்று விட்டது.

முதலில் குறிப்பிட்ட வார்த்தைகள் ''நடராசன் செயல்பாடு எல்லாம் மன்றத்தின் செயல்பாடே'' என்பது நூற்றுக்கு நூறு சத்யமான வார்த்தைகள் என்பது காட்சிப் பிரமாணமாயிற்று.

15.4.1948 இல் புரிசை சு. முருகேச முதலியார் அவர்களின் தம்பி புரிசை சு. திருஞான சம்பந்தன் - சுபத்திரை அம்மாளின் மகவாய் நடராசனார் செய்யாறு வட்டம் புரிசைக் கிராமத்தில் பிறந்தார். கல்லூரிப்படிப்பை முடித்த நடராசனார் செய்யாறு வட்டம் புரிசைக் கிராமத்தில் பிறந்தார். கல்லூரிப் படிப்பை முடித்த நடராசனார் ''வள்ளலாரின் இறைமைக் கோட்பாடு'' என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றார். திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் ஆனார். சிறந்த சொற்பொழிவாளர்.

தமிழகம் முழுமையும் சொற் பொழிவுகள் காசி திருமுறைக் கருத்தரங்குகள், இலங்கை சேக்கிழார் மாநாடு என சமய உரைகள் ஆற்றியிருக்கின்றார். ஆர்க்காடு தெய்வத்தமிழ் மாநாட்டு மலர் பதிப்பாசிரியராக இருந்து அழகுடன் கொண்டு வந்திருக்கின்றார்.

ஒரு மனிதர்...

ஒரு மன்றம்...
அதன் விரிவாக

பல அன்பர்கள்

பல ஊர்கள்.

என சைவ விருட்சம் திருப்பத்தூர் பகுதிகளில் ஆல்போல் பரந்திருக்கின்றது.

நடராசனார் முயற்சியும் - பன்னிரு திருமுறைப் பணியும் - சிறக்கத் துணைபுரிபவர்கள், செ. ப. பரமேஸ்வரன், மா. ச. இராஜாமணி, ஆ. ஜெயராமன், வீ. மகாலிங்கம், எஸ்.சி. வச்சிரவேலு, டி.எம்.ஞானசேகரன், சேகர், ச. அன்பு, பாண்டியன், பன்னீர் செல்வம், கு. பொன்னம்பலம், சரோஜினி, கஜலட்சுமி, ப. திருநாவுக்கரசு, மோகனா, சாரதாமணி, இராதா, பெ. செல்வம், சேகர், கண்ணன், சாந்தலிங்கம், கண்டபாணி, சின்னத்தாய் அம்மாள்.

(i) புரிசை சு. முருகேச முதலியார்

புரிசை நடராசனாரின் பெரிய தந்தையார் புரிசை சு. முருகேச முதலியார் ஆவார். 16.11.1900ல் சுந்தர முதலியார் - அன்னம்மையாருக்கு மகவாய்ப் பிறந்தார். புரிசை சடகோப பாகவதர் இவருக்கு இசையாசிரியர் ஆவார். திருவத்திபுரம் (செய்யாறு) ஸ்ரீலஸ்ரீ பாநுகவி சுவாமிகளிடம் தமிழ் நூல்களைப் பயின்றார்.

முத்தமிழ் ரத்னாகரம் மா. தி.ஸ்ரீ. பாநுகவியார் வட மொழியிலும் தென் மொழியிலும் வல்லவர். பல நூல்களைச் செய்தவர். பல மாணவர்களுக்குக் கற்பித்தவர். திருவத்திபுரத்தில் மடம் அமைத்துத் தங்கியிருந்தார்.

இயல், இசை இரண்டும் கிடைத்தமையால் புரிசை முருகேச முதலியார் அவர்கள் காவியங்களைத் தலை, இடை, கடை மூன்று திறத்தவர்களாகிய மக்களும் விரும்பிக் கேட்கும் அளவு பல மணிநேரங்கள், பல மாதங்கள் தொடர்ந்து பேசலானார்கள். இவரது விரிவுரை 1922 இல் தொடங்கியது. 67 ஆண்டுகளாகத் தொடர்ந்தது. இலங்கைக்கு ஐந்து முறையும், மலேசியாவுக்கு ஒரு முறையும் (ஆறுமாத காலம்) சென்று விரிவுரையாற்றியிருக்கிறார்.

18.1.1989 இல் திருவண்ணாமலையில் இறைவனடி சேர்ந்தார்.

(ii) நால்வர் கழகம்

1994ல் நால்வர் கழகம் மற்றும் உழவாரப் பணிக்குழு இர.இரத்தின பராபரம் தலைமையில் துவங்கப் பட்டது. அருள்மிகு பிரம்மேசுவரர் ஆலயத்திருப்பணி (7 ஆண்டுக்காலம்), ராஜகோபுரம், குடமுழுக்கு (60 லட்ச ரூபாய்) அன்பர்கள் உதவி) கொரட்டி,

அருள்மிகு காளத்தீஸ்வரன் கோயில் திருப்பணி, கொரட்டி சங்கமேஸ்வரர் திருக்கோயில் திருப்பணி (ரூ. 5 லட்சம் - முழுக்க முழுக்க நால்வர் கழகத்தினரே) மடவாளம் அருள்மிகு அங்கநாதீஸ்வரன் திருப்பணி (திரு. சிவ. ஆ. பக்தவத்சலம், திரு புரிசை நடராசன் தலைமையில் அன்பர்கள் துணையுடன் 6 லட்சம் செலவில்) பெரியகரம் அருள்மிகு பெருணீகரீஸ் வரர் ஆலயத் திருப்பணி), புத்தகரம் சிவன்கோயில், கிருஸ்துகுல ஆசிரமம் திருக்கோயில் கூடப்பட்டு கிராமக் கோயில், புதுப்பூங்குளம் ஆலயத் திருப்பணி - ஆகிய பணிகளைக் கழகம் செய்துள்ளது. ஆற்காடு வசிட்டேசுவரர் ஆலயம், ஆம்பூர் கைலாய ஆலயம், அம்பலூர், பாலாற்றங்கரை ஆலயத் திருப்பணிகளைத் தொடங்கி வைத்திருக் கிறது. அனேரி சோமேஸ்வரர் ஆலயம், திருப்பத்தூர் அருள்மிகு சுப்பிரமணியர் மடம் போன்ற ஆலயங்களின் திருப் பணிகளைக் கழகம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இவையல்லாமல் 1998, 1999 களில் ஒருநாள் திருமுறை விரிவும் 2000ல் திரு பக்தவத்சலனாரின் மாநிலம் தழுவிய பன்னிரு திருமுறை மாநாடும் கழகம் நடத்தி மகிழ்ந்தது.

திருப்பத்தூர் கோயில்கள் திருப்பணியல்லால்
வேறொன்று அறியேன் பராபரமே!

(iii) திருமந்திரத் திருக்கூட்டம்



வில்சன் அமல்ராஜ்

15 நாட்களுக்கு ஒருமுறை கூடி திருமந்திரம் பற்றி உரை/விவாதம் நடத்துதல், திருமந்திரம், பற்றிய விளக்கங்களைச் சிறுசிறு நூல்களாக வெளியிடுதல் எனப் பணியாற்றுகிறது. 2007 வரை 408 கூட்டங்களும் 385 வார வழிபாடுகளும் நடத்தியுள்ளது. 20 நூல்கள் வெளியிட்டுள்ளது. (நெறியாளர் - பேராசிரியர் ஜி. வில்சன் அமல்ராஜ்)

(iv) அப்பாலும் அடிச்சார்ந்தார்

23.05.2007... ... ... பூம்புகார் மேலையூர் சீனிவாசா மேல்நிலைப் பள்ளி.

உழவாரம் நடத்தும் கல்லூரி மாணவர் பண்பாட்டுப் பயிற்சி முகாம்.

50 மாணவர்கள் அமர்ந்து மெய்ம் மறந்து கேட்டுக்கொண்டிருக்கின்றனர். சிறிதே உயரம் குறைவாக சிறிதே மாநிறம் கொண்டவராக - நெற்றியில் திருநீறு பூசியவராக ஒரு பேராசிரியர் திருமந்திரம் பற்றி வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்.

'தன்னை அறியத் தனக்கு ஓர் கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே''

''நம்மைப் பற்றிய அறிவு தான் நமக்குக் குறைவு. ஆனால், அதுதான் நம வாழ்விற்குத் தேவையான அம்சம். அதனால் தான் கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் ''உன்னையே நீ அறிவாய்' என்று சொன்னார். நம்மை நாம்புரிந்து கொள்ள வேண்டும். நமது பலம் என்ன, நமது குறைகள் என்ன எது நம்மால் கூடும், எது கூடாது என்று நம்மைப்பற்றி நாம் ஆய்வு செய்ய வேண்டும். நம்மைப்பற்றிய அறிவு நமக்கு இல்லாமையால் தான் நாம் பல துயரங்களை வாழ்க்கையில் சந்திக்க

நேரிடுகின்றது. அதனால்தான் திருமூலர்.

‘‘தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்’’

என்று சொல்கிறார். நாமே நமக்கு வெளியே நின்று நம்மைப்பற்றிய ஆய்வு நடத்த வேண்டும். அதற்குத் தியானமும் கடவுள் வழிபாடும் மிகவும் உதவும்.

‘‘நமது வாழ்க்கையே ஒரு போராட்டம். நமது தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றி நமக்கென்று நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நாம் போராட வேண்டியிருக்கிறது. எல்லாமே போராட்டம்தான். அதுதான் இயற்கை விதி. இதற்குப் பயந்தால் நாம் வாழ முடியாது. அடுத்தவர்கள் நம்மை முன்னேற்றுவார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. நமது முன்னேற்றம் நமது கையில் தான். ஒரு பலூன் மேலே பறப்பதற்குக் காரணம் அதன் உள்ளே இருக்கும் காற்று தானே தவிர பலூனின் நிறமோ அல்லது அளவோ காரணம் இல்லை. அதைப் போன்றே நமது உத்வேகத்தில் தான் நாம் முன்னேற வேண்டும். முன்னேறுவதற்கு வாழ்க்கையில் நாம் எதிர்நீச்சல் போட வேண்டும். எதிர்நீச்சல் உயிரின் அடையாளம். வாழ்க்கை என்பது ஒரு சவால். அது அடுத்தவர் போடுகின்ற பிச்சை இல்லை. இந்தச் சவாலை நாம் ஏற்று சிறப்பாக வாழ்ந்து காட்ட வேண்டும். நமது வாழ்க்கைக்கு நாம்தாம் பொறுப்பு. தன்னை அறிவோம். தலை நிமிர்ந்து நிற்போம்.’’

‘‘நம்மைப் பற்றிய அறிவு நமக்கு வரும்போது இறைவனின் பெருந்தன்மையும் நமது குறுந்தன்மையும் நமக்குப் புரிகிறது. நாம் நம்மை இறைவனது சித்தத்திற்கு அர்ப்பணம் செய்து விடுகிறோம். இதுதான் தன்னையறிதல் என்பது இது தத்துவ ரீதியான விளக்கம். இன்றைய அகவியல் அறிஞர்களோ (Psychologists) தன்னை அறிவதற்குச் சில பயிற்சிகளைக் கூறுகிறார்கள். அவையாவன:

1. **உணர்ச்சிளைப் புரிந்து கொள்ளுதல்** (Emotional awareness) : ஒரு பெண்ணை ஓர் இளைஞர் காதலிக்கிறேன் என்று சொல்கிறான். ஆனால் அது இனக் கவர்ச்சியே தவிர காதல் இல்லை.

நம்முடைய உணர்ச்சிகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

2. **தன்னுறுதி** (Assertion) : நாம் கொண்டுள்ள கொள்கைகளில் - மதிப்பீடுகளில் உறுதியாக இருக்க வேண்டும். நமக்குப் பிடிக்காதவற்றைப் பிறருக்காக செய்யக் கூடாது. அனுசரித்துப் போவதும் சரி அல்ல. ஈடுபாட்டுடன் இருக்கவேண்டும்.

3. **தன் மதிப்பு** (Self esteem) : நம்மை நாமே மதிக்கவில்லை என்றால் வேறு யாரும் நம்மை மதிக்கப் போவதில்லை. நம்முடைய சுய மரியாதையைப் பங்கம் செய்யும் அனைத்தையும் விட்டுவிடவேண்டும். நம்மை நாமே இழிவாகக் கருதக் கூடாது. நாம் நம்மிடம் உள்ள நல்ல குணங்களைக் கண்டறிந்து அவற்றை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

4. **கிரம வரிசை** (Order or Priority) : எதற்கு முதல் முக்கியத்துவம், எதற்கு இரண்டாவது முக்கியத்துவம், எதற்கு மூன்றாவது முக்கியத்துவம் என்றெல்லாம் நமது செயல்பாடுகளையும் விருப்பங்களையும் வரிசைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

5. **முதலுணர்வு** (Master Sentiment) : நம்மிடம் ஒரு கருத்து அல்லது உணர்வு இருக்கும். அதுதான் நம்முடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் உந்துதலாக

அமையும். சிலருக்குப் பணம்; சிலருக்குப் பதவி; சிலருக்குப் புகழ்; சிலருக்கு அன்பு, நம்மையே நாம் ஆராய்ந்து பார்த்தால், நமது முதலுணர்வை நம்மால் கண்டுபிடிக்க முடியும். தன்னையறிதலில் இது மிகவும் முக்கியமான அம்சம்.

இந்த ஐந்து அம்சங்களையும் நாம் நேர்மையாக ஆராய்ந்து பார்த்தால் நம்மைப் பற்றிய அறிவு நமக்குக் கிடைக்கும்.''

மாணவ மாணவியர் அத்துணை பேரும் மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல மயங்கி இருந்தார்க்ள். திருமந்திரத்திற்கு இப்படி மனோதத்துவ ரீதியில் ஒரு விளக்கமா? அனைவர்க்கும் வியப்பு மேலிட்டது. பேச்சில் ஆரவாரம் இல்லை. குரல் கூட மென்மையானது தான், ஆனாலும் அவர் ஈர்த்தார். அவர் பேச்சில் நேர்மை இருந்தது. பேசுவது புரிந்தது. அவர்தான் வில்சன் அமல்ராஜ்.

வில்சன் அமல்ராஜ் பிறப்பால் கிறித்துவர். ஆனால் சிவபெருமான் ஒருவரே பரம்பொருள் என்று உறுதியாக நம்புகிறார். திருப்பத்தூர் துய நெஞ்சக் கல்லூரியில் பொருளதாரத்துறை பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கல்லூரியோ கிறித்துவ நிர்வாகம். பல நெருக்கடிகள் தந்தனர். அமல்ராஜ் பொருட்படுத்தவில்லை. ''மிஞ்சி மிஞ்சிப் போனால் வேலை போகும். சிவன் பார்த்துக் கொள்வான்'' என்று உறுதியாக இருந்தார். அமல்ராஜை மாற்ற முடியவில்லை. ''சிவபெருமானை வேண்டுமானால் வழிபடுங்கள். சர்ச்சுக்கும் வாருங்கள்'' என்று சமரசம் செய்து கொள்ளப் பார்த்தார்கள். ''இரட்டைக் குதிரையில் சவாரி செய்யமாட்டேன். எனக்கு ஒரு குதிரை போதும். அது சிவக்குதிரை'' என்றார். என்ன ஓர் உறுதிப்பாடு! கடைசியில் அவரை அப்படியே விட்டு விட்டார்கள். கல்லூரி முதல்வர் பணி நிமித்தமாக ரோம் செல்ல வேண்டியிருந்தது. யாரிடம் முதல்வர் பொறுப்பை விடுவது எனச் சிக்கலான சூழ்நிலை. யாரையும் நம்பி விட நிர்வாகம் தயங்கியது. அமல்ராஜ் ஒருவரே நேர்மையானவர் என்று முதல்வர் பொறுப்பை அவரிடமே கொடுத்தார்கள். அப்படி ஒரு நேர்மை! அப்படி ஒரு கொள்கைப் பிடிப்பு!

நாற்பத்து ஆறாவது வயதில் இவருக்கு திருமந்திரத்தின் மேல் ஈடுபாடு வந்தது. அன்று தொடங்கி இன்றுவரை திருமந்திர ஆய்வு செய்வதும், தான் வசிக்கும் திருப்பத்தூரில் மாதந்தோறும் வகுப்புகள் எடுத்தும், சிறு சிறு நூல்களாக வெளியிடுவதுமாகப் பணியாற்றுகிறார். சித்தர் பாடல்களிலும் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள், திருமூலர் ஞான விருந்து, திருமந்திரமான்ல ஞானத் திரட்டு, அருளாதாரம், சிவன்கண், சிவ விஞ்ஞானம், திருமூலர் தத்துவம், திருமூலர் ஞானத் தோரணம், சொரூப சிவானந்தம், பிரார்த்தனை அறிவியல் திருமூலர் அகநோக்கு, முதுமையில் ஆன்மிகம், சிவபுராணம், ஞான ஆசிரியன், ஞான மனோன்மணி 36, திருமந்திர வரிகள், திருமூலர் தேன் துளிகள், Sivanism சித்தர் கணபதிதாசரின் நெஞ்சறி விளக்கம் (விளக்கவுரை) குதம்பைச் சித்தர் பாடல் விளக்கவுரை, அகப்பேய்ச் சித்தர் பாடல் (விளக்கவுரை), தன்னையறிதல், சித்தர் நெறி, திருவாசகம், கடுவெளிச் சித்தர் பாடல்கள், இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள், மௌனமொழி.

(பிறந்த நாள் - 1944; பிறந்த ஊர் - விருதுநகர். பெற்றோர் ஞானப்பிரகாசம், மங்களேஷ்வரி)

22. குடியாத்தம்

7.2.2003 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சேலம் அம்மாபேட்டை மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலுக்குப் போய்ச் சேர்ந்தேன். குடியாத்தம் ஆ. பக்தவத்சலனார் திருமுறை மாநாட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும், ''வாங்க! - சேகர்'', என்று உரிமையோடு அழைத்தார். உடன் வந்த நண்பர்க்கு ஒன்றும் புரியவில்லை. என்னை அவ்வளவு உரிமையாக 'சேகர்' என்று செல்லப் பெயரிட்டு அழைத்ததில் அவருக்கு ஒரே வியப்பு. மேலும் அப்பொழுதுதான் அவரை நேரில் சந்தித்து முதன்முதலாக உரையாடுகிறேன். ஒரு அறைச்சாவியை எடுத்துக் கொடுத்து, ''மண்டபங்களில் தங்கினால் சிரமப்படுவீர்கள். ஹோட்டலில் எனக்கு தரப்பட்ட அறையில் நீங்கள் தங்குங்கள். நான் இங்கேயே தங்கிக் கொள்கிறேன்'' என்றார்.


அதுதான் பக்தவத்சலனார்!

பிப்ரவரி 8ம் தேதி திருமுறை ஊர்வலத்தைக் காண ஆவல். காலை சிற்றுண்டியை முடித்துவிட்டு ஊர்வலத்தை நோக்கி விரைந்தோம். அம்மாப்பேட்டை ஊரே விழாக் கோலம் கொண்டிருந்தது. எங்கும் நீர தெளித்துக் கோலம் போட்டிருந்தார்கள் ஊரெங்கும் தோரணம்! ஊரெங்கும் ஒலிபெருக்கி! நகரில் எங்கும் சிவமுழக்கமே! ''அரஅர'' ஒலியே! பிற ஒலி ஏதும் கிடையாது. ஒலிபெருக்கி



கட்டுப்பாடு இல்லாத ஆண்டு. அப்படி ஒரு மாபெரும் திருமுறை ஊர்வலத்தை நான் பார்த்ததேயில்லை. ஆயிரக் கணக்கான மக்கள் ஆண்களும் பெண்களுமாய் அணி அணியாய் வந்தனர். எழுச்சி மிக்க ஊர்வலம் என்றால் அது இதுதான்!

1998இல் நெல்லையில் நடந்த ஊர்வலம் பற்றி 'சைவநெறி'' இதழ் இவ்வாறு கூறுகிறது. ''ஊர்வலம் 24.2.98 அன்று மாலை 4.00 மணிக்கு நெல்லையப்பர் திருக்கோவில் முன் பிருந்து ஆரம்பிக்கப்பட்டுப் பாரதியார் தெரு, வ.உ.சி. தெரு மற்றும் நான்கு இரத வீதிகளிலும் வந்தது. யானை மீது தமிழ் வேதங்கள் எழுந்தருளப்பட்டன. மேளதாளம், முன் வர பாளை அப்பர் அருட்பணி மன்றத்தினர் நால்வர் திருவுருவங்களைச் சப்பரத்தில் எழுந்தருளச் செய்து எடுத்து வந்தனர். குழந்தைகள், பெண்களின் கோலாட்டம் உற்சாக மூட்டியது. ஆண்களும் பக்தி சிரத்தையினால் ஆடிப்பாடி வந்தனர். திருவுருமாமலை திருப்புகழ் சபை, மீனாட்சிபுரம் பஜனைக்குழு, மீனாட்சிபுரம், வ.உ.சி. பேரவை, பாளை திருவாசக சிவனடியார் திருக்கூட்டம், திருநெல்வேலி அருள்ஜோதி விநாயகர் திருக்குழு, இந்து சமய மன்றம், பாளை அப்பர் அருட்பணி மன்றம், வீரவ நல்லூர் இந்து சமய மன்றம், திருவுருமாமலை பன்னிரு திருமுறை வழிபாட்டுக் குழு, தூத்துக்குடி கீழூர் சிவஞான பிரகாச சபை, தூத்துக்குடி திலகவதியார் மாதர் கழகம் சைவ வேளாளர் மகளிரணி, திருச்செந்தூர் ஓதுவார் சங்கம், செந்திலாண்டவன் திருப்புகழ் சபை, சென்னை சிவனடியார் திருக்கூட்டம், தென்காசி, குலசேகரப் பட்டினம் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் ஆண்களும் பெண்களும் பதாகை ஏந்தி பவனி வந்தனர். ஊர்வலத்தினரை ஆங்காங்கே அன்பர்கள் மலர் தூவி வரவேற்றனர்.

சேலம் மட்டுமல்ல. பக்தவத்சலனார் திருமுறை மாநாடுகள் நடத்துகின்ற இடங்கள் எல்லாம் இதே காட்சிதான் என்பதனை எடுத்துக் காட்ட

நெல்லை ஊர்வலம் பற்றிய ''சைவ நெறி'' வருணனை இங்கே எடுத்து வைக்கப்பட்டது.

சரி, நாம் சேலத்திற்கு வருவோம் காலை 10.00 மணி, மாநாட்டுக் கொட்டகை... அம்மா பெரிதென அகமகிழ்ந்தேன். இத்தனை பெரிய கொட்டகையா? அந்த அளவிற்குக் கூட்டம் வருமா? அதுவும் காலை வேளையில்? எனக் குழம்பி நின்றேன். ஊர்வலம் பந்தலுக்குள் வந்தவுடன் கொட்டகை நிரம்பி விட்டது. நம்ப மாட்டீர்கள். காலை நேரத்தில் 4000 பேர் கொட்டகையில் இருந்தனர்.

அதன் பிறகு முறையாக மாநாடு தொடங்குகிறது. பாராட்டு, ஓதுவா மூர்த்திகளுக்கு அன்பளிப்பு, சைவ தொண்டர்களைப் போற்றுதல், திருமுறை இசை, உரையரங்கம், என மாறி மாறி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பக்தவத்சலனார் கைவண்ணம் தெரிகிறது. பக்தவத்சலனார் 4000 பேர் கொண்ட முழு அவையையும் தன் கட்டுக்குள் வைத்திருந்தார். பூ விழும் ஓசை காதில் விழும் அளவுக்கு ஒரு அமைதி, குறித்த நேரத்தில் தொடங்குகிறார். குறித்த நேரத்தில் முடிக்கிறார். பேச்சாளர்கள் திருமுறைகள் அல்லாது பிற இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டினால் குறுக்கிட்டு தடுக்கிறார். அப்படி ஒரு நிர்வாகம்! அவர் பேச்சிலும் ஆழம் அதிகம். அதே சமயம் மக்களிடம் சென்றடையும் எளிமை, திருமுறை மேற்கோள்கள் சரமாரியாக வருகின்றன. சமயத்தில் நடக்கும் ஊழல்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் கடுமையாகச் சாடுகிறார்.

அவர் நடத்தும் ஐந்தெழுத்துப் பெருவேள்வியினைக் கேளாத செவி என்ன செவியோ! ஆம், இரண்டு மணி நேரம் நான்காயிரம் மக்களும் இணைந்து திருவைந்தெழுத்து மந்திரத்தை பல்வேறு வகையாக பக்தவத்சலனாருடன் - ஓதுவாமூர்த்திகளுடன் - ஓதியது விண்ணைத் தொட்டது. ஆலமர் செல்வன் இறங்கிவந்திருக்க கூடும். நம் ஊனக் கண்களுக்கு எப்படி புலப்படும்?

திங்கட்கிழமை காலை பக்தவத்சலனாரிடம் கூறி விடை பெற்றுப் போகலாம் என்று வந்தால் கொட்டகையிலிருந்து ஆயிரக் கணக்கானவர் வெளியே வந்து கொண்டிருந்தனர். ''இப்பொழுது என்ன நிகழ்ச்சி? அதுவும் இத்தனை காலைப்பொழுதில்'' என்று கேட்டால் ''சிவபூசகர் மாநாடு - திருமுறைத் திருமணம்'' என்றார்கள்.

ஆர்வம் மேலீட்டால் கூட்டம் எப்பொழுதும் கூடும்.
அதில் பகலென்ன இரவென்ன,
இது பக்தவத்சலனார் கற்றுத் தந்த பாடம்.

சேலம் என்று மட்டுமல்ல. நான் கலந்து கொண்ட சென்னை, திருவண்ணாமலை, காரைக்கால் மாநாடு கள் அனைத்திலும் இதே எழுச்சி மிக்க கூட்டம் தான். நாளுக்கு நாள் கூடுகிறதே ஒழிய குறையவில்லை.

தமிழ்நாட்டில் தலை சிறந்த பேச்சாளர்கள் - குறிப்பாக நகைச்சுவை கொண்ட பட்டிமண்டபம் - என்றால் கூட்டம் கூட வாய்ப்பு உண்டு. புராணங்கள் என்றால் கதைப்போக்கின் சுவை இருக்கும்.ஆனால் சிவபரம் பொருளை முன்னிறுத்தும் திருமுறைகளுக்கு மாநாடு எடுப்பித்து அம்மாநாட்டிற்கு 3000 பேர், 4000 பேர் வருகின்றனர் என்றால் அது இந்நூற்றாண்டில் மகத்தான சாதனை எனலாம்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் உரைகேட்க இந்தக் கூட்டம் கூடியது. அதற்குப் பின்

திருமுறைகள் கேட்க இந்த அளவு கூட்டம் கூட்டுபவர் பக்தவத்சலனார். இது எவ்வாறு?

இதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்தேன். 2005இல் காரைக்காலில்ல நடந்த திருமுறை மாநாட்டில் மாதிரி சர்வே எடுத்து மாநாட்டிற்கு வந்தவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தேன். ஐம்பது பேர்கள் தங்கள் கருத்துக்களை நான் தந்த படிவத்தில் எழுதித் தந்தார்கள்.

''தேவார இன்னிசை, கருத்தாழம் மிக்க சொற்பொழிவுகள், சிவபூசனை, எங்கும் கிடைக்காத அரிய செய்திகள்'' எனப்பாராட்டுகிறார். தஞ்சாவூர் ஆர். தியாகராஜன் ''இந்து சமயம் பற்றிய விழிப்புணர்வு. மனம் இறுக்கம் குறைந்து மகிழ்ச்சி ஏற்படுதல்'' ஒரே சமயத்தில் அநேக சிவபூசகர்களின் ஆசி பெறுதல், சைவ அன்பர்களை ஊக்கப்படுத்தி உதவுதல்'' என்கிறார் அறந்தாங்கி. ஏ.பொன் சுப்பரமணியன் லதா. ''வாழ்வியலைச் செம்மைப் படுத்தும் அரிய தகவல்கள்'' என்கிறார் தஞ்சாவூர் மு.பிச்சாண்டி, கேள்விச் செல்வத்தினையும் திட்டமிட்டு நடத்துதலையும் பலபடப் போற்றுகின்றனர், திருவாரூர் அர்த்தயாமக் குழுவினரும், தஞ்சாவூர் காத்தப் பெருமாளும், ''எளிய அதே சமயம் சுவையான உணவு ஆயிரக்கணக்கான சிவனடியார்களுக்கு குறைவின்றி நிறைவாக வழங்கப்படுகிறது'' தொண்டுள்ளம் படைத்தோர் பரிவுடன் வழி காட்ட நல்ல முறையில் தங்குமிடங்களும் தரப்பட்டன'' என்கிறார்கள். தஞ்சாவூர் காத்தப் பெருமாளும், ஆரூர் அன்பர்களும் ''சரியான நேரத்தில் குறித்த நிகழ்ச்சியைத் தவறாமல் நடத்துதல்; கூட்டத்தில் கண்டிப்பாக சைவத்தையும் தமிழையும் வளர்த்தல்; ஒரு ஒழுங்கு முறையோடு நடத்துதல்; நகைச்சுவை ததும்பும் பேச்சு'' என அடுக்குகிறார் திருச்செந்தூர் வேலாண்டி ஓதுவார்.

மேலே கூறிய கருத்துகளை அடியொற்றி பச்ச குப்பம் சங்கோஜி ராவ், திருச்செந்தூர் சங்கரன் ஓதுவார், அசாவீரன் குடிக்காடு மணவாளன், பச்சூர் தமிழ் வேதவளர்ச்சி மன்றத்தர் போற்றுகின்றனர். ''தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாது தொண்டனாக விளங்கும் பான்மையை கல்லக்கடி சரவணனும், ''விழாவில் தொய்வு ஏற்படும் பொழுதெல்லாம் அதைத் தூக்கி நிறுத்தும் படியான ஐயா அவர்களது பாடலுடன் கூடிய பேச்சினை'' திருமலைராயன் பட்டினம் - ஆறுமுகமும், ''மூடப்பழக்க வழக்கங்களைச் சாடுதலும், கோள்களால் இடர் ஏதும் இல்லை; எந்நாளும் இன்பமே'' என்று முழங்கும் பேச்சினை பருத்திச் சேரி நடராஜமூர்த்தியும் போற்றுகின்றனர்.

இனி திருமுறை மாநாட்டின் வளர்ச்சியினைக் காண்போம்.

1990 ஆம் ஆண்டு முதல் ஜனவரி மாதம் தமிழகம் தழுவிய ''திரு முறைப் பெருவிழா'' வினைப் பக்தவத்சலனார் எடுத்து வருகிறார். 1996ஆம் ஆண்டு வரை 135 ஓதுவா மூர்த்திகட்கு ஆயிரம் ரூபாய் அளித்துள்ளார். 1993 அல்லது(1994 - அழைப்பு கிடைக்கவில்லை) திருமுறை விழா குடியாத்தம் என்று அழைக்கப் படும் குடியேற்றத்தில் நடைபெற்றது. அதன் பிறகு திருமுறை விழா தஞ்சை (1995) அவிநாசி (1996), சென்னை (1997) திருநெல்வேலி (1998) திருவண்ணாமலை (1999), கள்ளக்குறிச்சி (2000), சேலம் (2003), ஓசூர் (2004), காரைக்கால் (2005) ஆகிய இடங்களில் நடந்தது, 2001, 2002, இந்த அழைப்புகள் கிடைக்கவில்லை. ஒரு ஆண்டு மூன்று ஆண்டுகளில் சிதம்பரத்தில் நடந்தது.

26.1.93 முதல் 28.1.93 வரை குடியாத்தத்தில் நடைபெற்ற நிகழ்முறை.

1. திருநெறியத் தமிழ் தொண்டாற்றும் புனிதருக்குப் பாராட்டும் பொற்கிழியும் அளித்தல்.
2. ஓர் ஓதுவாமூர்த்திக்குப் பொற் காசு பரிசளித்து பாராட்டப்படும்.
3. ஓர் ஓதுவாமூர்த்திக்கு ''கோ'' (பசு) பரிசளித்துப் பாராட்டப்படும்.
4. ஐந்து தேவார ஓதுவாமூர்த்தி கட்குத் தலா ஆயிரம் வெண் பொற் காசுகள் பரிசளித்துப் பாராட்டப்படும்.
5. ஓர் ஓதுவாருக்குப் படிக்காசு நிதி அளித்தல்.
6. பத்து ஓதுவா மூர்த்திகளுக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டப்படும்.
7. 35 ஓதுவா மூர்த்திகட்கு புத்தாடை வழங்கிச் சிறப்பிக்கப்படும்.
8. சைவ சமயப்பணி வளர்க்கும் 32 புண்ணியச் சீலர்கட்கு பொன்னாடை அணிவித்துப் பாராட்டப்படும்.
9) 40 தேவார சபைகள் வீதி உலாவில் பங்கேற்பு.

1996ஆம் ஆண்டு ''திருமுறை விழா'' திருமுறை உலகில் ஓர் புதிய சகாப்தத்தையே உருவாக்கியுள்ளது எனலாம். அன்று திருமுறைகள் அளித்தவற்றையெல்லாம் இந்த ஆண்டில் ஓதுவா மூர்த்திகட்கு பக்தவத்சலனார் அளித்துள்ளார். இப்படிச் செய்ய வேண்டும் என்று யார் மனதிலும் இதுவரை தோன்றியதே யில்லை. 27.1.1996. முதல் 29.1.1996 முடிய அவிநாசியில் திருமுறைவிழா நடைபெற்றது.

1) 27 ஓதுவா மூர்த்திகட்குத் தாளம் பரிசளித்தல் (சம்பந்தர் தாளம் பெற்றமையைப் போற்றும் வகையில்)
2) 27 ஓதுவா மூர்த்திகட்குக் ''குடை'' வழங்குதல் (முத்துப்பந்தல் சம்பந்தர் பெற்றதன் நினைவாக).
3) 27 ஓதுவா மூர்த்திகட்கு ''சைக்கிள்'' பரிசளித்தல் (முத்துப் பல்லக்கு சம்பந்தர் பெற்றதன் நினைவாக)
4) 27 ஓதுவா மூர்த்திகட்கு ரூ. 1000.00 அடங்கிய பொற்கிழி அளித்தல். (சம்பந்தர் பொற்கிழி பெற்றதன் நினைவாக).
5) 5 ஓதுவா மூர்த்திகட்கு ''படிக்காசு நிதி'' அளித்தல். (அப்பர் சம்பந்தர் படிக்காசு பெற்றதன் நினைவாக).
6) 70 ஓதுவா மூர்த்திகட்குப் பொன்னாடை அணிவித்து மகிழ்தல்.
7) 15 சிவனருட்செல்வர்கட்குப் பொன்னாடை அணிவித்து மகிழ்தல்.

காரைக்கால் மாநாடு

5.2.2005 முதல் 8.2.2005 வரை காரைக்காலில் உலகத் திருமுறை மாநாடு நடைபெற்றது. 1993இல் 5 ஓதுவாமூர்த்திகளுக்கு 1000 ரூ அன்பளிப்பு; 2005இல் 63 ஓதுவாமூர்த்திகளுக்கு 1000 ரூ அன்பளிப்பு, 5லிருந்து 63 வரை - என்ன ஒரு பெரும் வளர்ச்சி!

1. விழா நடைபெறும் நான்கு நாட்களிலும் நூற்றுக்கணக்கான சிவனருட் செல்வர்கள் பங்கேற்கும் 'சிவபூசை மாநாடு'
2. முதல் நாள் காலையில் பன்னிரு தமிழ்வேதங்களுடன் பல்லாயிரக் கணக்கான சிவனடியார்கள்

ஆடிப்பாடி வீதி வலம் வரும் சிவலோகக் காட்சி.

3. தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிய ஐந்து சிவனருட் செல்வர்கட்கு விருது வழங்கி, தலா ரூ. 5000/- (ஐந்தாயிரம்) வழங்குதல்.

4. திருஞான சம்பந்தப்பெருமானார் விருதினைப் பெறுபவர் கரூர் திரு. ஆர். கணேசன் அவர்கள்.

5. திருநாவுக்கரசு சுவாமிகள் விருதினைப் பெறுபவர் சங்கரன் கோவில் திரு காளியப்ப ஓதுவார் அவர்கள்.

6. சுந்தரமூர்த்தி சுவாமிகள் விருதினைப் பெறுபவர் திருச்சி ச. சரவண மாணிக்கம் ஓதுவார் அவர்கள்.

7. மாணிக்க வாசகர் விருதினைப் பெறுபவர் காஞ்சிபுரம் கணபதி அவர்கள்

8. சேக்கிழார் சுவாமிகள் விருதினைப் பெறுபவர் வேலூர் மாவட்டம் பச்சகுப்பம் பொன்னன் அவர்கள்.

9. 63 நாயன்மார்கள் நினைவாக 63 ஓதுவா மூர்த்திகட்குத் தலா ரூ. 1000/- வழங்குதல்.

10. 63 ஓதுவா மூர்த்திகட்கும் குடை வழங்குதல் (சம்பந்தர் முத்துப் பந்தல் பெற்றதன் நினைவாக).

11. 63 ஓதுவா மூர்த்திகட்கும் 8 தாளம் வழங்குதல் (சம்பந்தர் பொற்றாளம் பெற்றதன் நினைவாக)

12. 100 ஓதுவாமூர்த்திகட்குப் 'புத்தாடை' வழங்குதல்.

13. 'படிக்காசு நிதி' அளித்தல்.

14. சிவனருட் செல்வர்கட்குப் பொன்னாடை அணிவித்தல்.

15. 'சைவப் பெருவெளியில் காலம்' எனும் வரலாற்று நூலை பெரு முயற்சி செய்து வெளியிட்ட இரா.இராசசேகரன் அவர்கட்குப் பொற்கிழி வழங்குதல்.

16. சிவபெருமானுக்குரிய தமிழ் அருச்சனை போற்றி 1008 ஐயும் பாராயணம் செய்துள்ள சேலம் சகோதரிகளுக்குப் பொற்கிழி வழங்குதல்.

நான்கு நாட்களும் பிற இலக்கியம் கலவாத, வாழ்வியலுக்கு ஏற்ற, மூடப்பழக்க வழக்கங்களைச் சாடுகிற திருமுறைப் பொழிவுகள்; ஓதுவாமூர்த்திகளின் பண்ணோடு கலந்த இன்னிசை; சிவ பூசகர்களின் காலை வழிபாடு; எழுச்சிமிக்க ஊர்வலம்; நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஓதுவா மூர்த்திகளுக்கு பொற்கிழியும் பொருட்களும் வழங்குதல்; சைவத்திற்குப் பல்வகையானும் பணியாற்றும் பெருமக்களை பாராட்டுதல்.

ஓதுவாமூர்த்திகளின் பொற்காலம் எனில் மிகையாகாது. ஏன்? திருமுறைகளுக்கும் கூடஇது பொற்காலம் தான். குறைந்த ஊதியத்தில் பணி புரியும் ஓதுவா மூர்த்திகளுக்கு வாரி வழங்கும் அற்புதக் காட்சியல்லவா இது?. இந்த அரிய காட்சியினைக் கண்டு மகிழ்ந்தோர் தங்கள் பகுதிகளில் ஓதுவா மூர்த்திகளைப் பொற்றும் திருமுறை விழா எடுக்கின்றனர். இது ஒரு சங்கிலி விளைவல்லவா?

உழவாரத் தொண்டோ, மன்றங்கள் அமைத்து வார வழிபாடு செய்தலோ, சிவநாமாவளி, பாராயணமோ, நூல் வெளீயிடோ - எந்த சைவப்பணியாயினும் முதல் அங்கீகாரம் கிடைக்கும் மேடையாக மாறியிருப்பது ஈடுபட்டுள்ள அனைவரையும் ஊக்கப் படுத்தும் ஆக்கச் செயலல்லவா இது!

ஆடியும் பாடியும் சிவநாமம் எழுப்பியும் ஆயிரக்கணக்கானோர் அணி அணியாய்த் திரண்டு வரும் திருமுறை ஊர்வலம் காண்போருக்கு எழுச்சி; பங்குபெற்றோருக்கு எழுச்சி; இவற்றை எல்லாம் கேட்டவர்களுக்கும் எழுச்சி. படிக்கும் உங்களுக்கும் தான்!

இருபதாம் நுற்றாண்டின் இணையற்ற சாதனை பக்தவத்சலனாரின் திருமுறை மாநாடுகள்.

10.11.1945இல் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள பழங்கோயில் என்னும் கிராமத்தில் ஆறுமுகம் - குப்பம்மாள் தம்பதிகட்கு பக்தவத்சலனார் ஒரே மகனாய்ப் பிறந்தார். அறிவியல், தமிழ், கற்பித்தல், சுகாதாரம் போன்றவற்றில் பட்டங்களைப் பெற்றுள்ளார். 265 பாடல் பெற்ற தலங்களைத் தரிசித்துள்ளார். திரு முறைத் தொண்டு; பன்னிரு திருமுறைத் திரட்டினை 80 பக்க அளவில் 10,000 பிரதிகள் அச்சிட்டு ரூ. 10.00க்கு (7 ருபாய் பதிப்பு)ம் ''பன்னிரு திருமுறைகளில் பஞ்சாட்சரம்'' எனும் 28 பக்க நூலை 15000 பிரதிகள் அச்சிட்டு ஐம்பது பைசாவிற்கும், ''திருமுறைச் சிந்தனைகள்'' எனும் மூன்று ரூபாய் விலையுள்ள நூலை 10,000 பிரதிகள் அச்சிட்டு ரூ. 1.50 க்கும், ''தமிழ் வேதத்திரட்டு'' என்ற நூலை 160 பக்கத்தில் அச்சிட்டு மலிவுப் பதிப்பாக ரூ. 10க்கும் ரூ. 15க்கும் தமிழகம்முழுவதும் அனுப்பியுள்ளார். 15.4.1990 முதல் இல்லங்கள் தோறும் திருமுறைகள்'' எனும் அடிப்படையில் நூற்றுக்கணக்கான வீடுகளில் நடத்தி வருகிறார். திருமுறைப்படி திருமணங்களை நடத்தி வருகிறார்.

சிவாலய திருப்பணிகள்

திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள நார்த்தாம் பூண்டி எனும் தலத்தில் உள்ள கோயிலுக்கு ரூ. 5000 தந்து அவ்வூர் மக்களைக் கொண்டு இரண்டு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி முடித்தல்; அதே ஆலயத்திற்கு இரண்டு கால பூசைக்கு ரூ. 33,000/- குடியேற்றம் நல்லூர் பேட்டையில் புதிய வினாயகர் ஆலயம் ஊர் மக்களுடன் இணைந்து எழுப்பி திருக்குடநீராட்டு செய்து தினசரி பூசைக்கு நிரந்தர நிதியும் வைத் திருத்தல்; வட ஆற்காடு மாவடடம் திருப்பத்தூர் சிவாலயத்திற்கு ரூ.5000 வழங்கல்; குடியேற்றம் அருகில் உள்ள குப்பம் எனும் ஊரில் உள்ள சிவாலயத் திருப்பணி தொடங்க ரூ. 5,000/- வழங்கி ஊர் மக்களின் துணையோடு ரூ. 3.25 இலட்சம் செலவில் திருப்பணி இரண்டு கால பூசைக்கு ஏற்பாடு செய்தல்; விழுப்புரம் மாவட்டம் ஆனரங்கூர் எனும் ஊரில் 'நடுமதுரை' எனும் சிவாலயத்திற்கு ரூ. 5000/- வழங்கி திருப்பணி தொடங்கல்; திருநெடுங்களம் திருப்பணி ரூ.4060/- ஜிட்டபள்ளியில் புதிய விநாயகர் ஆலயம்; ஆலாங்குப்பம் முருகன் கோயில் திருப்பணி.

இருபதுக்கும் மேற்பட்ட குடமுழுக்கு விழாக்களை முன்னின்று நடத்தியுள்ளார். வார வழிபாடு நடத்தியும் திருமுறை சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் வருகிறார். ''தமிழ் வேதம்'' என்ற திங்கள் இதழும் வெளியிட்டு வருகிறார். வயதான எளிய மக்களுக்குப் போர்வைகள் ஏழை எளியவர் துறவிகட்கு ஆடைகள், திருமண உதவி, கல்வி உதவி ஆகியன செய்து வருகிறார்.

பக்தவத்சலனாரின் பணி மாநாடுகள் நடக்கும் நகரங்களில் மட்டுமின்றி எங்கோ மூலையில் இருக்கும் சிறு கிராமங்களையும் ஊடுருவியிருக்கின்றது. வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்திலே 'சந்தூர்' எனும் சிறிய கிராமத்திலே வெங்கடேசன்

செட்டியார், உதயகுமார் ஆகியோர் ''பன்னிரு தமிழ்வேத வளர்ச்சி மன்றத்தினைத்'' தொடங்கி வாரந் தோறும் ''இல்லங்கள் தோறும் இனிய திரு முறைகள்'' எனும் நிகழ்ச்சியை நடத்தியும் பயின்றும் வருகிறார்கள். அதே பகுதியில் நாட்ரம் பள்ளியை அடுத்த பச்சூர், தொத்தூர் எனப்படும் இரு கிராமங்களில் சாமண்ணன், பழனி வேதமுத்து ஆகிய மூவரும் பன்னிரு தமிழ் வேத வளர்ச்சி மன்றத்தினைத் தொடங்கி திருமுறை களைப் பயின்றும் பயிற்றுவித்தும் வருகிறார்கள். ஆண்டு தோறும் முழு நாள் திருமுறைவிழா நடத்துதல், வாரம் ஒரு முறை திருமுறை முற்றோதுதல், திருமுறைப் படி குடநீராட்டு விழா, திருமணம் ஆகியவற்றைச் செய்து வைத்தல் போன்றவற்றைச் சிறப்பாக செய்து வருகிறார்கள்

பக்தவத்சலனாரின் பணி மாநிலம் தாண்டியும் ஊடுருவியுள்ளது. ஆந்திரா மாநிலம் சித்தூரில் திருமதி கவுசல்யா எனும் அம்மையார் அங்குள்ள மக்களுக்குத் தமிழிலும், தெலுங்கிலும் திருறைப் பாடல்களை பயிற்றுவித்து வருவதோடு, வாரவழிபாடு பிரதோச வழிபாடு என ஒரு திருக்கூட்டத்தையே உருவாக்கியுள்ளார். சித்தூர் வட்டம் புத்தூர் கிராமத்தில் கோவிந்தசாமி; ஏழுமலை ஆகிய இருவரும் ஒருநாள் திருமுறை விழாவும், மாதந்தோறும் திருமுறை சொற்பொழிவும் நடத்தி சுமார் 50 இளைஞர்களை இப்பணியில் ஈடுபடுத்தியுள்ளார்.

பக்தவத்சலனாரின் பணி ஒளி தமிழ்கூறு நல்லுலகம் எங்கும் ஓங்கிப் பரந்து பட்டொளி வீசுகிறது.

23. இராணிப்பேட்டை

உழவாரப்பணி, முற்றோதல், நூல் வெளியீடு - என சைவத் தொண்டுகள் பலவாகும். அவற்றுள் ஒன்று கண்டனம். கண்டனம் தற்காலத்தில் குறைந்து விட்டாலும் ஓரிரண்டு பெரியவர்கள் இந்த வகையில் செயலாற்றி வருகிறார்கள். அவர்களுள் ஒருவர் சைவ சமய சண்டமாருதம், நக்கீரன் வழியடிமை பி.மா.சோம சுந்தரனார் அவர்கள்.

சோமசுந்தரனார் அவர்கள் வைணவரை மறுத்து இகழுரை போக்கும் தகவுரை (மூன்று பகுதிகள்), சிவபிரானின் முழு முதன்மை, சங்ககாலத் தமிழர் சமயம் என ஐந்து நூல்களும், கிறித்துவரை மறுத்து ஏசுவின் ஆட்டுக்குட்டிகள், ஏசு பிறந்தார் என இரண்டு நூல்களும் வெளியிட்டார்.

குகதாசர் என்பவர் சங்கராசாரியாரே அருணகிரி நாதராகப் பிறந்தார் என்று தமக்கு முருகன் உணர்த்தியதாகக் கூறி ''அருட்செல்வர் அருணகிரிநாதர் வரலாறு - ஓர் ஆய்வு'' என்ற நூலை வெளியிட்டார். அந்த நூலினை மறுத்து சோமசுந்தரனார் ''உண்மை விளக்கம்'' என்ற நூலினை வெளியிட்டார்.

இவையல்லாமல் சோமசுந்தரனார் எழுதியுள்ள நூல்கள் : அருணகிரிநாத அடிகளார் வரலாறு, சிவம்பரப்பிரம்மம், சைவா ஓலம் சிவனே ஓலம், உலகம்.

24. வேலூர்

(i) சைவசித்தாந்தப் பேரவை

வேலூர் சைவ சித்தாந்தப் பேரவை மாநாட்டுச்சிறப்புடையது ஆகும். 2000 இல் தேவார மாநாடு; வெளியீடு - ''சைவத் தனியரசு''. 2002இல் திருவாசக மாநாடு; வெளியீடு - ''திருவாசக நெறி''. 2003இல் ஒன்பதாம் திருமுறை விழா; வெளியீடு - ஒன்பதாம் திருமுறை. 2005இல் திருமந்திர மாநாடு; வெளியீடு திருமந்திரம், பாயிரம்.

மாநாடு ஒரு நாள் நிகழ்ச்சியாக காலை 7.30க்கு வேலூர் திரு. எம்.கிருஷ்ணன் இடபக்கொடி ஏற்றி வைக்க சொற்பொழிவுகள், திருமுறை இசை என்று விரவி இரவு 9.00 மணிக்கு நிறைவு பெறுகிறது. மாநாட்டு வெளியீடுகளும் சிறப்பாகவே அமைந்துள்ளன. 13, 14 ஆகஸ்டு 2005இல் நடைபெற்ற திருமந்திர மாநாட்டில் திருமந்திரத்திலிருந்து 93 பாடல்கள் திரட்டி விளக்கமும் கொடுத்து ''திருமந்திரத்திரட்டு' என வெளியிட்டுள்ளனர்.

மாநாடு தவிர மூன்றாம் வெள்ளிக்கிழமை பன்னிரு திருமுறை முற்றோதல், முதல் சனிக்கிழமை திருமந்திர வகுப்பு என நடத்துகின்றனர்.

வேலூர்க் கவிஞர் ஒருவர் சொன்னார் ''உங்கள் பேரவை வேலூரில் ஒரு சமயப்புரட்சி' நால்வர் விழா, திருமுறைத் தமிழ் வழிபாட்டு நெறி முறைப்பயிற்சி, ஒரு இலட்சம் பஞ்சாட்சர திருமந்திரம் ஓதும் மகா வேள்வி என வேலூரில் நிகழும் அனைத்து சைவ நிகழ்ச்சிகளிலும் பேரவையின் பங்களிப்பு இல்லாமல் இருக்காது.

(தோற்றம் - 1999; நிறுவனர், தலைவர் - மு. செல்வநாதன்; தற்போதைய தலைவர் - ப. கோ. சுப்பிரமணியம்; தற்போதைய செயலர் - சு. இலட்சுமணன்)

(ii) மு. செல்வநாதன்

செல்வநாதன் பேரவையை நிறுவி அதன் உயிர் மூச்சாய் இருந்து செயல்பட்டுக் கொண்டிருப்பவர். நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது, வகுப்பு நடத்துவது, நூல் வெளியிடுவது என பல்லாற்றானும் பணி புரிகின்றார். பேராசிரியர்; எழுத்தாளர்; சொற்பொழிவாளர். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகட் பயிற்சி மைய ஆரணி, வேலூர் கிளை மையங்களில் பேராசிரியராக இருந்து வகுப்பு எடுக்கிறார்.

பனசைச் செல்வம் அல்லவா?

நாதனை நாளும் போற்றுகின்றது.

(பிறந்த தேதி - 13.01.1951; பிறந்த ஊர் - திருப்பனந்தாள்.)

கோ. அன்பழகன்

(பிறந்த நாள் 7.10.1948; பிறந்த ஊர் - ஊசூர், வேலூர் மாவட்டம், பெற்றோர் கோபாலகிருஷ்ணன், மயிலம்மாள்)

''தமிழ்ச் சைவமே அறிவியல் வழிகாட்டி''... நூலின் தலைப்பே நம்மைத் திகைக்க வைக்கிறது. தமிழகத்தில் இப்படிக் கூட சிந்திக்க அறிஞர்கள் இருக்கின்றார்களா? தனித்தமிழ் கொஞ்சுகிறது. நம் சிற்றறிவுக்குத் தான் பொருள் விளங்க அகராதி தேவைப்படுகிறது.

நூல் இயல்கை, உணர்வு இயல்கை, ஆற்றல் இயல்கை, பேரண்ட இயல்கை, உயிர்ப்பு இயல்கை, உடல்இயல்கை, இயல்கை முயல்கை, மெய்ப்பொருள் நல்கை என எட்டுத் தலைப்புகள் உள்ளன.

1) நூல் இயல்கையில் தமிழ்ச் சைவம் எனத் தலைப்பிட்டு 36 தத்துவங்களைத் தனித்தமிழில் பட்டியல் இடுகிறார். அதற்கு இணையாக அறிவியல் எனத் தலைப்பிட்டு 36 கூறுகளைப் பட்டியல் இடுகின்றார்.

2) உணர்வு இயல்கையை இருப்பு உணர்வு, தன் உணர்வு, தான் உணர்வு என மூன்றாகப் பிரிக்கிறார். இருப்புணர்வைத்தமிழ்ச் சைவத்தில் சிவம் என்றும் அறிவியலில் இருப்பு என்றும் குறிப்பிட்டு இரண்டையும் ஒப்பிடுகின்றார். தன் உணர்வைத்தமிழ் சைவத்தில் சிவை, அன்பு என்றும் குறிப்பிட்டு அறிவியலில் ஈர்ப்பு என்று குறிப்பிட்டு ஒப்பிடுகின்றார். தான் உணர்வைத் தமிழ் சைவத்தில் செம்மை, இன்பு என்று குறிப்பிட்டு அறிவியலில் வெப்பம் என்று குறிப்பிட்டு ஒப்பிடுகின்றார். இந்த ஒப்பீடு அருமையானது. நமக்கும் புரிகிறது. தமிழ் சைவ செம்மை - அறிவியல் வெப்பம்; இன்ப உணர்வு - தான் உணர்வு; சிவ, சிவை இணைவு விளைவு - இருப்பு, உணர்வு (ஈர்ப்பு) விளைவு; விழைவு, அறிவு, ஆற்றல் என்னும் மூவாற்றல் இணைவு - இயக்கம், அதிர்வு, சுழற்சி என்னும் மூவாற்றல் இணைவு; தன் மயமாக்கல் - தன் மயமாக்கல் : முத்தொழில்கள் புரியும் - முத்தொழில்கள் புரியும் உள்ளது போகாது இல்லது வாராது - வெப்பவிதிகளில் முதல் முதல் விதி (ஆற்றல் மாறாக் கோட்பாடு); அறியாமை இருள் நீக்கும் - உலக இருள் நீக்கும், ஒளி தரும்; உருவாதல் உணர்வு இன்பம் - உருவாதல் வெப்பம்; சிவம் சிவை ஆதலும், சிவை சிவம் ஆதலும் நிகழும் - இருப்பு ஈர்ப்பு ஆதலும், ஈர்ப்பு இருப்பு ஆதலும், ஆற்றல்களின் மையம் - ஆற்றல்களின் மையம்; விழைவு அறிவு செயல் என்னும் மூவாற்றல் வெளிப்பாடு - நிலை அலை, வெப்ப அலை ஆற்றல் அலை மூன்று வெளிப்பாடு; உள் உணர்வால் எழும் ஆற்றல் - உள் இயக்கத்தால் எழும் வெப்பம்; அருவம், உருவம் உடையது - அருவம், உருவம் உடையது; உயிரைத் தூய்மை யாக்கும் (அறியாமை தன்னைப் பற்றாமல்) பொருளைத் தூய்மை யாக்கும்.(அழுக்கு தன்னைப் பற்றாமல்); உயிர் அறிவை விளக்கும் - உலகப் பொருளை விளக்கும்; எங்கும் பரவி உள்ளது - எங்கும் பரவி உள்ளது.

3. ஆற்றல் இயல்கை (முதன்மைப் படைப்பு)யை ''நான் உணர்வு'' எனக் குறிக்கிறார்.

தமிழ்ச்சைவ தூமாயை : நாதம், விந்து, சதாசிவம், மகேசுரம், வித்தேசுரம், சிவனின் ஐம்முகம்.

அறிவியல் வெப்ப ஆற்றல் : அதிர்வாற்றல், சுழியாற்றல், அழுத்த ஆற்றல், அடர்த்தி ஆற்றல், இயக்க ஆற்றல், ஒருமையின் ஐம்முகம்.

தமிழ்ச் சைவ நாதம் : அறிவு, எண்ண அலைகள், அலைந்தும் சுழிந்தும் வரும், ஒலி எண்ண அலைகள், ஓங்கார நுண்ணொலி, புவனங்கள் பத்து, சில ஆற்றல் அலையாகிறது, நான் உணர்வு அழுத்தமும் அறிவுச் செறிவும் கொண்டது, செலுத்தும் ஆற்றல், சிவனில் ஒடுக்கம், சொல்லாற்றல், பொருளாற்றல்.

அறிவியல் அலைவு மையம் : உணர்வு, வெப்ப அலைகள், இறுக்கமும் நெகிழ்வுமாய் வரும், நெட்டலைகள், இயக்க நுண்ணொலி, அலைப்பண்புகள் பத்து, ஆற்றல் கலையாகிறது. இறுக்கமும் நெகிழ்வும் கொண்டது, அழுத்தமும் செறிவும் கொண்டது, செயல் ஆற்றல் காரணி, பரப்பில் ஒடுக்கம், எண்ண அலைகள், நியூட்ரினோ அலைகள்,

தமிழ்ச் சைவ விந்து : நாதமே விந்தாகும், புவனங்கள் ஐந்து, ஐந்து கலைகளாகும், நாதச் செறிவே விந்து, சொல்லாற்றல் - நினைவொலி, பொருளாற்றல்.

அறிவியல் சுழிவு மையம் : அலையே துகளாகும், ஆற்றல்கள் ஐந்து, ஐந்து ஆற்றல்களாகும், செறிவாற்றல் காரணி, கருத்துகள் - எண்ணங்கள், நினைவுகள், மின்னணுக்கள் (எலக்ட்ரான் பாசிட்ரான்)

தமிழ்ச் சைவ சதாசிவம் : அறிவும் செயலும் சமநிலை, புவனம் ஒன்றே, பொருளாற்றல், சொல்லாற்றல், மிடற்றொலி.

அறிவியல் அழுத்த மையம் : இடஞ்சுழி - வலஞ்சுழித் துகள்கள் சமநிலை. ஒளி ஒன்றே, ஒளியாற்றல்.

இவ்வாறு மகேசுரம், வித்தேசுரம், தூவா மாயை, மனம், சித்தம், புத்தி என சைவ சித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அறிவியல் ரீதியாக அன்பழகனார் ஒப்பீடு செய்கின்றார். சைவ சித்தாந்த அறிஞர்களும், அறிவியல் பேராசிரியர்களும் இதனை மேலும் ஆய்வு செய்தல் நலன் விளைக்கும்.

அன்பழகனார் இதே ரீதியில் ஞானப்புலத்தில் திருவடிப்பூக்கள், உண்மைத் தவம், ஓம், உலக சமய ஒற்றுமைக்கு வழிகாட்டி, பிறவி நீக்க வழிகாட்டி ஆகிய நூல்களை எழுதியுள்ளார். சைவ வுலகில் அறிவியலை இணைப்பது ஒரு புதுமை! தமிழ்ப்புலவராக இருந்து கொண்டு அறிவியலில் இவ்வளவு திறமை பெற்றிருப்பது வியக்க வைக்கிறது.

(பிறந்த நாள் - 7.10.1948; பிறந்த ஊர் - ஊசூர், வேலூர்; பெற்றோர் - கோபாலகிருஷ்ணன், மயிலம்மாள்)

25. ஆம்பூர்

பெரியவர் திரு. எம். கிருஷ்ணன் அவர்களின் சேக்கிழார் மாநாடுகளால் வேலூர் பகுதிகளில் ஏற்பட்ட பெரிய புராணத்தாக்கம் ஆம்பூரில் 1994ல் தெய்வ சேக்கிழார் மன்றம் உருவாக வழிவகுத்தது. 368வது சேக்கிழார் மாநாட்டை ஆம்பூர் மன்றம் நடத்தி மகிழ்ந்தது. பெரியவர் கிருஷ்ணன் பற்றி எழுத எழுத மனம் இறும்பூதெய்கிறது. சென்னை சேக்கிழார் மன்றம் ''இருந்து'' பணி செய்கிறது என்றால் கிருஷ்ணன் அவர்களின் சேக்கிழார் மன்றம் ''சென்று'' செயல்படுகிறது. அது மூலவர்; இது உற்சவர்; கிடைப்பது பெரியபுராண விளைச்சல்; அமோக விளைச்சல்.

ஆம்பூர் மன்றம் ஆண்டுதோறும் மே மாதம், கிருஷ்ணன் அவர்களின் மாநாட்டை இரண்டு நாட்கள் வெகு சிறப்புடன் நடத்துகிறது. அம்மாநாட்டில் சொல்லாலும், செயலாலும், பொருளாலும் பங்கு பெறும் பெருமக்களின் பெயர்களை அழைப்புகளில் பார்த்தால் ஆம்பூரிலும் சுற்றுப்புற ஊர்களிலும் பெரிய புராணக் கொடி பட்டொளி வீசப் பறப்பதைக் காணலாம். கிருஷ்ணன் அவர்கள் உயர்த்திய கொடி பெரிய புராணக் கொடி! மாநாட்டின் மற்றொரு அங்கமாகதெய்வத்தமிழ் வழிபாட்டு மாவட்ட மாநாடும் நடத்தப்படுகிறது.

ஆம்பூர் மன்றம் சேக்கிழார் மாநாடு தவிர நாள்தோறும் மாலை திருமுறை பயிற்சி, இல்லம் தோறும் திருமுறை ஓதுதல், சிறுவர்களுக்குத் தேவாரம் பாட பயிற்சி அளித்தல், மார்கழி மாதம் 30 நாட்களும் திருமுறை பஜனை. திருமுறைத் திருமணம் செய்து வைத்தல், புதுமனை புகுவிழா திருமுறை அடிப்படையில் செய்தல், தெய்வத்தமிழால் திருக்குடமுழுக்கு

ஏற்பாடுசெய்தல் - என மன்றத்தின் பணிகள் விரிகின்றன. 'மன்றத் தோற்றம் - 1994; அமைப்பாளர் - திரு.ந. அண்ணாமலை)

ஆம்பூர் சேக்கிழார் மன்ற அமைப்பாளர் திரு. சண்முகம் ஆம்பூரில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். உற்சவக் காலங்களில் உற்சவமூர்த்திகளை அலங்கரிக்கும் கலையில் நிபுணர். அமர்ந்த கோலமாக, நின்ற கோலமாக - உற்சவர் இல்லாத திருக்கோயில்களில் அலங்காரப் பொருட்களையே அமைத்து உற்சவரையே புதிதாக உருவாக்கு பவராக - இவரது கை வண்ணம் மிளிர்கிறது. (பிறந்த நாள் - 17.6.1952)

ஆம்பூரில் சோமவார வழிபாட்டு மன்றம் (தோற்றம் - 1979; பொறுப்பு என். சுந்தரம்) மாதர் சங்க ராகு கால வழிபாட்டுக் குழு (தோற்றம் - 1952) என பல அமைப்புகள் உள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான தேவார சபை ஆம்பூரில் உள்ளது. அதற்குத் தனிக் கட்டிடமே உள்ளது. சுந்தரமூர்த்தி முதலியார் என்பவர் முன்பு பண்ணோடு தேவாரம் கற்றுத்தந்தார் (1892 - 1967). அவர்க்குப் பிறகு யு.சுப்பிரமணிய முதலியார் (1919 - 2001), அவருக்குச் சமகாலத்தவர்களான சிவானாந்த முதலியார், டி. பரமசிவ முதலியார், பத்மநாப முதலியார் ஆகியோர் சபையைக் கவனித்து வந்தார்கள். தற்பொழுது சபை வி.ஆர். ராமசாமி முதலியார், அண்ணாமலை ஆகியோரின் நிர்வாகத்தில் உள்ளது.

26. வெட்டு வாணம்

மௌன சுவாமிகளால் 1880ல் தொடங்கப்பட்ட சபை.. ...



இருபத்தைந்து ஆண்டுகள் (1922 முதல் 1947 வரை)





தமிழ்த்தென்றல் திரு.வி.க. தொடர்ந்து ஆண்டு விழாக்களில் தலைமை வகித்த சபை... ... ...

திரு. வி.க. அவர்களின் சொற்பொழிவுகளாலும், பண்டிதை திருமதி அசலாம்பிகை அம்மையார், மறைமலையடிகள் ஆகியோரின் வருகையாலும் எல்லையம்மனுக்கு உயிர்ப்பலி கொடுப்பதனை நிறுத்திய ஊர்... ... ...

தெ.பொ.மீ., மு.வ., சுத்தானந்த பாரதியார், இரா. இராதாகிருஷ்ணன், சோ. சத்தியசீலன், இரா. செல்வக் கணபதி போன்றோர் கலந்து கொண்ட அமைப்பு...

அறுபத்து மூன்று நாயன்மார் வாழ்வு நிகழ்ச்சிகள் கண்ணாடி ஓவியத்தில் தீட்டப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் சபை.

ஆம்.



வெட்டுவாணம் ஸ்ரீ அறுபத்து மூவர் சமரச சன்மார்க்க சபை... ...

இதோ திரு.வி.க. எழுதுகிறார். ''வட ஆர்க்காடு ஜில்லாவிலே வெட்டுவாணம் என்றொரு சிற்றூர் இருக்கிறது. அங்கே பேர் பெற்ற கோயில் ஒன்று உள்ளது. அஃது எல்லம்மன் கோயில் - கோயிலினுள்ளே எவரும், பலியிடுவதில்லை. பலி வேட்கை வெளியிலேயே.

அப்பலி நிறுத்தத்துக்கென்று மௌன சுவாமிகளால் ஒரு சன்மார்க்க சங்கம் காணப்பட்டது. அச்சங்கம் வடிவேல் முதலியார், சண்முக சுந்தர முதலியார், கிருஷ்ணசாமி முதலியார், துரைசாமி முதலியார், சாரங்கபாணி முதலியார் முதலியோரால் நன்முறையில் ஓம்பப்பட்டு வருகிறது.

சன்மார்க்கச் சங்கச் சார்பில் ஆண்டு தோறும் ஆடி நாலாம் வாரத்தில் பலி நிறுத்த மகாநாடு கூடும். 1927ஆம் ஆண்டுமுதல் ஒவ்வோராண்டும் தலைமை எனக்கே வழங்கப்பட்டு வருகிறது. முதல் இரண்டோராண்டு யான் இரத்த ஆறு கண்டேன். ஆறு படிப்படியே அருவியாகியது. இப்பொழுது இரத்தம் குட்டைக் குட்டையாய் நிற்கிறது. பலி குறைந்து விட்டது.

வெட்டுவாணம் எனது ஊராயிற்று. அவ்வூரவர் என் கேளிராயினர்.''

வெட்டுவாணம் சபையைத் தொடங்கிய ஸ்ரீலஸ்ரீ மௌன சுவாமிகளைப் பற்றி திரு.வி.க. இவ்வாறு கூறுகிறார்.

''மலை மௌனமாயிருக்கிறது. ஆனால் அது நடப்பதில்லை. யான் ஒரு மௌன மலையைப் பார்க்கிறேன். அது நடப்பது. தொண்டு வண்ணமாயிருப்பது. அம்மலை எது?

மௌன சுவாமிகள் ஒருவர் இருக்கிறார்: அவர் ஊரில்லார்; பேரில்லார்; அவர் எங்கே பிறந்தாரோ? எங்கே வளர்ந்தாரோ? ஒன்றும் தெரியவில்லை. அவர் மௌனமாய் இருத்தலால், அவரை மக்கள் மௌன சுவாமி என்று அழைக்கிறார்கள்.

சுவாமிகள் கை காசைத் தீண்டாது; உண்ணுதற்கு எக்கவலையும் தீண்டாது. கை ஏந்திக் கவளம் வாங்கிக் கொள்ளும். எவரும் சுவாமிகள் காலில் விழுதல் கூடாது. அவர் படமெடுக்கும் இடங்களில் நிற்பதில்லை. அவர் இரசவாதம் செய்வதில்லை. அற்புதங்கள் நிகழ்த்துவதில்லை. சாதாரண மனிதரைப் போலவே உலவுகிறார்.

வேலூர் வட்டங்களில் சர்க்காவையும், கதரையும் பெருக்கிய பெருமை சுவாமிகளுக்கு உண்டு. சுவாமிகளின் தொண்டு காந்தியடிகளின் கருத்தையே கவர்ந்தது. அதனால் அஃது ஒருமுறை ''யங் இந்தியா'' விலும் இடம் பெற்றது. ஏதேனும் ஒரு கிராமத்தின் மீது சுவாமிகள் நெஞ்சம் செல்லும். அக்கிராமத்துக்குத் தேவையானதைச் செய்ய அந்நெஞ்சம் விரையும். சுவாமிகள் முயற்சியால் கந்தநேரியில் ஒரு முருகன் கோயில் எழுந்தது. வெட்டுவாணத்தில் ஒரு சன்மார்க்க சங்கம் தோன்றியது. கரிகேரி கம்மவார் புதூரில் ஒரு பள்ளி அமைந்தது.

மௌன சுவாமிகள் கிராமக் குழந்தைகளைத் திரட்டுவார். அவர்கட்குக் கல்வியறிவு ஊட்டுவார். அவர்களைப் பாடச் செய்வார், ஆடச் செய்வார். சுவாமிகள் பார்வையில் வளர்ந்து வரும் குழந்தைகள் நல்ல வயதில் பெருந்தொண்டர்கள் ஆவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒரு மௌனம் எவ்வளவு வேலை செய்கிறது. எழுதிக் காட்டியே செயல்கள் ஆற்றுவது எவ்வளவு அருமை.

வேலூரிலிருந்து வள்ளிமலைக்கு நல்ல பாதை கிடையாது. ஏழை மக்கள் பட்டபாட்டை சொல்லால் சொல்ல இயலாது. அப்பாட்டைத் தீர்க்கச் சுவாமிகள் பட்டபாட்டை யான் அறிவேன். அவர் முயற்சியால் ஒரு நீண்ட பாதை அமைந்தது. மௌனம் என்சினியரைப் போலத் தொழில் புரிந்ததைக் கிராம மக்கள் இன்றும் பாராட்டுகின்றனர்.

எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் கங்கையையும் காவிரியையும் ஒன்றுபடுத்திக் கால்வாய் வேண்டுமென்று கூறினார். அக்கூற்று சில அரசியல் தலைவர்களால் எண்ணப் பட்டது. மௌன சுவாமிகள் அக்கால்வாய் எடுத்தார். எதில்? படத்தில், அப்படத்தைச் சுவாமிகள் எனக்குக் காட்டினார். சுவாமிகளிடத்தில் பூகோள அறிவும், அளவை அறிவும், பொருண்மை அறிவும், பிறவும் எப்படி அமைந்தனவோ?

இசையரங்கு கூடியிருக்கும். மக்கள் குழுமியிருப்பார்கள். மத்தளக்காரன் வரவில்லை. சுவாமிகள் அரங்கை அடைந்து மத்தளமெடுத்து வாசிப்பார். இக்காட்சியை வெட்டுவாணத்திலும்,

வேறிடங்களிலும் எத்தனையோ முறை கண்டேன். குழந்தைகள் கும்மி அடிக்கும்; கோல் அடிக்கும். சுவாமிகள் அவ்வாடல்களை உற்று நோக்கிக் கொண்டிருப்பார். தவறு நிகழ்ந்தால் அக்குழந்தைகளுடன் கலந்து அதைச் சீர்படுத்துவார்.

கரிகேரியில் நாகரத்தினம் என்னும் சகோதரியார் இருக்கிறார். அவருக்கு இரண்டு விழி ஒளியும் மங்கல். அவருக்குக் கைவல்யம் முதலிய நூல்கள் மனப்பாடம். அவர் கையிலே சுவாமிகள் எழுதிக் காட்டும் வேகம் அதைக் காண்பவர்களை வியக்கச் செய்யும். என் பாடல்கள் பல சகோதரியாரால் பாடிக் காட்டப்படும். எல்லா மௌனத்தின் திருவருளே.''

திரு.வி.க. மகிழ்ந்து போற்றி வணங்கிய மௌன சுவாமிகள் துவக்கிய சங்கம் வெட்டுவாணம் ஸ்ரீ அறுபத்து மூவர் சமரச சன்மார்க்க சபை ஆகும்.

அந்த சபைக்குள் நுழைந்த பொழுது அறுபத்து மூன்று நாயன் மாரின் ஓவியங்கள் கண்ணாடியில் தீட்டப் பட்டிருந்தன. அப்படியே வியந்து போனோம். சில உடைந்து போய் விடுமோ என்று அஞ்சினோம். அவற்றை எல்லாம் சரி செய்ய வேண்டும். கலைக் கருவூலங்கள் எங்கெல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பாதுகாக்க நூல் வடிவம் கொடுப்பதாகச் சொன்ன செயலாளர் பி.டி. சிவலிங்கம். சமரச சன்மார்க்க சபையைத் தற்பொழுது கட்டிக்காப்பவர். இவர் பணியைப் பாராட்டி சேக்கிழார் ஆராய்ச்சி மையம் 2007ல் ''சேக்கிழார் விருது'' வழங்கியது. (பிறப்பு - 1937; பெற்றோர் - பில் தாண்டவராய முதலியார், ருக்மணி அம்மாள்)

27. இரத்னகிரி பாலமுருகனடிமை சுவாமிகள்



1968ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் நாள். வேலூருக்கும் ஆற்காடுக்கும் இடையேயுள்ள இரத்தினகிரி குன்றில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ முருகப் பெருமானைத் தரிசிப்பதற்காக அடுத்து உள்ள கீழ்மின்னல் கிராமத்தைச் சேர்ந்த 27வயது இளைஞரான மின் வாரிய ஊழியர் சச்சிதானந்தம் அலுவலகம் செல்லும் வழியில், அவசரம் அவசரமாகப் படிகளேறிச் சென்றார்.

ஆனால் அன்று முதல் அவர் பணிக்குச் செல்ல முடியவில்லை. தம்பணிகளைக் கவனிப்பதற்காக முருகன் அவரைத் தடுத்தாட்கொண்டு அங்கேயே தங்க வைத்துக் கொண்டு விட்டான். பாலமுருகனடிமையாக அவர் இன்றும் அங்கேயேதான் தங்கியிருக்கிறார்.

அன்று நடந்தது இதுதான்.

குன்றேறிச் சென்றவர், அச்சிறு கருவறையில் நின்றிருந்த அர்ச்சகரிடம் கற்பூரம் ஏற்றி தீபாராதனை காட்டச் சொன்னார், 'கற்பூரம் இல்லை' என்று கூறியவரிடம் ஒரு ஊதுவத்தியாவது கொளுத்தச் சொன்னார். அதற்கும் வழியில்லை என்று அறிந்ததும், பகுத்தறிவில் ஊறியிருந்த அந்த இளம் ரத்தம் கொதித்துப் பொங்கியது. ''அறுபடை வீடுகளில் கோலோச்சும் குமரன்'' என்று உன்னைக் கொண்டாடுகிறார்களே! ஒரு கட்டிக் கற்பூரத்துக்கூட உனக்குக் கதி இல்லாமல் போய் விட்டதா?'' என்று ஆவேசம் வந்தவர் போல் குமுறியிருக்கிறார். அந்தக் கடுஞ்சொல்லுக்காக வாயைத் திறந்தவர்க்கு நா எழவில்லை. ஏனோ முருகன் அவர் பேச்சைப் பறித்துக் கொண்டு விட்டான் குதித்தார். அரற்றினார். ஆடினார், ஓடினார். ஆடைகளைக் களைந்தெறிந்தார். கந்தன் இடுப்பில் சுற்றியிருந்த அழுக்கேறிய கந்தலாடையை உருவிக் கோவணமாகக் கட்டிக் கொண்டார். கந்தவேளுக்குக் காலமெல்லாம் அடிமையானார்.

இரத்தினகிரி அன்று எப்படி இருந்தது? குண்டும் குழியும், மேடும் பள்ளங்களும், புலியும் நரிகளும் புகுந்து தங்கியிருக்கும் குகைகளும் நிறைந்தது அந்த மலை. அந்த மலையின் தெற்குப் பகுதியின் உச்சியில் செங்கற்களாலும், சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட ஒருமிகப் பழைய கோயில் இருக்கிறது; இருந்தது. அங்குதான் முருகப்பெருமான் குடிகொண்டிருந்தார். ஊருக்கும் கோயிலுக்கும் போய்வர நல்லபாதை கிடையாது. கழனி வரப்பின் மீதுதான நடந்து வரவேண்டும். அதிலேதான் போகவும் வேண்டும்.

மலையின் அடிவாரத்தில் முள் செடிகள், புதர்கள்; புல் நெருஞ்சிமுள்; எல்லாம் முளைத்துக் கிடக்கும்.

பாழடைந்த அந்தக் கோயிலுக்குக் காலையில் ஓர் ஐயர் வாரத்திற்கு இரண்டு நாள் பூஜை செய்வார். ஒரு வருடமாக அவருக்குக் கொடுக்க வேண்டிய மாதம் எட்டு ரூபாய் சம்பளம் கூடக் கொடுக்கப்படவில்லை. சுனையில் உள்ள நீரை எடுத்து வந்து விக்கிரகங்கள் மேல் ஊற்றுவார். விக்கிரகத்தின் மேல் ஏற்கனவே இருந்த கிழிந்து போன அணிகளை எடுத்து மீண்டும் கட்டுவார். கொண்டு வந்த நைவேத்தியத்தைப் படைத்து ஆராதனை செய்வார். கோயிலில் விளக்கேற்றவும் வழியில்லை.

ஆனால் இன்று... ...!

நுழைவில் அலங்கார வரவேற்பு வாயில் கம்பீரமாக ஓங்கிநின்ற இராஜகோபுரம்... அடுத்து சிற்பக் கலையும்சித்திர வேலைப்பாடுகளும் பின்னிப்பிணைந்த வண்ணக் கூடமாகக் காட்சியளிக்கும் முன்மண்டபம்... கண்ணாடி போல் வழுக்கிய தரை.. கருங்கல் கருவறை... தங்கத் தேர்... கல்தேர்...

கி.பி. 2000... ஆடிக்கிருத்திகை.... ட்யூப் லைட் 530... சீரியல் லைட் 2000... 1000 வாட்ஸ் லைட் 100... 40 வாட்ஸ் பல்ப் 800... மெர்க்குரிவேப்பர் லேம்ப் 10... ஓம் முருகா... வருக... இப்படி ரன்னிங்போர்டு விளக்குகள். இரத்தினகிரி மலையே ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

மக்கள் கூட்டம் 1 லட்சம் பேர்.

கி.பி. 2001... அதே நாள்... மக்கள் கூட்டம் 1 லட்சத்து 20 ஆயிரம் பேர்.

நாளும் வளர்கிறது!

இது மட்டுமா!

இரத்தினகிரியில்... ...

திருமணக் கூடங்கள்... தொடக்க வகுப்பு முதல் உயர்நிலை வகுப்புகள் வரை பள்ளி... அனைத்து வசதிகள் கொண்ட மருத்துவமனை... பக்தர்கள் தங்குவதற்கான குடில்கள்.

பாலமுருகனடிமை ஒரு நடமாடும் சாதனையாளர். 34 ஆண்டுகளாக ஆலயத்தை விட்டு அவர் வேறு எங்குமே சென்றதில்லை. அந்த வளாகத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்.

சைவத்திற்கு அவர் ஆற்றும் பணிகள் அளப்பரிய. சைவத்தில் எந்தப் பெருநிகழ் வாயினும் சுவாமிகள் அள்ளிக் கொடுப்பார்கள். சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாட்டினைத் தாமே நடத்தியிருக்கிறார். திருமுறைப் பதிப்புகளுக்கு உதவுகிறார்.

28. காஞ்சிபுரம்

இருபதாம் நூற்றாண்டு, காஞ்சிபுரம் சைவத்தை 1) வீ. திருஞானசம்பந்தனார் காலம் (முதல்) 2) சிவ. சதாசிவனார் காலம் (நடு) 3) வ.த. இராம சுப்பிர மணியன், ஜெயசெந்தில் நாதனார் காலம் என முப்பிரிவுக்ளாகப் பிரிக் கலாம் என்று பு.மா. ஜெயசெந்தில் நாதன் அவர்கள் வரையறுத்துக் கூறினார்கள்.

(i) ஐம்பது ஆண்டுக்காலம் 111 கோயில்களில் தொடர்ந்து வார வழிபாடு செய்தவர்.

செய்யாறு எனும் திருவோத்தூரில் 1899ம் ஆண்டில் வீராசாமி முதலியார் - அங்கமுத்து ஆகியோர்க்கு நன்மகவாய்ப் பிறந்த திருஞானசம்பந்தனார் காஞ்சியின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பிள்ளையார் பாளையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டு ஆற்றினார். காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரிய ராகப் பணியாற்றினார். அறிஞர் அண்ணாவிற்குத் தமிழாசிரியராக விளங்கியவர். தமிழ் மொழியுடன் சைவ சமயக் கருத்துக்களையும் திருக்குறள் நெறியையும் மாணவர்கட்குப் பயிற்று வித்தவர். நாள்தோறும் சிவபூசை புரிந்த சிவபக்தர். கானாடு காத்தான் தேவாரப் பார்டசாலையில் பயின்றவர்.



திருஞானசம்பந்தனார் காஞ்சியில் ''மெய்கண்டார் கழகம்'' எனும் அமைப்பினை நிறுவி ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக ஞாயிற்றுக் கிழமைகளில் காஞ்சிப்புராணத்தில் கூறப்பட்டிருக்கும் 111 சிவன் கோயில்களில் வாரம் ஒரு கோயிலாகச் சென்று உழவாரப்பணி செய்தும், வார வழிபாடு நடத்தியும் திருத்தொண்டு செய்தார். ஒருவாரம் கூடத் தொண்டு தடைப்பட்டதில்லை. உறவினர் இல்லத் திருமணமாயினும் முகூர்த்த நேரம் முடிந்து விட்டாலும் வழிபாட்டை

முடித்துவிட்டுத் திருநீற்றுப் பிரசாதத்துடன் சென்று மணமக்களை வாழ்த்துவார். வாரம் ஒரு புலவரைக் கொண்டு அக்கோயில் வரலாற்றைப் பேச வைப்பார். இவ்வகையில் பல புலவர்களை அறிமுகம் செய்து வைத்தார். அப்படி அறிமுகமானவர்கள் தான் முதுபெரும்புலவர் சி. அருணை வடிவேல் முதலியார் அவர்களும், க. வச்சிரவேல் முதலியார் அவர்களும். இம்மூன்று பெருமக்களும் இணைந்து காஞ்சியைச் சைவக் கோட்டையாக ஆக்கினர். அமைப்புகளே தோன்றாத காலத்தில் தனியொருவராக இன்று திருஞானசம்பந்தனார் சைவப்பணி ஆற்றினார்.

திருஞானசம்பந்தனார்க்குச் சிவ ஞான போதம் முழுமையும் மனப்பாடம் ஆகியிருந்தது. அதனால் தன் உடன் வரும் சிவனடியார்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்களைப் பாராயணம் செய்ய வைத்து மனப்பாடம் செய்ய வைப்பார். 1930லிருந்து திருமுறைப் பாடல்களை ஓதித் தமிழில் திருமணங்கள் செய்விக்கலானார். புலவர் மாமணி திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் அவர்களைத் ''தமிழ்ச் சைவ நெறிகளின் தலைமைத் தொண்டர்'' என்றே அழைத்தனர்.

(ii) சிவ. சதாசிவம்

சிவ. சதாசிவம் அவர்கள் 5.5.1933 அன்று சிவசாமி தேசிகருக்கும், தெய்வயானை அம்மையாருக்கும் திருமகனாய்த் தோன்றினார். சிவசாமி தேசிகர் வள்ளலார் ஆதீனம் நடத்தியவர். நான்கு மொழிகளிலே முதுகலைப் பட்டம் பெற்றதோடு சைவ சித்தாந்தத்திலும், சித்த வைத்தியத்திலும் பட்டம் பெற்றவர். சிவதீக்கை செய்வித்தலைத் தமது கடமையாகக் கொண்டவர். பல இடங்களிலே சைவசித்தாந்த சொற்பொழிவாற்றிச் சைவ சமயத்தை வளர்த்தவர், திருமூலரின் திருமந்திரத்தை வடமொழி மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகளுடன் உரையும் எழுதியுள்ளார். மற்றும் கொடிக்கவி, சிவபோகசாரம் விளக்கவுரை எழுதியுள்ளார். பல தமிழ்த் திருமணங்களை நடத்தியவர். 10.8.2005 அன்று இறைவனடி சேர்ந்தார்.



இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியைக் (வ.த.இராம சுப்பிரமணியம் காலம்) காஞ்சிபுரத்தின் (சைவம்) பொற்காலம் எனலாம். ''செல்வம் மல்குசீர் காஞ்சி'' என்று சொல்லுமளவு காஞ்சியில் அருட்செல்வமும், பொருட்செல்வமும் மண்டிக் கிடக்கின்றது. திருமுறைகளில் ஆழங்கால்பட்ட சைவ அறிஞர்கள் ஒருபால்; இலட்சக்கணக்கான ரூபாய்களை வைப்பு நிதியாகக் கொண்டு சைவப்பணியாற்றும் அமைப்புகள் ஒருபால்; எனக் காஞ்சியில் சைவ ஒளி எங்கும் பரவி நிற்கிறது.

(iii) மு. நாராயண வேலுப்பிள்ளை

இக்கால கட்டத்தில் தான் திரு மு.நாராயண வேலுப்பிள்ளை

வாசகம் திருமந்திரம், பதினோராம் திருமுறை ஆகிய நூல்களுக்கு உரை எழுதினார். (பிறப்பு : 3.5.1911; பிறப்பிடம் - மாம்பட்டு, போளூர் வட்டம்; பெற்றோர் - முனுசாமிப்பிள்ளை, இலட்சுமி அம்மாள்)

(iv) வ. த. இராம சுப்பிரமணியம்

16.8.1936-இல் பிறந்த வ.த.இராம சுப்பிரமணியம் முதல் ஆறு திருமுறைகளுக்கும் உரை எழுதியுள்ளார். தற்பொழுது பெரியபுராண உரை எழுதி வருகிறார். இதுவரை நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. 1976இல் தமிழ்ச் சங்கம் தொடங்கிக் கருத்தரங்கம், சொற்பொழிவு என்று நடத்துகின்றார். பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணச் சொற்பொழிவுகளும் இடம் பெறுகின்றன. 1997லிருந்து ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் மூன்று நாட்கள் பன்னிரு திருமுறை விழா நடத்துகின்றார். இவர் எழுதியுள்ள நூல்கள் 88 ஆகும். (பிறப்பிடம் - வயலக்காவூர், காஞ்சிபுரம்; பெற்றோர் - தங்கவேல்பிள்ளை, முனியம்மாள்)

(v) பு.மா. ஜெயசெந்தில்நாதன்

1936ல் பிறந்த மற்றோர் அறிஞர் பு.மா. ஜெயசெந்தில்நாதன் ஆவார்.



இவர் எழுதியுள்ள திருமுறைத் தலங்கள் தலயாத்திரை செல்பவர்களுக்கு நல்ல வழிகாட்டியாகும். ‘‘தேவார வைப்புத் தலங்கள்’’ என்ற நூல் தமிழில் முதல் முயற்சியாகும். இதுவரை யாரும் செய்யாத ஒன்று- வைப்புத் தலங்களைக் கண்டுபிடிப்பதற்குள் இவர்கள் பட்டபாடு பெரும்பாடு ஆகும். பலநாட்கள் நண்பகல் உணவே கிடைக்காமல் போயிருந்திருக்கிறது. இவர் எழுதியுள்ள ‘‘சிவத்திரு மேனிகள்’’ சிவபெருமானின் 64 வடிவங்களைப் பற்றியதாகும். ‘‘சிவபராக்கிரமம்’’ என்ற நூலை ஒட்டி எழுதப்பட்டது. ஒவ்வொரு வடிவத்திற்கும் ஏற்ற திருமுறைப் பாடலைக் கண்டு பிடிப்பதற்குள் இவரது கண் பார்வையே மங்கி விட்டது. ‘‘சமயக் களஞ்சியம்’’ என்ற நூல் வினாவிடையாக எளிதில் சமயக் கருத்துகளை விளக்குவது ஆகும். குழந்தைகளுக்கென ‘‘அறவழிவாசகம்’’ என வெளியிட்டிருக்கிறார். உலகளாவிய மாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார். இவரது தந்தையார் மாசிலாமணி முதலியார் சைவத்தில் பெரியபடிப்பாளி. தனது கிராமத்தில் நூலகம் நடத்தி வந்தார். ஜெயசெந்தில்நாதன் அவர்களின் பிறப்பிடம் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பாளையம்

ஆகும். அண்மையில் மறைந்து விட்டார்.

(vi) காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம்

காஞ்சிபுரத்திற்குப் பெருமை சேர்க்கும் அமைப்பு காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம் ஆகும். முப்பத்து மூன்று ஆண்டுகளாகத் திருக்கூட்டம் நடத்தி வரும் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் ஒன்றே போதும் 1996 வெள்ளிவிழா ஆண்டில் பனிரண்டு நாட்கள் விழா எடுத்தனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சைவச் செம்மல்களைப் பாராட்டி மகிழ்ந்தனர். வெள்ளி விழா மலரும் வெளியிட்டனர். முப்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு மயிலம் வே. சிவசுப்பிரமணியம் அவர்களின் ''திருவாசக மணியொளி'' என்ற நூலை வெளியிட்டனர். 1984-இல் 13 ஆவது ஆண்டு விழாவில் திருமுறை உரை ஆசிரியர்களுக்குப் பாராட்டும் பட்டமும் தந்திருக்கின்றனர். 1994 பிப்ரவரியில் முதல் உலகச் சேக்கிழார் மாநாட்டை நடத்தியிருக்கின்றனர். அப்பொழுது நடைபெற்ற அறுபத்து மூன்று நாயன்மாரின் வரலாற்றுக் காட்சி உலா சைவ உலகெங்கும் பெரிதும் வியந்து பாராட்டப்பட்டது. பிப்ரவரி 92இல் ஏகாம்பரநாதர் கும்பாபிடேக மலரைத் திருக்கூட்டம் வெளியிட்டது. திருவிளையாடற்புராணம் காஞ்சிப் புராணம், பெரிய புராணம், திருவாசகம், கந்த புராணம், நால்வர் நான்மணிமாலை, சோண சைல மாலை, அருணாசல புராணம் சொற்பொழிவுகள் நிறைவு பெற்றுள்ளன. 1982 முதல் சாத்திரப் பாடமும் கற்றுத் தரப்படுகின்றது.

பள்ளி மாணவ மாணவியரிடையே 21வது ஆண்டாகத் தேவார திருவாசக ஒப்புவித்தல் நடைபெற்றுள்ளது. 3ஆம்



முதல் சேக்கிழார் மாநாடு ஊர்வலம்

பள்ளி மாணவ மாணவி களுக்கு
காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம்
தேவார திருவாசகம் ஒப்புவித்தல் போட்டி

வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை வகுப்பு வாரியாகத் தனித்தனியாகப் பிரித்து அவ்வப்பருவத்திற்கேற்ற மனப்பாடப்பகுதிகளாக ஆத்திசூடி, மூதுரை, திருப்பள்ளியெழுச்சி, கோளறு திருப்பதிகம், போற்றித் திருத்தாண்டகம், துயர்களையும் பதிகம், திருக்குறள் என அச்சிட்டுக் கொடுத்து 32க்கும் மேற்பட்ட பரிசுகள் வழங்கி வருகின்றனர். 500க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தமிழ் நாட்டிற்கே நல்லதோர் எடுத்துக்காட்டு.

திருக்கூட்டம் நடத்தி வரும் பிற பணிகள்; திங்கட்கிழமைதோறும் மாலையில் திருவேகம்பத்தில் கூட்டு வழிபாடு, கார்த்திகை சோம வாரங்களில் சிறப்பு வழிபாடு, கார்த்திகை முதல் சோமவாரத்தில் திருவேகம்பத்தில் அறுபத்து மூவர்க்கு விசேட அபிடேக ஆராதனை, ஞாயிறு காஞ்சியில் உள்ள சிவாலயங்களில் உழவாரப் பணி, செவ்வாய்க்கிழமை தோறும் மாலையில் குமரக் கோட்டத்தில் வழிபாடு, ஆடி, தை வெள்ளிக் கிழமைகளில் காமாட்சி அம்மன் கோயிலில் சிறப்புச் சொற்பொழிவுகள் மார்கழியில் முத்தீசப் பெருமான் சந்நிதியில் பாவைச் சொற்பொழிவு, தலயாத்திரை, திருவாசக முற்றோதல், சமய நூல்கள் வெளியிடுதல்.

முதல் சேக்கிழார் மாநாடு ஊர்வலம் 1994

உழவாரப் பணி

இத்துணை புகழ்பெற்ற சிவனடியார் திருக்கூட்டம் 5.9.1971 அன்று திருபாலசுப்பிரமணிய பிள்ளை தலைமைப் பொறுப்பேற்கத் துவங்கப் பட்டது. அவருக்குப் பின் V.K. அண்ணாமலைச் செட்டியார் தலைவர் ஆனார். நல்லி சுப்பிரமணிய செட்டியார் 1974 இல் தலைவராக நியமிக்கப் பட்டார். கன்னியப்ப உடையார் 1976ல் துணைச் செயலாளராக நியமிக்கப் பட்டார். பின்னர் பொருளாளர் பதவியும் அவரிடம் ஒப்படைக்கப் பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களையும் அனைத்துப் பணிகள், சிவ வழிபாடுகள் செய்ய கணிசமான வைப்பு நிதியையும் கொண்ட காஞ்சி

நல்லி செட்டியார்

கன்னியப்ப உடையார்

புரம் சிவனடியார் திருக்கூட்டம் சைவ அன்பர்களுக்கொரு வழிகாட்டி ஆகும்.

காஞ்சிச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு நல்லி சுப்பிரமணிய செட்டியார் 1974-இல் தலைவர் பொறுப்பேற்றதிலிருந்து இறைவனடி சேரும்வரை திருக்கூட்டத்தைச் செம்மையாக நடத்திச் சென்றார். தேவார திருவாசகங்களைப் பொருளுணர்ந்து உருக்கமாகப் பாடல வல்ல சதுரர். 18.11.1925 அன்று காஞ்சிபுரத்தில் திரு. நல்லி முனுசாமி செட்டியார், திருமதி அலர்மேலம்மாள் ஆகியோர்க்கு நன்மகனாய்ப் பிறந்தார்.

(vii) திருமுறை மன்றம்

''பள்ளி மாணவர்கள் போட்டி மூலம் திருமுறை வளர்த்தல்'' காஞ்சிச் சைவத்தின் பண்பாக அமைந்து விட்டது. காஞ்சிபுரம் திருமுறை மன்றம் நடத்தும் பள்ளி மாணவர்களுக்கான திருமுறை போட்டிகளில் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பெறுகின்றனர். ஏப்ரல் மாதத்தில் சிறப்பாக ஆண்டு விழா நடத்தி, மாணவர்க்குப் பரிசுகள் வழங்கி, திருமுறை இசை, சொற்பொழிவு என்று சிறப்பாகச் செய்கின்றனர். இம்மன்றம் 14.4.1980 இல் அமரர்கள் திரு. கு. புண்ணியக்கோடி, தேவாரம் க. சரவணன், ஆகியோரால் துவங்கப் பெற்றது. எட்டு லட்ச ரூபாய் வங்கியில் இருக்கிறது என்றால் இம்மன்றத்தில் செழிப்புக்குக் கேட்கவா வேண்டும்! 30.1.2005 அன்று நடைபெற்ற போட்டியில் 30 பள்ளிகளிலிருந்து 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலான 350 மாணவர்கள் வந்து கலந்து கொண்டனர். 30 ஆசிரியப் பெருமக்கள் நடுவராக இருந்து உதவியுள்ளனர். மாத வழிபாடு, நூல் வெளியிடுதல், தல யாத்திரை என மன்றத்தின் பணிவிரிகின்றது. (தலைவர் A.K.G. சம்பந்தன், செயலர் - மா. சுந்தர மூர்த்தி)

(viii) நால்வர் நற்றமிழ் மன்றம்

வெள்ளிவிழா கண்ட மற்றொரு அமைப்பு நால்வர் நற்றமிழ் மன்றம் ஆகும். நால்வர் குருபூஜை, சேக்கிழார் குருபூஜை ஆகியவற்றை ஓதுவாமூர்த்திகளின் இன்னிசையோடு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இவையல்லாமல் மகாசிவராத்திரியன்று அகண்ட பாராயணம் செய்கிறார்கள். 270 தலயாத்திரை முடித்திருக்கின்றனர். (தலைவர் தா. சுப்பிரமணியன்; செயலர் - ஞான பரமேசுவரன்)

(ix) திருக்குறிப்புத் தொண்டர் சிவாலயம்

அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரான திருக்குறிப்புத் தொண்ட நாயனார் முத்தியடைந்த இடத்தில் நாயனார் மரபைச் சேர்ந்தவர் சிவாலயம் ஒன்று எழுப்பி 42 ஆண்டுகளாகக் குரு பூஜையும் நடத்தி வருகின்றனர். கோயில் அழகுற அமைந்துள்ளது. நாயனார் சிலையும் உள்ளது. நாயனார் வரலாறும் கல்வெட்டில் பொறிக்கப் பட்டு இருக்கின்றது. தற்போதைய நடைமுறை நிர்வாகி V. பாலுமேஸ்திரி ஆவார்.

(x) அறுபத்து மூவர் குருபூஜை விழாக்குழு

இருபது ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட அருள்மிகு கச்சபேசன் அறுபத்து மூவர் குருபூசை விழாக்குழு அறுபத்து மூன்று நாயன்மார் திருநட்சத்திரங்களின் போது குருபூஜை நடத்துகின்றனர். மாணிக்கவாசகர், சுந்தரர், குருபூஜையின்போது திருவாசகம், சுந்தரர் தேவாரம் முற்றோதல் செய்கின்றனர். M.V. காளத்தி, அக்னி கண்ணன், சிதம்பரம், பெருமாள் ஆகியோர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

(xi) தெய்வச் சேக்கிழார் மன்றம்

2.6.2002இல் தொடங்கப்பெற்ற தெய்வச் சேக்கிழார் மன்றத்தார் புதன் தோறும் பெரியபுராணச் சொற்பொழிவுகள் நடத்தி வருகின்றனர். தலைவர் - தா. சாம்பசிவம். செயலர் - கனக சபாபதி.

(xii) திருமுறை அருட்பணி அறக்கட்டளை

23.1.2005இல் துவங்கப்பெற்ற திருமுறை அருட்பணி அறக்கட்டளைத் தொடக்கமே உற்சாகத்துடன் அமைந்து உள்ளது. திருமுறை அகண்ட பாராயணம், மாதந்தோறும் சொற் பொழிவு, திருமுறை இசை, சைவ சமயப்பயிற்சி வகுப்பு என்று பணி விரிகின்றது. சைவ சமயப் பயிற்சி வகுப்பு சைவ சித்தாந்தம், திருமுறை என ஏழு நாட்கள் நடைபெற்றது. 61 பேர் சேர்ந்து பயிற்சி பெற்றனர் பயிற்சி இயக்குநர் சித்தாந்த வித்யாநிதி மா.அமிர்தலிங்கம் அவர்கள் சைவசித்தாந்தம், திருமுறை இரண்டிலும் ஆழங்கால் பட்டவர் அழகரடிகளின் சீடர் ஆவார். 72வயது நிரம்பிய அமிர்தலிங்கனார் தஞ்சை மாவட்டம் பூங்குடியில் பிறந்தவர் ஆவார். அறக்கட்டளையின் நிறுவனர் சு. சதாசிவம் ஆவார். சதாசிவம் அவர்கள் கயப்பாக்கத்தில் 11.10.1953ல் பிறந்தார். நல்ல சொற்பொழிவாளர்.

இம்மன்றங்கள் தவிர வழிபாட்டிற்கெனவே நித்ய பிரதோஷக்குழு சாயரட்சகுழு, அர்த்தசாமக்குழு என அ.மி. ஏகாம்பர நாதர் கோயிலிலும் அ. மி. கச்சபேசர் கோயிலும் பணியாற்றி வருகின்றன.

(xiii) த.கு. பத்மநாபன்

த.கு.ப. என்றழைக்கப்படும் த.கு. பத்மநாபன் அவர்கள் ஒரு அற்புதமான மனிதர். திரு. வி.க.மன்றம் என்ற அமைப்பினை 1972ல் தொடங்கி 33 ஆண்டுகள் 638 தொடர் நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர் கட்டணம் ஏதுமின்றி நடத்தி வருகிறார். அத்தனை நிகழ்ச்சிகளுக்கும் புதிது புதிதாகத் தலைப்புகளைக் கண்டுணர்ந்து தந்து வருகிறார். இந்தத் தனித்தன்மையைக் கருதிய பலரும் த.கு.ப என்ற இவரது பெயர்ச் சுருக்கத்தைத் தலைப்புக்குவியல் பத்மநாபன் என்று விரிவாக்கம் செய்து மகிழ்ந்து வருகின்றனர். தமது மன்றத்தில் இலக்கியச்சிந்தனை, ஆன்மீக ஞானம், மருத்துவ மாண்பு, புராண உண்மைகள், இதிகாசங்கள் போன்றவற்றில் உரையாற்ற பலரையும் மேடை ஏற்றி மகிழ்ந்து வருகிறார்.

த.கு.ப. நல்ல கவிஞர். எளிமையும், இனிமையும், இசைநலமும் கலந்து இவரது கவிதை ஊற்றெடுத்துப் பெருகி வரும். பேச்சாற்றலிலும் ஊற்றெடுத்துப் பெருகி வரும். பேச்சாற்றலிலும் வல்லவர். பட்டிமன்றம் வழக்காடு மன்றம், கருத்தரங்கம், ஆய்வரங்கம் முதலான பல்வகை இலக்கிய நிகழ்வுகளிலும் பங்குபெற்று, தனது உரை வீச்சால் தமிழ்நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவர். பேச்சின் இடையிடையே பழமொழிகளும், பழமொழிகளுக்கு இணையாக இவரே படைத்து வழங்கும் புதுமொழிகளும் கலந்து விளங்கும். இவரது பேச்சாற்றலைக் கண்டு களித்த மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனார் அவர்கள் இவரைப் பாராட்டி ''பழமொழி பத்மநாபன்'' என்று பட்டமளித்துள்ளார். பேச்சைவிட எழுத்தே நிலைத்தது என்பதை உளங்கொண்ட த.கு.ப. தமது தமிழ்ச்சிந்தனைகளை ஒருங்கு தொகுத்துப் பலநூல்களை வெளியிட்டுள்ளார். அனைத்துமே சிறு சிறு நூல்கள் ஆகும். அவற்றுள் பஞ்சசபை நடனம், சிவசமயம் நனி வரை, சித்தர்கள் வாழ்வு,

ஜோதிர்லிங்கத் தலங்கள், சிவாலய வழிபாடு புனிதத் தலவரலாறு, வழக்கறுத்தீஸ்வரர் தலவராறு, சிவராத்திரி, காமாட்சியம்மன் ஆலய வரலாறு ஆகியன சைவ நூல்கள் ஆகும். ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நன்னெறி போன்ற பழமையான நூல்களையும் பதிப்பித்துத் தருகிறார்.

த.கு.ப.இந்தியாவில் உள்ள ஆன்மீகத் தலங்களை ஏழுமுறை தரிசனம் செய்தவர். பனிரண்டு ஜோதிர் லிங்கத் தலங்களை ஐந்துமுறை தரிசனம் செய்தவர். 12 வது முறையாக காசி யாத்திரை சென்று வந்தவர். மாதந் தோறும் காளத்திநாதனைத் தரிசனம் செய்து வருபவர். திங்கட் கிழமை தோறும் அருள்மிகு வழக்கறுத் தீஸ்வரர் ஆலயத்தில் ''பஞ்சபுராணம்'' உரையாற்றி வருபவர். வெள்ளிக்கிழமை தோறும் அ.மி.காளிகாம்பாள் ஆலயத்தில் ''அபிராமி அந்தாதி'' தொடர் சொற்பொழிவு ஆற்றுபவர்.

காஞ்சிபுரம் பெற்ற அருநிதி த.கு.ப. (பிறந்தநாள் - 2.3.1937; பிறப்பிடம் - ஆர்ப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்; பெற்றோர் - மணியம் தம்பி குப்புசாமி, இராசாம்பாள் அம்மாள்)

(xiv) கலசத் திருப்பணி

த.கு.ப. அவர்களைப் பற்றி எப்படி எழுத முடியாதோ அது போலவே திருப்பணித் தொண்டர் நடேச வேதகிரி அவர்களைப் பற்றி எழுத்தில் வடிக்க முடியாது. அப்படி ஒரு பணி ஆற்றியிருக்கிறார். அவர் ஆற்றி வரும் திருப்பணிகள் வருமாறு; காஞ்சிபுரம் மூங்கில் மண்டபம் வரசக்தி விநாயகர் குடமுழுக்கு (2 தடவை); கீழ் நாயகன் பாளையம் மணிகண்டீசர் குடமுழுக்கு விழா; திருப்பெருந்துறை ராஜகோபுர ஏழு கலசத் திருப்பணி, திருவேகம்பன் பள்ளியறை நூதன திருமேனிகளும் குடமுழுக்கும், திரு வேகம்பம் ராஜகோபுரம் 12 அடி உயர செப்புக் கலசம் செய்தது; பல கோயில்களுக்குக் கலசம், நாகாபரணம், காஞ்சி கண்கண்டீசர் 32 அடி உயர புதிய ராஜகோபுர திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தியது; திருவேகம்பத்தில் பன்னிரு திருமுறைகள் கூட்டு வழிபாடாக ஓதி மூன்று ஆண்டுளில் முடித்தது (இரு முறை தற்பொழுது மூன்றாவது முறையாக நடந்து கொண்டிருக்கிறது) திருவாசக முற்றோதல்; புண்ணிய கோடீஸ்வரர் கோயிலில் நூதன நடராஜன் (4½அடி உயரம்), சிவகாமி, நால்வர் நூதன திருவுருவங்களை நிறுவத் திருப்பணி முடித்தது; முப்பத்திரண்டுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டமை.

இத்தனைச் செல்வங்கள் நிரம்பிய காஞ்சியிலிருந்து ''தெய்வச் சேக்கிழார்'' பெயரில் 15 ஆண்டுகளாக ஒரு திங்கள் இதழும் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதழாசிரியர் அண்ணா சச்சிதானந்தம் . அவர்கள். இவர் மற்றொரு பணியும் செய்து வருகிறார். ''தெய்வச் சேக்கிழார் திருவமுது நிதி'' என ஒரு ஏற்பாடு செய்து, காஞ்சிபுரம் வரும் சிவனடியார்களுக்குத் திருவமுது படைத்து வருகிறார்.

''அற்புத ஆலயமணி'' காஞ்சிபுரத்திலிருந்து வெளிவரும் மற்றுமொரு திங்கள் இதழ் ஆகும். பத்தாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதன் ஆசிரியர் துரை. சுப்பிரமணியன் ஆவார். ஞான பரமேஸ்வரன் என்ற சிவத் தொண்டர் வைகாசி விசாகம் டிரஸ்ட் என்று நிறுவி முருகப்பெருமான் வழிபாடு, சிறு சிறு நூல்கள் வெளியிடுதல் எனப்பணி செய்கின்றார். அவர் வசிக்கும் பகுதியில் உள்ள விநாயகர் திருக்கோயிலில் சந்தனக்காப்பு, சிறப்பு

வழிபாடு, சொற்பொழிவு, என நிகழ்த்தி வருகின்றார்.

மோரணம் திருநாவுக்கரசு என்ற புலவர் பெரிய புராணத்தை யாவரும் படித்தறியும் வண்ணம் இனிய எளிய கவிதை நடையில் ஈரிரண்டு பதங்களாகச் சந்தப்பாவாக அமைத்துச் சிறிது கல்வியுடையோரும்படித்து உணர்ந்து மனப்பாடம் செய்து கொள்ளும் வண்ணம் ''உம்பரும் போற்றும் தொண்டர்தம் பெருமை'' என்று வடித்துத் தந்துள்ளார்.

இளையவர் - பெரியவர், கற்றார் - அதிகம் கற்காதவர், செல்வர் - வசதி குறைந்தோர் என பல் திறப்பட்ட மக்களுக்கும் திருமுறைகளைக் கொண்டு செல்லும் தனிப்பெரு நகராய்க் காஞ்சிபுரம் திகழ்கிறது.

29. கள்ளக்குறிச்சி

(i) திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் திருக்கூட்டம்

ஆங்கில மாதம் முதல் ஞாயிறு தோறும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு:

இரண்டாம் ஞாயிறு - சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு

மூன்றாம் ஞாயிறு - இல்லம் தோறும் திருமுறை வழிபாடு.

நான்காம் ஞாயிறு - சிவாலயங்களில் உழவாரப்பணி; திருவாதிரை தோறும் திருவாசகம் நிறைவோதல்; திங்கள் கிழமைகளில் சிவாலயத்தில் திருமுறை ஓதல்; வியாழன்தோறும் அருட்பெருஞ்சோதி அகவல் பாராயணம்; கருமுதல் திருவரை திருநெறிய தீந்தமிழில் வாழ்வியல் சடங்குகள்; நல்தல வேள்வி செய்து தமிழில் குடமுழுக்கு; அருள்தரு கரபாத்திர சுவாமிகள் திருமடத்தில் நாள்தோறும் கஞ்சி, கூழ் வழங்குதல்.

இந்த அட்டவணையைப் பார்க்க படிக்க அப்படி ஒரு ஆனந்தம் பிறக்கிறது.

ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் இரண்டு நாட்களுக்கு ஆண்டு விழா... ... அழைப்பிலேயே அழகு தமிழ் கொஞ்சுகிறது. ''அருள் வழங்கும் திருவீதி வலம்... ... சிவனடியார் பெருமக்கள் வேர்த்தும், புரண்டும், விழுந்தும், எழுந்தும், ஆடியும், பாடியும் புடைசூழ அருள்தரு சிவகாமியம்மை உடனருள் அழகிய திருச்சிற்றம்பலம் உடையவர் திருவீதி உலா'' என்ன ஒரு அழகு! 1998ல் தமிழ்நாடு அளவிலான உழவாரத் திருக்கூட்டங்களின் முதல் மாநாடு... ... 200ல் குடியேற்றம் பக்தவத்சலனாரின் பன்னிரு திருமுறை மாநாடு... ...

கள்ளக்குறிச்சி சைவ வரைபடத்தில் இடம் பெற்று விட்டது.

திருக்கூட்டம் தொடக்க நாள் - 30.9.1990. அமைப்பாளர் திரு. க. நாச்சியப்பன், தலைவர் திரு. ஆ. பெரியத்தம்பி ஐயா; செயலர் - தங்க சுப்பிரமணியன்.

30. திருக்கழுக்குன்றம்

(i) திருஞானசம்பந்தர் இசைவிழா அறக்கட்டளை

இற்றை நாளில் ஓதுவாமூர்த்திகளைப் பலரும் பல்வேறு மன்றங்களும் - பல்வேறு விதமாகப் பாராட்டிப் போற்றி வருகிறார்கள். ஆனால் யாருமே சிந்திக்காத ஒரு காலகட்டத்தில் திருக்கழுக்குன்றம் திருஞானசம்பந்தர் இசைவிழா அறக்கட்டளை

பல்லாண்டுகளாக ஓதுவா மூர்த்திகளைப் பாராட்டி வந்திருக்கிறது. இருபத்து ஏழாம் ஆண்டு (1998) அழைப்பிதழில் ஓதுவாமூர்த்திகள் எப்படி பாராட்டப் பட்டனர் எனப் பார்ப்போம்.

12.6.98... மாலை 6.00.... திருமுறை இசை... திரு சொக்கலிங்க ஓதுவார் மற்றும் பலர்.

8.00... பொற்கிழி வழங்கள் தேவாரத் தமிழிசை விருது வழங்கல் பெறுவோர் - குடந்தை திரு. வி. லட்சுமணன் 8.15... திருமுறை இசை... டாக்டர் சேலம் எஸ். ஜயலட்சுமி.

13.6.98... காலை 7.00... மலைவலம் திருமுறை பாராயணத்துடன் ... ஓதுவார்கள்.

8.00... ... ...

... ...

11.15 ... திருமுறை இன்னிசை ... மழலையர்கள்

11.45 ... திருமுறை இன்னிசை ... சிறுவர்கள்

12.15 ... திருமுறை இன்னிசை ... இளைஞர்கள்

பிற்பகல் அமர்வு

3.30 ... திருமுறை இன்னிசை ... ஓதுவாமூர்த்திகள்

4.30 ... சிறப்பு இன்னிசை அரங்கம் ... திரு. தி. ஆடலரசு

7.00 ... திருமுறை இன்னிசை ... திரு. என். கிருஷ்ணசாமி செட்டியார், பாண்டி.

14.6.98 காலை 7.00 ... மலையேற்றம் மலைக்கோயில் வழிபாடு திருமுறை இசையுடன் ... திரு. ஆர். சுந்தர வடிவேலு

... ...

மாலை 4.00 திருமுறை இன்னிசை ... ஓதுவாமூர்த்திகள்

மாலை 4.30 மின் சுருதிப்பெட்டி வழங்கல் ... பெறுவோர் திரு. தி. ஆடலரசு, ஓதுவார்

இரவு 7.00 .. திருஞானசம்பந்தர் நால்வர் கோயிலுக்கு மீளுதல் ... வீதிபாராயணத்துடன் ஓதுவார்கள். அடியார்கள் வழிபாடு.

இந்த நிகழ்ச்சி நிரலைப் பார்த்தாலே குழந்தை முதல் இளைஞர் வரை திருமுறை இசைத்தல், ஓதுவா மூர்த்திகள் பண்ணிசை, பொற்கிழி வழங்கல் - என அரியமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாளில் கூட பின்னிரண்டு நிகழ்ச்சிகளும் பரவி விட்டனவே ஒழியமுன் நிகழ்ச்சி (குழந்தை முதல் இளைஞர் வரை) இன்றும் வளரவில்லை. இவ்வாறு பல ஆண்டுகள் இந்த அமைப்பு செய்து வருகின்றது. தமிழகத்தில் உள்ள ஓதுவா மூர்த்திகளைச் சந்தித்தால், இந்த நிகழ்ச்சி பற்றி தான் முதலில் கூறுவார்கள்.

இவ்விழாவினை முதலில் திருக்குறள் பீடம் அழகரடிகள் நடத்தி வந்தார்கள். பின்னர் திருமதி சேலம் எஸ் ஜயலட்சுமி அவர்கள் நடத்த ஆரம்பித்தார்கள். இதே போல் இவ்வறக்கட்டளை சென்னையில் பிற அமைப்புகளுடன் இணைந்து திருவாசக, திருமந்திர மாநாடுகள் பல்லாண்டுகளாக (தனியே கட்டுரை உள்ளது) நடத்தி வருகின்றது.

சேலம் எஸ். ஜயலட்சுமி புகழ் பெற்ற இசையரசி, தமிழகம் எங்கும்,

வெளிநாடுகள் பலவற்றிலும் திரு முறை இசை நிகழ்த்தியுள்ளார்கள். திருமுறை ஒலிநாடாக்களை வழங்கியுள்ளார். இசை ஆராய்ச்சி (குறிப்பாக, சிலப்பதிகாரம்) செய்து முனைவர் பட்டம் வாங்கியுள்ளார். தமிழ்நாடு அரசு தமிழ் இசைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கியது.

திருமணம் கூட செய்து கொள்ளாமல் தன் வாழ்க்கையைத் திருமுறைக்கும், தமிழிசைக்கும் அர்ப்பணித்த மாதரசி சேலம் எஸ். ஜயலட்சுமி.

31. திருவனந்தபுரம்

1885 ஆம் ஆண்டு சித்திரை முதல் நாளன்று திருவனந்தபுரம் சைவப் பிரகாச சபை தொடங்கப்பட்டது. திரு. திரவியம்பிள்ளை (வலிய மேலெழுத்து) தலைவராகவும் திரு. பி. சுந்தரம் பிள்ளை எம்.ஏ (மனோன்மணீயம் ஆசிரியர்) உதவித்தலைவராகவும், திரு சுவாமிநாதபிள்ளை (வழக்கறிஞர்) காரியதரிசியாகவும் கொண்ட நிர்வாகக்குழுவினரின் முயற்சியால் திருவனந்தபுரம் ராஜபாதையில் ஏழு சென்ட் இடம் சபைக்குச் சொந்தமாக விலைக்கு வாங்கப்பட்டது. அதில் ஒரு சிறிய மண்டபமும் அமைக்கப்பட்டது. 1886 ஆம் ஆண்டு மண்டபத் திறப்புவிழா செய்யப்பட்டது. 1888ஆம் ஆண்டு மேலும் ஐந்து சென்ட் இடம் விலைக்கு வாங்கப்பட்டது.

பேராசிரியர் திரு.பி.சுந்தரம் பிள்ளை, இசைச் செல்வர் திரு.தி. இலக்குமணப்பிள்ளை, திரு. கே.என். சிவராஜ பிள்ளை, திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை, கவிமணி திரு. சி.தேசிகவிநாயகம் பிள்ளை, திரு. ஆர். வைத்தியலிங்கம்பிள்ளை, திரு. .எஸ்.நடராஜ பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் பலரும், அவர்கள் வாழ்ந்த காலத்தில் இந்தச் சபையில் நிர்வாகிகளாய் இருந்ததுடன் அடிக்கடி ஒன்றுகூடி தமிழாராய்ச்சியும் நடத்தி வந்திருக்கின்றனர்.

1952ஆம் ஆண்டு முதல் சபையில் நிகழத் தொடங்கிய கந்தசஷ்டிவிழா ஆண்டுதோறும் புதுமையும் பொலிவும் பெற்று தமிழ்மொழி, சைவத்திருநெறி, கலை என சிறப்பு நிகழ்ச்சிகள் கொண்ட பெருவிழாவாக நடைபெற்று வருகிறது. இச்சபையின் ஆதரவுடன் 1955 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் திருவனந்தபுரத்தில் சைவ சித்தாந்த மாநாடுகளை சமய - இலக்கிய - கலை நிகழ்ச்சி பலவற்றுடன் ஆண்டுதோறும் சிறப்புற நடத்தி வந்தனர். 1957 ஆம் ஆண்டு முதல் மார்கழித் திங்களில், திருப்பாவை, திருவெம்பாவை விழாக்கள் சபையின் சார்பில் நடபெற்று வந்தன. 1960ஆம் ஆண்டு சபையின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவின்போது சபை மண்டபத்தோடு இணைந்து திறந்த வெளியரங்கு ஒன்று அமைக்கப்பட்டு பொருளாதாரப் பேரறிஞர் டாக்டர் பா. நடராஜன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டு முதல் சபை மண்டபத்தில் வாரவழிபாட்டுக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. இக்கூட்டங்களில் ஒவ்வோர் ஆண்டும் முறையே திரு. ப. ஜனார்த்தனம் பிள்ளை சிவ புராணத்திற்கு திரு. மா. இளைய பெருமாள் திருமுருகாற்றுப்படைக்கும், திரு. இ. குற்றாலம் திருவாசகத்திற்கும், டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் தேவாரத்திற்கும், டாக்டர் தா. வே. வீராசாமி பெரியபுராணத்திற்கும், திரு. ச. மீனாட்சிநாதன் திருவிளையாடப் புராணத்திற்கும் விளக்கவுரை அளித்தனர். பழுதடைந்திருந்த சபைக்

கட்டிடத்தை அகற்றிவிட்டு மூன்று நிலைக்கட்டிடம் எழுப்பி 19.9.1971 இல் கேரள மாநில ஆளுநர் திரு. வி.விஸ்வநாதம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மூன்றாவது நிலையில் சபையின் அலுவலகமும், நடராஜர் சந்நிதியும், கலையரங்கமும் அமைந்துள்ளன. 1978ஆம் ஆண்டு முதல் சபையின் ஆதரவில் இலவசத் தமிழ் பயிற்சி வகுப்பு துவக்கப் பெற்றது. 1985 செப்டம்பர் மாதம் 20, 21, 22, 23, 24 நாட்களில் சபையின் நூற்றாண்டு விழாவில் கேரள மாநில ஆளுநர் மேதகு பா. இராமச்சந்திரன், தமிழக அமைச்சர் மாண்புமிகு திரு.ஆர்.எம். வீரப்பன், கேரள அமைச்சர் மாண்புமிகு திரு. என். சுந்தரன் நாடார் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். ஐந்துநாள் நிகழ்ச்சிகளிலும் அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளும் இசைக் கலைஞர்களின் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

* * *



நான்காம் பகுதி

சிதம்பரம்

சிதம்பரம் சைவத்திருச்சபை

2006 ஆகஸ்டு 25ல் தொடங்கப்பட்டது. சிதம்பரம் அருகில் உள்ள சுற்றுப்புற ஊர்களில் உள்ள சிதிலமடைந்த கோயில்களைக் சீர் செய்வது நோக்கம். இதுவரை 60000 ரூபாய் செலவில் இரண்டு கோயில்கள் சீர் செய்யப்பட்டுள்ளன.

நலிவடைந்த திருக்கோயில்களுக்கு திருவிளக்கு ஏற்ற எண்ணெய் வழங்குதல் ... 15 கோயில்கள்.

பூஜை நடைபெறாத கோயில்களில் பிரதோஷ வழிபாட்டையும், நித்ய பூஜையையும் துவக்கி வைத்தல் ... 3 கோயில்கள்

உருத்திராக்கம் வழங்குதல் ... 8000 பேர்.

உழவாரப்பணி - மாதம் ஒருமுறை ... 14 கோயில்கள்

ஏழைக்குழந்தைகளுக்கு இலவச சீருடைகள், பாடநூல்கள், நோட்டு புத்தகங்கள் வழங்குதல் ... ஆண்டு ஒன்றுக்கு 100 பேர்.

தில்லைத்திருக்கோயில் திருவிழாக்களில் அன்னதானம், நீர் மோர் வழங்குதல்

சிதம்பரத்தில் ''மகா சிவாலய தரிசனம்'' என்ற முறையை ஏற்படுத்தி சிதம்பரம் எல்லைக்குள் உள்ள 27 சிவாலயங்களை ஒரே நாளில் நடந்தே சென்று வழிபடும் முறையை 2007 முதல் தொடங்கியுள்ளனர்.

புதிய அமைப்பு தான் ... ... இருந்தாலும் தோற்றுவித்த நாள் முதல் ''சைவப் பேரொளி'' என்ற திங்கள் இதழையும் வெளியிட்டு வருகின்றனர். என்ன ஒரு திடசிந்தனை! துணிவு! நல்ல ஆழமான கட்டுரைகள்! வெளியில் தெரியாத வேர்களாக இருக்கின்ற தொண்டர்களாகிய தனலட்சுமி அம்மாள், பரமேஸ்வரி அம்மாள் போன்றேரை வெளியுலகிற்கு அறிமுகப் படுத்துவது போற்றப்படவேண்டிய ஒன்றாம்.

2007 முதல் பள்ளி மாணவர்களுக்குச் சைவசிந்தனை ஊட்ட சிதம்பரத்தில் மாதந்தோறும் வகுப்புகள் நடத்துகின்றனர். வருகின்ற மாணவர்களுக்கு சிறு சிறு பரிசுகள் தருகின்றனர். ஆண்டு முடிவில் வினாவிடைத் தேர்வு, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, மனனப் போட்டி, வினாடி வினா என்று அமைத்துப் பரிசுகள் வழங்க உள்ளனர். ''பெரிய புராணம் - வாழ்க்கை இலக்கியம்'' என்பது பாடத்திட்டம் ஆகும். சிதம்பரத்தில் 500 மாணவ மாணவியர் சேர்ந்துள்ளனர். இதனைப் பின்பற்றி சீர்காழியில் ஸ்ரீ குருஞான

நான்காம் பகுதி 'என்றுமுள சைவம்' - 2-ஆம் தொகுதியில் விடுபட்ட புதிதாகச் சேர்க்கப்பட்ட செய்திகள் இங்கே இடம் பெறுகின்றன.

சம்பந்தர் பணிமன்றத்துடன் இணைந்து நடத்துகின்றனர். சீர்காழியில் 300 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

இளைஞர்களை நோக்கிய மற்றுமொரு இனிய பயணம்

தலைவர் : செல்வகுமார்.

இளைஞர்களை நோக்கிய இனிய பயணம் மேற்கொள்ளும் செல்வகுமார் அவர்களே இளைஞர். வயது 27 தான். சைவத் திருச்சபையைத் தோற்றுவித்து நடத்தி வருபவர் இவரே! சைவப் பேரொளி இதழ் வெளியிடுபவரும் இவரே. இவரது சொந்த கிராமமான பின்னத்தூருக்கு 2002 ஜனவரி 1ம் நாள் வழிபாட்டுக்குச் சென்றபொழுது அந்தக் கோயிலின் சிதிலமான நிலை கண்டு கலங்கி பிரதோஷ வழிபாடு தொடங்கி இரண்டு ஆண்டுகள் இதே சிந்தனையாக இருந்து குடநீராட்டு வரை செய்து முடித்திருக்கிறார்.

இவரது பயணம் நீண்ட நெடிய பயணமே...

ஆச்சி என்கிற தனலெட்சுமி அம்மாள்

இளவயதிலேயே பெற்றோரை இழந்தார்... ...

திருமணமான நான்கு ஆண்டுகளில் கணவனை இழந்தார்...

இருபத்தாறாம் வயதிலிருந்து பூத் தொடுத்து அனந்தீஸ்வரன் கோயில் இறைவனுக்குக் குஞ்சிதபாதம் தொடுத்து அர்ப்பணித்து திருக் கோயிலின் உள்ளே அழகிய கோலமிட்டுப் பணி செய்யலானார். முப்பத்தி ஐந்தாம் வயதில் சிங்காரத் தோப்பில் உள்ள பிரசன்ன நாயகி சமேத பிரமபுரீஸ்வரர் கோயில் பாழ்பட்டு வெளவால் அடைந்திருந்த நிலையைக் கண்டு கலங்கி துய்மை செய்து விளக் கேற்றும் பணியில் ஈடுபடலானார். திருக்கோயில் கும்பாபிடேகம். ஆன பிறகு கோயில் பூஜையைத்தானே ஏற்றுச் செய்யலானார். தற்போது தள்ளாத வயதிலும் இரண்டரை கிலோமீட்டர் நடந்து வந்து தினமும் பூஜை செய்கிறார். அப்பளம் செய்து விற்று வரும் பணம் கொண்டு பூஜை செலவை ஏற்கிறார். (பெற்றோர் தங்கவேல் முதலியார், உதயம் ஆச்சி)

ஆறு. வீரப்பன்

''திருமந்திரம் உபதேசப் பகுதியில் உள்ள முப்பது பாடல்களும் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களின் சாரம்'' என்றார் அந்த அறிஞர் பெருமகன். அவரே ஆறு. வீரப்பன். எனக்கு ஒரே வியப்பாகி விட்டது. ''இதனை அப்படியே உரையாகச் செய்து நூலாக வெளியிடுங்கள்'' என்று கேட்டுக் கெண்டேன். ''2.9.2006 தல் சேக்கிழார் மண்டபத்தில் இப்பணியைத் தான் செய்கிறேன்'' என்றார். சிதம்பரத்தில் சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார். சைவப் பேரொளி''யின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றுகிறார்.

பிறந்த நாள் : 1.10.1950 : பிறந்த ஊர் : நேமத்தான்பட்டி; பெற்றோர் : பழ அண்ணாமலை செட்டியார வள்ளியம்மை ஆச்சி.

மேலையூர்

பூம்புகார் மேலையூரில் உழவாரம் சார்பில் மாணவர் பண்பாட்டுப் பயிற்சி முகாம் தொடங்கப்பட்டது. 2004 - 2005ல் 80 கல்லூரி மாணவர்கள் அவரவர் கல்லூரியில் ''சைவப் பெருவெளியில் காலம்'' (சிந்து சமவெளி நாகரிகம்

முதல் குன்றக்குடி அடிகளார் வரை சைவம் வளர்ந்த வரலாறு) நூலின் அடிப்படையில் தேர்வு எழுதினர். தேர்ச்சியின் அடிப்படையில் 40 மாணவர்கள் பூம்புகார் மேலையூரில் நடைபெற்ற நான்கு நாள் பயிற்சி முகாமில் பங்குபெற்றனர். 2005 - 2006 இல் 248 மாணவர்கள் கல்லூரியில் தேர்வு எழுதியும், 80 மாணவர்கள் முகாமில் பங்குபெற்றும் பயன் பெற்றனர். 100 பள்ளி மாணவர்கள் முகாமில் பங்குபெற்றனர்.

2006 - 2007 இல் தருமபுரம், சீர்காழி, விருத்தாசலம், பூம்புகார் கல்லூரிகளிலிருந்து 183 மாணவர்களும் (சைவப் பெருவெளியில் காலம்), 178 மாணவர்களும் (பெரியபுராணம்) கல்லூரியில் தேர்வு எழுதினர். 34 மாணவர்களும் (சைவப் பெருவெளியில் காலம்) 67 மாணவர்களும் (பெரிய புராணம்) முகாமில் பங்கு பெற்றனர்.

பெரியபுராணம் மாணவர்களுக்குப் பாடத்திட்டம்

பெரிய புராணம் காட்டும் ஒழுக்க நெறி; தனி மனிதன், குடும்பம், சமூகம், நாடு; திருமந்திரம், திருவாசகம்.

சைவப் பெருவெளி மாணவர்களுக்குப் பாடத்திட்டம்

ஆலய அமைப்பு, வழிபாடு, சிவ சாதனங்கள், அறிவியலும் சைவமும் சிவஞானபோதம், திருமுறைகள்.

அனைத்து மாணவர்களும் திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாடப் பயிற்றுவிக்கப்பட்டனர். அனைத்து மாணவர்களையும் திருவெண்காடு திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று ஆலய அமைப்பு, வழிபாடு பற்றி விளக்கம் சொல்லப் பட்டது.

பாடம் நடத்திய பேராசிரியர்கள்

திரு. தா.ம. வெள்ளைவாரண னார், திருமதி ப.நீலா, திரு. வில்சன் அமல்ராஜ், திரு. தெ. ஞானசுந்தரம், திரு.மு. சிவச்சந்திரன், திரு. த. அகரமுதல்வன், திரு.சொ. சொ. மீ. சுந்தரம், திரு. இரா.இராஜசேகரன், திரு. இரா. சம்பந்தமூர்த்தி, திரு.முத்துக் கிருஷ்ணன், திரு. லெட்சுமிபதி, திரு. தருமன், திரு. குணசேகரன், திரு. பனசை மூர்த்தி, திரு. அ. தியாக ராஜன், திரு. த. தியாகராஜன்.

ஐந்து நாட்களும் மாணவர்களுக்குத் தங்கும் வசதியும், அறுசுவை உணவும் வழங்கப்பட்டன.

பள்ளி மாணவர் பண்பாட்டுப் பயிற்சித்திட்டம்

2006 - 2007ல் எட்டு பள்ளிகளிலிருந்து 601 மாணவர்கள் பள்ளியில் தேர்வு எழுதினர். 136 மாணவர்கள் ½ நாள் பயிற்சி முகாமில் பங்கு பெற்றனர்.

பாடத்திட்டம் : பெரியபுராணம் வாழ்க்கை இலக்கியம், சைவ வினா விடை.

பரிசளிப்பு, விருது வழங்குதல்

ஆண்டுதோறும் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பரிசளிப்பும், மாணவர்களுக்கு விருது வழங்குதலும் நடத்தப் படுகின்றது. 63 கல்லூரி மாணவர்கள் ரூ. 13,00,00 அளவில் பரிசுகளும் பெற்றனர்.

மாணவர்க்கு உதவி

உழவாரம் சார்பில் ப்ரதீஷ் - தேவிபாரதி அறக்கட்டளை சார்பில் 7.9.2007 அன்று சீனிவாசா மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர் 32

பேருக்குச் சீருடைகளும் 20 பேருக்குப் புத்தகப் பைகளும் 5 பேருக்கு ஜியோமிதி பெட்டிகளும், 18 பேருக்கு நோட்டுப்புத்தகங்களும், ஒருவருக்கு பள்ளி சிறப்புக்கட்டணமும் என 9058 ரூபாய் வழங்கப்பட்டது. மதுரம் துவக்கப்பள்ளி மாணவ மாணவியர் 17 பேருக்குச் சீருடைகளும் 20 பேருக்கு ஜியோமிதி பெட்டிகளும் 2110 ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டன.

3. ஆன தாண்டவபுரம்

1988 முதல் செம்மங்குடி சீனிவாச ஐயர் அவர்களைத் தலைவராகவும், என். வெங்கட்ராமன் அவர்களைச் செயலராகவும் கொண்ட ஆனந்த தாண்டவபுரம் கோபால கிருஷ்ண பாரதியார் இசைவிழாகமிட்டி ஆண்டு தோறும் பாரதியார் சிவபதம் அடைந்த சிவராத்திரி சமயத்தில் ஐந்து நாட்கள் இயல், இசை விழாவாக நடத்தி வருகின்றனர்.1997 இல் சஞ்சய் சுப்பிரமணியன், ரேவதி முத்துசாமி, என்.இரமணி, சுதாரகுநாதன், சுப்பு ஆறுமுகம் ஆகியோர் பங்கு பெற்றனர்.

4. திருவையாறு

ஆடி அமாவாசை ... அப்பரடிகள் கயிலைக்காட்சி... ஆண்டுதோறும்...

1984 முதல் இருபத்து மூன்று ஆண்டுகளாக தஞ்சை வழக்கறிஞர் அருள் நமச்சிவாயம் ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு திருப்பதியம் விண்ணப்பித்தலும் திருவீதிகளில் திருமுறைகள் ஓதுதலும் ஏற்பாடு செய்து வருகிறார்.

5. திருப்பூந்துருத்தி

திருப்பூந்துருத்தியில் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி பலகாலம் தங்கியிருந்த அப்பர் திருமடம் இன்றும் உள்ளது. துறவி கணேசனார் என்ற பெரியவர் அத்திரு மடத்தைச் செப்பமிட்டு திருப்பணி செய்து அங்கேயே தங்கி பல பணிகளைச் செய்து வருகின்றார். (விரிவு ''என்றுமுள சைவம்'' நூலில் காண்க)

திருப்பூந்துருத்திக்கு அருகே தென்பிரம்பையாகிய வெள்ளாம்பிரம்பூரில் திருஞானசம்பந்தர் மேடு என்று ஒன்று இருக்கிறது. திருநாவுக்கரசரைக் காண பல்லக்கில் வந்து கொண்டிருந்த திருஞானசம்பந்தப் பெருந்தகையை நேரில் எதிர் கொள்ளக் கருதிய திருநாவுக்கரசர் பெருமான் இங்கு எழுந்தருளி ஞானக்கன்றினை அவர் அறியாமல் தொழுது அவர் வந்த முத்துச் சிவிகையைச் சுமந்த இடம் ஆகும். இதனைச் சிறப்பிக்கும் முகமாக திருஞானசம்பந்தர் மேட்டுத்திருப்பணிக் குழுவினர் 1964 முதல் அப்பர் எதிர்கொள் விழா நடத்தி வருகின்றனர். அந்த அழைப்பின் ஒரு பகுதி!

தென் பிரம்பையில் உள்ள திருஞானசம்பந்தர் மேட்டில் திருஞானசம்பந்தர் வரும் முத்துச்சிவிகையைத் தோள் சுமந்த 17 ஆவது ஆண்டு அப்பர் எதிர்கொள் விழா.

ஆளுடைய பிள்ளையார் சோழ நாட்டில் அப்பரைக் காணும் வேட்கையால் அடியார் புடைசூழவந்து தென் பிரம்பையாகிய வெள்ளாம் பெரம்பூரில் எழுந்தருளியுள்ள திரு. ஏகாம்பரநாதர் காமாட்சியம்மனை வழிபட்டு திருப்பூந்துருத்தி வருவதறிந்து திருப்பூந்துருத்தியிலிருந்து அடியார் புடை சூழ வெள்ளாம்பிரம்பூருக்கு வடகீழ்த் திசையில் உள்ளதும் திருப்பூந்துருத்திக்குப் புறம்பணையில் உள்ளதுமான திருஞானசம்பந்தர் மேடு சென்று ஞானக்கன்றை அவரறியாமல் தொழுது தொண்டர் திருநெருக்கில் புகுந்து சம்பந்தரின் சந்தமணி முத்துச்

சிவிகையைத் தம் தோளிற்றாங்கினார். காழியர் கோன் சம்பந்தர் மேட்டில் கீழே குதித்து அப்பரை வணங்க அவரும்முன் வணங்கி எதிர்கொண்டு அழைத்து திருப்பூந்துருத்தியில் நந்தி விலகியும் வணங்கி அப்பர் மடம் அடைந்தார்கள். இவ்விழா துன்மதி ஆண்டு வைகாசித் தங்கள் 5 ஆம் நாள் (18.5.81) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சிவிகை தாங்கி எதிர்கோள் விழா நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு நடைபெறும்.

இங்ஙனம்
திருஞான சம்பந்தர் மேட்டுத்
திருப்பணிக்குழுவினர்

வெள்ளாம்பெரம்பூர்
9.5.1981

அந்தப் பெரியவர் திருப்பூந்துருத்தியில் அப்பர் திருமடம் நிறுவிட பலவகையிலும் உழைத்தார். அப்பர் நூல் நிலையம் அமைத்தார்.

தில்லை நடராசப் பெருமான் ஆலயப்பிரகாரம் முழுமையும் கருங்கல் தளம் பாவினார். தேவாரப் பாடசாலை நிறுவினார்.

இயன்ற திருப்பணிகள் செய்து கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயில் கும்பாபிடேகம் செய்வித்தார். தஞ்சை கீழ ராஜவீதி அம்மன் புதுக்கோயில் திருப்பணி செய்தார். தஞ்சை பெரிய கோயில் வாகனங்கள் புதுப்பித்தார். தனித்தோட்டமிட்டு நாளும் புதுமலர்கள் சாற்றி பெரிய கோயிலில் உள்ள திருஞானசம்பந்தர் மேட்டில் திருஞான சம்பந்தர் வரும் முத்துச்சிவிகையைத் தோள் சுமந்து 17 ஆவது ஆண்டு அப்பர் வழிபட்டார். பெரியகோயில் திருமாலப்பத்திகள் பழுதுபார்த்து சிமெண்ட் பூசினார். பெரிய கோவிலில் நாள்தோறும் முருகன் ஆலயத்தில் தீபம் ஏற்றுதல், உச்சிகால, அபிடேக பூசை கார்த்திகை பூசை, சிவராத்திரி மூன்று கால அபிடேகம் செய்து மகிழ்ந்தார். அவர்தான் கே.வி. பக்கிரி சாமிபிள்ளை. அவருடைய ஊர், தோற்றம், தெரியவில்லை. வெள்ளாம் பிரம்பூர் பகுதியில் அவரது இல்லத்தார் கொடுத்த துண்டுப்பிரசுச் செய்தி இது.

6. குச்சனூர்

தேனி மாவட்டம் சின்னமனூரிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில் குச்சனூர் உள்ளது. அவ்வூரில் வாழ்ந்த கருப்பண பிள்ளை, முத்தம்மாள் தம்பதியினருக்கு முத்துசாமி என்ற திருமகனார் தோன்றினார். காரைக்குடி கோவிலூர் ஆதீனத்தில் சிவத்தொண்டு செய்து வந்த சோமசுந்தர சுவாமிகள் கருப்பணபிள்ளை இல்லத்திற்கு வருகை தந்தபொழுது, அவர் கருப்பண பிள்ளையை நோக்கி, ''உங்கள் மகன் முத்துசாமியைப் படிக்க வைக்கிறேன்'' என்று கேட்டுக் கொள்ள அவரும் சுவாமிகளுடன் தன் மகனை அனுப்பி வைத்தார். முத்துசாமிக்குத் தேவாரம், திருவாசகம், திருக்குறள் போதிக்கப் பட்டன. கோவிலூர் ஆதீனத்தில் முத்துசாமிக்குத் துறவறம் வழங்கப்பட்டு ''முத்தானந்த சுவாமிகள்'' என்ற திருநாமமும் சூட்டப்பெற்றது.

முத்தானந்த சுவாமிகள் சில சிவனடியார்களுடன் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் 1920 இல் யாத்திரை மேற்கொண்டார். இவர்களது சொற்பொழிவுகளை அந்நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் ஏராளமாகக் கூடிக் கேட்டு மகிழ்ந்தனர். கீழை நாடுகளில் தமது பயணத்தை முடித்துவிட்டுத் திரும்பிய முத்தானந்தர் கோவிலூர் ஆதீனத்தில் இருந்து ஆங்காங்கே நடக்கும் திருக்குடமுழுக்கு விழாக்களை நடத்தி வைத்தார். சிறிது காலம் கழித்து தனது குருநாதரின்

வேண்டுகோளை ஏற்று 1930 களில் மதுரை தெற்கு வாசல் அருகே அமைந்திருக்கும் பிரம்மானந்த சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்து இறைபணி செய்தார்.

பிரம்மானந்த சுவாமிகள் மடத்தின் வேண்டுகோளின் படி தனது சொந்த ஊரான குச்சனூருக்கு வந்து சுமார் இருபது ஆண்டுக்காலம் தினமும்; சொற்பொழிவுகள் நடத்தி சித்தாந்தக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துரைத்தார்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள தேவாரம் என்ற ஊரில் சங்கரலிங்கம்பிள்ளை என்பவர் ஒரு மடம் கட்டியிருந்தார். இம்மடத்தில் தங்கியிருந்து இறைபணி ஆற்றுமாறு சங்கரலிங்கம் பிள்ளை முத்தானந்த சுவாமிகளைக் கேட்டுக் கொண்டார். சுவாமிகளும் அதற்கு இணங்கி தேவாரம் மடத்தில் தங்கித் தனது இறுதிக் காலம் வரை பணி செய்தார். 1965ம் ஆண்டுபோகிப் பண்டிகையன்று முத்தானந்த சுவாமிகள் இறைவனடி சேர்ந்தார்கள். தாம் பிறந்த குச்சனூரில் ஆதீனம் ஒன்றை நிறுவினார். தற்போதைய நிர்வாகி : கு. கருப்பையா.

7. லால்குடி

பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார் அவர்கள் தமிழ் மொழிக்கும் சிறப்பகத் தமிழிசைக்கும் செய்துள்ள பணியைப் பாராட்டி அவர்கள் நினைவைப் போற்றும் வகையில் அவர்களால் நிறுவப்பட்ட திருத்தவத்துறை நாடு காண் குழு அவர்கள் பெயரால் ஆண்டு தோறும் தமிழிசை விழாவை டிசம்பர் மாதத்தில் மூன்றுநாட்களுக்குக் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை நடத்தி வருகின்றது. சொற்பொழிவுகள், இசைநிகழ்ச்சிகள், பெரும்பாணநம்பி அல்லது நங்கை விருது வழங்குதல் என நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன.

தலைவர் - திரு ப. சண்முகவேலாயுதம், பூவாளூர்; செயலர் - திரு. சு. பால சுப்ரமணியன்; தொடர்பாளர் - திரு. சிவா; புரவலர் - திரு. வி.கே.என்.

8. விருத்தாசலம்

அ. சங்கர்

அறுபத்து மூவர் திருப்பணி மன்றம் : 14.3.2004இல் தொடங்கப் பட்ட இம்மன்றம் அறுபத்து மூன்று நாயன்மார்க்கும் அவர்கள் அவதாரத் தலங்களில் திருக்கோயில் கட்ட வேண்டும் எனும் திட்டத்தை மேற் கொண்டது. 7.3.2006இல் இராஜேந்திர பட்டணத்தில் (திரு எருக்கத் தம்புலியூர்) திருநீலகண்ட யாழ்ப் பாணர்க்கும், 12.7.2007 இல் சேங்கனூரில் சண்டேசு நாயனார்க்கும் புதிதாகத் திருக்கோயில்கள் எழுப்பப்பட்டு குடமுழுக்கு விழாக்களும் நடைபெற்றன. இதற்கு முன் இந்த இரண்டு தலங்களிலும் நாயனார்க்குக் கோயில் இருந்ததில்லை. பெருமங்கலத்தில் இருந்த கோயில் சிதிலம் அடைந்து இருந்தது.

சுவாமி சன்னிதி, அம்மன் சன்னிதி, விநாயகர் சந்நிதி, கலிக்காமநாயனார் சந்நிதி, சண்டேசுரர் சன்னிதி, சுற்றுமதில் அனைத்தும் புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டு 9.2.2007 அன்று குடமுழுக்கு செய்யப்பட்டது. தற்சமயம் சாத்தனூரில் திருமூல

நாயனாருக்கும் கொடும்பாளூரில் இடங்கழி நாயனார்க்கும் திருக்கோயில்கள் எழுப்பும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருஎருக்கத்தம்புலியூரில் பன்னிரு திருமுறைகளுக்குத் திருமுறைக் கோயில் அமைத்து அதனை எழுந்தருளச் செய்யும் பெருவிழா 124.2007 அன்று நடைபெற்றது. அவ்வமயம் இருபத்து ஏழு திருமுறை ஓதுவாமூர்த்திகளை இருபத்து ஏழு அருளாளர்களாகப் பாவித்து போற்றும் வழிபாடும், திருமுறை திருவீதி உலாவும் என மிகச்சிறப்பான நடைபெற்றன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து நடத்துபவர் விருத்தாசலம் நாதசுரக் கலைஞர் திரு.அ. சங்கர் அவர்கள் 13.9.2000 இல் விருத்தாசலத்தில் திருமுதுகுன்றம் இசைச் சங்கம் துவக்கி ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி சமயத்தில்இரண்டு நாட்களுக்குத் தமிழிசை விழா நடத்தி வருகிறார். 5.12.2001 முதல் சேக்கிழார் இலக்கிய மன்றம் துவக்கி ஆண்டு தோறும் திருமுறை வீதி உலா, சிவபூஜை பெரிய புராணச் சிந்தனை, என நடத்தி வருகிறார்.

(13.6.69; விருத்தாசலம், அய்யாசாமி; சரஸ்வதி)

8. சிவா



பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார் அவர்கள் லால்குடியில் சிலப்பதிகார வகுப்பு நடத்தி வந்த பொழுது நாடுகாண்குழு என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தி நமது நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று நமது பழைய பண்பாட்டுச் சின்னங்களைப் பார்த்து வர வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். 25 மன்றங்களை இணைத்து நாடுகாண்குழு என்ற அமைப்பினை 9.1.1977ல் திரு ஊற்றத்தூர் சிவாலயத்தில் தொடங்கினார்கள். சிவா அவர்கள் பொருளாளர் பொறுப்பேற்றுத் திறம்பட நடத்தினார். பண்ணாராய்ச்சி வித்தகர்மறைந்த பின்னரும் இப்பணியைத்தொடர்ந்து நடத்துகிறார். தனது இல்லத்திற்கே ''பண்ணாய்வான் பசு இல்லம்'' என்று பெயர் சூட்டியுள்ளார். ப.சு. அவர்களின் விருப்பப்படி லால்குடி திருக்கோயிலில் பலரின் ஒத்துழைப்புடன் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத் தமிழைக் கல்வெட்டில் பதிக்க ஏற்பாடு செய்தார். 1952ல் நடைபெற்ற லால்குடி சிவன் கோயில் குடமுழுக்கு ஏற்பட்ட பொழுது இராஜகோபுரத் திருப்பணி முற்றுப்பெறவில்லை.இவரும் திரு. உ. நாராயணசாமியும் சேர்ந்து ராஜகோபுரத்தை நிர்மாணித்தார்கள். குடமுழுக்குப் பொறுப்பையும் நாடுகாண் குழுவினரே ஏற்றுக் கொண்டு 28.10.1993 இல் குடமுழுக்கும் நிறைவேற்றினர். ப.சு. அவர்கள் மறைந்தபிறகு அவர் நினைவாக 1986 முதல் லால்குடியில் ஆண்டுதோறும் தமிழிசை விழா எடுத்து வருகிறார்.

(பிறப்பு - 22.12.1922; பெற்றோர் - அ. இராமசாமிபிள்ளை சின்னம்மாள்; வசிக்கும் ஊர் - லால்குடி)

9. திருச்சி

இரா. முருகேசன்

(பிறப்பு - 8.6.1952.) தேவகோட்டை பாலகவி சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களிடம் சமய, விசேட, நிர்வாண தீக்ஷகளும், சாதகாபிடேகமும் பெற்றவர். தீட்சாகுரு சர்வசாதகாசாரியராக இருந்து நிகழ்த்திய கும்பாபிடேகங்களிலும் நிர்வாண தீட்சாக் கிரியைகளிலும் உடனிருந்து பணியாற்றிய அணுக்கத் தொண்டர். மூன்றாண்டு பயிற்சி பெற்று 'சித்தாந்த ரத்தினம்' பட்டம் பெற்றவர். பெரிய புராணம், திருவாசகம், சித்தாந்த சாத்திரங்கள் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார். திருவாசகம் 400 ஆவது முற்றோதல் பதிப்பாசிரியர், திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தின் பேராசிரியர்.

11. மதுரை

சு. சபாபதி முதலியார்

(1837 - 1898)

தஞ்சை மாவட்டம் நன்னிலம் பெருவட்டம், மொகந்தனூர் வட்டத்தைச் சேர்ந்த குமாரமங்கலம் கிராமத்தில் திரு. சுந்தரலிங்க முதலியாருக்கும் அஷ்டாவதனம் திருமதி. நீலாம்பாள் அண்ணிக்கும் மகனாக 1837ல் சபாபதி பிறந்தார் இவர் கல்வி கேள்விகளில் சிறந்து பன் மொழிப் புலவர் ஆனார். ''திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ்'', ''மதுரைமாலை'', ''திருப்பரங்குன்றத்து அந்தாதி'' ஆகிய கவிதை நூல்களை இயற்றியுள்ளார். சின்னத் தம்பிப்புலவர் எழுதியுள்ள ''மறைசை அந்தாதிக்கு'' உரை எழுதியுள்ளார். 14.6.1898ல் இறைவனடி சேர்ந்தார்.

12. மேலும் சில ஆன்றோர்கள்

மணியம் ப.சு.

(பிறப்பு - 15.12.1916; பிறந்த ஊர் - பகுவாய், பல்லடம் வட்டம் பெற்றோர் - பழனியப்ப ஆசிரியர், பழனியம்மாள்)

முனைவர் பட்டம் பெற்றவர்; முனைவர் பட்ட ஆய்வேடு - திருக்கோவையார் குடந்தை, கோவை அரசுக் கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். திருவாசகம், திருக்கோவையர் முதலிய நூல்களை பொள்ளாச்சி, திருப்பூர், பல்லடம் என்று ஊரூராகச் சென்று பரப்பியவர்.

சத்திய சீலன். சோ

(பிறந்த நாள் - 14.4.1933; பிறநத ஊர் - பெரம்பலூர்; பெற்றோர் - ஜெ. லநா. சோமசுந்தரம், திருமதி மீனாம்பாள்)

திருச்சி உருமுதனலட்சுமி கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ''வள்ளலாரின் சமுதாய ஆன்மிகக் கொள்கைகள் என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். ''செல்வந்திப்புராணம் - உரை'' உட்பட எட்டு நூல்கள் எழுதியுள்ளார். சமய சொற்பொழிவாளர். 8000க்கும் மேற்பட்ட சமய இலக்கிய ஆன்மீகச் சமுதாய மேடைகளில் பல நிலைகளில் சொற்பொழிவாற்றியிருக்கிறார். அமெரிக்கா (2 முறை), கனடா (2 முறை) இலங்கை (2 முறை), மலேசியா (1), சிங்கப்பூர் (3) முதலான அயல்நாடுகள் சென்று இலக்கிய சமய விரிவுரை ஆற்றியிருக்கின்றார்.

சாம்பசிவனார். ச

(பிறந்த நாள் - 29.09.1929; பிறந்த ஊர் - வள்ளல் நதி என்ற கண்டமநாயக்கனூர்; பெற்றோர். க.ச. சங்கரலிங்கம், மீனாட்சியம்மையார்)

மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சைவசித்தாந்தத் துறையில் சிறப்பு நிலைப்பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 85 நூல்களுக்கும் மேல் எழுதியுள்ளார். எழுதிய நூல்கள். சிவஞானபோதச் செம்பொருள் சைவசித்தாந்தக் கலைச்சொல் அகராதி; சைவ சமய இலக்கிய அகராதி - தொகுதி 1, 2. திருவாசகத்தில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள், திருநாவுக்கரசர் தேவாரத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள், சுந்தரர் தேவாரத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள், சமயப் புரட்சியாளர் சம்பந்தர், சிவஞான சித்தியார், சிவஞான முனிவர் உரை சொல்லகராதி, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் சைவசமய மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறார். 1990 முதல் ''தமிழ் மாருதம்'' என்ற சமய இலக்கியத் திங்கள் இதழ் வெளியிட்டு வருகிறார்.

கணபதிப்பிள்ளை. சு

(பிறந்த ஆண்டு - 22.3.1893; பிறந்த ஊர் - ஆடூர், சிதம்பரம் அருகாமை பெற்றோர் சுப்பராய பிள்ளை, தங்கம்மாள்)

சித்தாந்த தோத்திர சாத்திர நுல் யாவும் கற்றவர்; நாற்கவி வண்ணமும் பாடவல்லவர்; சமய விசேஷ நிர்வாண தீக்கை பெற்றவர்; வடதென்மொழிகளில் வல்லுநர்; செப்பறைச் சுவாமிகள் எனும் ஸ்ரீலஸ்ரீ சிதம்பரச் சுவாமிகளிடம் பதினான்கு சாத்திரமும் கற்றவர்.

திருநாரையூர் மூத்த பிள்ளையார் திருக்கோயில், சுற்றுமதில், திருக்குளம் திருப்பணி செய்தல்; நூல்நிலையம், ஆரம்ப பாடசாலை நிறுவுதல்; ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் விழா எடுத்தல், ஓதுவாமூர்த்திகளுக்குக் குருஞானசம்பந்தர் திருமாளிகை எனும் விடுதி நிறுவுதல்; ஆடூரில் தென்முகக் கடவுளுக்குக் கோயில் எழுப்புதல்; தில்லையில் குருநாதரிடம் பெரும் பொருள் பெற்று சிவஞானத் திருத்தளி எனப் பெயரிய மடம் கட்டுதல்; ஆடூரில் திருமுறைக் கழகம் தோற்றுவித்து அதன் சார்பில் தில்லையில் ஆண்டு தோறும் ஆனி, மார்கழித் திங்களில் நடைபெறும் உற்சவ காலங்களில் ஒன்பது நாட்கள் அறிஞர்கள் சொற்பொழிவாற்றல் பொலிந்து விளங்கியது. முக்கிய தலங்களில் நடைபெறும் கும்பாபிடேகங்களில் 50க்குக் குறையாத சிவனடியார்களுடன் சென்று திருமுறைப் பாராயணம் செய்தல்.

சிவசுப்பிரமணியன். வே

(பிறந்த ஆண்டு - 11.3.1928; பிறந்த ஊர் - மயிலம் தென்னாற்காடு மாவட்டம்; பெற்றோர் - கே. ஆர். வேங்கடராமன், மதுரம் அம்மாள்)

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரியில் நாற்பது ஆண்டுகள் தமிழ்ப்பேராசிரியராகப் பணி செய்து ஆயிரக்கணக்கான தமிழ்ப்புலவர்களை உருவாக்கியவர்; தமிழ்நாட்டு நகரங்களில் திருவாசக வகுப்பு சிவஞான போத வகுப்பு, பெரிய புராணம் ஆகியன பற்றித் தொடர் சொற்பொழிவுகள் நடத்தி வருகிறார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தால் இந்து சமய மன்றச் சார்பில் நடத்தப் பெறும் கோடைக்கால சமய

வகுப்புகளில் 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து சமய தத்துவம், திருமுறை, தல புராணம் பற்றி வகுப்புகள் எடுதது வருகிறார். தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை அத்வைதம், சைவ சித்தாந்தம், விசிட்டாத்வைதம், ஜைனதத்துவம், நவீனம், சிறுகதை, கட்டுரை என இவர் தொடாத துறைகள் இல்லை எனலாம். மூவர் தேவாரம் ஏழு திருமுறைகளுக்கும் சந்தி பிரித்துப் புதுவை பிரெஞ்சுக் கழக வெளியீடாக வந்து உள்ளது. ''சிவதருமோத்தரம்'' பதிப்பாசிரியர்; ''சேக்கிழார் வரலாறு'' நூலாசிரியர்.

திருஞானசம்பந்தர். இரா

(பிறந்த ஆண்டு - *12.11.1921* பிறந்த ஊர் - கீழ்நத்தம், சிதம்பரம் வட்டம்; பெற்றோர் - இரத்னவேல்; விருத்தாம்பாள்)

சென்னை சிவநேயர் பேரவைத் தலைவராகப் பணியாற்றியவர்; 1988 முதல் 1990 பெரியபுராண வகுபபு நடத்தினார். இவரும் தெலுங்கு வித்வான் பி.எஸ்.என் சர்மாவும் சேர்ந்து பெரியபுராணம் முழுமையும் இலக்கிய உரைநடையில் 600 பக்கங்களுக்குமேல் தெலுங்கில் ''சிவபக்த சரிதம்'' என்ற பெயரில் வெளியிட்டார்.

தணிகையரசு. நா.ப

வாலாஜாபாத் வா.தி.மா. கல்லூரி நிறுவனங்களின் செயலர். வாலாஜாபாத் சுற்றியுள்ள கிராமங்கள் தோறும் 40 ஆண்டுகளாகப் பெரியபுராண உரை நிகழ்த்தி வருகின்றார்.

நவநீதகிருஷ்ண பாரதியார்

(பிறப்பு : *1.3.1889*; மறைவு - *1954*; பிறந்த ஊர் - கரவட்டங்குடி, மணமேல்குடி அருகாமை. தஞ்சை மாவட்டம் பெற்றோர் - சுப்பிரமணிய பாரதியார் - தைலம்மாள்) திருவாசக உரையாசிரியர்.

ஷண்முகனார். பொன்

(பிறந்த ஊர் - ஐயங்கார் குளம்; பெற்றோர் - பொன்னுசாமி அடிகளார்)

காஞ்சிப்புராணம் உரை எழுதியவர்; சைவசித்தாந்தம் எளிய முறையில் விளக்கி வந்தார்.

பாலூர் கண்ணப்ப முதலியார்

(தோற்றம் - *14.12.1908*; மறைவு - *30.3.1971*; ஊர் - பாலூர், செங்கற்பட்டு; பெற்றோர் துரைசாமி முதலியார், மாணிக்கம்மாள்)

சைவ சொற்பொழிவாளர் எழுதிய நூல்கள் - பொய்யடிமையில்லாத புலவர் யார்: சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பெருவிளக்க உரை; திருமந்திரம் - 365 பாடல்கள் உரை.

சிவகுருநாதபிள்ளை

(*1872 - 1953*; எட்டையபுரம்) சிறந்த சொற்பொழிவாளர்; தமிழ் ஆசிரியர்; அச்சகம் ஒன்று நிறுவி சைவ நூல்கள் வெளியிட்டார். தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் தூணாக இருந்து றெற்பொழிவாளர்களை அழைத்துப் பேசச் செய்தும் தானும் பேசியும் பணியாற்றினார். சிறுவர் சிறுமியர்க்கு ஆடல், பாடல், பேச்சுப் போட்டிகளுக்குப் பயிற்றுவித்தார். திருஞானசம்பந்தர் மடாலயத்தை நிறுவினார்

தூ. சு. கந்தசாமி முதலியார்

(*27.6.1854 - 14.4.1892*; தூங்காரெட்டி; பாண்டிநாடு) சாத்தூரில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். சாத்தூரில்

பெரிய புராணச் சொற்பொழிவுகளும், குன்னூரில் சைவசித்தாந்த சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்தார்.

இரத்தின கிருட்டினமூர்த்தி

வாரந்தோறும் பெரியபுராண வகுப்பு நடத்தி வருகிறார். பழநியில் வார வழிபாட்டுக் கூட்டம் தொடங்கி முப்பது ஆண்டுகளாகப் பணிபுரிகிறார். முனைவர் பட்டம் பெற்றவர்; ஆய்வேடு - ''பெரியபுராணத்தில் உருக்காட்சி.''

சுந்தரம் பிள்ளை

(*5.4.1855 - 26.4.1897;* பிறந்த ஊர் - ஆலப்புழை; பெற்றோர் - பெருமாள் பிள்ளை, மாடத்தியம்மை)

மனோன்மணீயம் நாடக ஆசிரியர். ''திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி'' என்ற நூலை எழுதியவர். திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையைத் தோற்றுவித்தவர்.

''தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம் தொகுதி - *1*'' - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நூலிலிருந்து கீழ் வரும் செய்திகள் (i) முதல் (X) வரை திரட்டப்பட்டன.

அநந்த கிருட்டிணக் கவிராயர்

(வேறு பெயர் - அம்பலவாணன்) இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுரத்தில் இருந்த நமச்சிவாயக் கவிராயரின் வழித்தோன்றல் வாழ்ந்த காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதி.

இவர் திருவாவடுதுறையில் குரு மகாசந்நிதானமாக விளங்கிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் சின்னப்பட்டம் நமச்சிவாய தேசிகரிடம் பாடம் கேட்டுள்ளார். மகாவித்துவான் பிள்ளையவர்களிடம், பாடம் கேட்டு உள்ளார்.

தாமிரபரணி நதிக்கரையில் உள்ள பாபநாசத்தில் நடைபெறும் ஸ்ரீ கலியாண சுந்தரமூர்த்தியின் திருவிழாவில் ஒவ்வொரு நாளும் பாடிய வாகன கவிகள்.

(i) அம்பலவாண தம்பிரான் - 1

(17 - நூ)

திருவாவடுதுறை ஆதீனத்தையோ தருமை ஆதீனத்தையோ சேர்ந்தவராகலாம்.

நூல் : இலக்கண விளக்கம் வைத்திய நாத தேசிகரின் மூத்த மகனாரான சதாசிவ நாவலர் நிகழ்த்திய சொற்பொழிவினைக் கேட்டு வியந்து அவரைப் பாராட்டி வெண்பா ஒன்று பாடினார்.

(ii) அம்பலவாண தேசிகரின் சீடர்

(19-நூ)

அம்பலவாண தேசிகர் என்பவரின் மாணவர்.

நூல் : பதிபசுபாச அட்டவணை.

(iii) அமிர்தம் சுந்தரநாதப்பிள்ளை

(20-நூ)

ஊர் - திருச்சிராப்பள்ளி. தந்தை - 'தமிழ் விடு தூது' பாடிய அமிர்தம் பிள்ளை. இவர் தம் தந்தையாரிடமே கல்வி கற்றார்.

திருச்சிராப்பள்ளி - எஸ்.பி.சி. கல்லூரியில் தமிழசிரியராகப் பணியாற்றினர். இவருடைய நூல்கள் வெளியாவதற்குப் பேராதரவு புரிந்தவர் இராம நாராயணப் பிள்ளை என்பவர் ஆவர்.

நூல் : வயலூர்ப்புராணம், வயலூர் வெண்பா, அந்தாதி, திரிசிராமலைக் கோவை, பெத்தாச்சி செட்டியார் மீது புலவராற்றுப்படை, திருவாவடுதுறை அம்பல வாணதேசிகர்மீது பொன்விடு தூது முதலியன.

(iv) அருணாசலம்பிள்ளை (2)

(19-நூ)

ஊர் - வாலி கண்டபுரம் திருநெல் வேலி மாவட்டம்.

''பிரின்சுபல் சதரமீன்'' - என்னும் அரசியல் அலுவலில் இருந்தவர் திருவாவடுதுறை ஆதீனத்தோடு தொடர்பு கொண்டவர்.

நூல் : (திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் மீது) - குருதோத்திர வெண்பா, குரு தரிசனப் புகழ்ச்சிக் கலிவெண்பா, நெல்லையப்பர் பதிகம், நெல்லைக் காந்தி மதியம்மன் சந்த விருத்தம், நெல்லை வடிவம் மையந்தாதி, ஞானானந்தக் கொம்மி, வீட்டுநெறிக் கலித்துறை, நன்னெறி வெண்பா.

(v) ஆறுமுக தேசிகர்

(19-நூ)

ஊர் - செங்கோட்டை.

சைவ வேளாளர் மரபினர். திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து சிவ தீட்சை பெற்றார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். திருவானைக் காவலில் சில காலம் வாழ்ந்தார். திருவண்ணாமலை ஆதீனத்தின் பண்டாரச் சந்நிதியாக எழுந்தருளினார். கி.பி. 1888 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரான் மலையில் காலமானார்.

நூல் : தனிப்பாடல்கள்

(vi) இரத்தினசபாபதி சாமிகள்

ஊர் - திருவாவடுதுறை

நூல் : தியாகராசக் கவிராயர் இயற்றிய திருவாலங்காட்டுப் புராணத்தின் உரையைப் பாராட்டி வழங்கிய சிறப்புப்பாயிரம்.

ஆதாரம் : ''தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம்'' பகுதி - 1, 1974 - அண்ணாமலைப்பல்கலைக்கழகம் பக்கம் - 207

நூல் : கரந்தை வெள்ளி விழாமலர், தமிழ்ப்பொழில், செந்தமிழ் இதழ்கள் ஆகியவற்றில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இயல்பாகச் செய்யுள் பாடுவதிலும் வல்லவர். அண்ணாமலை அரச சேதுபதி மன்னர் முதலிய பெருமக்களை பாராட்டி இவர் பாடிய பாடல்கள் பல.

(vii) இராயசம் பொன்னுசாமி செட்டியார்

(19-நூ)

ஊர் - திருவாவடுதுறை

தந்தை - முத்துச் செட்டியார், சைவ வேளாளர்.

திருவாவடுதுறை ஆதீனம் 16வது பட்டம் சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் ஆதீனப் புலவராக இருந்த மேலகரம் சண்பகக் குற்றாலக் குற்றாலக் கவிராயர் இவருடைய ஆசிரியர். உ.வே. சாமிநாத ஐயர். திருவாவடுதுறையில் இருந்த காலத்தில் அவரிடமும் பாடம் கேட்டவர்.

நூல் : துறைசைச் சிலடை வெண்பா, துறைசை வேலவர் இங்கிதமாலை, பல தனிப்பாடல்கள்.

(viii) உலகுடைய நாயனார்

(17-நூ)

திருவாவடுதுறை ஆதீனம் மூன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் இவருக்குச் சைவ சந்நியாசமும், நிருவாண தீட்சையும் செய்து உலகுடைய நாயனார் என்ற தீட்சா நாமமும் சூட்டினார்.

நூல் : உலகுடைய நாயனார் திருவிருத்தங்கள், சைவசித்தாந்தக் கருத்துக்களை உள்ளடக்கித் தோத்திர வடிவில் தம் ஞானாசிரியர் மீது பாடிய பத்துத் திருவிருத்தங்களையுடையது.

(ix) இராமலிங்க சுவாமிகள்

(20-நூ)

வேறு பெயர் - சிதம்பரம் இராமலிங்கசாமி ஈசான மடம் இராமலிங்க அடிகள்.

கார்காத்த வேளாளர் குலத்தவர். வாழ்ந்த காலம் - கி.பி. 1851 - 1906.

இளம் பருவத்திலேயே துறவு பூண்டு காஞ்சிபுரத்தில் நல்லக்கம்ப முதலியாரிடம் பாடம் கேட்டவர். ''திருவாவடுதுறை ஆதீனத்து 16 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார்''

மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள் ஆதீனத்தின் 14வது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றுத் துறவும் பூண்டார். பின்னர் சிதம்பர ஈசானிய மடத்தில் தங்கினார். பல மாணாக்கர் இவர்களிடம் பாடம் கேட்டனர். இவர் சிறந்த பதிப்பாசிரியரும், உரையாசிரியரும் ஆவார். பெரிய புராணத்திற்கு திருவண்ணாமலை ஆறுமுகத் தம்பிரானால் தொடங்கப்பட்டு இடையில் எழுதாது விட்டுப்போன பகுதிக்கு இவர் உரை எழுதி 1885ல் அச்சிட்டார்.

(x) இராமலிங்கத் தம்பிரான்

(புலிக்குட்டி)

(19-நூ)

சிறப்புப் பெயர் - புலிக்குட்டித் தம்பிரான்.

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர் இவ்வாதீனத்தின் 16ஆவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் தீட்சை பெற்றவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். சினமிகுதியால் இவர் தம்மைப் பகைத்தவர் மீது உடனே வசைபாடும் இயல்பினர். ஸ்ரீ ஆதீனத் தலைவர்களின் சினத்திற்கு இவர் பலமுறை இலக்காகி, தியாகராச செட்டியார் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியோரின் துணையால் மீண்டும் ஆதீனத்தில் இருந்தார்.

நூல் : பல தனிப்பாடல்கள், வசைப்பாடல்கள்.

(xi) அழகிரி சாமி நாயகர்

(19-நூ)

திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர்.

நூல் : ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய ''சித்திரச் சந்திரப் புகழ்ச்சி மாலை என்ற நூலினைப் பாராட்டி வழங்கிய சிறப்புப்பாயிரம்.

ஆதாரம் : ''தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம்'' அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1974 - பக்கம் 138 - பகுதி - 1.

(xii) அழகிரி ராசு

(19-நூ)

ஊர் - இராமநாதபுரம். இராமநாதபுரம் வேலாயுதக் கவி. இலக்கண, இலக்கியங்களைக் கற்றவர். ஒருமுறை இவர் தம் உடன் பிறந்தவர்களுடன் பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். அப்போது இவர் வேலையைச் செய்யாமல் கல்வி பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருந்தார். இதனைக் கண்ணுற்ற உடன் பிறந்தவர்கள் இவரைச் சினந்து கொண்டனர். இதனைப் பொறாத இவர் இதுதான் தக்க காலம் என்று நினைத்து, இவர் காலத்தில் பெரும் புலவராக விளங்கிய திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடத்தில் கல்வி கற்றார். இரண்டாண்டுகள் பயிற்சியில் தேர்ச்சி யடைந்து இராமனாதபுரத்திற்குச் சென்றார்.

தமது ஊரில் பலருக்கு கல்வி கற்பித்தார். பொன்னுசாமித்தேவர் இவரைத் தம் மகனாரான பாண்டித் துரைத் தேவர்க்குத் தமிழாசிரியராக அமர்த்தினார். பாண்டித் துரை தேவருக்குத் தமிழறிவு புகட்டியவர் இவரே ஆவர். இதனைப் பாண்டித் துரைத் தேவரே.

''அழகிரி ராசு என்பவர் பாடம் கற்பிக்கும் அழகும் தமிழ் நயத்தைச் சுவைபடப் புலப்படுத்தும் முறையும், அன்புடைமையும் சொல்லில் அடங்குவன அல்ல. எனக்குத் தமிழில் பற்றுண் டானது அவராலேயே ஆகும். அழகிரிராசு எப்பொழுதும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பாடல் நயங்களை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார் என்று பாராட்டிக் கூறுவாராம்.''

(xiii) சி. இராமசாமிப்பிள்ளை

(19-நூ)

வேறு பெயர் - ஞானசம்பந்தப் பிள்ளை.

ஊர் - இராமநாதபுரம்.

திருவாவடுதுறை ஆதீன மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்கள், சைவ சித்தாந்த சாத்திரம் முதலியனவற்றை பாடம் கேட்டவர். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் நண்பர். நாவலர் தம் நூல்களைப் பதிப்பு வேண்டிப் பொருள் வசதி இல்லாதிருத்தல் கண்டு, இராமநாதபுரம் பொன்னுசாமி தேவரிடம் வேண்டி, நாவலருக்குப் பொருள் செய்வித்தார்.

மதுரைத்தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித் துரைத் தேவர்க்குத் தமிழாசிரியராகவும் விளங்கியவர். தி. ஆ. மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் ஆற்றூர்ப்புராணம், விளத்தொட்டிப் புராணம், திருவாளொளி புற்றூர்ப்புராணம் ஆகிய மூன்று நூல்களையும் அவ்வப்பொழுது எழுதி தம் ஆசிரியருக்குத் துணை செய்தவர். மேலும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் கம்பர் அந்தாதி, முல்லை அந்தாதி முதலிய நூல்களை அவருடைய உரையுடன் பதிப்பித்தார்.

நூல் : பரஞ்சோதி திருவிளையாடற் புராணம். முதற் காண்டத்துக்கு உரை (1894), தரிசன விதி (ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பாயிரத்துடன் கூடியது - 105 செய்யுட்கள்) மூவர் தேவாரங்கள் - தலமுறைப்பதிப்பு. முதலில் வெளியிட்டவரும் இவரே.

ஆதாரம் : ''தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம்'' பக்கம் - 252, 253, பகுதி - 1.

இராமசாமிப்புலவர் (சர்க்கரை - 20 நூ)

ஊர் - தஞ்சை மாவட்டம் அறந்தாங்கி பகுதியில் கோடகுடி.

தந்தை - சேதுப்புலவர் பொன்னெட்டி மாலைச் சர்க்கரைப் புலவர் மரபினர் சர்க்கரை என்னும் பட்டப் பெயர் இராமநாதபுரம் அரசரால் அளிக்கப் பெற்றது. மயூகிரிக் கோவைக்கு அரும்பதவுரை எழுதிய சாந்துப் புலவர் இவரது முன்னோர்.

ஆலங்காடு சிதம்பரம் செட்டியாரிடம் தமிழ் பயின்றார். ''திருவாவடுதுறையில் தமிழ்புலமைத் தேர்ச்சி பெற்றார்'' இராமநாதபுரம், அரசவை, திருவாவடுதுறையில் தமிழ் புலமைத் தேர்ச்சி பெற்றார்'' இராமநாத புரம், அரசவை, திருவாவடுதுறை ஆதீனம் ஆகியற்றின் அவைப்புலவர். 1919 முதல் சிதம்பரம் மீனாட்சிக் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ் விரிவுரையாளராக இருந்தார். மீனாட்சி கல்லூரியில் பணியாற்றிய முதல் தமிழாசிரியர் இவரே.

தாமரைக்குளம்
திரு. மு. இராசரத்தினம்

பிறப்பு : 1948; ஊர் - தாமரைக் குளம், பெரிய குளம், தேனி மாவட்டம்.

தொழில் - தமிழாசிரியர் பணியாற்றி ஒய்வு.

பணி - தேனி மாவட்டம் முழுவதும் திருவாசகம் முற்றோதல். 30 ஆண்டுகளாக பெரியகுளம் மங்கையர்க்கரசி மாதர்சங்க வாரவழிபாட்டுக் கூட்டத்தில் தொடர் சொற்பொழிவு, அருள் நெறித் திருக்கூட்டம், தெய்வீகப் பேரவை ஆகிய அமைப்புகளின் பணி.

கடலூர்
திரு.ஆ. சிவலிங்கனார்

''ஆணவம் என்பது ஒருவனுக்கு இறைவனை மறைத்து உலகைக் காட்டும். அவனே ஞானியானால் உலகை மறைத்து இறைவனைக் காட்டும்.

இதற்கு திரு. சிவலிங்கனார் தந்த உவமை - ''உள்ளே வெளியே'' மறைப்புக் கட்டை. என்ன விழிக்கிறீர்களா?

வீட்டுத் தலைவன் வீட்டில் இருந்தால் கட்டை 'வெளியே' என்பதை

மறைக்கும். வெளியில் இருந்தார் 'உள்ளே' என்பதை மறைக்கும்.

திருஞானசம்பந்தரின் திருவெழு கூற்றிருக்கைக்கு இவர் உரை தனி உரை; சிறப்பு உரை.

மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் 1942 முதல் 1972 வரை விரிவுரையாளர், பேராசிரியர் முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

வெளியீடுகள் : 1. தொல்காப்பிய உரைவளம் - 27 இயல்களுக்கு 27 நூல்கள் 2. எட்டாந்திருமுறை, மூலன் தமிழ், மாணிக்கவாசகர் சமயமும் காலமும் உள்ளிட்ட ஐந்து ஆய்வு நூல்கள்.

3. பெரியபுராணப் பெண்மணிகள், சிவஞான போத நூற்பாச் சொற்பொழிவு, சிவஞான போதச் சூத்திர விரிவுரை (வீர சைவச் சார்பு) உள்ளிட்ட எட்டு திறனாய்வு நூல்கள் 4. ஒன்பது கவிதை நூல்கள், 5. பதினோரு உரை நூல்கள் 6. நூற்றுக்கணக்கான கட்டுரைகள்.

இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு ரூ. 50000/- பெற்றுள்ளார்.

□□□

ஐந்தாம் பகுதி

வரலாறு படைத்த பெருநிகழ்வுகள்

இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடைபெற்ற சில நிகழ்வுகள் சைவ சமய வரலாற்றில் முத்திரைகள் பதித்தன. சில நிகழ்வுகள் தற்காலிக பயனை அளித்தன. சில நிகழ்வுகள் தொடர்ந்த - நிலைத்த - பயனை அளித்து வருகின்றன. அனைத்து நிகழ்வுகளும் இங்கு இடம் பெறவில்லை. ஆசிரியன் பார்வைக்குக் கிடைத்த நிகழ்வுகள் மட்டும் இங்கு பதிவு செய்யப்படுகின்றன.

மெய்கண்ட சாத்திர மாநாடு : திருநெல்வேலியில் 20.5. 1941 முதல் 27.5.1941 வரை மெய்கண்ட சாத்திர மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் முழு விவரங்கள் கிடைக்கவில்லை. இதனையொட்டி 24.5.1941 அன்று மாநாடு திருவாட்டி திருவரங்க நீலாம்பிகை அம்மையார் தலைமையில் நடைபெற்றது.

24.5.41 மாலையில் நடைபெற்ற ஊர்வலம் ஒரு பெருந்திருவிழாவாகவே மிளிர்ந்தது. தெரு நெடுகக் கூட்டம் திரண்டிருந்தது- பகுதி பகுதியாகப் பெருமக்களும் பிறகும் கூட்டத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரையில் மகிழ்ச்சியில் திளைத்து, 'இக்காலத்தில் இது எங்கும் கண்டிராத காட்சி' என வியந்து வியந்து தம்மை மறந்தவராய் அலையலையாக விளங்கிச் சென்றனர். தெரு நெடுக ஏராளமான பன்னீர்ப்புட்டிகளை உடைத்து உடைத்து எங்கும் தெளித்தனர். சிற்சில வீடுகட்கு ஒருகால் ஊர்தியை நிறுத்திப் பலவகையான நறுமண மாலைகளையும் பொன்னரி மாலையையும் அணிவித்துச் சந்தனம் பன்னீர் பழம் வெற்றிலை பாக்கு கற்கண்டு பால் முதலிய நறும் பொருள் களை அளித்து மாட்சிமை செய்தனர். தலைவர்கள் பன்னீரிலேயே நீராடினர். மாலைகளோ அளவிறந்தவை. தலைவர்களின் முகம் மலர் மாலைக் குவியலில் மூழ்கின; பின்னர் ஊர்தி முழுமையும் அம்மலர் மாலைகளைப் பரப்பி அணி செய்தனர். ஊர்தி முழுமையும் நிறைந்து சக்கரங்களில் எல்லாம் மாலைகள் வரிசையாக இடப்பட்டு அசைய, ஊர்தி ஓங்கி ஓங்கி ஊர்ந்து வந்த காட்சி, இவ்வூர்வலம் தமிழ் ஆசிரியர்மார்க்கோ அன்றி ஊர்திக்கோ என்று அனைவரும் கருதும்படி அத்தனை பெருமாட்சியாய் விளங்கியது. எல்லாவற்றையும் விட இவ்வூர்வலத்தில் மிகவும் பேரின்பக் காட்சியாக விளங்கியது. சிறு சிறு பிள்ளைகள் திருநீற்றுக்கலனைக் கையில் எடுத்துக் கொண்டு, கூட்டம் முழுமையும் சுற்றிச்சுற்றி அனைவர் நெற்றியிலும் திருநீறு பார்க்க விளங்கும்படி பூசுமாறு நீறு வழங்கிவந்த பெருங்காட்சியாகும்.

மெய்கண்ட சாத்திர மாநாட்டில் நடைபெற்ற மற்றொரு பெருஞ்சிறப்பு

ஒவ்வொரு நாளும் தொடர்பாக அரிய பெரிய இன்னிசை அரங்குகள் தக்க இசைவாணர்களால் நடைபெற்றமை யாகும்.

முதல் நாள் இரவு : 1. திருவனந்த புரம் திருஇலக்குமணப் பிள்ளை பி.ஏ., இன்னிசை.

2. பங்களூர் திருவாட்டி சாரதாம்பாள் எம்.ஏ. - வீணை.

3. திருமதி குஞ்சம்மாள் - 'வள்ளி திருமணம்' கதை நிகழ்ச்சி இரவு 3 மணிக்கு நிறைவு.

கூட்டம் 2000 பேர்.

இரண்டாம் நாள் இரவு : திரு மயிலம் க. வச்சிரவேல் முதலியார் - இன்னிசை.

மூன்றாம் நாள் இரவு : சிதம்பரம் திரு. சி.எஸ். செல்வரத்தினம் பிள்ளை - தமிழிசை.

நான்காம் நாள் இரவு திருநெல்வேலி தமிழிசை மணி சா. சுந்தர ஓதுவா மூர்த்தியவர்களின் திருமுறை இசை யரங்கு, பிடில் முதலிய இன்னிசைக் கருவிகளுடன் இனிதின் நிகழ்ந்தது. திரு ஓதுவாமூர்த்திகளின் இன்னிசை விவரங்கள் கேட்குந்தோறும் சிந்தைக் கினிய செவிக்கினியவாய்த் தெளிந்த பொருள் விளக்கங்கள் பொருந்திக் கேட்போரனைவரும் மனம் கரையுமாறு அழகின் அமைந்திருந்தது.

அதன்பின் திருவாட்டி சாரதாம்பாள் எம்.ஏ. அவர்களின் அரிய வீணை யரங்கும் நடைபெற்றது.

ஆறாம் நாள் இரவு : உத்தரகோச மங்கை திரு. காமகோடிபாய் என்னும் 8 ஆண்டுப் பெண்குழந்தையின் சலதரங்கக் கச்சேரி.

ஏழாம் நாள் இரவு : திரு. சித்தூர் சுப்பிரமணியபிள்ளை - இசையரங்கக் கூட்டம் 6000 பேர்.

காலம் இரவு 8.45 முதல் காலை 1.45 வரை கிளர்ச்சியான நிகழ்ச்சி இளைய சிறுவர் சிறுமிகள் சித்தாந்தப் பொருள்கள் பற்றி ஒவ்வொரு நாளும் மாலையில் நிகழ்த்திய ''சித்தாந்த உரையாடல்கள்'' ஆகும். முதல்நாள் (21.5.41) சித்தாந்த வினாவிடை; இரண்டாம் நாள் - பௌத்தரும் சித்தாந்தியும், மூன்றாம் நாள் - உலோகாயதரும் சித்தாந்தியும்; நான்காம் நாள் - மரணத்திற்குப் பின் மனிதர் நிலை; ஐந்தாம் நாள் - உடலும் உயிரும்; ஆறாம் நாள் - மெய்கண்ட சாத்திர மாநாடு.

(செந்தமிழ்ச்செல்வி)

நடத்தியவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினராக இருக்கக் கூடும் நிச்சயமாகத் தெரியவில்லை.

சித்தாந்த வகுப்பு (1952) : 27.4.1952 முதல் 20.5.1952 வரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் திருநெல்வேலியில் சித்தாந்த வகுப்பு நடத்தப் பெற்றது. பாடம் நடத்தியவர்கள்; உயர்திரு தூ. சு. கந்தசாமி முதலியார், ப. இராமநாதம்பிள்ளை; பாடத்திட்டம் சிவஞானபோதச் சிற்றுரை.

சைவசித்தாந்த ஞானநூல் பயிற்சி வகுப்பு (1967) : 22.4.67 முதல் 5.5.67 வரை லால்குடியில் திருக்குறள் வேள் திரு. ஜி. வரதராஜபிள்ளை அவர்களால் ''சைவசித்தாந்த ஞானநூல் பயிற்சி வகுப்பு'' நடத்தப் பெற்றது. பயிற்சி அளித்தவர்கள்; திரு. சி,. அருணை வடிவேல் முதலியார், திரு. முத்து சு,. மாணிக்க வாசக முதலியார், திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, மாணிக்க வாசக ஞானதேசிக சுவாமிகள் மேலையூர் இவ்வகுப்புகள் ஆண்டு

தோறும் பத்தாண்டுகளுக்கு மேல் (முன் பின்னாக இருக்கலாம்) நடத்தப் பெற்றன.

சேக்கிழார் விழா (1985) : *25.5.85, 26.5.85* இரு நாட்களும் தமிழக அரசின் சார்பில் சென்னை மயிலாப்பூர் காபலீசுவரர் திருமணக் கூடத்தில் சேக்கிழார் திருநாள் விழா நடத்தப் பெற்றது. திரு. ம. பொ. சிவஞானம், திரு. இராம வீரப்பன், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், தருமபுரம் ப. சுவாமி நாதன், திரு. தெ. ஞானசுந்தரம், திரு ஔவை நடராசன், தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், தவத்திரு சுந்தர சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார், திருமதி சௌந்தரா கைலாசம், சாயிமாதா சிவபிருந்தா தேவி, திருமதி சாரதா நம்பியாரூரன், திரு. அ.ச. ஞானசம்பந்தம், திரு. இரா. செல்வக் கணபதி, திருக்குறளார் வீ. முனுசாமி மற்றும் 12 ஓதுவாமூர்த்திகள் பங்கு பெற்றனர்.

5.7.86, 6.7.86 இருநாட்களும் தமிழக அரசின் சார்பில் சிதம்பரம் சபாநாயகர் திருக்கோயில் சேக்கிழார் திருநாள் நடைபெற்றது. திரு. இராமவீரப்பன், திரு. வி.வி. சுவாமிநாதன், தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ 26வது குருமகா சந்நிதானம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு ஊரன் அடிகளார், சோ. சத்திய சீலன் அ. அறிவொளி, இரா. செல்வக் கணபதி, அ.வ. இராச கோபாலன், சூலமங்கலம் சகோதரிகள், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள், ஔவை நடராஜன், அ. ச. ஞானசம்பந்தம், சீர்காழி கோவிந்த ராஜன் ஆகியோர் பங்குபெற்றனர்.

இந்நிகழ்ச்சிகளில் இரண்டு குறிப் பிடத்தக்க செய்திகள் : 1) தமிழக அரசு நடத்தியது. 2) தமிழகத்தின் தலை சிறந்த பேச்சாளர்கள் கலந்துகொண்டது. இம்முயற்சி தொடர்ந்திருந்தால் பெரும்பயன் விளைந்திருக்கும்.

திருக்கோயில் கருத்தரங்கம் (1997) : *19, 20, 21* ஜனவரி *1997* இல் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம், காரைக் குடி அழகப்பா பல்கலைக்கழகம், திருக் கோயில் கருத்தரங்கம் நடத்தியது. இது ஒரு புதிய முயற்சி ஆகும். வழக்கமான சாத்திர, தோத்திரக் கருத்தரங்குகளுடன் சிவாகமம் (திருக்கோயில் அடிக்கல் நாட்டுதல், பதினெண் பூசைவரிசை), சிற்பம் (கணபதியும் பல்வேறு வடிவங் களும், கந்தனின் கவின்மிகு வடிவங் கள், உற்சசவமூர்த்திகள்), சோதிடம் (சைவ கால விவேகம், முகூர்த்த கால நிர்ணயம்), நாதசுரம், தவில் (ஆலய நாதசுர இசைமரபுகள், மல்லாரிகளின் தாள வேறுபாடுகள், தவில் இசைத் தோற்றமும் வளர்ச்சியும், தவில் இசைக் கருவியின் சில விவரங்கள்) எனக் கருத்தரங்குகள் வடிவமைக்கப்பட்டிருந் தன. இந்த முயற்சியும் தொடர்ந்திருக்க வேண்டும்.

11, 12 நவம்பர் *1988*இல் சென்னை குப்புசாமி சாஸ்திரி இன்ஸ்டிடியூட் ''உமாபதி சிவம் கருத்தரங்கம்'' (ஆங்கிலம்) அதனை நூலாகவும் வெளியிட்டார்கள்.

1998 மார்ச் மாதத்தில் சென்னை பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத்துறை இரண்டுநாள் தேசியக் கருத்தரங்கினை நடத்தியது.

திருநாவுக்கரசர் ஆராதனை விழா (1998) : *21.4.1998*இல் திருப்புகலூரில் தமிழ்நாடு இசைவாணர்கள் திருநாவுக் கரசு சுவாமிகள் ஆராதனை இசைத் தமிழ் விழா நடத்தியது. திருவையாறு தியாகராஜா ஆராதனை போல அரை மணி அல்லது 1 மணிக்கு ஒரு ஓதுவா மூர்த்தி; தியாகத் தொடர்ந்து திருநாவுக் கரசர் தேவாரத்தைப் பண்ணமைத்துப்

பாடினார்கள். இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் ஆச்சாள் புரம், சீர்காழி(2) என ஆராதனை விழா நடைபெற்றது. இது ஒரு அருஞ்செயல், இம்முயற்சியும் தொடர்ந்திருக்க வேண்டும். சிதம்பரம் நாட்டியாஞ்சலி போல உலகப் புகழ்பெற்றிருக்கும். ஆனால் தொடரவில்லை.

19.1.2005 அன்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒருநாள் திருமந்திரக் கருத்தரங்கு நடத்தியது.

2004 - 2005ல் பூம்புகார் மேலையூரில் உழவாரம் சார்பில் தொடங்கப்பட்ட மாணவர் பண்பாட்டுப் பயிற்சி திட்டம் கல்லூரி பள்ளிகளில் நூலின் மேல் தேர்வு, பூம்புகார் மேலையூரில் 5 நாள், 1 நாள் முகாம் என நடத்தப்படுகின்றது. 2007 - 2008 முதல் கல்லூரி பயிற்சித் திட்டம் மூன்றாண்டு திட்டமாக வரையறுக்கப்பட்டு முதலாம் ஆண்டு (திருக்குறள், சிலப்பதிகாரம்), இரண்டாமாண்டு (பெரியபுராணம், திருவாசகம், திருமந்திரம்), மூன்றாம் ஆண்டு மூவர் தேவாரம், சிவஞான போதம்) எனப் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எழுதியோர்

கல்லூரி மாணவர் பயிற்சித் திட்டம்

2004 - 2005 தேர்வு எழுதியோர் - 80 முகாமில் கலந்து கொண்டோர் - 40

2005 - 2006 தேர்வு எழுதியோர் - 248 முகாமில் கலந்து கொண்டோர் - 80

2006 - 2007 (இரண்டு ஆண்டு) தேர்வு எழுதியோர் - 361 முகாமில் கலந்து கொண்டோர் - 101

பள்ளி மாணவர் பயிற்சித் திட்டம்

2005 - 2006 தேர்வு எழுதியோர் - 300 முகாமில் கலந்து கொண்டோர் - 100

2006 - 2007 தேர்வு எழுதியோர் - 601 முகாமில் கலந்து கொண்டோர் - 136

இம்முயற்சி தொடர்ந்து நடைபெற்றால் சைவ மறுமலர்ச்சி ஏற்படும். இதுகாறும் எடுத்துக் கூறப்பட்ட நிகழ்வுகள் அவ்வக் காலங்களில் சிறப்பு மிக்கவை. சைவ வரலாற்றில் அழுத்தம் - திருப்பம் கொடுத்த நிகழ்வுகள் பற்றி இனிக் காண்போம்.

தமிழகத்தில் உள்ள நூற்றுக்கணக்கான சைவ அமைப்புகள் தங்கள் பகுதிகளில் திருமுறைகளுக்கும் சைவ சித்தாந்தத்திற்கும், திருக்கோயில்களுக்கும் அருந்தொண்டாற்றி வருகின்றன. அப்பணிகள் இங்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. தமிழகம் தழுவிய நிலையினவாக, புதிய முயற்சியாக, தொடர்ந்த ஒன்றாக நின்று நிலைக்கும் பணியாக உள்ளவை மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

1. சித்தாந்த தீபிகை ஆங்கில இதழ் வெளியீடு

(1897)

1897 ஜூன் மாதம் ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை ''சித்தாந்த தீபிகை'' என்ற ஆங்கில மாத இதழை வெளியிட்டார். 1902 உடன் தீபிகை தன் பணியை முடித்துக் கொண்டது. இது குறுகிய காலமாக இருந்தாலும் கூட இக்குறுகிய காலத்தில் தீபிகை நிகழ்த்திய சாதனைகள் பலவாம்.

சாத்திர நூல்கள், திருமுறைகளில் சில பகுதிகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. தீபிகை வரும்வரை இந்தியத் தத்துவம் என்றால் வேதாந்தம் மட்டுமே என்று நினைத்த மேனாட்டாருக்குச் சித்தாந்த பாதை திறக்கப்பட்டது.

2. சைவ சித்தாந்த மகாசமாஜம் (பெருமன்றம்) தொடக்கம்

(1905)

7.7.1905 அன்று சைவசித்தாந்த மகா சமாஜம் தொடங்கப்பட்டது. சென்னையிலே சிவனடியார் திருக்கூட்டம், ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை போன்ற 7, 8 சபைகளும், தமிழக அளவில் தூத்துக்குடி சைவசித்தாந்த சபை, பூவாளூர் சைவ சித்தாந்த சபை, திருச்சிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை, போன்ற சபைகளும் 100 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வருகின்றன. அந்த அமைப்புகள் எல்லாம் தோற்றுவிக்கப்பட்ட எல்லைக்குள் நின்று பணியாற்றுகின்றன. சமாஜம் மட்டும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் கடந்த 100 ஆண்டுகளில் தனது ஆண்டு விழாக்களை நடத்தியுள்ளது. அடுத்து சமாஜம் ஆண்டுவிழா, மாதக் கூட்டம், நூல் வெளியீடு, இதழ் (தமிழ், ஆங்கிலம்) ளியீடு எனப் பன்முகப் பணிகளைச் செய்து வருகிறது. பதிப்புத்துறையிலும் சமாஜம் முத்திரை பதித்துள்ளது. உ.வே.சா. பதிப்பு போல சமாஜப் பதிப்பும் அறிஞர் உலகம் போற்றி வரும் ஒன்றாகும். நூறாண்டுக் காலம் தமிழகத்தில் சைவப்பணி ஆற்றி வருபவர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு வகையில். சமாஜத்தோடு தொடர்பு கொண்டிருப்பார்கள். இன்றைய நாளில் சமாஜத்தில் நிறுவப்பட்டிருக்கும் அறக்கட்டளைகளை எடுத்துக் கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 365 நாட்களும் சமாஜத்தில் ஏதேனும் நிகழ்ச்சி இருந்து கொண்டிருக்கும்.

3. மெய்கண்டான் சித்தாந்த மாநாடு

1941

1941 ஆகஸ்டு 28, 29, 30, 31 நாட்களில் தருமபுரத்தில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ 24வது குருமகாசந்நிதானம் அவர்களால் மெய்கண்டான் சித்தாந்த மாநாடு நடத்தப் பெற்றது. இம்மாநாடு தனியொரு நிகழ்வாக இருக்கலாம். இது நடத்தப்பட்ட முறை தனித்தன்மை வாய்ந்தது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சைவசித்தாந்த அறிஞர்களும் பங்குபெற்றனர். முன்கூட்டியே திட்டமிடப்பட்டு தனி மாநாட்டு அலுவலகமே இயங்கியது. சொற்பொழிவாளர்களிடம் கட்டுரைகள் முன்பே வாங்கப்பட்டன. விருந்தினர்களைக் கவனிக்கத் தனி ஏற்பாடுகள் (நாவிதர் முதல் குளிக்க வெந்நீர் எடுத்து வைப்பது முதல் சிறப்பான உணவு ஏற்பாடு வரை.) நாகரிகம் வளர்ந்த இன்றைய நாளில் இவை எளிதாகப் படலாம். 1941-இல் இவ்வாறு நடத்தப்பட்டது - முதன் முதலாக நடத்தப்பட்டது - என்பதினால் சிறப்புப் பெறுகிறது.

4. தமிழிசைச் சங்கம் தொடக்கம்

(1943)

19.4.1943இல் இராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சென்னையில் தமிழிசைச் சங்கத்தை உருவாக்கினார். தமிழிசைச் சங்கம் தொடங்கப்படும் முன் இசையரங்குகளில் தெலுங்கு கீர்த்தனங்கள் மட்டுமே பாடப்பட்டு வந்தன. தமிழிலே பாடவேண்டும் என்பதற்குச் சங்கீத வித்வான்களிடம் கடும் எதிர்ப்பு இருந்தது. எதிர்ப்பையும் மீறி தாங்களே பாடுவோம் (!) என்ற அளவிற்கு இராஜாவும் திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்களும் துணிந்து முடிவெடுத்தார்கள். தேவாரப்பண்களை ஒரே முறையில் ஓதுவார் மூர்த்திகள் பாடவேண்டும் என்று நெறிப்படுத்த 25.11.49இல் தமிழிசை ஆராய்ச்சிக் குழு ஒன்றை திரு.ஆர்.கே. சண்முகஞ் செட்டியார் அமைத்தார். 24.12.49 முதல்

27.12.49 முடிய நான்கு நாட்கள் முற்பகலில் ஓதுவாமூர்த்திகளை அழைத்துப் பண்ணாராய்ச்சிக் கூட்டம் நடத்தினார். இப்பண்ணாராய்ச்சிக் கூட்டம் ஆண்டுதோறும் இன்றளவும் நடைபெற்று வருகிறது. பண்ணாராய்ச்சிக் கூட்டங்களின் அறிக்கைக்களை அச்சிட்டும் வெளியிடுகின்றனர். 1993 வரை வெளியான அறிக்கைகள் 6000 பக்கங்கள் தேறும் என்கிறார் பெ. தூரன். இந்த வகையில் தமிழிசைச் சங்கம் tremel Setter எனலாம். இதனை அடியொட்டி பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்கள் சென்னையில் மூன்று இடங்களிலும், திருச்சி, கோவை நகரங்களிலும் தேவார இசைக்கலை விழாக்கள் நடத்தி வரலானார். அண்மைக்காலத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் திரு. எஸ். இராமதாஸ் அவர்கள் பொங்கு தமிழ்ப்பண்ணிசை மன்றம் அமைத்து, சென்னை, மதுரை, சிதம்பரம், சீர்காழி, பம்பாய், மலேசியா எனத் தமிழ் இசை விழாக்கள் நடத்தி வருகிறார். இதன் பின் விளைவாக மக்கள் தொலைக்காட்சி ஒன்று நிறுவி நிறுவி தமிழிசை பரப்பி வருகிறார். அண்ணாமலையரசர் போட்ட விதை இன்று ஆல்போல் பரவி வளர்ந்துள்ளது.

5. திருமந்திர மாநாடுகள்

(1954)

31.1.54இல் திருவாவடுதுறையில் ஆதீனத்தின் சார்பில் திருமந்திர முதல் மாநாடு நடைபெற்றது. 1964 வரை பதினோரு மாநாடுகள் நடைபெற்றன. கேட்க வந்த சைவ அன்பர்கள் வெகுச் சிலரே. ஆனால் உரையாற்ற வந்த பெருமக்களோ திருமந்திரத்தில் ஆழங்கால் பட்டவர்கள். அந்த அளவுக்கு திருமந்திரத்தை ஆழமாகப் படித்தவர்கள் இன்று குறைந்து விட்டனர். மாநாடுகள் நடத்தியதைவிட திருவாவடுதுறை ஆதீனம் மாநாட்டு சொற்பொழிவுகளை அச்சு வடிவில் கொணர்ந்திருக்கின்றார்கள். இப்பகுதியில் இம்மாநாடுகள் சிறப்பிடம் பெற்ற காரணமே மாநாட்டு மலர்கள் வெளிவந்ததே. மாநாட்டு மலர்கள் இப்பொழுது தொகுதி தொகுதியாக நூல்வடிவம் பெற்று வருகிறது.

6. தமிழ்நாடு தெய்வீகப் பேரவை

(1966)

தனித்தனியாக இயங்கி வந்த பதினைந்து திருமடங்களின் தலைவர்களை ஒருங்கிணைத்து அவர்கள் இடம்பெறும் அமைப்பாக 1966ஆம் ஆண்டில் ''தமிழ்நாடு தெய்வீகப் பேரவை ''உருவாயிற்று. தமிழக அரசு, ஆதீனத் தலைவர்கள், சைவ அமைப்புகள், புரவலர்கள் தொண்டர்கள் இணைந்து செயல்படும் கூட்டு முயற்சியாக விளங்கியது. 1976 இல் தெய்வீகப் பேரவையில் 2606 கிளைகளில் 92869 உறுப்பினர்கள் இருந்தனர். 115 திருக்கோயில்களில் உழவாரப் பணி, 33 பேர் சமயப் பரப்புனர்கள், 10000 பிரதிகள் வீதம் 50 வெளியீடுகள், அருளோசை, செய்திக் கதிர் என இரண்டு இதழ்கள் - இவ்வாறு சைவ சமயப் பேரியக்கமாகப் பேரவை விளங்கி வந்தது. பேரவை தொடர்ந்து இயங்கி இருந்தால் சைவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

7. திருமுறைக் கருத்தரங்குகள்

(1971)

1971ஆம் ஆண்டில் பிப்வரி மாதம் 12, 13, 14 ஆம் தேதிகளில் திருவிடை மருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ 22வது குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுறைக் கருத்தரங்கு நடத்தினார்கள். தமிழ்நாட்டில் உள்ள சைவ அறிஞர்கள் அனைவரும் கலந்து

கொண்டனர். மாநாட்டின் நெறியாளர் திரு. டி.என். அருணாசலம் பிள்ளை ஒவ்வொரு தலைப்பிற்கும் அதனுடன் தொடர்புடைய இலக்கியத்தில் ஆழங்கால்பட்ட அறிஞர்களைத் தேடிப்பிடித்து ஏற்பாடு செய்தார்கள். ஆயிரக்கணக்கில் அன்பர்கள் கலந்து கொண்டனர். அத்துணை பேருக்கும் இடிபாடு ஏதுமில்லாமல் அறுசுவை உணவு படைக்கப்பட்டது. சொற்பொழிவுகளை நூலாக்கியும் தந்துள்ளனர். இதுபோல ஐந்து மாநாடுகள் நடைபெற்றன. 1971 - பன்னிரு திருமுறை 1972 திருஞான சம்பந்தர் தேவாரம்; 1973 - திருநாவுக்கரசர் தேவாரம்; 1974 - சுந்தரர் தேவாரம்; 1975 - திருவாசகம். திருவாசக மாநாடு ஐந்து மாநாடுகளின் மணி முடியாகத் திகழ்ந்தது. முதன்முதலாக பாரதப்பிரதமரும், திராவிட இயக்கத்தைச் சேர்ந்த முதலமைச்சரும் சைவத் திருமுறை மாநாட்டில் கலந்து கொண்டனர்.

8. திருமுறை முற்றோதல்

(1974)

''1974இல் சைவசித்தாந்தப் பெருமன்றத்தில் பொருளாளராக இருந்த முத்துக்குமாரசாமி நயினார் என்பவர் பெரியபுராணத்தைப் படித்து அதன் உரையையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள விரும்பினார். அவ்வமயம் பெருமன்றச் செயற்குழு உறுப்பினர்கள் திரு. என். குருசாமி பிள்ளை, திரு. சி.என். சிங்காரவேல் முதலியார், திரு. பழநிசாமிபிள்ளை, செயலாளர் அம்பை சங்கரனார், திரு. என். சோமசுந்தரம் பிள்ளை, திரு. சிவ. வேதாசலனார் ஆகியவர்களை அழைத்து ஞாயிறு தோறும் பெரிய புராணப் படனம் நயினார் வீட்டில் நிகழ்ந்தது. உருத்திர பசுபதிநாயனார் புராணம் படித்தபோது 4 வடமொழி வல்ல சாத்திரிகளை அழைத்து மகா ருத்திரத்தை ஓதச் செய்து பின்னர் அப்புராணத்தைப் படிக்கச் செய்தார். இவ்வாறு மிகவும் ஈடுபாட்டுடன் அப் படனம் நிகழ்ந்தது. அப்பால் ஒவ்வொரு திருமுறையாகச் சேர்ந்து படித்தால் நல்லது என்ற எண்ணம் உண்டாயிற்று. ஒருநாளில் முடியக் கூடியதாகத் திருவாசகந் தானுள்ளது. ஆதலின் அதனை அகண்ட பாராயணமாக முதலில் படித்தோம். அது ஒருநாளில் முடியவே பின்னர் சுந்தரர் தேவாரத் தையும் ஒருநாளில் படித்து முடித்தோம்.

அகண்டபாராயணம் என்பது வடமொழிச் சொல் முற்றோதல் என்று தமிழ்ப்படுத்தினோம். அப்பால் பன்னிரு திருமுறைகளையும் முற்றோதல் வேண்டும் என்ற எண்ணம் எழ அன்பர்கள் இல்லங்களில் நடத்த லானோம்.''

இவ்வாறு அம்பை சங்கரனார் சித்தாந்தம் (ஜூலை 1994) இதழில் எழுதுகிறார்.

1979 இல் நெல்லையில் திரு. மு. சு. சங்கர் தருமபுரம் சுவாமிநாதன் அவர்களைக் கொண்டு திருவாசக முற்றோதல் செய்தார். நெல்லையில் ஒரு அமைப்பு மட்டும் 10.4.2005 வரை 600 திருவாசக முற்றோதல்கள் செய்து உள்ளது.

1980க்குப் பிறகு தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தாறாவது குருமகா சந்நிதானமவர்கள் பன்னிரு திருமுறை முற்றோதல், ஓதுவாமூர்த்திகள் திருமுறை இசைத்தல், அறிஞர்கள் விளக்கவுரை என முதலில் திருக் கோயில்களில் பின்னர் இல்லங்களில் என நெறிப் படுத்தினார்கள். மயிலம் பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம் நடத்திய பன்னிரு திருமுறை முற்றோதல் ((27.4.1993 முதல் 18.4.2002 முடிய) வேள்வி மகுடம் போல் அமைந்தது. இதன்பிறகு திருமுறை முற்றோதல் தமிழகம் முழுவதும் பரவி பேரியக்கமாக வளர்ந்துள்ளது.

இதனால் தற்போது அன்பர்க்குப் பன்னிரு திருமுறைகளில் ஈடுபாடு பெருகலாயிற்று. பன்னிரு திருமுறை நூல்கள் தத்தம் இல்லங்களில் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வளரலாயிற்று.

நாட்டியாஞ்சலி

(1981)

சிதம்பரம் நடராஜர் கோயிலில் 1981இல் நாட்டியாஞ்சலி தொடங்கியது. இந்தியாவில் உள்ள ஆடற்கலைஞர்கள் அனைவரும் ஆண்டுதோறும் மகா சிவ ராத்திரியன்று நடராஜப் பெருமானுக்குத் தங்கள் ஆட்ற்கலையை அர்ப் பணிக்கின்றனர். ஆண்டுதோறும் நாட்டியாஞ்சலியில் நூற்றுக்கணக்கான கலைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

10. அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம்

(1984)

1984 மே மாதம் *11, 12, 13* தேதிகளில் தருமையாதீனத்தில் தருமையாதீனம் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கினை நடத்தியது. வெளிநாட்டறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர். இதனையொட்டி அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டது. பல ஆங்கில நூல்கள் சைவ சித்தாந்தத்தில் எழுந்தன. மயிலாடுதுறை, சிதம்பரம், காரைக்கால், போன்ற இடங்களில் சைவ சித்தாந்த மாலை நேர வகுப்புகள் (4 ஆண்டுபடிப்பு) நடத்தப்பட்டன. 1986-இல் மலேசியாவில் கோலாலம்பூரில் இரண்டாவது கருத்தரங்கமும், காசியில் மூன்றாவது கருத்தரங்கமும் நடத்தப் பட்டன. உலகளவில் சைவ சித்தாந்தம் பரவ வழி வகுத்தது.

11. பன்னிரு தமிழ்வேதப் பெருவிழா

(1989)

2.2.2008 முதல் *4.2.4008* வரை திருவள்ளூரில் 19ஆம் ஆண்டு பன்னிரு தமிழ்வேதப் பெருவிழா நடைபெற்றது. இப்பெருவிழா குடியாத்தம் திரு. சி.ஆ. பக்தவத்சலனார் அவர்களால் 1989 இல் குடியாத்தத்தில் தொடங்கப்பட்டது. 1993 வரை குடியாத்தத்தில் மட்டும் நடைபெற்றது. அதன்பிறகு தஞ்சாவூர் (1995), அவிநாசி (1996), சென்னை (1997) திருநெல்வேலி (1998), திருவண்ணாமலை (1999), கள்ளக்குறிச்சி (2000), சிதம்பரம், சேலம் (2003), ஓசூர் (2004), காரைக்கால் (2005), மயிலாடுதுறை (2006) பெண்ணாடம் (2007), ஆகிய ஊர்களில் பன்னிரு தமிழ்வேதப் பெருவிழா நடைபெற்றது. பெருவிழா நடைபெறும் 3 அல்லது 4 நாட்களும் காலை முதல் மாலை வரை ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து குளிர்ந்து மகிழும் காட்சி அற்புதக் காட்சி! ஓதுவாமூர்த்திகளுக்கும், சைவப் பெரியவர்களுக்கும் தரப்படும் ஏற்றம் போற்றப்படவேண்டிய ஒன்று. தமிழகமெங்கும் திருமுறை பரவ வழிவகை செய்யும் பெருவிழாக்கள் ஆகும்.

12. சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம் சீர் வளர் சீர் குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் இப்பயிற்சி மையம் 1992 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நடைபெற்ற வருகிறது. 1992 - 94, 1995 - 97 1998 - 2000, 2001 - 2003 ஆகிய நான்கு தொகுப்புகளும், ஒரு முன்றாண்டுத் தொகுப்பாக நடைபெற்று வந்தன. 2004 - 2005 முதல் இரண்டாண்டுத் தொகுப்பாக நடைபெற்று வருகிறது.

சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்

தொகுப்பு ஆண்டு	மாணவர் எண்ணிக்கை	கிளை மையங்களின் எண்ணிக்கை
1992-1994	1081	20
1995-1997	1463	27
1998-2000	2500	36
2001-2003	3900	48
2004-2005	3785	49
2006-2007	5200	56
மலேசியா ஆஸ்திரேலியர்	145	3
	18074	239

வயது அடிப்படையில் எண்ணிக்கை

வயது	மாணவர்களின் எண்ணிக்கை
20 வயதுக்குட்பட்டவர்கள்	530
21 முதல் 40 வயது வரை	8199
41 முதல் 60 வயது வரை	8725
60 வயதிற்கு மேற்பட்டவர்கள்	620
	18074

இதில் பெண்களின் எண்ணிக்கை ஏறத்தாழ முப்பத்திரண்டு விழுக்காடு ஆகும். (4000 பெண்கள்) ஆயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகளும், நூற்றுக் கணக்கில் ஆங்கில மருத்துவர்களும், வழக்கறிஞர்களும், பொறியாளர்களும், பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்களும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும் அரசுப்பணியில் இருக்கும் உயர் அதிகாரிகளும் இப்பயிற்சி மையத்தில் பயின்று பயன் பெற்றுள்ளனர்.

ஏழாவது தொகுப்பு ஜனவரி 2008ல் தொடங்கியது. இப்பயிற்சி மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு 2650 பக்கங்களுக்குக் குறையாமல் 25 நூல்கள் வழங்கப்படுகின்றன. இயக்குநர் - திரு.கு. வைத்யநாதன்.

விக்கிரமசிங்கபுரம் சைவநெறிக் கழகம் 1987 முதல் இன்றளவும் ஆண்டுதோறும் மே 7 முதல் மே 21 வரை சைவ சித்தாந்த வகுப்பு நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் 50 பேர் பயன் பெறுகின்றனர்.

மதுரை தியாகராயா கல்லூரியில் 2004 முதல் ஆண்டுதோறும் சைவ சித்தாந்த வகுப்பு நடைபெறுகிறது.



ஸ்ரீலஸ்ரீ திருவாவடுதுறை குருமகாசந்நிதானம், சித்தாந்த வகுப்பு ஆசிரியர்கள்

13. உலக சைவப் பேரவை

1992

இலண்டன் மெய்கண்டார் ஆதீன கர்த்தர் 1992 இல் உலகச் சைவப் பேரவையைத் தொடங்கினார். 1992 இல் சிங்கப்பூரிலும், 1993 இல், பினாங்கிலும், 1994இல் பாரிசிலும், 1996 இல் கொழும்புவிலும், 1996 இல் டர்பனிலும், 1997 இல் தஞ்சாவூரிலும், 1999 இல் கனடாவிலும் பேரவை உலகச் சைவ மாநாட்டில் 48 ஆய்வுக் கட்டுரைகள். தமிழிலும் ஆங்கிலத்திலும் படிக்கப் பட்டன. உலகெங்கிலுமுள்ள சைவ சமயச் சான்றோர்கள் சைவ சமய அறிஞர்கள், ஆர்வலர்கள் திருமடத்தின் - தலைவர்கள் கலந்து கொண்டனர். உலக சைவப் பேரவை உலகளாவிய நிலையில் மாநாடுகள் நடத்தி வருவதால் ''மேன்மை கொள சைவநீதி விளங்குக உலகெலாம்'' என்பது உறுதியாயிற்று.

14. வசந்தகுமாரின் திருக்கோயில் திருப்பணிகள்

1995

5.4.1995இல் கோவை நிறை நிலா வழிபாட்டுக்குழுத் தலைவர் கோவை ஒத்தக்கால் மண்டபத்தில் உள்ள புற்றிடங் கொண்டீசர் திருக்கோயில் குடமுழுக்கு செய்தார். அதனையொட்டித் தமிழகத்தில் உள்ள சிவாலயங்களின் - குறிப்பாக அனைத்துப் பாடல் பெற்ற தலங்கள் - திருப்பணிகளை மேற்கொள்ளக் கங்கணம் கட்டிக்கொண்டு இதுவரை 230 திருக்கோயில்களின் (2008 ஜனவரி) திருப்பணியை அந்தந்த ஊர்ப் பொதுமக்கள், சிவனடியார்கள் துணை கொண்டு நிறைவேற்றி உள்ளார். பணி தொடர்கின்றது. இந்த நூற்றாண்டின் (இருபது அல்லது இருபத்தி ஒன்று) இணையற்ற சாதனை எனலாம்.

15. வாரணாசி திருமுறை மாநாடுகள்

திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடமும், களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் இணைந்து வாரணாசியில் 1999இல் குமரகுருபரர் இலக்கிய ஆய்வு மாநாடும், 2001 இல் பெரிய புராண ஆய்வு மாநாடும், 2002 இல் திருஞான சம்பந்தர் இலக்கிய ஆய்வு மாநாடும், 2003இல் திருநாவுக்கரசர் இலக்கிய ஆய்வு மாநாடும், 2005 இல் பக்தி மாநாடும், சுந்தரர் இலக்கிய மாநாடும் நடத்தியுள்ளன. கருத்தரங்கச் சொற்பொழிவுகள் நூல் வடிவம் பெற்று உள்ளன. பெருநிகழ்வுகள் சிலவற்றின் விரிவான விளக்கங்கள்.

மெய்கண்டான் சித்தாந்த மாநாடு, தருமபுரம் 1941 ஆகஸ்டு 28, 29, 30, 31

28.8.1941 : வழிபாடு

29.8.1941 : வழிபாடு காலை *8 - 12*; மாலை *3 - 6* ; இரவு *7-8.30* ஸ்ரீலஸ்ரீ

மகாசந்நிதானம் மகாநாட்டைத் திறந்து வைத்தருளல்.

மகாநாட்டின் தலைவர் : காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார். சார்புரை :

மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு - முதல் நாள் 29-8-1941

திரு. எஸ். சுப்பராய முதலியார், சீகாழி, இராவ்சாகிப் திரு. எல்.என்.பரமசிவம் பிள்ளை, லால்குடி; திரு. கே. அரங்கசாமி முதலியார் திருச்சி.

1-6 சூத்திரங்களின் கட்டுரைகளைப் பேசுதலும், படித்தலும்.

சூத்திரம் 1; திரு முத்து, சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி; வச்சிரவேல் முதலியார், காஞ்சிபுரம், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், சென்னை ஏ. முத்தையாபிள்ளை, திருநெல்வேலி, திரு. சமரபுரி முதலியார், தாம்பரம்.

சூத்திரம் 2. திரு. ஏ. முத்தையா பிள்ளை (திருநெல்வேலி); திரு. இராமநாதப்புலவர் (கொழும்பு).

சூத்திரம் 3 : திரு. ஏ. முத்தையா பிள்ளை (திருநெல்வேலி); திரு நல்ல தம்பி (கொழும்பு); திரு. அ. வரத நஞ்சையபிள்ளை, ஜலகண்டபுரம்.

சூத்திரம் 4 : திரு. தண்டபாணி தேசிகர் (திருவாரூர்); திரு. ஏ. முத்தையாபிள்ளை, திருநெல்வேலி; திரு. கதிரேசச் செட்டியார், அண்ணாமலை நகர்.

சூத்திரம் 5 : திரு. மு. கதிரேசச் செட்டியார், திரு. ஏ. முத்தையாபிள்ளை.

சூத்திரம் 6 : திரு. ஏ. முத்தையா பிள்ளை திரு. மு. கதிரேசச் செட்டியார். தலைவர் முடிவுரை.

திரு. சி. நாகலிங்கம் பிள்ளை (வதிரியாழ்ப்பாணம்) அவர்களால் ''பதிபசுபாசமும்'' ''வடமொழியும் தென்மொழியும்'' என்பவை பற்றியும், பிர்மஸ்ரீ சங்கரசுவாமிநாதசாஸ்திரிகளால் (முடிகொண்டான்) ''அடியார் பெருமை'' பற்றியும் பேசப்படும்.

தங்கம்பிள்ளை, திருச்சி - யோகாசனங்கள்.

30.8.1941 சனிக்கிழமை காலை 8-12; மாலை 3 - 6; இரவு 7 - 8.30

தலைவர் : சென்னை, இந்து சமய அறநிலைக்கழக உறுப்பினர் ஸ்ரீமான் இராவ்பகதூர் சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், 7-12 சூத்திரங்களின் கட்டுரைகளைப் பேசுதலும், படித்தலும்.

சூத்திரம் - 7 : திரு. மா. நெல்லையப்பபிள்ளை, பி.ஏ., (திருநெல்வேலி)

சூத்திரம் - 8 : திரு. இ. கோவிந்தசாமிபிள்ளை, திருவையாறு திரு. இராமலிங்க முதலியார், விழுப்புரம், திரு. அரங்கசாமி ஐயர், குளித்தலை.

சூத்திரம் - 9 : திரு. அரங்கசாமி ஐயர்; சிவஸ்ரீ ச. குமரசாமிக் குருக்கள், யாழ்ப்பாணம்; திரு அவ்வை துரைசாமிபிள்ளை, செங்கம்.

சூத்திரம் - 10 : துடிசைகிழார் திரு. அ. சிதம்பரனார், கோயம்புத்தூர், திரு. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை, திருநெல்வேலி; திரு. சோமசுந்தர தேசிகர், திருவையாறு.

சூத்திரம் - 11. திரு வச்சிரவேல் முதலியார், திரு. ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளை, திரு 'வரதநஞ்சையபிள்ளை (ஜலகண்டபுரம்), திரு. சுந்தரேச வாண்டையார் (திருவையாறு)

சூத்திரம் 12. பாலகவி திரு. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை; திரு. ஆ. ஈசுவர மூர்த்திப் பிள்ளை திரு. செல்லப்ப முதலியார், பனையூர் (1-12 சூத்திர பழைய கட்டுரைகள்); ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் (1-12 சூத்திர புதுக் கட்டுரைகள்).

சைவசித்தாந்தம் – ஆங்கிலக் கட்டுரைகள்

1. இராவ்சாகிப் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை, சென்னை.

மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு - இரண்டாம் நாள் 30-8-1941

2. திரு. எம். பாலசுப்பிரமணிய முதலியார். 3) திருவாட்டி இராஜேஸ்வரி அம்மையார், சென்னை 4) சென்னை சோமசுந்தரனார், அருந்தவச்சிறுமி திருமதி மீனாட்சி அம்மையின் ''சிவஞானபோத உரை'' (தமிழ்) 5. திரு சதாசிவ முதலியார், சீகாழி, ''ஆணவ விஷயம்'' தலைவர் முடிவுரை.

சொற்பொழிவு தொடர்ச்சி

1. திரு. நாகலிங்கம் பிள்ளை ''சைவமும் வடமொழியும்'' 2) பிர்மஸ்ரீ கணபதி ஐயர், திருச்சி, ''மெய்கண்ட சித்தாந்தமும் வேத உபநிஷத்துக்களும், 3) திரு. கே. வி. சுப்பையர், திருச்சி, ''சைவசித்தாந்தம்'' 4) திருப்புகழ்மணி திரு. T.M. கிருஷ்ணசாமி ஐயர், ''சிவ கருணை'' (காலட்சேபம்) சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களின் மாநாட்டு முடிவுரை.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசி மொழி.

31.8.1941 ஞாயிறு ஆவணி மூலத்திருநாள்

தீரு. டி.கே. சிதம்பரநாதமுதலியார், திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார், திரு. எஸ். வையாபுரிபிள்ளை, திரு. எஸ். சச்சிதானந்தம்பிள்ளை, திரு. எம். அருணாசலம்பிள்ளை, திரு. கே. சுப்பிரமணியபிள்ளை, அண்ணாமலை நகர் திரு. ஆர். சண்முகசுந்தம் செட்டியார், சென்னை, திரு. எம். நடேச முதலியார், திருச்சி, திரு. சரவண முதலியார், அரியலூர். திரு. ஆர் பஞ்சநதம்பிள்ளை, திருச்சி, திரு. சண்முக தேசிகர், நாகை, திரு. மீ. சுந்தரம் பிள்ளை, தருமபுரம், சோமசுந்தரனார் (கதிரை வேற்பிள்ளை மாணவர்) சென்னை முருகேச முதலியார், புரிசை முத்துக்குமார பிள்ளை, திருநாரையூர், திரு. வேங்கடாசலம் பிள்ளை, சிதம்பரம்.



மெயகண்டார் மாநாடு (31-8-1941)

திரு. சுந்தர ஓதுவாமூர்த்தி (திருநெல்வேலி), திரு. அருணாசல தேசிகர் (வேதாரணியம்), வித்வான் நடராச தேசிகர் (திருவிடை மருதூர்), திரு இராமலிங்க ஓதுவார் (சிதம்பரம்), திரு. கந்தசாமி தேசிகர் (சீர்காழி) ஆகியோரின் திருமுறைவீதி ஊர்வலம்.

இந்நிகழ்ச்சி குறித்து பல நாட்கள் முன்பே நாள், கிழமை, திங்கள் தமிழ் வெளியீடுகளில் செய்திகள் வெளியிடப்பட்டன. அவற்றின் வாயிலாக அறிந்த பல அறிஞர்கள் தங்கள் கட்டுரைகளை அனுப்பி வைத்தனர். காசி வாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களும் ஸ்ரீஸ்கந்த பரம்பரை இலக்கண சுவாமிகள் என அழைக்கப்பட்ட ஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்களும் கட்டுரைகளைப் பரிசோதித்தனர்.

மாயூரத்தினின்றும் தரங்கம் பாடிக்குச் செல்லும் கற்சாலையில் ஒரு கிளைப்பாதை பிரிகின்றது. அவ்விடத்தில் ஒரு பெரிய வளைவு போடப்பட்டு பொன்னெழுத்துக்களில் மகாநாடு நடக்கும் செய்தி எழுதியிருந்தது. அதிலிருந்து மகாநாட்டுக் கொட்டகை வரையிலும் இருமருங்கிலும் மகர தோரணங்கள் கட்டப்பெற்றிருந்தன. நடுநடுவே தோத்திரப் பாக்களமைந்த வளைவுகள் அமைக்கப்பெற்றிருந்தன. மகாநாட்டுப்பந்தலின் ஒளிமுகம் மிகச்சிறந்த வேலைப்பாடுகளுடன் கோபுரம் போல் கட்டி அமைக்கப் பெற்றிருந்தது.

ஆதீன ஆதிஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாக இருந்து கேட்க வசதியான ஒரு பெருங் கொட்டகை அமைக்கப் பெற்றிருந்தது. மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானம் எழுந்தருளியிருப்ப, ஒருபுறம் அவைத் தலைவரும் சொற்பொழிவாளர்களும் இருக்கவும், மற்றொரு புறம் திருநெறித் தமிழ்மறை இசை வல்லார்களின் குழு 2 அமர்ந்திருக்கவும் நல்ல மேடைகள் அமைக்கப் பெற்றிருந்தன.



திருமுறை ஊர்வலம் (31-8-1941)

விடுதிகள் : இனிய சொற்பொழிவுகளுக்கிடையே நறுமணமிட்ட குளிர்நீர், வெந்நீர், சுக்குவெந்நீர், நீர்மோர் இதர இக்காலக்குடிநீர் வகைகளும் வழங்க ஏற்பாடாகியிருந்தது. தலைவர் காசி வாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் மகாநாடு கூட்டுதற்கு ஒரு மாதம் முன்பே வரவழைக்கப்பட்டிருந்தமையால் அவர்கள் தங்குவதற்காக ஒரு புதிய வீடும் தரப்பட்டிருந்தது. சென்னை இந்து சமய அற நிலைக்கழக உறுப்பினர் திரு. சி.எம். இராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள், சிவக் கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஆகியோர் தங்குதற்கு ஆதீன தேவாரப் பாட சாலையைக் கொடுக்கப்பட்டிருந்தது. இவையன்றிச் சொற் பொழிவாளர்களும் ஏனைய அன்பர் களும் தங்குவதற்கென சாந்த நிலையக் கட்டிடங்களும், மெய்கண்டான் நிலையம் எனப் யெர் பெற்ற கட்டிடங் களும் அமைக்கப் பெற்றிருந்தன. இவற்றோடு நகரத்தின் பல இடங்களிலும் ஆங்காங்கு விடுதிகள் அமைந்திருந்தன. அழகிய மாளிகைகள் மூன்றும் திட்டப்படுத்தப் பட்டிருந்தன.

உணவு விடுதி : மடத்துக்கு முன்புறமுள்ள திருக்குளத்தின் கீழ்புறம் சுமார் 500 பேர்களுக்கு மேல் ஒரே காலத்தில் உணவு கொள்ளத்தக்கதாக ஒரு பெரிய போனக சாலை அமைக்கப்பட்டிருந்தது. அதன் தரை செங்கற்கள் பரப்பிச் சிமிட்டி பூசப்பட்டிருந்தது. மாநாட்டுக்கென வந்திருந்தோர் அனைவருக்கும் ஒரு படித்தாக உண்டி முதலியவை வழங்கப்பட்டன. அவரவர் விடுதிகளிலும் உணவு, சிற்றுண்டிகள் முதலியன வழங்கப்பட்டன, காலை சிற்றுண்டி, குடிநீர் வகைகள் நண்பகல் அறுசுவை உண்டி (பாயச பலகாரங்கள்) இடைவேளை சிற்றுண்டியும், குடிநீரும், இரவு நல்லுணவும் வழங்கப்பட்டன.

நீராடுமிடங்கள் : காவிரியின் தென்கரையில் துறைகளில் அதிகமாகக்

கற்களிட்டு வைக்கப்பட்டிருந்தன. கரைகளிலே பற்குச்சி, பற்பொடி வகைகள் வழங்கப்பெற்றன. எண்ணெய் முழுக்குச் செய்வோருக்கு எண்ணெய் வகைகள், சீயக்காய் பொடி முதலியனவும் வழங்கப்பெற்றன. மயிர் வினைஞர்களும், வண்ணார்களும் அமர்த்தப் பட்டிருந்தனர். மயிர் வினைக்காக ஒரு தனியிடமும் அமைக்கப்பட்டிருந்தது.

பூசைக்கு வசதி : சிவபூசை முதலிய வழிபாடு இயற்றும் பேரன்பர்களுக்கு வேண்டிய பூசைப் பலகைகளும் திருப்பள்ளித்தாமங்களும், நறுஞ் சந்தனக் குழம்பும், நைவேத்திய வகைகளும், தூப தீபங்களும் பிறவும் அவரவர் இருக்கைகளிலே உரிய காலத்தில் கொண்டு தரத்தக்க திருப்பணியாளர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

உடல்நல வசதிகள் : குளக்கரையில் மணல் மேடைகளும் அம்மேடைகளில் இடப்பட்ட விசிப்பலகைகளும் பிறவசதிகளும் அமைக்கப்பட்டன. மலசலம் கழிப்பதற்கும் தனித்தனியாக ஆங்காங்கு மறைவுகள் செய்வித்து ஒவ்வோர் இடத்திலும் இருபணியாளர் (ஒருவன் தண்ணீர் தேக்கவும், மற்றொருவன் ஒவ்வொருவரும் வந்து சென்ற பின்னர் தூய்மை செய்து மணல் பரப்பி மருந்து தூவுதற்கும்) நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

ஊரினுள் வீதிகளையும், நடப்புகளையும் சமஞ்செய்து செப்பனிட்டு மணல் பரப்பப்பட்டது. வீதிகளை நாடோறும் இருமுறை துப்புரவு செய்து தண்ணீர் தெளிக்கவும், பிற வசதிகளை மேற்கொள்வதற்கும், தக்க சிப்பந்திகள் நியமிக்கப்பட்டனர். பொதுவாக எல்லா இடங்களிலும் மாசு மறுவின்றி அடுத்தடுத்துத் துய்மை செய்வதில் மிக விழிப்பாக இருக்கும்படி திட்டப் படுத்தப் பட்டது.

மகாநாட்டிற்கு வருவதற்கு வாயிலாக உள்ள மாயூரம் ஜங்ஷன் மாயூரம் டவுன் ஆகிய இரண்டு புகைவண்டி நிலையங்களிலும் வேண்டிய அளவுக்கு வண்டி வசதிகள் அமைக்கப் பட்டிருந்தன. திரும்பச் செல்வோர்க்கும் அவ்வசதிகள் அளிக்கப்பெற்றன. வேண்டும் போது உந்து வண்டிகளும் பயன் படுத்தப்பட்டன.

இம்மாநாடு சிறப்புற நடைபெற 24 குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. மாநாட்டின் நிகழ்ச்சியின போது வழிபாட்டின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை திருநெறித்தமிழ் மறையிசையை ஆதீன ஓதுவாமூர்த்திகள் திருவாளர்கள் திருநாவுக்கரசு ஓதுவார், சம்பந்த ஓதுவார், திருவிடைமருதூர் தேவார பாடசாலை ஆசிரியர் நடராஜ ஓதுவார், பழநி செட்டியார் தேவார பாடசாலை ஆசிரியர் சுப்பிரமணிய ஓதுவார், சிதம்பரம் முதலியார் தேவார பாடசாலை ஆசிரியர் இராமலிங்க ஓதுவார், ஆதீன தேவார பாடசாலை ஆசிரியர் வேலாயுத ஓதுவார், தேவார பாடசாலை மாணவர்கள் ஓதினார்கள்.

மாநாட்டிற்கு வருகைபுரிந்த சிறப்பு விருந்தினர்களின் கருத்துகள் வருமாறு:

உ.வே. சாமிநாதையர்

எனக்குத் தெரிந்த வரையில் இத்தகைய மகாநாடு இதுவரை கூட்டப் பெற்றதில்லை.

டி.கே. சிதரம்பரநாத முதலியார்

''ஆதீனத்தில் நடந்த சைவ மகாநாடு பற்றித் தமிழ்நாடு முழுதும் ஒரே உற்சாகமாய்ப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தருமபுரம், மடம், கோயில்கள், ஆறு எல்லாம் சேர்ந்து அழகான புனிதமான காட்சி தருகிறது. எங்கும் கிடையாத காட்சிதான்.

வசதிகளும் மற்ற ஏற்பாடுகளும் ரொம்ப அருமையாய் இருந்தன. வந்தவர்கள் எல்லாரும் ஒரே படியாய் அதிசயித்து அதிசயித்துப் புகழ்ந்தார்கள். திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளை வருகிற வழியில் பார்த்தேன். நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் சொன்னேன். ரொம்பவும் மகிழ்ச்சி கொண்டார்கள். தனக்கு உடம்பு அசௌகரியமாய் இருந்ததால்தான் வரஇயலாமல் போயிற்று என்றும் சொன்னார்கள். சைவப் பொலிவு கொண்ட சபையைப் பார்த்து எவ்வளவோ அநுபவித்திருப்பார்கள்.

செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியாரவர்களையும் முந்தாநாள் சந்திக்க நேர்ந்தது, அவர்களிடமும் என்றும் இல்லாத சைவ மாநாடு நடந்ததென்று விவரித்துச் சொன்னேன், அவர்களும் ரொம்ப சந்தோஷப்பட்டார்கள்.

நிச்சயமாகச் சொல்லலாம் தமிழுக்கும் சைவத்துக்கும் புத்துயிர் உண்டாய் விட்டது என்று. மகா சன்னிதானம் எவ்வளவோ சிரமம் எடுத்து மாநாடு நடக்கும் போதெல்லாம் அலங்கரித்த (சிரமம் எடுத்து மகாநாடு நடக்கும் போதெல்லாம் அலங்கரித்த) சிறப்பை எளிதில் பாராட்டி விடமுடியாது.

திருமந்திர மாநாடுகள், திருவாவடுதுறை

1954 - 1964

ஸ்ரீ திருவாவடுதுறை ஆதினத்தால் நடத்தப்பட்ட திருமந்திர மாநாடுகள் மிகச் சிறப்பானவை ஆகும். தமிழகத்தில் மிகச்சிறந்த அறிஞர்கள் பங்கு பெற்று உரையாற்றினார்கள் அவர்களுடைய பேச்சுக்கள் அனைத்தும் நூல் வடிவில் வெளியிட்டிருப்பது அரும் செயலாகும்.

முதல் மாநாடு

31.1.54; தலைவர் - திரு. ஆறுமுக நாவலர்; 1.2.54 தலைவர் - சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார்; 2.2.54 தலைவர் - ஆறுமுக நாவலர், 2வது, 3வது மாநாட்டு மலர்கள் கிடைக்கவில்லை.

நான்காவது மாநாடு

28.1.57; தலைவர் - டாக்டர் நா.நடராஜன்; 29. 157; தலைவர் - கருமுத்து தியாகராசனார்; 30.1.57 தலைவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

ஐந்தாவது மாநாடு

18.158 தலைவர் டாக்டர் ந. நடராஜன், 19.1.58; தலைவர் வி.பி.வி. ராஜன்; 20.1.58 தலைவர் - சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார்.

ஆறாவது மாநாடு

18.1.59; தலைமை - தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். 19.1.59; தலைமை - வி. சந்தானம்; 20.1.59; தலைமை - சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார்.

ஏழாவது மாநாடு

25.1.60 திறப்புரை - மீ. ப. சோமு; தலைமை - ந. நடராஜன்; 26.1.60; தலைமை . தெ.பொ.மீ; 27.1.60; தலைமை ம. பொ. சிவஞானம்.

எட்டாவது மாநாடு

14.1.61 தலைமை டி.எம்.பி,. மகாதேவன், 15.1.61. தலைமை - சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார்; 16.1.61; தலைமை - தெ.பொ.மீ.

ஒன்பதாவது மாநாடு

முதல்நாள் : தலைமை - வி.வி.என். ராமையா, இரண்டாம் நாள். தலைமை - தெ.பொ.மீ. மூன்றாம் நாள்; தலைமை டி.எம்.பி. மகாதேவன்.

பத்தாவது மகாநாடு

மலர் கிடைக்கவில்லை.

பதினோராவது மாநாடு

13.1.64 தலைமை - டி.எம்.பி. மகாதேவன், *14.164;* தலைமை - ஆறுமுக நாவலர்; *15.1.64;* தலைவர் : தெ.பொ.மீ.

திருமந்திர மாநாடு

ஒவ்வொரு நாளும் மூன்று அல்லது நான்கு சொற்பொழிவுகள் நடைபெறும் திருவிடைமருதூர் திருமுறைக் கருத்தரங்குகள் திருவாளர்கள் க. வச்சிரவேல் முதலியார் *(3)*, சி.சுப்பிரமணிய பிள்ளை, *(7)* இ.எஸ். வரதராசஜயர் *(2)* ச. தண்ட பாணி தேசிகர் *(8)*, முத்து, சு. மாணிக்கவாசகமுதலியார் *(3)* சீ. அருணை வடிவேல் முதலியார் *(1)*, ஆ. இளவழகனார் *(1)*, கி.வா. ஜகந்நாதன் *(7)* சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் *(8)* தே.ஆ. ஸ்ரீநிவாசாசாரி *(7)*, தா.ப. வேங்கட சுப்பிரமணியன் *(1)* இ, மா. இராசமாணிக்கனார் *(1)*, லெப. கரு. இராமநாதன் செட்டியார் *(4)* ஜி.வரதராஜன், பாலகவி ராமநாதன் செட்டியார் *(1)*, த.ச. மீனாட்சி சுந்தரம் *(3)*, பாலூர் கண்ணப்பமுதலியார் *(2)*, வீரு சிவசுப்பிரமணியம், *(2)*, ஆறுமுக நாவலர் *(3)*, ஆர். விசுவநாத ஐயர் *(2)*, டி.எஸ். தியாகராஜ தேசிகர் *(4)*, சி. துரைசாமி ஐயர், கா.பொ. இரத்தினம் *(1)*, ந.ரா. முருகவேள் *(1)*, ச. சிவகுமார் *(4)* ஔவை சு. துரைசாமிபிள்ளை *(1)*, அ.ச. ஞானசம்பந்தம் *(3)*, மீ. ப. சோமசுந்தரம் *(2)*, ஆகியோர் உரையாற்றியிருக்கின்றனர்.

முதல் திருமுறைக் கருத்தரங்கு

12, 13, 14 பிப்ரவரி 1971

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்



திருமுறைக் கருத்தரங்கு

திருமுறைக் கருத்தரங்கம
சிவசிவ

அருளாணைப்படி 12, 13, 14 பிப்ரவரி 1971 தேதிகளில் திருவிடைமருதூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறநிலையத்துறை ஆணையர் திரு. கே.எஸ். நரசிம்மன் அவர்கள் தலைமையில் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் முதல் திருமுறை மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள்.

12.2.1971

ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனம்.

திருமுறைக் கருத்தரங்கத் துவக்க உரை

திரு. கே.எஸ். நரசிம்மன், ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை

சிறப்புரை : டாக்டர் திரு. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

1. திருஞானசம்பந்தர் இலக்கிய நோக்கு - டாக்டர் திரு சொ. சிங்காரவேலன், 2) திருஞானசம்பந்தர் இலக்கிய நோக்கு - திரு. பாலூர் கண்ணப்ப முதலியார்.

3) சம்பந்தர் தமிழில் சாத்திர நோக்கு.

பார்வையாளர் உரை : தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள, தொண்டை மண்டல ஆதினம்.

1) இடையறாப் பேரன்புப்பாடல் - திரு. கு. நடேசக் கவுண்டர்,

2) திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய நோக்கு - திருமதி சாரதா நம்பியாரூரன் 3) அப்பர் தேவாரத்துள் சித்தாந்தம் - திரு. ரா. சண்முக சுந்தரம் செட்டியார்.

பார்வையாளர் உரை : டாக்டர் திரு. ந. சஞ்சீவி.

1) சுந்தரர் இலக்கிய நோக்கும் சாத்திர நோக்கும் - திரு. கு. நம்பியாரூரன் 2) சுந்தரர் தேவாரத்தில் இலக்கிய நோக்கு - திரு. வி. சா. குருசாமி தேசிகர் 3) ஏழாம்

திருமுறைக் கருத்தரங்கம்

திருமுறையில் சாத்திர நோக்கு - திரு. கு. சுந்தரமூர்த்தி.

13.2.1971

பார்வையாளர் உரை : திரு. சா. கணேசன். அழகரடிகள் உரை.

1. மணிவாசகமும் மூவர் தமிழும் - திரு. க. வெள்ளைவாரணனார்.

2. திருவாசகமும் தத்துவமும் - திரு. இரத்தின நவரத்தினம்.

3. மாணிக்கவாசகர் - ஒரு சிந்தனை - திரு அருள் தியாகராசர்.

4. திருக்கோவைப் புரட்சி - டாக்டர் திரு. வ. சுப. மாணிக்கம்.

5. திருக்கோவையார் - ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

6. திருக்கோவையார், மெய்ப்பொருள் நோக்கு - திரு. வ. ஆ. தேவசேனாபதி.

7. திருக்கோவையாரும் திருவாசகமும் - திரு. சு. சாமி ஐயா.

பார்வையாளர் உரை : திரு. மு. அருணாசலம்.

1. திருவிசைப்பா - 'சாத்திர நோக்கு' திரு. ந. ரா. முருகவேள்.

14.2.1971

பார்வையாளர் உரை : திரு. டி.எம். நாராயணசாமிபிள்ளை.

பார்வையாளர் உரை : திரு. ஜி. வரத்ராசபிள்ளை.

1. திருமந்திரம் பொருள் நிலை - திரு. அ.ச. ஞானசம்பந்தம்.

2. உலகியலும் மெய்ந்நெறியும் - திரு. சி. அருணை வடிவேல் முதலியார்.

3. திருமந்திரமும் திருத்தொண்டர் புராணமும் திரு. ப. இராமநாதபிள்ளை.

பதினோராந் திருமுறை

பார்வையாளர் உரை : தவத்திரு சபாபதி சுவாமிகள்.

1. இலக்கிய நோக்கும் சாத்திர நோக்கும் - திரு. கி. வா. ஜகந்நாதன்
2) பதினோராந் திருமுறையும் பெரிய புராணமும் - திரு. எச். வேங்கடராமன்.

பன்னிரண்டாம் திருமுறை

பார்வையாளர் உரை : தவத்திரு சுந்தர சுவாமிகள்.

1. பெரியபுராணம் வாழ்வியல் நோக்கு - திரு. த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

2. பெரியபுராணம் இலக்கிய நோக்கு - திரு. ஜி. கல்யாணம்.

3. பெரிய புராணம் வரலாற்று நோக்கு - திரு.கே.எம். வேங்கட ராமையா.

மூன்றாம் திருமுறை மாநாடு
28, 29, 30 அக்டோபர் 1973

ஆய்வுப் பொருள் : அப்பர் தேவாரம்.

பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் 1971 கருத்தரங்க மலரை வெளியிட்டு உரையாற்றினார். அவர் உரையிலிருந்து ஒரு பகுதி காலத்திற்கேற்ப கல்வி, மருத்துவம், கைத்தொழில் முதலிய பணிகளை ஊக்குவிப்பதிலும் குருமகா சந்நிதானத்திற்கு இப்பொழுது கடமைகள் இருக்கின்றன. நம்முடைய திருவாவடுதுறை மடத்தின் சார்பில் ஒரு பிரச்சார மண்டபம் குடந்தையில் அமைய வேண்டும்.

இந்நாளில் சாதாரண மக்கள், ஏன் உயர்ந்த மக்களில் பலரும் கூட நம் சமய நெறியை அறியாது வாழ்வதிலும் வேறு சமயத்தைப் பின்பற்றியும் விடுகிறார்கள். நம்முடைய ''மருளை'' நீக்குவதற்குத் திருமடங்களைச் சேர்ந்த மகாசந்நிதானங்கள் திலகவதியார்களாக அமைய வேண்டும்.

சிவஞான முனிவர், தாயுமானவர், குமர குருபரர், அருணகிரிநாதர், பட்டினத்தார், வள்ளற் பெருமான், பாம்பன் சுவாமிகள் முதலிய அருள் ஞானிகளின் அமுதப்பாடல்களையும் பன்னிரு திருமுறைகளைத் தொடர்ந்து திருமுறைகளாகத் தொகுப்பது பற்றி சிந்திக்க வேண்டும். வள்ளற் பெருமான் நால்வருக்கு வேறானவர்; சிவநெறிக்குப் புறம்பானவர் என்று எண்ணமும் அகன்று விட வேண்டும்.

காஷ்மீர சைவம், காபாலிக சைவம், வீரசைவம் முதலியவற்றை ஒருங்கே வைத்து ஆராய வேண்டும். ஆகமங்கள் மறைந்து போன நிலையில் உள்ளன. நாம் அவைகளைத் தேடி அவைகளுக்குப் பதவுரைகளும் விளக்கவுரைகளுமாக எழுதி மூல நூலோடு பதிப்பிக்க வேண்டும்.

சிவஞான போதத்திற்கு எளிய விரிவான உரைநடையில் விளக்க நூல் ஒன்றும் வெளிவர வேண்டும்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லா வகையினருக்கும் ஏற்ற வகையில் படம் நிறைந்த புத்தகங்கள், விளக்க முறை நூல்கள், பிற கருத்துக்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்த ஆய்வு நூல்கள் முதலியன வெளிவர வேண்டும். சைவ சமயம் பற்றிய நம் நாட்டு நூல்களின் கருத்துக்களையும், பிற சமயங்கள் பற்றிய நூல்களின் கருத்துக்களையும் ஒற்றுமை வேற்றுமை உணர்த்தி எழுதப்படவேண்டும்.

பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற பெரு நகரங்களில் சைவ சமயம் பற்றிய தொல்பொருள்

காட்சியரங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். நம்முடைய கலைச் சிற்பங் களையும், சமயச் சிலைகளையும் ஒரு காட்சி நிலையமாகப் பல நகரங்களில் அமைத்தாக வேண்டும்.

இந்திய மொழிகளுக்குப் பொது வாக நாகரி லிபியில் திருமுறைப் பாடல்களை ஒரு பக்கத்தில் எழுதி மறுபக்கத்தில் விளக்க உரையாகப் பதிப்பிக்க வேண்டும்''

இக்கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த திரு. கார்த்திகேயன், திருமதி தங்கம்மாள் அப்பாக்குட்டி, திரு. கி. வா. ஜகந்நாதன், நீதியரசர் மாண்பமை எஸ். மகராஜன், டாக்டர் திரு. ந. சஞ்சீவி, டாக்டர் திரு. சி. பால சுப்பிரமணியம் மற்றும் பல அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

ஐந்தாம் திருமுறை மாநாடு
மையப் பொருள் - திருவாசகம்
18, 19, 20 ஜனவரி 1979

ஐந்தாம் திருமுறை மாநாடான திருவாசக மாநாட்டில் பாரதப் பிரதம மந்திரி மாண்புமிகு மொரார்ஜி தேசாய், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன், மாண்புமிகு பா. இராமச்சந்திரன், தமிழக ஆளுநர் மாண்புமிகு பிரபுதாஸ் பட்வாரி, மாண்புமிகு இராம. வீரப்பன், மாண்புமிகு க. இராசாராம், மாண்பமை எஸ். மகராஜன், திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. கோ. வன்மீகநாதன் மற்றும் பல அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

திருமதி சௌந்தரா கைலாசம் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

''ஆறிடு திருமுறை அருமையை அழகைக்
கூறுமாநாடு கூட்டி வந்தார்கள்.
நடந்தன இதுவரை நான்கு மாநாடுகள்
ஏழு திருமுறை ஏற்றம் பெற்றன.
இன்று வருவதோ எட்டாம் திருமுறை
ஐந்து எழுத்துடன் ஆரம்பம் ஆகிச்



சிந்தையை அள்ளும் திருவாசகத்தின்
புகழினைப் பேசும் புனித மாநாடு
ஐந்தாவதுவாய் அமைவது சிறப்பு
திங்களாம் தையில் தேதியோ ஐந்து,
அஞ்செென வந்த பஞ்சமி திதி – ஆம்
அஞ்சிலே வாய்த்த அதிசயம் யாதோ?
அஞ்சினைக் கட்டி ஆண்டிட நெஞ்சை
அஞ்சல் என்று அழைக்கும்
அற்புதநூலைப்
பேசிட விளைந்த பெற்றியால்
தானோ?''

முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் பேசும்பொழுது, ''இத்தமிழ்நாட்டில் சேக்கிழார், மாணிக்க வாசகர் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்துள்ளனர். முதலமைச்சராக இருந்தாலும் அரசாங்கப் பொருளை எடுத்துத் தன் சொந்த விருப்பத்திற் கேற்ப செலவு செய்தால் (அச்செயல்கள் நற்செயல்களாக இருப்பினும்) அதற் குரிய தண்டனைகளைப் பெறுவார்கள் என்பதனை மாணிக்க வாசகர் வரலாறு எடுத்துக்காட்டுகிறது'' என்றுரைத்தார்.

அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம், தருமபுரம்

1984 மே மாதம் *11, 12, 13* தேதிகளில் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் தருமையாதினத்தில் திருச்சிராப்பள்ளி பாரதி தாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கினை நடத்தியது. 1941ல் அனைவராலும் போற்றப்பட்ட மெய் கண்டான் சித்தாந்த மாநாட்டை நடத்திய தருமை ஆதீனமே இக்கருத்தரங்கையும் நடத்தியது மிகவும் பொருத்தமுடையது ஆகும். 1941ல் எந்தவித வசதியும் இல்லாத சமயத்தில் பல்துலக்கும் குச்சியிலிருந்து அறுசுவை உண்டி படைப்பது வரை - நான்கு மாதத்திற்கு முன்பிருந்தே சொற்பொழி வாளர்களுக்கு எழுதிக் கட்டுரைகள் பெறுவதிலிருந்து சொற்பொழிவாளர்கள் வந்தபிறகு அவர்களுக்கு அனைத்து

வசதிகளும் செய்து கொடுப்பது வரை - அனைத்துமே துல்லியமாகத் திட்டமிட்டு மெய்கண்டான் மாநாடு நடத்தப்பட்டது. 1984 கருத்தரங்கும் அதே போல முன் கூட்டிய திட்டமிடப்பட்டு அனைத்து வசதிகளுடனும் அறுசுவை உண்டி யோடும் நடத்தப்பட்டது. 1941ல் மண்ணின் மணம் கமழ்ந்தது. 1984 கருத்தரங்கில் அனைத்துலக வாசம் வீசியது. காலத்துக்கேற்ப சைவம் புதுப் புது அணிகளைப் பூட்டிக் கொள்ள வேண்டாமா?- 1984 கருத்தரங்கிற்குப் பின் தொடர்ந்து மலேசியா உட்பட 4, 5 கருத்தரங்குகள் உலகத் தரத்தில் நடைபெற்றன. வெளிநாட்டு அறிஞர்கள் சைவ சித்தாந்தம் பற்றிப் பேசினார்கள். சைவ சித்தாந்தம் தொடர்பாக ஆங்கில நூல்கள் பல வெளிவரலாயின. மேன்மை கொள் சைவ நீதி உலகெலாம் பரவ ஆரம்பித்தது.

11.5.1984 வெள்ளிக்கிழமை

முற்பகல் ஆசியுரை : தருமையாதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

தலைமைப் பேருரை : கேரள மாநில ஆளுநர் மேதகு பா. இராமச்சந்திரன். ஜனாதிபதி மேதகு பி.டி. ஜாட்டி.

கருத்தரங்க முதல் பேருரை : டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாபதி.

சிறப்புரை : சுத்தானந்த பாரதியார் ''சைவசித்தாந்தம் ஒரு பொது நெறி''. விழாமலர் வெளியீடு - நா. மகாலிங்கம்; நுல் வெளியீடு - சை.வே. சிட்டிபாபு.

கருத்தரங்கம் முதல் அமர்வு : தலைமை உரை - சி.. அருணை வடிவேல் முதலியார்.

கருத்தரங்க உரை : இரா. தண்டாயுதம், மலேசியா ''சைவ சித்தாந்தத்தில் உயிர் உண்மை''; சொ. சிங்காரவேலன்'' திருநாவுக்கரசர் தேவாரத்துள் தளை இயல்பு'', சி. என். சிங்காரவேலு ''சைவ சித்தாந்தத்தில் விஞ்ஞான நோக்கு.

அனைத்துலக சைவசித்தாந்த கருத்தரங்கம்

அமர்வு 2 : தலைமை - டாக்டர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்.

கருத்தரங்க உரை : திருமதி கே.ஐ. கொப்பேட்ரேயர், கனடா, "Corcept of Karma in Saiva Siddhantha and Christianity" திருமதி இரத்தினா, மா. நவரத்தினம், இலங்கை "The relevance of Saiva Siddhantha in the western world ஞானசூரியன், "Saiva Siddhantha in the western world".

11.5.1984 மாலை முன்னிலை : காசிவாசி ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்; திறப்பாளர் - மாண்புமிகு இராம. வீரப்பன்; கலைக் கண்காட்சித் திறப்பாளர் - திரு. கு. ஆளுடைய பிள்ளை அஞ்சலிச் சிறப்புரை - திருமதி சௌந்தரா கைலாசம்; திரு. ஔவை நடராஜன்; பி.டி.ஆர். கமலத் தியாகராஜன், நூல் வெளியீடு, - கி.ஆ. பெ. விசுவநாதம் இன்னிசை - சீகாழி எஸ். கோவிந்தராஜன்.

இரண்டாம் நாள் விழா - 12.5.84 சனிக்கிழமை

காலை : திருமுறை இசை - சேலம் எஸ். ஜெயலட்சுமி. ஆசியுரை - தவத்திரு குன்றக்குடி அடிகளார்; தலைமையுரை - பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்; நூல் வெளியீடு மாண்புமிகு செ. அரங்கநாயகம்.

கருத்தரங்கம் முற்பகல் அமர்வு - 3

தலைமையுரை : மு. அருணாசலம்; திருமதி இரத்தனா மா. நவரத்தினம், ஸ்ரீலங்கா "Sivayoga Swami of Jaffna and Saiva Siddantha: - தவத்திரு வீரபாகு, U.S.A." சைவசித்தாந்தத்தில் ஒருமை வாதமும் பன்மை வாதமும்''; டாக்டர் பி.பாண்டியன் - ''திருமூலர் கருதும் சைவசித்தாந்த முடிவுகள்''; டி.என். அருணாசலம்.

அமர்வு - 4

தலைமையுரை : திரு. டி.பி. சித்த லிங்கையா; திரு. எஸ்.ஓ. இராம கிருஷ்ணன்'' The relevance of Saiva Siddhantha to the modern world" ந.ரா. முருகவேள் "The Characteristics of Siava Siddhanta" லியோன் ஹன் செட்டே, "Is Siddhantha Acceptance of Three eternal entities intelligible" எஸ்.என். கந்தசாமி - திரு. ஏ.எஸ்.பிள்ளை. A comparative study of sankya system and Saiva Siddhantha; திரு. எஸ்.என். கந்தசாமி திரு. ஏ.எஸ். பிள்ளை - Conception of Grace an evaluation.

அமர்வு - 5

பிற்பகல் : தலைமையுரை : கி. இலட்சுமணன், ஸ்ரீலங்கா; திருமதி கோமதி சூரிய மூர்த்தி - ''திருஞான சம்பந்தர் தேவாரம் - பதியியல் கோட்பாடுகள்''; திரு. க. சுப்பிர மணியன் - ''சைவமும் சீக்கியமும் - ஒப்பாய்வு''; என். ஜெயராமன் - ''சைவசித்தாந்த வளர்ச்சியில் திருமந்திரம்''.

அமர்வு - 6

பிற்பகல் : தலைமையுரை : ஓ.வி. அளகேசன்; தெ. ஞானசுந்தரம் - "Saiva Siddhantha and Visistaduvaitha - a comparative analysis" கு சீனிவாசன் - "Saiva Siddhantam and Samrasa Sanmargam"; வை. இரத்தினசபாபதி - "Meikandar and his methodology";

பொதுப்பேரவை: மாலை:

தலைவர் : என். சேதுராமன்; ஏ.வி. ஜெயச்சந்திரன் - ''சைவசித்தாந்தமும் கோயிற் கலைகளும்''; நூல் வெளியீடு - (1) டி.வி. வேங்கடராமன்; 2) ஆர். சண்முகசிகாமணி; நிருத்தாஞ்சலி; சித்ரா விஸ்வேஸ்வரன் - ''திருநீலகண்டர்''.

மூன்றாம் நாள் : 13.5.84 - ஞாயிறு

காலை : திருமுறைப் பண்ணிசை : திருமதி ஸ்வர்ணா சோமசுந்தரம் குழுவினர்.

ஆசியுரை : தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்; சிறப்புரை - மாண்புமிகு ஆர். சௌந்தரராசன்.

அமர்வு 7 : தலைமையுரை : டி.என். இராமச்சந்திரன்; திருகு. அருணாசலக் கவுண்டர் - ''காபாலிக சைவம்''; ஆர். இராமசேஷன் - ''சைவ சித்தாந்தத்தில் வாழ்வியல் நோக்கம்''; சு. வேங்கட ராமன் - நம்பி திருவிளையாடலில் இறை இயல்புகள்''

அமர்வு 8 : தலைமையுரை : திரு. பெ. திருஞானசம்பந்தம்; ஜி.எம். முத்துசாமிப்பிள்ளை - "Saiva Siddhantha and modern world"; ஹெர்மன், போலந்து Tripadathas in Saiva Siddhantha - a study";- ஆர் கோலப்பிள்ளை - "Relevance of Saiva Siddhantha to the modern world including the west"

அமர்வு 9 (பிற்பகல்) : தலைமையுரை - திரு. ச. தண்டபாணிதேசிகர்; ச. கணபதிராமன் - ''சிறுதெய்வ வழி பாட்டில் சைவ சித்தாந்த படிமங்கள் ம.சா. அறிவுடை நம்பி - ''சைவமும் சமணமும் - ஒப்பாய்வு''; சிவ. பார்வதி - ''நாட்டுப்புறப்பாடல்களில் சைவம்''; அந்தோணி குருசு'' கடவுட் கொள்கையில் சைவமும் பௌத்தமும் சமணமும்''

அமர்வு 10 : தலைமையுரை : என்.ஆர்.பட்; சி.இ. சூரியமூர்த்தி - Saiva Siddhantha and modern physics", எஸ் கங்காதரன் - "Sivagnana Bodha" சபாரத்தினம் - "The concept of A nava Mala as set forth in the Sivagama";

பொதுப்பார்வை : மாலை : நிறைவுரை - மாண்புமிகு க. இராசாராம். மலர் வெளியீடு - திரு. கி. பழனியப்பனார்; மீ.ப. சோமசுந்தரம்; கருத்தரங்கக் கண்ணோட்டம் - மாண்புமிகு ஆர். செங்கோட்டுவேலன்.

கருத்தரங்கத் தனி அமர்வுகள்

11.5.84 பிற்பகல் : அமர்வு 1 : தலைமையுரை : வை. இரத்தின சபாபதி; அரங்க சுவாமி - "Aananda Thandava of Nataraja"; சி. பன்னீர் செல்வம் - "Saiva Siddhantham, a practical philosophy; செல்வி தேவதத்தா - The concept of Dualities in Saiva Siddhantha" இராஜசிங்கன் - ஆர் அரங்கநாதன் - Life in Saiva Siddhantha and Advaitha Vedantha" எஸ். இராமலிங்கம் "The doctrine of Karma in Saiva Siddhantha and Bhagavath Geetha".

12.5.84 பிற்பகல்

தலைமையுரை : ந.ரா. முருகவேள்; கே.ஏ. சபாரத்ன சிவாசாரியர் - ''இந்து மதமும் சைவ சித்தாந்தமும்''; மு. சதாசிவம் - ''சைவ நெறியும் சன்மார்க்கமும்''; பெ. சத்திய வேல்முருகன் - ''சைவ சித்தாந்தமும் இந்திய தத்துவ சிந்தனையும்''; பழ முத்தப்பன் - ''சிவஞான சித்தியாரும் பௌத்தமும்'; வே. மகாதேவன் - ''சாசனங்களில் சைவ சித்தாந்தம்''; கே.எஸ். முருகன் - புத்தமும் சைவமும்'', என்.எஸ். தாதாச்சாரியார் - ''சைவமும் வைணவமும்''; பா. வரதராஜன் - ''இந்திய நாட்டுத் தத்துவங்களில் சைவ சித்தாந்தமும் ஏனைய தத்துவங்களும்; சி.சு. மணி - ''ஏன் சைவ சித்தாந்தம் பயில வேண்டும்?''

13.5.84 பிற்பகல்

அரங்கப் பொருள் : ''உலக அளவில் சைவசித்தாந்த வளர்ச்சிக்குரிய வழிமுறைகள்'' ; தலைமை கே. லஷ்மணன், இலங்கை பங்கேற்போர் - வ.ஆ. தேவசேனாபதி; ஆர். பாலசுப்பிரமணியம், அருணை வடிவேல் முதலியார், ச. தண்டபாணி தேசிகர், மு. அருணாசலம், வி.கே. பாலசுந்தரம், கோலாலம்பூர்; கே. ஞானசூரியன், இலண்டன்; எஸ்.என். கந்தசாமி, மலேசியா; செல்வி ரமாகோஸ், வாரணாசி.

உலகச் சைவப் பேரவை நடத்திய ஆறாம் உலகச் சைவ மாநாடு 19, 20, 21 டிசம்பர் 1997

மையப்பொருண்மை : உலகச் சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டுக்குமான சைவம் :

அமர்வு ஒன்று : சைவ சித்தாந்தம்

1-1 : சைவ சித்தாந்தமும் திருவள்ளுவரும் - க.சி. அகமுடை நம்பி நாகப்பட்டினம் *1-2* : சிவப்பிரகாசம் உணர்த்தும் சித்தாந்தம் - முனைவர் தி. அரங்கநாதன் கும்பகோணம், *1-3* : சைவ, ஸ்ரீவைணவ சமயங்களில் இறைவன், உயிர், உலகம் என்னும் முப்பொருள் இணைப்பு - ஓர் ஒப்பு நோக்கு - ஜெ. அரங்கசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம் எஸ். அருண சுந்தரம் சமஸ்கிருதக் கல்லூரி, சென்னை.

1.5. சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மைகள் - வ. சா அபிராமவள்ளி - எத்திராஜ் கல்லூரி - சென்னை.

1.6. சைவ சித்தாந்தத்தில் குரு - கி. ஆதி நாராயணன் - அரசினர் - கலைக்கல்லூரி, செய்யாறு.

1.7 சத்தினி பாதம் - முனைவர் வீ. உண்ணாமலை - அண்ணாமலை - பல்கலைக்கழகம்.

1.8 - சைவ சித்தாந்தமும் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கமும் ஊரன் அடிகள், வடலூர்.

1.9. அறிவியல் உலகில் சைவ சித்தாந்தம் - க.கணேசலிங்கம் பொறியாளர் (ஓய்வு) சென்னை.

1.10 - சைவ சித்தாந்தத்தில் பதி - பசு - தொடர்பு - பி. கரிகாலன் தமிழ் பல்கலைக்கழகம்.

1.11 - சைவ சித்தாந்தம் சுட்டும் பதிக் கொள்கையும் தாயுமானவர் பாடல்களும் - இரா. காஞ்சனா, மதுரை, காமராஜர் பல்கலைக்கழகம்.

1.12 - சின் முத்திரையின் சிறப்பு, கா. காளிதாசன், தியாகராசா - கல்லூரி, மதுரை.

1.13 - சைவ சித்தாந்தத்தில் சன்மார்க்கம் - திரு. மு.பெ. சக்திவேல் முருகன் பொறியாளர் (ஓய்வு) சென்னை.

1.14 - அறிவாராய்ச்சியியல், அருளியல் இணைப்பு விளக்கத்தில் அறிதல் நிகழ்ச்சி முறைமை - முனைவர் சா. சரவணன் சென்னை பல்கலைக் கழகம்.

1.15 - சற்காரிய வாதமும், சைவமும் - ஆ. சிவலிங்கனார் மயிலம்.

1.16 - இசைப் பேருரையில் சைவ சித்தாந்தம் வி. சுப்பராமன் ஆய்வாளர் சென்னை.

1.17 - சைவ சித்தாந்தமும் மனித மேம்பாடும் - ஓர் ஆய்வு நோக்கு பேராசிரியர் நா. சுப்ரமணியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை.

1.18 - ஆணவ மலம் - பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் சென்னை பல்கலைக்கழகம்.

1.19- வினைக்கோட்பாடு - மு. செல்வநாதன் பி.ஜி. ஆசிரியர் சோளிங்கர்.

1.20 - சைவ சித்தாந்தம் கூறும் ஞானநெறியும் மனித மேம்பாடும் - திருமதி ஞானப் பூங்கோதை - மதுரை.

1.21 - சைவ சித்தாந்தத்தில் மனித நேயம் - ஆதி துரை ரங்கம் தாகூர் கலைக் கல்லூரி - புதுவை.

1.22 - சைவ சித்தாந்தம் கூறும் குருதத்துவம் - ச. திருஞானசம்பந்தம் அருள்மிகு கே.கே.எஸ்.கலைக்கல்லூரி திருவைகுண்டம்.

1.23 - சைவ சித்தாந்த நோக்கில் பிரார்த்தனை தமிழ் வினை மாற்றம் - புலவர் ச. நீலாயதாட்சி தமிழ்பல்கலைக் கழகம்.

1.24 - சைவ சித்தாந்தம் - திரு. ஐந்தெழுத்து - தி. பூமிநாதன் ஆசிரியர் இராஜபாளையம்.

1.25 - சைவ சித்தாந்தம் - இரா. மயில்வாகனம் - இலங்கை.

1.26 - சைவ அறங்களும் பௌத்த அறங்களும் - ச. மாதவன் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

1.27 - சிவஞான சித்தியின் தனி நிலை - டாக்டர் பழ. முத்தப்பன் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மேலைச் சிவபுரி.

1.28 - சைவ சித்தாந்தமும் சகஜ மார்க்கமும் திரு. மு. முத்துசாமி மன்னர் சரபோசி அரசு - கல்லூரி தஞ்சாவூர்.

1.29 - பரமாத்துவிதம் - ஒரு சைவ நெறி - டாக்டர் கி.முப்பால்மணி அரசு கலைக்கல்லூரி.

1.30 - சைவ சித்தாந்தம் பேராசிரியர் வை. முருகேசன் - திருவத்திபுரம்.

1.31 - தேவை ஒரு புதிய அணுகு முறை - சி. மெய்கண்டான் பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி - திருச்சி.

1.32 - கட்டு நீத்தலும் கடவுட் பற்றும் - முனைவர் மு. வள்ளியம்மை - பழனியப்பன் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

1.33 - திருக்குறளில் சைவ சித்தாந்தம் - கு. வைத்தியநாதன் - திருவிடை மருதூர்.

1.34 - சைவமும், வள்ளுவமும் காட்டும் வினைக்கோட்பாடு - முனைவர் திருமதி ஜலஜா கோபிநாத் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.

1.35 - சைவ சித்தாந்த வாழ்வியல் கோட்பாடு - முனைவர் வேலா. ஜெயராமன் - தாகூர் கலைக்கல்லூரி புதுச்சேரி.

1.36 - சுத்தாத்து வித ஆனந்த நிலை - முனைவர் எஸ்.ஆர். ஜெயவேலு, சென்னை.

1.37 - சைவாகமங்களும் - மலம் நீங்க இன்பும் சாதனங்களும், சு. விசுவநாதன் தமிழ் பல்கலைக்கழகம்.

1.38 - சிவன் எனும் செம்பொருள் - முனைவர் பே.க. வேலாயுதம் பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி திருச்சி.

1.39 - The Poetry of John Keats and Subra Maniya Bharathi - Dr.K. Chellappan, Chennai.

1.40 - Jiva and Suddham - Dr. P. Chidambaram Arignar Anna Arts. College, Nagercoil.

1.41 - Saivasiddhanta the Essence of the Vedanta - Mr. T. Ganesan French Institute, Pondicherry.

1.42 - Social Dimensions of the Law of Karma Dr. Gangadaram - Madurai Kamaraj University.

1.43 - Anma - CITSAKTI. Its meaning and Soterilogical Significance in Siddhanta - V.S. George Joseph - University of Madras.

1.44 - The Concept of Karma - Dr. P. Krishan - University of Madras.

1.45 - Saiva Siddhanta Maya its Evolutes P.G. Thamaraiselvi - District Judge, Coimbatore.

1.46 - The Nature of Soul and its Liberation in Saiva Siddhanta - Mr. V. Murugaiyan Madras Christian College.

1.47 - Concept of Grace in Saiva Siddhanta, Dr. D. Nesey University of Kerala.

1.48 - Saiva Philosophy - Saiva Siddhanta - Mrs. P. Ragoobar - Mahatma Gandhi Institute Mauritius.

1.49 - The Saiva Concept of God, Soul and Universe Dr. S. Radha Calicut University Kerala.

1.50 - The Philosophy of Sataratna Sangraha - Dr. Ramaghose - Arya Mahila Degree College, Varanasi.

1.51 - Science in Saiva Siddhantha - Dr. A.S. Subbiah Annamalai University.

1.52 - Concept of Soul in Saiva Siddhanta and Advaita Vedanta - Dr. S. Mathivanan, Madras Christian College.

அமர்வு - இரண்டு

சைவ சமயம்

2.1 - தாயுள்ளங்கொண்டது சைவ சித்தாந்தம் சா.கோ. அரங்கசாமி தஞ்சாவூர்.

2.2 - இராமலிங்கரின் இலக்கியப் படைப்புகளில் சைவ சமயச் சிந்தனைகள் - ஆய்வின் அறிமுகம் - முனைவர் (செல்வி) பா. அருள்செல்வி தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை.

2.3 - சைவ - கிறித்துவ சமயங்களில் சமுதாய நலச் சிந்தனைகள் - முனைவர் வே. சா. அருள்ராஜ். தமிழ்ப் பல்கலைக் கழகம்.

2.4 - இக்காலச் சமுதாயச் சூழலில் சைவ சமயக் கொள்கையின் தேவை. க. அன்பழகன் தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.5 - யாழ்ப்பாணத்துப் புனை கதைகளில் சைவம் ம. இரகுநாதன் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை.

2.6 - சைவ சமயப் பரப்புதலில் நாவல், சிறுகதைகளின் பங்கு -- ந. இரவி தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.7 - திருநீறு அணிதல் - லக்கானிய உளப்பகுப்பாய்வு விளக்கம் - முனைவர் தி.கு. இரவிச்சந்திரன், பாளையங்கோட்டை.

2.8 - சிலப்பதிகாரத்தில் சைவம் - க. லதா கேரளா பல்கலைக்கழகம் திருவனந்தபுரம்.

2.9 - சைவ நெறியும் சுந்தரரும் - முனைவர் து. லலிதா அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம் கோவை.

2.10 - சைவ சமய மரபில் தமிழில் வழிபாடு - முனைவர் பா கறையரசன் அ.வீ.பா.நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி.

2.11 - சைவ சமயம் - மென் சமயம் சைவ நெறி - சழக்கில்லா அருள்நெறி முனைவர் சு. உலோகாம்மாள் அரசு கல்லூரி, சித்தூர், கேரளா.

2.12 - சைவ சமயமும் தவோக் கொள்கையும் (Saivism and Taoism) முனைவர் ந. கடிகாசலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

2.13 - சமுதாய நோக்கில் சைவம். டாக்டர் (திருமதி) வெ. கனகசுந்தரம் - இராணி மேரி கல்லூரி, சென்னை.

2.14 - சிவபெருமான் அழித்தற் கடவுளா? திரு. வ. கிருஷ்ணன் அறிஞர் - அண்ணா அரசு கல்லூரி, ஆத்தூர்.

2.15 - சைவத்தின் சமரசநெறி -சு. கோவிந்தராஜ் தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.16 - சைவ சமயம் - புலவர் சு. சண்முக சுந்தரம். தியாகராஜர் கல்லூரி மதுரை.

2.17 - சைவமும் முருக நெறியும் ஒத்திசையும் நிலைகள் - S.N.P. சண்முகம் முருகன் கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை, ஈரோடு.

2.18 - இந்திய கிறித்துவ இறையியலாளர்களின் சிந்தனையில் சைவ சித்தாந்தத் தாக்கம் - த. சந்திரசேகரன் தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.19 - சைவ சமயத்திற்குத் தமிழ் நிகண்டுகளின் பங்களிப்பு - முனைவர் மா. சற்குணம், ஸ்ரீ சி.பா.சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

2.20 - வாழ்வியலுக்குச் சைவ சமயம் - முனைவர் ச. சிவகாமி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

2.21 - சைவமும் பிற சமயங்களும் - ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் வெ. சிவப்பிரகாசம் அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.

2.22 - கர்நாடகத்தில் வீரசைவம் - Dr. R. Srinivasan, Govt. RC. College of Commerce, Bangalore.

2.23 சைவ சமயம் உணர்த்தும் உலக ஒருமைப்பாட்டு உணர்வு. எம். சுசீலா தமிழ்ப் பல்கலைக்கழகம்.

2.24 - சைவ சமயம் - இரா. சுப்பிரமணியன். பிரெஞ்ச் கலைக்கழகம் புதுவை.

2.25 - பெரியபுராணம் காட்டும் சைவ அறவியல் - முனைவர். செல்வி. தி. செந்தமிழ்ச் செல்வி. தமிழ்த்துறை விரிவுரையாளர் நாகப்பட்டினம்.

2.26 - சைவமும் சமூக சேவையும் - முனைவர் அர. செயச்சந்திரன் - கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி விருத்தாசலம்.

2.27 - நாட்டுப்புற மக்களுக்கான சைவ சமய உருவாக்கமும் சமூகப் பின்னணியும் - சிலம்பு நா. செல்வராசு. புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

2.28 - சைவமும் கிறித்தவமும் - தத்துவக் கோட்பாடு ஒப்புமை முனைவர் சேம். கிறிஸ்டோபர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

2.29 - தண்டபாணி சுவாமிகளின் சமயப் பொது நோக்கு டாக்டர் நெல்லை - ந. சொக்கலிங்கம். மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

2.30 - சைவ சமயம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள். ஸ்ரீ தங்கராசு. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

2.31 - கிறித்துவ சமயத்தில் சைவ சமயத் தாக்கம். அருள்திரு. ஜெ. துரைராஜ். தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.32 - சைவ சமயம் இந்தியநாட்டின் தனி முதற்சமயம் எ.நடராசன். வழக்குரைஞர். திருவையாறு.

2.33 - திருச்சிற்றம்பலம் - ஐந்து புலன்களும் ஆரத்துய்த்தல். பேராசிரியர். முனைவர். புரிசை ச. நடராசன், தூய நெஞ்சக் கல்லூரி திருப்பத்தூர்.

2.34 - எந்நாட்டவர்க்கும் இறைவன் - டாக்டர். எஸ். பத்மநாபன், நாகர் கோயில்.

2.35 - புட்பவிதி - டாக்டர் அ. மா. பரிமணம் - தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு) தஞ்சாவூர்.

2.36 - சைவமும் கிறித்தவமும் ஒத்திசையும் நிலைகள். - ஞா பால் வசந்தகுமார், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.37 - சிவநெறியும் செய்வினைக் கோட்பாடும் - முனைவர் கு.வெ. பால சுப்பிரமணியன். தமிழ்ப்பல்கலைக் கழகம்.

2.38 - உலக அமைதிக்கும் ஒருமைப் பாட்டிற்கும் சைவம். டாக்டர் பெ. பொன்னழகு, தத்துவ மையம், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.39 - அசாம் மாநிலத்தில் சைவ மதம் - தோற்றமும் வளர்ச்சியும், க. மகாலிங்கம், கௌகாத்திப் பல்கலைக் கழகம்.

2.40 - சிவ வழிபாடு. ம. மதியழகன், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.41. அன்றும் இன்றும் - முனைவர் சி. மனோகரன் எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்.

2.42 - திருமுறை காட்டும் கோமாறும் யப்பானிக்கமியும் - மனோன்மணி சண்முகதாஸ். ககஸிதின் பல்கலைக்கழகம். ஜப்பான்.

2.43 - சைவ சமயம் - சி. மாசிலா மணி, வழக்குரைஞர், சென்னை.

2.44. இசுலாமிய இலக்கியத்தில் சைவத்தின் தாக்கம். பேராசிரியர். திருமலர். எம்.எம். மீரான்பிள்ளை, அரசு கல்லூரி திருவனந்தபுரம்.

2.45 - சைவ சமயமும் உலக மனித இன மேம்பாடும். முனைவர். இரா. முத்துகுமரசாமி, திட்ட இயக்குநர், யுனெஸ்கோ, மாத்தூர்.

2.46 - சைவ சமய உணர்வில் மானுடப் பொதுமைகள் - தே. முருகசாமி இராமசாமி தமிழ்க் கல்லூரி - காரைக்குடி.

2.47 - சைவ சித்தாந்த சமய உறவுகள் - பேராசிரியர் ஆதி. முருகவேள் - திருச்சிராப்பள்ளி.

2.48 - அப்பாலும் அடி சேர்ந்தார் - வேடசந்தூர் பாவா. பழனி.

2.49 - சைவமும் பௌத்தமும் - பா. ஜம்புலிங்கம், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

2.50 - Saivism - a living force in Mauritius - Arunachalam Puspartham Mauritius.

2.51 - The Kasmirian Saiva Siddanta and Its waning Influence on South Indian Thinkers. - Dr. Dominic Good all - French institute of Pondicherry.

2.52 - Dread, Wonderand miracle a Saivaite perspective. Dr. R. Gopalakrishnan - University of Madras.

2.53 - Bhairavam Basava and Linga cults among the kattunayakan - Dr. Jakka Parthasarathy Uthagamandalam.

2.54 - Vaikundaswami - A Social Revolutionary - T. Lakshmana Nadar - Thiruvanathapuram.

2.55 - Siva worship among the tribes - R. Murali - Tamil University.

2.56 - Role of Saivism among Nilagiri Tribal Communities - R. Periyalwar Tamil University.

2.57 - Saivism and the 21 st century - V. Rajappan Asok Kumaer - sultanate of Oman.

2.58 - Saivism for Universal Brother hood and Human Upliftment - Dr. A. Ramakrishnan. Palani.

2.59 - Saiva Religion - S. Shanmugavel Telecom. Tuticorin.

2.60 - Saivism. A socio Religious Movement Dr. I. Singaram, Madurai Kamaraj University.

2.61 - Saivism - The impregnable Force - Mr. Sridharan - Mahe, Seychelles.

2.63 - Place Accorded to Religion in the Educational Curriculam of Srilanka - R. Yogananthan, Srilanka.

அமர்வு - மூன்று

சைவ நூல்கள்

3.1 - வானர வீர மதுரைப் புராணம் - முனைவர் சி. இலட்சுமணன். தமிழ்ப்பல்கலைக்கழகம்.

3.2 - இதழ்களில் சைவச்சுவடிப் பதிப்பு நூல்கள். மோ.கோ. கோவைமணி. தமிழ்ப்பல்கலைக்கழகம்.

3.3 - மனதற்ற பரிசுத்த நிலை - இரா. சத்தியமூர்த்தி தலைமையாசிரியர் - புதுக்கோட்டை.

3.4 - ஞானவுலாவில் உயிர் மேம்பாடு - திருமதி சு. சந்திரா. மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி.

3.5 - தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் சைவ சமயத்தாக்கம். முனைவர் மு. சற்குணவதி. சென்னைப் பல்கலைக் கழகம்.

3.6 - தஞ்சை சரசுவதி மகாலில் மராத்தியர் காலச் சைவ நூல்கள் - ம. சீராளன், சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

3.7 - சித்தவேதம் என்ற மோட்ச சூத்திரம். முனைவர் ச.வே. சுப்பிரமணியன், தமிழூர்.

3.8 - சிலம்பில் சைவக் கடவுளர்கள் - முனைவர் ந. சுப்பிரமணியன் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

3.9 - திருமுருகாற்றுப்படை காட்டும் தமிழ் வாழ்வியல். - முனைவர் பெ. சுப்ரமணியன் - அ. வீரையாவாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரி - பூண்டி.

3.10 - யாழ்ப்பாணத்து கந்தபுராணம் - செல்வி . செல்வரஞ்சிதம் சிவசுப்ரணியம். - யாழ்ப்பாண பல்கலைக் கழகம், இலங்கை.

3.11 - ஞானச்சிறப்பும் ஞானாமிர்தமும் - ஐ. செல்வராஜ், ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்.

3.12 - திருமுருகாற்றுப்படை - ஓர் ஆய்வு. முனைவர் பி. ஞானம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

3.13 - பெரியபுராணம் (ஒருவகைத தொகைப்படுத்தல்) - பேராசிரியர் டாக்டர் தாயம்மாள் அறவாணன். சி. கந்தசாமி மகளிர் கல்லூரி, கடலூர்.

3.14 - திருப்புகழில் ''முப்பொருள்'' முனைவர் சு. திருநாவுக்கரசு. - ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி மயிலம்.

3.15 - மெய்கண்ட சாத்திரங்களில் மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் - திருமதி - எம். தேவகி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

3.16 - சுப்ரபேதாகமத்தில் ஞான பாதம் - ஒரு விளக்கவியல் ஆய்வு. - பா. நடராசன். வைணவக் கல்லூரி சென்னை.

3.17 - சைவ நூல்களில் மனித நேயம் - பெ. பார்வதி - அவினாசிலிங்கம் பெண்கள் பல்கலைக்கழகம், கோவை.

3.18 - தாயுமானவர் பாடலில் உவமைகள் - சொ. மணிவண்ணன், அரசர் கல்லூரி, திருவையாறு.

3.19 - திருவிடை மருதூர் மும்மணிக்கோவை - பொன் முத்தையன், அரசு ஆடவர் கல்லூரி கும்பகோணம்.

3.20 - ஆடல் வல்லானின் அமஞ்சி வேலை - ச. முருகானந்தம் இந்துக் கல்லூரி, பட்டாபிராம், சென்னை.

3.21 - திருக்குறளில் சைவ சமயத் தாக்கம் - முனைவர் - அரங்க மு. முருகையன் - தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி.

3.22 - சைவ சமய இதழ்கள் - முனைவர் கா. வாசுதேவன், அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.

3.23 - கல்லாடமும் இறைவன் திருவிளையாடல்களும் செல்வி - ம. ஷிலா, கன்னியாகுமரி.

3.24 - Liberty, Equality, Fraternityin Saiva Literature - A.S. Ilangovan, Sahithiya Academi, Bangalore.

3.25 - Poems in Praise of Cevvel in the Paripatl - Dr. A. Kandiah, University of NSW, Australia.

3.26 - Siva Gnana Deepam (Revana Siddhar, 16th Century - Dr. M. Kuppuswamy, New Delhi.

3.27 - Social and Political and Economic Ideas in the Fourteen Siddanta Sastras. Dr. D. Velappan, Nagercoil.

அமர்வு - நான்கு
சைவத் திருவிழாக்கள்

4.1 சைவத் திருவிழாக்களில் கலை, பண்பாட்டுக் கூறுகள், - முனைவர் அ. அறிவு நம்பி, புதுவைப் பல்கலைக் கழகம்.

4.2 - அம்பாவாடல் திருவிழா - முனைவர். எஸ். கண்மணி, எஸ்.எப். ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி.

4.3 - சிவாலய மஹோத்ஸவம் சிவதீக்ஷையே வி. கணேச சிவாச்சாரியார், திருவையாறு.

4.4 - சைவத் திருவிழாக்களும் சமூக ஒற்றுமையும் - முனைவர் ஆர். சந்திரசேகரன். பாரதியார் பல்கலைக்கழகம்.

4.5 - சைவ விழாக்களும் மனித மேம்பாடும். - முனைவர் செ. சாரதாம்பாள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

4.6. - திருக்கார்த்திகை - இரா. சுமதி - கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரி திருச்செந்தூர்.

4.7 - கோவை பேரூர் பட்டீசுவர மன்னர் திருக்கோயில். நாற்று நடவுத் திருவிழா - முனைவர் தே. ஞான சேகரன், பாரதியார் பல்கலைக்கழகம்.

4.8 - கொங்கு ஏழு தலங்களின் திருவிழாக்கள் - தி. பெரியசாமி, பாரதியார் பல்கலைக்கழகம்.

4.9 - சைவத் திருவிழாக்கள் - முனைவர். எம். வசந்தமல்லிகா, அவினாசிலிங்கம் நிகர் நிலைப் பல்கலைக்கழகம்.

4.10 - திருமழபாடி ஊடல் உற்சவம் - டாக்டர் - சு. வேங்கடராமன், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

4.11 - The CarFestival of Lord Sri Nataraja - Prof K. Balachandran, Annamalai University.

4.12 - திருவெம்பாவைத் திருவிழா - யாழ் சுந்தரம் - ஓய்வுபெற்ற தமிழாசிரியர், மதுரை.

4.13 - Festivals of Lord Nataraja in Chidambaram - Dr. V. Geetha, Annamalai University.

அமர்வு - ஐந்து
சைவத் திருக்கோயில்கள்

5.1. தமிழ்க் கல்வெட்டுகளில் காணும் கோயில் வளர்ச்சியும் அறவியல் தளர்ச்சியும் - முனைவர் கா. அரங்கசாமி, கோபி.

5.2. திருவோத்தூர் திருத்தல வரலாறு - ந. அனந்தநாராயணன், சென்னை.

5.3. சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் - மா. இராமச்சந்திரன் ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

5.4 - சைவத்திருக்கோயில்கள் - முனைவர். என். காந்திமதி லெட்சுமி ந.பி.சி. மகாலிங்கம் மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

5.5 - காஞ்சி சிவன் கோயில்கள் - முனைவர். க. குளத்தூரான். தமிழ்ப் பல்கலைக் கழகம்.

5.6 - யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில்கள் பற்றிய ஆய்வு, முனைவர் அருணாசலம் சண்முகதாஸ். யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

5.7 - வரலாற்றில் திருக்குற்றாலத் திருத்தலம் - சொ. சந்திரவாணன், தொல்பொருள் ஆய்வுத்துறை. குற்றாலம்.

5.8 - இராமேச்சுரம் நிறுவப் பெற்ற வரலாறு. பா. சிவநேசன், அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.

5.9 - காட்டுமன்னார்கோயில் வட்டாரக் கோயில்கள் - ஒரு பார்வை. முனைவர் ந. சின்னத்தம்பி, பூம்புகார்க் கல்லூரி.

5.10 - சிவ ஆலய ஓட்டம் - குமரியில் சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் வழிகாட்டும் பல்சமய வழிபாடு. - சுகுமாரன் - எஸ். மற்றும் இராஜ் எ.டி.எஸ் - ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி நாகர்கோவில்.

5.11 - நூலக வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - பா. சுந்தரேசன் தமிழ்ப்பல்கலைக்கழகம்.

5.12 - சப்தத்தானத்திருவிழா (ஏழூர் தலங்கள்) வலம் வருவிழா புலவர் கோ. சுப்பிரமணியனார், திருவையாறு.

5.13 - திருப்பெருந்துறைத் திருத்தலச் சிறப்புகள் - முனைவர் செ. சுப்ரமணியன், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

5.14 - சைவத் திருக்கோயில்கள் - திருமதி . த. செல்லம்மாள், - குந்தவை நாச்சியார் மகளிர் கலைக்கழகம், தஞ்சாவூர்.

5.15 - நெல்லையப்பர் கோயில் பரிவார ஆலயங்கள் - ஓர் ஆய்வு. முனைவர் மா. செந்தில் செல்வக் குமரன் - தொல்பொருள் ஆய்வுத்துறை பாளையங்கோட்டை.

5.16 - கொங்கு நாட்டில் சிவன் கோயில்கள் - புலவர் வீ. சொக்கலிங்கம், தலைமையாசிரியர், ஈரோடு.

5.17 - திருமுதுகுன்றம் பழமலை நாதர் கோயிலில் ஐந்து - முனைவர் சு. தங்கதுரை, கௌஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி விருத்தாசலம்.

5.18 - அன்பே சிவம் - மா. த. தயாபரன், ஆர்க்காடு.

5.19 - திருச்செங்காட்டாங்குடி - கணபதீசுவரர் கோயில் - ஓர் ஆய்வு திருமதி. தனவதி, தஞ்சாவூர்.

5.20 - ஈழநாட்டு மாதோட்ட நன்னகர்த் திருகேதீச்சரம் ச. நந்தினி, சென்னைப் பல்கலைக் கழகம்.

5.21 - சைவக்கலை மரபு - திருநீறு மடலும் பொக்கணமும் - டாக்டர் இராசு பவுன்துரை, தமிழ்ப்பல்கலைக் கழகம்.

5.22 - சைவத் திருக்கோயில்கள் - முனைவர் பி. பாலச்சந்திரன் - அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.

5.23 - திருப்பெருந்துறை - ஆவுடையார் கோயில் - இரா. பிரகதீஸ்வரி அறந்தாங்கி.

5.24 - பதினெட்டாம் நூற்றாண்டுச் சிவன் கோயில்கள் - தி. புஷ்கலா, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

5.25 - கல்வெட்டுகளின் வழித் திருக்கோயில் செய்திகள் - முனைவர் எம். மனோன்மணி, த.சா.அ.க. தமிழீக் கல்லூரி, பேரூர்.

5.26 - கோயில் - முனைவர் எம்.ஏ. மாணிக்க வேலு, விவேகானந்தா கல்லூரி, சென்னை.

5.27 - சைவத் திருக்கோயில்களும் தலமரங்களும் - முனைவர் வே. ரா. மாதவன், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

5.28 - குண்டலினித் திருக்கோயில் - பொன் முனியப்பன், காந்தி - கூகலூரி கல்வி நிலையம்.

5.29 - தேவேந்திர குலமக்களின் கோயிற் சிற்பங்கள் - ஓர் அறிமுகம் ந. வியாசராயர், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

5.30 - நடராஜீச்சுவரம் - முனைவர் . வெ. வேதாசலம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, மதுரை.

5.31 - திருவெண்காடு - சுவேதாரண்யேசுவரர் கோயில் - முனைவர் வேலுசுவாமி சுதந்திரன் தமிழ்ப் பல்கலைக் கழகம்.

5.32 - சைவத்திருக்கோயில்கள் - கி. ஸ்ரீநிவாசன், சென்னை.

5.33 - Nitya-Puja in Temples - Mrs. N. Bhuvaneswari Tamil University.

5.34 - Lord Siva at Thiruppungur and Kudaliayattur Villages - Dr. Mrs. G. Santhi Tamil University.

5.35 - A Mother and a Mother Goddess in Social work - A soicological study of a Saiva Temple in Jaffna - N. Shanmugalingam university of Jaffna. Srilanka.

5.36 - Evolution of the Navagraha Worship. - K.R. Sita. Thanjavur.

5.37 - SivaTemples in Ancient and Medieval Prof. S.K. Sitrambalam - University of Jaffna,. Srilanka.

5.38 - The Sabhanayaka Temple and Saivism - Dr. L.K. Sivanesan, Periyar E.V.R. College, Trichirappalli.

5.39 - The Development of the Saiva Temples and its Arcchitectural and Sculptural Programmes in the Transvaal, republic of south Africa.

- Udhandan Govenden, South Africa.

அமர்வு - ஆறு
கலையும் பண்பாடும்

6.1. சைவமும் தேவார இசையும் - முனைவர் இ. அங்கயற்கண்ணி தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6.2 - அருளாளர்களின் ஓவியங்கள் . முது முனைவர் - ம.சா. அறிவுடை நம்பி, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6.3 - தஞ்சை சிவத் திருத்தலத்தின் சோழர் கால வண்ண ஓவியங்கள் - இரெ. அன்பரசன், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

6.4 - சைவக் கருத்து வெளிப்பாட்டில் தமிழ்நாடகம், முனைவர் க. இரவீந்திரன் - தமிழ்ப்பல்கலைக்கழகம்.

6.5 - பண்பாட்டுப் பாரம்பரியமும் கலைகளும் - எதிர்மான சிங்கம், கொழும்பு, இலங்கை.

6.6 - படையல் முறையில் சமூகப் பண்பாடு - டாக்டர் - மு. கண்ணன், ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்.

6.7 - சிவராத்திரி வழிபாடு காட்டும் பண்பாட்டு மரபுகள். முனைவர் கு. கதிரேசன், ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்.

6.8 - சமய நெறியில் பண்பாடு - பன்மொழிப்புலவர் த. கனக ரெத்தினம்.

6.9. கல்வெட்டில் சைவக் கலைகள் - முனைவர் அ. கிருட்டிணன், தமிழப்பல்கலைக்கழகம்.

6.10 - பண்பாட்டுக் கலைக்கூறுகள் - நால்வர் பாடல்கள் வழி ஓர் ஆய்வு ஏ.என். கிருஷ்ணவேணி, சென்னைப் பல்கலைக்கழகம்.

6.11 - தேவாரமும் - ஓதுவார்களும் (கல்வெட்டு, சிற்ப, ஓவிய வழி ஆய்வு) - குடவாயில் பாலசுப்ரமணியன், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

6.12 - தஞ்சை மராட்டிய மன்னர்களின் சைவப்பணி, ஆ. குணசேகரன், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

6.13 - கலையும் பண்பாடும் மூவர் தேவாரத்தில் இசைக்கலை. முனைவர் - அ. கோபிநாத், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

6.14 - தேவாரப் பண்ணிசைப் பிடாரர். - முனைவர் ஞானாம்பிகை குலேந்திரன், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6.15 - தமிழிசை - முத்து தாண்டவர், கீர்த்தனைகள், - முனைவர் சண்முக செல்வகணபதி, அரசர் கல்லூரி, திருவையாறு.

6.16 - பழங்குடியினரிடையே காணலாகும் - சிவன் குறித்த செய்திகளும், வழிபாட்டு நிலைமைகளும் - முனைவர் . வே. சிதம்பரநாதபிள்ளை தமிழ்ப் பல்கலைக் கழகம்.

6.17 - சைவத் திருக்கோயில்களில் ஆடற்கலை - திரு. என். செல்வராசு அரசினர் மேல்நிலைப்பள்ளி, அய்யம் பேட்டை.

6.18 - சைவ இலக்கியங்களில் இசைக்கலையும் தாளச் செய்திகளும் - முனைவர் - ந. சேஷாத்திரி, தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

6.19 - கடை முழுக்கு - ச. தமிழ் வேலு, அ.வ.அ. கல்லூரி, மயிலாடு துறை.

6.20 - கட்டுமான மரபில் இலிங்க வடிவங்கள் - பேராசிரியர் கோ. தெய்வ நாயகம், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

6.21 - பல்லவக் கலை மரபுக்குரிய இலங்கை (இசுறுமுனியாச்) சிற்பங்கள். - ஒரு மீள் பரிசீலனை. - திரு. பரமுபுஸ்பரட்ணம், இலங்கை.

6.22 - தற்காலக் கலாச்சாரமும் சைவமும் - திருமதி கு- பொன்னி, அரசுகலைக்கல்லூரி, சிதம்பரம்.

6.23 - சங்கச் சமுதாய மாற்றமும் முருக வழிபாடும் - பெ. மாதையன், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6.24 - தமிழ் கோயில் கலைகளும் பண்பாடும் - முனைவர் ஜி. வசந்தா, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

6.25 - தமிழ் இலாவணிப் பாடல்களில் சைவமும் வைணவமும் - இராக. விவேகானந்தகோபால், சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

6.26 - இந்தியாவும் சமூக சமய ஒற்றுமையும் - பேராசிரியர் வி. வினாயக பெருமாள், திருவனந்தபுரம்.

6.27 - கோபால கிருஷ்ண பாரதியார் பாடல்களில் சிவபக்தி நெறி - முனைவர் - ந. ஜெயவித்யா, தமிழ் பல்கலைக்கழகம்.

6.28 - கவுத்துவங்கள் காட்டும் இறை வழிபாடு - ஹேரம்பநாதன், தஞ்சாவூர்.

6.29 - Saiva Samaya - K. Kuravar - Tamizh - Thevara Movar - Dr. Indira Srinivasam, Chennai.

6.30 - Sculpture and Architecture of Tanjore BrahadisvaraTemple -An Aesthetic Approach S. Manivannan Rajah's College, Thiruvaiyaru.

6.31 - Folk World View of God Siva. Dr. I. Muthaiah, Madurai Kamaraj University.

6:32 - A Study of Saiva Cultural Words in Tamilnadu - Dr. S. Radhakrishnan Tamil University.

6.33 - Assimlation of Native Gods Into the Alien Pantheon.

(with Special reference to Sumerian and Irdus Culture) Dr. K. Raja Bharathidasan University.

அமர்வு - ஏழு
சித்தர்கள்

7.1 - தமிழகத் திருக்கோயில்களில் சித்தர்கள் வழிபாடு - மரு. ச. அரங்கராசன், அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம். மெலட்டுர்.

7.2 - தமிழர் இறைநெறிக் கோட்பாடு மறு உருவாக்கத்தில் சித்தர்கள் பங்கு - சு. அரங்கராசு, அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்.

7.3 - சூபி மெய்ஞ்ஞான இலக்கியங்களில் சித்தர் பண்பாட்டின் தாக்கம். - முனைவர் பீ. மு. அஜ்மல்கான், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

7.5 - தமிழர் கலையும் - பண்பாடும் சித்தர்கள் வழங்கிய கொடையும் பேராசிரியர் சி. இராமச்சந்திரன், பழனி.

7.6 - சித்தர் - சித்தர்கள் நிலையும் பத்தாம் திருமுறையும் பேராசிரியர். ரெ. கண்ணன், திண்டுக்கல்.

7.7 - சித்தர்களின் தியானநெறி - சில தனித்தன்மைகள் - ப. கருணாநிதி, தலைமையாசிரியர், திருத்தணி.

7.8 - ஓம் நமச்சிவாய - அ. குணசேகரன், மேலைச் சிவபுரி.

7.9 - சித்தர் யார்? - சி.எஸ். குப்புராஜ், சைவ சித்தாந்த பெருமன்றம், சென்னை.

7.10 - சித்தர்கள் - எஸ்.வி. கோபிநாத், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் பாலிடெக்னிக், பழநி.

7.11- ஈழத்துச் சித்தர் மரபு - சாந்தி நாவுக்கரசன், கொழும்பு, இலங்கை.

7.12 - சித்தர்கள் கண்ட வான சாஸ்திரம் - வை. வ. சிவப்பிரகாசம், தஞ்சாவூர்.

7.13 - சித்தர்களின் வாழ்வியல் கோட்பாடு - முனைவர் முல்லை வீ. சண்முகம், அறிஞர் அண்ணா அரசு ஆடவர் கலைக்கல்லூரி, நாமக்கல்.

7.14 - சிவ வாக்கியர் சிந்தனை - மா சிவபாக்கியம், கோவிந்தம்மாள் ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

7.15 - குகையூர் சித்தநாதர் - முனைவர் அ. சிவபெருமான் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

7.16 - பட்டினத்தார் வெறுப்பின் தத்துவம் - முனைவர் து. சீனிச்சாமி தமிழ்ப்பல்கலைக் கழகம்.

7.17 - அறிவியல் தத்துவம் - சித்தர்களின் பார்வையில் ஓர் ஆய்வு - முனைவர் சுபாஷினி ஆர். காந்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

7.18 - பாம்பாட்டிச் சித்தாந்தம் - முனைவர். பெ. சுயம்பு. ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

7.19 - சைவ சமயத்தில் சாகாக்கலை - திருமதி. செல்வம் கோபால். அருள்

மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி பழநி.

7.20 - சித்தர்களின் காயசித்திச் சிந்தனைகள் - முனைவர் சோதிபாய் தேவதாஸ்.

7.21 - இடைக்காட்டுச் சித்தரின் இலக்கிய உத்திகள் - இராம. தன சேகரன் - மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

7.22 - அகப்பேய்ச் சித்தரின் பாடல்களில் இறை - உயிர் பற்றிய சிந்தனைகள் - முனைவர் ம. திருமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

7.23 - பட்டினத்தார் காட்டும் நிலையாமை - இரா. நளினிகாந்தம். - தமிழ்ப்பல்கலைக்கழகம்.

7.24 - சித்தர் - பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் - கு. நாகராசன் ஈரோடு.

7.25 - சித்தர்களின் சமூகச் சிந்தனைகள் - டாக்டர் க. நாராயணன், தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி.

7.26 - சித்தர்கள் அளித்த அறிவியல் தத்துவம் - முனைவர் ச. பரிமளா தமிழ்ப்பல்கலைக்கழகம்.

7.27 - திருநாவுக்கரசர் சித்தரே - மீ. பாலமுருகன் - அக்கப்பா கல்லூரி, கோவை.

7.28 - சித்தர்கள் கண்ட சமுதாயம் - டாக்டர் அ. பாஸ்கர பால்பாண்டியன் ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.

7.29 - சித்தர்கள் நோக்கில் மனித மேம்பாடு. - மருத்துவர் எஸ். பிரேமா, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

7.30 - சித்தர்கள் யார்? - சி. மகாராசன் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

7.31 - சித்தர் நெறியைத் ''திருமந்திரம்'' வாயிலாகக் காணல் - அ. மலர் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்.

7.32 - சித்தர்கள் - பா. மாசிலாமணி, மருத்துவர் பாண்டிச்சேரி.

7.33 - சிவவாக்கியரும் ரபீந்திரநாத் டாகுரும் - முனைவர் சொ. முத்தையா - விஸ்வ பல்கலைக்கழகம், சாந்தி நிகேதன்.

7.34 - சித்தர் நெறி - முனைவர். இராம மோகன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

7.35 - சித்தர் யாப்புத் திறன் - முனைவர். கா.கோ. வேங்கடராமன் - அ.அ. அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

7.36 - சித்தர்களின் சமய மெய்யியற் சிந்தனைகள் ஈழத்துச் சித்தர்களோடு தொடர்புபடுத்திய ஓர் ஆய்வு - மா. வேதநாதன், யாழ், பல்கலைக்கழகம், இலங்கை.

7.37 - சித்தர் பாடல்களில் மக்கள் நெறிப்படுத்தல். - இரா. வேலாயுதம், சென்னைப் பல்கலைக்கழகம்.

7.38 - சித்தர்களும் அவர்கள் ஆய்ந்த கலைகளும் - கு. வேலுசாமி.

7.39 - வள்ளலாரின் மருத்துவ அறிவியல் சிந்தனைகள் - முனைவர் - நே. ஜோசப், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

7.40 - Siddhargalin Rejuvenation and Anti - Aging Process - A Bull's Eye View from Siddha Literature. - Dr. V. Ravisankar, New Delhi.

அமர்வு - எட்டு
திரு மடங்கள்

8.1. கூனம்பட்டி மாணிக்கவாசகர் மடம் - முனைவர் புலவர் - செ. இராசு.தமிழ்ப்பல்கலைக்கழகம்.

8.2 - பேரூராதீனம் - வீர சைவ மடம் - வி. உமாபதி, கோயம்புத்தூர்.

8.3 - திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் சமுதாயத் தொண்டுகள் - கதிர்வேலு.

8.4 - மராட்டியர் காலத்துச் சைவ மடங்களின் பணிகள் - மு. ரெ. கலைச் செல்வி, தமிழ்ப்பல்கலைக் கழகம்.

8.5 - இசை வளர்ச்சியில் திருவாவடுதுறை ஆதீனத்தின் பங்கு - முனைவர் இரா. கலைமணி, தமிழ்ப்பல் கலைக்கழகம்.

8.6 - சைவ சமய வளர்ச்சிக்கு திருவாவடுதுறை ஆதீனத்தின் பங்களிப்பு - கு. திருமாறன், தமிழ்ப்பல் கலைக்கழகம்.

8.7 - செட்டிநாடும் திருமடங்களும் - என். வள்ளி, காரைக்குடி.

8.8. சைவத்திருமடங்களும் கிறித்தவத் திருமடங்களும் - ஆ. ஜான்துறை, தமிழ்ப்பல்கலைக் கழகம்.

8.9 - Saiva Mathas of Nadu Nadu - Prof. S. Kadirvelu.

8.10 - Social Services of Saiva Mutts in Early Thanjavur District - T. Badmanaban, Tamil University.

8.11 - Saiva Monasteries and the Tamil Society - Dr. C.K. Sivaprakasam, A.V.V.M. Sri Pushpam College, Poondi.

அமர்வு - ஒன்பது
சிவ மூர்த்தங்கள்

9.1 - சிவமூர்த்தங்களுள் நடராச மூர்த்தி - Dr. A. Anandantarajan Annamalai University.

9.2 - இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள். செல்வி சோ.கி. கல்யாணி, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

9.3 - சைவப்படிமக்கலை - ஊற்றுக் களும் ஓட்டங்களும் - ப. கோபால கிருஷ்ணன்.

9.4 - சிவமூர்த்தங்கள் - தி. வே. கோபாலய்யர்.

9.5 - சங்க இலக்கியங்களில் தட்சிணாமூர்த்தியின் தொல் கூறுகள் மு. சுதர்சன், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

9.6 - மணிவாசகர் காட்டும் சிவன் போக வடிவங்கள் - முனைவர் சி.திருச்சிற்றம்பலம், அரசு ஆடவர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம்.

9.7 - ஆனந்த நடராஜர் - டி. பாலசுப்பிரமணியன்.

9.8 - அட்ட மூர்த்தங்கள் - முனைவர் அரு. மருததுரை பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

9.9 - கொங்கு நாட்டு சிவத்தலங்களில் உள்ள சிவமூர்த்தங்கள் செ. விசுவநாதன், எஸ்.ஆர்.கே. கல்லூரி, கோயம்புத்தூர்.

9.10 - அம்பலத்தான் ஆடல் - ஸ்வர்ணா சோமசுந்தரம் - கோயம்புத்தூர்.

9.11 - A Unique Image of HariHara - Dr. T. Chandrakumar, Tamil University.

அமர்வு - பத்து
திருமுறைகள்

10.1 - திருஞான சம்பந்தர் தேவாரத்தில் அகப்பொருள் கூறுகள் - சா. அங்கயற்கண்ணி, திருநெல்வேலி.

10.2 - அன்பு மணியும் அருள் வாசகமும் - பேராசிரியர் முனைவர் இரா. அரங்கசாமி, செ. சௌந்தரராசப் பெருமாள், பாரதியார் பல்கலைக்கழகம்.

10.3 - திருநாவுக்கரசருடைய பக்திச் சிறப்பு - செல்வி சி. அருண் மொழிச் செல்வி, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

10.4 - தேவாரத்தில் சைவ சமய மெய்யியற் சொற்கள் - டாக்டர் சபா, அருணாசலம், ஸ்ரீ சேவுகன் அண்ணா மலைக் கல்லூரி தேவகோட்டை.

10.5 - பெரியபுராணத் தோற்றத்தின் சமுதாயப் பின்புலம் - க.ப. அறவாணன், புதுவைப் பல்கலைக் கழகம்.

10.6 - திருமுறை பாடுவதில் சில முயற்சிகள் - ந. ஆறுமுக ஓதுவார் சென்னை.

10.7 - திருமுறைகளும் வெண்பா யாப்பும்; - இராகவன் முத்து, காரைக்குடி.

10.8 - உலக சகோதரத்துவத்திற்கும் மனித மேம்பாட்டுக்கும் திருமுறைகள் - இரா. இராசசேகரன், சென்னை.

10.9. திருமுறைகளின்ே சிற்றியங்களில் இறைத்தன்மை - முனைவர் இரா. இராசபாண்டியன், திரு. வி.க. அரசு கலைக்கல்லூரி, திருவாரூர்.

10.10 - திருமுறைகளில் சீர்திருத்தச் சிந்தனைகள் - முனைவர் - பெ. இராமலிங்கம், தமிழ்ப்பல்கலைக் கழகம்.

10.11 - திருமூலர் தத்துவத்தில் மனித நேயம் - முனைவர் எஸ். இராஜேந்திரன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

10.12 - அப்பர் தேவாரத்தில் சமூகக் கட்டுப்பாட்டுச் சிந்தனைகள் - முனைவர் தா. ஈசுவரப் பிள்ளை, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

10.13 - திருவாசகத்தில் பக்தி நெறி - பொ.நா. கமலா, சிவகாசி.

10.14 - திருமுறைகளின் வழிபாட்டு முறைகளும் மகளிர் பங்கேற்பும், - முனைவர் திருமதி தி. கமலி கஜேந்திரன், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல்.

10.15 - காரைக்கால் அம்மையார் - ஓர் உளவியல் பார்வை - செல்வி த. கமலா, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

10.16 - முதல் திருமுறையில் ஆடற் குறிப்புகள் - மருத்துவர் - இரா. கலைக்கோவன், முனைவர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையம், திருச்சி.

10.17 - திருமுறைகளில் சீர்திருத்தச் சிந்தனைகள் - த. காமராஜ், மாநிலக்கல்லூரி, சென்னை.

10.18 - திருமுறை இலக்கியங்களில் தமிழ்மொழி புதுமையாக்கமும் எளிமையாக்கமும் - ஆ. கார்த்திகேயன், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

10.19 - சூர்ணி ; திருமுறைகள் - சீ. கிருஷ்ணன், சிங்கப்பூர்.

10.20 - பெரியபுராணம் - ஒரு சமூக நீதிக் காப்பியம் - முனைவர். ச. கிருட்டிண மூர்த்தி, தமிழ்ப்பல்கலைக் கழகம்.

10.21 - எட்டாவது திருமுறையின் இசைத் திறன்கள் - கிருஷ்ணவேணி சண்முகம் மலேசியா.

10.22 - திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சைவ சித்தாந்தம் - முனைவர். வ. குருநாதன், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

10.23 - திருநாவலூரார் - திருவாதவூரார் தம் உருவகங்கள் - ஓர் இலக்கியப் பார்வை - ச. குமார், கேரளப் பல்கலைக்கழகம்.

10.24 - திருமுருகாற்றுப்படை - நக்கீரர் வரையும் ஓவியம் - வே. கோபால், அருள்மிகு. பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.

10.25. பத்தாந்திருமுறையும் உலக மேம்பாடும் - கோ.ச. கோமதி முத்துக்குமரன்.

10.26 - சேக்கிழார் காட்டும் மனித மேம்பாட்டிற்கான சிந்தனைகள் - முனைவர் கோமதி சூரியமூர்த்தி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

10.27 - சுந்தரமூர்த்தி நாயனார் பதிகங்களில் இசை - முனைவர் இராம. கௌசல்யா, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, திருவையாறு.

10.28 - பெரிய புராணத்தில் சொற்களில் பண்பாடு - முனைவர். மு. சதாசிவம், அரசு அருங்காட்சியகம், சென்னை.

10.29 - ஆளுடைப் பிள்ளையாரின் அகப்பொருட் பதிகங்கள் - வெ. சத்திய நாராயணன், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

10.30 - சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் செல்வர் - முனைவர் சிவ. சண்முக சுந்தரம், காஞ்சிபுரம்.

10.31 - ஆன்மீக வளர்ச்சிக்குப் பன்னிரு திருமுறை யாப்புக் கூறுகள் - முனைவர் ந. சண்முகம்; ஸ்ரீ ராமகிருஷ் மிஷன் வித்தியாலயக் கலை அறிவியல் கல்லூரி, கோவை.

10.32 - திருமுறைகள் - திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம் - பேரா. ஓ. சம்புலிங்கம்.

10.33 - திருமுறைகள் வரலாற்றின் தொடர்ச்சியில் சைவ சித்தாந்தத்தின் பன்முக வளர்ச்சி - முனைவர். வெ. சாந்தாமணி, தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்.

10.34 - திருமுறை கூறும் அறநெறிகள் - முனைவர் ச. சாம்ப சிவனார், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10.35 - உலக சகோதரத்திற்கும் மனித மேம்பாட்டிற்கும் சைவம் - முனைவர் இரா. சாவித்திரி.

10.36 - திருவாசகம் காட்டும் பக்தி வெளிப்பாட்டு உத்திகள் - முனைவர் எச். சித்திரபுத்திரன், தமிழ்ப்பல்கலைக் கழகம்.

10.37 - சைவத் திருமுறைகள் - முனைவர் எம்.பி. சியாமளா, சென்னை.

10.38 - தேவாரம் ஓதும் முறையின் பழமை - பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

10.39 - சிவபுராணத்தில் உயிர் நிலைக் கருத்து - பெ. சீதாலெட்சுமி, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

10.40 - திருமூலர் - திருமந்திரத்தின் வாழ்வியல் சிந்தனைகள் - முனைவர் வி. சீத்தாலெட்சுமி, எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்.

10.41 - திருவாசகத்தில் மகளிர் விளையாட்டும், மாதவன் அருளும் - முனைவர் சி. சுந்தராம்பாள், அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் பல்கலைக்கழகம்.

10.42 - சேக்கிழார் பார்வையில் சிவ வழிபாடு - முனைவர் தி. சுந்தராம்பாள், தமிழ்ப் பல்கலைக்கழகம்.

10.43 - ஒன்பதாம் திருமுறையின் சிறப்பும் சேதிராயரின் வாக்கும் - முனைவர் சி. சுந்தரேசன், தமிழ்ப்பல் கலைக் கழகம்.

10.44 - திருவாசக உருக்காட்சிகள் புலப்படுத்தும் பக்தியனுபவம் - முனைவர் பெ. சுப்பரமணியன், அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.

10.45 - அடியாரை ஆட்கொண்ட அந்தணக் கோலம் (சேக்கிழார் வாக்கின் அடிச்சுவட்டில்) - வி. செல்லாத்தாள்.

10.46 - தேசிய ஒருமைப் பாட்டிற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெரிய புராணத்தின் கொடை - முனைவர் க. சேகர், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை.

10.47 - சைவத்தில் திருவாசகத்தின் இடம் - தூ. சேதுபாண்டியன்.

10.48 - திருக்கோவையாரில் கல்வி நலன் - ஞானப்பூங்கோதை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் மற்றும் தமிழ்க்கல்லூரி, பேரூர்.

10.49 - திருவாசகத்தில் - சிவ புராணம் - ந. தமிழ்த்தெய்வம் - எம்.வி. எம். அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

10.50 - திருமந்திரத்தில் வாழ்வியல் அறங்கள். அ. தனலெட்சுமி இராதா கிருஷ்ணன். -அ.து.மு. மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம்.

10.51. திருமுறைகளில் சிவபூசையின் இன்றியமையாமை - ஜி. திருஞானசம்பந்தம்.

10.52 - பெரியபுராணமும் சிவதீக்கையும் - வெ. திருநாவுக்கரசு - தமிழ்ப்பல்கலைக் கழகம்.

10.53 - திருமுறைகளில் கயிலைக் காட்சிகள் - முனைவர் க. திலகவதி தமிழ்ப் பல்கலைக்கழகம்.

10.54 - இனிமை தரும் எட்டாம் திருமுறை திருவாசகம் - ஒரு நோக்கு - எஸ் தெய்வநாயகம், கொழும்பு, இலங்கை.

10.55 - பக்திக்கும் ஞானத்திற்கும் வயதில்லை - கோப. நல்லசிவம் தஞ்சாவூர்.

10.56 - சம்பந்தர் காட்டும் பக்தி நெறி - கா. நாகராசு, த.சா. அ.க.அ. தமிழ்க்கல்லூரி, பேரூர்.

10.58. - பெரியபுராணம் காட்டும் பக்தி நெறி - முனைவர் நிர்மலா மோகன், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

10.59 - திருமூலர் காட்டும் மானிட வாழ்வியல் நெறிமுறைகள் - ப. பத்மநாபன் செய்தி மற்றும் விளம்பரத்துறை, புதுச்சேரி அரசு.

10.60 - திருமுறையின் நோக்கும் போக்கும் - முனைவர் த.கோ. பரமசிவம், தமிழ்ப்பல்கலைக்கழகம்.

10.61 - காரைக்கால் அம்மையார் பாடல்களில் தத்துவக் கருத்துக்கள். விசு. பழனியப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

10.62 - பக்தி இலக்கியத்தில் திருஞான சம்பந்தரின் இடம் - அ.

பாண்டுரங்கன், புதுவைப் பல்கலைக் கழகம்.

10.63 - பெரியபுராணம் காட்டும் பெண்கள் - முனைவர் மா. பார்வதியம்மாள், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

10.64 - திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சைவ சித்தாந்தம் - முனைவர் சி. பாலு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

10.65 - திருமுறைகள் கண்ட இலக்கிய வடிவங்கள் - முனைவர் திருமதி . பா. புவனேசுவரி.

10.66 - நன்னெறி காண நடிக்கப் பழகுவோம். - இ.பேச்சிமுத்து, தியாகராசர் கல்லூரி, மதுரை.

10.67 - கண்ணப்ப நாயனாரின் பக்திச் சிறப்பு சி. பேபிசித்ரா, தமிழ்ப் பல்கலைக்கழகம்.

10.68 - திருமுறைகள் - சொ. அ. மணிவாசகம், பொத்தூர்.

10.69 - திருவாசகத்தில் சிவபுராணம் - புலவர் சு. மதியழகனார் - தம்மம்பட்டி.

10.70 - தேவாரப் பதிகங்களில் உலகியல் - சிவ மாதவன், தாகூர் கலைக்கல்லூரி, புதுச்சேரி.

10.71. திருஞான சம்பந்தர் தேவாரத்துள் நிலையாமைக் கருத்துகள் - கோ. மீனாட்சி, கும்பகோணம்.

10.72 - திருநாவுக்கரசரின் சிவத் தொண்டு. - முனைவர் அ. முத்துவேலன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

10.73 - பெரியபுராணத்தில் குடும்ப வாழ்வியல் விளக்கம் - மு.மூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகம்.

10.74 - பதினோராம் திருமுறையும் அதன் சிறப்புகளும், பேராசிரியர் டாக்டர் . பெ.கு. வரதராசன், கிருஷ்ணகிரி.

10.75 - திருமுறைகள் - சூ. விசுவநாதன், ஈரோடு.

10.76 - வேதஞ்சாரா மதங்களும் சைவத் திருமுறைகளும் - முனைவர் ர. விஜயலெட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

10.77 - திருஞானசம்பந்தரும் இலக்கியப் பணியும். முனைவர் இரா. ஜெகதீசன், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மதுரை.

10.78 - திருமந்திரம் - வீ. ஜெயபால், கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.

10.79 - சைவசமயக் குரவர் நால்வரின் பக்தி நெறிகள் - முனைவர் வ.ஜெயா, பாரதியார் பல்கலைக்கழகம்.

10.80 - Ready Reconer Terminologies in Thirumurai - Kavignar Raghavan Muthu Karaikudi.

இணைப்புகள்

அமர்வு - ஒன்று

சைவ சித்தாந்தம்

1.1 - சைவ சித்தாந்தத்தில் அளவையியில் - முனைவர் மு. பொன்னுசாமி, சென்னைப் பல்கலைக் கழகம்.

1.2 - அலங்காரம், அநுபூதியில் சைவ சித்தாந்தம் - முனைவர் - ஆர். முருகேசன், அருள்மிகு பழநிஆண்டவர் கலை, பண்பாட்டுக்கல்லூரி, பழநி.

1.3 - சைவ சித்தாந்தம் - பேராசிரியர் - வை. முருகேசன்.

1.4 - இயற்பியலும் இறையியலும் - ப. வெள்ளியங்கிரி, உசுமானியப் பல்கலைக் கழகம்.

அமர்வு : 2

சைவசமயம்

2.1 - Veerasaivam : A Sociol - Religious Reform Movement - Dr. G. Karunanidi Manonmaniam Sundaranar University.

2.2 - Religion, Philosophy and Medicine in sacred Ash : An anthropological study of "Thiruneetru pathigam" - Dr. V. Karuppaiyan, University of Madras.

2.3 - Religion and Service - Mrs. Vanathy Ravindran.

அமர்வு : 3

சைவ நூல்கள்

3.1. சைவசமயச் சொற்பொழிவும் தமிழ் அகராதியியலும் - முனைவர் இரா. திருநாவுக்கரசு, தமிழ்ப்பல்கலைக் கழகம்.

3.2 - கல்லாடமும் இறைவன் திருவிளையாடல்களும் - எம். ஷீலா.

அமர்வு : 4 சைவத் திருவிழாக்கள்

4.1 - சைவமும் விழாக்களும் - பேராசிரியர் - வி. சிவசாமி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

4.2 - சைவத் திருவிழாக்கள் - கா. சுப்பிரமணி, நெல்லை.

அமர்வு : 5 திருக்கோயில்கள்

5.1 வரலாற்றில் திருக்குற்றாலத் திருத்தலம் - சொ. சந்திரவாணன்.

5.2 - நெல்லையப்பர் கோவில் பரிவார ஆலயங்கள் - முனைவர் மா. செந்தில் செல்வக் குமரன், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

5.3 - திருச்சிற்றம்பலம் சொற் பொருள் விளக்கம். டாக்டர் நாகப்பா நாச்சியப்பன்.

அமர்வு : 10 திருமுறைகள்

10.1 - திருஞான சம்பந்தரும் இலக்கியப் பணியும் - முனைவர் இரா. ஜெகதீசன். தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, மதுரை.

(சைவ சித்தாந்த மகாசமாஜம், தமிழிசைச் சங்கம், பன்னிரு தமிழ் வேதப் பெருவிழா, வசந்த குமாரின் திருப்பணிகள் ஆகியன பற்றி விரிவாக இந்நூலில் பிற இடங்களில் காணலாம். சித்தாந்த தீபிகை பற்றி ஆசிரியனால் எழுதி இனி வரவுள்ள சைவ இதழ்கள் பற்றிய நூலிலும், தெய்வீகப் பேரவை பற்றி விரிவாக ஆசிரியன் எழுதியுள்ள ''சைவப் பெருவெளியில் காலம் (குன்றக்குடி அடிகளார்) நூலிலும், நாட்டியாஞ்சலி பற்றி ஆசிரியன் எழுதியுள்ள ''என்றுமுள சைவம்'' (சிதம்பரம்) நூலிலும் காணலாம். வேறு எங்கும் இடம் பெறாத நிகழ்வுகள் மட்டும் ஈண்டு விரிவாக எடுத்துரைக்கப் பட்டன.)

* * *

வரலாற்றுச் சிறப்புமிக்க நாட்கள்

1. ''சித்தாந்த தீபிகை'' ஆங்கில இதழ் வெளியீடு - *1897*
2. ''சைவசித்தாந்த மகாசமாஜம்'' (பெருமன்றம்) தொடக்கம் - *1905*
3. ''மெய்கண்டான் சித்தாந்த மாநாடு'' - தருமபுரம் - *1941*
4. ''தமிழிசைச் சங்கம்'' தொடக்கம் - *1943*
5. திருமந்திர மாநாடுகள் - திருவாவடுதுறை - *1954* (தொடக்கம்)
6. தமிழ்நாடு தெய்வீகப் பேரவை தொடக்கம் - *1966*
7. திருமுறைக் கருத்தரங்குகள், திருவிடைமருதூர் - *1971* (தொடக்கம்)
8. திருமுறை முற்றோதல் - *1974*
9. நாட்டியாஞ்சலி, (தொடக்கம்) சிதம்பரம் - *1981*
10. அனைத்துலக சைவசித்தந்தக் கருத்தரங்கம், தருமபுரம் - *1984*
11. பன்னிரு தமிழ்வேதப் பெருவிழா (தொடக்கம்) - *1989*
12. சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், (தொடக்கம்) திருவாவடுதுறை - *1992*
13. உலக சைவப் பேரவை, (தொடக்கம்) இலண்டன் - *1992*
14. வசந்தகுமாரின் திருக்கோயில் திருப்பணிகள் (தொடக்கம்) - *1995*
15. வாரணாசி திருமுறை மா்நாடுகள் (தொடக்கம்) - *1999*

(நூல்கள் பற்றித் தனி நூல் வெளிவர உள்ளதால் நூல் வெளியீடுகள் இங்கு சேர்க்கப்படவில்லை.)

□□□

செயல்முறை விளக்கம்

"என்றுமுள சைவம்", "ஊரெல்லம் சிவமணம்" ஆகிய நூல்களுக்காகச் செய்திகள் சேகரிக்க 2004 ஜூன் முதல் 2007 நவம்பர் வரை தமிழ்நாட்டில் உள்ள 100க்கும் மேற்பட்ட சிற்றூர், பேரூர்களுக்கு நேரில் சென்று அங்கேயே தங்கி 300க்கும் மேற்பட்ட மன்றங்களையும், அவற்றின் பொறுப்பாளர்களையும் சந்தித்து அவர்கள் ஆற்றிவரும் பணிகளை இருபெரும் நூல்களில் பதிவு செய்துள்ளேன். இந்த ஆய்வின் முடிவில் நான் கண்டறிந்த முடிவுகளை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். தனி மனிதனின் முடிவுகளில் குறைகள் இருக்கலாம். குறைகளை ஒதுக்கிச் சைவ சமய வளர்ச்சிக்கு இந்த ஆய்வினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மன்றங்களின் பணிகள் : இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதியும் சைவசமய வளர்ச்சியில் சைவ மன்றங்களின் பங்கு பெரிது; மாணப் பெரிது. தங்கள் தங்கள் பகுதிகளிலும் சரி, மாநில அளவிலும் சரி சைவ சமயக் கருத்தரங்குகளை நடத்திப் பெரும் பயன் விளைத்து வருகின்றனர்.

வார வழிபாட்டு மன்றங்கள் தமிழ்நாட்டில் உள்ள சிவன் கோயில்கள் பலவற்றிலும் சிறப்புடன் இயங்கி வருகின்றன. தாங்கள் இருக்கும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்கு வாரந்தோறும் செல்வதும், வழிபாடு இயற்றுவதும், தங்களுக்குத் தெரிந்த பாடல்களைப் பண்ணுடனோ அல்லாமலோ பாடி பணியாற்றி வருகின்றனர். சைவ சமயத்தின் ஆணிவேர் இந்த வார வழிபாடு மன்றங்கள் ஆகும். சைவச் சங்கிலி அறுபட்டுப் போகாமல் தொடர்ந்து பணியாற்றுகின்றனர். இம்முயற்சிகளில் அதிகச் செலவு கிடையாது. செலவு அதிகம் இல்லாமல் பயன் நிரம்ப விளைக்கும் பணியாகும். அர்த்தசாம வழிபாட்டுக்குழுவினர், பிரதோஷ வழிபாட்டுக் குழுவினரும் இந்த வகையினைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களின் பணி சில சமயங்களில் அவ்வத் திருக்கோயில்களின் திருப்பணிகள் வரை உயர்ந்து செல்கின்றது. சிவனடியார் திருக்கூட்டங்களும் இந்த வகையில் அடங்கும். இவர்களின் கூடுதல் சிறப்பு இவர்கள் தீக்கை பெற்று சிவபூஜை செய்பவர்கள். திருக் கோயில் குடநீராட்டு விழாக்கள், சிறப்பு வழிபாடுகள் ஆகியனவற்றில் சிவபூஜை நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய இவர்களை அணுக முடிகிறது. இவர்கள் முதியவர்களாகவும், சிவனடியார்களாகவும் இருப்பதால் வழிபடத் தக்கவர்களாகவும் இருக்கின்றனர்.

இதே போல தமிழகத்தின் சிவாலயங்கள் பலவற்றில் உழவாரப் பணிமன்றங்கள் இணைந்து செயல்

படுகின்றன. சைவ சமயத்தின் வெளிப் பாடுகளான திருக்கோயில்களைக் காப் பாற்றும் பணியில் இவர்கள் ஈடுபடு கின்றனர். கோயில்களில் சென்று வழி பட பாதையில் இருக்கும் களைகள், முட்களை அகற்றுகின்றனர். கோபுரங் களில் இருக்கும் செடிகளை வேரோடு அகற்றி மருந்தும் இடுகின்றனர்.

இதனால் கோபுரங்கள் காப்பாற்றப் படுகின்றன. இவையல்லாமல் திருக் கோயில் உட்பிரகாரங்களைத்தூய்மை செய்தல், பூஜைக்கு உதவும் பாத்திரங்கள் மடப்பள்ளிக்கு உதவும் பாத்திரங்கள் இவற்றை யெல்லாம் துய்மை செய்கின்றனர். இவை ஆகப்பெரும்பணிகள் ஆகும்.

விசயமங்கலம் சொக்கலிங்கனார் தலைமையில் மனிதக் கழிவுகளையே அகற்றிய பான்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. கோயில்பட்டி உழவாரப் பணி மன்றத்தினரின் பணி திருவாரூர் அடியார்களை உருவாக்கியுள்ள வரலாறு வியப்பினைத் தருகிறது. வேளச்சேரி ஆடலரசின் தலைமையில் உள்ள உழவாரப்பணிமன்றம் சென்னை யில் எத்தனை கோயில்களைத் தூய்மைப் படுத்தியுள்ளது! திருச்சி தாயுமானவர் சுவாமி உழவாரப் பணிமன்றத்தினர் தாங்கள் உழவாரப் பணி மேற் கொண்டால் அந்தத் திருக் கோயில் களின் திருப்பணி வரைக்கும் பணியினைத் தொடர்கின்றனர்.

இவர்கள் பணிகளை நாம் பார்க்கும் பொழுது அம்ம! நான் வியக்குமாறே!

அடுத்து, பலமன்றங்கள் மாதக் கூட்டங்கள். சொற்பொழிவுகள், ஆண்டு விழாக்கள், மாநாடுகள் என நடத்து கின்றன. சைவ உணர்வை மக்க ளிடையே கொண்டு செய்ய இவை யெல்லாம் தேவைதான். என்ன! ஒரே சமயத்தில் ஒரே ஊரில் நான்கு இடங்களில் சைவ நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது தான் எங்கு செல்வது என்ற ஒரு நிலைமை வந்து விடுகின்றது. நால்வர் குரு பூஜை விழாக்கள் போன்ற முக்கிய நிகழ்வுகள் தவிர பிற நிகழ்வுகள் நடத்தும் பொழுது ஒரு ஊரில் இருக்கும் அனைத்து மன்றத்தினரும் ஒருங்கு கூடிப் பேசி முதல் ஞாயிறு இன்ன மன்றம், இரண்டாம் ஞாயிறு இன்ன மன்றம் என்று நிகழ்ச்சிகள் அமைத்துக் கொள்ளலாம்.

தஞ்சையிலே அப்பர் பெருமான் குரு பூஜை நாளன்று ஒவ்வொரு மன்றத்தினரும் தங்கள் தங்கள் அமைப்புகளில் குரு பூஜை விழா நடத்தி விட்டு நிறைவாக அனைவரும் ராஜராஜன் சமய சங்க விழாவில் கலந்து கொள்ள வந்தார்கள். இது போற்றிப் பின்பற்றப் படவேண்டிய நிகழ்வு ஆகும். மாநாடுகள் நடத்தும்பொழுது பெரும் பொருள் செலவாகிறது. அந்த மாநாடுகளில் உள்ளூர்ப் பெருமக்கள் பெருமளவில் கலந்து பயன்பெற்றால் செய்கிற செலவுக்குப் பலன் உள்ளது என்று கருதலாம். சில மாநாடுகளில் மூன்றுநாட்கள் தங்கும் இடம், உணவும் பெரும்பொருள் செலவு செய்து ஏற்பாடு செய்கின்றார்கள். பெரும் திரளாகக் கோவைக்குச் செல் கிறார்கள். அதே குழுவினர் மயிலாடு துறை வருகின்றனர். அப்படியே சென்னை செல்கின்றனர். அவர்கள் எல்லாம் திருமுறைகளில் ஊறிப் போனவர்கள். அவர்களுக்குப் புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டுவ தில்லை. அத்துணை பெரும் செலவு செய்ததற்கு உள்ளூர் மக்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டால் நடத்தியவர்கள் மன நிறைவு காண்பார்கள். இக்குறை ஒரு சில ஊர்களில் மட்டுமே காணப் படுகின்றது. நல்ல பேச்சாளர்கள்; நல்ல

விளம்பரம்; எதிலும் குறைவில்லை. உள்ளூர் மக்களுக்கு ஆர்வமின்மையே காரணம் ஆகும்.

அடுத்து, அனைத்து மன்றங்களும் நடத்தும் நிகழ்ச்சி திருமுறை முற்றோதல், திருமுறை இசை நிகழ்ச்சி ஆகும். திருமுறை முற்றோதல் ஒருவர் திருமுறையைப் படிக்க, அல்லது பாட, அடுத்து ஒருவர் விளக்கம் சொல்வது என்பதே சரியானதாகும். நேரமின்மை காரணமாக இது பல சமயங்களில் நடப்பதில்லை. சில இடங்களில் ஒரே நாளில் 500 பாடல்கள் 1000 பாடல்கள் பாடி முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 5, 6 பேர் மூலைக்கு ஒருவராக அமர்ந்து கொண்டு படித்து முடித்து விடுகின்றனர். ஒருவர் படிப்பதை மற்றவர் கேட்பதில்லை. நினைத்த காரியம் முடிக்க வேண்டும் என்ற வேண்டுதலுக்கு இம்முறை சரியானதாக இருக்கலாம். பிற சமயங்களில் ஒரு சமயத்தில் ஒருவர் படிக்க மற்றவர்கள் கேட்பதே சாலும்.

திருமுறை இசையைப் பொருத்த வரை ஒருவரோ அல்லது இருவரோ அதற்கும் மேற்பட்டவரோ பங்கு பெற்றால் வந்து கேட்டுப் பயனடையும் மக்கள் இருக்கின்றனர். சில இடங்களில் பெரும் செலவு செய்து திருமுறை இசைவிழா, தமிழிசை விழா என்று வந்தால் பெருமளவு மக்கள் கலந்து கொள்வதில்லை. சென்னை இசை விழாக்களில் தெலுங்கு கீர்த்தனைகள் தான் பாடுகின்றனர்; தமிழிசையே பாடுவதில்லை என்ற ஒரு பெரிய குற்றச்சாட்டு இருக்கின்றது. அது நியாயமானதும் கூட. டிசம்பர் மாத இசை விழாவில் ஒரே சமயத்தில் 50 இடங்களில் கச்சேரி நடக்கின்றது. 50 இடங்களிலும் கூட்டம் இருக்கின்றது. சில முக்கிய கச்சேரிகளுக்கு இடமே இருப்பதில்லை.

ஆனால் தமிழிசை சங்கத்தார், அருட்செல்வர், திரு. நா. மகாலிங்கம், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ச. இராமதாசு ஆகியோர் மிகச் சிறப்பாக தமிழிசை விழாக்கள் நடத்தினாலும் கூட்டம் சேருவதில்லை. தமிழிசைச் சங்கத்தில் ஆண்டுதோறும் திரு. டி. என். சேஷகோபாலன் ஜனவரி முதல் நாளன்று திருவாசகம் திரு அருட்பா, கம்பராமாயணம் என்று ஒரே நூலில் முழுக் கச்சேரி செய்கிறார். நுழைவுக் கட்டணம் கூட இல்லை.; அரங்கில் கூட்டம் இல்லை. டிசம்பர் சீசனிலேயே கர்நாடக சங்கீதக் கோட்டைகளான மியூசிக் அகாடமி யிலும் நாரத கான சபாவிலுமே அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் கர்நாடக முன்னணி இசைக் கலைஞர்களைக் கொண்டே ஒரே மாதத்தில் இரண்டு முறை தேவார இசைக்கலைவிழாக்கள் நடத்துகின்றார். இங்கும் நுழைவுக் கட்டணம் இல்லை. அரங்கமும் பிரதான அரங்கம் அன்று; மினி ஹால் தான். அதிலேயே கூட்டம் நிரம்புவதில்லை. மருத்துவர் திரு. ச. இராமதாஸ்தான் நடத்தும் தமிழிசை விழாக்களில் நண்பகல் உணவும் தருகின்றார். கட்சிக் கூட்டம் தலைவர் ஆணைக்காக வருகின்றதே ஒழிய தமிழ்இசை ஆர்வலர்கள் வருவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? தமிழர்கள் தமிழுணர்வு, தமிழ்இசை என்று வெற்றுப் பேச்சோடு நிறுத்திவிடுகிறார்கள். செயல்படுவதில் ஆர்வம் இல்லை. இந்த மனப்பான்மை மாற வேண்டும்.

இளைஞர்கள் நோக்கிய இனிய பயணம் : மாணவர்களுக்குத் திருமுறைகள் கற்பித்தல், போட்டிகள் வைத்தல் எனப் பல மன்றங்கள் பணியாற்று கின்றன. சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம், காஞ்சிபுரம் சிவனடியார் திருக்கூட்டம், திருமுறைக் கழகம்,

நெய்வேலி பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம் போன்ற மன்றங்கள் முறையாகத் திட்டமிட்டுப் பல மாணவர்கள் பங்கு கொள்ளும் வண்ணம் பெரிய அளவில் செய்கின்றன. ஆக்கூர் சிறப்புலி நாயனார் வழிபாட்டு மன்றம், செம்பனார் கோயில் மணிவாசகமன்றம் போன்ற அமைப்புகளின் பொறுப்பாளர்களே வாரந்தோறும் குழந்தைகளுக்குப் பயிற்சி தருகின்றன. உறையூர் சுந்தர வடிவேல் ஓதுவார் போன்ற ஓதுவா மூர்த்திகள் அதிகப்பணம் பெறாமல் குழந்தைகளுக்குத் திருமுறைப்பயிற்சி கற்றுத் தருகின்றனர். இம்முறை மாநிலம் எங்கும் விரிவாக்கப்பட வேண்டும். எடுத்துக் காட்டுகளே இங்கு தரப்பட்டுள்ளன. இவை தவிர வேறு அமைப்புகளும் இருக்கக்கூடும்.

பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்களுக்குச் சைவ சமயப் பயிற்சி கொடுப்பதில் மேலையூரில் (மயிலாடுதுறை) இயங்கிக் கொண்டிருக்கும் ''உழவாரம்'' அமைப்பின் பங்களிப்பு மிகச் சிறப்பான ஒன்றாகும். இப்பயிற்சி நான்காண்டுகளாக நடைபெற்று வருகின்றது. ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கு பெறுகின்றனர். இப்பயிற்சிக் காலம் மூன்றாண்டு, திருமுறைகள், சிவஞான போதம், திருக்குறள் என்று முழுமையான பாடத்திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. இதனை அடியொற்றி 2007 முதல் சிதம்பரம் சைவத் திருச்சபை பள்ளி மாணவர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது மாநிலம் எங்கணும் விரிவு படுத்தப்பட வேண்டும்.

பல அமைப்புகள் பெரிய புராண வகுப்பு, திருவாசக வகுப்பு சைவ சித்தாந்த வகுப்பு என திங்களுக்கு ஒருமுறை, வாரத்திற்கு ஒருமுறை நடத்துகின்றன. விக்கிரசிங்கபுரம் சைவ நெறிக்கழகம், மதுரை தியாகராயர் கல்லூரி போன்ற அமைப்புகள் ஆண்டுக்கு ஒருமுறை 15 நாள், 20 நாள் என நடத்துகின்றன. திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் பாடத்திட்டம் முறையாக வரையறுக்கப்பட்டு, வழங்கப்பட்டு சிறந்த ஆசிரியர்களால் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடத்தப்படுகின்றன. இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்றுள்ளனர். இது ஒரு பெரும் சாதனை ஆகும்.

இத்துணை இருந்தும் சைவ உலகில் ஒருங்கிணைந்த சிந்தை இல்லை. அங்கங்கே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஒருங்கிணைந்த செயல்பாடு இருந்தால்தான் மதச்சார்பற்ற அரசியல் உலகை - மதமாற்றம் நிகழ்ந்து வரும் சமய உலகை - திரைப்படம், தொலைக்காட்சி ஆட்டிப்படைக்கும் சமுதாயத்தை - சைவ உலக் எதிர் கொள்ளமுடியும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1950 - 70களில் இப்பணியினைச் சிறப்பாகச் செய்தார்கள். தெய்வீகப் பேரவை என்ற அமைப்பினை நிறுவி அரசு, ஆதீனத்துத் தலைவர்கள், தமிழகச் சைவ மன்றங்கள், சைவ அன்பர்கள், புரவலர்களை இணைத்து ஒரு பேரியக்கம் நடத்தினார்கள். அதுபோன்ற ஒரு இயக்கம் இன்று உருவாக வேண்டும். தவ்த்திரு குன்றக்குடி அடிகளார் செய்தது போல செய்ய முடியாது தான். இருந்தாலும் ஒரு தொடக்கம் தொடங்கியாக வேண்டும். ஒத்த கருத்துடைய பத்து மன்றங்கள், இருபது மன்றங்கள் என்று இணைந்து அதுவே 100, 200என்று பல்கிப் பெருக வேண்டும்.

இந்த இணைந்த முயற்சிக்குத் தடையாக இருப்பவை இரண்டு 1) தங்கள் தனித்தன்மை போய் விடும்

என்ற அச்சம். 2) முரண்பட்ட கருத்துகள் நிலவுதல்.

சைவ மன்றங்கள் தங்கள் மன்றங்களின் பங்கினைச் செய்து முடிப்பதே பெரும் பங்காகிறது. இதில் மாநில அளவிலான பணிகளை மேற்கொள்ள முடியுமா? அதற்கான காலமும், பொருட்செலவும் இயலுமா? என்ற கேள்வியும் எழுகிறது.

அந்தந்த மன்றங்களின் பொறுப்பாளர்கள் அவர்களிடம் உள்ள நிதி நிலையைக் கொண்டு அவரவர் பகுதிகளில் செய்து வரும் பணிகளைத் தொடர்ந்து செய்யலாம். ஆண்டுக்கு ஒருமுறையோ இருமுறையோ கூடி மாநில அளவில் செய்ய வேண்டிய அவ்வாண்டுப் பணிகளை வரையறை செய்து கொள்ளலாம். இதனால் அவ்வம்மன்றங்களின் தனித்தன்மையும் கெடாது; கூடுதல் சுமையும் இருக்காது.

சைவ அமைப்புகளில் முரண்பட்ட கருத்துகள் இருத்தல் இயற்கையே. ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாறுபட்ட கருத்துடைய அரசியல் கட்சியினர் ஒன்று சேர்ந்து சண்டை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்முன்னே நாம் காண்கிறோம். அப்படியிருக்கும் பொழுது திருமுறை நெறிப்படி வாழும் நம்மிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, அவற்றிற்கு இடம் கொடுக்காமல், குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை முன் வைத்து நாம் செயல்படக் கூடாதா? தமிழகத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும்,

அத்தகைய ஒருங்கிணைந்த அமைப்பு இருந்தால் அந்த அமைப்புக்குள் நமது கருத்து வேறுபாடுகளைக் கலந்து பேசித்தீர்க்க முயற்சிக்கலாம். மாநில, மைய அரசுகளுக்கும் ஒருமித்த குரலில் சில தீர்மானங்களை முன் வைக்கலாம். வாக்குவங்கி தான் எடுபடும் என்றால் அதற்கும் இம்முயற்சி வழிவகுக்கும்.

அரசியல்வாதிகள் சைவ சமயம் பற்றி தவறாகப் பேசுவதும் திரைப் படங்கள், செய்தித்தாள்களில் தாறுமாறாகச் செய்திகள் இடம் பெறுவதும் தடுத்து நிறுத்தப்படும். சைவ சமய அமைப்புகள் வெளியிடுகின்ற நூல்கள் இதழ்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் வெளிக் கொணர முடியும்.

ஆவணப்படுத்துதல் (Documentation)

சைவ அமைப்புகள் தங்கள் நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை. அமைப்புகளைப் பொருத்த வரையில் தங்கள் பணிகளைச் செய்து முடித்துவிட்டோம் என்ற நிறைவு சரியான அணுகுமுறையே. ஒருவகையில் பார்த்தால், பணிகளை விளம்பரப் படுத்துவது கூடாது என்ற நிலைப்பாடாகக் கூட இருக்கலாம். ஆனால் சில நல்ல பணிகளைப் பற்றி எதிர்காலத்திற்கு எடுத்துரைக்க முடியாமல் போகிறது. சென்ற நூற்றாண்டில் (20ம்) நடைபெற்ற அரிய மாநாடுகளின் - கருத்தரங்குகளின் - உரைகள் அச்சிடப்பட்டிருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும். அவையெல்லாம் காற்றோடு மறைந்து விட்டன. இதில் இன்னும் வருந்தத்தக்க செய்தி என்னவெனில் அதுபோன்ற சிறந்த நிகழ்வுகள் நடைபெற்றன என்பதற்கான அழைப்புகளோ, புகைப் படங்களோ, செய்திக்குறிப்புகளோ சேகரித்து வைக்கப்படவில்லை. வரலாற்று அடிப்படையில் இது ஏற்கத் தக்கதல்ல. அந்தந்த அமைப்புகள் தங்கள் அமைப்புகள் நடத்திய விழாக்களின் அழைப்புகள், புகைப்படங்கள், மலர்கள் முதலியவற்றைச் சேகரித்துப் பேண வேண்டும்.

கருத்தரங்கச் சொற் பொழிவுகளை அச்சிட்டு வெளியிட வேண்டும். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று என்னவெனில் சென்னை தமிழிசைச் சங்கத்தின் பண்ணாராய்ச்சிக் கூட்ட ஆய்வுகள் (60 ஆண்டுக்காலம்) 8000 பக்கங்கள் அச்சிடப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டு உள்ளன. இதனைப் பெரிதும் பாராட்ட வேண்டும். அக்கட்டுரைகள் தாங்கிய நூல்கள் ஆய்வாளர்களின் பார்வைக்குக் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழிசைச் சங்க அலுவலர் ஆய்வாளர்களுக்கு உதவினாலும் அவருக்கு இருக்கும் பணிகளில் இது கூடுதல் சுமையாகும். அவரால் ஒரு சில நூல்களை மட்டுமே ஆய்வாளர்களின் பார்வைக்குத் தரமுடிகிறது. அனைத்து நூல்களும் அவருக்கு அருகாமையில் இருந்தால், அவரே கூட தன் உதவியாளர்களைக் கொண்டு எடுத்துக் கொடுக்கப் பணித்து விடுவார்.

இதே போல இராமலிங்கர் பணி மன்றம் நடத்தும் தமிழிசை ஆய்வுக் கூட்டங்களின் கட்டுரைகளும் பேணப் பட வேண்டும். முடிந்தால் நூலாகவும் வெளியிடப்பட வேண்டும்.

நூறாண்டு காலப் பணியினை உடைய சைவ சித்தாந்தப் பெருமன்றம் பல நிலைகளில் நின்று பணியாற்றுகிறது. வெள்ளிவிழா மலர், பொன் விழா, மலர், முத்து விழா மலர், நூற்றாண்டு விழாமலர் வெளியிட்டுள்ளது. தனியாகப் பெருமன்றத்தின் வரலாறு பற்றிய நூலும் வெளியிட்டுள்ளது. இருந்தாலும் பெருமன்ற வரலாறு (குறிப்பாக ஆரம்பகால வரலாறு) முழுமையான வரலாறாக அமையவில்லை. பெருமன்ற வரலாறு ஆய்வக்குரிய ஒன்று. 200, 300 பக்க அளவில் பெருமன்ற வரலாறு முழுமையாக எழுதப்பட வேண்டும். M.Phil, Ph.D., பட்டத்திற்கான ஆய்வும் செய்யப்பட வேண்டும்.

பெரியபுராணச் சமுதாயத்தை உருவாக்குதல்

பெரியபுராண நாயன்மார் பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களாயினும் ஒருங்கு வைத்துப் போற்றப்படுகின்றனர். பெரிய புராணம் சாதி வேறுபாட்டைப் பொருட்படுத்தாத - அப்பாலும் அடிச்சார்ந்தார் அனைவரையும் ஒருங்கிணைக்கும் - சமுதாயத்தை முன் வைக்கிறது. மீனவப் பெருமக்கள் அதிபத்தர் விழாவை நாகையில் சிறப்பாக நடத்துகின்றனர். செம்படவர் என்றால் சிவன் + படையாளர் என்று பொருள் கூறுகின்றனர். திருவிளையாடற்புராண வரலாற்றை நினைவுபடுத்திச் ''சிவபெருமான் எங்கள் மாப்பிள்ளை'' என்று பெருமையோடு கூறிக் கொள்கின்றனர். தமிழகக் கிராமங்களில் ஒரு சாரார் ''பிள்ளைக் கறியமுது சமைத்தல்'' எனக் கூறி சிறுத்தொண்டர் அமுதுபடி விழா நடத்துகின்றனர். அதுபோல சிவபெருமான் மன்மதனை எரித்த வரலாறை ''எரிந்த கட்சி எரியாத கட்சி'' என நடத்துகின்றனர். ஏகாலியப் பெருமக்கள் காஞ்சிபுரத்தில் திருக்கோயில் எழுப்பி சிறப்பு வழிபாடுகள், ஆண்டு விழாக்கள் நடத்துகின்றனர். சிதம்பரத்தில் குலாலப் பெருமக்கள் திருநீலகண்டர் குரு பூஜையையும், திருஅதனூரில் நந்தனார் குலத்தவர் நந்தனார் குருபூஜையையும் செய்து வருகின்றனர். நகரத்தார், வேளாளர், அந்தணர் பற்றிக் கூற வேண்டியதில்லை. இவர்களையெல்லாம் இணைத்து அனைத்து சமுதாயத்தினரும் ஒருங்கிணைந்த சாதி வேறுபாடற்ற பெரியபுராண சமுதாயத்தை உருவாக்க இந்த இணைப்புப் பேரவை முயல வேண்டும்.

நாயன்மார் அவதரித்த தலங்களில் மேலையூர் ''உழவாரம்'' அமைப்பு ஆயுள் தொண்டர்களை ஏற்பாடு செய்து குருபூஜைத் திருநாளை நடத்தி வருகின்றது. ஒவ்வொரு நாயன்மார் அவதாரத் தலத்திலும் அந்தத் தலத்தின் அருகாமையில் இருக்கும் மன்றங்கள் குருபூஜைத் திருநாளில் பங்குபெற்று அந்தத் தலத்து மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். பெரும் தொழில், வணிக நிறுவனங்கள் ஓரோர் அவதாரத் தலத்தைத் தத்து எடுத்துக் கொண்டு கிராமநலத் திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும்.

உறவுச்சங்கிலி உருவாக்குவோம்

தமிழ்நாடு மற்றுமின்றி இந்தியாவில் பிற மாநிலங்களிலும், உலகளாவியும் சைவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்றைக்கு இணையதளம், எனப் பலவசதிகள் வந்துவிட்டன. இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு அனைவரையும் இணைக்கும் உறவுச் சங்கிலியினை உருவாக்கினால் எத்தனையோ செயல்கள் புரியலாம்.

தில்லை முதல் நெல்லை வரை
சிதம்பரம் முதல் சிகாகோ வரை
உறவுச் சங்கிலி உருவாக்குவோம்!

தன்னார்வத் தொண்டர்களைத் தெரிவு செய்தல் :

தன்னார்வத் தொண்டர்கள் சைவ சமயத்தில் இருந்தாலும் ஒவ்வொரு பகுதியில் இருக்கும் அமைப்புகள் பயன்படுத்திக் கொண்டு பணியாற்றுகின்றன. மாநிலம் முழுமையும் வெளியில் தெரியாத வேர்களாகப் பல தன்னார்வத் தொண்டர்கள் ஆத்மார்த்தமாகச் சிவப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களைத் தெரிவு செய்து மாநில அளவில் செயல்படும் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.

ஏழாம் நூற்றாண்டில் சமய உலகில் நிகழ்ந்த குழப்பத்தைத் தீர்க்க ஞான சம்பந்தப் பெருந்தகை - நாவுக்கரசர் பெருமான் தோன்றி சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினார்கள்.

அதைவிடக் குழப்பமான நிலை இன்று நிலவுகிறது. குழப்பம் தீர்க்கப் புண்ணியக் கண்ணிரண்டையும் வேண்டுவோம்.

வேண்டுவதோடு நிற்காது நம்மால் இயன்றதை ஒருமித்த சிந்தையோடு செய்வோம்!

வித்தகம் பேச வேண்டா!
விரைந்து செயல்படுமின்!

* * *

சைவ அமைப்புகள்

1. **புரசைத் திருநெறிக் கழகம்**
தோற்றம் 1947
மதிப்புறுச் செயலர்
53/02, கிழக்கு காலனி
ஐ.சி.எஃப், சென்னை - 38

மதிப்புறு செயலர்
சிவ. சரவணன்
94440 76770
தலைவர்
சிவ. ம.கோ. சீனிவாசன்
26693842

2. **சேக்கிழார் மன்றம்**
134/1, எம்.எஸ். கோயில் வீதி,
இராயபுரம், சென்னை - 13
நிறுவனர் - தலைவர்
சி.ஜெ. மகாதேவன்
93808 15030

3. **தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம்**
1/1, சேக்கிழார் கோயில் தெரு,
குன்றத்தூர், சென்னை - 69
நிறுவனர் - தலைவர்
சிவ. மு. கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்

4. **அருள்மிகு தமிழ்வேத பாராயண பக்த ஜன சபை**
1, தர்மராசா கோயில் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை - 15.
செயலர்
சி.ஜோதி ராமலிங்கம்

5. **சண்முகஞானபுரம் தமிழ்வேத பாராயண சபை**
2, சின்ன தம்பி தெரு,
குயப்பேட்டை, சென்னை - 12
செயலர்
சிவ. கே. விநாயகம்
26612349

6. **தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றம்**
89, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை - 1.
சிவ. ஒளியரசு
98403 23811
சிவ.வ.ச. சண்முகம்
25225207

7. **கங்காதீசுவரர் அடியார் திருக்கூட்டம்**
அருள்மிகு கங்காதீசுவரர் ஆலயம்
புரசைவாக்கம், சென்னை - 84.
தலைவர்
சிவ. ஏ.என். நடராசன்

8. **பன்னிரு திருமுறை மன்றம்**
103-பி, ஜெய்ராம் நகர், 4வது குறுக்கு
குளத்தூர், சென்னை - 99.
நிறுவனர், தலைவர்
சி.ரா.சஞ்சீவி
99400 85485

9. **அருள்மிகு கமலவிநாயகர் சத்சங்கம்**
வடக்கு காலனி, ஐ.சி.எஃப்,
சென்னை - 38.
செயலர்

சிவ அ. மாணிக்கவாசகம்
265191314

10. **இறைப் பணிக் கழகம்**
அருள்மிகு காசி விசுவநாதர் ஆலயம்
24, ஈசுவரன் கோயில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 33
தலைவர்.
சிவ. என். பாபுரெட்டியார்

11. **சோமசுந்தரர் குருவருட் பணிமன்றம்**
4, சந்தைப் பண்ணை, 7-வது தெரு,
புது வண்ணாரப் பேட்டை,
சென்னை - 21.
தலைவர்
சிவ. சண்முச சுந்தரம்
98410 72005
22442915

12. **பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம்**
4, ஐந்தாவது தெரு, கே.கே. சாலை,
அம்பத்தூர், சென்னை - 53.
தலைவர்
சிவ. பூ.கு. சங்கரன்
26574463

13. **தமிழ் வழிபாட்டு பயிற்சி மையம்**
12 - எஃப் 1, 11- வது தெரு,
நியூ காலனி,
ஆதம்பாக்கம், சென்னை - 88.

14. **திருமுறை திருச்சபை**
ஆன்மீக ஞான இயக்கம்
167, திரு. வி.க. நகர், செம்பியம்,
சென்னை - 11.
நிறுவனர்
சிவ. பொன்மணி

15. **சிவ அன்பன் திருக்கூடம்**
44, அம்மன் கோயில் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை - 1.
செயலர்
சி.கே. ராமசந்திர மூர்த்தி
98403 97374

16. **அருள்மிகு சிவசுந்தர விநாயகர் தேவார சபை**
20, ஆண்டியபப் முதலி தெரு,
வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.
சிவ. விசுவநாத நாடார்

17. **குருவருள் மையம்**
22, ஸ்டேட் பாங்க் காலனி,
பெரம்பூர், சென்னை - 11.
சிவ. மூர்த்தி
25589157

18. **திருமுறை வழிபாட்டு அன்பர்கள் திருக்கூட்டம்**
திருக்காரணீச்சுவரர் ஆலயம்,
மயிலாப்பூர், சென்னை - 4.
சிவ. துரை. ஆறுமுகம்
24745836

19. **திரு. ஆதிரை மன்றம்**
37, பாலகணேஷ் பிளாட்
2, ஸ்டேஷன் சாலை, மாம்பலம்,
சென்னை - 33
நிறுவனர்
சிவ நாகபூஷணம்
24749073
9841143096

20. **ஆன்மீக இறைப்பணி குழு**
17, இரத்தின முதலி தெரு,
சிவ. சாரங்கன்
25516375

21. சிவாமிர்த ஆத்ம ஞான ஆசிரமம்
145/30, வடக்கு மாட வீதி,
திருஒற்றியூர், சென்னை - 19.
செயலர்
சிவ. கே.வி. இராஜீ

22. **அரனருள்**
95, 2-வது தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர்,
மதுரவாயல், சென்னை - 95.
சிவ. சண்முக சுந்தரம்
94441 56335 / 23782333

23. **திருவருள் திருப்பணி மன்றம்**
7/19, அசோகர் தெரு, இரமணா நகர்,
சென்னை - 11.
25378138
2587189

24. **திருவருள் வழிபாட்டு மன்றம்**
அருள்மிகு நீலகண்டேசுவரர் ஆலயம்,
கீழ்கட்டளை, சென்னை - 117.

25. **திருநீலகண்ட நாயனார் திருவிழா ஆனிதிருமஞ்சன அறக்கட்டளை**
37/451, கந்தசாமி சாலை,
பெரியார் நகர், சென்னை - 82.
செயலர்
சிவ. சண்முக தயானந்தம்
94444 54663

26. **அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில்**
தேவாசிரியன் திருமுறை மண்டபம்,
திருவான்மியூர், சென்னை.
ஓதுவாமூர்த்திகள்
சிவ. இராசரத்தினம்
98406 76508
24926098

27. **திருவாசகப் பேரவை**
24, சபாபதி தெரு,
அமிஞ்சிக்கரை, சென்னை - 29.
சிவ. ராமகிருஷ்ணன்
26642441

28. **திருமுறை முற்றோதல் அறக்கட்டளை**
ரத்நாகர், 12, முருகேச முதலியார் சாலை,
தி.நகர், சென்னை - 17

29. **சிவ சபா, "ஓம் குடில்"**
மப்பேடு, சேலையூர், சென்னை - 73

30. **சைவ சிதத்ாந்த நேர்முகப் பயிற்சி மையம்.**
சிவ. கணேசன்
9444885692
சிவ.மு. அழகர்சாமி

31. **அருள்மிகு சித்தாமணி விநாயகர் தேவார திருப்புகழ் சபை,**
தான்தோன்றி அம்மன் கோயில் தெரு,
பெரவள்ளூர், சென்னை - 600 082.

32. **உலக சைவப் பேரவை**
37, ஆர். பிளாக், அண்ணா நகர்,
சென்னை - 40.
சிவ. முருக. இராமலிங்கம்
2621 50 95

33. **தெய்வத் திருவருள் மன்றம்**
46, பெருமாள் முதலி தெரு,
கொண்டித்தோப்பி, சென்னை - 79.
சிவ. கோ. தனபாலன்
செயலர்
42239992 வீடு
42237265 அலுவலகம்

34. **பன்னிரு திருமுறை மன்றம்**
32, பங்காரு நாயக்கன் தெரு,
சென்னை - 2.
சிவ. மயூர பிரியா

35. **தமிழ்ச் சைவ பேரவை**
8/59, வேங்கடராமய்யர் தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை - 79.
42237265

36. **திருக்கோயில் உழவாரப் பணி மன்றம்**
14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 42
சிவ. ஆடலரசன்
9444678166

37. **இந்து ஆலயங்கள் சுத்தம் செய்யும் இறைபணி மன்றம்**
5/3, பரோடா தெரு - விரிவு
மேற்கு மாம்பலம், சென்னை - 33.
சிவ. கிருஷ்ணமூர்த்தி
94448 94856
சிவ. தி. சரவணன்
94443 04980

38. **அம்மயப்பர் உழவாரப் பணி குழாம்**
ஸ்ரீ காசி விநசுவநாதர் தேவஸ்தானம்
76, கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்தெரு,
சென்னை - 79.
சிவ. கிருஷ்ணமூர்த்தி
98848 61580
2550 7509

39. **ஆலய உழவாரத் தொண்டு சீர் திருக்கூட்டம்**
61/24, சுப்பிரமணிய முதலி தெரு,
சைதாப்பேட்டை, சென்னை - 15.
சிவ. வ. நாகராசன்
23811692, 9841546668

40. **வித்வான் பா. வரதராசன் அநுசூயா அறக்கட்டளை**
மனை - சி. 69, வ்டத் தெரு.
சிவ. கேசவன்

41. **சிவனடியார் திருக்கூட்டம்**
அருள்மிகு கங்காதீஸ்வரர் ஆலயம்,
ஒண்டிக்குப்பம், மணவாள நகர்,
திருவள்ளூர் - 602 002.
சிவ. சிவதாஸ்
9444944246, 27691588

42. **திருத்தொண்டர் திருநெறிய அறக்கட்டளை**
1/57, புதுப்பேட்டை, பனப்பாக்கம்
(அஞ்சல்), 631052
சிவ. வேலாயுதம்

43. **திருநாவுக்கரசர் உழவாரப் பணிமன்றம்**
மனை : 13/31, 2-வது தெரு,
காமராசர் நகர், கொரட்டூர்,
சென்னை - 80.
சிவ. சேதுச் செட்டியார்
2624 6021

44. **இறைபணி மன்றம்**
அள்மிகு கமலவிநாயகர் ஆலயம்,
ஐ.சி.எஃப், (பேருந்து நிலையம்
அருகில்), சென்னை - 38.

45. **அருள்மிகு திரிபுரசுந்தரி சமே திரிசூலநாதர் பக்தர்கள் சங்கம்**
2, சிவஞானம் தெரு, தி-நகர்,
சென்னை - 17.
24342365

46. **பக்தர்கள் நற்பணி மன்றம்**
ஓம் பிரணவ ஜோதி விநாயகர் ஆலயம்
604/1, டி.எச். சாலை, தண்டையார்
பேட்டை, சென்னை - 81
சிவ. அநந்தநாராயணன்

47. **இந்து தேவாலய திருத்தொண்டு சபை**
வில்லியனூர், பாண்டிச்சேரி,
அருள்மிகு காமேஸ்வரர் ஆலயம்,
சிவ ராகவன் டி.3 3வது தளம்
ஜி.கே. சாகர் காம்பளக்ஸ், எண் : 4,
தெற்கு மாட வீதி, மயிலை,
சென்னை - 4.
சிவ. ராகவன் 0413
24615036

48. **ஸ்ரீ கந்த கோட்டம் வழிபாட்டு அடியார் திருக்கூட்டம்**
81, நைனியப்ப நாயக்கன் தெரு,
பூங்கா நகர், சென்னை - 3.
25324107, 25345511
எம். நித்தியானந்தம்

49. **கைத்தொண்டு வளர் அடியார் திருக்கூட்டம்**
12-ஏ, பாலாஜி, தெரு, சைதை,
சென்னை - 15.
சிவ. சீனிவாசன்

50. **திருத்தொண்டர்கள் திருச்சபை**
5, பென்னியம்மன் கோயில் தெரு,
பாடி, சென்னை - 50.
நிறுவனர் - தலைவர்
டாக்டர். வி. நடராசன்
26540961

51. **சைவ சித்தாந்த பக்த ஜனசபை**
தங்கசாலை, சென்னை - 1.

52. **பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை**
இராயப்பேட்டை, சென்னை - 14.

53. **திருமயிலை இறையன்பர் திருச்சபை**
4.23, பிச்சுப் பிள்ளைத் தெரு,
சென்னை - 4.

54. **திருவாசகம் திருமந்திரம் அறக்கட்டளை**
54 - 2, பால்வெல்ஸ் வீதி,
இரவி காலனி,
பரங்கிமலை, சென்னை - 16.
(பொ.வே. சம்பந்தம் - 22349625)

55. **சேக்கிழார் ஆய்வு மையம்**
112, காரணீசுவரர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை - 4.
(செயலர் : டி.எஸ். தியாகராசன் - 24661426)

56. **சைவ சித்தாந்தப் பெருமன்றம்**
4 (முதல் மாடி), வெங்கடேச அக்ரகாரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

காஞ்சிபுரம்

1. **வ.த. இராமசுப்பிரமணியம்**
தமிழ்ச்சங்கம்
61, காந்திநகர்,
3வது தெரு,
காஞ்சிபுரம் - 631501

2. **காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம்**
40/106 - பி. காமராஜா வீதி,
காஞ்சிபுரம் - 631501.

3. **காஞ்சிபுரம் திருமுறை மன்றம்**
ஏ.கே.ஜி. திருமண மாளிகை
எம். குமாரசாமி அவென்யூ,
காஞ்சிபுரம் - 631501
223409, 223681

4. **டி.எம். கோவிந்தராஜ மேஸ்திரி**
அ/மி, முத்தீஸ்வரர் திருக்கோயில்
திருக்குறிப்புத் தொண்டர் நாயனார்,
95, காந்தி ரோடு, காஞ்சிபுரம்

5. **சு. சதாசிவம் எம்.ஏ பி.எட்**
நிறுவனர், திருமுறை அருட்பணி
அறக்கட்டளை
7, பங்காரம்மன் தோட்டம்,
காஞ்சிபுரம் - 1.
238413

6. **அறுபத்துமூவர் குருபூஜை**
விழாக்குழு, ஸ்ரீகச்சபேசம்
எண். 69/110, காந்தி ரோடு,
காஞ்சிபுரம் - 6310501.

7. **சிவப்பணிக்குழு**
18-ஏ, சோளீஸ்வரர் கோவில் தெரு,
பிள்ளையார் பாளையம்,
காஞ்சிபுரம் - 631501.

8. **புலவர் த.கு. பத்மநாபன்**
47, காந்திநகர்,
காஞ்சிபுரம் - 1.
237 961

10. **நடேச வேதகிரி**
19, ருக்மணி தெரு,
முனுசாமி அவென்யூ,
காஞ்சிபுரம்.
தொலைபேசி : 224942

11. **புலவர் ஞான. பரமேஸ்வரன்**
41, ஆசிரியர் நகர்,
காஞ்சிபுரம் - 2.

12. **அண்ணா சச்சிதானந்தம்**
"தெய்வச் சேக்கிழார்"
9/5, திருப்புக்குடல் தெரு,
பெரிய காஞ்சிபுரம்.
631502. தொ. பே. 229300

13. **துரை. சுப்பிரமணியன்**
"அற்புத ஆலயமணி"

208, விவேகானந்தர் தெரு,
சண்முகா நகர்,
(மாமல்லன் நகர் அருகில்)
காஞ்சிபுரம் - 631502.
954112. 225443

செய்யாறு திருவோத்தூர்

1. **திருவோத்தூர் திருமுறை வளர்ச்சி பணிமன்றம்**
வ. கண்ணப்பன் தலைவர்,
3, திருவள்ளுவர் வீதி,
ஆரணி கூட்டு சாலை,
செய்யாறு - 604407
திருவண்ணாமலை மாவட்டம்
தொ.பே. : 04182 - 220573
அ.பே. : 94439 68116

2. **அருள்ஞானப் பெருவெளி**
தலைவர் - அ. முத்துக்குமரன்
பு.எண் 2, அண்ணா நகர்,
திருவத்திபுரம்
செய்யாறு வட்டம் - 604407
திருவண்ணாமலை மாவட்டம்.
தொ.பேசி - 04182 - 220544
அ.பே. : 94433 - 49462

3. **வேதபுரீஸ்வரர் சமயத் தொண்டு மன்றம்**
தலைவர் - பச்சையப்பன்
ஆற்றங்கரைத் தெரு,
திருவத்திபுரம் - 604407.
திருவண்ணாமலை மாவட்டம்.

4. **பேராசிரியர் திருவை. முருகேசன் மேய்கண்டான் பண்ணை**
5, வள்ளலார் தெரு,
நரசிம்ம நகர்,
திருவத்திபுரம் - 604407.

வந்தவாசி

1. **சைவப் பெருமன்றம்**
தலைவர் - கோ. தெய்வசிகாமணி
5/88, சுபத்திரை இல்லம்,
சண்முகம் வீதி,
வந்தவாசி - 604 408.
தொ.பே. : 226 981

புன்செய் புளியம்பட்டி

1. **அறுபத்துமூவர் அருட்பணி மன்றம்**
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்
பு.செ.பு.பட்டி - 638 459.

2. **மறைமலையடிகள் மன்றம்**
பு.செ.பு.பட்டி - 638459
கோபி வட்டம்.
இளமுருகு 267950/04295

இரா. சுப்பிரமணியம் 268357/04595

ஈரோடு

1. **வீ. சொக்கலிங்கம்**
கொங்கு மண்டலம் அப்பரடிகள் சிவநெறி வழிபாட்டுத் திருக்கூட்டம்
விசயமங்கலம் - 638056
ஈரோடு மாவட்டம் : 04294 243153

2. **இரா. மீனாட்சி, சித்தம் அழகியார் வழிபாட்டுக் குழு,**
எப். 66, பெரியார் நகர்,
ஈரோடு - 638001.
0424 - 2255295

3. **த. விசுவநாதன்,**
(திருமுறைக் கழகம்)
60, கண்ணகி சாலை, ஈரோடு
638001 - தொ.பே. : 251363
98427 - 52255

4. **அருள் நெறித் திருக்கூட்டம்**
திருத்தொண்டீசுவரர் திருக்கோயில்
(ஈசுவரர் கோயில்) கோட்டை,
ஈரோடு - 1.

5. **திருத்தொண்டீசுவரர்**
உழவாரப் பணிக்குழு
14, அகில் மேடு,
3ம் வீதி, ஸேட் காலனி,
ஈரோடு - 1.

பவானி

1. **திருமுறைக் கழகம்**
அ/மி, ரங்கமேசுவரர் திருக்கோயில்,
பவானி - 638 301.

2. **சிவனடியார் திருக்கூட்டம்**
அருள்மிகு சங்கமேசுவரர் திருக்கோயில்
திருநரை (பவானி) - 638301
அ.பே. : 94437 - 36238
தலைவர் : **அ. தியாகராஜன்**
(98431 - 86765)

3. **டாக்டர் ஏ.பி. இளங்கோவன்**
செயலர், சங்கமேஸ்வரன் அருட்பணி
மன்றம்,
திருக்கைலை மலையான் எர்த்மூவர்ஸ்
113, தேர்வீதி,
பவானி - 638 301.
தொ. பே. : 04256’320008.

மேட்டூர்

1. **சிவனடியார் திருக்கூட்டம்**
ஞானதண்டாயுதபாணி திருக்கோயில்,
மேட்டூர் அணை - 636 401

சேலம்

1. **தலைவர். வெ. வெங்கட்ராஜூ**
954298 . 242276
16 - 151 ஜே4, மேல் மாடி,
டாக்டர் சுப்பராயன் நகர்,
மேட்டூர்.

கிருஷ்ணகிரி

1. **பன்னிரு திருமுறை வளர்ச்சி மன்றம்**
சந்தூர் (அ.நி)
போச்சம்பள்ளி (வட்டம்)
கிருஷ்ணகிரி (மாவட்டம்)
அ.ரு.எண் : 635 206.

2. **புலவர் - ப. மாணிக்கம்**
195, மிட்ட அள்ளி,
காவேரிப்பட்டணம்,.
635 112.
கிருஷ்ணகிரி மாவட்டம்

சேலம்

1. **திருவெம்பாவை பெருவிழா கழகம்**
டிரஸ்ட்
8, மேட்டு கைக்கோள மாரியம்மன்
கோவில் தெரு, சேலம் - 636001
(அண்ணாமலை : 2452249)
சந்திரசேகர் : 2452826
(செயலர்)

2. **காரைக்கால் அம்மையார் வார**
வழிபாட்டு மாதர் சங்கம்
செவ்வாய்பேட்டை
அ/மி மீனாட்சி சுந்தரேஸ்வரர்
திருக்கோயில்
108, கபிலர் தெரு, சேலம் - 2
(பிரேமா நடராஜன் அலமேலு
நாட்றாயன்)

3. **ஸ்ரீசௌடேஸ்வரியம்மன் மாதர் சங்கம்**
ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி
திருக்கோயில்,
கோவிந்தன் தெரு,
செவ்வை, சேலம் - 2
(பி.வி. சரோஜினி வேலாசாமி
செட்டியார் ந. கமலா ஈஸ்வரன்)

4. **மார்கழிப் பெருவிழா கமிட்டி**
63, மாரிமுத்து முதலி தெரு,

அம்மாப்பேட்டை,
சேலம் - 636 003.
தலைவர் ஏ.கே. பனியப்பன்

5. **பூதலிங்கம்**
14/9, அன்னை அஞ்சுகம் நகர்,
2வது புதுத்தெரு,
பொன்னம்மாப் போட்டை,
சேலம் - 636 001.
0427 - 2261868.

6. **பன்னிரு திருமுறை மன்றம்**
409, தமிழ்ஞான சம்பந்தன் இல்லம்,
திரு.வி.க. பாதை,
அம்மாபேட்டை,
சேலம் - 3.

திருவண்ணாமலை

1. **அ. பாண்டுரெங்கனார்**
திருமுறைக்கழகம்
14, செல்லனேரித் தெரு
திருவண்ணாமலை.

2. **சி. மனோகரன்**
மனோகர் ரேடியோ ஹவுஸ்,
36டி, திருவூடல் தெரு,
திரு அண்ணாமலை - 606 601.

3. **ஈ. முத்துக்குமாரசாமி**
வழக்கறிஞர்
தலைவர் - திருமுறைக்கழகம்
மகான் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஆசிரமம்
செங்கம் சாலை,
திருவண்ணாமலை - 606 603.
தொ.பேசி. : 236370 (வீடு)
236999, 238599 - (ஆசிரமம்)

4. **அரங்கநாத செட்டியார், தலைவர்**
சோமவார வழிபாட்டுச் சங்கம்,
39/4, பேய்கோபுரம் 3ம் தெரு,
திருவண்ணாமலை - 606 601.
தொ.பே. : 04175 - 228044

5. **க. முனியன்**
14.94, ந. திருமஞ்சன கோபுரவீதி,
திருவண்ணாமலை,
தொ.பே. : 220 454

வேலூர்

1. **மு. செல்வநாதன்**
3, அண்ணாநகர்
சோளிங்கர்
631102
(04172... 262968)

2. **எம். கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)**
பிளாட் எண் 559, 7வது பிரதான சாலை,
வீட்டுவசதி வாரிக்குடியிருப்பு பகுதி 1,
சத்துவாச்சாரி, வேலூர்
632 009.
(223198)

3. **மு. கார்த்திகேயன்**
½ E4, M.G.C. நகர்,
அலமேலு மங்காபுரம்,
வேலூர் - 632 009.
(0416 ... 2254803)
(9443626092)

4. **D. சண்முகம்**
92, பெரிய தெரு,
சத்துவாச்சாரி,
வேலூர் - 9.
0416... 2254492

5. **பி.டி. சிவலிங்கம்**
செயலர், அறுபத்துமூவர் சமரச
சன்மார்க்க சங்கம்,
வெட்டுவாணம்.
பள்ளி கொண்டா (வழி)
வேலூர் மாவட்டம்,
(வீடு : 04171 - 244 301)
(சங்கம் : 04171- 244 3487)

6. **கோ. அன்பழகன்**
இறையருள் மன்றம்
35, வீராரெட்டிபாளையம்
ஊசூர், 632 105.
வேலூர்.
0416 - 2271128

ஆம்பூர்

1. **ந. அண்ணாமலை**
சேக்கிழார் திருமுறை மன்றம்,
பெருமாள் கோயில் பின்புறம்,
ஆம்பூர், 635 802.
வேலூர் மாவட்டம்
04174 45699

திருப்பத்தூர்

1. **புரிசை ச. நடராஜன்**
4/6, அன்னம் இல்லம்
எழில் நகர்
திருப்பத்தூர்
635601
04179 - 222842

2. **ஜி. வில்சன் அமல்ராஜ்**
சித்தர் பாடல் ஆய்வகம்,
475/2, துரைநகர்,
திருப்பத்தூர் - 635 601
வேலூர் மாவட்டம்
04179 - 223478

3. **பராபரம் நால்வர் கழகம்**
ரத்னா காம்ப்ளக்ஸ்
7, கச்சேரி ரோடு,
திருப்பத்தூர்,
635 601

கள்ளக்குறிச்சி

1. **க. நாச்சியப்பன்**
திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் திருக்கூட்டம்
10E, குளத்துமேட்டுத் தெரு,
கள்ளக்குறிச்சி
விழுப்புரம் - 606 202
04151 - 225883

கரூர்

1. **குமரன், வழக்கறிஞர்**
குருதேவர் மெட்ரிகுலேசன் பள்ளி,
வாங்கல் சாலை
கரூர் - 639 116.
போன் : 21692, 28192
(ஆபீஸ்) : ஜவகர் சந்து (கோயில்)
(செல்) : 9443160250
260250

2. **கணேசன்**
தெய்வீக திருப்பணிக்குழு
25/32, வடக்குலட்சுமிபுரம்,
263624, 223084

3. **சிவனடியார் திருக்கூட்டம்**
வி.பி.எஸ். பாலசுப்பிரமணியன்
தலைவர் - நெம் - 1, காசிம் தெரு,
கரூர் - 1. 98430 - 65651

வெள்ளகோவில்

1. **பீ.கே. குமாரசாமி**
(கோடீஸ்வரர் ரைஸ்மில்)
909, சேக்கிழார் இல்லம்
முத்தூர் ரோடு, வெள்ளகோவில்
638 111.
260297

1. **மருதாசல சுவாமிகள்**
கௌமார மடாலயம்
கோவை - 6.

2. **சித்தாந்தச் செல்வர்**
க. மாணிக்கவாசகம்
99, நெசவாளர் குடியிருப்பு
திருமுருகன் பூண்டி,

திருப்பூர் - 641 652
போன் : 954296 - 275046

கோவை

1. **சிவனடியார் திருக்கூட்டம்**
அருணோதயம் ஸ்ரீ அருணாசலா
ஃபவுண்டேசன், கோவை
641 001.
போன் - 399 641

2. **ஸ்ரீ சித்தர் ஞான பாடசாலை**
சிவக்குடில் நேதாஜி நகர்,
சிவக்குடில்,
கோவைப்புதூர், 641042

3. **மணிவாசகர் அருட்பணி மன்றம்**
5/60, சாந்தலிங்கர் நகர்,
திருப்பேரூர் செட்டிபாளையம்,
கோயமுத்தூர் - 10
தொ. பேசி. : 2608068

4. **சி.சு. கண்ணாயிரம்**
"சேக்கிழார் நிலையம்"
480, வைசியாள் வீதி,
கோயம்புத்தூர்
641001

5. **சித்தாந்த வித்யாநிதி**
முனைவர் - ர. வையாபுரி
76, தென்வடல் வீதி,
முத்துசாமி கால்னி,
கோவை - 26.
0422 - 2341510

6. **பன்னிரு திருமுறை ஆய்வுமையம்,**
கற்பகம் கலை அறிவியல் கல்லூரி,
ஈச்சுநாரி, கோயம்புத்தூர்,
641 021.

7. **பேரூர் சீலத்திரு வேலப்பதேசிகர்**
வழிபாட்டு மன்றம்
63, வடக்குத் தேர்த் தெரு,
பேரூர்.

8. **நிறைநிலா வழிபாட்டு**
மன்றம்,
அருள்மிகு புற்றிடங் கொண்டீசர்
திருக்கோயில்
ஒத்தகால் மண்டபம்,
கோவை - 32.

6. **ஸ்வர்ணா சோமசுந்தரம்**
திருநெறிய தமிழ்மன்றம்,
குருவருள், 507, ர.ந. ரோடு
ஆர்.எஸ்.புரம், கோவை
641 002 (0422) 551545

8. **ப. குமரலிங்கம்,**
தென்னை மரத்தோட்டம்,
போடிபாளையம் அஞ்சல்,
மதுக்கரை வழி.
0422 - 2611681

* * *

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க:

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talk)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy)விட்டுக் கொடுங்கள் (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance)
- எல்லோரிடத்லும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல்,கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.(Flexibility)
- மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்துகொள்ளாதீர்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

இந்த இனிய
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வு கொள்ளும் -
தாங்கள்
அன்புள்ள....

ஊரெல்லாம் சிவ மணம்

இரா.இராஜசேகரன்

நர்மதா வெளியீடு